D
V2M,31 N81
N83:24:2
122810

SECRETARIAT LIBRARY

mil Nadu Legislative Assembly / ~~Council~~ Debates:

---

1981 Vol. XXIV .1.No.1.5 No

---

1981 XXIV 1.5

இந்த / புத்தகக் கட்டை வரிசை மாற்றாமல்
புத்தகமாகப் பைண்டிங் செய்யும்படி கேட்டுக்
ளப்படுகிறது.

155

for LIBRARIAN.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் மூன்றாவது கூட்டத்தொடர்

1981 ஆகஸ்ட் 21, 22, 24, 25 மற்றும் 26-ஆம் நாட்கள்

(தொகுதி XXIV எண்கள் 1 முதல் 5 வரை)

©
தமிழ் நாடு அரசு
1983

சட்டமன்றப் பேரவைத் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009

விலை ரூ. 2]

D

Y211,31 N81

N83-24952

22210

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

— —

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடர்.

1981 ஆகஸ்ட் 21, 22, 24, 25 மற்றும் 26-ஆம் நாட்கள்

(தொகுதி 24—எண்கள் 1—5 வரை.)

— —

**பக்கங்கள்**

அரசினர் சட்ட முன்வடிகள்—


இந்து—சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 129

ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 499

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1981 499—500

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1981 499

குடியிருப்புச் சட்டங்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு, தமிழ்நாடு, 1981 275

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 21

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு, 1981 381—408

திருநெல்வேலி நீர்ப்பாய்ச்சுதாரர்கள், பேத்துவாரம்தாரர்கள் சட்ட முன்வடிவு, 1981 498—499

பக்கங்கள்

**அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.**

நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981. — 20, 357—371

நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 — 21, 371—379

நகர்ப் புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப் படுத்துதலும்) மூன்றாவது திருத்தச் சட்ட முன் வடிவு, 1981 — 274

நிலச் சீர் திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 — 80, 294, 295

பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை மேற் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 — 357

பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும், நோய் களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 129

பொதுமக்கள் வழக்கமாய் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 130—156

பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 128

பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 129



பக்கங்கள்

**அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.**

மதுரைக் காமராசர் பல்கலைக் கழக (திருத்தச்) சட்ட முன் வடிவு, 1981 — 356

மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 498

வலிப்பு (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 — 357

வேளாண் தொழிலாளர் நியாய ஊதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 127

வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 498

வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 127—128, 380

வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 156—170

**அரசினர் தனித் தீர்மானம்—**

இலங்கை வாழ் தமிழர்கள் குறித்து — 22—52

**அரசினர் தீர்மானம்—**

உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்கள் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை. — 408

தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை—விவாதம் — 501—550

**அறிக்கை அளித்தல்—**

பொதுக் கணக்குக் குழு — 274, 356

பொது நிறுவனங்கள் குழு. — 136

பக்கங்கள்


**அறிவிப்பு—**

அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நியமனம் — 269

பேரவை அலுவல் — 171—173, 551

பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ.) — 128

பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ. இ) — 128

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் — 19

வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1981 (ஆ.இ.) — 127

**இரங்கல் குறிப்புகள்—**

முன்னாள் உறுப்பினர் திரு. டி. அனந்தபாய் மறைவு — 1—2

முன்னாள் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் மறைவு தீர்மானம் — 2—19

**உரிமைப் பிரச்சினை—**

பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்ற பகுதியினை சில நாளேடுகள் பிரசுரித்துள்ளது — 337—339

**ஏடுகள்—**

பேரவை முன் வைக்கப் பெற்றவை — 53—67, 173—174, 294—295, 409, 552—553

**ஒத்திவைப்புத் தீர்மானம்—**

ஓமியோபதி கல்லூரி மூடப் பெற்றதைக் கண்டித்து மாணவர்கள் நடத்தும் போராட்டம் — 114—126

தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து — 215—269




பக்கங்கள்


**ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.**

தென்னாற்காடு மாவட்ட தொளார் கிராம அரிசனக் காலனி தீயினால் பாதிக்கப் பெற்றுள்ளது. — 486—494

மதுரை மாநகராட்சி விநியோகிக்கும் குடி தண்ணீர் — 339—347

**கவன ஈர்ப்புகள்—**

அரசுப்பள்ளி ஆசிரியர்களது பொது மாற்றம். — 270—272

தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி. — 347—354

திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரி குறித்து — 494—495

பட்டுக்கோட்டை வட்டங்களில் பாசனத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு — 272—274

யூரியா மற்றும் இரசாயன உரங்களின் விலை யேற்றம் — 354—356

வேடசந்தூர் பாளையம் பகுதியில் அரசு சிமெண்ட் தொழிற்சாலை — 495—498

**தகவல் கோரல்—**

அரசுக் கவிஞர் கண்ணதாசனுக்கு அமெரிக்காவில் ஆகும் மருந்து செலவு. — 484—485

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் — 485—486

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி குறித்து. — 215

தமிழக சுற்றுப் பயணிகளில் ஒருவர் இலங்கையில் கொலையுண்டிருப்பது — 335—337

தலைமைச் செயலர் மாற்றம் — 334—335

திரு. புபேஷ்குப்தா மறைவு — 214

வெளியில் உள்ளாட்சித் துறை அமைச்சர் பேசியது குறித்து — 110—114

| | பக்கங்கள் |
|---|---|
| **தீர்மானம்—** | |
| மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம் (அ. த. தி) | 170—171 |
| **நிதி அலுவல்கள்—** | |
| 1981-82 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை | 500—501 |
| **வாழ்த்து—** | |
| பேரவைத் தலைவர் பிறந்த நாள் | 443—446 |
| **வினாக்கள்-விடைகள்—** | |
| குறிப்பிட்ட வினாக்கள் | 69—110 |

## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையைப் பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன, துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்து பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப் பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறு கின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தி.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ.) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக் களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் " சட்ட முன்வடிவு " என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புகள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றங்(கள்)', 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின்கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின் கீழ் கொடுக்கப் பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின் கீழ் வரிசைப் படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது.

| | |
|---|---|
| அ. | அறிக்கை. |
| அறிவி. | அறிவிப்பு. |
| அ. வி. | அரை மணி நேர விவாதம். |
| கு. வி. | குறுகிய கால விவாதம். |
| பொ. வி. | பொது விவாதம். |

| | |
|---|---|
| ஆ. உ. | ஆளுநர் உரை. |
| உ. பி. | உரிமைப் பிரச்சினை. |
| ஒ. பி. | ஒழுங்குப் பிரச்சினை. |
| க. ஈ. | கவன ஈர்ப்பு. |
| க. ஈ. அ. | கவன ஈர்ப்பு அறிக்கை. |
| ச. அ. நி. | சட்ட முன்வடிவின் அறிமுக நிலை. |
| ச. ஆ. நி. | சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை—இந் நிலையில்— (1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம். (2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம். (3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம். (4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம். (5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன. |
| ச. பிரி. ஆ. | சட்ட முன்வடிவு—பிரிவுவாரியாக ஆய்தல். |
| ச. பே. | சட்டமன்றப் பேரவை. |
| ச. மே. | சட்டமன்ற மேலவை. |
| த. கோ. | தகவல் கோரல். |
| த. வி. | தன்னிலை விளக்கம். |
| தீ. | தீர்மானம். |
| உ. தீ. | உரிமைத் தீர்மானம். |
| ஒ. தீ. | ஒத்திவைப்புத் தீர்மானம். |
| த. தீ. | தனித் தீர்மானம். |
| து. மா. கோ. | துணை மானியக் கோரிக்கை. |
| மி. செ. கோ. | மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை. |
| பே. அ. | பேரவையின் அலுவல். |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் மூன்றாவது கூட்டத்தொடர்.

1981 ஆகஸ்ட் 21, 22, 24, 25 மற்றும் 26 ஆம் நாட்கள்.

(தொகுதி 24—எண்கள் 1-5 வரை.)


பக்கங்கள்

## அ

அங்குசாமி, திரு. ச.—
- கால்நடை விந்து சிதைந்து விடுதல் — 429
- தேவகோட்டை விவசாயப் பண்ணை — 310—311
- பாலனக்கோட்டை, மூப்பையூர் சாலை மூடிக்கப்படாமை. — 425

அப்பாதுரை, திரு. மு.—
- ஒலியோபதி கல்லூரி மூடப்பெற்றதைக் கண்டித்து மாணவர்கள் நடத்தும் போராட்டம் (ஒ.தீ.) — 114, 117—118
- கலையரங்கம், காத்துக்குடியில் கட்டுதல் — 424
- கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 — 397—398
- தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து — 215
- தென்னாற்காடு மாவட்ட தொளார் கிராம அரிசனக் காலனி தீயினால் பாதிக்கப் பெற்றுள்ளது. (ஒ.தீ.) — 486

அம்பிகாபதி, திரு. மு.—
- நியாயக் கூலி, விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப் படாதது, தஞ்சை மாவட்டம் (க.ஈ.) — 347—354
- நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 — 278—280

பக்கங்கள்

அ—தொடர்ச்சி.


அம்பிகாபதி, திரு. மு.—தொடர்ச்சி.

- பட்டுக்கோட்டை, பாசனத் தண்ணீர் தட்டுப்பாடு — 272—274
- பூபேஷ் குப்தா மறைவு குறித்து (த. கோ.) — 214
- மதுரையில் குடி தண்ணீருடன் கழிவு நீர் கலந்து வருதல். — 339—347
- மன்னார்குடியில் அரசு ஊழியர்களுக்கு வீடு — 183—184

அரங்கநாயகம், திரு. செ.—

- அரசுக் கவிஞர் கண்ணதாசனுக்கு அமெரிக்காவில் ஆகும் மருத்துவச் செலவு (த. கோ.) — 484—485
- அரசுப் பள்ளி ஆசிரியர்கள் பொது மாற்றம் (க.ஈ.) — 270—272
- திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரி இட நெருக்கடி (க.ஈ.) — 494—495
- பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 — 357
- மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 356

அரங்கநாதன், திரு எஸ்.—

- அணை—தொப்பூருக்கு அருகில் தொப்பையாற்றின் குறுக்கே கட்டுதல் — 468—469
- திருப்பத்தூர் சாலையில் உள்ள 'ஏலெப்' மருத்துவ மனையை அரசு ஏற்றல் — 416

அரசினர் சட்ட முன்வடிவுகள்—

- இந்து-சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 129
- பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும், நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 129
- பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 130—156




அ—தொடர்ச்சி.

பக்கங்கள்


அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

- பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 128
- பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 129
- வேளாண் தொழிலாளர் நியாய ஊதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 127
- வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 127—128
- வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 156—170

அலுவலகங்கள்—

- குடவாசலை தனி வட்டமாக்குதல் — 464—468
- சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம், அலுவலகக் கட்டிடம் — 91—94
- துணைக் கருவூலம், ஆற்காடு, தரமுயர்த்தல் — 175—176

அலுவலர்கள்—

- மாவட்ட அபிவிருத்தி அதிகாரி, ஒவ்வொரு ரெவின்யூ மாவட்டத்திலும் நியமித்தல் — 89—91
- மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்களின் பணியினை வரன்முறைப்படுத்துதல் — 472—473

அழகர்சாமி, திரு. சோ.—

- இலங்கை வாழ் தமிழர்கள் குறித்து (அ.த.தீ.) — 35—37
- குடிநீர், கோவில்பட்டி தாலுகா — 195—196
- குடி தண்ணீர், திருவேங்கடம் பேரூராட்சிப் பகுதிக்கு வழங்குதல் — 474
- தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து — 215, 221—226
- தென்னாற்காடு மாவட்ட தொளார் கிராம அரிசனக் காலனி தீயினால் பாதிக்கப்பெற்றுள்ளது (ஒ.தீ.) — 480

பக்கங்கள்

அ—தொடர்ச்சி.

அழகர்சாமி, திரு. சோ.—தொடர்ச்சி.

மதுரையில் குடிநீருடன் கழிவு நீர் கலந்து வருதல் 339—347
முன்னாள் பேரவைத் தலைவர் திரு சி. பா. ஆதித்தனார் மறைவு குறித்து (இ.கி.) 13—14
வெளியில் உள்ளாட்சித் துறை அமைச்சர் பேசியது குறித்து (த.கோ.) 113
வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 163—166

அறநிலையங்கள்—

திரு உத்திரகோசமங்கை கோயில், நடராஜர் சிலை 80—82

அறிக்கை அளித்தல்—

பொது நிறுவனங்கள் குழு 126

அறிவிப்புகள்—

பேரவையின் அலுவல் 171—173
பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 128
பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ.) 128
மாற்றுத் தலைவர்கள் பட்டியல் 31
வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ. இ.) 127

அன்பழகன், திரு. க.—

தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து 215—221
பொது நிறுவனங்கள் குழு, ஒன்பதாவது அறிக்கை, அளித்தல். 126
முன்னாள் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் மறைவு குறித்து (இ.கி.) 8—11



பக்கங்கள்

அ—தொடர்ச்சி.

அன்பில் தர்மலிங்கம், திரு.—

வெளியில் உள்ளாட்சித் துறை அமைச்சர் பேசியது குறித்து (த. கோ.) 110—111

ஆ

ஆசிரியர்கள்—

அரசுப் பள்ளிகள், பொது மாற்றம் (க.ஈ.) 270—272
ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள், குழந்தைகளுக்குக் கல்விக் கடன் 94

ஆண்டி அம்பலம், திரு மெ.—

பொம்பலூர் சர்க்கரை ஆலை—ஆலையின் நிலைமை 478—479
மீன்வளக் கல்லூரி, வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு அரசின் நிதியுதவி 88—89

ஆண்டித்தேவர், திரு. எஸ்.—

அஸ்வம் நதியின் குறுக்கே பாலம் 414
இலங்கைவாழ் தமிழர்கள் குறித்து 40—41
சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி குறித்து (த.கோ.) 215
தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து 215, 247—250 251—254
பிறந்தநாள் வாழ்த்து, பேரவைத் தலைவருக்கு 448
மதுரையில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருதல் 339—347
முன்னாள் பேரவைத் தலைவர் திரு சி. பா. ஆதித்தனார் மறைவு குறித்து (இ.கி.) 15—16

ஆதி திராவிடர் நலன்—

கலப்புமணம், தாலிக்குத் தங்கம் வழங்குதல் 423
டி. ஆலங்குளம் காலனிக்கான மேம்பாட்டுத் திட்டங்கள் 479—480
முட்டவாக்கம், குடிநீர் வழங்கல் 213—214
விசேடத் திட்டம் 208—213

பக்கங்கள்

ஆ—தொடர்ச்சி.

ஆலயங்கள்—
பழனியில் அரசு பஞ்சாமிர்தம் தயாரிக்கும் தொழிற்சாலை 420

ஆறுமுகம், திரு. எம்—
ஓமியோபதி கல்லூரி மூடப் பெற்றதைக் கண்டித்து மாணவர்கள் நடத்தும் போராட்டம் (ஒ. தீ.) 114
தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து 215
தென்னாற்காடு மாவட்ட தொளார் கிராம அரிசனக் காலனி தீயினால் பாதிக்கப் பெற்றுள்ளது (ஒ.தீ.) 486
மதுரையில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருதல் 339—347

இ

இரங்கல் குறிப்புகள்—
முன்னாள் உறுப்பினர் திரு டி. அனந்த பாய் மறைவு குறித்து 1—2
முன்னாள் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் மறைவு 3—21

இராசமாணிக்கம், திரு. இரெ.—
குடவாசலை தனி வட்டமாக்குதல் 464—468
நியாயக் கூலி, விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப் படாதது, தஞ்சை மாவட்டம் 347—354
மாயூரம், திருவள்ளுவர் விரைவுப் பேருந்து நிலையம் கட்டுதல் 427

இராசாம்பாள், திருமதி தா.—
ஆறகழூர்—பெரியேரி சாலை, அபிவிருத்தி 41[illegible]
நீர் ஊற்றற்ற கிணறுகள், பயன்படுத்தப்படாத பம்ப் செட்டுகள் 85—8[illegible]

இராசு, திரு. ஜே. எஸ்.—
அரசுப் பள்ளி ஆசிரியர்கள் பொதுமாற்றம் (க.எ.) 270, 27[illegible]
திருச்சி மின்வாரிய அலுவலகம், பெரம்பலூருக்கு மாற்றம் 237—29[illegible]



பக்கங்கள்

இ—தொடர்ச்சி.

இராமசாமி, திரு. எஸ். என்.—
தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து 215, 237

இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—
இலங்கைவாழ் தமிழர்கள் குறித்து (அ.க.தீ.) 51—54
பிறந்த நாள் வாழ்த்து, பேரவைத் தலைவருக்கு 445—446

இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—
மருத்துவக் கல்லூரி, பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்கள். 94—95

இராமலிங்கம், திரு செ.—
குளிர்சாதனப் பேருந்து, சென்னை—தஞ்சை ஓடாதது 419

இளையபெருமாள், திரு. எல்.—
தென்னாற்காடு மாவட்ட தொளார் கிராம அரிசனக் காலனி தீயினால் பாதிக்கப்பெற்றுள்ளது (ஒ.தீ.) 487
490—492
நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு. 1981 286—289

இராஜா முகமது, திரு. கே.—
பட்டுக்கோட்டை, பாசனத் தண்ணீர் தட்டுப்பாடு 272—274
வக்பு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981 357

ஈ

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—
அரசு நூலகங்கள், தேவநேயப் பாவாணர் பெயர் சூட்டல் 417
ஆம்னி பஸ் தடை செய்தல் 326—328
ஓமியோபதி கல்லூரி மூடப் பெற்றதைக் கண்டித்து மாணவர்கள் நடத்தும் போராட்டம் (ஒ.தீ.) 114,
118—119
கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 394—395

பக்கங்கள்.

ஈ—தொடர்ச்சி.

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், திரு. பி.—தொடர்ச்சி.

தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவதை குறித்து 215
திருக்காட்டுப்பள்ளி [illegible] பள்ளியில் கையாடல் 188—189
தென்னார்க்காடு மாவட்ட தொளார் கிராம அரிசனக் காலனி தீயினால் பாதிக்கப்பட்டது (கு. வை. தீ.) 489—490
நியாயக் கூலி, விவசாயத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படாமை, தஞ்சை மாவட்டம் (க. ஈ.) 347—354
மதுரையில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருதல் 339—347
மாவட்ட அபிவிருத்தி அதிகாரி, ஒவ்வொரு ரெவின்யூ மாவட்டத்திலும் நியமித்தல் 89—91

உ

உக்கம்சந்த், திரு. எஸ். ஏ.—
கடலூர் கிராமம், பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம் 420—421

உணவுப் பொருள்கள்—
மண விழாக்களில் அளிக்கப்படும் விருந்திற்கான கட்டுப்பாடு. 459—461

உக்கிரபதி, திரு பொ.—
தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவதை குறித்து 215
திருத்துறைப்பூண்டியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி 416
தென்னார்க்காடு மாவட்ட தொளார் கிராம அரிசனக் காலனி தீயினால் பாதிக்கப்பட்டது (கு.வை.தீ.) 487—489
நியாயக் கூலி, விவசாயத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படாமை, தஞ்சை மாவட்டம் (க.ஈ.) 347—354

உமாநாத், திரு. ரா.—
சென்னை பீடித் தொழிலாளர் யூனியன் கோரிக்கை 198—201
தமிழகத்தில் உணவு நிலைமையும் இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை—விவாதம் (அ.தீ.) 529—541
தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவதை குறித்து 215



பக்கங்கள்.

உமாநாத், திரு. ரா.—தொடர்ச்சி.
பிறந்த நாள் வாழ்த்து, பேரவைத் தலைவருக்கு 444
மண விழாக்களில் அளிக்கப்படும் விருந்திற்கான கட்டுப்பாடு 459—461

உரிமைப் பிரச்சினை—
பார்க்க—தலைவர் 337—339

உள்ளாட்சிகள்—
அஸ்வமா நதியின் குறுக்கே பாலம் 414
ஆறகளூர்—பெரியேரி சாலை அபிவிருத்தி 415
உத்தமபாளையம், கம்பம் தரமுயர்த்துதல் 423
கள்ளக்குறிச்சி ஊராட்சி கட்டிடம் 315—316
கும்பகோணம் குடியிருப்புகள் கட்டுதல் 428
சென்னை மாநகராட்சி ஊழியர்கள் குடும்ப நல சேமிப்புத் திட்டம் 312—315
தங்கசாலை பேருந்து நிலையம் அருகே சுரங்கப்பாதை 409
திருவில்லிபுத்தூர் நகராட்சி ஆசிரியர்கள் நியமனம் 411
தேவணப்பாளையம், சாலை வசதி 319
பராமரிப்பு, பெருநகரங்களில் உள்ள தெருவிளக்கு 414
வைரமடை—தொப்பம்பட்டி சாலை அபிவிருத்தி 316—317

ஏ

ஏடுகள்—
பேரவைமுன் வைக்கப் பெற்றவை 55—69, 173—174, 294—295, 409, 552—553

ஒ

ஒத்திவைப்புத் தீர்மானம்—
ஓமியோபதி கல்லூரி மூடப்பெற்றதைக் கண்டித்து மாணவர்கள் நடத்தும் போராட்டம் 114—126

பக்கங்கள்.

ஒ—தொடர்ச்சி.

**ஒலி-ஒளிக் காட்சி—**

அண்ணா வாழ்க்கை வரலாறு 420

ஒலி, ஒளிக்காட்சி, திருமலைநாயக்கர் மகால், மதுரை 411

**ஓய்வூதியம்—**

ஆசிரியர்களுக்கு வழங்குதல் 184—186

க

**கடன்கள்—**

உலக வங்கியிடமிருந்து பெறப்பெற்ற தொகை 453—457

கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம், வீரியங்கோட்டை 195

விவசாயிகளிடம் நிலுவை 1979-80-ல் 190—194

**கட்டடம்—**

கிண்டி, பிற்பட்டோர் நல விடுதிக்கு அரசு கட்டடம் 427—428

**கந்தசாமி, திரு. பி.—**

கரூர் அரவாக்குறிச்சி அருகே பாலம் 421

**கருணாநிதி, டாக்டர் மு.—**

அரசுக் கவிஞர் கண்ணதாசனுக்கு அமெரிக்காவில் ஆகும் மருத்துவச் செலவு (க.கே.) 484, 485

இலங்கைவாழ் தமிழர்கள் குறித்து (அ.த.தீ.) 27—30

தமிழக நற்பணிப் பயணி இலங்கையில் கொலை (க.கே.) 335—337

தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து 215

**கருப்பையா, திரு. எ. டி.—**

பொன்னூர் (கடலூர்), அகதிகள் காலனிக்குப் பட்டா வழங்கல் 108—109

**கருப்பையா, திரு. இரா.—**

தமிழகத்தின் உணவு நிலைமையும், இன்றியமையா பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை—விவாதம் (அ. தீ.) 547—[illegible]

தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து 215



பக்கங்கள்.

க—தொடர்ச்சி.

**கருப்பையா, திரு. இரா.—தொடர்ச்சி.**

தென்னார்க்காடு மாவட்ட தொளார் கிராம அரிசனக் காலனி தீயினால் பாதிக்கப் பெற்றுள்ளது (ஒ. வை. தீ.) 486

பிறந்த நாள் வாழ்த்து, பேரவைத் தலைவருக்கு 444

பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 149—151

மதுரையில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருதல் 339—347

முக்கொம்பு சுற்றுலாத் தலமாக்கல் 303—305

**கலையரங்குகள்—**

தூத்துக்குடியில் கட்டுதல் 424

**கலையரசன், நன்னிலம் திரு. அ.—**

திருமலைராசன் ஆற்றின் குறுக்கே பாலம் 417

**கல்வி—**

தொழில் நுட்பக் கல்லூரி அமைத்தல், திருமங்கலம் 424

தோல் பதனிடும் தொழில் நுட்பக் கல்லூரி அமைத்தல் 415

**கல்விக்கூடங்கள்—**

திருத்துறைப்பூண்டியில் பெண்கள் மேல்நிலைப்பள்ளி 416

திருமங்கலம் அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி 470—472

மருத்துவக் கல்லூரி, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 94—98

வெளி மாநிலத்தவர்களுக்கு குறுகிய காலப் பயிற்சித் திட்டம் 422

**கவன ஈர்ப்புகள்—**

அரசுப் பள்ளி ஆசிரியர்கள் பொது மாற்றம் 270—272

உரங்கள் விலையேற்றம் 354—356

பக்கங்கள்.

க—தொடர்ச்சி.


கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி

திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரி இட நெருக்கடி. 494—495

நியாயக் கூலி, விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப் படாமை 347—354

பட்டுக்கோட்டை, பாசனத் தண்ணீர் தட்டுப்பாடு 272—274

வேடசந்தூர் பாளையம் பகுதியில் அரசு சிமெண்ட் தொழிற் சாலை 495—498

காட்டு வளம்—

காடுகளில் இறக்கும் யானைகள் 78—80

முண்டந்துறை ரேஞ்ச், மேய்ச்சல் பகுதிகள் 82—85

கால்நடை—

பண்ணை, பேச்சுப்பாறை 431

மருத்துவமனை, சந்தவாசல், போளூர் ஒன்றியம் 430

மருத்துவமனை, மேக்காட்டில் அமைத்தல் 432

விந்து சிதைந்து விடுதல் 429

காளிமுத்து, திரு. கா.—

பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத் தக்க பூச்சிகளையும் நோய் களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 12:

விலை ஏற்றம் உரங்கள் (க. ஈ.) 354—356

வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 156, 166—168 169—170

கிட்டப்பா, திரு. என்.—

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1981) (ஆ. நி.) 275—276

பிறந்த நாள் வாழ்த்து, பேரவைத் தலைவருக்கு 443

பெருநகரங்கள், தெரு விளக்கு பராமரிப்பு 424




பக்கங்கள்.

க—தொடர்ச்சி.


குடிநீர்—

கடலாடி பகுதி 196—198

கோவில்பட்டி தாலுகா 195—196

செங்கம் தொகுதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் 425

திருவேங்கடம் பேரூராட்சிப் பகுதிக்கு வழங்குதல் 474

நிலக்கோட்டை, போணை லட்சுமிபுரம் திட்டம் 418—419

பெரியகோடிவேரி திட்டம் 474—475

வேளச்சேரி தார்பீசுவரம் பகுதிகளுக்கு வழங்கல் 475—476

குமரி அனந்தன், திரு.—

இலங்கை வாழ் தமிழர்கள் குறித்து 37—40

கடன், உலக வங்கியிடமிருந்து பெறப்பெற்ற தொகை 453—457

பிறந்த நாள் வாழ்த்து, பேரவைத் தலைவருக்கு 444

முன்னாள் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் மறைவு குறித்து (இ.தீ.) 14—15

குழந்தைவேலு, திரு. ப.—

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் தனி அதிகாரிகள் நியமனம் இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (ச.அ.நி.) 499—500

ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ச. அ. நி.) 499

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல் இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 (ச.அ.நி.) 499

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 385, 386, 387, 388 389

பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 130, 152—153 154, 155, 156

பக்கங்கள்.

கா—தொடர்ச்சி.

குழந்தைவேலு, திரு. ப.—தொடர்ச்சி.

மதுரையில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருதல் 339—347

மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம் 170—171

**குழுக்கள்—**

பொதுக் கணக்குக் குழு, பத்தாவது அறிக்கை அளித்தல் 356

பொது நிறுவனங்கள் குழு, ஒன்பதாவது அறிக்கை அளித்தல் 126

**கூட்டுறவு—**

தாராங்குறிச்சி மத்திய கூட்டுறவு வங்கி கட்டடம் 428

பிரதம நிலை வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம் 413

**கைத்தறி—**

ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்கள் 330—332

வெள்ளியூர் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் 333—334

**கோபால், திரு. சி.—**

திரைப்படம், அண்ணா வாழ்க்கை 417

பம்ப் செட்டுகள், சீரான மின்சார வினியோகம் 69—72

**கோபாலன், திரு. ஆர். டி.—**

உத்தமபாளையம், கர்பார் தாம் பார்த்துதல் 423

சுருளிப்பட்டி, ஆரம்ப சுகாதார நிலையம் 426

பச்சைகுமாட்சி சாலை அரசுடைமையாக்குதல் 415—416

**கோபாலகிருஷ்ணன், திரு. கா.—**

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கோடைக்கானலில் குறைந்த கட்டண தங்கும் அறைகள் கட்டும் திட்டம் 305—309

**கோவேந்தன், திரு. எம். ஆர்—**

கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம், வீரியங்கோட்டை 195





பக்கங்கள்.

‘ச’

**சங்கங்கள்—**

தே. கல்லுப்பட்டி, பேப்பட்டி உற்பத்தியாளர் சேவை கூட்டுறவுச் சங்கம் 424

**சங்கரய்யா, திரு. என்.—**

இலங்கைவாழ் தமிழர்கள் குறித்து (அ. த. தீ.) 31—35

தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து 215, 226—233

நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (ஆ. நி.) 364—365

நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (ஆ. நி.) 374—375

பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 142—147

மதுரையில் குடிதண்ணீருடன் கழிவு நீர் கலந்து வருதல் 339—347

முன்னாள் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் மறைவு குறித்து (இ.தீ.) 11—13

வெளியில் உள்ளாட்சித் துறை அமைச்சர் பேசியது குறித்து (த கோ.) 113

**சட்டநாத கரையாளர், திரு. கி.—**

முன்னாள் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் மறைவு குறித்து (இ.தீ.) 18—19

**சட்டம்-ஒழுங்கு—**

இராமேஸ்வரத்தில் மரணமடைந்தோர் குடும்பத்திற்கு நிதி உதவி 446—449

பக்கங்கள்.

ச—தொடர்ச்சி.


சட்ட முன்வடிவுகள்—

இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (அ. நி.) 129

ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ச. அ. நி.) 499

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் தனி அதிகாரிகள் நியமனம் இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (ச.அ.நி.) 499—500

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல் இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 (ச.அ.நி.) 499

குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (அ. நி.) 275

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (அ. நி.) 23

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு—

(ஆ. நி.) 381—407

(பிரி. நி.) 407

(நிறைவே.) 408

திருநெல்வேலி நீர்ப்பாய்ச்சுதாரர்கள் பேர்து வாரம் தாரர்கள் சட்ட முன்வடிவு, 1981 (ச.அ.நி.) 498—499

நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (அ.நி.) 23

நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (அ.நி.) 28

நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (ஆ. நி.) 371—379

(பிரி. ஆ.) 379

(நிறைவே.) 379




பக்கங்கள்.

க—தொடர்ச்சி,


சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவு (அ. நி.) 274

நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (ஆ.நி.) 367—370

(பிரி. ஆ.) 370

(நிறைவேற்றல்) 370—371

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (அ. நி.) 22

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1981) (ஆ. நி.) 275

பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (அ. நி.) 357

பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (அ.நி) 129

பொதுமக்கள் வழக்கமாய் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.நி.) 130—153

பிரி.ஆ. 154

நிறைவேற்றுதல் 156

பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981—

ஆ.இ. 128

அ. நி. 128

பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981—

ஆ. இ. 128

அ. நி. 129

பக்கங்கள்.

ச—தொடர்ச்சி.


சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1981—(அ.நி.) 356

ம்யூனிலக்கு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ச.அ.நி.) 498

வக்ஃபு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (அ.நி.) 357

வேளாண் தொழிலாளர் நியாய ஊதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (அ.நி.) 127

வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ச.அ.நி.) 498

வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981—

ஆ. இ. 127

அ.நி. 127—128

வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.நி.) 380

வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981—

ஆ. நி. 156—169

பிரி. ஆ. 159

நிறைவேற்றல் 170

சண்முகம், திரு. இரா.—

போரூர்பாக்கம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கட்டுதல் 312

போரம்பாக்கம் (திருவள்ளூர்), மின் அணை நிலையம் அமைத்தல் 73—74

சத்தியமூர்த்தி, திரு. வ.—

கடலாடிப் பகுதியில் குடிநீர் 196—198

திரு. உத்திரகோசமங்கை கோயில், நடராஜர் சிலை 80—82




ச—தொடர்ச்சி.

பக்கங்கள்.


சமாசம், டாக்டர் கே.—

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1981) (ஆ.நி.) 283—289

பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 147—149

சமூக நலன்—

கம்மவான்பேட்டை, வேலூர் தாலுகா முன்னாள் இராணுவத்தினர் நிதியிலிருந்து திருமணக்கூடம் கட்டுதல் 430—432

பெரியார் மாவட்டம். முதியோர் உதவித் தொகை 109—110

சாகுல் ஹமீது, திரு. ஏ.—

இலங்கைவாழ் தமிழர்கள் குறித்து (அ.த.தீ.) 40

தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து 215, 237—244

மாயா, வார இதழ் பதிவின்றி வெளியிடுதல் 431—433

முன்னாள் பேரவைத் தலைவர் திரு சி. பா. ஆதித்தனார் மறைவு குறித்து (இ.தீ.) 20

சாமிக்கண்ணு, திரு. தா.—

அணை—குப்பநத்தம் அருகே செய்யாற்றின் குறுக்கே கட்டுதல் 469—470

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்—செங்கம் தொகுதி 425

சாலைகள்—

பச்சைகுமாட்சி சாலை, அரசுடைமையாக்குதல் 415—416

பாவனக்கோட்டை—முப்பையூர், முடிக்கப்படாமை 434

சித்தன், திரு. என். எஸ். வி.—

அறிக்கை அளித்தல், பொதுக்கணக்குக் குழு 274

பக்கங்கள்.

ச—தொடர்ச்சி.


**சித்தன், திரு. என். எஸ். வி.—தொடர்ச்சி.**

- ஓமியோபதிக் கல்லூரி மூடப்பெற்றதைக் கண்டித்து மாணவர்கள் நடத்தும் போராட்டம் (ஒ. தீ.) — 114, 119—121
- குதிரைமசால் மாட்டுத் தீவனம் ஜப்பானுக்கு ஏற்றுமதி — 309—310
- கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 — 393—394
- தமிழகத்தில் உணவு நிலையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை—விவாதம் (அ.தி.) — 517—525, 526
- தலைமைச் செயலர் மாற்றம் (த. கோ.) — 334—335
- தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து — 215, 233—237
- பள்ளிகள்—திருமங்கலம் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி — 470—472
- பிறந்த நாள் வாழ்த்து, பேரவைத் தலைவருக்கு — 443, 444
- பொதுக் கணக்குக் குழு, பத்தாவது அறிக்கை அளித்தல் — 356
- மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி — 181—183
- மதுரையில் குடிதண்ணீருடன் கழிவு நீர் கலந்து வருதல் — 339—347
- முண்டந்துறை (திருநெல்வேலி) ரேஞ்ச், மேய்ச்சல் பகுதிகள் — 82—85

**சிவசாமி, திரு. செ.—**

- இராயபுரம் மீன்பிடி துறைமுகம் — 179
- நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (ஆ.தி.) — 363—364
- நீலகிரி தேயிலை, சிறு விவசாயிகளிடம் அரசு நேரடி கொள்முதல் — 299—303

**சிவராமன், திரு. எஸ்.—**

- கோமுகி அணை விரிவுபடுத்துதல் — 203—204




பக்கங்கள்.

ச—தொடர்ச்சி.


**சின்னசாமி, திரு. எம்.—**

- கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்கள் — 330—332
- தனியார் கனிவளம் தோண்டும் உரிமம் — 205
- பேரூராட்சிப் பகுதிகள், ஆட்டோ உரிமம் வழங்கல் — 105—107

**சுந்தரம், திரு. கே. ஆர்.—**

- ஓமியோபதிக் கல்லூரி மூடப் பெற்றதைக் கண்டித்து மாணவர்கள் நடத்தும் போராட்டம் (ஒ.தீ.) — 114, 119—121
- தென்னாற்காடு மாவட்ட தொளார் கிராம அரிசனக் காலனி தீயினால் பாதிக்கப்பெற்றுள்ளது (ஒ. தீ.) — 489
- நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (ஆ.தி.) — 362—363
- நியாயக் கூலி, விவசாயத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படாமை, தஞ்சை மாவட்டம் (க.ஈ.) — 347—354

**சுந்தரம், திரு. ப.—**

- திருப்பத்தூர் சர்க்கரை ஆலையில் தினக் கூலிகளாகப் பணிபுரிபவர்களை நிரந்தரமாக்குதல் — 476—478

**சுந்தரராஜ், திரு. நா.—**

- மதுரையில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருதல் — 339—347

**சுப்பிரமணியம், திரு. மா.—**

- பணி, மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்களின் பணியினை வரைமுறைப்படுத்துதல் — 472—473

**சுற்றுலா—**

- கோடைக்கானல், குறைந்த கட்டணத்தில் தங்கும் அறைகள் கட்டும் திட்டம் — 305—309
- முக்கொம்பு, சுற்றுலாத் தளமாக்கும் திட்டம் — 303—305
- விடுதி, எலியட்ஸ் கடற்கரையில் — 427

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

**செம்மலை, திரு. செ.—**

சேலம் அரசு பொது மருத்துவமனை அருகில் மேம்பாலம் 421

நினைவுச் சின்னம், தேவநேயப் பாவாணர் 418

பணி, மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்களின் பணியினை வரன்முறைப்படுத்துதல் 472—478

**செய்தி—**

வடாற்காடு, தென்னாற்காடு, தருமபுரி மாவட்டங்களில் டி. வி. பராமரிப்பு 422

**செய்தித்தாள்—**

"மாயா" வார இதழ் பதிவின்றி வெளியிடுதல் 431—432

**செல்லமுத்து, திரு. எம்.—**

நியாயக் கூலி, விவசாயிகளுக்குக் கொடுக்கப்படாமை, தஞ்சை மாவட்டத்தில் (க. ஈ.) 347—354

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1981) (ஆ. நி.) 280—283

மதுரையில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருதல் 339—347

**செல்வராசன், திரு. அ.—**

தங்கசாலை பேருந்து நிலையம் அருகே சுரங்கப்பாதை 409

**சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ.—**

பரிசுத் தொகை வாங்காததால் சேர்ந்துள்ள தொகை 176—179

வைரமடை—தொப்பம்பட்டி சாலை அபிவிருத்தி 310—317

**சேதுராமன், திரு. ஏ. எம்.—**

ஆற்காட்டிலுள்ள துணைக் கருவூலம், தரமுயர்த்துதல் 175—176

ஆற்காடு, நூலகம், தகுதி உயர்த்துதல் 414—415





பக்கங்கள்.

ச—தொடர்ச்சி.

**சேதுராமன், திரு. ஏ. எம்.—தொடர்ச்சி.**

தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை விவாதம் (அ. தீ.) 526—528

தோல் பதனிடும் தொழில் நுட்பக் கல்லூரி அமைத்தல் 415

**சோமசுந்தரம், திரு. எஸ். டி.—**

குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (அ.நி.) 275

திருநெல்வேலி நீர்ப்பாய்ச்சுதாரர்கள் மேற்று வாரம்தார்கள் சட்ட முன்வடிவு, 1981 (ச. அ. நி.) 498—499

நகர்ப்புற (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (அ. நி.) 22

நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (அ. நி.) 23

நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981—

ஆ. நி. 357, 361, 362, 365—370

பிரி. ஆ. 370

நிறைவேற்றுதல் 370—371

நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1981—

ஆ. நி. 371—379

பிரி. நி. 379

நிறைவேற்றுதல் 379

நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1981—

அ.நி. 274

நியாயக் கூலி, விவசாயத் தொழிலாளர்களுக்கு தஞ்சை மாவட்டம் (க. ஈ.) 347—354

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சோமசுந்தரம், திரு. எஸ். டி.—தொடர்ச்சி.

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (அ. நி.) 22

நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1981) (ஆ. நி.) 289—293

பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 128

பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 129

மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ச. அ. நி.) 496

வேளாண் தொழிலாளர் நியாய ஊதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 127

வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ச. அ. நி.) 498

வேளாண் வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 127, 128

த

தகவல் கோரல்—

அரசுக் கவிஞர் கண்ணதாசனுக்கு அமெரிக்காவில் ஆகும் மருத்துவச் செலவு 484—485

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள் 485—486

வெளியில் உள்ளாட்சித்துறை அமைச்சர் பேசியது குறித்து 110—114

தங்கமணி, திரு. கே. எம்.—

கள்ளக்கொளத்தூர், ஊராட்சி மன்றக் கட்டிடம் 314—316

தலைவர்—

அறிவிப்புகள்.

அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நியமனம்





பக்கங்கள்.

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

அறிவிப்புகள்—தொடர்ச்சி.

பேரவையின் அலுவல்கள் 171—173

551

தீர்ப்புரைகளும்—குறிப்புரைகளும்

உரிமைப் பிரச்சினை—

பேரவைத் தலைவர் தம் தீர்ப்பில் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பெற்ற பகுதிகள் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கையில், முரசொலி, தினகரன் ஆகிய இரண்டு பத்திரிகைகளும் பேரவை அந்தப் பகுதிகளைப் பிரசுரித்திருப்பது குறித்து தலைவர் அளித்த குறிப்புரையாவது :

"பேரவையின் நீக்கப் பெற்ற பகுதிகளை வெளியிடுவது அவை உரிமையைப் பாதிப்பதாகும். பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும். அவற்றில் அதிகமாகக் குறுக்கிட வேண்டாம் என்று நான் கருதி நடவடிக்கை எடுக்காமல் இதுவரை விட்டு விட்டதைத் தவறாகப் பயன்படுத்திக்கொண்டு இம்மாதிரி செய்வது வருந்தத்தக்கது.

இந்த இரண்டு பத்திரிகைகளுக்கும் இதையே கடைசி எச்சரிக்கையாகத் தெரிவித்து, இனியொரு முறை இம்மாதிரி வெளியிடப்பெற்றால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கூறி இந்தப் பிரச்சினையை முடிக்க விரும்புகிறேன்" 337—338

பக்கங்கள்.

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும்—குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மானம்—

"சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி அருகில் தங்களது பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரியை கடந்த 11—8—1981 முதல் மூடப்பட்டதைக் கண்டித்தும் காலவரம்பற்ற உண்ணாவிரதம் மேற்கொண்ட மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 10 பேர் 19—8—1981 அன்று போலீசாரால் கைது செய்யப்பெற்று காவலில் வைக்கப் பெற்றுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து".

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின், இசைவு மறுக்கப்பெற்றது — 114—120

"தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்கள் சில கிராமங்களில் மதம் மாறும் சூழ்நிலை ஏற்பட்டு அதன் விளைவாக ஏற்பட்டிருக்கும் நிலைமைகள் குறித்து"

நிதி அமைச்சரின் விளக்கத்திற்குப் பின், இசைவு மறுக்கப்பெற்றது — 215—269

"தென்னார்காடு மாவட்டம் தௌார் கிராமத்தில் கடந்த 4—8—1981 அன்று காலை 5 மணிக்கு அரிசன காலனிக்குத் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளதால் 300 குடிசைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் அரிசனங்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து"

அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின், இசைவு மறுக்கப்பெற்றது — 486—491





பக்கங்கள்.

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும்—குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்கு—

உறுப்பினரும் அமைச்சரும் நேரடியாக ஒருவருக்கொருவர் விவாதம் வைத்துக்கொள்ளக் கூடாது (வி.வி.) — 475

கவன ஈர்ப்புகள்—

அமைச்சர் பதில் உரைத்ததற்குப்பின், சுருக்கமாகக் கேட்க வேண்டும். — 349

தகவல் கோரல்—

வெளியே பொதுக்கூட்டங்களில் பேசிய பேச்சுக்களில் கருத்துக்களை அவையிலே எழுப்பினால் அதன் பேரில் தீர்ப்பு எதுவும் அளிக்க முடியாது — 111

நடைமுறை—

அமைச்சரை இப்படித்தான் பதில் சொல்லவேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது (ஓ.தீ.) — 126

நிர்வாகத்தில் ஏற்படுகிற மாறுதல்களைப் பற்றி சட்டமன்றத்தில் விவாதிப்பது மரபு அல்ல (த.கோ.) — 335

பேசும் முறை—

அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து ஏன் விவாதிக்க வேண்டும் என்பதை பேச வேண்டும். சவால் விடும் நேரமாக இதை ஆக்கி விடக்கூடாது (ஓ.தீ.) — 241

ஒருவருக்கொருவர் மாறி மாறி பதில் சொல்லிக்கொண்டு இருக்கக்கூடாது (அ.ச.மு.) — 396

வினாக்கள்-விடைகள்—

அமைச்சர் சுருக்கமாகக் கேள்விக்குப் பதில் கூற வேண்டும் (து.வி.) — 466

கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது (து.வி.) — 97

கேள்வி நேரத்தில் கேள்வியைக் கேட்கவேண்டுமே தவிர ஒரு விவாதத்தை நடத்தக் கூடாது (து.வி.) — 449

பக்கங்கள்.

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும்-குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி.

சுருக்கமாகக் கேட்க வேண்டும் (து. வி.) 464

மூலவினாவையொட்டி இருத்தல் வேண்டும் (து.வி) 79,98,211,314, 330, 478

பிறந்த நாள் வாழ்த்துரைக்கு நன்றி 446

தனித் தீர்மானம்—

அரசினர் தனித் தீர்மானம்—மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம் 170—171

இலங்கை வாழ் தமிழர்கள் குறித்து 24—54

தனுஷ்கோடித்தேவர்—

கமுதி இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைத்தல் 419

துப்பாக்கிச் சூடு. இராமேஸ்வரத்தில் மரணமடைந்தோர் குடும்பத்திற்கு நிதி உதவி 446—449

தாமரைக்கனி, திரு. இரா—

ஒலி, ஒளிக் காட்சி, திருமலை நாயக்கர் மகால், மதுரை 411

ஒலி—ஒளிக்காட்சி, அண்ணா வாழ்க்கை வரலாறு 420

திருவில்லிபுத்தூர் நகராட்சிப் பள்ளி, ஆசிரியர்கள் நியமனம் 411

சோழபுரம் பிர்க்காவில் சுண்ணாம்பு கற்கள் 204—205

திரைப்படம், அண்ணாவின் வாழ்க்கை 417

மதுரை, தொழிற்கூடங்கள் அமைத்தல் 74—76

மருத்துவம், ஆங்கிலமுறை, சித்தா, ஹோமியோபதி பட்டம் பெற்றவர்கள் 317—320

விலை ஏற்றம், உரங்கள் (க.ஈ) 354—356



பக்கங்கள்.

த—தொடர்ச்சி

ர்மரைக்கனி, திரு. இரா.—தொடர்ச்சி.

கலப்புமணம், தாலிக்குத் தங்கம் வழங்குதல் 423

தீ விபத்து, திருவில்லிபுத்தூரில் பாதிக்கப்பட்டவர்களுக்கான கடன் உதவி 461—464

வெளிமாநிலத்தவர்களுக்கு குறுகிய காலப் பயிற்சித் திட்டம் 422

ருநாவுக்கரசு, திரு. எஸ்.—

வேடசந்தூர் பாளையம் பகுதியில் அரசு சிமெண்ட் தொழிற்சாலை (க.ஈ.) 495—496, 497—498.

ருவேங்கடம், திரு. பெ. சு.—

ஆதி திராவிடர், விசேடத்திட்டம் 308—312

உரங்கள் விலை ஏற்றம், (க.ஈ.) 354—356

குடிநீர், வேளச்சேரி தண்டீசுவரம் பகுதிக்கு வழங்கல் 475—476

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1981 398—401

போக்குவரத்து, பயணச் சீட்டு அச்சடித்தல் தனியார் அச்சகங்களில் 328—330

வடஆற்காடு, தென்னாற்காடு, தர்மபுரி, டி.வி. பராமரிப்பு 422

விவசாய நலக்குழு அமைத்தல் 87—88

வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 159—162

ரைப்படம்.—

அண்ணாவின் வாழ்க்கை 417

ணைப்பு பணிகள்.—

திருவில்லிபுத்தூரில் பாதிக்கப்பட்டவர்களுக்கான கடன் உதவி 461—464

ர்த்தாராமன் திரு. ப.—

தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து 215

பக்கங்கள்

த—தொடர்ச்சி


**தீர்மானங்கள்.—**

அரசினர் தனித் தீர்மானம்

உணவு நிலைமையும் இன்றியமையாப் பொருட்கள் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை — 408

மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம் — 170—171

அரசினர் தீர்மானம்—

தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை—விவாதம் — 501—550

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

பார்க்க—தலைவர்.

**துரைமுருகன், திரு.—**

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1981 — 387,388,389

தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரம் பற்றிய வெள்ளை அறிக்கை—விவாதம் (அ.நீ.) — 501—509

நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1981 — 357—360

**தொழிலாளர்கள்—**

சென்னை பீடித் தொழிலாளர் யூனியன் கோரிக்கை — 198—201

**தொழிற்சாலைகள்—**

மதுரை, தொழிற் கூடங்கள் அமைத்தல்

பக்கங்கள்

த—தொடர்ச்சி

**தொழிற்சாலைகள் தொடர்ச்சி—**

குமரி மாவட்டம், தீப்பெட்டித் தொழிற்சாலை — 303

சோழபுரம் பிர்க்காவில் சுண்ணாம்பு கற்கள் — 204—205

தனியார் கனிவளம் தோண்டும் உரிமம் — 205—208

திருப்பத்தூர் சர்க்கரை ஆலையில் தினக்கூலிகளாகப் பணி புரிபவர்களை நிரந்தரமாக்குதல் — 476—478

பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் நிலைமை — 478—479

மேற்குத்தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் ரப்பர் தோட்டம் தொடங்குதல் — 412

**தோட்டப்பயிர்—**

நீலகிரி, தேயிலை அரசு நேரடிக் கொள்முதல் — 299—303

ந

**நரசிம்மன், திரு. பி. எம்.—**

பயணிகள் விடுதி கட்டுதல், பள்ளிப்பட்டு — 430

**நல்லப்பன், திரு. தி. கா.—**

தேவணம்பாளையம் செல்ல சாலை வசதி — 316

பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருந்த) சட்ட முன்வடிவு, 1981 — 151

**நவநீதகிருஷ்ணபாண்டியன், திரு. ஆர்.—**

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1981 — 401—403

பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 131—132

**நிதி—**

ஒதுக்கீடு, 6-வது ஐந்தாண்டுத் திட்டம் — 436

**நிதி அலுவல்—**

துணை நிதி அறிக்கை (முதல்), 1981-82, அளித்தல் — 500—501

பக்கங்கள்.

## ந—தொடர்ச்சி

**நிலங்கள்—**

பொன்னூர் (கூடலூர்) அகதிகள் காலனிக்குப் பட்டா வழங்கல் 108—109

**நினைவுச் சின்னங்கள்—**

டாக்டர் அம்பேத்கார் படத்தை அரசு அலுவலகங்களிலும், கல்வி நிலையங்களிலும் வைப்பதற்கான அனுமதி 449—453

தேவநேயப் பாவாணருக்கு 418

மணியாச்சி, வாஞ்சிநாதன் சிலை 432

**நீக்கம்—** 93,110,111

**நீதிமன்றம்.—**

கமுதி, இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைத்தல் 419

வள்ளியூர் உட்கோட்ட நீதித்துறை நடுவர் மன்றம் கூடுதல் அதிகாரம் 423

**நீர்ப்பாசனம்—**

நரிக்குடி, சிமைக்கால் திட்டம் 422

பட்டிகுளம், கணக்கன்பட்டியுடன் இணைத்தல் 410—411

**நெடுஞ்செழியன், டாக்டர், இரா —**

இலங்கை வாழ் தமிழர்கள் குறித்து (அ.ந.தீ.) 24—27

உணவு நிலைமையும் இன்றியமையாப் பொருட்கள் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை (அ.த.தீ.) 408

தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து 258—269

துணை நிதி அறிக்கை (முதல்), 1981-82, அளித்தல் 500—501

தென்னார்காடு மாவட்ட தொளார் கிராம அரிசனக் காலனி தீயினால் பாதிக்கப் பெற்றுள்ளது. (அ.கை.தீ) 492—494

பிறந்தநாள் வாழ்த்து, பேரவைத் தலைவருக்கு 443

பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 130

## ந—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—தொடர்ச்சி. | |
| முன்னாள் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் மறைவு (இரங்கல் தீர்மானம்) | 3—8 |
| நெடுமாறன் திரு. ப.— | |
| இலங்கை வாழ் தமிழர்கள் குறித்து (அ.த.தீ) | 41—48 |
| குடிசை மாற்று வாரியம், மதுரை, கோவை | 412 |
| சலுகை, அரசு பேருந்துகளில் | 411—413 |
| மணியாச்சி, வாஞ்சிநாதன் சிலை | 439 |
| மதுரையில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருதல் | 339—347 |
| முன்னாள் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் மறைவு குறித்து (ஒ.தீ.) | 16—17 |
| வள்ளியூர் உட்கோட்ட நீதித்துறை நடுவர் மன்றம் அதிக அதிகாரம் | 428 |
| வள்ளியூரில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் | 333—334 |
| நூலகங்கள்— | |
| ஆற்காடு, தகுதி உயர்த்துதல் | 414—415 |
| அரசு நூலகங்கள் தேவநேயப் பாவாணர் பெயர் சூட்டல் | 427 |


## ப.


| | |
|---|---|
| பக்கீர்முகமது, திரு. இ. எஸ். எம். | |
| கும்பகோணம் நகராட்சி, தொழிலாளர் குடியிருப்பு கட்டுதல் | 436 |
| பரிசச்சீட்டுகள்.— | |
| பரிசுத் தொகை வாங்காததால் சேர்ந்துள்ள தொகை | 176—179 |
| புலவாமன், திரு. இல.— | |
| ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் | 184—189 |

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.


**பலராமன், திரு. இல.—தொடர்ச்சி.**

கம்மாளன்பேட்டை, வேலூர் தாலுகா, முன்னாள் இராணுவத்தினர் நிதியிலிருந்து திருமணக்கூடம் கட்டுதல் 430—431

கால்நடை மருத்துவமனை, சந்தவாசல், வடஆற்காடு மாவட்டம் 430

**பழனியப்பன், திரு. கு. பா.—**

ரயில்மூலம் வந்த சர்க்கரை மூட்டைகள் மறைவு 457—459

விழுப்புரம், பேருந்து நிலையம் 418

**பழனிவேல், திரு. என்.—**

பட்டிகுளம் கண்மாய், கணக்கன்பட்டியுடன் இணைத்தல் 410—411

பழனியில் அரசு பஞ்சாமிர்தத் தொழிற்சாலை 420

மதுரையில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருதல் 339—347

வழக்குகள், குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டவை 480—489

**பள்ளிகள்—**

திருக்களப்பூர் உயர்நிலைப்பள்ளியில் கையாடல் 188—189

**பாபு ஜனார்த்தனன், திரு.—**

ஓமியோபதி கல்லூரி மூடப்பட்டதைக் கண்டித்து மாணவர்கள் நடத்தும் போராட்டம் (ஒ.கீ.) 114

கட்டணம், விளம்பரப்பலகை, அண்ணா சாலை அரசினர் தோட்டத்திற்குள் 410

**பாசனம்—**

குப்பநத்தம் அருகில் செய்யாற்றின் குறுக்கே அணை கட்டுதல் 469—470

கோமுகி அணை விரிவுபடுத்தல் 203—204

சேரப்பூருக்கு அருகில் தொப்பையாற்றின் குறுக்கே அணை கட்டுதல் 468—469

பட்டுக்கோட்டை, பாசனத் தண்ணீர் தட்டுப்பாடு 372—374

[illegible] ஆற்றில் வெள்ளத் தடுப்புச் சுவர் 201—209

ப—தொடர்ச்சி.


| | |
|---|---|
| **பாரமலை, திரு. க.—** | |
| ஆதி திராவிடர் நலன் டி. ஆலங்குளம் காலனிக்கான மேம்பாட்டுத் திட்டங்கள் | 479—480 |
| கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1981 | 396—397 |
| நரிக்குடி, சிமைக்கால் திட்டம் | 422 |
| பிறந்த நாள் வாழ்த்து, பேரவைத் தலைவருக்கு | 445 |
| **பாலகிருஷ்ணன், திரு. ச.—** | |
| ஈரோடு, தானே வழங்கும் இயந்திரம் மூலம் பால் வழங்கல் | 428 |
| சிவகிரி, பிற்பட்டோர் மாணவர் விடுதிக்கு அரசுக்கட்டடம் | 427—428 |
| பெரியார் மாவட்டம், முதியோர் உதவித் தொகை பெறுவோர் | 109—110 |
| **பாலசுப்பிரமணியன், வேடசந்தூர், திரு. வி. பி.—** | |
| உல்லாசப்பயணிகள் விடுதி, எலியட்ஸ் கடற்கரை | 427 |
| ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள், குழந்தைகளுக்குக் கல்விக் கடன் | 94 |
| சேத்தங்குடியில் இரயில்வே மேம்பாலம் | 421—422 |
| தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை—விவாதம் (அ.தீ.) | 509—517 |
| நினைவுச் சின்னம், தேவநேயப் பாவாணர் | 418 |
| போக்குவரத்து, பல்லவன், நிர்வாகப் பணியாளர் கோரிக்கை | 322—325 |
| விவசாய மின் இணைப்புக்கு சீனியாரிட்டி விதிவிலக்கு | 413 |
| விவசாயிகளிடம் நிலுவையிலுள்ள கடன் 1979-80 | 190—194 |
| வேடசந்தூர் பாளையம் பகுதியில் அரசு சிமெண்ட் தொழிற்சாலை (க.ஈ.) | 495,497 |
| **பாலங்கள்—** | |
| கடலூர் கிராமம், பக்கிங்ஹாம் கால்வாய் | 420—421 |
| கரூர், அரவாக்குறிச்சி அருகில் | 421 |

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.


பாலங்கள்—தொடர்ச்சி.

சேத்தங்குடி, இரயில்வே மேம்பாலம் 421—422

சேலம், மருத்துவமனை அருகில், இரயில்வே மேம்பாலம் 421

திருமலைராசன் ஆற்றின் குறுக்கே 417

பால் வளம்—

ஈரோடு, தானே வழங்கும் இயந்திரம் மூலம் பால் வழங்கல் 428

தமிழ்நாடு பால்வள நிறுவனம், குழந்தைகள் உணவு தயாரித்தல் 76—78

பிரபாகரன், திரு. ஜே. சி. டி.—

தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை—விவாதம் (அ.தீ.) 541—547

புருஷோத்தமன், திரு. து.—

சென்னை மாநகராட்சி ஊழியர் குடும்ப நலத் திட்டம் 312—315

தமிழ்நாடு பால்வள நிறுவனம், குழந்தைகள் உணவு தயாரித்தல் 76—78

ரப்பர் தொழிற்சாலை, சேற்றுத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 41[illegible]

வெளியில் உள்ளாட்சித்துறை அமைச்சர் பேசியது குறித்து (த.கோ.) 111—112

பிறந்த நாள் வாழ்த்து 446

பொன்னம்மாள் திருமதி, ஏ. எஸ்.—

குடிநீர் திட்டம் நிலக்கோட்டை, பேரணை லட்சுமிபுரம் 418—419

வைகை ஆற்றில் வெள்ளத் தடுப்புச் சுவர் 201—203

பொன்னுரங்கம், திரு. ப.—

ஓமியோபதி கல்லூரி மூடப் பெற்றதைக் கண்டித்து மாணவர்கள் நடத்தும் போராட்டம் (ஒ.தீ.) 114—117

நிதி ஒதுக்கம், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் 425




பக்கங்கள்

ப—தொடர்ச்சி.


பொன்னையன். திரு. சி.—

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (அ.தி.) 23

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1981 381,391, 402—408

போக்குவரத்து—

ஆம்னி பஸ்கள், தடை செய்தல் 326—328

சலுகை, அரசு பேருந்துகளில் 411—412

சென்னை—தஞ்சை குளிர்சாதன பேருந்து ஓடாதது 419

டாக்சி மற்றும் ஆட்டோக்கள், மீட்டர் சிஸ்டம் 100—105

பயணச் சீட்டு அச்சடித்தல், தனியார் அச்சகங்களில் 328—330

பல்லவன், நிர்வாகப் பணியாளர் கோரிக்கை 322—325

பேரூராட்சிப் பகுதிகள், ஆட்டோ உரிமம் வழங்கல் 105—107

மாயூரம் திருவள்ளுவர் விரைவுப் பேருந்து நிலையம் கட்டுதல் 427

விழுப்புரம், பேருந்து நிலையம் 418

ம

மக்கள் தொகைக் கணக்கு—

பணி முடித்தல் 181—183

மக்கள் நல்வாழ்வு—

சுருளிபட்டி, ஆரம்ப சுகாதார நிலையம் 426

மணி, திரு. டி.—

இறால் மீன் வளர்ப்பு, மணக்குடி 429

கால்நடை மருத்துவ மனை, மேக்காட்டில் அமைத்தல் 432

கால்நடை வளர்ப்புப் பண்ணை பேச்சுப் பாறை 431

குமரி மாவட்டம், குறைந்த அளவு மின் அழுத்தம் 298—299

தென்னாற்காடு மாவட்ட தொளார் இராம அரிசனக் காலனி தீயினால் பாதிக்கப் பெற்றுள்ளது (ஒ.வை.தீ.) 430

பக்கங்கள்.

ம—தொடர்ச்சி.

மருத்துவம்—
ஆங்கில முறை வைத்தியம் செய்தல் ஹோமியோபதி, சித்தா பட்டம் பெற்றவர்கள் 317—320
திருப்பூர் அரசு மருத்துவ மனை தலைமை மருத்துவமனையாக அங்கீகரித்தல் 320—322

மருத்துவமனைகள்—
ஆரம்ப சுகாதார நிலையங்கள், சுகாதாரப் பார்வையாளர்களை நியமித்தல் 98—100
திருப்பத்தூர் சாலையில் உள்ள 'எலெப்' மருத்துவமனை அரசு ஏற்றல் 416

மாணிக்கம், திரு. எம். எஸ்.—
திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரி இட நெருக்கடி (க.ஈ.) 491—495
நகர்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு 1981 375—376

மின்சாரம்—
காஞ்சிபுரம் அரசு அலுவலகங்கள், மின் இணைப்பு துண்டிப்பு 73
குமரி மாவட்டம், குறைந்த அழுத்தம் 298—299
திருச்சி அலுவலகம் பொம்மனூருக்கு மாற்றல் 297—298
பம்ப் செட்டுகள், சீரான மின்சார விநியோகம் 69—72
பேரம்பாக்கம் (திருவள்ளூர்) துணை மின் நிலையம் அமைத்தல் 73—74
விவசாய மின் இணைப்புகளுக்கு சீனியாரிட்டி விதிவிலக்கு 413

மீன்வளம்—
இராயபுரம் மீன்பிடி துறைமுகம் 179—180
இறால் வளர்ப்பு மணக்குடி 429
மீன்வளக் கல்லூரி, வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு அரசின் நிதியுதவி 88—89



பக்கங்கள்.

ம—தொடர்ச்சி.

முகமது இஸ்மாயில் திரு. பி.—
இலங்கை வாழ் தமிழர்கள் குறித்து (அ.த.தீ.) 48—49
தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து 215,244—247
முன்னாள் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் மறைவு குறித்து (இ.தீ.) 18

முத்துகிருஷ்ணன், திரு. சு.—
குமரி மாவட்டம், தீப்பெட்டித் தொழிற்சாலை துவங்குதல் 303
டாக்சி மற்றும் ஆட்டோக்கள், மீட்டர் சிஸ்டம் 100—105

முத்தையா, திரு. இரா.—
சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம் அலுவலகக் கட்டிடம் 81—94
தொழில் நுட்பக் கல்லூரி அமைத்தல் திருமங்கலம் 424
தே. கல்லுப்பட்டி, தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை கூட்டுறவு சங்கம் 424

மூர்த்தி, திரு. ஜி.—
இலங்கை வாழ் தமிழர்கள் குறித்து (அ.த.தீ) 49—61
டாக்டர் அம்பேத்கார் படத்தை அரசு அலுவலகங்களிலும், கல்வி நிலையங்களிலும் வைப்பதற்கான அனுமதி 449—453
தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து 215,254—258
பிறந்தநாள் வாழ்த்து, பேரவைத் தலைவருக்கு 445
முன்னாள் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் மறைவு குறித்து (இ.தீ.) 20

ர

ரகுமான்கான், திரு. அ.—
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள் (த.கோ.) 485
கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1981 381—386, 389—392, 403—404

பக்கங்கள்.

ர—தொடர்ச்சி.

சாகுமரன்கான், திரு. அ.—தொடர்ச்சி.

தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து 215

நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 (ஆ.நி.) 371—375

பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 130,132—142
155

வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 156,157—159
168—169

ரங்கசாமி, திரு. ஆர்.— ..

பெரியகோடிவேரி குடிநீர் திட்டம் 474—475

ரமணி, திரு. கு.— ..

காடுகளில் இறக்கும் யானைகள் 78—80

திருப்பூர் மருத்துவமனை, தலைமை மருத்துவமனையாக அங்கீகரித்தல் 320—322

பிரதம நிலவள வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம் 413

வங்கிப் பேரவை, கோவை, மகளூர் 203

ராஜகுமார், திரு. எம். ஏ.—

துவரங்குறிச்சி மத்திய கூட்டுறவு வங்கி கட்டடம் 428

வ

வரதராஜன், திரு. என்.—

நியாயக்கூலி, விவசாயத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப் படாமை, தஞ்சை மாவட்டம் (க.ஈ.) 347—354

மதுரையில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருதல் 309—347

வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981 162—163

வருவாய்த்துறை— ..

நியாயக் கூலி, விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப் படாமை, தஞ்சை மாவட்டம் 347—354



பக்கங்கள்.

வ—தொடர்ச்சி.

வழக்குகள்— ..

குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்டவை 480—483

வாரியங்கள்— ..

குடிசை மாற்று வாரியம், மதுரை, கோவைக்கு தனிப் பிரிவுகள் அமைத்தல் 412

வங்கிப் பேரவை, கோவை, மகளூர் 203

வாழ்த்து—

பிறந்தநாள் வாழ்த்து, பேரவைத் தலைவருக்கு 443—446

விடுதிகள்—

பயணிகள் விடுதி, பள்ளிப்பட்டு 430

விளம்பரம்— ..

கட்டணம், அண்ணாசாலை அரசினர் தோட்டத்திற்குள் உள்ள விளம்பரப் பலகை 410

வினாக்கள்-விடைகள்— ..

உடுக்குறியிட்ட வினாக்கள் 69—110

வின்சென்ட், திரு. பி.— ..

ஆரம்பச் சுகாதார நிலையங்கள். சுகாதாரப் பார்வையாளர் களை நியமித்தல் 98—100

விஜயராகவன், திரு. பொ.— ..

காஞ்சிபுரம் அரசு அலுவலகங்கள், மின் இணைப்புத் துண்டிப்பு 73

தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து 215

வீட்டு வசதி—

அரசு ஊழியர்களுக்கு வீடு, மன்னார்குடி 183—184

பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

**வீரப்பன், திரு. ஆர். எம்.—**

இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 129

**வெங்கடசுப்பிரமணியம், திரு. ப.—**

முட்டவாக்கம் ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு குடிநீர் வழங்கல் — 213—214

**வேளாண்மை—**

உரங்கள், விலையேற்றம் (க.க.) — 354—356

ஏற்றுமதி, குதிரைமசால் மாட்டுத் தீவனம், ஜப்பானுக்கு — 309—310

தேவகோட்டை, விவசாயப் பண்ணை — 310—311

நீர் வற்றாத கிணறுகள், பயன்படுத்தப் படாத பம்ப் செட்டுகள் — 85—87

போரம்பாக்கம், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கட்டுதல் — 312

ரயில் மூலம் வந்த யூரியா மூட்டைகள் மறைவு — 457—459

விவசாய நலக்குழு அமைத்தல் — 87—88

ஹ.

**ஹண்டே, டாக்டர். எச். வி.—**

ஓமியோபதிக் கல்லூரி அரசேற்பதைக் கண்டித்து மாணவர்கள் நடத்தும் போராட்டம் (ஒ.தீ.) — 121—125, 126

**ஹாஜா ஷெரீப் திரு. கே. எஸ். ஜி.—**

இலங்கை வாழ் தமிழர்கள் குறித்து (அ.த.தீ) — 30

முன்னாள் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் மறைவு குறித்து (இ.தீ) — 22

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சாதிக் அலி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சி பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு,: மீன்வளம் பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள். உள்ளிட்ட ஊரக தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன (செய்தி அறநிலையத்துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்பட தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சி கழகம், திரைப்படச்சட்டம், இந்து அறநிலையத்துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மை பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவு கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம்: பூமிதானம், கிராமதானம் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதி கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை

13. மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—வேளாண்மை பணி, கூட்டுறவு சங்கங்கள் சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துதுறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் (கைத்தறி கதர்த்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர் பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சிர்திருத்த நிர்வாகம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## Governor of Tamil Nadu

## Thiru SADIQ ALI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M.G. RAMACHANDRAN (Chief Minister)—Public General Administration, Planning, Indian Administrative Service District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating ot Public Works Department.

2. Hon. Dr. V.R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K.A. KRISHNASAMY (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. Hon. Thiru S.D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R.M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and Official Language.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

### பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்.

### தலைமை நிருபர்

திரு. மா. சந்திரசேகரன்.

### விவாதப் பதிப்பாளர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.



## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர் |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. .. | திருவாடானை |
| 2 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 3 | அப்பாதுரை, திரு. மு. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 4 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி |
| 5 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 6 | அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ. வ.) |
| 7 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 8 | அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 9 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ. வ.) |
| 10 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 11 | அன்பழகன். திரு. க. .. | புரசைவாக்கம் |
| 12 | அன்பழகன், திரு. தி. .. | நாட்றாம்பள்ளி |
| 13 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 14 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 15 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 16 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ. வ.) |
| 17 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2 |
| 18 | ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர் |
| 19 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 20 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 21 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 22 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 23 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ |
| 24 | இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |
| 25 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 26 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ. வ. |
| 27 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 28 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 29 இராமச்சந்திரன், திரு. கே.கே. | .. | சாத்தூர் |
| 30 இராமச்சந்திரன், திரு. ச. | .. | பண்ருட்டி |
| 31 இராமச்சந்திரன், திரு. ந. செஞ்சி. | .. | செஞ்சி |
| 32 இராமசாமி, திரு. த. | .. | இராமநா ்டாம் |
| 33 இராமசுப்பிரமணியம், திரு. எஸ். | .. | ஸ்ரீவைகுண்டம் |
| 34 இராமலிங்கம், திரு. ஏ. | .. | காட்டுமன்னார் (செ. வ.) |
| 35 இராமலிங்கம், டாக்டர் கே. பி. | .. | இராசிபுரம் |
| 36 இராமலிங்கம், திரு. செ. | .. | திருவிடைமருதூர் |
| 37 இராஜசேகரன், திரு. வெ. | .. | இராதாகிருஷ்ணநகர் |
| 38 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | .. | தல்லி |
| 39 இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | .. | ஆண்டிப்பட்டி |
| 40 இளையபெருமாள், திரு. எல். | .. | எழும்பூர் (செ. வ.) |
| 41 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | .. | அம்பாசமுத்திரம் |
| 42 உகம்சந்த், திரு. எஸ். டி. | .. | மதுராந்தகம் |
| 43 உச்சி, திரு. கே. | .. | கடலூர் |
| 44 உத்திராபதி, திரு. பொ. | .. | திருத்துறைப்பூண்டி (செ. வ.) |
| 45 உமாநாத், திரு. ரா. | .. | நாகை |
| 46 கண்ணன், திரு. ம. | .. | கண்டமங்கலம் (செ. வ.) |
| 47 கணபதி, திரு. கே. ஆர். | .. | சிதம்பரம் |
| 48 கணேசன், திரு. இ. | .. | இடப்பாடி |
| 49 கணேசன், திரு. சி. | .. | அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| 50 கந்தசாமி, திரு. கா. வே. | .. | கிணத்துக்கடவு |
| 51 கந்தசாமி, திரு. பி. | .. | பொங்கலூர் |
| 52 கபாலி, திரு. டி. கே. | .. | மைலாப்பூர் |
| 53 கருணாநிதி, டாக்டர், மு. | .. | அண்ணாநகர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 54 கருப்பசாமிப் பாண்டியன் திரு. வி. | .. | பாளையங்கோட்டை |
| 55 கருப்பையா, திரு. இரா. | .. | குளித்தலை |
| 56 கருப்பையா, திரு. ஏ. டி. | .. | வால்பாரை (செ. வ.) |
| 57 கல்லன், திரு. கே. | .. | உதகமண்டலம் |
| 58 கலிதீர்த்தான், திரு. சோ. | .. | சங்கராபுரம் |
| 59 கலியமூர்த்தி, திரு. பெ. | .. | மங்களூர் (செ. வ.) |
| 60 நன்னிலம் கலையரசன், திரு. ஆ. | .. | நன்னிலம் (செ. வ.) |
| 61 காளிமுத்து, திரு. கா. | .. | திருப்பரங்குன்றம் |
| 62 கிட்டப்பா, திரு. என். | .. | மாயவரம் |
| 63 கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | .. | காங்கேயம் |
| 64 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | .. | ஆயிரம் விளக்கு |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | .. | ஆண்டிமடம் |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | .. | நெல்லிக்குப்பம் |
| 67 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | .. | சேலம்-1 |
| 68 கிருஷ்ணன், திரு. ரா. | .. | வாசுதேவநல்லூர் |
| 69 குப்புசாமி, திரு. என். | .. | மொரப்பூர் |
| 70 குப்புசாமி, திரு. கே. | .. | ஒட்டன்சத்திரம் |
| 71 குப்புசாமி, திரு. செ. | .. | வந்தவாசி (செ. வ.) |
| 72 குமரிஅனந்தன், திரு. | .. | திருவொற்றியூர் |
| 73 குருசாமி, திரு. ப. | .. | அந்தியூர் (செ. வ.) |
| 74 அண்ணாதாசன், திரு. எம். | .. | திருவரும்பூர் |
| 75 குலசேகர், திரு. ஏ. டி. | .. | சிங்காநல்லூர் |
| 76 குலசேகரப் பாண்டியன், திரு. ந. | .. | வாணியம்பாடி |
| 77 குழந்தைவேலு, திரு. ப. | .. | உடுமலைப்பேட்டை |
| 78 கேசவ ஆதித்தன், திரு. சி. | .. | திருச்செந்தூர் |
| 79 கோபால், திரு. சி. | .. | சோளிங்கர் |
| 80 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | .. | பெரியகுளம் |
| 81 கோபாலன், திரு. ஆர். டி. | .. | கம்பம் |
| 82 கோமதி சீனிவாசன், திருமதி. | .. | வலங்கை (செ. வ.) |
| 83 கோவேந்தன் திரு. எம். ஆர். | .. | பேராவூரணி |
| 84 கோவைத்தம்பி, திரு. | .. | பேரூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 85 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 86 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 87 | சட்டநாத கரையாளர் திரு. கி. | தென்காசி. |
| 88 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 89 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 90 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 91 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 92 | சபாபதி, திரு. சி. | அரூர் (செ. வ.) |
| 93 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டணம் |
| 94 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 95 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 96 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 97 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 98 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 99 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 100 | சிவப்பிரகாசம், திரு. சி. | சேந்தமங்கலம் (செ. வ.) |
| 101 | சிவபெருமான், திரு. மு | ஓமலூர் |
| 102 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 103 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 104 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 105 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 106 | சின்னராஜ், திரு. எம். | தொண்டமுத்தூர் |
| 107 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 108 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 109 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 110 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 111 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 112 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 113 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 114 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |
| 115 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 116 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 117 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 118 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 119 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 120 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 121 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ. வ.) |
| 122 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 123 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. பூ. செ. | அரவக்குறிச்சி |
| 124 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 125 | சொக்கலிங்கம், திரு. கே. | திருப்போரூர் |
| 126 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 127 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 128 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி—2 |
| 129 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர் |
| 130 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம் |
| 131 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 132 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ) |
| 133 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 134 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ. வ.) |
| 135 | தனபால், திரு. ப. | சங்கரி (செ. வ.) |
| 136 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகளத்தூர் |
| 137 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 138 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 139 | திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 140 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 141 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 142 | திருமான், திரு. | ஏற்காடு (செ.வ.) |
| 143 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 144 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|---|
| 145 | துரைசாமி, திரு. பி. எஸ். | .. | பர்கூர் |
| 146 | துரைமுருகன், திரு. | .. | ராணிப்பேட்டை |
| 147 | துரைராமசாமி, திரு. | .. | வெள்ளக்கோவில் |
| 148 | துரைராஜ், திரு. பி. | .. | சங்கரநாயினார் கோவில் (செ.வ.) |
| 149 | தேவராஜ், திரு. வி. எம். | .. | வேலூர் |
| 150 | நடராசன், திரு. எஸ். | .. | தஞ்சாவூர் |
| 151 | நரசிம்மன், திரு. பூ. மு. | .. | பள்ளிப்பட்டு |
| 152 | நல்லப்பன், திரு. தி. கா. | .. | பெருந்துறை |
| 153 | நவநீத கிருஷ்ணபாண்டியன், திரு. | .. | ஆலங்குளம் |
| 154 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | .. | மேட்டூர் |
| 155 | நாராயணசாமி, திரு. கே. | .. | திருவண்ணாமலை |
| 156 | நாராயணன், திரு. பி. ஜி. | .. | பவானி |
| 157 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | .. | திருநெல்வேலி |
| 158 | நெடுமாறன், திரு. ப. | .. | மதுரை (மத்திய) |
| 159 | பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். | .. | கும்பகோணம் |
| 160 | பட்டாபிராமன், திரு. செ. | .. | திருவள்ளூர் |
| 161 | பம்மல் நல்லதம்பி, திரு. | .. | தாம்பரம் |
| 162 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | .. | பல்லடம் |
| 163 | பலராமன், திரு. இல. | .. | போளூர் |
| 164 | பழனிசாமி, திரு. சு. | .. | மேட்டுப்பாளையம் |
| 165 | பழனிமுத்து, திரு. சி. | .. | ஆத்தூர் |
| 166 | பழனியப்பன், திரு. கு. ப. | .. | விழுப்புரம் |
| 167 | பழனிவேல், திரு. என். | .. | பழனி (செ. வ.) |
| 168 | பாண்டியன், திரு. பி. எச். | .. | சேரன்மாதேவி |
| 169 | பாபு கோவிந்தராஜன், திரு. | .. | கடலூர் |
| 170 | பாபு ஜனார்த்தனன், திரு. | .. | செய்யாறு |
| 171 | பாரமலை, திரு. க. | .. | மானாமதுரை (செ. வ.) |
| 172 | பாலகிருஷ்ணன், திரு. | .. | மொடக்குறிச்சி |
| 173 | பாலகிருஷ்ணன், திரு. | . | [illegible] |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|---|
| 174 | பாலசுப்பிரமணியன், திரு. க. | .. | சீர்காழி (செ. வ.) |
| 175 | வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | .. | வேடசந்தூர் |
| 176 | பாலன், திரு. சு. | .. | பெரம்பூர் (செ. வ |
| 177 | பாலுச்சாமி, திரு. ஏ. | .. | சமயநல்லூர் (செ. வ.) |
| 178 | பிச்சை, திரு. எம். | .. | அருப்புக்கோட்டை |
| 179 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | .. | வில்லிவாக்கம் |
| 180 | புருஷோத்தமன், திரு. து. | .. | சைதாப்பேட்டை |
| 181 | பூங்காவனம், திரு. என். ஏ. | .. | காட்பாடி |
| 182 | பெரியசாமி, திரு. ஏ. | .. | தாராபுரம் (செ. வ.) |
| 183 | பெரியசாமி, திரு. ரா. | .. | தொட்டியம் (செ.வ) |
| 184 | பெருமாள், திரு. என். | .. | வரகூர் (செ.வ.) |
| 185 | பெருமாள், திரு. ரா. கு. | .. | விளாத்திகுளம் |
| 186 | பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | .. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 187 | பொன்னுரங்கம், திரு. ப. | .. | ராயபுரம் |
| 188 | பொன்னையன், திரு. சி. | .. | திருச்செங்கோடு |
| 189 | மணி, திரு. டி. | .. | விளவங்கோடு |
| 190 | மணிமாறன், திரு. ஆர். | .. | திருப்பூர் |
| 191 | மாணிக்கம், திரு. எம். எஸ். | .. | வேதாரண்யம் |
| 192 | மாரிமுத்து, திரு. த. | .. | குளத்தூர் (செ. வ.) |
| 193 | முகமது இஸ்மாயில், திரு. பி. | .. | பத்மநாபபுரம் |
| 194 | முசிறிப்புத்தன், திரு. ம. | .. | திருச்சி–11 |
| 195 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | .. | கன்னியாகுமரி |
| 196 | முத்துசாமி, திரு. சு. | .. | ஈரோடு |
| 197 | முத்துராமலிங்கம், திரு. இ. | .. | ராதாபுரம் |
| 198 | முத்துவேல், திரு. என். | .. | வானூர் (செ. வ.) |
| 199 | முத்தையா, திரு. இரா. | .. | சேடப்பட்டி |
| 200 | முனிரத்தினம், திரு. இரா. சா. | .. | கும்மிடிபூண்டி |
| 201 | முனுசாமி, திரு. மு. ப | .. | பாலக்கோடு |
| 202 | மூர்த்தி, திரு. ஜி. | .. | பேரணாம்பட்டு (செ. வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 203 மொக்கையான், திரு. பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 204 யசோதா, திருமதி டி. .. | ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.) |
| 205 ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம் |
| 206 ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம் |
| 207 ரங்கசாமி, திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 208 ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 209 ராமசாமி, திரு. எஸ். என். .. | சாத்தான்குளம் |
| 210 ராஜமாணிக்கம், திரு. எஸ். கே .. | முசிறி |
| 211 ரெத்தினராஜ், திரு. எஸ். .. | குளச்சல் |
| 212 வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல் |
| 213 (வெற்றிடம்) | |
| 214 விசயலட்சுமி, செல்வி. வி. .. | வீரபாண்டி |
| 215 வின்சென்ட், திரு. மி. .. | நாகர்கோவில் |
| 216 விஜயசாரதி, திரு. எம். .. | அரக்கோணம் (செ.வ) |
| 217 விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார் |
| 218 விஜயரெகுநாத தொண்டமான், திரு. .. | புதுக்கோட்டை |
| 219 விஜயராகவன், திரு. பொ. .. | கிள்ளியூர் |
| 220 விஸ்வநாதன், திரு. கோ. .. | அணைக்கட்டு |
| 221 வீராசாமி, திரு. த. .. | ஒரத்தநாடு |
| 222 வீராணம்பலம், திரு. க. வெ. .. | மேலூர் |
| 223 வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. .. | காஞ்சி |
| 224 வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஓசூர் |
| 225 வெங்கடேசன், திரு. பி. எம். .. | பெரணமல்லூர் |
| 226 வெள்ளைச்சாமி, திரு. அ. .. | ஆத்தூர் |
| 227 வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு |
| 228 வேலப்பன், திரு. சி. வி. .. | கபிலர்மலை |
| 229 ஜகத்ரட்சகன், திரு. எஸ். .. | உத்திரமேரூர் |
| 230 ஜான் வின்சென்ட், திரு. மு. .. | நாங்குனேரி |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 231 ஜெகதீசன் ஆனூரார், திரு. பு. கோ. .. | செங்கல்பட்டு |
| 232 ஜெயராமன், திரு. வே. இரா. .. | தேனி |
| 233 ஹாஜாஜெரீப், திரு. கே. எஸ். ஜி. .. | திருவல்லிக்கேணி |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. | திருவட்டார் |
| 235 மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. .. | நியமன உறுப்பினர் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். — அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். — அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. — அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. — அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி —தலைமை வழக்கறிஞர்.

---

**வெள்ளிக்கிழமை, 1981 ஆகஸ்ட் 21.**

**ஆவணி 5, துன்மதி திருவள்ளுவர் 2012.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10–30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''வகை அறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகை அறிந்த தூய்மை அவர்.''

சொற்களைத் தொகுத்து உரைக்கும் முறையினை அறிந்த தூய்மை உள்ளம் வாய்ந்தவர்கள், அவையோரின் இயல்புகளை முதலில் நன்கு அறிந்து கொள்ளுவர். அவையில் பேசும்போது வலியுறுத்திப் பேச வேண்டியவற்றை, அச்சங்காரணமாக வாய் தவறிப் பிழை உண்டாக்குமாறு அவர்கள் பேசமாட்டார்கள்.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும் ].

1. இரங்கல் குறிப்புகள்.

**(அ) முன்னாள் உறுப்பினர் திரு. டி. அனந்த பாய் மறைவு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் மத்திய அமைச்சருமான திரு. டி. அனந்தபாய் அவர்கள் 29–5–1981 ஆம் தேதியன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1981 ஆகஸ்ட் 21

திரு. டி. அனந்தராய் அவர்கள் 1952-ஆம் ஆண்டு உடுப்பி தொகுதியிலிருந்து, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்ட மன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பெற்று, 1956 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முடிய, அதாவது மாநிலங்கள் திருத்தியமைத்தல் சட்டம் அமலுக்கு வரும்வரையில் பேரவையில் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். பின்னர், மைசூர் சட்டமன்றப் பேரவை உறுப்பினராக 1957 வரை தொடர்ந்து இருந்தார். இவர் 1972 ஆம் ஆண்டில் மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பெற்று 1972 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரை மத்திய அமைச்சராகவும், பின்னர் 1977 ஆம் ஆண்டு மக்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று 1979–80ஆம் ஆண்டில் மீண்டும் மத்திய அமைச்சராகவும் இருந்தார்.

திரு. ராய் அவர்கள், சிண்டிகேட் வங்கியின் தலைவராகப் பணியாற்றி உடுப்பி மாவட்டம் முழுவதும் இருந்த அடகுக் கடைகளை மூடும்வண்ணம் செயல்பட்டு மக்களுக்குத் தொண்டு செய்தார். பின்னர் ஆயுள்காப்பீட்டுக் கழகத்தின் தலைவராக இருந்தபொழுது, தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை மூலம் வீடு கட்ட சிறந்த உதவியைச் செய்தார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.



1981 ஆகஸ்ட் 21]

**(ஆ) முன்னாள் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் மறைவு (தீர்மானம்).**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினராகப் பலமுறை இருந்தவரும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராகவும் தமிழக அரசின் அமைச்சராகவும் பணியாற்றியவரும், தமிழ்ப் பத்திரிகை உலகில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திப் பாமரரும் பத்திரிகை படிக்கும் வழக்கத்தினை உருவாக்கியவருமான திரு சி. பா. ஆதித்தனார் அவர்கள் 24–5–1981 அன்று மறைந்ததை இப்பேரவைக்கு மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை மொழிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தை மொழிகிறேன்.

"1947 ஆம் ஆண்டிலிருந்து 1952-ஆம் ஆண்டு வரை நியமனம் செய்யப்பெற்றும், 1952–1953-ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினால் தேர்ந்தெடுக்கப்பெற்றும், மற்றும் 1964-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்றும் சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1957-ஆம் ஆண்டிலிருந்து 1962-ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மாவட்டம் சாத்தான்குளம் தொகுதியிலிருந்தும், 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரை மற்றும் 1971-ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பெற்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1967-ஆம் ஆண்டிலிருந்து 1969-ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தலைவராகவும், 1969-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1971-ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டு வரையும் தமிழக அமைச்சரவையில் அமைச்சராகவும் திரு சி. பா. ஆதித்தனார் அவர்கள் பணியாற்றினார்கள். பத்திரிகைத் துறையில் தனக்கென ஒரு வழியை வகுத்துக்கொண்டு பாமரர்களுக்கும் பத்திரிகை படிக்கும்

ஆர்வம் ஏற்படும் வகையில் திறம்படச் செயலாற்றி உள்ளார்கள். அன்னார் 24—5—1981-ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது.''

பெருமதிப்பிற்குரிய உயர்திரு சி. பா. ஆதித்தனார் அவர்களை இந்தப் பேரவையிலுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும், மிக நன்றாக அறிவார்கள். அவரோடு நெருங்கிப் பழகி, அவருடைய அறிவுத் திறனையும், ஆற்றல் திறனையும், அவர்களுடைய செயலாற்றல் திறனையும் மிக நன்றாக புரிந்து இருக்கிறவர்கள் இந்தப் பேரவையில் இருக்கிறார்கள். இங்கே இந்தத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிறபடி, ஆதித்தனார் அவர்கள் தமிழக சட்டமன்ற மேலவையில் உறுப்பினராக சிறப்பாக பணியாற்றி வந்திருப்பதோடு, இந்த சட்டமன்றப் பேரவையிலும் அவர்கள் உறுப்பினராக இருந்து, சிறப்பாகப் பணியாற்றினார்கள். அதற்குப் பிறகு, இந்தப் பேரவையினுடைய தலைவராகவும் இருந்து அரும் பணிகள் பலவற்றை ஆற்றியிருக்கிறார்கள். இந்தப் பேரவையின் நடவடிக்கைகள், நிகழ்ச்சிகள் அனைத்தையும் தமிழில் நடைபெற வேண்டுமென்று முனைப்பு உள்ளத்தைக் கொண்டு, அதற்கான முன்னேற்பாடுகளிலே தீவிர கவனம் செலுத்தி, அவைகளை நடைமுறைப்படுத்துவதிலே ஆர்வத்தையும், ஊக்கத்தையும் கொண்டிருந்தார்கள். ஆக, சட்டமன்றப் பேரவை விதிமுறைகள் தமிழில் சிறப்பாக வகுப்பதற்கு, அவர்கள் திட்டங்களை வகுத்து, விதிமுறைகளைத் தமிழில் வகுக்க வேண்டுமென்பது மட்டுமல்லாமல், சட்டமன்றப் பேரவையின் நிகழ்ச்சிகளெல்லாம் நல்ல தமிழிலே நடைபெற வேண்டுமென்பதிலே மிக்க ஆர்வம் காட்டினார்கள். அதற்குப் பிறகு அவர்கள் அமைச்சராக இருந்தும், அரும்பணிகள் பலவற்றை ஆற்றி வந்திருக்கிறார்கள்.

அவர்கள் தமிழகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் அறிமுகம் ஆகின்ற அளவிற்கு அரசியல் பணிகளையும், சமுதாயப் பணிகளையும் மிகச் சிறப்பாக ஆற்றி வந்திருக்கிறார்கள்.





திருநெல்வேலி மாவட்டத்திலே பிறந்திருந்தாலும், கல்வியில் நல்ல ஊக்கம் பெற்று, நாளுக்கு நாள் வளர்ந்து, இங்கிலாந்து சென்று லண்டனில் பார்-அட்-லா படித்துக் கொண்டிருக்கும் போது, அவர்கள் தொழில்நுட்ப ஆர்வத்தையும் சிறப்பாகப் பெற்று, குறிப்பாக நாள் இதழ்களை நடத்துவதிலே ஆர்வம் கொண்டிருந்தார்கள். அவர்கள் பார்-அட்-லா படித்துக் கொண்டிருக்கும் போதே, நாளிதழ்களை நடத்திப் பணியாற்றுகின்ற பண்பையும் பெற்று, அதன் மூலம் பணம் ஈட்டி, தன் படிப்பையும் தொடர்ந்தார் என்பதை அவரது வாழ்க்கை வரலாற்றிலிருந்து காண்கிறோம். அங்கே அவர்கள் பெற்ற அனுபவத்தை, தமிழகத்திற்கு வந்து, தமிழகத்திலே உள்ள எல்லா சாதாரண மக்களுக்கும் விளங்கத்தக்க அளவிலே அன்றாட நிகழ்ச்சிகளை புரிந்துகொள்ளுகின்ற அளவிற்கு, செய்தித்தாள்களை நடத்த வேண்டுமென்பதிலே ஆர்வமும், ஊக்கமும் கொண்டு, அதனை நடைமுறைப்படுத்தி, வெற்றி கண்டவர் சி. பா. ஆதித்தனார் அவர்கள். அதுவும் ஜனநாயகத்தில் சாதாரண மக்களும், விழிப்புணர்ச்சி பெறவேண்டும் என்ற அளவில் அன்றாட செய்திகளை, நிகழ்ச்சிகளை பற்றிய விளக்கங்களை தெளிவாக அறிவிக்க வேண்டுமென்பதிலே மக்களுக்கு வேண்டுகோளாக மட்டுமல்ல, விழிப்புணர்ச்சி பெறவைக்க வேண்டுமென்றால், அன்றாட அரசியல் நிகழ்ச்சிகளை, அன்றாட நாட்டு நடப்பு நிகழ்ச்சிகளை பொது மக்கள் அறிந்து கொள்ளும் கடப்பாடு உடையவர்களாக இருக்கிறார்கள் என்ற, அந்தப் பணிகளை வேறு யாரும் செய்ய முடியாத அளவில், வேறு எந்த நிறுவனமும் செய்ய முடியாத அளவில் மிகச் சிறப்பாக செய்து காட்டியவர்கள் சி. பா. ஆதித்தானர் அவர்கள்.

ஆக, மிகச் சாதாரண மக்கள், மிகத் தெளிவாக, எளிதாக அறிந்துகொள்ளுகின்ற அளவுக்கு 'தினத் தந்தி', 'மாலை முரசு' போன்ற செய்தித் தாள்களை துவக்கி, ஒவ்வொரு மாவட்டத்திலும், அதனுடைய அலுவலகங்களை வைத்து, அந்தந்த மாவட்டத்திலே இருக்கின்ற சிற்றூர்களிலும், பேரூர்களிலும் இருக்கின்ற சாதாரண மக்கம் புரிந்து கொள்ளுகின்ற அளவுக்கு, அதுவும் படிப்பில்லதாவர்கள் தெரிந்து கொள்ளுகின்ற அளவுக்கு, சாதாரண நிலையில்

தொழில் புரிகின்ற பாட்டாளித் தொழிலாளர்களும், அரசியல் அறிவு பெறுகின்ற அளவுக்கு அந்த செய்தித் தாள்களை நடத்தி வந்தார்கள். அது மட்டுமல்ல.

மாவட்டத் தலைநகரங்களிலே இப்படிப்பட்ட நாளிதழ்களை துவக்கியதன் மூலம், அந்தந்த மாவட்டத்திலே நடைபெறுகின்ற அன்றாட நிகழ்ச்சிகளையும், அந்தந்த மாவட்டத்திலே இருக்கின்ற அரசியல் நிகழ்ச்சிகளையும், சமுதாய நிகழ்ச்சிகளையும், பல்வேறு நடவடிக்கைகளையும் தெரிந்து கொள்ளுகின்ற அளவிற்கு திட்டமிட்டு, அதைத் தொடங்கி, அதிலே வெற்றியைக் கண்டவர்கள். அந்த முறையிலேதான், அவர்கள் அந்தப் பணிகளைச் சிறப்பாக, நாட்டுக்குத் தேவையான பணிகளை, எழுத்தறிவில்லாத மக்கள் வாழ்கின்ற இந்த நிலையில், அதுவும் படித்தவர்கள் எண்ணிக்கை குறைந்து செல்லுகின்ற நிலையில், அதுவும் பள்ளிக்குச் சென்று ஐந்தாவது வகுப்பு வரை படித்து நின்றுவிட்ட பல பேர்கள் இருக்கின்ற நிலையில், அவர்களெல்லாம் அரசியல் உணர்ச்சி பெற்று நாட்டினுடைய நடப்பு நிகழ்ச்சிகளைத் தெளிவாக, நல்ல முறையில், அறிந்து கொள்ளுகின்ற வகையிலே அவர்கள் செய்தித்தாள்களை நடத்தி, பிறருக்கு எடுத்துக் காட்டாக விளங்கினார்கள்.

[முற்பகல் 10-40]

நாட்டின் நடப்பை மிகத் தெளிவாக அறிந்து கொள்ளும் அளவுக்கு கவர்ச்சிகரமாக பத்திரிகையை நடத்தியதோடு மட்டுமல்லாமல் தலைப்புகள் மூலம் மக்கள் உள்ளத்தை ஈர்க்கத்தக்க வகையில், தலைப்பைப் படித்தாலே நிகழ்ச்சி என்ன என்று புரிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு செய்திகளை வெளியிட்டார்கள். வேறு சில பத்திரிகைகள் நுணுக்கமான, ஆழமான, தெளிவான முழுத் தன்மைகள் கொண்ட செய்திகளை வெளியிட்டாலும் தலைப்புகளின் மூலம் நாட்டின் நடப்பைத் தெரிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு செய்திகளை வெளியிட்ட அந்த வகையில் அவர்கள் மிக மிகப் பாராட்டுக்குரியவர்கள் ஆவார்கள். அவர்கள் தமிழில் பற்றுக் கொண்டிருந்ததோடு மட்டுமல்லாமல் தமிழர்கள் நல்வாழ்வு பெற வேண்டும் என்பதற்காக பல்வேறு



முயற்சிகளில் ஈடுபட்டார்கள். தமிழகம் பல்வேறு வகையில் ஏற்றம் பெறவேண்டுமென்ற கருத்துருவை உள்ளத்தில் கொண்டு அந்தக் கருத்துக்களுக்கு வெற்றி தேடித் தருவதில் தம்முடைய ஆர்வத்தையும் ஊக்கத்தையும் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். அந்த வகையிலே நல்ல தமிழார்வம் கொண்டிருந்தார்கள். எங்கும் தமிழ், எதிலும் தமிழ், என்றும் தமிழ் என்ற கொள்கைக்கு ஆதரவாக முழு ஒத்துழைப்பையும் நல்கி வந்தார்கள். தமிழர்கள் எல்லா வகையிலும் மேம்பாடு அடைய வேண்டுமென்பதற்காக பல்வேறு முயற்சிகளைத் துவக்கி அரும்பாடு பட்டு வந்தார்கள். தமிழ்நாடு மேம்பாட்டு தனித் தன்மை பெற வேண்டும், தமிழ்நாடு எல்லா வாய்ப்பு வசதிகளையும் பெற வேண்டும், அந்த வகையில் தமிழகம் எழுச்சி பெற வேண்டுமென்ற கருத்துக்களை வழங்கினார்கள்.

அது மட்டுமல்லாமல் தமிழகத்தில் தொழிற் சாலைகள் மிகவும் தோன்ற வேண்டுமென்ற எண்ணம் கொண்டு அதற்கும் உறுதுணையாக இருந்து மிகப் பெரிய தொழிற்சாலைகள் தோன்ற உறு துணையாக இருந்ததோடு அடிப்படையாக சில தொழில்களைத் தானே துவங்க முன் வந்து மிகச் சிறப்பாக அந்த வகையிலும் சிறப்பாகப் பணியாற்றி வந்தார்கள். இப்படி பல்வேறு சிறப்புகளுக்குக் காரணமாக இருந்து, அறிவுத் திறனும், ஆற்றல் திறனும், செயலாற்றும் திறனும் மற்றவர்கள் பாராட்டத்தக்க, போற்றத்தக்க அளவுக்கு வாழ்ந்த சி. பா. ஆதித்தனார் அவர்களுடைய இழப்பு உள்ளபடியே பேரிழப்பாகும். சிலர் இறக்கும்போது இழப்பு என்று சொல்லுகிறோம். நாட்டில் எவ்வளவோ பேர் பிறக்கிறார்கள், மறைகிறார்கள். அவர்கள் அத்தனை பேரையும் நாம் நினைவில் வைத்துக் கொள்வதில்லை, நாடு நினைவு கூர்தல் இல்லை. ஒரு சிலர் அவர்களுடைய அரும்பணி காரணமாக, மக்களுக்காக எந்தெந்த வகையில் பாடு பட்டார்கள். பயன்பட வாழ்ந்தார்கள் என்பதைச் சீர்தூக்கிப் பார்த்து அவர்கள் இல்லாத நிலை ஏற்படும் போது அவர்களுடைய மறைவு பேரிழப்பாகிறது. அந்த வகையிலே இழப்பு, பேரிழப்பு என்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தி வருகிறோம். அந்த வகையில் சி. பா. ஆதித்தனார் மறைவு உள்ளபடியே தமிழகத்திற்குப் பேரிழப்பாகும். அப்படிப்

பட்ட ஆர்வமும் எழுச்சியும் கொண்ட அவர்கள் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து பணியாற்ற, தமிழகம் விழிப்போடு இருந்து ஜனநாயகத்தைக் காப்பாற்ற, தமிழை, தமிழக மக்களை மேலோலங்கச் செய்ய அவர் ஊட்டிய எழுச்சியும் கருத்துக்களும் விளக்கங்களும் என்றென்றும் பயன் படும், நினைவில் நின்று நினைவுச் சின்னமாக விளங்கும் என்று எடுத்துத் தெரிவித்து அவரை இழந்து வருந்தும் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினருக்கும், உரிய நண்பர்களுக்கும் இந்தப் பேரவை தன்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது என்ற தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டப் பேரவையினுடைய தலைவராக விளங்கியவரும், அமைச்சராகப் பல்லாண்டு காலம் பணியாற்றி வரும், நீண்ட காலம் சட்ட மன்ற மேலவையிலும், பேரவையிலும் உறுப்பினராக இருந்து பொது மக்களுக்குத் தொண்டாற்றிய வருமான நம்முடைய மதிப்பிற்குரிய பெரியவர் சி. பா. ஆதித்தனார் மறைய நேரிட்டது குறித்து பேரவை முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இரங்கல் தீர்மானத்தை வழிமொழிந்து என்னுடைய ஆழ்ந்த இரங்கலை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்ள முன் வருகிறேன்.

ஆதித்தனார் அவர்கள் அமைச்சராக இருந்து ஆற்றிய நற்பணிகளைத் தமிழ்நாடு பெரும் அளவுக்கு நன்றாக அறியும். சட்டப்பேரவை தலைவராக அவர்கள் இருந்து ஆற்றிய பணியை சட்டப் பேரவை உறுப்பினர்கள் பலர் மிகவும் நன்றாக அறிவார்கள். சட்ட மன்றப் பேரவைத் தலைவராக இருந்த காலத்தில் இன்றைக்கு வழக்கிலிலுள்ளதுபோல் சட்டமன்றத்தில் நான் தோன்றும் திருக்குறள் ஒன்றை எடுத்துச் சொல்லித் தொடங்குகிற மரபையும் அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

ஆதித்தனாருடைய பணிகள் மக்களுடைய பாராட்டைப் பெறுகிற அளவுக்கு மிகச் சிறந்த இடத்தைப் பெற்றிருப்பது அவர் பத்திரிகை உலகத்திலே பெற்றிருந்த உயர்ந்த இடத்தின்



காரணமாகத்தான். தமிழ் நாட்டிலே பாமர மக்களுக்கும் பத்திரிகைகளுக்கும் அதிகத் தொடர்பு இல்லாமலிருந்த நிலையை மாற்றி பாமர மக்களும் பத்திரிகை படிக்கக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு அதிலே ஒரு ஈடுபாடு ஏற்படுகிற அளவுக்குப் பத்திரிகை நடத்துகிற ஒரு முறையை முதன் முதலில் அவர்கள் தான் மேற்கொண்டார்கள். அதுவரையில் பத்திரிகை என்பதே கூடப்படித்தவர்களுக்காகத்தான் என்ற நிலை இருந்தது. இரண்டாவதாக அந்தப் பத்திரிகைகளிலே பாமர மக்களுக்கு ஈடுபாடு ஏற்படக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு எப்படிப்பட்ட செய்திகளாலே உடனடியாகப் படித்தறிய ஒரு ஆர்வம் பிறக்குமோ அப்படிப்பட்ட செய்திகளுக்கு ஒரு முக்கியத்துவம் தந்தார்கள்.

இன்னும் சொல்லப்போனால், ஏழை மக்கள் பாட்டாளி மக்கள் அடித்தட்டு மக்கள் ஆகியவர்களைப்பற்றிய செய்திகள் அதிகம் இடம் பெறக்கூடிய வாய்ப்பும் ஏற்படுத்தினார். அந்தப் பத்திரிகையில் எடுக்கப்பட்ட நடையும் அதிகம் படித்தவர்கள் புரிந்த கொள்ளக்கூடிய நடையாக அமைந்தது. எனவே பத்திரிகை உலகத்திலே ஒரு புதுமையை அவர் நிலைநாட்டியது மட்டுமின்றி அந்தப் பத்திரிகைகளை தமிழ்நாடு முழுவதும் செயின் நியூஸ்பேப்பர் என்று சொல்லத்தக்க அளவுக்கு சங்கலித்தொடர் போல் தமிழ்நாடு முழுவதும் பரவலாக அந்த அந்த மாவட்டங்களிலேயும் நடத்துவதற்கு முன்வந்து, தினத்தந்தி, மாலைமுரசு போன்ற பத்திரிகைகள் மூலமாக தமிழ்நாட்டு மக்களுக்குப் பல ஆண்டுகாலமாக ஒரு நல்ல தொண்டினைச் செய்து வந்ததுடன் அதை வெற்றிகரமாக நிலைநாட்டியும், இருக்கிறார்கள், இன்னும் அவைகள் தொடர்ந்து நடைபெறக்கூடிய வகையில்.

அடுத்து ஆதித்தனார் அவர்கள் மாண்புமிகு அவை முன்னவர் சொன்னதுபோல்— சிங்கப்பூரிலேயும் மலேசியப் பகுதியிலேயும் ஓரளவுக்கு கல்வி பெற்று அதற்குப் பிறகு இங்கிலாந்துக்குச். சென்று அங்கேயும் கல்வி பெற்று அந்தக் காலத்திலேயே தொழில் நுணுக்கத்திலே ஒரு ஆர்வம் காட்டி; திரும்ப வருகிற. போதே ஒரு புது உணர்வோடு தமிழ்நாட்டிற்கு வந்தார்கள்.

வந்தவுடன் அவர்கள் கண்ட தமிழகத்திலே, தமிழன் என்ற உணர்ச்சி, தமிழ்மொழி உணர்ச்சி தமிழ்நாட்டுப் பற்றுணர்ச்சி, இவை எல்லாம் பெருமளவுக்கு இடம்பெறவில்லை என்ற எண்ணம் கொண்ட காரணத்தால் அவர்கள் நாம் தமிழர் இயக்கம் என்ற ஒருஇயக்கத்தை ஆரம்பித்தார்கள். அதிலே, ஒன்றிரண்டு கருத் துக்களிலே எங்களைப் போன்றவர்களுக்கு சில மாறுபாடுகள் இருந்தன என்று சொன்னாலும், அடிப் படையிலே தமிழ்நாட்டு மக்களிடத்திலே எப்படிப்பட்ட உணர்வு ஏற்பட்டால் தமிழ் நாடு வாழும் என்று அவர் கருதி னாரோ அப்படிப்பட்ட உணர்வுக்காக ஒரு 10,15 ஆண்டுகாலம் அந்த இயக்கத்தை அவர்கள் பாடுபட்டு நடத்தினார்கள்.

அண்மைக் காலத்திலே, அவர் மறைவதற்கு சில திங்களுக்கு முன்னால் அல்லது ஒரு ஆண்டுக்கு முன்னால் தாழ்த்தப்பட்ட வர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் ஆகிய அந்த மக்களுடைய உரிமை நிலைநாட்டப்பட்டால் தான் தமிழருடைய உரிமைப் பாதுகாக்கப்படும்; தாழ்த்தப்பட்ட மக்களோ பின்தங்கிய மக்களோ பாதுகாக்கப்படாதபோது தமிழருடைய உரிமை பாது காக்கப்படுவதாக எண்ணுவது ஒரு ஏமாற்றுத்தனமான நிலை என்று அவர் கருதிய காரணத்தினாலே தாழ்த்தப்பட்டோர் பிற்பட்டோர் மக்கள் இயக்கம், தாழ்த்தப்பட்டோர், பின்தங்கி யோர், ஆகிய மக்களைக் கொண்ட ஒரு இயக்கத்தை உருவ க்க முயற்சித்தார். அது வெற்றி பெற்றதா அல்லவா என்பது முக்கிய மல்ல. அவருடைய உள்ளத்தில் அடித்தட்டு மக்கள், பின் தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியவர்களுக்கு ஏற் படுகிற பல்வேறு குறைகளையெல்லாம் கூர்ந்து கவனித்து தமிழ் நாட்டு மக்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டுமென்ற விருப்பம் இருந்தது.

அதே போல், தமிழ்நாடு தொழில் துறையிலே வளர்ச்சி காண வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். காகிதத் தொழிற் சாலையாக இருந்தாலும், பனை வெல்லத் தொழிலாக இருந் தாலும், அல்லது கிராம கைத் தொழிலாக இருந்தாலும் இவை களிலே எல்லாம் தனியார்வம் காட்டினார். மரம் ஏறுகிற



தொழிலாளர்களுக்காகப் பல முறை அவர் வாதாடினார். தமிழ் நாட்டு மக்களுக்காகப் பாடுபட்ட ஒரு பெரியவர், தமிழ்நாட்டு மக்களுடைய வளர்ச்சியிலேயும் அக்கறை கொண்டு அரசியலி லேயும் ஈடுபட்டிருந்த பெரியவர் மறைந்து விட்ட இந்த நிலையில் அதன் காரணமாக நாமெல்லாம் ஆழ்ந்த துயரமடை கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என் னுடைய ஆழ்ந்த வருத்தத்தை அவருடைய குடும்பத்தாருக்கு இரங்கல் தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தில் இணைத்து இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[முற்பகல் 10.50].

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப் : சபாநாயகரவர் களே, கனம நிதியமைச்சரவர்கள், ஆதித்தனார் அவர்களின் மறைவிற்காக கொண்டு வந்திருக்கும் இரங்கல் தீர்மானத்தின் மீது நான் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆதித்த னார் அவர்கள் தென்னிந்தியாவில் பிரக்யாதி பெற்றவர்கள். எந்தப் பொறுப்பை எடுத்தாலும் மிகத் தீவிரமாகச் செயல் பட்டு வெற்றிகரகாக முடிக்கும் தைரியம் உள்ளவர். இந்தச் சபையில் அவர் இருக்கும்பொழுது நானும் அங்கத்தினராக இருந்தேன். அப்பொழுதும் அவர் தன்னுடைய பணிகளைச் செம்மையான முறையில் செய்வதில் ஆர்வம் காட்டுவார்.

பல பத்திரிகைகளை ஆரம்பித்தார்கள். இங்கே பேசியவர் கள் சொன்னபடி, எப்படி என்னென்ன தலைப்புக்களாகப் போட்டால் மக்கள் அதை வாங்கிப் படிப்பார்களோ அம்மாதிரியெல்லாம் அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் மிகவும் ஊக்கமும், தைரியமும் படைத்தவர்கள். சில பெரிய தொழிற்சாலைகள் அவர்கள் ஆரம்பித்து நல்லபடியாக அவைகள் இயங்கி வருகின்றன. அவர்களுடைய மறைவு நம் தமிழ் நாட்டிற்கு மிகப் பெரிய இழப்பாகும்.

எங்கள் கட்சியின் சார்பாக, அவர்களது மறைவுக்காக கொண்டு வந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன். வணக்கம்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு அவைத் தலைவ ரவர்களே, அவையினுடைய முன்னவரவர்களால் கொண்டு வரப் பட்டிருக்கும் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்களின் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை வழிமொழிந்து மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைத் தெரி விக்க விரும்புகிறேன். திரு. ஆதித்தனார் அவர்களை நீண்ட

காலமாக நான் நேரிலே அறிவேன். அவர் இங்கிலாந்திலே
பாரிஸ்டர் பட்டம் படித்து தமிழகத்திற்கு வந்த பிறகு மிகவும்
சுறு சுறுப்பாகப் பல துறைகளில் பணியாற்றியவர்.
குறிப்பாக, மாண்புமிகு அவை முன்னவரவர்கள் குறிப்
பிட்டதைப்போல, அவர்களுடைய பணிகளிலே சிறந்ததாக
இருந்தது, எளிய முறையில் தமிழகத்திலே இருக்கும் சாதாரண
மக்களும் பத்திரிக்கைகளைப் படிக்கின்ற ஒரு பழக்கத்தைக்
கொண்டு வந்ததில் அவர்களுக்கு மிகப் பெரிய பங்கு இருந்தது.
1943 ஆம் ஆண்டிலேயே காகிதத்திற்கு மிகுந்த நெருக்கடியிருந்த
பொழுது வைக்கோல் போன்ற மூலப் பொருட்களைப் பயன்
படுத்தி, யுத்த நெருக்கடி காலத்தில் அந்தப் பத்திரிக்கைகளை
உருவாக்கி தமிழக மக்கள மத்தியில் வெளியிட்டார்கள். பல்
வேறு மாவட்டங்களில் துணைப் பத்திரிக்கைகளையும் ஏற்
படுத்தினார்கள். சாதாரணமாக, இலேசாகப் படித்தவர்கள்
கூட அரசியல் பிரச்சினைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதில்
அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்றால் அதில் அவருடைய
பணி என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் என்று நான் கருது
கிறேன்.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையிலே 1967 ஆம் ஆண்டிலே
நான் இருந்திருக்கிறேன். அப்பொழுது திரு. ஆதித்தனார்
அவர்கள் அவைத் தலைவராகப் பொறுப்பேற்ற காலத்தில்,
குறிப்பாக சட்ட மன்றப் பேரவையின் விதிகள் ஆங்கிலத்தில்
இருந்ததைத் தமிழில் மொழி பெயர்த்து, அந்த விதிகளைப் புத்தக
மாக ஆக்கி இராஜாஜி மண்டபத்தில் அதற்கு ஒரு விழாவே
நடை பெற்றது. அதற்கு முன்பு தமிழிலே முடியுமா, சட்ட
மன்றம், நீதி மன்றம், அரசாங்கம் ஆகிய துறைகளிலே பயன்
படுத்தப்படும் ஆங்கில வார்த்தைகளுக்குத் தக்க தமிழ் வார்த்தை
களைக் கொண்டு வர முடியுமா என்ற சந்தேகம் ஏற்பட்டிருந்த
நாளிலே இந்தச் சட்ட நுணுக்கங்களையும் தமிழிலே கொண்டு
வர முடியும் என்று ஆராய்ந்து அந்தப் புத்தகத்தை வெளியிடச்
செய்தார்கள். அதற்குப்பிறகு தமிழ்நாடு சட்டப்பேரவையில்
மிகப் பெரும்பாலும் தமிழிலே இயற்றப்பெற்ற அந்த விதிகளைத்
தான் மேற்கோள் காட்டி நாம் இங்கே பேசி வருகிறோம். இது
திரு. சி. பா. ஆதித்தனார் அவர்களின் நினைவுக்குச் செலுத்தக்
கூடிய சிறந்த அஞ்சலியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

தமிழ்நாட்டிற்கே சொந்தமான சில விளையாட்டுகளை—
சடுகுடு போன்ற விளையாட்டுகளைப் பிரபலப்படுத்துவதற்கு
திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள் பெரிதும் முயற்சித்தார்கள்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, தமிழ், தேசிய உணர்வு என்ற நிலையில் அவர் தம்
முடைய பிரதான நேரத்தைச் செலவழித்தார்கள்



இப்படிப் பல துறைகளில் சிறந்து விளங்கிய திரு. சி.பா.
ஆதித்தனார் அவர்களின் மறைவுக்கு மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி
யின் சார்பில் எங்களுடைய துக்கத்தைத் தெரிவித்து, அன்னா
நடைய குடும்பத்திற்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரி
வித்து, மாணபுமிகு முன்னவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்
கும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அமைகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு அவையின் முன்னவர் அவர்கள் கொண்டு வந்த
இரங்கல் தீர்மானத்தை வழிமொழிந்து ஒரு சில வார்த்தைகளைச்
சொல்ல நான் முன் வருகிறேன். மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்
தனார் அவர்கள இந்தச் சபைக்கு 1967-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்
கப்பட்டு, பேரவைத் தலைவராக இருந்த காலத்தில் நானும்
இந்த அவையிலே இருந்து அப்போதிருநது 1976 வரை அவருடைய
பல திறமையான பணிகளைப் பார்க்க முடிந்தது. எதிர்க்கட்சி
வரிசையிலே உள்ள மாண்புமிகு தலைவர்கள் கூறியது மாதிரியும்,
முன்னவர் அவர்கள கூறியது போலவும் அவர்கள் இந்த அவை
யினுடைய நடவடிக்கைகளை முழுமையாகத் தமிழிலேயே நடத்த
வேண்டுமென்று மிக ஆர்வமாக இருந்ததோடு மட்டுமல்லா
மல், அவர்தான் இந்த அவையின் விதிகளைத் தமிழிலே கொண்டு
வந்தார்கள். அது மட்டுமல்லாமல், அவர்கள் நினைத்த காரியத்
தை எப்படியும் முடிக்க வேண்டுமென்ற வைராக்கிய எண்ணம்
உள்ளவர், எப்படியும் முடித்தே தீருவார்.

அதேமாதிரியாக, அவர் நடத்திய பத்திரிகைகளின் வாயி
லாக, சாதாரணமாக, 1, 2, 3 வகுப்புகள் வரை படித்தவர்கள்
கூட, உலக விஷயங்களை, நாட்டினுடைய சகல விஷயங்களைத்
தெரிந்து கொள்வதற்கு வழி செய்தார். அவருடைய பத்திரி
கைகளின் வாயிலாகத் தமிழகத்து, மக்கள், நாட்டு நடப்பு
களை மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டார்கள். ரேடியோ
கேட்டு தெரிந்து கொள்கிற மாதிரி, பத்திரிகையிலே எந்த விஷயத்
தை எப்படிப் போட்டால் சாதாரண மக்கள் தெரிந்து கொள்
வார்கள் என்பதைத் தெரிந்து அந்த மாதிரி மிகத் திறமையான
முறையிலே அவர்கள் பத்திரிகையை நடத்தினார்கள் என்பதை
நாமெல்லாம் அறிவோம்.

அதே மாதிரியாக, தமிழகத்திலே ஆரம்பகாலத்திலே இருந்த
பல தொழில்களைத் துவங்க வேண்டுமென்று ஆர்வத்தோடு
இருந்தார். அதே மாதிரியாக, அவர் வெளிநாடுகளுக்குச் சென்று
பார்-அட்-லா, ஆங்கிலம் எல்லாம் படித்திருந்தாலும்கூட,
தமிழகத்திலே நீதி நிர்வாகத்திலே அந்த நடவடிக்கைகள் முழு
மையாகத் தமிழிலே இருக்க வேண்டுமென்று விரும்பி மிக ஆர்வ
மாக இருந்தார். அவர் சட்டமன்றத்தினுடைய பேரவைத்
தலைவராக இருந்த காலத்திலும் அதற்கு வேண்டிய பல நட

[திரு. சோ. அழகர்சாமி] [1981 ஆகஸ்ட் 21]

வடிக்கைகளை எடுத்தார். அதைத் தொடர்ந்து பின்பற்றக்கூடிய
முறையிலே, சகல நடவடிக்கைகளைத் தமிழிலே முழுமையாக்
கொண்டு வரக்கூடிய ஏற்பாட்டைச் செய்வது, அவருக்கு நாம்
செலுத்தக்கூடிய மரியாதையாக இருக்கும். அந்தக் காரியத்திலே
நாம் முனைப்பாக இருக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்
திலே தெரிவித்துக் கொள்வதோடு, அவரை இழந்த அவருடைய
துணைவியாருக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் இந்தியக்
கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரி
வித்து அமர்கிறேன்.

* திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்
களே, அவை முன்னவர், நிதி அமைச்சர் அவர்கள் கொணர்ந்த,
பெருமதிப்பிற்குரிய சி.பா. ஆதித்தனார் அவர்களுடைய மறை
வுக்கான இரங்கல் தீர்மானத்தில் காந்தி காமராஜ் தேசிய காங்
கிரஸ் கருத்தையும் இணைத்துக்கொள்ள விழைகின்றேன். தமி
ழர்களுக்காக, தமிழ் உணர்வுக்காகப் போராடி, சிறை சென்ற
ஓர் உத்தமத் தியாகி அவர். விவசாயிகளுக்காகவும் போராடி,
கைகளிலே விலங்கு பூட்டப்பட்டு சிறைக் கோட்டத்தை அனு
பவித்த ஒரு தியாகி அவர். ஏழைகளுக்கு எழுத்தறிவித்தல்தான்
அன்னசத்திரம் வைத்தலைவிட, ஆலயம் பதினாயிரம் நாட்
டலைவிட, நீர்ச்சுனைகள் வைப்பதை விட, கோடி புண்ணியம்
தரும் என்று சொன்னார் பாரதி. அந்தக் கோடிப் புண்ணியத்
தைத் தேடிக் கொண்ட பெருமகனார் ஆதித்தனார் ஆவார்கள்.

வரி வடிவிலே, எழுத்துக்களிலே தந்ததோடு மட்டுமல்லாமல்,
வரைபடத்தாலே, காட்சியாகவும் தந்தவர் ஆதித்தனார் ஆவார்
கள். அவருடைய பத்திரிகையைப் படிக்கின்றபொழுது அது
படிப்பதற்காக மட்டுமே அல்ல, பார்ப்பதற்கும் உகந்த ஒன்
றாகவே இருக்கும். அதைப் போலவே நகைச்சுவை என்று சொல்
கின்ற ஒரு பகுதியினைப் புகுத்தி, நாட்டிலேயிருக்கின்ற அந்த
உணர்வுகளை வளர்க்கின்ற விதத்திலே பரிசுகளையும் கொடுத்து
படிக்கின்றவர்களுக்கு மகிழ்ச்சியையும் கொடுத்தவர் ஆதித்தனார்
ஆவார்கள்.

இங்கே எனக்கு முன்னாலே பேசிய தலைவர்கள் குறிப்பிட்
டதைப் போல, காகிதம் கிடைக்காத காலத்திலேயே நமக்
குக் கிடைக்கின்ற மூலப் பொருளாகிய வைக்கோலை வைத்து,
கையிலே தயார் செய்தவர். வாய்ப்பும் வசதியும் வந்தபொழுது
இயந்திரத்தாலே காகிதத்தைச் செய்கின்ற பெரிய தொழிற்
சாலை நிறுவத் தவறவில்லை அவர். ஆனால் நிறுவுகின்ற
நேரத்திலேகூட அந்தத் தொழிற்சாலை இருக்கிற பகுதியைச்
சுற்றி என்ன மரங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றனவோ'
அந்த உடை மரங்களைப் பயன்படுத்திக் காகிதங்களைச் செய்



1981 ஆகஸ்ட் 21][ [திரு. குமரி அனந்தன்]

வதற்கு அவர் முன் வந்ததாலே அந்தப் பகுதியிலேயிருக்கிற
ஏராளமான ஏழைகள் வாழ்வு பெறுவதற்குரிய வழிவகைகளை
அவர் செய்து வைத்தார்கள்.

அது மட்டுமல்லாமல், அவர்கள் கொண்டு வந்த பத்திரிகை
தொழிலில் எவ்வளவு சிறப்பாக இருந்தது என்பதனை உலகமே
கண்டு வியந்தது.

அதோடு அவர்கள் தமிழர்களுடைய வீர விளையாட்டு மங்கி
மறைந்து போகக்கூடாது என்பதற்காக அவைகளை நிலை மங்கி
நிறுத்துவான் வேண்டி, பல பரிசுகளையெல்லாம் கொடுத்து
அதற்கு ஊக்கம் கொடுத்தார்கள்.

எத்தனையோ அரசியல் தலைவர்கள் அவராலே பெயரும்
புகழும் பெற்றார்கள். எத்தனையோ அரசியல் கருத்துக்கள்
அவராலே நிலைபேறு உடையதாக ஆயின. அப்படிப்பட்ட
பெருமகனாருக்கு நாமும் நினைவுச் சின்னம் எழுப்புகின்ற வகை
யிலே தலைநகரத்திலே, ஏதாவது, ஒரு முக்கிய தெருவுக்கோ
அல்லது அவர் வாழ்ந்த கிரசென்ட் பார்க் தெருவுக்கோ, அன்னா
ருடைய பெயர், ஆதித்தனார் தெரு, என்று பெயர் சூட்டி,
நாமும் அவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு,
அன்னாருடைய மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், அவ
ருடைய குடும்பத்தாருக்கு என்னுடைய அனுதாபத்தையும் தெரி
வித்து அமர்கிறேன்.

[முற்பகல் 11–00]

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் கொண்டு
வரப்பட்ட பெரியவர் சி.பா. ஆதித்தனார் அவர்களுடைய மறை
வுக்கு இரங்கல் தெரிவித்து இருக்கின்ற அந்தத் தீர்மானத்தை
வழிமொழிந்து, அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின்
உணர்வுகளையும் அதோடு இணைத்துக்கொள்ள வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

சி.பா. ஆதித்தனார் அவர்கள் இங்கிலாந்து நாடு சென்று
பாரட்-லா படித்தவர்கள் ; வழக்கறிஞராக சமூகத்திற்கு சேவை
செய்யக்கூடிய பெரும் பட்டப்படிப்பு படித்து இருந்தாலும்
கூட, அவ்வளவு ஆங்கில திறமை கொண்ட அவர் இந்தத் தமி
ழகத்தில், தமிழ் மக்கள் சீரும் சிறப்பாக இருக்கவேண்டும் என்ற
எண்ணத்தோடு, தமிழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் தன்னை
அர்ப்பணித்துக் கொண்டு பல சேவைகளைச் செய்திருக்
கிறார்கள்.

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1981 ஆ··ஸ்ட் 21

அதோடு மட்டுமல்ல, தன்னைப் பொதுச் சேவையிலே ஈடு
படுத்திக் கொண்டு தமிழக மேலவை உறுப்பினராகவும், தமிழக
சட்டப்பேரவை உறுப்பினராகவும் இருந்து இந்த மன்றத்
தின் தலைவராகவும் இருந்து, தமிழகத்தின் அமைச்சராகவும்
இருந்து, தமிழக மக்களுக்காக அவர் தம் இறுதிக் காலம் வரை
தன்னை அர்ப்பணித்துக் கொண்ட பெரியவர் அவர்.

அதோடு மட்டுமல்லாமல், பத்திரிகைத் துறையிலும் அவர்
பல சீர்திருத்தங்களைச் செய்தார். இந்த நாட்டு மக்கள் அத்
தனைபேர்களும் அடித்தளத்தில் உள்ள அத்தனைபேர்களும்,
பத்திரிகை படிக்கவேண்டும், இந்த நாட்டின் கருத்துக்களைத்
தெரிந்து கொள்ளவேண்டும் என்ற முறையில் அவ்வளவு எளி
தாக அவர்கள் பத்திரிகையை நடத்தினார்கள். பத்திரிகை
வாங்கவேண்டாம் என்றும், பத்திரிகை படிக்கவேண்டாம் என்
றும் போகின்றவர்கள் கூட, தெருவிலே போகும்போது தலை
யங்கத்தைப் பார்த்து, அந்தப் பத்திரிகையை வாங்கவேண்டும்
படித்துக் கருத்துக்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று
சொல்லுகிற அளவுக்கு, பத்திரிகை உலகிலேயும் புரட்சியை
நடத்திக் காட்டிய பெரியவர்.

அவர் மறைவுக்கு அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சி
யின் சார்பாக வருத்தத்தைத் தெரிவித்து, அவரை இழந்து
வாடுகின்ற அவருடைய குடும்பத்தாருக்கும் என்னுடைய
அனுதாபத்தைத் தெரிவித்து, அமர்கிறேன்.

*திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர்
அவர்களே, திரு. சி.பா. ஆதித்தனார் அவர்களின் மறைவுக்கு
இரங்கல் தெரிவிக்கும் வகையிலே, அவை முன்னவர் அவர்கள்
கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை, நானும் என்னுடைய
கட்சியின் சார்பிலே ஆதரிக்கிறேன்.

மறைந்த ஆதித்தனார் அவர்களின் அரும் செயல்களையும்
அவருடைய குணநலன்களையும் பற்றி எனக்கு முன்னாலே
பேசிய மாண்புமிகு தலைவர்கள் சிறப்பாகக் குறிப்பிட்டார்கள்
சி.பா. ஆதித்தனாரைப் பொருத்தவரையிலும், தமிழ் ப
திரிகை உலகிலே அவருடைய சாதனை என்பது மகத்தானதா
கும். அந்த நாளில் சென்னையிலே இருந்துதான் எல்ல
பத்திரிகைகளும் வந்து கொண்டு இருந்தன. ஏதாவது பத்தி
கைத் தொடங்கவேண்டும் என்றாலும், வெளியிடவேண்டு
என்றாலும் அது சென்னையிலேதான் நடக்கவேண்டும் என்
ஒரு நிலைமை இருந்த நேரத்திலே அவர் மதுரையிலே இருந்
பத்திரிகையைத் தொடங்கி முதல் புரட்சி செய்தார்.



1981 ஆகஸ்ட் 21] [திரு. ப. நெடுமாறன்]

அது மட்டுமல்ல, மாவட்ட தலைநகரம் போன்ற இடங்
களில் பல்வேறு பத்திரிகைகளைத் தொடங்கி அந்தந்தப் பகுதி
மக்கள் அந்தந்தப் பகுதி செய்திகளை அறிந்து கொள்வதற்கு வழி
வகை செய்தார். சாதாரணமான மக்களிடம் பத்திரிகை வாங்க
வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படுமாறு தன்னுடைய பத்திரிகை
யில் பல புரட்சிகரமான மாறுதல்களை செய்தார்.

அந்தக் காலத்திலே முதல் பக்கத்திலே உலகச் செய்திகளும்
அதற்குப்பின்னாலே இந்தியச் செய்திகளும், அதற்குப் பின்னாலே
பகுதிச் செய்திகளும், வந்த நிலைமைகளை தலைகீழாக
மாற்றி, அந்தந்தப் பகுதி செய்திகளுக்கு முதல் முக்கியத்துவம்
கொடுத்து, அதற்குப் பின்னாலே இந்தியச் செய்திகளும் கடைசி
யாக உலகச் செய்திகளும் வரவேண்டும் என்ற புரட்சியையும்
தன்னுடைய பத்திரிகை வாயிலாகச் செய்தார் மாண்புமிகு
ஆதித்தனார் அவர்கள்.

சாதாரண மக்களும் கூட பத்திரிகை படிக்கவேண்டும் என்ற
ஆர்வம் ஏற்பட்டு, அவர்கள் பத்திரிகைப் படிக்கத் தொடங்கி
னார்கள். இன்றைக்கு அவர் செய்த அந்தப் புரட்சி தமிழ்நாட்
டிலே உள்ள எந்தப் பத்திரிகையும் அதில் இருந்து விலகிச் செல்ல
முடியாத அளவுக்கு, எல்லா பத்திரிகைகளும் அவருடைய பாணி
யைப் பின்பற்றி நடக்கக் கூடிய வகையிலே, தமிழ்ப் பத்திரிகை
உலகத்தில் சிறப்பான வழிகாட்டியாகவிளங்கியபெருமை அவரைச்
சாரும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த அவையிலே அவர் பேரவைத்
தலைவராக இருந்தபோது அவையின் சகல நடவடிக்கை
களையும் தமிழிலே நடத்த முடியும், நடத்தவேண்டும் என்பதி
லேயும் அவர் உறுதியாக நின்று இந்த அவையின் மரியாதையை
யும், தமிழின் மரியாதையையும் எத்தனையோ மடங்கு உயர்த்திக்
காட்டினார்கள்.

அவை உறுப்பினர்களுக்கு அளிக்கக்கூடிய விதிகள் புத்தகத்
தைக்கூட தமிழிலே மொழி பெயர்த்து அளித்தார்கள். அந்த
அளவுக்கு அவர்களுக்கு தமிழில் ஒரு நல்ல பற்று இருந்தது.
தமிழ் மீது அவர்களுக்கு என்றைக்கும் குறையாத உணர்வு
இருந்தது. அந்த உணர்வோடு அவர்கள் ஆரம்பம் முதல்
இறுதி வரையில் வாழ்ந்தார்கள். அப்படிப்பட்ட அந்த பெரி
யவர் திரு. சி.பா. ஆதித்தனார் அவர்களுக்கு என்னுடைய
இரங்கலை உங்கள் இயக்கத்தின் சார்பாகத் தெரிவித்து,
அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை
வழி மொழிந்து அமர்கிறேன்.

[1981 ஆகஸ்ட் 21

*திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக் களைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

மறைந்துவிட்ட திரு. சி.பா. ஆதித்தனார் அவர்களைப்பற்றி இந்த மாமன்றத்தில் எனக்கு முன்பு பேசிய அன்பர்கள் கூறிய கருத்துக்களோடு ஜனதா பேரியக்கம் தன்னை முழுமையாக இணைத்துக்கொள்ளுகிறது.

திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தொடங்கிய எல்லாப் பணிகளிலும் தன்னுடைய முத்திரையைப் பதித்து, சென்றிருக்கிறார்கள். அதிகம் சிறப்பாக பத்திரிகை உலகில் ஒரு மறுமலர்ச்சியை மட்டு மல்ல; ஒரு புரட்சியையே செய்து காட்டினார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழகத்திலே இன்றைக்கு வெளிவருகின்ற பல பத்திரிக்கை கள் திரு சி. பா. ஆதித்தனார் பெயரைச் சொல்லிக்கொண்டே இருக்கும். இன்றைய தினம் இந்தியாவிலேயே அதிக அள வுக்கு பத்திரிக்கைகள் வெளிவருகின்ற ஒரு மாநிலம் தமிழகம் என்ற நிலைமை ஏற்படுத்தியதற்கு காரணமானவர் திரு சி. பா. ஆதித்தனார்தான். அது மட்டுமல்ல, ஒரு இயக் கத்திற்குச சொந்தக்காரராக இருந்து, தமிழ் வளர்ச்சிக்கு நல்ல தொண்டாற்றிய பெருமையும் திரு சி.பா. ஆதித்தனா ருக்கு உண்டு. அத்தகைய நல்ல சேவை செய்துவந்த ஒருவரை இழந்துவிட்ட அன்னார் குடும்பத்திற்கு ஜனதா பேரியக்கத் தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, எல்லாம் வல்ல இறைவன் அவருடைய ஆத்மா சாந்தியடையச் செய்வா வாராக என்று வேண்டி, அமர்கிறேன்.

திரு. இ. சட்டநாத கரையாளர் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, காலஞ்சென்ற பெரியார் சி.பா. ஆதித் னார் அவர்கள் என்னுடைய நீண்டகால நண்பர். 1942 டிசம்பரிலே முதல் முதலாக தேச விடுதலைப் போராட்டக் காலத்திலே அவரோடு தொடர்பு ஏற்பட்டது. அந்தக் காலத்தில் சிறை சென்றவர்களுக்கும், வெளியிலே இருந்த வர்களுக்கும் பல்வேறு உதவிகளை அவர்கள் செய்திருக்கிறார் கள். அதன் பிறகு திருக்கொச்சி வாழ் தமிழ் மக்கள் தமிழகத்தோடு சேர வேண்டுமென்று நடத்திய பெரும் போராட்டத்திலே அன்னாருடைய உதவி மிகவும் அதிகமாக இருந்தது. அன்று கேரளச் சிறையிலே, இன்றைக்கு கேரள மாநிலத்திற்குள் இருக்கும் திருவனந்தபுரம், கொச்சி சிறைகள், இருந்த தமிழர்களை அவர்கள் நேரிலே வந்து பார்த்து, அவர்களுடைய குடும்பங்களுக்கு என்னென்ன உதவிகளைச் செய்ய வேண்டுமோ அந்த உதவிகளைச் செய் தார்கள்.





தமிழ்நாட்டை தனித் தமிழகமாக (ஸ்டேட் ரிசர்வேஷன்) செய்த பிறகு நடந்த தேர்தலிலே நானும் எந்தக் கட்சியையும் சேராமல் போட்டியிட்டபோது திரு. சி.பா. ஆதித்தனார் அவர்களும் சுயேச்சையாக போட்டியிட்டு, இருவரும் இந்த சட்டமன்றத்தில் சேர்ந்து செயல்படும் வாய்ப்பு கிடைத்தது. அந்த நாட்களிலே அவர்கள் பத்திரிகை தர்மத்தை எந்த அளவுக்கு கடைபிடிக்க வேண்டுமென்று அடிக்கடிச் சொல்வார் கள். ''தமிழை எளிமையாக எழுதி, கொச்சை நீக்கி எழுத வேண்டும்'' என்பதை கொச்சை எழுத்திலே எழுதி அவர்களுடைய டேபிளில் வைத்திருப்பார்கள். இதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

படித்தவர்கள் சாதாரண மக்களுக்குப் புரியாமல் எழுதுகிறார் கள். சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும்படி எளிய தமிழில் எழுத வேண்டும்; அவர்கள் படிக்க வேண்டும் என்று விரும்பினார்கள். பாமரர்களும் புரிந்து கொள்ளும் முறையில் பத்திரிகைகள் வெளிவரவேண்டுமென்று திரும்பத் திரும்ப வற்புறுத்தி வந்தார்கள்.

அவர்கள் பல்வேறு துறைகளில் ஆற்றிய சேவையைப் பற்றி எனக்கு முன்பு பேசிய தலைவர்கள் பலரும் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அவர்களுடைய கடைசி காலத்திலே கூட, கடந்த சில ஆண்டுகளில் கிராமப்புறம் தன்னிறைவு பெறவேண்டும் என்று வற்புறுத்தி வந்தார்கள். கிராமப்புறத்திலே எளிதில் கிடைக்கக்கூடிய ''மின் பவர்'' காற்றழுத்தம். அந்த காற்றழுத்தத்தைப் பயன்படுத்தி பல இயந்திரங்களைச் செயல்படச் செய்ய வேண்டுமென்ற முறையிலே பல ஆராய்ச் சிகளை நடத்தி வந்தார்கள். காற்றழுத்தத்தால் சுற்றக் கூடிய பல இயந்திரங்களை நிறுவி, அத்தகைய இயந்திரங் களை கிராமப்புறங்களுக்கு கொண்டு வர வேண்டுமென்றும், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்றும் அரசைக் கேட்டுக்கொண்டார்கள்.

[முற்பகல் 11-10]

அப்படி அவர்கள் முற்போக்குச் சிந்தனையில், நாட்டினு டைய யதார்த்த நிலையினை உணர்ந்து அந்த அடிப்படை யிலே பல்வேறு சீர்திருத்தங்களையும் கொண்டுவரவேண் டும் என்று மிக உன்னிப்பாக தொடர்ந்து பணியாற்றி வந்த அன்னாருடைய மறைவு தமிழகத்துக்கு ஈடு செய்ய முடியாத ஒரு பெரும் இழப்பாகும். அவர்களது மறைவு குறித்து கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த தீர்மானத்திற்கு என் னுடைய கட்சியின் சார்பிலே நான் ஆதரவினை தெரிவித்து அன்னாருடைய குடும்பதினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை இந்தச் சபை மூலம் தெரிவித்து அமர்கிறேன்.

[1981 ஆகஸ்ட் 21

***திரு. ஏ. சாகுல் ஹமீது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறந்த பாராட்டுக்குரிய மறைந்த பேரறிஞர் சி.பா. ஆதித்தனார் அவர்களுடைய மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கின்ற வகையிலே இந்தப் பேரவையிலே கொண்டுவரப்பட்ட தீர்மானத்தோடு இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பிலே ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தின் பத்திரிக்கைத் துறையிலே பாராட்டத்தக்க ஒரு புதுமாதிரியான முறையை ஏற்படுத்தியவர் அவர். அவர்களின் முயற்சியால் இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற பாமர மக்களுக்கெல்லாம் படிக்கின்ற ஆவல் ஏற்பட்டது. அத்தகைய படிக்கின்ற ஆவலைத் தூண்டியவர் அந்த பெருமதிப்பிற்குரிய சி.பா. ஆதித்தனார் அவர்கள் என்பதோடு மட்டுமல்லாமல் இஸ்லாமிய சமுதாயத்தின் சிறப்புகளும் செய்திகளும் மறைக்கப்பட்ட நேரத்திலே அவரது பத்திரிக்கையிலே சிறுபான்மைச் சமுதாயத்தின் செய்திகளை எல்லாம் அளித்தவர் அவர்கள்தான். அந்த வகையிலேயும் அவர்களை நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் அவர்கள் எங்களுடைய தலைவர் காயிதே மில்லத் அவர்களின் நெருங்கிய நண்பருமாவார். அவர்களுடைய மறைவு குறித்து இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது என்று சொல்லி அமர்கிறேன்.

**திரு. ஜி. மூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த முன்னாள் சட்டமன்றப் பேரவைத் தலைவரும், அறிஞர் பெருமகனாருமான பெருமதிப்பிற்குரிய சி.பா. ஆதித்தனார் அவர்களின் மறைவு குறித்து அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தோடு இந்திய குடியரசுக் கட்சியும் தனது அனுதாபத்தை இணைத்துக் கொள்கிறது. பத்திரிகை துறையிலே ஒரு எளிமையைக் காட்டியவர் அந்தப் பெருமகனார். சிறுபான்மைச் சமுதாயத்தினருக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக இருந்து அந்த மக்களுடைய பிரச்சினைகளை எல்லாம் நாடறிய வைத்த அந்தப் பெருமகனாருடைய மறைவு நம்முடைய நாட்டுக்கு ஏற்பட்ட பெரும் இழப்பு என்று எங்களுடைய குடியரசுக் கட்சி கருதுகின்றது. அது மட்டுமல்லாமல் தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் தங்களுக்குள் உள்ள மன வேறுபாடுகளை நீக்கி ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்று அவர் கருதிய காரணத்தினால்தான் அவர் தனது கடைசிக் காலத்திலே தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் கட்சி என்ற அமைப்பை ஏற்படுத்தி அதனுடைய வெற்றிக்காக அவர் அரும்பாடு பட்டார். அப்படிப்பட்ட சீர்திருத்த எண்ணம் கொண்ட அவருடைய மறைவு நமக்கு எல்லாம் மிகப்பெரிய இழப்பு என்ற வகையிலே இந்திய குடியரசுக் கட்சி சார்பிலே என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1981 ஆகஸ்ட் 21]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் மொழிந்த இரங்கல் தீர்மானத்தின் மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களும் மற்ற எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் தெரிவித்த துயர உணர்வோடு என்னுடைய ஆழ்ந்த துயரத்தையும் இரங்கலையும் இணைத்துக் கொள்கிறேன்.

மறைந்த அந்தப் பெரியவருக்கு மரியாதை தெரிவித்து, இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையிலே உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மறைந்த அந்தப் பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் நிகழ்ச்சிகள் 15 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பெறுகின்றன.

பின்னர் பேரவை முற்பகல் 11-15 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மீண்டும் பேரவை 11-30 மணிக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் கூடியது.

## 2. அறிவிப்பு.

### மாற்றுத் தலைவர்களின் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)ன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்கள் 3 வது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கப்பெறுகிறார்கள்.

திரு. ந. குலசேகரபாண்டியன்.

திரு. செ. செம்மலை.

திரு. இரெ. இராசமாணிக்கம்.

திரு. எல். இளையபெருமாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

[1981 ஆகஸ்ட் 21

### 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்

**(அ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1981.**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு நிலச்சீர் திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகி றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**(ஆ) நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்)**

**திருத்தச சட்டமுன்வடிவு, 1981.**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோரு கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



1981 ஆகஸ்ட் 21]

**(இ) நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1981.**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு முறைப்படுத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

**(ஈ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1981.**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

[1981 ஆகஸ்ட் 21

## 4. அரசினர் தனித் தீர்மானம்.

### இலங்கை வாழ் தமிழர்கள் குறித்து

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" இலங்கையில் வாழும் நிலையான தமிழர், இந்தியர் வழிவந்த தமிழர், மலைத் தோட்டத் தமிழ் தொழிலாளர்கள் ஆகியோரின் உயிர்க்கும், உடைமைக்கும், உரிமைக்கும் ஆபத்து ஏற்பட்டிருப்பதையும், இனவெறியர்களால் கொலை—கொள்ளை—கற்பழிப்பு—துன்புறுத்தல் போன்ற வன்முறைச் செயல்கள் நிகழ்வதையும், தக்க பாதுகாப்பு அளிக்காத நிலை நிலவுவதையும் அறிந்து மனிதாபிமான அடிப்படையில் இப்பேரவை மிக்க அதிர்ச்சியும், கவலையும் கொள்கிறது.

தமிழக மக்களின் சார்பாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமருக்கு தெரிவித்துள்ளதற்கு ஏற்ப' இந்திய அரசு தமது தூதுவரகத்தின் மூலமும், ஐ. நா. அவையின் மூலமும், மற்ற முறைகளின் மூலமும் இலங்கை வாழ் தமிழர்க்கு நியாயம் வழங்க முற்படுவதோடு, அவர்களுக்கு எல்லாவிதமான பாதுகாப்புகளையும் அளிக்க, தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்தப் பேரவை மாண்புமிகு இந்தியப் பிரதமரைக் கேட்டுக் கொள்கிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இனக் கலவரத்தில் படுகொலைக்கு ஆளானவர்களின் குடும்பங்களுக்கும், காயமுற்றும் பல தொல்லைகளுக்கு ஆளாகியும் அவதியுறும் மக்களுக்கும் இப்பேரவை தன் இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது. "

இந்தத் தீர்மானம் இலங்கை அரசினுடைய ஆட்சி உரிமையில் தலையிடுவதாகாது. செய்தி தாள்களில் அன்றாடம் வருகிற இலங்கையில் ஏற்படுகிற கொடுமை பற்றிய நிகழ்ச்சிகளையும், நம்முடைய செவியில் வந்து விழுகிற நிகழ்ச்சிகளையும் கேட்கிற போது தமிழர்கள் அத்தனை பேர்களுடைய நெஞ்சங்களும் உள்ளபடியே துடிக்கிற தன்மையை நாம் பார்க்கிறோம். ஆக, அப்படிப்பட்ட பெருந்துயரத்தையும், பெரும் துக்கத்தையும் தமிழர்கள் அத்தனை பேர்களுக்கும் அளிக்கிற அளவுக்கு அங்கே



நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இனம், மொழி கலாசாரம், நாகரீகம் அடிப்படையிலேயும் இந்திய குடியுரிமை அடிப்படையிலேயும் நம்முடைய உணர்வை இந்தத் தீர்மானத்தின் மூலம் எடுத்துச் சொல்வதற்கு நமக்கு எல்லா வழிகளிலும் தக்க ஆதாரமான உரிமை நிலைமைகளும் இருக்கின்றன.

சாதாரணமாக இலங்கைக்கும் இந்தியாவிற்கும் நிலவியல் தொடர்பு, வரலாற்றுத் தொடர்பு, மொழித் தொடர்பு, பண்பாட்டுத் தொடர்பு, நாகரீகத் தொடர்பு, தாய்த் தமிழகத்திற்கும் இலங்கைக்கும் நீண்ட பெருங்காலமாகவே இருந்து வருவதை நாம் பார்க்கிறோம். இந்தியாவும் இலங்கையும் காமன்வெல்த் அமைப்பில் இடம் பெற்றுள்ள நாடுகளாகும். அதுமட்டுமல்லாமல், இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே இப்போது நட்புறவு நிலவி வருகிற நிலைமையை நாம் பார்க்கிறோம். இந்த நிலையில்தான் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டிய தன்மைகளில் நாம் இருக்கிறோம். இந்தியத் தமிழர்களாக வாழ்பவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தோட்டத் தொழிலாளர்களாக அங்கிருக்கும் தமிழர்களும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சிரோமா பண்டாரநாயகா—சாஸ்திரி உடன்பாட்டின் அடிப்படையில் தமிழகத்திற்கு திருப்பி அனுப்பப்பட இருக்கிற பட்டியலில் இருக்கிறவர்கள் பல பேர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக இந்திய குடிமகன் உரிமை பெற்று இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வருகிற அளவிற்கு இருக்கிற தமிழர்களும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்ற நிலைமை ஏற்படும் போது இந்தப்பிரச்னையில் இந்திய அரசு தலையிட்டு இந்த நாட்டினுடைய குடிமக்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டிய பொறுப்பு இந்திய அரசுக்கு இருக்கிறது. அதைச் சுட்டிக்காட்ட வேண்டிய தன்மையும் நமக்கு இருக்கிறது. மனித உரிமைகளைக் காப்பாற்ற வேண்டிய இயற்கையான நியாயத்தை நாம் இந்தத் தீர்மானத்தின் மூலமாகச் சுட்டிக் காட்டுகிறோம்.

அதுமட்டுமல்லாமல், இந்தியர்கள் சிலரும் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருப்பதால் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய பொறுப்பு இந்திய அரசுக்கு இருக்கிறது ; இந்திய அரசு மூலமாக உணர்த்த வேண்டிய கடப்பாடு தமிழக சட்டப் பேரவைக்கும் நிரம்ப இருக்கிற காரணத்தால்தான் இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் உள்ள அத்தனை பேர்களுடைய மனப்பாங்குக்கு ஏற்ப இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தியப் பேரரசின் வெளிநாட்டு அமைச்சர் திரு. நரசிம்மராவ் அவர்கள் இரண்டொரு நாட்களுக்கு முன்னால் இந்திய நாடாளுமன்றத்தின் மக்கள் பேரவையில் இதுபற்றி தன்னுடைய கவலையைத் தெரிவித்து இதைப்பற்றி இந்திய அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்கும் என்று எடுத்துச் சொல்லியிருப்பது நமக்கு நல்ல ஆறுதலைத் தருகிற

ஒன்றாக அமைந்திருக்கிறது. ஆக நாம் மனிதாபிமான அடிப் படையில் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதைச் சுட்டிக் காட்டும் உரிமை ஒவ்வொரு நாட்டுக்கும் இருக்கிறது.

[முற்பகல் 11·40]

ஒரு நாட்டுக்கும், மற்றொரு நாட்டுக்கும் உள்ள பிரச்னை களைப்பற்றி ஐக்கிய நாடுகளிலே விவாதித்து, ஐக்கிய நாடுகளிலே தீர்த்துக் கொள்ளலாம் என்ற விதிமுறைகள் நடைமுறையிலே இருப்பதன் காரணமாக, இந்திய அரசு அந்த வகையிலே முயன்று, நியாயமான பாதுகாப்புத் தேடித் தர வேண்டிய பெரும் பொறுப் பிலே இருக்கிறது. அங்கே இருக்கிற தமிழர்களுக்கு உரிமைகளை வழங்க வேண்டிய அவசியமும், அங்கே ஏற்பட்டுள்ள கொடுமை களிலே இருந்து அவர்களைக் காப்பாற்றுவதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டிய பொறுப்பும் இந்திய அரசுக்கு இருக்கிறது. வீட்டை விட்டு, வீதியை விட்டு அவர்கள் வாழ்வதோடு, சிற்றூர்களையும், பேரூர்களையும், நகரங்களையும் விட்டு, தங்கள் உடைமைகளையும், தொழில்களையும் விட்டு, பல இடங்களுக்கு அலைந்து திரிந்து ஓடுகின்ற அளவிலேயும், காடுகளிலே அலைந்து திரிகின்ற நிலையும், பட்டினியால் இறப்பு ஏற்படுகின்ற அளவுக்கு அலைந்து திரிகின்ற நிலைமையும் இருக்கின்றது என்ற கொடுமை மிக்க செய்திகள் அன்றாடம் பத்திரிகைகளிலே வந்து கொண்டிருக்கிறது. ஆகவேதான், உரிமைக் குரல் கொடுக்க வேண்டிய பொறுப்பும், நியாயம் வழங்க வேண்டிய கடப்பாடும், பொறுப்பும், நமக்கு இருக்கிறது. இந்த மன்றத்திலே ஏகோபித்த நிலையில் இந்தத் தீர்மானத்தை நிறை வேற்றுவதோடு மட்டுமல்லாமல், இந்தியப் பிரதமர் மாண்புமிகு இந்திரா காந்தி அவர்கள், இந்திய அரசின் மூலமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து, இந்த நியாய உணர்வின் அடிப்படையிலே தக்க பரிகாரம் காணவேண்டும் என்ற வகையில் நாம் இங்கே இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற இருக்கிறோம்.

அது மட்டுமல்ல, அங்கே நடைபெற்ற கலவரங்களிலேயிருந்து, படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட குடும்பங்களுக்கும், காயமுற்ற, பலதொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்ட குடும்பங்களுக்கும், அவதிப் பட்டுக் கொண்டிருக்கும் குடும்பங்களுக்கும், நியாயம் பெற முடியாமல் இருக்கும் குடும்பங்களுக்கும் நியாயம் தேடித் தர வேண்டிய கடமை இந்திய அரசிற்கு இருக்கிறது. அந்த வகை யிலேதான் இந்தத் தீர்மானம் உருப் பெற்றிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை முன்மொழிவதன் மூலமாக, இந்த அவையினுடைய முழு எண்ணத்தையும், உணர்வையும் வெளிப்படுத்திக் காட்டு வதன் காரணமாக, ஒரே மனதாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி, அதை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து, மாண்புமிகு பிரதமர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு



வந்து அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு இது ஒரு தூண்டு கோலாக அமையும் என்ற முறையில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தருவீர்கள் என்று நான் கருதுகிறேன்.

மேலும் இங்கே கொடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தில், இந்தியர் வழி வந்த தமிழர் என்ற சொற்றொடருக்குப் பக்கத்தில், 'மலைத் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்கள்' என்ற சொற் றொடரையும் இணைத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டு, இந்தத் தீர்மானத்தை மொழிகிறேன்.

*டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இந்த அவையில் முன்னால் வைத்துள்ள மிக முக்கியமான இந்தத் தீர்மானத்தை நான் வழி மொழிகின்ற கடமையுணர்ச்சியோடு சில வார்த்தைகளை கூற விரும்புகிறேன். ஏறத்தாழ, இருபது ஆண்டு காலமாகவே, இலங்கையில் தமிழர்களுடைய பிரச்னை அவ்வப்போது பயங்கர மாக எழுவதும், இன வெறிக்கு, ஆதிக்க வெறிக்கு, அங்குள்ள தமிழர்கள் பலியாகின்ற சூழல் ஏற்படுவதும், அவர்களுடைய கண்ணீர் வெளிப்படும்போது எல்லாம், அதனைத் துடைத்திடும் கரங்கள் தாய்த் தமிழகத்திலேயிருந்து நீளுவதும், நம் வரலாற்று நிகழ்ச்சியாக ஆகி விட்டதாக நாம் உணர்கிறோம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே, இருபது ஆண்டுகளுக்கு முன்பே, இலங்கையிலுள்ள தமிழர்கள் தமிழ் மங்கையர், தமிழ் மழலையர் இவர்கள் அனைவரும் மரண வேதனைக்கு, மானபங்கத்திற்கு ஆட்படுத்தப் பட்டபோது, தமிழ்நாடு கொடுத்த குரலின் காரணமாக அமைதி நிலவிடவும், அதற்குப் பிறகு ஒரு நீண்ட இடைவெளி காலம் தமிழர்கள் நிம்மதியாக வாழ்ந்திடவுமான ஒரு நிலை இலங்கைச் சீமையில் ஏற்பட்டது. ஆனால், இலங்கை சுதந்திரம் பெற்ற நாட்களுக்குப் பிறகு; இலங்கையிலே இருக்கின்ற சிங்கள மக்க ளோடு தாங்களும் ஒற்றுமையாக, அதே நேரத்திலே தமிழர் களுக்கு உரிய கலாச்சார, மொழி, இன, உரிமைகளைச் சமமாகப் பெற்று, வாழ வேண்டுமென்ற திட்டம் வகுத்துக் கொண்டு, வாழ்ந்த தமிழர்கள், தனி நாடு கேட்க வேண்டிய அளவுக்கு துரத்தப்படுகின்ற ஒரு சூழ்நிலை உருவாயிற்று.

இனி தங்களால் இணைந்திருந்து வாழமுடியாது என்ற ஒரு நிலைமை ஏற்பட்ட காரணத்தினால் விடுதலைப் போர்க் கொடியை இலங்கையிலுள்ள தமிழர்கள் உயர்த் தினார்கள். அதன் தொடர்பான விளக்கங்களில், இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் இந்த அவையில் நான் எந்தக் கருத்துக்களையும் எடுத்து வைக்க விரும்பவில்லை.

[டாக்டர் மு. கருணாநிதி] [1981 ஆகஸ்ட் 21

முழுக்க முழுக்க வெளிநாட்டுப் பிரச்சினை இது என்று சொல்லப்பட்டாலும் கூட, அதே முழுக்க முழுக்க என்ற சொற்களைப் பயன்படுத்தி முழுக்க முழுக்க இதை நாம் அறவே தவிர்த்து விடுகின்ற பிரச்சினை அல்ல என்பதையும் எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன், இதை இந்த அவையிலுள்ளவர்களுக்கு அல்ல, இந்தியப் பேரரசை இன்றைக்கு நடாத்திக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த அவையின் சார்பாக, இந்த தீர்மானத்தின் அடிப்படையில் நான் எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

வெளிநாட்டுப் பிரச்சினைகளில், குறிப்பாக மைனாரிட்டிஸ் ரைட்ஸ் போன்ற வெளிநாட்டுப் பிரச்சினைகளில் தலையிடுகிற உரிமையையும், அதுபற்றிப் பேசுகிற உரிமையையும் மக்கள் உரிமைச் சங்கங்கள் உலக அளவில் பெற்றிருக்கின்றன என்பதை நாம் மிகவும் தெளிவாக அறிவோம். குறிப்பாக சிறுபான்மையோர் உரிமையானாலும், தொழிலாளர் உரிமையானாலும், வெளிநாட்டுக் குடிமக்கள் உரிமையானாலும் இவை எல்லாம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதிலே ஆழ்ந்த கவனத்தை அப்படிப்பட்ட மக்கள் உரிமைச சங்கங்கள் நிலைநாட்டி வருகின்றன. அதே போல் நாம், இந்த அவையிலுள்ள நாம், அவை முன்னவர் நாவலர் அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல், இன உணர்ச்சியில், மொழி உணர்ச்சியில், பண்பாட்டு உணர்வில் நம்மோடு கலந்திருக்கிற இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை தமிழர்கள் என்ற அந்த உணர்வோடு நாம் அணுகுகிறோம் என்றாலும், இந்திய பேரரசு மனிதாபிமான உணர்வோடு இந்தப் பிரச்சினையை அணுகவேண்டுமென்பதுதான் மிக முக்கியமானதும், அவசரமானதும், அவசியமானதுமான நம்முடைய வேண்டுகோள் ஆகும்.

கடந்த சில நாட்களுக்கு முன்புதான் ஒரு பெரும் கலவரம் யாழ்ப்பாணம் பகுதியில் நடைபெற்று தமிழர்கள் அவதிக்குள்ளானார்கள். தமிழர்களின் கோயில்கள் தீக்கிரையாக்கப் பெற்றன. தமிழர்கள் பத்திரிகை அலுவலகங்கள் சூறையாடப்பட்டன. தமிழர்கள் நீண்ட நெடுங்காலமாகப் போற்றிப் பாதுகாத்துவருகின்ற தமிழ் நூல்கள், ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள இலங்கையிலுள்ள மிகப் பெரிய நூல் நிலையம் சாம்பலாக்கப் பெற்று, ஒரு நூலின் சிறிய பக்கத்தைக் கூட, ஒரு ஏட்டினைக்கூடத் திரும்பப் பெறமுடியாத அளவு கருகிவிட்டது என்ற சேதியைக் கேள்விப்படுகிறோம். கேள்விப்படுவது மாத்திரமல்ல அமெரிக்கா செல்லுகிற வழியில் சென்னையில் எங்களை எல்லாம் சந்தித்த ஈழத்துத் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் அந்தச் சோகச சம்பவத்தை விவரித்துச் சொன்னார்கள்.



1981 ஆகஸ்ட் 21] [டாக்டர் மு. கருணாநிதி]

இந்தக் கொடுமைகளை எல்லாம் இந்தியப் பேரரசின் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்களிடம் தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நானும் பிரதமர் அவர்களைச் சந்தித்துப் பேசிய நேரத்தில் இதுபற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். நம்முடைய தமிழர்களுக்காக எடுத்து வைத்த கோரிக்கைகளில் ஆழ்ந்த கவனத்தைச் செலுத்திய இந்தியப் பிரதமர் அவர்கள் தக்க ஏற்பாடுகளை நிச்சயமாக இந்தியப் பேரரசு கவனிக்கும் என்ற உறுதிமொழியை எனக்கு அளித்திருக்கிறார்கள். அதைப் போல் முதலமைச்சருக்கு அளித்திருக்கும் சேதிகளை ஏடுகளில் பார்த்து ஓரளவு ஆறுதலும் மனநிறைவும் பெற்றுள்ளேன்.

[முற்பகல் 11–50]

வெளி விவகாரத் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் இதுபற்றி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இலங்கையிலே தமிழர்கள் தாக்கப்படுகிற நேரத்தில் எல்லாம், தமிழ் நாட்டிலிருந்து இந்தியப் பேரரசுக்கு எல்லாக் கட்சியிலும் உள்ளவர்களாலும் கட்சி சார்பற்ற முறையில் கட்சி வேறுபாடுகளையெல்லாம் கடந்து, அனைவரும் தமிழர்கள் என்கின்ற அந்த உணர்வோடு, அவதிப்படுகின்ற தமிழர்கள் இலங்கையிலே இருந்தாலும் அவர்கள் உலகத்தில் வேறு எந்த நாட்டிலோ எந்தப் பகுதியிலோ இருந்தாலும் அவர்களுக்கு ஆதரவாக தமிழகத்திலே இருக்கின்ற 5 கோடி தமிழர்களும் தயாராக இருக்கிறார்கள்; அவர்களுக்கு ஆதரவு தர அரவணைப்புத்தர இருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் கட்சிகளை எல்லாம் மறந்து நிலைநாட்டி இருக்கிறோம். அந்த வகையிலே தமிழர்களை ஒற்றுமையோடு இன்றைக்கு இந்தத் தீர்மானத்திலே காணுகின்ற ஒரு அரும்பெரும் காட்சியை என்னால் காண முடிகிறது.

இந்தப் பிரச்சினைகளிலே நாம் கருத்து சொல்வதற்கே தகுதியற்றவர்கள் என்று நிச்சயமாக ஆகிவிட மாட்டோம். அயர்லாந்திலே நடைபெறுகின்ற போராட்டத்திலே பாபிசாண்டர்ஸை தொடர்ந்து இதுவரையில் 10 பேர்கள் உண்ணாவிரதம் இருந்து இறந்திருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு நாம் அனுதாபம் தெரிவிக்கிறோம். மாநிலங்கள் அவையிலேகூட இதுகுறித்து சில கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசியிருக்கிறார்கள். அதுபோல் வெளிநாட்டிலே அவதியுறுகின்றவர்கள் தமிழர்களா அல்லவா என்ற பிரச்சினையை விட அனைவரும் மனிதர்கள் என்கின்ற அந்த உணர்வின் அடிப்படையிலாவது அந்த மனிதாபிமானத் தன்மையோடு இந்தப் பிரச்சினையை அணுக வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் தீர்மானம் இங்கே கொண்டுவரப் பட்டிருக்கிறது. இதிலே

பல கட்சிகளின் சார்பிலே, எல்லாக் கட்சிகளின் சார்பிலும் தீர்மானங்கள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புகள் கொடுக்கவேண்டுமென்று நாங்கள் எல்லாம் கருதி, அதற்கான நடவடிக்கையிலே ஈடுபட வேண்டுமென்றிருந்தாலும்கூட அரசின் சார்பிலே இப்படி ஒரு தீர்மானம் வருவது மிகப் பொருத்த முடையது என்று நாங்கள் கருதியதற்கேற்ப அரசின் சார்பிலே வந்திருக்கின்ற தீர்மானத்தை மன நிறைவோடு நான் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என் கின்ற அளவோடு நில்லாமல் இலங்கையிலே வாழுகின்ற தமிழர்களுடைய கண்ணீர் துடைக்கப்பட வேண்டும், அவர்கள் சிந்துகின்ற செந்நீர் நிறுத்தப்பட வேண்டும் என்பதை எடுத்துக் கூறி அமர்கிறேன்.

Thiru K. S. G. HAJA SHAREEF : Mr. Speaker, Sir, I rise to support the Resolution moved by the Hon. Finance Minister about the sufferings of Indians, particularly Tamilians in Ceylon.

It is very unfortunate that the Ceylon Government should have allowed this sort of atrocities committed by Ceylonese on the Indians. This is not the first time that these sort of atrocities are happening. Several times, they have happened there. As Hon. the D.M.K. Leader has said, a Library which is of very great importance has been burnt and the whole thing has come to ashes. I wonder why this sort of thing should not have been anticipated by the Ceylon Government and why they have not stopped, in advance, this sort of calamny on the Tamilians. I am sure the Government of India has already taken a lot of measures and brought pressure on the Ceylon Government.

Now after the promulgation of the Emergency in Ceylon I uonderstand that things have improved. I only wish that this Emergency should have been declared much ealier. I would insist that the Government of India should bring to bear compulsorily on the Ceylon Government to see that those people have suffered loss of life, monetary sufferings, and property sufferrings, should be amply compensated. Till repatriation is done, I warn that there should be no loss of life, and little difficulty sholded be experienced by Tamilians there. With these words, I join in this Resolution.



திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் வாழுகின்ற தமிழ் இன மக்களுடைய துயரங்களை மத்திய அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் முழுமையாக ஆதரிக் கிறேன் என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இப் பிரச்சினை பற்றி நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தபோதிலும் இன்று காலையில் நடைபெற்ற அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தில், அரசாங்கமே இதுபற்றி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு முன்வந்திருக்கின்ற ஒரு சூழ்நிலையில் அரசாங்கம் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து தமிழகச் சட்டப் பேரவையில் இருக்கக் கூடிய அத்தனை கட்சிகளும் அதை ஆதரித்து ஒருமுகமாக நிறைவேற்றி மத்திய சர்க்காருக்குத் தெரிவிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்ற அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஆதரிக் கிறோம்.

சமீப தினங்களாக இலங்கையிலிருந்து வந்து கொண்டிருக் ருக்கக் கூடிய துயரமிக்க செய்திகள், தமிழின மக்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளைக் கண்டு தமிழகத்திலே உள்ள 5 கோடி தமிழ் மக்களும் பெரிதும் வேதனை அடை கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் தோட்டங்களிலே பணியாற்றக்கூடிய தொழி லாளர்கள் பத்திரிகை செய்திகளின்படி பார்த்தால்— இலங்கை யிலே உள்ள எந்தவிதமான அரசியல் இயக்கங்களோடும் எந்த விதமான தொடர்பும் இல்லாதவர்கள் ; அவர்கள் எந்தவிதமான அரசியல் நிகழ்ச்சிகளிலேயும் சம்பந்தப்படாத வர்கள். நீண்டகாலமாக இலங்கையிலே உள்ள தோட்டக் காடுகளிலே பணியாற்றி, அந்த நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதிலே ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு பல சிரமங் களுக்கு மத்தியிலே அவர்கள் அதை நிறைவேற்றக் கூடியவர்கள். அவர்கள் மீது ஏற்படுத்தப்பட்டிருக்கும் தாக்குதல் என்பது இந்த நிலைமையில் புதிய பரிமாணத்தை உண்டாக்கியிருக்கிறது.

ஆயுதம் ஏந்திய குண்டர்களின் தாக்குதலிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அவர்கள் பாம்புகள் நிறைந்த பல வனங் களையும், உயர்ந்த மலையுச்சிகளையும் கடந்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலையும், தங்கள் உடைமை களையெல்லாம் விட்டுவிட்டுத் தங்கள் குடும்பங்களுடன் செல்லவேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது என்பது மனிதாபிமானம் படைத்த சகலருடைய உள்ளத்தையும் கலங்கவைக்கக்கூடிய ஒரு சோகச் செய்தியாகும்.

அங்கே கடைகள் சூறையாடப்பட்டிருக்கின்றன. பத்திரிகைகளில் வந்திருக்கின்ற செய்திகளின்படி பார்த்தால் இதற்குப் பின்னால் ஒரு திட்டம் இருக்கிறது, என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆயுதம் ஏந்தியவர்கள் பஸ்ஸில் கொண்டு வரப்பட்டு, குறிப்பாக பெட்ரோல் குண்டுகளைக்கொண்டு கடைகளில் தீ வைத்து பிறகு அவர்கள் விலகிச் சென்ற பிறகு அந்தக் கடைகள் சூறையாடப்பட்டிருக்கின்றன என்பதிலிருந்து திட்டமிட்டு நடைபெற்றிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

1964-லே ஸ்ரீமாவோ பண்டாரநாயகா—லால் பகதூர் சாஸ்திரி இடையே ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் இந்தியா பல இலட்சக்கணக்கான மக்களை, தமிழர்களையும் இந்திய வம்சாவழியினரையும் இந்தியாவிற்குத் திருப்பி எடுத்துக்கொள்கிறோம் என்ற உடன்பாட்டைச் செய்து அதன்படி 75,000 பேர் இந்தியாவிற்கு வருவதற்குக் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களெல்லாம் இந்தியாவின் குடிமக்கள்; இந்தியாவிற்கு வரக் காத்துக்கொண்டிருக்கும் அவர்கள்மீதும் இந்தத் தாக்குதல்கள் நடத்திருப்பது மிகவும் கண்டனத்திற்கு உரியது.

அதுமட்டுமல்லாமல், இலங்கையிலே குடியிருப்பவர்கள்—பணியாற்றச் செல்பவர்கள் ஆகிய இவர்கள்மீது நடந்த தாக்குதல்கள் குறிப்பாகக் கொழும்பைச் சுற்றியிருக்கும் இரண்டு மாவட்டங்களில் நடந்திருக்கிறது என்பதைப் பார்க்கும் பொழுது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தன்னுடைய ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்வதனால் மத்திய அரசு தன்னுடைய வெளிநாட்டு அமைச்சகத்தின் மூலம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு, இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

நம்மைப்போன்றே இலங்கையும் பிரிட்டிஷ் ஏகாபத்தியத்திலிருந்து விடுதலை பெற போராட்டம் நடத்தி சுதந்திரம் பெற்ற ஒரு நாடு என்பதை நாம் அறிவோம். தென் கிழக்கு ஆசிய நாடுகளில் நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் ஒரு நாடு அது. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நீண்டகாலமாக நட்புறவும், வியாபாரத் தொடர்பும் இருந்து சுமுகமான உறவுகளைக் கொண்டிருக்கும் இரண்டு நாடுகள் என்பதை நாம் நன்றாக அறிவோம். நம்மைப்பொறுத்த வரையில் இலங்கையின் வெளிநாட்டுப் பிரச்சனைகளில் தலையிட வேண்டுமென்ற எண்ணம் நமக்குக் கிடையாது.



எந்த நாடும் சுதந்திர நாடாக இருந்து வளம்பெற்று வாழ வேண்டுமென்றுதான் நாம் விரும்புகிறோம். ஆனால் இப்படிப்பட்ட வன்முறைக் கலவரங்கள் இன ஒற்றுமையைச் சீர்குலைத்துவிடும் என்பதால் இந்த இனக் கலவரங்களைக் குறித்து இலங்கை அரசு மிகக் கடுமையாக நடவடிக்கைகள் எடுத்து, அவைகளை ஒழித்து, தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஈழம் தனி நாடாக ஆக வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் ஆதரிக்கவில்லை. இலங்கை சுதந்திர ஐக்கிய நாடாக இருக்கவேண்டுமென்றுதான் விரும்புகிறோம். இலங்கையிலுள்ள சிங்கள மொழி பேசுபவர்களும், தமிழ் வம்சாவழியினரும் ஒன்றுபட்டு இருந்து, தமிழ் மொழி பேசும் தமிழர்கள் பாதுகாப்போடு வாழ வேண்டுமென்றுதான் நாம் விரும்புகிறோம். சமீபத்திலே தமிழர்களின் ஒன்றுபட்ட விடுதலை முன்னணித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்து ஈழம் என்ற தனி நாடு கோஷத்தைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அறிக்கை வெளியிட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் நான் பார்த்தேன். ஆகவே, சிலவேளைகளில் இருக்கின்ற சில பத்திரிகைகள் கருத்து கூறுவதைப்போல நாம் அவர்களுடைய உள்நாட்டு விஷயத்தில் தலையிடுவதாகக் கருதக்கூடாது. இந்திய வம்சாவழியினர் என்ற முறையில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் சரித்திரச் சூழ்நிலையிலே அவர்கள் குடியேறியவர்கள். அவர்களை நாம் இலங்கைத் தமிழர்கள் என்றுதான் கூறுகிறோமே தவிர தமிழ்நாட்டுத் தமிழர்கள் என்று உரிமை பாராட்டுவதில்லை.

அவர்கள் இலங்கைக் குடிமக்களாக இருந்து அவர்களுக்கு மொழிப் பாதுகாப்பும் பிரதேச உரிமைகளும் இருக்கவேண்டுமென்ற அந்த அடிப்படையிலேதான் இருந்துதான் இந்தப் பிரச்சனைகளை நாம் பார்க்கிறோம். [illegible]

[நண்பகல் 12-00]

ஆகவே அவர்களுக்கு சமீபத்திலே இலங்கை அரசாங்கத்தின் [illegible] சொல்லப்பட்டதிலே கடுமையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதிலே சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று பத்திரிகைகளிலே அறிக்கை வெளி[illegible] மீண்டும் [illegible] களிலே பணியாற்றி [illegible] அனைவரும் சுதந்திரமான [illegible] பாதுகாப்புடன் அவர் [illegible] உரிமைகளுக்கு அழைத்துச் செல்லப்பட வேண்டும். அதேபோல் வியாபாரத்திலே ஈடுபட்டிருந்தவர்கள்

அந்த வியாபாரத்தை மீண்டும் துவங்க அவர்களுக்கு வழிவகை செய்யப்பட வேண்டும். அந்தக் கலவரங்களிலே கடைகளுக்கு தீ வைக்கப்பட்டு ஏராளமான சொத்துக்களை இழந்தவர்கள், தங்களது உடைமைகளை இழந்தவர்களுக்கு நட்டஈடு கொடுப்பதற்கும் இலங்கை அரசாங்கத்திடம் நம்முடைய இந்திய—மத்திய—அரசாங்கம் வற்புறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். இல்லாவிட்டால், அவர்கள் அனைவரும் அனாதையாக இருப்பவர்கள். தங்களுடைய சொத்துக்களையும் உடமைகளையும் இழந்துவிட்ட காரணத்தாலே, அவர்களுடைய உயிருக்கும் பாதுகாப்பு அளிப்பதோடு அவர்களுடைய உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டும். அவர்களுடைய வேலைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டிய பெரும் பொறுப்பு நமக்கு இருக்கிறது.

இலங்கையில் இருக்கக்கூடிய இந்திய ஹை கமிஷனர் காரியாலயத்திலே ஏராளமான பேர்கள் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு இந்திய அரசு இவ்வாறு தஞ்சம் புகுந்திருக்கிறவர்களுடைய பிரச்சினைகளை ஆழ்ந்த அனுதாபத்துடன் கவனித்து தக்க நடவடிக்கைகள் எடுத்து, அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்க தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சமீபத்திலே நாடாளுமன்றத்திலே, வெளிநாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, இதிலே அரசாங்கம் தக்க முறையிலே தலையிட்டு, தமிழ் மக்கள் நலனைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கும் என்று கூறியிருக்கிறார்கள். தமிழகச் சட்டமன்றத்திலே இப்படிப்பட்ட தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றுவதன்மூலம், இந்திய அரசாங்கத்தினுடைய கைகளை நாம் பலப்படுத்துபவர்கள் ஆவோம். அவர்கள் ராஜீய துறையிலே இலங்கை அரசை அணுகி, இரு நாடுகளுக்கும் இருக்கக்கூடிய நட்புறவை மேலும் பலப்படுத்துவதற்கும், இரு நாடுகளுக்கும் மனக் கசப்புகள் ஏற்படாமல் தடுப்பதற்கும் இந்த இரு நாடுகளும், தென்கிழக்கு ஆசியாவிலே ஏகாதிபத்தியங்களின் நிர்பந்தங்களை எதிர்த்து, சுயேச்சை நாடுகளாக இருப்பதற்கும் இந்த இனப் பிரச்னையில் சுமுகமான ஒரு தீர்வைக் கொண்டு வர வேண்டியது அவசியம் என்ற அந்தப் பின்னணியில்தான் நாம் அதை எடுத்துக் கூறியிருக்கிறோம் என்று இங்கே எடுத்துக் கூற இருக்கிறோம். ஆகவே, இந்தத் தீர்மானம் இங்கே நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே பாரத பிரதமரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள் என்ற செய்தியைப் பார்த்தோம்.



ஆகவே, இந்தத் தீர்மானம் நிறைவேறியதற்குப் பிறகும், இலங்கையிலே என்ன நடக்கிறது என்று உன்னிப்பாகப் பார்த்து, நம்முடைய மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தோடு அடிக்கடி தொடர்பு கொண்டு அவ்வாறு அகதிகளாக வந்தவர்கள் திருப்பி அனுப்பப்படுவதற்கும், அவர்கள் குடியமர்த்தப்படுவதற்கும், அவர்கள் வேலைக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கும், அவர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதற்குமான முயற்சிகளிலே அரசாங்கம் ஈடுபடுகின்றதா என்று தொடர்ச்சியாகக் கவனிக்க வேண்டிய பொறுப்பு நம்முடைய சட்டப் பேரவைக்கும், தமிழக அரசுக்கும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தாக்குதலினாலே பாதிக்கப்பட்ட அந்தத் தமிழ்க் குடும்பங்கள் அனைவருக்கும் மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்து, அவர்களுடைய உயிர்களை, உரிமைகளைப் பாதுகாப்பதற்கு, இந்திய அரசின் மூலமாக, ராஜீயத் துறையிலே தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்தியாவிலே இருக்கக்கூடிய அரசியல் கட்சிகள் முயலவேண்டும். இது தமிழ் மக்களுடைய பிரச்னை என்பது மட்டுமல்ல. தமிழ் மக்கள் என்ற முறையிலே அவர்கள் இந்திய மக்களாக ஆகின்றார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே இந்திய மக்களுடைய குடியுரிமையை, அங்கே இருக்கக்கூடிய மக்களுடைய மைனாரிட்டி உரிமைகளைப் பாதுகாப்பது என்ற முறையில், இந்திய அரசாங்கத்திற்கு பொறுப்பிருக்கிறது.

மற்றபடி மனித உரிமைகள் என்ற அடிப்படையிலேயும் இன்றைக்கு உலகத்திலே நாம் சாதாரணமாகப் பார்க்கிறோம். மனித உரிமைகள் மீறப்பட்டால் அவ்வாறு மீறப்படுவதைக் கண்டித்து, அந்த உரிமைகள் மீண்டும் அளிக்கப்பட வேண்டுமென்று பல்வேறு நாடுகளிலே உள்ள அந்த சிரமப்படக்கூடிய அல்லது அடக்கு முறைக்கு ஆளாக்கப்படக்கூடிய மக்களுக்காக ஜனநாயக சக்திகள் குரல் எழுப்புவதை நாம் பார்க்கிறோம். ஆகவே, அந்தக் காரணங்களினாலே இலங்கை உள்நாட்டு பிரச்னையிலே நாம் தலையிடவில்லை. தமிழ் வம்சாவழியினருடைய நியாயமான உரிமைகளை, அவர்கள் இலங்கையிலே குடிமக்களாக வாழ்வதற்கு நிலைமைகள் ஏற்படுத்தப்பட்டு, பாதுகாக்கப்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்திலே கூறியிருக்கிறோம் என்பதைக் கூறி, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, இதற்குத் தொடர்ந்து நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே வாழக்கூடிய தமிழ் மக்களுக்கு இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய, அவர்களுடைய உயிர், உடைமைகளுக்கு, உரிமைகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மோசமான நிலைமையைத்

[திரு. குமரிஅனந்தன்] [1981 ஆகஸ்ட் 21

அதுமட்டுமல்லாமல், அங்கே இருக்கின்ற தமிழர்கள் சிறுபான்மை உரிமை என்பதை மட்டும் பெறவில்லை. அவர்கள் அங்கே வாழ்வதற்குரிய உரிமையும் பெற்றவர்கள். அவர்கள் மூந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வளர்ந்ததும் அந்நாடே என்று சொல்லுகின்ற அளவுக்கு உரிமை பெற்றவர்கள் அங்கே உண்டு. அப்படி உரிமை பெற்றவர்கள் பற்றி எல்லாம் இந்த மாமன்றம் கவலைப்படுவது மட்டுமல்லாமல், மத்திய அரசும் கவலை காட்டுகின்றது என்பதனை கடந்த காலத்தில் பாராளுமன்ற நிகழ்ச்சிகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

[பிற்பகல் 12-10]

ஆனாலும் அந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கின்ற நாம் உள்ள நெகிழ்ச்சியோடு சில காரியங்களை நெறிப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருக்கிற ஒரு மாகாணம் கூட அங்கே இருக்கிற தமிழர்களுடைய நலனைக் கருதி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறது. அப்படி எல்லாம் நிறைவேற்றப்படுகின்ற நேரத்திலே நமது சட்டமன்றப் பேரவையும் இப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதிலே எந்தவிதமான தவறும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் அங்கே இருக்கிற தமிழ் மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிற கொடுமைகளை எண்ணிப்பார்க்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் கடல் நீரிலே ஏன் உப்புக் கரிக்கிறது என்பதற்கு காரணமாகச் சொல்கின்றபொழுது ''அந்தத் தண்ணீர் உப்பு நீராக மாறியதற்குக் காரணம் கடல் கடந்து சென்ற தமிழர்களின் கண்ணீர்தான்'' என்று சொன்னதை இன்று நாம் நினைத்துப்பார்ப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். மனித இனத்திற்கு கொடுமை நிகழ்ந்தாலே மனசாட்சி உடையவர்கள் எல்லாம் கொதித்து எழவேண்டுமென்று சொல்லுகின்ற சூழ்நிலைதான் இன்றைய உலகத்திலே எழுந்திருக்கிற ஒன்றாகும். அப்படி இருக்கிற நேரத்திலே மனித மனசாட்சியைத் தொடுகின்ற என்று சொல்லுவது கூட தவறு. சுடுகின்ற நிகழ்ச்சிகள் அங்கே நடக்கின்றபோது, அந்த மனித வர்க்கத்திலே தமிழ் வர்க்கத்தைச் சேர்ந்த நாம் அதை எடுத்துக்காட்டுகின்ற சகல உரிமையும் பெற்றிருக்கிறோம் என்பதைத் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நாம் ஓர் எல்லைக்கோடு உண்டு என்பதை உணர்கிறோம், அது வெளிநாட்டுப் பிரச்சினை ஆனாலும் கூட மனித இனப் பிரச்சனை என்ற காரணத்திற்காக மனித சமுதாயத்தின் அங்கமாக இருக்கிற நாம் அதைச் சுட்டிக்காட்டுவதற்கு உரிமை பெற்றிருக்கிறோம்.



1981 ஆகஸ்ட் 21] [திரு. குமரிஅனந்தன்]

அங்கே பெண்களுக்கு என்ன துயரங்கள் விளைந்திருக்கின்றன என்பதை நாம் எண்ணிப்பார்க்கிறோம். மகா வித்தியாலயா என்ற பள்ளிக்கூடத்தைச்சுற்றி நின்று அங்கே இருக்கிற ஆசிரியைகளையும் அங்கே இருக்கிற மாணவிகளையும் கொடுமைப்படுத்த துணிகின்ற நேரத்திலே அரசாங்க உதவி மட்டுமல்ல, போலீஸ் அதிகாரிகளுடைய உதவியையும் கேட்டபோது அவர்கள் மேலும் உதவி கொடுப்பதற்குப் பதிலாக அங்கே இருந்து அகன்று சென்று அந்த வெறியர்களுடைய கையிலே அந்த பெண்களுடைய பொறுப்பை ஒப்படைத்துச் சென்றிருக்கிற கொடுமையும் இருக்கிறது.

உலகத் தமிழ் நாகரீகத்திற்கு தொட்டில் என்று விளங்கிய தமிழ் நாகரீகம், அந்த நாகரீகத்தினுடைய தனிப் பெரும் நூலாகிய தொல்காப்பியம் சொல்லுகின்றது, ''உயிரை விட சிறந்தது நாணயம்; நாணயத்தைவிட சிறந்தது கற்பு'' என்று. ஆக உயிரை விட எத்தனையோ மடங்கு கற்பு சிறந்தது என்பதை நம் சிந்தித்துப் பார்க்கிறோம். அந்த கற்பு இழந்த நிலையெல்லாம் அங்கே ஏற்பட்டிருக்கிறது. பாரதி சொல்லுவான்,

பெண்ணென்று சொல்லிடிலோ—ஒரு
 பேயும் இரங்கும் என்பார் : தெய்வமே! நினது

எண்ணம் இரங்காதோ ?—அந்த
 ஏழைகள் அங்கு சொரியும் கண்ணீர்வெறும்

மண்ணிற் கலந்திடுமோ ? —தெற்கு
 மாகடலுக்கு நடுவினிலே, அங்கோர்

கண்ணற்ற தீவினிலே—தனிக்
 காட்டினிற் பெண்கள் புழுங்குகின்றார், அந்த

நாட்டை நினைப்பாரோ ?—எந்த
 நாளினிப் போயதைக் காண்பதென்றே அன்னை

வீட்டை நினைப்பாரோ ?—அவர்
 விம்மிவிம்மி விம்மி விம்மியழுங்குரல்

கேட்டிருப்பாய் காற்றே — துன்பக்
 கேணியிலே யெங்கள் பெண்கள் அழுதசொல்

மீட்டு முரையாயோ ?—அவர்
 விம்மி யழவுந் திறங்கெட்டுப் போயினர்

என்று. அப்படி விம்மி அழும் திறன் கெட்டுப் போன நேரத்திலே உடைமையை இழந்து, உயிரை இழந்து, பாதுகாப்பை இழந்து கொண்டிருக்கிற அந்த மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கின்ற பெரும் கடமை மைய அரசுக்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக்

வகையிலே இங்கே ஒருமனதாக, எந்தவிதமான
காட்டுகின்ற
சிலும்புக்கள்கூட இல்லாமல் எல்லோரும்சேர்ந்து ஒரு தீர்மானத்தைத்
நிறைவேற்றுவதற்காக அதை முழு மனதோடு முன்மொழிந்த
அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்து, இந்தத் தீர்மானத்தை நிறை
வேற்றுவதோடு நின்றுவிடாமல் ஊசியைத் தேர்ட்டுகின்ற நூலே
போலே இந்தத் தீர்மானத்திலே இருக்கிற எண்ணங்கள் எல்லாம்
நிறைவேறுகின்றனவா என்று பார்க்கின்ற அளவிற்கு நம் இதயங்
களை ஓடவிட வேண்டுமென்று சொல்லி, அங்கே துன்புற்றி
நக்கிற மக்கள் துயரங்களைத் துடைப்பதற்கு நமது இதயத்
துடிப்பை அனுப்புவோம் என்று சொல்லி, அமர்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு தலைவரவர்களே,
இலங்கைவாழ் தமிழ் மக்கள் படுகின்ற துயரத்தை துடைப்பதற்
காக தமிழக அரசின் சார்பிலே அவை முன்னவர் அவர்கள்
கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு
ஆதரிப்பதோடு, அகில இந்திய பார்வர்டு கட்சியின் சார்பிலே
சில கருத்துக்களை நானும் அதிலே இணைத்துக்கொள்கிறேன்.

இப்போது அன்றாடப் பத்திரிகை நிகழ்ச்சிகளைப் பார்க்கும்
போது இலங்கைவாழ் தமிழ் மக்கள் படுகின்ற இன்னல்கள் தமிழ
கத்தில் இருக்கிற 5 கோடி தமிழ் மக்களுக்கும் இதயங்களிலே
கொதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அது மட்டுமல்ல; இலங்கை
வாழ் தமிழ் மக்கள் திட்டமிட்ட தாக்குதல்களுக்கு ஆளாக்கப்
பட்டிருக்கிறார்கள். அது திட்டமிட்ட தாக்குதல் என்பது மட்டு
மல்ல, அங்கே இருக்கிற அரசும் அந்த தாக்குதலை தடுக்க முன்
வரவில்லை, அந்த மக்களைக் காக்க கடமைப்பட்டிருக்கிற அரசு
அந்த மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு தீர்வு
காண தநிலையில் இன்றைக்கும் இருப்பதைபத்திரிகை வாயிலாகப்
பார்க்கிறோம்.

இரத்தினபுரி மாவட்டம் என்று ஒரு மாவட்டம் அங்கே இருக்
கிறது. அங்கே தமிழர்கள் மைனாரிட்டியாக இருக்கிறார்கள்.
அந்த மக்களை அந்த மாவட்டத்திலிருந்து அடித்துத் துரத்தியது
மட்டுமல்ல; பெண்கள் எல்லாம் கற்பழிக்கப்பட்டார்கள், இன்
றைய பத்திரிகையில் பார்த்தால், அங்கே உள்ள தோட்டத்
தொழிலாளர்கள் 15,000 பேர் உயிரிழந்து, சொத்து இழந்து,
தங்கள் சுகத்தை இழந்தது மட்டுமல்லாமல் எஞ்சியிருந்தோர்
இரவு பகலாக அந்தத் தோட்டங்களிலிருந்து நடந்து சென்று
அகதிகளாக, அனாதைகளாக பராரிகளாக பாதுகாப்புத் தேடி
அங்கே இருக்கிற தாதரகத்திற்கு வந்திருக்கிறார்கள் அல்லது
அதிகமாக தமிழ் மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு வந்து குடியேறி
இருக்கிறார்கள் என்று தெரிகிறது.





அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை என்ற நிலை பத்திரிகைச் செய்திகளைப் பார்த்தால் தெரிகிறது. அங்கிருந்து உயிரோடு தப்பித்து இங்கே தமிழகத்திற்கு வந்தவர்கள் மூலமாகவும் கிடைக்கின்ற செய்தி என்னவென்றால், அங்குள்ள தமிழ்மக்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதுதான். இங்குள்ள 5 கோடி தமிழ் மக்களும் இதனால் கவலை அடைந்திருக்கின்றனர். அந்தத் தமிழ்மக்கள் மீது பற்றுள்ள உள்ளங்கள் அத்தனையும் கொதித்து எழுந்திருக்கின்றன. தமிழக முதல்வர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பிரதம அமைச்சர் அவர்களைச் சந்தித்துப்பேசி, இன்றைக்கு அவர்கள் இந்த நிலையினை உணர்ந்து உணர்வு பூர்வமாக மத்திய அரசு கடமையைச் செய்யும் என்ற வாக்குறுதியையும் அளித்திருக்கிறார்கள் என்ற செய்தியினையும் நாம் பார்க்கிறோம்.

மேலும் வெளிநாடு என்று கருதி அந்த விவகாரத்திலே அரசு தலையிடக் கூடாது என்ற அளவிலே இந்தப் பிரச்சினையைக் கருத முடியாது. அதற்குக் காரணம் என்னவென்றால் 1964 ஆம் ஆண்டிலே திருமதி பண்டாரநாயகா சாஸ்திரி அவர்களோடு ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி அங்கே உள்ள தமிழ் மக்கள் தமிழ்க் குடும்பங்களாகவே 75 ஆயிரம் பேர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மக்கள் தாக்கப்படுகிறார்கள் என்பது அது இந்திய குடிமக்களுடைய நேரடிப் பிரச்சினையாகும். ஆகவே மத்திய அரசு நேரடியாகத் தலையிடுவதற்கு அதிகாரம் இருக்கின்றது. என்ற வகையிலே தமிழக அரசு கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்படுகிறது என்பது 5 கோடி தமிழக மக்களின் ஒட்டுமொத்தமான உணர்வை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்வதாகும்.

மேலும் இந்தியப் பேரரசும், இலங்கை அரசும் காமன் வெல்த்தில் அங்கம் வகிக்கின்றன. ஆகவே இந்தப் பிரச்சினையிலே நல்லதொரு தீர்வை காணவேண்டும் என்பதில் தமிழக அரசு உன்னிப்போடு கவனிக்கவேண்டும். அந்த வகையில் இதன் தொடர் நடவடிக்கை இருக்கவேண்டும். மத்திய அரசிடம் தொடர்ந்து இதுபற்றிக் கூறி, நிலைமையை விளக்கி அந்த மக்களுக்கு, அங்கே இன்னல் படுகிற மக்களுக்கு ஒரு சுமுகமான தீர்வு ஏற்படுகின்ற வகையிலே நாம் அத்தனை பேரும் இணைந்து தமிழகத்தின் 5 கோடி மக்களின் ஒருமித்த குரலாக ஒலிக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்தின் வரலாற்றிலே என்றும் இல்லாத வகையிலே இன்றைக்கு 5 கோடி தமிழக மக்களின் பிரதிநிதிகளாக வீற்றிருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் ஒன்றுபட்டு நின்று ஒரே குரலில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக பேசுவதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

"எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டு"

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடிய அந்த வாசகங்கள் இந்த நிகழ்ச்சிக்கு முற்றிலுமாக பொருந்தி இருப்பதை நான் உணர்கிறேன். இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்கள் இன்று நேற்றல்ல, 2 ஆயிரம் ஆண்டு காலத்திற்கு மேலாக அந்த நாட்டிலே அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆங்கிலேயர் ஆண்ட காலத்திலே அங்கே தோட்டத் தொழிலாளர்களாக இந்தியாவிலிருந்து தமிழர்கள் அனுப்பப்பட்டும் பல நூற்றாண்டுகாலமாக தமிழர்கள் இலங்கையில் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் தமிழன் என்று சொன்னாலே அவனை இலங்கையிலிருந்து விரட்டி அடிக்க வேண்டும் என்ற வெறித்தனம் இலங்கையிலே வளர்ந்து வருகின்றது. அண்மைக் காலத்திலே நடைபெற்ற சம்பவங்கள் ஆனாலும் 1975 ஆம் ஆண்டிலே இலங்கையிலே உலகத்தமிழ் மாநாடு நடைபெற்றபோது நடந்த கொடுமைகளானாலும் அவற்றுக்கிடையே வித்தியாசம் இல்லை.

[பிற்பகல் 12–20]

தமிழர்கள் அங்கே வாழ்வதையே அவர்கள் அங்கே இருப்பதையே, அங்குள்ள சிலரால் சகித்துக்கொள்ள முடியாத நிலைமை இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தம் 1964 ஆம் ஆண்டு ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி யார் யாருக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டுமோ அந்த தமிழர்களுக்குக்கூட இன்னும் குடியுரிமை வழங்கப்படாத நிலைமை இருந்து வருகிறது. அவர்களும் இந்தத் தாக்குதலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அதை நாம் மறந்துவிடக் கூடாது.

அங்கே அண்மையிலே நடைபெற்றிருக்கக்கூடிய கலவரங்களின் விளைவாக எவ்வளவு கொடுமைகள் நடந்திருக்கின்றன என்பதைப் பற்றி பத்திரிகைகளிலே சில பகுதிகள் தான் வந்திருக்கின்றனவே தவிர பெரும்பான்மையானவை அங்கே சென்சார் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் மறந்துவிடுவதற்கில்லை. முக்கியமாக தமிழர்கள் தங்கள் உயிர்களை இழந்திருக்கிறார்கள். சொத்து சுகங்களை இழந்திருக்கிறார்கள். இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய திரு. யோகீஸ்வரன் எம். பி. அவர்கள் நாடாளுமன்றத்திலே பேசும்போது பகிரங்கமாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அவருடைய வீடு அங்கே தாக்குதலுக்கு உள்ளானது மட்டுமல்லாமல் அவருடைய உயிருக்கே உலை வைக்கக்கூடிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அவரே நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். அவருடைய வீட்டை அடியோடு எரித்து நாசமாக்கியிருக்கிறார்கள். மிகப் பெரிய நூல் நிலையம் ஒன்று அழிக்கப்பட்டிருக்கிறது. இலங்கை





எல்லாம் தமிழர்கள் குடியிருந்த பகுதிகளில் நடைபெற்றிருக்கின்றன. இன்னும் தொடர்ந்து இந்தக் கொடுமைகள் நடைபெற்று வருகின்றன.

இந்தக் கொடுமையை இன வெறியர்கள் மட்டும் செய்கிறார்களா என்றால், இல்லை. இலங்கை இராணுவமும், போலீசுமே அந்தக் கொடுமைகளைச் செய்து வருவதுதான் இதில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. எந்த மக்கள் கொடுமைகளுக்கு ஆளாகியிருக்கிறார்களோ, அவர்களுக்கு உதவ வேண்டிய போலீசும் இராணுவமுமே, இன வெறியுடன் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்துகிறார்கள். இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் திரு யோகீஸ்வரன் அவர்களுடைய வீட்டை கொளுத்தியதே இலங்கை போலீசும், இராணுவமும்தான் என்று அவரே பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்கள், அந்த அளவுக்கு இராணுவமும போலீசும் இனவெறியோடு கலவரங்களில் ஈடுபட்டிருப்பதை பார்க்கும் போது, அங்கே, இருக்கக் கூடிய தமிழர்களுக்கு இன்றைக்கு யார் பாதுகாப்பு? நாம் தான் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இந்தியாதான் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்.

பல பகுதிகளிலேயிருந்து செய்திகள் வந்திருக்கின்றன. அதிலும் குறிப்பாக பொல்காவலை என்ற பகுதியிலே இருந்து திடுக்கிடும் செய்தி வந்திருக்கிறது. 200-க்கு மேற்பட்ட பெண்களை கற்பழித்து அவர்களை ஊரைவிட்டே விரட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட செய்திகள் வந்துக் கொண்டேயிருக்கின்றன. இலங்கையில் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக் கூடிய மதிப்பிற்குரிய அமிர்தலிங்கனார் அவர்களை, பதவி நீக்கம் செய்ய எந்த நாட்டின் நாடாளுமன்ற வரலாற்றிலே இல்லாத, அளவிற்கு, சட்டமன்றத்தின் வரலாற்றிலேயும், இல்லாத அளவிற்கு எதிர்க்கட்சித் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகிற ஒரு நடைமுறையை அங்கேயிருக்கக்கூடியவர்கள் செய்திருக்கிறார்கள். அதைக் கண்டு உலகமே நகைக்கிறது.

ஆளும் கட்சியின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதுதான் மரபு. ஆனால் அங்கே எதிர்க் கட்சித் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து, அவர் ஒரு தமிழர் என்ற காரணத்திற்காகவே அவரை பதவியிலிருந்து நீக்கியிருக்கிறார்கள். அந்த தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறுகிற நேரத்திலே, எதிர்க்கட்சியினர் அத்தனை பேரும் வெளிநடப்பு செய்துவிட்ட பின்னால், ஆளும் கட்சி மட்டுமே உட்கார்ந்துக் கொண்டு உலக நாடாளுமன்ற வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, அநாகரிகமான முறையிலே எதிர்க்கட்சித் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றி, நாடாளுமன்றத்திலிருந்து நீக்கம் செய்யச் சொல்லி

நீக்கியிருக்கிறார்கள் என்றால், தமிழர்கள் என்றால் அந்த நாடாளு மன்றத்தில் இடம் இல்லை என்பது மாத்திரம் பொருள் இல்லை. இலங்கை நாட்டிலேயே இனி வரும் எதிர்காலத்தில் தமிழர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் யாராக இருந்தாலும், இடம் இல்லை என்று வெளிப்படையாகக் காட்டிய செயல் அது. இவ்வளவிற்குப் பின்னாலும், அதை உள்நாட்டுப் பிரச்னை என்று சில பேர் பேசுவதைப்பார்க்கும்போது வருத்தமாக இருக்கிறது.

எது உள்நாட்டுப் பிரச்னை ? நிச்சயமாக இந்தப் பிரச்னை உள்நாட்டுப் பிரச்னை இல்லை. நம்முடைய நாட்டிற்கு அண்டையிலே இருக்கக் கூடிய பாகிஸ்தானுடன் சேர்ந்து ஒரு பகுதியாக இருந்த கிழக்கு பாகிஸ்தானிலே இருந்த மக்கள் பல ஆண்டுகளுக்கு முன்னாலே உரிமைகள் கேட்டு கொதித்து எழுந்தார்கள். பாகிஸ்தான் ராணுவம் அம்மக்களைக் கொடுமைப் படுத்தியது. ஜெனோசைட் என்று சொல்வார்களே அந்த அளவிற்கு கொடுமைகள் நடைபெற்றன. நமது மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் அவர்கள் அப்போது அந்தச் செய்கைகளைக் கண்டித்தது மட்டும் அல்லாமல், உலக நாடுகளின் தலைவர்களை எல்லாம் சென்று சந்தித்தார். அவர் வாஷிங்டனுக்குப் போனார்; பாரிசுக்குப் போனார்; ரஷ்யாவிற்கும் போனார். எல்லா நாடுகளுக்கும் சென்று அந்த நாடுகளின் தலைவர்களையெல்லாம் சந்தித்து இப்படிப்பட்ட இனக் கொடுமைக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதை உள்நாட்டுப் பிரச்னை என்று அவர்கள் ஒதுக்கிவிடவில்லை. அன்னிய நாட்டுப் பிரச்னையில் நாம் ஏன் தலையிடவேண்டும் என்று அவர்கள் ஒரு நாளும் நினைக்கவில்லை. அந்த உணர்வை இன்றைக்கு மத்திய அரசு மீண்டும் பெறவேண்டும் என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள்.

வங்காள தேசத்திற்கு நம் இராணுவத்தை அனுப்ப வேண்டிய, அனுப்பப்படவேண்டிய கட்டம் வந்தது. அன்று மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்கள் ஒரு தினம் கூட யோசிக்கவில்லை. நமது படையை அனுப்பினார்கள், வங்க தேச விடுதலைக்கு உதவி செய்தார்கள். அதைப் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன். அதே போல் பாகிஸ்தானில் மற்றொரு பகுதியான எல்லைப்புற மாநிலம் என்று சொல்லக்கூடிய பக்தூனிஸ்தான் பகுதியில் வாழ்கிற பட்டாணியர்கள் கொடுமைகளுக்கு ஆளாகிறபோது—எல்லைக் காந்தி என்று அழைக்கப்படுபவரும், மகாத்மா காந்தி அடிகளின் சகாவுமான கான் அப்துல் கபார்கான் அவர்கள் இருபது ஆண்டுக் காலத்திற்கு மேலாக அந்த நாட்டில் சிறையில் வைக்கப்பட்டவர். அவர்கள் விடுவிக்கப்பட்ட பின்னர் அவர்களை இந்தியாவிற்கு அழைத்து வந்து இந்தியாவிலுள்ள எல்லா மாநிலத் தலைநகரங்களிலும் அவர்களுக்கு வரவேற்பு கொடுத்தது மட்டுமல்ல; அவர்களது பக்தூனிஸ்தான் கோரிக்கைக்கு பகிரங்க





மாக ஆதரவினை பிரதமர் இந்திரா காந்தியவர்கள் வழங்கினார்கள். மாநில அரசுகளை எல்லைக் காந்தியை வரவேற்றன. ஆதரித்தன.

இந்தியாவிலிருந்து அவருக்கு ஐந்து கோடி ரூபாய்க்குகுறையாத அளவிற்கு நிதி திரட்டப்பட்டு கொடுக்கப்பட்டது. பாகிஸ்தான் உள்நாட்டுப் பிரச்சனை என்று அவர்கள் ஒதுக்கிவிடவில்லை. அதற்கு ஆதரவு கொடுத்தோம். மனிதாபிமான பிரச்சனை அது.

அதுபோல் தென்ஆப்பிரிக்காவில் வாழ்க்கையை தமிழர்கள் மற்றும் இந்தியர்கள் எல்லாம் அங்கே இக்கொடுமைக்கு ஆளாக்கப் பட்டார்கள். அந்த நிலைமை ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா போராடி ஆசிய ஆப்பிரிக்க நாடுகளையெல்லாம் ஒன்று திரட்டி ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து தென் ஆப்பிரிக்காவில் விலக்கி வைக்க வேண்டும் என்று போராடி தென் ஆப்பிரிக்காவை ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து விலக்கி வைத்த பெருமை இந்தியாவிற்கு உண்டு. காரணம் அங்கே வாழ்கின்ற இந்தியர்களை கொடுமை செய்தார்கள் என்பதால் அங்கே வாழ்கிற நீக்ரோ மக்கள், கருப்பு நிற மக்கள் யாராக இருந்தாலும் அவர்கள் வெள்ளையர்கள் நிறத்திமிறி போரில் அடக்கி ஒடுக்கி வைக்கிறார்கள் என்ற மனிதாபிமான உணர்வு காரணமாக அன்று இந்தியா ஐக்கிய நாடுகள் சபையில் போராடியது. இன்று தென் ஆப்பிரிக்கா கூட நமக்கு அரசியல் உறவு கிடையாது. தூதுவர் கிடையாது; பாஸ்போர்ட் கொடுக்கும் போது கூட தென் ஆப்பிரிக்கா தவிர உலகில் எந்தப் பகுதிக்கும் செல்லலாம். என்றுதான் பாஸ்போர்ட் வழங்கப்படுகிறது. இந்தியா, உலக அரங்கிலிருந்து தென் ஆப்பிரிக்கவை ஒதுக்கி வைத்து, அதே போன்ற நிலைமை இன்று இலங்கையில் ஏற்பட்டு இருப்பைபதை தான் இந்த மன்றத்தில் வருத்தத்துடன் சுட்டிக்காட்ட வேண்டியவனவாக இருக்கிறேன்.

இன்று இலங்கையில் திட்டமிட்டு ஜினோசைட் நடைபெறுகிறது. திட்டமிட்டு இனப்படுகொலை அங்கே செய்யப்படுகிறது. தமிழன் என்ற ஒரு இனம் அங்கே இருந்தது என்பதற்கான அடையாளம் இல்லாமல் செய்ய வேண்டிய முயற்சிகள் அங்கே திட்டமிட்டு நடத்தப் படுகின்றன. இலங்கை வடகிழக்கு மாநிலங்களை பெருவாரியாக தமிழர்கள் வாழ்கிற பகுதிகள் தொன்று தொட்டு கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து அங்கே அவர்கள் தொடர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே பெரும்பான்மையினராக, 95 சதவீத தமிழர்கள் வாழக்கூடிய பகுதிகளில் இருக்கக்கூடிய அரசாங்க புரம்போக்கு நிலங்களையெல்லாம் சிங்களவர்களுக்குக் கொடுத்து சிங்களவர்களை அங்கே கொண்டு போய் குடியேற்றி தமிழர்கள் வாழ்கிற

[திரு. ப. நெடுமாறன்] [1981 ஆகஸ்ட் 21]

பகுதிகளிலேயே தமிழர்கள் மெஜாரிட்டி அல்ல, மைனாரிட்டியாக ஆகிவிட்டார்கள் என்ற நிலைமையை ஏற்படுத்துவதற்கு அவர்கள் அங்கே திட்டமிட்டு முயற்சி செய்கிறார்கள்.

அதே போல் மாவட்ட கவுன்சில்களுக்கு நடைபெற்ற தேர்தல்களில் தமிழர்கள் வெற்றி பெறக்கூடாது என்பதற்காக இராணுவமும் போலீசும் சென்று ஓட்டுப்போட வந்த தமிழ் மக்களையெல்லாம் விரட்டியடித்த அந்தக் கொடுமைகளையெல்லாம் நாம் பார்த்தோம். அங்கே வாழும் வணிகர்கள் தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்கள். அவர்கள் கடைகள் சூறையாடப்பட்டிருக்கின்றன. யாரும் வாழ முடியாத நிலை. யாரும் வணிகம் செய்ய முடியாத நிலை. யாரும் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அங்கே மலைத் தோட்டங்களில் பல நூற்றாண்டுகளாக வாழையடிவாழையாக, பரம்பரை பரம்பரையாக உழைத்து அந்த மலைத் தோட்டங்களை செல்வவளம் கொழிக்கச் செய்த தமிழர்கள் இன்று மலைத் தோட்டங்களிலிருந்து விரட்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்று இந்து பத்திரிகையில் கூட செய்தி வந்திருக்கிறது. பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் இந்திய தமிழர்கள் அந்த மலைத் தோட்டங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு அறுபது மைல் தூரம் காடுகள் அடர்ந்த பகுதிகள் வழி ஆண், பெண் குழந்தைகள் தங்கள் உடைமைகளையெல்லாம் விட்டுவிட்டு மலைப்பாம்புகள் நிறைந்த பகுதிகள் வழி ஓடிவந்திருக்கிறார்கள். தமிழர்கள் பத்தாயிரத்திற்கு மேற்பட்டு ஓடி வந்து வழியில் சில பேர்கள் செத்து மற்றவர்கள் இன்று அகதிகள் முகாமில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-30]

இலங்கையில் நமது இந்தியத் தூதுவரகத்தில் ஏராளமான மக்கள் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். குடியுரிமை பெற்ற இந்தியர்கள், இந்தக் குடியுரிமை வேண்டாம், இந்தியா போவதற்கு எப்படியாவது வழி செய்து கொடுங்கள் என்று நம்முடைய தூதுவரிடம் அவர்கள் எல்லாம் முறையிடுகின்ற ஒரு பரிதாபகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் தமிழ்நாடு சட்டமன்றத்திலே ஏகமனதாக எல்லாக் கட்சியினரும் சேர்ந்து ஐந்து கோடி தமிழர்களும் ஒரே குரலில் இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு ஆதரவாக இருக்கிறோம் என்பதைக் கண்டு இலங்கையிலுள்ள இன வெறியர்கள் அஞ்சுவார்கள் என்பதிலே சந்தேகம் இல்லை. இதற்கான முன்முயற்சிகளை தடுத்துக் கொண்ட முதல மச்சர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மற்றக் கட்சியினுடைய தலைவர்கள் அத்தனை பேர்களுக்கும் நான் என் இதயபூர்வமான பாராட்டுதல்களை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1981 ஆகஸ்ட் 21] [திரு. ப. நெடுமாறன்]

இந்தப் பிரசினை சம்பந்தமாக நான் ஒரு தனி நபர் தீர்மானம் கொடுத்திருந்தேன். ஆனால் இன்றைக்கு அரசுத் தரப்பிலே இருந்து தீர்மானம் வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பிரதமர் அவர்களைச் சந்தித்துப் பேசி இருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். மற்றக் கட்சிகளின் சார்பிலும், நம்முடைய பிரதமர் அவர்களுக்கு இந்தச் செய்திகளையெல்லாம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தப் பிரச்சினையில் ஆழ்ந்த கவலையோடு, இந்த தமிழ்நாடு சட்ட மன்றம் தெரிவித்திருக்கின்ற இந்த உணர்வினை மத்திய அரசு புரிந்துகொண்டு, தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

அதே நேரத்தில், இன்னொரு யோசனையையும் நான் இந்த அவையின் பரிசீலனைக்கு வைக்க விரும்புகிறேன். அண்மையில் லண்டனில் இனவெறிக் கலவரம் நடந்தது. அங்கு பஞ்சாபியர் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில், பஞ்சாப் முதல மச்சர் அவர்கள் நம்முடைய பிரதமர் அனுமதியோடு அங்கு விரைந்து சென்றார்கள். அங்கே சென்று பார்வையிட்டு வந்து, நம்முடைய பிரதமர் அவர்களிடம் ஒரு அறிக்கையினைத் தாக்கல் செய்தார்கள். அதைப்போல, இன்றைக்கு இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற இந்தக் கொடுமைகளின் காரணங்களைக் கண்டறியவும், அங்குள்ள தமிழர்களுக்கு ஆறுதல் கூறவும் நம்முடைய முதல மச்சர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றக் கட்சிகளைச் சார்ந்த எல்லோரும் கொண்ட ஒரு குழுவை நம்முடைய பிரதமர் அவர்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கவேண்டும். அதன் மூலம் அங்குள்ள தமிழர்களுக்கு ஆறுதல் நிச்சயமாக ஏற்படும். அவர்களைத் தாக்குகின்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு அச்ச உணர்வு ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பிரதமர் அவர்களிடம் வற்புறுத்த வேண்டும். இலங்கை, மலேசியா போன்ற பெருவாரியாக தமிழர்கள் வாழ்கின்ற நாடுகளிலே, இந்தியத் தூதுவர்களை நியமிக்கும்போது, அவர்கள் தமிழர்களாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும். அதன் மூலம் அங்கே வாழ்கின்ற தமிழர்களுக்குப் பாதுகாப்பு உணர்வு இருக்க முடியும். அதன் மூலம் அங்கே வாழ்கின்ற தமிழர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கு வழிவகை ஏற்படும். அங்கே அந்த தூதுவர்கள் இந்திய அரசாங்கத்திற்கு உடனுக்குடன் அங்குள்ள உணர்வுகளைத் தெரிவிப்பதற்கு வழிவகை ஏற்படும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தென் ஆப்பிரிக்காவில் இன வெறியர்களுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையிலே இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு, தென் ஆப்பிரிக்காவை உலக நாடுகள் பகிஷ்கரிப்பதற்கு எப்படி இந்தியா ஏற்பாடு செய்ததோ, அதேபோல், இலங்கையிலுள்ள இனவெறியர்களுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையிலே இந்தப் பிரச்சினையை எழுப்புவதற்கு மத்திய அரசு முன் வர வேண்டும். தமிழக அரசு மத்திய அரசுக்கு இதைத் தெரிவிக்கவேண்டுமென்றுசொல்லி, இந்தச் சட்ட மன்றத்திலே அனைத்துக் கட்சிகளும் ஏகமனதாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி, அதன் மூலமாக இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு ஆதரவாக நாம் குரல் கொடுப்பதைக் கண்டு, நாம் மட்டுமல்ல, தமிழ் கூறும் நல்லுலகத்திலுள்ள எல்லாத் தமிழர்களும் மகிழ்ச்சி அடைவார்கள், பாராட்டுவார்கள். தமிழுக்கு, தமிழ் இனத்திற்கு இனி விடிவுக் காலம் பிறந்திருக்கிறது என்ற நம்பிக்கையோடு இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

*திரு. பி. முகமது இஸ்மாயில் : பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட பல காலமாக இலங்கை மண்ணில் வாழ்ந்த, அந்த மண்ணுக்கு உயிரூட்டி வளப்படுத்திய தமிழின மக்கள் இன்றைய தினம் ஜீவாதார உரிமைகளை எல்லாம் இழந்து பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்ற சேதிகள் வந்து கொண்டிருக்கின்றன. இது இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை என்று எடுத்துக் கொண்டாலும், நிகழ்கின்ற நிகழ்வுகளில் நம்முடைய நாட்டு பிரஜா உரிமை பெற்ற மக்களும் அவதிக்குள்ளாயிருக்கிறார்கள் என்ற காரணத்தால், முழுமையாக உள்நாட்டுப் பிரச்சினை என்று ஒதுக்கி விடாமல் நம்முடைய இன மக்கள் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள் என்ற காரணத்தால், இந்த மாமன்றம் தன்னுடைய அதிர்ச்சியையும், வேதனையையும் தெரிவிக்க முழு உரிமை பெற்றிருக்கிறது.

இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற தீர்மானம் பிரச்சினையின் தன்மையை மிக நன்றாக உணர்ந்து, மிக நுணுக்கமாக ஆராய்ந்து எல்லை தாண்டி விடாமல் தீர்மானம் வரையப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க முடிகிறது. எனவே, இந்தத் தீர்மானத்திற்கு எங்கள் இயக்கத்தின் சார்பாக முழுமையான ஆதரவைத் தெரிவிக்கிறேன்.

இந்த விவகாரம் பற்றி ஏற்கனவே மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகார இடங்களுக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். மத்திய அரசும் இதிலே பாராமுகமாக இருந்து விடவில்லை என்பதைப் பத்திரிகை வாயிலாகப் பார்க்கிறோம். ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்ட முதல்வர் அவர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர்





அவர்களுக்கும் பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் மத்திய அரசும், தன்னுடைய கடமையில் இருந்து வழுவாமல் இருக்கும் காரணத்தால் அதற்கும் என்னுடைய இயக்கத்தின் சார்பாக நன்றியைக் காணிக்கையாக்கி பாராட்டுதலைத் தெரிவித்து அமர்கிறேன்.

*திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈழத் திருநாட்டுத் தமிழர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகள் கண்டு, சிறுபான்மை மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகண்டு, அவர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளை எதிர்த்து தமிழகம் எடுக்கின்ற இந்தத் தீர்மானத்தை நாங்களும் வழிமொழிகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் கூறியதுபோல், பங்களாதேஷ் ஆனாலும், பாகிஸ்தான் ஆனாலும், ஆப்கானிஸ்தான் ஆனாலும் எந்த ஸ்தானாக இருந்தாலும் அங்கே கொடுமைகள், அநீதிகள் இழைக்கப்படுமானால் அது கண்டிக்கத்தக்கதே ஆகும். ஈழத்துத் தமிழ் மக்களுக்கு இழைககப்படுகின்ற கொடுமைகளை அநீதிகளைக் கண்டிக்கத்தக்க வகையிலே, ஈழத்து தமிழ் மக்கள் படுகின்ற அவதி கண்டு அரசு கொண்டு வருகிற தீர்மானத்திற்கு எங்கள் இயக்கத்தின் சார்பாக ஆதரவு தருகிறோம் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஈழத்தில் நடைபெற்றுக் கொண்டிருப்பது இனக்கலவரம் என்று பல பேர் சொன்னாலும், இன்றைக்குப் பத்திரிகை வாயிலாக வருகிற சேதிகள் அனைத்தையும்கூர்ந்து பார்க்கிற நேரத்தில் அது இனப் படுகொலையாகக் காட்சி தந்து கொண்டிருக்கிறது. தமிழர்கள் அங்கே திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள். உரிமைக்காகப் போராட்டத்தைத் தொடர்ந்த தமிழர்களின் உயிர்களை அந்த அரசு பலி வாங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே வாழ்கின்ற தமிழ்ப் பெருங்குடி மக்களை அங்கே இருக்கின்ற சிங்களத்தவர்கள் மானபங்கப் படுத்தி வருகிறார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தில் மாத்திரம் 200 தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கற்பு சூறையாடப்படுகிற கோர நிகழ்ச்சி இன்றைக்கு அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பலகாலம் உரிமைக்காகப் போராடி வரும் தமிழர்கள் இதுவரை வெற்றி பெறாமலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இருப்பினும், தமிழர்கள் என்ற உணர்வோடு வாழ்கின்ற அந்தத் தமிழர்களின் பண்பையும், கலாச்சாரத்தையும் பாதிக்கக்கூடிய அளவுக்கு சிங்களத்தவர்கள் பழிவாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிற அந்த மக்கள் மீது அக்கறை கொண்டு, நம்முடைய சகோதரர்களான உடன் பிறப்புக்கள் மீது அக்கறை கொண்டு தமிழர்களின் தமிழினத்

தலைவன் என்ற முறையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த மக்களின் இன்னல் களைய வேண்டுமென்று மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி அந்த மக்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று தெரிவித்ததற்காக இந்த அவையின் சார்பாகப் பாராட்டுகிறேன், நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-10]

அதேபோன்று அதைத் தொடர்ந்தே எதிர்க்கட்சித் தலைவர்களும் மற்றக் கட்சிக்காரர்களும் இந்தப் பிரச்சினையில் முழுமையான ஆதரவு தெரிவித்தது கண்டு நாங்கள் பாராட்டக் கடமைப் பட்டு இருக்கிறோம்.

இவ்வளவு பிரச்சினைகளையும் இன்னும் எத்தனை நாட்களுக்குப் பொறுத்துக்கொண்டிருப்பது, பார்த்துக்கொண்டிருப்பது என்ற வினா இன்றைக்குத் தமிழக மக்களிடையே எழுந்திருக்கிறது. இந்தக் கொடுமைகளுக்கு முடிவு கட்ட வேண்டுமென்பதற்காக—அங்கே பங்களாதேஷிலிருந்து வருகை தந்த அல்லது அங்கேயிருந்து துரத்தியடிக்கப்பட்ட அத்தனை பேர்களையும் மனிதாபிமான அடிப்படையிலே பார்த்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து மைய அரசு அவர்களுக்கு அடைக்கலம் தந்து பலகோடி ரூபாய் தந்து அவர்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளித்த பெருமை நம்முடைய நாட்டிற்கு உண்டு. அதே போன்ற மனிதாபிமான அடிப்படையிலே மைய அரசு இந்த மக்களுக்கும் தமிழ் உணர்வோடு, தமிழினம் என்று சொல்லிக்கொண்டிருக்கிற தமிழ் இன மக்களுக்கு, அவர்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று சொல்லுகின்ற முறையில் இங்கே கொண்டு வந்திருக்கிற இந்த நல்ல தீர்மானத்தைப் பாராட்டுகிறோம். அதற்காக இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பாக நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பல போராட்டங்கள் இலங்கையிலே தமிழர்கள் சார்பிலே நடைபெற்றாலும் அவையத்தனையும் உரிமைக்காக நடத்தப் பட்ட போராட்டம்; அவர்களுடைய தன்மானத்திற்காக நடத்தப்பட்ட போராட்டம்; தங்களுடைய உரிமையை நிலைநாட்டுவதற்காக நடத்தப்பட்ட போராட்டம். இன்றைக்கு இனக் கலவரம் என்ற பெயரால், இனத் தூண்டுதல் என்ற பெயரால் தமிழர்கள் அங்கே இருக்கவே கூடாது என்ற குறுகிய மனப்பான்மையால், இனவெறியால் அது ஒடுக்கப்பட்டுக் கொண்டு வருகிறது. இதற்கெல்லாம் முடிவு கட்டுகிற முறையிலே இதைப் பற்றிய பிரச்சினைகளை நீங்கள் வேறுவிதமாகக் கருதினாலும் பரவா





யில்லை, நான் என் கட்சியின் சார்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்—ஈழத்தமிழர்களுக்குத் தனிநாடு தருவதைத் தவிர வேறு வழி இருக்காது என்ற காரணத்தினாலே அப்படிப் பட்ட உணர்வைத் தமிழகத்திலே ஏற்படுத்தியாக வேண்டும். அப்படிப்பட்ட உணர்வு மைய அரசுக்கு வருகின்ற வகையில் தமிழினத் தலைவர்கள், இங்கே இருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் மாண்புமிகு பிரதமரைச் சந்தித்து அந்த உணர்வை எடுத்துக் காட்டியாக வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து இதைத் தீர்மானமாகக் கொண்டுவந்த தமிழக அரசையும் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் பாராட்டி அமைகிறேன், வணக்கம்.

*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான, அவசரமாக நாம் கருத்தினைச் சொல்லியாக வேண்டிய பிரச்சினையை உணர்ந்து இங்கே அரசும், பங்கு கொள்கிற அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஒருமித்த மனதோடு இதிலே கவனம் செலுத்தவும், தீர்மானம் கொண்டு வந்ததை ஏகமனதாக ஏற்றுக் கொள்வதும், எதிர்காலத்தில் தமிழக மக்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்கு தமிழர்கள் எங்கு இருந்தாலும் அவர்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்கு ஒரு உத்திரவாதம் தருவது போன்ற ஒரு எச்சரிக்கை நடவடிக்கையாக இருக்கிறது என்ற மகிழ்ச்சியை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதிலும், எதிர்க்கட்சித் தலைவர் இந்தத் தீர்மானத்தை வரவேற்றுப் பேசும்பொழுது உள்ளத்தைத் திறந்து ஒருமனதோடு இதை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதை, பிரச்சினைகளைப் பற்றி எங்கோ யாரும் இழுத்துச் சென்றுவிடக் கூடாது என்ற எண்ணத்தோடு—மிக மிக, சொல்லப் போனால், எச்சரிக்கையாக என்று கூடச் சொல்லலாம், வார்த்தைகளை அளந்து அவர்கள் கருத்துக்களை எந்த அளவுக்கு வெளியிட வேண்டுமோ அதை வெளியிட்டதற்காக அரசின் சார்பில் நான் நன்றி கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அது போன்று ஏனைய கட்சித் தலைவர்களும் தங்களுடைய உணர்ச்சிகளையெல்லாம் இங்கே வெளியிட்டாலுங்கூட, பல் வேறு கருத்துக்களைக் கொண்டவர்களாக பல்வேறு எண்ணங் களைச் சொல்பவர்களாக இருந்தாலும் கூட, ஈழத்துத் தமிழர் களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் தொல்லைகள் தருவதை அவர்களுக்கு அநியாயம், ஆபத்து விளைவிப்பதை இந்த மன்றமும் தமிழகமும் ஏற்றுக் கொள்ளாது என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையில் கருத்துக்களை வெளியிட்டவர்களுக்கு நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 ஆகஸ்ட் 21

அந்நிய நாட்டின் ஆட்சிக்குட்பட்ட இடங்களில் அவர்களுடைய அதிகாரத்தில் தலையிடுகிற வகையில் இன்னொரு நாடு கருத்தை வெளியிடக் கூடாது என்பதோ, குறுக்கிடக் கூடாது என்று சொல்வதோ ஒரு நாட்டினுடைய நாகரீகமாக இருக்கும் என்பதை நாம் உணர்கிறோம். தமிழக அரசும், அந்த அரசின் சார்பாக நானும் அத்தகைய கருத்தைச் சொல்லியிருக்கிறேன். இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் இதைச் சொல்லி இருக்கிறார்கள். ஏனையோரும் சொல்கிறோம். ஆனாலும்நாம்நம்முடைய நாகரீகத்தைவெளிப்படுத்தும்பொழுது அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டிய,எங்கே அநியாயங்கள் நடக்கின்றனவோ அங்கே ஆட்சி செய்கிறவர்கள், அதற்குப் பொறுப்பாக இருக்கின்றவர்கள் நம்முடைய நாகரீகத்தை மதிக் கின்ற வகையிலேயும், நம்முடைய நாகரீகத்திற்கு உயர்வு தரு கின்ற வகையிலேயும், அதை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்ற வகையிலேயும் செயல்படுத்துவார்களேயானால் நாம் சொல்லும் கருத்துக்கள் நிரந்தரமாகத் தொடரக்கூடியதாக அமைய இடம் உண்டு.

ஆனால் இன்றையதினம்—ஒருசில மாதங்களுக்குப் பிறகு நாம் மீண்டும் கேள்விப்படுகின்ற, தெரிந்து கொள்கின்ற செய்திகள்—அன்னியநாடா, வேறுநாடா என்பதைவிட, நமது மக்கள், நமது தமிழக மக்கள், தமிழர்கள் என்னும் வகையில் நாம் நிச்சயமாக அதில் தலையிட, அதைப்பற்றிக் கேட்க நமக்கு உரிமை உண்டு என்று சொல்லுமளவிற்கு நம்மை ஆக்கிவிட்டிருக் கிறார்கள் என்பதை நான் இங்கே வேதனையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த வகையில் இந்தத் தீர்மானம் இந்தியப் பேரரசுக்கு வேண்டுகோளாக, உலக மக்களுக்கு நம் எண்ணத்தை வெளிப் படுத்துவதாக அமைந்திருந்தாலும் கூட, இதோடு இதை நாம் நிறுத்திவிடக் கூடாது என்ற வகையில், இங்கே அனைத்து எதிர்க் கட்சி தலைவர்களும் கருத்து வெளியிட்டு இருக்கிறார் கள். இந்த அரசைப் பொறுத்த வரையிலும் அதை ஏற்றுக் கொள்கிறோம் என்பது மட்டுமல்ல; அதற்கு நாம் ஒன்று கூடி என்னென்ன வகைகளில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஒட்டுமொத்தமாக, ஒருமனதாக முடிவு செய்கிறோமோ அதைச் செயல்படுத்துவதற்கு இந்தத் தமிழக அரசு தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, விரைவில் நாம் அனைவரும் ஒன்றுகூடி நம்முடைய எண்ணங்களை வெளிப்படுத்துவதற்காக, உலக மக்களுக்கும் தெரிவதற்காக, குறிப்பாக இலங்கை அரசுக்குத் தெரிவதற்காக நாம் ஒருநாள் ஹர்த்தால் நடத்துவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.



1981 ஆகஸ்ட் 21] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அரசும், எதிர்க்கட்சிகளும் சேர்ந்து ஹர்த்தால் நடத்துவது என்பது இதுவரை நடந்திருக்கிறதா இல்லையா என்பது அல்ல; இது நடந்தாக வேண்டிய நேரம்; நடத்திக் காட்ட வேண் டிய நேரம் என்ற வகையில் இதை நான் இங்கே வெளியிட விரும்புகிறேன்.

மத்திய அரசுக்கு நாம் சொல்லுகின்ற கருத்துக்கள், இதைப் பற்றி எடுத்துச் சொல்லும் நியாயங்கள் புதிதானவை அல்ல என்பதும், பிரதம அமைச்சரவர்கள் மிகத் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதும் அதற்காக எந்தெந்த வழிமுறை களை உலக நியதிப்படி செய்ய முடியுமோ அப்படி அவர்கள் செய்ய விரும்புகிறார்கள் என்பதும், அதைச் செய்ய அவர்கள் துணிகிறார்கள் என்பதும் உண்மையாக இருக்கும், இருக்கிறது. என்றாலும் அவர்களுக்கும் ஒரு பக்கபலத்தை உண்டாக்கும் வகையில் இது ஏதோ காழ்ப்புணர்ச்சியின் விளைவாக இலங்கை மீது இந்திய அரசு நடவடிக்கை எடுக்க முற்படுகிறது என்ற அவப் பெயர் அதற்கு வராமல் தமிழ் மக்களுடைய, தமிழர்களுடைய உணர்வை, இந்த உணர்ச்சியை உலக மக்கள் புரிந்துகொண்டு எவ்வளவு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிந்து, இதன் விளைவு மத்திய அரசின் நடவடிக்கை என்கிற அளவிற்கு நாம் காரணமாக இருந்து நடத்திக் காட்ட வேண்டு மென்று விரும்புகின்ற காரணத்தால் தமிழக அரசின் சார்பாக உங்களை வேண்டிக் கொள்வது, தொடர்ச்சியான உங்களுடைய இந்தப் பேச்சுக்களிலே வந்த கருத்துக்கள் அத்தனையும் நீங்கள் எவ்வளவு நல்ல உணர்வோடு இருக்கிறீர்களோ அதைத் தொடர்ந்து இந்த அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கும் உங்க ளோடு இணைந்து எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கும் நீங்கள் உறு துணையாக இருக்க வேண்டுமென்ற வேண்டுகோளை முன் வைத்து இந்தத் தீர்மானத்தை முன்னவரவர்கள் முன்மொழிந் திருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கேள்விக்கே இடமில்லாமல், உங்கள் கருத்துக்களை வெளியிட்ட தற்காக நன்றி கூறி, இதை ஒருமித்து நிறைவேற்றித் தரும்படி ஏதோ மரபின்படி என்று வைத்துக் கொள்வோம் நான், பேரவைத் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, நான் வேண்டுகோள்விட்டவாறு நாம் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க, முதல்கட்டமாக நாம் அனைத்துக் கட்சி களும் ஒன்றுகூடி ஒரு ஹர்த்தாலை நடத்தி, கூட்டங்கள் நடத்தி, தீர்மானங்களை நிறைவேற்றிமத்திய அரசுக்குஅனுப்பி வைப்போம் என்பதையும் இங்கே எடுத்துச் சொல்லி, அதற்கும் ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கை வாழ் தமிழர்களுடைய கண்ணீருக்கு நம்முடைய கண்ணீரையும்காணிக்கையாக்கிஅந்தத் தமிழர்களுடைய வாழ்க்கை

வளம் பெறுவதற்கு நாம் ஒன்றுகூடி என்ன செய்ய வேண்டும் என்று முடிவெடுக்கிறோமோ அதை இந்த அரசு செய்யும் என்பதை மீண்டும் உறுதி கூறி அமைகிறேன். வணக்கம்.

[பிற்பகல் 12–50]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

"இலங்கையில் வாழும் நிலையான தமிழர், இந்தியர் வழி வந்த தமிழர், மலைத் தோட்டத் தமிழ் தொழிலாளர்கள் ஆகியோரின் உயிர்க்கும், உடைமைக்கும், உரிமைக்கும் ஆபத்து ஏற்பட்டிருப்பதையும், இனவெறியர்களால், கொலை, கொள்ளை கற்பழிப்பு, துன்புறுத்தல் போன்ற வன்முறைச் செயல்கள் நிகழ்வதையும், தக்க பாதுகாப்பு அளிக்காத நிலை நிலவுவதையும், அறிந்து மனிதாபிமான அடிப்படையில் இப்பேரவை மிக்க அதிர்ச்சியும், கவலையும் கொள்கிறது.

தமிழக மக்களின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தியப் பிரதமருக்கு தெரிவித்துள்ளதற்கு ஏற்ப, இந்திய அரசு தமது தூதுவரகத்தின் மூலமும், ஐ. நா. அவையின் மூலமும் மற்ற முறைகளின் மூலமும் இலங்கைவாழ் தமிழர்களுக்கு நியாயம் வழங்க முற்படுவதோடு, அவர்களுக்கு எல்லாவிதமான பாதுகாப்புகளையும் அளிக்க, தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்தப் பேரவை மாண்புமிகு இந்தியப் பிரதமரைக் கேட்டுக் கொள்கிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இனக் கலவரத்தில் படுகொலைக்கு ஆளானவர்களின் குடும்பங்களுக்கும், காயமுற்றும், பல தொல்லைகளுக்கு ஆளாகியும், அவதியுறும் மக்களுக்கும் இப்பேரவை தன் இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (22–8–1981) காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

*பின்னர் பேரவை பிற்பகல் 12–51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.*





## 5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

1. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 16–3–1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 267 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

2. வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையில் 20–3–1981 ஆம் தேதியன்று தோன்றி 26–3–1981 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பகுதி–II பிரிவு I-ன் பக்கம் 2-ல், வெளியான 11(1)/வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள்/164(2/81 ஆம் எண் அறிவிப்பில் திருத்தம் ஒன்று செய்வது குறித்து, வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 30–3–1981-ஆம் தேதியிடப் பெற்ற 326 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

3. பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விற்பனை மீது எந்த ஒரு வணிகரும் தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய மேல் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து 30–3–1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 325ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

4. திருநெல்வேலி மாவட்டம் புகளூரிலுள்ள தமிழ்நாடு பத்திரிகைக் காகிதம்—காகித நிறுவனத்திற்கு (தமிழ்நாடு காகித நிறுவனம்) இம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் விற்பனை செய்யும் கரும்புச்சக்கைகள் மீது செலுத்தவேண்டிய வரி மற்றும் இந்நிறுவனம் இம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகளுக்கு விற்பனை செய்துள்ள நீராவியின்மீது செலுத்த வேண்டிய வரி ஆகியவற்றிலிருந்து வரிவிலக்கு அளிப்பது குறித்து 17–3–1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 272 ஆம் எண் அரசாணை

யில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

5. சென்னை-19, காலடிப்பேட்டையிலுள்ள ஊனமுற்றோருக்கான கன்னியா குருகுலத்திற்கு வாங்கப்பெறும் காகிதத்தின்மீது செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து 8–10–1980ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்–சமய அறக் கட்டளைகள் துறையின் 82[illegible]-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

6. சென்னைப் பெருநகர் வளர்ச்சி மன்றத்தினால் அளிக்கப் பெற்றுள்ள இராதாகிருஷ்ணன் நகரப்பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பது குறித்து 4–10–1980 ஆம் தேதியிடப் பெற்ற வணிகவரிகள்–சமய அறக் கட்டளைகள் துறையின் 1299 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புத் திட்ட சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்1/1972)123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

7. 1972 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி விதிகளில் (மதுரை மாநகராட்சி மன்றத்தின் மேயர், துணை மேயர், மற்றும் ஏனைய உறுப்பினர்களுக்கு வழங்கப்பெறும் பயணப்படி, தினப்படி மற்றும் சில்லரைச் செலவினப் படிகளை முறைப் படுத்துதல்) சில திருத்தங்கள் செய்வது குறித்து 16–3–1981 ஆம் தேதியிடப்பெற்ற 401 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1971ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

8. சென்னைப் பெருநகர் வளர்ச்சி மன்றத்தினால் அளிக்கப் பெற்றுள்ள சென்னை மாநகரிலுள்ள அமீர்மகால் பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பது குறித்து 14–11–1980 ஆம் தேதியிடப்பெற்ற வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1492ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர் நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

1981 ஆகஸ்ட் 21]

9. தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 2–4–1981-ஆம் தேதியிட்டப்பெற்ற கல்வித் துறையின் 586-ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 29/1974) 57(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

10. சிறப்பு உரிமம் பெற்றுள்ள ஏனைய மாநிலத்தைச் சேர்ந்த பொதுப் பணியாற்றும் வண்டிகளுக்கு 1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் கீழ் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து 18–3–1981-ஆம் தேதியிடப் பெற்ற உள்துறையின் 602-ஆம் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

11. தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு பணிமுறை ஒழுங்கு விதி நூலின் பாகம் 1-ல் உள்ள 1954ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 7–1–1981-ஆம் தேதியிட்ட பணியாளர் அமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளரமைப்பு—எம்) துறையின் 24-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

12. தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு பணிமுறை ஒழுங்கு விதி நூலின் பாகம் 1-ல் உள்ள 1954ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 14–2–1981-ஆம் தேதியிடப் பெற்ற பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளரமைப்பு-எம்) துறையின் 134-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

13. தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு பணி ஒழுங்குமுறை நூலின் பாகம் 1-ல் உள்ள 1954ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்கழக விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 17–12–1980-ஆம் தேதியிடப்பெற்ற பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளரமைப்பு—எம்) துறையின் 1230ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

14. வருவாய்த்துறையில் 18–11–1980-ஆம் தேதியன்று தோன்றி 20–11–1980-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பகுதி-III பிரிவு 1 (6)ன் 1–4 பக்கங்களில் வெளியான எஸ்.ஆர்.ஓ.பி. 570 (?)/80-ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து. 31–3–1981 ஆம் தேதியிடப்பெற்ற வருவாய்த்துறையின் 779-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு பகுதிநேர கிராம அலுவலர்கள் பதவி நீக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 00/1951) 14(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

15. தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனத்தின் 1979–80-ஆம் ஆண்டிற்கான முதலாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1-1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

16. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 18–2–1981-ஆம் தேதியிடப்பெற்ற வருவாய்த்துறையின் 415 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1966-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 12/1966) 45(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

17. தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு பணிமுறை ஒழுங்கு விதி நூலின் பாகம் 1-ல் உள்ள 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்கழக விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 25–11–1980 ஆம் தேதியிடப்பெற்ற பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளரமைப்பு-எம்) துறையின் 415 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

18. தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு பணி ஒழுங்குமுறை நூலின் பாகம் 1ல் உள்ள 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைக்கழக விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 12–2–1981-ஆம் தேதியிடப்பெற்ற பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளரமைப்பு-எம்) துறையின் 124-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

19. தமிழ்நாடு 1962-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 18–9–1980-ஆம் தேதியிடப்பெற்ற வேளாண்மைத் ...





துறையின் 1740-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

20. தமிழ்நாடு மீன்வள வளர்ச்சி நிறுவனத்தின் 1977–78 ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை (ஆங்கிலத்தில்) [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 618-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

21. ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறையில் 26–4–1981 ஆம் தேதியன்று தோன்றி 10–5–1961-ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் துணை வெளியீட்டில் பகுதி V-ல் 58 ஆம் பக்கத்தில் வெளியான எஸ்.ஆர்.ஓ.ஏ-489/1961 ஆம் எண் அறிவிப்புடன் வெளியான "இயந்திரங்களை நிறுவுதல்—அனுமதி பெறுவதிலிருந்து விலக்களித்தல்" குறித்த விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 4–4–1981-ஆம் தேதியிடப்பெற்ற ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 627-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

22. தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு பணி ஒழுங்குமுறை நூலின் பாகம் III பிரிவு 12-ல் உள்ள தமிழ்நாடு வனவள சார்நிலைப் பணிக்கான சிறப்பு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 26–9–1980-ஆம் தேதியிடப்பெற்ற வனமீன் துறையின் 1268-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 309 பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

23. தமிழ்நாடு 1956-ஆம் ஆண்டு சிறு தொழில்—குடிசைத் தொழிலுக்கான கடன் மற்றும் உதவித்தொகை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 26–2–1981-ஆம் தேதியிடப் பெற்ற தொழில் துறையின் 253 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1922 ஆம் ஆண்டு தொழில்களுக்கான மாநில உதவிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1923) 19(டி) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

24. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வீரியம் நீக்கப்பெற்ற சாராவி, மெதில் ஆல்கஹால், வார்னிஸ் (பிரஞ்சு பாலிஷ்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 9–3–1981-ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் 545 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

25. பல்லவன் பொறியியல் கழகத்தின் 1980-ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

26. வருவாய்த் துறையின் 31—3—1965-ஆம் தேதியன்று தோன்றி, 31—3—1965-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் வெளியீட்டில் பகுதி 2ன் பிரிவு 1—ல் 588—593—ஆம் பக்கங்களில் வெளியான II-1. 1431/1965-ஆம் எண் அறிவிப்பில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல், இரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963] 73 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

27. வேளாண்மைத் துறையில் 12—5—1976-ஆம் தேதியன்று தோன்றி 2—6—1976-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் வெளியீட்டில் பகுதி 2-ன் பிரிவு 2-ல் 313-ஆம் பக்கத்தில் வெளியான II (2)/ஏஜி/278(1)/76ஆம் எண் அறிவிப்பில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23 1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

28. தமிழ்நாடு கனிவள நிறுவனத்தின் 1979—80-ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) [தமிழ்நாடு 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

29. மதுரை காந்தி கிராமத்திலுள்ள திருவாளர்கள் லஷ்மி சேவா சங்கம் உற்பத்தி செய்வது விற்பனை செய்யும் பொருட்களுக்கு அச்சங்கம் தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய வரி விதிகளிலிருந்து விலக்களிப்பது குறித்து 16—4—1981-ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 393-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

30. பெங்களூரில் நடைபெறும் குதிரைப்பந்தயத்திற்கு (1981-ஆம் ஆண்டு பெங்களூர் கோடைக்காலப் பந்தயம்) உதகைக் குதிரைப் பந்தயத்திடலுக்குள் பந்தயம் கட்டி விளையாடுவதைப் பொறுத்த வரையில், சில வரிகள் விதிப்பது சம்பந்தமாக வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறை



யின் 12—5—1981-ஆம் தேதியிடப்பெற்ற 501ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 20/1935) 10(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

31. நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் நடைபெறும் ஒவ்வொரு குதிரைப் பந்தயத்தைப் பொறுத்தவரையில் சில வரிகள் விதிக்கப்பட வேண்டியது குறித்து, வருவாய்த்துறையில் 5—4—1939-ஆம் தேதியன்று வெளியாகி 18—4—1939-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் 1, பக்கம் 455-ல் வெளியான 369ஆம் எண் அறிவிப்பை மாற்றியமைப்பது சம்பந்தமாக, வணிகவரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 24—4—1981-ஆம் தேதியிடப்பெற்ற 429-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

32. நாகர்கோவிலில் உள்ள உடல் ஊனமுற்றோர்க்கான சால்வேசன் ஆர்மி வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிலையத்தில் தயாரிக்கப்பட்ட பொருள்களை விற்பனை செய்வது சம்பந்தமாக மேற்படி நிலையம் செலுத்தத் தக்க வரியைப் பொறுத்த வரையில் விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 31—3—1981-ஆம் தேதியிடப்பெற்ற 327-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

33. வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 3—7—1980-ஆம் தேதியன்று வெளியாகி 3—7—1980-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் 2, பிரிவு-1, பக்கம் 2-ல் வெளியான II (1)/வ.வ.—ச.அ/366(சி)/80-ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து, வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 16—4—1981-ஆம் தேதியிடப்பெற்ற 392ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

34. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது விவர அட்டவணையில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 8—4—1981-ஆம் தேதியிடப்பெற்ற 365-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

35. தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து தொழிலாளர் நல—வேலைவாய்ப்புத்துறையின் 28—1—1981-ஆம் தேதியிடப் பெற்ற 202-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத் தின் [தமிழ்நாடு சட்டம் 36/1972) 41(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

36. வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 29—4—1980-ஆம் தேதியன்று தோன்றி 8-6—1980-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் 2, பிரிவு 2, பக்கம் 387-ல் வெளியான II (2)/வ.வ.ச.அ./2455/80 ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து மேற்படி துறையின் 27—4—1981-ஆம் தேதியிடப்பெற்ற 43276/VIII —2/79—13ஆம் எண் அரசுக் கடிதத்தில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு சிறு இனாம் நிலங்கள் (ஒழிப்பு- இரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1963 48(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

37. பொது சுகாதாரத் துறையில் 17—5—1938-ஆம் தேதி யன்று தோன்றி, 31—5—1938-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ் நாடு அரசிதழில் பாகம் 1—அ, பக்கங்கள் 383—384-ல் வெளி யான 394-ஆம் எண் அறிவிப்பில் வெளியிடப்பெற்ற மேற்படி துறையின் 17—5—1938-ஆம் தேதியிடப்பெற்ற 1824-ஆம் எண் அரசாணையில் அனுமதிக்கப்பட்டதில் சில மாற்றங்கள் செய்வது குறித்த 24—3—1979-ஆம் தேதியிடப்பெற்ற 28818/ 78/டி2-ஆம் எண். நடவடிக்கைக் குறிப்பில் வெளியான அறி விப்பு [தமிழ் நாடு 1971-ஆம் ஆண்டு நகர்ப்புற—நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

38. தமிழ்நாடு 1957-ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 24—1—1981-ஆம் தேதியிடப்பெற்ற 136-ஆம் எண் அரசாணை யில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955-ம் ஆண்டு திரைப் படங்கள் (ஒழுங்கு முறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

39. தமிழ்நாடு 1957-ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்கு முறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் (திரைப்படம்) 24—1—1981-ஆம் தேதியிடப்பெற்ற 138-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1955-ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].





40. வரைபட எண். 4, சென்னை புரசைவாக்கம் திட்டப் பிரிவின் 6, 9-ல் உள்ள பெரியமேடு பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்பளிப்புச் செய்வது குறித்து வீட்டுவசதி—நகர் வளர்ச்சித் துறையின் 22—9—1980-ஆம் தேதி யிடப்பெற்ற 1234-ஆம் எண் அரசாணையில் வெளியான அறி விப்பு [தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப் புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

41. தமிழ்நாடு 1957-ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்கு முறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறை (திரைப்படம்)யின் 26—1—1981-ஆம் தேதியிடப்பெற்ற 86-ஆம் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1955) 10(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

42. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்— சமய அறக்கட்டளைகள் துறையின் 18—3—1981-ஆம் தேதி யிடப்பெற்ற 276-ஆம் எண் அரசாணையில் வெளியான அறி விப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

43. சில திட்டங்களை வெளியிடுவது குறித்து, வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 29—4—1981-ஆம் தேதியிடப்பெற்ற 447-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

44. தமிழ்நாடு 1957-ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்கு முறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறை (திரைப்படம்)யின் 3—1—1981-ஆம் தேதியிடப்பெற்ற 18-ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1955) 10(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

45. தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப் பினர் ஓய்வூதிய விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் (பணியாளர் அமைப்பு—2) துறையின்

18-8-1980-ஆம் தேதியிட்டப்பெற்ற 1900-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1951-ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

46. தமிழ்நாடு 1964-ஆம் ஆண்டு சமய நிறுவனங்களின் சொத்துக்களை நிர்வகித்தல், பாதுகாத்தல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 23-10-1980-ஆம் தேதியிட்டப்பெற்ற 1088ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

47. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதி களில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 5-2-1981-ஆம் தேதியிடப்பெற்ற 238 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939-ஆம் ஆண்டு மோட்டார் வண் டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

48. அட்டவணையின் (3) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள சில பகுதிகளை உள்ளூர் திட்டப் பகுதியாக அறிவிப்பது குறித்து வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 25-9-1979 ஆம் தேதியிடப்பெற்ற 1856 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர, நாட்டுப் புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

49. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதி களில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 4-3-1981 ஆம் தேதியிடப் பெற்ற 502 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4-1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

50. ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையில் 7-7-1972 அன்று உருவாகி 20-9-1972 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம் 2-1, 39-54 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளி யிடப்பட்ட 4363 ஆம் எண். அறிவிப்பில் திருத்தங்கள் செய்வது குறித்து, வீட்டு வசதி, நகர வளர்ச்சித் துறையின் 8-1-1980 ஆம் தேதியிடப்பெற்ற 31 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு நகர, நாட்டுப்புற அமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண். 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



51. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியப் பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 29-12-1980 ஆம் தேதி யிடப் பெற்ற 1616 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு, அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

52. 4-4-1944 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அர சிதழின் பாகம் 1ஏ, பக்கம் 91-ல் (ஆங்கிலத்தில்) முன்னாள் கல்வி, பொது சுகாதாரத் துறையின் 142 ஆம் எண் அறி விப்பாக வெளியிடப் பெற்று, பொது சுகாதாரத் துறையின் 9-2-1944 ஆம் தேதியிடப் பெற்ற 384 ஆம் எண். அரசாணையில் திருமதிக்கப்பட்ட நுங்கம்பாக்கம் மையப் பகுதி நகரமைப்புத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்வது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 26-8-1980 ஆம் தேதியிடப் பெற்ற 1084 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர்ப்புற, நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

53. திருத்தணி உள்ளூர் திட்டப் பகுதி அறிவிப்பு குறித்து வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 27-10-1979 ஆம் தேதியிடப் பெற்ற 2004 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர, நாட்டுப்புற அமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

54. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியப் பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 6-12-1980 ஆம் தேதி யிடப் பெற்ற 1566 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

55. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியப் பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 12-7-1980 ஆம் தேதி யிடப் பெற்ற 894 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

56. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியப் பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 10–9–1980 ஆம் தேதியிடப் பெற்ற 1183 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

57. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, வணிக வரிகள், சமய அறக் கட்டளைகள் துறையின் 16–4–1981 ஆம் தேதி யிடப்பெற்ற 391 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

58. வருவாய்த் துறையில் 7–9–1971 ஆம் தேதியன்று வெளி யாகி 8–9–1971 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம் 2, பிரிவு 1ல் வெளியான II–13987 (ஆ)/1971 ஆம் எண். அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து, வருவாய்த் துறையின் 8–11–1979 ஆம் தேதியிடப் பெற்ற 2479 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நில குத்தகை உரிமைகள் பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 18 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

59. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள், சமய அறக் கட்டளைகள் துறையின் 14–4–1981 ஆம் தேதியிடப் பெற்ற 376 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

60. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறை (திரைப்படம்) யின் 30–1–1980 ஆம் தேதியிடப் பெற்ற 247ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்கு முறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

61. தென்னாற்காடு மாவட்டம் செஞ்சி வட்டத்திலுள்ள சில கிராமங்களை 'கிராமதான' கிராமங்களாக அறிவிப்பது சம்பந்தமாக, ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 6–6–1981 ஆம் தேதியிடப்பெற்ற 1064 ஆம் எண். அரசாணை





யில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூமி தான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

62. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை ஒரு வகை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 27–10–1980 ஆம் தேதியிடப்பெற்ற 2457 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

63. வருவாய்த் துறையில் 24–4–1964 ஆம் தேதியன்று வெளியாகி 1–6–1964 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் 2, பக்கம் 1109-ல் (ஆங்கிலத்தில்) வெளியான III/249 ஆம் எண். அறிவிப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள், சமய அறக்கட்டளைகள் துறையின் 636 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

64. வடாற்காடு மாவட்டம் திருவண்ணாமலை நகரத்தி லுள்ள அருள்மிகு அருணகிரி நாதர் (உற்சவ கட்டளை செலுத்தத்தக்க பங்குத் தொகை மற்றும் தணிக்கைக் கட்டணம் இவற்றிலிருந்து விலக்களிப்பது சம்பந்தமாக, வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 17–6–1981 ஆம் தேதி யிடப் பெற்ற 675 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

65. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியப் பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1617 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

66. வருவாய்த் துறையில் 17–12–1969 ஆம் தேதியன்று வெளியாகி, 19–12–1969 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்-2 பிரிவு2-ல் வெளியான II/1/5939/1969 ஆம் எண். அறிவிப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வருவாய்த் துறையின் 15–4–1980 ஆம் தேதி யிடப் பெற்ற 963 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நில

குத்தகை உரிமைகள் பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்( 10/1969) 18 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]

67. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது அட்டவணையில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள், சமய அறக்கட்டளைகள் துறையின் 26–3–1981 ஆம் தேதியிடப் பெற்ற 303 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

68. வணிக வரிகள், சமய அறக்கட்டளைகள் துறையில் 6–10–1980 ஆம் தேதியன்று வெளியாகி 29–10–1980 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் 2, பிரிவு 1. பக்கம் 84-ல் (ஆங்கிலத்தில்) வெளியான II (1)/வ.வ.ச.அ./ 631/80 ஆம் எண். அறிவிப்பை ரத்து செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 466 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

69. வணிக வரிகள், சமய அறக்கட்டளைகள் துறையில் 2–12–1980 ஆம் தேதியன்று வெளியாகி, 24–12–1980 ஆம் தேதியிடப் பெற்று தமிழ்நாடு அரசிதழின் பாகம் 2, பிரிவு 1, பக்கம் 99-ல் (ஆங்கிலத்தில்) வெளியான II (1)/வ.வ.ச.அ.[ 755/80ஆம் எண். அறிவிப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள், சமய அறக்கட்டளைகள் துறையின் 6–5–1981 ஆம் தேதியிடப் பெற்ற 472 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

70. கோயம்புத்தூர், குன்னூர் ஆகிய இடங்களில் உள்ள ஏல மையங்களில் விற்பனை செய்யப்படுகிற தேயிலையின் மீது, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வரியைக் குறைப்பது குறித்து, வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 15–5–1981 ஆம் தேதியிடப் பெற்ற 523 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

71. சென்னை நகர எல்லை மற்றும் அதன் 32 கிலோ மீட்டருக்குள் உள்ள துணை நகர்ப்புற பகுதிகள் ஆகிய இவற்றில் அறிவிக்கப்பட்ட பொருள்களை விற்பனை செய்தல் அல்லது கொள்முதல் செய்தலின் பேரில், தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரிச்(மேல் வரி) சட்டத்தின்கீழ் யாதொரு வணிகரும்



செலுத்தத்தக்க கூடுதல் மேல் வரியைப் பொறுத்த வரையில் விலக்களிப்பது குறித்து, வணிக வரிகள், சமய அறக்கட்டளைகள் துறையின் 9–1–1981 ஆம் தேதியிடப் பெற்ற 647 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959–ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

72. ஓசூர் வட்டத்தில் உள்ள புதிய நகரத்திற்குச் சில வருவாய் கிராமங்களை அறிவிப்பது குறித்து, வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 19–5–1979 ஆம் தேதியிடப் பெற்ற 782 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர, நாட்டுப் புற அமைப்புத்திட்டச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

73. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 1–6–1981 ஆம் தேதியிடப் பெற்ற 1298 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1980) 13 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

74. தமிழ்நாடு 1944 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வருவாய்த் துறையின் 29–5–1981 ஆம் தேதியிடப் பெற்ற 1259 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1943 ) 22 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

**(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், மற்றும் ஏனைய தாள்கள்.**

1. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 21–6–1980 முதல் 2?–8–1980 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு.

2. 1980–81 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு வரவு - செலவுத் திட்ட நடவடிக்கைகளில் பொருளாதாரம் நிதி நிலை வகைப் படு.

3. 1–4–1978 முதல் 31–3–1979 முடிய தமிழ்நாடு ஒழுக்க கண்காணிப்பு ஆணைக் குழுவின் 13 ஆவது ஆண்டறிக்கை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை 1981 ஆகஸ்ட், 22.

ஆவணி 6, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9·00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''குடிசெய்வார்க்கு இல்லை பருவம் ; மடிசெய்து
மானம் கருதக் கெடும்''.

தம் குடும்பத்தை, சமுதாயத்தை, நாட்டை உயர்த்துவதற்காகவும், முன்னேற்றம் அடையுமாறு செய்வதற்காகவும் பணிபுரிய விரும்புவோர்க்கு அந்தப் பணிகளையும் தொண்டுகளையும் செய்வதற்கு உரிய, ஏற்ற காலம் என ஒன்று இல்லை. இதற்கு ஏற்ற காலம் வரட்டும் என எண்ணிக் காத்துக் கொண்டு இருக்கத் தேவையில்லை. அவர்கள் உடனடியாகச் செயல்படுவதே வீட்டிற்கும், நாட்டிற்கும் நல்லது.

## 1. வினாக்கள் விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பம்புசெட்டுகளுக்கான சீரான மின் விநியோகம்.

*வினா எண். 1—திரு. சி. கோபால் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பம்பு செட்டுகளுக்கு சில இடங்களில் மின்சார ஓட்டம் ஒரே சீராக வருவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம். மின் தேவைக்கேற்ற உற்பத்தி இல்லாமையாலும், கிரிட் சப்ளை நன்றாக இயங்கும் வகையிலும் சில துணை மின் நிலையங்களின் பகுதிகளில் துண்டிப்பு ஏற்பட்டு மின் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டது.

[1981 ஆகஸ்ட் 22

(ஆ) விவசாய பம்பு செட்டுகளுக்கு துண்டிப்பு ஏற்படாமல் ஒரே சீரான மின் விநியோகம் ஏற்படுத்த அரசு 9—3—1981 முதல் சில கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்துள்ளது. குறித்த காலங்களில் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் விநியோகத்தில் எவ்வித தடங்கலும் ஏற்படாது பார்த்துக் கொள்ளுமாறு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**திரு. சி. கோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பல இடங்களில் பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் காலையில் 6 மணி நேரமும், மாலையிலே 6 மணி நேரமும் கொடுக்கப்பட்டு வருகிறது. வறட்சி ஏற்பட்டிருக்கின்ற சில பகுதிகளில் மின்சாரம் சீராக அந்த 6 மணி நேரமும் கிடைப்பதில்லை என்ற சூழ்நிலை இருக்கின்றது. நாள் முழுவதும் ஒரே சீராக மின்சாரம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே 12—7—1981 முதல் விவசாயத்திற்கு 2 தவணைகளில் மின்சாரம் தரப்படுகிறது. ஒரு நாளைக்கு 14 மணி நேரம் மின்சாரம் தரப்படுகிறது. பகலிலே 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் ஒரு பகுதியினருக்கு மின்சாரம் கிடைத்து வருகிறது. இது இப்போதுள்ள ஏற்பாடு அல்ல. சாதாரணமாக மின்வாரியம் எப்போதும் மேற்கொள்கிற ஏற்பாடாகும்.

**திரு. சி. கோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் தற்சமயம் இன்டஸ்டிரிக்காக கொடுப்பது போல—தொழிற்சாலைகளுக்கு விதிவிலக்குக் கொடுத்து 24 மணி நேரமும் மின்சாரம் கொடுப்பதுபோல—வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஒருநாள் முழுவதும் சீராக மின்சாரம் வழங்க ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு 24 மணி நேரமும் எல்லோருக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டும் என்றால் மின் உச்சத் தேவை அதிகரிக்கும். அதைச் சரிகட்ட மின்வாரியத்தால் இயலாது. தொழிற்சாலைகளுக்கு அப்படி அல்ல.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் மின்சாரம் சீராக வருவது இல்லை என்பது மட்டுமல்ல, மற்ற மாவட்டங்களை விட வடார்க்காடு மாவட்டத்தில் மின்சாரம் வோல்டேஜ் டிராப் அதிகமாக இருக்கிறது என்று தெரிய வருகிறது. அதை நிவர்த்தி செய்ய அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே. தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.



1981 ஆகஸ்ட் 22]

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க தலைவர் அவர்களே, பருவமழை தவறிய காரணத்தால் விவசாயக் கிணறுகளில் போதிய அளவுக்கு தண்ணீர் இல்லாத காரணத்தினால், பம்ப் செட்டுகளை முழுமையாகப் பயன்படுத்த இயலவில்லை. இந்த மாதிரி சூழ்நிலையில் மினிமம் சார்ஜ் என்று வசூலிக்கப்படுகின்ற மின்சாரக் கட்டணத்தை—கர்நாடக மாநிலத்தில் செய்ததைப் போல அந்த மின்சாரக் கட்டணத்தை, மினிமம் சார்ஜ் கட்டணத்தை ரத்து செய்துவிட்டு, எந்த அளவுக்கு மின்சாரத்தை உபயோகப்படுத்துகிறார்களோ அந்த அளவுக்கு மட்டும் கட்டணத்தை வசூலிக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, விவசாயத்தைப் பொறுத்தவரை ஆண்டு குறைந்த கட்டணம் எதுவும் இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, விவசாய பம்புசெட்டுகளுக்கு சீரான மின்சார விநியோகத்திற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொன்னார்கள், நன்றி. ஆனால் பில் தொகை உரிய காலத்தில் தெரிவிக்கப்படாத காரணத்தால் 1 பிளஸ் 1 என்ற வீதத்தில் கட்டணம் கட்டாத இடங்களில் மின் துண்டிப்பு செய்யப்பட்டிருக்கிறது. அதனால் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கு ஒரு நீக்குப்போக்கான ஏற்பாடு செய்து, மின்சாரம் வழங்க அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, திரு. அழகர்சாமி அவர்கள் அனுபவம் உள்ள உறுப்பினர், தனிக் கேள்வி போடவும்.

**திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்போது விவசாயத்திற்கு நாள் முழுவதும் மின்சாரம் சீராக வழங்கக்கூடிய அளவுக்கு மின்சாரம் இல்லை என்று சொன்னார்கள். வறட்சியால் பாதிக்கப்பட்ட பல இடங்களில் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் பம்பு செட்டுகளை கழற்றி வீடுகளிலே கொண்டு போய் வைத்திருக்கிறார்கள். ஆகவே, தண்ணீர் உள்ள இடங்களிலாவது 8 முதல் 10 மணி நேரத்திற்குத் தொடர்ந்து மின்சாரம் சீராக விநியோகம் செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இப்போது பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் தொடர்ந்து மின்சாரம் விநியோகம் செய்யப்படுகிறது. வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில் அதற்கு மேல் இறைக்க தண்ணீர் இருக்கும் என்று நம்ப முடியவில்லை. அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் சீராக மின்சாரம் வழங்க உத்தரவாதம் அளிக்கப்படும்.

[1981 ஆகஸ்ட் 22

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே, சில இடங்களில் மின்சாரம் சரியாக வராத காரணத்தால் மோட்டார் காயில் எரிந்து விடுகிறது. ஆகவே, அப்படி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எரிந்துவிடுகிற மோட்டார்களைப் புதுப்பிக்க அரசு கடன் அல்லது மானியம் அளித்து உதவி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மின்சாரம் தடைப்பட்டு மீண்டும் வருகிறபோது அத்தகைய நிலைமை ஏற்படுகிறது. அந்த பம்புசெட்டை இயக்குகிறவர்கள் அந்த மோட்டாரை நிறுத்தி மீண்டும் தொடங்கினால் மோட்டார் காயில் எரியும் நிலைமை வராது. அப்படிப்பட்ட மோட்டாரை புதுப்பிக்க கடனோ, மானியமோ வழங்குகிற அளவுக்கு மின்சார வாரியத்தின் நிதி நிலைமை இடம் தரவில்லை.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கு மின்சாரம் சீராக கிடைக்காத காரணத்தால் பம்பு செட்டுகள் பழுதடைகின்றன. இந்தக் குறையை நீக்குவதற்கு அரசு பொது இடங்களில் ஆழ் கிணறுகளைத் தோண்டி, 100 ஏக்கர், 200 ஏக்கா என்ற அடிப்படையில், மின்சாரம் மூலம் நீர் இறைக்கும் முறையை ஏற்படுத்த அரசு முன் வருமா ? அப்படிச் செய்தால் இந்தச் சிக்கல் விவசாயிகளிடமிருந்து நீங்கும். ஆகவே, அரசு அதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதன் பிறகு தண்ணீருக்கு உரிய கட்டணத்தைச் செலுத்த மாட்டார்கள்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, விவசாயிகளுக்குப் பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் மின்சாரம் கொடுப்பதாகச் சொன்னார்கள், நன்றி. ஆனால் விவசாயிகள் இரவில் பாம்பு போன்ற விஷ ஜந்துக்கள் மத்தியில் சென்று நீர் இறைக்க முடியாமல் இருப்பதால் இந்த 14 மணி நேரமும் பகலிலே மின்சாரம் வழங்கி, விவசாயிகளுக்கு உதவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பகலில் மொத்தம் 12 மணி நேரம்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 14 மணி நேரம் பகலுக்கு கேட்கிறார்கள் (சிரிப்பு). அது எப்படி சாத்தியம் என்று தெரியவில்லை. இருந்தாலும் பகல் நேரத்தில் உச்ச தேவை அதிகமாக இருக்கிற காரணத்தால் அதைச் செய்ய இயலாது.



1981 ஆகஸ்ட் 22]

காஞ்சிபுரத்தில் அரசு அலுவலகங்களுக்கான மின் இணைப்பு துண்டிப்பு.

*வினா எண். 2—திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1980 ஆம் வருடம் அக்டோபர் மாதத்தில் சுமார் ஒரு வார காலம் செங்கல்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரம் தாலூகா கட்டட காம்பவுண்டிலுள்ள எட்டு அரசு அலுவலகங்களுக்கு மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த அலுவலகங்கள் ?

(இ) மின் துண்டிப்பிற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம் தீ அணைப்பு பணி அலுவலர் பெயரில் கீழ்க்கண்ட ஏழு அரசு அலுவலகக் கட்டடங்களுக்கு மின் விசை கொடுக்கப்பட்டிருந்த இணைப்பு எண். 1239, 1980 அக்டோபரில் துண்டிக்கப்பட்டது :—

(1) தீ அணைப்பு பணிமனை.

(2) தாலூகா சப்ளை அதிகாரி அலுவலகம்.

(3) வட்ட ஆய்வாளர், காவல் அலுவலகம், காஞ்சிபுரம்.

(4) அஞ்சல் அலுவலகம்.

(5) பொதுப்பணித்துறை பிரிவு அலுவலகம்.

(6) தொழிற் துறை ஆய்வாளர் அலுவலகம்.

(7) சாவடி.

(இ) மின் கட்டணத் தொகை ரூ. 10,391.05 சட்டப்படாமல் இருந்ததால் மின் இணைப்புத் துண்டிப்பதற்கான முன் அறிவிப்புகள் கொடுக்கப்பட்டு, பின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

பேரம்பாக்கம் கிராமத்தில் துணை மின்நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 3—திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவள்ளூர் வட்டம், பேரம்பாக்கம் கிராமத்தில் 110 கே. வி. மின் துணை நிலையம் அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) எவ்வளவு காலத்தில் முடியும் ?

(இ) அந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) திருவள்ளூர் வட்டம், பேரம்பாக்கம் கிராமத்தில் 33 கே. வி. துணை மின் நிலையம் அமைக்க நிலத்தை கையகப்படுத்தும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) சுமார் ஓராண்டு காலத்தில் முடிக்க இயலும்.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு சுமார் ரூ. 35 இலட்சங்கள் ஆகும்.

[முற்பகல் 9-10]

திரு. இரா. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, திருவள்ளூர் வட்டம், பேரம்பாக்கம் கிராமத்தில் 110 கே. வி. துணை மின் நிலையம் அமைப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது 33 கே. வி. துணை மின் நிலையம் தான் அமைக்கப்பட்டு வருவதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஏன் 110 கே. வி. துணை மின் நிலையம் அமைக்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் இந்நிலையத்திற்காக நிலம் கொடுத்தவர்களுக்கு உதவுகின்ற வகையிலே ஒரு குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்ற வகையிலே வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, 110 கே. வி. துணை மின் நிலையம் அங்கே அமைக்க வேண்டிய அளவுக்கு அங்கே தேவையில்லை என்ற தொழில் நுட்ப கருத்தின் காரணமாகத்தான் 33 கே. வி. துணை மின் நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் அந்தப் பகுதியிலே தொழிற்சாலைகள் போன்றவற்றின் தேவைகள் அதிகமாக வளரும்போது அந்த மின் நிலையம் தானாகவே 110 கே. வி. என்ற அளவுக்கு வரும். ஆகவே இவ்வாறு 33 கே. வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு தொழில் நுட்ப காரணங்களைத் தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை.

## மதுரையில் தொழிற்கூடங்கள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 4—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரையில் தொழில் கூடங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் செயலுக்கு வரும் ?

(இ) எவ்வளவு தொகை செலவில் தொழில் கூடங்கள் அமைக்கப்படும் ?

(ஈ) தொழில் கூடங்கள் விவரம் யாது ?





மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மதுரை தொழிற்பேட்டையில் புதியதாக 4 தொழிற்கூடங்கள் கட்ட, தவணை முறையில் கொடுக்க முடிவு செய்து, அதற்கான கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) செப்டம்பர் 1981-ல் தொழிற்கூடங்களின் கட்டுமான வேலைகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) சுமார் ரூ. 9 இலட்சம் செலவில் தொழிற்கூடங்கள் அமைக்கப்படும்.

(ஈ) ஒவ்வொரு தொழிற்கூடத்தின் அளவும் 100' × 40' ஆகும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கார்ப்பரேஷனில் ஜனத்தொகை அதிகமாக இருப்பதால் இந்தத் தொழிற்கூடங்கள் அங்கே உள்ள மக்களுக்கு மட்டும் பிரயோசனம் அளிப்பதாக இருக்கும். ஆகவே மதுரைப் புறநகர் பகுதிகளிலேயும் தொழிற்கூடங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா ? அதற்குரிய செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரத்தில் மட்டுமல்லாது மதுரைப் புறநகர் பகுதிகளும் பயன் அடைகிற வகையில் புதியதாக திண்டுக்கல்லில் 24 தொழிற்கூடங்களும் மதுரையை ஒட்டி இருக்கின்ற திருமங்கலத்திலுள்ள கப்பலூரில் 6 தொழிற்கூடங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கப்பலூரில் உள்ள எஸ்டேட்டில் 3 ஏக்கர் தொழிற்கூடங்களுக்குரிய நிலங்கள் இன்னும் யாருக்கும் கொடுக்கப்படாமல் இருக்கின்றது. அதைப் பற்றி அமைச்சரவர்கள் விசாரணை செய்து அந்த 3 ஏக்கர் நிலத்திற்கும் எத்தனை பேர் மனு செய்திருக்கிறார்கள் என்பதையும் என்ன காரணத்தால் அளிக்கப்படாமல் இருக்கின்றது என்பதையும் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் என்னிடத்திலே தற்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை ஏற்று தொடர்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே எனது தொகுதியிலே உள்ள செம்பட்டியிலே தொழிற்கூடம் அமைக்கின்ற சாத்தியக்கூறுகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பணி எந்த நிலையில் உள்ளது ?

[1981 ஆகஸ்ட் 22

குழந்தைகள் நோஞ்சான்களாக இருக்கின்றன. அதனால் பெண் களுக்கும் புற்று நோய் போன்ற நோய்கள் வருவதாக சொல் கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட பால்பவுடர் போன்ற குழந்தை உணவுகளை தயாரிக்கும்போது, 'தாய்ப்பால் உணவு தான் குழந்தைகளின் உடல்நலத்திற்கு சிறந்தது' என்று அந்த டின்களில் அச்சடித்து விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசீலிக்கும்.

**திரு. இரா. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் சார்பில் இன் றைக்கு எவ்வளவு பால் பவுடர் உற்பத்தி செய்கிறார்கள்? அதிலே தன்னிறைவு அடைந்திருக்கிறோமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களைத் தனிக் கேள்வி போடுமாறு உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. து. புருஷோத்தமன் :** பேரவைத் தலைவர் அவர் களே, தமிழ்நாட்டில் உள்ள ஏழைத்தாய்மார்கள் தொடர்ந்து தங்களுடைய குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்க முடி யாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் வாங்கு வதற்கு ஏற்ற முறையில், விலையைக் குறைத்து விற்பதற்கு பால் பவுடர் உற்பத்தி செய்யும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர் களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்று கருதுகிறேன்.

### காடுகளில் இறந்துபோகும் யானைகளைப் பரிசோதனை செய்யும் முறை.

*வினா எண். 6—**திரு. கு. ரமணி :** மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி பாரா—

(அ) காடுகளில் யானைகள் சுடப்பட்டால் அல்லது செத் விட்டால் அதை மிருக வைத்திய நிபுணர்கள் சட்டப்ப பரிசோதனை செய்யும் வழக்கமுண்டா?

(ஆ) ஆம் எனில், எதற்காக அந்தப் பரிசோதனை செய்யப்படுகிறது?

(இ) பரிசோதனை அறிக்கைகள் யாருக்கு அனுப்பப்படுகின்றன?

(ஈ) அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) ஆம்.

(ஆ) இறந்ததற்கான காரணத்தை அறிந்துகொள்வதற்காக பரிசோதனை செய்யப்படுகிறது.

(இ) அந்தந்த மாவட்ட வன அலுவலர், மண்டல வனப் பாதுகாவலர், கோவை தலைமை வனவிலங்கு பாதுகாவலர் ஆகியோர்கட்கு அனுப்பப்படுகிறது.

(ஈ) யானைகள் சுடப்பட்டாலோ அல்லது சுடப்பட்டு இறந்தாலோ சம்பந்தப்பட்ட குற்றவாளிகளின்மீது வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தின்கீழ் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

**திரு. சி. கோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் தமிழ்நாட்டைச் சுற்றியிருக்கிற காடுகளில் எத்தனை யானைகள் சுடப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால், தகவல் சேகரித்துத் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யானைகள் எத்தனை சுட்டுக் கொல்லப்பட்டன என்பதற்கெல்லாம் கணக்குச் சொல்ல முடியுமா? துணைக் கேள்விகளை மூலக் கேள்வியோடு ஒட்டிய படி கேட்க வேண்டும்.

[முற்பகல் 9-20]

**திரு. மு. அம்பிகாபதி :** ' யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன் என்பார்கள். அதேபோல் யானைகளைச் சுடுகிறவர்கள் மீது எத்தகைய கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா?

[1981 ஆகஸ்ட் 22

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** யானையைச் சுடுகிறவர்கள்மீது வன விலங்கு பாதுகாப்புச் சட்டப்படி, விதி 51-ன் கீழ் ஆறு மாதத்திற்குக் குறையாது ஆறு ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனையும் ரூ. 500 அபராதமும் விதிக்கப்பட வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் நீதிமன்றத்தில் இருக்கிற நீதிபதிகளின் உள்ளம் எப்படி இருக்கிறதோ அப்படி தண்டனை தரப்படுகிறது.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** பத்தாண்டுகளுக்கு முன்னால் இருந்ததை விட தற்போது தமிழகத்தில் உள்ள காடுகளில் இருக்கிற யானைகளின் எண்ணிக்கை குறைந்திருப்பதாகச் சொல்கிறார்களே, அது உண்மையா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** இந்த வினாவிற்கான விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

**திரு. என். பழனிவேல் :** தமிழகத்தில் உள்ள காடுகளில் யானைகள் மற்றும் தேசிய மிருகங்கள் எவ்வளவு உள்ளன என்ற கணக்கை அரசு அறிவிகக முடியுமா? அதனால் அரசாங்கத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு செலவாகிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தனியாகக் கேள்வி போட்டால் தகவலைத் திரட்டித் தர இயலும்.

திருஉத்திரகோசமங்கையிலுள்ள அருள்மிகு மங்களநாத சுவாமி ஆலயம்.

* **வினா எண். 7—திரு. வ. சத்தியமூர்த்தி :** மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருஉத்திரகோசமங்கையில் உள்ள கோவிலில் உள்ள நடராஜர் சிலை ' மரகதத்தால் ' ஆனது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அந்த சிலையின் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) இந்த கோவிலின் திருப்பணிக்கு அரசு நிதி உதவி அளிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) & (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், திருஉத்திரகோசமங்கை அருள்மிகு மங்களநாதசுவாமி ஆலயத்திலுள்ள நடராஜர் சிலை விசேஷமான



1981 ஆகஸ்ட் 22]

கல்லில் செய்திருப்பதாகவும், அது மரகதம் என்றும் கூறப்படுகிறது. கருவறையில் உள்ளதால் அச்சிலையை மதிப்பிட முடியாத காரணத்தால், சரியான மதிப்பீட்டைத் தெரிவிக்க இயலாது.

(இ) மேற்கண்ட ஆலயத் திருப்பணிக்கு அரசு மானியமாக ரூ. 5,30,000 மும், ஆணையர் பொதுநல நிதியிலிருந்து ரூ. 25,000 மும் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. வ. சத்தியமூர்த்தி :** தலைவர் அவர்களே, திருஉத்திரகோசமங்கையிலுள்ள நடராஜர் சிலை பல கோடி ரூபாய் மதிப்புள்ள கல்லால் செய்யப்பட்டிருக்கிறது என்று அந்தப் பகுதி மக்களால் சொல்லப்படுகிறது. அது பாதுகாப்பில்லாத பழைய கட்டடத்தின் நடுவில் இருக்கிற தமிழகம் முழுவதும் பலயிடங்களில் பல ஆண்டுகளாக சிலைகள் திருட்டுப் போவதை எண்ணும் போது அதற்கு ஏதேனும் ஆபத்து வந்துவிடாத வகையில் தக்க பாதுகாப்பான ஒரு இடத்தில் அந்தச் சிலையை வைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** நான் எனது பதிலில் கூறியிருக்கிறபடி அது வணக்கத்திற்குரிய கருவறைச் சிலையாக இருந்து வருகிறது. ஆகவே அதை அந்தயிடத்திலிருந்து அப்புறப்படுத்தி சரியான ஒரு பாதுகாப்பான இடத்தில் மற்ற வணக்கத்தில் இல்லாத சிலைகளைப்போல் அதை வைக்க இயலாது. இருந்தாலும் அந்தச் சிலையினுடைய பெருமதிப்பையொட்டியும் அதைப்பற்றிய மதிப்பீடுகள் அந்தப் பகுதியில் அதிகமாகச் சொல்லப்படுகிற காரணத்தாலும் அந்தச் சிலை மாத்திரமல்ல, பொதுவாக அந்த ஆலயத்திலே நல்ல பாதுகாப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. வ. சத்தியமூர்த்தி :** திருஉத்திரகோசமங்கை கோவில் கடந்த பல ஆண்டுகளாக 1959-ம் ஆண்டிலிருந்து புதுப்பிக்கப்படாமல், திருப்பணி நிறைவுபெறாமல் இருக்கிறது. அதற்கு பல லட்சக்கணக்கான ரூபாய் தேவைப்படும் என்று தெரிகிறது, அரசாங்கம் அளித்துள்ள ஐந்து இலட்சம் ரூபாயிலிருந்து கூடுதலான தொகையை அளித்து விரைவில் அந்தக் கோவிலின் திருப்பணி முடிவுபெற ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** அது ஒரு மிகத் தொன்மையான கோவில். மாணிக்கவாசகரால் பாடப்பெற்ற கோவில். ஆகவே அதை நல்ல கல் வேலைகளால் பழங்கால முறைப்படி புதுப்பிக்க வேண்டுமென்று முன்னால் இருந்த இராமநாதபுரம் சேதுபதி மன்னர் அவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டு முதல் கட்டமாக சுமார் ரூ. 13,17,000-க்கு திட்டமிடப்பட்டு அது ரூ. 10,76,000-க்கு முடிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது கட்டமாக ரூ. 14,86,000-க்கு திட்டங்கள் தரப்பட்டிருக்கின்றன. அரசின் உதவியும் கேட்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம், அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று ஆணையருக்கு அறிவுறுத்தியிருக்கிறது.

[1981 ஆகஸ்ட் 22

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருஉத்திரகோசமங்கையிலுள்ள அந்த நடராஜர் விக்கிரமானது பிரசித்தி பெற்ற ஒரு விக்கிரகம்; அது விலை மதிக்க முடியாத பச்சைக் கல்லினால் செய்யப்பட்டது என்பது அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்குத் தெரியும். அதற்கு மதிப்பு இவ்வளவு என்று சொல்லி, சிலை திருடுபவர்களுக்கு 'குளு' கொடுப்பதற்கு உதவியாக இருக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்வதோடு, அது வருஷம் முழுவதும் சந்தனத்தினால் பூசப்பட்டு, ஆண்டுக்கு ஒருமுறைதான் மக்களுக்குத் தரிசனம் கொடுக்கின்ற வகையில் உள்ளது என்று சொல்கிறார்கள். ஆகவே மிகப் பெரும் மதிப்புள்ள இந்தச் சிலையை மிகவும் அதிகமான பாதுகாப்போடு வைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலயத்திற்கு நான் நேரிலே சென்றிருந்தேன். அப்போது நம்முடைய கடலாடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் வந்திருந்தார்கள். அந்தச் சிலையைப் பற்றி விவரம் தெரிந்துகொள்ள முயற்சித் தோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் சொன்னதுபோல், அந்த விக்கிரகம் ஆண்டு முழுவதும் சந்தனக் காப்பு செய்யப்பட்டு, சந்தனம் பூசப்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு ஒரு முறைதான் அந்த சந்தனம் எடுக்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். அன்றைக்கு நம் அதிகாரிகள் சென்று, அதை ஓரளவிற்காவது மதிப்பிட இயலுமா என்று அவர்களுக்கு நாங்கள் அறிவுறுத்திச் சொல்லியிருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், அதை மதிப்பீடு செய்து, அதற்குப் பிறகு தக்க பாதுகாப்புகளை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும்.

### முண்டந்துறை, நாங்குநேரி, அம்பாசமுத்திரம் ரேஞ்சுகளில் கால்நடைகள் மேய்ச்சலுக்கான அனுமதி.

* வினா எண். 8—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம் முண்டந்துறை ரேஞ்ச், நாங்குநேரி ரேஞ்ச், அம்பாசமுத்திரம் ரேஞ்ச் பகுதிகள் கால் நடைகளின் மேய்ச்சலுக்கு விடப்படுகின்றனவா ?

(ஆ) 1977–1980 முடிய உள்ள ஆண்டுகளில் அவைகளின் மூலம் அரசுக்கு கிடைத்த வருவாய் எவ்வளவு ?



1981 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 1977–78-ல் வருவாய் | .. | .. | 4,269 |
| 1978–79-ல் வருவாய் .. | .. | .. | 5,772 |
| 1979–80-ல் வருவாய் .. | .. | .. | 8,771 |
| | | ரூ. | 18,812.00 |

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1977–78-லே இருப்பதைவிட கடைசி வருஷத்திலே அதிகமான வருமானம் வருகிறதென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஏற்கெனவே, 1977–78லே வசூலித் ததை விட, கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது உண்மையா ? அதோடு மாத்திரமல்லாமல், அந்த வட்டாரத்திலே மாடுகளைப் பொறுத்த வரையில், அதிகமாக வசிக்கின்ற இன்னும் சொல்லப் போனால், மின்சாரத் துறைத் தொழிலாளர்கள் அங்கே குடி யிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மாடுகளை வளர்த்து பால் எடுக்கிறார்கள். அவர்களுக்குத் தனியாக இடம் வேண்டுமென்று கோரிக்கை ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா ? அதைப் பற்றி அரசு அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977–78 ஆம் ஆண்டில் இருந்த கட்டணம், ரூ. 1, ரூ. 2, ரூ. 0·50 என்று மூன்று பிரிவுகளாக இருந்தது, அதற்கு அடுத்த ஆண்டிலிருந்து ரூ. 2, ரூ. 4, ரூ. 1 என்று கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள். அதை யொட்டித் தான் அங்கே கட்டண வசூல் அதிகமாகியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, அங்கே மின் துறை யில் பணியாற்றுகின்றவர்கள், மாடுகளை வளர்த்துக் கொண் டிருக்கிறார்கள். அதற்காக தனி இடம் ஒதுக்க வேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை வந்திருக்கிறதா என்று கேட்கிறார்கள். அப்படி அரசுக்கு கோரிக்கை வரவில்லை. மேலும், அந்த இடத் திலே மின்துறைப் பணியாளர்கள் தங்களுக்காக வேண்டுமானால் மாடுகளை வைத்துக் கொள்ளலாமே தவிர, வியாபாரத்திற்காக மாடுகளை வைத்துக் கொண்டு, அங்கே முண்டந்துரை வன சரணாலயம் இருப்பதால், அங்கே அதிகமான மாடுகள் மேய் வதற்கான சூழ்நிலையை உருவாக்கக் கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் மின் துறைப் பணியாளர்களுக்கு தெரி விக்க வேண்டுமென்று அரசு சொல்லியிருக்கிறது.

[1981 ஆகஸ்ட் 22

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முண்டந்துறை அரங்கில் அங்கே பாபநாசம் மின் துறைத் தொழிலாளர்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே, சில மாதங்களுக்கு முன்னால் அங்கே மாடுகள் மேய்க்கும் விஷயமாக, மின்துறை ஊழியர்களுக்கும், காட்டிலாகா ஊழியர்களுக்கும் இடையே அடிதடி ஏற்பட்டு, அதன் விளைவாக, பாபநாசம் மின் நிலையமே இரண்டு நாட்கள் வேலை செய்யவில்லை. அங்கே அடிக்கடி இதுபோன்று சிக்கலாகிக் கொண்டிருக்கிறது. சொந்த உபயோகத்திற்கு ஆடுமாடுகளை வைத்திருப்பவர்களைக்கூட, அங்கேயுள்ள காட்டிலாகா அதிகாரிகள் தடை செய்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அதை அமைச்சர் அவர்கள் நேரில் விசாரித்து உரிய நடவடிக்கைகள் எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி நேரிலேயே விசாரித்துத்தான் நான் இங்கே பதிலை அளித்திருக்கிறேன். மின் துறையில் பணியாற்றுகிறவர்கள் காட்டுப் பகுதியில் ஒதுக்கப்பட்ட இடத்தைக் குடியிருப்புகளாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி முழுவதும் "முண்டந்துறை டைகர் சாங்சுவரி"—புலிகள் சரணாலயமாக மாற்றப்பட்டிருக்கிறது: அங்கிருக்கும் மின் பணியாளர்கள் தங்களுடைய உபயோகத்திற்காக ஒன்றிரண்டு மாடுகளை வளர்த்துக் கொண்டால் அந்தப் பிரச்சினை எழாது. வேறு ஒரு மின் திட்டம் அங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பதால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஆகவே, அந்தப் பணியாளர்கள் மாடுகள் வைத்து பால் வியாபாரம் செய்கிறவர்களாக மாறி ஒரு தொழிலாகவே செய்து கொண்டு வருகிறார்கள். அதன் விளைவாக நூற்றுக்கணக்கான மாடுகள் வளர்க்கப்படுகின்றன. அப்படி வளர்க்கப்படும்போது அந்த மாடுகளுக்கும் மேய்ச்சல் நிலம் வேண்டுமென்று கேட்கிறார்கள். சொந்த உபயோகத்திற்காக மாடுகள் வைத்திருப்பவர்கள் தடுக்கப்பட மாட்டார்கள். புதிதாக மாடு வைத்து வியாபாரம் செய்கிற துறையில் ஈடுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற நிலையில் அங்கே இருக்கிற வனத் துறை தெளிவாக மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவித்திருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பால் வியாபாரத்திற்காக மாடு வைத்துக் கொள்ளக் கூடாது என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையில் அங்கே கறக்கக்கூடிய பால் அடுத்த பகுதிக்(



1981 ஆகஸ்ட் 22]

இருப்பவர்களுக்குத்தான் போவதில்லை. அங்கே பக்கத்தில் இருப்பவர்களுக்குத்தான் கொடுக்கிறார்கள். புதிதாக மாடுகள் வாங்கப்படவும் இல்லை. தற்போது மேய்ச்சல் காடுகள் வெகு தூரத்தில் இருக்கின்றன. ஆற்றில் தண்ணீர் வந்துவிட்டால் மாடுகளின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுகிறது. ஆகவே, பக்கத்திலேயே மேய்ச்சலுக்கான நிலத்தை ஒதுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, முண்டந்துறை பகுதியில் 2,829 ஹெக்டேர் பரப்புள்ள காடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது அதிகமாக மாடுகளை வளர்க்கும் நிலையில் இருக்கிற இடத்தை எல்லாம் மாடுகள் மேய்வதற்கு ஏற்ற இடமாக மாற்றித் தரவேண்டுமென்ற கருத்தை இந்தியா முழுவதும் ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலையில் இந்திய அரசாங்கம் கடுமையான தடைகளை விதித்திருக்கிறது. அது அவசியமான தடையும் கூட. ஆகவே, அப்படிப்பட்ட ஆலோசனைகளைப் பரிசீலிக்க இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## நீர் ஊற்று இன்மை காரணமாகப் பயன்படுத்தப்படாமல் உள்ள கிணறுகள்.

* வினா எண். 9. திருமதி. தா. இராசாம்பாள் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ள சுமார் 2·5 இலட்சம் பம்பு செட்டுகள், கிணறுகள், பாறையாகி அல்லது நீர் ஊற்று இன்றி இருப்பதால் பயன்படுத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அந்தக் கிணறுகளுக்கு நீர் ஊற்றுப் பெருகவும் பம்பு செட்டுகளை இயக்குவதற்கும் வசதியாக நீர் கசிவுக்குட்டைகள் மற்றும் துணை ஏரிகள் கட்டுவதற்கு ஒரு வரைவுத் திட்டத்தை (Crash Programme) அமுல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சா. காளிமுத்து : (அ) மின் இணைப்புப் பெற்ற கிணறுகள் பாறையாகி அல்லது நீர் ஊற்று இன்றி இருப்பதால் பயன்படுத்தப்படாமல் உள்ள கிணறுகளின் புள்ளி விவரம் வேளாண்மைப் பொறியியல் துறையில் பராமரிக்கப்படவில்லை.

(ஆ) (1) தர்மபுரி மாவட்டத்தில், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1981-82 ஆம் ஆண்டில் முப்பது நீர் கசிவுக் குட்டைகள் தர்மபுரி வளர்ச்சிக் கழகத் தலைவரால் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே

மேற்கொள்ளப்பட்ட 22 நீர் கசிவுக் குட்டைகள் இவ்வாண்டில் பூர்த்தி செய்யவும் அவரால் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக இரண்டு உப கோட்டங்கள் பிரத்தியேகமாகச் செயல்படுகின்றன.

(2) மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுத்த பகுதிகளில் கசிவு நீர்க் குட்டைகள் கட்டப்பட்டு வருகின்றன. 1980–81 ஆம் ஆண்டு வரை 1,228 நீர் கசிவுக் குட்டைகள் பெரும்பாலும் இராமநாதபுரம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ளன.

(3) இவை தவிர ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் அவர்களால் பண ஒதுக்கீடு செய்யப்பட்டு நீர்க்கசிவுக் குட்டைகள் கட்டப்படுகின்றன.

**திருமதி. தா. இராசாம்பாள் :** வறட்சி நிவாரணத்தின்கீழ் தற்போது கசிவு நீர்க் குட்டைகள், துணை ஏரிகள் அமைக்கப்படுவது போல் கிராஷ் புரோகிராம் திட்டத்தின்கீழ் வரைவு திட்டம் ஒன்று தயாரித்து ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்து ரெகுலராக அந்தத் திட்டத்தை எடுத்துச் செய்ய அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அப்படிப்பட்ட திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. என். வரதராஜன் :** ஏற்கனவே பல லட்சக் கணக்கான ரூபாய் செலவு செய்து சமுதாயக் கிணறுகள் என்று உருவாக்கி இருக்கிறோம். பம்ப் செட்டுகள் இருக்கின்றன. நடைமுறையில் விவசாய அபிவிருத்திக்கு அப்படிப்பட்ட கிணறுகளை உபயோகப்படுத்த வேளாண்மைத் துறை முன்வருமா ?

**மாண்புமிகு திரு. காளிமுத்து :** அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திருமதி. தா. இராசாம்பாள் :** துணைத் தலைவர் அவர்களே, தற்போது வறட்சியின் காரணமாக விவசாயிகளின் கிணறுகள் அனைத்தும் வறண்டுபோய் மிகவும் மோசமான நிலையில் விவசாயம் செய்வதற்கு இடமில்லாமல் இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு இந்த அரசு தொடர்ந்து கிராஷ் புரோகிராம் என்ற திட்டத்தை எடுத்து அங்கே கசிவு நீர்க் குட்டைகளையும் துணை ஏரிகளையும் அமைத்து விவசாயிகளுக்குத் துணையாக இருக்க அரசு முன்வருமா என்பதை மீண்டும் கேட்டு அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அதற்காகத்தான் வறட்சியையொட்டி போடப்பட்டதிட்டம், மண் வளப் பாதுகாப்புத் திட்டம், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம், போன்றவைகளில் அத்தகைய திட்டங்கள் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.



**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தமிழகத்திலே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல் ஏராளமான விவசாயிகளின் கிணறுகளிலே தண்ணீர் இல்லாமல் அந்தக் குடும்பங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட தண்ணீர் வறண்டிருக்கின்ற, பாறையாக இருக்கின்ற கிணறுகளை ஆழப்படுத்தியாவது அந்தக் குடும்பங்களை வாழ வைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** பொதுவாக அப்படிப்பட்ட திட்டத்தை ஏற்படுத்த இயலாது. ஆனால் குறிப்பிட்ட சில பகுதிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதைப் பரிசீலிக்கலாம்.

**திருமதி. தா. இராசாம்பாள் :** வறட்சிப் பணிகள் 30–9–1981 உடன் முடிவடைய வேண்டும் என்று அரசு உத்திரவிட்டுள்ளது என்று தெரிகிறது. வறட்சி நீடித்து இருப்பதால் 31–12–1981 வரையில் அதை நீடிக்கவும் நிதி ஒதுக்கீடு இல்லை என்ற நிலைமை இருப்பதால் போதுமான நிதியை ஒதுக்கியும் வறட்சி இருக்கிற வரையில் நிவாரணம் அளிக்கவும் வேலைவாய்ப்பு அளிக்கவும் அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இது மூலக் கேள்விக்குத் தொடர்பு அற்றது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** துணைத் தலைவர் அவர்களே, நீர்வசதியற்ற கிணறுகளுக்கு தூரத்திலிருந்து மேக்னடிக் பவர் மூலமாக நீர் கொண்டுவரமுடியுமென்று ஹைதராபாத்திலே உள்ள ஜியோபிசிஸ்ட்ஸ் நிறுவனம் கண்டுபிடித்திருக்கிறதே, அது தமிழக அரசின் வேளாண்மைத் துறையினால் பரிசோதித்துப் பார்க்கப்பட்டதா ? இல்லையென்றால் அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தனிக் கேள்வி போடவேண்டும்.

## விவசாய நலக்குழு அமைக்கும் திட்டம்.

* வினா எண். 10 **திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் சார்பில் '' விவசாய நலக்குழு '' அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) எப்பொழுது முதல் குழு செயல்படும் ?

[1981 ஆகஸ்ட் 22

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ)—(இ) : ஆம். வேளாண்மைத் துறை அமைச்சரைத் தலைவராகக் கொண்டு விவசாய நலக் குழு ஒன்று அமைக்க உத்தேசித்துள்ளது. இக் குழுவில் வேளாண் வல்லுநர்களும் பெரிய சிறிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் ஆகியோர்களின் சார்பாளர்களும் இடம் பெறுவார்கள். மாவட்ட அளவிலே அத்தகைய குழுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே அமைக்கப்படும். குழு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்ட பிறகு குழு செயல் படும்.

**திரு. பொ. சு. திருவேங்கடம் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த விவசாய நலக் குழு விவசாயிகளுக்கு எந்த எந்த வகையில் உதவி செய்கின்ற வகையில் பணியாற்றும் ? குழு எப்போது அமைக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** விவசாய நலனைக் காப்பதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு பரிந்துரை களைச் செய்யவேண்டும். வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு உற்பத்திச் செலவினை கருத்தில்கொண்டு விலைகளை நிர்ணயம் செய்தல் போன்ற விவசாய நலன் தொடர்பான பணிகளை மேற் கொள்ளும். விரைவிலே இது அமைக்கப்பட்டவுடன் இது செயல்படும்.

**திரு. பொ. சு. திருவேங்கடம் :** இந்தக் குழுவிலே சட்ட மன்ற உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்களா ? அல்லது விவசாயிகள் சார்பிலே பிரதிநிதிகளைச் சேர்க்கும் உத் தேசம் உண்டா ? மாநில அளவிலே இருக்கிற குழுவிலே எத் தனை உறுப்பினர்களைப் போடுவதற்கு அரசு உத்தேசித்துள்ளது? மாவட்ட அளவிலே உள்ளகுழுவிலே எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் போடுவதற்கு அமைச்சர் அவர்கள் நட வடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அதைப்பற்றியெல்லாம் அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கருத்தும் அந்த ஆய்விலே சேர்த்துக் கொள்ளப் படும்.

### மீன்வளக் கல்லூரிக்கான அரசின் நிதியுதவி.

*வினா எண். 11.—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன்வளக் கல்லூரிக்காக வேளாண்மை பல்கலைக் கழகத்திற்கு அரசு நிதி அளித்ததா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொகை ?



1981 ஆகஸ்ட் 22]

(இ) இந்தத் திட்டத்தின் மூலம் எத்தனை மீனவர் மாண வர்கள் பயனடைந்துள்ளார்கள் ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) ஆம். (ஆ) ரூ. 110 இலட்சம்.

(இ) மீனவர் மாணவர்கள் எவரும் இக்கல்லூரியில் இது வரை சேரவில்லை.

### ரெவின்யூ மாவட்டந்தோறும் ஒரு மாவட்ட அபிவிருத்தி அதிகாரியை நியமிக்கும் திட்டம்

*வினா எண். 12—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ; திரு. செ. செம்மலை :—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு ரெவின்யூ மாவட்டத்திற்கும், ஒரு மாவட்ட அபிவிருத்தி அதிகாரியை நியமித்து அபிவிருத்தி வேலைகளை அபி விருத்தி செய்ய தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) மற்றும் (ஆ): அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** இது ரொம்ப காலமாக அறிவிக்கப்பட்டு பரிசீலனையில் இருக்கிறது. அபி விருத்தி வேலைகளிலே இன்னும் முனைப்பாக இருக்கவேண்டு மென்று சொல்கிறபோது இதிலே சீக்கிரமாக அரசாங்கம் நட வடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** விரைவாக நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. செ. செம்மலை :** தற்போது வேளாண்மைத் துறை யின்கீழ் உள்ள ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தை உள்ளாட்சித் துறையின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்த யோசனையை மாநில அரசு செயலாக்கியிருக் கிறதா? அப்படிச் செயலாக்குகிறபோது இத்தகைய பதவியை உருவாக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தற்போது ஒருங் கிணைந்த கிராமப் புற வளர்ச்சித் திட்டம் வேளாண்மைத் துறை யில் செயல்பட்டு வருகிறது. அதை உள்ளாட்சித் துறைக்கு மாற்றலாமா வேண்டாமா என்பது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. கோ. விஸ்வநாதன் : நம்முடைய சமூக நலத் திட்டங்கள் அதிகரிக்க அதிகரிக்க மாவட்ட ஆட்சித் தலைவருடைய பணிகள், வேலைப் பளு மிகவும் அதிகரித்து இருக்கிறது.

15 மணி வேலை செய்தாலும் முடியாத அளவிற்கு இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பணிகள் இருப்பதால் டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் ஆபீசரை நியமித்து உடனடியாக அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் மாவட்ட அளவில் இருப்பதைப்போல மாவட்ட வளர்ச்சி அதிகாரிகளை நியமிக்கலாமா வேண்டாமா என்பதுதான் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இதுகுறித்து விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பா. ஜனார்த்தனன் : துணைத் தலைவரவர்களே, தற்போது மாவட்ட அளவிற்கு ஊராட்சிகளிலே உறுப்பினர்கள் இல்லை, ஊராட்சி மன்றத் தலைவர் இல்லை, ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் இல்லை. இப்படி மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில், மாவட்ட அபிவிருத்திக் கூட்டமும் மாதந்தோறும் நடைபெறாத நிலையிருக்கிறது. ஆகவே, மாவட்ட அபிவிருத்தி அதிகாரிகள் வந்தால் இது நல்ல முறையில் இயங்கி மாதந்தோறும் மக்கள் பிரதிநிதிகளைக் கூட்டி மாவட்ட அபிவிருத்திக்கு ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, பஞ்சாயத்துத் தேர்தல்களைப் பொறுத்தவரையிலே ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாவட்ட வளர்ச்சிக் கூட்டங்கள் இருமாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டுமென்று அரசு ஆணை கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கு நடைபெறவில்லை என்று கோடிட்டுக் குறிப்பிட்டுச் சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தமிழக அரசினால் நடத்தப்பெறும் புரட்சிகரமான திட்டமான தன்னிறைவுத் திட்டத்தைப் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்துவதற்குக் கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்குப் போதுமான வாகன வசதி இல்லாததால் அவர்கள் நேரடியாகச்சென்று அங்கே நடக்கின்ற வளர்ச்சித் திட்டங்களைப் பார்வையிட முடியாமல் இருக்கிறார்கள்.





எனவே, அதற்காக அரசு முயற்சியெடுத்து உடனடியாக அவர்களுக்கு ஜீப் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, கோட்ட வளர்ச்சி அதிகாரிகளைப் பொறுத்தவரையில் எல்லோருக்கும் ஜீப் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது. இந்த ஆண்டு பத்து புதிய ஜீப்புகள் கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆகவே, வருகின்ற ஆண்டுகளில் அனைவகள் நிறைவு செய்யப்படும்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ரெவின்யூ மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட அபிவிருத்தி அதிகாரியை நியமிப்பதைப்போல, அரசுப் பணிகளைக் கிராமப்புறங்களில் தொடங்கும் பொழுதும், நிறைவேற்றும் பொழுதும் பொதுமக்கள் தமிழக அரசின் சாதனைகளைத் தெரிந்து கொள்ளும் வகையில் செய்வதற்கு மாவட்ட அபிவிருத்தி அதிகாரியோடு, மாவட்ட அளவில் தன்னாட்சி பெற்ற, உள்ளாட்சித் துறையால் நிறைவேற்றப்படும் தன்னிறைவுத் திட்டங்களைப் பற்றி விளக்குவதற்காக ஒரு விளம்பர அதிகாரியை நியமிக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, இது போன்ற திட்டங்கள் இதுவரையில் இல்லை. இனிமேல் இதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. ந. சிவஞானம் : துணைத் தலைவரவர்களே, ஒவ்வொரு ரெவின்யூ மாவட்டத்திற்கும் ஆர்.டி.எல். ஏ. அதிகாரிகளை மாவட்ட அபிவிருத்தி அதிகாரிகளாக நியமிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, அதுபோன்ற திட்டம் இல்லை.

சேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடம்.

*வினா எண். 13—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் சேடப்படி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடம் இடிந்து விழுந்து விட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் புதிதாக அலுவலகக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

[1981 ஆகஸ்ட் 22

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (ஆ) சேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடத்தில் ஒரு பகுதி இடிந்து விட்டது.

(ஆ) புதிய கட்டிடம் கட்டுவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவையின் துணைத் தலைவரவர்களே, இந்த அலுவலகக் கட்டிடத்தில் ஒரு பகுதி எப்பொழுது இடிந்து விழுந்தது? இதனால் பொருட்சேதம் உயிர்ச்சேதம் ஏதாவது ஏற்பட்டதா? அதை விரைவாகக் கட்டி முடிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அலுவலகக் கட்டிடம் கட்டும்பொழுது அலுவலர்களுக்கான குடியிருப்புகளையும் கட்டியிருப்பார்கள். அதாவது நல்ல நிலையில் இருக்கிறதா என்று அரசு பரிசீலனை செய்ததா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவரவர்களே, கடந்த 20—6—1979-ஆம் நாளன்று திடீரென்று அடித்த பலத்த காற்றினால் அந்த அலுவலகக் கட்டிடத்தில் ஒரு பகுதி இடிந்து விட்டது. பெருந்தலைவர் உட்காரும், அறையும், ஆணையர் உட்காரும் அறையும் தான் கொஞ்சம் இடிந்து இருக்கிறது. ஆகவே, உடனடியாக வேறு கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதே போன்று கடயம் பகுதியில் கோவிந்தப்பேரி ஊராட்சி ஒன்றிய மன்றக் கட்டிடத்தில் ஒரு பகுதி இடிந்து விழுந்து விட்டது. அதற்குக் காரணமாக இருந்த பொறியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? (குறுக்கீடு) அது கட்டப்பட்டது 1976-ஆம் ஆண்டில். (சிரிப்பு).

(பதிலில்லை).

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலிலே பெருந்தலைவரும், ஊராட்சி ஒன்றிய ஆணையரும் இருக்கக்கூடிய அறைகளிலே தான் இந்த விபத்து நடந்திருக்கிறது என்று சொன்னார்கள். என்னுடைய முதல் கேள்வியிலேயே கேட்டேன். இந்த அலுவலகக் கட்டிடம் கட்டுகிற நேரத்திலே அலுவலர்கள் குடியிருப்பும் கட்டியிருப்பார்கள். அவை நல்ல நிலையிலே இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து பார்த்தார்களா? இல்லையென்றால், அவற்றையும் சீக்கிரமாகப் பழுதுபார்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.



1981 ஆகஸ்ட் 22]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, குடியிருப்பைப் பற்றிய பதில் என்னிடத்திலே இல்லை. ஆனாலும் அவைகள் எல்லாம் பரிசீலிக்கப்படும்.

**திரு. வெ. அரங்கராசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியக் கட்டிடம் எந்த ஆண்டு கட்டப்பட்டது? கட்டிடம் இடிந்து விட்டதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, எந்த ஆண்டு கட்டப்பட்டது என்ற குறிப்புகள் என்னிடத்திலேஇல்லை. எந்தஆண்டு விழுந்தது என்பதைப் பற்றிய குறிப்புக்கள்தான் என்னிடத்திலே இருக்கின்றன. ஆனாலும் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேடப்பட்டி, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் எஸ். எஸ். ஆர். ஊராயிற்றே, அந்த ஊரிலே இடிந்து விழுந்திருக்கிறதே, அதைப் பற்றி அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

**திரு. எஸ். எஸ். இராசேந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே,*** (குறுக்கீடுகள்)

**திரு. என். எஸ். வி. சித்தன் :** கேள்வி கேட்கிறாரா, பதில் சொல்கிறாரா ? உறுப்பினர் கேள்வி கேட்க வேண்டும், அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். புதிய மரபை உருவாக்குகிறீர்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, கட்டிடம் இடிந்து விழுந்ததால் அதற்குப் பதில் தேவை இல்லையென்று நினைக்கிறேன். ஏனென்றால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கட்டப்படும் கட்டிடங்கள் விழுவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ். எஸ். ஆர். அவர்கள் சொல்லிய அந்தக் கருத்தைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிடலாம் என்று நான் கருதுகிறேன்.

---

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1981 ஆகஸ்ட் 22

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எஸ். எஸ். ஆர். அவர்கள் குறிப்பிட்டது நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) முடிந்து போன பிறகு இப்படி எழுந்திருந்து பேசுவது முறையல்ல.

**ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு கல்வி கடன் வழங்கும் திட்டம்.**

* வினா எண். 14—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஊழியர்களின் குழந்தைகளுக்கு கல்லூரியில் படிப்பதற்கு வழங்கப்படும் கல்விக் கடன் ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் ஒன்றியப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு கிடைக்க வகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஊராட்சி ஒன்றிய பணியாளர்கள் ஆசிரியர்கள் உட்பட, கல்லூரிகள் மற்றும் பல தொழில் நுட்பப் பயிலகங்களில் படிப்பதற்கு அவர்களது பிள்ளைகளுக்கு கல்விச் செலவுக்கு கடன் வழங்க 28—6—1980 நாளிட்ட ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை, அரசாணை எண் 995-ல் உத்திரவு வெளியாகியுள்ளது.

(ஆ) இவ் வினாவுக்கு இடமில்லை.

**மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள்.**

* வினா எண். 15—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இவ்வாண்டில் (1980–81) மருத்துவ கல்லூரிக்கு புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் முறையே எத்தனை பேர் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள்—585, தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள்—176.



1981 ஆகஸ்ட் 22]

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, புதிதாக பொதுவான பட்டியலில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களில் பின்தங்கிய மாணவர்கள் எத்தனை பேர், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர் என்று அறிவிக்க இயலுமா? அதேபோன்று மாவட்ட வாரியாக எத்தனை பேர்கள் என்று அறிவிக்க இயலுமா ? அதே போன்று ஒவ்வொரு வகுப்பு வாரியாக ஜாதிவாரியாக, பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர்கள் என்று அறிவிக்க இயலுமா ?

[முற்பகல் 9–50]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே மூலக் கேள்விக்குப் பதிலளிக்கும்போது, பொதுவாக பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு 585 பேர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி இருக்கிறேன். இந்த ஆண்டுதான், தமிழக சர்க்கார் வரலாற்றிலேயே, இது வரையிலும் இல்லாத அளவுக்கு 60.5 சதவீதம் பேர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் மாவட்டந்தோறும் அதை பிரித்துப் பார்க்கக் கூடாது என்ற வகையிலே அதைச் செய்யவில்லை. மாவட்ட ரீதியாக கொடுத்தால் நன்றாக இருக்கும் என்ற பொதுவான கருத்து பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே எழுப்பப்பட்டது. ஆனால், உயர்நீதி மன்றம் அப்படி மாவட்ட ரீதியாக கொடுப்பது சரியல்ல என்று சொல்லியிருக்கிறது.

It was struck down by the High Court.

அந்த அடிப்படையிலே பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 60·5 சதவிகிதம் கொடுத்திருக்கிறோம்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் இருந்து வருகின்றவர்களுக்கும், மாவட்டங்களில் இருந்து வருகின்றவர்களுக்கும், அவர்கள் கல்லூரியில் சேரும் வாய்ப்பு ஏற்படுகின்ற வகையில், கிராமப் புறங்களில் இருந்து வருகிற பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் தன்மையை உத்தேசித்து அவர்களுக்கு தனியான மதிப்பெண்கள் தருவதற்கு ஏற்பாடு செய்தால் அனைத்து மாவட்டங்களுக்குத் சமமான வாய்ப்பு ஏற்படும். இல்லை என்றால் சென்னையில் உள்ள மாணவர்களுக்குத்தான் அதிக வாய்ப்பு கிடைக்கும், எனவே இந்த நிலையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்ன மாதிரியாக அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், சிக்கல் இருக்கிறது. இருந்தாலும் போஸ்டிங் போடுகிற நேரத்தில்,

கூடியவரையில் நாம் செலக்ஷன் செய்கிற நேரத்தில், கிராமப் புறங்களிலே இருந்து வரக்கூடியவர்களை நாம் தமிழ்நாடு பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலம் செலக்ஷன் செய்தால் சௌகரியமாக இருக்கும். ஆகவே அந்தக் கட்டத்திலே கூட நாம் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். ஆனால் (St tut) மூலமாக, உத்தரவின் மூலமாக, நாம் செய்ய முடியாது. அதை நாம் வற்புறுத்தி செய்துவிட்டால் நாளை இதையே ஒரு சாக்காகக் காட்டி ஹைகோர்ட்டு வைத்துக்கொண்டு நாம் எந்த ஒரு நல்ல நோக்கத்தோடு சில திட்டங்களை வகுக்கிறோமோ, குறிப்பாக கிராமப் புறங்களிலே மருத்துவர்கள் வேண்டும் என்று அந்தத் திட்டங்களை வகுத்துக் கொண்டு வருகிறோமோ, அந்த நோக்கத்துக்கு இது பயன் தராது. ஆகவே, இங்கே அஃபிசியலாக அதிகாரபூர்வமாக நாம் வலியுறுத்த முடியாது. ஆனால் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்த உணர்வை அந்தக் கருத்தை அரசாங்கம் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளும்.

டாக்டர் கே. சமராம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1980–81-ஆம் ஆண்டுக் கணக்கைச் சொன்னார்கள். நான் அறிந்து கொள்ள விரும்புவது 1974–75, 1975–76, 1976–77 ஆண்டுகளில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர்கள் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த விவரத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, 1974–75-ஆம் ஆண்டு 509 பேர்கள் அதாவது 49 சதவிகிதத்தினர், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. 1975–76லே 49 சதவிகிதம் அதாவது 503 பேர்களுக்கு வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. 1976–77லே 539 பேர்களுக்கு அதாவது 53 சதவிகிதத்தினருக்கு தரப்பட்டிருக்கிறது. இப்போது நான் ஏற்கனவே சொல்லியதைப் போல 585 பேர்களுக்கு தரப்பட்டிருக்கிறது. அதாவது படிப்படியாக 60·5 சதவிகிதத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

திரு பி. எம். தங்கவேல்ராஜ்: துணைத் தலைவர் அவர்களே, அரிசன பிற்படுத்தப்பட்டவர்களுக்கு டி. சி. எச்., டி.ஜி.ஓ., எம்.எஸ்., எம்.டி., போன்ற பட்டப் படிப்புக்கு 1980–81லே அதாவது இந்த ஆண்டு எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது? மேலும் எம். டி., எம். எஸ். போன்றவைகளுக்கு பலமுறை தேறாமல் பின்னர் தேரியவர்களுக்கு இடம் கொடுத்துவிட்டு, ரெகுலராக பர்ஸ்ட் கிளாஸ், செகண்டு கிளாசில் தேறியவர்களுக்கு இடம் கொடுக்காமல் விட்டிருப்பதாக அறிய வருகிறது. பல மனுக்களும் வந்திருக்கின்றன. அதை என்னாலும் நிரூபிக்க முடியும். இதுபோன்ற பல ஒழுங்கீனங்கள் நடத்திருப்பதாகவும் தெரிய வருகிறது. இதற்கு அமைச்சர் பதில் சொல்வாரா ?



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே : துணைத்தலைவர் அவர்களே, எந்தவிதமான குற்றச் சாட்டுக்கும் இடம் இல்லாமல் மிக நல்ல வகையிலே இந்தத் தேர்வு நடந்திருக்கிறது என்பதை ஆணித்தரமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை நிரூபிக்கவும் முடியும். ஆனால் தனிக் கேள்வி போடுவார்களானால் தெளிவாகப் பதில் சொல்ல முடியும். ஏனெனில் நான் இப்போது எம். பி. பி. எஸ்.க்கான குறிப்புகளைத்தான் கொண்டு வந்திருக்கிறேன். போஸ்ட் கிராஜுவேட் பற்றி இந்த மன்றத்தில் எத்தனை கேள்விகள் கேட்டாலும் அதற்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். அதுவும் பல விஷயங்களை எந்த அளவுக்கு நன்றாகச் செய்திருக்கிறோம் என்று சொல்வதற்கும் வாய்ப்பாக இருக்கும். அதிலும் கூட இப்போது 50 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் என்றிருப்பதில் எந்த வகையிலும் கொஞ்சம் கூட குறைக்காமல் கொடுத்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 50 சதவிகிதத்திற்கு மேலும் ஜாஸ்தியாக கூட கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியை உறுப்பினர்களுக்கு மன நிறைவு தரக்கூடிய செய்தியாக நான் சொல்ல விரும்புகிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : துணைத் தலைவர் அவர்களே, காச நோய் சம்பந்தப்பட்ட எம்.டி. படிப்புக்கு எத்தனை பேர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது? இந்தக் குறிப்பிட்ட படிப்புச்குத் தேர்வு செய்யப்பட்டவர்கள் உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பது உண்மையா? அதோடு, இந்த ஆண்டு வெளிநாட்டில் இருக்கிறவர்களில் எத்தனை பேர்களுக்கு எம்.பி.,பி.எஸ் படிக்க இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வியைக் கேட்டதற்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற ஆண்டில் சர்வீசில் இருக்கிற ஒருவருக்குத்தான் இடம் கொடுக்கப்பட்டது. இரண்டு இடங்கள் இரண்டு எம்.பி.க்களுக்குக் கொடுக்கப்பட்டன. மொத்த இடங்கள் இந்தச் குறிப்பிட்ட படிப்பிற்கு 3 தான். இது அந்தக் காலத்தில், கவர்னர் ஆட்சியின் போது நடைபெற்றது. தமிழ்நாடு சர்க்காருக்காகக் கடுமையாக உழைத்து, சர்வீசில் இருக்கிற ஒருவருக்குத்தான் கொடுக்கப்பட்டது. மற்ற இரண்டு இடங்கள் யாருக்குக் கொடுக்கப்பட்டன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அந்த இருவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எம்.பிக்கள். எப்படி கொடுத்தார்கள் என்ற விவரத்திற்குள் நான் போக விரும்ப

வில்லை. இந்த ஆண்டு அந்த 3 இடங்களும் சர்வீசில் இருக்கிற வர்களுக்குத் தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. செஸ்ட் டிசீஸ் சம்பந்தப்பட்ட எம்.டி. படிப்புக்கான 3 இடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களில் ஒருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர், ஒருவர் நான் பிராமின் பார்வர்டு, ஒருவர் பிரா மின். இந்த 3 பேர்களும் சர்வீசில் இருக்கிறவர்கள். இந்த பதிலைச் சொல்வதற்கான வாய்ப்பை அளித்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : துணைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டில் இருக்கிற எத்தனை பேர்களுக்கு எம்.பி.பி.எஸ் படிப்பில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டேன் அதற்குப் பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது மூல கேள்விக்கு சம்பந்தப்பட்டதாக இல்லை ஆகவே, நான் அனுபதிக்கவில்லை.

திரு. து. புருஷோத்தமன் : மூலக்கேள்விக்குச் சம்பந்த படாத பல கேள்விகளுக்கு அமைச்சர் விவரமாகப் பதில் சொல் யிருக்கும்போது இந்தக் கேள்விக்கு ஏன் பதில் சொல்லக் கூடாது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் அனு மதிக்கவில்லை.

HON. Dr. H.V. HANDE : As a supplementry to Thir Purushothaman a small correction. The word 'S.C.' has to b substituted by 'B.C'.

## ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சுகாதாரப் பார்வையாளர்களை நியமிக்கும் திட்டம்.

*வினா எண். 16—திரு. மி. வின்செண்ட் : மாண்புமிகு மக்க நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) ஆரம்பச் சுகாதார நிலையங்களில் புதிதாக சுகா தாரப் பார்வையாளர்களை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எத்தனை இடங்களில் நியமிக்கப்படு

(இ) இதன் நோக்கம் என்ன?

(ஈ) இதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?





மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) 1981–82 ஆம் ஆண்டில் தடுப்பு ஊசித் திட்டத்தின் கீழ் 100 சுகாதாரப் பார்வையாளர்களை 'பள்ளி நல்வாழ்வு மேற்பார்வை 'திட்டத்தின் கீழ் நியமிக்க அரசு தீர்மானித்துள் ளது.

(இ) பள்ளி நல்வாழ்வுத் திட்டத்தின் குறிக்கோள் முக்கிய மாக குழந்தைகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியவர்களுக்கு நல்வாழ்வு கல்வி அளிப்பதும் பள்ளியில் சேரும் சிறுபிள்ளைகளுக்கு நல்வாழ்வு வசதியை தெரியப்படுத்துவதும் ஆகும்.

(ஈ) 1981-82 ஆம் ஆண்டில் ரூ. 9 இலட்சம் (3·2 லட்சம் தடுப்பு ஊசித் திட்டத்திற்கும், ரூ. 5.8 லட்சம் பள்ளி நல்வாழ்வு மேற்பார்வைத் திட்டத்திற்கும்) செலவிட அரசு தீர்மானித்துள் ளது.

திரு. மி. வின்செண்ட் : துணைத் தலைவரவர்களே, 'ஸ்கூல் மெடிக்கல் இன்ஸ்பெக்ஷன் புரோகிராம் நான்—பிளான் ஸ்கீமில்'' எத்தனை சென்டர்கள் ஆரம்பிக்கப்பட்டன? இம்யூனை சேஷன் ஸ்கீமில் எத்தனை சென்டர்கள் தொடங்க இந்த அரசு எண்ணியுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர வர்களே, 53 சென்டர்கள் அன்டர் தி நான்-பிளான் ஸ்கீம் ஒதுக்கப்பட்டுள்ளன. 50 சென்டர்கள் ஏற்கெனவே 1980–81-ல் ஒதுக்கப்பட்டு செயலாற்றி வருகின்றன. இந்த ஆண்டு 1981–82-ல் 53 சென்டர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக ஒவ்வொரு சென்டருக்கும் ஹெல்த் விசிட்டர்ஸ் போட்டிருக் கிறோம். இது ஸ்கூல் மெடிக்கல் இன்ஸ்பெக்ஷன் புரோகிராம் பற்றியது.

அடுத்து இம்யூனைசேஷன் புரோகிராம் பற்றி கேட்டிருக் கிறார்கள். 1979–80-ல் வரையில் 85 சென்டர்கள் செயல்பட்டு வந்தன. 1980–81-ல் 65 சென்டர்கள். இந்த ஆண்டு 1981–82-ல் இன்னும் கூடுதலாக 50 சென்டர்களை நாம் தொடங்க இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

[முற்பகல் 10–00]

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்கூல் மெடிக்கல் இன்ஸ்பெக்ஷனுக்கு எத்தனை முனிசிப்பாலிட்டிகளை 1981–82 ஆம் ஆண்டிலே இந்த அரசு எடுத்துக் கொண்டுள்ளது? அவை எந்த எந்த முனிசிப் பாலிட்டிகள்? அதில் நாகர்கோவில் இடம் பெற்றுள்ளதா?

[1981 ஆகஸ்ட் 22

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கை மாவட்டத்திலே இருந்து தர்மபுரி வரையிலும் ஆக 25 இடங்களை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதுபற்றிய குறிப்புக்கள் என்னிடத்திலே இருக்கின்றன. ஆனால் அவை அனைத்தையும் இங்கே படிப்பதற்கு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் வாய்ப்புத் தருவார்களா என்பது சந்தேகம்தான். ஆகவே ஒன்றை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது நாகர்கோவில் அதிலே நிச்சயமாக இடம் பெற்றிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதியதாக நியமிக்கப்படுகின்ற சுகாதார பார்வையாளர்கள் என்ன தகுதி அடிப்படையிலே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜி.ஓ.எம்.எஸ். 851, என்ற அதற்கான உத்தரவிலே மினிமம் குவாலிபிகேஷன் எஸ்.எஸ்.எல்.சி. என்று போட்டிருக்கிறோம். அவர்களுடைய டெசிக்னேஷன் ஹெல்த் விசிட்டர் என்ற வகையிலே 50 போஸ்ட்கள் போட்டிருக்கிறோம். ரூ. 400—15—490—20—650—25—700 என்ற ஸ்கேலில் நாம் போட்டிருக்கிறோம்.

டாக்சி மற்றும் ஆட்டோக்களில் பொருத்தப்படும் மீட்டர்கள்.

*வினா எண். 17—திரு. சு. முத்துகிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் டாக்சி, ஆட்டோக்கள் ஓட கார்ப்பரேஷன் பகுதி நீங்கலாக (உள்ள) மற்ற பகுதிகளில் உள்ள மக்கள் மீட்டர் சிஸ்டம் தேவை இல்லை என்று கருதுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) மீட்டர் சிஸ்டத்தினால் FC பெற முடியாமல் தவிக்கும் உரிமையாளர்களுக்கு இந்த உத்தரவில் இருந்து அரசு விதிவிலக்கு அளிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) : 1940ஆம் ஆண்டின் தமிழ்நாடு மோட்டார் வண்டிகளின் விதிகளில் 160-ஏ மற்றும் 401 (ஏ) மற்றும் (ஏஏ) வின்படி இம்மாநிலத்தில் ஓடும் எல்லா டாக்சி மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்களிலும் மீட்டர்கள் பொருத்தப்பட வேண்டும். அரசு, சில பகுதிகளில் ஓடும் டாக்சி மற்றும் ஆட்டோக்களுக்கு மேற்



1981 ஆகஸ்ட் 22]

கூறிய விதிகளினின்று விலக்கு அளித்தது. பொதுமக்களின் நலனைக் கருதி 30—9—1980-லிருந்து அந்த விதிகள் அகற்றப்பெற்றன.

(ஆ) இனிமேல் விதிவிலக்கு அளிக்கப்பட மாட்டாது.

திரு. சு. முத்துகிருஷ்ணன் : தமிழகத்திலே கார்ப்பரேஷன் மட்டுமல்லாது மற்ற பகுதிகளிலும் மீட்டர் பொருத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றது. ஆனாலும் இன்னும் அந்தப் பகுதிகளிலே மீட்டர் பொருத்தப்படாமல் எத்தனை டாக்சிகள் எப்சி ஆகாத நிலையில் ஓடிக்கொண்டு இருக்கின்றன என்பதை அரசு அறியுமா? அந்த எண்ணிக்கையை அரசால் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மீட்டர் பொருத்தாமல் வண்டியை ஓட்டக் கூடாது என்பதுதான் தற்போது இருக்கின்ற சட்டம். பொதுமக்களின் நலனைக் கருதித்தான் அதைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே எந்தப் பகுதியிலேயும் மீட்டர் பொருத்தப்படவில்லை என்றால் எப்சி கொடுக்கப்படக் கூடாது. அப்படி எப்சி கொடுக்கப்படாத வண்டிகள் ஓடக் கூடாது. ஓடினால் அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள். ஆகவே ஓடவிடப்படாத காரணத்தால் அவற்றிற்கு கணக்கு எடுக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன் : பெரிய நகரங்களில் டாக்சி, ஆட்டோக்களில் மீட்டர்கள் பொருத்தி இருக்கிறார்கள். ஆனால் அவை அலங்காரத்திற்குத்தான் இருக்கின்றதே தவிர அவற்றைப் பயன்படுத்துவதில்லை. குத்து மதிப்பாக 5 ரூபாய்க்கு குறையாமல் கட்டணத்தை வாங்குகிறார்களே தவிர மீட்டர்களைப் பயன்படுத்துவதில்லை. ஆகவே இந்த நிலையினை உடனடியாகத் தடுத்து நிறுத்தி மீட்டர் ரீடிங் மூலமாக கட்டணத்தை வசூலிக்கின்ற வகையிலே நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அவ்வாறு அதிகக் கட்டணம் வசூலிக்கிறார்கள் என்ற காரணத்தால் தான் அந்தந்த சங்கங்களின் தலைவர்களை அழைத்துப் பேசி விலை வாசிக்கேற்ப ஒரு குறிப்பிட்ட அளவில் அந்த கட்டணத்தை வசூலிக்க வேண்டும் என்று முடிவு செய்து மீட்டர்களைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்று சொன்னோம். அவ்வாறு திருத்திக் கொள்வதற்கு 3 மாத காலம் கொடுக்கப்பட்டது. தற்போது மீண்டும் பெட்ரோல் விலை உயர்ந்து விட்டது. ஆகவே இனிமேல் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி உறுப்பினர்கள் எண்ணிப் பார்ப்பார்கள் என்று நினைக்கிறேன். அனைத்துத் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களும் வந்து சொல்கிறார்கள். எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தொழிற்சங்கத்தினரும் வந்து

122220

[1981 ஆகஸ்ட் 22

பெட்ரோல் விலை உயர்ந்து விட்டது என்று சொல்கிறார்கள்.
மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கட்சியினைச் சேர்ந்த
தொழிற்சங்கத் தலைவர்களும் வந்து அதுபற்றி சொல்கிறார்கள்.
ஆகவே எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்து இதற்கு ஒரு ஏற்
பாடு செய்தால் தான் ஒரு நிச்சயமான முடிவு ஏற்
படுத்த முடியும். இருந்தாலும் இந்த சட்டமன்றக் கூட்டத்
தொடர் நடக்கின்ற போதே தொழிற்சங்கத் தலைவர்களை
அழைத்துப் பேசி ஏதாவது ஒரு நடவடிக்கையினை எடுப்பதற்கு
அரசு முயற்சித்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

திருமதி டி. யசோதா: சென்னை நகரிலே ஓடுகின்ற
ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு மீட்டர்கள் இருக்கின்றன. ஆனால்
அவற்றிலே தலைமைச் செயலகத்திலே இருந்து வீட்டிற்குப்
போனால் அதற்கு ஒரு ரேட்டு, வீட்டிலே இருந்து தலைமைச்
செயலகத்திற்கு வந்தால் அதற்கு இன்னொரு ரேட்டு. ஆகவே
அந்த மீட்டர்களைக் கண்காணிப்பதற்கு உரிய வகையிலே அரசு
விரைவிலே நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாபுண்மிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட தவறுகள் இருக்
கின்றன என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். நாங்கள்
அதன் காரணமாகத் தான் இப்போது புதிதாக 12 மோட்டார்
வாகன ஆய்வாளர்களை நியமித்து, அங்கே இருக்கிற காவல்
துறை அதிகாரிகளிடத்திலே சொல்லி கடுமையான நடவடிக்கை
எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஏற்கனவே சொல்லியதைப்
போல மீட்டர் திருத்தப்பட வேண்டுமென்று உத்தரவு போட்ட
பிறகு மீண்டும் பெட்ரோல் விலை உயர்ந்து இருக்கிறது. பலருக்கு
எந்தக் கட்டணத்தை கொடுப்பது என்று தெரியாமல் இருக்கிற
காரணத்தால் தான் கடுமையான நடவடிக்கை எடுக்க முடிய
வில்லை. உறுப்பினர் அவர்கள் எல்லோர் மீதும் அதிகமாக வாங்கு
கிற ர்கள் என்றுகுற்றச்சாட்டை சொல்வதை விட்டு குறிப்பிட்டு
தவறுஎங்கே நடந்திருக்கிறது என்று எங்களுக்கு அனுப்புவார்களே
யானால் நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பும், வசதியும் அதிக
மாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.எஸ்.என். இராமசாமி: துணைத்தலைவர் அவர்களே, கிராமப்
புறங்களிலே அதிகமாக ஓடுகின்றது ஜீப்பாகத்தான் இருக்கிறது;
ஆகவே அந்த ஜீப்புகளை வைத்து '' இல்லிசிட் டாக்சியாக ''
உபயோகித்து வருகிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள்
சொல்லியதைப் போல அந்த ஜீப்களிலே மீட்டர் பொருத்தப்
படாமல் '' எப்.சி. '' கொடுக்க முடியுமானால் அவர்கள்
'' எப். சி. '' செய்து பெர்மிட் வாங்கிக் கொள்வார்கள்



1981 ஆகஸ்ட் 22]

கிராமப் புறங்களிலே ஓடக் கூடிய கார்களும், ஜீப்களும் மீட்டர் பொருத்தாமல் '' எப். சி. '' கொடுக்க அரசு அனுமதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, மீட்டர் பொருத்துவது என்பதே ஒரு குறிப்பிட்ட கட்டணத்தை மக்களிடத்திலே இருந்து வாங்க வேண்டும் என்பதற்காகத் தான். அதிகமாக வாங்கக் கூடாது என்பதற்காகத் தான் அதைப் செய்கிறோம். எனவே உறுப்பினர் அவர்கள் சொல்வதிலே அவர்கள் ஆழமான அக்கறையை காட்டுவார்களானால், அந்த பகுதியிலே இருக்கின்ற அரசியல் கட்சிகள், மற்றும் பொது நிறுவனங்கள் தொழிற் சங்கத் தலைவர்கள் ஆகிய அனைவரையும் சேர்த்து தீர்மானமாகப் போட்டு அர்சுக்குக் கொடுத்தால் அதை செய்வதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்காது.

திரு. சு. முத்துகிருஷ்ணன்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது பெட்ரோல் விலை அதிகமாக கூடிவிட்டது. போக்குவரத்து வாகனங்களை வாடகைக்கு எடுப்பதற்கு ஏழை எளிய மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தமிழகத்தைப் பொறுத்த அளவிலே டீசலை உபயோகித்து ஓடுகிற '' மெட்டாடார் '' வாகனங்களுக்கு '' டி '' பெர்மிட், டூரிஸ்ட் பெர்மிட் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். பெட்ரோல் விலை உயர்ந்து விட்ட இந்த சந்தர்ப்பத்திலே மக்களுக்கு டீசல் வான் உதவியாக இருக்கும். ஆகவே அரசு மெட்டாடார் வானுக்கு டூரிஸ்ட் பர்மிட் வழங்க உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.சு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, இதை எல்லாம் மனதிலே வைத்துதான் இந்த அரசு மெட்டாடார் வான்களுக்கு பெர்மிட் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தாகி விட்டது. எவ்வளவு வரி நிர்ணயிப்பது என்பதற்காகத் தான் அரசிடத்திலே அந்த கோப்பு இருந்து கொண்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வருகிறோம் விரைவிலே அதற்கு ஆணை கிடைக்கும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்களிலே இருக்கிற டிரைவர்கள் மீட்டர் பொருத்தி வாகனங்களை ஓட்டுவதால் தங்களுக்கு நஷ்டம் வருகிறது என்ற காரணத்தால் அதை நிறுத்திவிட உத்தேசித்து இருப்பது அரசுக்குத் தெரியுமா? இப்படிப்பட்ட '' ஹில் ஸ்டேஷன்களிலே '' மீட்டர் பொருத்த வேண்டியதில்லை என்று அரசாங்கம் அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய யோசனை நல்ல யோசனைதான். ஆனால் அதிலே எங்களுக்கு இருக்கிற

[1981 ஆகஸ்ட் 22

சங்கடம் என்னவென்றால், அரசியல் கட்சி என்று பேசுகிறபோது ஏன் மீட்டர் வைக்கவில்லை என்று கேட்கிறார்கள். தொழிற் சங்கம் என்று வருகிற போது இதற்கு ஏன் மீட்டர் என்று கேட்கிறார்கள். எனவே இந்த சங்கடத்தைப் போக்குவதற்காகத்தான் அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், அங்கே இருக்கிற ஜே. சி., லையன்ஸ் போன்ற சங்கங்கள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து அந்த மக்களுடைய சார்பாக ஒரு தீர்மானத்தை போட்டுக் கொடுத்தால், பொது நன்மையைக் கருதி அரசாங்கம் நிச்சயமாக அதற்கு ஆதரவாக நடவடிக்கை எடுக்கும்.

**திருமதி டி. யசோதா :** துணைத் தலைவர் அவர்களே, நான் கேள்வியை முதலில் கேட்டபொழுது, சென்னையிலே ஓடுகிற எல்லா ஆட்டோக்களிலும் அதிகமாக கட்டணம் வாங்குகிறார்கள் என்று சொல்லவில்லை. ஒரு சில ஆட்டோக்களிலே மீட்டர் இருக்கிறது. ஆனால் அந்த மீட்டர்களிலே கணக்கீடு சரியாக இல்லை என்பதுதான். பெட்ரோல் விலை ஏறுகிறது. அதனால் இப்படி நடக்கிறது என்று சொன்னால் அது சரியாக இருக்குமா ? பெட்ரோல் விலை ஏறுகிறபோது நாம் கூட ஒரு அறிவிப்பை கொடுக்கலாம். ஏறுகிறவர்களுக்கும், இத்தனை தூரம் பயணம் செய்கிறோம், இவ்வளவு காசு கூடுதலாக வரும் என்று நம்பிக்கையிலே ஏறலாம். திடீரென்று ஆட்டோவிலே ஏறிவிட்டு அதிகமாக காசு கொடுக்க வேண்டிய நிலையிலே இருக்கிறதனாலே அறிவிப்புகள் வெளியிடலாமா என்று சொன்னால், நான் குற்றம்சாட்டுவதாக பொருள் படக்கூடாது. ஆகவே அமைச்சர் அவர்கள் எனக்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பொதுவாக சொன்ன காரணத்தால், யாரைக் குறிப்பிட்டு சொல்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே அவர்கள் பயணம் செய்த ஆட்டோவினுடைய நம்பரை அனுப்பினால் அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியும். ஒட்டு மொத்தமாக சொல்ல வேண்டாம் என்று தான் கேட்டுக் கொண்டேன். அதை அனுப்பினால் அதற்கு நடவடிக்கை நிச்சயமாக எடுப்போம். பெட்ரோல் விலை உயர்ந்து விட்ட காரணத்தால் கட்டணத்தை உயர்த்தி வாங்க வேண்டுமா என்று கேட்கிறார்கள். இங்கே உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், நிச்சயமாக பெட்ரோல் விலை உயர்ந்தால், கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்ற கருத்தை, அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். எனவே இதை எல்லாம் மனதிலே வைத்து இதற்கான நடவடிக்கையை நாம் நிச்சயமாக எடுப்போம். அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்ததால்தான் ஏற்கனவே நடந்து கொண்டிருந்த சில தவறுகளை நாங்கள் கொஞ்சம் குறைத்திருக்கிறோம்.



1981 ஆகஸ்ட் 22]

**பேரூராட்சிப் பகுதிகளுக்கும் ஆட்டோ உரிமம் வழங்கும் திட்டம்.**

* வினா எண் 18—**திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிப் பகுதிகளுக்கும் ஆட்டோ லைசன்ஸ் வழங்க செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் அமுல் நடத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :**

(அ) மற்றும் (ஆ) : பேரூராட்சிப் பகுதிகளில் ஓட்டுவதற்கான ஆட்டோ ரிக்ஷா உரிமங்களை உள்ளூர் காவல் துறை அதிகாரிகளைக் கலந்தாலோசித்து வழங்கும்படி வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு, 30—5—1978 நாளிட்ட உள்துறை அரசாணை எண் (பல்வகை) 1201-ல் அரசு உத்திரவிட்டுள்ளது. இது வரையில் பேரூராட்சிப் பகுதிகளில் ஓடுவதற்காக 33 ஆட்டோகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

[முற்பகல் 10–10]

**திரு. எம். சின்னசாமி :** துணைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிப் பகுதிகளிலாவது, ஆட்டோ ரிக்ஷாக்களில் 3 பயணிகளை ஏற்றிச் செல்ல அரசு அனுமதி வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** துணைத் தலைவர் அவர்களே, இன்னும் அதற்கான எந்த முடிவினையும் அரசு எடுக்கவில்லை. இதே போன்று 3 பயணிகளை ஆட்டோக்களில் எற்ற அனுமதி வேண்டும் என்று நகர்ப்புறத்திலேயிருந்துகூட அனுமதி கேட்கிறார்கள். ஆனால் அப்படி 3 பயணிகளை ஏற்றிக் கொண்டு செல்வதற்குண்டான தகுதி ஆட்டோக்களுக்கு இருக்கின்றதா என்பதை அரசு ஆலோசித்த பின்னர்தான் முடிவு எடுக்க வேண்டும். அதற்குப் பிறகு தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து அவர்களின் ஆலோசனைகளைக் கேட்க வேண்டும். ஏனென்றால் இப்படிப்பட்ட அனுமதியை அளிக்கின்றபோது, டாக்சி சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு இதில்விருப்பம் இல்லை என்று தெரிகிறது. எனவே இந்தப் பிரச்சினைகளை எல்லாம் கலந்து ஆலோசித்துத்தான் முடிவு எடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. தி. கா. நல்லப்பன்:** துணைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிப் பகுதிகளில் ஆட்டோ ரிக்ஷாக்களை ஓட்டுவதற்காக 30—5—1978 லேயே அனுமதி வழங்கப்பட்டும் இன்னும் போதுமான ஆட்டோக்கள் ஓடவில்லை என்கிற நிலைமை இருக்கிறது

என்று அமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். குறைந்த பட்சம் பேரூராட்சிப் பகுதிகளிலேயாவது, விண்ணப்பிக்கும் நபர்களுக்கு கட்டாயமாக அனுமதி வழங்க உடனடியாக அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, யார் லைசன்சு வழங்க அனுமதி கேட்டாலும் அரசாங்கத் திற்கு எந்தவிதமான தடையும் இல்லை. யாரும் கேட்க வில்லை என்பதுதான் இங்கே இருக்கிற பிரச்னை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட யாரிடமாவது சொல்லி, அந்த வண்டிகளை ஓட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். அரசுக்கு எந்தவிதமான தடையும் இல்லை. அனுமதி வழங்கத் தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லு கிறபோது 3 பேர்களை ஆட்டோக்களில் ஏற்றிச் செல்ல அனுமதி வேண்டும் என்று நகர்ப்பகுதியிலே இருந்து கூட கோரிக் கைகள் வந்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படி நெருக்கடிப் பகுதிகளில் 3 பேர்களை ஆட்டோக்களில் ஏற்றிச் செல்கிற நிலைமை ஏற்கெனவே நகர்ப்புறங்களில் இருக்கிறது. அது மட்டும் அல்லாமல், 6 ஆயிரம் ரூபாய் விலை விற்றுக் கொண் டிருந்த ஆட்டோக்கள், இப்போது 10 வருடங்கள் கழித்து 24 ஆயிரம் ரூபாய்க்கு விற்கின்றன. எனவே, ஆட்டோக்களின் உரிமையாளர்களுக்கும், வாடகைக்கு ஓட்டுகிறவர்களுக்கும் வசதியாக இருக்கும்பொருட்டு, அவர்களுக்கு தகுந்த வரு மானம் வரும்பொருட்டு, 3 பேர்களை ஏற்றிச் செல்வதற்கு அரசு அனுமதி வழங்க அமைச்சர் அவர்கள் அவசியம் முன் வருவாரா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, அப்படி நகர்ப்புறங்களிலே சில இடங்களில் தவறுகள் நடைபெறுகின்ற காரணத்தினால்தான் அவைகளை யெல்லாம் தடுப்பதற்கு, ஆங்காங்கே தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். நான் ஏற்கெனவே சொன்னது போல், 3 பேர்களை ஏற்றிச் செல்வதற்கு ஆட்டோக்கள் தகுதி யாக இருக்குமா என்பதை முதலில் பார்க்க வேண்டும். அப்படி தகுதியாக இருந்தால், சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத் தலை வர்களையும் அழைத்துப் பேச வேண்டும். அதன் பிறகுதான் முடிவு எடுக்கலாம் என்று அரசு ஆலோசித்துக் கொண்டிருக் கிறது.





திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகர்ப்புறங்களிலே இரவு 7 மணிக்கு மேல் ஆட்டோக்களில் ஏறிச்சென்றால் 1 ரூபாய்க்கு 20 பைசா அதிகம் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி அதிகம் கொடுக்க முன் வராத பயணிகளை ரோட்டி லேயே வைத்து கேவலப்படுத்திப் பேசுகிறார்கள். அப்படி ஒரு அனு பவம் எனக்குக் கூட ஏற்பட்டது. இப்படி அதிகமாகக்கட்டணம் கேட்பது நியாயமா? இப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முன்பு சொன்ன கருத்தையே தான் மாண்பு மிகு உறுப்பினர் அவர்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். யாரோ சிலர் அப்படிச் செய்கிறார்கள், இப்படிச் செய்கிறார்கள் என்று சொல்லிவிட்டால் நடவடிக்கை எடுக்க வழி கிடையாது. குறிப்பிட்டு யார் அப்படிச் செய்தார்கள் என்று பார்த்து வண்டி நெம்பர் போன்றவற்றை எழுதிக் கொடுத்தால், கடுமையான நடவடிக்கை எடுக்க முடியும், அதனால் மற்றவர்கள் திருந்த வழி ஏற்படும். ஆகவே அந்த அடிப்படையில் உறுப்பினர்கள் ஒத்துழைத்தால் நல்லது. ஒட்டு மொத்தமாகச் சொல்லிவிட்டால் நடவடிக்கை எப்படி எடுக்க முடியும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, அந்த வகையில் செய்தால், இந்த அரசும் தீவிரமாக நடவடிக்கை எடுத்து தவறுகளைகளையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது பல இடங்களில் ஆட்டோக் களில் 3 பேர்களை ஏற்றிச் செல்கிறார்கள். அப்படிப்போவது தான் பாதுகாப்பாக இருப்பதாகக் கருதுகிறேன்: ஏனென்றால் ஒருவர் மட்டும் சென்றால், தூக்கிப்போட்டு கீழே விழுந்து விடுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, இவைகளையும் கருத் தில் கொண்டு, ஆட்டோக்களில் 3 பேர்கள் போவதற்கு அனு மதியை சட்டப்பூர்வமாக வழங்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஏற்கனவே நான் அதற் கான பதிலைச் சொல்லிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று பேர்கள் போனால்தான் பாதுகாப்பு என்று சொல்கிறார்கள். மூன்று பேர்களுக்குக் குறைவாக ஏறக்கூடாது என்று நாங்கள் உத்தரவு போடமுடியாது. ஒருவேளை தனியாக உறுப்பினர் அவர்களுக்குப் போகவேண்டிய நிலைமை ஏற்பட் டால் என்ன செய்வது என்பதை அவர்கள் சிந்திக்கவேண்டும்.

[1981 ஆகஸ்ட் 22

## கூடலூர் வட்டம், பொன்னூரிலுள்ள அகதிகள் காலனி

*வினா எண். 19— திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், பொன்னூர் என்ற இடத்தில் உள்ள தாயகம் திரும்பிய அகதிகள் காலனிக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதுவரை எத்தனை பேர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது?

(இ) அவர்களுக்கு வேலை உத்தரவாதம் உண்டா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம். தற்காலிக வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) 279 நபர்களுக்கு தற்காலிகப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களில் 136 நபர்கள் மட்டும் நிலத்தைப் பெற்றுக்கொண்டு வீடுகள் கட்டியுள்ளார்கள்.

(இ) இல்லை.

திரு. ஏ. டி. கருப்பையா : நீலகிரி மாவட்டம் குன்னூரில் இலங்கையில் இருந்து வந்த அகதிகள் சாதாரணமாக ஓலைக் குடிசைகள் அமைத்துக்கொண்டு குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் அங்கே பல ஆண்டுகளாக இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், சிலருக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்று. அதற்காக நான் எனது மனமார்ந்த நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் பட்டா கொடுத்துவிட்டால் மட்டும் போதாது. அவர்கள் வீடு கட்டிக் கொள்ள கடன் உதவி செய்யப்படுமா? அங்கே குடியிருக்கிற சாதாரண நூற்றுக்கணக்கான இலங்கை அகதிகளுக்கு வேலைக்கு உத்தரவாதமுண்டா? அவர்களுக்கு ஏதாவது வாய்ப்பு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இவர்களில் 136 நபர்கள் சொந்தப் பணத்தைக் கொண்டு வீடுகள் கட்டியுள்ளார்கள். 136 குடும்பத்தினர் சொந்தத்தில் வீடுகள் கட்டியுள்ள போதிலும் தற்போது 117 குடும்பங்களே காலனியில் வசித்து வருகின்றனர். அவர்கள் இலங்கையில் இருந்து வரும்போது வியாபாரக் கடனை எதிர் நோக்கி வந்தவர்கள். அந்த நோக்கத்தோடு இந்த அகதிகள் அனைவரும் முதல் தவணையாக ரூ. 3,000 பெற்றுவிட்டனர். ஆனால் அவர்கள் தொழிலை சரிவர நடத்தாமல் இரண்டாவது தவணையாக



1981 ஆகஸ்ட் 22]

ரூ. 2,000 பெறவில்லை. இரண்டு குடும்பங்கள் மட்டும் இரண்டாவது தவணையாக ரூ. 2,000 பெற்று தொழில் நடத்தி வருகின்றனர்.

## பெரியார் மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை பெறுபவர் எண்ணிக்கை

*வினா எண். 20—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டத்தில் முதியோர் உதவித்தொகை பெறும் நபர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) உதவித்தொகை கோரி 1980–81 ஆம் ஆண்டு வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) பெரியார் மாவட்டத்தில் முதியோர் 3,685 பேரும், விதவைகள் 1,180 பேரும் உடல் ஊனமுற்றவர்கள் 575 நபரும் ஆக மொத்தம் 5,440 நபர்கள் உதவித்தொகை பெற்று வருகின்றனர்.

(ஆ) 1980–81 ஆம் ஆண்டில் முதியோர் ஓய்வூதியம் கேட்டு 7,021 பேரும், விதவைகள் ஓய்வூதியம் கேட்டு 3,074 பேரும், உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை கேட்டு 1,066 பேரும், ஆக 11,161 நபர்கள் விண்ணப்பம் செய்துள்ளனர்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : இந்த முதியோர் உதவித் தொகை பெறுகிறவர்களை எந்த அடிப்படையில் அரசு தேர்ந்தெடுக்கிறது? அவர்களுக்கு வயது வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : முதியோர் உதவித் தொகை வயது அடிப்படையில் உள்ளது. 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. விதவைகளாக இருந்தால் 40 வயது என்றும் ஊனமுற்றோராக இருந்தால் 45 வயது என்றும் இப்படி வயது வரம்பு அடிப்படையில் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. மாதத்திற்கு ரூ. 25 வாரம் ஒன்றுக்கு ஒரு நபர் ஒன்றுக்கு ஒரு கிலோ அரிசி, வருடம் இரண்டு முறை சேலை வேட்டி இலவசமாக வழங்கப்பட்டுவருகிறது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : முதியோர் உதவித் தொகை கொடுக்கப்படுகிற அளவிற்கு இப்போது ஏராளமான பேர்கள் மனு செய்து இருக்கிறார்கள். அவைகளை அரசு பரிசீலனை செய்து உடனடியாகத் தருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா?

[1981 ஆகஸ்ட் 22

[முற்பகல் 10–20.]

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலே 1,51,224 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதில் 30–12–1980 முடிய 1,27,210 நபர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 23,614 நபர்களுக்கு உடனடியாக உதவித்தொகை வழங்க எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், வருவாய் நிர்வாகத் துறை ஆணையர்களுக்கும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 17,000 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கவும், 30,000 விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கவும் அனுமதி வழங்கப்படுகிறது.

**திரு. இரா. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திலே 11,000 நபர்கள் 1980–81 ஆம் ஆண்டு முதியோர் உதவித் தொகை கேட்டு, மனு செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இவர்களில் எத்தனை பேர்களுக்கு 1980–81-லே உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நான் பதில் கூறும்போது முன்பே கூறியிருக்கிறேன். 1980–81-ல் முதியோர் உதவித் தொகை கேட்டு 7,021 பேர்களும், விதவைகள் ஓய்வூதியம் கேட்டு 3,074 பேர்களும், ஊனமுற்றோர் உதவித் தொகை கேட்டு 1,066 பேர்களும், ஆக மொத்தம் 11,161 பேர்கள் விண்ணப்பம் செய்துள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெறவில்லை என்பதைக் குறிக்கும்].

## 2 தகவல் கோரல்

### வெளியில் உள்ளாட்சித் துறை அமைச்சர் பேசியது குறித்து

**திரு. அன்பில் தர்மலிங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

* * * *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1981 ஆகஸ்ட் 22]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளியிலே பொதுக் கூட்டங்களிலே பரிமாறப்பட்ட கருத்துக்களை அவையிலே எழுப்பி அதற்கெல்லாம் பேரவைத்தலைவர் தீர்ப்பளிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கக்கூடிய இடம் அல்ல இது. பொதுக்கூட்டத்திலே பேசிய கருத்துக்களுக்கு பொதுகூட்டத்திலேதான் பதில் சொல்ல வேண்டும், ஆகவே, இதுவரை நடைபெற்ற சம்பவங்கள், வாதங்கள் எல்லாம் அவைக் குறிப்பில் இடம் பெறாது.

* * * *

[முற்பகல் 10–30]

**திரு. அன்பில் தர்மலிங்கம்:** * * *

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** * * * இதுவரையிலும் நடைபெற்ற அத்தனை வார்த்தை குறிப்புகளும் — எல்லார் பேசியதும், அமைச்சராக இருந்தாலும் உறுப்பினராக இருந்தாலும் — அவைக் குறிப்பில் ஏறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) என்னுடைய ஆப்சர்வேஷனும் சேர்ந்துதான் நீக்கப் படுகிறது. எனக்கு மட்டும் விதிவிலக்கா என்ன?

**திரு. து. புருஷோத்தமன்:** தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் இதுகாறும் ஒரு மரபு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. (கூச்சல்-குழப்பம்).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு உறுப்பினருக்கு ஒழுங்குப் பிரச்னை எழுப்புவதற்கு அனுமதி அளிப்பதும், அதைக் கேட்டதற்குப் பிறகு தீர்ப்பு அளிப்பதும் பேரவைத் தலைவர் அவர்களைச் சேர்ந்தது. பேரவைத் தலைவரவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். எனவே, அவர்கள் ஒழுங்குப் பிரச்னையை எழுப்பிய பிறகு அதற்குப் பதில்சொல்ல வேண்டிய பொறுப்பு பேரவைத் தலைவருக்கு இருப்பதால் உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருந்து பேரவைத் தலைவரின் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நடப்பதுதான் முறை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. து. புருஷோத்தமன்:** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய முன்னவரவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல துணைத் தலைவரவர்களின் அனுமதியைப்பெற்று எங்கள் கட்சியைச்சேர்ந்த திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் பேசிக் கொண்டிருந்தபொழுது அமைச்சரவர்கள் குறுக்கிட்டார்கள்;

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. து. புருஷோத்தமன்] [1981 ஆகஸ்ட் 22

அதற்குப்பிறகு விரும்பத்தகாத நிகழ்ச்சி ஏற்பட்டது. மாண்புமிகு திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் துணைத் தலைவரவர்களிடம் சில விவகாரங்களை எழுப்ப வேண்டுமென்று சொல்லி அனுமதிபெற்ற பிறகு அவர் பேசும்பொழுது அவருடைய கருத்தை முழுமையாகச் சொல்லமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. நாவலர் அவர்கள் சொன்னார்கள், பேரவைத் தலைவரின் அனுமதியின் பேரில் எழுப்பப்படும் ஒழுங்குப் பிரச்னைக்குத் தலைவரவர்கள் தீர்ப்பளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு திரு. அன்பில் அவர்கள் தமது கருத்தை முழுமையாகச் சொல்ல ஏன் வாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். எல்லா உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டும். துணைத் தலைவரவர்களின் அனுமதியைப்பெற்று பிரச்னைகளை அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது இடையிலே அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் குறுக்கிட்ட காரணத்தால் எங்களுடைய எண்ணத்தைத் தெரிவிக்க முடியாத அளவிற்குப் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இனியும் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படக்கூடாது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முன்னணியில் இருக்கின்ற ஒரு தலைவர் ஒரு பிரச்னையைப்பற்றிப் பேச வேண்டுமென்று தலைவரிடமோ, துணைத் தலைவரிடமோ அல்லது இங்கே தலைமை வகிப்பவர்களிடமோ கேட்கின்றபொழுது அதை அனுமதிப்பதுதான் மரபு. அனுமதித்த பிறகு பிரச்னை என்னவென்று பார்த்து அதிலே சில சங்கடங்கள் விளைந்தால் அதற்கேற்ற முறையில் நடந்து கொள்வது என்பது இந்த நாற்காலிக்கு இருகின்ற முறை, மரியாதை, ஆகவே, அந்த வகையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் அப்பிரச்சினையில் சூடேறி, வேறுவகையில் திரும்பிய பொழுது, வெளியிலே பேசப்பட்ட அந்தப் பிரச்சினைப்பற்றி, இந்த அவையில் விவாதிக்கத் தேவையில்லை என்று என்னால் அளிக்கப்பட்ட தீர்ப்பை அவர்கள் கேட்டிருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். ஆகவே, இந்த மரபுகள் வாழையடி வாழையாக வந்திருக்கும் மரபேயொழிய, புதியவை அல்ல. இந்த மரபை உறுப்பினர்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) எல்லா உறுப்பினர்களுக்கும் தக்க பாதுகாப்பு அளிக்கப்படும். அதிலே நீங்கள் எந்த விதமான கவலையும் படவேண்டியதில்லை. உணர்ச்சி வசப்படுவது என்பது இரு சாராருக்கும் பொது. ஏனென்று கேட்டால், இரு சாராருமே வயதிலே கொஞ்சம் இளைஞர்கள். ஆகவே, அது இயற்கையின் பாற்பட்டதே தவிர, கொஞ்சம் சத்தம் போட்டு விட்டால் உணர்ச்சிகள் எல்லாம் அடங்கி விடும், அந்த வகையிலே அது நல்லது.



1981 ஆகஸ்ட் 22]

[முற்பகல் 10—40]

**திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் ஒரு சரியான சூழ்நிலையில் தமிழக மக்கள் சம்பந்தப்பட்ட ஒரு பெரிய பிரச்சினையைப் பற்றி, விவாதித்து, ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றினோம். இரண்டாவது நாளே, தமிழகத்திலே மக்கள் மத்தியிலே, விலைவாசி, உணவுப் பிரச்சினை போன்ற பெரிய பிரச்சினைகள் முன்னுக்கு இருக்கும் போது இங்கே இருக்கக்கூடிய நாம் அனைவரும் அந்தப் பிரச்சினைகளைப் பற்றி விவாதித்து, சில முடிவுகளுக்கு வர வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, இந்தக் கூட்டத்தினுடைய ஆரம்பத்திலேயே மாண்புமிகு எதிர்க்கட்சியின் சார்பிலே அவர் என்ன பேசுகிறார் என்று கேட்டு, அது அனுமதிக்கத்தக்கதா, இல்லையா என்பதைத் தாங்களே முடிவு கூறிவிட்டால், பிரச்சினை அப்படியே தீர்ந்துவிடும். அதற்குப் பதிலாக, இங்கே பல்வேறு விதமான பிரச்சினைகள் எழுமேயானால், நான் சார்ந்திருப்பதைப் போன்றிருக்கக்கூடிய கட்சிகள் மக்களுடைய பிரச்சினைகளை இங்கே கொண்டு வருவதற்கே அது இடைஞ்சலாக இருக்கிறது என்று நான் உங்களுடைய மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறேன். ஆகவே, அது போன்ற நிலைமை ஏற்படாதபடி முறைப்படி எழுப்பக்கூடிய பிரச்சினைகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய அமைச்சர்களோ, தாங்களோ பதில் சொல்லி, அவ்வாறு அந்தப் பிரச்சினை முடிக்கப்படும் என்ற நடைமுறை பின்பற்றப்பட்டால் நல்லது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேரவை நடைபெறுவதற்குப் பல விதி முறைகள் எல்லாம் இருக்கின்றன. எழுப்ப வேண்டிய பிரச்சினைகளை எழுப்ப, அதை எப்படி, எப்படி விவாதிக்க வேண்டுமோ அதற்கு முறைகள் இருக்கும்பொழுது, பிரதானமான ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் இப்படிக் கடுமையாகச் சண்டை போட்டுக் கொண்டிருந்தால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் சொல்லிய மாதிரி நாட்டிலே மக்களை எதிர்நோக்கியிருக்கிற பல விதமான பிரச்சனைகளை விவாதிப்பதற்குக் கூடியிருக்கிற நாம் இப்படி இருந்தால், என்னுடைய கட்சி சம்பந்தப்பட்ட வரையில் நான் சொல்லிக்கொள்ளவிரும்புவது, இப்படி ஒரு நடவடிக்கை நடந்து கொண்டிருந்தால் அந்த நடவடிக்கை தீரும்வரை நாங்கள் வெளியே உட்கார வேண்டி வரும் (குறுக்கீடு) என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள், தலைவர்களுடைய எண்ணங்களைக் கவனத்திலே கொண்டு மேற்கொண்டு சபையை நடத்த முயற்சி செய்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

[1981 ஆகஸ்ட் 22

திரு. மு. அம்பிகாபதி : ஒரு விஷயம் ..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகிரிசாமி இதைத்தான் சொன்னார். நினைத்தாற்போல் எழுந்து பேசக்கூடாது என்று.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

### ஓமியோபதிக் கல்லூரி மூடப்பெற்றதைக் கண்டித்து மாணவர்கள் நடத்தும் போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், பாபு ஜனார்த்தனம், மு. அப்பாதுரை எம். ஆறுமுகம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கே. ஆர். சுந்தரம், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியின் அருகில் தங்களது பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரியை கடந்த 11-8-1981 முதல் மூடப்பட்டதைக் கண்டித்தும் காலவரம்பற்ற உண்ணாவிரதம் மேற்கொண்ட மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 10 பேர் 19–8–81 அன்று போலீசாரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப்பொது முக்கியத்துவம் என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டு கொள்கிறேன்.

திரு ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக் கீழ்ப்பாக்கம் ஓமியோபதி மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் நியாயமான கோரிக்கைகளுக்காக தங்களுடைய பல்வேறு முறையில் அரசை அணுகி அரசு செய்யத் தவறிய காரணத்தால், இறுதிக் கட்டமாக சாகும் வரையில் உண்ணாவிரதம் இருப்பது என்ற முடிவுக்கு வந்து, அதாவது, அந்த நிலைக்கு இந்த சர்க்காராலே தள்ளப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்றைய தினம் கேள்வி நேரத்தில்கூட நாம் பார்த்தோம். சேடபட்டியிலே இருக்கிற ஒரு ஒன்றிய அலுவலகத்தில், சேர்மன் அமர்கிற இடம் இடிந்து விழுந்தது என்ற உண்மையை அமைச்சர் அவர்களே கூட தெரிவித்தார்கள். இப்பொழுது இந்த ஓமியோபதி மெடிக்கல் காலேஜ் என்ன நிலையில் இருக்கிறது என்றால் முட்டுக் கொடுத்திருக்கிறார்கள். முட்டுக் கொடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த நிலை தொடர்ந்து நீடிக்குமானால்





நாம் கண்டலன்ஸ் ரெசலூஷன் கூட இங்கே பாஸ் பண்ண வேண்டி வரும், மாணவர்களுக்காக. ஆகவே, அப்படிப்பட்ட அவல நிலையில் அந்தக் கட்டிடம் இருக்கிறது. அந்தக் கட்டிடத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்று மாணவர்கள் கோருவதிலே எந்தவித தவறும் இல்லை, முழுக்க, முழுக்க நியாயமானது. எனக்குக் கிடைத்த தகவல், அவர்கள் அமைச்சர் அவர்களை அணுகி இருக்கிறார்கள். அமைச்சரும் சென்றிருக்கிறார். ஒரு திங்களுக்கு முன்பாக வாக்குறுதியும் தந்திருக்கிறார். ஆனால், இது நாள் வரையிலும் அதன்மேல் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறாரா என்றால், இல்லை. நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். என்ன நடவடிக்கை என்றால், கோரிக்கை நிறைவேறவில்லை என்பதற்காக, உண்ணாவிரதம் இருந்த மாணவர்களைச் சிறைச்சாலையிலே அடைத்திருக்கிறார்கள். அந்த நடவடிக்கையை ஒழுங்காக எடுத்திருக்கிறார்கள்.

இப்போது 10 பேர்கள் என்று நம்முடைய சபாநாயகர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் எனக்குக் கிடைத்த தகவல் படி அவர்கள் 30 பேர்களாவார்கள். சென்னை சிறையிலே 30 பேர்கள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல் இருக்கிறது. இன்னும் ஒரு அவல நிலை என்னவென்று சொன்னால் அந்த 30 பேர்களும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் சிறையிலே. அதையும் பார்த்துக் கொண்டு இந்தச் சர்க்கார் இருக்கிறது என்று சொன்னால், இதைஎப்படி மக்கள் சர்க்கார் என்று எடுத்துக் கொள்ள முடியும்? மக்கள் பிரச்சனையை, மாணவர்கள் பிரச்சனையை கேட்காமல் இருக்கும் அரசு, மாணவர்கள் பிரச்சனையைத் தீர்க்காமல் இருக்கும் ஒரு சர்க்கார் எப்படி ஒரு சர்க்காராக இருக்க முடியும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அவர்களுடைய கோரிக்கைகள் ஒன்றும் பிரமாதமான கோரிக்கைகள் அல்ல. சில வசதிகளைக் கேட்டிருக்கிறார்கள். முதலிலே கட்டிடம் அங்கே கோ-எஜிக்கேஷன், பெண்களும் சேர்ந்து படிக்கிறார்கள். பெண்கள் பெரும்பாலும் வெளிமாவட்டங்களில் இருந்து வந்து படிக்கிறார்கள். அப்படிப்படிக்கிற பெண்களுக்கு தங்குவதற்கு இடம் இல்லை நடு ரோட்டிலே நிற்க வேண்டுமா ?

இந்த மன்றத்தில் கூட அடிக்கடி மருத்துவமானியக் கோரிக்கைகளின்போது இந்த துறையில் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று இப்போது இருக்கிற அமைச்சரிடத்திலும் இதற்கு முன்னால் இருந்த ஹெல்த் மினிஸ்டரிடத்திலும் வலியுறுத்தப்பட்டது. ஆனால் என்ன காரணத்தாலோ அவர்கள் அடிப்படையிலேயே நாட்டம் செலுத்துவதில்லை. படிக்கின்ற மாணவர்கள் தங்குவதற்குரிய இடத்திற்கு போதிய கவனம் செலுத்தவில்லை. இந்த நிலை நீடிக்காமல், இப்படிப்பட்ட சூழ்நிலையை கவனத்

தில் கொண்டு குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் ஹண்டே அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கடந்த 11—8—1981 முதல் கல்லூரியையே மூடி விட்டார்கள். என்ன காரணம்? அந்த மாணவர்கள் ஏதாவது சர்ச்சை செய்தார்களா? ரகளை செய்தார்களா? மற்ற இடங்களைப்போல சட்ட விரோதமான காரியங்களில் ஈடுபட்டார்களா? இல்லையே. அங்கே தங்கள் உயிருக்குப் பாதுகாப்பு இல்லை. எந்த நேரத்திலும் அந்தக் கட்டடம் இடிந்து விழுந்துவிடும் என்ற நியாயமான கோரிக்கையை வைத்தார்கள் என்பதற்கே நீங்கள் கல்லூரியை மூடிவிட்டீர்கள் என்றால் அதற்கு என்ன அர்த்தம்? கல்லூரியை மூடுவதற்கு ஒரு சர்க்கார் தேவையா? சம்பந்தப்பட்ட மாணவர்களை அழைத்து பேசுவதிலே உங்களுக்கு என்ன கஷ்டம் என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அவர்களை அழைத்துப் பேசி சுமுகமாக தீர்வு காண முடியும் என்பது என்னுடைய மேலான நம்பிக்கை. அமைச்சர் அவர்களும் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். ஒரு திங்களுக்கு முன்பாகவே நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்ன வாக்குறுதி என்ன ஆயிற்று? காற்றிலே கரைந்து போயிற்றா?

அடுத்து அவர்களுக்குப் படிப்பதற்கு முதலிலே வசதியில்லை. அவர்கள் தங்குவதற்கு போதிய ஆஸ்டல் வசதியில்லை. அப்படியே படித்துவிட்டு வந்தாலும், வேலை வாய்ப்பு இல்லை. இந்த நிலை இருக்கிறது. அப்படிப் படிப்பதற்கு ஒவ்வொரு கல்லூரியிலும் நூலகங்கள் இருக்கின்றன. ஆனால் இந்தக் கல்லூரியைப் பொறுத்தமட்டில், அப்படி இல்லை. ஒரு சமயம் இப்போது பார்க்கிறோம். எங்கு பார்த்தாலும் எங்களை மதிக்கவில்லை. எங்களுக்கு உரியஉரிமை வழங்கப்படவில்லை என்பதற்காக மதமாற்றம் எல்லாம் நடைபெறுகின்றன. ஒரு வேளை இவர்கள் எல்லாம் மாறுவதற்கு இடமில்லாத காரணத்தால் அவர்கள் அங்கேயே இருக்கிறார்கள். அப்படி ஒதுக்கப்பட்ட இந்த மருத்துவத் துறை, ஒதுக்கப்பட்ட ஜாதியைப்போல இந்த ஓமியோபதி மாணவர்கள் நடத்தப்படுகிறார்கள் என்பதை நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு கொடுக்கப்படுகின்றசலுகைகள், வசதிகள்மற்ற மெடிக்கல் ஸ்டூடன்ஸ்களுக்குக் கொடுப்பதைப்போல தரவேண்டும் என்று கேட்கிறார்கள். எதெது முடியுமோ அதைச் செய்யலாம். அனைத்தையும் செய்யுங்கள் என்று நான் சொல்லவில்லை. அது இயலாதகாரியம். ஆனால் எது முடியுமோ அதைச்செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் அவர்களை அழைத்துப் பேசியிருக்கலாம். அதைக் கூட அவர்கள் உதாசீனம் செய்கிறார்கள் என்று கருதுறேன். காரணம் அவர்கள் மதிக்கத் தெரிந்தவர்கள் அல்ல என்று கருதுகிறார்களா என்னவோ எனக்குத் தெரியாது.



அடுத்து 30 மாணவர்கள் இன்னும் அங்கே உண்ணாவிரதம் இருந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் இக்கட்டான, சங்கடமான உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கிறார்கள் என்று எனக்குத் தகவல் கிடைத்து இருக்கிறது. இந்த சர்க்கார், இந்த அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்த 30 மாணவர்களையும் ரீலீஸ் செய்து வெளியே அழைத்துப் பேசி, உண்ணாவிரதத்தை நிறுத்தச் சொல்லவேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடைய கோரிக்கைகளை வைத்துப்பேசுவதற்கு அரசு தயாராகவேண்டும். இப்படிப்பட்ட விவரங்களை எல்லாம் விளக்கமாகப் பேசுவதற்கு, என்னைப்போன்று மற்ற உறுப்பினர்களும் விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–50]

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கீழ்ப்பாக்கம் அரசினர் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கடந்த 5 ஆண்டு காலமாக தங்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்று பல்வேறு போராட்டங்கள் நடத்தி வந்தார்கள். இன்றைக்கு போராட்டத்தின் உச்சக்கட்டமாக அவர்கள் உண்ணாவிரதம் தொடங்கிய காலத்தில் அந்த கல்லூரியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 50 என்று சொன்னார்கள், எனக்குக் கிடைத்த தகவல்பிரகாரம் 56 மாணவ, மாணவிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாது, அவர்களுடைய கோரிக்கைகளைப் பொறுத்தமட்டிலும் இடிந்து விழும் நிலையில் இருக்கிற அந்தக் கல்லூரிக் கட்டிடத்தை மாற்ற வேண்டுமென்பது ஒன்று. அதைப்போன்று அவர்களுக்கு விடுதி வசதி வேண்டுமென்பது மற்றொன்று. மேலும் வேலை வாய்ப்பு அளித்தல், இளநிலை மருத்துவர்கள் (ஹவுஸ் சர்ஜன்கள்) உதவித் தொகை உயர்த்துதல், பட்டப்படிப்பாக மாற்றுதல், சேர்க்கப்படும் மாணவர்களில் பி. யூ. சி. மாணவர்களுக்கு முதல் ஆண்டு தேர்விலிருந்து விலக்களித்தல், ஹோமியோபதி துறைக்கென்று தனி இயக்குநர் நியமித்தல், கல்லூரி டியூஷன் பீஸ் குறைத்தல், நூலகத்தை விரிவுபடுத்தி நூலகரை நியமித்தல் போன்ற கோரிக்கைகளை வைத்து கடந்த 5 ஆண்டு காலமாக அவர்கள் போராடி வருகிறார்கள்.

எனினும், அவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்படாத காரணத்தால் கடந்த 2 மாத காலமாக போராட்டம் நடத்தி 1981-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13-ஆம் நாளிலிருந்து அவர்கள் தொடர் உண்ணாவிரதம் நடத்திக்

தில் கொண்டு குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கடந்த 11—8—1981 முதல் கல்லூரியையே மூடி
விட்டார்கள். என்ன காரணம்? அந்த மாணவர்கள் ஏதாவது
சர்ச்சை செய்தார்களா ? ரகளை செய்தார்களா? மற்ற இடங்
களைப்போல சட்ட விரோதமான காரியங்களில் ஈடுபட்டார்
களா? இல்லையே, அங்கே தங்கள் உயிருக்குப் பாதுகாப்பு இல்லை.
எந்த நேரத்திலும் அந்தக் கட்டடம் இடிந்து விழுந்துவிடும்
என்ற நியாயமான கோரிக்கையை வைத்தார்கள் என்பதற்கே
நீங்கள் கல்லூரியை மூடிவிட்டீர்கள் என்றால் அதற்கு என்ன
அர்த்தம்? கல்லூரியை மூடுவதற்கு ஒரு சர்க்கார் தேவையா?
சம்பந்தப்பட்ட மாணவர்களை அழைத்து பேசுவதிலே உங்
ளுக்கு என்ன கஷ்டம் என்று நான் தெரிந்து கொள்ள விரும்பு
கிறேன். அவர்களை அழைத்துப் பேசி சுமுகமாக தீர்வு காண
முடியும் என்பது என்னுடைய மேலான நம்பிக்கை. அமைச்சர்
அவர்களும் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். ஒரு திங்களுக்கு
முன்பாகவே நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்ன வாக்
குறுதி என்ன ஆயிற்று? காற்றிலே கரைந்து போயிற்றா ?

அடுத்து அவர்களுக்குப் படிப்பதற்கு முதலிலே வசதியில்லை.
அவர்கள் தங்குவதற்கு போதிய ஆஸ்டல் வசதியில்லை.
படியே படித்துவிட்டு வந்தாலும், வேலை வாய்ப்பு இல்லை. அப்
இந்த நிலை இருக்கிறது. அப்படிப் படிப்பதற்கு ஒவ்வொரு கல்
லூரியிலும் நூலகங்கள் இருக்கின்றன. ஆனால் இந்தக் கல்லூரி
யைப் பொறுத்தமட்டில், அப்படி இல்லை. ஒரு சமயம் இப்
போது பார்க்கிறோம். எங்கு பார்த்தாலும் எங்களை மதிக்க
வில்லை. எங்களுக்கு உரியஉரிமை வழங்கப்படவில்லை என்ப
தற்காக மதமாற்றம் எல்லாம் நடைபெறுகின்றன. ஒரு வேளை
இவர்கள் எல்லாம் மாறுவதற்கு இடமில்லாத காரணத்தால் அவர்
கள் அங்கேயே இருக்கிறார்கள். அப்படி ஒதுக்கப்பட்ட இந்த
மருத்துவத் துறை, ஒதுக்கப்பட்ட ஜாதியைப்போல ஓமி
யோபதி மாணவர்கள் நடத்தப்படுகிறார்கள் என்பதை நான்
மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கி
றேன். அவர்களுக்கு கொடுக்கப்படுகின்றசலுகைகள், வசதிகள் மற்ற
மெடிக்கல் ஸ்டூடன்ஸ்களுக்குக் கொடுப்பதைப்போல தரவேண்
டும் என்று கேட்கிறார்கள். எதெது முடியுமோ அதைச் செய்ய
லாம். அனைத்தையும் செய்யுங்கள் என்று நான் சொல்லவில்லை.
அது இயலாதகாரியம். ஆனால் எது முடியுமோ அதைச்செய்வதற்கு
நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள்
அவர்களை அழைத்துப் பேசியிருக்கலாம். அதைக் கூட அவர்கள்
உதாசீனம் செய்கிறார்கள் என்று கருதுறேன். காரணம் அவர்கள்
மதிக்கத் தெரிந்தவர்கள் அல்ல என்று கருதுகிறார்களா என்
னவோ எனக்குத் தெரியாது.



அடுத்து 30 மாணவர்கள் இன்னும் அங்கே உண்ணாவிரதம் இருந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் இக்கட்டான, சங்கடமான உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கிறார்கள் என்று எனக்குத் தகவல் கிடைத்து இருக்கிறது. இந்த சர்க்கார், இந்த அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்த 30 மாணவர்களையும் ரீலீஸ் செய்து வெளியே அழைத்துப் பேசி, உண்ணாவிரதத்தை நிறுத்தச் சொல்லவேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடைய கோரிக்கைகளை வைத்துப்பேசுவதற்கு அரசு தயாராகவேண்டும். இப்படிப்பட்ட விவரங்களை எல்லாம் விளக்கமாகப் பேசுவதற்கு, என்னைப்போன்று மற்ற உறுப்பினர்களும் விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–50]

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கீழ்ப்பாக்கம் அரசினர் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கடந்த 5 ஆண்டு காலமாக தங்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்று பல்வேறு போராட்டங்கள் நடத்தி வந்தார்கள். இன்றைக்கு போராட்டத்தின் உச்சக்கட்டமாக அவர்கள் உண்ணாவிரதம் தொடங்கிய காலத்தில் அந்த கல்லூரியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 50 என்று சொன்னார்கள், எனக்குக் கிடைத்த தகவல்பிரகாரம் 56 மாணவ, மாணவிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாது, அவர்களுடைய கோரிக்கைகளைப் பொறுத்தமட்டிலும் இடிந்து விழும் நிலையில் இருக்கிற அந்தக் கல்லூரிக் கட்டிடத்தை மாற்ற வேண்டுமென்பது ஒன்று. அதைப்போன்று அவர்களுக்கு விடுதி வசதி வேண்டுமென்பது மற்றொன்று. மேலும் வேலை வாய்ப்பு அளித்தல், இளநிலை மருத்துவர்கள் (ஹவுஸ் சர்ஜன்கள்) உதவித் தொகை உயர்த்துதல், பட்டப்படிப்பாக மாற்றுதல், சேர்க்கப்படும் மாணவர்களில் பி. யூ. சி. மாணவர்களுக்கு முதல் ஆண்டு தேர்விலிருந்து விலக்களித்தல், ஹோமியோபதி துறைக்கென்று தனி இயக்குநர் நியமித்தல், கல்லூரி டியூஷன் பீஸ் குறைத்தல், நூலகத்தை விரிவுபடுத்தி நூலகரை நியமித்தல் போன்ற கோரிக்கைகளை வைத்து கடந்த 5 ஆண்டு காலமாக அவர்கள் போராடி வருகிறார்கள்.

எனினும், அவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்படாத காரணத்தால் கடந்த 2 மாத காலமாக போராட்டம் நடத்தி 1981-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13-ஆம் நாளி லிருந்து அவர்கள் தொடர் உண்ணாவிரதம் நடத்திக்

கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அந்த மாணவர்களைச் சந்தித்துப் பேசி இந்தப் போராட்டம் நிறுத்தப்படவில்லை என்று சொன்னால் இது போன்று தமிழகம் பூராவும் இருக்கக்கூடிய ஹோமியோபதி மாணவர்களிடையே இப்போராட்டம் பரவி விடும். ஆகவே, இந்தப் போராட்டம் தமிழகம் பூராவும் பரவாமல் இருப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் கட்டிடத்தைப் பற்றிப் பேசுகிறபோது எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இடிந்து விழும் நிலையில் முட்டுக் கொடுத்து வைத்திருக்கிறார்கள் என்று; இடிந்து விழுந்து இரங்கல் தீர்மானம் கொண்டு வராமல் இருப்பதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும். ஆகவே இது போன்ற பல்வேறு பிரச்சினைகளை நாம் பேசித் தீர்க்க வேண்டுமென்ற காரணத்தால் இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்ப்பாக்கத்திலே இருக்கிற ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த மாணவர்கள் தங்களுக்குக் கிடைக்கப்பட வேண்டிய பல்வேறு வசதிகளை, குறிப்பாக இருக்கிற கட்டிடம் மோசமான நிலையில் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் முறையிட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் மற்றவைகளை எல்லாம் பின்னால் பார்த்துக் கொள்ளலாம், இதை உடனடியாகப் பார்த்து ஏற்பாடு செய்யலாம் என்று சொல்லி அங்கே சென்று பார்வையிட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இதுவரை எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை.

அதுமாத்திரமல்ல, மாணவர்கள் தங்குவதற்குப் போதுமான வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். போது வசதிகள் இல்லை என்று சொல்கிறார்கள். போதிய படித்ததற்கு பிறகு தங்களுக்கு வேலை வாய்ப்புக்கு உத்தரவாதம் செய்யப்பட வேண்டுமென்றும், மற்ற மாணவர்களுக்குக் கிடைக்கிற வசதிகள் தங்களுக்கும் கிடைக்க வேண்டுமென்றும், எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் ஏற்கனவே படிக்கிற மாணவர்களை விட அதிகப்படுத்தப்பட வேண்டும். கட்டுகிற பீஸ்கள் அதிகமாக இருக்கின்றன, அவைகள் எல்லாம் குறைக்கப்பட வேண்டும் என்றும், இன்னும் பல கோரிக்கைகளை வைத்து தொடர்ந்து அரசாங்கத்தோடு பேசி ஒரு முடிவுக்கு வர முடியாத நிலையில்தான் வேறு வழியின்றி போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். உண்ணாவிரதத்திலே ஈடுபட்டு அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்க போராடிய மாணவ



மாணவிகளை அரசாங்கம் கைதுசெய்து சிறையிலே அடைத்திருக்கிறது. சிறைக்குச் சென்றதற்கும் பிறகு அவர்களுடைய உண்ணாவிரதப் போராட்டம் நிறுத்தப்படாமல் இருக்கிறது. இதற்கிடையில் 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 11 ஆம் நாளன்று கல்லூரி மூடப்பட்டிருக்கிறது.

ஆகவே, இப்படிப் பல்வேறு விவகாரங்கள் சுற்றிச் சுற்றி வருவது மாத்திரமல்ல, இந்த விவகாரம் எனக்கு முன் பேசிய உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போன்று தமிழ்நாடு முழுவதும் பரவக் கூடிய போராட்டமாக மாறிவிடக்கூடாது. ஆகவே அவர்களை அழைத்துப் பேசி, ஒரு சுமுகமான முடிவை ஏற்படுத்துவது மாத்திரமல்லாமல் உடனடியாக சிறையிலே இருக்கிற அத்தனை பேர்களையும் விடுதலை செய்து, அவர்களையும் இந்தப் பேச்சு வார்த்தையில் கலந்துகொள்ளச் செய்து ஒரு நல்ல முடிவினை எடுக்க வேண்டும். மேலும் இதுபோன்ற பல்வேறு கருத்துக்களைப்பற்றி பேச வேண்டியிருப்பதால் இந்த அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலே கீழ்ப்பாக்கத்திலுள்ள ஓமியோபதி வைத்தியக் கல்லூரி மாணவர்கள் கடந்த சில நாட்களாகவே வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். வேலை நிறுத்தத்திற்குப் பின்னாலே இப்போது அந்தக் கல்லூரி மூடப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை நாம் அறிவோம். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல அந்த ஓமியோபதி கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள் தங்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை, நியாயமான கோரிக்கையை அரசுக்கும் அமைச்சர்களுக்கும் எடுத்துச்சொல்லி, அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாத காரணத்தால இன்றைக்கு வேறு வழி இல்லாத காரணத்தால் காந்திய நெறியில் தங்களைத் தாங்களே வருத்திக்கொள்கின்ற உண்ணா நோன்பில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து வேதனைப்படுகிறேன்.

அவர்கள் அதிகமாக ஒன்றும் கேட்கவில்லை. அந்த மருந்துவக் கல்லூரிக்குச் சொந்தக் கட்டிடம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்தக் கல்லூரியை அமைக்கும்போது சொந்தக் கட்டிடம் இருக்கிறதா, நல்ல கட்டிடமாக இருக்கிறதா என்று பார்த்து ஆரம்பித்திருந்தால் நிச்சயமாக இந்த நிலைமை வந்திருக்காது.

இன்றைக்கு இந்த நிலைமை அந்த ஓமியோபதி கல்லூரிக்கு மட்டுமல்ல, உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் என்று ஆரம்பிக்கிறபோது போதுமான கட்டிட வசதி

இருக்கிறதா என்று பார்த்து அனுமதி கொடுக்கின்ற நிலைமை இல்லாததால் அங்கும் இப்படிப்பட்ட பிரச்சனைகள் ஏற்படுகின்றன. போதுமான கட்டிட வசதி இல்லாத காரணத்தால் அந்தப் பள்ளிகளும் கல்லூரிகளும் முழு நேரம் நடைபெறாமல் ஷிப்ட் முறையில் நடைபெறும் அவல நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

அந்த ஓமியோபதி கல்லூரியைப் பொறுத்தவரையில் பெரிய கட்டிடம் தேவையில்லை. அங்கே ஆண்டு ஒன்றுக்கு 20 மாணவர்கள்தான் சேர்க்கப்படுகிறார்கள். ஆகவே, அதற்கான சொந்தக் கட்டிடம் கட்டப்படுவதில் இவ்வளவு காலதாமதம் தேவையில்லை என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் அங்கே பயிலும் மாணவர்களுக்கு தங்கி படிக்கும் வசதி இல்லை என்று எனக்கு முன்னாலே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். அது மட்டுமல்லாமல் அந்த மாணவர்கள் தங்களுடைய படிப்புக்கு 'டிப்ளமா' கோர்ஸ் என்றிருப்பதை டிகிரி கோர்ஸ் என்று மாற்ற வேண்டுமென்று கேட்கிறார்கள்; அதையும் ஒரு கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். மேலும் அவர்களுடைய உதவித் தொகை ரூ. 150 என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. அதை உயர்த்த வேண்டுமென்று ஒரு கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கோரிக்கைகளுக்காக அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அதன் காரணமாகப் பலர் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கும் அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு முன்பே அந்த மாணவர்களை உரிய காலத்தில் அழைத்துப்பேசி, தக்க நடவடிக்கையை எடுக்காதது எனக்கு ஆச்சரியமாக இருப்பது மட்டுமல்ல; வேதனையாகவும் இருக்கிறது. என்றாலும் அந்தப் பிரச்சினை இந்த அவையிலே எழுப்பப்பட்ட பிறகு, சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிற மாணவர்களை எல்லாம் உடனடியாக விடுதலை செய்து, அவர்களை அழைத்துப்பேசி, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு கட்டங்களில் இந்தமாதிரி உண்ணாவிரதம் இருக்கும்போது அமைச்சர்கள் அவர்களை அழைத்துப்பேசி வாக்குறுதி கொடுத்து, பின்னால் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் போய்விடுகிறது. இந்தப் பிரச்சினையில் அத்தகைய ஒரு நிலைமை ஏற்படாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





உண்ணாவிரதம் இருக்கின்ற மாணவர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்குகளை எல்லாம் திரும்பப்பெற்று, ஒரு சுமுகமான சூழ்நிலையை விரைவிலே உருவாக்க வேண்டும். மேலும் பல்வேறு பிரச்சினைகளை இங்கே பேசவேண்டியிருப்பதால் அவையில் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு தலைவரவர்களே, இங்கே நான்கு மாண்புமிகு உறுப்பினர்கள்—திருவாளர்கள் பொன்னுரங்கம், அப்பாதுரை, சொரணம், என். எஸ். வி. சித்தன் ஆகியோர்—ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இறுதியாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் சொன்ன ஒரு முக்கியமான கருத்தை நாம் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கருதுகிறேன்.

இந்தக் கல்லூரி ஆரம்பித்த நேரத்தில் இடிந்து, பாழடைந்து போன பாதுகாப்பற்ற ஒரு கட்டிடத்தில் ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொன்னார்கள். நான் இதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. நாம் புதிதாக ஒரு கல்லூரியை ஆரம்பிக்கும்போது அங்கே தகுதியுள்ள கட்டிடம் இருக்கிறதா என்று பார்த்திருக்க வேண்டும். அந்தக் கல்லூரி ஆரம்பித்த காலத்தில் நாங்கள் ஆட்சியில் இல்லை. தகுதியுள்ள கட்டிடத்தைப் பார்த்து ஆரம்பிக்கத் தவறியிருக்கிறார்கள் என்று இந்த நேரத்தில் சுருக்கமாகச் சொன்னாலும் தெளிவாக திரு. சித்தன் அவர்கள் எடுத்துக் காட்டியிருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய இந்த ஓமியோபதி மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில் அது 95 மாணவர்களைக்கொண்டதாகவும், ஆண்டுக்கு ஒருமுறை 21 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது.

[முற்பகல் 11-00]

நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி சுருக்கமாக நான் விளக்குவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஜூலை மாதத்திலே ஒரு விழாவுக்குக் கூட என்னை அழைந்திருந்தார்கள். நானும் மதிப்பிற்குரிய புலமைப்பித்தன் அவர்களும் அங்கே போய் இருந்தோம். மிக நல்ல முறையிலே பாசத்தோடும் அன்போடும்தான் நாங்கள் பழகினோம். அங்கே எந்த எந்த இடத்தைப் பார்க்கவேண்டும் என்று சொன்னார்களோ அந்தந்த இடங்களை எல்லாம் பார்த்தேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் எதிர்க்கட்சி என்ற வகையிலே பேசினார்கள். அந்த வகையிலே அவர்கள் பேசியது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் அவர்களுக்கும் தெரிந்திருக்கின்ற உண்மைகளை நான் சொல்கிறேன். எல்லா அறை

களையும் சென்று பார்த்து உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டியவை அவை என்று நான் சொன்னேன். அப்போது அங்கே உள்ள மாணவர்கள் "அமைச்சர் அப்படித்தான் சொல்வார், என்ன பெரிய நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்" என்று சொன்னார். அங்கே அப்போது டி. எம். எஸ். அவர்கள் இருந்தார். அவர் ரொம்பவும் நல்லவர். சாந்தமான மனிதர். அவரிடத்திலே நாளையதினமே உங்களுடைய அசிஸ்டன்ட் டைரக்டர் வேணுகோபால் அவர்களை அனுப்பி என்னென்ன குறைகள் இருக்கின்றன என்று பார்த்து ஒரு லிஸ்ட் போட்டு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று நான் சொன்னேன். மாணவர்கள் அப்படி நடக்குமா என்று சந்தேகப் பட்டார்கள். ஆனால் அடுத்த நாளே உடனடியாக டெலி போனிலே தொடர்பு கொள்ளப்பட்டது. ஒருலிஸ்ட் தயார்செய்து அங்கே இருக்கின்ற மாணவர்களையும் பார்த்து, ஆசிரியர்களை யும் பார்த்து கல்லூரி முதல்வர் அவர்களையும் பார்த்து என் னென்ன செய்யவேண்டும் என்ற வகையிலே அதாவது மினிமம் சொல்யூசன் என்னென்ன செய்யவேண்டும் என்ற விவரங்களைப் பற்றி எழுதினார்கள். அதற்குப் பிறகு மாணவர்கள் 5, 6 பேர் என்னை வந்து சந்தித்து இவ்வளவு விரைவாகச் செய்வீர்கள் என்று நாங்கள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை, இப்படிச் செய்தற்காக நன்றி என்று சொன்னார்கள். அப்போது நன்றாகத்தான் பேசிக்கொண்டிருந்தோம். ரொம்பவும் மகிழ்ச்சி யோடும், மனநிறைவோடும்தான் பேசிக்கொண்டிருந்தோம். ஆனால் நான்கைந்து நாட்களுக்குப் பிறகு எந்தவிதமான முன் அறிவிப்பும் கொடுக்காமல், ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுக்காமல் ஸ்ட்ரைக் கூட இல்லை—நான்கைந்து நாற்காலிகளை திடீரென்று உடைத்தார்கள். நம்முடைய நாட்டிலே நாம் எவ்வளவு அமைதியாக நடக்கவேண்டும் என்று மற்ற மாணவர்களுக்குச் சொல்லவேண்டிய கட்டாயத்திலே அவர்கள் இருப்பவர்கள், ஏனோ திடீரென்று நாற்காலிகளை உடைத்துவிட்டார்கள். இதுவரை எந்தக் கல்லூரியிலும் இப்படித் திடீரென்று நாற்காலி களை உடைத்த காட்சியைப் பார்த்ததில்லை.

அடுத்தபடியாக என்ன நடந்தது என்பதை சற்றுச் கவனமாகக் கவனிக்கவேண்டும். நாற்காலிகளை உடைத்துவிட்டு டி. எம். எஸ் ஆஸ்பத்திரி எதிரிலேயே போய் உட்கார்ந்து விட்டார்கள். அந்த டி. எம். எஸ். ரொம்பவும் சாதுவானவர். காட் பியர் உடைய வர். கொஞ்சம் என்றால் கூடத் தாங்க மாட்டார். அந்தமாதிரி அவர் வளர்க்கப்பட்டவர். அப்படிப்பட்டவரைப் பற்றித் தரக் குறைவான எல்லா வார்த்தைகளையும் சொல்லிவிட்டார்கள் அவர்களை கேரோ செய்வது மாதிரியாகச் செய்து இப்படி திடீரென்று கிளம்பி வந்து ஸ்ட்ரைக் நோட்டீஸ் எதுவும் கொடுக்காமல் செய்துவிட்டார்கள். அப்படி நோட்டீஸ் கொடுத்திருந்தால் அவர்களை அழைத்துப் பேசி இருக்கலாம். ஆனால் திடீரென்று 30, 40 பேர் வந்து இந்த மாதிரி நடந்திருக்



கிறார்கள். வேறு கடுமையான அதிகாரியாக இருந்தால் போலீஸை வரவழைத்து அதன்மூலம் பயங்கரமான நிலைமை ஏற்பட்டிருக்கும். ஆனால் அவர் அமைதியாக அப்படியே பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு பிறகு மாலையிலே 8 மணிக்கு இப்படி இப்படி எல்லாம் பேசினார்கள் என்று சொன்னார்கள். அதாவது வாக்குறுதி கொடுத்தார் அமைச்சர், ஆனால் அதை நிறைவேற்றவில்லை என்று சொன்னதாகச் சொன்னார்கள். ஆனால் அவர்களிடத்திலே கொடுக்கப்பட்ட வாக்குறுதி என்ன வென்றால் டாக்டர் வேணுகோபால் அவர்களை அனுப்பி, பார்க்கிறேன் என்றுதான் சொன்னேன். ஆகவே அங்கே இரண் டாவது வாக்குறுதிக்கு இடமே கொடுக்கவில்லை. அவர்கள் சில ரெக்கமென்டேஷனைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது 1.5 இலட்சம் ரூபாய் செலவு செய்தால் அந்தக் கட்டிடத்தைச் சரிப்படுத்தலாம் என்று சொன்னார்கள்.

அதற்குப் பிறகு மாணவர்கள் ஒரு லா அண்ட் ஆர்டர் பிரச் சினையைக் கிரியேட் பண்ணி விட்டார்கள். அதாவது அவர்களது பிரச்சினைகள் பற்றி இதுவரை யாரும் வந்து பார்க்கவில்லை; அமைச்சரும் வந்து பார்க்கவில்லை; ஹெல்த் செக்கரட்டரியும் வந்து பார்க்கவில்லை என்று சொன்னார்கள். அடுத்த நாள் ரொம்பவும் சாதுவாக கருத்துக்களைச் சொல்லக்கூடிய, இனி மையாகப் பழகக்கூடிய அவரைக் கேரோ செய்து விட்டார்கள். அவர் வெளியே போக முடியாதபடி செய்து லா அண்ட் ஆர்டர் பிரச்சினையை கிரியேட் செய்து விட்டார்கள். அப்படி பெரிய தகராறுகள் எல்லாம் செய்ததன் காரணத்தால் தகராறு செய்த வர்கள் சிறையிலே வைக்கப்பட்டார்கள். ஆனால் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள், அவர்களை ஒரு நாளிலே விடுதலை செய்துவிடலாம் என்று சொல்லி அவர்களை மன்னித்துவிட்டார் கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பரந்த உள்ளம் அவர்களை மன்னித்து விட்டது. இனிமேலாவது திருந்துவார்கள், அவர்கள் நல்ல வழிக்கு வருவார்கள் என்று ஆசைப்பட்டு அவர் களை விடுதலை செய்ய உத்தரவு போட்டு ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த முன் வந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகாவது அவர்கள் பேச முன் வந்திருக்கலாம். இதுவரையில் நடந்தது தவறுதலாக நடந்துவிட்டாலும் கூட, நாங்கள் இனிமேல் பேசத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கலாம். ஆனால் அப்படி யெல்லாம் வரவில்லை என்பதோடு மட்டுமல்லாமல், தொடர்ந்து பூந்தமல்லி ஹைரோட்டில் தகராறுகள் போன்றவை ஏற்பட்டன.

ஆகவே, இந்த அடிப்படையில்தான் இந்தப் பிரச்னைகளைப் பார்க்க வேண்டுமே தவிர, இது ஒரு நாடு தழுவிய போராட்டமாக உருவாகிவிடுமோ என்று பார்ப்பதற்கில்லை. அப்படியெல்லாம்

வீரர்து. நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் சொரணம் போன்றவர்கள் இருக்கிற வரையில் அப்படி எல்லாம் நேராது என்ற நம்பிக்கையிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அவை உறுப்பினர்கள் அனைவருமே நல்ல காரியங்களுக்குப் பாது காப்பாக இருப்பார்கள் என்பதில் சந்தேகம் கிடையாது. இருந்தாலும் கூட, நடைபெற்றிருக்கக்கூடிய இந்த உண்மைகள் எல்லாம் இந்த மன்றத்தினருக்குத் தெரிந்திருக்காது என்ற அடிப்படையில் எடுத்துச் சொன்னேன். அது மட்டும் அல்ல, அவர்கள் பல கோரிக்கைகளையும் வைத்திருக்கிறார்கள். என்ன கோரிக்கைகள் என்றால் "Diplom course to be upgraded as Degree Course" அது இந்த அரசாங்கத்தின் கையில் இல்லை. இது அரசாங்கம் மட்டுமே செய்யக்கூடிய வேலை இல்லை. University of Madras and the Central Council of Homeopathy, New Delhi should give concurrence. உடனடியாக டிப்ளோமா கோர்ஸை பட்டப்படிப்பிற்கு சமமாக ஏற்கவேண்டும் என்ற உத்தரவை போடுவது எவ்வளவு சிரமமான விஷயம் என்பது அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரியும்.

ஒரு சாதாரண பி. யூ. சி. வகுப்பை மாற்றுகையிலேயே எவ்வளவோ பிரச்னைகள் வருகின்றன. அவைகள் எல்லாம் வேறு பிரச்னைகள். அதனுள்ளே இப்போது போகவேண்டாம். இருந் தாலும் கூட ஒவ்வொன்றிற்கும் தனித் தனியாக துறைகள் இருக்கின்றன. Medical Council, Modern Medicine, Homeopathy Medical Council, University of Madras. பல்கலைக் கழகம் போன்றவைகள் எல்லாம் இருக்கிற காரணத்தாலே, இவைகளில் உடனடியாக அரசாங்கம் ஒன்றும் உத்தரவு போட்டு மாற்றம் எதுவும் செய்துவிட முடியாது. இந்த அவை, அவைத் தலைவருடைய உத்தரவுக்கு கட்டுப்பட்டு இருக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. அதுபோன்றே ஆங்காங்கே நிறைய துறைகளும், பிரிவுகளும், அவற்றிற்கான கட்டுப்பாடு களும் இருக்கின்றன. ஆகவே, உடனடியாக நாளையிலிருந்து டிப்ளோமா ஹோல்டர்ஸ் எல்லாம் பட்டப்படிப்பினராக மாற்றப்படுவர் என்று இந்த அரசாங்கம் எந்தவித உத்தரவையும் போடுவதற்கில்லை.

அடுத்ததாக, மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களோ, அல்லது மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்களோ குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன், வேலை வாய்ப்பைப் பற்றி. நான் உங்களுக்கு இதில் ஒரு மகிழ்ச்சியான செய்தியைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியிலும், அவரே நேரிடையாக முயற்சி எடுத்துக் கொண்டு, 6 ஹோமியோபதி டாக்டர்களை, அஸிஸ்டெண்ட் மெடிகல் ஆபீசர்கள் பதவிக்கு



எடுக்க உத்தரவு போட்டிருக்கிறார்கள். தேர்வுபெற்ற பட்டம் பெற்றவர்கள் வந்தவுடனே இந்த வாய்ப்புகள் அவர்களுக்குத் தரப்படும். ஆகவே, இப்படிப்பட்ட உத்தரவைப் போட்டிருப்பது முதன் முதலாக இந்த ஆட்சியிலேதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே வேறு பல பிரச்னைகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் பழி வாங்கவேண்டும் என்ற எண்ணம் கொஞ்சமும் கிடையாது. அதேநேரத்தில் Those students resorted to holding the whole department to ransom. The D.M.S., அலுவலகம் என்பது தமிழகம் பூராவும் இருக்கக் கூடிய மருத்துவ மனைகள் அனைத்திற்கும் உயர் அதிகாரி இருக்கக் கூடிய ஒரு அலுவலகம். அந்த அலுவலகத்தில், வேறு எந்த வேலையையும் நடக்க விடாமல் ஒரு நான்கு மணி நேரத்திற்கு நிறுத்திவைத் திருக்கிறார்கள். அதையும் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். இது போன்ற நிலைமைகள் வளருவதை எந்த ஆட்சி யினராவது அனுமதிப்பார்களா, அனுமதிக்க முடியுமா என்பதை யும் மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இந்தப்பிரச்சினையைப் பொறுத்த வரையில் உடனடியாக நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். சுறுசுறுப்பாக அரசு செயல்பட்டிருக்கிறது. எந்தவிதமான மந்தப்போக்கும் இதில் இல்லை. அதே நேரத்தில் சிறையில் போட்டவர்களை மன்னிப் பதிலும் மனிதாபிமான உணர்வோடு பெருந்தன்மையாக அரசு நடந்திருக்கிறது. பழிவாங்கும் எண்ணம் எல்லாம் அரசுக்குக் கொஞ்சமும் கிடையாது. இனிமேலும் மனிதாபிமான அடிப்படை யிலேயே அரசு செயல்படும். ஆகவே அரசு இதில் தீவிர அக்கறை கொண்டு சுறுசுறுப்பாக செயல்படுகிறது என்கிற காரணத்தால், நான் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், என்னுடைய விளக்கங்களைப் பதிலாக ஏற் இது குறித்துத் தொடர்ந்து விவாதிக்க இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய தேவையில்லை என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, சிறையில் இருக்கும் மாணவர்களைப் பற்றி அமைச்சர் எதுவுமே குறிப்பிடவில்லை. அவர்கள் விடுதலை செய்யப் பெற வேண்டும். அவர்களைப் பற்றி அரசாங்கத்தின் ஸ்டேண்ட் என்னவென்று எங்களுக்குத் தெரிய வேண்டும்.

திரு. ப. பொன்னுரங்கம் : அந்த மாணவர்கள் சிறையிலே உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பெற வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் உறுதி அளிக்க வேண்டும்.

[1981 ஆகஸ்ட் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவை இப்படித் தான் பதில் சொல்ல வேண்டும் என்று யாரும் கட்டாயப்படுத்த முடியாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விரிவான விளக்கம் அளித்திருந்தபோதிலும், சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களைப் பற்றிச் சொல்வதற்கு விட்டு விட்டிருக்கலாம். ஆகையினால் அவர் களை விடுதலை செய்வது பற்றி அரசு முடிவு என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–10)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : விரிவான பதிலைக் கொடுத்துவிட்டேன். அரசாங்கம் மனிதாபிமானத்துடன் உகிய நடவடிக்கைகளை நிச்சயமாக எடுக்கும். எந்தவிதமான மந்தப் போக்கும் இதில் இல்லை என்பதை நான் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆகவே இதற்கு மேல் விரிவாகப் பேசுவதற்கு ஒன்றுமில்லை என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. தி. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1976–77 மற்றும் 1977–78 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின் வாரியத்தின் கணக்குகளின் மீதான மேற்படி குழுவின் ஒன்பதாவது (ஏழாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.



1981 ஆகஸ்ட் 22]

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) வேளாண் தொழிலாளர் நியாய ஊதிய (திருத்த) சட்ட முன் வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981-ம் ஆண்டு வேளாண் தொழிலாளர் நியாய ஊதிய (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. ந. குலசேகர பாண்டி யன்) : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள்.

(அ) வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன் வடிவு, 1981 (ஆ, இ).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. ந. குலசேகர பாண்டி யன்) : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர் களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

[1981 ஆகஸ்ட் 22

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. ந. குலசேகர பாண்டியன்) : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ, இ.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு ந. குலசேகர பாண்டியன்) : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. ந. குலசேகர பாண்டியன்) : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக் கிறது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ, இ).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. ந. குலசேகர பாண்டியன்) பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.



981 ஆகஸ்ட் 22]

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

ஈ) பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர் ;ளே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் ; (திரு. ந. குலசேகர பாண்டி யன்): இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(2) இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. ந. குலசேகர பாண்டி யன்) : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக் கிறது.

(ஊ) பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவு. 1981.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. ந. குலசேகர பாண்டியன்) இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

[1981 ஆகஸ்ட் 22

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(ஏ) பொது மக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 52/1981)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது மக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன் வடிவில் பக்கம் 2-லே, 1888 ஆம் ஆண்டுச் சட்டத்தில் 4 ஆம் பிரிவுக்குப் பிறகு கொண்டு வரப்பட்டிருக்கின்ற 4(ஏ) என்கிற புதிய ஷரத்தை ஆதரித்தாலும் சில கருத்துக்களைச் சொல்ல விருப்பப்படுகிறேன்.......

திரு. அ. ரகுமான்கான் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அரசாங் கத்தின் தரப்பிலே இருந்து கொண்டுவரப்படுகின்ற இந்த மசோதாவை இந்த சபை நிராகரிக்கிறது என்று நான் ஏற்கெனவே நோட்டீஸ் அனுப்பியிருக்கிறேன். அது எல்லோருக் கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு பில் இன்ட்ரடியூஸ் ஆகிற போது, சபையிலே ஒரு மசோதாவைக் கொண்டு வருகிறபோது, சபை நிராகரிக்கிறது என்று சொல்லி விட்டால், அப்படி நிராகரிக்கிற தீர்மானத்தைக் கொண்டு வந்த உறுப்பினர் பேச அனுமதிக்கப்படவேண்டும். சபை விதிகளிலே அப்படித் தான் இருக்கிறது.

[முற்பகல் 11-20]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த '' பில் ''லை இன்ட்ரட்யூஸ் பண்ணும்போது நிராகரிக்கலாம். இன்ட்ரட்யூஸ் பண்ணி ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படக்கூடிய கட்டம் வந்து விட்ட பிறகு இதிலே ஒரு விதிக்கு வேண்டுமானால் திருத்தம் கொண்டு வரலாமே தவிர, இதை நிராகரிக்க முடியாது.

---

*1981 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1981 ஆகஸ்ட் 22]

திரு. தி. கா. நல்லப்பன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு பொது மக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்டமுன்வடிவில் நான்காம் பிரிவுக்குச் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பாக நான் வரவேற்கிறேன். பொதுவாக பொது மக்கள் கூடுகின்ற இடத்தில் நடத்தப்படுகிற பொருட்காட்சி அல்லது வேறு பல நிகழ்ச்சிகள் சமுதாயத்தில் அரசியல் செல்வாக்குள்ளவர்கள் அல்லது சமூக அந்தஸ்து உள்ளவர்களால் நடத்தப்படுகிற, ஒரு காசு பறிக்கிற நிலையில்தான் இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இந்தமாதிரி நிகழ்ச்சிகளில் ரெக்கார்டு டான்ஸ் போன்றவை நடத்தப்பட்டால், ஏனைய சமூக விதிகளுக்கு முரணான நிகழ்ச்சிகளை நடத்தினால் போலீஸ்காரர்கள் கண்டும் காணாமல் இருக்கிற நிலை இருக்கிறது. அப்படி இருக்கிறபோது அவர்கள் நடத்துவதை நாம் தடுத்து நிறுத்த முடியும் என்று நினைக்க முடியவில்லை. ஆகவே, இதைப் பொறுத்தவரை தனி நபர்கள் நடத்துவதை அனுமதிப்பதைவிட மாநகராட்சிகளோ, நகராட்சிகளோ, ஏனைய பேரூராட்சிகளோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களோ பொருட்காட்சிகளை நடத்த அனுமதிப்பது நல்லது. தனி நபர்கள் அனுமதி கேட்டால் மறுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அபராதத் தொகையைப் பொறுத்தவரை கட்டண விகிதம் மாநகராட்சிப் பகுதிகளிலே பத்தாயிரம் ரூபாய் என்றும் பிறகு படிப்படியாக கீழே வருகின்றபோது, நகராட்சி, பேரூராட்சி என்ற நிலைக்குத் தகுந்தாற்போல் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது. ஒரு தடவை இந்தமாதிரி தவறு செய்வார்களானால் 500 ரூபாய் அபராதம் என்று இருப்பதை ஒரு தடவை தவறு செய்தால் கூட கட்டி இருக்கும் முழுத் தொகையும் பறிமுதல் செய்யவேண்டுமென்ற முறையில் மாற்றவேண்டுமென்று கூறி இந்தத் திருத்தத்தை வரவேற்று அமர்கிறேன்.

* திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : பேரவைத் துணை தலைவர் அவர்களே, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, பொதுமக்கள் கூடுகின்ற இடத்திலே இதுபோன்ற கண்காட்சிகள் நடத்துவதை நிச்சயமாக தனியாருக்குக் கொடுக்காமல் இருப்பது எவ்வளவோ நல்லது என்பதை நான் உறுதியாகச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நகராட்சிகளோ அல்லது ஊராட்சிகளோ அதை நடத்தினால் அதனால் அந்த நகராட்சி, ஊராட்சி போன்றவைகளுக்கு வருமானம் கிடைக்க வாய்ப்புக்கள் இருக்கும். அதே போன்று இன்றைக்கு முனிசிபல் ஏரியாக்களிலே அல்லது மாநகராட்சிப் பகுதிகளிலே இத்தகைய கண்காட்சிகள் நடத்த அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், பேரூராட்சிப் பகுதிகளிலே கண்காட்சிகள் நடத்த அனுமதி வழங்கப்படுகிறது. அப்படி நடத்தப்படுகிறபோது '' ஸ்கில்டு கேம்ஸ் '' போன்ற சூதாட்டங்கள்

[திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்] [1981 ஆகஸ்ட் 22

நடைபெற வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட சூதாட்டங்கள்
நடைபெறாமல் இருக்க நடைமுறைகளைக் கவனித்து தனியா
ருக்கு அனுமதி கொடுக்காமல் நகராட்சிகள் அத்தகைய கண்
காட்சிகளை நடத்த அனுமதி கொடுத்தால் அத்தகைய கண்
டங்கள் நடைபெற வாய்ப்பு இருக்காது என்ற காரணத்தால்
அப்படிப்பட்ட நகராட்சி, ஊராட்சிகளுக்கு உரிமங்கள் வழங்கப்
பட வேண்டுமென்று வலியுறுத்தி இந்தச் சட்ட முன்வடிவை
வரவேற்று அமர்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : சட்டப் பேரவைத் துணைத் தலை
வர் அவர்களே, தமிழ்நாடு அரசாங்கத்தால் கொண்டுவரப்
பட்டிருக்கிற பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள்(திருத்த)
சட்டத்தை மேலும் திருத்துவதற்காக இந்த.....

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார்
இந்த தமிழ்நாடு பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள்
திருத்தச் சட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்
பாகப் பேசுவதற்கு என்னுடைய பெயர் பட்டியலிலே தரப்
பட்டிருக்கிறது. பிரதான எதிர்க்கட்சி என்ற முறையிலே பேசு
வதற்கு அழைக்கப்பட்டிருக்க வேண்டும். நான் திருத்தம்
கொடுத்திருக்கலாம், டிஸ் அப்ருவல் செய்திருக்கலாம், அவைகள்
எல்லாம் என்னுடைய தனிப்பட்ட உரிமைகள்..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதலிலே
அழைக்கப்பட்டிருக்கலாம், ஆனால், தாங்கள் வேறு பில்லிலே
பெயரைக் கொடுத்து இருக்கிறீர்கள்.......

திரு. அ. ரகுமான்கான் : நான் முதலிலே எழுந்து கேட்
டது டிஸ் அப்ருவல் பற்றிய பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படிப் பேசி
இதை வளர்ப்பதை விட தாங்கள் பேசியே முடித்துவிடலாம்.
பேசுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : 1981 ஆம் ஆண்டு பொது மக்
கள் வழக்கமாய்க் கூடுகின்ற இடங்கள் திருத்தச் சட்டத்தை
சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்தினுடைய அடிப்படை
கருத்து, பொருட்காட்சியாக இருந்தாலும் கலை விழாக்களாக
இருந்தாலும் அந்த நிகழ்ச்சிகளிலே ஆபாசம் இருக்கக் கூடாது,
சூதாட்டப் போக்குள்ள விளையாட்டுக்கள் இருக்கக்கூடாது என்ற
கருத்துதான். அந்த அடிப்படைக் கருத்தை மையமாக வைத்துத்
தான் இந்த மசோதா இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த
மசோதாவினுடைய அடிப்படை நோக்கம் குறித்து, கலை நிகழ்ச்சி
களிலும், பொருட்காட்சிகளிலும் ஆபாசமான நிகழ்ச்சிகள் இடம்



1981 ஆகஸ்ட் 22] [திரு. அ. ரகுமான்கான்]

பெறக் கூடாது என்பதைக் குறித்தோ அல்லது சூதாட்டப் போக்
குள்ள விளையாட்டுகள் இருக்கக்கூடாது என்பதைக் குறித்தோ
யாருக்கும் இரண்டுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது.

இந்தச் சட்டத்தினுடைய அடிப்படை நோக்கத்தை, அடிப்
படைக் கொள்கையை நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக்
கழகத்தின் சார்பாக வரவேற்கிறேன். இதிலே உள்ள மிக முக்
கியமான அம்சம் என்னவென்றால், ஏற்கெனவே உள்ள தாய்ச்
சட்டத்தில் பொருட்காட்சிகள், கலை விழாக்கள் நடத்துவதற்கு
அனுமதி வழங்குவதற்கு உரிமை தரப்பட்டிருக்கிறது. ஆபாச
மான சூதாட்டத் தன்மையுள்ள நிகழ்ச்சிகள் அவைகளிலே இருக்கு
மானால் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமங்களை ரத்து
செய்கின்ற அதிகாரமும் ஏற்கெனவே இருக்கின்ற தாய்ச் சட்டத்
திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆபாசமான சூதாட்டப் போக்
குள்ள நிகழ்ச்சிகள் அவைகளிலே இருக்குமானால் அதற்குக்
காரணமானவர்களைத் தண்டிப்பதற்கும் ஏற்கெனவே இருக்கின்ற
அந்த தாய்ச் சட்டத்திலே இடம் இருக்கிறது. 500 ரூபாய் அபரா
தம் விதிக்கலாம் என்று அதிலே இருக்கிறது. இப்போது கொண்டு
வரப்பட்டிருக்கின்ற இந்த மசோதா எதற்காக என்றால் ஏற்
கெனவே போடப்பட்டிருக்கின்றபடி 500 ரூபாய் அபராதம் விதிக்
கலாம் என்று இருந்தாலும் ஆபாசமான, சூதாட்டத் தன்மையுள்ள
நிகழ்ச்சிகள் இருக்குமானால் சம்பந்தப்பட்டவர்களுடைய
லைசென்ஸ்களை சஸ்பென்ட் செய்வதற்கோ அல்லது ரிவோக்
செய்வதற்கோ அதிகாரம் ஏற்கெனவே உள்ள சட்டத்திலே
இருந்தாலும், இவைகளைக் கொண்டு சரியான முறையிலே நடை
முறைப்படுத்த முடியவில்லை என்ற முறையிலே அதுபற்றி அர
சாங்கத்தின் கவனத்திற்கு வந்து இருக்கின்றன என்று சொல்லி
யிருக்கிறார்கள். பொருட்காட்சிகளில் ஆபாச நடனங்கள் ஆடு
கிறார்கள், சூதாட்டப் போக்குள்ள விளையாட்டுக்கள் நடக்கின்
றன—ஏற்கெனவே இதற்காக சட்டம் இருந்தாலும் அதன் மூலம்
சரியாக நடைமுறைப்படுத்தவில்லை என்பதால்—அவற்றைத்
தடுப்பதற்கு இன்னும் கடுமையான முறையிலே விதிமுறைகளைப்
போட வேண்டும் என்ற முறையிலே புதிய ஷரத்துக்களை உள்
ளடக்கி இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று
சொல்லப்படுகிறது.

[முற்பகல் 11-30]

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக
நான் சில கருத்துக்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர
விரும்புகிறேன். இந்த மசோதாவினுடைய அடிப்படையில்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கக் கூடிய காரணங்
களில் மிக முக்கியமானது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு
ஆபாச நிகழ்ச்சிகள் பற்றியும், சூதாட்டப் போக்குள்ள நிகழ்ச்சி
கள் பற்றியும் அவைகள் எல்லாம் பொது இடங்களிலே நடை
பெறுகின்றன என்ற கருத்து கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று
சொல்லியிருக்கிறார்கள். பொருட்காட்சிகளில், கலை நிகழ்ச்சி

[திரு. அ. ரகுமான்கான்] [1981 ஆகஸ்ட் 22

களில் சூதாட்டப் போக்குள்ள, ஆபாசமான நிகழ்ச்சிகள் இடம்
பெறக்கூடாது என்று சொல்லுகிறபோது சென்னை நகரத்திலே
குதிரைப் பந்தயம் நடக்கிறது. அதுவும் ஒரு சூதாட்டப் போக்கு
உள்ள விளையாட்டுத்தான். அது ஏன் இந்த அரசின் கவனத்
திற்கு வரவில்லை. குதிரைப் பந்தயத்தை நடத்தக்கூடியவர்கள்
இரத்தத்தின் இரத்தமாக, சதையின் சதையாக ஆளுங் கட்சியைச்
சார்ந்தவர்களாக இருப்பதால்தான் கவனத்திற்கு வரவில்லை
என்று கருதுகிறேன். குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கு
முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை இந்த அரசாங்கம்.
அந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிறது. ஆனால்
அந்த வழக்கில் இந்தச் சர்க்கார் என்ன நடவடிக்கை
எடுத்திருக்கிறது என்றால் எந்த நடவடிக்கையும் எடுக்க
வில்லை. அது இந்தச் சர்க்காரின் கவனத்திற்கு வரவில்லையா
என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இன்னும் கேட்க விரும்புகிறேன். நடனங்களிலும், நாடகங்
களிலும், பொருட்காட்சிகளில் நடத்தப்படும் கலை நிகழ்ச்சி
களிலும் ஆபாசம் இருக்கிறது என்பது இந்தச் சர்க்காரின்
கவனத்திற்கு வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆபாசம்
கூடாதுதான், அதில் எந்தவிதமான கருத்துவேறுபாடும்
கிடையாது. ஆனால், அதேநேரத்தில் சென்னை போன்ற
நகரங்களில், எனக்குக்கிடைத்த தகவல்களின் அடிப்படையிலே
சொல்கிறேன், பல்வேறு ஹோட்டல்களில் காபரே நடனம்
என்று இரவு நேரங்களில் நடத்தப்படுகிறது. அதைத் தடை
செய்வதற்கு இந்த அரசும், அதிகாரிகளும் என்ன முயற்சி
செய்திருக்கிறார்கள்? ஒருவேளை அதிலே ஆபாசம் இல்லை
என்று இந்த அரசு முடிவுக்கு வந்திருக்கிறதா? அதைப்பற்றி
இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கும் அம்சங்கள் எந்த
விதத்திலும் கட்டுப்படுத்தவில்லை.

பொருட்காட்சிகளில் மட்டும், கலை நிகழ்ச்சிகளில்
மட்டும், அங்கே நடத்தப்படும் நிகழ்ச்சிகளில், நடனங்
களில், நாடகங்களில்தான் ஆபாசம் இருக்கிறது என்பது
அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது, அதைத் தடுக்க
வேண்டுமென்று இந்த அரசாங்கம் எண்ணுகின்ற காரணத்தால்
இந்த மசோதா வருகிறது என்றால் நான் கேட்க விரும்பு
கிறேன். சினிமாப் படங்களில் ஆபாசமே இல்லையா? சினிமாப்
படங்களில் ஆபாசம் இருக்கிறது. இன்றைக்குச் சினிமாப்
படங்களில் இடம் பெறுகின்ற காதல் காட்சிகள் ரொம்பவும்
மோசமான காதல் காட்சிகளாக, நாய்கள் ஓடி ஓடி விளை
யாடுவதைப் போன்ற காதல் காட்சிகளாக இருக்கின்றன.
படுக்கை அறைக் காட்சிகளைப் பார்க்கும்போது முதல்
இரவுக் காட்சிகளில் ஆபாசம் இருந்துகொண்டு இருக்கிறது.



1981 ஆகஸ்ட் 22] [திரு. அ. ரகுமான்கான்]

சினிமா போஸ்டர்கள் எவ்வளவு ஆபாசமாக இருக்க
முடியுமோ அவ்வளவு ஆபாசமாக இருந்து கொண்டிருக்
கின்றன. இதைப்பற்றியெல்லாம் இந்தச் சர்க்காரின் கவனத்
திற்குக் கொண்டுவரப்படவில்லையா? கொண்டுவரப்பட்
டிருந்தால் இந்தச் சர்க்கார் இவைகளை நீக்குவதற்கு என்ன
நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள
விரும்புகிறேன்.

அடுத்து, தினசரிப் பத்திரிகைகளில் ஆபாசமான படங்கள்
பிரசுரமாகின்றன; வாரப் பத்திகைகளில் அவ்வாறே பிரசுர
மாகின்றன. அவைகளில் வெளியாகின்ற நாவல்கள், சிறு
கதைகள் ஆகியவைகளில் ஆபாசம் இடம் பெற்றிருக்கிறது.

அதுமட்டுமல்ல, நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்பு
கிறேன். உங்கள் அனுமதியோடு நான் தெரிவிக்க விரும்பு
கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு பத்திரிகையிலே
ஒரு படம் போட்டிருக்கிறார்கள். அந்தப் படத்தைப் பார்த்
தாலே அதில் எவ்வளவு பெரிய ஆபாசம் இருக்கிறது
என்பது தெரியும். பொது இடங்களிலும், கலை நிகழ்ச்சி
களிலும், நடன நிகழ்ச்சிகளிலும் ஆபாசம் காட்டப்படுகிறது
என்று சொல்லுகின்ற அதேநேரத்திலே, இப்படிப்பட்ட
முறையில் பத்திரிகைகளில் நிர்வாணமாக—இன்னும் இரண்டு
ஆடைகள் மட்டும் அகற்றப்படவில்லை அந்த அளவிற்கு
'' தினத்தந்தி'' பத்திரிகையில் போடப்பட்டிருக்கின்றது. இந்தப்
படத்தைப் போட்டு அங்கே ''டிக் டிக்'' என்று போட்டிருக்கிறார்
கள். மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம்
அவர்கள் மனத்திலே கூட இந்தப் படத்தைப் பார்த்தால்
டிக் டிக் என்ற உணர்வு ஏற்படும். அந்த அளவிற்கு
ஆபாசமான படங்கள் வந்திருக்கின்றன. இந்த ஆபாசங்
களைத் தடை செய்யும் அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட
வேண்டாமா? (குறுக்கீடு) நான் தவறான அர்த்தத்தில்
சொல்லவில்லை. இப்படியெல்லாம் ஆபாசமான படங்களைப்
போடுகிறார்களே என்ற வருத்தத்தில்தான் சொல்கிறேன்.
அந்த வருத்தத்தின் காரணமாக ஏற்பட்ட கவலையினால்தான்
சொல்கிறேன். எனவே வேறொன்றும் தப்பாகக் கருத
வேண்டாம். பொது இடங்களில், நடனங்களில், கலை
நிகழ்ச்சிகளில் ஆபாசம் இருக்கக் கூடாது என்று சொல்லும்
பொழுது...............

டாக்டர் கே. சமரசம்: துணைத் தலைவரவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள்
தமக்குரிய முறையில் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்
கள். நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால்,
அனாவசியமாக அமைச்சரவர்களின் பெயரை இழுத்திருக்கிறார்
கள். இதுபோன்ற பிரச்சினைகள் முதலில் வேடிக்கையாக ஆரம்

பித்தாலும் பிறகு வினையாக மாறும். எனவே இது தேவையற்ற பிரச்னை. இந்த சப்ஜெட்டிற்குள்ளே இருக்கின்ற விஷயங்களைப் பற்றிப் பேசட்டும். ஆனால் அமைச்சரவர் களின் பெயரை இழுப்பது சரியாகத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சரவர் களே சும்மா இருக்கிறார்கள், எனவே உறுப்பினரவர்கள் உட்காரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, நான் தப்பான அர்த்தத்தில் சொல்லவில்லை.

திரு. ஏ. சி. சண்முகம் : திரு. ரகுமான்கான் அவர்கள் அமைச்சரவர்களைப்பற்றிக் கூறியதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏதாவது சொல்ல விரும்பினால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இராகவானந்தம் அவர்கள் மனத்திலேகூட '' டிக் டிக் '' என்ற உணர்வு ஏற்படும் என்று சொல்லிய காரணத்தால், நான் என்னுடைய வயதைவிட '' யங்கர் '' ஆக இருக்கிறேன் என்பது அவருடைய கருத்தி லிருந்து தெரிகிறது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆகையினாலே இன்றைக்கு நான் கோடிட்டுக் காட்டுகின்ற இவைகள் எல்லாம், இங்கே கொண்டுவரப் பட்டிருக்கிற மசோதாவுக்கு விரோதமான விஷயங்கள் அல்ல. பொருட்காட்சிகளிலே, கலை நிகழ்ச்சிகளிலே மட்டும்தான் ஆபாசம் இருக்கிறதா? எல்லா இடங்களிலும் ஆபாசம் இருக்கிறது. இதற்கு மசோதா கொண்டு வந்து சட்டம் ஆக்கக்கூடிய சர்க்கார், அவற்றிற்கும் சட்டம் கொண்டு வந்து அமுலாக்க வேண்டுமென்ற எண்ணத்தைச் சொல்வதற்காகத் தான் நான் இவைகளையெல்லாம் கோடிட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு சென்னையில், மவுண்ட் ரோட்டில், புகாரி ஒட்டலுக்கு முன்னாலே, ஒரு படம் போட்டு போஸ்டர் போட்டிருக்கிறார்கள். ஒய்விருந்தால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அந்தப் பக்கமாகப் போகும்போது பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த போஸ்டரிலே படத்தினுடைய





பெயர்கூடப் போட்டிருக்கிறார்கள். ' மசாலா மந்திரவாதி ' என்ற படத்தினுடைய போஸ்டர் அது. அதிலே ஒரு பெண்ணினுடைய படத்தைப் போட்டிருக்கிறார்கள். வயோதிகர் கள் கூட, துறவறம் பூண்டவர்கள்கூட அந்தப் படத்தைப் பார்த்தால், ஏதோ நெஞ்சத்தைக் கிள்ளுகின்ற ஒருவிதமான உணர்ச்சியைத் தூண்டுகின்ற வகையில் ஆபாசத்தோடு போட்டிருக்கிறார்கள். இவைகளைச் சொல்வதனுடைய நோக்கம், ஆபாசத்தைப் பற்றி அக்கறை கொண்டிருக்கிற சர்க்கார், இவைகளையெல்லாம் களைவதற்கான பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்வதற்குத்தான். இன்னும்கூட பல பழைய படங்களை யெல்லாம் பார்த்தால், அவற்றிலே ஆபாசக் காட்சிகள் இருக்கின்றன. சிலபேரைக் கேட்டால் அவை ஆபாசம் இல்லை என்கிறார்கள். ஆனால் ஆபாசம் எது என்று வரையறுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. ஆபாசம் என்பதற்கு என்ன டெஃபனிஷன், விளக்கம் என்று கேட்டால், ஒருவருக்கொருவர், ஒவ்வொருவிதமான விளக்கம் தரலாம். எனக்கு ஆபாசமாகப்படுவது நம்முடைய துணைச் சபா நாயகருக்கு ஆபாசமாக இல்லாமல் இருக்கலாம். அதுபோல், ஒவ்வொரு உறுப்பினருக்கும், ஒருவருக்கொருவர்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அமைசர்களை ஒவ்வொருவராக இழுத்து, கடைசி யிலே என்னை இழுத்து விட்டார்கள். அது சரியல்ல. சீக்கிரம் முடிக்கவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : ஆபாசத்தைப் பற்றி ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொருவிதமான கருத்துக்களுக்கு இடம் இருக் கிறது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். சிற்பங்களைக் கூட ஒரு கலைக் கண்ணோட்டத்தோடு பார்க் கிறார்கள், பக்தி கண்ணோட்டத்தோடு பார்க்கிறார்கள். அதிலே ஆபாசம் இருக்கிறது என்று யாரும் சொல்வதில்லை. சிலருக்கு அவை ஆபாசமாக இருக்கலாம். ஆகையால் ஆபாசம் என்பது என்ன என்பது இந்தச் சட்டத்திலே தீர்மானிக்கப் படவில்லை.

அது மட்டுமல்ல, அதிலே ஆபாசம் என்பதை யார் தீர்மானிப்பது? உதாரணமாக, இப்பொழுது கொண்டு வந்திருக் கிற மசோதாவிலே கலைக்காட்சி நடத்துபவர்கள், பொருட் காட்சி நடத்துபவர்கள், எல்லோரும் சேர்ந்து லைசன்ஸ் பெறவேண்டுமென்றால், சர்க்காருக்கு ஒரு உறுதிப் பத்திரம் கொடுக்கவேண்டும். நாங்கள் ஆபாசமான நடன நிகழ்ச்சி களுக்கு ஏற்பாடு செய்யமாட்டோம். பொருட்காட்சியிலே ஆபாசமான கலை நிகழ்ச்சிகள் இருக்காது, ஆபாசமான நாடகங்கள் இருக்காது என்ற உறுதிப் பத்திரத்தை எழுதிக்

[திரு. அ. ரகுமான்கான்] [1981 ஆகஸ்ட் 22

தொடுக்க வேண்டும். அப்படி எழுதிக் கொடுத்த உறுதிப் பத்திரத்தை மீறுவார்களானால், 'ஷோ காஸ் நோட்டீஸ்'' கொடுக்காமல், அந்த லைசன்சை ரத்து செய்யலாம்.

அதற்கு அடுத்தாற்போல், நம்முடைய தமிழகத்தில், கோயம்புத்தூர் போன்ற பகுதி, மதுரை போன்ற பகுதி, சாதாரண முனிசிபாலிட்டிகள், இங்கெல்லாம் ஒரு குறிப்பிட்ட தொகையை, செக்யூரிட்டி டெபாசிட்டாக, பிணைப்புத் தொகையாக நிகழ்ச்சியை நடத்துபவர்கள் கட்ட வேண்டும். அவர்கள் கொடுத்த உறுதிமொழியை மீறி இருந்தால், ஆபாசம் காட்டப்பட்டால், அந்தத் தொகையைச் சர்க்கார் பறித்துக் கொள்ளும் என்ற ஒரு புதிய ஷரத்து இதிலே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

நான் இங்கே கேட்க விரும்புவது, இதிலே ஆபாசமாக கலை நிகழ்ச்சி இருந்தது, ஆபாசமாக நடனம் இருந்தது. ஆபாசமாக நாடகம் இருந்தது, ஆபாசமான நிகழ்ச்சிகள் இருந்தன என்று தீர்மானிப்பது யார்? அதிகாரிதான். ''காம்பிட்டன்ட் அத்தாரிட்டி'' அதிகாரிதான். அதிகாரி பார்த்து ஒரு டான்சை ஆபாசம் இல்லையென்று சொன்னால் ஆபாசம் இல்லை. அவருக்கு பரத நாட்டியத்திற்கும் ரெக்கார்ட் டான்சுக்கும்கூட வித்தியாசம் தெரியாமல் இருக்கலாம். ஆனால், இந்த ரெக்கார்ட் டான்சை அதிகாரி பார்த்து, அதிலே கலைக் கண்ணோட்டத்தைப் பார்க்கிறேன். அதிலே பரத நாட்டியத்தினுடைய எல்லா அம்சங்களையும் பார்க்கிறேன் என்று முடிவுக்கு வந்துவிட்டால், அந்த ரெக்கார்ட் டான்ஸ் நடத்துபவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியாது. அது அவருடைய பார்வையிலே ஆபாசமாக வராது. அதிகாரி எதைப் பார்த்து ஆபாசம் என்று சொல்கிறாரோ அதுதான் ஆபாசம். அதிகாரி எதை ஆபாசம் இல்லையென்று சொல்கிறாரோ அது ஆபாசம் இல்லை. அதிகாரி எப்படிச் சொல்வார்? ஏராளமான தொகையைப் போட்டு பொருட்காட்சியை நடத்துபவர்கள், கலை நிகழ்ச்சியை நடத்துபவர்கள், அதிகாரியைப் பார்த்து, காட்டுவதைக் காட்டி பெறுவதைப் பெறுகிறபொழுது, அதிகாரிக்கு ஆபாசமாகத் தெரியவே தெரியாது. ஏன் தெரியாது என்றால், அதிகாரிகளுக்கு அந்த கான்ட்ராக்டர்கள் மீது அன்பு வந்துவிடுகிறது. ஆகையினாலே, அந்த அதிகாரத்தை அதிகாரிகளுக்குக் கொடுத்திருப்பது, இந்த மசோதாவின் அடிப்படையிலே சரியாக வராது. இலஞ்ச இலாவண்யத்திற்கு அது வழி வகுக்கும்.

அதோடு மட்டுமல்லாமல், இன்னொன்று தெரிவிக்கிறேன். இதற்கு ரூ. 500 அபராதம் என்று ஏற்கனவே சட்டம் இருக்கிறது. இப்பொழுது, இந்த அரசு கொண்டு வந்திருக்கிற மசோதாவிலே ஒரு புதுமையைச் செய்திருக்கிறது.



1981 ஆகஸ்ட் 22] [திரு. அ. ரகுமான்கான்]

அதாவது, ஒவ்வொரு நாளும் ஆபாசமான நிகழ்ச்சி பொது இடங்களில் இடம் பெறுமானால், ஏற்கனவே செலுத்திய தொகையில் பாதி, அதாவது 50 சதவீதம், அதாவது ரூ. 500 என்று சொன்னால், அடுத்த முறை, ஆபாசமாகக் காட்டினால் ரூ. 500-ஓடு ரூ. 250 சேர்த்து, ரூ. 750 கட்ட வேண்டுமென்று, 'அடிஷனல் ஃபைன்' ரூ. 250 என்று சொல்லியிருக்கிறார்கள்.

[முற்பகல் 11-40]

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த சபைக்குக் கொண்டு வரவிரும்புவதெல்லாம், ஏற்கனவே செய்கிற குற்றத்திற்கு அபராதம் விதிப்பது திரும்பவும் அந்தக் குற்றத்தை ஊக்குவிப்பதுபோலாகும். பொருட்காட்சிகளில், கலை நிகழ்ச்சிகளில் ஆபாச நடனம் நடத்துகிறவர்கள், ஆபாச நாடகம் நடத்துகிறவர்கள், ஆபாச நிகழ்ச்சிகள் நடத்துகிறவர்கள் ஒரு நாளைக்கு 20 ஆயிரம் ரூபாய்கள், 10 ஆயிரம் ரூபாய்கள் வருமானம் வருமானால் சாதாரணமாக அந்த அபராதத்தைக் கட்டிவிட்டுப் போய்விடலாம். எனவே நான் சொல்ல விரும்புவது இந்தமாதிரி ஆபாச நடனம் நடத்துகின்றவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்று சொன்னால் ஒரு பீனல் புரொவிஷன்— ஒரு 3 மாதம் சிறை தண்டனை 4 மாத சிறை தண்டனை— என்ற ஒருநிலையைக் கொண்டு வந்தால்தான் அதைக் கட்டுப் படுத்த முடியும். ஏற்கனவே இருக்கக் கூடிய சட்டத்திலே போலீஸ் பொது இடங்களிலே அனுமதி கொடுக்கிறபோது. அந்த இடம் சரியான இடமா, பொது மக்களைப் பாதிக்கிறதா என்று பார்த்துத் தரவேண்டும் என்றிருக்கிறது. ஏற்கனவே லைசன்சு கொடுத்து ஆபாசமான நிகழ்ச்சிகள் இடம் பெற்றால் சூதாட்ட விளையாட்டு நடந்தால் போலீசும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் உள்ளே சென்று நடவடிக்கை எடுக்கலாம் என்று இருக்கிறது. அந்த லைசென்சை ரத்து செய்யலாம் என்று இருக்கிறது. ஆனால் இவைகள் எல்லாம் காகிதத்தில் எழுதப்பட்ட சட்டமாக, ஷரத்துகளாகத்தான் இருக்கின்றனவே தவிர, நடைமுறையிலே இன்றைக்கு மாறுபட்ட நிலையைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, உங்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வரவிரும்புகிறேன். எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலே நான் சொல்லுகிறேன். அந்தத் தகவல் தவறாக இருக்குமானால் சம்பந்தப்பட்டவர்கள் அதை மறுக்கலாம். ஆளுங் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர், ஒரு இடத்திலே பரதநாட்டியம் என்று நோட்டீஸ் அடித்துவிட்டு, அங்கே ரெக்கார்டு டான்ஸ் நடத்தி இருக்கிறார். விவசாயச் சங்கத்தைச் சார்ந்தவர்கள் அதைத் தடுத்து இருக்கிறார்கள். கட்டணம் வசூலித்து இருக்கிறார்கள், நான் கேட்கிறேன், போலீஸ் ஏன் நடவடிக்கை எடுக்க

[திரு. அ. ரகுமான்கான்] [1981 ஆகஸ்ட் 22

வில்லை? ஆளுங்கட்சிக்காரர் என்பதற்காக ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர் தலைமையிலே ஒரு ரெக்கார்டு டான்ஸ் நடத்தப்பட்டிருக்கிறது. சேலத்திலே இருந்து ரெக்கார்டு டான்ஸ் ஆடுகிற பெண்கள் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள். ஒரு தொழிலாக, சட்டத்தை மீறுபவர்களாக இருந்திருக்கிறார்கள். எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சொல்கிறேன். விரும்பினால் பெயரை வேண்டுமானாலும் சொல்லுகிறேன். தவறு என்று சொன்னால், அது தவறு என்று அவர் தெரிவிக்கலாம். அதற்கு ஒரு உரிமை பிரச்னை கொண்டு வர அவசியம் இல்லை. எனக்குக் கிடைத்திருக்கக் கூடிய தகவலைத்தான் சொல்லுகிறேன். தவறு என்று சொன்னால் அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அந்தச் சம்பவம் இப்படி நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.

ஆகையினாலே இந்தச் சட்டத்தினுடைய முக்கியமான அடிப்படை இங்கே கொண்டுவரப்பட்டிருக்கக் கூடிய சட்டதிருத்தத்தில், ஆபாசத்தை ஒழிப்பது என்று சொன்னால் சூதாட்டத்தை ஒழிப்பது என்று சொன்னால் இந்தச் சட்டப் பிரிவில் ஒரு பீனல் புரொவிஷன்-சிறைதண்டனை தரும் அமைப்பு— இருக்கவேண்டும். ஆபாசம் என்றால் என்ன என்பதை வரையறுக்கவேண்டும். நேற்றைக்குக் கூட நான் பத்திரிகையில் படித்தேன். நீதிபதி சந்திரசூட் அவர்கள் நீதிமன்றத்திலே நுழைந்தபோது ஆபாசமாக உடையணிந்து கோர்ட்டுக்கு வந்திருந்த ஒரு பெண்ணைப் பார்த்து, வக்கீலை அழைத்து அந்தப் பெண் இதுமாதிரி ஆடை அணிந்து வரக்கூடாது, அது ஆபாசம் என்று சொல்லி வெளியே அனுப்பச் சொல்லி இருக்கிறார். ஆகவே இன்றைக்குப் பல பெண்மணிகள் ஆடைகளைப் பார்த்தால் அலங்கோலமாக இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஆடைகளிலே ஆபாசம் சினிமாக்களிலே ஆபாசம் இருக்கிறது. சுவரொட்டிகளிலே ஆபாசம் இருக்கின்றது. பத்திரிகைகளிலே ஆபாசம் இருக்கின்றது. வாரப் பத்திரிகைகளிலே ஆபாசங்கள் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, மேடைப் பேச்சுக்களிலே கூட ஆபாசங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அதையும் நாம் மறுக்க முடியாது. இன்றைக்குப் பல்வேறு சம்பவங்களைச் சுட்டிக்காட்டலாம். ஆகவே இவைகளை எல்லாம் தடுப்பதற்கு இந்தச் சர்க்கார் கொண்டுவரக்கூடிய இந்த மசோதாவின் அடிப்படையிலே கொண்டு வரக்கூடிய திருத்தம் சரியாக இல்லை. அது சிறைத் தண்டனை வழங்கவேண்டும் என்ற அடிப்படையில் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு ஷோ காஸ் நோட்டீஸ் கொடுக்கவேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். ஏற்கனவே தப்பு செய்து ஆபா[illegible] நடனம் ஆடி, அவர்களுக்கு 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்[illegible] [illegible]



1981 ஆகஸ்ட் 22] [திரு. அ. ரகுமான்கான்]

விதத்திலே நியாயம் ஆகும். அது திரும்பத் திரும்ப ஆபாசமாக நடனம் ஆடுவதற்கு, ஆபாசமாக காட்சிகள் நடத்துவதற்கு துணை செய்யுமே தவிர, இந்தப் பிரிவின் மூலம் எந்தப் பலனும் கிடைக்காது. எனவே, இந்தப் பிரிவை நீக்கி குறைந்தபட்சம் 3 மாதம் சிறைத்தண்டனை வழங்கவேண்டும் என்ற பிரிவு இணைக்கப்படவேண்டும் என்ற என்னுடைய திருத்தத்தை இங்கே நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

இன்னொன்று, செக்யூரிட்டி டெப்பாசிட் கட்டுகிறார்கள். எதற்காக என்று சொன்னால் ஆபாசமான நிகழ்ச்சி இருக்காது என்பதற்காக, அந்த உறுதிமொழிப் பத்திரம் மீறப்படுமானால் அந்தத் தொகையை சர்க்கார் பறித்துக் கொள்ளும். அப்படி பறித்துக் கொள்கிறபோது 'ஷோகாஸ் நோட்டீஸ்' கொடுக்காமலேயே அதாவது ஏன் உங்களுடைய உரிமத்தை ரத்து செய்யக் கூடாது என்று கேட்காமலேயே உரிமத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்வது முறையாகாது. அது நேச்சுரல் ஜஸ்டிஸ் என்று சொல்லக்கூடிய இயற்கை நியதிக்கு முரண்பட்டதாகும். அதிகாரிகள் லஞ்சம் வாங்குவதற்கு உதவியாக இருக்கும். தனக்கு வேண்டியவர்களுக்கு அந்த லைசன்சை வைத்துக் கொண்டு வேண்டாதவர்களுக்கு ஆபாச நிகழ்ச்சி இடம்பெற்றிருக்கிறது; எனவே ரத்து செய்கிறேன் என்று சொல்வதற்கு இடம் கொடுக்கும்.

அதுமட்டுமல்லாமல், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிகாரிகளைத் தூண்டி நடவடிக்கை எடுப்பதற்கு உதவியாக இருக்கும். எனவே உண்மை என்னவென்று கண்டறிய வேண்டுமானால் ஒரு 'ஷோகாஸ் நோட்டீஸ்' தந்தாகவேண்டும் என்பதையும் நான் தெரிவித்துக் கொண்டு, இந்த மசோதாவின் அடிப்படை நோக்கம் ஆபாசத்தை ஒழிப்பதாக இருந்தாலும் சூதாட்டத்தை ஒழிப்பதாக இருந்தாலும், குறிப்பாக கண் காட்சிகளிலும் பொது காட்சிகளிலும் மட்டும்தான் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்லிவிட்டு, மற்ற பல்வேறு இடங்களில் ஆபாசங்களை வைக்க அமைதியாக இருந்து கொண்டு இந்த சர்க்கார் இருப்பது, அதன் கவனத்திற்கு வராதது போல இருப்பது குதிரையை விட்டுவிட்டு, குதிரை லாயத்தை பூட்டுவது போன்றதாகும் என்று சொல்லி, ஆபாசம் ஒழிக்கப்பட வேண்டும் என்று சொன்னால், எல்லா துறைகளிலும் இருக்கக் கூடிய ஆபாசத்தை ஒழிக்க சட்டம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தை உங்கள் சொந்தக் கட்சிக்காரர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு மீறக் கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் அந்த ஆபாசத்திற்கு வழி வகுக்கிற வகையிலே ரெக்கார்டு டான்ஸ்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்; நடக்கப்பட்டது என்ற என்னுடைய

[திரு. அ. ரகுமான்கான்] [1981 ஆகஸ்ட் 22

தகவலை இங்கேச் சொல்லி நான் இந்த அளவிலே இந்த மசோதாவிலே இந்த திருத்தம் சேர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை நிறைவு செய்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் திருத்தச் சட்டத்தை, அதனுடைய பொதுவான கோட்பாடுகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொள்கிறது என்பதை நான் முதலிலே குறிப்பிட விரும்புகிறேன். அதனாலே இந்தப் பிரச்சினையிலே அரசாங்கம் எவ்வாறு இதை கவனிக்க வேண்டும் என்பதைப் பற்றி சில கருத்துக்களை நான் இங்கே கூற விரும்புகிறேன். முதலாவதாக 1888 ஆம் ஆண்டிலே கொண்டு வரப்பட்டிருக்கிற ஒரு சட்டத்திற்கு இது திருத்தச் சட்டமாக அமைகிறது. இதைப்பற்றி பொதுவாக நான் கூற விரும்புகிறேன். இந்தியா சுதந்திரம் அடைவதற்கு நீண்ட நாட்களுக்கு முன்பாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினுடைய ஆட்சி நாடு பூராவும் இருந்த காலத்திலே கொண்டு வரப்பட்ட ஒரு பழைய சட்டத்தை இன்றைக்கு முன்போல வைத்துக் கொண்டு அதைத் திருத்துவது என்பதே நம்முடைய நிலைமைகளுக்கு ஒத்து வராது என்று கூற விரும்புகிறேன்.

ஆகவே அந்தச் சட்டத்தை ரத்து செய்து விட்டு புதிதாக இன்று இருக்கக் கூடிய நிலைமைகளுக்கு ஏற்றவாறு பொதுமக்கள் கூடக்கூடிய இடங்களிலே ஒரு புதிய சட்டத்தை கொண்டு வருவதற்கு அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக இங்கே ஏற்கனவே சொல்லப்பட்டதைப் போல இந்த விழாக்களையும், பொருள் காட்சிகளையும் மாநில அரசாங்கம், மாவட்டங்களிலே உள்ள அரசினுடைய நிர்வாகங்கள் அல்லது உள்ளாட்சி மன்றங்கள், நகர மன்றங்கள் பேரூராட்சி மன்றங்கள், அரசியல் அமைப்புகள் இப்படிப்பட்ட விழாக்களை நடத்தினால் தான் இதற்கு ஒரு சரியான பரிகாரம் ஏற்படும் என்று கூற விரும்புகிறேன். தனிப்பட்டவர்கள் இம்மாதிரியான உரிமைகளை எடுத்துக் கொண்டு அவைகளை நடத்தினால் அவர்களுடைய நோக்கமே இலாபம். ஆகவே இலாபத்தை அடைவதற்காகத் தான் சூதாட்ட விளையாட்டை அதிலே நடத்துகிறார்கள். இலாபத்தை அடைவதற்காகத் தான் அதிலே இம்மாதிரியான ஆபாச நடன நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறார்கள். ஆகவே அங்கே தான் வருகிறது; அதனாலே அவர்கள் கையிலே அதை விடாமல் சாத்தியமான அளவிற்கு நாடக நடிகர்களுடைய மன்றங்கள், நாட்டியங்கள் நடத்தக்கூடிய மன்றங்கள் போன்ற அந்த பொது அமைப்புகள், இப்படிப்பட்ட விழாக்களை நடத்துவதற்கு அரசாங்கம் ஊக்கம் அளிக்க வேண்டும். அந்த ஊக்கம் அளிப்பதற்கு அவர்களுக்கு என்னென்ன உதவிகள் தேவைபடுகிறதோ அதை செய்ய வேண்டுமென்று கூற விரும்புகிறேன். ஆனால் பல இடங்களில் பார்த்தால்



1981 ஆகஸ்ட் 22] [திரு. என். சங்கரய்யா]

நகராட்சிகளும், பேரூராட்சிகளும் இம்மாதிரியான பொருட்காட்சிகளை நடத்துவதற்கு அவர்கள் வருவதில்லை, வாய்ப்பு கிடைத்தால் கூட அதை தாங்கள் நடத்துவதை தவிர்த்துவிட்டு தனியார் காண்ட்ராக்டர்களுக்கு விட்டு விடுவதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள். ஆகவே அவர்கள் எவ்வாறு காண்ட்ராக்ட் எடுத்துக்கொண்டார் நகராட்சிக்கு அந்த இடத்தை காண்ட்ராக்ட் எடுத்துக் கொண்டு, அதை கொடுத்துவிட்டு பிறகு தாங்கள் இலாபம் சம்பாதிப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென்று வரக் கூடிய காலத்திலே தான் இம்மாதிரியான சட்டங்கள் எல்லாம் மீறப்படுகின்றன என்பதை நாம் தெளிவாகப் பார்க்கிறோம். ஆகவே மக்களுக்கு ஆரோக்கியமான கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். அவர்களுக்கு நல்ல உணர்வுகளை ஊட்டக்கூடிய, அழகிய அம்சங்களை பொருக்கக் கூடிய நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்வதற்கு நம்முடைய பொது அமைப்புகள் முன் வரவேண்டும். பொதுவாக ஒரு இடத்திலே, ஒரு உள்ளாட்சி மன்றத்தில் ஒரு பொருட்காட்சி நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கக்கூடிய இடங்களிலே எல்லாம் அந்த உள்ளாட்சி மன்றங்கள் தான் அதை அவசியமாக நடத்த வேண்டும். தனியார்களிடத்திலே அதை காண்ட்ராக்ட் விடக்கூடாது என்று நாம் வற்புறுத்த வேண்டும்.

[முற்பகல் 11-50]

மதுரை மாநகராட்சியில் கூட தனிப்பட்டவர்கள் பொருட்காட்சி நடத்த இடவசதி செய்து கொடுத்த சூழ்நிலையை நாம் பார்த்தோம். அப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க வேண்டும். அப்போதுதான் ஒரு ஆரோக்கியமான நல்ல பொருட்காட்சியை நடத்த முடியும்.

இந்த மாதிரியான சூதாட்ட நிகழ்ச்சிகள் நடக்காமல் தடுக்கப்பட வேண்டுமென்றால் திறமையின் அடிப்படையிலே நடைபெறும் விளையாட்டுக்களை நாம் ஊக்குவிக்க வேண்டும். பொருட்காட்சியில் அம்மாதிரியான வீர விளையாட்டுக்களுக்கு இடமில்லை என்றால் மக்களுக்கு ஒரு மாற்றுப்பாதை என்ன? மாற்றுப்பாதை என்பது விளையாட்டுக்கள், வீர விளையாட்டுக்கள்தான். ஆகவே, அவைகளை அரசு ஊக்கப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சூதாட்டங்களையும் மற்ற கேடுகளையும் ஆபாசமானது, தகுதியற்றது என்று கருதி கண்டனம் செய்வதால் மட்டும் பரிகாரம் காணமுடியாது. ஆரோக்கியமான நல்ல கருத்துக்களை உருவாக்கும் நிகழ்ச்சிகளுக்கும் நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் எத்தனையோ நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தும் கலைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வாய்ப்பளிக்கலாம். இன்றைக்கு அவர்கள் எல்லாம் ஆதரவு இல்லாமல் இருக்கிறார்கள். மதுரையில் நாடகங்கள், நாட்டியங்கள் நடத்தும் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வாய்ப்பு இல்லாமல்

இருக்கிறார்கள். அவர்களுக்கு இப்படிப்பட்ட பொருட்காட்சிகளில் கலை நிகழ்ச்சிகள் நடத்த, நாட்டியம் நடத்த, நாடகம் நடத்த அரசாங்கம் வாய்ப்பளித்தால் நிச்சயமாக ஒரு மாற்றம் காண முடியும்.

அது மட்டுமல்ல. கிராமிய நிகழ்ச்சிகளுக்கு, கிராமிய கலைகளை வளர்ப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டால் இப்படிப்பட்ட ஆபாசம் நடக்க வழியில்லாமல் போகும் வாய்ப்பு ஏற்படும். சமீபத்தில் மதுரையில் கிராமிய கலைகளை வளர்ப்பதற்கு என்று ஒரு கல்லூரியை ஏற்படுத்தியிருக்கிறார்கள், அங்கே கிராமிய நடனங்கள், கரக ஆட்டம், நாட்டியம், போன்றவைகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பழங்கால கிராமியக் கலைகள் அழிந்துகொண்டே வருகின்றன. உள்ளாட்சித் துறைகளின் மூலம் அல்லது அரசாங்கத்தின் மூலம் நடத்தப்படும் பொருட்காட்சிகளில் அந்த கிராமிய கலை நிகழ்ச்சிகளை நடத்திக் காட்ட வாய்ப்பளித்தால் அந்தக் கலைஞர்களுக்கு ஆதரவு அளிப்பதாகவும் இருக்கும்; அந்தக் கலைகளும் வளரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இதிலே கண்ணியமற்றது அல்லது ஆபாசம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் 'இன்டீசன்ட் அண்ட் அப்சீன்' என்று இருக்கிறது. இதிலே கண்ணியமற்ற அல்லது ஆபாசம் என்பது மிகவும் பரந்த பொருளை கொடுப்பதாக இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு அதிகாரிகள் வேண்டாதவர்களுடைய நிகழ்ச்சி என்றால் அதை தடை செய்யும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே மற்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல கண்ணியமற்ற அல்லது ஆபாசமான என்பதற்கு ஒரு குறிப்பிட்ட வரையறையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு மாநில அரசு தன்னுடைய கலை, பொது தகவல் தொடர்பு துறையை கலந்து, நாடக, நாட்டிய கலைஞர்களையும் கலந்து, எழுத்தாளர் சங்கத்தையும் கலந்துகொண்டு இதற்கான ஒரு வரையறையை செய்துகொள்வது நல்லது. இல்லாவிட்டால் நல்ல நாடகமாக இருந்தாலும் அது ஆபாசமானது என்று முன் விரோதம் காரணமாகச் சொல்லி, தடை செய்ய முடியும். அதற்கு இடம் தரக்கூடாது.

மக்களுடைய கீழ்த்தரமான உணர்வுகளைத் தூண்டக்கூடியதுதான் கண்ணியமற்றது அல்லது ஆபாசமானது என்று கருத வேண்டும். ஆரோக்கியமான கலை நிகழ்ச்சிகள் வளர்க்கப்பட வேண்டும். குறிப்பாக ஆபாசமானது என்பதற்கான உரைகல் என்ன என்று திரு. ரகுமான்கான் அவர்கள் கேட்டார்கள். அதைப் பார்க்கின்ற மக்கள்தான் அதற்கு உரைகல். மக்கள் மத்தியில் ஒரு நிகழ்ச்சிக்கு ஆட்சேபம் வருகிறது என்றால் மக்கள் அதை விரும்பவில்லை என்று பொருள், அது ஆபாசமானது என்று கருதப்படவேண்டும். அந்த அடிப்படையில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.





மாநகராட்சிகளில் கமிஷனர், கிராமங்கள் அளவில் வருவாய்த் துறை அதிகாரிகள்— இவர்களுக்கு முடிவு செய்யும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எது ஆபாசமானது என்பது பற்றி முடிவு செய்யும் மேலதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத்தான் இருக்க வேண்டும். மற்ற அதிகாரிகள் சொன்னாலும் கூட அங்கே இருக்கிற பப்ளிக் பிராசிகியூட்டர், அரசாங்கத்தின் சார்பில் சட்ட ரீதியாக நியமிக்கப்பட்டிருக்கிறவர்கள், முன் விரோதம் இல்லாமல் ஆராய்ந்து பார்த்து முடிவு சொல்பவர்கள் ஆகியோரைக் கேட்டுக்கொண்டுதான் அதிலே ஆபாசம் இருக்கிறதா இல்லையா என்று மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதைப் பற்றி விமர்சிக்கும்போது, வியாக்கியானம் செய்யும்போது திரு. ரகுமான்கான் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். திரைப்படங்களைப் பற்றிச் சொன்னார்கள். சினிமாப் படங்களை தணிக்கைச் செய்வதற்கு தணிக்கைச் சட்டம் இருக்கிறது. தணிக்கைப் போர்டு இருக்கிறது. நாமும் இந்த கலை நிகழ்ச்சிகளில் எது ஆபாசம் எது ஆபாசம் இல்லை என்பதைப்பற்றி முடிவு செய்ய, தவறுகள் நேராமல் இருக்க, இதிலே விதிமுறைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதை மேற்பார்வையிடுபவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் என்ற அளவிலே இருக்கவேண்டும்.

அடுத்து இன்றைக்கு இப்படிப்பட்ட சூதாட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுவதைத் தடுக்கவேண்டும் என்றால் ஆக்கபூர்வமான வேறு விளையாட்டுக்களையும், பந்தயங்களையும், பொருட்காட்சி போன்றவற்றில் ஏற்படுத்துவதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து, இப்போது சில நாடகங்கள் நடத்துவதைப் பொறுத்தவரையிலே அவற்றை போலீசார் சென்சார் செய்கிறார்கள், அது மிகவும் தவறான ஒரு முறையாகும். கோமல் சுவாமிநாதன் அவர்கள் சிறந்த நாடக ஆசிரியர். சமீபத்தில், அவர் எழுதிய ஒரு நாடகத்தை ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் தணிக்கை செய்திருக்கிறார். அதைச் செய்வதற்கு அவர் எந்த வகையிலே பொருத்தமானவர்? அப்படி ஒரு இன்ஸ்பெக்டர் பார்த்து இந்த நாடகத்திலுள்ள இந்த, இந்த வரிகளை நீக்கவேண்டும் என்றும், இந்த இந்த அம்சங்களை நீக்கவேண்டும் என்றும் சொல்கிறார் என்றால் நாடக ஆசிரியர்கள் எவ்வளவு வருத்தப்படுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே இவ்வாறு தணிக்கை செய்கின்ற பொறுப்புகள் எல்லாம் மேல் மட்டத்திலே உள்ள நியாயமான வழியிலே எண்ணிப் பார்க்கின்றவர்களிடத்திலே அதாவது கலை சம்பந்தப்பட்டவர்களிடத்திலே ஒப்படைக்கப்படவேண்டும். அவர்கள் பார்த்து பரிசீலனை செய்வது என்ற நிலைமை இருக்கவேண்டும்.

[திரு. என். சங்கரய்யா] [1981 ஆகஸ்ட் 22

அடுத்து பொது மக்களின் [illegible] கருத்துக்களை பிரதிபலிக்கக்கூடிய நாடகங்கள் பல ஸ்தாபனங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அவற்றைத் தடை செய்வதற்கு இந்த சட்டம் பயன்பட்டுவிடக் கூடாது என்ற வகையிலே தக்க ஏற்பாடுகளை [illegible] செய்யவேண்டும்.

அடுத்து பிணையத் தொகை பற்றி கொடுக்கப்பட்டிருக்கின்றது. பறிமுதல் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் இதுபற்றி நான் என்ன சொல்கிறேன் என்றால் அப்படி ஏதாவது தவறாக நடைபெற்றதாகத் தெரிந்தால் உடனடியாக அரசு தலையிட்டு அதைத் தடுப்பது தான் முக்கியமான விஷயம். ஆகவே மக்கள்தான் இன்றைக்கு எதையும் தீர்மானிக்கக் கூடிய சக்தியாக இருக்க முடியும். ஆகவே ஆங்காங்கே உள்ள தொழிற் சங்கங்கள், விவசாயச் சங்கங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய சங்கங்கள் போன்ற அமைப்புகளிடம் இருந்து கடுமையான எதிர்ப்புகள் வந்தால் உடனடியாக அரசாங்கம் தலையிட்டு தவறான நிகழ்ச்சிகளை உடனடியாக நிறுத்திவிடலாம். அப்படி நிறுத்துகின்றபோது வேறு எந்த காழ்ப்புணர்ச்சிகளோ, அல்லது விரோதங்களோ காரணமாக ஒருதலைப்பட்சமாக நிலைமைகள் ஏற்பட்டுவிடக்கூடாத வகையிலே நடவடிக்கைகள் இருக்க வேண்டும். அதற்கான பகுதிகள் விதிகளிலே இடம் பெற்றிருக்க வேண்டும்.

இதிலே அபராதம் போடுவதற்கு வகை செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் தண்டனை அம்சத்தை விட தவறுகள் நடைபெறுவதை தடுப்பதுதான் முக்கியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தடுப்பு அம்சம்தான் முக்கியம். ஆனால் தற்காலிக நிறுத்தத்திற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லாத காரணத்தினால் இதை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எடுத்துக்கொள்ளட்டும். ஆனால் பிணையத் தொகை கோருதல், பறிமுதல் செய்தல் போன்றவை முறையாகச் செய்யப்பட வேண்டும். இதிலே தவறு நடக்கின்றது என்றால் அதற்கு மேல் விண்ணப்பம் செய்துகொள்வதற்கு வழிவகை செய்யப்படவேண்டும்.

மொத்தத்திலே தனியார் நடத்துவது என்று ஆரம்பித்தாலே லாபத்திற்காகத்தான் நடக்கும். இதுதான் அடிப்படை பிரச்சினை. தமிழகம் முழுவதிலும் அரசாங்கத்திற்கு இப்படி வருகின்ற பிரச்சினைகளை எடுத்துப் பார்த்தால் அதில் 100-க்கு 90 லாபம் சம்பாதிப்பதற்காக நடக்கின்ற நிகழ்ச்சிகளாகத்தான் இருக்கும். ஆகவே அரசாங்கம், உள்ளாட்சி மன்றங்கள் போன்றவை நாடகங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். மேலும் பொருட்காட்சி கலை அரங்குகளில் பலவற்றை தடை செய்கிறோம் என்று சொல்கின்றபோது நல்ல கலை அம்சங்கள் மறைந்துவிடுகின்ற நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது. ஆகவே அவற்றை நல்ல முறையிலே நடத்துவதற்கு அரசாங்கம் எந்தெந்த



1981 ஆகஸ்ட் 22] [திரு. என். சங்கரய்யா]

வழிகளில் எல்லாம் உதவி செய்ய முடியுமோ அந்தந்த வகைகளில் உதவி செய்யவேண்டும். நல்ல இலக்கியங்கள், மக்களிடையே இருந்து தீண்டாமை உணர்வுகளைப் போக்குகின்ற நிகழ்ச்சிகள், சமுதாய ஏற்றத் தாழ்வைப் போக்குகின்ற நிகழ்ச்சிகள், ஜாதி மத உணர்ச்சியை நீக்கி மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துகின்ற கருத்துகளைக் கொண்ட நாடகங்கள், நாட்டியங்கள், பல்வேறு கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றிற்கு ஆக்கபூர்வமான உதவிகளைச் செய்வதுதான் சரியான பரிகாரமாக இருக்கும் என்றுகூறி, அந்த அடிப்படையிலேயே இந்த சட்டத்தினுடைய அடிப்படை கொள்கையினை வரவேற்று அரசாங்கத்திலே ஏற்படக்கூடிய அனுபவங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு இதிலே திருத்தங்கள் செய்து கொள்ளலாம் என்று கூறி, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்

[நண்பகல் 12–00]

*டாக்டர் கே. சமரசம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு பொது மக்கள் வழக்கமாய்க்கூடும் இடங்கள் (திருத்த) சட்டமுன்வடிவினை ஆதரித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

பொதுவாகவே, கலை, கலாச்சாரம் இவைகளை விளக்கக்கூடிய கண்காட்சிகள், பொருட்காட்சிகள் ஆங்காங்கே நடைபெற்றுக்கொண்டிருந்தாலும்கூட, அவைகளிலே சில ஆபாசங்கள் இருக்கின்றன என்பதற்காகவே அவைகளை தடைசெய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதாவின் மீது பேசிய எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட, எல்லாருமே பொதுவாகவே வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள்.

அதே நேரத்தில், தமிழ்நாட்டினுடைய கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம் இவைகளெல்லாம் தாழ்ந்து போகாமல், அழிந்து போகாமல் இருக்கக் கூடிய வகையில், வேறுமொழிகளால், வேறு கலாச்சாரங்களால் பாதிப்பு ஏற்படுவதை தடுக்கக் கூடிய வகையில் அரசாங்கமே முன் வந்து நிரந்தரமான ஒரு கலாச்சாரக் கண்காட்சி போன்று ஏற்பாடு செய்தால் மிகச் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். ஏனெனில் சமூக நெறி, சமுதாய நெறி, கலாச்சார நெறி போன்றவைகள் எல்லாம் எப்படி எப்படியோ சரிந்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்திலே, சட்ட நெறியை கொண்டு ஆட்சி செய்கிற அரசுக்குத்தான், அதனை காக்க வேண்டிய பொறுப்பும் இருக்கிறது. தாய்லாந்திலே, தாய் வில்லேஜ் என்ற பெயரில் ஒரு கலாச்சார கிராமமே இருக்கிறது. அந்தக் கிராமத்தில் அந்த நாட்டினுடைய கலாச்சார பண்பாடு, ஆதி காலத்திலேயிருந்து

அவர்கள் எந்தெந்த முறைகளிலே திருமணம் செய்து கொண்டார்கள், உடற்பயிற்சிகள் என்ன? விளையாட்டுகள் என்ன, கலை என்ன, கலாச்சாரம் என்ன, நாகரிகம் என்ன, தொழில் வளர்ச்சி என்ன என்பவைகளை யெல்லாம் வெளிநாட்டிலிருந்து வருபவர்களும், சுலபமாகப் புரிந்துக் கொள்ளும் வகையில், அந்த நாட்டின் அரசாங்கமே அந்த இடத்தில் நிரந்தரமாக கண்காட்சியாக செய்து வைத்திருக்கிறது. அந்தக் கண்காட்சிக்கு, கட்டணம் கூட வைத்து வசூலிக்கிறார்கள்.

தற்போது, அந்த நாட்டினுடைய கலாச்சாரம் உலக நாடுகளிடையே போட்டியிடக்கூடிய அளவிற்கு முன்னேற்றம் அடைந்து மாறிவிட்டாலும் கூட, அதனுடைய பழைய தன்மைகள் கெடாமல், அவற்றின் மரபுகள், கலைகள் கலாச்சாரங்கள் போன்றவற்றை வெளிநாட்டிலிருந்து வருபவர்கள், ஒரே இடத்திலேயே அந்த நாட்டைப்பற்றி முழுமையாகத் தெரிந்துக் கொள்ளக் கூடிய வகையில் ஒரு ஏற்பாட்டை செய்திருக்கிறார்கள். அதைப் போன்ற ஒரு ஏற்பாட்டை இந்த அரசும் செய்ய முன் வந்தால் அது சாலச் சிறந்ததாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் சொன்னதைப் போல, ஆபாசத்தை ஒழிப்பதற்கும், கலை கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம் போன்றவற்றை காப்பதற்கும், நலிந்த பல கலைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் அது உதவியாக இருக்கும்.

உலகத்திலே உள்ள பல்வேறு நாடுகளைச் சுற்றிப் பார்க்கிறபோது, எந்தக் கலைகளை பார்த்தாலும் கூட, தமிழ்நாட்டினுடைய ராஜநர்த்தகி சொர்ணமுகி அவர்களுடைய நாட்டியத்திற்கு இணையான கலையாக எதுவுமே அங்கேயெல்லாம் இல்லை என்று சொல்லக் கூடிய அளவிற்கு மிகப் பெருமையாக இருக்கிறது. நடராஜர் சிலை கூட அந்த கலைக்காக உருவாக்கப்பட்ட ஒரு ஆண்டவனாகத்தான் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இவைகளையெல்லாம் பாதுகாப்பு செய்து, நலிந்த சிறந்த கலைஞர்களை தொடர்ந்து ஊக்குவித்து, பயிற்சிகள் அளித்து கலைகளையும் கலாச்சாரங்களையும் அரசு வளர்க்க முன்வரவேண்டும். சில கலைஞர்கள் மறைந்த பிறகு, அந்தக் கலையே இல்லாமல் மறைந்து போகக்கூடிய நிலையெல்லாம் இருக்கிறது. ஆகவே, அவைகளைப் பாதுகாக்கக் கூடிய வகையில் அரசாங்கம் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

ஆபாசம் என்பதைப்பற்றி எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. இரகுமான்கான் அவர்கள் மிக அரிய பெரிய கருத்துக்களையெல்லாம், நாட்டிலே உள்ள மொத்த ஆபாசங்களின் பிரச்சினைகளைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளார்கள். இந்தச் சட்டத்திலே ஆபாசம் என்பது தனிப்பட்ட ஒரு சிறு விஷயமாகத்தான் இருக்கிறது. ஆனாலும் கூட அவர்கள் மொத்தக் கருத்துக்களையும் எடுத்து வைத்தார்கள். இருந்



தாலும் கூட கலை என்பது கட்டுப்பாட்டோடு, நல் உணர்வோடு பண்புகளை எடுத்துச் சொல்வதுதானே தவிர, அதில் ஆபாசம் என்பதற்கு இடம் இல்லை. தவிரவும் மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் சொன்னதைப் போல ஆபாசம் என்பதை நிர்ணயிக்கும் உரைக்கல்லாக இருக்கக் கூடியவர்கள், அந்த நேரத்தில் குழுமியுள்ள ஆடியன்ஸ் தானே தவிர மற்றவர்கள் அல்ல. அதுவுமல்லாமல் ஆபாசம் என்பது இடத்தைப் பொறுத்தது.

மருத்துவப்பிரிவிற்குச் சென்று அங்குள்ள உடலை ஆபாசம் என்று நாம் ஒதுக்கிவைத்தால், உடலின் பல நோய்களுக்கு மருந்து கண்டுபிடிக்க முடியாது. அவைகளை உற்பத்தி செய்யவும் முடியாது. ஆகவே, இடத்தைப் பொறுத்துத்தான் எதுவும் நிர்ணயிக்கப்பெறுகிறது. சுடுவது என்பது பொதுவாக குற்றம். ஆனால் இராணுவத்தினர் சுட்டால் அவார்டு கிடைக்கிறது. அவர்களின் பரம்பரைக்கே மானியம் கிடைக்கிறது. ஆனால், இங்கே மற்ற இடங்களில் இருப்பவர்கள் சுட்டால், தூக்குக் கயிறுதான் அவர்களை முத்தம் இடும். ஆகவே, சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பவைகளை சரியாகப் புரிந்துக் கொள்ள வேண்டும். ''காதலிக்காதே என்று சொன்னால் கல்யாணம் செய்துக் கொள்ளாதே'' என்று பொருள் அல்ல. காமுகனாக வாழாதே, அப்படி வாழக் கூடாது என்பது தான் பொருள்.

அண்மையிலே சென்னை பல்கலைக் கழகத்தில் நாடக கலைப் பற்றி பேசுகிறபோது, நாடகக்கலையிலே இருக்கிற சில விஷயங்களைப் பற்றி வரையறை படுத்தவும், அதற்கு இன்னார் இன்ன முறையில் நடத்த வேண்டும் என்று உரிமை படுத்தவும் எந்த விதமான கட்டுப்பாடும் இல்லாத நிலை இருப்பது சரிதானா என்ற கேள்வி எழுப்பப்பட்டது? உண்மையிலேயே அது பிரச்னைதான். நாடகத் துறையிலே உள்ள நல்லது, கெட்டதுகளை, இலக்கியங்களை, இலக்கணங்களை, வசனங்களை எதை எதை வைக்க வேண்டும், எதை எதை நீக்க வேண்டும் என்று பார்த்து நாடகம் நடத்த உரிமை அளிக்கும் வகையில் அரசாங்கம் ஒரு அமைப்பை ஏற்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி இருந்தால் தமிழ்நாட்டின் கலை, கலாச்சாரம், பண்பாடு போன்றவைகளை ஓரளவு காக்க முடியும். ஏனெனில் கலை பற்றி, இலக்கியத்தைப் பற்றி, நாடகங்களைப் பற்றி, போலீஸ் துறையிலே இருப்பவர்கள் முழுமையாக கற்றவர்களாக இருக்க முடியாது என்ற காரணத்தினால் இப்படி ஒரு சூழ்நிலையை கொண்டு வருவது ஒரு தலை சிறந்த ஏற்பாடாக இருக்கும் என்பதைக் கூறி, கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த நல்ல மசோதாவை ஆதரித்து, அமர்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது மக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவினை வரவேற்று சில கருத்துக்களை கூறுவதற்கு நான்

[திரு. இரா. கருப்பையா] [1981 ஆகஸ்ட் 22

விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவு குறிப்பாக ஆபாச நடனங்களையும் மற்றும் பொருட்காட்சிகளில் நடைபெறக்கூடிய விரும்பத்தகாத காரியங்களையும் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இன்றைய தினம், தனியார்களுக்கு இம்மாதிரியான பொருட்காட்சிகளை நடத்துவதற்கான அனுமதியை வழங்குவதன் மூலமாக இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கத்தை நாம் நிச்சயமாக நிறைவேற்ற முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னதான் நல்ல சட்டங்களை நாம் இயற்றினாலும், அந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை, காரியங்களை நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னால், அரசின் நோக்கங்களை நிறைவேற்றும் பொறுப்பிலுள்ள நிர்வாகங்கள் அதற்கான பொறுப்பினை ஏற்று, அவற்றை நிறைவேற்றக் கூடிய காலத்தில்தான் அச்சட்டத்தின் பலனை முழுமையாக அனுபவிக்க முடியும்.

தனியார்களுக்கு பொருட்காட்சிகளை நடத்துவதற்கு அனுமதி வழங்குவோமானால் அவர்கள் ஏதாவது ஒரு இடத்தில் இருக்கிற சந்து பொந்துகளைப் பயன்படுத்திக்கொண்டு, சட்டத்தின் நோக்கங்களை முறியடிக்கக் கூடிய வகையில் காரியங்கள் நடைபெறும், நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. எதிர்காலத்திலும் அம்மாதிரி நடப்பதற்கான வாய்ப்புகள் இருக்கும் என்ற காரணத்தினால் அரசாங்கம் பொருட்காட்சிகள் நடத்துவதை தனியார்களுக்கு விடுவது என்பதைத் தடுக்கக்கூடிய முறையில் பொது நிறுவனங்களுக்கு அவற்றை நடத்த விட வேண்டும். பொது நிறுவனங்கள் என்று நான் சொல்லும்போது, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் போன்றவை இவற்றை நடத்துவதற்கான முறையில் வகை செய்ய வேண்டும். அதற்கான முறையில் அவர்களுக்குத்தான் இந்தப் பொறுப்பை கொடுக்க வேண்டும் என்ற முறையில் இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் இதன் நோக்கத்தினை நிறைவேற்ற அவைகள்தான் நன்கு செயல்படும் என்பது மட்டுமல்ல. இந்த மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மக்களுக்குத் தேவையான சாலை வசதிகள், சுகாதார வசதிகள் போன்றவற்றைச் செய்து கொடுக்கின்றன. அப்படி பல்வேறு காரியங்களைச் செய்துதரவேண்டிய பொறுப்பிலிருக்கிற இந்த நிர்வாகங்கள் போதுமான நிதி வசதி இல்லாமல் மக்களிடத்தில் வரி போட்டு அதற்கான நிதி ஆதாரத்தை தேட வேண்டிய நிலையில் இருக்கின்றன. ஆகவே, பொருட்காட்சிகள் மூலமாகக் கிடைக்கக் கூடிய வருமானம் முழுவதும் அந்த நகராட்சிகளுக்கு, பேரூராட்சிகளுக்குச் செல்லக் கூடிய நிலையில்—ஓரளவிற்கு மக்கள் மீது விதிக்கக்கூடிய வரியை குறைத்துக் கொள்ளவும் மக்களுக்கு அதிகமான பலன்களை தரக்கூடிய காரியங்களுக்கும் அந்த வருமானத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் முறையில்—வகை செய்ய வேண்டும். ஆகவே, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் இவைதான் இந்தப் பொருட்காட்சிகளை நடத்து



1981 ஆகஸ்ட் 22] [திரு. இரா. கருப்பையா]

வதற்கான முறையில் அந்தப் பொறுப்புக்களை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற முறையில் அதற்கான விதத்தில் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வருவதற்கான முறையில் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கலை விழாக்களில் பொருட்காட்சிகள் என்ற பெயரால் இன்றையதினம் பல்வேறு இடங்களில், தனியார் நடத்தும் இடங்களில், வெறும் வருமான, இலாப நோக்கத்தோடு எதை வேண்டுமானாலும் கடையில் வைப்பது, பெண்கள் அதிகமாக வரக்கூடிய வகையில் கவர்ச்சிகரமாக இருக்கக்கூடிய பொருட்களை வைப்பது என்ற முறையில்தான் இருக்கின்றனவே தவிர, வேறு விதமான பொருட்களை பலயிடங்களிலும் காண முடிவதில்லை. பெரிய நகரங்களில் நடத்தும் பொருட்காட்சிகளை நான் குறிப்பிட விரும்பவில்லை. சென்னை போன்ற நகரங்களில் நடக்கக் கூடிய பொருட்காட்சிகளில் விஞ்ஞானக் கருவிகளைப் பயன்படுத்தி மனித அறிவு வளர்ச்சி அடையக் கூடிய வகையில், நம் நாட்டில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி பற்றி, நாட்டில் ஏற்பட்டிருக்கிற விஞ்ஞான முன்னேற்றம் பற்றி மக்களுக்குத் தெரிவிக்கக்கூடிய முறையில் அரங்கங்கள் அமைக்கப்படுவது இயற்கையாக இருக்கிறது. ஆனால் நகராட்சிகளில் அல்லது பேரூராட்சிகளில் நடத்தக்கூடிய பொருட்காட்சிகளில் இம்மாதிரியான நிகழ்ச்சிகளை, அரங்கங்களை பார்க்க முடியாத நிலை இருக்கிறது. பொருட்காட்சிகளை மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் போன்ற நிர்வாகங்கள் ஏற்றுக் கொண்டு நடத்தக்கூடிய நிலையில், மக்களுக்கு அறிவூட்டக் கூடிய அம்சங்களை ஸ்டால்களில் அதிகமாக வைத்து, மக்கள் அதனால் பயன் அடையக் கூடிய முறையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-10]

அவர்களுக்கு மக்களுக்கு அதன் பயனை அடையக்கூடிய முறையில் காரியங்களை நிறைவேற்ற முடியும் என்ற காரணத்தினாலே இந்த ஒரு மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எவ்வளவுதான் ஒரு நல்ல சட்டத்தை நிறைவேற்றினாலும், அதை நிறைவேற்றுகின்ற பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கின்ற நேரத்திலேதான், இதிலே ஏற்படக்கூடிய குறைகளைத் தவிர்க்க, மாற்றுவதற்கான சகல பொறுப்புகளும் அரசாங்கத்திற்கு இருக்கின்றது. அப்படி இருக்கின்ற காரணத்தினால்தான், அரசாங்கம் இம்மாதிரியான ஆலோசனைகளைப் பரிசீலனைசெய்து, தனியார்கள் பொருட்காட்சி நடத்துவதற்கு அனுமதி வழங்குவதை முழுமையாக நிறுத்தி, நகராட்சிகள், மாநகராட்சிகள், பேரூராட்சிகள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவின் பேரில் பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, திரு. நல்லப்பன் அவர்கள், திரு. [illegible] பாண்டியன் அவர்கள், திரு. சங்கரய்யா அவர்கள், டாக்டர் சமரசம் அவர்கள், திரு. கருப்பையா அவர்கள் இதை வரவேற்று, பல்வேறு நல்ல யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த யோசனைகளை கண்டிப்பாக அரசு பரிசீலனை செய்து, தக்க நேரத்திலே அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் என்ற உறுதிப்பாட்டினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு திருத்தத்தை இங்கே கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திருத்தம் தேவையில்லை என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குக் காரணம், போடுகின்ற அபராதம் முதலிலே ரூ. 500 என்றும், அதற்குப் பிறகு ஒவ்வொரு நாளும் செய்கின்ற தவறுக்கு அந்த அபராதத்திலே பாதித் தொகையை மீண்டும் அதிகமாக, கூடுதலாகப் போடுவதற்கான திருத்தத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறோம். அப்படிப் போடுவதன் மூலமாக மீண்டும் குற்றங்கள் நடைபெறாமல் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் தான் போடப்பட்டிருக்கிறதே தவிர, மீண்டும் தொடரவேண்டுமென்ற எண்ணத்தில் இது கொண்டு வரப்படவில்லை என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே, திரு. ரகுமான்கான் அவர்கள் ஆபாச நடனங்களை எல்லாம் தவிர்க்க வேண்டும் என்றார்கள். அதற்கு இந்த விதிமுறைகளை மிகமிக ஸ்டிரிக்ட்டாகக் கொண்டுவந்திருக்கிறோம். அப்படி ஆபாசம் எது என்று சொல்லுகின்ற நேரத்தில் அதற்குத் தானே டெபனிஷனும் சொன்னார்கள். அவர்களே கேள்வியைக் கேட்டு, ஆபாசம் எங்கேயிருக்கிறது என்பதை அவர்களே கோடிட்டு, குறிப்பிட்டுச் சொன்னார்கள். உச்ச நீதி மன்றத்திலே நடந்த ஆபாசத்தைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். அதோடு, தினசரி பத்திரிகைகளிலே எப்படியெல்லாம் ஆபாசம் வருகிறது என்பதைப் பற்றியும் சொன்னார்கள். ஆகவே, ஆபாசங்கள் மசாலா மந்திரவாதிகளால் வந்து கொண்டிருக்கின்றன என்பதை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். உண்மையிலேயே மசாலா மந்திரவாதிகள் சிலைகள் பல இடங்களிலே இருக்கின்றன என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புகாரி ஓட்டலுக்கு முன்னாலும், சங்கம் ஓட்டலுக்கு முன்னாலும், பிலால் ஓட்டலுக்கு முன்னாலும், இன்னும் இது போன்ற மசாலா மந்திரவாதிகள் சிலைகள் பல இடங்களில் இருக்கின்றன. ஆகவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டு தான், இதுபோன்ற...... (குறுக்கீடு) நான் பேசி விடுகிறேன்.



திரு. அ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆப் ஆர்டர். என்ன ஆபாசமான சிலைகள் அப்படி அங்கே இருக்கின்றன? அவைகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை ஏன் எடுக்கவில்லை?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறேன். நடவடிக்கை எடுப்போம். நீங்கள் பேசும்போது நான் குறுக்கிடவில்லை. நீங்கள் என்னைக்கூட கோடிட்டுச் சொன்னீர்கள். அப்போது நான் குறுக்கிடவில்லை. ஆகவே, ஒருசிலருக்கு ஆபாசம் கண்ணுக்கு விருந்தாகவும், மருந்தாகவும் இருக்கிறது. ஒருசிலருக்கு வெறுப்பாக இருக்கிறது. அவ்வளவுதானே ஒழிய. இது பார்ப்பவர்கள் எண்ணத்தைப் பொறுத்தது ; எண்ணத்தைப் பொறுத்ததே தவிர, ஆபாசம் எங்கேயிருக்கிறது என்று கேட்டால், பேச்சிலும் இருக்கிறது; நடைமுறையிலும் இருக்கிறது; ஊர்வலத்திலும் இருக்கிறது; பொதுக்கூட்டத்திலும் இருக்கிறது என்பதைத் தான் நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆகவே, ஆபாச நடனங்கள் எங்கெங்கு நடத்தப்பட்டாலும் அது தடுக்கப்பட வேண்டும். அதைப் போல் வளையங்கள் போடுதல், குறி பார்த்து அடித்தல் போன்ற விளையாட்டுக்களும் தவிர்க்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் இந்த உரிமங்களை அந்தந்த நகராட்சிகளின் ஆணையாளர்கள், நிர்வாக அதிகாரிகள் அல்லது பேரூராட்சி நிர்வாக அதிகாரிகள், வருவாய்த்துறை அதிகாரிகள் கொடுப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இவைகளைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காகத்தான் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோமே தவிர மீண்டும் தொடர வேண்டுமென்பதற்காக அல்ல என்று எடுத்துக் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பொருட்காட்சிகளின் மூலம் தனியார்களுக்கு உதவி செய்து கொண்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் கூறினார். தனியார்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற எண்ணம் கிஞ்சித்தும் இந்த அரசுக்கு இல்லை. பொதுவாக வருமானத்தை அதிகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இது போன்ற பொருட்காட்சிகளை அரசே நடத்த எண்ணம் கொண்டிருக்கிறது. அதற்கு ஏற்படும் செலவை பேரூராட்சி மன்றங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலை இருப்பதால் ஏலத்தில் விட்டு தனியார் எடுக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. கூடுமானவரை இவற்றை அரசாங்கம் நடத்துகிற ஒரு நிலையை உருவாக்கித் தீருவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். கலை நிகழ்ச்சிகளுக்கு, நடன நிகழ்ச்சிகளுக்கு, நாட்டியங்களுக்கு, நாடகக் கலைஞர்களுக்கு உற்சாகம் அளிக்கவும் உதவி செய்யும் வகையில் கண்டிப்பாக ஏற்பாடுகள் செய்து கொடுப்போம் என்று இந்த மசோதாவில் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்ன மாமன்ற உறுப்பினர்களுக்கு நன்றி கூறி, இதனை நிறைவேற்றித்தர வேண்டுமென்று தலைவர் மூலமாகக் கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

[1981 ஆகஸ்ட் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "பிரிவு 4 சட்ட முன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

THIRU A. RAHMANKHAN Mr. Deputy Speaker, Sir, I move the following amendment :

"In clause 4, in the proposed sub-section, (2) delete the words " and in such a case, no show cause notice is necessary."

The amendment was duly seconded.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இந்தத் திருத்தம் தேவையில்லை. ஷோ காஸ் நோட்டீஸ் கொடுப்பதன் மூலமாகக் காலதாமதம் ஏற்படுமே தவிர, என்ன காரியத்திற்காக இவைகளை எல்லாம் செய்கிறோமோ அந்தக் காரியம் தடைபட்டுப் போகும் சூழ்நிலை ஏற்பட்டுவிடும். It will defeat the very Purpose. அதனால் ஷோ காஸ் நோட்டீஸ் தேவையில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 4 நிறைவேற்றப்பெற்றது.



1981 ஆகஸ்ட் 22]

பிரிவு 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவு 5 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.

Thiru. A. RAHMANKHAN: I move the following amendment:

'In clause 5, delete the following words :

"and in addition, in the case of a continuing contravention with additional fine which may extend to fifty per centum of the fine first imposed for every day during which such contravention continues after conviction for the first such contravention."

The amendment was duly seconded.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே நான் ஏற்கனவே என்னுடைய பதிலியிலே இதற்கும் பதில் சொல்லி விட்டேன். மீண்டும் அதே போன்ற குற்றங்கள் நடைபெறாமல் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் போடுகின்ற அந்த அபராதத்தொகையை அதிகப்படுத்திக் கொண்டு போகிறோம். முதலில் 500 ரூபாய் அடுத்த நாள் மீண்டும் அதை நடத்தினால் 750 ரூபாய் கட்ட வேண்டும்

[பிற்பகல் 12.20.]

அதற்கு அடுத்த முறையாக இருந்தால் மீண்டும் ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும் என்ற சூழ்நிலையை உருவாக்குவதன் மூலமாக குற்றங்கள் தொடராமல் இருக்கச் செய்ய முடியும் என்பதற்காகத்தான் இது கொண்டுவரப் பட்டிருக்கிறது. ஆகவே உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய திருத்தத்தை வாபஸ் பெறவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அபராதம் விதிப்பது என்று சொன்னால் 500 ரூபாய் இருப்பதோடு கூட 250 ரூபாய் சேர்த்து 750 ரூபாய் என்று கட்டி விடுவது அவர்களுக்குப் பெரிய காரியமல்ல, காரணம் அவர்கள் அபராதத்தைக் கட்டிவிட்டு தொடர்ந்து அவற்றை நடத்தி வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆபாசம் தடுக்கப்பட வேண்டுமென்றால் There should be a penal provision.

என்ற நிலைமை இருக்கவேண்டும். 3 மாத காலம் சிறைத் தண்டனை என்றால் அவர்கள் அஞ்சுவார்கள். அபராதம் என்பது தொடர்ந்து செய்யக்கூடியவர்களுக்கு ஒரு பெரிய தண்டனை என்று சொல்லமுடியாது; ஆகவே சிறைத் தண்டனை கொடுத்தால் அவர்கள் திருந்துவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, I am pressing my amendment.

[1981 ஆகஸ்ட் 22

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதுவும் பீனல் புரவிஷன் தான். கட்ட வேண்டியது பணம்,. பணம் இல்லாவிட்டால் சிறை. அந்த பீனல் புரவிஷன் தான் இதிலே கொண்டுவரப் பட்டிருக்கிறது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, தோல்வி யுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி 'பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று பிரிவு 5 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 6 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே ''தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு பொது மக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 52/1981) நிறைவேற்றப் பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது

ஏ. வேளாண் விளை பொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு தமிழ்நாடு 1981.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''ஆளுநர் அவர்களால் 3.6.1981 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் (இரண் டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச்சட்டம் எண்.6/1981) இப்பேரவை நிராகரிக்கிறது''. தீர்மானம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு திரு. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன், 'தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு 54/1981) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளபெற வேண்டும்''.

* 1981 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1981 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் அவர்கள் தீர்மானமும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தீர்மானமும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன.

திரு. அ. ரகுமான்கான் : மாமன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த மசோதாவிலே சொல்லப்பட்டிருக்கின்ற காரணம் சரியான காரணம் அல்ல என்பதை நான் முதலிலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கோயம்புத்தூர் மார்க்கெட்டிங் கமிட்டி போன்று தமிழகத்திலே உள்ள மார்கெட்டிங் கமிட்டிகள் எல்லாம் விவசாயிகள் முன்னேற்றத்திற்காக அவர்கள் விளைவிக்கின்ற விளை பொருட்கள் யாவும் வர்த்தக சூதாடிகளால் சுரண்டப்படாமல் அவர்களுக்கு உரிய விலையைப் பெற்றுத் தருவதற்காக அமைக்கப்பட்டவையாக இருந்தன. இந்தச் சட்டத்திலே அப்படிப்பட்ட கமிட்டிகள் எங்கும் அமைத்தே தீரவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவசர காலம் அமலில் இருந்தபோது என்று கருதுகிறேன். கோயம்புத்தூரில் உள்ள மார்க்கெட்டிங் கமிட்டி உறுப்பினர்கள் சரியாகச் செயல்பட வில்லை.

இந்தக் காரணத்தைக் காட்டி அவற்றை அன்றைக்குக் கலைத்து விட்டார்கள். ஆனால் சட்டத்தில் சொல்லியிருப்பது மார்க்கெட் கமிட்டி கலைக்கப்பட்டு விட்டால் அவ்வாறு கலைக்க பட்ட தேதியிலிருந்து நான்காண்டுக் காலத்திற்குள்ளாக மீண்டும் அந்தக் கமிட்டி உருவாக்கப்பட்டு செயல்பட அனுமதிக்கப் படவேண்டுமென்று சட்டத்தில் இருக்கிறது. இப்பொழுது ஏறத்தாழ நான்காண்டுகள் முடிவடையவிருக்கிறன, எனவே அந்த நான்காண்டு என்ற காலவரையை இன்னும் நீட்டித்து, நான் காண்டுகள் போதாது, மார்க்கெட் கமிட்டி அமைக்க இன்னும் இரண்டு ஆண்டு காலம் இருந்தால் அந்தக் காரியத்தைச் செய்ய முடியும், ஆகவே மார்க்கெட் கமிட்டி கலைக்கப்பட்ட பிறகு நான்காண்டுகள் என்று இருந்ததை ஆறாண்டுகள் என்று மாற்றியமைக்க வேண்டும் என்றுதான் இந்த மசோதா இந்த மாமன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், தாய்ச் சட்டத்திலே தெளிவாகச்சொல்லியிருக்கிறார்கள்.

''The Government shall establish market committee, for every notified area.''

என்று சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் கலைக்கப்பட்ட பிறகு அவர்கள் சொல்லியிருக்கும் காரியம்

[1981 ஆகஸ்ட் 22

"The Government may at its discretion by order appoint suitable person or persons to carry out the functions of the market committee and transfer to such person or persons the assets and liabilities of the superseded market committee as on the date of such transfer."

என்று போடப்பட்டிருக்கிறது. இந்த மார்க்கெட் கமிட்டி
கலைக்கப்பட்ட பிறகு அந்த மார்க்கெட் கமிட்டியின் உறுபினர்
கள்தான் அந்த நிர்வாகத்தையெல்லாம் செய்து கொண்டு
வருகிறார்கள். அந்த மார்க்கெட் கமிட்டிதான் முழுக்க
முழுக்க அதில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் கமிட்டி
கலைக்கப்பட்ட பிறகு அரசாங்கம் தன்னுடைய விருப்பத்தின்
பேரில், அவர்களுக்குத் தேவையானவர்கள் என்று யாரைக்
கருதுகிறார்களோ அவர்களுக்கு இந்த நிர்வாகத்தைக்கொடுக்க
லாம் என்ற அளவிற்கு நிலைமை இருக்கிறது. எனவே, இப்பொ
ழுது நான் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம், இன்றைக்குப்
பல்வேறு ஜனநாயக அமைப்புகளுக்குத் தேர்தல் இல்லாமல்
நிர்வாகம் ஸ்தம்பித்து இருக்கிறது. கிராம அதிகாரிகள் வீட்டுக்குப்
பே. ய் இருக்கிறார்கள்; பஞ்சாயத்து போர்டுகளுக்குத் தேர்தல்
இல்லை ; பஞ்சாயத்து யூனியன்களுக்குத் தேர்தல் இல்லை ;
முனிசிபாலிடிகளுக்கு தேர்தல் இல்லை ; கார்பரேஷனுக்குத்
தேர்தல் இல்லை ; இவ்வ று நிர்வாகம் ஸ்தம்பித்துப் போய்
இருக்கிறது. ஆகவே விவசாயத்துறையில் விவசாயிகளுக்கு
பாதுகாப்பாக நன்மை தரும் அமைப்பாக இறுக்கும் இந்த விவசாய
விளைபொருள் அங்காடிகளை, மார்கெட்கமிட்டிகளை
தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்ட அமைப்பாக, ஆக்கு
வதற்கு முயற்சி செய்யாமல் இன்னும் இரண்டாண்டு காலம்
காலதாமதம் ஆக்கக் கூடிய காரணம் எனக்குத் தெளிவாகத்
தெரியவில்லை. அதற்காக இங்கே சொல்லப்பட்டிருக்கின்ற
காரணமும் சரியாக இல்லை. மார்க்கெட் கமிட்டி
விளைபொருள் அங்காடிகள் சம்மந்தமாக உள்ள இந்தச்
சட்டத்தை காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷனாக நுணுக்கமாக,
தெளிவாக ஆராய்ந்து பல்வேறு ஷரத்துக்களை இணைக்க
வேண்டியிருக்கிறது, அதற்கு அவகாசம் தேவைப்படுகிறது
என்று காலதாம்தம் செய்வது சரியாக இருக்காது.

காரணம் என்னவென்றால், இன்றைக்கு இந்த மார்க்கெட்
செ.. சட்டி என்பதிலே மொத்தம் 18 உறுப்பினர்கள்;
அந்தநிர்வாகத்தில் இருக்கும் காலம் ஐந்தாண்டுகள். அவர்கள்
லாமல் அந்த மார்கெட் கமிட்டிக்கு ஏகப்பட்ட அதிகாரங்கள்
இருக்கின்றன. சர்க்காரிடத்தில் கடன் வாங்கும் அதிகாரம்;
அந்தத் துறையை முன்னேற்றும் அளவிற்கு இந்தத் தொகையைப்
பயன் படுத்தும் அதிகாரம் நோட்டிபைட் ஏரியா என்று சொல்லச்
கூடிய இடங்களிலே லைசன்ஸோடு யாராவது வியாபாரம் செய்ய
வந்தால் லைசென்ஸ் வழங்கும் அதிகாரம் ; ஆயிரக்கணக்கான
இலட்சக்கணக்கான ரூபாய் அடிப்படையிலே மார்க்கெட்



9.1 ஆ..ட் 22] [திரு. அரகுமான்கான்]

மிட்டிக்கு அதிகாரிக ள நியமிப்பது, வேலைக்கு ஆட்களை
யமிப்பது சம்பளம் போடுவது போன்ற பல்வேறு
ாரியங்களை இந்த மார்க்கெட் கமிட்டி நிர்வகிக்க வேண்டி
ிருக்கிறது. முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இதில்
ிருந்து தவறுகளைச் சுட்டிக் க ட்டி சிறப்பான
றையில் காரியங்களைச் செய்வதற்காக இருந்தார்கள்.
ஆனால் இப்பொழுது அரசாங்கம் தங்களுக்கு வேண்டி
வர்களை நியமித்து இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால்
னி நபர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப அல்லது அதிகாரிகள்
ங்கள் விருப்பத்திற்கேற்ப அதிலே கொள்ளையடிக்கவும், ஊழல்
செய்யவும் தவறான காரியங்கள் செய்யவும் இடமிருக்கிறது.
ஆகவே, இதை உடனடியாக நடத்தியாக வேண்டும்.
தேர்தல் நடத்த வேண்டும்; உடனே மார்க்கெட் கமிட்டி அமைக்க
வேண்டும். நான்காண்டுகள் என்பதோடு இன்னும் இரண்டாண்டு
கள் வேண்டும், சட்டத்தைத் தெளிவாகக் கொண்டுவரப்
போகிறோம் என்றெல்லாம் சொல்வது சரியான காரியமாக
இருக்காது. விரைவிலே கமிட்டி அமைக்கப்பட வேண்டும்
என்று வலியுறுத்தி நான் அமைகிறேன்.

[பிற்பகல் 12-30]

* திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு
வேளாண்மை அமைச்சர் அவர்கள், இந்த விளைபொருள் அங்
காடித் திருத்தச் சட்டத்தை, ஏற்கனவே ஆளுநர் மூலமாக,
அவசரச் சட்டமாகப் பிறப்பித்ததற்கு, இந்த மன்றத்
தினுடைய ஒப்புதலைக் கோரியிருக்கிறார்கள். உண்மையிலே,
என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் நிச்சயமாகக்
கண்டிக்க வேண்டிய ஒரு காரியமாக இன்றைய தினம் இது இருந்து
கொண்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் இன்றைய தினம் சட்டப்
பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்
தவிர, தமிழகத்திலே பல்வேறு ஸ்தாபனங்களிலே, மக்களால்
தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அறவே இல்லை. இங்கே
சொல்லியிருக்கிற கோயம்புத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக்
கூடத்திலே கூட, ஏற்கனவே இருந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்
பட்ட அந்தக் குழுவை, 1977-ஆம் ஆண்டு நீங்கள் கலைத்தீர்கள்.
ஆனால், இன்றையதினம், 1981-ஆம் ஆண்டு வந்துவிட்டது.
இதுவரையில் ஏன் தேர்தல் நடத்தவில்லை என்பது தான் நான்
இந்த அரசாங்கத்தைப் பார்த்து கேட்கிற கேள்வி
யாகும். அதே போன்றுதான் மற்றைய மாவட்டங்களிலே
இருக்கக்கூடிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களெல்லாம்கூட
இன்றையதினம் மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாமல்,
பல்வேறு தனி அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.
ஆனால், ஏற்கனவே, இந்த ஒழுங்குமுறை விற்பனைக்
கூடங்கள் அமைக்கப்பட்ட காலத்திலேயே விவசாய மக்களுக்கு

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1981 ஆகஸ்ட் 22

ஒரு அரிய சேவை நல்ல சேவை கிடைக்க வேண்டுமென்ற
அந்த எண்ணத்திலே, அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்
அமைக்கப்பட்டன. அப்படி அமைக்கப்பட்ட காலத்திலே
கூட வியாபாரிகளுடைய கை, மக்களுடைய பிரதிநிதிகள்
குழுவிலே அதிகமாக வந்து விடக்கூடாது என்ற காரணத்தினாலே
தான் விவசாயிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதிகள்
அதிகமாகவும், வியாபாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதிகள்
பிரதிநிதிகள் குறைவாகவும் இருக்கின்ற
அன்றைய தினம் சட்டத்தை ஏற்படுத்தினார்கள். வகையில்தான்
டைய நோக்கம் அந்தக் காலத்திலேயே இந்த அவர்களு
விற்பனைக் கூடங்களில் விவசாயிகளுக்குச் சலுகைகள் கிடைக்க ஒழுங்குமுறை
வேண்டும், நியாயமான விலைகள் கிடைக்க
நல்ல விலைகள் கிடைக்க வேண்டும், அதே நேரத்தில் வேண்டும்,
முறையிலே, நியாயமான முறையிலே எடைகள் எல்லாம் போடப் நல்ல
பட வேண்டுமென்ற எண்ணத்திலேதான் இந்த ஒழுங்குமுறைக்
கூடங்கள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் நீங்கள் ஏன்
4 ஆண்டுக் காலமாகத் தேர்தலை நடத்த மறுக்கிறீர்கள் என்று
தான் எனக்குப் புரியவில்லை. சட்டம் வருகிறது, வருகிறது
என்று சொல்லுகிறார்கள். அதிலே என்ன கஷ்டம் என்று
அமைச்சர் விளக்க வேண்டும். நான் ஏற்கனவேகூடச் சொன்
னேன், வேளாண்மை மானியக் கோரிக்கையிலே பேசும்
பொழுது கூடச் சொன்னேன், அமைச்சர் அவர்கள்கூட
அப்பொழுதே பதில் அளிப்பார் என்று எதிர்பார்த்தேன்.
இன்றைய தினம் மக்களுடைய பிரதிநிதிகள், ஒவ்வொரு
மாவட்டத்திலே இருந்து அதனுடைய தலைவர்கள் சேர்ந்து,
மாநில அளவிலே, மார்க்கெட்டிங் போர்ட் என்ற வகையிலே
கூட அமைப்பு இருந்தது. மாநில அளவிலே இந்த ஒழுங்குமுறை
விற்பனைக் கூடங்கள் என்ன, என்ன வகையில் செயல்பட
வேண்டும், எந்த, எந்த பொருள்கள் நோட்டிபை செயப்பட
வேண்டும், எப்படி தங்களுடைய வளர்ச்சியைப் பெருக்க
வேண்டுமென்று எல்லாம் அன்றைய தினம் சிந்தித்துச்
செயல்பட்டன. இன்றைய தினம் அவைகள் எல்லாம் செயல்
படாத நிலைமைகள் எல்லாம் இருந்து வருகின்றன. நான்,
ஏற்கனவே எனக்குக் கிடைத்த தகவலைச் சொன்னேன்.
ஏற்கனவே நோட்டிபை செய்யப்பட்ட பல பொருள்கள்
கூட, நீக்கப்பட்ட பல பொருள்கள்கூட, இன்றைய தினம்
அதிகாரிகளால் மாற்றப்பட்டிருக்கின்றன. இன்றைய தினம்
தவறான காரியங்கள் இன்றைய தினம் அப்படிப்பட்ட
வருகிறார்கள். அந்த ஒழுங்குமுறை அதிகாரிகள் செய்து
நிர்வாகச் சீர்கேடுகள் மலிந்துள்ளன. சாதாரணமாக விவ
சாயிகள் ஒரு பொருளை எடுத்துச் கூடங்களிலே
அவர்களுக்கு ஒரு நல்ல சேவை இருந்தது செல்வார்களானால்
ஃப்ரீயான சேவை. அவர்கள் எடை போடுவதற்கோ முன்னால். அதுவும்
கோணிப்பை மாற்றுவதற்கோ, அல்லது விற்பதற்கோ அல்லது
விகமான கட்டணமும் இல்லாத ஒரு நிலைமை இருந்தது. எந்த



1981 ஆகஸ்ட் 22] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

ஆனால், இன்றையதினம் கீழ் மட்டத்திலேயிருந்து மேல்
மட்டம் வரையில் சாதாரண ஒரு விவசாயி—குறிப்பாக, பெரிய
விவசாயிக்குக் கூட அந்தச் சேவை தேவை இல்லை—சிறிய
விவசாயிகள்— நடுத்தர விவசாயக் குடும்பங்களுக்குத்தான் இந்த
ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் சேவை தேவைப்
படுகின்றது. ஆனால், இன்றையதினம் அங்கே சென்று
பார்ப்போமானால், அதிகமான நிர்வாகச் சீர்கேடுகள்,
இலஞ்ச, ஊழல்கள் மலிந்துள்ளன. சாதாரணமாக, சிறிய
காரியங்களுக்குக்கூட பணம் கொடுத்தால்தான் இன்றைய
தினம் அங்கே காரியங்கள் நடைபெறுகின்றன. அப்படிப்பட்ட
ஒரு மோசமான நிலைமை இன்றையதினம் இப்படிப்பட்ட
ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நடைபெற்று வருகின்
றன. அதே போன்று பல்வேறு தனி அதிகாரிகள் அங்கே,
தேவைப்படுகிற ஆட்களை நியமிக்கப்படும்போதுகூட, ஆயிரம்
இரண்டாயிரம் என்று பணம் வாங்கிக்கொள்கிற மோசமான
நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை 4 ஆண்டு
களாகத் தொடர்ந்து இருந்து வரும்போது, நீங்கள் ஏன்
உடனடியாகத் தேர்தலை நடத்தாமல், இன்னும் 2 ஆண்டுக்
காலம், அதாவது 4 ஆண்டுக்காலம் என்பதை 6 ஆண்டுகள்
என்று ஒத்தி வைக்கிறீர்கள் என்று கேட்கிறேன். எதற்கு
அவசரச் சட்டம் போடுகிறீர்கள் என்று புரியவில்லை.
உடனடியாகத் தேர்தலை நடத்துங்கள்; நகராட்சித் தேர்தல்,
ஊராட்சித் தேர்தல், ஒன்றியத் தேர்தல் என்று ஒவ்வொரு
நாளும் இப்படியே அமைச்சர் சொல்லிக் கொண்டிருக்கிறார்.
சொல்லிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம் என்று எனக்குப்
புரியவில்லை. பிறகு எதிர்க் கட்சிகளை எல்லாம் கூப்பிடு
வார்கள். உடனே நாங்கள் எதற்குத் தேர்தலை நிறுத்தி
வைக்கிறோம் என்றால், இதிலே அரிசனங்களுக்கு பிரதி
நிதித்துவம் தரப்போகிறோம், பெண்களுக்குப் பிரதிநிதித்
துவம் தரப்போகிறோம். நம்முடைய வேளாண்மை அமைச்சர்
அவ்வாறு சொல்லவில்லை. தேர்தல் வருகிறது என்று சொல்லி
விட்டு, பிறகு சொல்வார்கள், இவர்களுக்கெல்லாம் பிரதி
நிதித்துவம் தரவேண்டிய சூழ்நிலையிருக்கிறது என்று.
அதனால் எதிர்க்கட்சிக்காரர்களை அழைக்கவேண்டியது.
அவர்கள்தான் இவைகளை எல்லாம் கேட்கிறார்கள். அதற்
காகத்தான் ஒத்திவைக்கிறோம். நாங்கள் தயாராகத்
தான் இருக்கிறோம் என்று சொல்கிற மோசமான நிலை
இருந்து வருகிறதே தவிர, உடனடியாகத் தேர்தலை நடத்த
லாம். நீங்கள் இப்போது நடந்த தேர்தலிலே வெற்றிபெற்று
தான் வந்திருக்கிறீர்கள். அதேபோன்று எந்தக் கட்சிக்
காரர்களாக இருந்தாலும் அவர்கள் வருவதிலே உங்களுக்கு
ஏன் ஐயப்பாடு எழுந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள
முடியவில்லை. நிர்வாகம் மிகவும் மோசமான நிலையில்
இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. சூப்பிரன்டென்டுக்கு
கீழ உள்ள அதிகாரிகள் பயப்படுவதில்லை. ஸ்பெஷல்

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1981 ஆகஸ்ட் 22

ஆபீசருக்கு செக்ரட்டரி பயப்படுவதில்லை. இப்படி இன்றைய
தினம் அந்த நிர்வாகம் சின்னாபின்னமாக ஆக்கப்பட்டிருக்
கிறது, உங்களுடைய ஆட்சியிலே என்பதை நான் மெத்தப்
பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்
கோயம்புத்தூர் மட்டுமல்ல எல்லா விற்பனைக் கூடத்திற்கும்
காலந்தாழ்த்தாமல் உடனடியாகப் புதிய சட்டத்தைக்கொண்டு
வாருங்கள். அதை யாரும் மறுக்கப்போவதில்லை. விரைவாகத்
தேர்தல் வரவேண்டும். விவசாயிகளுக்கு நல்ல நிலைமை
ஏற்படவேண்டும். சீர்கேடுகள் போக்கப்படவேண்டும் என்று
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் விரைவாக
இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு தேர்தல்
நடத்துங்கள் நடத்துங்கள் என்று தெரிவித்து, நீங்கள்.
இப்படிப்பட்ட அவசரச் சட்டங்கள் கொண்டுவருவதை முன்
னேற்றக் கழகத்தின் சார்பில் கண்டித்து முடிக்கிறேன்,
நன்றி, வணக்கம்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தை
மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவின் மீது மார்க்
சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச்
சொல்ல முன் வருகிறேன். இந்த சட்ட முன்வடிவை அரசு
முன் மொழிகிறபோது, சூழ்நிலைகளை அரசு மனதிலே
வைத்துக் கொள்ளவேண்டும். நம்முடைய சமுதாய பொரு
ளாதார கோட்பாடுகள் பெருமளவுக்கு சீரழிந்து வரும்படி
யான ஒரு காலம் இது என்பது நினைவிலே நிற்கவேண்டும்.

அடுத்து பொதுவாக விவசாய பொருள்களுக்குக் கட்டுப்
படியான விலை கொடுக்கவில்லை என்று நாடு முழுவதற்கும்
உள்ள விவசாயப் பெருமக்கள் கண்ணீர் வடிக்கும்படியான
ஒரு காலம். பெரும் முதலாளிகள் ஒரு பக்கம் விலைகளைக்
கொடுக்காமல் தடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். மறுபக்கம்
வர்த்தகச் சூதாடிகள் அவர்கள் விளைவிக்கும் பொருள்களுக்கு
நியாயமான விலை கிடைக்காமல் குறுக்கே நிற்கிறார்கள்.
தரகுக் கடைகள், கமிஷன் மண்டிகள் பேராலே காலமெல்லாம்
உழைக்கும்படியான விவசாயிகள் பொருள்கள் சூறையாடப்
படுகின்றன. நேரடியாக அளவு கூட இல்லாமல், பேரம்
இல்லாமல், கைகளிலே துண்டுகளைப் போட்டுக் கொண்டு.
கடலையையும் வெங்காயத்தையும் சூறையிடுகிற வர்த்தகச்
சூதாடிகள் நிறைந்த இந்த உலகத்தில்தான் இந்த வர்த்தகக்
கழகங்கள் செயலாற்றிக் கொண்டு இருக்கின்றன என்ற
பெரிய உண்மையை எல்லோரும் மனதிலே வைத்துக் கொள்ள
வேண்டும் என்று மிக வினயமாக நான் வேண்டிக் கொள்கிறேன்.

காலம் 4 ஆண்டுகள் போதாது என்று மேலும் 2 ஆண்டு
கள் நீட்டிப்பது, தனி அதிகாரிகள் கையிலே மொத்தமாக
அதிகாரத்தை விவசாயிகளுடைய நலனை ஒப்படை க்கப்படுவ



1981 ஆகஸ்ட் 22] [திரு. என். வரதராஜன்]

தாக மாறும். கூட்டுறவுத் துறையில் கூட, நாம் சட்டத்தை
ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு பொறுக்குக் குழுவிற்கு விட்டு,
விரைவிலே சட்டமாக ஆக்குகின்ற நிலையிலே இருக்கிறோம்.
அந்தச் சங்கடங்கள் கூட இதற்கு இல்லை. ஆகவே 2 ஆண்டு
கள் இதை நீட்டிக்கத் தேவையில்லை. குறுகிய காலத்திற்கு
உள்ளாகவே இந்தக் குழுக்களை அமைப்பதற்கு முயற்சி
செய்யவேண்டும். தனி அதிகாரிகளோ, அதிகாரிகளோ இந்தத்
துறையை நிர்வகிக்கும்போது ஏற்படுகின்ற சீர்குலைவுகள்
எவ்வளவு அதிகமாக இருக்கும் என்று அரசு உணரவேண்டும்.
நான் மதுரை மாவட்டத்தில் அதிகமாக பருத்தி சாகுபடி
செய்யக்கூடிய ஒட்டன்சத்திரம், தேனி பகுதிகளைச் சேர்ந்
தவன். அங்கே உள்ள விவசாயிகள் தனியாரிடத்தில் ஒப்
படைக்கப்பட்டு நாம் அமைக்கக் கூடிய, அல்லது மத்திய
சர்க்கார் அமைக்கக்கூடிய காட்டன் கார்ப்பரேஷன்கள் விவ
சாயிகளைச் சூறையாடுகிறது என்று கூக்குரல் அந்தப் பகுதி
யிலே இருப்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் அறி
வார்கள். இவ்வாறு இருக்கிறபோது இன்று சாதாரண
விவசாயப் பெருமக்கள் கொண்டு வரக்கூடிய அந்தப் பொருள்
கள் இந்தக் குழுக்கள் இல்லாத காரணத்தினாலே தனி அதிகாரி
களினாலே மிகப்பெரிய அளவுக்கு தங்களுடைய விலைகள் சூறை
யாடப்படுகிறது. பல்வேறு விதமான ஊழல்களுக்கும், ஊதாரித்
தனங்களுக்கும் இடம் அளிக்கிறது என்று விவசாயிகள்
இன்றைய தினம் முறையிடுகிறார்கள். அது அரசினுடைய
செவிக்கும் எட்டி இருக்கும் என்று நான் உணர்கிறேன். இந்தக்
காரணத்தினாலே இப்படிப்பட்ட நீண்ட காலத்திற்கு இந்தச்
சட்டத்தை நீட்டிக்காமல் இந்தக் குழுவை விரைவிலே நாம்
தேர்ந்தெடுக்க வேண்டும். அடுத்த நிதியாண்டு வரவு செலவுக்
கணக்கை ஏற்றுக் கொள்கிற சட்டமன்றக் கூட்டத் தொடரை
நடத்த இருக்கிறோம். ஆகவே 2 ஆண்டுகள் என்று நீட்டிக்
காமல் இன்னும் ஒரு 3, 4 மாதங்களுக்குள்ளே சட்டத்துறை,
விவசாயத்துறை மற்றும் பல்வேறு துறைகளையும் சேர்த்து
இந்த சட்ட முன்வடிவை கொண்டு வரவேண்டும். அதற்குள்ள
கால அவகாசத்தைத்தான் இந்த சட்டம் பெறவேண்டும்
என்று வற்புறுத்தி நான் அமர்கிறேன்.

[பிற்பகல் 12-40]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்
கொண்டு வந்திருக்கிற தமிழ் நாடு 1981-ஆம் ஆண்டு வேளாண்
விளைபொருள் அங்காடிகள் இரண்டாவது திருத்த மசோதா
வின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்
களை கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் வரதராஜன் அவர்கள் கூறும்
போது விவசாயிகளுடைய விளைபொருள்களுக்கு நியாயமான
விலை கிடைக்காதது மட்டுமல்லாமல் எப்படி வர்த்தக

[திரு. சோ. அழகர்சாமி] [1981 ஆகஸ்ட் 2.

ஆதாடிகளால் மோசடி செய்யப்படுகிறார்கள் என்பதை
யெல்லாம் பற்றி விவரமாகச் சொன்னார்கள். இன்றைக்கு
இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற திருத்தமானது கோயம
புத்தூர் விளைபொருள் அங்காடியினுடைய அந்தக் குழுவை
திரும்ப நியமிப்பதற்கு வேண்டிய காலக்கெடுவை ஆறு ஆண்டு
களாகக் கொண்டுவரப்பட்ட ஒரு மசோதாவாகும். அதே மாதிரி
எல்லா இடங்களிலும் உள்ள இந்த மார்க்கெட்டிங் கமிட்டி
களுக்கு அதிகாரப் பற்றற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட குழு இன்
றைக்கு இல்லை. தனி அதிகாரிகளால் தான் இந்த கமிட்டிகள்
நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே இன்று விவசாயி
களுக்கு இன்றைக்கு நியாயமான விலை கிடைக்காமல் இருக்கக்
கூடிய நேரத்தில் அது ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவாக
இருந்தால் பிரயோஜனமாக இருப்பதோடு மட்டுமல்லாமல்
விவசாயிகளுடைய பொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்
பதற்கு என்ன செய்யலாமென்று ஆலோசனை கூறுவதற்கு
ஏதுவாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது
சம்பந்தமாக விரிவாக சட்டம் கொண்டு வரப்பட இருப்பதாக
சொன்னார்கள். விவசாயிகளுடைய பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்
பதற்கு என்று தெளிவான வரையறை இல்லை என்று
நினைக்கிறேன். அதே மாதிரி வியாபாரிகளுடைய பிரதி
நிதிகளும் அதிலே இருக்கலாம் என்று இருக்கிறது. ஆகவே
இது மாதிரியான ஒரு குழுவிற்கு எப்படி, யார், யார்.
பிரதிநிதிகளாக வரவேண்டுமென்று தெளிவான ஒரு வரை
யறையைக் கொண்டு வருவது மட்டுமல்லாமல் அந்தக் குழுவி
னுடைய அந்த வேலை அந்த அங்காடிக்குக் கொண்டுச் செல்லக்
கூடிய பொருள்களை, வந்து கேட்கக் கூடிய வியாபாரிகளுக்கு
விற்றுக் கொடுக்கிற, அல்லது அவர்கள் கேட்கிற விலைக்கு
அதைக் கொடுத்து எடை சரியாக இருக்கிறதா, அவர்கள் பணப்
கொடுக்கிறார்களா என்று பார்க்கிற பார்வை மட்டும் தான்
இந்தக் கமிட்டிக்கு அதிகாரமாக இருக்கிறதே தவிர, பொருள்
களை வாங்கி அரசாங்கம் நிர்ணயம் பண்ணிய விலைக்கு கமிட்டி
அந்த பொருள்களை வாங்க முடியாது. அதன் காரணமாக
இன்றைக்கு ஏற்படக் கூடிய நிலைமை எல்லாம் ஏற்கனவே தெரி
யும். இன்றைக்கு நம்முடைய விவசாயிகள் கேட்கிற விலையை
விட அதிகமான விலைக்கு பொருள்கள் விற்கின்றன. இன்றைக்கு
மிளகாய் வற்றலை எடுத்துக் கொண்டால் அவர்கள் கேட்ட
விலையை விட இன்றைக்கு 500 அதிகமாக இருக்கிறது. 800,
00 ரூபாய் என்று தான் கொடுத்தார்கள்.
இன்றைக்கு 1,500 ரூபாயாக இருக்கிறது. அதன் விலை
போட்டு விட்டார்கள். வியாபாரிகளிடத்திலே போன உடனே
விலை ஏறிவிடுகிறது. விவசாயிகள் எல்லாம்
மக்கள் மிளகாய் வற்றலை 15 வாங்கி சாப்பிடக் கூடிய சாதாரண
ரூபாய்க்கு மேலே கொடுத்து
வாங்கிட வேண்டிய துர்ப்பாக்கியமான நிலையிலே
இருக்கிறார்கள். விவாசாயிகள் 700, 800 என்று முன்னமேயே அவர்கள்
போட்டு முடித்து விட்டார்கள். ஒரு சிலர், கொஞ்சம் வசதி
படைத்தவர்கள் பின்னால் விலை ஏறுமோ என்று நினைத்து,



1981 ஆகஸ்ட் 22] [திரு. சோ. அழகர்சாமி]

கஷ்டம் இல்லாத நிலையில் இருக்கிற பெரிய விவசாயிகளுக்கு ஆதாயம் கிடைக்கிற நிலை இருக்கிறது. அது மாதிரி இன்றைக்குப் பல பொருள்களை, இன்றைக்கு உளுந்தை எடுத்துக் கொண்டாலும் சரி, பருப்பை எடுத்துக் கொண்டாலும் சரி, விற்கிற காலத்திலே விலை குறைவாகவும், போட்டு முடித்த உடனே விலை அதிகமாகவும் இருக்கிறது. விவசாயிகளுடைய விளை பொருள்களுக்கு நியாயமான விலை கொடுத்து, பொது மக்களுக்கு விநியோகிப்பதற்கு நாம் விநியோகிப்பதற்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகவும், அங்காடிகள் மூலமாகவும் நாடு பூராவும் 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அங்காடிகள் மூலமாக, சில்லரை கடைகளை வைத்திருக்கிறோம், கோ-ஆப்பரேடிவ் ஸ்டோர்ஸ் வைத்திருக்கிறோம், சூப்பர் மார்க்கெட்ஸ் வைத்திருக்கிறோம், ஆகவே இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகள் மூலமாக விவசாயிகள் விளை பொருள் வந்தவுடனே நியாயமான விலைக்கு வாங்கி, இடைத்தட்டிலே உள்ளவர்கள் அதிகமாகக் கொள்ளை லாபம் அடிக்காமல் வாங்கி உபயோகிப்பவர்களுக்கு நியாயமான விலையிலே கிடைக்கக் கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்யக் கூடிய ஒரு அமைப்பாக மார்க்கெட்டிங் கமிட்டிகள் வேளாண் விளை பொருள் அங்காடிகளை அமைப்பதற்கு வேண்டிய நல்ல ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

ஆகவே அதற்காக இந்தச் சட்டம் ஒழுங்கான ஒரு சட்டமாகக் கொண்டு வரப் படுவதற்கு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்று நினைக்கிறேன். அதற்கிடையில் இந்த தனி அதிகாரிகள் பதவி காலத்தை இரண்டாண்டுகள் நீட்டிப்பது என்பது தேவையில்லை. எவ்வளவு சீக்கிரமாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வர முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகக் கொண்டு வர வேண்டும். உடனடியாகத் தேர்தல் நடத்தி, அரசு சார்பற்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

தேர்தல் நடத்துவது வரையில் ஒரு ஆலோசனைக் குழுவை அமைக்க வேண்டும். எல்லா இடங்களிலும் அதிகாரிகள் சரியாகச் செயல் படுவார்கள் என்று சொல்ல முடியாது. சில இடங்களில் அதிகாரிகள் நல்ல முறையில் செயல் படலாம். விவசாயச் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள், அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்து, அவர்கள் தனி அதிகாரிகளுக்கு இன்னின்ன மாதிரி செய்ய வேண்டுமென்று சொல்லுகின்ற வகையில் செயல்பட வேண்டும்.

அது மட்டுமல்ல, அங்கே பொருள்களை விற்றால் நூறு ரூபாய்க்கு 45 பைசா கமிஷன் கிடைக்கிறது. அதை நல்ல முறையில் பயன் படுத்திக் கொள்ளலாம். பருத்தியை காட்டன் கார்ப்பரேஷன் வாங்குவதற்குப் பதிலாக வேளாண் விளை பொருள் அங்காடிகளே வாங்கலாம். அதைப் போல, பருப்பு, வற்றல் போன்ற விளை பொருட்களையும் வாங்கி விற்கலாம்,

[திரு. சே. அழகர்சாமி] [1981 ஆகஸ்ட் 22

அதனால் விளைகின்ற காலத்தில் குறைந்த விலைக்கு போடு
கின்ற விவசாயிகள் கஷ்டமும் குறையும்; வியாபாரிகளிடம்
அதிக விலை கொடுத்து வாங்குகின்ற பொதுமக்கள் கஷ்டமும்
குறையும். வியாபாரிகள் அடிக்கின்ற கொள்ளை இலாபத்தைப்
பார்க்கும் போது, தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்
காமல் விரைவிலே வேளாண் விளைபொருள் அங்காடிகள்
தேர்தலை நடத்தி, மக்கள் பிரதிநிதிகள் கையிலே பொறுப்பை
ஒப்படைத்துவிடலாம் என்று தோன்றுகிறது. அது வரையில்
ஆலோசனைக் குழு செயல்பட ஏற்பாடு செய்ய வேண்டும்.
அதற்கு ஏற்ற முறையில் விரைவிலே இந்தச் சட்டத்தைக்
கொண்டுவர வேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** மாண்புமிகு தலைவ
ரவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற சட்ட முன்
வடிவை ஒட்டி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான
கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். கொண்டு வரப்பட்
டிருக்கிற சட்ட முன்வடிவு கோவை அங்காடிக் குழுவைப்
பற்றியது என்றாலும் கூட. பொதுவாக தமிழகம் முழுவதும்
இருக்கிற அங்காடிகளுக்குத் தேர்தலை நடத்தி, அதிகாரப்
பற்றற்ற மக்கள் பிரதிநிதிகள் அதை நடத்திச் செல்லும்
வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்பதுதான் அனைவருடைய
பேச்சிலும் ஆதாரமாக இருக்கிற கருத்தாகும்.

இந்த வேளாண் விளை பொருள் அங்காடி குழு எவ்வளவு
இன்றியமையாத பணியை மேற்கொண்டிருக்கிறது என்பதை
மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். விவசாயி
கள் விளைவிக்கக் கூடிய பொருட்களுக்கு முறையான ஒழுங்
கான விலை கிடைத்தாலே கூட விவசாயப் பெருங்குடி மக்களின்
பிரச்சனைகளில் பாதி நிச்சயமாக தீர்க்கப்பட்டுவிடும். ஆனால்
இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்படாத அளவுக்கு நாட்டில்
நிலைமை இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த அங்காடிக் குழுக்கள் கூட முழுமையாகப் பணியாற்ற
முடியாத அளவுக்கு பல்வேறு இடங்களில் சூழ்நிலைகள் இருக்
கின்றன. ஏனென்றால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு.
அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல சில விளை
பொருட்கள் அவை விளைகின்ற காலத்தில் விலை குறைவாக
இருக்கிறது; வியாபாரிகள் கையில் போன பிறகு விலை அதிக
மாக இருக்கிறது. அத்தகைய விலையேற்ற முயற்சிகளை
முறியடித்து, அங்காடிக் குழுக்கள் விவசாயப் பெருங்குடி
மக்களைக் காப்பாற்றுகின்ற அளவுக்கு இங்கே பல்வேறு
ஆலோசனைகள் வழங்கப் பெற்று, காரியங்கள் நடந்தாக
வேண்டும். ஏனென்றால் வியாபாரிகள் விவசாயப் பெருங்குடி
மக்களின் ஏழ்மையை, வறுமையை சாதகமாகப் பயன்படுத்தி
அவர்கள் ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கு முன்னாலேயே



1981 ஆகஸ்ட் 22] [திரு. கா. காளிமுத்து]

கூட முன்பணமாகக் கொடுத்து, அந்த விவசாயி உற்பத்திச் செய்யக் கூடிய பொருளை தன்னிடத்திலேயே விற்க வேண்டுமென்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குவதைப் பார்க்கிறோம்.

அதைப் போலவே பல இடங்களில் அங்காடிக் குழுக்கள் பல அழுகும் பொருட்களை வாங்கி சேமித்து வைக்க வழி இல்லாத காரணத்தால் வேறு வழியில்லாமல் விவசாயிகள் அந்தப் பொருட்களை வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு கொடுக்கும் துர்ப்பாக்கியமான நிலைமைகளைப் பார்க்கிறோம். இந்த நிலையை மாற்ற வேண்டும். அங்காடிக் குழுக்கள் அதிகமான நிதிவசதி பெற்று, விவசாயிகளுக்கு முன் பணமாகக் கூட சில பொருட்களுக்கு பணம் கொடுத்து, விவசாயி உற்பத்தி செய்யும் பொருளை வாங்கி சேமித்து வைக்கின்ற வசதியை செய்து தர வேண்டுமென்ற நோக்கத்தில் அரசு செயல் திட்டங்களை வகுத்து வருகிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கு ஏற்ற முறையில் இங்கே விரிவான சட்டத் திருத்தத்தைச் செய்ய காலம் இல்லாததால் நாம் இந்தக் கால நீட்டிப்பைக் கேட்டிருக்கிறோம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு எவ்வளவு காலம் ஆகும்? நீண்ட காலம் ஆகுமா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களும், திரு. திருவேங்கடம் அவர்களும் கேட்டார்கள். நிச்சயமாக எவ்வளவு விரைவிலே அந்தத் திருத்தத்தை நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு விரைவிலே நிறைவேற்றி, தேர்தலை நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் கையிலே அந்த அங்காடிக் குழுக்களை ஒப்படைப்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம், விருப்பம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50).

அதிகாரிகள் ஒரு குழுவை நடத்திச் செல்வதை விட மக்களுடைய பிரதிநிதிகள், விவசாயிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் அந்தக் குழுவினை நடத்திச் செல்வதுதான் நிச்சயமாக நலம் பயக்கும் என்பதிலே இரண்டு கருத்துக்களுக்கு இடம் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் தெரிவித்ததைப் போல இப்போதிருக்கின்ற சட்டத்தினுடைய அடிப்படையிலே இந்தத் தேர்தலை நடத்துவதிலே ஏறத்தாழ ஒரு பொதுத் தேர்தல் நடத்துவது போல் நடத்த வேண்டிய நிலைமை இருக்கின்றது அதனாலே மகராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் விற்பனைக் குழுக்கள் அமைத்திருக்கக் கூடிய சட்டங்கள் பற்றி எல்லாம் படித்துப் பார்த்து, அது எப்படிச் செயல்படுகின்றது என்பதை அடிப்படையாக வைத்துக் கொண்டு அந்த அடிப்படையிலே சட்ட திருத்தம் கொண்டுவர அரசு உத்தேசித்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்

கிறேன். ஆனால் அதற்கு அதிகக் காலம் ஆகுமானால் ஆலோ
சனைக் குழுக்கள் அமைக்கலாம் என்ற ஆலோசனையை திரு.
அழகர்சாமி அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் அப்படி
வெறும் ஆலோசனை குழுக்களை அமைத்து அவர்களால்
அதிகாரத்தோடு முடிவு எடுக்க முடியாத அளவுக்கு நிலைமைகள்
இருப்பது ஏதோ இந்தக் குழுவிலே இடம் பெற்றிருக்கிறார்கள்
என்பதற்குத்தான் பயன்படுமே தவிர நாம் எதிர் பார்க்கின்ற
பயன் கிட்டாது. அதனாலே தான் அதிகாரம் உள்ள குழுவாக
அந்தக் குழுக்கள் அமையவேண்டும் என்ற வகையிலே அரசு
விரும்பித்தான் சட்ட திருத்தத்தைக் கொண்டு வர உத்தேசித்
திருக்கிறது. அப்படி காலம் அதிகமாக ஆகும் என்றால்
ஆலோசனைக் குழுக்களை அமைப்பது பற்றிக் கூட அரசு
பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொண்டு சட்ட முன்
வடிவை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விளை பொருள் அங்காடிகளிலே நிறைய அலுவலர்கள்
பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணியாளர்
களுக்கென்று சில கோரிக்கைகள் இருக்கின்றன. அவை அரசுக்கு
தெரிவிக்கப் பெற்றன. அந்த கோரிக்கைகளின் அடிப்
படையில் அரசு சில அறிவிப்புகளைத் தருகின்றது என்று இந்த
நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே பணியாற்று
கின்ற பணியாளர்கள் இறந்தால் அவர்களுடைய குடும்பத்திற்கு
10 ஆயிரம் ரூபாய் கொடுப்பது என்பது ஏற்கெனவே இல்லாமல்
இருந்தது. 13—8—1981 முதல் அவருடைய குடும்பத்திற்கு
10 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்திருக்
கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் 5 ஆண்டுகள் அங்கே பணியாற்றிய அட்டெண்டர்
களுக்கு பதவி உயர்வு தரவேண்டும் என்ற ஆணையையும் அரசு
வழங்கி இருக்கின்றது.

அடுத்து அந்த ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கு
வதற்குரிய நடவடிக்கையினையும் அரசு மேற்கொண்டிருக்
கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து இந்தச் சட்ட
முன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்
அமைகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசிய பேச்சில்
இப்போது மகாராஷ்டிர மாநிலத்தைப் போல பல்வேறு திருத்த
சட்டங்கள் கொண்டுவரப் பட இருக்கின்றது என்றும் அதன்
காரணத்தாலே உடனடியாகத் தேர்தலை நடத்தி மார்க்கெட்டிங்
கமிட்டியை உருவாக்க முடியாத நிலை இருக்கின்றது என்பதைக்
குறிப்பிட்டார்கள். ஆனால் இப்போது நடைமுறையில் இருக்கக்
கூடிய இந்த சட்டத்தில் காம்பொசிஷன் ஆஃப் மார்க்கெட்டிங்





கமிட்டி என்று சொல்லுகிற போது அதை எப்படி அமைப்பது
என்பது சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்
கின்றது ? அதற்காக குழு போடப்பட்டிருக்கின்றதா ? இது
இரண்டாண்டு காலத்திற்கு எக்ஸ்டென்ஷன் வாங்கப்பட்டிருக்
கின்றதே, மேலும் இந்த சட்டங்களுக்கு 4 ஆண்டு என்பதை
6 ஆண்டு என்று ஆக்கி இருக்கிறீர்களே, எவ்வளவு காலதாமதம்
ஆகும் ? விரைவிலே முடித்துவிட முடியுமா ? அதற்கான முயற்சி
பற்றி அந்தச் சட்டத்திலே என்ன நடவடிக்கை இதுவரை
எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் கேட்டுக்கொண்டு
நான் கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தத்தை வலியுறுத்து
கிறேன்.

திரு. அ. ரகுமான்கானின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு
விடப் பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள
கேள்வி ; " தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வேளாண்மை விளை
பொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு
(சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 54/1981) ஆய்
வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு
எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்
பெற்றது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள
கேள்வி :—

"பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற
வேண்டும்."

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே
நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In clause 3, in sub-clause (2), for the expression " date of the publication of this Act in the *Tamil Nadu Government Gazette* substitute the expression "4th day of June 1981."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப் பெற்றது.

பிரிவு 3, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்
பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

" பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும் ".

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

After clause 3 insert the following clause, namely :—

"4. Repeal and saving— 1. The Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Ordinance, 1981 (Tamil Nadu Ordinance 6 of 1981) is hereby repealed.

2 Notwithstanding such repeal anything done or any action taken under the principal Act as amended by the said Ordinance shall be deemed to have been done or taken under the principal Act as amended by this Act."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

புதிய பிரிவு 4, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 54/1981) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெற்றது.

## 7 அரசினர் தனித் தீர்மானம்

மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 305-ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவின் கீழ் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன



சட்டத்தின் iv-வது விவர அட்டவணையில் சேர்க்கக் கருதியுள்ள பின்வரும் வரைவுத் திருத்தத்திற்கு ஒப்புதல் அளிக்குமாறு வேண்டப்படுகிறது.

வரைவுத் திருத்தம்

தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920 iv-வது விவர அட்டவணையில் 43-ஆம் விதியைச் சேர்ந்த (1) துணைவிதியின் (p) இனத்திற்கு பின்னர், பின்வரும் இனம் சேர்த்துக் கொள்ளப்பெற வேண்டும். அதாவது :—

" (pp) குடும்ப நல அறுவை சிகிச்சைகள் தொடர்பாகப் பணியாளர்களுக்குப் பயணப்படி வழங்குதல் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

## 6 அறிவிப்புகள் —தொடர்ச்சி

### (ஈ) பேரவையின் அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று 22—8—1981-ஆம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் பேரவையின் நடவடிக்கைகள் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது :—

24—8—1981 திங்கட்கிழமை — அரசினர் சட்டமுன் வடிவுகள்— ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும்.

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலச்சீர் திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 56/1981).

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 57/1981).

3. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 58/1981.

[பேரவைத் தலைவர்] [1981 ஆகஸ்ட் 22

4. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 61/1981).

5. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 59/1981).

| | |
|---|---|
| 25—8—1981 செவ்வாய்க்கிழமை. | 1. அரசினர் சட்டமுன் வடிவுகள்—ஆய்வு செய்தலும்—நிறைவேற்றலும்.<br>24—8—1981 அன்று முடிவு பெறாத சட்ட முன் வடிவுகள்.<br>2. அத்தியாவசியப் பண்டங்கள் விலை ஏற்றம் பற்றியும் உணவுக் கொள்கை பற்றியும் வெள்ளை அறிக்கை மீதான விவாதம். |
| 26—8—1981 புதன்கிழமை. | 1. 1981-82 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையை பேரவைக்கு அளித்தல்.<br>2. அத்தியாவசியப் பண்டங்கள் விலை ஏற்றம் பற்றியும் உணவுக் கொள்கைபற்றியும் வெள்ளை அறிக்கையின் மீதான விவாதம் (தொடர்ச்சி). |
| 27—8—1981 வியாழக்கிழமை. | தனியார் அலுவல்கள். |
| 28—8—1981 வெள்ளிக்கிழமை | 1981-82-ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீது விவாதமும், வாக்கெடுப்பும் மற்றும் அதற்கான நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல்.<br>[பிற்பகல் 1-00] |
| 29—8—1981 சனிக்கிழமை | அரசினர் சட்ட முன்வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |
| 30—8—1981 ஞாயிற்றுக்கிழமை | விடுமுறை. |
| 31—8—1981 திங்கட்கிழமை | 1. நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.<br>2. ஏனைய அரசினர் சட்ட முன் வடிவுகள்—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |



1981 ஆகஸ்ட் 22] [பேரவைத் தலைவர்]

பேரவை வழக்கம் போல் காலை 9-00 மணிக்குக் கூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 24—8—1981 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

75 தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மதுபான விதிகளில் (உரிமம், அனுமதி) சில திருத்தங்கள் செய்வது குறித்து 23—5—1981-ஆம் தேதியிடப் பெற்ற மதுவிலக்கு ஆயத் துறையின் (மதுவிலக்கு—ஆயத்தீர்வை-4) 38 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின்) (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

76 26—6—1944 ஆம் தேதியன்று முன்னாள் கல்வி—பொதுச் சுகாதாரத் துறையில் தோன்றி, 15—8—1944 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பகுதி 1-ஏ-ன் 205—206 ஆம் பக்கங்களில் வெளியான (ஆங்கிலத்தில்) 333 ஆம் எண் அறிவிப்பில் சென்னை மாநகரின் மைலாப்பூர் தெற்குப் பகுதி நகர அமைப்புத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்வது குறித்து 4—8—1979-ஆம் தேதியிடப்பெற்ற வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1509 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப் புற வளர்ச்சித் திட்ட அமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

77 திருவள்ளூர் உள்ளூர் திட்டப்பகுதி அறிவிப்பு குறித்து வீட்டு வசதி—நகர வளர்ச்சித் துறையின் 15—2—1980 ஆம் தேதியிடப்பெற்ற 153 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற அமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

78 சேமக்காடுகளில் வரம்பு விதிகளை மீறி குடியிருக்கும் ஆக்கிரமிப்பாளர்களை ஒட்டு மொத்தமாக வெளியேற்றுவதற்காக சில விதிகளை உருவாக்குவது குறித்து 13—7—1981 ஆம் தேதியிடப்பெற்ற வன—மீன் துறையின் 832 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய நாள்கள்

4. 1976-77 மற்றும் 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின் வாரியத்தின் கணக்குகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

5. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/1981) வாயிலாக உடனடியாகச் சட்டம் இயற்றப்படுவதன் அவசியத்தை உருவாக்கிய சூழ்நிலைகளை விளக்கி தமிழ்நாடு சட்டப்பேரவை விதிகளின் 182 ஆம் விதியின் கீழ் வைக்கப்படும் விவர அறிக்கை.

6. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 3/1981).

7. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 4/1981).

8. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் [தனி அலுவலர்கள் நியமனம்] இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் [தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 5/1981]

9. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் [இரண்டாம் திருத்த] அவசரச் சட்டம் தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 6/1981]

10. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுரை-காமராஜ் பல்கலைக் கழக [திருத்த] அவசரச் சட்டம் [தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 7/1981]

11. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் [நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்] திருத்த அவசரச் சட்டம் [தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 8/1981]

12. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு [மூன்றாம் திருத்த] அவசரச் சட்டம் [தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 9/1981]

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1981 ஆகஸ்டு 24, திங்கட்கிழமை

ஆவணி 8, துன்மதி—திருவள்ளுவர் 2012

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்

"என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை."

பொதுநலப் பணியில், நாட்டு ஆட்சியில் ஈடுபட்டோர், தனக்கும், தன் தலைவனுக்கும், தன் நாட்டிற்கும் புகழையும், நன்மையையும் தராத செயல்களை எப்பொழுதும் செய்யவே கூடாது.

### ஆற்காட்டிலுள்ள துணைக் கருவூலம்

*வினா 21—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஆற்காடு தொகுதியில் ஆற்காடு நகரத்தில் துணைக் கருவூலத்தை மாற்றி தலைமைக் கருவூலம் அமைக்கப்படுமா ?

(ஆ) தற்போது உள்ள துணைக் கருவூலம் அரசு கட்டிடத்தில் மாற்றும் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) ஆம்.

(இ) விரைவில் நிறைவேற்றப்படும்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆற்காடு தாலுகாவில் சப் ரிஜிஸ்திரார் ஆபீசும், தாலுகா ஆபீசிலே இரண்டாம் வகுப்பு மாஜிஸ்திரேட் கோர்ட்டும் வர இருக்கின்ற காரணத்தினாலும், நேஷனலைஸ்ட் பாங்கு இருக்கின்ற காரணத்தினாலும், தலைமைக் கருவூலத்தை நிறுவ அரசும், அமைச்சர் அவர்களும் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

[1981 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன்—தலைமைக் கருவூலம் என்பது மாவட்டத் தலை நகரங்களிலே அமைந்திருக்கும் ஒன்றாகும். ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரில் தலைமைக் கருவூலமும், மற்ற வட்டத் தலைநகரங்களில் துணைக் கருவூலங்களும், மிக மிக அவசியமாகத் தேவைப்படுகின்ற துணை வட்டங்களில் துணைக் கருவூலங்களும் அமைக்கின்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆகவே, மாவட்டத் தலைநகரங்களில் தலைமைக் கருவூலங்கள் அமைக்கப்படும்; மற்ற வட்டத் தலைநகரங்களில் துணைக் கருவூலங்கள் தான் அமைக்கப்படும்.

**அரசு பரிசுச் சீட்டில், பரிசுத் தொகையை வாங்காததால் சேர்ந்துள்ள தொகை.**

*வினா 22—**திரு. சென்னிமலை என்கிற ம. செ. கந்தசாமி** : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழக அரசு நடத்தும் பரிசுச் சீட்டில் பரிசு விழுந்த நபர்கள் பரிசுத் தொகையை வாங்காததால் 1979-80 ஆம் ஆண்டுகளில் சேர்ந்துள்ள தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் கீழ் பரிசு விழுந்த நபர்கள் பரிசுத் தொகையை வாங்காததால் 1979-80 ஆம் ஆண்டில் சேர்ந்த தொகை ரூபாய் 68,12,500 ஆகும்.

**திரு. சென்னிமலை என்கிற ம. செ. கந்தசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொகை எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, இப்படி பரிசுச் சீட்டின் மூலம் அரசுக்குக் கிடைக்கின்ற வருவாய் தொகைகள் குறிப்பாக, தமிழக தனி நல்வாழ்வு நிதிக்கும், குடிநீர் வழங்குகின்ற பணிக்கும், அரிசனங்களுக்கு வீட்டு மனை வழங்குகின்ற பணிக்கும், தேசியப் பாதுகாப்பு நிதி அளிக்கின்ற பணிக்கும், முதலமைச்சருடைய பெருவெள்ளம், பெரும் புயல் ஆகியவற்றால் சேதம் ஏற்படுகின்ற நிவாரண நிதிக்கும், முதலமைச்சருடைய பெயரால் அமைந்துள்ள பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்கும் பல்வேறு வகைகளிலே அவ்வப்போது கிடைக்கின்ற நிதி பிரித்து அளிக்கப்படுகின்றது.

**திரு. என். இட்டப்பா** : தலைவர் அவர்களே, இந்தப் பரிசுச் சீட்டு நடத்துகின்ற வகை மாவட்டந்தோறும் நடத்துவதற்கான குறிப்பு ஒரு காலத்திலே இருந்தது. அரசு அதைப் பற்றிச் சிந்தித்து ஆவன செய்ய முடிவெடுக்குமா ?



1981 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை இல்லை. மாநில அளவிலே நாம் நடத்திக் கொண்டு வருகிறோம். முன்பு மாதத்திற்கு ஒரு தடவை என்றிருந்தது; இப்போது மாதத்திற்கு இரண்டு தடவைகள் என்ற முறையில் பரிசுச் சீட்டுக்களை வழங்கி வருகிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கிறபோது, ஒரு ஆண்டில் 68 லட்சத்திற்கும் அதிகமான பரிசுத் தொகை வாங்காததால் இருக்கின்றது என்று சொன்னார்கள். அப்படியானால், மக்களிடம் இந்தப் பரிசுச் சீட்டில் அக்கறை குறைந்திருப்பதைக் காட்டுகிறது. ஒரே பரிசுச் சீட்டு விழுந்து, ஒரே எண்ணுள்ள இரண்டு சீட்டுகளுக்குப் பரிசு கொடுக்கப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அது உண்மையா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : 1979–80-ல் மட்டும் சிறப்புக் குலுக்கல் சீட்டு மூன்று தடவையும் சாதாரண குலுக்கல் எட்டு தடவையும் ஆக மொத்தம் 11 தடவைகள் குலுக்கல்கள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,17,90,000. அதிலே வழங்கப்பட்டது ரூ. 1,49,77,500. அதிலே வாங்காமல் உள்ள தொகை ரூ. 68,12,500. அநேகம் பேர் சீட்டு விழுந்திருந்தாலும் சீட்டைத் தொலைத்திருக்கக்கூடும், மறந்திருக்கக்கூடும், திரும்பிப் பார்க்காமல் இருந்திருக்கக் கூடும். பத்திரிகை குலுக்கல்களுக்குப் போகாததால் இந்தத் தொகை. ஒரே எண் உள்ள சீட்டை இருவர் கொண்டுவரக் கூடிய நிலைமை வந்தால் விவகாரம் வருகிறபோது அந்த முறைப்படி தீர்க்கின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சீட்டு குலுக்கல் நடந்து குறிப்பிட்ட ஒரு மாத காலத்திற்கு வாங்காமல் விட்டதற்குப் பிறகுதான் அரசின் நிதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி** : தமிழக அரசு நடத்தும் பரிசுச் சீட்டிலே சிறப்புப் பரிசு 10 லட்சம், ஒரு லட்சம் என்ற அளவுக்குத்தான் இருக்கிறது. ஆகவே, தமிழக மட்டத்திலே தான் சீட்டுகள் விற்பனையாகின்றன, இந்திய அளவிலே வாங்கப்படுவதில்லை. ராஜஸ்தானிலே சிறப்புப் பரிசு 51,00,000 ரூபாயாக இருக்கிற காரணத்தினால் இந்தியா பூராவும் வாங்கக் கூடிய நிலை இருக்கிறது. அதனால் அந்த அரசாங்கத்திற்கு அதிக வருமானம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, தமிழக அரசும் ஒரு கோடி பரிசுத் திட்டத்தைக் கொண்டு வந்து தமிழகம் மட்டுமல்லாமல் இந்திய அளவிலே தேசியப் பரிசுச் சீட்டாக ஆக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

[1981 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்தியா வில் இருக்கிற எல்லா மாநிலங்களிலும் பரிசுச் சீட்டுகள் நடத்தி வருகிறார்கள். நாம் சீராகவும், சிறப்பாகவும், முறையாகவும் துவளாத அளவுக்கு நடத்தி வருகிறோம். பொதுவாக அரசு ஒரு கோடி அளவுக்குப் போய்விட்டால் பிறகு ஊர்க் கோடிக்கும் நாட்டுக் கோடிக்கும் போக வேண்டிய அவசியம் வந்து விடும். ஒரே சீராக நடத்த வேண்டும், முறையாக நடத்தவேண்டும், அதிக அளவு மேலேயும் போகாமல் அதிக அளவு கீழேயும் இறங்காமல் சீரான அளவுக்கு வருமானத்தை அதன் மூலம் பெற்று மக்களுடைய நலப் பணிகளுக்குச் செலவழிக்கும் சூழ்நிலையில் நாம் நடத்திக்கொண்டு வருகிறோம்.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** தலைவர் அவர்களே, 68,12,500 ரூபாய் பரிசு பெற்றவர்கள் பெறவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இனி அந்தப் பரிசுச் சீட்டுகளுக்கு ஒரிஜினல் டூப்ளிகேட் என்று வைத்து யார் வாங்குகிறார்களோ அவர்களுடைய பெயர்களையும் முகவரிகளையும் குறித்தால் சீட்டு விழுந்த அனைவரும் பரிசு களைப் பெற வழி ஏற்படும் அல்லவா? அதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பரிசுச் சீட்டு யாருக்குக் கொடுக்கப்படுகிறது என்று பெயர் விவரங் களைக் குறிக்க இயலாது. ஏஜெண்டுகள் மற்றவர்கள் வேண்டு மானால் அதை வைத்துக் கொள்ளலாம். அரசு அதற்கு ஒன்றும் செய்ய இயலாது. குறிப்பிட்ட காலவரையறைக்குள் எப்போது வேண்டுமானாலும் பரிசுச் சீட்டைக் கொண்டு வந்து காட்டி பணத்தை வாங்கிக் கொள்ளலாம். அப்படி வாங்காது விடப்படுவது அரசுக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும்.

**திரு. மி. வின்சென்ட் :** பரிசுச் சீட்டு விற்பனை ஆண்டுக் காண்டு கூடி வருகிறதா அல்லது குறைந்து வருகிறதா? மின் ராபில திட்டத்தைக் கொண்டு வர அரசு உத்தேசித்து வருகிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தமிழகத்தைப் பொறுத்தவரை ஓரளவு ஒரே சீரான அளவிலேதான் நடத்திக் கொண்டு வருகிறோம். சீரான அளவிலேதான் வருமானம் ஆண்டுக்காண்டு கிடைத்து வருகிறது. மற்றைய மாநிலங் களில், புதிதாக நடத்தும் மாநிலங்களில் கூட நாளுக்கு நாள் பரிசு குலுக்குவது போன்று நடத்தி வருகிறார்கள். போட்டி போட்டுக்கொண்டு நடத்தி வருகிறார்கள். ஏராளமான பரிசுச் சீட்டுகள் நாடெங்கிலும் விற்பனையாகின்றன. அவை அத்த



1981 ஆகஸ்ட் 24]

னையும் மக்கள் வாங்குகின்ற நிலையில் மக்கள் அதிர்ஷ்டத்தைச் சோதிப்பதற்காக, அதிர்ஷ்டம் இருக்கிறதா இல்லையா என்பதைச் சோதிப்பதற்காக வாங்கிக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. பத்திரிகைகள் எல்லாம்கூட ராசி பலனுக்கு ஒரு பக்கத்தை ஒதுக்கி மேஷம், ரிஷபம், துலாம் என்றெல்லாம் பார்த்து அந்தந்த மாதத்திலே தங்கள் அதிர்ஷ்டத்தைச் சோதித்துப் பார்க்கிறார்கள். அவர்களுக்கு அதிர்ஷ்டம் இருக் கிறதோ இல்லையோ, அரசுகளுக்கு அதிர்ஷ்டம் இருக் கிறது என்று வகையில் வரவேற்கும் தன்மையில் இருக்கிறோம்.

[முற்பகல் 9—10]

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, இந்த பரிசுச் சீட்டுகள் கள்ளத்தனமாக அச்சடிக்கப்படுகிறது என்ற புகார் கடந்த சில மாதங்களாக இருப்பது குறித்து அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதைத் தடுக்க அரசு நட வடிக்கை ஏதாவது எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கள்ளத் தனமாக அச்சடித்து விற்பனை செய்வதாகக் குறிப்பு எதுவும் வரவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுகிறபோது தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறோம். பரிசுச் சீட்டுகளை அவர்கள் 10, 15 என்று ஒன்றாகச் சேர்த்து நம்பர் கொடுத்து அதையும் விற்பனை செய்து கொண்டிருக் கிறார்கள் என்ற தகவல் வந்து அதன்மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று உரிய துறையினர் கேட்டுக் கொள்ளப் பட்டு இருக்கிறார்கள்.

## இராயபுரம் மீன்பிடி துறைமுகம்

வினா எண் 23— **திரு. செ. சிவசாமி :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் மீன்பிடி துறைமுகம் கட்டி முடிக்கப் படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(ஆ) 1981-ம் ஆண்டிற்குள் எல்லா வேலைகளும் முடிக்கப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1981 ஆகஸ்ட் 24

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே,
இராயபுரம் மீன்பிடி துறைமுக வேலை நீண்ட நாட்களாக
முடிக்கப்படாமல் இருக்கிறது என்ற குறைபாடு மக்களிடத்
திலே இருந்து கொண்டிருக்கிறது. கடந்த 2. 3 வரவு—
செலவுத் திட்டங்களின் குறிப்புகளிலேயும் இந்த மீன்பிடி
துறைமுகத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்று
வரை அந்த வேலை முடிக்கப்படவில்லை. சீக்கிரமாக அதை
முடிக்க அரசு முயற்சியெடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, ஏறக்குறைய பத்து கோடி ரூபாய் மதிப்பீட்டிலே
இந்தத் திட்டம் நடைபெற்று வருகிறது. மாநில அரசி
னுடைய மேற்பார்வையின் கீழ் இந்த வேலைகள் நடை
பெறவில்லை, மத்திய அரசின் மேற்பார்வையில் சென்னை
துறைமுகத்தினரே இந்த வேலைகளை மேற்கொண்டு வருகிறார்
கள். அவர்கள் கூறியிருக்கிற குறிப்பில், இத்துறைமுகத்
திலே கட்டுமானப் பணிகள் விரைவாக நடைபெற்று
வருகின்றன. படகுத் துறை வேலை முடிவுற்றது. படகு
தங்குமிடம், ஆழப்படுத்துதல் முடிவுறும் நிலையில் உள்ளது.
அலை தடுக்கும் சுவர் கட்டிமுடிக்கப்பட்டு இருக்கிறது. அதன்
மீது சாலை போடும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.
நிர்வாக அலுவலகக் கட்டட வேலை முடிந்துவிட்டது. இதர
வேலைகளான மீன் ஏலம் விடும் கூடம், மீன்களைப் பிரித்து
பிரச்சாரம் செய்து வெளியிடங்களுக்கு அனுப்பும் கூடம்,
படகுகளைப் பழுதுபார்ப்பதற்கான சறுக்கு வழி, தண்ணீர்க்
குழாய்கள், மற்றும் மின் இணைப்புகள் ஆகிய வேலைகள்
முடிக்கப்படவேண்டும். 1981ஆம் ஆண்டிற்குள் எல்லா வேலை
களும் முடிவடையும் என்றும் துறைமுகத்தைச் சேர்ந்தவர்கள்
குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள்.

திரு. செ. சிவசாமி : இராயபுரம் மீன்பிடி துறைமுகத்
திற்குப் பக்கத்திலே மீன்களைக் காயப்போடும் சாதனங்கள்
உள்ள இடம், பனிக்கட்டியில் வைக்கக்கூடிய சாதனங்கள்
உள்ள இடம் அந்தச் சாதனங்களை உற்பத்தி செய்யக்கூடிய
இடம் ஆகியவற்றைக் கட்டக்கூடிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்
கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது
பற்றியவிவரக் குறிப்புகள் தற்போது இல்லை. மீன்களை
ஏலம் போடுகிற இடம், மீன்களைப் பிரித்து பார்சல் செய்கிற
கூடம் ஆகியவைகள் கட்டப்படுவதாக செயற்குறிப்பு இருக்கிறது.
மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போன்ற குறிப்பு இல்லை.
தனிக் கேள்வி போட்டால் பதில் தரலாம்.



1981 ஆகஸ்ட் 24]

## தமிழகத்தில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு

*வினா எண் 24—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு
வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மக்கள் தொகை கணக்கு எடுக்கும்
பணி நிறைவு பெற்று விட்டதா?

(ஆ) தமிழகத்தின் மக்கள் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) பூர்வாங்க முடிவுகளின்படி 1981 ஆம் ஆண்டு மார்ச்சு
மாதம் முதல் தேதியன்று தமிழ்நாட்டின் மக்கள் தொகை
4,82,97,456 ஆகும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்த
4,82,97,456 பேர்களில் ஆண்கள் எத்தனை பேர்கள், பெண்கள்
எத்தனை பேர்கள்? 10 ஆண்டுகளில் எத்தனை சதவீதம் மக்கள்
தொகை உயர்ந்து இருக்கிறது? இந்த மக்கள் தொகையிலே
இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் எத்தனை சதவீதம்
உயர்ந்து இருக்கிறார்கள் என்ற விவரத்தைத் தர முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அவர்கள் கடைசி
யிலே கேட்ட கேள்விக்கு முதலிலேயும் முதலிலே கேட்ட கேள்வி
யிக்கு கடைசியிலேயும் பதில் சொல்ல விரும்புகிறேன். நம்
முடைய இந்தியத் துணைக் கண்டம் மதச் சார்பற்ற அரசாதலால்
மதத்தின் அடிப்படையில் சாதியின் அடிப்படையில் மக்கள்
தொகை கணக்குகளை கொடுப்பதில்லை. முதல் கேள்விக்கு
என்னுடைய பதில், ஆண்கள் 2,44,22,228, பெண்கள்,
2,38,77,228. கடந்த 10 ஆண்டுகளில் மக்கள் தொகைப்
பெருக்கம் தமிழ்நாட்டில் 71 லட்சம். அதாவது நம்முடைய
மக்கள் தொகையில் 17.23 சதவீதம் உயர்ந்திருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே,
ஏனைய மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது மக்கள் தொகை அதி
கரிப்பிலே தமிழகம் எத்தனையாவது இடத்தை வகிக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே,
மக்கள் தொகையில் ஏழாவது இடத்தில் இருக்கிறது.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத்
தலைவர் அவர்களே, மக்கள் தொகை *கணக்கெடுப்பின்பொழுது
சாதி வாரியாகவோ, மத வாரியாகவோ எடுக்கப்படுவது வழக்கத்

தில் இல்லை என்று அமைச்சரவர்கள் அறிவிக்கிறார்கள். அப்படி யானால் தனித் தொகுதிக்கு மக்கள் தொகை கணிப்பு எப்படி வருகிறது? வரவிருக்கின்ற ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களில் தனித் தொகுதி ஒதுக்கப்போவதாக அரசு முடிவெடுத்திருப்பதாக அறிகிறோம். அவ்வாறாயின் எந்த அடிப்படையில் அப்படிப்பட்ட தொகுதிகள் ஒதுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. டீலிமிடேஷன் கமிட்டி ஒன்று வருகிறது. அது பிரித்துக் கொடுக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்த குறிப்பின் பிரகாரம் கடந்த பத்தாண்டுகளில் இராமநாதபுரம் மாவட்டத்தில் எப்பொழுதெல்லாம் வறட்சி ஏற்படுகிறதோ அப்பொழுதெல்லாம் இயற்கையின் காரணமாக அந்த ஜில்லாவை விட்டுத் தஞ்சை ஜில்லாவிற்கு வருகிறார்கள். சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், ஆதி திராவிட சமுதாய மக்கள் பின் தங்கிய அந்தச் சமயத்தில் கணக்கெடுப்பு நடந்திருக்கிறது. பாதிப்பு ஏற்பட்டிருப்பதால் மீண்டும் வருங்காலத் தேர்தல்கள் சமயத்தில் மறுபரிசீலனை செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே. தேர்தலுக்கு முன்பு வாக்குப் பதிவு செய்யும் வாக்காளர்கள் என்று கணக்கெடுப்பார்கள். அப்பொழுது டீலிமிடேஷன் கமிட்டி வருகிறபொழுது பரிசீலிப்பார்கள்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தமிழகத்தில் வெற்றிகரமாகச் செயல்படுவத்துவதன் காரணமாக மக்கள் தொகை பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக அறிக்கை கூறுகிறது. இந்த நிலையில் இந்திய அரசு, தமிழ்நாட்டில் இத்திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பெறுகின்ற காரணத்தால் ஏதேனும் சிறப்புத் தொகையை வழங்குகிறதா? அல்லது எற்கனவே பாராளுமன்றத்தில் ஒரு சீட் குறைந்திருப்பதைப்போல மீண்டும் இந்த அபாயம் ஏற்பட வழியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, எதிர்காலத்தில் ஏற்படுகின்ற அபாயத்தைப்பற்றி என்னால் சொல்ல இயலவில்லை. ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தில் பத்தாண்டுகளில் மக்கள் தொகையில் 24.75 அதி



கரித்திருக்கிறது; ஆனால் தமிழ்நாட்டில் 17.23 அதிகரித்திருக்கிறது. ஆகவே, குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டத்தைத் தமிழக அரசு அல்லது தமிழக மக்கள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதற்கு இது எடுத்துக்காட்டு. பாராளுமன்றத்தில் ஒரு சீட் குறைந்திருப்பதாகச் சொன்னார்கள். ஒரு சீட் அல்ல; முன்பு 41 இடங்கள் நாடாளுமன்றத்தில் இருந்தன; தற்பொழுது அது 39 ஆக ஆகியிருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு ஜே. எஸ். இராசு மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் ஆகியவர்கள் கேட்ட கேள்விகளுக்கு டீலிமிடேஷன் கமிட்டி இதைப்பற்றி ஆராயும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த டீலிமிடேஷன் கமிட்டி ஆராய்வதற்கு 71 ஆவது ஆண்டு எடுக்கப்பெற்ற மக்கள் தொகைக்கணக்கெடுப்பை அடிப்படையாக வைத்துக்கொள்ளுமா அல்லது இப்பொழுது 1981 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, டீலிமிடேஷன் கமிட்டி பத்தாண்டுகளுக்கு ஒருமுறை வரும். 1981 ஆம் ஆண்டு இந்தியத் துணைக்கண்டத்தில் எடுக்கப்பட்ட கணக்கின் அடிப்படையில் டீலிமிடேஷன் கமிட்டி வரும்.

## மன்னார்குடியில் அரசு ஊழியர்களுக்கு வீடுகட்டும் திட்டம்

*வினா எண் 25 திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடியில் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3 ஆம் நாளன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரிடம் விண்ணப்பம் அளிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி நகரத்தில் சர்வே எண் 3786, 3787 மற்றும் 3789 இல் உள்ள 8 ஏக்கர் 79 சென்ட் பரப்பளவுள்ள நிலம் 1979 ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசு ஊழியர்

[1981 ஆகஸ்ட் 24

கள் வீட்டு வசதி வாடகைத் திட்டத்தின்கீழ், அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக வீட்டு வசதித் துறைக்கு நிலக் கிரயம் பெறாமல் மாற்றம் செய்யப்பட்டது. இந்நிலத்தில் ஆக்கிரமிப்புச் செய்துள்ள ஆதி திராவிடர்களின் கோரிக்கையை ஏற்று அரசு ஊழியர்களின் வீட்டு வசதித் திட்டத்திற்கு மாற்றிய நிலத்தின் பரப்பளவை 8.79 ஏக்கரிலிருந்து 4.97 ஏக்கராகக் குறைத்தும், மீதியுள்ள 3 ஏக்கர் 82 சென்ட் நிலத்தை, ஆதி திராவிட ஆக்கிரமிப்பாளர்களில் தகுதியுள்ளவர்களுக்கு வீட்டு மனையாகவும் ஒப்படை செய்திருக்கிறது.

[முற்பகல் 9.20]

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3 ஆம் நாளன்று அமைச்சருக்கு அளிக்கப்பட்ட விண்ணப்பம்பற்றி நான் கேள்வி கேட்டிருக்கிறேன். ஏற்பட்டுள்ள சிக்கலைத் தீர்த்து உடனடியாக அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கான திட்டத்தை அமுல் படுத்த விரைவில் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே நிலம் பூராவையும் ஆதி திராவிடர்கள் அங்கே ஆக்கிரமிப்பு செய்திருந்ததால், வீட்டு வசதி வாரியத்தால், அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டக் கேட்கப்பட்டது. அதற்குப் பிறகு ஆதி திராவிடர்கள் நாங்கள் குடியிருக்கிறோம் என்று மனுக் கள் கொடுத்தார்கள். அதன்பேரிலே தடை உத்தரவு போடப் பட்டது. அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டு அவருடைய பரிந்துரையின் பேரிலே, முதலிலே 8.79 ஏக்கர் நிலம் வீட்டு வசதித் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தாலும் அவர்களுக்கு 4.97 ஏக்கர் போதுமானது என்று கருதி, மீதி 3.82 ஏக்கர் நிலம் ஆய்ந்து ஆதிதிராவிடர்களுக்குக் கொடுக்கப்பட்டி ருக்கிறது.

## ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம்

*வினா எண். 26— திரு. இல. பலராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970ஆம் ஆண்டுக்கு முன்னால் ஓய்வு பெற்ற ஆசிரியர் களுக்கும் அதற்குப்பின்னால் ஓய்வு பெற்றவர்களுக்கும் ஓய் வூதியத் தொகை அளிப்பதில் வித்தியாசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனை ஒருமுகப்படுத்த அரசு எடுத் துள்ள நடவடிக்கை என்ன?



1981 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) வித்தியாசத்தை ஒருமுகப்படுத்த கருத்தும் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*வினா எண் 27— திரு. அ. து. குலசேகர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் ஓய்வு ஊதியம் இரண்டு விதமாகவுள்ளது. 1–10–1979-க்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கு 33/80 ஊதியமும், 1–10–1979-க்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு 50 சதவிகிதமும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வித்தியாசத்தை நிவர்த்திக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த வேறுபாட்டைக் களைய கருத்தும் ஏதுமில்லை.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டுக்கு முன்னால் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு எவ்வளவு ஓய்வூதியம் தரப்படுகிறது? அதற்குப் பின்னால் ஓய்வு பெற்றவர்களுககு எவ்வளவு ஓய்வூதியம் தரப்படுகிறது? அதற்கு முன்னால் ஓய்வுப்பெற்றவர்கள் எவ்வளவு பேர்கள் ஓய்வூதியம் பெறுகிறார்கள். அதற்குப் பின்னால் இன்றைய வரையில் எவ்வளவு பேர்கள் ஓய்வூதியம் பெறுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1970ஆம் ஆண்டுக்கு முன்னால் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மும்முனை நலத்திட்டத்தின்படி ஓய்வூதியம் ஆசிரியர் சேமநிதிக்கு நிர்வாகத்தின் பங்குத் தொகை மற்றும் அரசுப் பங்குத் தொகை ஆயுள் பாதுகாப்பு ஈட்டுத் தொகை ஆகியவை பெறுகின்றனர். அவர்களது ஓய்வூதியம் சராசரி ஊதியம் 11/120 என்ற விகிதத்தில் கணக்கிடப்படுகிறது. உயர்ந்த பட்சம் 30/120 என்று ஆகும்.

2. 1970-க்குப் பின் ஓய்வு பெறும் ஆசிரியர்கள், தளர்த் தப்பட்ட ஓய்வூதிய விதிகளின்படி, பணிக்கொடை மற்றும் ஓய்வூதி யம் பெறுகிறார்கள். இவர்களது ஓய்வூதியம் சராசரி ஊதியம்
பணிக்காலம் 30
*———— ———— என்ற வீதத்திலும் கணக்கிடப்பட்டு வந்தது.
80 80

3. அரசாணை நிலை எண் 57 நிதி (ஓய்வூதியம்) தேதி 2–2–1980-ல் ஓய்வூதியம் கணக்கிடும் முறையை 1–10–1979 லிருந்து மாற்றியமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, மைய அரசு பின்பற்றி வரும் ஓய்வூதியம் கணக்கிடும் முறை தமிழ்நாட்டிலும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இவ்வாணைப்படி 33 ஆண்டுகள் பணிக்காலம் முடிந்து ஓய்வுபெறும் எல்லா அரசு ஊழியர்களுக்கும் அவர்களுடைய ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்: ஓய்வூதியத்திற்கு கணக்கெடுத்துக் கொள்ளக்கூடிய சராசரி மாத வருமானத்தில் முதல் ரூ. 1000 வரை — 50 விழுக்காடு. சராசரி மாத வருமானத்தில் அடுத்து வரும் ரூ. 500 வரை 45 விழுக்காடு— சராசரி மாத வருமானத்தில் மீதமுள்ள தொகைக்கு—40 விழுக்காடு. 33 ஆண்டுகளுக்கும் குறைவாக ஆனால் 10 ஆண்டுகளுக்கு மிகாமல் பணிக்காலம் உடைய ஊழியர்களுக்கு அவர்களுடைய மொத்த பணிக்கான ஆண்டுகளின்படி கணக்கிட்டு ஓய்வூதியம் வழங்கப்படும். எந்த ஆண்டு ஓய்வுபெற்றிருந்தாலும் குறைந்தபட்ச ஓய்வூதியம் மாதத்திற்கு ரூ. 100 ஆகும். 1-10-1979க்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியர்களும் மேற்கண்டவாறு ஓய்வூதியம் பெறுகின்றனர். அதற்கு முன்னாலே ஓய்வு பெற்றவர்களுடைய எண்ணிக்கையும், இப்பொழுது ஓய்வு பெற்றவர்களுடைய எண்ணிக்கையும் இங்கே இல்லை.

திரு. ஏ. டி. குலசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-10-1979-க்குப் பின்னாலே, ஓய்வு பெற்றவர்களும், முன்னாலே ஓய்வுப் பெற்றவர்களும் ஒரே ஆசிரியர் பணியைத்தான் செய்திருந்தார்கள். ஆகவே, அவர்களிடையே உள்ள வித்தியாசத்தை இனிமேலாவது களைய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரே வேலையைச் செய்திருந்தாலும், இரண்டு பேரும் வெவ்வேறு விதமான நலத் திட்டங்களின் அடிப்படையிலே பயன்களைப்பெற்று வந்தார்கள். ஆகவேதான் இந்த வித்தியாசம் தொடர்கிறது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர்களை அரசு ஊழியர்களோடு இப்போது சேர்த்துவிட்ட காரணத்தினாலே, அவர்களுக்கும் இவர்களுக்கும் கிடைக்கக்கூடிய இந்த ஊதியத்திலே என்ன வித்தியாசம் இருக்கிறது. அல்லது, அவர்கள் இவர்களோடு ஒத்த ஊதியத்தைப் பெறுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 75-க்குப் பின்னாலே ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு அரசாணை எண் 57, நிதித்துறை தேதி 2-2-79-ல் உள்ள ஆணைப்படியும், 79-க்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களுக்கு அந்தத்



தேதியில் அமுலில் உள்ள ஆணைப்படியும் ஓய்வு ஊதியம் வழங்கப்படும். இந்த வித்தியாசம் ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லோருக்கும் பொருந்தும். இந்த அரசு ஊழியர்களுக்குத் தரப்படுகிற அதே அடிப்படையில்தான் அவர்களுக்கும் தரப்படுகிறது.

திரு. எஸ். வரதராஜன் : தலைவர் அவர்களே, சமீபத்தில் நாம் ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் ஊதியத்தைப் பஞ்சப் படியில் சேர்த்து இணைத்திருக்கிறோம். கடந்த 10,15 ஆண்டுகளுக்கு முன்னால் ஓய்வுபெற்ற ஆசிரியப் பெருமக்கள் மிகக் குறைந்த சம்பளத்தோடு ஓய்வுபெற்றவர்கள் தற்போது மிகக் குறைந்த அளவுக்கு ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படி ஓய்வுபெற்ற ஆசிரியப் பெருமக்கள் பலர் மிகவும் வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் அனைவருக்கும் ஓய்வுத் தொகையை ஒட்டுமொத்தமாகக் கொடுக்க, மனிதாபிமானத்தோடு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, எனக்குத் தரப்பட்டிருக்கிற தகவல்களின்படி ஓய்வூதியங்களில் எந்தவிதமான வித்தியாசமும் இருப்பதாகத் தெரியவில்லை. மற்றப்படி 70 ஆம் ஆண்டுக்கு முன்னால் வாங்கியவர்களுக்கும் 70-க்குப் பின்னாலே ஓய்வுபெற்றவர்களுக்கும் அவர்கள் பெற்றிருக்கிற முன்னை நலத்திட்டத்தினுடைய அடிப்படையில் பெற்ற பலன்லே வித்தியாசம் இருக்கிற காரணத்தினாலே, ஓய்வூதியத்திலும் அந்த வித்தியாசம் தொடரும்.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, 1956 ஆம் ஆண்டு குமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைந்தது. அந்த நேரத்தில் 160 பேர்கள் ஓய்வு பெற்று இருந்தார்கள் என்பதும், அவர்களில் 40 பேர்கள் இயற்கை எய்தி மீதி 120 பேர்கள் இருக்கிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா? அவர்களுக்கு ஓய்வூதியமும் வழங்கப்படாத நிலை மாற்றப்பட்டு ஓய்வூதியம் வழங்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. கா. அழகர்சாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முன்னாலே ஓய்வு பெற்றவர்களுக்கு ஒரு சதவிகிதமும், 1979-க்கு பின்னாலே ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் மற்ற அரசு ஊழியர்களுக்கும் 50 சதவிகித ஊதியம் ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. இதற்கு முன்னால் ஓய்வுபெற்றவர்களுக்கு 33 சதவிகிதம்

[1981 ஆகஸ்ட் 24

குறைந்த ஓய்வு ஊதியம் கிடைக்கிறது. அதற்குப் பின்னாலே ஒரு மாதத்திற்குப் பின்னாலே ஓய்வுபெற்றவர்களுக்கு அதைவிட அதிகமாக இன்றைக்கு இருக்கின்ற விதியின் அடிப்படையில் கிடைக்கின்றதே இது நியாயமானதா? எனவே எல்லோருக்கும் ஒரே சதவிகிதமாக ஓய்வூதியம் அவர்கள் கடைசியில் பெற்ற அந்த சம்பளத்தின் அடிப்படையில், ஓய்வுபெற்ற மற்ற அரசு ஊழியர்களைப்போல நிர்ணயிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்பொழுது நாம் குறைந்த பட்ச ஓய்வூதியம் 100 ரூபாய் என்று ஆக்கியதன் மூலமாக, ரொம்பவும் குறைந்த தொகையைப் பெற்றுக் கொண்டிருந்தவர்களுக்குச் சலுகை வந்திருக்கிறது. மற்றப்படி 70-க்கு முன்னாலே அவர்கள் பெற்ற பலன்களை, 70-க்குப் பின்னாலே வந்தவர்கள் பெறவில்லை. ஆகவே அந்த வித்தியாசத்தின் காரணமாகத்தான் இந்த வித்தியாசம் வருகிறது.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, தற்போது பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களாக இருப்பவர்களை அரசு ஊழியர்களாக அரசாங்கம் அங்கீகரித்து இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அவர்களுக்கும் அரசு ஊழியர்களுக்குச் சமமான ஊதியம் கொடுக்கப்படுமா? அதோடு கூட ஜில்லாபோர்டு நிர்வாகத்தில் இருந்தபோது இருந்த ஆசிரியர்களை 'ஏ' பிரிவு 'பி' பிரிவு என்று பிரிக்கப்பட்ட பிறகு, 'பி' பிரிவினருக்கு அதிகமான ஓய்வூதியமும் 'ஏ' பிரிவினருக்குக் குறைந்த அளவு ஓய்வூதியமும் இருப்பதைக் கேள்விப்படுகிறேன். அவை இரண்டையும் கவனத்தில் கொண்டு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் சொன்ன வித்தியாசம் தவிர, வேறு வித்தியாசம் இருப்பதாக என்னிடத்திலே விவரம் இல்லை. வேறு வித்தியாசம் இருப்பதாகவும் தெரியவில்லை.

## திருக்களப்பூர் உயர்நிலைப் பள்ளி

*வினா எண் 28—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் திருக்களப்பூர் அரசு உயர்நிலைப் பள்ளியின் பணம் ரூ. 40 ஆயிரம் கையாடல் நடைபெற்றுள்ளதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?



1981 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) பள்ளி நிதியில் கையாடல் நடைபெற்றுள்ளது உண்மை.

(ஆ) அதற்குப் பொறுப்பான தலைமை ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் தற்காலிக பணி நீக்கம் செய்யப் பட்டுள்ளார். காவல் துறையினரால் குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலனாய்வு நடைபெற்று வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி நிதி வசூலில் 40 ஆயிரம் ரூபாய் களுக்கு மேல் கையாடல் நடைபெற்றிருக்கிறது. அந்தப் பணத்தை திருப்பி வசூலிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது அவர் மீது கிரிமினல் வழக்கு இருப்பதாக விவரம் இருக்கிறது. மற்ற நடவடிக்கைகள் வழக்கம்போல எடுக்கப்படும்.

[முற்பகல் 9–30]

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : கனம் சபாநாயகர் அவர்களே, பல ஆடிட்கள் எல்லாம் இருக்கும்போது இம்மாதிரி யான கையாடல் எப்படி ஏற்பட்டது? இதை தவிர்ப்பதற்கு எப்படி அரசாங்கம் என்னென்ன முறைகளை திரும்பவும் நடை பெறாமல் இருப்பதற்கு, அனுசரிக்கப்போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கையாடல் பல்வேறு நிலைகளில், பல்வேறு இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எந்தவித அதிகாரங்கள் இருந்தாலும் கையாடல் பல கட்டங்களில் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். தலைமை ஆசிரியருக்கு சில அதிகாரங்களை தருகிறோம். அவற்றை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். தலைமை ஆசிரியர்கள் அதிகப் படியான சம்பளம் வாங்கக்கூடிய ஒரு பொறுப்புள்ள அதிகாரி. அவரே இப்படி செய்கிறார் என்பது தான் வேதனைக்குரிய ஒன்றாகும். இப்படிப்பட்ட நிலை ஏற்படுகிறபோது அவருக்கு தரப்பட்டிருக்கிற அதிகாரங்களை எடுக்கிற நிலைமையை செய்தால் பள்ளிக்கூடமே நடக்காது. ஆகவே இதைப்பற்றி நாம் பரிசீலித்து தவறு செய்கிறவர்களை தண்டிப்பதன் மூல மாக நாம் குறைபாட்டை போக்க முடியும். அவர்களுக்கு கொடுத்திருக்கிற அதிகாரங்களை எடுக்க வேண்டுமென்றால் கீழ்நிலையில் எதுவுமே நடைபெறாது.

[1981 ஆகஸ்ட் 24

**1979—80-ல் விவசாயிகளிடம் நிலுவையிலுள்ள கடன் தொகை.**

*வினா எண் 29—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள நிலவள வங்கிகள் மூலம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மொத்த கடன் தொகையில் 1979-80 ஆம் ஆண்டு முடிவில் உள்ள நிலுவை எவ்வளவு ?

(ஆ) அதில் டிராக்டர், பம்பு செட், கதிர் அடிக்கும் இயந்திரம் ஆகிய தலைப்புகளில் நிலுவை முறையே எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) தமிழகத்தில் உள்ள நிலவள வங்கிகள் மூலம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மொத்தக் கடன் தொகையில் 1979-80—ம் ஆண்டு முடிவில் நிலுவை நின்ற தொகை ரூ. 139·75 கோடியாகும்.

(ஆ) அதில் டிராக்டர் பம்புசெட், கதிர் அடிக்கும் இயந்திரம் ஆகிய தலைப்பில் நிலுவை முறையை ரூ. 14.77 கோடி, ரூ. 22·82 கோடி, ரூ. 0·35 கோடியாகும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள மொத்த நிலவள வங்கிகள் எத்தனை ? நிலவள வங்கிக் கடனை கட்டாததால் எத்தனை நிலவள வங்கிகள் மீண்டும் விவசாயிகளுக்குக் கடனைக் கொடுக்கிற தகுதியினை இழந்திருக்கிறது ? அதை நிவர்த்திக்க அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கிற மொத்த நிலவள வங்கிகள் 182. அந்த 182 நிலவள வங்கிகளில் வாங்கிய கடனை திருப்பிக் கட்டாத நடவடிக்கையை குறிப்பாக பெரும் விவசாயிகள் மிகையாக மேற்கொண்ட காரணத்தால் 1980-81 ஆம் ஆண்டில் மாத்திரம் வெறும் 18 பிரைமரி லேண்ட் டெவலப்மெண்ட் பாங்குகள் மட்டுமே கடன் வழங்கும் தகுதியினை பெற்றிருந்தன. ஆனால் அரசு மேற்கொண்டு ஒரு 16 நிலவள வங்கிகளுக்கு ஷேர் கேபிட்டலாக பணத்தைத் தந்து விவசாயிகள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகக் கடன் வழங்கும் தகுதியினை பெறக்கூடிய நடவடிக்கையை மேற்கொண்டது.



1981 ஆகஸ்ட் 24]

1980-81-ஐ பொறுத்தவரைக்கும் அண்மையில் நிலவள வங்கிகள் மூலமாக கடன் வசூலிக்க சற்று கடுமையான நடவடிக்கையை ரிசர்வ் வங்கி, ஏ. ஆர். டி.சி., மைய அரசு ஆகியவற்றின் விருப்பப்படி எடுத்த காரணத்தால், 21 கோடி ரூபாய் கடன் வசூல் ஆனது. அந்த அடிப்படையில் வங்கிகளில் இன்னும் சில 32 பிரைமரி வங்கிகள் கடன் வழங்கும் தகுதியினை பெற்றிருக்கின்றன. அது மட்டுமல்லாமல் மேலும் ஒரு 12 நிலவள வங்கிகள் கடன் பெறக்கூடிய அளவிற்கு ஷேர் கேபிட்டல் தந்து, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அவர்கள் வசூலை செய்திருக்கிற காரணத்தால் குறைபாடு மிகக் குறைவாக இருக்கிற இடத்தில் ஷேர் கேபிட்டல் தந்து அந்த 12 வங்கிகளும் மீண்டும் விவசாயிகளுக்குக் கடனை தரக்கூடிய தகுதியினை பெறக்கூடிய நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கிறது. இதன்மூலமாக 44 நிலவள வங்கிகள் நடப்பாண்டிலே கடனை பெறக்கூடிய தகுதியினை பெற்றிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் ரிசர்வ் வங்கி, ஏ. ஆர். டி. சி. ஆகியவற்றை மாநில அரசு பிரத்தியேகமாக அணுகி அவர்கள் 1975, 1976-77ஆம் ஆண்டுகளில், வறட்சி காரணமாக பாதிக்கப்பட்ட நிலவள வங்கி சங்கங்களுடைய விவசாயிகளுக்குக் கிட்டத்தட்ட 32·87 கோடி ரூபாய் கடனை 4 ஆண்டுகள் தவணையில் அவர்கள் தர வேண்டும். அதற்கு வசதி தரவேண்டுமென்று மாநில அரசு கேட்க ரிசர்வ் வங்கியும் அதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக வரும் ஆண்டிலே 132 பிரைமரி வங்கிகளில் 104 பிரைமரி வங்கிகள் கடனை தரமுடியும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, நிலவள வங்கி கொடுத்த கடனை விவசாயிகளிடமிருந்து திரும்பப் பெறவேண்டுமென்று மைய அரசு உத்திரவிட்டுள்ள பிறகு, அதன் அடிப்படையில் எத்தனை நிலவள வங்கிகள் எவ்வளவு தொகையை வசூல் செய்து அரசுக்குத் தந்துள்ளன ? கடனை வசூல் செய்துதந்துள்ள இந்த நிலவள வங்கிகள் எதிர்காலத்தில் எவ்வளவு விவசாயிகளுக்கு எவ்வளவு தொகை கடன் வழங்க வாய்ப்பு உள்ளது ? நிலுவையை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்காத நிலவள வங்கிகள் கலைக்கப்படுமா அல்லது அந்த இடங்களில் புதிய வங்கிகளை அமைக்க அரசு உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மைய அரசு ரிசர்வ் வங்கி ஆகியவற்றின் உத்தரவுப்படி நிலவள வங்கிகள் விவசாயக் கடன்களை வசூல் செய்ய எடுத்த நடவடிக்கைகளின் பலனாக கிட்டத்தட்ட 16 நிலவள வங்கிகள் கடன் பெறும் தகுதியை அடைந்திருக்கின்றன. கடனை வசூல்

செய்ய முயற்சி எடுத்துள்ள நில நிலவள வங்கிகளுக்கு சிறு உதவி செய்ததன் காரணமாக கிட்டத்தட்ட 44 வங்கிகள் கடன் பெறும் தகுதியைப் பெற்றிருக்கின்றன. விவசாயிகளிடமிருந்து கடனை வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாலும் அரசு ஷேயர் காபிடலாக சிறு தொகை கொடுத்து உதவி செய்திருப்பதாலும் நிலவள வங்கிகள் கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்குக் கடன் உதவி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல் மத்திய வங்கிகள் (சென்ட்ரல் பாங்க்ஸ்) மூலம் 120 கோடி ரூபாய் அளவுக்கு வரும் ஆண்டில் விவசாயி களுக்கு பலவிதமான பயிர் கடன்கள் (ஷார்ட் டெர்ம் கிராப்ஸ் லோன்) வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே சப்சிடயரி இன்கம் தரக்கூடிய வகையில் பவுல்ட்ரி, டைரி வளர்ச்சிக்காக விவசாயிகளுக்கு வருமாண்டில் 10¼ கோடி ரூபாய் கடன் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது 104 வங்கிகள் கடன் கொடுக்கின்ற தகுதியைப் பெற்றிருக்கின்றன என்று சொன்னார் கள். நடப்பாண்டில் அரசு பல்வேறு வகைகளில் பல கோடி ரூபாய் கடனாக விவசாயிகளுக்குக் கொடுக்க இருக்கிறது என்றும் சொன்னார்கள். பாக்கி இருக்கிற 80 வங்கிகள் கடன் கொடுக் கும் தகுதியை இழந்திருப்பதால் அந்தப் பகுதி விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசு அறியுமா ? அப்படியா னால் பாக்கி இருக்கிற அந்த வங்கிகளுக்கும் அரசு ஷேயர் காபிட்டல் கொடுத்து, கடன் கொடுக்கும் தகுதியை ஏற்படுத்துமா அல்லது டிராக்டர் கடன்களை வசூல் செய்வதன் மூலம் பல வங்கிகள் கடன் வழங்கும் தகுதியைப் பெறும் என்ற நிலை இருக்கிறதே ; அதற்கு அரசு நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதி விவசாயிகளுக்கும் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, பல் வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்ட காரணத்தால்தான் இந்த அளவுக்கு 104 வங்கிகள் கடன் பெறும் தகுதியை வரு மாண்டில் பெற இருக்கின்றன. அரசு ஷேயர் காபிட்டல் என்ற அடிப்படையில், கடனை வசூல் செய்ய நடவடிக்கை மேற் கொண்டு குறிப்பிட்ட அளவுக்கு சிறிது குறைவாக வசூல் செய் திருக்கும் வங்கிகளுக்கு, அவர்களுடைய முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் தரப்பட்டிருக்கிறது. ஆனால், பல இடங்களில் கடன் பெற்ற விவசாயிகள், குறிப்பாக பெரிய விவசாயிகள் பல்வேறு வருமானங்களைப் பெற்றுக் கொண்டிருந்தாலும் கூட கடனைத் திருப்பிச் செலுத்தாத காரணத்தால் அந்த வங்கிகள் மேலும் கடன் பெற்று விவசாயிகளுக்கு வழங்க முடியாத அள



விற்கு அவர்கள் தடைக்கல்லாக நிற்கிறார்கள். அங்கும் வசூல் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஜப்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அதன் காரணமாக பல வங்கிகள், குறிப்பாக அனைத்து மைய வங்கிகளும் விவசாயி களுக்குக் கடன் தரக்கூடிய தகுதியைப் பெற்றன. ஆனால், தற் போது விவசாயச் சங்கங்களும், அரசியல் கட்சிகளும், விவசாயி கள் பிரதிநிதிகளும் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரையில் தவணைகளை இன்ஸ்டால்மென்ட் பேசிசில் கட்ட அனுமதிக்க வேண்டும் ; அதுவரையில் ஜப்தி நடவடிக்கை எடுக் கக்கூடாது என்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரையில் இன்ஸ்டால் மென்ட் பேசிசில் கடனைத் தரலாம் என்று அனுமதிக்கப்பட் டிருக்கிறது. இருந்தாலும் ஜப்தி நடவடிக்கைகள் தவிர, மற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், 1981ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரையில் காத்திருக்க வேண்டாம், உடனடியாக ஜப்தி நடவடிக்கை எடுத்து, கடனை வசூல் செய்து, எல்லா வங்கிகளும் கடன் பெறும் தகுதியை ஏற்படுத்த வேண்டும் என்று நேற்றுகூட சென்னையில் ஏ.ஆர்.டி.சி சீனியர் டைரக்டர் தெரிவித்திருக்கிறார். ரிசர்வ் வங்கியின் சார் பிலும், ஏ.ஆர்.டி.சி.யின் சார்பிலும் அவர் ஜப்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்.

(முற்பகல் 9-40)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கி மூலமாக டிராக் டர் வாங்குவதற்கு 70 ஆயிரம் ரூபாயும் டிரெய்லர் வாங்குவதற் காக 20 ஆயிரம் ரூபாயும் ஆக மொத்தம் 90 ஆயிரம் ரூபாய் கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால், அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குரிய காலம் 7 ஆண்டு என்று நிர்ணயிக்கப்பட் டிருக்கின்றது. அந்தக் காலத்தினை நீட்டிக்க அரசு ஆவன செய் யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, 10 ஏக்கருக்கு மேல் நிலம் வைத் திருக்கும் விவசாயிகளுக்குத்தான் டிராக்டர், டிரெய்லர் போன் றவை வாங்குவதற்குரிய கடன் வழங்கப்பட வேண்டும் என்ற வகையிலே வழங்கப்பட்டு வருகிறது. டிராக்டருக்கு 70 ஆயிரம் ரூபாய் என்றும் டிரெய்லருக்கு 20 ஆயிரம் ரூபாய் என்றும் வழங் கப்படுகின்ற கடனை 7 ஆண்டு காலத்திற்குள் 7 தவணைகளில் திருப்பித் தரவேண்டும் என்ற நடைமுறை இருப்பதால் அதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுவிடுகிறார்கள் என்ற ஒரு நிலையினை அரசு உணர்ந்திருப்பதால் அதை இன்னும் நீட்டிக்க வேண்டுமென முடிவு செய்து ரிசர்வ் வங்கியை அரசு அணுகி இருக்கின்றது. விரைவிலே அதுபற்றிய முடிவு எடுக்கப்படும்.

[1981 ஆகஸ்ட் 24

திரு. உ. சுட்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வழங்கும் தகுதியை இழந்துவிட்டன என்று பெரும்பாலான வங்கிகள் பற்றி சொல்லப்படுகின்றது. இதற்கு அடிப்படை காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். அடிப்படை கோளாறு என்ன என்பதையும் பார்க்க வேண்டும். அதிகமாகக் கடன் வாங்கித் திருப்பிக் கொடுக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது மாதிரி குறைவாகக் கடன் வாங்கி அதை ஒழுங்காகத் திருப்பிக் கொடுத்துவிட்ட விவசாயிகளின் மீதும் நடவடிக்கை எடுக்கின்ற வகையில் அதாவது அவர்களுக்கும் தண் டனை அளிக்கின்ற வகையில், வங்கிகள் கடன் கொடுக்கின்ற தகுதியை இழந்துவிட்டன என்ற காரணத்தால், அவர்களுக்கும் கடன் கொடுக்கப்படாத நிலைமை இருக்கின்றது. இந்த நிலை மையை மாற்றி சரியான முறையிலே நடவடிக்கை எடுக்க மத்திய அரசையும், ரிசர்வ் வங்கியையும் அணுகி சிறிய விவசாயிகளுக்கு உதவி செய்ய இந்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்க ளுடைய எண்ணம் அரசுக்கு ஏற்கெனவே ஏற்பட்டு, அதன் காரண மாகத்தான் மத்திய அரசையும், ரிசர்வ் வங்கியையும் அணுகி னோம். நிலவள வங்கியிலேயோ அல்லது மைய வங்கியிலேயோ வாங்கிய கடன்களை வாங்கியவர்கள் எல்லாம் தங்களது கடனை எலிஜிபிலிட்டி லெவல் வரை திருப்பிக் கட்டினால்தான் திரும்ப கடன் கொடுக்கப்படும் என்பது பன்னெடுங்காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற கொள்கையாகும்.

பல இடங்களில் பணக்கார விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டுவதில்லை. நாணயமாகக் கட்ட வருகின்றவர்களை யும் கட்ட விடுவதில்லை. தப்பி அவர்கள் கட்டிவிட்டாலும் சிறிய விவசாயிகள் வாங்கிய கடன் 20 சதவீதம்தான். ஆனால், கட்டாத பெரிய விவசாயிகள் வாங்கிய கடன் 80 சதவீதமாகும். ஆகவே, இவ்வாறு அதிகப்படியான கடனை பெரிய விவசாயிகள் வாங்கிவிட்டு அதனைத் திருப்பிக் கட்டாத காரணத்தால் 20 சதவீதம் கடனை வாங்கி ஒழுங்காகத் திருப்பிக் கட்டிவிட்ட சிறிய விவசாயிகளுக்கும் கடன் வழங்க முடியாத நிலைமை ரிசர்வ் வங்கியின் விதி முறையின் காரணமாக இருந்து வருகின்றது. இந்தப் பிரச்சினைகளை எல்லாம் ரிசர்வ் வங்கிக்கு எடுத்துச் சொல்லி தற்போது அந்த விதி தளர்த்தப்பட்டு கடனைத் திருப் பித் தருகின்ற விவசாயி யாராக இருந்தாலும் அவர்களுக்கு கடன் அடுத்த பயிருக்குத் தரவேண்டும் என்று உத்திரவிடப்பட்டிருக்கின் றது. அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.



1981 ஆகஸ்ட் 24]

## கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம், வீரியங்கோட்டை.

*வினா எண். 30—திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்பு மிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணித் தொகுதி டி. 1218-வீரியங்கோட்டை கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங் கம் நிர்வாகக் குழு பற்றிய துணை விதி திருத்தம் செய்யப்பட்டு இதுவரையில் அமுல்படுத்தப்படாதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) கால தாமதம் ஏற்படுவதற்குரிய காரணத்தை அறி க்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : (அ) தஞ்சாவூர் வட் டார இணைப்பதிவாளரின் 1979-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17-ஆம் நாள் தீர்ப்பாணை மீது மேல்முறையீடு நிலுவையாய் இருந்ததால் இணைப்பதிவாளர் முன்மொழிந்துள்ள துணைவிதித் திருத்தம் அமுலாக்கப்பட முடியாமல் உள்ளது.

(ஆ) எந்தக் காரணக்கூறு (factor) அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பது முடிவு செய்ய வேண்டியிருந்தது. தற்போது மக்கள் தொகை அடிப் படையில் சங்க நிர்வாகக்குழுவில் பிரதிநிதித்துவம் அளிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

## கோவில்பட்டி தாலுகாவிலுள்ள கிராமங்களுக்கான குடிநீர்த் திட்டம்.

*வினா எண். 31—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கோவில்பட்டித் தாலுக்காவிலுள்ள சிந்தலக்கரை துரைச்சாமி புரம், ஆர். வெங்கடேசுவரபுரம் ஆகிய கிராமங்களுக்கு எட்டய புரம் வரை வரும் தாமிரபரணி தண்ணீரைக் கொண்டு செல்ல அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** : தாமிரபரணி ஆற்றை ஆதாரமாகக் கொண்டுள்ள எட்டையபுரம் குடிநீர்த் திட்டத்தில் இம்மூன்று சிற்றூர்கள் சேர்க்கப்படவில்லை. இருப் பினும் சீனியம்பட்டி என்னும் சிற்றூரில், ரூபாய் 8.77 இலட்சம் செலவில் ஒரு ஆழ்துளை கிணறு அமைத்து, அம்மூன்று சிற்றூர் களுக்கும் குடிநீர் வழங்க ஒரு திட்டம், குடிநீர் வடிகால் வாரியத் தின் பரிசீலனையில் உள்ளது.

[1981 ஆகஸ்ட் 24

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 3 கிராமங்களிலும குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக போர் வெல் போட்டு பார்த்ததில் சரியான நல்ல தண்ணீர் இல்லாததன் காரணமாக 8 மைலுக்கு அந்தப் பக்கத்திலே இருந்து தண்ணீர் கொண்டு வருவது பற்றி ஆராய்ந்து அதுவும் சரியான தண்ணீராக இல்லாத காரணத்தால் அந்த மக்களுக்கு சரியான குடி தண்ணீர் கிடைக்காமல் இருக்கின்றது. ஆகவே எட்டையாபுரம் வரை வருகின்ற தாமிரபரணி தண்ணீரை இந்தக் கிராமங்களுக்குக் குடிப்பதற்கு வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கையினை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் இருக்கிற தகவலைச் சொல்கிறேன். இந்தத் திட்டத்திலிருந்து வழங்க எட்டையபுரம் பேரூராட்சியின் சம்மதம் கிடைக்கவில்லை என்று குறிப்பு இருக்கிறது. ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, சம்மதம் கிடைத்ததாகத் தகவல் இருந்தால், என்னிடம் பாஸ்-ஆன் செய்தால், அதன் மேல் நடவடிக்கை எடுக்கும்படி செய்யலாம். என்னிடம் இருக்கிற குறிப்பில் எட்டையபுரம் பேரூராட்சியின் சம்மதம் கிடைக்கவில்லை என்று மட்டும் தான் இருக்கிறது. இதன் காரணத்தினால், மேற் குறிப்பிட்ட சிற்றூர்களில் இருந்து 15 மைல் தொலைவில் இருக்கும் சீனியப்பட்டி என்னும் சிற்றூருக்கு அருகில் நில நீர் ஆய்வு செய்யப் பெற்று, சிற்குழாய்க் கிணறு அமைக்க இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. ஆழ் துளை இது நல்ல தண்ணீர். இதிலிருந்து தண்ணீர் கொடுப்பதாகத் திட்டம் இருக்கிறது. மாற்று யோசனை ஏதாவது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால், அதையும் கவனிக்கலாம்.

### கடலாடிப் பகுதியைச் சேர்ந்த கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*வினா எண் 32—திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கடலாடி பகுதியைச் சேர்ந்த 84 கிராமங்களுக்கு கூட்டு குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தர அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவை ?

(ஆ) திட்டமிட்டபடி தண்ணீர் எடுக்க சாத்தியக்கூறு உள்ளதா ?

(இ) இல்லையெனில் மாற்றுத் திட்டம் ஆய்வில் உள்ளதா ?



1981 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ), (ஆ) மற்றும் (இ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி மற்றும் கமுதி ஒன்றியங்களைச் சார்ந்த 84 சிற்றூர்களுக்கான குடிநீர்த் திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒப்புதல் அளித்தது. பொதுமக்கள் ஆட்சேபித்ததால் இத்திட்டம் தற்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதற்குத் தீர்வு கண்டபின் பணிகளை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடிநீர்த் திட்டத்திற்கு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து ஒதுக்கப்பெற்ற நிதி எவ்வளவு ? இதுவரையில் செலவழிக்கப் பெற்ற நிதி எவ்வளவு? எத்தனை ஆண்டுக்காலமாக இது தடைபட்டு நிற்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் இருக்கிற தகவல் பிரகாரம் இந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூபாய் 97.36 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒப்புதல் அளித்ததிலிருந்து இதுவரையில் எவ்வளவு செலவு ஆயிற்று என்கிற குறிப்பு இல்லை. ஆனால் எதிர்ப்பு ஏற்பட்ட காரணத்தினால்—அதாவது அந்தப் பகுதி பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததினால், 1980 பிப்ரவரியில் காவல் துறையினரின் தகுந்த பாதுகாப்புடன் ஆழ் துளை கிணறுகள் அமைக்கப்பட்டன. இரண்டு ஆழ் துளை கிணறுகளின் மேல் கட்டப்பெற்ற நீரேற்று நிலையங்களை 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சில நபர்களால் சேதப்படுத்தப் பெற்றது.

அந்த வேலைகள் அந்த அளவில் நிற்கின்றன. இப்பொழுது புதிதாகத் தொடங்கப் பெற்று, குழாய்கள் பதிக்கும் பணிகள் பதிக்கப் பெற வேண்டிய 1,142.60 கிலோ மீட்டரில், 90.52 கிலோ மீட்டருக்கு குழாய்கள் பதிக்கப்பெற்று விட்டன. இந்த நிலையில்தான் இப்பொழுது இருக்கிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு ஆட்சேபணை தெரிவித்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள், திட்டமிட்டபடி 300 லிருந்து 600 அடி வரை ஆழத்தில் தண்ணீர் எடுத்தால் ஆட்சேபணை இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், போதுமான ரிக்ஸ்கள் இல்லாத காரணத்தால் குடிநீர் வடிகால்

வாரியத்தினர் 150 அடிக்குக் கீழேயே தண்ணீர் எடுத்த காரணத்தினால் நான் ஆட்சேபணை ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தற்போது, நிலத்தடி ஆய்வுக் குழுவில் இயங்கும் இயந்திரங்களில் சில 2,000 லிருந்து 3,000 அடி வரை தண்ணீரை எடுக்கும் என்று தகவல் இருப்பதால், அவைகளைப் பயன்படுத்தி, இத்திட்டத்திற்குத் தண்ணீர் எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கென உள்ள வல்லுநர்களை வைத்து அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய முறைகளின் அடிப்படையில் செயல்படுத்தியிருக்கிறோம். ஒவ்வொரு பிரச்சினையிலுமே நாட்டு மக்களுக்கு ஒரு கருத்து இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வேறொரு கருத்து இருக்கலாம். அமைச்சராக இருக்கும் எனக்கு ஒரு தனிக் கருத்து இருக்கலாம். ஆனால் நாம் யாருமே அத்துறையில் வல்லுநர்களாக இல்லாத காரணத்தால், அதற்கெனவே உள்ள வல்லுநர்கள் என்னென்ன பரிந்துரை செய்கிறார்களோ, அதன்படிதான் செயல்பட முடியும்.

**திரு. கா. கோபாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இப்போது எத்தனை கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. இனி எத்தனை செயல்படுத்தப் படலாமென செயற் குறிப்பு உள்ளன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுப்படையான கேள்வி. அடுத்து வினா எண் 33.

*Memorandum from the Madras Beedi Workers Union.*

*Q. No. 33—Thiru R. UMANATH : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) Whether the Government have received any memorandum from the Madras Beedi Workers Union, dated 2nd March 1981;

(b) If so, the action taken by the Government ?



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) ஆம்.

(ஆ) சென்னை பீடித் தொழிலாளர் யூனியன்களின் கோரிக்கைகளும், அவைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரமும் பின்வருமாறு :—

| கோரிக்கை. | எடுக்கப்பட்ட நடவடிக்கை. |
| --- | --- |
| (1) | (2) |
| 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13 ஆம் நாளன்று சென்னையில் தமிழ் நாடு பீடித் தொழிலாளர் சம்மேளனத்தால் (சி. ஐ. டி. யு.) நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்தச் சம்மேளனத்தின் கோரிக்கைகளை தொழிலாளர் நல ஆணையர் ஆய்வு செய்து தக்க பதிலொன்றை சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் பீடித் தொழிற் சங்கங்களுக்கு அனுப்பியுள்ளார். |
| சென்னை - செங்கல்பட்டு பீடித் தொழிலாளர் யூனியன்களுக்கும் பீடித் தொழிலதிபர்களுக்கும் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8 ஆம் நாள் அன்று கூலி விகிதங்கள் குறித்து ஏற்பட்ட ஒப்பந்தத்தை பீடித் தொழிலதிபர்கள் மீறிவிட்டனர். | சென்னை முதல்சரகம் துணைத் தொழிலாளர் ஆணையரை இது குறித்து அணுகுமாறு சென்னை பீடித் தொழிலாளர் யூனியன் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. |
| சென்னை - செங்கல்பட்டு பீடித் தொழிலாளர்களுக்கு வேலூரில் இருப்பது போன்ற மருத்துவ வசதிகள் செய்து தரப்பட வேண்டும். | பெங்களூரில் உள்ள மத்திய அரசின் பீடித் தொழிலாளர் நல ஆணையரை இது குறித்து அணுகுமாறு மேற்கண்ட யூனியன் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. |
| குடிசை மாற்று வாரியத்தால் கட்டப் படுகிற ஒரு சில வீடுகளை பீடித் தொழிலாளருக்கு ஒதுக்க வேண்டும். | குடிசை மாற்று வாரியத் தலைவரை இது குறித்து அணுகுமாறு மேற்கண்ட யூனியன் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. |

[1981 ஆகஸ்ட் 24

[முற்பகல் 9-50]

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கைகளில் பிரதானமானதொன்று அரசாங்கத்தின் சமீபத்திய ''ஃபால்பாக் வேஜஸ்'' ஜீ. ஓ. சம்பந்தப்பட்டது. குறைந்தபட்சம் பீடித் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 500 பீடி சுற்றுவதற்கான இலை, புகையிலையாவது கொடுக்கவேண்டும் என்றும் அப்படிக் கொடுக்கத் தவறினால் ஆயிரம் பீடி சுற்றிவதில் உள்ள கூலியில் பாதியாவது அவர்களுக்கு அன்று 'ஃபால்பாக் வேஜஸ்' ஆக கொடுக்கவேண்டும் என்பது ஜீ. ஓ. அது சம்பந்தமாக தொழிலாளர்களுக்கு—அமென்ட்மென்ட் இருந்தாலும் கூட—அது கூட கிடைக்காத அளவிற்கு ஒரு ஷரத்து அந்த ஜீ. ஓ. வில் இருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். புயல் அல்லது நெருப்பு, அல்லது இயந்திரக் கோளாறு அல்லது தீ அல்லது நோய் காரணமாக அல்லது மழை காரணமாக இந்தக் குறைந்தபட்சக் கூலி கொடுக்கவேண்டியதில்லை என்ற ஒரு ஷரத்து இருக்கிறதே, அதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆக, இப்படி நஷ்டயீடு கிடைக்காத அளவிற்கு இந்த ஷரத்து இருப்பதன் காரணத்தால் அதை அரசாங்கம் மறுபரிசீலனை செய்து அதை 'ட்ராப்' செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலித்ததா? முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இந்தக் கேள்வியில் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமநாத் அவர்கள் சொன்னது வரவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அவர்கள் சொன்ன பிரச்னை பற்றி மறுபரிசீலனை செய்யத் தயாராயிருக்கிறேன். இந்தக் கேள்விக்கும் அவர்கள் சொன்னதற்கும் தொடர்பில்லை.

திரு. ரா. உமாநாத்: அந்த முதல் பாராவில், தொழிலாளர்களின் கோரிக்கைகள் இணைக்கப்பட்டிருக்கின்றன என்று போடப்பட்டிருக்கிறது. அதில் இந்தக் கோரிக்கையும் வருகிறது. அதை மறுபரிசீலனை செய்யத் தயாராயிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். மிக்க நன்றி. அடுத்த கேள்வி, 1966 ஆம் ஆண்டு சட்டத்தை அமல்படுத்துவதில் தற்போதைய அதிகாரிகள், அந்த அமைப்பு போதாது என்பதால் அது முறைப்படி அமுலாகவில்லை என்ற கோரிக்கையும் அதில் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 1966 ஆம் ஆண்டு சட்டத்தை இம்ப்ளிமென்ட் செய்ய தனி மெஷினிரி ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கத்தின் முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பொதுவாகவே விவசாயத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்சக் கூலி, மற்றவகையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச கூலி மல்படுத்துவது பற்றி இதில் இருக்கின்றன என்றும் அதை



1981 ஆகஸ்ட் 24]

அமல்படுத்துவதில் தொழில் அதிபர்கள் சரியாகச் செயல்படுவதில்லை என்றும் தகவல் வந்திருக்கிறது. எனவே இதை இன்னும் தீவிரமாகச் செயல்படுத்துவது பற்றி அந்த இயந்திரத்தை எப்படி மாற்றலாம், அதிகாரிகளை இன்னும் எப்படி அதிமாக்கச் செய்யலாம் என்பதுபற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. கே. ஆர். சுந்தரம்: 'பால்பாக் வேஜஸ்' விதிகள் பற்றி, அதைத் திருத்துவது பற்றி அரசின் ஆலோசனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 'பால்பாக் வேஜஸ்' படி 500 பீடி என்பது போதுமானதல்ல. அதை ஆயிரம் பீடியாக நிச்சயிக்க வேண்டுமென்று சொல்லி தொழிற்சங்கங்களிடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறதா? அதுபற்றி அரசு ஆலோசித்திருக்கிறதா? என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** 'பால்பாக் வேஜஸ்' பெறவேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு வந்து அரசாங்கமாக நிர்ணயித்ததுதான், இந்த 'பால்பாக் வேஜஸ்'. இப்போது தொழிற்சங்கங்களிடமிருந்து சில முறையீடுகள் வருகின்றன. ஒரு ஜனநாயக ஆட்சி என்பதால் அவற்றையும் இந்த அரசு பரிசீலனை செய்து தக்க முடிவு எடுக்கும்.

திரு. இரா. கருப்பையா: இந்த 'பால்பாக் வேஜஸ்' எந்தத் தேதியிலிருந்து இந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் உறுதியாகக் கூறுவார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** அந்தத் தேதி இப்போது எனக்கு ஞாபகம் இல்லை.

### மதுரை மாவட்டத்தில் வைகை ஆற்றின் இருபுறமும் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம்.

*வினா எண் 34—**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம் வைகை கால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அழிந்த நிலையிலுள்ள கிராமப்பகுதிகளின் ஓரங்களில் ஆற்றின் இருபுறமும் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் நிலக்கோட்டை தொகுதி அக்கரைப்பட்டி, நடக்கோட்டை, குல்லிச்செட்டிபட்டி, பறையப்பட்டி ஆகிய கிராமங்களின் அருகில் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அமுல் நடத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : [1981 ஆகஸ்ட் 24
அதிகாரிகளை நிலக்கோட்டை தாலுக்காவில் (அ) மற்றும் (ஆ) தல
நடக்கோட்டை, கெவிரெட்டிப்பட்டி, அக்கரைப்பட்டி,
கிராமங்களில் வைகை ஆற்றின் இருபுறமும் பறையப்பட்டி ஆகிய
கட்டும் திட்டம் பற்றி ஆய்வு செய்யுமாறு வெள்ளத் தடுப்புச்சுவர்
(பாசனம்) அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். தலைமைப் பொறியாளர்

**திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் :** பேரவைத் தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் ஆய்வு செய்யச் சொல்லி
யிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்; அதை வரவேற்கிறேன்.
ஆனால், தற்போது கட்டயிருக்கும் இடத்தில் மருதா நதி, மஞ்சள்
ஆறு ஆகிய இரண்டும் ஒன்றாகக் கலந்து வைகையில் கலந்து பெரு
வெள்ளம் ஏற்படுகின்றது. தற்போது மழையில்லை; மழைக்
காலங்களில் அங்கே மிகவும் மோசமான நிலைமை ஏற்படுகின்றது.
ஆகவே, மேலும் நாள்கடத்தாமல் அதிகாரிகளை வெகு விரைவிலே
இந்த 1981 ஆம் ஆண்டிற்குள்ளாக இந்த வேலையை ஆரம்பிப்
பதற்கு வழிமுறைகளைச் செய்யுமாறு அமைச்சர் அவர்கள் ஆவன
செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்
கொண்டதன்பேரில் ஆய்வுப் பணிகள் துவக்கப்பட வேண்டு
மென்று சொல்லியிருக்கிறேன். கூடிய விரைவிலே இதை நிறை
வேற்றுவதற்கு அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்கும்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே,
வைகை மதுரைக்கு கிழக்கே போகும்போது, இராமநாதபுரம்
மாவட்டத்திலுள்ள பெரும் பகுதிகளையும், மற்றும் கரைப் பகுதி
களையும் சேதப்படுத்துவதோடு பல கண்மாய்களும், வாய்க்கால்
பகுதிகளும் மேடிட்டு பல சிரமங்கள் ஏற்படுவதால், இவைகளைக்
கருத்திலே கொண்டு உடனடியாகத் தடுப்புச்சுவர் போடுவதோடு,
அங்கே தண்ணீர் தேக்கப்படாமல் தாராளமாகச் செல்வதற்கான
வழிமுறைகளைச் செய்வதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே,
வைகை, பெரியாறு போன்றவைகளைச் செம்மைப்படுத்துவதிலே
பொதுவான பிரச்னைகள் இருக்கின்றன. மதுரையிலிருந்து இராம
நாதபுரம், சிவகங்கைப் பகுதிகளிலே தேவையான பகுதிகளில்
தடுப்புச் சுவர் கட்டச் சொல்லி முதல்வர் அவர்கள் ஆணையிட்டு,
அந்த வேலை தனியாக நடந்து கொண்டிருக்கிறது. இங்கே
தனியாக தன் தொகுதியைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அது
இதுவரை பரிசீலிக்கப்படாமல் இருந்தது. இப்போது ஆய்வு
செய்வதற்கு உத்தரவிட்டிருக்கிறோம்.



1981 ஆகஸ்ட் 24]

### கோவை நகரத்திலுள்ள வக்ஃபு பாதுகாப்புப் பேரவையிடமிருந்து பெறப்பெற்ற மகஜர்.

*வினா எண் 35— திரு. கு. ரமணி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரத்தில் உள்ள வக்ஃபு பாதுகாப்புப் பேரவை என்ற ஸ்தாபனத்தின் சார்பில் அரசுக்கு 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 4 ஆம் தேதியிட்ட மகஜர் ஒன்று வரப்பெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அம் மகஜரில் கூறப்பட்டுள்ள வக்ஃபு சொத்துக்களைப் பாதுகாக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** (அ) ஆம்.

(ஆ) மனுவில் கண்டுள்ள சொத்துக்கள் வக்ஃபு சொத்துக்கள்தானா அல்லது இல்லையா என்பது பற்றிய வழக்கு ஒன்று நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை.

### கோமுகி அணையினை விரிவுபடுத்தும் திட்டம்

*வினா எண் 36— திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில் உள்ள கோமுகி அணையில் நீர்வரத்து அதிகம் இருப்பதால், எதிர்கால நன்மை கருதி அணையினை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** (அ) மற்றும் (ஆ) கோமுகி நீர்த் தேக்கத்தின் மேல் மட்டத்தை உயர்த்தி, கொள்ளளவை அதிகப்படுத்தும் திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

**திரு. ஆர். தியாகராசன் :** மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி பகுதியில் அதிக நீர் வந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே, அதற்குக் கீழேயுள்ள விருத்தாச்சலம்,

[1981 ஆகஸ்ட் 24

ஓமாத்தூர் பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி அதிகமாக நீர் வரும்போது, கீழேயுள்ள அணைகள் பகுதிகளில் ஏற்கனவே உள்ளவர்கள் பாதிக்கப்படாமல் அந்த நீரை விடுவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** தலைவர் அவர்களே, இப்படி அணைகளுடைய கொள் அளவை அதிகப்படுத்தும் போது சில பிரச்னைகள் வந்து விடுகின்றன. ஏற்கனவே, இருக்கக்கூடிய மண்களை அப்புறப்படுத்தி, டீ-சில்ட் செய்து கொள்ளளவை அதிகப்படுத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறபடி, எந்தவிதமான பாதிப்பும் வராது என்பது உண்மை. ஆனால், பொருளாதாரத்தை கணக்கில்கொண்டு, அந்த அணையினுடைய கொள்ளளவை விரிவுபடுத்தும் திட்டமாக இல்லாமல், அதை உயர்த்துவது என்று முடிவெடுத்திருக்கிறோம். அதனால், கீழ்ப்புறத்திலுள்ள ஆயக்கட்டுகளுக்குப் பாதிப்பு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசு அவர்களுக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறது.

### சோழபுரம் பிர்க்காவில் கிடைக்கும் சுண்ணாம்பு கற்கள்

*வினா எண். 37— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தாலுகா, சோழபுரம் பிர்க்காவில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் கிடைக்கும் சுண்ணாம்பு கற்களை அரசு அனுமதி இல்லாமல் திருட்டுத்தனமாக எடுத்து சில தனியார் தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்துவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** (அ) இராமநாதபுரம் மாவட்டம், இராசபாளையம் வட்டம், சோழபுரம் பிர்க்காவில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள சுண்ணாம்பு கற்களை அரசு அனுமதி இல்லாமல் யாரும் திருட்டுத் தனமாக எடுக்கவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

[முற்பகல் 10-00]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.



1981 ஆகஸ்ட் 24]

**திரு. இரா. தாமரைக்கனி:** அரசுக்குச் சரியான முறையில் புகார் வராமல் இருந்திருக்கலாம். என்னுடைய ஊருக்குப் பக்கத்து ஊராக இருக்கும் காரணத்தால் எனக்கு நல்ல முறையில் தெரியும். பந்தல்குடி என்ற இடத்தில் 100 ஏக்கர் நிலம் அரசுப் புறம்போக்காக இருக்கிறது. அங்கே அனுமதி வாங்காமல் சாயத் தொழிற்சாலையைச் சேர்ந்தவர்களும், துலுக்கப்பட்டு சிமெண்ட் ஆலையைச் சேர்ந்த தனியார்களும் சுண்ணாம்புக் கற்களை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா? மீறி அவர்கள் எடுத்தால் அவர்களுடைய லைசன்ஸ் ரத்து செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** அங்கேயிருந்து அனுமதி இல்லாமல் எடுத்துச் செல்வதாக அரசுக்குத் தகவல் இல்லை. திரு. தாமரைக்கனி அவர்கள் சொல்வது போல் அவருக்கு அவ்வாறு எடுத்துச் செல்வது தெரிந்து நடந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொன்னால் கடுமையான நடவடிக்கை எடுக்கப் படும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** சோழபுரம் பந்தல்குடியில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தைக் கண்காணிக்க சரியான போலீஸ் பந்தோபஸ்து கொடுத்து காவல்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** அங்கே இருக்கிற சிமெண்ட் தொழிற்சாலைக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் தனியார் வந்து சுண்ணாம்புக்கல்லை எடுத்துச் செல்லாமல் ஆலை நிர்வாகிகள் காவல்களைக் கொண்டு அந்த இடங்களைப் பாதுகாத்து வருகிறார்கள். அந்தப் பகுதியில் குறிப்பிட்ட இடங்களில் சுண்ணாம்புக் கல் வெட்டி எடுக்க தனியாரும் உரிமை பெற்றிருக்கிறார்கள். கிருஷ்ணராஜா என்பவர் உரிமை பெற்று வெட்டி எடுக்கிறார்கள். அனுமதியோடு வெட்டி எடுப்பதைத் தடுக்க முடியாது.

### தனியார்கட்கு கனிவளம் தோண்டி எடுப்பதற்கான உரிமம்

*வினா எண் 38—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கனிவளம் தோண்டி எடுக்கும் (Mining Lease Licence) உரிமை தனியார்கட்கு கொடுப்பதை அரசு நிறுத்தியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

(இ) அரசே ஏற்றுநடத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) கனிவளம் தோண்டி எடுக்கும் சுரங்கக் குத்தகை தனியாருக்கு வழங்குவதை அரசு அறவே நிறுத்தவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

(இ) சுரங்கக் குத்தகை பெற்ற தனிப்பட்டவர்கள் விஞ்ஞான ரீதியில் கனிப்பொருளை வெட்டி எடுப்பதில்லை. சுரங்க நிபந்தனைகள் மீறப்பட்டன. 1978 ஆம் ஆண்டு முதல் நம் தமிழகத்தில் கிடைக்கும் கனிப்பொருளை விஞ்ஞானரீதியில் பயன்படுத்த கனிவள நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டது. மேலும், தனிப்பட்டவர்களுக்கு சுரங்கக் குத்தகை வழங்குவதைவிட அரசுத் துறையிலோ அல்லது கூட்டுறவு நிறுவனங்களாலோ சுரங்கவேலை செய்வதின் மூலம் ஏராளமான கிராமப்புற மக்களுக்கும் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு நல்க இயலும் என்பதோடு, கிடைக்கும் இலாபத்தையும் பரவலாகப் பகிர்ந்தளிக்கலாம் என்று கருதப்பட்டது. ஆதலால், அரசுத் துறைக்கோ அல்லது கூட்டுறவு நிறுவனங்களுக்கோ தேவைப்படாத பகுதிகளில் தனியாருக்கு சுரங்கக் குத்தகை வழங்குவது பற்றி அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

**திரு. எம். சின்னசாமி :** இந்தக் கனிவளங்களைத் தோண்டி எடுக்கிற உரிமையை நீண்ட காலத்திற்குச் சில அரசியல் பிரமுகர்கள் பெற்று கொள்ளை லாபம் அடித்து ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்துள்ளதென்பதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** இந்தக் கனிப்பொருள்களைப் பொறுத்தவரை பெரு ரக கனிப்பொருள்கள், சிறு ரக கனிப்பொருள்கள் என்று இரண்டு வகைப்படும். தமிழ்நாடு அரசு சிறு ரகக் கனிப்பொருள் சட்டத்திற்கு உட்பட்டு ஏற்கனவே, கறுப்புக் கல்லை தனியார் வெட்டி எடுக்க அனுமதி வழங்குவதில்லை என்ற சட்டத்தை இயற்றியது. அதை எதிர்த்து தனியார் உச்ச நீதி மன்றம் வரை போய் அதிலே அரசாங்கம் வெற்றி பெற்றிருக்கிறது. மற்ற மினரல்சைப் பொறுத்த வரை தனியாரும் வெட்டி எடுக்கலாம். தனியார் சிமெண்ட் தொழிற்சாலைக்கு வேண்டிய சுண்ணாம்புக் கல்லை வெட்டி எடுக்க தனியாருக்கு உரிமை தரப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்குத் தேவையில்லாத இடங்களைத் தனியாருக்குக் கொடுத்து வருகிறோம்.

**திரு. மு. அம்பிகாபதி :** தமிழகத்தில் கனி வளத்தை எடுக்கக் கூடிய உரிமை பெற்றிருக்கக்கூடியவர்களுக்கு அந்த உரிமங்களை ரத்து செய்ய அரசாங்கம் முன்வருமா? தென்னாற்காடு மாவட்டத்தில் குன்னம் என்ற கிராமத்தில் ஒரு மலையையே வெட்டி



தனியார் விற்றிருக்கிறார்கள். அது அரசுக்குத் தெரியுமா? ஒரு மலையே காலி செய்யப்பட்டு விட்டது அரசாங்கத்திற்கு தெரியுமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** ஏற்கனவே சொன்னதைப் போல் தமிழ்நாட்டில் இருக்கும் கனி வளங்களை அரசாங்கமே முழுதும் வெட்டி வெட்டி எடுப்பதற்கு உத்தேசம் இல்லை. சுண்ணாம்புக்கல் போன்ற கனிவளங்களை நம்பி ஏராளமான தொழிற்சாலைகளைத் தனியார் துறையில் நடத்தி வருகிறார்கள். கருப்புக் கல்லைப் பொறுத்தவரை அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டுமென்று தனியாக ஒரு கார்ப்பரேஷனை ஏற்படுத்தி புரட்சித் தலைவர் அரசு செயல்படுத்தி வருகிறது. அதே போன்று மாக்னசைட் நிறுவனம் ஒன்றினையும் தமிழக அரசு பொறுப்பேற்று நடத்தி வருகிறது.

இரண்டு கனிவளங்களைப் பொறுத்த வரையிலும் அரசாங்கமே ஏற்றுச் செயல்பட்டு வருகிறது. மற்றவைகளைப் பொறுத்தவரையில் தேவைக்கு ஏற்ப, தொழிற்சாலைகள் வைத்திருக்கிறவர்களுக்கு அவர்களுடைய தேவையை முன்னிட்டு, அரசாங்கம் அதைப் பரிசீலித்துப் பார்த்து— அரசாங்கத் தொழிற்சாலைகளில் பயன்படுத்துகிற தேவையில்லை என்றால்— கொடுத்து வருகிறோம். இதற்கு முன்னால் இருந்த ஆட்சியிலே கருப்புக் கல்லை 20, 25 ஆண்டுகள் என்று நீண்ட கால குத்தகைக்கு எடுத்துக்கொண்டு சிலர் நடத்தி வந்தார்கள். அப்படி நடத்தி வந்தவர்கள் தவறு செய்கிறார்கள் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறபோது அரசு தக்க நடவடிக்கையை எடுக்கும்.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ்]** தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் என்னுடைய கிருஷ்ணராயபுரம் தொகுதியில் கீரனூரில் பச்சைக் கல், நீலக்கல், வெள்ளைக்கல் ஆகியவை, லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ளவைகளை தனியார்கள் எடுத்து வருகிறார்கள். அவற்றை கலெக்டர், ஆர்.டி.ஓ., தாசில்தார் ஆகியோர்கள் பார்வையிட்டு 20, 30 மூட்டைகள் கைப்பற்றப்பட்டு அந்த இடத்திலேயே கிடக்கின்றன. அவைகளை எடுத்தவர்கள் மீது இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே இதுபோன்றவற்றை அரசாங்கமே எடுத்து நடத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபோதே, அரசாங்கத்தின் கவனத்திற்கு அது கொண்டுவரப்பட்டு கலெக்டர், ஆர்.டி.ஓ. ஆகியோர் கைப்பற்றி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருப்பதால் திருடியவர்கள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள். எந்தப்

பகுதி என்பதைப்பற்றி உறுப்பினர் எழுதிக் கொடுத்தால் விசாரித்து சம்மந்தப்பட்டவர்கள்மீது அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ப. நெடுமாறன் :** அவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நெய்வேலி நிலக்கரியை மத்திய அரசாங்கம் எடுத்துக் கொள்கிறது. ஆனால் ஆந்திர மாநிலத்திலே உள்ள சிங்கரேணியிலே கிடைக்கின்ற நிலக்கரியை மத்திய அரசு எடுத்துக்கொள்ள முயன்றபோது அதற்கு ஆந்திர மாநில அரசு ஒப்புக் கொள்ளவில்லை. மாநில அரசே அதை அங்கே வெட்டியெடுக்கிறது. அப்படி வெட்டியெடுக்கிற உரிமையை தாமே வைத்துக் கொள்ளவேண்டுமென்ற உறுதியோடு இருக்கிறது. அதைப்போல தமிழகத்திலேயும் உள்ள நிலக்கரி சுரங்கங்களைப் பொறுத்த வரையில் தமிழக அரசே அதற்கான உரிமைகளை வைத்துக் கொள்வதற்கு மத்திய அரசாங்கத்துடன் போராடுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** நான் ஏற்கனவே சொன்னதைப்போன்று மேஜர் மினரல்ஸ், மைனர் மினரல்ஸ் என்று இரண்டு வகையான மினரல்ஸ் இருக்கின்றன. நிலக்கரியெல்லாம் மேஜர் மினரல்ஸ் என்பதன் கீழ் வருகிறது. அது மத்திய அரசின் வரம்பில்தான் இருக்கிறது. சிங்கரேணியிலே மாநில அரசின் வரம்பிலே அது இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

## ஆதிதிராவிடர் நலனுக்கான விசேட திட்டம்

*வினா எண். 39—**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாழ்த்தப்பட்டோரின் நலனுக்கு மைய அரசு அமைக்க உத்தேசித்துள்ள விசேட திட்டத்தைப் பற்றி மாநில அரசோடு கலந்துரையாடப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், மாநில அரசு கூறியுள்ள ஆலோசனைகளின் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) ஆம்.

(ஆ) ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஒரு சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தினை உருவாக்கவேண்டுமென்று மாநில அரசுகளை மைய அரசு கேட்டுக் கொண்டது. இந்திய அரசு கொடுத்துள்ள வழிகாட்டிக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டும், தமிழ்நாட்டில் வசிக்கும் [illegible]ராவிடர்



களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டும், 1980—85 ஆம் ஆண்டிற்காக ஆதிதிராவிடர்களுக்காகச் சிறப்பு உள்ளடக்க திட்டம் ஒன்றை அரசு தயாரித்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1980—85) சுமார் 566 கோடி ரூபாயும் செலவாகலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

2. இந்த சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் வாயிலாக 1980—85 ஆம் ஆண்டில் ஒன்பது லட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் வறுமைக்கோட்டினைத் தாண்ட வாய்ப்புள்ளது. இத்திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்துவது குறித்து கடந்த 1980-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் வாரத்திலும், 1981 ஆம் ஆண்டு பிப்ரவரியிலும் மைய அரசுடன் கலந்துரையாடப்பட்டது. மைய அரசு ஆதிதிராவிடர்களுக்கான 1981—82-ம் ஆண்டின் சிறப்பு உள்ளடக்கத் திட்டம் மற்றும் 1980—85 ஆம் ஆண்டிற்கான ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தினை, திட்டக் குழுவின் பல்வேறு துறைகளின் திருத்திய ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாற்றி அமைக்குமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க திருத்தி அமைக்கப்பட்ட மேற்கண்ட திட்டம் கடந்த 1981 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் தேதி மற்றும் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் தேதிகளில் மைய அரசோடு கலந்துரையாடப்பட்டது. பாசனம், கல்வி மற்றும் சுகாதாரம் சம்மந்தமான பகுதிகள் நீங்கலாக மற்ற திட்ட ஒதுக்கீடுகள் மைய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பாசனம், கல்வி மற்றும் சுகாதாரம் சம்மந்தமான திட்டங்கள் தற்போது இறுதியாக்கப்பெற்றுவிட்டது. இப்பகுதிகள் நீங்கலாக ஏனைய துறை வாரியான திட்டங்கள், சம்மந்தப்பட்ட துறைகளுக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டு அவைகளின் செயலாக்கம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

[முற்பகல் 10.10]

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது சுமார் 500 கோடி ரூபாய்க்குத் திட்டம் என்று சொன்னார்கள். மைய அரசு ஒதுக்குகின்ற 100 கோடி ரூபாயில் நம்முடைய மாநில அரசுக்கு எவ்வளவு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது? இரண்டாவதாக, நாம் கொடுத்துவரும் பொருளாதார வளர்ச்சிக்கான உதவியெல்லாம் சிறுதொகையாக இருக்கிறது. அவர்கள் பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்குத் தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு மைய அரசோ அல்லது மாநில அரசோ உதவி செய்ய வேண்டுமென்றால் அவர்கள் 25 சதவீதம் மேச்சிங் கிராண்ட் கட்டினால்தான் கொடுக்கப்பட முடியும் என்ற விதியிருக்கிறது. தேசிய வங்கிகள் அளிக்கின்ற உதவிகளானாலும், மத்திய அரசு உதவியானாலும், மாநில அரசு உதவியானாலும் மேச்சிங் கிராண்ட் அல்லது பங்குத்தொகை என்ற நிலையில் அவர்கள் நான்கில் ஒரு

பாகத்தைக் கட்டினாலொழிய அவர்களது பொருளாதார வளர்ச்சிக்குத் தகுந்த உயர்ந்த பெரிய தொழிலைத் செய்ய முடியாத நிலைமை இருப்பது அரசுக்குத் தெரியுமா? 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதில் நம்முடைய மாநில அரசுக்கு எவ்வளவு கோடி ரூபாய்ஒதுக்கப்பட்டது? 1980–85 திட்டக்காலத்தில் 500 கோடி என்றால் அதில் மத்திய அரசு எவ்வளவு கோடி ரூபாய் கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு தலைவரவர்களே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செலவாகலாம் என்பது நான் குறிப்பிட்ட தொகை, 1980–81 ஆம் ஆண்டை எடுத்துக்கொண்டாலும் மைய அரசுக்கு மாநில அரசு தெரிவித்திருக்கின்ற கருத்து, அரசின் சார்பிலே இருக்கின்ற அனைத்துத் துறைகளின் ஒத்துழைப்போடு இந்த மக்களுக்கு இந்தத் திட்டத்தை அளித்து அவர்கள் பயன்பெற வேண்டுமென்ற முறையிலே ஏறத்தாழ 71 கோடி ரூபாய் செலவிட வேண்டும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் முழுமையாகச் செலவழிக்கப்பட்ட தொகை தற்போது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை. அது கிடைத்தவுடன் தகுந்த பதிலை நான் அளிக்கிறேன். அடுத்தபடியாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக அளிக்கப்படும் கடன்களைப் பற்றிச் சொன்னார்கள். இதற்குத் தனியாக தாட்கோவின் மூலமாகவும் அரசு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பயன் அடைவோருக்குத் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வளர்ச்சிக் கழகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆதி திராவிடர்களின் பொருளாதார முன்னேற்றப் பிரிவின் மூலமாக இறுதி நிலை முன் பணம் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக இந்தத் திட்டத்திற்காகும் செலவில் மாநில அரசு 51 விழுக்காடு அளிக்கும்; மைய அரசு 49 விழுக்காடு அளிக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக 1980–81 ஆம் ஆண்டுக்கு மாநில அரசின் மூலதனமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற தொகை 1.02 கோடியும், மைய அரசு இக்கழகத்திற்கு 98 இலட்சமும் கொடுத்திருக்கிறது.

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இந்தத் திட்டத்தைப்பற்றிக் கூறும்பொழுது 500 கோடி ரூபாய்க்கும் அதிகமாக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவழிக்கப்படும் என்று கூறினார்கள். அரிசன நலத்துறை பல ஆண்டுகாலமாக விஸ்தரிக்கப்படாமல் இருக்கிறது. புதிய இந்தத் திட்டத்தை அமல்படுத்தும் வகையில் அந்த இலாக்காவை விஸ்தரிக்கின்ற திட்டம் ஏதாவது அரசின் கவனத்தில் இருக்கிறதா? அடுத்தபடியாக, ஏற்கனவே நமக்கிருக்கின்ற வசதிகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு அரிசனங்களுக்குக் கொடுக்கப்படும்



கடன்வசதி அந்தந்த தொழில்களைத் துவக்குவதற்குச் சற்றுக்கூட பொருந்தாமல் இருப்பதால் புதிய சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து கட்டுப்படியாகும் வகையில் கடன் வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குப் போதியதாக அதிகாரிகளினுடைய அளவு இல்லை என்ற அடிப்படை உணர்வைக் கொண்டுதான் மாவட்டந்தோறும் ஒரு கோட்ட வளர்ச்சி அதிகாரி நியமிக்கப்பட்டியிருக்கிறார். அவர்கள் மூலமாக இந்தப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தைத் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதிக் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக அரசு செயல்படுத்தி வருகிறது.

**திரு. ஜி. மூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டோர் நலன்களுக்காக மைய அரசு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள விசேஷத் திட்டத்தின்கீழ், பொருளாதார மேம்பாட்டுக்கு அமைக்கப்பட்ட திட்டங்களை அறிவித்த அமைச்சரவர்கள் மைய அரசு தாழ்த்தப்பட்ட மக்களின் சமுதாய மேம்பாட்டுக்காகவும் அவர்கள் அன்றாடம் படுகின்ற தொல்லைகளை நீக்குவதற்காகவும், அவர்கள் கொடுமைப்படுத்தப்படுவது, அந்தக் கிராமத்தைக் கொளுத்துவது, சூறையாடுவது போன்ற சமுதாய விரோதச் செயல்கள் ஆகியவை அந்த மக்களுக்கு ஏற்படாமல் இருக்கவும் மைய அரசு மாநில அரசோடு கலந்து ஏதாவது திட்டம் அறிவித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால், விரிவாகப் பதில் அளிப்பதற்கு உதவியாக இருக்கும்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள ஆதிந் திராவிட குடும்பங்கள் எத்தனை? அந்தக் குடும்பங்களிலே வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிற குடும்பங்கள் எத்தனை என்பதை அறிவிக்க இயலுமா? அதோடு, வறுமைக் கோடு என்பது எந்த அடிப்படையிலே நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வி மைய அரசு அமைக்க உத்தேசித்துள்ள விசேட திட்டத்தைப் பற்றியது;

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபொழுது, ஒரு குறிப்பிட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களை, வறுமைக் கோட்டிற்கு மேலே கொண்டு வருவோம் என்று தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் கேட்கிறேன், வறுமைக் கோடு என்பது எந்த அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற ஆதி திராவிடர்களுடைய எண்ணிக்கை 73,15,595 ஆகும். இது 1971 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, மொத்த மக்கட் தொகையில் 17.81 விழுக்காடாக ஆதி திராவிடர்களுடைய மக்கட்தொகை இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வறுமைக் கோட்டினைப் பற்றி கேட்டிருக்கிறார்கள். வறுமைக் கோட்டைப் பற்றி தகுந்த பதில் அளிக்கக் கூடிய விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. விவரங்கள் கிடைத்தவுடன் தனியாக அளிக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980-85, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஆதி திராவிடர்களுக்காக சிறப்புத் திட்டம் ஒன்றை மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து தீட்டியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த அவையிலே அந்தத் திட்டத்தைச் சமர்ப்பித்து, இந்த அவையினுடைய கருத்தை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி பரிசீலிக்கலாம்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து தாழ்ந்தப்பட்டவர்களுக்கு விசேஷமான திட்டத்தைத் தயாரித்திருப்பதாகச் சொன்னார்கள். தற்போது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகளைப் பெற முடியாத அளவுக்கு இன்றைக்கு வங்கிகள் இடையூறாக இருந்து கொண்டிருக்கின்றன. மாநில அரசு கொடுக்கக்கூடிய அந்த, சப்சிடியை, உதவியை ஏற்றுக் கொண்டு கூட, வங்கிகள் அவர்களுக்கு எந்தவிதமான உதவியும் செய்ய முன்வரவில்லை. இது அரசுக்குத் தெரியுமா? அதைப் போக்க, உடனடியாக, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைக்க நடவடிக்கை எடுக்க அரசு என்ன திட்டத்தை வைத்திருக்கிறது ?



மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்ற ஒரு கருத்து இருந்த காரணத்தினால், அது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட காரணத்தினால் அண்மையிலே அரசு தாட்கோவைச் சார்ந்த மாவட்ட—கோட்ட வளர்ச்சி அலுவலர்களையும், வங்கிகளின் சார்பாக அந்த அதிகாரிகளையும் அழைத்து, அதுபற்றிய கூட்டம் நடந்திருக்கிறது. அதிலே அனைத்து முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்ற குறைபாடுகள் இனிமேல் ஏற்படாது.

## முட்டவாக்கம் ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு குடிநீர் வழங்கும் திட்டம்

*வினா எண் 40 :—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) காஞ்சிபுரம் ஒன்றியத்தைச் சார்ந்த முட்டவாக்கம் காலனிக்கு அரிசன நலத்துறை சார்பில் கட்டப்படுகின்ற குடிநீர் திட்டம் எட்டு ஆண்டுகளாக முடிவுபெறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் உடனடியாக நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சீபுரம் வட்டம் முட்டவாக்கம் ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு ஒரு துளை கிணறு வெட்டுதல் மற்றும் மேல்நிலைநீர் தொட்டி கட்டுதல் ஆகிய இருபணிகளை அதே கிராமத்தைச் சார்ந்த ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த இரு ஒப்பந்தக்காரரிடம் 1975ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. மேற்சொன்ன ஒப்பந்தக்காரர்களை மாவட்ட ஆட்சியர் வற்புறுத்தியதன் பேரில் தற்பொழுது இவ்விரு பணிகளும் முடிக்கப்பட்டு, குழாய் மூலம் அக்குடியிருப்பிற்குத் தண்ணீர் வழங்கப்படுகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அமுலாக்கப்பட்டுள்ள முட்டவாக்கம் குடிநீர்த் திட்டத்தில் போடப்பட்டுள்ள மோட்டார் போதிய வலுவற்றிருப்பதன் காரணமாக, அந்தக் குடிநீர் தொட்டி முழுவதுமாகத் தண்ணீர் நிரப்ப முடியாத சூழ்நிலை இருப்பதை அமைச்சர் அறிவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று முன்னர் பொருத்தப்பட்ட ஒரு குதிரைச் சக்தியுள்ள இயந்திரம் நீர் இறைக்கப் போதுமானதாக இல்லாததால், 5 குதிரை சக்தியுள்ள மின் இயந்திரம் பொருத்தப்பட்டு, தற்போது அந்தக் குடியிருப்புக்குக் குழாய் மூலமாக நீர் அளிக்கப்படுகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முட்டவாக்கம் காலனியில் இன்னும் பாதி கிராமத்திற்குக் குடிநீர் வழங்க வேண்டியிருப்பதால், அப்பகுதிக்கும் குடிநீர் வசதியளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10-20]

## 2. தகவல் கோரல்.

### (அ) திரு. பூபேஷ்குப்தா மறைவு குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 21-ஆம் தேதி நடந்த சபை நடவடிக்கைகளில் மாண்புமிகு ஆதித்தனார் அவர்களுக்கு அஞ்சலி தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதேபோல இராஜ்யசபாவில் உறுப்பினராக இருந்து மறைந்த தோழர் பூபேஷ் குப்தா அவர்களுக்கு........(குறுக்கீடு) சஞ்சய் காந்திக்கு இங்கே இரங்கல் தீர்மானம் வந்திருக்கிறது..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்துவது என்பது வேறு, கட்சி வேறுபாடுகள் குறித்து விவாதம் செய்வது என்பது வேறு. அதற்கு இந்த அவையைப் பயன்படுத்த வேண்டாம்.



### (ஆ) சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதி குறித்து.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏதாவது குறை இருந்தால் அதைத் தீர்த்து வைக்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது. புதிய சட்டமன்ற விடுதியில் குளிப்பதற்கும், குடிப்பதற்கும் தண்ணீர் வருகிறது. அதோடு புழுக்களும் வருகின்றன. எனவே, அங்கே தங்குகின்ற அங்கத்தினர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் ;

திரு. கே. ஆர். சுந்தரம் : இ. என். எச். ஆஸ்டலில் போன் வசதி இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினைகளை எனது அறையிலேயே தெரிவித்து இருக்கலாம்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மற்றும் திருவாளர்கள். சோ. அழகர்சாமி, பொ. உத்திராபதி இரா. கருப்பையா, என். சங்கரய்யா, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. உமாநாத், என்.எஸ்.வி. சித்தன், எஸ். என். இராமசாமி, ப. தீர்த்தராமன், அ. இரகுமான்கான், ஏ. சாகுல் ஹமீது, மு. அப்பாதுரை, எம். ஆறுமுகம், பி. முகமது இஸ்மாயில், பொ. விஜயராகவன், எஸ். ஆண்டித்தேவர், ஜி. மூர்த்தி ஆகியோர் "தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்கள் சில கிராமங்களில் மதம்மாறும் சூழ்நிலை ஏற்பட்டு அதன் விளைவாக ஏற்பட்டிருக்கும் நிலைமைகள் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர பொதுமுக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[1981 ஆகஸ்ட் 24

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, நான் கூட இது குறித்து ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழ் கொடுக்கவில்லை, கவனஈர்ப்புத் தீர்மானத்தின் கீழ் கொடுத்திருக்கிறீர்கள்.

*திரு. க. அன்பழகன் : : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலை
வர் அவர்களே, தமிழகத்தில் மீனாட்சிபுரம் முதலான சில கிரா
மங்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டு இருக்
கிற மக்கள், அண்மைக் காலத்திலே தாங்கள் இதுவரையில் எந்த
மதத்தைச் சார்ந்தவர்களாக குறிப்பிடப்பட்டு வந்தார்களோ
அந்த மதத்திலிருந்து, வேறு மதத்தில் சேர்ந்திருப்பதாக ஒரு
செய்தி வந்து, அதன் காரணமாக இன்றைய தினம் இந்தப்
பிரச்சினை அகில இந்தியாவினுடைய கவனத்தை ஈர்க்கும் அள
வுக்கு ஒரு முக்கியத்துவம் பெற்ற பிரச்சினையாகவும், தமிழ்நாட்
டிலே, உள்ள பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும்,
பொது மக்களும் ஓரளவு பதட்ட நிலை அடையத்தக்க அளவுக்குக்
காரணமாகவும் அமைந்திருக்கிறது. நாட்டிலே நடைபெறுகிற
நிகழ்ச்சிகளிலே எல்லாம் இது அதிக முக்கியத்துவம் உடையதாக
மாறி வருவது நல்லது தானா? அல்லது நல்லதல்லவா என்று
கூட சந்தேகம் ஏற்படுகிற அளவுக்கு, வரவேற்க முடியுமா, முடி
யாதா என்ற கேள்வி எழுப்பப்படுகிற அளவுக்கு இந்தப் பிரச்சினை
யில் எல்லோரும் கவனம் செலுத்துகிற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்
கிறது. தமிழக அரசு இந்த சூழ்நிலைகள் ஏற்படுவதற்கான
நிலைமைகள் வளர்வதற்கு இடம் கொடுத்து விட்டதோ என்ற
எண்ணம் ஏற்படுகிற அளவிற்கு நிலைமை இருக்கிறது.

தமிழகத்தில் நீண்ட நெடும் காலமாக உயர்ந்த கொள்கைகள் இடம் பெற்றிருந்தலூாம்கூட,

"பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்ற குறள் இடம் பெற்றிருந்தாலும், "ஒன்றே குலம்
ஒருவனே தேவன்" என்ற திருமூலர் திருமொழி இந்த
நாட்டிலே மிகச் சிறந்த கடவுள் பற்று உடையவர்களாலே கூட
ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும், "ஜாதியிலே, மதங்களிலே,
சாத்திர சந்தடிகளிலே, கோத்திரச் சண்டையிலே அபிமானத்து
அலைகிற உலகீர் இது அழகலவே" என்று வடலூர் வள்ளலார்
அறிவுறுத்தியிருந்தாலும், இருள் ஜாதி, சமய தத்துவ குப்பை
எல்லாம் எருவாக்கிப் போட்டு மக்களிடையே ஒரு சமரச சன்
மார்க்க உணர்வை ஏற்படுத்த வேண்டுமென்ற வள்ளலாருடைய
கருத்து நாட்டிலே சொல்லப்பட்டிருந்தாலும், இன்றைக்கும் சமய
ங்களுக்கிடையே மாறுப்பட்ட கருத்து இடம் பெற்றிருப்பதன்
காரணமாக, ஒரு சமயத்திலிருந்து இன்னொரு சமயத்
திற்கு மாறிவிட்டார்கள் என்பது ஒரு பரபரப்பை



1981 ஆகஸ்ட் 24] [திரு. க. அன்பழகன்]

ஏற்படுத்துவதாக இருக்கிறது. சமயங்கள் என்பது ஆன்மீக கொள்கைகளுடைய பிறப்பிடம் என்று கருதப்படுவது ஒரு பக்கம் இருந்தாலும், சமயங்கள் தான் சமுதாய வாழ்க்கைக்கு அடிப்படை என்ற இன்னொரு கருத்தும் இடம் பெற்றிருக்கிறது. மதம் மக்களுக்கு 'ஆகின்' என்ற ஒரு கருத்து இடம் பெற்றிருந்தாலும் "மதம் இன்றேல் மனிதன் பிணம்" என்ற ஒரு கருத்தினையும் சமயவாதிகள் எடுத்து வைக்கிறார்கள். அதன் காரணமாக மத அடிப்படையிலே ஏற்பட்ட மாற்றம் என்ற உணர்வு காரணமாக இதிலே மாறுபட்ட பல்வேறு கருத்துக்கள் பேசப்படுகிற நேரத்தில், தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலையைப்பற்றி ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள் வறுமையினால் வாடுகிறார்கள். யாரோடும் சமத்துவமாக சேர்ந்து வாழ முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அடக்கி வைக்கப்பட்டு, முடக்கி வைக்கப்பட்டு, அறிவு இருந்தாலும் அதைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்காமல் தடுக்கப்பட்டு, மனிதத் தன்மையை இழந்தவர்களாக, விலங்கினும் தாழ்ந்தவர்களாகக்கூட பன்னெடுங்காலமாக நடத்தப்பட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கிறபோது எனக்கு அதிலே அதிக மாறுபாடு இல்லையென்று சொன்னாலும் கூட, இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உரிமை அவர்களுக்கு இல்லையென்பதை நான் சொல்லாமல் இருக்க முடியாது. தமிழகத்தில் இந்து சமயத்தைப் பற்றிய கருத்துக்களை அறிந்தவர்கள், இந்து சமயம் என்பது ஒரு சமயம் அல்ல, ஒரு மதம் அல்ல, பல்வேறு மதங்களுடைய ஒரு கலவை அது என்று தெரிவித்திருக்கிறார்கள்.

இந்து மதம் என்பது, சைவம், வைணவம், இன்னும் சொல்லப் போனால் ஸ்மார்த்தம் காலக் கட்டத்திலே வளர்ந்த ஆரிய மதக் கொள்கைகள் பல்வேறு விதமான கலவையை உடையது. அதிலே, நாத்திகக் கொள்கை கூட அவர்கள் தத்துவ முறையிலே 'கேபிலசாங்' அடிப்படையிலே இடம் பெற்றிருக்கிறது. எனவே, பல்வேறு கொள்கை அடிப்படையிலே உள்ள இந்து சமயத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிலே குறிப்பிட்ட ஒரு சமய வழியிலே வந்தவர்களோ அல்லது இந்து சமயத்தினுடைய அடிப்படை என்று சொல்லப்படுகிற 'மனு ஸ்மிர்தியிலே' வகுக்கப்பட்ட நால்—வருணத்தில் ஒரு வருணமாக இல்லாத காரணத்தால், மற்றவர்கள் அவர்களை இந்துக்கள்" என்று சொன்னாலுங்கூட இந்துக்கள் என்று சொல்லிக்கொள்கிற அளவிற்கு உரிமை படைத்தவர்களாக வாழ்கிற ஒரு நிலைமை இல்லை. அநாமதேயமாக, தேவையில்லாதவர்களாக, தேர்தலுக்கு மட்டுமே வாக்களிக்கிற ஒரு நிலையிலே இடம் பெற்றவர்களாக அரசியலிலே பல்வேறு காரணங்களாலே, சூழ்நிலைகளினாலே தங்களுடைய குறைகளை முழுவதும் போக்கிக் கொள்ள முடியாதவர்களாக துன்ப நிலையிலே வாழ்கிற அந்த தாழ்த்தப்பட்ட

[திரு. க. அன்பழகன்] [1981 ஆகஸ்ட் 24

மக்கள் சமுதாயத்தைப் பற்றியும், அவர்கள் பின்பற்றும் மதத் தைப்பற்றியும் மற்றவர்கள் பல்வேறு கோணங்களிலே எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும், எண்ணிப் பார்ப்பார்கள் என்று நம்மால் எதிர்பார்க்க முடியவில்லை.

(முற்பகல் 10-30.)

தலைவலியும் வயிற்றுவலியும் வந்தவனுக்குத்தான் தெரியும் என்று சொல்லுவதைப்போல அந்தத் துன்ப நிலையிலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுடைய மன நிலையை என்னாலே கூட அறுதியிட்டு உரைக்க முடியாது. எனவே அந்த தாழ்த்தப்பட்ட நிலைக்கு மாற்றுப் பரிகாரம் எத்தனையோ வழிகளிலே கிடைக் கும் என்று தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்பார்த்தார்கள்; இன் றைக்கும் எதிர்பார்க்கிறார்கள். இன்றைக்கும் எல்லோரும் மத உணர்விலே மாறுபட்டுத்தான் மதம் மாறிச் செல்கிறார்களா என்றால் நான் நம்பவில்லை.

அப்படிப்பட்ட நிலையிலே டாக்டர் அம்பேத்கார் அவர்கள் மூலமாக அகில இந்தியாவிலேயும் ஒரு சில பாதுகாப்புகள் கிடைத்திருந்தாலும் கூட, தமிழ் நாட்டிலே தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலைக்காக தந்தை பெரியார் அவர்கள் பல்லாண்டு காலமாகச் சுயமரியாதைக் கொள்கைகளையும் பகுத்தறிவுக் கொள்கைகளையும் எடுத்துச் சொன்னதன் மூலம் ஓரளவுக்கு அவர் களுக்கு நம்பிக்கை உளவாகிஇருந்தாலும்கூட, பேரறிஞர் அண்ணா அவர்களாலே வளர்க்கப்பட்ட குடும்பப் பற்று, பாசத்திலே இணைக்கப்பட்டு பல தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்கு ஒரு நிம்மதியைத் தேடிக் கொண்டாலும் கூட, இவைகளுக்கு அப் பாற்பட்டு சமுதாயத்திலே இருக்கிற ஆதிக்க அலைகள் அவர் களை அவ்வப்போது அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றன. அப்படி அலைக்கழித்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் ஆதர வற்ற நிலையில், அணைப்பாரற்ற நிலையில், தங்களிடத்திலே தோழமை பாராட்டுகிறவர் இல்லாத நிலையில் திக்குத் தெரி யாத காட்டில் விடப்பட்டவர்களைப் போல எண்ணுகின்றவர் கள் தங்களுக்கு எந்தப் பக்கத்திலே ஒளி தெரிகிறதோ அந்தப் பக்கத்திலே நடக்க ஆரம்பிக்கிறார்கள் என்றுதான் நான் கருது கிறேன்.

அவர்களுக்கு நல்லாதரவு வழங்குவதற்காக ஒரு காலத்திலே, தந்தை பெரியார் அவர்கள் வைக்கத்திலே தீண்டாமைக் கொடு மையை எதிர்த்து போராட்டம் நடத்தியிருந்தாலும் கூட, அது ஓரளவுக்கு சில உரிமைகளைப் பெற்றுத் தர, திருக் கோயில் களிலே நுழைவதற்கு உரிமை பெற, அக்கிரகாரத்திலே நடப் பதற்கு உரிமை பெற, பொது குடிநீர் நிலைகளைப் பயன் படுத்துவதற்கு அனுமதி பெற, பள்ளிக்கூடத்திலே இடம் பெற



1981 ஆகஸ்ட் 24] [திரு. க. அன்பழகன்]

அனுமதி பெற அப்படிப்பட்ட அந்த அளவுக்குத்தான் பயன் பட்டிருக்கிறதே தவிர, அவர்கள் முழு உரிமை வாழ்வு பெறச் செய்யவில்லை. இன்னும் சொல்லப் போனால் சமபந்தி போஜ னம் நடத்தினால்கூட, அங்கே கூட அவர்கள் பெறக் கூடிய அளவுக்கு மன நிறைவு பெறுவதற்கான வாய்ப்பு இன்னும் கூட ஏற்படவில்லை. இன்றைக்கு சமபந்தி போஜனம் நடத்துவது என்ற ஒரு காரணத்தினாலே அவர்கள் மன நிறைவு அடைவார் கள் என்றால் தினந்தோறும் நடத்தலாம். ஆனால் அதனாலே கூட மன நிறைவு அடைய முடியாத அளவுக்கு அவர்களுடைய உள்ளம் புன்பட்டு இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகுஇயற்றி யான்."

என்று வள்ளுவர் கூறியுள்ளார். பிச்சை எடுக்கிறபோது ஏற்படு கிற இழிவை அவர் எண்ணிப் பார்க்கிறபோது அப்படிப்பட்ட இழிவு ஏற்படுவதற்குக் காரணமாக கடவுள் இருந்தால் அந்தக் கடவுள் ஒழிக என்று சொன்னார். அப்படி பிச்சை எடுப்பவனை விட, உழைப்பவன், பாட்டாளி, சமுதாயத்திற்கு தொண்டாற்று கிறவன், மற்றவர்கள் ஆற்ற முடியாத தொண்டுகளை எல்லாம் சமுதாயத்திற்கு ஆற்றுகிறவன் இரந்து வாழ்கிறவனைவிட கேவல மாக வைக்கப்பட்டிருக்கிற ஒரு சூழ்நிலையை மாற்றினால் ஒழிய வருணாசிரம தருமத்தின் மனப்பான்மையை தமிழ்நாட்டிலிருந்து இன்னும் இந்தியாவிலிருந்தே மொத்தமாக விரட்டியடிப்பதற் கான ஒரு நிலை ஏற்பட்டால் தவிர, அவன் மன நிறைவோடு நம்முடைய சமுதாயத்திலே வாழ முடியாத நிலையில் இருக் கிறான். நான் மத மாற்றத்தை ஆதரிப்பவன அல்ல. எம்மத மும் சம்மதம் என்ற பொதுவான கொள்கையை ஆதரிக்கிறவன். எந்த மதத்திலும் மாறுபடுவதற்கு இடம் இருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறவன். ஆனால் சமய நெறி காரணமாக தாழ்த் தப்பட்ட சமுதாயத்தினராக வாழ்வதால் பாதிக்கபடுகிற மக்கள் அந்த நிலையிலே இருந்து தங்களை விடுவித்துக் கொள்ள விரும்புகிற ஒரு நிலை ஏற்படுமானால் தாங்கள் இடம் பெற் றுள்ள சமயத்துறை மூலமாக அவர்களுக்கு எந்தவிதமான ஒரு நன்மையும் கிடைக்காமல் மனப்புண் ஏற்படுகிற நிலை இருக்கு மானால் அதை மாற்றியமைக்க அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு வீடு கட்டித் தருகிற திட்டம், பொருளா தாரத் துறையிலே வறுமையிலே உள்ள அந்த மக்களுக்கு வீடு கட்டித் தருகிற திட்டம் ஓரளவுக்கு நம்பிக்கைத் தரும் என்று கொண்டு வரப்பட்டதாயினும், அது தொடராத நிலைகூட அவர் களுக்கு மதம் மாறுவதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால் அதைவிட அதிகமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்றைய

ினம் ஒரு நம்பிக்கை ஏற்படுகிற அளவுக்கு நாம் மற்றவர்களோடு
சமத்துவமாக வாழ்வதற்கு உரிமை பெற்றிருக்கிறோம்; நம்
காலத்திலே இதை நிறைவேற்றிட முடியும் என்ற ஒரு நம்பிக்கை
ஏற்படுகிற அளவுக்கு தமிழ்நாடு சட்டமன்றத்தில் எந்த ஒரு
குலத்திலே பிறந்திருந்தாலும் அதற்கு உரிய பயிற்சி பெற்றிருந்
தால் திருக்கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்று கொண்டு
வரப்பட்ட சட்டம், தி.மு. கழக அரசாலே நிறைவேற்றப்பட்ட
சட்டம், அரசியல் நிர்ணயச் சட்டம் குறுக்கிட்டதன் காரணமாக
உச்ச நீதிமன்றத்திலே தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

அப்படிப்பட்ட எதிர்ப்புகளால் அவநம்பிக்கை தொடர்ந்து
ஏற்படுகின்ற காரணத்தினால் அந்த அவநம்பிக்கைக்கு ஆளான
வர்கள் இந்த நிலைமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்று கருதக்
கூடிய நிலைமை இருக்கின்றது. தாழ்த்தப்பட்ட சமுதாய
மக்கள் பற்றி இன்று காலையிலே கூட கேள்வி நேரத்தின்போது
சொல்லப்பட்டது. அந்த மக்கள் மிகப் பெரிய எண்ணிக்கையிலே
உள்ளவர்கள். நாட்டின் முதுகெலும்பாக இருக்கக்கூடியவர்கள்
அவர்கள். ஆதிக் குடிகள் என்று கருதப் பெற்று வருகிறவர்கள்.
தமிழர்களின் கொள்கை, நெறி போன்றவை பற்றி கூறிய
வள்ளுவர், திருமூலர், வள்ளலார், தந்தை பெரியார், அண்ணா
போன்றவர்களால் தமிழ் நெறி அடிப்படையில் சமத்துவமாக
வாழ்வதற்கான உரிமை பெற்றவர்கள் இவர்கள் என்று குறிப்
பிடப்பட்டவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு மதச்சார்புநிலை
ஏற்படுத்துகின்ற கொடுமைகளிலே இருந்து விடுதலை கிடைப்
பதற்கு—ஏற்ற வழி மேற்கொள்ளப்படவில்லை. அண்மையிலே
கூடிய மதத் தலைவர்களுடைய மாநாட்டிலே கூட பஞ்சமர்,
தீண்டாதவர் என்று சாஸ்திரத்திலே கூட இடம் பெறவில்லை
என்று குறிப்பிடப்பட்டது. அப்படி இடம் பெறாதவர்களாக
இந்து மதத்திலே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்ற நிலைமையின்
காரணத்தால் அப்படிப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய
பாதுகாப்பைச் சட்டத்தின் மூலமாக அளிப்பதற்கு அரசாங்கம்
நடவடிக்கை எடுப்பதன் மூலம் தங்களுக்குப் பாதுகாப்பு இருக்
கின்றது என்ற எண்ணத்தை அந்த மக்களிடத்திலே ஏற்படுத்து
வதற்கு—ஒரு தகுந்த ஏற்பாட்டைச் செய்தால்தான் மத
மாற்றம் தேவைப்படாமலிருப்பதற்கான தகுந்த நடவடிக்கையை
உருவாக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மதச்சார்பற்ற அரசாங்கத்தின் சார்பில் மதச் சார்பு
நிலை தேவையில்லை என்று எண்ணத்தக்க அளவுக்கு பாதிக்கப்
பட்ட மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுகின்ற அளவுக்கு நட
வடிக்கை எடுக்க அரசு கடமைப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்த
நடவடிக்கைகளை முழு அளவுக்கு எடுக்காததன் காரணமாக
ந்த அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைய
னம் மீனாட்சிபுரம் இந்தியாவிலே உள்ள காசி முதலான
சேத்திரம் போன்று இன்னொரு சேத்திரமாக மாறிக் கொண்டு





வருகின்றது. இந்துக்கள் பலர் முஸ்லீம்களாக மாறிவிட்டதால் அப்படிப்பட்ட ஒரு இடமாக அது மாறும் போலும். தமிழ் நாட்டிலே இந்துக்களில் பெரும்பாலானோர் ஓரளவுக்குத் தோழமை உணர்வோடுதான் இருக்கிறார்கள். நல்ல வேளையாக இங்கே ஜாதி வேற்றுமையினால் விளையும் கொடுமை இருக்கின்ற அளவுக்கு மத வேற்றுமையிலே இல்லை. நாகூர் ஆண்டவர் கோவிலுக்கு இந்துக்களும் போகிறார்கள். திருச்செந்தூர் முருகன் கோவில் போன்ற சில கோவில்களுக்கு முகம்மதியர் கூட வருகிறார்கள். எல்லாவற்றையும் கடந்த சித்தர்களாக வாழ்ந்தவர்கள் எல்லாச் சமயங்களையும் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். சமய வேற்றுமைக்கு முக்கியத்துவம் இல்லை என்று என்னைப் போன்றவர்கள் கருதினாலும் கூட மக்களுடைய மனதிலே இப்படிப்பட்ட ஒரு பெரிய கவலை ஏற்படுகின்ற அளவுக்கு, குழப்பம் ஏற்படுகின்ற அளவுக்கு ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலை இன்னும் சொல்லப் போனால் அரசாங்கத்தாலே கூட கவனிக்கப்படாத நிலைமை அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை அரசாங்க அதிகாரிகள் கூட கவனிக்காத நிலைமைகள் குறித்து இந்த அவையிலே விவாதிக்கப்பட வேண்டும், இன்னும் விரிவாக விவாதிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இந்த அவசர ஒத்திவைப்புத் தீர்மானத்தை தங்கள் மூலமாக இந்த அவைக்கு நான் வழங்கி இருக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். மிக முக்கியமான பிரச்சினை பற்றி எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அரசு சார்பிலே முதலமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. ஆகவே அவர்கள் ஊரிலே இருந்தால் தாங்கள் அவர்களை அவைக்கு வரவழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் தமிழகத்திலே மீனாட்சிபுரம் பகுதியிலே நடந்த சம்பவங்கள் தமிழகம் பூராவும் சகல பகுதி மக்களிடத்திலேயும் ஒரு பதட்டமான நிலையை தோற்றுவித்திருக்கின்றன என்பதைப் பற்றி நாம் எல்லோரும் அறிந்திருக்கின்றோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இது பற்றிய பல விவரங்களைக் கூறினார்கள். சமுதாயத்திலே ஒடுக்கப்பட்டிருக்கின்றவர்களுக்கு சில உரிமைகள் வேண்டும் என்று தொடர்ந்து போராடிக்கொண்டு வரக்கூடிய அரிசனங்கள் மத்தியில் ஒரு பாதுகாப்பு இல்லாத நிலைமை ஏற்பட்டது. அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டிய அரசு அதிகாரிகள் உரிய நடவடிக்கையினை காலாகாலத்தில் எடுக்காத காரணத்தை ஒட்டியும் பல உணர்வுகள் அவர்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கின்றன என்பதை

[திரு. சோ. அழகர்சாமி] [1981 ஆகஸ்ட் 24

நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சமுதாயத்திலே தொடர்ந்து ஏற்பட்டு வருகின்ற இந்த விழிப்புணர்ச்சிக்கு தகுந்த முறையிலே அதிகாரிகளுடைய அணுகு முறை இல்லை என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

[முற்பகல் 10–40]

இந்து மத மாற்றம் சம்பந்தமாக இன்று ஆழமாகப் பேசப் பெற்று வருகிறது. இது நம்முடைய நாடு தோன்றிய நாளிலிருந்து தொடர்ந்து நடந்து வந்து கொண்டிருக்கிற ஒரு நிகழ்ச்சிதான். நம்முடைய அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களுள் ஒருவரான மதிப்பிற்குரிய டாக்டர் அம்பேத்கார் அவர்கள் கூட, புத்த மதத்திற்கு அப்போது மாறினார்கள். அதற்கு முன்னாலே கூட நம்முடைய இந்தியாவிலே இல்லாத மதமே கிடையாது என்கிற நிலை இருந்தது. அதுவும் நம்முடைய தமிழ்நாட்டில் உலகத்தில் எத்தனை மதங்கள் உண்டோ அத்தனையும் இருந்தன. ஒவ்வொருவருக்கும் தங்கள் இஷ்டப்படி அந்தந்த மதங்களில் அவரவர்கள் சேர்வதற்கு வேண்டிய உரிமைகளையும் பெற்றிருந்தார்கள். தற்போதும் சட்டப்படி பெற்றிருக்கிறார்கள்.

ஆனால் இப்போது சிலர் பேசுகிறார்கள், இந்து மத மாற்றத்தை தடை செய்யலாம் என்றெல்லாம் அம்மாதிரியான நடவடிக்கைகள் எல்லாம் சரியானதாக இராது என்பது என்னுடைய கருத்து என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது நடைபெற்றிருக்கிற சம்பவங்களைப் பார்த்தால், அரிசன மக்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது விளங்கும். அது வெண்மணியிலாகட்டும், விழுப்புரத்தில் ஆகட்டும், உஞ்சனையில் ஆகட்டும் அல்லது இராமநாதபுரமாகட்டும், எல்லா சம்பவங்களிலும் அரிசனங்கள்தான் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பாதுகாப்பிற்கு என்ன செய்வது என்று எண்ணம் தோன்றி அதன் விளைவாகத்தான் இப்படி ஒரு நிலைமையை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

தொடர்ந்து இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்பட்டதற்கு உண்டான காரணங்களை ஆராய்ந்தால் புரியும். அதிலும் குறிப்பாக மீனாட்சிபுரத்தில், நடந்த சம்பவங்களை எடுத்துக் கொண்டால், அங்கே நடந்த சில கிரிமினல் வழக்குகளிலே சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை விசாரித்து, முறையாக அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருந்தால், இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. ஆனால் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை விட்டு விட்டு சம்பந்தப்படாத அத்தனை பேர்களையும், ஒரு மாத காலத்திற்கும் மேலாக தொடர்ந்து, அங்கே போலீசார் ரெய்டு என்ற பெயரால் கொடுமைகள் இழைத்ததன் காரணமாக, அந்த



1981 ஆகஸ்ட் 24] [திரு. சோ. அழகர்சாமி]

மக்கள் மத்தியிலே ஒரு உணர்வு அதாவது தங்கள் பாதுகாப்பிற்கு என்ன செய்யலாம் என்ற உணர்வு ஏற்பட்டு, அதன் அடிப்படையில் இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்பட்டதாகக் கூட செய்திகள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் புரியும். அங்குள்ள போலீசார்கள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை கோர்ட் மூலமாக வழக்கு தொடர்ந்து தண்டனை பெற்றுத் தருவதற்குப் பதிலாக, தாங்களாகவே நீதிபதிகளாக மாறி, தண்டனையும் வழங்கியதின் காரணமாகத்தான் இத்தகைய சூழ்நிலை ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஆகவே, இப்படி தொடர்ந்து ஒரு மாத காலத்திற்கு மேலாக நடந்ததாக்குதலின் காரணமாக, அவர்கள் மீது அடக்கு முறையை அதிகமாகவே செய்ததின் காரணமாக, அவர்களை பயமுறுத்தியதன் காரணமாக, அந்தப் பகுதியிலிருந்த சில போலீஸ் அதிகாரிகள் அதிக அளவில் பணக்காரர்களாகி, சொத்து சேர்த்துவிட்டதாக கூட சொல்லப்படுகிறது. இவைகளையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால அரசு இவைகளைப்பற்றி சரியானபடி விசாரணை நடத்தி, எதிர்காலத்திலாவது சரியான பாதுகாப்பு அவர்களுக்கு கிடைக்கும்படியான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். அதையொட்டி தொடர்ந்து எங்கே பார்த்தாலும் இந்தச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்களுடைய எண்ணிக்கையைப் பார்க்கும்போது அதில் அரிசன மக்களின் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கிறது என்பது தெரிய வருகிறது. வெண்மணியில் 44 பேர்கள் அரிசனங்கள் இறந்திருக்கிறார்கள். விழுப்புரத்தில் 12 பேர்கள் அரிசனங்கள் இறந்திருக்கிறார்கள். உஞ்சனையில் 5 பேர்கள் அரிசனங்கள் இறந்திருக்கிறார்கள். இராமநாதபுரத்தில் இறந்த 6 பேர்களில் 5 பேர்கள் அரிசனங்கள்.

அது மட்டுமல்ல, இந்தச் சம்பவங்களை எல்லாம் பார்க்கும்போது அவைகள் திட்டமிட்டு நடத்தப் பெற்று, அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது விளங்கும். எல்லாச் சம்பவங்களுமே விடியற்காலை 5 மணிக்குத்தான் நடந்ததாகச் செய்திகள் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. இப்படி தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிற அரிசன மக்களுக்கு பாதுகாப்பளிக்க வேண்டிய போலீசார் அவர்களுக்கு பாதுகாப்பளித்தார்களா என்றால இல்லை. அதற்கு மாறாகத்தான் சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. இவைகளையெல்லாம் சரியானபடி மறு பரிசீலனை செய்ய நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதே நேரத்தில், இந்த ஜாதி மாற்றங்களுக்குப் பிறகு இதைப்பற்றி பலவிதமான கூட்டங்களும், செயல்களும், நிகழ்ச்சிகளும், சமபந்தி போஜனங்களும் நடைபெற்று வருகின்றன.

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் சகல பகுதி மக்களையும் அரிசனங்களை தங்கள் சகோதரர்களாக, தங்களுடன் சம உரிமை உள்ளவர்களாக எண்ணம் கொள்ளச் செய்வதற்கு உதவி செய்யுமா? அல்லது மேலும் சமூகத்தில் கருத்து வேறுபாடுகளையும் வகுப்புவாதங்களையும், பகையையும் ஏற்படுத்துமா என்று அரசியல்வாதிகளான நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனென்றால், ஜாதி வகுப்புகளை ஊக்குவிக்கக்கூடிய முறையில் அரசியல் பிரமுகர்கள் அதிலே ஈடுபட்டு, அதை அதிகமாக வளர்க்கக்கூடிய நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்வதையெல்லாம் தடுப்பதற்கு நாமெல்லாம் யோசிக்க வேண்டும். அரசியல் கட்சி பிரமுகர்கள் இதிலே அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று பல இடங்களில் அவர்கள் தொடர்ந்து எந்தவிதமான உரிமைகளையும் பெற முடியாத நிலையில், அவர்களுக்கு நடைபாதைகள் அமைத்துக் கொடுப்பதிலோ அல்லது விட்டு மனைகள் கொடுப்பதிலோ அல்லது குடி தண்ணீர் பெறுவதற்கோ அவர்கள் படும் கஷ்டங்களைப் போக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும். இந்த மாதிரி சம்பவங்கள் எல்லாம் ஏற்படக் காரணம், தொடர்ந்து அவர்களுக்கு ஒரு பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டால், தொடர்ந்து இம்மாதிரியான நிலை ஏற்படும்போது நாம் என்ன செய்வது. நம் பாதுகாப்பிற்காக என்ன செய்யலாம் என்ற உணர்வு அவர்கள் மனதில் ஏற்பட்டிருப்பதால்தான் இப்படிச் செய்யலாமா அப்படிச் செய்யலாமா அப்படிச் செய்தால் பாதுகாப்பு கிடைக்குமா இப்படிச் செய்தால் பாதுகாப்பு கிடைக்குமா என்ற ஒரு உணர்வினை அவர்களிடத்தில் தோற்றுவிக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்தில், நேற்று கூட ஒரு பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது, ஒரு டாக்டர் அவர்களைப் பற்றி. கோவை மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை தாலுக்காவில் உள்ள பூளவாடி கிராமத்தில் ஒரு டாக்டர் மருத்துவமனை நடத்தி வருகிறார். அவர் திராவிட கழகத்தைச் சேர்ந்தவர். அவர் எல்லோரையும் சமத்துவமாக நடத்தக் கூடிய கொள்கையை உடையவர். அவர் தாக்கப்பட்டு, அவர் குடும்பம் தாக்கப்பட்டு அவரும் அவரது குடும்பமும் இன்று மருத்துவ மனையில் இருக்கக் கூடிய செய்தியைப் பார்க்கிறோம். இதை நான் ஏன் கூறுகிறேனென்றால் இன்று இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டிருப்பதற்கான காரணங்களை ஆராய்ந்து அறிந்து அதைப் போக்கக்கூடிய விதத்தில் வேண்டிய தீவிர நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்று பல இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடிதண்ணீருக்கு எந்தவிதமான வசதியும் கிடையாது. பக்கத்திலுள்ள தோட்டக் கிணறுகளில் தண்ணீர் எடுக்க அவர்களை அனுமதிப்பதும் கிடையாது. ஒரு





போர்வெல் அல்லது கிணறை அரசாங்கம் வெட்டிக் கொடுப்பது என்று சொன்னால் அதிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு அந்த மக்களை அனுமதிப்பதில்லை; மறுக்கப்படுகிறது. முற்போக்கான கருத்துக்கள் உள்ள இயக்கங்கள் வளரக்கூடிய இடங்களில் இம்மாதிரிப் பிரச்சினைகள் கொஞ்சம் தீர்க்கப்பட்டிருக்கின்றன. மற்ற இடங்களில் எல்லாம் அரசாங்க அதிகாரிகள் மற்றும் போலீஸ் அதிகாரிகள் ஜாதி உணர்வினால் மேல்ஜாதிக்காரர்களின் ஆதிக்கத்திற்கு, செல்வாக்கிற்கு கட்டுப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுப்பது கிடையாது. குறிப்பிட்ட காலத்தில் ஒரு குற்றம் செய்கிறார்கள் என்று சொன்னால், அப்படி தகவல் சொன்னால் போலீஸ் அதிகாரிகளிடம் அல்லது அதிகாரிகளிடம் புகார் செய்தால் உடனடியாக விசாரிப்பதோ அல்லது உடனடியாக பாதுகாப்பு கொடுப்பதோ கிடையாது. பல இடங்களில் முன்கூட்டியே தகவல் கொடுக்கப்பட்டும் சரியான பாதுகாப்பினை போலீஸ் அதிகாரிகள் கொடுக்காத காரணத்தால் மிகப் பெரிய தாக்குதல்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் ஆளாகியிருக்கிறார்கள். இன்னும் ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள். காந்தி பிறந்த நாடு, புத்தர் பிறந்த நாடு, பெரியார் பிறந்த நாடு இது. இவர்கள் பிறந்த நாட்டில்தான் இத்தகைய நிலை. தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட சண்டைகள் ஏற்படுவதை, தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மற்றவர்களுக்குமிடையே ஏற்படுகிற விரோதங்கள் குரோதமான எண்ணங்கள், தவிர்க்கப்பட வேண்டும். இப்போது ஏற்படக் கூடிய சண்டைகள், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே ஏற்படக்கூடிய சண்டைகள் அத்தனை பேர்களும் வெட்கப்படக்கூடிய வருத்தப்படக்கூடிய சம்பவங்களாக இருக்கின்றன. இதைப் போக்குவதற்கு அரசாங்கத் தரப்பில் என்ன செய்ய வேண்டும், அதேமாதிரியாக இதைப் போக்க அரசியல் கட்சிகளும், மற்றவர்களும் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். ஜாதி எண்ணங்கள் குரோதங்கள் வளராமல் இருக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை பற்றிச் சிந்திக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் வந்திருப்பது அவசியமானதுதான். இதைப் பற்றி நாம் மனம் விட்டுப் பேசி அரசுத் தரப்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை தீவிரமாக எடுக்க வேண்டும்.

அதே நேரத்தில் அரிஜனங்கள் மத்தியிலிருந்து ஒரு புகார் வரும் போது உரிய பாதுகாப்பை காலாகாலத்தில் கொடுத்திருந்தால் பிரச்சினை தீர்ந்திருக்கலாம்; பலவற்றைத் தடுத்திருக்கலாம். போலீஸில் புகார் கொடுத்தும் கூட அவைகள் மீது உடனடியாக நடவடிக்கைகள் எடுத்திருந்தால் இந்தப் பிரச்சினைகளை காலத்திலேயே தடுத்திருக்கலாம். ஆனால் அப்படி உரிய நடவடிக்கைகளை காலா காலத்தில் எடுக்காதது மட்டுமல்ல, அதிகாரிகளுக்குத் தகவல்கள் கொடுக்கப்பட்டும் மற்றவர்களுக்கு ஆதரவாக இருந்ததன் காரணமாகத்தான் இவ்வளவு

பெரிய மோசமான சம்பவங்கள் நாட்டில் ஏற்பட்டு தமிழகம் பூராவும் இது பற்றிப் பேச வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் போக்க வேண்டுமென்று சொன்னால் அடித்தட்டு மக்களுக்கு வேண்டிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலங்கள் கொடுக்க வேண்டும், அவர்கள் அங்கே சுதந்திரமாக வாழ வகை செய்து கொடுக்க வேண்டும். குடிநீராகட்டும் மற்ற வசதிகள் ஆகட்டும் பொது இடங்களில் இருந்து பெறக் கூடிய உரிமைகளை அவர்களுக்கு பெற்றுத் தர வேண்டும். அதற்குத் தடங்கலாக இருக்கக் கூடியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தயவு தாட்சண்யமில்லாமல் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதிகாரிகளாக இருந்தாலும் சரி நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே போல் ஜாதி மனப்பான்மையை ஏற்படுத்தக் கூடிய அதிகாரிகள் இருந்தால் அவர்கள் மீதும் சரியான நடவடிக்கைகள் எடுக்கக் கூடிய முறையில் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அரசியல் கட்சிகளைப் பொறுத்த மட்டில் இந்த மாதிரி ஜாதி எண்ணங்கள், ஜாதி ஸ்தாபனங்கள் ஊக்குவிக்கக் கூடிய நடவடிக்கைகளில் இறங்குவது என்பது சரியல்லவென்ற எண்ணத்தை ஏற்படுத்தக் கூடிய முறையில் நடவடிக்கைகள் இருக்கவேண்டும்.

(முற்பகல் 10.50)

இருந்தாலும் கூட, முக்கியமாக இன்றைக்கு அரிசனங்களிடையே ஏற்பட்டிருக்கின்ற ஒரு உணர்வுக்குக் காரணம், ஒரு பாதுகாப்பற்ற நிலைமைதான். அந்த உணர்வுகளை, எண்ணங்களை போக்குவதற்கு, அதிகார பூர்வமாக என்னென்ன செய்யலாம், எப்படியெப்படிச் செய்யலாம் என்பதைப் பற்றி விசாரித்து, நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அவையை ஒத்தி வைத்து, அவைகளைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து, விவாதிப்பதற்கு வேண்டிய ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மீனாட்சிபுரம் ஆகிய இடங்களில் ஏற்பட்டிருக்கக் கூடிய நிலைமைகள் குறித்து, இந்தச் சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் என்ன என்பதைத் தெரிவிப்பதற்காக நான் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





நான் முதலிலே தமிழக அரசைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், இந்த மீனாட்சிபுரத்திலே ஒரு குறிப்பிட்ட ஒரு கிரிமினல் வழக்கு தொடர்பாக அங்கேயிருக்கக் கூடிய போலீஸ் அதிகாரிகள் அத்துமீறி அங்கேயிருக்கக் கூடிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இம்சையை விளைவித்தார்கள் என்ற புகார் இருக்கிறது. உடனடியாக இதற்கு ஆதாரமாக இருந்தது, அந்தக் கொடுமை என்று பரவலாக அங்கே புகார்கள் வந்திருக்கின்றன. ஆகவே, அதைப் பற்றிய உண்மை நிலைமை என்ன என்பதை அரசாங்கம் தன் பதிலிலே தெரிவிக்க வேண்டும். ஒரு கிரிமினல் வழக்கு பொதுவாக ஏற்பட்டால், போலீஸ் இலாகாவில் கடைப் பிடிக்க வேண்டிய விதிமுறைகளைப் பற்றி பேசி வருகிறோம். யார் மீது சந்தேகம் இருக்கிறதோ, அந்த நபர்களைப் பற்றி மட்டும் விசாரித்து, சட்டபூர்வமாக அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையிலே அதை விசாரித்து, அதிலே ஆதாரம் இருக்குமானால் அவர்கள் மீது வழக்குப் போட வேண்டும். ஆனால், இன்றைக்கு இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையிலே அப்படிச் செய்யாமல், பொதுவாகப் பல பேர்களை போலீஸ் லாக்-அப்புக்குள் கொண்டு வந்து, அவர்களை விசாரணையின் போது கொடுமைப் படுத்தியதால், அந்த மக்கள் மத்தியிலே அப்பேர்ப்பட்ட ஒரு கோப உணர்வு ஏற்பட்டதா என்பதைப் பரிசீலித்து அரசாங்கம் தன் பதிலிலே அதைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிலே ஆதாரம் இருந்தால், இதிலே சம்பந்தப்பட்டிருக்கும் போலீஸ் அதிகாரிகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட இடங்களில் போலீஸ் அதிகாரிகளையும், வேறு போலீஸ் இலாகாவிலே இருக்கக் கூடிய முக்கிய உத்தியோகஸ்தர்களையும் நாம் இன்றைக்கு பல இடங்களில் வேலையில் அமர்த்தும் போது, இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையை நாம் கணக்கில் எடுத்துக் கொண்டு, இன்றைக்கு நம் போலீஸ் இலாகாவில் இருக்கக் கூடிய தாழ்த்தப்பட்ட மக்களையும், மலை வாழ் மக்களையும் அதிகாரிகளாக பொருத்தமான வகையில், இந்தப் பிரதேசங்களில் அமர்த்துவதன் மூலமாகத் தான் இதற்கு ஒரு சரியான ஏற்பாட்டை நாம் செய்ய முடியும். இதிலே அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இதே போல், ரெவின்யூ நிர்வாகம், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கீழ் ரெவின்யூ நிர்வாகம் இருக்கிறது என்று கருதுகிறோம். அங்கே நடக்கக் கூடிய சம்பவங்கள் பல அரசாங்கத்திற்குத் தெரியாமல் போகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவரையோ அல்லது ரெவின்யூ டிவிஷனல் ஆபீ

சரையோ கலந்தால் பெரும்பாலான போலீஸ் கொடுமைகளை ஒழிக்கலாம். அதற்குப் பதில் போலீஸ் இலாகாவினர் தாங்கள் ஒரு சுயேச்சையான இலாகா என்று கருதிக் கொண்டு, அவர்கள் இத்தகைய நடவடிக்கைகள் எடுப்பதன் காரணமாக, மாவட்ட நிர்வாகத்திற்கு இவைகள் தெரியாமல் போவதால், இத்தகைய இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, மாவட்ட ஆட்சியாளருக்கும், அவருடைய உதவியாளர்களுக்கும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டால், அவர்கள் ஆலோசனையின் பேரில் போலீஸ் இலாகாவினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நியதியை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் ஒரு பாரபட்சமற்ற விசாரணை நடப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றொன்று, போலீஸ் அதிகாரிகளானாலும், அரசாங்க அதிகாரிகளானாலும், அவர்கள் அனைவரும் ஜாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டு பொது சேவை என்ற மனப்பான்மையில் பணி புரிய வேண்டும். அவர்களுக்கு மீண்டும் ஒரு மறு பயிற்சி கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும், இன்றைக்கு அது மிக அவசியம். குறிப்பாக, ரெவின்யூ, போலீஸ் அதிகாரிகளைப் பொறுத்த வரையில், சமீபத்தில் அரசாங்கம் அவர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியதாகப் பார்த்தேன். அதாவது தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலே ஒவ்வொரு அதிகாரியும் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள், அவர்கள் சேவை எப்படியிருக்கிறது என்பது பற்றி அறிக்கையில் குறிப்பிட வேண்டுமென்றிருக்கிறது. இந்தக் கண்ணோட்டத்தில் இல்லாமல், தாழ்த்தப்பட்டவர்களுக்கு, ஒதுக்கப்பட்டவர்களுக்கு தனி கவனம் அவசியமில்லை என்ற உணர்வு அரசாங்க அதிகாரிக்கு ஏற்பட்டால், எப்படி நிலைமை அங்கிருக்கும்? ஆகவே, அரசாங்கம் இதைப் பரிசீலித்து, அதிகாரிகள் அனைவருக்கும் இது சம்பந்தமாக சரியான பொதுவான வழிமுறைகளை ஏற்படுத்த வேண்டும். இதை அவர்கள் மீறினால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பிரதானமாக குறிப்பிட விரும்புவது, குடி நீர் பிரச்சினை. கிராமங்களிலே இருக்கக் கூடிய குழாய்களில் பொதுவாக தண்ணீர் எடுப்பதைத் தடுப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை. ஆகவே, அரசாங்கம் தனக்கிருக்கும் சகல சக்திகளையும் கொண்டு இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

டீக்கடைகளில் எல்லோரும் சமமாக டீ குடிப்பது, பொதுச் சுடுகாடுகளை ஏற்படுத்துவது ஆகியவற்றில் பெருமளவு நடவடிக்கை எடுப்பது பிரச்சினையைத் தீர்க்க உதவி செய்யும். இங்கிருக்கக் கூடிய அரசியல் கட்சிகள் அனைத்தும் இந்த நாட்டில் ஜாதி மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்பதிலே





அக்கறை காட்டக் கூடிய கட்சிகளாகத்தான் இருந்து கொண்டிருக்கின்றன. கிராமப் புறங்களில் பொதுச் சுடுகாடுகளை ஏற்படுத்த வேண்டுமென்று ஒவ்வொரு பஞ்சாயத்தையும், பஞ்சாயத்து யூனியனையும் வற்புறுத்த வேண்டும். அது சமுதாய ஏற்றத் தாழ்வுகளைத் தீர்க்க உதவிகரமாக இருக்கும்.

தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இருக்கிறது. அதை நிறைவேற்ற போலீஸ் இலாகாவில் தனியாக பிரிவு போடப்பட்டிருக்கிறது. வெறும் போலீஸ் பிரிவு மட்டும் பிரயோசனம் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்தப் பொறுப்பைக் கொடுக்க வேண்டும். அவர்களுடைய நிர்வாகிகளுக்குப் பொறுப்பைக் கொடுக்க வேண்டும். மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலில் இப்படிப்பட்ட சச்சரவுகளைப் பற்றி விவாதித்து, மக்கள் பிரதிநிதிகளைக் கலந்து பேசி, அரசியல் கட்சிப் பிரதிநிதிகளைக் கலந்து பேசி நடவடிக்கை எடுத்தால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

இந்திய உள் துறை அமைச்சர் திரு. மக்வானா குறிப்பிட்ட அறிக்கையை நாங்கள் பெரிதாகக் கருதவில்லை. அது அரசியல் நோக்கம் உடையதாக இருக்கிறது. அந்த அடிப்படையில் நாங்கள் அரசின் மீது குற்றம் சுமத்தவில்லை. நான் கூற விரும்புவது மாநில அரசாங்கப் பொறுப்பில் இருக்கக் கூடிய அதிகாரிகள் எப்படி நடந்திருக்கிறார்கள் என்று பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்திய அரசியல் சட்டத்திலே அவரவர்கள் விரும்பக் கூடிய மதத்தைப் பின்பற்றவோ, பின்பற்றாமல் இருக்கவோ உரிமை இருக்கிறது. நம்முடைய நாடு மதச் சார்பற்ற நாடு என்று கூறுகிறோம். எந்த மதத்தைப்பற்றியும் பிரச்சாரம் செய்யஉரிமை இருக்கிறது. நாத்திகத்தைப் பிரசாரம் செய்யவும் உரிமை இருக்கிறது. எங்களுடைய கட்சியைப் பொறுத்த வரை நாங்கள் நாத்திகத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள். முஸ்லீமாக மதம் மாறுவதால் இந்து மதத்தைக் காப்பற்ற வேண்டுமென்ற பிரச்சினை எழுகிறது என்று நாங்கள் கருதவில்லை. ஆனால் இதிலே அரசியல் இருக்குமானால், வெளிநாட்டுப் பணம் வந்திருக்கிறது என்பது மாநில அரசாங்கத்திற்குத் தெரியுமானால், ஏகாதிபத்திய சக்திகள் தலையிட்டு நீ இந்த மதத்தைப் பின்பற்றினால் நீ இந்தியனாக இருக்க முடியாது என்றெல்லாம் சொல்லப்படுகிற பிரச்சாரம் இருக்குமானால் இந்தியாவின் ஒற்றுமையைச் சீர் குலைக்கக் கூடிய முறையில் சர்வதேச ரீதியில் முயற்சிகள் நடைபெறுமானால் அது தடுத்து நிறுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். குறிப்பாக மலை வாசி மக்கள் மத்தியிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலும் ஒரு பிரச்சாரம் நாட்டில் நடைபெற்று வருகிறது. நாகப்பட்டினத்தில் கூட கடற்கரை கிராமங்களில் சில தினங்களுக்கு முன்னால் சில வசதிகள் அவர்களுக்குச் செய்து கொடுக்கப்படும், மதம் மாறுந்

கள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன என்ற தகவல்கள் வந்திருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசாங்கம் அதை ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு மதத்தைப் பின் பற்றுவதோ அல்லது பின் பற்றாமல் இருப்பதோ அவரவர் விருப்பம். ஆனால் திட்டவட்டமாக இந்தியாவின் அரசியல் அமைப்பை மாற்றவோ அல்லது பிற்போக்கான நோக்கங்களுக்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதோ மதத்தின் உரிமை என்று கூற முடியாது. இந்தியாவில் இந்து ராஜ்யம் என்ற கொள்கையையோ முஸ்லீம் ராஜ்யம் என்ற கொள்கையையோ நாங்கள் நிராகரிக்கிறோம். இந்தியா ஒரு மதச் சார்பற்ற நாடு, சகல மதங்களையும் பின்பற்றக் கூடியவர்களுக்கு சமமான உரிமை உண்டு.

தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினைகள் தீர வேண்டுமென்றால் அரசாங்கம் அவர்களுடைய வறுமையைப் போக்க தீவிரமான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். எந்த அளவுக்கு விவசாய நிலச் சீர்திருத்தச் சட்டத்தைத் தீவிரமாக நிறைவேற்றுகிறார்களோ அந்த அளவுக்கு பிரயோசனம் ஏற்படும். தாழ்த்தப்பட்ட மக்கள் பயிரிடும் குத்தகைதாரர்களாகவும் இதர விவசாயத் தொழிலாளிகளாகவும் இருந்து வருகிறார்கள். அது ஒரு பொருளாதாரப் பிரச்சினை; வர்க்கப் பிரச்சினை. சாதி இந்துக்களாக இருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்தாலும் கூலிகளாக லட்சோப லட்சம் மக்கள் இருக்கிறார்கள். ஆகவே, பொருளாதார அடிப்படையில்தான் சமுதாய உரிமைகள் நிறைவேற்றப்பட வேண்டும்; அரசியல் உரிமைகள் நிறைவேற்றப்பட வேண்டும். நிலச் சீர்திருத்தத்தின் மூலம் பினாமி நிலங்களைக் கைப்பற்றி நிலம் இல்லாத விவசாயக் கூலிகளுக்குக் கொடுத்து வறுமையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே போன்று குறைந்த பட்ச கூலிச் சட்டம் மீனாட்சிபுரத்திலோ, தென்காசியிலோ திருநெல்வேலி மாவட்டத்தில் அமலில் இருக்கிறதா என்றால் இல்லை. தமிழகத்தில் பெரும்பகுதியான பகுதிகளில் குறைந்த பட்ச கூலிக்கு உத்தரவாதம் இல்லை. ஆகவே, பிரதானமாக கூலிச் சட்டத்தை அமல்படுத்தவும், நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வரவும் உணவுக்கு வேலைத் திட்டம் என்பதைக் கொண்டு வரவும் தமிழக அரசாங்கம் செய்ய முன்வருமானால் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் பாதுகாக்க முடியும்.

[முற்பகல் 11–00]

இன்றைக்கு அதேபோல் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்தைப் பொறுத்த வரைக்கும் சமபந்தி போஜனம் என்பதை எல்லாம் நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால்





அதை கோயில்களிலே நடத்துவது எங்களுக்குச் சரியாகப் படவில்லை. ஏனென்றால் இந்துக்களைக் காப்பாற்றுவதற்கோ, இந்து மதக் கோயில்களைக் காப்பாற்றுவதற்கோ சமபந்தி போஜனம் இல்லை. இன்றைக்கு இந்த நாட்டிலே குடியரசு இயக்கம், ஈ. வெ. ரா. அவர்கள், கம்யூனிஸ்ட் இயக்கம், சோஷலிஸ இயக்கம் இவைகள் எல்லாம் ஏற்கனவே எடுத்துரைத்து இருக்கின்றன. ஆகவே சமபந்தி போஜனம் வெளியிலே நடைபெற வேண்டும். இது மட்டும் போதாது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினாலே கொடுக்கப்பட வேண்டிய இடங்கள் 18 சதவீத இடங்களை எல்லாத் துறைகளிலும், உத்தியோகங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் கண்டிப்பாகக் கொடுக்க ஏற்பாடு செய்தால் தான் நிச்சயமாக அவர்களுக்கு திருப்தி ஏற்பட முடியும். அதிலே உள்ள குறைபாடுகளை நீக்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இன்றைக்கு மதமாற்றத்தைத் தடுப்பதற்காக சட்டம் கொண்டுவரப்படும் என்று சொல்லப்படுகிறது. சட்டத்தின் மூலமாக அந்தக் காரியத்தைச் செய்ய முடியாது. மதமாற்றத்தைத் தடுப்பதற்கு சட்டத்தின் மூலம் முடியும் என்பதற்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே இடம் இல்லையென்று நான் கருதுகிறேன். அது அல்ல பிரச்சினை. பிரச்சினை என்பது பொருளாதார சமூகப் பிரச்சினை என்ற அடிப்படையிலே இருக்கிறது என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே பார்க்கிறபோது மதம் மாறியவர்களை மாற்றுவதற்கும் மீண்டும் மதம் மாறாமல் இருக்கச் செய்வதற்கும் பல மதத்தைச் சேர்ந்தவர்கள் மீனாட்சிபுரத்திலே முகாம் அடித்திருக்கிறார்கள் என்று பத்திரிகையிலே பார்த்தேன். தினமணிப் பத்திரிகையிலே 3 வது பக்கத்திலே அந்தச் செய்தி பெரிதாகப் போடப்பட்டிருக்கிறது. சில மதங்களைச் சேர்ந்தவர்கள் பெருமளவிலே கூடியிருந்து அதைத் தடுப்பதற்கோ மறுபடியும் அவர்களைக் கொண்டு வருவதற்கோ முயற்சித்தால் அது சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை ஏற்படுத்தும். ஆகவே அதிலே அரசாங்கம் உன்னிப்பாக கவனம் செலுத்தி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தின் மூலமாகச் செய்யப்பட வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும். அவர்களுக்கு காலனிகளைப் பொதுவான இடத்திலே ஏற்படுத்திக் கொடுக்க ஏற்பாடு செய்தால் பிரச்சினையின் அழுத்தத்தை உண்டாக்க முடியும். அவர்களைத் தனியாகக் கொண்டுபோய் வைத்துவிட்டால் அவர்களை தனியாக ஒதுக்கிவைப்பதன் மூலம் பிரச்சினை ஏற்படுகிறது. நகரங்களிலே அப்படிப்பட்ட பிரச்சினை இல்லை, தொழிலாளர் வர்க்கம் இருக்கிறது. தொழிற்சாலைகளின் வளர்ச்சி ஏற்பட்டி

ருப்பதால் அந்தப் பிரச்சினை இங்கே குறைந்து இருக்கிறது. ஆனால் கிராமப்புறங்களிலே அந்தப் பிரச்சினை இருக்கிறது. இதைப்பற்றி எல்லாம் அரசாங்கம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

தமிழ்நாட்டிலேதான் இந்தப் பிரச்சினை என்று சொல்கிறார்கள். அதுவல்ல. தமிழ்நாடு அரசாங்கம் செய்யத் தவறிய காரணத்தினால் இது ஏற்பட்டது என்று சொல்வதை நான் மறுக்கிறேன். கான்பூரிலே இது ஏற்பட்டு இருக்கிறது. இந்தியாவினுடைய வடகிழக்கு மாநிலங்களிலே கிறித்தவ மதத்தின் பெயரால் பிரச்சாரம் நடைபெறுகிறது. கிறித்தவன் உண்மையான கிறித்தவனாக இருக்க வேண்டுமென்றால் இந்தியனாக இருக்க முடியாது என்று பிரச்சாரம் செய்யப்படுகிறது. ஆகவே இது நாடு முழுவதும் நடைபெறக் கூடிய பிரச்சினை.

நாட்டின் சுதந்திரத்தையோ ஒற்றுமையையோ சீர்குலைப்பதற்கு நாம் அனுமதிக்க முடியாது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்சினைகளை சமாளித்து உழைப்பாளி மக்கள் ஒன்றுபட்டு ஜாதிமத வித்தியாசம் இல்லாமல் ஒரு ஜனநாயக இயக்கத்தை வளர்க்க வேண்டுமென்று ஒரு சூழ்நிலையிலே இன்றைக்கு மதப்பிரச்சினையைக் கொண்டுவருவதோ அல்லது சாதிப் பிரச்சினையைக் கொண்டு வருவதோ நிச்சயமாக பாதகத்தை விளைவிக்கும்.

அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரையிலே தமிழகத்திலே ஒரு சிறந்த பாரம்பரியத்தைக் கொண்டிருக்கிறோம். ஆகவே இதிலே கவனம் செலுத்தி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனால் தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் ஏனைய சில கட்சிகளும் பஞ்சாயத்துத் தேர்தல்களை சிறிது காலதாமதம் ஏற்பட்டாலும்கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்துவிட்டு நடத்த வேண்டுமென்று வலியுறுத்தினோம். அப்படிச் செய்தால் 60 பஞ்சாயத்து யூனியன்களிலே, நூற்றுக்கணக்கான பஞ்சாயத்துக்களிலே அவர்கள் தலைவர்களாக வரமுடியும். அப்படி வருவதன்மூலம் அவர்கள் சமுதாயத்திலே ஏற்ற அந்தஸ்தை பெறமுடியும். ஆகவே சிறிது காலதாமதம் ஏற்பட்டாலும் கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மலைவாசிகளுக்கு இட ஒதுக்கீட்டைச் செய்துவிட்டு பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று சொல்கிறோம்.

தாழ்த்தப்பட்ட, மலைவாசி மக்களுக்கு பஞ்சாயத்துக்களிலே இட ஒதுக்கீடு செய்து, அரசாங்கப் பதவிகளிலே 18 சதவீதம் இட துக்கீடு செய்து, வகுப்பு உணர்ச்சி உள்ளவர்களை அந்த இடங்களிலே போடாமல் அவர்களுக்குத் தேவைப்பட்டால் வேறு உத்தியாகங்களைக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வந்தால்





பிரச்சினையைத் தீர்க்க முடியும். இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். இன்டலிஜன்ஸ் விங், அரசாங்கத்தினுடைய செய்தி சேகரிக்கும் ஸ்தாபனம் அன்றைக்கு என்ன செய்து கொண்டிருந்தது? அந்த நிகழ்ச்சி நடந்தபோதே முன்கூட்டியே அரசாங்கத்திற்குத் தகவல் கொடுக்க முடியவில்லையா? நான் முதலிலே குறிப்பிட்டதைப் போன்று போலீஸ் நடவடிக்கை என்பதை அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்துகொண்டு எடுக்கிறபோது உடனடியாக அரசாங்கத்திற்கு தெரிவித்திருந்தால் எந்த வகையில் செய்யலாம் என்பதை அரசாங்கம் சொல்லியிருக்க முடியும். இது முக்கியமான பிரச்சினை. தமிழக மக்களிடத்திலே பிரச்சினை கிளப்பப்பட்டிருக்கிறது. அரசாங்கம் மற்ற பிரச்சினைகளிலே அரசியல் கட்சிகளைக் கூப்பிடுவதைப் போல் தமிழகத்திலே உள்ள அரசியல் கட்சிகளை மாநில ரீதியிலும், மாவட்ட ரீதியிலும் கூப்பிட்டு நடைமுறையிலே அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உள்ள சமூக ஒடுக்குமுறைகளை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைப் பொறுத்துத்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று கூறி இதுபோன்ற முக்கியமான விஷயம் குறித்து விவாதிக்க வேண்டியிருப்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவையினுடைய தலைவர் அவர்களே, பாரதம் முழுவதும், ஏன், இன்றைக்கு உலகத்திலிருக்கின்ற சிலரின் கவனத்தைக் கவரும் நிகழ்ச்சி தமிழகத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தேசிய ஒருமைப்பாட்டுக்கும், நாட்டின் ஸ்திரத் தன்மைக்கும் சவாலாக அமையும் நிகழ்ச்சி தமிழகத்திலே சிலயிடங்களிலே, அதிலும் குறிப்பாகத் திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, வடார்க்காடு மாவட்டங்களிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வேறு மாநிலங்களைவிடத் தமிழகத்திலேதான் இதுமாதிரியான மத மாற்றங்கள் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பது நமக்குக் கவலையை அளிக்கிறது.

நம் நாட்டைச் சுற்றி பாகிஸ்தான், பங்களா தேசம், அரபு நாடுகள் ஆகியவை இருக்கின்ற இந்த வேளையிலே மீனாட்சிபுரம் போன்ற நிகழ்ச்சிகள் நமக்கு எச்சரிக்கையாக, அபாய அறிவிப்பாக, ஏன், சிவப்பு விளக்காக இன்றைய தினம் ஆகியிருக்கின்றன.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் படிப்பதற்கும், தங்கும் விடுதிகளிலே இருப்பதற்கும், வேலை வாய்ப்புக்கும், வேலை உயர்வுகளுக்கும் பல்வேறு சலுகைகள் அரசால் அளிக்கப்பட்டாலும்கூட

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1981 ஆகஸ்ட் 24

அத்தனையையும் துறந்து இன்றைக்கு மதம் மாறுகிறார்கள் அல்லது மதம் மாற்றப்படுகிறார்கள் என்பது நம்முடைய கவனத்தைக் கவரக்கூடிய பிரச்சினையாக இருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தீண்டாமை ஒழிப்பும், ஆலயப் பிரவேசமும் சட்ட மூலமாக ஆக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுதும்கூடா தீண்டாமை ஒழிப்புக் கண்காணிப்பாளர் பதவிக்கு டி.ஐ.ஜி. அதிகாரத்தில் உள்ள ஒருவர் பொறுப்பேற்றிருக்கிறார். அவர், மதமாற்றம் சம்பந்தமாக அரசுக்கு என்ன அறிக்கை கொடுத்திருக்கிறார். அது உரிய காலத்தில் கொடுக்கப்பட்டு அதன் பேரில் அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய இந்த மன்றம் நிச்சயமாக ஆவலாக இருக்கும்.

முதலமைச்சரவர்கள் சில நாட்களுக்கு முன்பாகப் பேசியதாகச் செய்தித் தாள்களில் பார்த்தேன். தமிழ்நாட்டில் மதமாற்றம் நடைபெறுவதற்கு வெளிநாட்டுப் பணம் உதவி செய்கிறது என்று பேசியதாகப் பார்த்தேன். சகல விவரங்களையும். அறியக்கூடிய நிலையிலே அவர்கள் இருப்பதால், இது சம்பந்தமாக முழு விவரங்களையும் இந்த மன்றத்தின் மூலம் தமிழகத்திற்கு அவர்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்நியச் செலாவணி விதிமுறைகளை மீறியிருந்தால் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு மைய அரசுக்கு அவர்கள் அறிவித்திருக்கவேண்டும். அவ்வாறு அவர்கள் அறிவித்திருக்கிறார்களா என்பதை அறிய இந்தச் சபை விரும்புகிறது.

இந்த மன்றத்தில் இதற்கு முன்பும் சொன்னோம். இந்த ஆண்டும் சொன்னோம், கடந்த ஆண்டும் சொன்னோம். இந்த மாமன்றத்தில் இருக்கின்ற பல்வேறு குழுக்களைப்போன்று தாழ்த் தப்பட்ட மக்களுக்காகவும் ஒரு குழு அமைக்கப்பட வேண்டு மென்று; லைபரரி கமிட்டி, பெட்டிஷன் கமிட்டி என்று இருப்ப தைப்போல தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் ஒரு குழு அமைக்கப் பட வேண்டுமென்று இரண்டாண்டுகளாக வலியுறுத்தி வருகி றோம். லோக் சபாவிலேயும் அம்மாதிரி குழு இருக்கிறது; மற்றும் சில மாநிலங்களிலேயும் அம்மாதிரி குழுக்கள் இருக்கின்றன. அம் மாதிரி ஒரு குழு சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு அமைக் கப்பட்டிருந்தால் இதுபோன்ற பிரச்னைகளைப்பற்றி பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பதற்குத் துணையாக இருந்திருக்கும்.

தமிழ்நாட்டிலே ஏற்படும் இந்த நிகழ்ச்சிகள்பற்றி மத்திய அரசு அதிகாரியை அனுப்பி இது சம்பந்தமாக விவரங்களைச் சேகரித்திருக்கிறார்கள். இது போன்று மாநில அரசும் ஏற்பாடு செய்திருக்கிறார்களா ? அப்படியானால் அவ்வாறு கிடைத்த அறிக்கையின்மீது என்ன நடவடிக்கையை அரசு எடுத்திருக் கின்றது என்பதை இந்த மாமன்றம் அறிய விரும்புகிறது.



1931 ஆகஸ்ட் 24] [திரு. என். எஸ். வி. சித்தன்]

நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புவது, இந்தியத் துணைக் கண்டத்தின் ஈடு இணையற்ற தலைவியாக விளங்கு கின்ற இந்த நாட்டின் மாண்புமிகு பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் நாட்டிலுள்ள நலிவுற்ற மக்களுக்கும், தாழ்த்தப் பட்ட மக்களுக்கும் அதிகமான நன்மைகளைச் செய்து கொண்டி ருக்கிறார்கள். குறிப்பாக இருபது அம்சத் திட்டமே இந்த நாட்டிலுள்ள அடித்தள மக்களின் நன்மைக்காக அர்ப்பணிக்கப் பட்ட திட்டமாகும். இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் முறையாகச் செயல்படுத்தப்பட்டிருந்தால் இது போன்ற நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்காது என்பதை அழுத்தமாகக் கூறவிரும்புகின்றேன்.

பல்வேறு நேரங்களில் இம்மாதிரியாகத் தாழ்த்தப்பட்ட மக்க ளுக்குக் கொடுமைகள் இழைக்கப்பட்டிருந்தாலும்கூட, தாழ்த் தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் நேரடி யாக மோதல்கள் ஏற்பட்டாலும்கூட, கிழக்கு இராமநாதபுரம், முதுகளத்தூர் போன்ற சம்பவங்கள் இதற்கு முன்பு ஏற்பட்டி ருந்தாலும்கூட, இப்படிப்பட்ட நேரங்களிலேயெல்லாம் கூட இது போன்று அதிக அளவில் மத மாற்றங்கள் தமிழ்நாட்டிலே நடக்கவில்லை.

இந்த ஆட்சியிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போதுமான பாதுகாப்பு இல்லை ; சட்டம் ஒழுங்கு சரியாகப் பராமரிக்கப்பட வில்லை என்ற காரணத்தினால்தான் பாதுகாப்பற்ற தன்மையில் விரக்தியான நிலையில் இன்றைக்கு அதிக அளவில் மத மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நலிவுற்ற மக்களுக்கு அரசு பாதுகாப்பு அளிக்கத் தவறியதன் காரணமாக மத மாற்றங்கள் ஏற்பட்டன என்பதற்குப் போதிய சான்றுகள் இருந்து கொண்டிருக்கின்றன.

[முற்பகல் 11-10]

நம்முடைய அரசு அண்மையிலே நடைபெற்ற சுதந்திர தின விழாவின்போது, மத மாற்றத்திற்கு ஒரு மருந்தாக கோவில் களின் நிதியிலிருந்து கோவில்களில் சமபந்தி போஜனம் என்று ஏற்பாடு செய்தார்கள். நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புவதெல்லாம், கோயிலுக்கு அவர்களை அழைத்துச் சரி சமமாக உட்காரவைத்து, சமபந்தி போஜனம் கொடுப்பதனா லேயே இந்த மாற்றம் நிறுத்தப்படப் போவதில்லை. உண்மை யிலே, அரசாங்கம் இதிலே அக்கறை காட்ட வேண்டுமேயானால் அரிசன மக்கள் வாழ்கின்ற இடங்களிலே, அரிசன மக்களாலே சமைக்கப்பட்டு, அரிசன மக்களோடு இருந்து, உண்ணத் தொடங்குவார்களேயானால், ஓரளவு அது பரிகாரமாக அமை யும், அவர்களுக்கு அது மருந்தாக அமையும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே ஏற்படுகின்ற இந்த மத மாற்றங் கள் பற்றி, எந்தவிதமான சர்ச்சைக்கும் அப்பாற்பட்டவராக

விளங்கிக் கொண்டிருக்கின்ற காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரிய சுவாமி அவர்களை நான் குருவாயூரிலே சந்தித்துப் பேசினேன். அவர்கள் தமிழகத்திலே நடைபெற்ற இந்த நிகழ்ச்சி பற்றி மெத்த கவலை கொண்டிருக்கிறார்கள். எனவே, அம்மாதிரி யான தலைவர்களிடம் போய் நல்ல ஆலோசனை. தக்க நேரத்திலே பெற்று, இந்த நிகழ்வுகளுக்கு தீர்வு காண வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனங்களுக்காக, தனியாக காலனி கட்டிக் கொடுக்கின்ற அந்த ஏற்பாடுகள் இனி நிறுத்தப்பட்டு, அரசு உண்மையிலே, அரிசன மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க விரும்பினால் ஏனைய மக்கள் வாழ்கின்ற பகுதியிலே அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற சூழ்நிலை உருவாகுமானால், மற்ற மக்களோடு சேர்ந்து வாழ்கின்ற நிலையிலே அவர்களும் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தத் துணையாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய பொதுச் செயலாள
ராக இருந்து கொண்டிருக்கின்ற எங்களுடைய அருமைத் தலைவர்
திரு. கருப்பையா மூப்பனார் அவர்கள், தஞ்சைத் தரணியிலே
தான் பிறந்த, சுந்தரப்பெருமாள் கோவிலிலே 4 அம்சத் திட்டத்
தைத் அமுல்படுத்தி அதன் மூலமாக, அரிசன மக்களுக்கும் மற்ற
வர்களுக்கும் பொது மயானம், இன்னும் அரிசன மக்களே
நடத்துகின்ற உணவு விடுதி, அரிசன மக்களுக்கும் மற்றவர்
களுக்கும் ஒன்றாகக் குடிநீர் எடுக்க வசதி போன்ற திட்டங்களை
அவர்கள் துவங்கி வைத்திருக்கிறார்கள். அதற்குப் பொது மக்கள்
மத்தியிலே, அந்த வட்ட மக்களிடத்திலே நல்ல வரவேற்பும்
இருந்ததென்பதை, பத்திரிகை வாயிலாக நீங்கள் அறிந்திருப்
பீர்கள். இதுபோன்ற நிகழ்ச்சிகளை அரசும் தொடர்ந்து நடத்த
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனவே, இந்த மீனாட்சி
புரம்போன்ற சம்பவங்களிலே அரசு அவசர உணர்வோடு, அவசிய
உணர்வோடு செயல்பட வேண்டிய நிலை வந்திருக்கின்றது.
இது சம்பந்தமாக ஆராய்ந்து தீர்வு காண சட்டசபை உறுப்பி
னர்கள் அடங்கிய ஒரு குழுவை அரசு நியமிக்க வேண்டும். அது
ஒரு நிரந்தரக் குழுவாக இருக்க வேண்டும். இதற்கு முன்னாலே,
அரிசன வெல்பேர் கமிட்டி, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே,
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அமைக்கப்பட்டு,
இதுபோன்ற பிரச்னைகளையெல்லாம் பரிசீலித்தார்கள். நான்
கேள்விப்படுகிறேன், இந்த அரசு பொறுப்புக்கு வந்த பின்னாலே
அரிசன வெல்பேர் கமிட்டி, இன்னும் சரியாக, முறையாக
ஆரம்பிக்கப்படவில்லை யென்று. இவ்வளவு முக்கியமான
பிரச்னை இந்த மன்றத்திலே விவாதிக்கப்படுகிற நேரத்திலே,
நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வந்திருக்க வேண்டும். எத்
தனை அலுவல்கள் இருந்தாலும்கூட, அவர்கள் வந்திருக்க



வேண்டும், என்று என்னுடைய கட்சியின் உறுப்பினர் இளைய பெருமாள் அவர்கள் சொன்ன கருத்தை நானும் ஆதரித்து, தமிழகத்தினுடைய எதிர்காலத்தைப் பொறுத்த பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினாலே, இது சம்பந்தமாக பல நிகழ்ச்சி களை நாம் விளக்குவதற்காக, பேரவையினுடைய இதர அலுவல் களை ஒத்தி வைத்து, இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் மீனாட்சிபுரத்தில் அரிசன மக்கள் மதம் மாறியது குறித்து பல கிராம மக்கள் பீதி அடைந்திருக்கிறார்கள். மதமாறுவது அவரவர்களின் இஷ்டத் தைப் பொறுத்தது. ஆனால் வேண்டும் என்று மதம் மாறுவதற் குத் தூண்டுபவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மனமாற்றத்தால் மத மாற்றம் ஏற்படுவதைத் தடுக்க முடியாது. ஆத்மாவுக்காக மதம் மாறுவதைத் தடுக்க முடியாது. ஆனால் ஆஸ்திக்காகவோ, அச்சுறுத்தல் காரணமாகவோ மதம் மாறுதல் நிகழுமானால் அதனை வரவேற்க முடியாது. எவராயினும் நிபந்தனைக்குட்பட்டு, தகுதி பெற்றால் அர்ச்சகர் ஆகும் நிலை ஏற்பட அனைவரும் பாடுபட வேண்டும். இதுபோன்று தொடர்ந்து நடவடிக்கைகள் இல்லாமல் இருப்பதற்கு அரசு அதி காரிகள் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். பல கிராமங்க ளைச் சேர்ந்த மக்கள் பீதி அடைந்து வருகிறார்கள். அந்தப் பதட்ட நிலை நீடிக்காமல் இருப்பதற்கு இந்த மாமன்றத்தின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஏ. சாகுல்ஹமீது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மீனாட்சிபுரத்தைப் பற்றி உலகம் அனைத்தும் பேசாத நாடுகளே இல்லையென்ற அளவுக்கு, மீட்சிபுரமாக, அங்கங்கே பல சம்பவங்களை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதனுடைய விளைவுகளைப் பற்றி எத்த னையோ அறிக்கைகள் அரசுக்கு வந்திருக்கின்றன. இங்கே, இன்றைக்கு மீனாட்சிபுரத்தைப் பற்றி பேசாத நாடுகளும், எழு தாத ஏடுகளும் இல்லையென்ற அளவுக்கு, நாட்டிலே அநித்தியம் மீனாட்சிபுரம், மீனாட்சிபுரம் என்று மீட்சி பெற்றதைப்பற்றி அத்தனைபத்திரிகைகளும் எழுதியிருக்கின்றன. அத்தனை அரசியல் தலைவர்களும் இன்றைக்கு அதுபற்றிப் பேசுகிறார்கள். மீனாட்சி புரங்கள் உருவாவதற்குத் காரணம் என்ன என்பதை நான் சொல்வதை விட, அங்கு போய்வந்த அத்தனை பேர்களும் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான், இன் றைக்கு இங்கே சில குறிப்புகளை வைத்துக் கொண்டு, அந்தக் குறிப்புகளின் அடிப்படையிலே பேசுவதற்கு சபாநாயகர் அவர்கள் அனுமதிக்க வேண்டும்.

(திரு. ஏ. சாகுல் ஹமீது) [1981 ஆகஸ்ட் 24

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் சமீபத்தில் சில சகோதரர் கள் தாங்களாகவே முடிவெடுத்து, இதுவரை அவர்கள் பின் பற்றி வந்த மதத்திலிருந்து மாறி புதிய மதத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டதைப் பற்றி இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களைத் நான் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

சிலர் உணர்ச்சி வசப்பட்டார்கள். சிலர் நடந்த உண்மை களைச் சொன்னார்கள், சிலர் தாங்கள் கேள்விப்பட்ட செய்தி களைச் கூறினார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்றமாகிய இந்தப் பெருமைக்குரிய சபையின் உறுப்பினர்கள் மாத்திரமல்ல, வெளியே உள்ள கோடானகோடி பொதுமக்களும் நாம் இங்கு விவாதிக்க விரும்பும் விஷயம் பற்றிப் பலவிதமான கருத்துக்களும், உணர்ச்சிகளும் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த சபையில் நடக்கும் இந்த விவாதம் நாடெங்கும் நாம் விரும்பும் அமைதியையும் நல்லுறவையும் கட்டிக்காக்க உதவு வதாக இருக்க வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன்.

நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட, கடந்த காலத்தில் எந்தெந்த ஆண்டில் எத்தனை பேர்கள் எந்தெந்த மதத்தில் சேர்ந்திருக்கிறார்கள் என்ற புள்ளி விவரமெல்லாம் அதிகார பூர்வ மாக தந்திருக்கிறார்கள். அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்தபோது, அன்றைய சட்டமன்றத்தில் இதைப் பற்றி கேள்வி கேட்கப்பட்டபோது, அப்போது அரிசன நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த திருமதி சத்தியவாணிமுத்து அம்மை யார் அவர்கள், இப்படி மதம் மாறியவர்களை இந்த அரசு வரவேற்கிறது என்று குறிப்பிட்டிருந்தார்கள். இவை சட்டமன்ற பதிவேடுகளில் பதியப்பட்டிருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் நடை பெற்ற மதமாற்றம் பற்றி திராவிட இனத்தின் தந்தையும், பகுத்தறிவுப் பகலவனுமாகிய தந்தைப் பெரியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். ''இனி அரிசனங்களை ஒருவன் பறையன், சக்கிலி, சன்டாளன் என்று இழிவாகக் கூறமுடியாது. எந்தத் தெருவிலும் நடக்கலாம் யாருடனும் போட்டி போடலாம். பள்ளிவாயல்களுக்கு தாராளமாகச் செல்லலாம். தோளோடு தோள் நின்றுதொழு லாம். வேதம் படிக்கலாம். ஆகையினால் முகமதிய மதத் தைத் தழுவினால்தான் தீண்டத்தகாதவர்களுக்கு சீக்கிரத்தில் உடனே சமூக அந்தஸ்து அளிக்க முடியும் என்று கருதுகிறேன். இந்த நிலை ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக நான் எவ்வளவோ பாடுபட்டுப் பார்த்தேன், ஆகையினால்



1981 ஆகஸ்ட் 24] (திரு. ஏ. சாகுல் ஹமீது)

தீண்டாமை முதலிய கொடுமைகள் ஒழிய வேண்டும் என்று கருத்து உடையவர்களும் ஒற்றுமையை எதிர்ப்பார்க்கும் மக்களுக்கு சுய மரியாதை உணர்ச்சியை ஊட்ட வேண்டும் என்னும் கருத்து உள்ளவர்களுக்கும் நமது நாட்டில் இப்போது உள்ள முக்கிய வேலை தீண்டப்படாதவர்கள் முகமதியர் ஆவதை ஆட்சேபிக்காதிருப்பதே ஆகும் என்பது எனது தாழ்மையானதும், கண்ணியமானஅபிப்பிராயமும் ஆகும்'' என்று அவர் கூறிய கருத்து விடுதலை நாளேட்டிலே வந்திருக்கிறது.

இதே மாதிரி சம்பவம்தான் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் குறிப்பாக என்னுடைய தொகுதியான கடையநல்லூர் சட்டமன் றத் தொகுதிக்குட்பட்ட மீனாட்சிபுரத்திலும் நடந்திருக்கிறது. இது தமிழக அரசுக்கே நன்றாகத் தெரிந்த விஷயம். ஏனென் றால் இந்த நிகழ்ச்சி நடப்பதற்கு முன்னரும் மாவட்ட அதி காரிகள் இது பற்றி விசாரணை நடத்தி இருக்கிறார்கள். நடநத உடனேயும் மதம் மாறிய மக்களை தனித்தனியாக வும் கூட்டமாகவும் சந்தித்து வாக்குமூலம் பெற்று அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். இதுவன்றி மத்திய அரசு நியமித்து துள்ள பிற்பட்டோர் நலத்துறை உயர் அதிகாரி திரு, ஆறுமுகம் அவர்களும் பல நாள் பலதரப்பட்ட மக்களையும் கண்டு விசாரணை நடத்தி மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார். அதுமட்டுமல்ல. தமிழக அரசு அரிசனநலத் துறை உயர் அதிகாரி திரு. பொன்னுசாமி அவர்களும் விசாரித்து தங்கள் அறிக்கையை இந்த அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் உள்ள பல பத்திரிகை நிருபர்களும் சம்பவம் நடந்த மறுநாளே இதைக் குறித்து சம்பந் தப்பட்ட மக்களை எல்லாம் பேட்டி கண்டு அதிகாரிகளிடத்திலும் விசாரித்து அறிக்கை தந்திருக்கிறார்கள். மீனாட்சிபுரம் அரிசன சகோதரர்கள் ஒரு படுபாதகத்தை இழைத்துவிட்டதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. அவர்கள் பணம் கொடுத்து விலைக்கு வாங்கப் பட்டார்கள் என்று இழித்துரைக்கப்படுகிறது. அவர்கள் எல்லாம் கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், கள்ளநோட்டு அடித்துப் பரப்பு வதில் ஈடுபட்டிருந்தோர், கொலைக்குற்றங்களில் சம்பந்தப்பட் டிருந்தோர் என்றெல்லாம் பாரதூரமான குற்றச் சாட்டுகளை இந்த நாட்டில் மிக மதிப்புக்குரியவர்களும் சங்கைக்குரிய வர்களுமான சன்னிதானங்கள், மதத் தலைவர்கள், மடாதிபதி கள் ஆகியோர் சுமத்த ஆரம்பித்தனர். இதுநாள் வரையில் இப்படிப்பட்ட பேச்சுக்களில் ஈடுபடாத மகாசன்னிதானங்கள் மிக பயங்கரமான குற்றச்சாட்டுகளை சுமத்தியதோடு என்றுமில்லாத நடவடிக்கைகளில் ஈடுபட முற்பட்டதை இந்த நாடு கண்டது. இதற்குரிய பின்னணியைத்தான் மாண்புமிகு உறுப்பினர்களும் இந்த நாடும் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்த நாட்டில் வகுப்பு ஒற்றுமையைக் குலைத்து சமுதாயங்களுக்கு இடையில் வேற்றுமையை வளர்த்து வேறு

பட்ட மதத்தார்களுக்கிடையிலே கலவரங்களை மூட்டி அமைதியைக் கெடுப்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்கக் கூடிய ஒரு கூட்டத்தினர் என்று இன்றைய இந்தியாவின் பிரதமர் பெருமைக்குரிய இந்திரா காந்தி அம்மையார் அவர்களாலேயே இனம் காட்டப்பட்டவர்கள் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினர். இவர்களுடைய தூண்டுதலில், வழிகாட்டுதலில், ஏற்பாட்டில், சதித்திட்டத்தில் சிக்கியவர்கள்தான் ஏற்கெனவே நொந்து போய் இருக்கக்கூடிய அரிசனங்களைப் பற்றிக் களங்கங்களை கற்பிக்கவும், அவதூறு கூறவும், குற்றம் சுமத்தவும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

நாட்டின் தந்தையாகிய மகாத்மா காந்திஜி அவர்களைக் கொலை செய்த கொடியவர்கள் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆசியாவின் ஜோதியாக பாராட்டப்பட்ட பண்டித நேரு அவர்கள் அந்த இயக்கத்தின் பெயரைச் சொன்னாலே வாய் நாறுகிறது என்று சொன்னதையும் நாம் மறந்து விடக்கூடாது. இவர்களால் திசை திருப்பி விடப்பட்ட பெருமைக்குரிய சன்னிதானங்கள் ஆண்டவன் பெயரால் கீதோபதேசங்கள் செய்யும் தங்கள் திருவாயால், இல்லாததையும் பொல்லாததையும் சொல்ல ஆரம்பித்தார்கள். அதைப்பற்றி எல்லாம் கூட நாம் கவலைப்படவில்லை. ஏனென்றால் இந்த நாட்டில் உள்ள இந்து சமுதாய பெருமக்களும் தமிழ் பெருங்குடி மக்களும் உண்மையை உணர்ந்து நடுநிலைப் பேணி நடந்து வருகிறார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். நமக்குள்ள வேதனையெல்லாம், தந்தை பெரியாரின் உணர்விலே தோன்றி, அறிஞர் பெருந்தகை அண்ணாவின் அரவணைப்போடு வளர்ந்து உருவெடுத்திருப்பதாக சொல்லப்படும் இன்றைய தமிழக அரசு, அந்த ஆர்.எஸ்.எஸ். வகுப்புவாத இயக்கத்தின் கையில் சிக்கிவிட்டதே என்ற வேதனைதான் நமக்கு மேலிட்டிருக்கிறது.

[முற்பகல் 11-20]

மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் பேசும்போது திரு. வாஜ்பாய் தான் தமிழில் பேசுகிறாரா என்று சந்தேகம் ஏற்படுகிறது. உங்களோடு உறவு கொண்டிருந்தவன் என்ற முறையில் உங்கள் பாரம்பரியத்தை அறிந்தவன் என்ற முறையில் மிகப் பணிவன்போடு உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து அரசு பொறுப்பேற்றிருக்கும் நீங்கள் நடுநிலை நின்று பேசுங்கள்; மத சார்பற்ற அரசு என்ற நிலையை இந்திய அரசியலமைப்பு இன்னமும் மாற்றிவிடவில்லை. பகுத்தறிவாளர்களாக இருந்த நீங்கள் பக்கா இந்துவாதிகளாக மதம் மாறுவதைப் பற்றி நாங்கள் குறுக்கே நிற்கப் போவதில்லை. ஆனால்





அதற்காக பாவப்பட்ட அரிசன சமுதாயத்தார் மீதும், சிறுபான்மையினராகிய முஸ்லீம்கள், கிருஸ்துவர்கள் மீதும் உங்களுடைய கோபத்தை காட்டி நீதியிலிருந்து வழுவி விடாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அன்னிய நாட்டு அரபு பணம் மத மாற்றத்திற்கு பயன்பட்டிருக்கிறது என்று சொல்கிறீர்களே, உங்கள் நெஞ்சார நீங்கள் அதை கூற முடியுமா ? சட்ட ரீதியாக அதை நிரூபிக்க முடியுமா ? அன்னிய நாட்டு பணம் மத மாற்றத்திற்கு பயன்பட்டது என்று நம்முடைய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய முதல்வர் அவர்கள் பேசும்போது ஒரு கூட்டத்தில் கூறினார்கள். நான் இன்றைக்கு இதை ஒரு சவாலாக ஏற்றுக் கொள்கிறேன். அன்னிய நாட்டு பணம் மீனாட்சிபுரம் போன்ற பகுதியில் மத மாற்றத்திற்கு பயன்பட்டது என்று நிரூபிக்கப்பட்டால் நான் என் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய தயாராக இருக்கிறேன். நிரூபிக்கப்படாவிட்டால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ராஜினாமா செய்வார்களா என்று அவையிலே உங்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத மாற்றப் பிரச்சினையில் சூடு இல்லாமல் பேசினால் பரவாயில்லை. சவால் விடும் நேரம் ஆக்கி விடாதீர்கள்.

திரு. ஏ. சாகுல்ஹமீது : ஒரு முக்கியமான மத்திய அமைச்சர் அவர்கள் அன்னிய நாட்டு பணம் இன்றைக்கு தமிழகத்தில் 3 கோடி ரூபாய் பள்ளிக்கூடத்திற்கு வரப்பட்டது, மத மாற்றத்திற்கு உபயோகிக்கப்பட்டது என்று கூறினார்கள். அதை என்னுடைய கட்சித் தலலைவர் அறிக்கை விட்ட பிறகு, அவரே கைப்பட எழுதியிருக்கிறார்கள், நான் அப்படிப் பேசவில்லை என்றும், பத்திரிகைகைள் தான் திருத்தி வெளியிட்டன என்றும் எழுதியிக்கிறார்கள். அன்னிய பணம் இதிலே ஈடுபடவில்லை என்று நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர்களும், அரிசன சமய தலைவர்களும் மறுத்திருக்கிறார்கள். அன்னிய நாட்டுப் பணம் மதமாற்றத்திற்குப் பயன்பட்டது என்று கூறி, அந்தப் பணத்தைப் பெற்று அரிசன மக்கள் மதம் மாறினார்கள் என்று சொல்லி மேலும் மேலும் அரிசன மக்களைப் புண்படுத்தி, களங்கப்படுத்தி, அவமானப்படுத்துகிறீர் என்பதை நீங்கள் ஏனோ மறந்து விடுகிறீர்கள். மத்திய அமைச்சர் திரு. மக்வானா அவர்கள் அரிசன மக்கள் பணம் பெற்று மதம் மாறினார்கள் என்பது அபத்தமான பேச்சு என்று சொன்னார் (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கெல்லாம் போக வேண்டாம். ஒத்தி வைக்கலாமா, வேண்டாமா என்று மட்டும் சொல்லுங்கள்.

[1981 ஆகஸ்ட் 24

திரு. ஏ. சாகுல் ஹமீது : தலைவர் அவர்களே, அரசு அறிக்கைகள் மீனாட்சிபுரத்தைப் பற்றி, இந்து மத மாற்றத்தைப் பற்றித் தரப்பட்டுள்ள, மீனாட்சிபுரம் என்ற மத்திய பிற்பட்ட இலாகா அதிகாரி அவர்களும், மாநில பிற்பட்டத்துறை அதிகாரி அவர்களும் இன்றைக்கு மத மாற்றத்தைப் பற்றி அரசுக்கு அறிக்கைகள் அனுப்பியிருக்கிறார்கள். அவைகளை இந்த அவையில் வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அன்னிய பணம் பற்றி மறுப்புகள் வந்திருக்கின்றன என்பதை குறிப்பிட விரும்புகிறேன். சமபந்தி போஜனங்களால் உரிமைகள் சமானம் கிடைக்காது என்பதையும் மீனாட்சிபுரத்தில் சமபந்தி போஜனம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. என்பதையும் கூறிக்கொள்கிறேன். அரிசனங்கள் வாழ்கிற பகுதியிலே அவர்கள் காலமெல்லாம் புறக்கணிக்கப்படுகிறார்கள். எத்தனையோ திட்டங்கள் தீட்டுகிறோம். பஞ்சாயத்து ஒன்றியத்திலே ஒரு பகுதி மக்களுக்கு குடி தண்ணீர் கிடைக்கிறது. ஒரு பகுதி மக்களுக்கு மின் விளக்கு கிடைக்கிறது; ஒரு பகுதி மக்களுக்கு பாதை வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால் ஒரு பகுதி மக்களுக்கு சேரியிலே மின் விளக்கு கிடைப்பதில்லை, குடி தண்ணீர் கிடைப்பதில்லை, பாதை வசதிகள் கிடைப்பதில்லை. இந்த மத மாற்றம் என்ன காரணம் என்று எண்ணிப் பார்க்கின்றபோது இன்றைக்கு அரிசன அரசு அதிகாரிகள் மெத்தனமாக இருப்பதன் காரணமாகதான் இன்றைக்கு மத மாற்றங்கள் ஏற்படுகின்றன. பணம் கொடுப்பதின் காரணமாக ஏற்படுகின்றன என்பதை நான் திட்டவட்டமாக மறுக்கிறேன்:

அப்படி யாராவது பணம் கொடுத்து மாற்றினார்கள் என்று நீங்கள் நிரூபித்தால் அதற்கு நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. இன்றைக்கு ஒரு புதிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு மதம் மாறுதல் காரணமாக ஒரு பதட்ட நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. மகா சன்னிதானங்கள் எல்லாம், அவர்கள் மதத்தைப் பரப்புகின்ற சன்னிதானங்கள் எல்லாம், ஆர். எஸ். எஸ். இயக்கம், ஆரிய, சமாஜம், விஷ்வஹிந்து பரிஷத் ஆகியவைகளோடு கூட்டுச் சேர்ந்து கொண்டு தமிழ் நாட்டில் ஒரு சுமூக உறவைக் கெடுக்கும் சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை இன்றைக்கு வளர்ந்து கொண்டு வருகிறது.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு, குறிப்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடமிருந்து போனில் தகவல் வந்துள்ளது. அந்தப் பகுதிக்கு வந்தா . அந்த பகுதியில் இன்றைக்கு அந்தமீனாட்சிபுரத்து மக்கள், இஸ்லாமிய



1981 ஆகஸ்ட் 24] [திரு. ஏ. சாகுல் ஹமீது]

சமுதாய மக்களின் கூரைகளை அடித்து நொறுக்கிக் கொண்டிருக்கிறார்கள். தோப்புகள் சூறையாடப் படுகின்றன; மீனாட்சிபுரத்திற்கு வருகின்ற கார்கள் அடித்து நொறுக்கப்படுகின்றன. ஆர். எஸ். எஸ். இயக்கத்தினரால் இந்த பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. சிறுபான்மை மக்கள், இஸ்லாமிய மக்கள் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக இன்றைக்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் இந்த நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக அங்கே தகுந்த பாதுகாப்பு தரும்படி பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஏதோ மத மாற்றம் என்பது இன்றைக்கு அல்லது நேற்றைக்கு ஏற்பட்ட ஒன்று அல்ல. பல்லாண்டு காலமாக ஏற்பட்டிருக்கிற சம்பவமாகும் இது. அப்படி இருக்க, இன்றைக்கு நாங்கள் ஏதோ தப்பு செய்து விட்டோம், தவறு செய்து விட்டோம் என்று சொல்கிறார்கள் நாங்கள் எந்தத் தவறையும் செய்யவில்லை. அடிபட்ட, மிதிபட்ட அந்த மக்கள் ஓடோடி வருகிறார்கள். நாங்கள் அணைத்துக்கொள்கிறோம். அது அல்லாமல் நாங்கள் வற்புறுத்தி சேர்த்துக் கொள்ளவில்லை. இதிலே மற்றவர்கள் சொல்வது போல பணம் கொடுக்கப்படவில்லை; அன்னியப் பணமும் வரவில்லை; பலவந்தமும் இல்லை. விரும்பி வருகின்றவர்களை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இன்றைக்கு இந்திய அரசியல் சாசனத்திலே யாரும் எந்த மதத்தையும் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் என்ற உரிமை இருப்பதால் அவர்கள் வருகிறார்கள். அவர்கள் இஸ்லாமிய மதத்திற்கு மட்டும் வரவில்லை. கிருஸ்துவ மதத்திற்குப் போகிறார்கள், புத்த மதத்திற்குப் போகிறார்கள்.

ஏதோ அன்னியப் பணம்தான் இதற்குக் காரணம் என்று சொன்னார்கள். நான் இந்த மன்றத்தின் ஒரு உறுப்பினர் என்ற முறையிலே சொல்லுகிறேன். அந்நிய பணமும் இல்லை; வேறு விவகாரங்களும் இல்லை. பாதிக்கப்பட்ட மக்கள் இந்த மதத்தை விரும்பி வருகிறார்கள். இதை வேறுவகையிலே திரித்துக் கூறி இன்றைக்கு அங்கே மத மாச்சரியங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஆகவே, தலைவர் அவர்களையும், அவை முன்னவர் அவர்களையும் அவையிலுள்ள உறுப்பினர்களையும் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் எல்லாம் அந்த அரிசனமக்களுக்கும் இஸ்லாமிய மக்களுக்கும் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று.

குறிப்பாக இன்றைக்கு இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் பெரிய பதட்டநிலை உருவாகியிருக்கிறது. அங்கே பயங்கரமான சூழ்நிலை உருவாகக்கூடிய நிலைமை இருக்கிறது. என்னுடைய தொகுதியில் இஸ்லாமியரின் தோப்புகள் சூறையாடப்பட்டிருக்கின்றன; இஸ்லாமியர்களு

சொத்துக்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன. ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இஸ்லாமிய மக்கள் வாழும் பகுதி களில் வன்முறையைத் தூண்டிவிடுகிறார்கள் வன்முறையில் ஈடுபடுவது ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினரோடு மற்றவர்களும். ஆனால் போலீஸ் அதிகாரிகள் வழக்குப் போடுவது இஸ்லாமிய மக்கள் மீது. இஸ்லாமியர் மீதும் அரிசன மக்கள் மீதும் இன்றைக்கு போலீஸ் அதிகாரிகள் பொய் வழக்குகள் பதிவுசெய்து கொண்டி ருக்கிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டும். சிறுபான்மை மக்களுக்கும் அரிஜன மக்களுக்கும் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இத்தகைய பல்வேறு விஷய களைப் பற்றி விரவாகப் பேசவேண்டியிருப்பதால் சபையில் இன்றைய அலுவல்களை ஒத்திவைத்து, இது பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. பி. முகமது இஸ்மாயில் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் சில பகுதிகளில் அண்மையில் ஏற்பட் டிருக்கும் மத மாற்றம் பெரிய பூதாகார உருவம் எடுத்து, இன்றைக்கு நம்மை எல்லாம் உலுக்கிக்கொண்டிருக்கிறது. இங்கே பேசிய அன்பர்கள் எல்லாம் இந்த மத மாற்றம் என்பது ஏதோ தமிழ்நாட்டின் எல்லைக்குள் இருக்கிற ஒரு பிரச்னைபோல் பேசியிருக்கிறார்கள். நான் தெளிவாகச் சொல்கிறேன். பத்திரிகைகளில் வருகின்ற செய்திகள் உண்மையாக இருந்தால், இன்றையதினம் இந்தியா முழுவதிலும் மத மாற்றம் ஏற்படுகிறது. அரிசன மக்கள் இஸ்லாமிய மதத்திற்கு மட்டும் வந்துவிடவில்லை. புத்த மதத்திற்குப் போகிறார்கள். கிறிஸ்தவ மதத்திற்குப் போகிறார்கள். ஆகவே, இது அகில இந்திய அடிப்படையில் நடைபெறுகின்ற ஒரு காரியம்.

இங்கே சில அன்பர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரைக் குறிப்பிட்டு, குறைசொல்வதற்கு இதிலே எந்தவிதமான நியாயமும் இல்லை என்று நான் முதலிலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல். 11 30)

இந்த அரசாங்கத்தின் தோல்விதான் இதற்குக் காரணம் என்பது உண்மையாக இருந்தால் எந்த அளவுக்கு தாக்குதலுக்கு இந்தச் சர்க்கார் ஆளாக்கப்படுகின்றதோ அந்த அளவுக்கு மத்திய சர்க்காரும் நம்முடைய தாக்குதலுக்கு ஆளாக வேண்டும். மீனாட்சி புரத்திலே நூற்றுக்கணக்கானவர்கள் மதம் மாறினார் கள் என்ற செய்திகள் பத்திரிகைகளிலே வந்துகொண்டிருக்கின்ற போதே ஆயிரக்கணக்கானவர்கள் உத்தரப்பிரதேச மாநிலத்திலே அதாவது 5,000 பேர் மதம் மாறிவிடுவதாக எச்சரிக்கை தந்திருக்கிறார்கள் என்ற செய்தி வந்துகொண்டு இருக்கின்றது.



என்பதையும் கவனிக்கவேண்டும். ஆனால் அதற்காக இந்திரா சர்க்காரையும், அந்த மாநில சர்க்காரையும் அதற்கு பொறுப் பேற்க வேண்டும் என்று குற்றம் சாட்டுவது என்பது நியாயமான உணர்வின்படி உள்ள கருத்தாக இருக்காது.

குற்றச்சாட்டுகள் வருகின்றபோது மத மாற்றத்திற்கு பல விதமான காரணங்களைச் சொன்னார்கள். அதாவது அராபியப் பணம் விளையாடுகின்றது என்பது ஒன்று. போலீசா ரின் அத்துமீறிய நடவடிக்கைகளின் காரணமாகத்தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது என்பது மற்றொன்று. இந்து சகோதரர்கள் மற்றவர்களை ஒடுக்குவதற்கு முற்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்பதையும் ஒன்றாகச் சொன்னார்கள். இப்படிப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றபோது எந்தக் காரணம் உண்மையானது என்பதை நாம் கண்டறிவதற்கு கடமைப்பட்டிருக்கின்றோம். அரிசன வகுப்பைச் சார்ந்த மக்கள் பல காலமாக தாங்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டு தாழ்வு மனப்பான்மையோடு வாழ்ந்து கொண்டிருந்த காலம் இருந்தது.

ஆனால் இன்றையதினம் இந்த நாட்டு மக்கள் பெற்றிருக் கின்ற சுதந்திர உணர்வுகளை அனுபவிக்கத் தலைப்பட்டு இன்றைக்கு இங்கே வாழ்கின்ற அத்தனை குடிமகனும் சரி நிகர் சமானம் என்று சொல்கின்ற அளவுக்கு உணர்வுகள் வளர்ந்து, இப்போது எங்களுக்கும் மற்ற சகோதரர்களைப் போன்று அத்தனை உரிமையும் உண்டு என்று சொல்கின்ற நிலையில் வேறு சில சமுதாயத்தில் இருப்பவர்கள் அந்த உரிமையை மறுக் கின்றதும் இதற்கு ஒரு காரணம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்றையதினம் நிகழ்ந்துவிட்ட நிகழ்ச்சிகள் இந்துச் சகோ தரர் மத்தியில் சில மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. சம சமுதாய அந்தஸ்து அரிசன குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. பல காலமாக தாழ்ந்து செல்ல வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தவர்கள் இன்று தங்களுக்கு கிடைத்திருக்கின்ற வாய்ப்புக்களைப் பயன்படுத்தி முழுமையாக எல்லாத் துறைகளிலும் மேம்பாடு அடைகின்ற போது அதாவது கல்வித்துறை, பொருளாதாரத்துறை போன்ற வற்றில் எல்லாம் மேம்பாடு ஏற்படுகின்றபோது சமுதாய அந்தஸ்து வழங்கப்படவில்லை என்ற காரணத்தால் அந்தக் குறை உந்திய காரணத்தினால் அவர்கள் மதம் மாறி இருக்கலாம்.

எனவே இன்றையதினம் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைக்கு முடிவு காண்பதற்கு நிச்சயமாக மன மாற்றம் ஏற்பட்டுத்தான் ஆகவேண்டும். அரிசன பெருங்குடி மக்களுக்கு சம அந்தஸ்து

வேண்டும் என்பதற்காக பலவிதமான திட்டங்கள் அமலாக்கப்
பட்டு வருகின்றன. அரிசன மக்களுக்கு குடியிருப்பு வசதி
ஏற்படுத்துகிறோம். அப்படி குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்து
கின்றபோது எல்லா சமுதாயத்தினரும் சமமாக வாழ்வதற்
குரிய சூழ்நிலையினை ஏற்படுத்துவதற்குரிய முயற்சி உண்டா
என்று எண்ணிப்பார்க்க வேண்டும். அரிசனக் காலனி அரிசனக்
காலனியாகத்தான் இருக்கின்றது. மற்ற ஜாதி இந்துக்கள்
அந்தப் பகுதியில் வாழ இடம் தருவதில்லை. அரிசனக்
குடும்பங்களுக்கு அவ்வாறு வசதிகள் கொடுக்கின்றபோது ஏனைய
ஜாதியினரும் அங்கே வாழ்கின்ற வகையில் அவர்கள் தங்களைத்
தயார்படுத்தவில்லை. அத்தகைய நிலை வரவேண்டும். அது
மட்டுமல்ல. அரிசன மக்களுக்கு வீட்டுவசதி போன்றவற்றினை
ஏற்படுத்துகின்றபோது மற்ற மேல் ஜாதி வகுப்பினரோடு அவர்
கள் சேர்ந்து வாழ்வதற்குரிய ஒரு புதிய சூழ்நிலையை ஏற்படுத்த
வேண்டும். அப்படி ஒரு புதிய சூழ்நிலையைத் தோற்று
விப்பது நம் கடமை. ஏதோ ஒரு நாளில் சமபந்தி ஏற்பட்டால்
மட்டும் நல்ல நிலைமைகள் ஏற்பட்டுவிடாது. சமூக நீதி ஏற்பட
வேண்டும். நம்முடைய வீடுகளில் அந்த சகோதரனை அழைத்து
விருந்து உண்ணுமாறு செய்தால் நல்ல சூழ்நிலை ஏற்படும்.
அதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஜனதா கட்சி ஆட்சியிலே இருந்தபோது அரிசன மக்களுடைய
மேம்பாட்டுக்காக கமிஷன்கள் பல அமைத்திருக்கிறோம்.
அவர்களுடைய நலன்களையும் உரிமைகளையும் பேணிப்
பாதுகாப்பதற்கு கமிஷன்கள் அமைத்தது ஜனதா ஆட்சி என்று
பெருமையுடன் இந்த மன்றத்தில் சுட்டிக் காட்ட ஆசைப்படு
கிறேன். அப்படி அமைக்கப்பட்ட கமிஷன்களுக்கு சட்டபூர்வ
அந்தஸ்து தரவேண்டும் என்று ஜனதா ஆட்சி பல முயற்சிகளை
மேற்கொண்டபோது அதற்கு ஆதரவு தருவதற்கு கடமைப்
பட்டிருந்த கட்சிகள் நழுவி ஓடிவிட்டதை நாம் அறிவோம்.
ஆகவே அப்படி ஏற்பட்ட கமிஷன்கள் சட்டபூர்வ கமிஷன்களாக
மாறவேண்டும். அதன் அடிப்படையில் மாநிலத்திலே கமிட்டிகள்
அமையவேண்டும்.

இதற்கு முன்னாலே ஒரு முறை அருமை சகோதரர் திரு.
விஜயராகவன் அவர்கள், பழங்குடி மக்களுடைய நலனைப்
பேணிக் காப்பதற்கும், அரிசன மக்களுடைய நலனைப் பேணி
பாதுகாப்பதற்கும் கமிட்டிகள் அமைக்க வேண்டும் என்று
வற்புறுத்தியிருக்கிறார். அதை இன்னொரு முறை வலியுறுத்திக்
கூற நான் ஆசைப்படுகிறேன். ஆனாலும், இன்றைய தினம்
ஏற்பட்டிருக்கிற இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளின் காரணமாக
ஹிந்து சகோதரர்கள் மத்தியில் மன மாற்றம் ஏற்பட்டிருக்கிறது





என்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இறைவனின்
படைப்புகள் நாம். இறைவனின் படைப்புகள் அத்தனையும்
சரிநிகர் சமமானது என்ற உணர்வு நம் உள்ளத்தில் எழுகிற
போது சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கிற ஏற்றத் தாழ்வுகள்
நிச்சயமாக தாமே மறைந்துவிடும். அத்தகைய ஏற்றத்
தாழ்வுகள் அற்ற சமுதாயத்தை இஸ்லாம் தன்னகத்தே கொண்
டிருக்கின்ற ஒரே காரணத்திற்காகத்தான், அந்த அரிசன மக்கள்,
பல காலமாக தாழ்த்தப்பட்டு ஒதுக்கப்பட்ட மக்கள், இந்த
மதத்தை நாடி வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும்
மறுக்க முடியாது.

என்னை பொருத்தவரையில், ஒரு விஷயத்தை நான்
சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பதட்ட நிலை தவிர்க்கப்
படவேண்டும். இஸ்லாமியத்தை பொருத்தவரை, முஸ்லீம்
களைப் பொருத்தவரை, நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற
எங்கள் திருமறைகள் எங்களுக்குத் தருகிற தாக்கீது, அருமை
சகோதரர் திரு. சாகுல் அமீது அவர்கள் சுட்டிக் காட்டியதைப்
போல, எங்கள் திருமறை சொல்கிற அதே வாசகத்தை நானும்
சொல்கிறேன். "லா இக்ருஅ ஃபிதத்தினி" மத விஷயத்தில்
கட்டாயம் கூடாது. நிர்ப்பந்தம் வாயிலாக மத மாற்றத்தை
இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை வலியுறுத்தி, அது
எங்களுக்கு போதனையாக இருந்து கொண்டிருக்கிறது என்று
சொல்லி, இப்போது ஏற்பட்டுவிட்ட நிகழ்ச்சிகளின் காரணமாக,
அருமை சகோதரர் திரு. சாகுல் அமீது சுட்டிக்காட்டியதைப்
போல, அந்தப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கும் பதட்ட நிலையை
போக்கவேண்டிய கடமை அரசாங்கத்திற்கு உண்டு. அந்த
நிலையைப் போக்குகிற வகையிலும், சமூக நீதி எல்லா மக்களுக்
கும் ஒரே போல வழங்குகிற புதிய சூழ்நிலையை தோற்றுவிக்கிற
முறையிலும், சட்டத்தின் வாயிலாகவோ, மன மாற்றத்தின்
வாயிலாகவோ மேற்கொள்ளும் வகையில் தக்க நேரம் ஒதுக்கி
இந்த மாமன்றத்தின் காலத்தை ஒத்தி வைக்க வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : பேரவைத் தலைவர் அவர்களே,
இன்று தமிழகத்திலும், இந்திய பேரரசின் ஆளுகைக்கு உட்பட்ட
அனைத்து பகுதிகளிலும் அரிசனங்கள் முஸ்லீம்களாக மாறுகின்ற
நிகழ்ச்சி குறித்து, கடந்த 2 மாதங்களாக, பத்திரிகைகளின்
வாயிலாகவும், அரசியல் கட்சிகளின் சார்பாகவும், கூறப்
படுகின்ற கருத்துக்களை ஏற்று, தமிழகத்தில் மட்டும் அல்ல,
இந்தியா முழுவதும் மக்கள் மத்தியிலே நிலவி வரும் பதட்ட
நிலை குறித்து, அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும்
என்ற வகையில், அகில இந்திய பார்வார்டு கட்சியின் சார்பிலே
நானும் பங்குக் கொண்டு, ஏன் ஒத்திவைக்க வேண்டும் என்பதற்
கான கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏதோ மதமாற்றம் என்பது தமிழகத்தில் இப்போதுதான் புதிதாக ஏற்பட்டது போன்று அத்தனை பேரும் பேசினார்கள். ஆனால் இந்த மத மாற்றம் என்பது தொன்றுதொட்டு இருந்து வருகிறது. இப்போது மீனாட்சிபுரத்தில் மட்டும்தானா மதம் மாறியிருக்கிறார்கள்? பட்டுக்கோட்டையில் கூட மாறியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்குத்தான் அரசியல் கட்சிகளும் பத்திரிகைகளும் சேர்ந்து அரிசனங்கள் மதமாற்றம் என்று சொல்லி, இந்த மதமாற்றத்தை பெரிதும் விளம்பரப்படுத்துகிறார்களே தவிர வேறொன்றும் இல்லை. ஆங்கிலேயர்கள் காலத்தில் எவ்வளவோ மத மாற்றங்கள் ஏற்பட்டன. பள்ளப்பட்டு என்ற கிராமத்தில் அந்த கிராமமே ஒட்டு மொத்தமாக முஸ்லீம்களாக ஒருமுறை மதம் மாறினார்கள். அவர்கள் இப்போதும் அங்கே முஸ்லீம்களாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்போது யாரும் அவர்களுக்கு தடை விதிக்கவும் இல்லை. விளம்பரப்படுத்தவும் இல்லை. ஆனால் இங்கே ஒரு சில காரணங்களினால் மாறினார்கள் என்று கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி காரணங்கள் இருக்குமேயானால், எதிர்காலத்தில் அப்படிப்பட்ட கொடுமைகள் ஏற்படாதவண்ணம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியம் தான். ஆனால் மதமாற்றங்கள் நம் நாட்டில் சர்வ சாதாரணம். என்னுடைய மாவட்டத்திலே போடிநாயக்கனூர், கம்பம் போன்ற பகுதிகளிலே இருக்கிற இஸ்லாமியர்கள் இந்துக்களாக இருந்து மதம் மாறியவர்கள் என்பதற்கான சரித்திரச் சான்றுகள் இருப்பதை தமிழகம் மறந்துவிடுவதற்கில்லை.

ஆங்கிலேய ஆதிக்கத்தின் கீழ் இருக்கும்போது, மிகவும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட, அந்நாள் கொடுமைகளுக்குள்ளான இந்த மக்கள் அப்போது கிறிஸ்தவர்களாக மதம் மாறினார்கள். அப்போதெல்லாம் கூட அதை யாரும் தடுத்தோ அல்லது பெரிதுபடுத்தி பேசியதோ இல்லை. ஆகவே இந்த மதமாற்றம் என்பது ஓரளவு அரசியல் நோக்கம் உள்ளிட்டு பேசப்படுகிறது என்பதுதான் என்னுடைய கருத்து. ஆனாலும் மத மாற்றத்தைப் பற்றி பல கருத்துக்கள் நிலவுகின்றன. கிரிமினல் வழக்குகள், படுகொலைகள், தாக்குதல்கள் போன்றவைகள் தான் முக்கியமாக மீனாட்சிப்புரத்திலே நடந்த மத மாற்றத்திற்கு காரணங்களாக சொல்லப்படுகிறது. அப்படி இருக்குமேயானால் சம்பந்தப்பட்டவர்கள் மீது அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியம். போலீசும் அதிகார வரம்பில் மீறியிருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் தமிழக அரசு தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, அதன் உண்மை நிலையை கண்டறிந்து அறிவிக்க வேண்டிய கடமைப்பட்டிருக்கிறது. அது போலவே வெளிநாட்டுப் பணம் இதற்கென வந்தது என தமிழக முதல்வர் அவர்களே சொன்னார்கள். அந்தக் கருத்து பரவலாக



பத்திரிகைகளிலும் வந்துக்கொண்டிருக்கிறது. அப்படி வெளிநாட்டுப் பணம் இதற்கென வந்தது அல்லது வரவில்லை என்கிற சவாலை நான் விடத் தயாராக இல்லை.

[முற்பகல் 11–40.]

இருந்தாலும் வெளிநாட்டுப் பணம் வந்திருக்கிறதா இல்லையா என்பது ஆளும் பொறுப்பிலிருக்கிற மத்திய அரசுக்கும் தெரிய வேண்டும். மாநில அரசுக்கும் தெரிந்திருக்க வேண்டும். அப்படி இல்லை என்று சொன்னால் அந்தப் புலனாய்வுத் துறை சரியாகச் செயல்படவில்லை என்றுதான் எங்களைப் போன்றவர்கள் கருத்து கொள்ள முடியும்.

ஆக, தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்தார்கள். ஆங்கில ஏகாதிபத்தியத்தில். அவர்கள் விடுதலை பெற வேண்டும், அவர்கள் எல்லோருக்கும் சமமாக இருக்க வேண்டும் என்றுதான் அகில இந்திய பார்வேர்ட் ப்ளாக் கட்சி திட்டவட்டமான கொள்கையை வைத்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆலயப்பிரவேசம் நடத்தப்பட வேண்டுமென்று சொல்கிறபோது எங்களுடைய உத்தமத் தலைவர் திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் அங்கயற்கண்ணி ஆலயத்திற்கு அரிஜன மக்களை அழைத்துச் சென்று ஆலயப் பிரவேசம் செய்து வைத்தார்கள். அந்த மக்கள் எல்லோருக்கும் சமமாக வாழ வேண்டும், சகோதரர்களாக இருக்க வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. அவர்கள் ஆலயங்களுக்கு வந்து எல்லோருக்கும் சமமாக வந்து வணங்க வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை அன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த காலத்தில் கொண்டு வந்த சட்டத்தை, தாழ்த்தப்பட்ட மக்களும் அர்ச்சகர்களாக இருக்க வேண்டும் என்று சட்டம் கொண்டுவந்த போது அவர்கள் வரக்கூடாது என்று எந்தத் தரப்பிலிருந்தும் குரல் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு இந்த நாட்டில் 18 சதவிகிதம் ஒதுக்கப்பட வேண்டும் என்பதில், அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. இன்றைக்கு சட்டமன்றத்தில் அவர்கள் ஏறத்தாழ 42 பேர்கள் உறுப்பினர்களாக வந்திருக்கிறார்கள். பாராளுமன்றத்திற்கும் வந்திருக்கிறார்கள். அப்படிப் போவதை மற்ற ஜாதிக்காரர்கள் மறுப்பதாக யாரும் இதுவரை குற்றச்சாட்டு சொல்லவில்லை. ஆக, ஹரிஜனங்களுக்கு இருக்கிற உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் அவர்கள் மற்றவர்களுக்குச் சமமாக இருக்க வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. தந்தை பெரியார் அவர்களும் அண்ணா அவர்களும் சமூக வேறுபாட்டைப் போக்க வேண்டும் என்று பாடுபட்டார்கள் என்று சொன்னார்கள். எம்மதமும் சம்மதம் என்பவர்கள் இந்த

மத மாற்றங்கள் குறித்து ஏன் இதை அழுத்தமாகப் பேசுகிறார்கள் என்று தெரியவில்லை. எம்மதமும் சம்மதம் என்று சொல்கிற அந்தக் கருத்து இருக்கிறபோது அவர்கள் முஸ்லீம்களாக மாறினால் என்ன இந்துவாக இருந்தால் என்ன? அதுபற்றி இவ்வளவு அழுத்தந்திருத்தமாக, அழுத்தமாக பேச வேண்டிய நிர்ப்பந்தம் என்ன என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதற்கு மேலும் இது அரசியல் உள்நோக்குடையது என்பதை நான் தெளிவாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதிப்பிற்குரிய திரு. சித்தன் அவர்கள் பேசுகிறபோது முதுகுளத்தூர் கலவரம் என்று குறிப்பிட்டுப் பேசினார்கள். அன்றைக்கே, ஜாதிக் கலவரம் என்று சொன்னார்கள். இந்த மன்றத்தில் முன்னதாக ஒருமுறை எடுத்துக்கூறியிருக்கிறேன். அது ஜாதிக் கலவரம் அல்ல, திட்டமிட்ட அரசியல் சதி என்று சொல்லதான் கடமைப்பட்டிருக்கிறேன். அன்று ஆளும்பொறுப்பில் இருந்தவர்களால் திட்டமிட்டு திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் அரசியல் செல்வாக்கைக் குறைப்பதற்காக நடத்தப்பட்ட நாடகம். அதேபோன்று இன்றைக்கும் ஹரிஜன மக்கள் விழுப்புரத்தில் கொல்லப்பட்டார்கள். ஊஞ்சனையில் கொல்லப்பட்டார்கள் என்று சொன்னார்கள். அதேபோன்று மற்ற இனத்தவர்கள் கொல்லப்பட்டதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தில் நடந்த கலவரத்தில் வெள்ளயானைக்குடியில் முக்குலத்தோர் இன மக்கள் பாதிக்கப்பட்டு 100 குடும்பங்கள் இன்று குடியேற முடியாமல் இருக்கிறார்கள். நான்கு பேர்கள் வெட்டி கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்). ஆக, ஒருவருக்கு உரிமை கொடுப்பதில் நாங்கள் யாரும் குறுக்கே நிற்பதற்குத் தயாராகயில்லை. மற்றவர்கள் உரிமையைப் பறித்துத்தான் அளிப்போம் என்ற இடத்தில்தான் கருத்து வேறுபாடு வருகிறது.

திரு. எல். இளையபெருமாள்: பாயின்ட் ஆப் ஆர்டர். நான்கு பின்தங்கிய [illegible] மக்கள் கொலை செய்யப்படவில்லை. அருமைச் சகோதரர் சொல்வது தவறானது, உண்மைக்குப் புறம்பான ஒரு தகவலாக இருக்கிறது என்பதை உங்கள் மூலம் அருமைச் சகோதரர் திரு. ஆண்டித் தேவர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது பேசுகின்ற போது, மிகவும் எச்சரிக்கையோடு பேசினேன். முதுகுளத்தூர் சம்பவத்தைக் குறிப்பிட்டு, அதை ஒரு குற்றச்சாட்டாகப் பேசவில்லை. அப்படி ஒரு நிகழ்வு ஏற்பட்ட காலத்திலும், மத மாற்றம் ஏற்படவில்லை என்றுதான் சொன்னேன். ஆனால்





உறுப்பினர் சகோதரர் ஆண்டித் தேவர் அவர்கள் அதைப் பயன்படுத்திக் கொண்டு, முன்னால் இருந்த அரசின் சதி என்று சொல்வது பொருத்தமாகாது. அதைத் தாங்கள் சபையின் குறிப்பிலே இருக்க அனுமதிக்கப் போகிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்னால் இருந்த அரசு, பின்னால் இருந்த அரசு என்பதெல்லாம் வாடிக்கையாக வருகின்ற செய்திகள். சூடு இல்லாமல் பேச வேண்டும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : அங்கே வெள்ளாவில் பாலுத்தேவர் என்பவர் இறந்திருக்கிறார்; இன்னும் 3 பிற்படுத்தப்பட்டவர்கள் இறந்திருக்கிறார்கள். 9 பேர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கும் அளவிற்கு கொடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இது இந்த அரசுக்குத் தெரியும். ஆனக்குடியில் 100 குடும்பங் களைச் சார்ந்தவர்கள் அங்கே போய் குடியேற முடியாமல் இருக்கி றார்கள் என்பது தெளிவான தகவல். வெள்ளாவில் 50 குடும்பங்கள் தாழ்த்தப்பட்ட மக்களால் தாக்கப்பட்டு, வெள்ளாவிற்குச் செல்ல முடியாமல் இராமநாதபுரத்திலேயே இருக்கிறார்கள்; அவர்கள் அங்கே போக முடியாமல் இருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள் சகோதரர்களாக இருக்க வேண்டுமென்பதிலே எல்லோருக்கும் ஒரு தெளிவான கருத்துண்டு. ஜாதி ஒழிக்கப்பட வேண்டும் என்பதிலே தெளிவான அரசியல் கருத்துக் கொண்டது அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சி. மத்திய அரசு அப்படி ஒரு சட்டம் கொண்டு வந்தால், அதை முதலில் வரவேற்று பேசக்கூடியவர்கள் நாங்கள். ஆகவே, உரிமைகள் பெறுகின்ற நிலையில் நமது நாட்டில் ஜாதி அமைப்புகள் இருக்கின்றன. செகுலர் ஸ்டேட் என்று சொன்னாலும், மத்தியிலே இருக்கக்கூடிய அரசியல் சட்டத்தில் அரிசனங்களுக்கு பாதுகாப்புகள் சில கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பாதுகாப்பு அடங்கிய முறையில் நாமும் இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதியில் அரிசனங்களுக்கு 30 சதவிகிதம் கொடுத்து, அந்த மாணவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாமும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த நிலையில் யாராவது அரிசனங்களுக்கு பாதிப்பு என்ற முறையில் குற்றச்சாட்டு சொன்னால், இன்றைக்கு தமிழ் நாட்டில் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கவில்லை என்பது என் கருத்து. அதில் அரசியல் உள்நோக்கம் இருக்கிறது. அரசியல் காரணத்தால், சில அரசியல் கட்சித் தலைவர்கள், அவர்கள் தூண்டுதலின் பேரில் தங்கள் ஜாதிக்குள் இழுத்துக்கொள்ள வேண்டுமென்ற காரணத்தால் நடைபெற்றிருக்கின்றது என்று சொல்வார்களானால், வெள்ளாட்டில் எப்படி மாறினார்கள்? உத்திரப் பிரதேசத்தில் எப்படி மாறினார்கள்? அரசியல் தலைவர்கள் ஒரு குறிப்பிட்ட

ஜாதியைச் சொல்லி பேசுகின்றபோது, இதை நினைவுப்படுத்திக்
கொள்ள வேண்டும். ஆகவே, அரசியல் கட்சியைச் சார்ந்தவர்
கள், உள்நோக்கம் கொண்டு, இத்தகைய கருத்துக்களைப் பேசி
அந்த இனத்தவர்களை தங்கள் பக்கம் இழுக்க வேண்டுமென்பதற்
காக இப்படியெல்லாம் பேசுகின்ற காரணத்தால்தான், இந்த
நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு ஏற்பட்டி
ருக்கின்ற மத மாற்றம் குறிப்பிட்ட ஒரு இந்து சமூகத்தின் அழுத்
தத்தால் என்று சொல்லுகின்ற அந்த குற்றச்சாட்டை ஏற்றுக்
கொள்ள முடியாது.

அது மட்டுமல்ல. மந்திரியில் இருந்து வந்[illegible] சா
திரு. மக்வானா அவர்கள், தமிழகத்தின் [illegible]
போது தமிழகத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட [illegible]ரசு [illegible]க்கிற
இந்த அரசின் அறிக்கையை என்னவென்று ப[illegible]
சனங்களுக்கு கொடுமை' என்று சென்னையிலே இருந்துகொண்டு
மீனாட்சிபுர[illegible] நிற்குச் செல்வதற்கு முன்னால் 2-ம் தேதியே
சொல்கிறார். 4 ஆம் தேதிதான் மீனாட்சிபுரம் போக இருக்கி
றேன் என்று சொன்னார். அங்கு இந்துக்கள் கொடுமை
என்று பேசுகின்றபோது, அங்கு சென்றபோது, அங்குள்ள அதி
காரிகளைப் பார்த்து, அதுவும் ஒரு குறிப்பிட்ட போலீஸ் அதி
காரியை, 'நீ பிராமண வகுப்பைச் சேர்ந்தவன் என்று சொல்கி
றார். அவர் தான் கிறித்துவ மதத்தைச் சார்ந்தவர் என்று
சொன்னாலும்கூட, இல்லை, இல்லை பிராமணன்; ஆகவே அரி
சனங்களுக்கு எதிராக நடந்திருக்கிறாய் என்ற அளவிற்கு....

திரு. எஸ். இளையபெருமாள்: பாயின்ட் ஆப் ஆர்டர்.
அந்த அதிகாரியின் பெயர் அரிஹரன்; அவர் பிராமண வகுப்
பைச் சேர்ந்தவர். அரிசன வகுப்பைச் சேர்ந்த பெண்ணைக்
கட்டியிருக்கிறார் என்பதை நான் சபைக்குத் தெரிவித்துக் கொள்கி
றேன். ஆகவே, அவருடைய தகவல் தவறானது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர்
அவர்களே, இது ஒத்திவைப்புத் தீர்மானம். மத மாற்றம்
பற்றியது. இதற்காக ஏன் சபையை ஒத்திவைக்க வேண்டு
மென்று சொல்ல வேண்டுமே தவிர, ஒத்திவைப்பதற்கு விவாதம்
முழுவதையும் கொண்டுவந்து சேர்க்கக் கூடாது. சம்பந்தமில்
லாத விஷயங்களைக் கொண்டு வரக்கூடாது. தயவுசெய்து
இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான காரணங்களை மட்டும்
பேசினால், இந்த அவையின் நேரமும் மிச்சப்படும்; மற்றப்
பிரச்சினைகளை எடுத்துக் கொள்வதற்கும் பயனுள்ளதாக இருக்
கும். மாண்புமிகு உறுப்பினர் அந்த விதிமுறையைக் கடைப்
பிடித்து, விரைவில் முடித்துக் கொள்வது நல்லது என்று கேட்டுக்
கொள்கிறேன்.



[முற்பகல் 11-50.]

திரு. எஸ். ஆண்டித்தேவர்: அப்படி மத்திய அரசு அமைச்சர் இங்கே மாநிலத்திலே இருக்கிற......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே மத்திய அமைச்சரை எல்லாம் இழுத்துச் பேச வேண்டாம். ஏன் ஒத்தி வைக்க வேண்டுமென்பதற்கான காரணத்தை மட்டும் கூறினால் போதும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மத மாற்றத்தைப் பற்றித் தான் பேசுகிறேன். அப்படிப் பேசுகிறபோது மத்திய அரசு ஆட்சி பீடத்திலுள்ள அமைச்சர் மாநில அதிகாரத்தைப் பறிக்கும் அளவுக்கு தலையிடுகிற உரிமை இல்லை என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அந்த மத்திய அமைச்சருடைய அறிக்கை எதேச்சாதிகாரமாக இருக்கிறது. அப்படி ஒரு அறிக்கையைக் கொடுப்பது கண்டிக்கத்தக்கது என்று கூற விரும்புகிறேன். அவர்கள் ஆளுகின்ற மாநிலத்தில் முஸ்லீம் மதத்திற்கு மாறிக் கொண்டிருக்கிற நிலையில் அங்கே ஏதும் பேசாது இங்கே வந்து இந்த அரசைப் கலைப்போம் என்று இந்தப் பிரச்சினையில் பேசியது மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, மத மாற்றம் என்பது இந்துக்கள் அவர்களை அழுத்தி வைத்ததால் வந்தது என்று பேசுவது சரியல்ல. நான் சொல்லுகிறேன். திட்டவட்டமாகச் சொல்லுகிறேன். வெளிநாட்டிலிருந்து வந்த பணம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏழ்மையின் காரணமாக அந்த மக்கள் அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டு மதம் மாறி இருக்கிறார்கள். இதுபோன்று கருத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னொரு முக்கியமான கருத்தைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அரிசனங்களிலேயே அருந்ததியர் என்ற சமுதாயம் இருக்கிறது. அவர்கள் அரிசன சமுதாயத்தினராலேயே ஒதுக்கப்பட்டவர்களாகக் கருதப்படுகிறார்கள். எங்கள் மாவட்டத்திற்கு வாருங்கள் காட்டுகிறேன். அங்கே அரிசனங்களுக்கு என்று கிணறு வெட்டினார்கள். ஆனால் அதிலே அருந்ததியர்கள் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று சொல்லி அரிசனங்களிலேயே மற்றவர்கள் தங்களை மேல்சாதி என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை ஒழிக்க அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1981 ஆகஸ்ட் 24

இந்த அரசும் அரசியல் கட்சிகளும் அவர்களுக்குச் சம உரிமை
கொடுக்க வேண்டுமென்பதிலே எந்தக் கருத்து மாறுபாடும் இல்லை
அவர்கள் மற்றவர்கள் உரிமையைப் பாதிக்கின்ற அளவுக்கு
நடந்துகொள்ள முன்வரும்போதுதான் சிக்கல் ஏற்படுகிறது.
அதை அவர்கள் மாற்றிக் கொள்ள வேண்டும். இந்தக் கார
ணங்களைப் பற்றியெல்லாம் தெளிவாக விவாதிப்பதற்காக, மத
மாற்றத்திற்கு என்ன காரணம் என்பதைத் தெரிந்து கொள்ள
இந்த அவையின் அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, இன்றைக்குத் தமிழகத்திலும் மற்றைய மாநிலங்களிலும்
ஆங்காங்கே ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மத
மாற்றத்தினால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து இந்த
அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டு
மென்று குடியரசுக் கட்சியின் சார்பில் முதற்கண் தெரிவித்துக்
கொள்கிறேன்.

இந்த மத மாற்றத்திற்கு இன்றைக்குச் சில பேர் அரசியல்
முலாம் பூசி வருகிறார்கள். இன்னும் சில பேர் மற்றவர்களைப்
பார்த்து குறை சொல்வதன் மூலம் நாம் புனிதர்களாக ஆகி
விடுவோம் என்று நினைத்துக் கொண்டு நாட்டிலே இந்தப்
பிரச்சினையைப் பேசி வருகிறார்கள். இந்தப் பிரச்சினை குறித்து
அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து குறிப்பிட்ட அரசாங்கத்தைக்
குறை கூறுவது, அந்த அரசாங்கம் இந்த மக்களுக்குப் பாது
காப்புத் தரவில்லை என்று குற்றம் சாட்டிவிடுவதால் அவர்கள்
தங்களை புனிதர்களாக ஆக்கிக் கொள்ள முற்படுகிறார்கள்.
அதன் மூலம் அவர்கள் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

இந்தப் பிரச்சினைகளைப் பொறுத்தவரை அரசியலுக்கு அப்
பாற்பட்டு அத்தனை கட்சிகளின் கோட்பாடுகளுக்கு அப்பாற்
பட்ட நிலையில் சமூக ரீதியில் மாற்றம் வேண்டுமென்ற அடிப்
படையில் இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டுமே தவிர,
இந்தப் பிரச்சினையினால் நம்முடைய கட்சிக்கு எந்த அளவுக்கு
லாபம் வரும் என்ற கண்ணோட்டத்தோடு அரசியல் கட்சிகள்
பார்ப்பதால்தான் இன்றைக்கு இந்தப் பிரச்சினை மிகப் பெரிய
அளவுக்குக் காட்டப்பட்டு வருகிறது. மத்திய அமைச்சரான
லும் இங்கிருக்கிற பல கட்சித் தலைவர்களும் இந்தப் பிரச்சினை
யைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள முயற்சிப்பதைப்
பார்த்து இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் கவலையி
லும் ஆழ்ந்த துக்கத்திலும் இருக்கிறார்கள் என்பதைத் தெரி
வித்துக் கொள்ள விரும்புகிறேன். இத்தனை ஆண்டுகளுக்குப்
பின்னாலும் இந்தத் தலைவர்கள் எல்லாம் அந்த மக்களைப்
பகடைக் காய்களாகப் பயன்படுத்தி வருவதன் காரணமாக மிக



1981 ஆகஸ்ட் 24] [திரு. ஜி. மூர்த்தி]

வும் துர்பாக்கியமான நிலைமைக்கு அந்த மக்கள் தள்ளப்பட்டி
ருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை பீகார் மாநிலத்திலும் உத்
திரப் பிரதேச மாநிலத்திலும் பயங்கரமான நிலையை அடைந்தி
ருக்கிறது. பல பேர் இன்றைக்கு அங்கே மதம் மாறியிருக்கி
றார்கள். மராட்டிய மாநிலத்திலும் 25,000 பேர் தலிப் பந்தர்
கள் கடந்த பத்து நாட்களுக்கு முன்னால் மதம் மாறியிருக்கி
றார்கள்.

அதை இந்திய நாட்டின் சர்க்கார் வேடிக்கைதான் பார்த்
துக் கொண்டிருக்கிறது. நடவடிக்கை எடுக்கவில்லை. குஜ
ராத்திலே 5,056 கொடுமைகள் ஒரு ஆண்டிலே நடந்திருப்ப
தாகப் பாராளுமன்றம் தகவல் தந்திருக்கிறது. 532-க்கு மேற்
பட்ட, தாழ்த்தப்பட்டவர்கள் சமுதாயத்தில், கொலைகள்
விழுந்திருக்கின்றன என்று பாராளுமன்றம் அதிகாரப் பூர்வமாக
அறிவித்துக் கொண்டிருக்கிறது.

ஆகவே இன்றையப் பிரச்சினையில் ஒரு மாநிலத்தையோ அல்
லது பல மாநிலங்களிலே இருக்கிற பிரச்சினைகளையோ ஒன்று
சேர்த்தோ அல்லது ஒரு அரசாங்கத்தையோ குறை சொல்வதை
விட்டுவிட்டு விரும்பத்தகாத மத மாற்றத்திற்கு யார் பொறுப்பு
என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தாழ்த்தப்பட்ட சமு
தாயத்தைச் சேர்ந்தவர்களை விட்டுவிட்டு தாழ்த்தப்பட்டவர்கள்
அல்லாதவர்கள் அத்தனை பேர்களும் மதமாற்றத்திற்கு எண்ண
காரணம் என்பதை எண்ணிப் பார்த்து வெட்கப்பட வேண்டிய
சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

இந்தப் பிரச்சினையை ஒரு சாதியை வைத்தோ அல்லது
ஒரு சமுதாயத்தை வைத்தோ கோடிட்டுக் காட்டுவதாலே மற்ற
சமுதாயம் புனிதமாக்கப்படுகிறது என்பதை நான் ஏற்றுக் கொள்ள
ளத் தயாராக இல்லை. தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாத
சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேர்களும் ஒட்டு
மொத்தமாக இதற்குக் காரணம் என்பதை என்னால் சொல்ல
முடியும். காரணம், தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றைக்கு தாழ்த்
தப்பட்டோர் அல்லாத மற்ற எல்லா சமுதாயத்தாலும் கொடு
மைப் படுத்தப்படுகிறார்கள் என்பதை நாடு அதிகாரப் பூர்வமாக
உணர்ந்திருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் பகுதியிலே குறிப்பாக அதிலேயே
ஒரு பிரிவு தாழ்ந்திருக்கிறது. அவர்கள் தாங்களே தன்னாலே
பிரிந்து கொள்கிறார்கள் என்று சொல்வதாலே பிரச்சினை
தீர்ந்து விடாது. தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலே 100 பிரிவு
கள் இருந்தாலும், அந்த 100 பிரிவுகளும் சாதி இந்துக்களால்
ஒரே நிலையில்தான் நடத்தப்படுகிறார்களே தவிர அதிலே

[திரு. ஜி. மூர்த்தி] [1981 ஆகஸ்ட் 24

மேல் சாதி, கீழ் சாதி என்று பார்த்து அவர்களுக்கு அந்தஸ்து கொடுக்கிற அளவுக்கு இன்னும் சாதி இந்துக்கள் பக்குவம் பெறவில்லை. பகுத்தறிவு பெறவில்லை, அவர்கள் அந்த அளவுக்கு நியாயத்தை ஒப்புக் கொள்வதற்குத் தயாராக இல்லை. ஒரு சாதியை மாத்திரம் சொல்லி அல்லது ஒரு சமுதாயத்தை குறிப்பிட்டு மாத்திரம் சொல்லி இந்த மக்கள் இப்படி இருக்கிறார்கள் என்று சொல்வதாலேயே பிரச்சினை முடிந்துவிடும் என்று நான் சொல்லவில்லை. இந்தப் பிரச்சினையை அரசியல் நோக்கங்களை மறந்துவிட்டு, அரசியல் காரணங்களுக்கு அப்பால் சென்று எல்லாரும் உட்கார்ந்து தீர ஆலோசித்தாக வேண்டும். இது மிகப் பெரிய சமுதாய மாற்றம்.

இன்றைக்கு இல்லாவிட்டாலும், சரி, இன்னும் ஒரு 10, 15 ஆண்டுக் காலத்திலே இந்தியா முழுவதிலும் நிச்சயமாக மதம் மாற்றம் வரத்தான் போகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் இழிநிலையை மாற்ற இப்போது அல்ல, 20 ஆண்டுக் காலத்திற்குப் பின்னாலே போகத்தான் போகிறார்கள். மதம் மாறத்தான் போகிறார்கள். இப்படி அவர்களை ஓட்டுவதற்கு யார் காரணம்? யார் அவர்களைத் துரத்துகிறார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும். அப்படி ஓட்டுகிறவர்கள், துரத்துகிறவர்கள் தங்களுடைய நிலையை மாற்றிக் கொள்ளாத வரையிலே தாழ்த்தப்பட்ட மக்கள் தவிக்கிற நிலையிலே எங்கே போவது என்றுதிக்குத் தெரியாது இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் சாதி இந்துக்கள்—தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியாவிலே உள்ள அனைத்து சாதிகளும் தங்களுடைய குறைகளைப் போக்கிக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களிடையே பாவமன்னிப்புக் கேட்கக்கூடிய துர்பாக்கிய நிலைக்கு வந்தாக வேண்டும். அப்போதுதான் இந்த சமுதாயத்து மக்கள் அவர்களுடைய கஷடத்தை உணர்ந்து மத மாற்றந்தை நிறுத்துவார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வீடுகட்டுகிற இடத்திலே ஒரு பிராமணன், அதற்குப் பக்கத்திலே ஒரு முதலியார், அதற்குப் பக்கத்திலே ஒரு நாயுடு இப்படி 10, 15 சாதிகளை சேர்ந்த வீடுகள் பிறகு பக்கத்திலே ஒரு தாழ்த்தப்பட்டவர் வாழும் பகுதி என்று ஏற்படுவதாலே பிரச்சினை தீர்ந்துவிடும் என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை. அதன்மூலமாக அந்த சமுதாயத்தின் மீது அனுதாபம் காட்டப்படுகிறது என்பதாலோ அல்லது அப்படிப் பேசிவிடுவதாலோ பிரச்சினை தீர்ந்துவிடும் என்று சொல்லிவிட முடியாது. அவர்களுக்குத் தேவைப்படுவது எல்லாம் ஒரு சமுதாய அந்தஸ்து பாதுகாப்பு, அவர்களுடைய உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு, இவைகளை அளிக்கிற வகையிலே ஒரு அமைப்புத் தேவை. ஒருவேளை இந்த அவையிலே இருக்கின்றவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களை வேறுபடுத்திப் பார்க்க வேண்டுமென்று உணர்ந்தாலும்



1981 ஆகஸ் 24] [திரு. ஜி. மூர்த்தி]

கூட அவர்களுக்கு தனிக் குடியிருப்பு அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். 10 ஆயிரம் பேர், 5 ஆயிரம் பேர், 20 ஆயிரம் பேர், 15 ஆயிரம் பேர் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒன்று சேர்ந்து தனிக் குடியிருப்பு, செப்பரேட் செட்டில்மென்ட் என்று இருந்தால் தாலுகாவாரியாக ஒன்றியம் வாரியாக அமைத்துத் தருவதன் மூலமாக அந்த மக்களுக்கு சமுதாயப் பாதுகாப்புக் கிடைக்கும். 10 பேர்கள் இருக்கிற இடத்திலே சாதி இந்துக்கள் வந்து அடிக்கிறார்கள். 100 பேர்கள், 500 பேர்கள் இருக்கிறார்கள் என்றால் சாதி இந்துக்கள் வந்து அடிக்கிறார்கள். ஆனால் 10 ஆயிரம் பேர்கள் ஒன்றாகச் சேர்ந்து இருந்தால் அவர்களுக்கு படை பலம் என்ற முறையிலே ஆள்பலம் இருக்கிற காரணத்தினாலே யாரும் கொடுமைப்படுத்த முடியாது. பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று அந்த சமுதாயத்திற்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமானால் அவர்களுக்குத் தனிக் குடியிருப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அந்தப் பொறுப்பை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தாழ்மையான வேண்டுகோளை இந்த நேரத்திலே விடுக்க விரும்புகிறேன்.

அரசாங்கத்தின் மூலமாகக் கட்டித்தரப்படுகிற பள்ளிக்கூடங்கள், போஸ்ட் ஆபீஸ்கள், பஞ்சாயத்து போர்டு கட்டிடங்கள், சிவில் சப்ளைஸ் ஆபீஸ்கள், போலீஸ் ஸ்டேஷன்கள் இவைகள் அனைத்தும் தாழ்த்தப்பட்ட மக்கள் பகுதியிலே கட்டித்தரப்பட வேண்டும். எல்லா காலனிகளுக்கும் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷன் என்ற முறையிலே வந்தாக வேண்டும். அப்போது தான் பாதுகாப்பு நிகழ்ச்சி நேரடியாகக் கணக்கிலே எடுத்துக்கொள்ளப்பட முடியும். ஒவ்வொரு காலனிக்கும் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷன் வந்தாக வேண்டும். நாடெங்கிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சலுகைகள் இருப்பதாலேயே தாங்களும் அதைப் போன்று சலுகைகளை அனுபவிக்க வேண்டுமென்று பல்வேறு சாதி அமைப்புக்கள் ஏற்படுத்திக்கொண்டு ஊர்வலங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள், கோரிக்கைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

[நண்பகல் 12-00 ]

அது போன்ற ஜாதியின் பெயரிலே அமைப்புகளை ஏற்படுத்தி இருக்கின்ற சங்கங்களை எல்லாம் நம்முடைய அரசும், மத்திய அரசும் உடனடியாகத் தடை செய்தாக வேண்டும். அவர்களுடைய எழுச்சிமிகு ஊர்வலம் இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுடைய நெஞ்சங்களைக் குலுக்கிக் கொண்டிருக்கின்றது. ஆகவே, ஜாதி அடிப்படையிலே இருக்கின்ற அமைப்புகளை மத்திய, மாநில அரசுகள் நிறுத்தித் தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[கெ. ஜி. மேரி[illegible]] [1981 ஆகஸ்ட் 24

அந்த மக்களுக்கு எப்படி எல்லாம் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று பல விவகாரங்களைப்பற்றி விவாதித்து திட்டங்களை உருவாக்குவதற்கு இந்த அவையின் முக்கியமான நேரத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த மக்களுக்குப் பாதுகாப்பு தருவதற்கு இதர ஆலோசிக்க இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதமாற்றம் பற்றிய இந்தப் பிரச்சினையைப் பற்றி ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லாத வகையிலேயே—ஒத்தி வைத்தால் எவ்வளவு கருத்துக்களை எல்லோரும் எடுத்துச் சொல்வார்களோ அவ்வளவு கருத்துக்களை மிகத் தெளிவாகவும், திட்டமாகவும், கூடுதலாகவுமே இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மதமாற்றம் பற்றிய அத்தகைய பிரச்சினையைப்பற்றி அவையிலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களெல்லாம் மிகத் தெளிவுபடுத்தி எடுத்துச் சொல்லியதற்கிணங்க, இது என்னவோ இந்த ஆண்டு மட்டும், இப்பொழுது மட்டும், ஒரு குறிப்பிட்ட இடத்திலே மட்டுமே திடீரென்று தோன்றியது என்ற அளவிலே எடுத்துப் பேசியது சரியாகாது என்பதைப் பல தலைவர்கள் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இது எப்பொழுதும் நடைபெற்று வருகின்ற ஒன்று.

இந்த அவையைப் பொறுத்துக் கவனிக்க வேண்டிய ஒன்று, மதமாற்றத்தைப் பொறுத்து இந்த மாநில அரசுக்கு இருக்கிற பொறுப்பு, கடமை, மைய அரசுக்கு என்ன பொறுப்பு, கடமை, மதமாற்றங்களைப் பொறுத்து, மதத்தைக் காப்பாற்றுவதைப் பொறுத்து அல்லது மாற்றங்களைப் பொறுத்து. மதத் தலைவர்களுக்கும், மதங்களுக்கும் என்ன கடமை, பொறுப்பு என்று வேறுபடுத்துப் பார்க்கின்றபொழுதுதான் இந்தப் பிரச்னையிலே இருக்கின்ற பல்வேறு நிலைமைகளையும் நாம் நன்றாக உணர முடியும்.

அரசுக்கு என்ன கடமை என்பதைப் பார்க்கின்ற பொழுது, அரசினுடைய அரசமைப்புச் சட்டம் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்கிறது, ஒருவர் மதம் மாறுவதற்கு முழு உரிமை உண்டு : அவர் மனம் விரும்பி மாறுவாரேயானால் அதைத் தடுப்பதற்கில்லை என்று இந்திய அரசினுடைய அரசமைப்புச் சட்டம் சொல்கிறது. இந்திய அரசினுடைய அரசமைப்புச் சட்டத்தினுடைய ப்ரீயாமபிள் என்று சொல்லப்படுகின்ற முன்னுரையில், "Liberty of thought, expression, belief and worship" உண்டு என்று அதனுடைய முன்னுரையை ஆரம்பிக்கும்பொழுது இந்த அரசமைப்புச் சட்டமும் எந்தெந்த வகைகளிலே எல்லோருக்கும் விடுதலையையும், உரிமையையும் நல்குகிறது என்று



1981 ஆகஸ்ட் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

...றபோது, எண்ண உரிமை உண்டு, எடுத்துச் சொல்ல உரிமை உண்டு, வழிபட உரிமை உண்டு, நம்பிக்கொள்ள உரிமை உண்டு, ஒரு மதக்கொள்கையிலே பற்று வைக்க உரிமை உண்டு என்ற அளவிற்குத் தெளிவுபட எடுத்துச் சொல்லி மதங்களெல்லாம் தங்களுடைய மதக் கருத்துக்களை, சட்டதிட்ட விதிகளுக்கு உட்பட்டு பரப்பி, அவர்களை மனம்மாறச் செய்கின்ற வழிவகைகளைச் செய்து கொள்ளலாம் என்று அரசமைப்புச் சட்டத்தினுடைய 25 (1) விதி தெளிவாக எடுத்துச் சொல்கிறது. அரசமைப்புச் சட்டத்தினுடைய 27-வது விதி என்ன சொல்கிறது என்றால், ஒரு குறிப்பிட்ட மதத்தை முன்னேற்றம் செய்வதற்கோ, ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு ஆதரவாகவோ, வலிவுபடுத்துவதற்கோ, வளப்படுத்துவதற்கோ, எந்தவொரு—டாக்ஸ் வரியையும் போட்டு மக்களிடத்தில் வசூலிக்கக்கூடாது என்று திட்டவட்டமாகச் சொல்கிறது.

ஆகவே, குறிப்பிட்ட மதத்தை வளர்க்க, அல்லது குறிப்பிட்ட மதத்திற்கு வளம் சேர்க்க, ஒரு குறிப்பிட்ட மதத்தை ஆதரிக்க ஒரு மாநில அரசோ, மத்திய அரசோ அதற்கென்று தனி டாக்ஸை போடக்கூடாது என்பதை 27-வது விதி சொல்கிறது. பிரச்சாரம் செய்யலாம் என்று சொல்கிறது ; ஆனால் மத மாற்றத்தைப் பற்றிப் பிரச்சினைகளைக் கொண்டு வரலாமா என்பதைப்பற்றி அரசமைப்புச் சட்டம் ஆய்விலே இருக்கும்பொழுதே பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அதைப்பற்றி ஒரு விதியும் முன் கூட்டி—அரசமைப்புச் சட்டம் ஆய்விலே இருக்கும்பொழுது சேர்க்கப்பட்டிருந்தது. அது பற்றி, மதமாற்றத்தைத் தடுக்க வேண்டுமென்றுக்கூடக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு பலபேர் பேசி, மதமாற்றத்தைத் தடுக்க முடியாது ; ஆனால் கட்டாயமாகவோ அல்லது வலுக்கட்டாயமாகவோ அல்லது ஏமாற்றியோ அல்லது ஏமாற்று வேலைகள் செய்தோ ஒருவரை வேறு மதத்திற்கு மாற்றக் கூடாது என்ற அளவிற்குக் கொண்டு வரலாம் என்று சொன்னார்கள்.

கடைசியில் அதிலும் ஒரு பெரிய விவாதம் வந்து அந்த விவாதத்திற்குப் பிறகு ஒரு தனிக் குழுவிற்குக் கூட விட வேண்டிய அளவிற்கு அவசியம் வந்தது. அப்படி வருகின்றபொழுது அரசமைப்புச் சட்டத்திலே உயர்திரு. கே. எம். முன்ஷி அவர்கள் பேசுகின்றபொழுது மதமாற்றத்திற்குக் கட்டாயப்படுத்தக் கூடாது ; ஆனால் 18 வயதுக்குக் கீழேயிருக்கின்ற சிறுவர்களும், சிறுமியர்களும் எக்காரணத்தைக் கொண்டு மதமாற்றம் செய்யக் கூடாது என்று வற்புறுத்தினார்கள். அப்பொழுது ஃப்ராங்க் அந்தோணியும், கனம் டிசாசோ அவர்களும் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை எல்லாம் மாற்றக் கூடாது என்றால், பெற்றோர்களோடு சேர்ந்துதான் பிள்ளைகளையும் எண்ண வேண்டுமே தவிர, 18 வயதுக்குப் பிறகுதான் நீ மதம் மாறுவதா

இல்லையா என்பதைப் பற்றி முடிவு செய்ய வேண்டுமென்றால் பெற்றோர்கள் மாறும்பொழுது பிள்ளைகளும் சேர்ந்துதான் மாறு வார்கள். ஆகவே அது கூடாது என்று பெரும் விவாதம் வந்த தற்குப் பிறகு கடைசியிலே அரசமைப்புச் சட்டமே ஒரு முடிவுக்கு வந்தது. இந்த மதமாற்றம் பற்றிய கிளாசே வேண்டாமென்று சொல்லி அதை எடுத்தே விட்டார்கள்.

இப்பொழுது அரசியல் அமைப்புச் சட்டத்திலே இருக்கிற முறை அதுதான். அது மட்டுமல்லாமல், என்ன செய்யலாம் என்று வருகின்றபொழுது யாரும் மனம் விரும்பி, நான் இந்த மதத்தை ஏற்றுக்கொள்கிறேன், இந்தக் கொள்கையை நான் பின்பற்றுகிறேன் என்று எடுத்துச் சொன்னால், அதைத் தடுத்து நிறுத்த அரசியல் அமைப்புச் சட்டத்திலே இடம் இல்லை. ஆனால், இரண்டு மூன்று மாநிலங்களிலே மட்டும் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். " Conversion by way of inducement, allurement, force, threat or by fraudulent means can be punishable by legislation " என்று சொல்லி, ஆகவே, கட்டாயப்படுத்தியோ, ஏமாற்றியோ, ஏமாற்று வேலைகள் செய்தோ அல்லது வலுப்படுத்தியோ, யாரும் ஒரு மதத்தில் இருந்து மற்றொரு மதத்திற்குச் சேரும்படி வற்புறுத்தக் கூடாது என்ற சட்டம் ஒரிசா, மத்திய பிரதேசம் போன்ற சில மாநிலங்களில்தான் போடப்பட்டிருக்கின்றதே தவிர, மத மாற்றத்தைத் தடுக்கிற உரிமை எந்த மாநிலத்திற்கும் இல்லை.

சுப்ரீம் கோர்ட் இந்த வழக்கைப் பற்றி முடிவெடுக்கும்போது, நான் விரும்பி மதம் மாறுகிறேன் என்று சொன்னால் அதைத் தடுக்க முடியாது என்று சொல்லி, ஆனால் கட்டாயப்படுத்தப் பட்டது என்று நிரூபித்தால், ஏமாற்றிச் செய்திருக்கிறார்கள் என்று நிரூபித்தால் வலுக்கட்டாயமாகச் சேர்த்தார்கள் என்று நிரூபித்தால், அடிமைப்படுத்திச் செய்திருக்கிறார்கள் என்று நிரூபித்தால், அங்கே தடுக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்திருக்கிறது.

அந்த அளவுக்குத்தான் இருக்கிறது. ஆகவே மதம் மாறு கிறார்கள் என்கிற பொழுது மதம் மாறியவர்கள்தான் சொல்ல வேண்டும் ; என்னை இவர் கட்டாயப்படுத்தினார் என்று சொன் னால் அரசுச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கும். என்னை அடிமைப்படுத்தி, சேரும்படி செய்தார்கள் என்று யாராவது சொன்னால், அரசு அதிலே தலையிட உரிமையிருக்கிறது. இன்ன இன்ன வகையிலே, என்னை ஏமாற்றிக் கொண்டு போய், எனக்குத் தெரியாமலேயே, இன்னதென்று புரியாத நிலைமையிலே என்னைச் சேர்த்து விட்டார்கள் என்று சொன்னால், அதனை அடிப் படையாக வைத்து, அதற்குக் காரணமாக இருப்பவர்கள் மீது அரசைப் பொறுத்தவரையிலே நடவடிக்கை எடுக்கலாம்.





ஆனாலுங்கூட அப்படிப்பட்ட நிலைமையிலே நான் விரும்பித் தான் சேருகிறேன் என்று ஒருவன் சொல்லிவிடுவானானால் நாம் ஒன்றும் செய்ய முடியாது. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்ததைப் போன்று இந்த மாச்சரியங்கள் எல்லாம் இருக்கக்கூடாது என்பதற்குப் பெரியவர்கள், ஆன்றோர் கள், சான்றோர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், வள்ளுவர் எல்லோரும் எடுத்துச் சொல்லியுங்கூட இந்த நாடு கேட்பதாகவே இல்லை என்கிற நிலைதானிருக்கிறது. வள்ளுவரே சொன்னார்,

" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் "

என்று எடுத்துச் சொல்லியுங் கூட,

" அங்கமெலாங் குறைந்து அழுகு தொழுநோயாராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே "

என்று திருநாவுக்கரசு பாடியுங்கூட யாரும் கேட்பதாக இல்லை. எவ்வளவோ பேர் எடுத்துச் சொல்லியுங் கூட, ஆனாலும், அதை என்று பேராசிரியர் அவர்கள் கேட்டிருந்தால் இந்த நிலை வராது என்று பேராசிரியர் அவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள். மற்றவர்கள், கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, ஒருவன் நம்புகிறேன் என்று சொல்கிறபொழுது, நான் " பெயித்" வைக்கிறேன், நான் " பிலீவ் " பண்ணுகிறேன், நான் இந்தக் கொள்கையிலே நம்பிக்கை வைக்கிறேன் என்று சொல்கிற பொழுது, நாம் அதைத் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால், இப்பொழுது ஏற்பட்டிருக்கிற விளைவுகளை நீங்கள் பார்க்கிற பொழுது, இது புதிதாக ஏற்பட்ட ஒன்றல்ல. இருக்கிற நிலைமைகளை நீங்கள் பார்த்தீர்களானால், 1971 ஆம் ஆண்டு சென்சஸ் கணக்கெடுப்பின்படி, தமிழகத்திலே வாழ்ந்த மொத்த மக்களுடைய எண்ணிக்கை 4,11,99,169. அதிலே இந்துக்கள் மட்டும 3,66,74,150—அதாவது 89.01 சதவீதம். 89 சத விகிதத்தினர் இந்துக்கள். கிறித்துவர்கள் 23,67,749 பேர்கள். 5.74 சதவீதம். முஸ்லீம்கள் 21,03,899 பேர்கள்—5.10 சத வீதம். ஜைனர்கள் 41,097 —0,09 சதவிகிதம் பேர்கள். சீக்கியர்கள் 4,353 பேர்கள்—0.01 சதவிகிதம். மற்ற, மதமே எங்களுக்கில்லை என்று சொல்லுகின்றவர்கள் 7,918 பேர்கள் 0.1 சதவீதம். எதற்காக நான் சொல்லி வருகிறேன் என்றால், 4,11,99,169 பேர்களில் 3,66,74,150 பேர்கள் இந்துக்கள் இருக் கிறபொழுது, மற்ற 23 இலட்சம், 21 இலட்சம் இவர்களெல்லாம், 5, 6 நூற்றாண்டுகளாகவே மாறி, மாறி வருகிறார்கள். மாறியதனுடைய விளைவுதான் 23 இலட்சம் கிறித்தவர்கள் இருக்கிறார்கள். போன நூற்றாண்டு, அதற்கு முன் நூற் றாண்டு, 17, 18, 19-வது நூற்றாண்டுகளில் மாறியவர்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 ஆகஸ்ட் 24

14, 15-வது நூற்றாண்டுகளிலிருந்தே மாறி வந்தவர்கள் தான்
21,03,899 பேர்கள் முஸ்லீம்கள். மற்றைய வட மாநிலங்
களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற பொழுது, அங்கே அதிகம், இங்கே
அளவு குறைவு. ஆகவேதான், 5.1 சதவிகிதம் வருகிறது.
ஆகவே, மாறிக் கொண்டு வருவது இப்பொழுது மட்டும் திடீ
ரென்று வருவதல்ல, எப்பொழுதும் மாறுகிறார்கள். மாண்புமிகு
உறுப்பினர் இஸ்மாயில் அவர்கள் கூறியது போன்று தாழ்ந்தப்
பட்டவர்கள் முஸ்லீம்களாக மட்டும்தான் மாறுகிறார்கள் என்று
அல்ல. தாழ்த்தப்பட்டவர்கள் கிறிஸ்தவ மதத்திற்கு ஏராள
மாக மாறியிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் பௌத்த
மதத்திற்கு மாறி இருக்கிறார்கள், இஸ்லாம் மதத்திற்கு மாறி
இருக்கிறார்கள். மற்றைய, மேல் வகுப்பினர், ஜாதி இந்துக்
களில் உயர்ந்த வகுப்பினர் கூட கிறித்தவ மதத்திற்கு மாறி
இருக்கிறார்கள்.

[பிற்பகல் 12–10]

அவர்கள் கிறிஸ்தவர்களாக மாறி இருக்கிறார்கள். முஸ்லீம்
களாக மாறி இருக்கிறார்கள். உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள்
இப்படி திடீரென்று, திடிரென்று இஸ்லாம் மதத்தைத் தழுவு
கிறார்களே ஏன் என்று கேட்டால், இங்கே இருந்தால் ஒரு கல்
யாணம் தான் செய்து கொள்ளலாம், அங்கே போனால் 4 கல்
யாணம் வரை செய்து கொள்ளலாம், எனவே அங்கே போகிறோம்
என்று சொல்லிவிட்டுப் போகிறார்கள். அவர்களை எல்லாம்
நாம் திருப்பி மாற்றுவது என்றால் எளிதிலே நடைபெறுவ
தில்லை அது. அதுமட்டும் அல்ல, ஏன் இதைச் சொல்கிறேன்
என்றால் எல்லா மதத்தினர்களும் மாறி இருக்கிறார்கள். 1944 ஆம்
ஆண்டு கட்சிகளும், அரசியலும் இல்லாத போதே, சண்டை
நடைபெறுகிறபோதே, வெள்ளைக்காரன் ஆண்டபோதே கூட,
திருநெல்வேலி மாவட்டத்தில் மா-ஞூர் என்னும் இடத்தில் இருக்
கிற தெற்குப்பட்டி என்ற இடத்தில் 170 ஆதிதிராவிடர்கள்
இஸ்லாமிய மதத்தைத் தழுவி இருக்கிறார்கள்.
1944-ஆம் ஆண்டு குரிச்சி என்கிற கிராமத்தில் 40 ஆதிதிராவிடர்
கள் இஸ்லாமைத் தழுவி இருக்கிறார்கள். 1944-ஆம் ஆண்டிலே
சம்பநூரம் என்ற கிராமத்தில் 23 ஆதிதிராவிடர்கள் மாறி இருக்
கிறார்கள். 1960-ஆம் ஆண்டிலே வடகரை மீனாட்சிபுரத்தில்
இருந்து 2 மைலில் உள்ள அச்சம்புதூர் என்ற காவல் சரகத்திற்கு
உட்பட்ட இடத்தில் பல குடும்பத்தில் உள்ளவர் இஸ்லாமியத்
துக்கு மாறி இருக்கிறார்கள். 1965லே குற்றாலம் காவல்
நிலைய சரகத்திற்கு உட்பட்ட சிந்தாமணி என்ற கிராமத்தில்
பல குடும்பத்தினர் இஸ்லாமியராக மாறி இருக்கிறார்கள்.
1972லே குற்றாலம் காவல் சரகத்திற்கு உட்பட்ட நன்னகரம்
கிராமத்தில் 36 பேர்கள் இஸ்லாமிய மதத்தைத் தழுவி இருக்



1981 ஆகஸ்ட் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கிறார்கள். 1975-லே செங்கோட்டை காவல் நிலைய சரகத்
தைச் சேர்ந்த மேக்கரை யுசுப் என்று அழைக்கப்படும் தங்கராஜ்
தன்னுடைய குடும்பத்தினருடனும், மற்ற குடும்பத்தினருடனும
சேர்ந்து மாறி இருக்கிறார். தென்காசி காவல் நிலைய சரகத்
திற்கு உட்பட்ட பனியன்போத்தை கிராமத்தில் 1977லே 3
கிராமத்தினர் இஸ்லாமியத்தில் சேர்ந்து இருக்கிறார்கள். 1977
தென்காசி தக்காய்த் தெருவைச் சேர்ந்த 3 குடும்பத்தினர் சேர்ந்து
இருக்கிறார்கள். நான் குறிப்பிட்டு ஒன்றிரண்டுதான் சொல்லி
இருக்கிறேன். ஆண்டுக்கு எடுத்தால் ஏராளமாக எடுக்கலாம்.
எதற்குச் சொல்லுகிறேன் என்றால், இது எப்போதும் நடை
பெறுகிற ஒன்றுதான்.

அதுமட்டும் கூட அல்லாமல், சென்ற ஆண்டு பார்ப்போ
மானால் கூட 1980-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27-ஆம் நாள்
கூரையூர்-மதுரைத் தெற்குப் பகுதியில் 220 பேர்கள்—ஆதி திரா
விட இனத்தைச் சேர்ந்தவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவி
இருக்கிறார்கள். இதை ஏன் சொல்ல வருகிறேன் என்றால்
அப்போதெல்லாம் கூக்குரல் எழுப்பவில்லை. மீனாட்சிபுரம்,
மீனாட்சிபுரம் என்று சொல்லி, திடீரென்று அதிசயமாக நடந்த
மாதிரி, பல மாதங்கள் கழித்துப் பத்திரிகையிலே போட்டு,
அதற்கு ஒரு விளம்பரம் கொடுத்து, இப்போது ஏதோ ஒரு
தீர்த்த யாத்திரை தலமாக அதை ஆக்கி, எல்லோரும் சென்று
பார்க்கிறார்கள். மீனாட்சிபுரத்தில் இருக்கின்ற மக்கள், இதற்கு
முன்னாலே இப்படிப்பட்ட முக்கியமானவர்கள் எல்லாம் இது
வரையிலும் வரவில்லை, அவர்களை எல்லாம் நாங்கள் பார்த்ததே
இல்லை, என்று சொல்லி இப்போது ஒரு நிலை வந்ததற்குப்
பிறகு எங்களைப் பார்க்கிறார்கள் என்று சொல்லுகிற அளவுக்கு
மீனாட்சிபுரத்தில் 500க்கும் மேற்பட்டவர்கள் மாறி இருக்கிறார்
கள். மாறியது இந்த ஆண்டு பிப்ரவரித் திங்கள் 19-ஆம் நாள்.
இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் அரசாங்கத்தின் அத்து
மீறிய நடவடிக்கையால், காவல் துறையின் அத்துமீறிய செயல்
களால் கட்டுக்கடங்காத அவர்களுடைய கெடுபிடிகளால் இப்படி
ஏற்பட்டது என்று சொன்னார்கள்.

இது நடந்தது 19—2—1981 அன்று. அப்படி ஏதாவது
கெடுபிடி நடந்திருந்தால் 2 அல்லது 3 நாட்களில் அது இங்கே
வந்திருக்கும் அதற்குப் பிறகு 3 மாதங்களுக்கு நாம் சட்ட
மன்றத்தை நடத்திக் கொண்டு வந்திருக்கிறோம். இராமநாத
புரத்திலே நடை பெற்ற இனக்கலவரங்களைப் பற்றி எல்லாம்
விரிவாகப் பேசி எல்லோரும் ஒற்றுமையாக இருந்து, பொறுப்
புணர்ச்சியோடு எல்லாத் தலைவர்களும் இதிலே அக்கரை செலுத்
தியதன் காரணமாக இது மேற்கொண்டு பரவாமல் அதற்கான
முயற்சிகள் எடுத்தோம். அப்போது கூட இந்தப் பிரச்சினை
வரவில்லை. இந்தக் கெடுபிடி அங்கே இருக்குமானால் இந்தக்
கெடுபிடிகளின் காரணமாகத்தான் அவர்கள் மாறினார்கள்

என்ற நிலை இங்கே இருக்குமானால் அது சரியல்ல. இது நடந்தது பிப்ரவரி 19, பின்னர் மார்ச் போய், ஏப்ரல் போய், ஜூன் போய், பிறகு சட்டமன்றம் முடிந்ததற்குப் பிறகுதான் பத்திரிகைகளிலே மீனாட்சிபுரம் பற்றி அதிகமாக அடிபட்டது. எல்லோரும் வந்து கேட்கிற அளவுக்கு இருக்கிறது.

இதற்கு என்ன காரணம் என்று கண்டுபிடிப்பதிலே அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிக அக்கறையோடு இருக்கிறார்கள் என்பதை பலமுறை எடுத்துத் தெரிவித்திருக்கிறோம். ஏற்கனவே எடுத்துச் சொன்னதைப்போல வன்முறை மூலமாகவோ, கட்டாயப்படுத்தியோ பேராசை காரணமாகவோ சேர்க்கப்பட்டிருப்பார்களானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மத்திய அமைச்சர்களும் குறிப்பிட்டுக்காட்டியிருக்கிறார்கள். உள்துறை அமைச்சரும் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் அல்ல, இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களிலே ஏற்படுகிறபோது கூட மத்திய உள்துறை அமைச்சரை கேட்கிறபோது மாண்புமிகு ஜெயில்சிங் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி ஏதாவது வெளி நாட்டினுடைய பணம் வந்து சேர்ந்திருக்கிறது என்று இருக்குமானால் மத்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று வாக்குறுதி தந்திருக்கிறார்கள். ஆனால் கட்டாயம் கொடுக்கப்பட்டது என்பதை யாரும் தெளிவாகச் சொல்லவில்லை. வாங்கியவர்கள், வாங்கினோம் என்று சொன்னால் ஒழிய, அதை நிரூபிக்க முடியாது.

வெளிநாட்டிலிருந்து அன்னிய செலாவணியோ, மற்றவைகளோ வருகிற அளவிற்கு இருக்குமேயானால் அதை முழுமையாக கவனிக்கிறோம் என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறார்கள். இது பரவலாக பத்திரிக்கைகளில் அடிபடுகிறதே தவிர, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன மாதிரி இந்த இடத்தில், இப்படிப்பட்டவர்கள் கொடுத்தார்கள் என்று திட்டவட்டமாக சொல்கிற நிலை ஏற்படவில்லை.

மத்திய அரசும் சரி, மாநில அரசும் சரி இதுபற்றி விரிவாக ஆராய்ந்து கொண்டிருக்கிறது. தமிழகத்திலே மதமாற்றம் குறித்து 1980-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதியிலிருந்து 1981-ம் ஆண்டு ஜூன் 30-ம் தேதி வரையில் ஒரு கணக்கு எடுத்து பார்த்த போது—கெசட்டில் வந்த கணக்கு மாத்திரம், நான் இந்த மதத்திலிருந்து இந்த மதத்திற்கு மாறி விட்டேன். என்னுடைய பெயரை இன்ன பெயரிலிருந்து இன்ன பெயராக மாற்றிக் கொண்டு விட்டேன், என்று சட்டரீதியாக கெசட்டிலே வெளியிடுகிறார்கள். அநேக பேர்கள் கெசட்டில் வெளியிடாமல் மடங்களிலே. போய் சேர்கிறார்கள்; ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம் என்று போய் அவற்றில் சேர்கிறார்கள் இவ்வாறு பல





போய் சேர்கிறார்கள். அந்த மதமாற்றப்பான நிலையங்களில் கணக்கு நம்முடைய அரசுக்கு வரமுடியாது. ஆரிய சமாஜம் மற்றவர்களிடம் போய் கேட்டால் தெரியும். அரசாங்கத்திற்கு வந்திருக்கிற கெசட்படி கணக்கிட்டுப் பார்த்தால், இந்த ஓராண்டு காலத்தில் 1321 கிறிஸ்தவர்கள் இந்துவாக மாறியிருக்கிறார்கள் இந்துக்கள்தான் முஸ்லீம்களாக மாறியிருக்கிறார்கள் என்பதல்ல. மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டபடி மாறிய வர்கள் எப்படி மாறியிருப்பார்கள் என்றால் அங்கு சலுகை இல்லை இங்கே வந்தால் சலுகை இருக்குமென்று கூட வந்திருக்கக்கூடும். ஆனால் மதம் மாறியிருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். 1,321 பேர்கள் மாறியிருக்கிறார்கள் என்று கொடுத்திருக்கிறார்கள், இந்த ஆண்டு மே மாதம் 27-ம் தேதி வந்த கெசட்டை நாம் பார்ப்போமேயானால். கிறிஸ்துவ மதத்திலிருந்து 42 பேர்கள் இந்துவாக மாறியிருக்கிறார்கள். இந்துக்களிலிருந்து 4 பேர்கள் முஸ்லீம்களாக மாறியிருக்கிறார்கள். ஒன்றை நான் படித்து காண்பிக்கிறேன்.

Thiru I. Jesiv Christian Son of Thavamani born on 20th June 1927, residing at Kailasapuram reconverted to Hinduism with the name Senthilkumar.

ஆகவே கிறிஸ்துவ மதத்திலிருந்து 1,321 பேர்கள் வந்திருக்கிறார்கள். இந்த ஓராண்டு காலத்தில் கெசட்டில் மட்டும் பார்ப்போமேயானால் 598 பேர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் முஸ்லீம்களாக மாறியிருக்கிறார்கள். 7, 8 முஸ்லீம்கள் இந்துவாக மாறியிருக்கிறார்கள். முஸ்லீம்களாக போனவர்கள் கூட 7, 8 பேர்கள் இந்துக்களாக வந்திருக்கிறார்கள். மீனாட்சிபுரத்தை இதில் சேர்க்கவில்லை.

மீனாட்சிபுரத்தில் 558 பேர்கள் சேர்ந்தார்கள் என்றும், சேர்ந்தவர்களில் 38 பேர்கள் மறுபடியும் இந்துக்களாக வந்திருக்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள். இங்கே அவ்வளவு தாழ்த்தப்பட்டவர்களும் முஸ்லீம்களாக மாறவில்லை. இன்னும் மாறாத தாழ்த்தப்பட்டவர்களும் அங்கே இருக்கிறார்கள் காவல் துறை கெடுபிடி என்பதும், அத்துமீறல் என்பதும் எல்லா ஆட்சி காலத்திலும் அவ்வப்போது, எல்லா இடங்களிலும் எதிர் கட்சி வரிசையிலிருந்து சுட்டிக் காட்டுகிற ஒன்றுதான். திடீரென்று மீனாட்சிபுரத்தில் மட்டும் இந்த நிலைமை வந்தது என்று சொல்லமுடியாது. ஒரு சிலர் மாறியிருக்கிறார்கள். மாறியிருக்கிறவர்களை பலபேர் போய் சந்தித்திருக்கிறார்கள். சந்தித்தவர்களிடம் அவர்களாவது, என்னை கட்டாயப்படுத்தி சேர்த்திருக்கிறார்கள் என்றும், என்னை வற்புறுத்தி சேர்த்திருக்கிறார்கள் என்று ஸ்டேட்மென்ட் கொடுத்திருப்பார்களானால், இந்த அரசு கூட நடவடிக்கை எடுத்திருக்கக்கூடும். பாராளுமன்ற

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 ஆகஸ்ட் 24

உறுப்பினர்கள் போய் பார்த்து விட்டு வந்திருக்கிறார்கள்
பத்திரிகையாளர்கள் போய் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள் ;
வடநாட்டில் இருந்து மத்திய அமைச்சர்கள் போய் வந்திருக்கிறார்
கள். யாரிடத்திலாவது என்னைக் கட்டாயப்படுத்தி சேர்த்திருக்
கிறார்கள், காப்பாற்றி மறுபடியும் இந்து மதத்திற்கு என்னை
கொண்டு செல்லுங்கள் என்று கூறியிருக்கிறார்களா என்றால்,
இல்லை. ஆண்டாண்டு காலமாக புறக்கணிக்கப்பட்டுவந்தவர்
களாக ஆக்கப்பட்டவர்கள், கை கொடுத்து தூக்கி
விட்டால் தான் மற்ற சமுதாயத்தினருடைய அளவுக்கு
வந்து நிற்க முடியும். அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய
வர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு சில சலுகைகள் தந்தால் தான்,
பிற்படுத்தப்பட்டவர்களுக்கு சலுகைகள் தந்தால் தான், பள்ளத்
தில் இருப்பவர்கள்களை கை கொடுத்து தூக்கி விட்டால் தான்
மேலே இருப்பவர்கள்களுக்கு சமமாக இருக்க முடியும் என்று
சலுகைகளை ஆண்டுக்காண்டு செய்து வருகிறார்கள்.

(பிற்பகல் 12-20).

அந்த முறையில் தமிழகத்தில் இன்று மற்ற மாநிலங்களை
விட தாழ்த்தப்பட்ட மக்கள் பேரில், பிற்படுத்தப்பட்ட மக்கள்
பேரில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அது இந்த
அரசால் மட்டும்தான் செய்யப்பட்டு வருகிறது என்பதல்ல ;
தமிழகத்தில் இருந்த ஒவ்வொரு அரசும் தொடர்ந்து தாழ்த்தப்
பட்ட, பிற்பட்ட மக்கள்மீது அதிக கவனம் செலுத்தி, இயன்ற
வரையில், முடிந்தவரையில் நன்மைகள் செய்து வந்திருக்கிறது.
அவர்களுக்கு நன்மை செய்வதில் மற்ற எந்த மாநிலத்தையும்விட
இங்கே குறைந்துவிடவில்லை ; வீழ்ந்துவிடவில்லை. நாடு விடு
தலை பெற்ற காலத்திலிருந்து தொடர்ந்துஅவர்களுடைய முன்
னேற்றத்திற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்திருக்
கின்றன. இது போதாது என்று வேண்டுமானால் சொல்லலாம்.
இன்னும் அதிகம் செய்ய வேண்டுமென்று சொல்லலாம்.
மாச்சரியங்கள் குறைவதற்கு, அரசுக்கு இருக்கின்ற வரம்புக்கு
உட்பட்டு, மற்றவர்களுக்கு எந்தவிதமான சங்கடமும் ஏற்படாத
வகையில் ஏதாவது செய்ய முடியும் என்றால் செய்யலாம்.

பேராசிரியர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.
அதைப்போல நடைமுறைகளிலே, ஜாதி சடங்குகளிலே, சமய
சடங்குகளிலே, சமய விதி முறைகளிலே இருக்கின்ற தன்மையை
மாற்றுகின்ற அந்த அதிகாரம் இன்றைக்கு மாநில அரசுக்கோ
அல்லது மத்திய அரசுக்கோ இல்லை. பிரச்சாரத்தின் மூலம்
தான் அந்தந்த மதத் தலைவர்கள் எடுத்துச் சொல்லுவதன்
மூலம்தான் மற்றவர்கள் சந்தேகங்களைப் போக்கிக்கொள்ள
கடமைப்பட்டிருக்கிறார்கள். அது அல்லாமல் நாம் தலையிட்டு,



1981 ஆகஸ்ட் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இந்த மதம் இப்படித்தான் இருக்க வேண்டும், அந்த மதம் இப்
படித்தான் இருக்க வேண்டும், சடங்குகள் இப்படி இப்படித்தான்
இருக்க வேண்டும் என்ற முறையில் சொல்ல முடியாது. பகுத்தறி
வாளர்கள் என்ற முறையில் பல்வேறு கருத்துக்களைப் பிரச்
சாரம் செய்யலாம். ஆனால் அமைச்சர் என்ற முறையிலே,
அரசு சார்பிலே நாம் சொல்ல முடியாது. பகுத்தறிவாளர்
என்ற முறையில் பல்வேறு கருத்துக்களைச் சொல்ல நமக்கு
உரிமை உண்டு. மதம் உண்டு என்று சொல்லலாம் ; கடவுள்
இல்லை என்று சொல்ல உரிமை உண்டு ; கடவுள் உண்டு என்று
சொல்ல உரிமை உண்டு ; இந்த மதத்திலே இன்னின்ன
குறைபாடு இருக்கிறது என்று சொல்ல உரிமை உண்டு ; அதைப்
போக்க தன்னுடைய கருத்துக்களைச் சொல்ல உரிமை உண்டு ;
அந்தந்த மதத்தின் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்ய உரிமை
உண்டு. அந்த வகையிலே செய்யலாமே தவிர அரசு தலையிட்டு
எதுவும் செய்ய முடியாது. அதனால்தான் இந்து சமய
அறநிலைய பாதுகாப்புத் துறை என்று வைத்திருக்கிறோம்.

அண்மைக் காலத்தில் பல்வேறு கருத்துக்கள் நிலவி வந்ததால்
இந்த விடுதலை நாளிலாவது அவர்களுக்கு ஒரு உணர்வு பிறக்க
வேண்டும் என்ற அடிப்படையில் ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாள்
அனைவரும் ஒன்றாக அமர்கிறோம், அதனால் மதமாச்சரியங்கள்
கருத்து வேறுபாடுகள் குறையும் என்ற வகையிலே கோயில்
களிலே ஒன்றாகச் சாப்பிட ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த
முறைகூட இப்போது ஏற்பட்டது அல்ல. 1926, 1927, 1928
ஆம் ஆண்டுகளிலே ஒரு ஜாதிக்காரன் இன்னொரு ஜாதிக்கார
ரோடு உட்காரக் கூடாது என்றிருந்த நேரத்திலேயே, தந்தை
பெரியார் அவர்கள் நோட்டீஸ் போட்டு, சமபந்தி போஜனம்
இருந்தாக வேண்டுமென்ற முறையை உருவாக்கினார்கள். அதற்
குப் பிறகு நாடு முழுவதுமாக திருந்திவிட்டது என்று சொல்ல
முடியாது ; ஆனால் ஓரளவுக்கு நிலைமை திருந்தியது. இன்
றைக்கு ஓட்டல்களில் நடப்பது சமபந்தி தான் ; கல்யாண வீடு
களில் நடப்பது சமபந்தி தான். அண்மையில் ஒருமத மாச்சரியம்
ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையில், அவர்களுக்கு ஒரு உணர்வு
ஏற்பட வேண்டும், நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்ற
முறையில் விடுதலை நாளில் சமபந்தி போஜனத்திற்கு
ஏற்பாடு செய்யப்பட்டது ; அதிலே ஆதி திராவிடர்
களும் மற்றவர்களும் சேர்ந்து சாப்பிட்டார்கள். அது
பிரச்சனையை தீர்த்துவிடுமா என்றால் தீர்த்துவிடாது ; ஆனால்
அதற்கான உணர்வை ஏற்படுத்து வழி பிறக்கும்.

எனக்கு முன்னே இங்கே பல உறுப்பினர்கள் பல்வேறு கருத்
துக்களைச் சொன்னார்கள். மீனாட்சிபுரம், மீனாட்சிபுரம் என்று
வந்ததற்குப் பிறகு தான் இன்றைக்கு மதத் தலைவர்கள் எல்லாம்
இறங்கி வந்திருக்கிறார்கள். நீங்களும் அர்ச்சகர்கள் ஆகலாம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 ஆகஸ்ட் 24

நாங்கள் வேண்டுமானால் பரிந்து தருகிறோம் என்று சொல் கிறார்கள். அந்த அளவுக்கு நிலைமை மாறியிருப்பதை அறிந்து நாம் மகிழ்ச்சியடையலாம்.

மதம் மாறியவர்களைக் கூட ஒருசமயம் கூப்பிட்டுக் கேட்ட போது, மறுபடியும் நாங்கள் வந்துவிடுகிறோம், ஆனால் எங்களை கொண்டு சேர்ப்பீர்கள் என்று கேட்டார்கள். அவர்கள் தங்களை முதலியாராகவோ, செட்டியாராகவோ, ஐயராகவோ, ஐயங்கா ராகவோ சேர்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அதை எப்படி நான் செய்ய முடியும் அல்லது நாங்கள் செய்ய முடியும் ? அரசு எப்படி செய்ய முடியும் ? இராமானுஜம் மாதிரி எல்லோரை யும் ஐயங்கார் ஆக்க வேண்டுமென்றால் அது எங்களிடம் இல்லை. மதத் தலைவர்களைத்தான் போய் கேட்க வேண்டும் ; அவர்கள் தான் அது பற்றிச் சொல்ல வேண்டும். ஆக, அவர்களுக்கு திரும்பிவர எண்ணம் இருக்கிறது. ஆனால் எங்கே உட்காருவது என்ற சந்தேகம் இருக்கிறது. எங்கே, யார் என்பதைப்பற்றியும் மதத் தலைவர்கள்தான் தெளிவுபடுத்த வேண்டும். ஆனால் தமிழகத்தில் இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு பொருத்த மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இங்கே வள்ள லார், பகுத்தறிவுத் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பகுத்தறிவு கருத்திலே நம்பிக்கைகொண்ட மற்றவர்கள் எல்லாம், திரு.வி.க. போன்றவர்கள் எல்லாம் நல்ல கருத்துக் களைப் பரப்பிய காரணத்தால் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது, மதமாச்சரியம் இல்லாத அள வுக்கு இருக்கிறது.

அந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கின்ற நிலைமையினை உணர்ந்து பார்த்தால் நமக்கு இருக்கின்ற பொறுப்புக்குத் தகுந்தபடி அதா வது அரசாங்கத்திற்கு இருக்கக்கூடிய கடமையின் அடிப்படையில் பார்க்கின்ற போது என்னென்ன பணிகளைச் செய்யவேண்டுமோ அவற்றைச் செய்கிறது. மத்திய அரசுக்கும் இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதி இருக்கிறார்கள். மத்திய அரசும் இதுபற்றி ஆராய இருக்கின்றது. மாநில அரசும் ஆராயும். இந்த அடிப்படையிலே அரசு செய்யவேண்டிய கடமைகளைத் தொடர்ந்து செய்து வருகிறது. இன்றும் தொடர்ந்து செய்யும். ஆனால் சமயத் தலைவர்கள் மனிதத் தன்மையோடு அன்பு, அறம், அருள், ஈவு, இரக்கம் போன்ற பண்புகளுக்கு மதிப்பு கொடுத்து, ஜாதியைப் பற்றிக் கருதாமல், எந்த ஜாதியைச் சேர்ந்தவர் என்று அறிவை மாய்க்கிற, உழைப்பினை மறக்கிற, உண்மையை மறுக்கின்ற பண்பினை வளர்க்காமல் ஒரு நல்ல சூழ் நிலையை உருவாக்க எல்லோரும் சேர்ந்து பாடுபட்டால் இப்படிப் பட்ட ஒரு மாச்சரியத்திற்கு இடம் ஏற்படாது. ஆகவே இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட மாச்சரியத்தை மாற்றி நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு நாம் அனைவரும் எடுத்துச்



1981 ஆகஸ்ட் 24] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

சொன்ன கருத்துக்கள் பயன்படவேண்டும். அந்த வகையிலே இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்காவிட்டாலும் ஒத்தி வைத்தது மாதிரி அதிக நேரம் எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டது. எனவே இதற்கு மேலும் ஒத்திவைக்கவேண்டிய அவசி யம் இல்லை என்று சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : ஒத்திவைப்புத் தீர்மானத் திற்கு எடுத்துக்கொள்ளப்படும் நேரம் 1 மணி நேரம்தான். ஆனால் இங்கே 2 மணி நேரத்திற்கு மேல் எடுத்துக்கொள்ளப் பட்டு விட்டது.

மாண்புமிகு நிதித்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. அறிவிப்பு

### அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள்—நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 256 (1)-ன் கீழ் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்.—

(1) மாண்புமிகு பேரவைத் தலைவர்—
திரு. க. ராசாராம்.
(2) மாண்புமிகு முதல் அமைச்சர்—
திரு. எம். ஜி. இராமச்சந்திரன்.
(3) மாண்புமிகு பேரவை முன்னவர்—
டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.
(4) மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர்—
திரு. ச. இராமச்சந்திரன்.
(5) மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர்—
டாக்டர் மு. கருணாநிதி.
(6) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—
திரு. பி. எச். பாண்டியன்.
(7) திரு. க. அன்பழகன்.
(8) திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்.
(9) திரு. நா. சுந்தரராஜ்.
(10) திரு. என். சங்கரய்யா.
(11) திரு. சோ. அழகர்சாமி.
(12) திரு. குமரி அனந்தன்.
(13) திரு. திருப்பூர் இரா. மணிமாறன், அரசு கொறடா.
(14) திரு. எஸ். ஆண்டித்தேவர்.
(15) திரு. பா. நெடுமாறன்.
(16) திரு. பி. முகமது இஸ்மாயில்.
(17) திரு. ஜி. மூர்த்தி.

## 5. கவன ஈர்ப்புகள்.

### அ. அரசுப்பள்ளி ஆசிரியர்களது பொது மாற்றம்.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவர் அவர்களே, 'ஊராட்சி ஒன்றிய பள்ளிகளாக இருந்து தற்போது அரசுப் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு பொது மாற்றம் சில ஆண்டுகளாக நடைபெறாததால் ஆசிரியர் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 21—6—1980 அன்று தமிழக சட்டமன்ற உறுப்பினர்களிடம் ஆற்றிய உரையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்க அரசு முடிவு செய்துள்ளது என்று குறிப்பிட்டு இதுபற்றி அரசு செயல்முறைகளை வகுக்கும் என்று அறிவித்தார்கள். இதையொட்டி ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்குவதற்கு மேற்கொள்ள வேண்டி செய்யவேண்டிய நிர்வாகம் மற்றும் பிற மாற்றங்களைப் பற்றி விளக்கமாக ஆராய்ந்து பரிந்துரைகளை அரசுக்கு வழங்க 5—10—1980 அன்று ஒரு உயர்மட்டக்குழுவை அரசு நியமித்தது. இதனை தொடர்ந்து அரசு 9—3—1981 அன்று அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களும் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்படுவர் என்று ஆணை வெளியிட்டது. நிர்வாக வசதியைக் கருதி அரசு மறு உத்தரவு போடும்வரை ஆசிரியர்களை ஊராட்சி ஒன்றியத்திற்குள்ளாகவோ அல்லது ஒரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து மற்றொரு ஊராட்சி ஒன்றியத்திலோ மாற்றும் உத்தரவை உடனடியாக நிறுத்தி வைக்கவேண்டுமென்றும், ஏற்கனவே மாற்றல் உத்தரவை வெளியிட்டு இருந்தாலும் அதையும் நிறுத்தி வைக்கவேண்டுமென்றும் சம்பந்தப்பட்ட அனைத்து ஒன்றிய ஆணையருக்கும் அறிவிக்கப்படவேண்டுமென்றும் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு 13—4—1981-ல் உத்தரவு வழங்கப்பட்டது.

[பிற்பகல் 12-30]

1-5-81-க்கு பிறகு ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்கள மாற்றியதை தொடர்ந்து அவர்களுக்கு ஊதியம் வழங்குதல், பிற் ால ோமி பு நி ணக்கு மாற்றம் போன்ற வற்றில் ஏற்பட்டுள்ள நிர்வா சிக்கல்கள் முடிந்த உடன் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு பொது மாறுதல் (General Transfer) வழங்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். இருப்பினும் அவசியமான மாறுதல்கள் ஆணையிடப்பட்டு, தற்பொழுதும், செயல்படுத்தப்படுகின்றது. எனவும் பாதிக்கப்பட்ட நிலை நிலவவில்லை. இதுபற்றி ஆசிரியர்கள் ஒருவரும் குறைபாடும் சொல்லவில்லை.



1981 ஆகஸ்ட் 24] [திரு. செ. அரங்கநாயகம்.]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

1-6-81-க்கு முன் ஒவ்வொரு ஆண்டும் ஊராட்சி ஒன்றிய ஆசியர்களுக்கு பொதும றுதல்கள் அந்தந்த ஒனறிய ஆணை யர்கள ல் (General Transfer) வழங்கப்பட்டு வந்துள்ளது. பொது மாற்றம், (General Transfer) சில ஆண்டுகளாக நடைபெறாததால் ஆசிரியர்கள் மத்தியில் கவலை ஏற்பட்டுள்ளது என்று உறுப்பினர் குறிப்பிட்டதற்கு ஆதாரம் ஏதும் இல்லை.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில், உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் 1976-க்குப் பிறகு, எந்த ஒன்றி யத்திலேயும் யூனிவர்சலாக, இந்த பொது மாற்றம் என்றுசொல் லப்படுகிற மாற்றம் நடைபெறவேயில்லை என்பதை இந்த நேரத் திலே தெரிவித்துக் கொள்வதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தேவைப்படுகிற நேரத்தில் அந்தந்த யூனியன்களில் தேவைப்படுகிற விதத்தில் மியூச்சுவல் டிரான்ஸ்பர் என்ற வகையில் நடைபெறுகிறதே தவிர, எல்லா ஒன்றியங்களிலும் மாறுதல்கள் நடைபெறவில்லை. நான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்ததின் காரணம், ஆசிரியர் சங்கத்திலிருந்து இதற்கான கோரிக்கை அரசுக்கு வந் ததா வரவில்லையா என்பதை எடுத்துக்காட்டுவதற்காக இல்லை.

கோரிக்கை என்று வராவிட்டாலும் கூட 76-க்குப் பிறகு எங்கேயும் பொது மாற்றங்கள் இல்லை என்பதினால், இயல் பான சில குறைபாடுகள் நீங்குவதற்கு வழி இல்லாமல் இருக்கிறது என்கிற குறைபாடு ஆசிரியப் பெரு மக்களிடையே இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் எதிர்ப்பார்த்து ஏமாறுகிறார்கள். மே மாதத்திலே இந்த ஆண்டு டிரான்ஸ்பர் வேண்டாம் என்று அரசு ஆணை பிறப்பித்தது. பிறகு, ஜூலையில் மாற்றம் செய்ய லாம் என்று மறு உத்தரவு போட்டது. அதற்காக ஆசிரியர்களும், கல்வி அதிகாரிகளும் முயற்சி செய்து கொண்டிருக்கிற நேரத்தில், இந்த ஆண்டு மாற்றங்கள் வேண்டாம் என்று இன்னொரு உத் தரவை போட்டு, ஆக மூன்று மாதங்களில் 3 உத்தரவை போடக் கூடிய சூழ்நிலையை அரசு ஏற்படுத்தியிருந் து. அதைப்பற்றி பரவாயில்லை, போனது போகட்டும் என்றாலும் கூட, மாண்பு மிகு அமைச்சர் அவர்களும் ஆசிரியராக இருந்திருக்கிறார். அவர்களுக்கும் ஆசிரியர்களின் சிரமங்களும் எதிர்ப்பார்ப்புக்களும் தெரியும். நானும் ஆசிரியராக இருந்திருக்கிறேன். ஆகவே, நான் அவர்களைக் கேட்டுக் கொள்வது, இந்தக் கல்வி ஆண்டி லாவது ஒரு பொது மாற்றத்தை உருவாக்கித் தந்து அவர்கள் எதிர் பார்த்ததைச் செய்ய, அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு பொது மாற்றம் இல்லை என்று நான் சொல்லவில்லை. இப்போது நிர்வாகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துக்களிலிருந்து கல்வித் துறை அதிகாரிகள் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதிலேயே பல பிரச்னைகள் இருக்கின்றன. அவர்களுடைய சம்பள விகிதங்களிலிருந்து சர்வீஸ் ரெஜிஸ்டர்கள் வரை பல வேலைகள் செய்யப்பட வேண்டியிருக்கிறது. ஆசிரியர்களுக்கு ஒன்றியங்களிலிருந்து ஒன்றியங்கள் என்பது மத்திரம் அல்லாமல், மாநில அளவிலே கூட மாற்றங்கள் தரக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, ஆசிரியர்களுக்கு எல்லாவிதமான முறையிலும் உதவிகள் செய்யத் தயாராக இருக்கிறோம். ஆனாலும் நிர்வாக முறையில் பல பணிகள் செய்யப்படவேண்டியிருக்கிறது. அதிலேயே பல பிரச்னைகள் சங்கடங்கள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளை, நிர்வாக மாற்றம் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகளை சரி செய்து விட்ட பிறகு, மாறுதல்களை ஏற்படுத்த யோசிக்கப்படும். நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. எஸ். இராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய தெளிவான விளக்கத்திற்கு நன்றி. அமைச்சர் அவர்கள் எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவாக மாறுதல்களுக்கான உத்தரவ அனுப்புவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, நிர்வாக மாறுதலின் காரணமாக, பல பிரச்சினைக... ஏற்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் சரிசெய்த பிறகுதான் இந்தப் பிரச்சினையைப் பார்க்க முடியும். ஆசிரியர்களிடமிருந்து அப்படிப்பட்ட கோரிக்கைகள் வந்தால் அதன்மீது பரிசீலனை செய்யலாம். ஆனால், நான் அழுத்தமாகச் சொல்கிறேன். இதுபற்றி ஆசிரியர்களி சங்கங்களிடமிருந்து எங்களிடத்தில் எந்த ஒரு கோரிக்கையும் இதுவரையில் வரவில்லை.

**ஆ. பட்டுக்கோட்டை வட்டங்களில் பாசனத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு.**

**திரு. மு. அம்பிகாபதி:** துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மா ட்டம் கல்லணைக் கால்வாய் மற்றும் சி.எம்.பி. பாசனப் பகுதிகளான மன்னார்குடி, பட்டுக்கோட்டை வட்டங்களில் போதிய தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் அவதிப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் து ற அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.





**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் நான் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றினை வைக்கிறேன்.

அறிக்கை.

இந்த ஆண்டு மேட்டூர் நீர்த் தேக்கம் பாசனத்திற்காக [—7—1981 அன்று திறந்து விடப்பட்டது. 14—7—1981 ன்று நீர் கல்லணையை அடைந்தது.

தஞ்சாவூர், மன்னார்குடி, பட்டுக்கோட்டை வட்டங்களில், ாவிரி மேட்டூர் திட்டத்தின் ஆயக்கட்டிலுள்ள நிலங்களுக்கு ல்லணைக் கால்வாயும், வடவாறு விரிவ க்கக் கால்வாயும ாசனமளிக்கின்றன. ஜுலை மாதம் நீர் வரத்து மிகக் குறைாகவே இருந்ததால், தண்ணீர் விடுவதில் சிக்கனத்தைக் கை ப்பிடிக்க நேரிட்டது. ஆகஸ்டு மாதம் 5-ந் தேதியிலிருந்து நீர் ரத்து அதிகமாகி, 21—8—1981 அன்று மேட்டூர் அணை மு ர் மட்டத்தை எட்டியது. ஆகவே நீர் விடுவதும் படிப்படியாக அதிகரிக்கபபட்டு 12—8—1981ந் தேதி முதல், வினாடிக்கு. 0,000 கியூசெக்ஸ் வீதம் நீர் விடப்படுகிறது.

கல்லணைக் கால் ாயில் 11—8—1981 முதலும், பெண்ணாற்றில் 15—8—1981 முதலும் முழு அளவு நீர் விடப்படுகிறது. தேவையான நீர், தற்போது எல்லாப் பகுதிகளுக்கும் கிடைக்கிறது.

20—7—1981 முதல் தஞ்சாவூர் கண்காணிப்பு பொறியாளர் அலுவலகத்தில், நீர் பற்றாக்குறை போன்ற புகார்களை உடனுக்குடன் கவனித்து தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக தனிக் குழு ஒன்று பணியாற்றி வருகிறது.

**திரு. மு. அம்பிகாபதி:** தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் பார்க்கிறபோது இந்தசபையிலே இருக்கிறவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். மேட்டூர் அணை நிரம்பி வழிகிறது. இரண்டு முறை வெள்ள அபாய அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் பட்டுக்கோட்டை, மன்னார்குடி தாலுக்காக்களில் வாலாஜாக் கோட்டை, கிளிஞ்சியூர், இலவனூர், ராதாநரசிம்மபுரம், இடையர்நத்தம் போன்ற நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு இன்னும் தண்ணீர் போய்ச் சேரவில்லை. இன்று காலை வரை போய்ச் சேரவில்லை. நாளை வரைப் போகாது. என்ன காரணம்? அங்கிருக்கக்கூடிய வாய்க்கால்கள் அகலமாக இல்லை. அவைகளில் கொள்ளளவு குறைவு. தண்ணீரின் வரத்தை விட விவசாயப் பகுதிகள் அதிகம். ஒரு போக சாகுபடி இரண்டு போகச் சாகுபடியாக மாறியிருக்கிறது. இந்த நிலையில் அந்தப் பகுதி விவசாயிகளுக்குத் தேவையான தண்ணீர் கிடைக்கவில்லை. என்பது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். எனவே சிறப்புக் கவனம்

[திரு. மு. அம்பிகாபதி] [1981 ஆகஸ்ட் 24

மூலம் அந்தப் பகுதி வாய்க்கால்களை அகலப்படுத்தி விரிவுபடுத்தி ஒரு தனித் திட்டத்தை சிறப்புத் திட்டத்தை அரசாங்கம் கொண்டு வருவதற்கு முன்வருமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கால்வாய் கொள்ளளவிற்குத் தக்கபடிதான் நீர் கொடுக்கமுடியும், அதைத் தாண்டிக் கொடுக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவர். ஆனால் இப்போது அவர்கள் சொல்கிற பிரச்சினை வேறு. அதைத் தனியாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால் அது குறித்து அரசாங்கம் ஆய்வு செய்யும்.

திரு. மு. அம்பிகாபதி : தற்போது தனி அதிகாரிகள் மூலம் அந்த வாய்க்கால்களில் அதிகமான தண்ணீர் விடுவதற்கு சிறப்புத் திட்டத்தை, தனி கவனத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ள முன் வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அதுதான் அரசின் கவனத்திற்கு இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. அரசாங்கம் கவனத்தைச் செலுத்தும்.

6. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, 1970-71, 1971-72 மற்றும் 1972-73 ஆம் ஆண்டுகளுக்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும், சட்டப் பேரவை நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய குழுவின் அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் ஒன்பதாவது (ஏழாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவு, தமிழ்நாடு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்றி, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.



1981 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஆ. குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு தமிழ்நாடு 1981

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

[பிற்பகல் 12-40]

இ. நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு தமிழ்நாடு 1981 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 56/1981).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 56/1981) ஆய்வுக்கு *எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் என்று கோருகிறேன்.

திரு. என் கிட்டப்பா : தலைவர் அவர்களே, இன்றைய தினம் நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ்.டி.எஸ். அவர்கள் ஒரு நல்ல தலைப்பின்கீழ் நாமெல்லாம் எதிர்பார்த்த காரியத்தை கொண்டுவருவார் என்று கருதிய நேரத்தில் அதாவது நிலஉச்சவரம்புபற்றி அவர்எடுத்துச் சொல்லுகின்ற தலைப்பின்கீழ், அவர் எடுத்துச் சொல்லுகின்ற காரியங்களைப் பார்க்கும்போது, மிகச் சாதாரணமானவை என்று என்னைப் போன்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தோன்றச் செய்கின்றது. குறிப்பாக, கரும்பு நிலம் அதிலும் மிகவும் குறிப்பாக ஆரூரான் சர்க்கரை ஆலை தொடர்புடைய கரும்பு

---

* 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பயிரிடக்கூடிய நிலங்களுக்கு, இந்தப் புதிய சட்டத்தை அறிமுகப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தின் வாயிலாக ஏதோ பெரிய காரியங்களைச் சாதிக்கப் போகிறார்கள் என்று என்னைப் போன்றவர்கள் எண்ணுவதற்கு இடமில்லாமல், மிகச் சாமார்த்தியமாக இதை அவர்கள் செய்திருக்கிறார்கள் என்றே நான் கருதுகிறேன். ஏனென்றா , குத்தகை காலத்தை நீட்டித்துக் கொள்வதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, அதை நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் கொண்டுவருவது என்பது மிகச் சாமார்த்தியமான ஒன்றுதான் என்று நான் கருதுகிறேன்.

இன்றைய தினம் அத்தகைய காரியங்களை அவர்கள் மேற்கொள்ளும்போது, 1961 ஆம் ஆண்டு காங்கிரஸ் பேரியக்கம் இந்த தமிழ்நாட்டை ஆண்ட காலத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தை முதன்முதலாக இங்கே கொண்டு வந்தார்கள். ஏறத்தாழ 17 இனங்களில் அந்தச் சட்டத்தின் அடிப்படையில் விதிவிலக்கு அளித்திருந்ததை, அன்றைய எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் அதைக் கண்டித்ததோடு மட்டுமில்லாமல், அந்த விதிவிலக்கு பலவற்றை நீக்கவேண்டும் என்று எடுத்துச் சொல்லியிருந்திருக்கிறது. அதிலும் மிகவும் முக்கியமான ஒன்று கரும்புத் தோட்டங்களுக்கு விதிவிலக்கு அளிக்கக் கூடாது என்பதாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பாக, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். விவரங்களை மிக நன்றாக உணர்ந்தவர்கள். அவர்களுக்கு மிக நன்றாகத் தெரிந்திருக்க முடியும். அந்த 17 இனங்களில் மேய்ச்சல் நிலங்கள் என்ற பெயராலும், கரும்புத் தோட்டங்கள் என்ற பெயராலும் இன்னும் மற்றமற்ற பெயராலும் இருக்கின்ற விதிவிலக்கு ஆகியவற்றைப் பற்றி எடுத்துச்சொன்ன நேரத்தில், அவைகள் ஏற்றுக்கொள்ளப்படாமல், அதற்குப் பின்னாலே திராவிட முன்னேற்றக் கழகம், டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், 1971 ஆம் ஆண்டிலே இதே சட்டமுன்வடிவிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். 1971 ஆம் ஆண்டில் கரும்புத் தோட்டங்களுக்கு விதிவிலக்கை ரத்து செய்தார்கள். அந்த ரத்து செய்யப்பட்ட நிலை பிற்காலத்திலே மீண்டும் மாற்றப்பட்டு, அந்த ரத்து செய்யப்பட்ட நிலை கைவிடப்பட்டது. அப்படி கைவிடப்பட்டதன் காரணமாக, கரும்புத் தோட்டங்களுக்கு உயிர் ஏற்பட்டது. நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், நமது அமைசரவையிலே உள்ள பெருந்தகையாளர்களுக்கும் மிகத் தாழ்மையோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய நில உச்ச வரம்பு எந்த அளவுக்கு தமிழகத்திலே தேவைப்படுகிறது? எந்த அளவுக்கு நில உச்ச வரம்பு சீர்திருத்தப்பட வேண்டியுள்ளது? இந்த நிலைமை எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டவர்கள். குறிப்பாக, ஒரு படத்தை, கிருஷ்ணனுடைய படத்தையோ, ராமனுடைய படத்தையோ ஒரு கட்டிடத்திலே மாட்டிவிட்டு அந்தப் பெயரால் அறக்கட்டளைகள் எ





நிலையில் பல நூறு ஏக்கரா நிலங்கள் எழுதி வைக்கப்படக்கூடிய சூழ்நிலை நில உச்ச வரம்பின் கீழ் வருகிறதா என்பதை எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

தஞ்சை மாவட்டத்திலுள்ளவர்கள் மிக நன்றாக அறிவார்கள். இந்த அவையிலே பத்து பன்னிரண்டு ஆண்டு காலமாக எடுத்துச் சொல்லப்படக்கூடிய கருத்து இது. இது நான் சொல்லுவது அல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்து விளக்கி வந்திருக்கிறார்கள், இதே பேரவையில், தருமபுரி ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம் என்று சொல்லும்போது மிகச் சாதாரணமாகத் தென்படலாம். ஆனால் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு உரிமை கொண்டாடிக் கொண்டு அந்த உரிமையைப் பல பேருடைய பெயர்களிலே பினாமியாக வைத்துக் கொண்டு இன்றைய தினம் குட்டி ராஜாக்களாக இன்றைய தினம் வரையிலும் கூட அவர்கள் இருந்து வருவதை நாம் காண்கிறோம்.

உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் அந்த நிலங்கள் எல்லாம் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும். குறைந்தபட்சம் நில உச்சவரம்புக்காவது உட்படுத்தப்பட வேண்டும். கோயில்களில் பூஜைகூடாது என்பதல்ல. கோயில் பூஜை நடப்பதற்கு வேண்டுமானால் தேவையான நிலத்தைக் கூட வைத்துக் கொள்வதில் ஆட்சேபணை இருக்க முடியாது. ஆனால், தருமபுர ஆதீனம் இருக்கிறது என்றால் அதற்கு ஆயிரம் ஏக்கர், ஐயாயிரம் ஏக்கர் நிலம் எதற்கென்று நான் கேட்க விரும்புகிறேன். அதிலே நேரடியாக உழுது பயிரிடக்கூடியவர்களுக்கு, நேரடியாக பாடுபடக்கூடிய விவசாயத் தோழர்களுக்கு அந்த நிலம் உரிமையாக்கப்பட வேண்டுமென்ற சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது சட்ட வடிவமாக்கி மேலே அனுப்பி வைத்தது. ஆனால் அன்றுள்ள சூழ்நிலையில் அது ஏற்றுக்கொள்ளப்பட முடியாமல் திருத்தப்பட வேண்டுமென்று திருப்பி அனுப்பப்பட்டது. நான் மிகப் பணிவோடு இந்த அவையிலுள்ளவர்களை, குறிப்பாக ஆளும் தரப்பிலுள்ளவர்களை, அவர்களுக்குத் தோழமையாக உள்ளவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதை நீங்கள் இன்று நிறைவேற்றித் தர வேண்டும். அதை நிறைவேற்றினாலொழிய இந்த நில உச்ச வரம்புகள் எல்லாம் மிகச் சாதாரணமான காரியங்களாகிவிடும். இரண்டு வேலி நிலங்கள், மூன்று வேலி நிலங்களை எடுத்துக் கொள்ள ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து விட்டோம். நில உச்ச வரம்புச் சட்டத்தின் அடிப்படையில் என்று சொல்லிக் கொள்வதில் அடையும் பெருமையை விட நேரிடையாக உழுது

[திரு. என். கிட்டப்பா] [1981 ஆகஸ்ட் 24

பயிரிடக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, பாடுபடக் கூடிய பாட்டாளித் தோழர்களுக்கு அந்த நிலத்தைக் கொடுப்பதற்கு வழிவகைகள் கண்டாலொழிய பெருமைப்படுவதற்கு வழியில்லை. உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் அண்ணா அவர்கள் இதே அவையிலே கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12–50]

கோயிலுக்கும் மடத்திற்கும் ஒரு துளி அளவுக்குக் கூட நிலம் சொந்தமாக இருக்கத் தேவையில்லை. ஆனால் அவைகளிலே நடக்க வேண்டிய காரியங்களுக்கு அவற்றை வேறு வகையிலே பயன்படுத்திக் கொள்ளலாம் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதை நான் இந்த மாசோதாவை அடிப்படையாக வைத்து இந்த மசோதாவின் தலைப்பை அடிப்படையாக வைத்துக் எடுத்துச் சொல்லி அதை நிறைவேற்றுகின்ற அடிப்படையில் இன்றைய அரசு, அண்ணாவினுடைய பெயரைச் சொல்லி ஆட்சி நடத்துகிற அருமைப் பெரியவர்கள் ஆளுகின்ற அரசு உடனடியாக நடவடிக்கை மேற் கொள்ளவேண்டுமென்ற கோரிக்கையை விடுத்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நனறி வணக்கம்.

**திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத் துணைத் தலவர் அவர்களே, தமிழக அரசு கரும்புப்பண்ணைக் கழகம் அமைக்கப்பட்டதினுடைய வரலாறு, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே கரும்புப்பண்ணை, மேய்ச்சல் நிலம் போன்றவற்றிற்கு வீரவிலக்குக் கொடுக்கப்பட்டதை எதிர்த்து 1970-ஆம் ஆண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிலமீட்சிப் போராட்டம் நடத்தியது. அதன் பிறகு, கரும்புப் பண்ணைகள், மேய்ச்சல் தரைக்கு அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டது. ரத்து செய்யப்பட்டவுடன் கரும்புப் பண்ணைக் கழகம் அமைக்கப்பட்டது. 4,007 ஏக்கர் உபரி நிலமும், சுமார் 2 ஆயிரம் ஏக்கர் டிரஸ்டுக்கும், மன்பதுல்லா சொசைட்டிக்கும் சொந்தமான நில சுமார் ஆயிரம் ஏக்கர் சிறு வியாபாரிகளுக்கும் சொந்தமான நிலமும் ஆக மொத்தம் 7 ஆயிரம் ஏக்கர் அமைப்பில் அந்தப் பண்ணை அமைக்கப்பட்டது.

அதிலே, சிறு விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கப்பட்டது. கோயில்களுக்கும், டிரஸ்ட்டுகளுக்கும் நிலம் விடப்பட்டது. அந்தப் பகுதியிலே உள்ள அரிசன மக்கள், நிலமற்றவர்களைக் கொண்ட கூட்டுப் பண்ணையாக அமைக்க வேண்டும் என்ற முறையிலே இது அமைக்கப்பட்டது. இன்றைக்கு 4,007 ஏக்கர் நிலம் தமிழ்நாடு அரசு கரும்புப் பண்ணைக் கழகத்தின் கீழ் இருக்கிறது. அது கலைக்கப்படக்கூடாது. இன்றைக்கு ஆல் இண்டியா டிரேட் யூனியன் காங்கிரஸ் அந்த நிர்வாகத்துடன் 12(3) ஒப்பந்தம்



1981 ஆகஸ்ட் 24] [திரு. மு. அம்பிகாபதி]

செய்து அந்தத் தொழிலாளர்களின் பணிகளை நிரந்தரமாக்கியிருக்கிறது, அங்கே உள்ள நிலங்களிலே இரண்டு, மூன்று போக சாகுபடி செய்யக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள எஞ்சின்கள், பம்பு செட்டுக்கள், எலக்ட்ரிசிடி அமைப்புக்கள், சாலை வசதிகள், நீர்ப் போக்குவரத்து வசதிகள் போன்ற வசதிகள் எல்லாம் செய்யப்பட்டு முன்மாதிரி ஸ்டேட் பார்ம் ஆக அது விளங்குகிறது.

அப்படி விளங்கக்கூடிய அந்தப் பண்ணையை மேலும் வளர்த்து அங்கே உள்ள தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது, ஆதாயத்தைப் பிரித்து அவர்களுக்குக் கொடுப்பது, விபத்துக்கால நட்ட ஈடு கொடுப்பது, ஓய்வூதியம் அளிப்பது போன்ற வசதிகள் செய்யப்பட வேண்டும். இன்றைக்கு அங்கே இருக்கின்ற 4,007 ஏக்கர் நிலத்திலே பணிபுரியக்கூடிய ஊழியர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய முறையிலே அந்த நிறுவனத்தை வலுவாக்கக் கூடிய முறையிலே மாற்றியமைக்க வேண்டும், அதைச் சிறப்பாக மேம்படுத்த வேண்டும்.

அந்த நிறுவனத்திலே நட்டம் வருகிறது என்ற கருத்து நிலவுகிறது. நட்டத்திற்கு என்ன காரணம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 1385, 1386, 1387 ஆகிய இந்த மூன்று பசலிகளிலேயும் வறட்சி, புயல், வெள்ளம் இவற்றின் காரணமாக தமிழ்நாடு கரும்புப் பண்ணை நிறுவனத்திற்கு நட்டம் வந்தது. தனியார்களுக்கு வந்த நட்டத்தை நிவர்த்திக்க அரசு கஜானாவிலிருந்து பணம் தரப்பட்டு கூட்டுறவுச் சங்கக் கடன்கள் அடைக்கப்படுகின்ற சூழ்நிலையில் சுகர் பார்ம் கார்ப்பரேஷனுக்கு ஏற்பட்டிருக்கின்ற நட்டத்தை ஈடுசெய்ய அரசாங்கம் இதுவரையிலேயும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த நிறுவனம் ஸ்டேட் பாங்கிலே கடன் வாங்கி வட்டிக்கு மேல் இன்றைக்கு வட்டியாகி செயல்பட்டாலும்கூட கடந்த ஆண்டு 9 இலட்சம் ரூபாய் இலாபம் வந்திருக்கிறது. இலாபம் வந்திருக்கின்ற முன்மாதிரியாக விளங்கக்கூடிய தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தை மேலும் வலுவூட்டக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுத்தாக வேண்டும். சிறு நபர்களுக்கு நிலங்களை விட்டுக்கொடுத்தீர்கள். சரி போகிறது. திருவாடுதுறை ஆதீனத்திற்கும் மன்பதுல்லா சொசைட்டிக்கும் அவைகளை விட்டுக் கொடுத்தது சரியல்ல என்பதை சுட்டிக்காட்டுகிறோம். விடப்பட்ட நிலங்களிலே கூட்டுப் பண்ணை முறையில் அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளுக்கு தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அளித்து அவர்களைப் பாதுகாக்க வேண்டிய முறையிலே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு அரசு ஷுகர் கேன் பார்ம் கார்ப்பரேஷனில் கிட்டத்தட்ட பத்தாயிரம் தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். சாதாரண விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு மூன்று மாதங்கள்தான் வேலை கிடைக்குமென்றால் இந்தப் பண்ணையைப் பொறுத்த வரையில் ஆண்டு ஒன்றுக்கு ஒன்பது மாதங்களுக்குக் கிட்டத்தட்ட வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. கரும்பும், நெல்லும், நெல் எடுக்கப்பட்டால் பருத்தியும் என்று பல்வேறு விவசாய பொருட்களையும் இதிலே சாகுபடி செய்வதற்குப் பல்வேறு வாய்ப்புக்கள் இருக்கின்றன. எனவே, தமிழ்நாடு அரசு கரும்புப் பண்ணைக் கழகத்தை மேலும் வலுவாக்குவதற்கு அரசாங்கம் நிதி அளிக்க வேண்டும்; வலுப்படுத்த வேண்டும்; புயல், வெள்ளம், வறட்சியால் ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தை நிவர்த்திக்க அந்தப் பகுதியிலுள்ள அந்தப் பண்ணைக்கு நிதியுதவி செய்ய வேண்டும். அதிலே பணிபுரியும் விவசாயத் தொழிலாளர்கள், ஏழை அரிசன மக்கள் என்று சகல பகுதிகளிலேயும் உள்ள அந்தத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவும் அரசாங்கம் முன்வர வேண்டும். தமிழ்நாடு அரசு கரும்புப் பண்ணைக் கழகத்தை வலுப்படுத்த வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இத்தகைய கருத்துக்களைக் கூறி முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. எம். செல்லமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தமிழ்நாடு அரசின் சார்பிலே வருவாய்த்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த நில உச்சவரம்பு திருத்தச் சட்டத்தை மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆதரிக்கிறேன்; வரவேற்கிறேன்; இது, வடபாதி மங்கலத்தைச் சேர்ந்த ஏழாயிரம் ஏக்கர் நிலம் சம்பந்தப்பட்ட ஒரு சட்டமாகும். அங்கே இப்பொழுது கரும்புப் பண்ணை கார்ப்பரேஷன் என்ற கார்ப்பரேஷன் இருக்கிறது. நமக்கெல்லாம் தெரியும், நீண்டகாலமாக, உழைப்பவனுக்கு நிலம் வழங்கப்பட வேண்டுமென்பதற்காக எங்கள் இயக்கம் நீண்ட போராட்டத்திற்கு மத்தியில் 1959–60 ஆம் ஆண்டில் அன்றைய ஆட்சியாளர்கள் ஒரு நிலச்சீர்திருத்த உச்சவரம்பு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஆட்சியாளர்களைப் பயன்படுத்தி வடபாதி மங்கலம் போன்ற நிலப்பிரபுக்கள் நிலத்திற்கு விதிவிலக்கு பெற்று, கரும்புப் பண்ணை என்று கரும்பு ஆலைக்குச் சொந்தமாக நிலங்களை எழுதி வைத்தார்கள். பிறகு, கரும்புப் பண்ணைக்கு விதிவிலக்கை ரத்து செய்த பிறகு அன்றைக்கிருந்த ஆட்சியாளர்களை பயன்படுத்தி மீண்டும் அந்தப் பகுதி மக்களுக்கு அந்த நிலங்கள் கிடைக்காத அளவிற்குச் சட்டத்திருத்தங்களையெல்லாம் செய்து இந்த கரும்புப் பண்ணை கார்ப்பரேஷன் என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது. அந்தக் கரும்புப் பண்ணை கார்ப்பரேஷன், நிலச் சீர்திருத்தத்தின் மூலமாக உழுபவனுக்கு நிலம் வழங்கப்பட





வேண்டுமென்ற நிலைக்கு மாறாக வடபாதிமங்கலத்தாரையும் அவருக்குச் சொந்தமாக ஏறத்தாழ மூன்று தாலுக்காக்களிலே நாற்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களிலே அந்த நிலம் இருக்கிறது. அந்த நிலங்களையெல்லாம் கரும்புப் பண்ணை கார்ப்பரேஷனுக்கு வைத்துக்கொண்டு அதிலே பல்வேறு ஊழல்கள் நடந்து, பல்வேறு நஷ்டக் கணக்குகளும் காட்டப் பெற்றன.

அதுமட்டுமல்லாமல், வடபாதி மங்கலத்தார் நிலத்தைவிட, பக்கத்திலுள்ள சிறு நிலச் சொந்தக்காரர்கள், அறநிலையங்கள், கோவில்களுக்குச் சொந்தமான நிலங்களையெல்லாம் சேர்த்துதான் கரும்புப் பண்ணைக் கழகம் என்று ஏற்படுத்தினார்கள். அந்தக் கழகத்திற்குக் குத்தகை கொடுத்த சிறு விவசாயிகள் கூட குத்தகையும் கட்டுப்படியாகவில்லை நாங்கள் நிலத்தைக்கூட விற்கவும் முடியவில்லை. ஆகவே எங்கள் நிலங்களையெல்லாம் எங்களுக்குத் திருப்பித் தர வேண்டும் என்று தமிழக அரசுக்கு-நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். அந்த கோரிக்கையை நாங்களும் ஆதரித்து தமிழக அரசை வலியுறுத்தினோம். வருவாய்த்துறை அமைச்சரவர்களும் அந்தச் சிறு விவசாயிகளின் நிலைமைகளையெல்லாம் உணர்ந்து அவர்களின் நிலத்தையெல்லாம் திருப்பித் தர ஒரு உத்தரவைச் செய்திருக்கிறார்கள். அப்படி உத்திரவிட்டதை மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் வரவேற்றிருக்கிறோம். அப்படி நிலத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்ற வகையில் அறநிலையங்களுக்கும் கோவில்களுக்கும் சொந்தமானதாக உள்ள நிலம் உள்பட இருக்கின்ற ஏறத்தாழ இரண்டாயிரத்திற்கும் அதிகமான ஏக்கர் நிலங்களை விட்டுக் கொடுப்பதற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். இதன் மூலம் அந்தச் சிறு விவசாயிகளெல்லாம் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். நாங்கள் அதைப் பாராட்டி வரவேற்றிருக்கிறோம். தமிழக அரசுக்கு நன்றி செலுத்தியிருக்கிறோம்.

அதே நேரத்திலே கோவில்கள் மடங்களுக்கும் அறநிலையங்களுக்கும் சொந்தமான நிலங்களையெல்லாம் அவர்கள் அந்த நிர்வாகத்திற்கே திருப்பி ஒப்படைக்கக் கூடிய சூழ்நிலைகளை இன்றைக்கு உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில் அந்தக் கோவில் மடங்களுக்கு இருக்கும் நிலங்களையெல்லாம் ஏழை விவசாய தொழிலாளர்களுக்கு, நிலமற்றவர்களுக்கு உள்ளூரிலே வாழும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒன்று அல்லது ஒன்றரை ஏக்கரா நிலம் கொடுத்து அவர்களை நிலச் சொந்தக்காரர்களாக மாற்ற உரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நாங்கள் அரசை வலியுறுத்தியிருக்கிறோம்.

அதற்கான மாநாடுகளையும் நடத்தி நாங்கள் தீர்மானங்களை நிறைவேற்றி அரசுக்குத் தந்திருக்கிறோம். அப்படியிருந்தும், இந்தக் கரும்பு பண்ணைக் கழக நிலங்களில் இப்பொழுது கரும்பு போடவில்லை. கரும்பை அதிகமாக உற்பத்தி செய்து ஆலைக்குக் கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்திற்காக கரும்புப் பண்ணைக் கழகம் ஆரம்பிக்கப்படுகிறது என்று அன்றைய தினம் சொல்லப்பட்டிருந்தாலும் 4 000 ஏக்கர் அளவு நிலங்களில் பெரும்பகுதி நெல் சாகுபடியும் நடவு வேலையும் தான் அதிகமாக நடக்கிறது; அப்படி நெல் பயிரிடப்படுகிற இடங்களிலே ஒரு காலத்திலே வடபாதி மங்கலத்துக்குக் கூலி வேலை செய்து கொண்டிருந்தவர்கள் இன்றைக்கும்கூட கரும்புப் பண்ணை கார்ப்பரேஷனிலே கூலி வேலை செய்பவர்களாகத்தானிருக்கிறார்களே தவிர கரும்புப் பண்ணைக் கார்ப்பரேஷனில் அதிகாரிகளாக, ஊழியர்களாக இருக்கக்கூடியவர்களில் கிட்டத்தட்ட 250 பேர்கள் தான் நிரந்தரத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அங்கு 40-க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருக்கக் கூடிய தொழிலாளர்கள் அன்றைக்கு எவ்வாறு நிரந்தரமற்ற கூலிகளாக இருந்தார்களோ அதே நிலையில்தான் இன்றைக்கும் நிரந்தரமற்ற கூலியாக இருக்கிறார்கள். அவர்கள் வேலை செய்தாலும் கூட தகுந்த கூலி கிடைக்கவில்லை.

[பிற்பகல் 1-00]

இன்றைக்குக் கூட தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய கூலி போதாது என்று நாங்கள் கோரிக்கை வைத்து தாசில்தார் அலுவலகத்திலே சொல்லி ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருந்தாலும் கூட, அந்த ஒப்பந்தங்கள் கூட அமுல்படுத்தப்படாத நிலையிலே அந்தத் தொழிலாளிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. அந்த இரண்டு கிராமங்களிலும் ஒவ்வொரு மார்கழி மாதத்திலேயிருந்து தண்ணீர் வரும் வரையில், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தான் வேலை இருக்கிறதே தவிர அவர்கள் நிலைமையிலே மாறுதல் இல்லை. எனவே, 4,000 ஏக்கர் நிலங்களையும் அந்த கிராம மக்களுக்கு, உள்ளூரிலே வாழக்கூடியவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கும் வழங்கி, அதன்மூலம் அவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கக்கூடிய நடவடிக்கையை தமிழக அரசு செய்யவேண்டும். அதைச் செய்வதற்குப் பல தடவை வருவாய்த்துறை அமைச்சரிடம் வலியுறுத்திச் சொல்லி இருக்கிறோம். அந்தக் கோரிக்கையை ஏற்று, தமிழக அரசு 1 ஏக்கர நிலம் அவர்களுக்குக் கொடுத்து, அவர்கள் வாழ்க்கையில் ஒளியை உருவாக்கித் தரவேண்டும்.

அப்படி உருவாக்கித் தருவதுதான் அந்தக் கிராமப்புற மக்களுக்கு வாழ்வளிக்கக் கூடியதாக இருக்க முடியுமே தவிர, இன்றையதினம் இருக்கக் கூடிய அந்தக் கரும்புப் பண்ணைக்





கழகத்தில் விவசாயத் தொழிலாளர்கள் வைத்து உற்பத்தி செய்வது, முன்னால் மிராசுதாரர்களிடம் அவர்கள் அடிமையாக இருந்தார்களே, அதேபோல்தான் இப்பொழுது கரும்புப் பண்ணைக் கழகத்திற்கும் அடிமையாக இருக்கிறார்களே தவிர, அவர்களுடைய வாழ்க்கையிலே எந்தவித மறுமலர்ச்சியும் வந்ததாகத் தெரியவில்லை. வேண்டுமானால், வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வரலாம். வருகின்றபொழுது, அந்த நிலைமைகளையெல்லாம் நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்த நிலத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதே நேரத்திலே கரும்புப் பண்ணை கார்ப்பரேஷனிலே வேலை செய்யக் கூடிய அதிகாரிகளுக்கு மாற்று வேலை அளிக்கலாம். கிராமத்திலே இருக்கக் கூடிய ஊழியர்களுக்கு, மாற்று வேலையை அமைச்சர் கொடுக்கலாம். அல்லது நிலம் கொடுக்கலாம். அப்படி கொடுப்பதன்மூலம் தஞ்சை மாவட்டத்திலே நிலப் பிரபுத்துவக் கொடுமைக்கு முற்றுப் புள்ளி உடனடியாக வைக்க முடியும். அந்த முறையிலே அந்த நிலங்களை விவசாயத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று கேட்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி விடை பெறுகிறேன். வணக்கம்.

டாக்டர் வே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இன்றையத் தினம் கொண்டு வந்திருக்கக் கூடிய 1981 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் குறித்த சட்ட முன்வடிவின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் ஒருசில கருத்துக்களை இந்த மன்றத்தில் வைக்க முன்வருகிறேன். பொதுவாகவே, வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்களது ஆட்சியில் வருவாய்த்துறை என்பது ஒரு சிறப்பான, இந்த நாட்டு மக்களுக்குத் தேவையான, தமிழகத்திலே ஒரு பொற்கால நிலை என்று எடுத்துச் சொல்லத்தக்க வகையில் 30 ஆண்டுகாலமாக, தமிழகத்தில் இதுவரையிலும் நடைபெறாத பல சீர்திருத்தங்களைச் செய்யத்தக்க வகையில், இந்த 3 ஆண்டு காலத்திலே எடுத்துவைத்திருக்கிறது, செயலாற்றியிருக்கிறது என்பதற்கு கொண்டு வந்திருக்கிற சட்டங்களே எடுத்துக்காட்டுகளாகும் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கனவே உபரி நிலங்கள் என்று எடுக்கப்பட்டால், அதற்கு ஓட்டத்திலே சராசரி விலை ரூ. 3,000 என்று சொன்னால், அல்லது வெளி மார்க்கட்டிலே அந்த விலை என்று சொன்னால்,

அதற்கு ரூ. 6,000, ரூ. 10,000 ஏன் ரூ.20,000 வரையில் கூடக் கொடுத்து பல நிலங்களை வாங்கியிருக்கிறார்கள் மற்ற அரசுகளில். ஆனால், இந்த அரசு அதற்கு ஒரு திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து வெளியே என்ன விலையிருந்தாலும், எந்த அளவிற்கு அதைக் கட்டுப்படுத்த முடியுமோ, அப்படிக் கட்டுப்படுத்த மிக உயர்ந்த விலை என்று சொல்லக் கூடிய தொகை ஏக்கருக்கு ரூ. 3,000 என்ற சூழ்நிலையில் ஒரு சட்டத்தையே 27—10—1978-லே இந்த அரசு நடைமுறைப்படுத்தியிருக்கிறது என்று நான் மன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இதுவரையிலே 1981 ஆண்டு ஜூலை முடிய இந்தத் தமிழகத்திலே நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலம், 1,21,022 ஏக்கர்களாகும். அதிலே விநியோகிக்கப்பட்ட நிலங்கள் 85,512 ஆகும். அதிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் 30,531 ஏக்கர் இந்த அரசு வழங்கி இருக்கிறது என்பதனை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு எந்த அளவுக்கு வருவாய்த் துறையிலே மட்டும் இந்த அரசு இப்படிப்பட்ட ஒரு நல்ல பணியைச் செய்து கொண்டிருக்கிறது என்பதனை நண்பர்கள் உணர வேண்டும்.

அது மட்டுமல்ல, பழங்குடியினருக்கு 18 ஏக்கர் வழங்கப்பட்டு இருக்கின்றன. இதரர்களுக்கு எல்லா சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் சேர்த்து 54,963 ஏக்கர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசு பதவியேற்ற பிறகு இப்படி உச்சவரம்பு எடுத்த நேரத்திலே மட்டும் இவ்வளவு ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல வருவாய்த்துறை என்று சொல்லுகிற போது இந்தத்துறை விவசாயிகளுக்கு, வியாபாரிகளுக்கு, அரசு அலுவலர்களுக்கு மிகப்பெரிய சலுகைகளை அவர்களுடைய தேவைகளைப் பார்த்து செய்யக்கூடிய அளவுக்கு செய்திருக்கிறது என்பதனை எடுத்துக் காட்ட முடியும்.

இங்கே ரெவின்யூ என்று சொல்லும்போது, மைலாப்பூர் திருவல்லிக்கேணி—For locating the Mylapore Triplicane Taluk Office and other Government offices in Madras District, acquisiiton of land measuring an extent of 22 grounds and 155 square feet in R. S. 3896 of Mylapore village at a cost of Rs. 7 lakhs has been sanctioned.



அதுமட்டுமல்ல, தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டையில் For construction of taluk and attached offices of two Deputy Commercial Tax offices and Revenue Divisional officer's office at Pattukkottai in Thanjavur District, acquisition of lands to an extent of 9·11 acres at a cost of Rs. 2·20 lakhs has been sanctioned. A sum of Rs. 38·91 lakhs has also been sanctioned for construction of the said buildings இன்னும் சொல்லப்போனால் தென்னாற்காடு மாவட்டத்தில் பண்ருட்டியில் For construction of taluk office and other Government buildings, quarters and Inspection bungalow in Panruti in South Arcot District, acquisition of land to an extent of 11.37 acres at a cost of Rs. 95,000 has been sanctioned.

திருச்சுழியில் Similarly for construction of taluk office and Inspection Bungalow in Tiruchuli Ramanathapuram District, acquisition of lands to an extent of 2·16 hectares involving an expenditure of Rs. 25,000 has been sanctioned.

திண்டிவனத்தில் For construction of Government offices such as Sub-Collector's office, staff quarters and inspection bungalow in Tindivanam acquisition of land to an extent of 4·22·0 hectares involving an expenditure of Rs. 80,000 has also been sanctioned.

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவர் அவர்களே, இது தஞ்சை மாவட்டத்தில் உள்ள வடபாதிமங்கலத்தில் உள்ள நிலங்களைப்பற்றிய சட்டமாகும். அதனை ஒட்டி கருத்து தெரிவித்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் மசோதாவைப் பற்றிப் பேசுங்கள்.

டாக்டர் கே. சமரசம் : இன்றையதினம் 4 பில்கள் ரெவின்யூவிலே வருகின்றன. அவைகளின்மீது தனித்தனியாகப் பேசாமல் ஒரேயடியாகப் பேசலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : இந்தச் சட்ட முன்வடிவு சம்பந்தப்பட்டவரையில் உங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

டாக்டர் கே. சமரசம் : இப்படிப்பட்ட சூழ்நிலையில் இதுவரையில் தமிழ்நாடு அரசு எந்தெந்த அளவில் எவ்வளவு எடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்துள்ளது மற்ற அரசுகள், இதுவரையில் இருந்த அரசுகள், செய்ய முடியாத அளவுக்கு தேர்தல் காலங்களில் கொடுத்த வாக்குறுதி

களை எல்லாம் நிறைவேற்றக் கூடிய வகையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தாழ்த்தப் பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் நலமை பெறுகிற வகையில் இந்தத் துறை செயலாற்றி இருக்கிறது என்பதனை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அந்த அளவிற்கு இன்றையதினம் இந்திய துணைக் கண்டம் தமிழகத்திலே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இப்படிப்பட்ட நல்லதொரு திருத்தச் சட்டத்தினைக் கொண்டு வந்து ஏழை எளியவர்களுக்கு நன்மை புரிந்திருப்பதை பாராட்டி அமர்கிறேன்.

[பிற்பகல் 1·10]

* திரு. எல் இளையபெருமாள் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இன்று அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற இந்த நிலசீர்திருத்த சட்டத்தை நான் வரவேற்கிறேன்.

இந்தச் சட்டமானது 1958-ல் தொடங்கப்பட்டு 1961ஆம் ஆண்டு அன்றைய காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது கொண்டு வரப்பட்டது. அப்படி கொண்டு வருகிறபோது ஒரு குடும்பத் திற்கு 15 ஏக்கர் அதிக பட்சம் இருக்கலாமென்று சொன்னார்கள். ஒரு குடும்பம் என்பது சாதாரணமாக 5 நபர்கள் உடையது என்று சொன்னார்கள். அன்றைய காலத்திற்குபின் வந்தவர்கள் ஒரு தனி நபருக்கு 15 ஏக்கர் என்று கொண்டு வரப்பட்டு, கடைசி யில் வரவேண்டிய ஆதாயம் நல்லமுறையில் கிடைக்காமல் போயிற்று. இன்றைக்கு அரசாங்கம் கொண்டு வருகிற இந்தச் சட்டத்திலே 5 ஏக்கர் என்றார்கள். தஞ்சை ஜில்லாவைபற்றி எனக்கு தெரிந்ததைவிட இங்கே இருக்கிற மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும்.

ஆரூரான் மில்லைப் பற்றியும், அதிலிருந்த டைரக்டர் களைப்பற்றியும், அதில் யாருடைய நிலங்கள் எல்லாம் சேர்க்கப் பட்டது என்பதைப்பற்றியும், நம்முடைய அமைச்சர் அவர் களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும். இந்த சமயத்தில் நான் ஒன்றை குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். மின்சாரத்துறை நம்மிடம் இருந்தபோது தெர்மல் ஸ்டேஷனை நாம் காரண காரியம் இல்லாமல், தனிப்பட்ட நபருக்கு ஏலம் மூலமாக தகுந்த விலை இல்லாமல் கொடுத்து விட்ட பிறகு, மின்சார தட்டுப்பாடு ஏற்பட்டது. இன்று தமிழகம் அவதிப்படுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இதுபோலவே ஆரூரான் மில்லுக்கு கொடுக்கப்பட்டதை, எனக்கு முன்பு பேசிய அருண்பு





கம்யூனிஸ்ட் தோழர் ஒருவர் சொன்னது போல, சர்க்கரை உற்பத்தியை நாம் அதிகப்படுத்தலாம். விவசாயத்திலே வருகிற வருமானத்தைவிட, சர்க்கரை ஆலைகளை உண்டாக்குவோ மானால் தொழிலாளர்களுக்கும் லாபம், அரசுக்கும் லாபம். அதோடு கூட நிலச்சுவான்தார்கள் நல்லதொரு வருமானத்தை பெறுவார்கள். வருவாய் கிடைக்குமென்று அன்றைய காங்கிரஸ் அரசாங்கம் இந்த நிலையில் செய்தது; மேய்ச்சல் தரையாகவும் கொடுத்தது ; பழத்தோட்டமாகவும் கொடுத்தது. ஆனால் கொடுத்த சட்டங்களை தவறான வழியிலே பயன்படுத் தினார்கள். அதை யாரோ பயன்படுத்தினார்கள் என்று காரணம் காட்டிவிட்டு நாம் மெத்தனமாக இருந்தால் அது நமக்கு நல்லதல்ல. நாம் எடுத்துக் கொண்டுள்ள பணிக்கும் சிறந்ததல்ல என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

எந்த அரசாங்கம் சட்டத்தைக் கொண்டு வந்திருந்தாலும் இந்தச் சட்டம் அமலாக்கப்படவில்லையானால் இந்த அரசு, உறுதிமொழிகள் கொடுத்த மக்களுக்கு துரோகம் செய்வ தாகும். அதுபோல் இந்த ஆரூரான் ஆலையை எடுத்துக் கொண்டிருக்கிற வகையில் அது யார் காலத்திலே கொடுக்கப் பட்டிருந்தாலும், அரசுகள் திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி: அல்லது நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியை சார்ந்தவர்களாக இருந்தாலும், இன்றைக்கு ஆளுகிற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக கட்சியை சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அந்தக் கட்சிக் கண்ணோட் டத்தோடு பார்க்கக்கூடாது என்பது தான் எனக்கு முன்பு பேசிய சகோதரர் கிட்டப்பா அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். அந்தமுறையில் நான் அரசாங்கத்தை கேட்டுக் கொள்வதெல்லாம் யாரோ செய்தார்கள், யார் கட்சிகளையோ சார்ந்தவர்களா இருக்கிறார்கள் என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வது நல்லதல்ல.

இதில் குறிப்பாக செய்ய வேண்டியது மடங்கள், அறக் கட்டளைகள், இது காங்கிரஸ்காரர்களுடைய அறக்கட்டளை களாக இருந்தாலும்சரி, திராவிட முன்னேற்றக் கழகக்காரர் களுடைய அறக்கட்டளைகளாக இருந்தாலும்சரி, ஆளுகிற கட்சியை வைத்துக் கொண்டு சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாமென்று, அண்ணா திராவிட முன்னேற்ற கழகத் தை சார்ந்த அறக்கட்டளைகளாக இருந்தாலும்சரி; அல்லது கம்யூனிஸ்ட்டின் பேரால் கல்வி சம்பந்தமானது என்று சொல்லிக் கொண்டு மறைத்தாலும் சரி, தெளிவாக அரசிடம் சட்டம் இருக்கிறது, அதிகாரம் இருக்கிறது, உங்களுக்கு தகுந்த பலம் இருக்கிறது; அப்படி இருக்கிற காலத்திலே இதை ஆழமாகக எண்ணி, கணிசமான முறையிலே நிறைவேற்றி, இந்த யார் சார்ந்து இருந்தாலும் நம்முடைய அமைச்சர் அவர்கள்

[திரு. எல். இளையபெருமாள்] [1981 ஆகஸ்ட் 24

செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இன்னும் அற்றுப் போகவில்லை; அந்த நம்பிக்கையில் இருக்கிறேன். நான் இந்த தமிழக அரசு, தமிழக மக்களுக்கு, குறிப்பாக விவசாய தொழிலாள மக்களுக்கு என்னென்ன கடமைகளில் தவறி இருக்கிறது என்பதை ஒரு கடிதத்தின் மூலமாக மாண்புமிகு முதல்வருக்கும், வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கும் கடந்த மாதம் எழுதி அனுப்பியிருக்கிறேன்.

அப்படி குறிப்பிட்டதிலே, இந்த விவசாயத் தொழிலாளர்களுடைய சட்டத்தினை அமல் நடத்துவதிலே நாம் அக்கறை இல்லாதவர்களாக இருக்ககூடாது. முன்பு இருந்த அரசைக் காட்டிவிட்டு நாம் வாளாக இருக்கக்கூடாது என்று வேண்டுகோள் விடுத்தேன். அதைப்போல கரும்பு உற்பத்திக்கு ஆரூரான் பண்ணையிலே அதிகமான நிலங்கள் இருக்கின்றன. அதில் பல கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள். பினாமி நிலம் இருக்கிறது. அதுபற்றி நிச்சயமாக மற்றவர்களைவிட அமைச்சருக்கு நன்றாகத் தெரியும் வாய்ப்பு இருக்கிறது. இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதால் பயனில்லை. அந்த நல்முறையில் அமுல்படுத்தினால்தான் பலனளிப்பதாக இருக்கும். நல்ல முறையில் அமுல்படுத்தினால்தான் உங்களுக்கும் நல்லது; நாட்டு மக்களுக்கும் நல்லது. ஆகவே சட்டத்தைக் கொண்டுவந்து விட்டோம் என்று சொல்லி, நீங்கள் வாளாக இருந்துவிடக்கூடாது, நல்லமுறையில் செயல்படுத்த வேண்டும்.

மடமாக இருந்தாலும் சரி அல்லது சன்னிதானமாக இருந்தாலும் சரி; அவர்களுக்கு பின்னாலே எந்த பின்னணி இருந்தாலும் சரி எல்லா இடத்திலும் சட்டத்தை ஒழுங்காக அமுல்படுத்த வேண்டும். அரசியல் கட்சிக்காரர்கள் கூட அதிலே சம்மந்தப்பட்டிருப்பார்கள். அவர்கள் தேர்தலுக்குப் பணம் வாங்குகிறார்கள் அவர்களிடமிருந்து. அப்படி தேர்தலுக்குப் பணம் கொடுக்கின்றவர்களை அரசாங்கம் கண்காணிக்க வேண்டும். அறநிலையத்துறை அதிகாரிகளைக் கேட்டால் கூட தெரியும் யார், யார் என்று. அதிகாரிகள் மூலமாக இந்த மடங்கள், தர்மஸ்தாபனங்களிடம் பணம் கேட்டவர் யார், யார், அந்தப் பணத்தை வாங்கியது எந்த அரசியல் கட்சி என்று தெரிந்து, ஆழமாகத் தெரிந்து நடவடிக்கை எடுத்தால் நிச்சயமாக நீங்கள் இந்த நாட்டுக்கும் ஏழை மக்களுக்கும் நல்ல பணி செய்தவர்களாவீர்கள்.

இன்றைக்கு ஆரூரான் மட்டுமல்ல, நஞ்சை மாவட்டம் மட்டுமல்ல, தமிழ் நாடு முழுவதும் பினாமி இருக்கிறது. அவர்கள் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் ஏமாற்றினார்கள்,



1981 ஆகஸ்ட் 24] [திரு. எல். இளையபெருமாள்]

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் ஏமாற்றியிருக்கிறார்கள்; உங்களுடைய ஆட்சியிலும் ஏமாற்றியிருக்கிறார்கள்; இன்னும் ஏமாற்றுகிறார்கள். என்ன காரணத்தாலோ அரசுக்கு வேண்டியவர் என்றோ அல்லது அமைச்சருக்கு வேண்டியவர் என்றோ அல்லது தொழிலாளர் தலைவர் என்றோ ஏதோ ஒருவகையில் ஏமாற்றுகிறார்கள். அப்படி ஏமாற்றுவதற்கு இடமளிக்காமல், சட்டத்தை கொண்டு வருவதோடு நின்றுவிடாமல் இந்தச் சட்டத்தை நல்ல முறையிலே செயல்படுத்துவதிலே அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த சட்டமன்றத்தில் பேசிய அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் இந்தச் சட்டத்தை வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். வரவேற்றுப் பேசியது மட்டுமல்ல, இந்த அரசையும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள்.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அண்ணா தி.மு.க. அரசு, புரட்சித் தலைவர் அரசு கொண்டு வருகிற எந்தச் சட்டமானாலும் அதை எல்லோருமே வரவேற்றிருக்கிறார்கள் என்பது உங்களுககுத் தெரியும். அதைப் போலத்தான் இதையும் வரவேற்றிருக்கிறார்கள். ஆனால் ஆரம்பத்திலே நிலச்சீர்திருத்தச் சட்டம் வந்தபோது, 1961 ஆனாலும் 1972 ஆனாலும், எல்லாக் கட்சிகளின் சார்பிலேயும் கருத்துக்களை தெரிவிக்கிறபோது அதிலே பூரணமாக தங்களுடைய கட்சி எண்ணுகிற எண்ணங்கள் இல்லை என்பதை ஏற்றிருக்கிறார்கள். ஆனால் இப்போது தான் அண்ணாவின் ஆட்சி கொண்டுவருகிற சட்டத்தை எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

சில தினங்களுக்கு முன்னால் கொண்டுவரப்பட்டிருக்கிற நிலச்சீர்திருத்தச் சட்டத்தை எல்லோரும் ஆதரித்திருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் இந்த அரசு அண்ணாவின் அரசு என்று நாங்கள் சொல்லிக்கொண்டு வருகிறோம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் இதை சொல்வதற்கு காரணம் இங்கே பேசிய அருமை சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் சொல்லும்போது அண்ணாவின் அரசு என்று சொல்கிறீர்களே, இதை எல்லாம் செய்யக்கூடாதா என்று சொன்னார்கள்.

இன்றைக்கு புரட்சித் தலைவர் அண்ணா அரசு என்று பெயர் வைத்ததற்கு காரணம் அண்ணாவின் எண்ணத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பேசுகிறபோது எல்லோரும் இதை வரவேற்றிருந்தாலும், இந்தச் சட்டத்திலே இன்னும் என்னென்ன

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 ஆகஸ்ட் 24

செய்யவேண்டுமென்ற முறையில் இங்கே கருத்துக்களைச்
சொல்லும்போது சிறு சிறு மாறுபட்ட கருத்துக்களைச்
சொல்லி வரவேற்றிருக்கிறார்கள். அவைகளை இந்த அரசு
கவனித்து, எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்யும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசுகிறபோது திராவிட முன்னேற்றக் கழக
சட்டமன்ற உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் நிலத்திற்கு
உச்சவரம்பு சட்டம் கொண்டு வந்தபோது 1961-லே
விதிவிலக்கு கொடுக்கப்பட்டது என்றும், 1971-லே அல்லது
1972-லே உச்சவரம்பு சட்டம் கொண்டுவந்தபோது அந்த
விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டது என்றும், இந்தக் கரும்புப்
பண்ணை அல்லது கரும்பு விவசாய நிலத்திற்கு முழுவதுமாக
விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டது என்றும் பின்னாலே
எப்படியோ அது மாற்றப்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்
கள்.

[பிற்பகல் 1—20]

ஆனால் அதை வேண்டுமென்றே அப்படி அவர்கள் சொல்ல
மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். அதுபற்றிய முழு
விவரங்களையும் அவர்கள் தெரிந்துகொள்ளாததன் காரணத்தால்
தான் அவர்கள் அவ்வாறு முதலிலே அதைக் கொண்டு வந்து
விட்டு பிறகு மறுபடியும் அரசு அதை மாற்றிவிட்டது 'என்று
சொன்னார்கள். அவர்கள் அவ்வாறு வேண்டும் என்று சொல்ல
வில்லை. ஆகவே அவர் அவ்வாறு வேண்டுமென்று சொல்லா
விட்டாலும் அதுபற்றி தெளிவுபடுத்துவதற்கு நான் கடமைப்
பட்டிருக்கிறேன். விதிவிலக்கினை ரத்து செய்கின்ற போது ஒரு
செக்ஷனையும் அதிலே சேர்த்துத்தான் இருக்கிறார்கள்.

அதாவது ஆரூரான் சர்க்கரை ஆலை எந்தெந்த நிலத்தை
கரும்புக்கு பயன்படுத்தியதோ அவை அவர்களின் நிலமாக இருந்
தாலும் சரி, அவர்கள் மற்றவர்களிடத்திலே இருந்து குத்தகைக்கு
வாங்கிய நிலமாக இருந்தாலும் சரி தொடர்ந்து அந்த கரும்
பாலைக்கு கொடுப்பதற்கு கரும்பு பண்ணை ஆரம்பித்து அரசு
அவற்றைக் கொடுக்கும் என்ற சட்டத்தை அப்போதே சேர்த்து
போட்டு இருந்தார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் மூல
மாக இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால்
அப்படி தொடர்ந்து வந்தபோது இன்றைக்கு வந்து மாற்றங்கள்
செய்திருக்கிறார்கள். அவ்வாறு மாற்றம் செய்வதற்குக் காரணம்
அங்கே இருக்கின்ற நிலங்கள் உச்சவரம்புச் சட்டத்தின் மூலம்
திருவாரூர் தியாகராஜ முதலியாரிடம் இருந்து எடுத்துக்கொண்
டது3,190 ஏக்கர், பல தனியார்களிடமிருந்து எடுத்துக்கொண்டது
2,618 ஏக்கர் தனியாரிடத்திலே இருந்து எடுத்துக்கொண்ட
நிலம் என்றால் அந்தத் தனியார்கள் அதற்கு முன்பு குத்தகை



1981 ஆகஸ்ட் 24] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்[

பத்திரத்தை எழுதி அந்த கரும்பாலையினிடத்திலே கொடுத்து
விட்டது. அன்றைக்கு இருந்த சட்டம் அதையும் சேர்த்து
கட்டுப்படுத்தி இருக்கின்றது.

ஆகவே இன்றைக்கு போடப்பட்ட சட்டம் அன்றைக்கு
போடப்பட்ட சட்டம். 2.618, ஏக்கரும் அதிலே கட்டுப்படுத்தப்
பட்டது. ஆனால் அதற்குப் பிறகு இன்றைக்கு ஏன் கொண்டு
வந்திருக்கிறோம் என்றால் காரணம் அந்த குத்தகை பல ஆண்டு
களுக்கு முன்னாலே போடப்பட்டது. அவர்கள் சிறிய விவசாயி
கள். அவர்கள் சிறிய விவசாயிகள் என்பதை இங்கே பேசிய
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும், மற்றும் சட்டமன்ற
உறுப்பினர்களும் தெளிவாகச் சொன்னார்கள். அவர்களுக்கு
ஒரு ஏக்கருக்கு கிடைத்த பணம் எவ்வளவு என்றால் 100 ரூபாய்
முதல் 140 ரூபாய் வரையிலும். எல்லோருமே இதை எதிர்த்தார்
கள். எடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஆகவேதான்
சட்டத்தினுடைய உள்நோக்கமே ஓராண்டு நீட்டிப்பது மட்டு
மின்றி இந்த கரும்பு பண்ணைக்கு வேண்டும் என்ற நிலத்தை
திருப்பிக் கொடுப்பதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது.
வேண்டுமென்ற நிலத்தைத் திருப்பித் கொடுக்கின்றபோது சிறிய
விவசாயிகள் நிலத்தைத்தான் கொடுக்க முடியும், உச்ச வரம்புச்
சட்டத்தின் மூலமாக எடுக்கப்பட்ட நிலத்தைத் திருப்பிக் கொடுத்
துவிட முடியாது. இன்றைக்கு அதன் காரணமாக பல நிலங்களை
எல்லாம் திருப்பிக் கொடுத்தாகிவிட்டது. சிறிய விவசாயிகளின்
மொத்தம் 2,618 ஏக்கர் நிலத்தில் 2,115 ஏக்கர் நிலம் வரையில்
திருப்பிக் கொடுத்தாகிவிட்டது. மற்றவைகளைத் திருப்பிக்
கொடுப்பதற்கு கொஞ்சம் காலம் ஆகும். அதாவது 1982 ஆம்
ஆண்டு சூன் திங்கள் 30 ஆம் நாள் வரையில் நீட்டிக்கப்பட்டி
ருக்கின்றது. ஆகவே தொடர்ந்து இவை எல்லாம் கொடுக்கப்
படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஒன்றைச் சொன்னார்கள். அவர்கள் எனக்கு
ரொம்பவும் வேண்டிய நண்பர். உழுப்பவனுக்கு நிலம் சொந்தம்.
என்பது பற்றி அவருக்கு சரியான விவரங்கள் சொல்லப்பட
வில்லை. ஆகவேதான் அப்படிச் சொல்லி இருக்கிறார்.
ஆனால் தவறான கருத்துக்கள் சட்டமன்ற குறிப்பேட்டிலே
இடம் பெற்றுவிடக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.
திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது உழைப்பவ
னுக்கு நிலம் சொந்தம் என்று சட்டமன்றத்திலே தீர்மானம் நிறை
வேற்றப்பட்டு இந்தியப் பேரரசுக்கு அவர்களின் அனுமதி வேண்டி
அனுப்பியதாக ஒரு செய்தியினை திரு. கிட்டப்பா அவர்கள் சொன்
னார்கள். அந்தச் செய்திவரையிலும் முற்றிலும் உண்மை.
ஆனால் அனுப்பப்பட்டதற்குப் பிறகு அங்கே இருக்கின்ற பல
இலாக்காக்களிலே அதைப்பற்றி ஆராய்ந்து பிறகு குடியரசுத்
தலைவரின் கையெழுத்திற்காகச் சென்றது. ஆனால் ஒப்புதல்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] (1981 ஆகஸ்ட் 24

அளிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டது. அப்படி திருப்பித் தருகிற போது அதிகார பூர்வமாக இங்கிருந்த அரசு சார்பில் அப்போதிருந்த முதலமைச்சர் சார்பிலே கையெழுத்து போட்டு அதைத் திருப்பி அனுப்புங்கள் என்று சொல்லித்தான் 'திருப்பி வாங்கி இருக்கிறார்கள். ஆனால் இதிலே மைய அரசுக்கு வக் காலத்து வாங்கி நான் பேசுவதாக கருத வேண்டாம், மைய அரசாக இருந்தாலும், அல்லது வேறு எந்த அரசாக இருந்தாலும் யாருக்காகவும் வக்காலத்து வாங்கவேண்டிய தேவையில்லை.

உண்மை நிலையை இங்கே சொல்லியாகவேண்டும் என்பதற் காக, அது திரும்பப்பெறப்பட்டது என்று சொல்கிறேனே ஒழிய, வேறு ஒன்றும் இல்லை. அவர்கள் தான் திருப்பிப் பெற்றுக் கொண்டார்களே, நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று கேட்பார் கள் இந்த அரசை, அதைப்பற்றியும் இந்த அரசு ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் பேசுகிறபோது பாராட்டினார்கள். அதே நேரத்தில் 'இன்னமும் நம்பிக்கையிருக்கிறது' என்று சொன்னார்கள், 'இன்னமும்' என்ற வார்த்தையை எடுத்துவிட்டு, 'எப்பொழுதும்' என்று சேர்த்துக் கொண்டாலும் அதற்கு உரியவர்களாக நாங்கள் இருப்போம் என்று உங்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன். 'எப்பொழுதும்' என்ற வார்த்தையை நீங்கள் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று நான் சொல்வது சேர்த்துக்கொள்ளத் தான் வேண்டும் என்ற கட்டாயத்தில் இல்லை. சேர்த்துக் கொண்டாலும் தொடர்ந்து அந்த வார்த்தையை நிலைநிறுத்த, இந்த அரசும் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுக்கும். குறிப் பாக இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் பொருத்தவரையில் உறுதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிலர், இங்கே பேசுகிறபோது, சிறு வேறுபாடு இருக்கிறது என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்த சிறு வேறுபாடுகள் இருப்பதினால்தான், இந்தப் பிரச்னையைப் பொருத்தவரையில் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும் என்று யோசித்து முடிவு செய்தேன்—சுப்பிரமணியத்தைப்போல் நடந்துக் கொள்ளவேண் டும் என்று. சுப்பிரமணியத்தைப்போல் நடந்துக்கொள்வது என்றால், உங்களுக்கெல்லாம் புரியும் என்று நினைக்கிறேன். அவர் வள்ளியையும் திருப்தி செய்தாக வேண்டும், தெய்வானையையும் திருப்தி செய்தாக வேண்டும், அதைத்தான் சுப்பிரமணியத்தைப் போல் நடந்துக் கொள்வது என்று சொன்னேன். (சிரிப்பு). கரும்பு பண்ணையைப் பூராவும் கலைத்துவிட வேண்டும் என்று சிலர் சொன்னார்கள். (குறுக்கீடு) நான் சுப்பிரமணியத்தைப் போல என்றுதான் சொன்னேன்.



1981 ஆகஸ்ட் 24 [மாண்புமிகு திரு. எஸ். சோமசுந்தரம்]

கரும்பு பண்ணையை கலைத்து விட வேண்டும் என்று சிலர் தீவிரமாக பேசுகிறார்கள். அதை கலைக்கக் கூடாது என்று சிலர் தீவிரமாக பேசுகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் இந்த அரசு என்ன செய்ய வேண்டும், நான் என்ன செய்ய வேண்டும் என்று யோசித்து, தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர் களிடம் இதுபற்றி எடுத்துச் சொன்னேன். அவர் ஒரு யோச னையைச் சொன்னார்கள். அந்த யோசனையின் படிதான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சீர்திருத்தச் சட்டப்படி ஆரூரான் சர்க்கரை ஆலையிடத்திலிருந்து வாங்கப் பட்ட நிலம் அப்படியே கரும்பு பண்ணையிடத்தில் இருக்கிறது. இரண்டாயிரத்து இரு நூறு ஏக்கர் நிலம். அவற்றில் பல சிறு விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டது. ஆகவே அப்படி நிலங்களை பிரித்துக் கொடுக்க வேண்டும் என்பதற்காக 2,200 ஏக்கர் நிலங் களையும், அப்படியே வைத்துக்கொள்ளவேண்டும் என்பதற் காக 4,000 ஏக்கர் நிலங்களையும் ஒதுக்கி வைத்து, ஒரே சமயத் தில் தெய்வயானையையும், வள்ளியையும் திருப்தி படுத்துவது போன்று, செய்தாலும், இதிலே இருக்கிற நியாயத்தை இந்த அரசு தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறது. இனி இதில் என்ன செய்ய வேண்டும், மேல் நடவடிக்கைகள் எப்படி எடுக்க வேண்டும் என்பதையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர் கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அதையும் விரைவிலே எடுக்கத்தக்கவாறு முடிவு எடுக்கப்படும் என்று சொல்லி, சட்ட முன்வடிவினை நிறைவேற்றித் தருமாறு வேண்டிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் னுள்ள கேள்வி; ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலச் சீர் திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 56/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத் தச்சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 56/1981) நிறைவேற்றப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : [1981 ஆகஸ்ட் 24
இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 1981 ஆம் பேரவையின்
ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25 ஆம் நாள் அன்று காலை 9 மணிக்கு
பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

79. வருவாய்த் துறையின் 1925 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15 ஆம் நாளிடப்பெற்ற 313 ஆம் எண் அறிவிப்பில் வெளியான விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாளிடப்பெற்ற 499— ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1923 ஆம் ஆண்டு நில அளவை— எல்லைக் கோடுகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1923) 26 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

80. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் எந்தவொரு வணிகரும் செலுத்தவேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாளிடப்பெற்ற வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 421 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

81. வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் நாளிடப்பெற்ற I( (1)/CTRE/705/80 ஆம் எண் அறிக்கையில் திருத்தம் ஒன்று செய்வது குறித்து 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 4 ஆம் நாளிடப் பெற்ற வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 467 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

82. சென்னை, மணலியிலுள்ள இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல் லிமிடெட் நிறுவனம் விற்பனை செய்யும் பாலியெஸ்டர் ஸ்டேபிள் பைபருக்கு தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் எந்த ஒரு வணிகரும் செலுத்த



வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 11 ஆம் நாளிடப்பெற்ற வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 489 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

83. தஞ்சாவூர் மாவட்டம் சாக்கோட்டையிலுள்ள தூய இருதய தொழுநோய் நிலையச் சங்கத்திற்கு விற்பனை செய்யப் பெறும் எக்ஸ்ரே புகைப்படச் சுருளுக்கு தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் எந்த ஒரு வணிகரும் செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 11 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 658 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

84. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் சில மாற்றங்கள் செய்வது குறித்து 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாளிடப் பெற்ற வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 741 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

13. 1970–71, 1971–72 மற்றும் 1972–73 ஆம் ஆண்டுகளுக்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் ஒன்பதாவது **அறிக்கை (ஏழாவது பேரவை) (தமிழ், ஆங்கிலம்).**

செவ்வாய்க்கிழமை, 1981 ஆகஸ்ட் 25

ஆவணி 9, துன்மதி, திருவள்ளுவர் 2012

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

''செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்.''

செய்ய வேண்டுவன இவையே என்று நூல் அறிவாலும், நுண்ணறிவாலும் நன்கு தெளிந்து கொண்டபோதிலும் அந்த இடத்தின் நிலைமையையும் காலத்தின் போக்கையும் புரிந்து கொண்டு, அவைகளுக்கு ஏற்பவே செய்தல் வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

**திருச்சியிலுள்ள மின்வாரிய அலுவலகத்தை பெரம்பலூருக்கு மாற்றும் திட்டம்**

* வினா எண். 41 **திரு. ஜே. எஸ். இராசு:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திருச்சி மின் திட்டத்தில் திருச்சியில் உள்ள D.E./O & M/North அலுவலகத்தை பெரம்பலூருக்கு மாற்று மாறு (to shift) மின்வாரியம் ஆணை பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அம்மாற்றம் நடைபெற்றுவிட்டதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) ஆம். 29-7-80-ல் மின்வாரியம் ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) 10-6-1981 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** இப்படி அடிக்கடி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அலுவலகத்தை மாற்றிவிடுவதால் அந்தப் பகுதி மக்களுக்கு வசதி குறைவாகுமே, அப்படி மாற்றுவதின் நோக்கம் என்ன? அந்தப் பகுதிக்கு அதுபோன்று வேறு ஒரு அலுவலகம் திறக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பெரம்பலூரில் உருவான கோட்டம் திருச்சியில் இருந்தது. அதை பெரும்பலூரில் வைக்கவேண்டுமென்று பெரும்பலூர் மக்கள் கேட்டார்கள். அந்த மாற்றத்தைத்தான் செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற மாற்றம் இதில் இல்லை.

குமரி மாவட்டத்தில் நிலவிடும் குறைந்த அளவு மின் அழுத்தம்

* வினா எண் 42— திரு. டி. மணி; மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரிமாவட்டத்தில் குமரி முனையிலிருந்து அந்த மாவட்டத்தின் கடைசி பகுதியான நீரோடி வரையிலும் மின் விளக்குகளின் வெளிச்சம் மங்கலாக எரிவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மாற்றி அதிகமாக வெளிச்சம் கிடைக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) குமரி மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் வெளிச்சம் மங்கலாக எரியவில்லை. ஒரு சில கிராமங்களில் மட்டுமே அங்கு நிலவும் மின் அழுத்த குறைவினால் இந்த நிலை இருக்கிறது.

(ஆ) இக்குறைவை நிவர்த்திக்க நாகர்கோவிலிலும் தக்கலையிலும் உள்ள 66 கே.வி. உபமின் நிலையங்களை ரூ. 82 இலட்சம் செலவில் 110 கே. வி. உபமின் நிலையங்களாக உயர்த்தவும், மேலும் குழித்துறையில் ரூ. 1.7 இலட்சம் செலவில் ஒரு 66 கே. வி. தொடு உபமின் நிலையம் ( Line TAP-Sub-station ) அமைப்பதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

திரு. டி. மணி: விளவங்கோடு தாலுகாவில் குறிப்பாக மலையோரப் பகுதிகளில் பெருவாரியாக இந்த மின் விளக்குகள் மிகவும் மங்கலாக, இரவு காலங்களில் மாணவர்களுக்கு படிக்கக் கூட வசதி இல்லாத அளவில் இரண்டு மூன்று ஆண்டுகளாக நிலைமை நிலவி வருகிறது. அதை மாற்றுவதற்கு அவசரமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அவசரமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்தான் 83 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் துணை மின் நிலையங்களை அமைக்கவேண்டும் என்ற திட்டங்களாகும். நாகர்கோவில் துணை மின் நிலையம் டிசம்பர் 1981-ல் முடியும். தக்கலை துணைமின் நிலையம் மே 1982-ல் துவங்கப் பட்டு பத்து மாதங்களில் முடியும். இந்த இரண்டு துணை மின் நிலையங்களும் வந்த பிறகு நிச்சயமாக நிலைமை முன்னேறும். அதோடு மட்டுமல்ல. இப்போது தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்கிற காரணத்தால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓரளவு நிலைமை நன்றாக உள்ளது.



திரு. டி. மணி: இப்போது விளவங்கோடு தாலுகாவில் குறிப்பாக லைன்-டாப் ஸ்டேஷன் ஆரம்பிப்பதாகச் சொன்னார்கள் அது எப்போது ஆரம்பிக்கப்படும்? நில ஆர்ஜித நடவடிக்கைகள் மேற்கொண்டாகிவிட்டனவா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; நிலம் கையகப்படுத்துவதற்கான கோப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

நீலகிரியில் தேயிலை உற்பத்தி செய்யும் சிறு விவசாயிகளிடமிருந்து அரசே கொள்முதல் செய்யும் திட்டம்

* வினா எண் 43— திரு. செ. சிவசாமி மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் சீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

நீலகிரியில் தேயிலை உற்பத்தி செய்யும் சிறு விவசாயிகளை காப்பாற்றும் முறையில் சிறு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அவர்கள் பயிர் செய்யும் டீ இலையை சர்க்காரே வாங்கிக் கொள்ளும் உத்தேசம் உளளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: நீலகிரி மாவட்டத்திலுள்ள தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளே சிறு விவசாயிகளிடமிருந்து இலையை வாங்கி தேயிலை உற்பத்தி செய்வதால், இதை அரசு வாங்கிக் கொள்ளும் உத்தேசம் இல்லை.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் சாதாரண சிறு விவசாயிகள் தேயிலையை உற்பத்தி செய்கிறார்கள். அவர்களுடைய உற்பத்திப் பொருளை விற்பதற்குப் போதுமான மார்க்கெட் இல்லாத காரணத்தினால் அங்கிருக்கக்கூடிய வசதியுள்ளவர்கள் அதைச் சீப்பாக வாங்கி அவர்கள் கொள்ளை லாபம் அடிக்கின்ற நிலைமை இருந்து வருகிறது. இந்த நிலைமையை மாற்ற, அவர்களைக் காப்பாற்றும் முறையில் அவர்களுக்கு நல்ல விலை கிடைக்க, கட்டுப்படியாகும் விலை கிடைக்கும் முறையிலே, அரசே நேரடியாக கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வாங்குவதற்கு ஏற்பாடு செய்தால் அந்த விவசாயிகளுக்குப் போதுமான விலை கிடைக்கும். அந்த முறையிலே அரசாங்கம் முன்முயற்சி எடுத்துக்கொண்டு. அப்படி வாங்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி மாண்புமிகு தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தற்போது 20,000 ஏக்கர் பரப்பில் தேயிலை உற்பத்தி செய்யும் 10,000 சிறு விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களது நிலையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல் நிறைவேற்றுவதற்கு தற்போது நீலகிரி மாவட்டத்தில் 12 தேயிலை தொழிற் கூட்டுறவு தொழி

சாலைகள் இன்றைக்கு இருக்கின்றன. அமைகளின் வாயிலாக மேற்கொண்டு 10,000 சிறு விவசாயிகளின் விளைபொருள்களை வாங்கி, விற்பதற்கு இப்போது வசதியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே வழக்கமாக தேயிலை உற்பத்தி செய்யும் சிறு விவசாயிகளுக்கு, அமைச்சர் அவர்கள் அறிவித்ததுபோல் தமிழக அரசு வேறு ஏதாவது சலுகைகளை தரக்கூடிய நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அண்மையில் டெல்லியில் நடை பெற்ற சிறு தொழில்கள் உற்பத்தியாளர் மாநாட்டில் தேயிலையை உற்பத்தி செய்கின்றவர்களைப் பொறுத்த அளவில் சிறு விவ சாயிகள் மேம்பாட்டிற்காக தமிழக அரசின் சார்பில் அந்த மாநாட்டில் ஏதாவது கருத்துக்கள் வைக்கப்பட்டனவா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே. அண்மையில் டெல்லி மாநகரத்தில் நடைபெற்ற 'நேஷனல் மீட் ஆன் டீ இன்டஸ்ட்ரி' கருத்தரங்கில் தமிழக அரசு சார்பாக சிறு தேயிலை விவசாயிகளுக்கு நலன் பயக்கக் கூடிய வகையில் இரண்டு ஆலோசனைகளை தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

(1) இன்றைக்குச் சிறு தேயிலை விவசாயிகள் உற்பத்தி செய் கின்ற தேயிலையை மத்திய அரசாங்கம், குறிப்பாக இராணுவத் துறை சென்ற ஆண்டுவரை வாங்கிக்கொண்டு வந்தார்கள்; ஆனால், இந்த ஆண்டு டிபென்ஸ் துறையில் வாங்கவில்லை. மீண்டும் வாங்கி, அவர்களுக்கு கேப்டிவ் மார்க்கெட் என்ற வகையில் நிரந்தரமான சந்தையை உருவாக்கித் தரவேண்டும் என்று அந்த மாநாட்டில் தமிழக அரசின் சார்பில் வலியுறுத்தி யிருக்கிறோம்.

(2) பிளென்டிங் பாக்டரிகள் உருவாக்குவதற்கு நிதி வசதி களை மத்திய அரசு, மற்ற நிதித் துறைகளின், நிதி நிறுவனங் களின் வாயிலாக உதவ வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அப்படிப்பட்ட நிலைமை உருவாகுமானால், சிறு விவசாயிகள் உற்பத்தி செய்யும் தேயிலையை கூட்டுறவு தொழிற்சாலைகள் வாடிக்கையாளர்களிடம் நேரடியாக வாங்கி விற்பதற்கு வாய்ப் பிருக்கிறது. ஆக இந்த இரண்டு விஷயங்களை அதாவது கேப்டிவ் மார்க்கெட் உருவாக்குவதற்கும், அதேபோல் பிளென்டிங் பாக்டரி வருவாவதற்கும் தக்க நிதி ஆதாரங்கள் உதவவேண்டு மென்றும் மத்திய அரசுக்கு தமிழக அரசின் சார்பிலே அந்தக் கூட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டில் தேயிலைத் தோட்ட முதலாளிகள் தங்களுக்கு உள்நாட்டில் மார்க்கெட் விரிவா



இருப்பதாகவும், வெளிநாடுகளில் தங்கள் மார்க்கெட் குறைந்து வருவதாகவும் சுட்டிக்காட்டி, உற்பத்தியைக் குறைக்கின்ற வகை யில நிலையிருக்கின்றது என்பதை அரசு அறியுமா? அது மட்டு மல்ல. சிறு விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற தேயிலையை பெரு முதலாளிகள் வாங்கிக்கொண்டு, அவர்கள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். நம் நாட்டுத் தேயிலைக்கு உலகத்தில் பெரிய மார்க்கெட் இருக்கிறது. எனவே மத்திய அரசே இந்த தேயிலை உற்பத்தியை எடுத்துக்கொள்வதற்கான ஒரு திட்டத்தை வலி யுறுத்த தமிழக அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியது போல்சிறு தேயிலை உற்பத்தியாளர்களுககு மேலும் நன்மை அளிக்கின்ற வகையில் 13-வது கூட்டுறவு தொழிற் சாலையைத் துவக்குவதற்கு இந்த ஆண்டு தமிழக அரசு அனுமதி அளித்திருக்கிறது. ஆண்டுகள் செல்ல செல்ல, சிறு விவசாயிகள் அனைவரும் தேயிலை கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் கொண்டுவந்து, அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க அரசு முடிவெடுத்திருக்கிறது.

(முற்பகல் 9-10)

திரு. செ. சிவசாமி: சிறு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய தேயிலையை வாங்கு வதில் என்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: கூட்டுறவுத் தொழிற் சாலைகள் வாயிலாக இப்போது பச்சைத் தேயிலையை வாங்கிக் கொண்டிருக்கிறோம். இப்போது இருப்பது வறுத்த தேயிலை பற்றிய பிரச்சினை.

திரு. கே. உச்சி: நீலகிரி மாவட்டத்திலுள்ள அந்தத் தேயிலையின் விலை ஒவ்வொரு நாளும் குறைந்து கொண்டே போகிறது. தேயிலைத் தோட்டத்தில் கூலி கூட கொடுக்க வகை யின்றி தவிக்கிறார்கள். இரண்டு ரூபாய் பச்சைத் தேயிலைக்கு கூடுதலாக வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் மத்திய அரசு எக்ஸைஸ் டியூட்டியைக் கூட பாதியளவு குறைக்க தமிழக அரசு வற்புறுத்துமா? அதே சமயத்தில் அரசு நேரடியாக இரண்டு ரூபாய் கொடுத்து வாங்க வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இன்றைக்கு பச்சைத் தேயிலைக்குக் குறைவாக விலை கிடைப்பது என்பது தமிழ் நாட்டுக்கு மட்டும் இருக்கிற பிரச்சினை அல்ல. தேயிலை உற் பத்தியில் வட புலத்தில் இருக்கும் அஸ்ஸாம் போன்ற மாநிலங் களில் கூட இந்தப் பிரச்சினை இருக்கிறது. இந்தப் பிரச்சினை குறித்து தேசீயக் கூட்டத்தில் விவாதத்திற்கு வந்து மத்திய அரசு இதற்காகத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக கலால் வரியைப் பொறுத்தவரை அவர்கள் கவனம்

செலுத்தி ஓரளவு சலுகைகளைக் கொடுக்க முயன்று வருகிறார்கள். அப்படிப்பட்ட நடவடிக்கை வந்தால் அவர்கள் சொல்வது போல் ரெம்யூனரேட்டிவ் பிரைஸ் — கட்டுப்படியான விலை சிறு விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்று நம்புகிறேன். அதற்கான வகையில் தமிழக அரசு முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறது, வற்புறுத்தி வருகிறது. இனியும் வற்புறுத்தும்.

திரு. மு. அரங்கநாதன் : சிறு விவசாயிகளைக் காப்பாற்றும் நிமித்தம் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் ஏற்பட்டன. ஆனால், ஏழை விவசாயிகளுக்குப் போதுமான விலை கிடைக்க வில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அதிலே உள்ள உறுப்பினர்களுக்கு பச்சை டீ இலைக்கு எப்படி விலை நிர்ணயம் செய்து கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : விலை நிர்ணயம் செய்வதைப் பொறுத்தவரை அந்தந்தக் கூட்டுறவுச் சாலைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொறுப்பில் நடைபெறுகிறது. அவர்கள் அவ்வப்போது சந்தை நிலவரத்தை உத்தேசித்து விலையை நிர்ணயிக்கிறார்கள்.

திரு. பா.பு. ஜனார்த்தனன் : நீலகிரி கூட்டுறவு தேயிலைச் சங்கங்கள் மிகவும் நலிந்த நிலையில் இருக்கின்றன. சரியான விலை கிடைக்காதக் காரணத்தால் அங்கே பணி புரிகிறவர்களுக்குக் கூட கூலி போதவில்லை. ஆகவே, பர்ச்சேசிங் பிரைசுக்கு அரசு மானியம் கொடுக்க முன்வருமானால் சிறு விவசாயிகளை ஊக்கப்படுத்துவது போல் இருக்கும். விலையை உயர்த்திக் கொடுத்தால் கூட்டுறவுச் சங்கங்களில் வேலை செய்கிற ஊழியர்களுக்கும் ஊதியம் உயர வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, சப்சிடி பிரைஸ் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தேயிலைக்கு உள்ள இந்தப் பிரச்சினை நம்முடைய தமிழ்நாட்டு தொழிற்சாலைகளுக்கு மட்டும் இருக்கிற பிரச்சினை அல்ல. It is a nation Phenomenon

இது ஒரு தேசீயப் பிரச்சினை. அந்த முறையில்தான் மத்திய அரசு மாநில அரசு துணையோடு இன்றைக்கு நல்ல விலை பெற்றுத் தர எல்லா வகைகளிலும் முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன் : ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு உலக நிதி நிறுவனத்திலிருந்து மத்திய அரசு கடன் பெற முயற்சிக்கிற போது நம்முடைய நாட்டுப் பொருள்களின் விலையை உயர்த்திக் கொடுத்தால் கடன் கொடுப்போம் என்ற நிபந்தனை வைத்திருக்கும் முறையில் தமிழ்நாட்டில் பொன் மளையும் பூமியாக உள்ள தேயிலைக்கு விலையைக் கூடுதலாக்க மத்திய அரசும் மாநில அரசும் முயற்சிக்குமா?





மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குப் பொருந்தாத துணைக் கேள்வி இது. என்னிடத்திலே அதற்கான தகவல் இல்லை.

### குமரி மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம்.

* வினா எண். 44 திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குமரி மாவட்டத்தில் தோவாளை அகஸ்தீஸ்வரம் தாலூக்காக்களில் புதிதாகத் தீப்பெட்டி தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்பொழுது எத்தனை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் ஆறும், தோவாளை வட்டத்தில் ஒன்றும், ஆக ஏழு தீப்பெட்டி பெண் தொழிலாளர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் தாலூக்காக்களில் அரசு நிதி உதவியின்றி புதிய தீப்பெட்டிதொழிற் சேவை சங்கங்கள் நிறுவக் கோரி மனுக்கள் வருமானால், தொழிற் துறை வணிக இயக்குநர் தக்க நடவடிக்கைகள் எடுப்பார்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூரில் இருக்கக்கூடிய பெடரேஷன் மூலமாக ஆல்வாய் மொழிப் பகுதியிலே புதிதாகத் தீப்பெட்டிக் குச்சிகளைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்காக இடத்தையெல்லாம் ஆய்வு செய்து சென்றிருக்கிறார்கள். ஆனால் அந்தத் தொழிற்சாலை எப்போது தொடங்கப்படும் என்று தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அவைகள் எல்லாம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. விரைந்து ஆவன செய்யப்படும்.

### முக்கொம்பு என்னும் இடத்தைச் சுற்றுலாத் தலமாக்கும் திட்டம்

* வினா எண். 45— திரு. இரா. கருப்பையா: திரு. எம். சின்னசாமி மாண்புமிகு செய்தி-அறநிலை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1981 ஆகஸ்ட் 25

(அ) திருச்சி மாவட்டத்தில் காவிரியாற்றிலிருந்து கொள்ளிடம் பிரியும் மேல் அணைக்கட்டு அமைந்துள்ள புகழ்மிக்க இடமாகிய 'முக்கொம்பு' என்னும் இடத்தைச் சுற்றுலாத்தலமாக எடுத்து அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) திட்டத்தின் விபரமும் மதிப்பீடும் என்ன?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : (அ) மாவட்ட உலாத் தலமாக அபிவிருத்தி செய்ய திட்டம் உள்ளது. (ஆ) பொதுவாக, சுற்றுலா பேருந்துகளுக்கு நிறுத்துமிட வசதிகள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு அடிப்படைத் தேவையான குடிதண்ணீர் மற்றும் கழிப்பிட வசதிகொண்ட ஓய்வு விடுதி Restsheds கட்டதிட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக சோழன் போக்குவரத்து கழகத்தின் உபரி நிதியிலிருந்து பயணிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 3 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடம் காவிரியாறும் கொள்ளிடமும் பிரியக்கூடிய இடத்திலே உள்ள முக்கொம்பு என்ற இடத்திலே உள்ள இடமாக இருப்பதால் வரலாற்றுப் புகழ்பெற்ற இடமாக அமைந்திருக் கிறது. சமீபத்திலே காவிரியாற்றில் மேல் அணை கட்டப் பட்டதற்குப் பிறகு இலட்சக்கணக்கான மக்கள் அங்கே உள்ள இயற்கை வனப்புக்களைக் கண்டு களிக்கிற இடமாகவும் ஓய்வுக் காகத் தங்குமிடமாகவும் பயன்படுத்துகிறார்கள் அந்த மாவட்டத் திலேயிருந்து மட்டுமல்ல, மாநிலத்திலிருந்தும், வெளிநாட்டிலே இருந்தும் வந்து பார்வையிடக்கூடிய, வந்து தங்கக்கூடிய இடமாக அது இருப்பதால் மாநில அல்லது அகில இந்திய சுற்றுலா மைய மாக அதை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முக்கொம்பு அமைந்திருக்கிற இந்த இயற்கைச் சூழ்நிலையை யொட்டி, அதை மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்காக சில திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. அதற்கு இடையே பொதுப்பணித் துறையின் சார்பிலே சுமார் 10 லட்சம் ரூபாய் செலவிலே பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அதிலே 6 இலட்சம் ரூபாய்க்கு பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு முடிவுற்றிருக் கின்றன. இன்னும் சில திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன இந்தத்திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்ட தற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் கருதுவதைப்போல் அது மிகச் சிறந்த, சுற்றுலா பயணிகளைக் கவருகின்ற சுற்றுலாத் தலமாக மாறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு இரா. கருப்பையா; பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்திலே தற்சமயம்கூட தினசரி பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். சிறிய சிற்றுண்டித் தேவைகளைகூடக் பூர்த்திசெய்யக்கூடிய ஏற்பாடுகள் இல்லாமல் இருக்கிறது என்ற குறைபாடு இருக்கிறது. அந்தக் குறை பாட்டை போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?



1981 ஆகஸ்ட் 25 ]

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் இருக்கிற விவரத்திலிருந்து சிற்றுண்டி விடுதிகள் அங்கே கட்டப்பட்டிருப்பதாகப் பொதுப் பணித் துறையின் சார்பிலே தரப்பட்டு இருக்கிற தகவல் தெரிவிக்கிறது. அங்கே சோழன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலும் மேலும் சில அத்தகைய விடுதிகளைக் கட்டுவதற்குத் திட்டங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல் வருகின்ற பயணிகளுக்குத் தேவையான அளவில் இல்லை என்று கருதப்படுமானால் மேலும் சில சிற்றுண்டி விடுதிகளைக் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

[முற்பகல் 9.20]

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, அந்தச் சுற்றுலா இடத்தை விரிவுபடுத்துவதற்கு இந்திய சுற்றுலாக் கழகத்திடமிருந்து நம்முடைய அரசு ஏதாவது நிதி உதவி கோரியுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அகில உலக முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தலங்களுக்கே இந்திய அரசினிடத்திலேயிருந்து எதிர் பார்க்கின்ற உதவி இன்னும் கிடைத்தபாடில்லை; ஆகவே, இத்தகைய மாவட்ட அளவிலேயுள்ள சுற்றுலாத் தலங்களுக்கு இந்திய அரசினிடத்தில் நிதியுதவி கேட்பதில் பயனிருக்காது.

கோடைக்கானலில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் குறைந்த கட்டணத்தில் தங்கும் அறைகள் கட்டும் திட்டம்.

*வினா எண் 46 திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கொடைக்கானல் நகரைக் கண்டுகளிக்க வரும் ஏழை எளியவர்களுக்கென குறைந்த கட்டணத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தங்குவதற்கு அறைகள் கட்டிவிடப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். (அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், குறைந்த வருமானம் உள்ள சுற்றுலாப் பயணிகளின் தங்கும் வசதிக்காக, 76 படுக்கைகள் கொண்ட ஒரு துயிலக மற்றும் உணவு விடுதியை ரூ. 7.03 இலட்சம் செலவில் கொடைக்கானலில் கட்டி வருகின்றது.

(ஆ) அவ் விடுதியின் கட்டுமானப் பணிகள் 1981 மார்ச் மாதம் துவங்கப்பட்டுள்ளன. தற்போது அஸ்திவாரமிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்விடுதிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

[ஆகஸ்ட் 25 1981

திரு. க. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனித்தனியாக அறைகள் கட்டி வருவதாகக் கூறப்பட்டது. நன்றி. அதைப்போல, பத்து, இருபது பேர்கள் சேர்ந்து தங்கும் வகையில் கட்டித்தரப்படுமா? ஏனென்றால் மாணவ மாணவியர்கள் சுற்றுலாப்பயணமாகக் கொடைக்கானலுக்குச் செல்கிறார்கள். இப்படிச் செல்லும்பொழுது பத்து பேர், இருபது பேர் சேர்ந்து அங்கே தங்குவதற்கு ஒவ்வொரு அறையும் தனித்தனியாகக் கட்டித்தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர்.எம்.வீரப்பன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துயிலக விடுதி என்பது பத்து பேர் சேர்ந்து படுப்பதற்கு வசதியாக உள்ள வகையிலேதான் கட்டப்படுகிறது. அதைப்போல ஏழு அறைகள் ஏழு கூடங்கள்; இதை தவிர இரண்டு பேர் படுக்கக்கூடிய மூன்று கூடங்கள் இப்படிப் பட்ட அமைப்புகள், தனிப்படுக்கைக்கு 5 ரூபாயிலிருந்து 7 ரூபாய் வரையில் வசூல் செய்யும் வகையில்தான் பத்து, பத்து படுக்கை கொண்ட கூடங்களாகத்தான் அமைக்கப்படுகின்றன.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரவர்களே, இந்த ஏழைகளுக்கான விடுதிகளை, சுற்றுலா வரும் பயணிகள் தங்குவதற்காகக் கட்டப்படுவது வரவேற்கத்தக்க விஷயம். இவற்றை எவ்வளவு ரூபாய்க்கு வாடகைக்கு விடப் போகிறார்கள் என்பது நிர்ணயம் செய்யப்பட்டு விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இப்பொழுது சொன்ன பதிலிலேயே குறிப்பிட்டேன், அதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் கவனிக்க வில்லை என்று தெரிகிறது, ஒவ்வொரு படுக்கைக்கும் ஐந்து ரூபாயிலிருந்து ஏழரை ரூபாய் வரை என்ற விகிதத்தில் கட்டணம் விதிப்பதாக அரசு உத்தேசித்திருக்கிறது.

திரு. ஏ.சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொடைக்கானல் நகரிய தங்கும் விடுதியில் தங்குவதற்காக வசதியில்லாமல் மிகவும் மோசமாக இருக்கிறது; கட்டணமும் அதிகமாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவல் சம்பந்தமாகச் செல்லும்போது சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதியில் பாதிக் கட்டணம் வசூலிக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அலுவல் தொடர்பாகச் சட்டமன்ற உறுப்பினர்கள் செல்லுகின்றபொழுது அரசாங்கம் அந்தச் செலவை ஏற்றுக் கொள்கிற காரணத்தினாலே முழுத் தொகையையும் கொடுப்பதிலே சங்கடம் இருக்காது.



1981 ஆகஸ்ட் 25]

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, குறைந்த வருவாயில் தங்கும் இடங்கள் கட்டிக் கொடுப்பது ஒருபுறமிருக்க, கொடைக்கானலுக்குச் செல்லும் பஸ்கள், லாரிகள், கார்கள் ஆகியவைகளுக்குக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதை நிறுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைச் சுற்றுலாத் துறை வசூலிக்க வில்லை. ஒருவேளை நகரிய நிர்வாகம் அதை வசூலிக்கிறதோ என்னவோ தெரியவில்லை. எனவே, இந்தக் கேள்வியைச் சம்பந்தப்பட்ட துறையினிடத்தில் கேட்டால் தகுந்த பதிலைப் பெற இயலும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. கொடைக்கானல் உலகப்பிரசித்தி பெற்ற ஒரு சுற்றுலா மையம். அதிலே இப்பொழுது 76 படுக்கைகள் கொண்ட சுற்றுலா விடுதி ஏழைகளுக்காகக் கட்டப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் அதற்கு ஐந்து ரூபாயிலிருந்து ஏழரை ரூபாய் வரை வாடகை விதிக்க உத்தேசித்திருப்பது அதிகமாகத் தெரிகிறது. எனவே, அந்தக் கட்டணத்தைக் குறைத்தால் இன்னும் அதிகமான அளவில் ஏழை எளியவர்களும் அதைப் பார்க்க முடியும். வசதி படைத்தவர்கள் தான் கொடைக்கானல், ஊட்டி போன்ற இடங்களுக்குச் செல்லமுடியும் என்ற நிலைமையை மாற்றி இந்த அரசு இப்படிப்பட்ட விடுதிகளை அதிகப்படுத்தி குறைந்த வாடகைக்கு ஏழைகளுக்குக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகுப் பேரவைத் தலைவர் அவர்களே, வாடகையைக் குறைத்துக் கொடு என்று சொல்லிக் கொண்டிருப்பதன் மூலம் எத்தகைய வசதிகளைத் தருவது என்கிற பிரச்னையை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருமே மறந்து விட்டு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தங்குகிறவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து தர வேண்டும். அவ்வளவு வசதிகளையும் செய்து கொடுத்ததற்குப் பிறகு குறைந்த கட்டணத்தை வசூலிக்க வேண்டுமென்பது சுற்றுலாத் துறையினுடைய திட்டம். ஒருவர் போய் அங்கே தங்கி, வசதியாகப் படுத்து உறங்கி குளிப்பதற்கும் கழிப்பறைகள் மற்றும் வசதிகள் எல்லாவற்றிற்கும் சேர்த்து ரூ. 5 கட்டணம் விதிக்கலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சில நேரங்களிலே அந்தச் செலவுகள் அதிகமாகிறபொழுது ரூ. 7½ வரை போகலாம் என்பதுதான் இப்பொழுது சுற்றுலாத் துறை நிர்ணயித்திருக்கிற கட்டணமாகும்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் ஏதோ உறுப்பினர்கள் அஃபிஷியலாகப்போகும் போது, அங்கு தங்குவதற்கு அரசாங்கமேவசதி செய்துதருவதாகச் சொன்னார்கள். உண்மையிலே அப்படி இல்லை. அஷ்யூரன்ஸ்

கமிட்டியிலே நான் இருந்தேன். அங்கே மட்டுமல்ல, வெளி ஸ்டேஷன்களிலே தங்கினாலும் நாங்கள்தான் 'பே' பண்ணு கிறோம். இங்கே கொடைக்கானல் நகரியம் பற்றிச் சொன் னார்கள். அதேபோல் குற்றாலத்திற்கு அஃபிஷியலாக உறுப்பினர்கள் போனால்கூட ரூ. 30/–, ரூ. 40/– வாடகையாக வசூலிக்கப்படுகிறது. ஏற்கனவே பேரவைத் தலைவ ராக இருந்த நம்முடைய திரு. முனு ஆதி அவர்களுடைய பார்வைக்குக்கூட இதைக் கொண்டு வந்தேன். உறுப்பினர்கள் அஃபிஷியலாகப் போனால் கூட, ரூ. 30, ரூ. 40/–, ரூ. 50/– வாடகையாக கேட்கிறார்கள். அது பெரும் தொகையாக இருக்கிறது. நீங்கள் கொடுக்கிற பேட்டா அதிலேயே போய்விடும் போலிருக்கிறது. ஆகவே இதுபோன்ற இடங்களுக்குத் தகுந்த தாக்கீதுகள் அனுப்பி, குறைந்தபட்சம் உறுப்பினர்களிடம் இருந் தாவது குறைந்த வாடகை வசூலிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலத்தைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆனால், ரூ. 40/–, ரூ. 50/– என்று அரசுத் துறை சம்பந்தப்பட்ட அமைப்புகளில் யாரும் வசூலிக்க மாட்டார்கள். குற்றாலத்திலே நகரியத்தின் சார்பிலேதான் விடுதிகள் கட்டப் பட்டு வாடகைக்கு விடப்பட்டு வருகின்றன. நகரியம் என்ன வசூல் செய்கிறது என்பதைப் பற்றி சுற்றுலாத் துறைக்குத் தெரியாது. ஆகவே, அங்கே இருக்கிற தேவைகளை ஒட்டி, அதிக மான அளவில் நடுத்தரமான மக்கள் வந்து தங்குகிற அளவில், சுற்றுலாத் துறை அங்கே தன்னுடைய செலவில் இது போன்ற ஒரு பெரிய விடுதியைக் கட்ட வேண்டுமென்ற முயற்சியையெடுத்து இடம் கிடைக்காத சூழ்நிலையில் அந்தப் பொறுப்பை அந்த நகரியத்தினிடத்திலே ஒப்படைத்திருக்கிறது. அதுதவிர, கேரள அரசு நமக்கு மாற்றித் தரும்படி, அவர்களுக்கு எழுதிக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அது கிடைத்தால் சுற்றுலாத் துறையிலே யிருந்து இதுபோன்ற குறைந்த வாடகைக்கு நடுத்தர மக்கள் தங்குகிற விடுதிகள் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப் படும்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, சுற்றுலா விடுதியினால் கட்டப்படும் தங்கும் விடுதிகள் குறைந்த வாடகைக்குக் கிடைத்தாலும், அதில் சிற்றுண்டிச் சாலைகள் என்ற அடிப்படையில் அதிக விலை, அதாவது, இரண்டு காஃபி குடித்தால், ஒரு ரூம் வாடகை வந்து விடுகிற அளவுக்கு விலை இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? அந்தச் சிற்றுண்டி சாலைகளைத் தனியார் யாராவது நடத்துகிறார்களா? அல்லது அரசு நடத்துகிறதா? அப்படி அரசு நடத்தினால், விலைகளைக் குறைக்க அரசு முன்வருமா?





மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துகிற விடுதிகளில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்தான் அந்த உணவு விடுதிகளை நடத்துகின்றது. தனியார் யாரிடத்திலும் ஒப்பந்தங்கள் விடுவ தில்லை. வழங்கப்படுகிற உணவு நன்றாக இருக்க வேண்டு மென்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்தைத் தெரிவிக் கிறார்கள். உணவை நன்றாகப் படைக்கிறபொழுது அதற்கான செலவையும் நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்.

குதிரைமசால் மாட்டுத் தீவனத்தைப் ஜப்பான் நாட்டிற்கு
ஏற்றுமதி செய்யும் திட்டம்.

*வினா எண் 47. திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) உடுமலைப்பேட்டையில் தயாராகும் குதிரை மசால் தீவனம் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யத் தமிழ்நாடு அக்ரோ நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குதிரை மசால் தீவனத்திற்கு இந்தப் பெயர் வரக் காரணம் என்ன? அதனுடைய சிறப்பு அம்சம் என்ன? ஒரு ஏக்கரில் பயிரிட்டால் என்ன செலவாகும்? அதனால் என்ன இலாபம் வருகிறது? அதைச் சாப்பிடுகிற மாடுகளிடமிருந்து பால் அதிகமாகக் கிடைக்கிறதா என்ற விவரத்தை அமைச்சர் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர் களே, கால்நடைகள், கோழிகள், ஒருவேளை குதிரை மசாலை மசாலாவைப் போல் உண்பதால், இப்பெயர் வந்திருக்கக் கூடும். ஆனால் எவ்வளவு ஏக்கருக்கு, எவ்வளவு இலாபம் என்பதைப் பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை. வேளாண்மைத் தொழி லாக அது உற்பத்தி செய்யப்படுகிறது. மகாராஷ்டிரம், குஜராத், கர்நாடகம் போன்ற மாநிலங்களிலே இப்பொழுது நாம் விற்பனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பெரிதாகப் பேசப்பட்டுவரும் சூபா புல்லுக்கும் இதற்கும் என்ன ஒற்றுமை, வேற்றுமை இருக்கிறது? ஏதாவது சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** அது வேறு, இது வேறு.

**திரு. எம். சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜப்பான் போன்ற நாடுகளில் அதற்கான மார்க்கெட் நிரம்ப இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, கோவை மாவட்டத்தில் அந்தப் பகுதியில், குறிப்பாக, வறட்சிப் பகுதியில் இருக்கிற விவசாயிகள் பயன்பெறுகிற வகையில், அதனை ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை, அரசு மீண்டும் பரிசீலித்து, அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய சாத்தியக் கூறுகளைப் பரிசீலிக்குமாறு வேளாண் தொழிற் கழகத்தை அரசு கேட்டுக் கொள்ளும்.

[முற்பகல் 9.30]

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, இன்றைக்கு வேறு பயிர்களை பயிர் செய்யும்போது அதிக பூச்சிக் கொல்லி மருந்துகளும், உரமும் தேவைப்படுகின்றன. ஆனால் அதன் வருமானம் குறைவாக இருக்கின்றது. இந்தக் குதிரை மசால் தீவனம் பயிர் செய்வதற்கு அதிகமான பூச்சி மருந்துகளோ அல்லது அதிக அளவு உரமோ தேவையில்லாமல் வளருகின்ற நிலை இருக்கின்றது. எனவே இதை அதிகமாகப் பயிர் செய்ய ஊக்குவித்து அதிகமான விலை பெறுகிற அளவுக்கு இந்த எங்கெங்கு ஏற்றுமதி செய்ய முடியுமோ அங்கெல்லாம் ஏற்றுமதி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** இவைகள் அனைத்தையும் அரசு பரிசீலிக்கும்.

### தேவகோட்டையிலுள்ள விவசாயப் பண்ணை.

*வினா எண் 48.—**திரு. ச. அங்குசாமி:** மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவகோட்டையில் உள்ள விவசாயப் பண்ணை நஷ்டத்தில் நடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) ஆம்.

(ஆ) வேலி அமைத்தல் மற்றும் நீர்ப்பாசன வசதிகளை பெருக்குவதன் மூலமும் விதை உற்பத்தியை பெருக்குவதன் மூலமும் தேவகோட்டையிலுள்ள அரசு பண்ணையை நல்ல முறையில் இழப்பின்றி நடத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.



**திரு. ச. அங்குசாமி:** தலைவர் அவர்களே, இந்த விவசாயப் பண்ணையினுடைய பரப்பளவு எவ்வளவு? இந்த விவசாயப் பண்ணையிலே என்னென்ன விவசாயப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, 98.47 ஏக்கர் பரப்பளவில் இருக்கின்றது. மரவள்ளி விதைப் பெருக்குத் திட்டம், காய்கறி உற்பத்தி மையம், முந்திரி தாய் இன விதைப் பெருக்குத் திட்டம் போன்ற விஷயங்கள் நடைபெற்று வருகின்றன.

**திரு. ச. அங்குசாமி:** தலைவர் அவர்களே, அங்கே பயிரிடப் படுகின்ற காய்கறிகளை அங்கே பொருப்பில் உள்ளவர் தங்களுக்கு வேண்டியவர்களுக்குக்கொடுத்து வருவதால் நஷ்டம் ஏற்படுகிறது, என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** அது பற்றிய புகார் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றித் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. தி. கா. நல்லப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பண்ணை நட்டத்தில் நடப்பதாகவும், வருங்காலத்தில் நட்டம் இன்றி செயல் படுத்த முடியும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே எவ்வளவு நட்டத்தில் இது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கா காளிமுத்து:** தலைவர் அவர்களே, அதைப் பற்றித் தகவல் இல்லை என்றாலும் அந்தப் பண்ணை நிலத்தில் இருக்கின்ற கிணறுகள் ஒன்றுக்கொன்று, தொலை தூரத்தில் இருக்கின்ற காரணத்தாலும் அவைகளிலிருந்து தண்ணீர் வயல்களில்பாயமுடியாமல் இருக்கின்ற காரணத்தினாலும் இத்தகைய இழப்பு ஏற்படுகின்றது. இவைகளை எல்லாம் சீர்படுத்தி இழப்பை ஈடு கட்டலாம், ஊதியத்தையும் பெறலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. சிவசாமி:** தலைவர் அவர்களே, தேவகோட்டை பண்ணை எப்போது ஆரம்பிக்கப்பட்டது? ஆரம்பத்தில் இருந்தே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா! எப்போதாவது லாபம் கிடைத்திருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்,

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டிலே இது துவக்கப்பட்டது. அதிலே முந்திரி தாய் இன விதைப் பெருக்குத் திட்டம் இன்னும் பலன் கொடுக்க ஆரம்பிக்கவில்லை. மற்றவை எல்லாம் ஆரம்ப நிலையிலேதான் இருக்கின்றன. அதனாலே இத்தகைய இழப்பு ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்திலே நிச்சயமாக இந்த இழப்பு ஈடு செய்யப்படும்.

## பேரம்பாக்கம் கிராமத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கட்டும் திட்டம்

* வினா எண். 49 திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) திருவள்ளூர் வட்டம் பேரம்பாக்கம் கிராமத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டும் திட்டம் உள்ளதா?

ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

ஆ) இத் திட்டம் அரசின் பரிலனையில் உள்ளது.

இ) ரூ. 20, 191·80.

## சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்குக்கான குடும்ப நல சேமிப்புத் திட்டம்.

* வினா எண். 50. திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

அ) சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் நான்காம் பிரிவு ஊழியர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் பணிக்காலத்தில் இறந்தால் கொடுக்கப்படும் பத்தாயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதா?

ஆ) அந்த ஊழியர்களிடமிருந்து இது தொடர்பாக ஏதேனும் அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அ) ஆம்.

ஆ) இது குறித்து ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்கள் அனுப்பியுள்ள செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. து. புருஷோத்தமன். பேரவைத் தலைவர் அவர்களே சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் நகரசுத்தித் தொழிலாளர்கள் நகரத்தில் முக்கியமான சுகாதாரப் பணிகளிலே ஈடுபடுகிறார்கள். நான்காந்தர ஊழியர்களாக உள்ள அவர்களுக்கு இதற்கு முன்னால் இருந்த அரசு அவர்கள் பணிக்காலத்தில் இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் கொடுத்து வந்தது. இந்த நிலை ஏன் இடையிலே மாற்றப்பட்டது? சென்னை நகரில் யாரும் செய்ய முடியாத



பணியைச் செய்யக்கூடியவர்கள் வடிகாலில் டிரெயினேஜில் இறங்கி பணிபுரிகின்ற ஆபத்தான நிலையில் பணிபுரிந்து வரும் அவர்கள் பணிக்காலத்தில் இறந்தால் 10 ஆயிரம்ரூபாய்கொடுக்கும் திட்டம் ஏன் இடைக்காலத்தில் நிறுத்தப்பட்டது. அவர்களுக்கு உடனடியாக இந்த 10 ஆயிரம் ரூபாயைக் கொடுக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து மத்திய அரசுக்கு சென்னை மாநகராட்சி எழுதியிருக்கிறது. மத்திய அரசு விலக்கு அளித்தால் தான் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும்.

திரு. து. புருஷோத்தமன்: பேரவை தலைவர் அவர்களே, மற்ற அரசு ஊழியர்கள் பணி காலத்தில் இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் அளிக்க மத்திய அரசு உதவி தேவைப் படடதா? அந்த உதவியைப் பெறுவதற்கு இத்துறைக்கு, மட்டுமே ஏன் தேவைப் படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன். குறிப்பாக 'டிரெயினேஜிலே' பாதாள சாக்கடையிலே இறங்கி வேலை செய்யும் போது விஷ வாயு தாக்கி இறந்து விடுகிறார்கள். அவர்களுக்கு பாதுகாப்பான உடை கொடுக்கப்படும் என்று கூட்டங்களில் சொல்லப்பட்டு வருகிறது. அவர்கள் இறந்து விட்டால் 0 ஆயிரம் ரூபாய் கொடுக்காத நிலை இருக்கிறதே அதை பரிசீலித்து உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை நியாயமான ஒன்று. அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்து எப்படியும் அதைச் செய்வதற்கு முயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய உறுதிமொழியை நான் வரவேற்றாலும் கூட, இந்த நான்காம் தர ஊழியர்களுடைய தன்மையான நிலை காரணமாக, அரசு ஊழியர்கள் என்ற முறையில் அரசினுடைய நேரடியான ஊழியர்களாக இல்லாவிட்டாலும், மாநகராட்சி ஊழியர்கள் என்ற நிலையில் அவர்கள் இருந்தாலும் அவர்களுள் இறந்தவர்கள் குடும்பங்களுக்கு மத்திய அரசினுடைய எந்தச் சட்ட அடிப்படை காரணமாகத் தரப்பட்டு வந்த உதவித் தொகை நிறுத்தப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைக் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே இறங்குவது தேவையில்லை என்று நான் கருதுகிறேன், எந்தச் சட்டத்தின் அடிப்படையில், விதியின் அடிப்படையில் இந்த நிறுத்தம் ஏற்பட்டது என்பதைச் செல்வதை விட எந்த முடிவிற்கு வந்திருக்கிறோம் என்பதைச் சொல்வதிலே திருப்தி அடைவது நல்லது என்று கருதுகிறேன். விவாதத்திற்குப் போய் நல்லது கிடைக்காமல் போய்விடக் கூடாது. அதோடு இந்த அரசைப்

பொறுத்த வரையில் இப்படிப்பட்ட ஆபத்து நிறைந்த பணியில் ஈடுபடுகிறவர்களுக்கு, மாநகராட்சி சாக்கடையில் இறங்கி வேலை செய்யாமல், இயந்திரங்களின் மூலமாக அதை வெளிக் கொணர்வதற்கு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ்:** பேரவைத் தலைவர் அவர்களே 'பேமிலி பெனிபிட் ஸ்கீம்' சட்டப்படி ஒருவர் அரசாங்க வேலையில் இருக்கும் போது இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு கொடுக்கலாம் என்று இருக்கிறது. அண்மையில் குளித்தலையில் சாக்கடை வெட்டியால் ஒருவர் இறந்த பிறகு, டேட் ஆப் பர்த்......(மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி சென்னை மாநகராட்சியைப் பற்றியது. குளித்தலைக்குப் போனால் எல்லா நகராட்சிகளும் வந்து விடும்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கமும் பரிவுடன் பார்த்து சீக்கிரமாக வாங்கிக் கொடுப்பதற்கு முயற்சி எடுக்குமென்று சொன்னார்கள். அதேபோல மற்ற மாநகராட்சிகளுக்கும் இது விரிவு படுத்தப்படுமா? அரசு அதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்யும்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் இறந்து போன பலருடைய குடும்பத்திற்கு அந்த உதவி கொடுக்கப்பட்டு, இடையில் நிறுத்தப்பட்டு மறுபடியும் கொடுக்கப்படும் என்ற உறுதிமொழியை அரசு தருகிற காரணத்தால் அந்த இடைக்காலத்தில் இறந்து போனவர்களுடைய குடும்பத்திற்கும் அந்த அந்தத் தொகை கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன் வரும். அதில் முக்கியமான ஒன்று, அதாவது தொழிலாளர்கள் அல்லாத பணியாளர்களுக்கு குடும்ப நலதிட்டத்தின் கீழ் 10 ஆயிரம் ரூபாய் இந்த பட்டு வருகிறது. தொழிலாளர்களாக இருக்கிறவர்கள் க்ஷேம நலத் திட்டத்தில் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதால் அவர்களுக்கு இந்த 10 ஆயிரம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை ஆனால் 31-8-1978 வரையிலும் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த வாய்ப்பில்லாத காரணத்தால் தான் நிறுத்தப் பட்டது. மீண்டும் அதிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு நாம் தெரிவித்து இருக்கிறோம். ஆகவே அந்த உத்தரவு வந்தவுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்



**திரு. கே எஸ். ஜி. ஹாஜா செரீப்:** தலைவரவர்களே, ஒவ்வொரு பெரிய ஸ்தாபனங்களிலும் அவர்கள் சிப்பந்திகள் வேலையில் இருக்கும்போது விபத்துக்குள்ளானால் அவர்களுக்கு உடனடியாக ஏதாவது கொடுக்கும்படி செய்வதற்கு இன்ஷூரன்ஸ் செய்திருக்கிறார்கள். அந்தமாதிரி கார்பரேஷன் இன்ஷூரன்ஸ் செய்திருக்கிறதா? அப்படிச் செய்திருந்தால் அவர்களுடைய 'நியர் ரிலேஷன்சுக்கு' துரிதமாகப் பணம் கிடைக்கும். இல்லை என்றால் இன்ஷூரன்ஸ் செய்து, ஏதாவது வழிமுறை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, தற்போதுள்ள விதிமுறைகளின்படி யாராவது பணியில் இருக்கும் போது இறந்துவிட்டால் அவர்களுடைய சட்டப்படியான வாரிசுகளுக்குப் பாதுகாப்பு வைப்பு நிதி (இன்ஷூரன்ஸ் திட்டம்) குடும்ப நலத் திட்டம் இந்த இரண்டுமே அளிக்க இடமில்லை. ஆகையால் இதைப் பரிசீலித்து, இதிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

[முற்பகல் 9–40]

### கள்ள கொளத்தூர் ஊராட்சி மன்றக் கட்டிடம்

*வினா எண் 51— **திரு. கே. எம். தங்கமணி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி, மைலம் பஞ்சாயத்து யூனியன், கள்ளகொளத்தூர் கிராம ஊராட்சி மன்ற கட்டடத்திற்கு பத்து ஆண்டுக் காலத்திற்கு முன் அடிக்கல் போடப்பட்டிருப்பதை தாமதமின்றி உடனே கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** கள்ளகொளத்தூர் ஊராட்சி அலுவலகக் கட்டிடத்தை கட்டி முடிக்க புதிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வேலை நடைபெறுவதற்கு ஊராட்சி ஒன்றிய ஆணையர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். துரிதமாக முடிக்க ஆணையர் பணிக்கப்பட்டுள்ளார்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவரவர்களே, 10 ஆண்டுக் காலமாக இந்தக் கட்டிடம் கட்டி முடிக்கப்படாததற்குக் காரணம் என்ன? இது எப்போது கட்டி முடிக்கப்படும்? இதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, 10 ஆண்டு காலமாக கட்டி முடிக்காததற்குக் காரணம் முன்னால் இருந்த மன்றத் தலைவர்தான். அவருடைய பெயரை வேண்டுமானால் சொல்கிறேன். அவருடைய பெயர் கிருஷ்ணவேணி பட்டாபி. 1971-72-ல் ரூ. 5,000 மதிப்பீடு செய்து இக்கக்

கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1971-72-ல் இதற்காக செலவிடப்பட்ட தொகை 1,050 ரூபாய். 1972-73-ல் செலவிடப்பட்ட தொகை 2,650 ரூபாய். 3,700 ரூபாய் செலவிட்ட பிறகும் இந்தக் கட்டிடம் அஸ்திவார நிலையிலிருந்து மேலே வரவில்லை. அதற்குக் காரணமாக இருந்தவர் மன்றத் தலைவர் என்று குறிப்புகள் சொல்லுகின்றன. ஆகவே, இந்த ஆண்டிலே இந்தக் கட்டிடத்தை கட்டி முடிக்க வேண்டுமென்று ஆணையருக்கு ஏற்கனவே ஆணையிடப்பட்டிருக்கிறது; உடனடியாகக் கட்டி முடிக்கப்படும்.

தேவணாம்பாளையம் செல்ல பாதை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 52—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஊத்துக்குளி ஒன்றியம், தேவணம்பாளையத்திற்கு செல்வதற்கு பாதை வசதி ஏற்படுத்துவது பற்றி சம்பந்தப்பட்ட ஒன்றியத்திலிருந்து நடவடிக்கைக் குறிப்புகள் ஏதாவது வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) சாலை அமைக்க வேண்டிய நிலங்களை நில ஆர்ஜிதம் செய்து நடவடிக்கை எடுக்க ஒன்றிய ஆணையருக்கும் பெருந்துறை வட்டாட்சியருக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, அந்த ஊர் தோன்றிய காலத்திலிருந்து இதுவரையில் அந்த ஊருக்குச் செல்ல வேண்டிய வழி இல்லை. மேலும், கால்நடையாகச் சென்று கொண்டிருந்த அந்த பாதையில்கூட மழை பெய்த காரணத்தால் விதை போட்டு, நடக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அதை எல்லாம் பரிசீலனை செய்துதான் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வைரமடை-தொப்பம்பட்டி சாலை.

*வினா எண் 53—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கரூர்—கோவை நெடுஞ்சாலையில் இருந்து பிரியும் வைரமடை-தொப்பம்பட்டி சாலையில் தார் போடும் திட்டம் அரசு குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) இச்சாலையில் கி.மீ. 5-6 கிலோ மீட்டர் மற்றும் கி.மீ. 10-11 ஆகிய இரண்டு கிலோ மீட்டர் நீளத்திற்கு தார் போடும் வேலை நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கிலோ மீட்டர்தான் போடுகிறார்கள். ஏற்கெனவே 3 பேருந்துகள் செல்லுகின்றன. ஆகவே, இந்த ஆண்டு இந்தத் திட்டத்தை அரசு முடித்துக் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அதனுடைய மதிப்பீடு 7 இலட்சம் ரூபாய். சுமார் 13 கிலோ மீட்டர் தூரம் கற்சாலை உள்ளது. இந்த ஆண்டில் நடவடிக்கை எடுத்து, வேலையை முடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

கிராமப் புறங்களில் அளிக்கப்படும் ஆங்கிலமுறை மருத்துவம்.

*வினா எண் 54—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பல இடங்களில் ஓமியோபதி, சித்தா போன்ற மருத்துவ பட்டத்தை பெற்று, ஆங்கில முறைகளை பயன்படுத்தி கிராமப் புறங்களில் மருத்துவம் செய்து வருகிறார்களே, இதற்கு சட்டம் இடம் தருகிறதா?

(ஆ) இல்லையெனில் எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) 1970 முதல் எவ்வளவு பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆங்கில முறை மருத்துவத்துடன் இந்திய முறை மருத்துவத்தையும் இணைத்து பயின்று (Integrated medicine) ஒருங்கிணைந்த மருத்துவக் கழகத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் மட்டுமே ஆங்கில முறைகளை பயன்படுத்த சட்டம் இடம் தருகிறது.

(ஆ) புகார் ஏதும் வராததால் இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) எழாது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராமங்களிலே சூட்டும் கோட்டும் போட்டுக் கொண்டு ஹோமியோபதி பட்டம் பெற்றவர்கள் தங்களை எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் என்று சொல்லிக்கொண்டு கிராம மக்களை ஏமாற்றுகின்ற வகையிலே வைத்தியம் செய்து வருவது மருத்துவ சட்டப்படி குற்றமாகாதா? அதற்கான சட்டம் இல்லையென்றால் கடுமையானதொரு சட்டத்தைக் கொண்டு [illegible] அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மூலக் கேள்விகள் 1970 ஆம் ஆண்டு முதல் எவ்வளவு புகார்கள் வந்திருக்கின்றன என்று கேட்கப்பட்டது. அதற்கு புகார் எதுவும் வரவில்லை என்று பதில் சொல்லி இருக்கிறேன். ஆகவே குறிப்பிட்டு எந்த இடத்திலாவது இப்படி நடந்து அது நமது கவனத்திற்கு வந்தால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, ஹோமியோபதி, சித்த வைத்தியம் போன்றவற்றை அரசு ஊக்குவிப்பதன் காரணமே பழமையான மருத்துவ முறைகள் அழியாது காக்கப்பட வேண்டும் என்பதால்தான். ஆனால் அப்படிப்பட்டவர்கள் ஆங்கில மருந்துகளை வழங்குகிறார்கள். எங்கெங்கு இந்த மாதிரியாக நடந்து வருகின்றன என்பதைக் கண்டறிய எம்.எல்.ஏ-க்களைக் கொண்ட குழுக்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இதனைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும் என்று அரசினுடைய அதிகாரிகளிடத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது.

திரு. க. அன்பழகன்: சித்த மருத்துவ முறையும், ஹோமியோபதி மருத்துவ முறையும் அரசாங்கத்தாலே ஊக்கப்படுத்தி வளர்க்கப்படுவதாகச் சொல்லப்பட்டாலும்கூட உரிய முறையிலே ஹோமியோபதி மருத்துவமும், சித்த வைத்தியமும் வரை வழி செய்யப்பட வேண்டும். அப்படி வளர்ப்பது மூலமே அப்படிப்பட்ட மருந்துகளைத்தான் வாங்க வேண்டும் என்ற மனப்பான்மை பொது மக்களிடத்திலே ஏற்படும். ஆனால் இன்னும் சரியான வழி செய்யாத காரணத்தாலேதான் பொதுமக்களின் மனப்பான்மை காரணமாக இந்த மாதிரி காரியங்களைப் பலர் செய்யக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. ஏற்கனவே அரசாங்கம் எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சித்த வைத்தியர்களை நியமிக்க வேண்டும்; ஹோமியோபதி மருத்துவர்களை அரசாங்க மருத்துவ மனைகளிலே நியமிக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறபடி அவர்களை எல்லாம் நியமித்து அதன்மூலமாக அந்த மருத்துவர்களுக்கு மரியாதை ஏற்படுகின்ற வகையிலே அரசு உடனடியாகக் கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, புதியதாக 186 பி.எச்.எஸ்.-ல் சித்த பிரிவினைத் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதற்காக ஜி.ஓ.கூட இஷ்யூ செய்து 186 இடங்கள் எவை எவை என்பது பற்றிகூட அறிவிப்புச் செய்து விட்டோம். இது நிச்சயமாக மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாக இருக்கும் என்று கருதுகிறேன். எங்கெங்கு அரசாங்கத்திற்குச் சொந்தமாக



கட்டிடங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன. அடுத்து 3 மருத்துவர்கள் இருக்கிறார்கள். இப்போது நான்காவதாக ஒரு மருத்துவரை நியமிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன. ஆகவே இது உடனடியாக நடைபெறும் என்பதையும் நம்முடைய பேராசிரியர் அவர்களின் கேள்விக்குப் பதிலாகசொல்கிறேன். எங்கெங்கு அரசிற்குச்சொந்தக் கட்டிடங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் இந்த 186 இடங்களில் அந்த மருத்துவப் பிரிவை ஏற்படுத்தி இருக்கிறோம். சித்த வைத்தியத்தைப் பொறுத்தவரையில் ஆங்காங்கே கட்டிடங்கள் கிடைக்கின்றபோது விஸ்தரிப்பு செய்யப்படும். ஹோமியோபதியைப் பொறுத்தவரையில் இதுவரையில் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டுதான் 6 இடங்களில் ஹோமியோபதி மருத்துவம் படித்திருக்கக்கூடிய மருத்துவர்களை நியமிக்க அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது. ஆகவே இந்த இரண்டு பிரிவுகளுக்கும் நல்ல வகையிலே ஊக்கம் கொடுக்கக்கூடிய அளவுக்கு அரசாங்கம் செயல்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 186 இடங்களிலே சித்த வைத்தியம் ஆரம்பிப்பதற்கு அரசு ஆணை பிறப்பித்திருப்பதாக சொன்னார்கள். நன்றி. ஆனால் 1970 ஆம் ஆண்டு முதல் ஒரு புகார் கூட வரவில்லை என்று சொல்கிறார்கள். மதுரையிலே ஹோமியோபதி நிலையம் ஒன்றை ஒரு தனியார் நடத்தி வருகிறார். அங்கே பயிற்சி பெறுவதற்காக வருகின்றவர்களுக்கு 8 தினங்கள் தான் பயிற்சி தரப்படுகின்றது. அப்படி 8 தினங்கள் பயிற்சி பெற்றவர்கள் டாக்டர் ஆர்.எச்.எம். என்று போட்டுக் கொண்டு ஊசி போடுகின்ற வேலையைக்கூட செய்கின்ற நிலைமை இருக்கின்றது. அந்த வகையிலே சமீபத்தில் ஒருவருக்கு அப்படி ஊசி போட்டதில் செப்டிக் ஆகி கையையே எடுக்கின்ற அளவுக்கு நிலைமை வந்துவிட்டது. இது குறித்து புகார் செய்தும்கூட இதற்கு ஒரு சட்டம்கூட இல்லை. கேட்டால் அவர்களிடம் ஒரு சர்டிபிகேட் இருக்கின்றது. ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்கின்ற நிலைமை இருக்கின்றது. வேறு வழி இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே புகார் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆகவே இப்படிப்பட்டவர்களைத் தடை செய்து உண்மையிலே நன்கு பயிற்சி பெற்றவர்களை நியமிக்க அரசு முன்வருமா? அதற்காக சட்டம் கொண்டுவர முடியுமா? கிராமப்புற மக்கள் பாதிக்கப்படுவதிலிருந்து காப்பாற்றப்படுவதற்கு இந்த நிலைமையைத் தடுத்து நிறுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய 1914 என்ற அந்தச் சட்டத்தின்படி உடனடியாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு வசதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்ட மருத்துவ அதிகாரிகளிடத்திலேயும் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கக் கூடாத வகையில் பார்த்துக் கொள்ளுங்கள் என்றுகூடச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த

மாதிரியான நிலைமைகள் வருகின்றபோது நிச்சயமாகக் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.50)

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் ஏற்கனவே 3 டாக்டர்கள் இருக்கிறார்கள் என்றும் கட்டிடங்கள் உள்ள இடங்களில் புதிதாக சித்த வைத்தியம் பயின்ற டாக்டர் ஒருவரை 4 வதாக நியமிக்க முடிவு செய்திருக்கிறோம் என்றும் பதில் அளிக்கும்போது கூறினார்கள். ஆனால் ஏற்கனவே கட்டிடங்கள் இருக்கிற பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்களில், தமிழ்நாட்டில் அதுவும் குறிப்பாக வடஆற்காடு மாவட்டத்தில், ஆங்கில மருத்துவ டாக்டர்களே இல்லை என்கிற நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? உத்தரவு இருக்கிறது ஆனால் அதை நிறைவேற்றுவதில்லை. அப்படித்தான் இந்த நியமனங்களிலும் இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்? (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி சித்த வைத்தியர்கள் ஆங்கில மருத்துவத்தைப் பயன்படுத்துவது பற்றி வடஆற்காடு மாவட்டத்தில் ஆங்கில மருத்துவ டாக்டர்கள் இல்லை என்று கேள்வி கேட்டால் எப்படி? மூலக் கேள்வியோடு ஒட்டிக் கேளுங்கள்.

## திருப்பூர் அரசு மருத்துவமனை.

***வினா எண். 55 திரு. கு. ரமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டத் தலைமை மருத்துவமனையாக திருப்பூர் மருத்துவமனை அங்கீகரிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அந்த மருத்துவமனையில் உள்ள மொத்த படுக்கைகள் எவ்வளவு ? மருத்துவர்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) ஆம்.

(ஆ) தற்போதுள்ள படுக்கைகள் .. 104

அனுமதிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்கள் .. 24

**திரு. ஆர். மணிமாறன்.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தின் தலைமை மருத்துவமனையாக திருப்பூர் மருத்துவமனை ஆக வேண்டும் என்று அங்குள்ள மக்கள் மிகநீண்ட நெடுங்காலமாக கேட்டு வந்தார்கள்.



இந்த அரசு அதைத் தந்ததற்காக, அந்த மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு, 104 படுக்கைகள் என்பதை 400 படுக்கைகளாக ஆக்க அரசு முன் வருமா ? தலைமை மருத்துவமனை என்று மாறியிருந்தாலும் கூட, அது இன்னும் தலைமை மருத்துவமனையாக முழுமை பெறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை மாற்ற அரசு முன் வருமா ? தற்போதுள்ள கட்டிடங்கள் போதாததினால், புதிதாக கட்டிடங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரசுக்கு வைக்கவிருக்கிறோம். அதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரைப் பொருத்தவரையில், இப்போதுதான் தலைமை மருத்துவமனையாக, அதுவும் பெரியார் மாவட்டம் பிரிந்ததற்குப் பிறகுதான், ஆக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன் ஈரோட்டில் தலைமை மருத்துவமனை இருந்தது. திருப்பூர் தலைமை மருத்துவமனையாக மாற்றப்படுவதற்கு முன்பு 104 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகதான் இருந்தது. இப்போது அதை 300 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்த வேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிறோம். அரசாங்கத்தின் ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்கும் குறைந்த பட்சம் 300 படுக்கைகள் இருக்க வேண்டும் என்பது அரசின் திட்டம். அந்த அடிப்படையில் 300 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றி, அதற்குரிய புதிய கட்டிடங்கள் கட்ட 23.70 லட்சம் பணம் ஒதுக்கியிருக்கிறோம். டெண்டர்கள் எல்லாம் கேட்கப்பட்டு உடனடி நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறோம். அந்தக் கட்டிடங்களை ஜூன் 82 க்குள் கட்டி முடித்துவிடலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. வைத்தம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கட்டிடங்கள் எழுப்பப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இன்று அங்கேயுள்ள அந்த மருத்துவ மனை அமைந்திருக்கும் இடம், திருப்பூரை விட்டுத் தள்ளி, சற்றுத் தொலைவில் இருக்கிறது. ஆகவே, வெளி நோயாளிகள் பயன் பெறும் வகையில், கட்டவிருக்கும் இப் புதிய கட்டிடங்களை திருப்பூர் நகரத்திற்கு அருகிலேயே கட்டுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவைத்தம்பி அவர்கள் எழுப்பிய பிரச்னை உண்மையான பிரச்னை. இப்போது இருக்கக் கூடிய கட்டிடம் ஏறத்தாழ 1½ மைல் தூரத்தில் நகரத்திலிருந்து இருக்கிறது. 23.70 லட்சம் ரூபாய் செலவில், அந்த மருத்துவ மனையை விரிவுபடுத்த ஏற்பாடு செய்துக் கொண்டிருக்கிறோம். அது படிப்படியாக விஸ்தரிக்கப்பட வேண்டும் என்ற திட்டம் இருக்கிறது. கிட்டத்தட்ட 12 மாதங்களுக்குள் விஸ்தரிக்கப்படும். விஸ்தரிக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர்களின் ஆலோசனை யோசிக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருப்பூர் மருத்துவமனையில் 104 படுக்கைகள் இருப்பதாகவும், அதற்கென 24 டாக்டர்கள் பணிபுரிகிறார்கள் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. ஆனால் அதைப்போலவே பல இடங்களில் 120, 130 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகளில் எல்லாம், 10, 12 டாக்டர்கள் மட்டுமே உள்ளார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அவர்கள் கூட லீவிலும், டெபுடேஷனிலும் சென்று விடுவதால், வெளியிலிருந்து வரக்கூடிய நோயாளிகளையும் மீதம் உள்ள உள்ளிருக்கும் நோயாளிகளையும் எஞ்சிய டாக்டர்களால் போதுமான அளவு கவனித்துக் கொள்ள முடிவதில்லை. ஆகவே, 10 நோயாளிகளுக்கு ஒரு டாக்டர் என்ற வகையில் டாக்டர்களை நியமித்து, முழுமையாக வைத்திய வசதிகளை மக்களுக்கு அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்? உதாரணமாக என்னுடைய தொகுதியில் பழனி தலைமை மருத்துவ மனையை வந்து பார்த்தாலே தெரியும். அந்த வகையில் செயல்பட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, பழனி மருத்துவ மனைக்கு நான் சென்று பார்த்திருக்கிறேன். அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்போதிருந்த காலியிடங்களில் 4, 5 இடங்கள் தற்போது நிறைவு செய்யப்பெற்று விட்டன. தற்போது ஒன்றிரண்டு இடங்கள் தான் காலியாக இருக்கின்றன. அதைக்கூட விரைவில் நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக எல்லா மருத்துவ மனைகளிலும் எவ்வளவு படுக்கைகள் இருக்கின்றனவோ அதற்கேற்ப டாக்டர்களை நியமிப்பதற்காக டிஸ்ட்ரிக்ட் மெடிக்கல் ஆபீஸர் களிடம் சொல்லி எங்கெங்கே குறைவாக இருக்கிறது என்று தெரிவிக்கச் சொல்லியிருக்கிறோம். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் மருத்துவர்களை நியமித்திருக்கிறோம். எனவே இந்தப் பிரச்னை நல்ல வகையில் தீர்க்கப்பட்டிருக்கிறது. இப் பிரச்னை இனி எழாது.

பல்லவுன் போக்குவரத்துக்கழக நிர்வாகப் பணியாளர்கள் கோரிக்கை.

வினா எண். 56 திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : திரு. செ. செம்மலை, திரு. எம். சின்னசாமி மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பல்லவன் போக்குவரத்துக்கழக நிர்வாக பணியாளர்கள் தங்களுடைய வேலை நேரத்தைக் குறைக்கவேண்டும் என்று கோரியுள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அக்கோரிக்கையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) இக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி பாலசுப்பிரமணியன் : அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களில் தொழிலாளர்களுக்கு என்று ஒரு வேலை நேரமும் நிர்வாகப் பணியாளர்களுக்கு ஒரு வேலை நேரமும் இருக்கிறது. அதேபோல் தமிழ்நாடு போக்குவரத்து நிதிக் கழகத்தில் உள்ளவர்களுக்கும் பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாகப் பணியாளர்களுக்கும் எட்டு மணி நேர வேலை என்று வகுக்கப்பட்டது. ஆனால் தமிழ்நாடு போக்குவரத்து நிதிக் கழகத்தில் மட்டும் 1975—ல் ஆறு மணி நேர வேலை என்று குறைக்கப்பட்டிருக்கிறது. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றுகிற நிர்வாகப் பணியாளர்கள் தங்களுக்கு வழங்குகிற கலக்ஷன் போனசில் ரூ. 100 போனாலும் தங்களுடைய வேலை நேரத்தைக் குறைக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அந்தக் கோரிக்கையை அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு முத்துசாமி : 1975-ம் ஆண்டில் இதற்காக ஒரு 12 (3) செட்டில்மென்ட் போடப்பட்டு அனைத்துத் தொழிற் சங்கங்களும் நிர்வாகமும் சேர்ந்து ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். அதற்கு முன் ஆறு மணி நேரம் என்று பணியாற்றிக் கொண்டிருந்தார்கள் அரசாங்கத்தில் இருந்தபோது. அது போக்குவரத்துக் கழகமாக மாற்றப்பட்ட பிறகு எட்டு மணி நேரம் பணியாற்ற வேண்டும் என்று சொல்லி அதற்காக ஈட்டுத் தொகையாக ரூ. 5 கூட கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அது ஒரு பெரிய பிரச்னையாகத் தோன்றவில்லை யென்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை பரிசீலித்து முடிந்த அளவிற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது வேலை நேரத்தை கருத்தில்கொண்டு அந்த பணியாளர்களுக்கு ஈட்டுத்தொகையாக ரூ. 25 கொடுப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தொகை நிர்ணயிக்கப்பட்டு ஆறு ஆண்டுகளாகின்றன. எனவே அவர்களை ஊக்குவிக்கும் வகையில் குறைந்தபட்சம் அந்தத்தொகையை கூடுதலாக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : 1975-ல் நிர்ணயிக்கப்பட்ட தொகை அந்தத் தொகை. அதற்குப் பின்னால் எல்லாம் வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்தத் தொகையும் வளர்ந்திருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி பாலசுப்பிரமணியன் : இந்தப் போக்குவரத்துக் கழக நிர்வாகப் பணியாளர்களுக்கு எட்டு மணி நேரம் வேலை என்று இருப்பதால் மற்ற போக்குவரத்துக்

கழகங்களை விட சென்னையில் இருக்கிற பல்லவன் போக்கு
வரத்துக் கழக நிர்வாகப் பணியாளர்கள் அதிலும் குறிப்பாக
பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். காலை ஏழு
மணிக்கு அலுவலகம் சென்று மாலை ஏழு மணிக்குத் தான்
திரும்பிச் செல்ல முடிகிறது. அதன் காரணமாக அவர்கள்
தங்கள் சொந்தப் பணிகளைப் பார்க்க முடியாததொரு சூழ்நிலை
உருவாகியிருக்கிறது. ஆகவே குறைந்தபட்சம் பல்லவன் போக்கு
வரத்துக் கழகத்தில் பணியாற்றுகிற நிர்வாகப் பணியாளர்களுக்கு
மட்டுமாவது இந்தச் சலுகையை அளிக்க அரசாங்கம் உத்தர
விடுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பல்லவன் போக்குவரத்துக்
கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் என்று பிரித்து
விட முடியாது. எல்லாயிடங்களிலும் பணியாற்றுகிறவர்களுக்கு
சமமாக அந்த உரிமை வழங்கப்பட வேண்டும் என்று கருத்து
கொண்டிருக்கிறோம். தொழிற் சங்கங்கள் கூட அதைத்தான்
வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே பெருநகர்ப்
பிரிவுக்கு என்று மாற்றிவிட்டால் மற்றவர்கள் அதைக் காட்டிக்
கேட்கும் சூழ்நிலை ஏற்படும். இருந்தாலும் இந்தச் சங்கடங்களை
மனதில்கொண்டு வேறு ஏதாவது வழியைத் தேடிப்பிடிக்க
முடியுமா என்று பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதி
யோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. து. புருஷோத்தமன் : அமைச்சர் அவர்கள் வேறு
ஏதாவது வழி தேடிக் கண்டிபிடிக்க வேண்டுமென்று குறிப்பிட்
டார்கள். என் கேள்வி மூலம் நான் ஒரு வழியைச் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது அதிக நேரம் பணியாற்றக்
கூடியவர்களுக்கு மற்ற இடங்களில் கொடுக்கப்படுவதைப்போல்
ஓவர்டைம் என்று கொடுக்க அரசு முன்வருமா ? பல்லவன்
போக்குவரத்துக் கழகத்தில் அதிக நேரம் பணியாற்றக்கூடிய
நிர்வாகப் பணியாளர்களுக்கு, எட்டு மணி நேரம் வேலை
செய்கிறவர்களுக்கு ஓவர்டைம் கொடுக்கப்படுமா ? இந்தத்
துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 10 நாட்கள்
தான் காஷுவல் லீவ் கொடுக்கப்படுகிறது. ஆனால் சிவில்
சப்ளைஸ் கார்ப்பரேஷன் போன்றவற்றில் பணியாற்றுகிறவர்
களுக்கு 20 நாட்கள் காஷுவல் லீவ் கொடுக்கப்படுகிறது. ஆகவே
இந்த நிர்வாகப் பணியாளர்களுக்கு ஓவர் டைம், இந்த 20
நாட்கள் காஷுவல் லீவ் போன்ற சலுகைகளை அரசாங்கம்
கொடுக்க முன்வருமா ?

(முற்பகல் 10.00)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
1975 ஆம் ஆண்டு செய்துகொண்ட 12(3) செட்டில்மென்ட்படி
அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அப்போது கொடுத்து
வந்த ஓவர்டைம் எடுத்துவிடவில்லை. எனவே, இதற்கு
முன்னால் அவர்கள் ஒப்புக்கொண்டதைச் செய்து கொண்டிருக்





கிறார்கள். இன்றைய தினம் இருக்கிற சூழ்நிலை காரணமாக
அவர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்த
கோரிக்கைகளை அரசாங்கம் மனிதாபிமானத்தோடு பரிசீலனை
செய்யும். எனவே, ஓவர்டைம் என்பதற்கு இங்கே இடமே
இல்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகம் புற நகர்ப் பிரிவு
வேலூருக்கு மாற்றப்பட இருப்பதாக அறிவிப்பு வந்ததே, அந்த
அறிவிப்பு எப்போது செயலாக்கப்படும்? அப்படியானால், அந்தக்
கழகத்திற்கு என்ன மாற்றுப் பெயர் வைக்க முடிவு செய்யப்
பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த
மூலக் கேள்விக்கும இதற்கும் சம்பந்தமில்லை.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத
அளவிலே போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு 7 கோடி ரூபாய்
ஊதியத்தை இந்த அரசு உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள்.
பாயின்ட் 8 என்ற வேலைப் பளு இருக்கிறது என்று ஒப்புக்
கொள்ளப்பட்டிருக்கிறது. டி.வி.எஸ். நிறுவனம் 8 மணி வேலை
நேரத்தை 7 மணியாகக் குறைத்திருக்கிறார்கள். இதேபோல்
இங்கும் 8 மணி நேரம் என்பதை 7 மணி நேரமாக, ஒரு மணி
நேரம் குறைக்க அரசு முன்வருமா? அதற்கான உத்தரவ
அமைச்சர் இடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான்
ஏற்கெனவே பலமுறை சொல்லிவிட்டேன். ஒப்பந்தத்தில்
கையெழுத்திட்டு அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த
ஒப்பந்தத்தை தொழிற் சங்கமும், நிர்வாகமும் சேர்ந்து செய்திருக்
கிறார்கள். இதிலே இருக்கின்ற சங்கடத்தை பல்முறை
சொல்லிவிட்டேன். எங்களுக்கு இருக்கின்ற சங்கடம், நாங்கள்
ஒப்பந்தத்தை மீறித்தான் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டி
யிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு காரியத்தை போக்குவரத்துக்
கழகத்திற்கு செய்துவிட்டு, மற்றக் கழகங்களுக்கு செய்ய முடியாது
என்று சொல்ல முடியாது. இந்த 2 மணி நேரம் அதிகமாக
இருக்கின்ற காரணத்தினால், அதற்கேற்ப சலுகைகளை
ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். அந்தச் சலுகைகளையும்
கொடுத்து, இரண்டு மணி நேரத்தையும் குறைக்கவேண்டுமென்பது
கடினமான காரியம். ஆனால், இருக்கின்ற நிலைமையைக் குறித்து
ஏதாவது ஒரு வசதியான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

[1981 ஆகஸ்ட் 25

## தனியார் நடத்தும் ஆம்னி பஸ்களை தடைசெய்யும் திட்டம்.

* வினா எண். 57—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டாபிராமன் குழு பரிந்துரை செய்த அடிப்படையில் தனியார் நடத்தும் ஆம்னி பஸ்களுக்கு தடை விதிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) மற்றும் (ஆ) பரிசீலனையில் உள்ளது.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் தலைவர் அவர்களே, பட்டாபிராமன் குழு பரிந்துரையை பரிசீலனை செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆம்னி பஸ்களைப் பொறுத்தவரையில், பல்வேறு இடங்களில் டூரிஸ்ட் என்று போர்டு போட்டுக் கொண்டு இயங்கிக் கொண்டு வருகிறார்கள். வருகின்றவர்கள் ஒவ்வொருவரையும் நம்முடைய பஸ்களில் ஏற்றுவது போல்தான் ஏற்றிக்கொள்கிறார்கள். அதன் காரணமாக, நம் பஸ்களில் வருமானம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, அரசாங்கம் அதைத் தடுப்பதற்கு உடனடியாக தடை செய்யும் வகையில் சட்டம் பிறப்பிப்பதற்கோ அல்லது வேறு நடவடிக்கைகள் எடுக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, சட்டப்படி அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கு சரியான சட்டங்கள் நம்மிடம் இல்லை. அப்படி தடுத்து நிறுத்திய போது, அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று, அதற்கு விதிவிலக்கு வாங்கி விட்டார்கள். இருந்தாலும் கூட, நம்முடைய போக்குவரத்து அதிகாரிகளும், காவல்துறை அதிகாரிகளும் கொஞ்சம் கண்காணிப்புடன் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அது மட்டுமல்ல. போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் அவர்கள் வண்டிகளை ஓட்டக்கூடிய நேரங்களில், இவர்களும் வண்டிகளை ஓட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து இப்போது கொஞ்சம் குறைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில மாதங்களுக்கு முன்னால் தமிழக அரசு சில இடங்களில் இப்படிப்பட்ட வண்டிகள் ஓடுவதை நிறுத்தியதன் காரணமாக, சில நாட்களுக்கு இந்த வண்டிகள் நிறுத்தப்பட்டது. அப்போது, காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், மற்றும் சில அதிகாரிகளும் சஸ்பெண்ட் செய்யப் பட்டனர். அந்த அதிகாரிகள் மீண்டும் வேலையில் அமர்த்தப் பட்டிருக்கிறார்கள். அப்படி எடுத்துக்கொள்ளப்பட்டதற்கான





காரணம் என்ன? மேலும், அந்த ஆம்னி பஸ்கள் விடுவதை நிறுத்துவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். அப்படி பிடிப்பட்ட பேருந்துகள் மீது நாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னபோது, அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நீதிமன்றத்தில் அவர்களைப் பாதுகாக்கின்ற அளவிலே சட்டங்கள் இருந்த காரணத்தினால், பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. மேலும், வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் வேலையில் அமர்த்தப் பட்டுள்ளதைப் பற்றிச் சொன்னார்கள். வேலைநீக்கம் செய்யப் பட்ட அதிகாரிகளை 6 மாத காலங்களுக்கு மேல் வேலைநீக்கம் செய்யக்கூடாது என்பதால் அவர்களை வேலையில் எடுத்துக் கொண்டு, விசாரணை தொடர்ந்து நடந்து வருகிறது. விசாரணை தொடர்ந்து நடந்து குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** அவர்களுக்கு பர்மிட் வழங்கும்போது டூரிஸ்ட் பஸ் என்ற முறையில்தான் கொடுக்கப் படுகிறது. டூரிஸ்ட் என்று சொல்லும்போது குறிப்பிட்ட ஆட்கள் பூராவையும் ஒரே இடத்திற்கு அழைத்துச் செல்வதாக இருக்க வேண்டும். ஆனால் இந்த பஸ்ஸில் குறிப்பிட்ட நகரத்தில் நின்று திருச்சி, மதுரை போன்ற எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் அழைத்துச் செல்கிறார்கள். அப்படி அவர்கள் ரூல்சுக்கு விரோதமாகப் போகும்போது அவர்களுடைய பர்மிட்டை பறிமுதல் செய்ய அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** இதைத் தெரிந்துதான் முதலிலேயே சொன்னேன். பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கும்போது அவர்களுக்கு நீதிமன்றத்தின் பாதுகாப்பு கிடைக்கிறது. வேறு வகையில் இதை எப்படி செய்வது என்று யோசித்து அதிகாரிகளை நியமித்து கடுமையாக கண்காணித்து வருகிறோம். இதிலே வேறு வகையான மாற்றங்கள் செய்ய அரசு முன்வரும்.

**திரு. அ. ரகுமான்கான் :** ஆம்னி பஸ்ஸில் ஊழல் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட அதிகாரிகள் மீது வழக்குகள் போடப் பட்டதா? சார்ஜ் ஷீட் போடப்பட்டதா? நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும் அளவுக்கு இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா அல்லது சார்ஜ் ஷீட் போடாமல் எஃப்.ஐ.ஆர். ஸ்டேஜில் இருக்கிறதா? வழக்குகளைத் திரும்பப் பெறும் உத்தேசம் இருக்கிறதா? சாதாரணமாக, மற்ற வழக்குகளில் கடுமையாக இருந்து கோர்ட்டுக்குக் கொண்டு போகக்கூடிய இந்தச் சர்க்கார் இதில் காலதாமதம் செய்து கொண்டிருப்பதன் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், இந்த அதிகாரிகளைப் பொறுத்த வரை குற்றம் செய்தவர்கள் என்று சொல்லப்பட்டவர்களை

மூன்று பிரிவாகப் பிரித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது விசாரணையில் இருக்கிறது. வேண்டுமானால் தனியாகக் கேள்வி போட்டால் எப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், என்னென்ன குற்றங்கள் சுமத்தப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று விளக்கமாகப் பதில் சொல்ல முடியும்.

திரு. மி. வின்சென்ட் : தனியார் பஸ்களை தேசவுடைமையாக்குவது பற்றி அரசு நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இந்த அரசைப் பொறுத்தவரை தனியாருடைய பேருந்துகளை தேசியமயமாக்க வேண்டுமென்று கருதினாலும் இன்றைய தினம் இருக்கும் சூழ்நிலையில் எங்கு பார்த்தாலும் பேருந்து வேண்டுமென்று கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்ற நிலையில் ஆண்டு தோறும் 1,500 பேருந்துகள் வாங்கினாலும் மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது என்ற அச்சம் இருக்கும் நிலையில் இடபோதுள்ள தேவையைப் பூர்த்தி செய்துவிட்டு படிப்படியாக தனியார்களுடைய பேருந்துகளை அரசுக்குச் சொந்தமாக்கலாம் என்ற கருத்தில் இந்த அரசு இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலேதான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**போக்குவரத்துக் கழகங்களுக்கான பயணச்சீட்டுகளை அச்சடிக்கும் பணி.**

*வினா எண். 58—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசை சேர்ந்த போக்குவரத்துக்கழகங்கள் பயணச்சீட்டுகளை தனியார் அச்சகங்களில் அச்சிடுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) பல்லவன் போக்குவரத்துக்கழகம் (பெருநகர்) பிரிவுக்குத் தேவையான பயணச்சீட்டுகளின் ஒரு பகுதியும், மற்ற போக்குவரத்துக் கழகங்களில் தேவையான பயணச் சீட்டுகளும் தனியார் அச்சகங்களில் அச்சிடப்படுகின்றன.

தற்பொழுது பயணச் சீட்டுகளை அச்சடிக்கும் பணி, நன்கு பெயர் வாங்கிய அச்சகங்களுக்கு மட்டும் கொடுக்கப்படுகின்றன. இந்த முறை போக்குவரத்துக் கழகங்களுக்கும், பயணம் செய்பவர்களுக்கும் திருப்தி அளிக்கும் வகையில் செயல்படுகிறது. ஆகையால் தற்போது இந்த முறையில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியமில்லை.



திரு. பெ. சு. திருவேங்கடம் : ஏற்கனவே இந்தப் பேரவையிலே, ஒரே எண்ணுள்ள டிக்கட்டுகள் அச்சடிக்கப்பட்டிருப்பது பற்றியெல்லாம் உறுப்பினர்கள சொல்லியிருக்கிறார்கள். எண்கள் இல்லாத டிக்கட்டுகள் கூட அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. தனியார் அச்சகத்தில் குறைபாடுகள் இருக்கின்றன என்றால் போக்குவரத்துக் கழகஙகள் தங்களுக்கு என்று அச்சகத்தை ஏற்படுத்திக் கொள்வது நலமாக இருக்கும். இதுவரை இல்லையென்றாலும் இனிமேலாவது எல்லா போக்குவரத்து தலைமையிடங்களிலும் அச்சகத்தை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை தேவை என்ற முறையில் பெருநகர் பிரிவில் ஓரளவுக்கு நாமே அச்சடித்துக் கொள்கிறோம். ஆனால் முழுவதும் நாமே அச்சடிக்க முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. பெருநகரில் நம்முடைய அச்சகத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதை எல்லா போக்குவரத்துக் கழகங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்றாலும் அது உடனடியாகச் செய்யப்பட முடியாது. போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான பல்வேறு உதிரி பாகங்களை தனியார் நிறுவனங்களிலிருந்து வாங்காமல் நாமே தயாரிக்கவேண்டுமென்ற முறையில் அமைப்பு ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. டயர் புதுப்பிக்கும் வேலைகளை நாமே செய்து கொண்டிருககிறோம். அதே போன்று இதையும் படிப்படியாக நம்முடைய போக்குவரத்துக் கழகமே செய்யும்.

[முற்பகல் 10.10]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இப்படி தனியார் அச்சகங்களுக்கு அச்சடிக்கக் கொடுக்கிறபோதே நல்ல அச்சகமாகப் பார்த்துக் கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நல்ல அச்சகம் என்பதை எப்படித் தேர்ந்தெடுக்கிறார்கள் ? எந்த அடிப்படையில் அவர்களுக்கு வேலை வழங்கப்படுகிறது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : உதாரணமாக ''டான்சி'' என்று சொல்லலாம். இது ஓரளவிற்கு அரசாங்கத்தோடு சம்பந்தப்பட்டு இருக்கின்ற காரணத்தாலே அதற்குக் கொடுக்க வேண்டுமென்று முடிவு எடுக்கிறோம். அனுபவத்திலே எது சரியாக இருக்கிறது, எதிலே தவறுகள் நடக்கின்றன என்பதைப் பார்த்துத் தான் பொறுக்கி எடுக்கிறோம். பொறுக்கி எடுக்கிறோம் என்றால் தனியாக அவர்களை அழைத்துக் கொடுப்பதில்லை. டெண்டர்கள் கேட்கப்பட்டு யார் குறைவாகக் கேட்கிறார்களோ அவர்களுக்கு அவர்கள் தவறு செய்யாதவர்களாக இருந்தால் கொடுக்கிறோம்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : சென்னை நகரத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினுடைய அச்சகத்துறையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் தங்களுடைய பல்வேறு கோரிக்கைகளை அரசின் முன்பாக வைத்து மற்றத் துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்குத் தரப்படுகின்ற சலுகைகள் அனைத்தும் தங்களுக்கும் தரப்பட வேண்டுமென்று வேண்டியிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும், போக்குவரத்துக் கழகத்தின் பல்வேறு துறைகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குத் தரப்படுகின்ற ஊதியமும், சலுகைகளும் அளிக்கப்படுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** இது அச்சகத்தைப்பற்றிய கேள்வி தானே ஒழிய அச்சகத் தொழிலாளர்களைப்பற்றிய கேள்வியல்ல. இருந்தாலும் கூட பதில் சொல்கிறேன். பல்வேறு துறையினர் செய்கின்ற வேலையைப் பிரித்துப் பார்த்து அவர்கள் இந்த வேலையைச் செய்கிறார்கள். ஆகவே தேவையில்லை என்று அரசு நினைக்காது. சூழ்நிலைகளுக்கு ஏற்ப அவற்றை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தமிழ்நாட்டில் இயங்கிவரும் கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்கள்

* **வினா எண் 59** திரு எம். சின்னசாமி : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் மத்திய சர்க்கார் உதவியுடன் இயங்கும் கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்கள் கூட்டுறவு சங்கங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் அதிகாரப்பற்றற்ற (Non-officials) உறுப்பினர்கள் எவ்வளவு பேர் ?

**மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் :** (அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு கூட்டுறவு கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக ஏழு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

(இ) நிர்வாகக் குழு உறுப்பினர்களில் அதிகாரப் பற்றற்ற (Non-officials) உறுப்பினர்கள் இல்லை.

திரு எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் உதவியுடன் இயங்கும் கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்கள், எல்லாத் திட்டங்களுமே நட்டத்தில் தான் இருக்கின்றன.



காரணம் கைத்தறித்துறையில் அனுபவம் பெற்றவர்கள் அதிகாரபற்றற்ற உறுப்பினர்களாக அந்தக் குழுவிலே இல்லை. அவர்கள் இருந்து நல்ல ஆலோசனைகளைச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. அவர்களுடைய ஆலோசனை இருந்தால் நட்டத்தை சரிக்கட்ட முடியும். அந்தக் குழுவிலே இனிமேலாவது கைத்தறித் துறையில் அனுபவம் பெற்ற அதிகாரப்பற்றற்ற உறுப்பினர்களை அல்லது சட்டமன்ற உறுப்பினர்களை போடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் :** இந்தக் குழுவிலே இப்போது நல்ல அனுபவம்பெற்ற அதிகாரிகளே இருக்கிறார்கள். தனியார்களும் சேர்க்கப்பட வேண்டுமென்ற உறுப்பினரின் உணர்வை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றுமதி வளர்ச்சித் திட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதா ? அல்லது மாஸ்டர் வீவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் :** கூட்டுறவுச் சங்கங்களில் கூட்டுறவு நெசவாளர்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாஸ்டர் வீவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலிருந்து வெளிநாட்டுக்கு கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்வதில் இதுவரையில் சீலிங் ஏதோ இருந்ததாகவும் அண்மையிலே மத்திய சர்க்கார் அதை எடுத்திருப்பதாகவும் சொல்லப்படுவது உண்மையா ? ஆமெனில் இதுவரையில் இருந்துவந்த ரிபேட்டை கூடுதலாக்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வழிவகைகளை மேற்கொண்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் :** வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு யாதொரு சீலிங்கும் இல்லை. எவ்வளவு அதிகபட்சமாக முடியுமோ அவ்வளவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்களுக்குக் குழுக்கள் போடும்பொழுது மத்திய சர்க்காரினுடைய அனுமதியைப் பெறவேண்டி உள்ளதா ? அல்லது மாநில சர்க்காரே தன்னிச்சையாகச் செயல்பட முடியுமா ?

[1981 ஆகஸ்ட் 25

**மாண்புமிகு திரு எஸ். என், இராசேந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் மத்திய சர்க்காரின் ஆலோசனை பெறுவதிலிருந்து விடுபட்டு மாநில சர்க்கார் இதை நியமனம் செய்து வருகிறது.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி ஆடைகளை ஏற்றுமதி செய்யும் நேரத்தில், ஏற்றுமதியை அதிகமாக ஆக்க வேண்டுமேயானால் அதற்கான தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும். வெளிநாடுகளிலே நல்லி, ராதா சில்க் ஆடைகளுக்குக் கிராக்கியிருக்கிறது. The design is more impo tant than production. ஆகவே, இப்படித் தனிப்பட்ட நிறுவனத்தைச் சேர்ந்தவர்களை ஏற்றுமதியை அதிகமாகச் செய்கின்றவர்களை இந்தக் குழுவிலே சேர்த்துக் கொண்டு ஏற்றுமதியை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. தனியார்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட, கைத்தறி இன்றைக்கு அகில உலகத்திலும் பெயரும் புகழும் பெற்றிருப்பதால் அதிகாரிகள் அந்தக் குழுவிலே நியமிக்கப்படுகிறார்கள். நெசவாளர்களையும் சேர்க்கின்ற முடிவைப்பற்றிப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்களில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் யார் யார்? மாஸ்டர் வீவர்கள் தான் உறுப்பினர்களாக இருக்கிறார்களா ? அல்லது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். என், இராசேந்திரன் ;** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதிலே உறுப்பினர்களாக இருப்பவர்கள் :

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் தலைவர் ; தனி அதிகாரி, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்—உபதலைவர் ; மத்திய அரசு கைத்தறி விஸ்தரிப்பு ஆணையாளரின் பிரதிநிதி ; மாநில அரசின் பிரதிநிதி (தொழில்துறை) ; தனி அதிகாரி, மத்திய கூட்டுறவு வங்கி ; உதவி இயக்குநர் (கைத்தறி மற்றும் துணிநூல்) ; நிர்வாக இயக்குநர், ஏற்றுமதி வளர்ச்சித் திட்டம்.



1981 ஆகஸ்டு 25]

**வள்ளியூரில் கோ-ஆப்-டெக்ஸ் விற்பனை நிலையம் ஏற்படுத்தும் திட்டம்**

***வினா எண் 60— திரு ப. நெடுமாறன்:** மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை மாவட்டத்தில் வள்ளியூரில் கோ-ஆப்-டெக்ஸ் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்:** (அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வள்ளியூரில் கோ-ஆப்டெக்சின் கிளை விற்பனை நிலையம் ஒன்று திறக்கவென நல்ல கட்டிடம் பார்க்கப்பட்டு வருகிறது. கட்டிடம் கிடைக்கப் பெற்றவுடன் கிளை விற்பனை நிலையம் திறக்கப்படும்.

**திரு. மு. ஜான் வின்சென்ட்:—** பேரவைத் தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் வள்ளியூர் நகரப் பஞ்சாயத்து கிட்டத்தட்ட 18,000 ஜனங்கள் கொண்டது. வாடகைக் கட்டிடம் கிடைப்பதாக இருந்தால் உடனடியாக ஏற்படுத்துவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். மிக விரைவில் நாங்கள் வாடகைக் கட்டிடத்தைப் பார்த்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அப்படிக் கொடுத்தால் உடனடியாக கோ-ஆப்-டெக்ஸ் கைத்தறி விற்பனை நிலையத்தை அமைச்சரவர்கள் ஏற்படுத்திக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கண்டிப்பாக விரைவிலே திறக்கப்படும்.

**திரு. இ. முத்துராமலிங்கம்:** பேரவைத் தலைவரவர்களே, தற்போது பெரிய நகரங்களில் மட்டும்தான் கோ-ஆப்-டெக்ஸ் கைத்தறி விற்பனை நிலையங்கள் இருந்து வருகின்றன. 25,000 மக்கள் கொண்ட அனைத்துப் பேரூராட்சிகளிலும் இதனைத் துவக்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உள்ளதா? ஆமெனில் எப்பொழுது அது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நகரங்களில் மட்டும்தான் கைத்தறித் துணி கிடைக்கும் வசதிகளைச் செய்யவில்லை இந்த அரசு. கிராமப்புறங்களிலும் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற

[1981 ஆகஸ்டு 25

எண்ணத்தின் அடிப்படையில், 1980-81 ஆம் ஆண்டில் 88 புதிய விற்பனை நிலையங்களைத் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டு, அவைகளைத் திறக்க ஏற்பாடு நடைபெற்று வருகிறது. 1981–82 ஆம் ஆண்டில் 70 புதிய விற்பனை நிலையங்களைத் தொடங்குவதற்கான சூழ்நிலைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதில் விளாத்திகுளம், சாத்தான்குளம் போன்ற இடங்களிலும் திறப்பதற்கு முடிவெக்கப்பட்டு செயலாக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விற்பனை நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கும் ஆடைகளை பட்டுச் சேலைகளைக் கொள்முதல் செய்வதில் தாமதமாகச் செய்வதால் விற்பனை அதிகமில்லாமல் கூட்டுறவுச் சங்கங்களில் ஏராளமான துணிகள் தேங்கிக்கிடக்கின்றன. அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

## 2. தகவல் கோரல்.

### அ தலைமைச் செயலர் மாற்றம்

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகுப் பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடந்துகொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, தமிழ்நாடு அரசினுடைய தலைமைச் செயலாளராகப் பணியாற்றிய திரு. கார்த்திகேயன் அவர்கள் அந்தப் பொறுப்பிலேயிருந்து விடுவிக்கப்பட்டு வேறு பொறுப்பிலே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது நிர்வாகம் பற்றிய பிரச்னை.

**திரு. என். எஸ். வி. சித்தன்:—** நான் சொல்லி முடித்து விடுகிறேன். சென்னையிலேயிருந்து வெளிவரும் 12 ஆம் தேதிய ''எதிரொலி'' பத்திரிகையில், முதலமைச்சருக்கும் தலைமைச் செயலாளருக்கும் நேரடி மோதல் என்று தலைப்பிட்டு வந்திருக்கிறது. (கூச்சல்—குழப்பம்)

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் 479ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1981 ஆகஸ்டு 25]

[முற்பகல் 10.20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தலைமைச் செயலாளர் மாற்றப்பட்டுள்ளது பத்திரிகையிலே வந்திருக்கிறது.

**திரு. எஸ். என். வி. சித்தன்:** நான் விளக்கம் கேட்கிறேன் மோதலுக்குப் பின்னாலே, அவர் மாற்றப்பட்டிருக்கிறார், என்பது உண்மையா, இல்லையா? எதிரொலியினுடைய எதிரொலியா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்திரிகைகளுடைய பெயரைச் சொல்லி அதற்கு விளக்கம் கேட்பது சரியான முறையும் அல்ல, மரபும் ஆகாது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** செய்தி வந்த பிறகு நடந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதோ குருவி உட்கார பனம் பழம் விழுந்தது என்பது மாதிரி அந்தச் செய்தி வந்தது; அந்தச் செய்தியை வைத்துக் கணக்குப் போடுவது நல்லதல்ல. நிர்வாகத்திலே ஏற்படுகிற மாறுதல்களைச் சட்டமன்றத்திலே விவாதித்ததாக வரலாறும் இல்லை; மரபும் இல்லை.

### (ஆ) தமிழக சுற்றுலாப் பயணிகளில் ஒருவர் இலங்கையில் கொலையுண்டிருப்பது

**டாக்டர். மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இலங்கைக்கு, தமிழகத்திலிருந்து சுற்றுப்பயணம் சென்ற பல தமிழர்களில் கதிர்காமத்திலிருந்து சுற்றுலாவை முடித்துவிட்டுத் திரும்புகின்ற வழியில் தனபதி என்கிற ஒரு தமிழ் வாலிபர், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர், கொலை செய்யப்பட்டார், சிங்கள வெறியர்களால், என்ற செய்தி ஏடுகளில் வந்திருக்கிறது.

நேற்றையதினமே அமிர்தலிங்கம் அவர்களுடைய செயலாளர் எனக்குத் தொலைபேசி மூலம் அந்தச் செய்தியைத் தெரிவித்தார். நம்முடைய முதலமைச்சருக்கும் இலங்கையிலிருந்து அதிகார வட்டாரத்திலிருந்து அத்தகைய தகவல் தரப்பட்டதாகப் பத்திரிகைகளிலே செய்தி வந்துள்ளது. மத்திய அரசுக்கும் அப்படிப்பட்ட செய்தி தரப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது.

கொல்லப்பட்ட அந்த தனபதியினுடைய உடல் தமிழகத்திற்கு அனுப்பப்பட இருக்கிறதா? என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன? ஏற்கனவே இலங்கையில் உள்ள தமிழர்கள் கொலை செய்யப்படுவதையும் வன்முறைக்கு ஆளாக்கப்படுவதையும் கண்டித்து இங்கே ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். இப்படிப்பட்ட கொலைகள் தமிழர்களை—இங்கிருந்து சென்றவர்களையே அடையாளம் தெரியாத

அளவிற்கு கொண்றிருக்கிறார்கள் என்றால், எந்த அளவிற் குஅங்கே தமிழர்கள்மீது படுகொலை நிகழ்ச்சிகள் நடை பெறுகின்றன என்பதை நம்மால் ஊகிக்க முடிகிறது. நாம் என்ன முடிவெடுத் திருக்கிறோம்? அரசு அதுபற்றி என்ன தகவலைப்பெற்றிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விளம்புகிறேன்.

**திரு. என். சங்கரய்யா:** நாங்கள் இதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** நாங்களும் இதுபற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் ஒத்திவைப்புத் தீர்மானமாக எழுப்பவில்லை. 'தகவல் கோரல்' என்பதன் அடிப்படையில் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பிறகு வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்ததுபற்றி அரசு ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.

**திரு. என். சங்கரய்யா:** கொலை செய்யப்பட்டவருடைய உடல்கூட இன்றைக்கு வருவதாகப் பத்திரிகைகளிலே செய்தி பார்த்தோம். ஆகவேதான் கட்சியின் சார்பாக ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தோம். ஆகவே, அன்றைக்கு நாம் பேசிய நிகழ்ச்சிகளின் தொடர்பாக இவை நடந்து கொண்டு வருவதாலே தமிழக மக்கள் மத்தியிலே பெரும் பதட்ட நிலை உருவாவ தாலேதான் நாங்கள் தீர்மானம் கொடுத்தோம். ஒருவேளை, நீங்கள் இதையே எடுத்துக் கொண்டு விவாதிப்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டு அரசாங்கத்தின் சார்பாக பதில் கொடுக்க ஏற்பாடு செய்வது நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று முன் தினம் அதாவது 22-ம் தேதியன்று, இதுபற்றி நீண்ட விவாதம் நடந்திருக்கிறது. அதை ஒட்டிய ஒரு சம்பவம் இது. அதுபற்றி ஒரு சிறு குறிப்பு வேண்டுமானால் இங்கே தரச் சொல்லலாமே தவிர, மீண்டும் ஒரு முழு விவாதத்தைச் சபையிலே எழுப்புவது என்றால்- இன்னும் பல்வேறு பிரச்னைகள் குறித்து, சபையிலே விவாதிக்க வேண்டிய கருத்துக்கள் பற்றி உறுப்பினர்கள் அறிவிக்கை தந்திருக்கிறார்கள். அவற்றிற்கெல்லாம்—நேரம் இருக்குமா இருக்காதா என்பது அலுவல் ஆய்வுக் குழுவிலே உறுப்பினராக இருக்கிற திரு. சங்கரய்யா அவர்களுக்கே தெரியும் என்று நினைக்கிறேன்; ஆகவே, இப்பொழுது நிகழ்ந்து விட்ட சம்பவம் பற்றிய தகவல்கள் ஏதாவது வந்திருந்தால், அதை அரசு தெரி விக்கலாம்,

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதிர்காமத்திற்குத் தமிழகத் திலிருந்து சென்ற சுற்றுலா பயணிகள் திரும்பி வருகின்ற வழியில் கார் கேடுபாடடைந்து அதன் விளைவாக சில பேர்கள்





தங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டபொழுது, சிலரால் தாக்கப் பட்டு ஒருவர் இறந்து விட்டார் என்ற செய்தி நேற்று காலை எனக்கு நேரடியாக இலங்கை வெளிநாட்டு அமைச்சரிடமிருந்து தொலைபேசியில் வந்தது. அதைச் சொன்னவர் வருத்தத்தோடு இலங்கை ஜனாதிபதியினுடைய வேதனையையும், அவருடைய அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதாகச் சொல்லி, அதோடு அரசு நடவடிக்கைகள் எடுக்கிறது என்பதையும் குறிப் பிட்டு அண்மைக் காலத்தில் அவர்கள் தீவிரமான நடவடிக்கைகள் எடுத்ததன் விளைவாக அமைதி ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையில் அந்த வெளிநாட்டு அமைச்சர் சொன்ன வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன்—'வேண்டுமென்றே இந்தியாவுக்கும் இலங்கைக்கும் உள்ள உறவைக் கெடுப்பதற்காக யாரோ அதை செய்வதாக நாங்கள் சந்தேகிக்கிற அளவுக்கு இங்கே நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன'' என்று சொன்னார்.

இதைப்பற்றி நாங்கள் மேலும் விசாரணை செய்கிறோம் என்பதையும், நான் சொல்கின்ற இந்தச் செய்தியை நீங்கள் எப்படி தெரிவிக்கவேண்டுமோ அப்படித் தெரிவித்துக் கொள்ளுங் கள் என்றும் சொன்னார். நான் இது போதாது என்றும் நீங்கள் டெலக்ஸ் அனுப்புங்கள் என்றும் கேட்டுக் கொண்டேன். அவர்களுடைய தூதரகத்தின் மூலமாகக் கடிதம் வந்திருக்கின்றது. அதிலேயும் இதே செய்தியைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் இன்று மாலை அந்தச் சடலம் வருகின்றது என்ற தகவல் வந்திருக்கின்றது. இதைவிட அதிகமாக நான் இதைப்பற்றிச் சொல்வது சரியாக இருக்காது. மத்திய அரசுக்குத் தகவல் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், விவரம் கிடைத்தவுடன் இந்த அவையிலே வைக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. உரிமைப் பிரச்சினை

பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெற்ற பகுதிகளை சில நாளேடுகள் பிரசுரித்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை.

22-8-1981 அன்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி, அதன் விளைவாக சில விவாதம் நடந்து, அனைத்தும் பேரவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது என்று நான் தீர்ப் பளித்தேன் என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவு இருக்கலாம். அப்போது நான் குறிப்பிட்டது — "..... ஆகவே, இதுவரை நடைபெற்ற சம்பவங்கள், வாதங்கள் எல்லாம் அவைக் குறிப்பில் இடம் பெறாது...." "..... ஆகவே இதுவரையிலும் நடைபெற்ற அத்தனை வார்த்தைக் குறிப்பு

களும்———எல்லோர் பேசியதும், அமைச்சராக இருந்தாலும் உறுப்பினராக இருந்தாலும் அவைக் குறிப்பில் ஏறாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய ஆப்சர்வேஷனும் சேர்த்துத்தான் நீக்கப்படுகிறது.

எனவே, அன்று நீக்கப்பட்டவை எவை என்பதில் சந்தேகமோ தெளிவின்மையோ ஏற்படக் காரணம் இல்லை. ஆயினும், 23-8-1981 தேதியிட்ட 'முரசொலி' பத்திரிகையிலும் அதே தேதியிட்ட 'தினகரன்' பத்திரிகையிலும் இவை வெளியிடப்பட்டுள்ளன. 'முரசொலி' பத்திரிகையில் 'பல சொற்றொடர்கள் பேரவைக் குறிப்புகளிலிருந்து பேரவைத் தலைவரால் எடுக்கப்பட்டுவிட்டது. அது சம்பந்தமான விவரமாவது' என்று முதலிலும், இடையில் ''அவையில் இருதரப்பினராலும் ஒரேயடியாகக் கருத்துக்களும், எதிர் கருத்துக்களும் கூறப்பட்டு கூச்சல் குழப்பமாக இருந்தது. அவைகளெல்லாம் பேரவைத் தலைவரால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது. நீக்கப்பட்டது எந்தப் பகுதிகள் என்பது சந்தேகமாக இருப்பதால் அவைகள் பிரசுரிக்கப்படவில்லை'' என்று போட்டுவிட்டு, நீக்கப்பட்ட பகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. 'தினகரன்' பத்திரிகையிலும் இதேபோல, ''நீக்கப்பட்ட பகுதிகள் எந்தப் பகுதிகள் என்று சந்தேகமாக இருப்பதால் அவைகள் பிரசுரிக்கப்படவில்லை'' என்று குறிப்பிட்டுவிட்டு, நிகழ்ச்சிகள் வெளியிடப்பட்டுள்ளன.

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல அன்று நான் அளித்த தீர்ப்பில் எந்தப் பகுதிகள் நீக்கப்படுகின்றன என்று சந்தேகம் எழவே இடம் இல்லாதவாறு, ''இதுவரையிலும் நடைபெற்ற அத்தனை வார்த்தைக் குறிப்புக்களும்——எல்லார் பேசியதும், அமைச்சராக இருந்தாலும் உறுப்பினராக இருந்தாலும்—— அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகின்றன. என்னுடைய ஆப்சர்வேஷன் சேர்த்துத்தான்'' என்று குறிப்பிட்டுள்ளேன். எனவே, இந்த இரண்டு பத்திரிகைகளும் தெரிந்தே நீக்கப்பட்ட பகுதிகளை வெளியிட்டுள்ளன என்றுதான் கருதவேண்டியுள்ளது. சந்தேகம் ஏற்படுவதாகத் தாங்களே கற்பனை செய்துகொண்டு, நீக்கப்பட்ட பகுதியின் முக்கிய பகுதிகளை அவை வெளியிட்டுள்ளன.

பேரவையில் நீக்கப்பட்டப் பகுதிகளை வெளியிடுவது அவையுரிமையை பாதிப்பதாகும்.

பத்திரிகைகளுக்கு சுதந்திரம் அளிக்க வேண்டும். அவற்றில் அதிகமாகக் குறுக்கிடவேண்டாம் என்று நான் கருதி நடவடிக்கை எடுக்காமல் இதுவரை விட்டுவிட்டதைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு இம்மாதிரி செய்வது வருந்தத்தக்கது.

இந்த இரண்டு பத்திரிகைகளுக்கும் இதையே கடைசி எச்சரிக்கையாகத் தெரிவித்து, இனி ஒரு முறை இம்மாதிரி வெளியிடப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி இந்தப் பிரச்சினையை முடிக்க விரும்புகிறேன்.



**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, தாங்கள் கொடுத்த தீர்ப்பின்மீது அல்ல; சபையிலே வெளியிடக் கூடாது என்று தாங்கள் அறிவித்ததற்குப் பிறகு, வெளியிடுவது சரியல்ல என்று தாங்கள் தீர்ப்பளித்து இருக்கிறீர்கள். ஏற்கனவே இந்தச் சபையில் தாங்கள் வெளியிடக் கூடாது என்று அறிவித்ததை அண்ணா பத்திரிகை வெளியிட்டதைக் குறித்து, நான் எழுதி தங்களிடத்திலே ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறேன். அதை தாங்கள் சென்ற கூட்டத்திலேயும் எடுக்கவில்லை. இதுவரையிலும் அதை எடுக்கவில்லை. அதைமட்டும் விட்டுவிட்டு, திடீரென்று இதற்கு மட்டும் ஒரு எச்சரிக்கை விடுகிறீர்களே, தங்களுடைய மேலான பார்வை அதன் மீதும் பட்டு, அண்ணா பத்திரிகைக்கும் எச்சரிக்கை விட்டிருந்தால் உங்களுடைய மேலான பணியை நான் வாழ்த்த ஏதுவாக இருக்கும்.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### மதுரை மாநகராட்சி விநியோகிக்கும் குடி தண்ணீர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் சோ. அழகர்சாமி, மு. அம்பிகாபதி, ஆர். கருப்பையா, எம். ஆறுமுகம், என்.எஸ்.வி. சித்தன், நா. சுந்தரராஜ், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், எம் செல்லமுத்து, என். பழனிவேல், ப. நெடுமாறன், எஸ். ஆண்டித் தேவர், என். வரதராஜன், என். சங்கரய்யா ஆகியோர் ''மதுரை மாநகராட்சியில் குடி தண்ணீருடன் சாக்கடை நீரும் கலந்து வருவதால் மக்கள் மத்தியில் எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களே மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியில் குடிதண்ணீருடன் கழிவு நீர், சாக்கடை நீர் கலந்து வருவதாகவும், லட்சக்கணக்கான மக்கள் குடிப்பதற்குத் தண்ணீர் இன்றி அவதிப்படுவதாகவும், கழிவு நீரில் கலந்துள்ள வேறு பல பொருள்களும், சாக்கடை நீரும், குடி தண்ணீரும் இரண்டு பைப்புகள் இணைந்து இருப்பது மூலமே நொறுங்கி நகரம் முழுவதும் இப்படிப்பட்ட தண்ணீர் வருவதாக பத்திரிக்கைகளில் தகவல் வந்திருக்கிறது. மதுரை மாநகராட்சியிலே இப்படிப்பட்ட தண்ணீர் வருகிற காரணத்தால் வியாதிகள் பெருகி இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

[திரு. மு. அம்பிகாபதி] [1981 ஆகஸ்டு 25

மதுரை நகரம் சிறப்பான நகரம். சென்னை தலைநகராக இருந்தாலும் கூட, மதுரை நகரம் நீதி கேட்ட நகரம். இந்த நகரத்திற்கு பல்வேறு வகைகளிலும் பாரம்பர்யம் உண்டு; செல்வாக்கு உண்டு; பாண்டியன் நெடுஞ்செழியனிடம் கண்ணகி நீதி கேட்ட நகரம். அப்படி நீதி கேட்ட நகரத்தில் இன்றைக்கு அநீதி நடக்கிறது. சாக்கடை நீர் குடிதண்ணீருடன் கலந்து வருகிறது என்றால், அங்கே மட்டுமல்ல, முன்பு சென்னை நகரத்திலும் வந்தது. காக்க வேண்டிய மாநகராட்சி பழுதான குழாய்களைப் போட்டு — கிராமப்பகுதிகளிலும் கூட பிளாஸ்டிக் குழாய்களைப் போட்டு, அதை எலி கடித்து அது வழியாகச் சாக்கடை நீர் போகக்கூடிய நிலை இருக்கிறது. சுதந்திரம் பெற்று 34 வருடங்களுக்குப் பிறகும் குடிப்பதற்கு ஜனங்களுக்கு நல்ல தண்ணீர் கொடுக்கக் கூட, - மத்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி, - முடியாத நிலை என்பது தெளிவான விஷயம். அதனுடைய விளைவாகத்தான் 'தண்ணீர் தண்ணீர்' என்ற நாடகம் இன்றைக்கு நடத்தப்படுகிறது.

நகரங்களிலும் சரி, கிராமங்களிலும் சரி இன்றைக்கு ஒரு கடுமையான, மோசமான, நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படி குடிப்பதற்குத் தண்ணீரே கிடைக்காத நிலையில், வருகிற தண்ணீரிலும் சாக்கடைத் தண்ணீர் கலந்து. அதனால் இன்றைக்கு தொத்து வியாதிகள் பரவி, பல நெருக்கடியான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. சோவியத் யூனியன் போன்ற நாடுகளில் நல்ல தண்ணீராக வழங்கப்படுவதால் அங்கே வியாதிகள் குறைகிறது. எனவே மதுரை நகரத்தில் இருக்கிற மக்கள் மத்தியில் ஒரு பதட்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது. மதுரை நகராட்சி மன்றம், மாநகராட்சியாக ஆவதற்கு முன்பு அங்கே பைப்புகள் பொருத்தியிருப்பதாகவும், அந்தக் குழாய்கள் பழுதடைந்து, குடிதண்ணீர் குழாயும், சாக்கடைக் குழாயும் ஒன்றாக இணைந்து அதன் வழியாக தண்ணீர் கலந்து வருவதாகவும், மக்கள் மத்தியிலிருந்து தகவல் வந்திருக்கிறது.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

எனவே அரசாங்கம் தமிழகம் முழுவதிலும் இருக்கிற மாநகராட்சிகள், நகராட்சிகள் அனைத்திலும் குடிதண்ணீர்க் குழாய்களையும், சாக்கடை நீர் குழாய்களையும் மாற்றி அமைப்பதற்கும், முறைப்படுத்துவதற்கும் ஒரு துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தை, இந்த மதுரை மாநகராட்சி பிரச்சினை இன்றைக்கு உணர்த்துகிறது. எனவே மதுரை நகர மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிற பதட்டமான நிலையை அரசாங்கம் கவனத்தில் கொண்டு, சாக்கடை நீர் கலந்து குடிதண்ணீர் வீணாவதைத் தடுக்க மதுரையிலே தகுந்த நடவடிக்கையை விரைவாக எடுக்க, முறையாக விவாதிப்பதற்கு இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1981 ஆகஸ்டு 25]

* திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய திரு. அம்பிகாபதி அவர்கள் சொன்னதைப் போல தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான மதுரை மாநகர் கோவில்களும் விழாக்களும் நிறைந்த ஒரு நகரம். அந்த மதுரை மாநகர மக்கள் இன்றைக்கு மஞ்சள்காமாலை நோய்க்கு ஆளாகியிருக்கிறார்கள். மதுரை மாநகர் மக்கள் மட்டுமல்ல; மாநகரைச் சுற்றியுள்ள மக்களும் இந்த மஞ்சள்காமாலை நோய்க்கு ஆளாகியிருக்கிறார்கள்; மேலும் இந்த நோய் பரவிக்கொண்டிருக்கிறது. மதுரையிலே இருக்கிற இராஜாஜி அரசினர் மருத்துவமனையில் நாள் ஒன்றுக்கு 100 முதல் 150 பேர் புறநோயாளிகளாக (அவுட் பேஷண்ட்ஸ்) ஜூலை மாதத்திலிருந்து சிகிச்சைப் பெற்று செல்கிறார்கள், என்றால் அங்கே இருக்கிற தனியார் மருத்துவமனைகளில் எவ்வளவுபேர் இந்த நோய்க்கு சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருப்பார்கள் என்பதை நம்மால் ஓரளவு உணரமுடிகிறது.

மதுரை மாநகரில் மக்களுக்கு வழங்கப்படுகிற குடிநீரில் சாக்கடை கழிவு நீர் கலந்துவிட்டதால் இந்த நோய் ஏற்பட்டிருக்கிறது என்பதில் இருவேறு கருத்துக்கள் நிச்சயமாக இருக்க முடியாது. மதுரையிலே பாதாளச் சாக்கடை இருந்தாலும் கூட. அங்கே இருக்கிற பிரதான வீதிகள், மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகில், இன்னும் சில முக்கியமான இடங்களில் எல்லாம் சாக்கடை நீர் வெளியே வந்து மக்கள் நடமாடுவதற்கு இடையூறாக இருப்பது மட்டுமல்ல; பல தொற்று நோய்கள் பரவுவதற்கும் ஏதுவாக இருக்கிற என்பதை நாம் காணமுடியும்.

இன்றைக்கு இந்த தொற்று நோய்கள் ஏற்படுவதற்குக் காரணம் அங்கே ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டியபோதும், குடிநீர் வழங்க குழாய்கள் போட்டபோதும் குழாய்களிலே சேதம் ஏற்பட்டு குடிநீரிலே சாக்கடை நீர் கலந்துவிட்டதை மாநகராட்சியில் இருக்கிற அதிகாரிகள் தக்கநேரத்தில் கண்டுபிடித்து, தகுந்த நடவடிக்கை எடுக்காததுதான். அவ்வாறு அவர்கள் நடவடிக்கை எடுக்கத் தவறியதால் இத்தகைய நோய்களுக்கு மதுரை மாநகர் மக்கள் ஆளாகி, பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மதுரை மாநகர் மட்டுமல்லாமல் அருகிலே இருக்கிற பகுதிகளிலும் மஞ்சள்காமாலை நோய் வேகமாக பரவி வருகிறது என்று அங்கே இருக்கிற உறுப்பினர்கள் கடுமையாகப் பேசியிருக்கிறார்கள் என்று செய்திகள் வந்திருக்கின்றன.

இந்த மஞ்சள்காமாலை நோய்க்கு சாதாரண மக்கள் மட்டுமல்ல; மக்கள் பிரதிநிதிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை என்னால் சான்றுடன் சொல்ல முடியும். மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஏ. ஜி. சுப்பராமன் அவர்கள் மஞ்சள்காமாலை நோயால் பாதிக்கப்பட்டு, இன்று சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் சிகிச்சைப்பெற்று வருகிறார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. தனுஷ்கோடி தேவர் மற்றும் திரு. முத்தையா அவர்களும் அடிக்கடி மதுரைக்கு வந்து கொண்டிருந்ததால் மதுரை மாநகர தண்ணீரைக் குடித்து

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1981 ஆகஸ்டு 25

அவர்கள் மஞ்சள்காமாலை நோய்க்கு ஆளாகியிருக்கிறார்கள்; அதற்காக இன்றைக்கு சிகிச்சைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மதுரைக்கு போனால் அங்கே தண்ணீர் குடிக்கக்கூடாது என்ற பயம் எனக்கும் கூட ஏற்பட்டிருக்கிறது.

இந்த மஞ்சள்காமாலை நோய்க்கு ஆளாகி, சுமார் 25 பேர் களுக்கு மேல் உயிர் துறந்திருக்கிறார்கள். நூற்றுக்கணக்கானோர் பயங்கரமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி இருந்தும் மதுரை மாநகராட்சி ஏன் துரித நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரியவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தக்க நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அவர்கள் மீது ஏன் அரசு நடவடிக்கை எடுக்கக்கூடாது? மதுரையிலே பரவி வருகின்ற இந்த மஞ்சள்காமாலை நோய் சென்னையிலே கூட பரவுமோ என்ற அச்ச உணர்வு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டு மல்லாமல் தமிழகம் முழுவதும் இந்த நோய் பரவும் வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே, இந்த கொடிய நோயைத் தடுப்பதற்கு போர்க்கால நடவடிக்கைப்போல் அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சனைகள் பற்றி விரிவாகப் பேசி, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதால் அவையின் இன்றைய இதர அலுவல் களை ஒத்திவைத்து, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, மதுரை மாநகரிலே மஞ்சள்காமாலை நோயால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் கிடைப்பதற்கும் இலட்சக்கணக்கான மக்கள் வாழும் மதுரை மாநகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சுத்தமான தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் மிகவும் அத்தியாவசியமான ஒரு பிரச்சனை ஏற்பட்டிருப்பதன் காரணமாக இந்த சபையின் இதர நடவடிக்கை களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

ஏற்கனவே இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன் னதைப் போல நமக்கு ஒரு பெரும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. மதுரை மாநகரில் சாக்கடைக் குழாய் நீரும், குடிநீர் வழங்கும் குழாய் நீரும் ஏதோ சில இடங்களில் கலந்துவிட்டதன் காரண மாக பெருமளவிலே இந்த மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டிருக் கிறது என்று மதுரை மாநகர மக்கள் மத்தியிலே மிகப்பெரிய கவலை ஏற்பட்டிருக்கிறது.

[முற்பகல் 10.40]

அதுமட்டுமல்லாமல் அங்கே ஒரு வறட்சி நிலைமை ஏற்பட்ட போது குடிநீர் வழங்கப்படுவதோடு ஆழ் குழாய் கிணறு களும் தோண்டப்பட்டன. பல வார்டுகளிலே அவ்வாறு ஆழ் குழாய் கிணறுகள் தோண்டப்பட்டு அதன்மூலம் வரக்கூடிய தண்ணீரையும் வைகை ஆற்றிலே இருநது வரக்கூடிய தண்ணீரை யும் ஒன்றாக் கலந்து தண்ணீர் பற்றாக்குறை காரண மாக மக்களுக்கு வழங்கப்பட்டன. இவ்வாறு கலக்கப் பட்டதன் காரணமாகவும் அதாவது ஆழ் குழாய் கிணறுகள்



1981 ஆகஸ்டு 25] [திரு. என். சங்கரய்யா]

மூலம் கிடைத்த தண்ணீரை ஒருவேளை சரியாக சுத்திகரிக்காமல் போய் அதன் மூலம் மஞ்சள்காமாலை நோய் ஏற்பட்டிருக்கக் கூடும் என்பதைப் பற்றியும் அரசாங்கம் உடனடியாக மதுரை மாநகராட்சி அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கவேண்டும்.

இங்கே இருக்கக்கூடிய குடிநீர் வடிகால் வாரியத்தின் பொறி யாளர்களை எல்லாம் அங்கே மதுரைக்கு அனுப்பி உண்மையிலே என்ன காரணம் என்பதை ஆழ்ந்து கவனிக்கவேண்டும்.

அடுத்து அங்கே தண்ணீர் பற்றாக்குறை இருப்பதன் காரணத் தால்தான் இவ்வாறு ஆற்றுத் தண்ணீரோடு ஆழ் குழாய்க் கிணறுகளின் தண்ணீர் கலந்து அளிக்கப்பட்டது. ஆகவே இன்றையதினம் காரிய சாத்தியமான திட்டங்கள் வளர்ந்து வரக்கூடிய மதுரை மாநகரத்திலே இருக்கின்ற தண்ணீர் பஞ்சத்தைப் போக்குவதற்கு முதலிடம் கொடுத்து அரசாங்கம் செலவினைக் கருதாமல் அவற்றை நிறைவேற்றவேண்டும். ஆகவே இந்த மஞ்சள் காமாலை நோயினைப் போக்குகின்ற வகையிலே முதலிலே தண்ணீர் பஞ்சத்தைப் போக்கவேண்டும்.

அடுத்து குழாய்களைப் பழுதுபார்த்தல் போன்ற பணிகளைச் செய்கின்ற ஊழியர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லாத தன் காரணத்தால்தான் ஆங்காங்கே பழுதுகள் ஏற்பட்டு இப்படி பட்ட நிலைமைகள் ஏற்பட்டன என்று அங்கே தொழிலாளர் மத்தியில் ஒரு பெரிய கருத்து நிலவுகிறது. ஆகவே போதுமான ஊழியர்களை நியமிப்பதற்கு அதன்மூலம் ஒவ்வொருவார்டிலேயும் குழாய் இணைப்புக்களைப் பழுதுபார்த்து பாதுகாக்கின்ற வகையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்காக மாநகராட்சி அதிகாரிகளுக்கு அரசாங்கம் உத்தரவிடவேண்டும்.

அடுத்து இன்றைக்கு மதுரை மிக முக்கியமான மாநகராக வளர்ந்து வருவதால் அங்கே வரக்கூடியவர்கள் அங்குள்ள ஹோட்டல்களிலே சாப்பிடக்கூடிய நிலைமை இருக்கின்றது. ஆகவே அவர்களையும் அந்த நோய் பற்றிக்கொள்ளக்கூடிய நிலைமை இருக்கின்றது. அப்படி மதுரை மாவட்டம் முழு வதற்கும் அந்த மஞ்சள் காமாலை நோய் பரவுகின்ற அபாயம் இருப்பதால் அரசாங்கம் கவனம் செலுத்தி குடிதண்ணீர் பிரச் சினையை தீர்க்க முதலிடம் கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும். பெரிய கட்டிடங்களுக்கு தண்ணீர் கொடுப்பதற்கு இரண்டாவது இடமும் சாதாரண மக்களுக்கு தண்ணீர் கொடுப் பதிலே முதலிடமும் கொடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து மதுரையிலே ராஜாஜி மருத்துவமனையிலே ஆங்கில மருத்துவ முறைப்படி மஞ்சள் காமாலை நோய்க்கு மருத்துவம் செய்யப்படுகின்றது. ஆனால் சித்த வைத்திய முறைப்படி மூலிகை களை வைத்துக் கட்டுவதன் மூலமாக அந்த நோய் குணமடை கின்றது என்பது தமிழ்நாட்டிலே உள்ள அனுபவம். ஆகவே அங்கீகரிக்கப்பட்ட சித்த வைத்தியர்களின் மூலம் மருந்துகளைக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்து தற்போது இருக்கின்ற நிலைமையிலே ஒரு மாற்றம் கொண்டுவரவேண்டும். அண்மையிலே கூட உலகத்தமிழ் மாநாடு நடைபெற்றபோது மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தில் விடப்பட்ட தண்ணீர் கெட்டுக் கிடக்கின்றது. மதுரை ஒரு அழகிய சிறந்த இடம். அந்த இடத்திற்குத் தண்ணீர் சப்ளை செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பற்றி விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு அவையினுடைய துணை தலைவர் அவர்களே, இப்போது மதுரையிலே குடி தண்ணீர் இல்லாததன் காரணமாக பரவி வரக்கூடிய இந்த மஞ்சள் காமாலை நோய் அந்த நகரத்திலுள்ள மக்கள் மத்தியிலே பரபரப்பை ஏற்படுத்தி இருக்கின்ற நிலைமை குறித்து இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டும் என்பதற்குரிய காரணங்களை அகில இந்திய பார்வர்ட் கட்சியின் சார்பாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்னாலே பேசியவர்கள் அத்தனை பேரும் எப்படி இந்த நோய் பரவியது என்று அதாவது குடிநீர் குழாயும், சாக்கடையும் ஒன்று சேர்ந்த காரணத்தால், அப்படிப்பட்ட தண்ணீர் மக்களுக்கு கொடுக்கப்படுகின்ற காரணத்தால் அதன் காரணமாகத்தான் மஞ்சள் காமாலை நோய் பரவி பலர் இறந்துவிட்டார்கள், பலர் மருத்துவமனைக்கு சென்றார்கள். சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு 40 நாட்களுக்கு மேல் ஆகியும் அங்கு மருத்துவமனைகளிலே இதற்குரிய வைத்தியம் செய்ய முடியாது என்பதை மருத்துவர்கள்கூட சொல்லி இருக்கிறார்கள்.

அங்கே அச்சம்புத்தூர் என்ற இடத்திலே இருக்கும் ஒரு தனி நபர், ஏதோ ஒரு மூலிகை இலையைத் தலையில் வைக்கிறார் என்று தினமும் அச்சம்புத்தூரிலே 500க்கும், 1000-க்கும் மேற்பட்டவர்கள் வரிசையிலே நின்று அவரிடம் வைத்தியம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால், இந்த நோயாளிகள் எல்லாம் மருத்துவமனைக்கு வராதவர்கள். அதனால், மருத்துவமனை நோயாளிகளின் எண்ணிக்கைக்குள் இவர்கள் வரமாட்டார்கள், அதுவுமல்லாமல், இந்த நோய்க்கு வைத்தியம் இல்லை என்று மருத்துவர்களால் சொல்லப்படுகிறது. இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், வேறு நோய் கூட இருந்ததினால் தான், மருத்துவமனைக்குச் சென்று வைத்தியம் பார்த்துக் கொள்கிறார்களே தவிர, இந்த மஞ்சள் காமாலைக்காக அல்ல. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்தையா அவர்கள் கூட, இந்த நோயோடு, காய்ச்சலும் இருந்ததினால் தான், மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறார். ஆகவே, மருத்துவமனைக்கு வெளியே நாட்டு வைத்தியம் செய்பவர்கள் [illegible] அதிகம் என்பது தெரிகிறது.



மதுரை நகரிலே இந்த நோய் எப்படி ஏற்பட்டது என்பது பற்றி மற்றவர்கள் எல்லாம் கூட நிறைய காரணங்களை எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் சென்னையிலிருந்து விமானத்திலே போய் மதுரை தெருக்களிலே பார்த்தால் நிலைமை தெரியும். அங்கிருக்கும் சாக்கடைகள் உடைபட்டு ரோட்டிலே ஓடிக்கொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

மதுரை மாநகரம் மாநகராட்சியாக உயர்த்தப்பட்டிருக்கிறதே தவிர, ஜனத்தொகை பெருகியிருக்கிறதே தவிர, அதற்குத் தேவையான அளவு குடிநீர் வசதி செய்வதற்கு குழாய்களை விரிவுபடுத்தவில்லை என்ற நிலைமை இருக்கிறது. அது மட்டும் அல்ல, மாநகராட்சியினால் போடப்பட்டிருக்கிற தண்ணீர் தொட்டிகளின் மேலே, இரவு நேரங்களில் சாதாரண குடிமக்கள், வீடு இல்லாதவர்கள் ஏறிப் படுத்துக் கொள்கிறார்கள்.

* * *

ஏனென்றால், அந்தத் தொட்டி உயரம் குறைவாக, ஏறிப்படுப்பதற்கு வசதியாக இருக்கிறது. ஆகவே இரவு நேரங்களில் அந்தத் தண்ணீர் தொட்டிகளில் காவலர்களை போடவேண்டும். வேறு யாரும் அங்கே செல்லமுடியாதபடி தடுக்கவேண்டும்.

அத்தோடு, நான் நேற்று கூட சொன்னேன், 1967-லிருந்து இதுவரையில், பதிய சட்டமன்ற விடுதியில் இருக்கும் தண்ணீர்த் தொட்டிகள் கழுவப்பெறாமல் இருப்பதால், அந்தத் தண்ணீரில் புழு வந்துவிட்டது என்பதை. அதேபோன்றுதான் மதுரை நகரிலும் உள்ள தண்ணீர் தொட்டிகள் பல ஆண்டுக்காலமாக கழுவப்படாமல் இருக்கிற காரணத்தினாலும், சாக்கடைகள் அடிக்கடி வெடித்துக் கொண்டு, இந்த குடிநீரோடு கலந்துவிடுகிற காரணத்தினாலும் இப்படிப்பட்ட நோய்கள் ஏற்படுகின்றன. சாக்கடைகள் அடிக்கடி வெடிக்கின்றன என்று சொன்னால், மாநகராட்சி சரியாக செயல்படவில்லை என்று தெளிவாகத் தெரிகிறது. தமிழக அமைச்சர்களோ, அல்லது சட்டமன்ற உறுப்பினர்களோ, என்றைக்கு மதுரைக்குச் சென்று பார்த்தாலும் ஏதாவது ஒரு ரோட்டில் ஏதாவது ஒரு சாக்கடை வெடித்து ஓடிக் கொண்டிருப்பதை பார்க்கலாம். ஆகவே, இவைகளைப் பற்றி விரிவாக விவாதிக்க இந்த அவையில் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சனவரி 1981-லிருந்து, ஆகஸ்ட் 16, 1981 வரை 893 பேருக்கு மஞ்சள் காமாலைக்கான சிகிச்சை மருத்துவர்களால் அளிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 1981-ல் இரண்டு பேரும், மே 1981-ல் இரண்டு பேருமாக மொத்தம் 4 பேர்கள் இறந்து விட்டனர். ஆனாலும் அவர்கள் இறந்ததற்குக் காமாலை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நோய்தான் முக்கியக் காரணம் இல்லை. அதற்கு மாறாக லிவர் சிரோசிஸ் (Liver cirrhosis) என்கிற வியாதிதான் முக்கிய காரணமாகும்.

குடிநீர் அசுத்தமடைந்ததின் காரணமாக இந்நோயினால் பலர் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. ஆயினும் இந்த வியாதி பரவுவதற்கான முக்கிய காரணத்தைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. இதற்கிடையில் நகரின் பல பகுதிகளிலிருந்தும் குடிநீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டு குடிநீரின் தரத்தை உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 10.50]

குடிநீரில் குளோரின் மருந்துகள் முறையாகக் கலக்கப்படுகிறது. சுற்றுப்புற சுகாதாரத்தைப் பேணிக்காக்கவும், ஈ, கொசு போன்றவற்றை கட்டுப்படுத்தவும் தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கொதிக்க வைத்த நீரை உபயோகிப்பதின் அவசியத்தையும் வீட்டையும், அதன் சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்வதின் அவசியத்தை வலியுறுத்தியும் துண்டுப் பிரசுரங்கள், திரைப்பட அரங்குகளில் அறிவிப்புகள், ஒலிபரப்பு சாதனைகள் மூலம் விளம்பரம் அளித்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் காரணமாக இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆகஸ்ட் மாதத்தில் வெகுவாகக் குறைந்துள்ளது. இந்த நோயைக் கட்டுப்படுத்த தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருவதால் எந்த விதமான பதட்டமும் அடையத் தேவையில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டித் தேவர் அவர்கள் ஒரு குறிப்பினை இங்கே சொன்னார்கள். உண்மையில் அதுபோன்ற செய்திகள் வெளியே வந்தால் மக்கள் மிகவும் பீதி அடைந்துவிடுவார்கள்.

* * *

இதுபோன்ற செய்திகள் பரவாமல் இருக்கவேண்டும். அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவது சரியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். உறுப்பினர்கள் அவர்களும் அதை யோசித்துப் பார்க்கவேண்டும். இல்லையென்று சொன்னால் மதுரை மாநகராட்சி மக்கள் இந்தச் செய்தியைக் கேட்டால், ** என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டு அதன் காரணமாக அந்தத் தண்ணீரைக் குடிக்கமுடியாமல் வேறு தண்ணீரை உபயோகிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடும். பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுப்பதற்கு எல்லா வழிவகைகளையும் அம் மாநகராட்சி எடுத்து வருகிறது. ஆகவே இதற்காக இந்த அவையை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



ஏற்கனவே நமது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், மருத்துவர்கள் அந்தப் பகுதிகளுக்கு எல்லாம் சுற்றுலாப் பயணம் செய்து பாதிக்கப்பட்ட இடங்களை எல்லாம் பார்வையிட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். ஆகதக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் துரிதமாக எவ்வளவு நடவடிக்கைகள் எடுக்கமுடியுமோ அவ்வளவையும் எடுப்போம் என்று உறுதி கூறி இதுகுறித்து விவாதிக்க அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

* *

என்பதாக உறுப்பினர் திரு எஸ். ஆண்டித்தேவர் பேசிய வாசகத்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். அமைச்சர் அவர்கள் அதுபற்றிப் பேசியது உட்பட, நான் சொன்னது உட்பட நீக்கிவிடுகிறேன்.

## (4) கவன ஈர்ப்புகள்.

### (அ) தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்கட்கு நியாயமான கூலி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் மு. அம்பிகாபதி, இரெ. இராசமாணிக்கம். எம். செல்லமுத்து, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கே. ஆர். சுந்தரம், என். வரதராஜன், பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டத்தில் நிலச்சுவான்தார்கள் நியாயமான கூலியை விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க மறுப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் பேரவை முன் நான் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

அறிக்கை

கிழக்குத் தஞ்சாவூரில் எட்டு வட்டங்களில் உள்ள வேளாண் தொழிலாளர்களுக்கு மட்டும் பொருந்தும் நியாய ஊதிய விகிதங்கள் குறித்த சட்டம் 1969-ல் இயற்றப்பட்டது. இந்த ஊதிய விகிதங்களை அறிவிக்கையின் மூலம் மாற்றியமைக்க மேற்படி சட்டத்தின் 12-A பிரிவு அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. இம் மாதிரி மாற்றங்கள் செய்வதற்குரிய காரணங்களையும் இப்பிரிவு குறிப்பிடுகிறது. அவையாவன.—

(1) தொழிலாளர் கிடைக்கும் நிலை.

(2) முக்கிய பண்டங்களின் விலை.

(3) வாழ்க்கைச் செலவின் உயர்வு.

இதைத் தவிர இச்சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகளில் 11-A என்ற விதியிலும இதற்கான காரணங்கள் சொல்லப் பட்டுள்ளன. இவையாவன——

(1) நெல்லின் சந்தை விலை.

(2) வேளாண்மை நீங்கலாக பிற பிரிவுகளைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியங்கள்.

இந்த காரணங்களைப் பொறுத்து அவ்வப்போது நியாய ஊதியங்களை அரசு மாற்றியமைத்துள்ளது. இம்மாதிரி மாறுதல்கள் 5 ஆண்டுகளுக்கு மேற்படாத கால அளவில் செய்யப்பட வேண்டும் என்று சட்டத்தில் உள்ளது. கடைசியாக உயர்த்தப் பட்ட நியாய ஊதியங்கள் 5-9-1980-ல் இருந்து அமலில் இருக்கின்றன. இந்த ஆண்டிலும் இந்த ஊதியங்களை உயர்த்த வேண்டுமென்று வேளாண் தொழிலாளர்கள் கோரியுள்ளனர். ஊதியத்தில் ஒருபகுதி நெல்லாகவும் மற்றது பணமாக கொடுப்பதானால் அரசு நிர்ணயித்துள்ள ஊதிய விகிதங்கள் ஏற்கனவே தொழிலாளர்களால் எற்றுக்கொள்ளப்படுவதாகவும், ஊதியம் முழுவதும் பணமாகக்கொடுக்கும்போதுதான் அதிகப் பணம் கேட்கப்படுவதாகவும் அரசுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இந்தத் தகராறுகளில் வருவாய்த் துறை அதிகாரிகள் தலையிட்டு சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தி பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து வைத்துள்ளதாகவும் தகவல் கிடைத்துளது. மேலும் இரு தரப்பினருடைய நிலையையும் அரசு ஆய்ந்து, தேவைப்பட்டால் தகுந்த் நடவடிக்கைகளை எடுக்கும்.

விவரமான அறிக்கையை இந்த அவை முன்னால் வைத்திருக் கிறேன். அதோடு சேர்த்து சில விவரங்களையும் நான் சொல் கிறேன் அரசாங்கச் சார்பில். இன்றைக்கு தஞ்சையைப் பொறுத்த வரையில், இருக்கிற சட்டத்தைப் பொறுத்தவரையில், ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறைதான் இந்தக் குறைந்த கூலி எவ்வளவு என்ப தப்பற்றி நிர்ணயிக்கவேண்டும். இரண்டு ஆண்டு களுக்கு முன்னால்நிர்ணயித்திருந்தாலும் இன்றைக்கு இருக்கிறவிலைவாசியேற்றத்தைப் பொறுத்து, இன்றைக்கிருக்கிற நிலைமையை



எண்ணிப்பார்த்து முதல் அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இதைப் பற்றி ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். அந்த முடிவையும் அரசாங்க சார்பில், முதல் அமைச்சர் அவர்கள் சார்பில் நான் முதலில் தெரிவிக்கிறேன்.

இன்றைக்கு உழுதல், விதைத்தல், நாற்று பற்றுதல் இவைகள் போன்றவற்றிற்கெல்லாம் ஏழு லிட்டர் நெல் அத்துடன் ரூ. 2.80 கொடுக்கவேண்டும். அல்லது ரூ.7-80 கொடுக்கவேண்டும். ஆனால், ரூ.7-80-ஐ மாற்றி இன்றைக்கு ரூ. 9 கொடுக்க வேண்டு மென்று அரசு அறிவிப்பு செய்துள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைபோல், நாற்று நடுதல், களையெடுத்தல் போன்றவைகளுக்கெல்லாம் இன்றைக்கு ரூ.6-20 அல்லது 6 லிட்டர், ரூ.1-80 என்றிருந்ததை மாற்றி, இன்றைக்கு ரூ. 7 கொடுக்கவேண்டுமென்று அரசு சார்பில் அறிவிப்பு செய்யப் பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் இன்றைக்கு உரிய வயது வராதவர்களுக்கு ரூ. 4.40 என்பதை ரூ.5 கொடுக்க வேண்டுமென்று அரசு சார்பில் இன்றைக்கு அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்கு இந்த கூலி உயர்வு அறிவிப்பு காலங்கடந்து செய்யப்பட்ட அறிவிப்பாகும். இதையே ஆண்களுக்கு ரூ. 10 என்றும், பெண்களுக்கு ரூ.9 என்றும் அறிவித்திருக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் விலை வாசி உயர்வுக்கு ஏற்ப என். ஜி. ஓ-க்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சம்பளம் உயர்ந்து கொண்டிருக்கிறது. விவசாயத் தொழிலாளர்களுக்கு மட்டும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை என்பது சரியல்ல. ஆண்டுதோறும் அவர்களுடைய கூலி மாற்றம் செய்யப்படவேண்டும். இப்படி காலங்கடந்து அறிவிப்பு செய்ததன் விளைவாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் குடவாசல் பகுதியில் நிலச்சுவான்தார்களால் விவசாயத் தொழிலாளர்கள் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியாக சுருக்க மாகக் கேளுங்கள். விவாதம்போல் செய்யாதீர்கள்.

**திரு. மு. அம்பிகாபதி:** அப்படி காலங்கடந்து அறிவித்ததன் விளைவாக, குடவாசல் பகுதியிலே நிலச்சுவான்தார்கள் விவசாயத் தொழிலாளர்களைத் தாக்கி, அவர்கள்மீது 307 வழக்கு போடப் பட்டிருக்கிறது. அதேபோல், சீனத்துநல்லூரில், கமுதியிலே இருந்து ஆட்களைக் கொண்டுவந்து, அங்குள்ள தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தாத நிலை ஏற்பட்டி ருக்கிறது. அதேபோல், அரிச்சபுரம் பகுதியிலும்

நிலைமை உருவாகியிருப்பது அரசுக்குத் தெரியுமா?
அந்த தீர்க்குதல் தொடர்பாக வழக்குகள் பதிவு
செய்யப் பட்டிருக்கின்றனவே, அவைகளை வாபஸ் வாங்குவதற்கு
அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை என்றாலும்,
முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துத்தான் இரண்டு ஆண்டுகளுக்கு
ஒரு முறை இன்றைக்கு இந்த அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது.
காலங்கடந்த அறிவிப்பு என்று சொன்னார்கள். பேரவையிலே
இது இன்றைக்குச் சொல்லப்பட்டாலும், இதைப்பற்றிய
அறிவிப்பு, இந்த முறையைப் பின்பற்ற வேண்டுமென்று
மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உரியகாலத்தில் அறிவிப்பு
கொடுத்து, அங்கேஇருக்கின்ற மிராசுதாரர்கள், தொழிலாளர்கள்
சங்கம், காவல் துறையினரோடு கூடிப்பேசி அறிவிப்பு
செய்ததை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு
அறிவார்கள். இதையெல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டு,
வேண்டுமென்றே காலங்கடந்த அறிவிப்பு என்று மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் சொல்வது அவ்வளவு நியாயமல்ல
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு எம். செல்லமுத்து: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் சட்டக் கூலி கேட்டதன்
காரணமாக, நூற்றுக்கணக்கானவர்களுக்கு நெல் விதைப் பயிர்
களை ஆடுமாடுகள் வைத்து மேய்த்திருக்கிறார்கள். இந்தச்
சட்டக் கூலி கேட்பதற்கு ஒப்பந்தம் ஆன பிறகும், மிராசுதார்
கள் கொடுத்த புகார்களின் பேரில், போலீஸ் வழக்கு தொடுத்
துள்ளது அரசுக்குத் தெரியுமா? போலீஸ் தரப்பிலே சட்டக்கூலி
கேட்டாலே, அப்படி கேட்பவர்கள் கைது செய்யப்பட
வேண்டுமென்ற நிலைமையிலே, தொழிலாளர்களும், தொழிற்
சங்கத் தலைவர்களும் இரவோடு இரவாக கைதுசெய்யப்பட்டது
அரசுக்குத் தெரியுமா? அப்படி போடப்பட்ட வழக்குகளை
எல்லாம், அரசு திரும்பப் பெறுமா என்று கேட்பதோடு,
தமிழகம் முழுவதும் விவசாயத் தொழிலாளர்களுக்கான இந்தக்
கூலி உயர்வை அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய
விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய
கேள்வி, இந்த அரசு விவசாயத் தொழிலாளர்களுக்கு விரோத
மாகவும், மிராசுதாரர்களுக்குச் சாதகமாகவும் இருக்கிறது என்ற
எண்ணத்தை உருவாக்குகின்ற முறையில் இருக்கிறது. மாண்புமிகு
உறுப்பினர் அவர்களுக்கு இந்த அரசின் சார்பில் தெரிவிக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன். எங்கேயாவது அப்படி நடவடிக்கை
எடுக்கப்பட்டிருந்தால், அதுபற்றி அரசின் கவனத்திற்கு கொண்டு
வந்தால், இந்த அரசு அதைப்பற்றி ஆய்ந்து, தொழிலாளர்
களுக்கு நியாயம் வழங்கும், அப்படி வழங்க இந்த அரசு
என்றைக்கும் தயங்காது அதற்கு முன்னுக்கு வரும்
என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



இன்றைக்கு இருக்கிற சட்டம் பல ஆண்டுகளுக்கு முன்னால்
கொண்டு வரப்பட்ட சட்டம். அதன்படி கூலி கிடைக்காவிட்டால்
அந்த விவசாயத் தொழிலாளர்கள் தான் உரிய அதிகாரிகளி
டத்தில் மனுச் செய்யவேண்டும். அதற்குப் பிறகு உரிய அதிகாரி
அதைப் பற்றி விசாரித்து இவ்வளவு கூலி கொடுக்க வேண்டும்
என்று சொல்லவேண்டும். அப்படி கொடுக்காவிட்டால்
அவர்கள் ஊதிய பாக்கியை நில வரியைப் போல்தான் வசூலிக்க
வேண்டுமென்று சட்டம் இருக்கிறது.

[முற்பகல் 11.00]

நான் இந்த அவைக்கு முன்னால் இரண்டு தினங்களுக்கு
முன்னால் அரசின் சார்பில் ஒரு சட்ட முன்வடிவை வைத்திருக்
கிறேன். அதன்படி இந்த விவசாயத் தொழிலாளர்கள் மனுக்கள்
கொடுக்காமலேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நிலச் சொந்தக்
காரர்கள் உரிய கூலியைக் கொடுக்கவேண்டுமென்பதற்கு
நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்ட முன்வடிவு இந்த
அவையில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த சட்டமுன்வடிவின்படி
கூலியைக் கொடுக்காமல் இருந்தால் அந்த கூலியைப் போல்
பத்து மடங்கு கொடுக்கவேண்டுமென்று உத்தரவு போடவும்
ஆறு மாதம் ஜெயில், 500 ரூபாய் அபாரதம் இரண்டையும்
சேர்த்து போடவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த
அரசாங்கம் அந்தத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவேண்டு
மென்ற முறையில்தான் அந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு
வந்திருக்கிறது என்ற நல்ல சேதியைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்புத்
தீர்மானம். . . .

திரு. மு. அம்பிகாபதி: துணைத் தலைவர் அவர்ளே, ஓர்
வேண்டுக்கோள். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தவர்கள்
ஒவ்வொருவரும் இரண்டு கேள்விகள் கேட்க உரிமை இருக்கிறது.
விதிகள் இருக்கின்றன. ஆகவே, தீர்மானம் கொடுத்தவர்கள்
அனைவரும் கேள்வி கேட்க அனுமதிக்கப்பட வேண்டும். அது
தான் நடைமுறையாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கட்சிக்கு ஓர்
உறுப்பினர் என்ற முறையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்,
தீர்மானம் 12 பேர் கொடுத்தால் 12 பேருக்கு கேள்வி கேட்க
அனுமதி கொடுத்தால் காலை நிகழ்ச்சியில் கவன ஈர்ப்புத்
தீர்மானம் மட்டும்தான் எடுத்துக் கொள்ள முடியும்.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவர் அவர்களே, 12 பேர்
20 பேர் என்று ஹைபதடிகலாகப் பேச வேண்டாம். இப்போது
இருக்கும் முறை அட்ஜர்ன்மென்ட் மோஷனாக இருந்தால்
குறிப்பாக கட்சிக்கு ஒருவர்; கால் அட்டெஷன் நோட்டீசாக
இருந்தால் கொடுத்த ஒவ்வொரு உறுப்பினரும் இரு கேள்விகள்
கேட்க அனுமதிக்கப்பட வேண்டும், அவ்வாறு அனுமதிப்பது
தான் சரியாக இருக்கும்,

[1981 ஆகஸ்டு 25

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** கவன ஈர்ப்பு என்று சொல்லும்போது குறிப்பிட்ட விஷயங்களை கவனத்திற்கு, அரசாங்கத்தின் கவனத்திற்குக் அமைச்சரின் வேண்டுமென்பது, அமைச்சரோ அரசாங்கமோ கவனம் கொண்டு வர இருந்தால் எல்லோரும் எடுத்துச் சொல்லி இல்லாமல் கொண்டு வரவேண்டியதுதான். அதிகமான கவனத்திற்குக் செலுத்தி ஒரு சட்ட முன்வடிவையே கவனத்தை அரசு அதன்படி கூலி கொடுக்காதவர்கள் கொண்டு வந்திருக்கிறது. அனுப்பப்படலாம். 500 ரூபாய் ஆறு மாதம் ஜெயிலுக்கு பத்து மடங்கு அதிகப்படியாகக் அபராதம் போடலாம். கூலியை ஷரத்துக்கள் அடங்கிய சட்ட கொடுக்கவேண்டுமென்றெல்லாம் எல்லாம் செய்ய வேண்டுமென்று முன்வடிவு வந்திருக்கிறது. இப்படி எங்களுடைய கவனத்திற்கு யாரும் பேசவில்லை. ஆகவே, எங்கள் கவனத்திற்குக் வரவில்லை என்றால்தான் மேலும் அதிகமான கவனத்தைச் கொண்டு வரவேண்டும். நாங்களே மேலும் அரசின் கவனத்தை செலுத்திக் கொண்டிருக்கும்போது தான் மாண்புமிகு துணைத் ஈர்க்கவேண்டிய அவசியமில்லை என்று என்று எண்ணுகிறேன். தலைவர் அவர்கள் கருதுகிறார்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காலத்தைக் கருதித்தான் 2 பேரும் வேண்டியதில்லை. கட்சிக்கு ஒருவர் போதும் என்று கூறுகிறேன். மேலும் எல்லோரும் கேட்கவேண்டு மென்றால் அலுவல் ஆய்வுக் குழுவில் கூடி முடிவு எடுக்கலாம்.

**திரு. மு. அம்பிகாபதி:** இப்போது இருக்கிற நடைமுறையை அனுசரிக்கவேண்டும். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தவர்கள் இரண்டு கேள்விகள் கேட்க அனுமதிக்கப்பட வேண்டும்,

**திரு. சோ. அழகர்சாமி:** ஒத்திவைப்புத் தீர்மானத்திலே தான் ஒரு கட்சிக்கு ஒருவர் என்ற முறை. கவன ஈர்ப்பிலே அப்படி அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசிக்கொண்டிருப்ப தால் நேரம் போகிறது, அதற்குள்ளே கேள்வியை வேண்டு மானால் கேட்டுவிடலாம்.

**திரு. என். வரதராஜன்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலிப் பிரச்சினையில் வருவாய்த் துறை அமைச்சர் சொன்ன இணக்கமான உணர்வுகளை நான் வரவேற்று இன்று தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்குத்தான் இந்தக் கூலி அதிகரிப்பு என்று சொல்லப்பட்டிருக்கிறது, தமிழ்நாட்டிலே உள்ள தொழிலாளர்கள் யாவரும் இந்த விலையேற்றத்தினாலே பாதிக்கப்பட்டிருக் கிறார்கள், ஆகவே எல்லா இடங்களிலும் உள்ள தொழிலாளர் களுக்கும் நியாயமான கூலியை அறிவிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** எல்லோரும் கேள்வி யைக் கேட்கட்டும். பதில் சொல்கிறேன்,



1981 ஆகஸ்ட் 25]

**திரு. ரா. உமாநாத்:** இது விவாதமல்ல அப்படிச் செய்வதற்கு ஒவ்வொரு கேள்விக்கும் அவ்வப்போது அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒவ்வொரு கேள்விக்கும் பதில் சொல்லிவிடவும்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே. சண்டை போட்டு பதில் வாங்கத் தேவையில்லை. தேவையான பதிலைச் சொன்னதற்குப் பிறகு மீண்டும் ஏன் பதில் தேவை என்று கேட்கிறார்கள் என்று எனக்குப் புரிய வில்லை. தமிழ்நாடு முழுவதும் உள்ள தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி கொடுக்கவேண்டுமென்று ஒரு சட்டம் இருக்கிறது எல்லா இடங்களிலும் அது கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்காவிட்டால் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்புக்களை அதிகரிப்பதற்காக இன்றைக்குச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக் கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேச்சுவார்த்தை நடக்கிறபோதே போலீஸ்காரர்களால் இரவோடு இரவாக அந்தப் பகுதியிலே உள்ள விவசாயச் சங்கத் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டி ருக்கிறார்களே அந்த வழக்குகள் எல்லாம் வாபஸ் வாங்கப்படுமா? அது மாத்திரமல்லாமல் தஞ்சைக்கு மாத்திரம் தான் இந்த அதிகரிப்பு இருக்கிறது. தமிழ்நாட்டிலே உள்ள மற்ற இடங் களிலே உள்ளவர்களுக்கும் வாழ்க்கைச் செலவு அதிகரித்துதான் இருக்கிறது. ஆகவே இதை எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்க அரசு முன்வருமா? இதை அமல்படுத்துவதற்கு விசேஷமான ஒரு பிரிவை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** என்னுடைய பதிலிலே தெளிவாக சொல்லியிருக்கிறேன், அதற்குப் பிறகு திரு. வரத ராஜன் கேட்ட கேள்விக்கும் பதில் தெரிவித்திருக்கிறேன். வேறு ஒரு சட்டப்படி தமிழ்நாடு பூராவும் உள்ள விவசாயத் தொழி லாளர்களுக்கு குறைந்த பட்சம் என்ன கொடுக்கவேண்டுமென்று விதி இருக்கிறது, அந்த விதி நடைமுறைப்படுத்தப்படுகிறது. நடைமுறைப்படுத்தா விட்டால் என்ன செய்வது என்ற முறையிலே கடுமையான விதிகளைக் கொண்டுவருகின்ற சட்டம் அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது, அதை உறுப்பினர்கள் எல்லாம் படித்துப் பார்த்திருப்பார்கள், அதற்கு மேலே அந்த விவாதத்தின்போது என்ன செய்யவேண்டுமென்று நீங்கள் தெரிவித்தால் அதை அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. பெ. உத்திராபதி:** தற்போது இருக்கிற கூலியை ஆண் களுக்கு 9 ரூபாய் என்றும் பெண்களுக்கு 7 ரூபாய் என்றும் உயர்த்தியதற்காக நன்றி சொல்வதோடு சிறுவர்கள் என்று

[திரு. பொ. உத்திராபதி] [1981 ஆகஸ்டு 25

இருக்கின்ற வார்த்தையைப் பொறுத்தவரையில் நடவு நடக்கூடிய அத்தனை பேர்களுக்கும் இந்தக் கூலி பொருந்தக்கூடிய வகையில் சிறுவர்கள் என்ற வேறுபாடு பார்க்காமல் இருக்கக்கூடிய முறையிலே அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? இது சம்பந்தப்பட்ட வழக்குகள் வாபஸ் வாங்கப்படுவது பற்றி அமைச்சர் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, பலர் கைதுசெய்யப்பட்டிருப்பதாக இங்கே நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். இது மிராசுதார்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட போராட்டத்தின் காரணமா என்று தகவல் தெரியவில்லை. அப்படி போராட்டத்தின் காரணமாக ஏற்பட்டது என்று தெரிந்தால் நான் முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி முடிவு எடுக்கிறேன்.

ஆ. யூரியா மற்றும் இரசாயன உரங்களின் விலை ஏற்றம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: யூரியா மற்றும் இரசாயன உரங்களின் விலைகள் சமீபத்தில் அதிகமாக உயர்ந்துவிட்டதால் விவசாயிகள் படும் இன்னல்குறித்து திருவாளர்கள் பெ.சு. திருவேங்கடம், இரா. தாமரைக்கனி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருவார்.

*திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, "யூரியா மற்றும் இரசாயன உரங்களின் விலைகள் சமீபத்தில் அதிகமாக உயர்ந்துவிட்டதால் விவசாயிகள் படும் இன்னல் குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

[முற்பகல் 11.10]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

11-7-81 முதல் இரசாயன உரங்களின் விலைகள் மத்திய அரசால் உயர்த்தப்பட்டுள்ளன. சிலவகை உரங்களின் விலை உயர்வு கீழ்வருமாறு:—

| | பழைய விலை. (ரூ. டன்னுக்கு) | புதிய விலை. (ரூ. டன்னுக்கு) |
|---|---|---|
| யூரியா (46% என்) | 2,000 | 2,350 |
| என். பி. கே 17:17:17 | 2,200 | 2,600 |
| டி. ஏ. பி. | 3,050 | 3,600 |



1981 ஆகஸ்ட் 25] [திரு. க. காளிமுத்து]

இரசாயன உரங்களின் விலைகளை மத்திய அரசு நிர்ணயிக்கின்றது. இவற்றின் விலைகளை ஏற்றவோ, குறைக்கவோ மாநில அரசுக்கு அதிகாரம் கிடையாது.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரை, உரங்களை சிக்கனமாக சிறந்த வகையில் உபயோகப்படுத்தி மிக அதிக அளவில் விளைச்சல் பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த வகையில் சிபாரிசு செய்யப்பட்டு நடைமுறையிலுள்ள சில நடவடிக்கைகள் பின்வருமாறு:—

(1) மண் பரிசோதனை முடிவுப்படி உரமிடுதல்,

(2) குறித்த காலத்தில் உரமிடுதல், இலைமேல் உரத் தெளிப்பு, நாற்றங்காலுக்கு உரமிடுதல் போன்ற முன்னேற்றமான சாகுபடி முறைகளைக் கையாளுதல்.

(3) பயிர்கள் முழுமையாக பயனடைய வேர் பகுதியில் குறித்த ஆழத்தில் உரம் வைத்தல்.

(4) இரசாயன உரங்களுக்கு உப உரமாக அமைந்துள்ள நீலப் பச்சை பாசி போன்ற உயிரின உரங்கள் உபயோகித்தல்.

குறித்த அளவில் இரசாயன உரம் மற்றும் உயிரின உரங்கள் இடுவதன் மூலம் உரத்திற்காகும் செலவினங்களைக் குறைத்து விவசாயிகளுக்கு நிகர லாபத்தை உயர்த்த தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழக விவசாயிகள், அதிலும் குறிப்பாக இப்பொழுது செய்யப்படும் நவீன விவசாயத்தில் இரசாயன உரம் இல்லாமல் பயிரிட முடியாது என்பதை அரசு அறியும். விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாத அளவிற்கு உரத்தின் விலை மிகவும் அதிகமாக உயர்ந்திருக்கிறது. மத்திய அரசு உயர்த்தியிருந்தாலும் சரி, அதைக் குறைக்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசோடு பேசியதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவரவர்களே, பேசியது; கடிதம் எழுதியது; பலன் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவசாயிகளினுடைய நலன் கருதியும், தமிழக மக்கள் அரிசி உணவை உட்கொள்வதாலும், நெல்லின் உற்பத்தி குறையாமல் பாதுகாக்கப்படும் வகையில் மாநில அரசு விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்குவதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவரவர்களே, அதற்கான சாத்தியம் இல்லை. ஆகவே, எப்படிச் சிக்கனமாக உரத்தைப் பயன்படுத்துவது என்று அறிந்து கொண்டிருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவரவர்களே, பாலிடால் போன்ற இரசாயன உரங்களில் (குறுக்கீடு) பூச்சிக் கொல்லி மருந்துகளில் மண்ணெண்ணெயைக் கலந்து வியாபாரிகள் விற்கிறார்கள். எனவே, விவசாய வேளாண் சங்கத்தின் மூலமாகப் பூச்சிக்கொல்லி மருந்துகளை வழங்குவதற்கு ஆவன செய்யப்படுமா? கலப்படம் செய்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நடவடிக்கை எடுக்கப்படக் கூடிய ஒன்று. ஆனால் இந்தத் துறையே அந்த வியாபாரத்தைச் செய்ய இயலாது. இதற்கு வேறு பணிகள் இருக்கின்றன.

6. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

"1972–73-ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் முன்னறிக்கை மீதான பொதுக் கணக்குக் குழு (1977–78) அளித்த இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பத்தாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை"

அளிக்கிறேன்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்

அ. மதுரை–காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, "1981-ஆம் ஆண்டு மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை"ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இச் சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.





ஆ. பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, "1981-ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை"ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

இ. வக்ஃப் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, "1981-ஆம் ஆண்டு வக்ஃப் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவை"ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இச் சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

ஈ. நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு, தமிழ்நாடு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை, சட்ட முன் வடிவு எண் 57/1981) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

*திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின்மீது நான் சில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால், அமைச்சரே முதலிலே விளக்கங்களைச் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறார். காரணம், இதிலே ஒரு சின்ன வார்த்தையினால், ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் தேவை என்று கோரப்படுகிறது. தமிழ்நாடு அர்பன் லாண்ட் சீலிங் ஆக்டிலே ஏற்கனவே, இன்னின்னவர்கள் இவ்வளவு இவ்வளவு நிலம்

*1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

வைத்துக்கொள்ளலாம், இவ்வளவு மனை வைத்துக் கொள்ளலாம் என்று அதற்கு சாப்டரா இருக்கிறது. 21-வது செக்ஷன் என்ன சொல்கிறது என்றால், "பவர் டு எக்சம்ட்', யார், யாருக்கு விதிவிலக்கு அளிக்கலாம், என்ன காரணத்திற்காக அளிக்கலாம் என்று பெரிய பட்டியலே கொடுத்திருக்கிறார்கள் having regard to the location of such land, the purpose for which such land is being or is proposed to be used and such other relevant factors as the circumstances of the case may require.
லீகலாக ஏதாவது பிரச்னை ஏற்பட்டால், அளிக்கலாம். அடுத்து, ஏதாவது மத்திய சர்க்காரோடு. மாநில சர்க்காரோடு, கல்வி நிலையங்களோடு தொடர்பு-அக்ரீமெண்ட் ஏற்பட்டிருந்தால் அவைகளை எல்லாம் உற்றுப் பார்த்து, கவனித்து, சர்க்கார் எக்சம்ஷன் தரலாம். ஆனால், இவ்வளவுக்கும் தந்துகொண்டிருக்கிறார்கள்.

1978 ஆம் ஆண்டிலிருந்து இந்தச் சட்டம் நடைமுறையிலே இருக்கிறது. ஆனால், இன்றைக்கு அமைச்சர் என்ன கேட்கிறார்? இந்த செக்ஷன் 21-க்கு ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் தரவேண்டுமென்று கேட்கிறார். எதற்குத் தர வேண்டுமென்ற விளக்கங்களை ஸ்டேட்மெண்ட் ஆஃப் ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸிலே சொல்லியிருக்கிறார். The said section 21 does not empower the Government to grant any exemption retrospectively.

Absence of this provision has caused certain administrative difficulties.

Administrative difficulties இருக்கிற காரணத்தினாலேதான் ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் வேண்டும், அந்த 'பவர்' சர்க்காருக்கு வேண்டுமென்று கேட்கிறார். பில்லைப் பார்த்தால் ரொம்ப சிறிய பில். மூர்த்தி சிறியதாக இருந்தாலும், கீர்த்தி பெரியதாக இருக்கிறது. திடீரென்று ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் என்பது சாதாரணமானது அல்ல. அது ஒரு பெரிய வெப்பன். அந்த வெப்பனைச் சர்க்கார் கையிலே கொடுக்க வேண்டுமென்று நீங்கள் கேட்கிறபொழுது, நாங்கள் கொடுக்கவில்லையென்றால், உங்களுடைய மெஜாரிட்டி பலத்தை வைத்து எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள். அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிஃபிகல்ட்டீஸ் ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்களே, என்ன டிஃபிகல்ட்டீஸ் ஏற்பட்டிருக்கின்றன? மொட்டை தாதன் குட்டையிலே விழுந்தான் என்பதுபோல், அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிஃபிகல்ட்டீஸுக்காக ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் தாருங்கள் என்று சொன்னால், பேசுவதற்கே ஒன்றும் கிடையாது. அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிஃபிகல்ட்டீஸ் என்றால், ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் எடுத்துக் கொள்ளுங்கள் என்று அவ்வளவு தான் நாங்கள் பேசமுடியும்.



21-வது செக்ஷன் பிரகாரம் அமுல் நடத்தும்போது எங்கெங்கே அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிஃபிக்ல்ட்டீஸ் ஏற்பட்டது? எவ்வெப்பொழுது ஏற்பட்டன என்ற அந்த விளக்கங்கள் எங்கே? அதை விளக்கமாக எழுதிக் கொடுத்தால் நாங்களும் படித்துக் கொள்ளலாம். நீங்களே சொல்லலாம். இந்த கேஸில் இந்த மாதிரி நடந்தது? இந்த வழக்கு இந்த காரணத்திற்காக நின்று போய்விட்டது, ஹைகோர்ட்டிலே இந்த மாதிரி சர்க்கார் போட்ட வழக்கு நின்றுவிட்டது, இந்த இடத்திலே முட்டுக் கட்டையைச் சர்க்கார் ஃபேஸ் செய்யவேண்டியதாக இருந்தது. ஆகவே, அந்த மாதிரி நிலைமைகளைத் தவிர்க்க, ரெட்ராஸ்பெக்ட்டிவ் எஃபெக்ட்டாக இருந்தால்தான் நாங்கள் 'சால்வ்' செய்ய முடியும். நல்ல காரியங்களைச் செய்ய இந்தச் சட்டத்திலே இடம் இல்லை. ஆகவே, ரெட்ராஸ்பெக்ட்டிவ் எஃபெக்ட் வேண்டுமென்று கேட்டால், சரி, நல்லதற்காகக் கேட்கிறார்கள், தரலாம் என்று தருவதிலே ஆட்சேபனை இல்லை. ஆனால், ஒன்றுமே இல்லாமல், அரசாங்கத்திற்கு டிஃபிகல்ட்டீஸ், நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது, ஆகவே ரெட்ராஸ்பெக்ட்டிவ் எஃபெக்ட் வேண்டுமென்று கேட்டால், எப்படி கொடுக்க முடியும்? ரெயில்வே ஸ்டேஷனிலே கூட, டிக்கட் வேண்டுமென்றால், எந்த ஊருக்குப் போகிறேன் என்று சொல்லி கேட்டால்தான் அவன் டிக்கட் எடுத்துக் கொடுப்பான். சும்மா எங்கள் ஊருக்கு என்று கேட்டால் கொடுக்கமாட்டான்.

ஆகவே ரெட்ராஸ்பெக்ட்டிவ் எஃபெக்ட் என்று சும்மா கேட்டால் எப்படி கொடுக்க முடியும்? ஆகவே, ஸ்டேட்மெண்ட் ஆஃப் ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸிலே ரொம்ப தெளிவாகப் போட்டிருக்க வேண்டும். அதைப் பற்றி போட ஒரு பக்கம் ஒதுக்கியிருந்தால்கூட ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது. இல்லை, அமைச்சராவது முதலிலே எழுந்து நான் ஏன் ரெட்ராஸ்பெக்ட்டிவ் எஃபெக்ட் கேட்கிறேன் தெரியுமா என்று விளக்கம் சொல்லி இருக்க வேண்டும். அது சாதகமாக இருந்தால் நாங்களும் ஒத்துக் கொள்வோம். இல்லை விளக்கம் தேவையிருந்தால், நாங்கள் அரிய கருத்துக்களைச் சொல்லி விளக்கம் கேட்போம்.

எனவே, அமைச்சர்தான், முதலிலே விளக்கம் தர வேண்டும். கடந்த 1978-ஆம் ஆண்டில் இருந்து, அந்தச் சட்டம் அமுலுக்கு வந்தபிறகு, இவ்வளவு நிலைமைகள் ஏற்பட்டன, ஆகவே, ரெட்ராஸ்பெக்ட்டிவ் எஃபெக்ட் கொடுக்கவேண்டுமென்று கேட்க வேண்டும். பார்ப்பதற்கு ரொம்ப சிம்பிளாகத் தெரியும். ஏன் எங்களுக்கு பயமாக இருக்கிறதென்றால், வீட்டு அலவன்ஸ் வேண்டுமென்று கேட்டால்கூட, ரெட்ராஸ்பெக்ட்டிவ் எஃபக்ட் வேண்டுமென்று கேட்டு வாங்குகிறீர்கள். ஒரு அரசு திடீரென்று இவ்வளவு பெரிய ஆயுதத்தைத் தூக்கிக் கொடுங்கள் என்று கேட்கிறதென்றால், தனிப்பட்டவர்கள் யாராவது சிக்கியிருக்கிறார்களா? அவர்களுக்கு நன்மை செய்யவா? அப்படி இல்லாமல் இருக்கலாம். நான் அமைச்சர்மேலே குறை சொல்லவில்லை. ஆனால், அரசாங்கத்திற்கே நல்ல திட்டத்திற்குத் தேவைப்படலாம். ஒன்றுமே தெரியாமல், சும்மா சிம்பிளாக ...

போட்டு, ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுங்கள் என்று கேட்டால் எப்படி? எனவே, அமைச்சர் முதலிலே எழுந்து விளக்கத்தைச் சொல்லட்டும். அது என்ன அட்மினிஸ்ட்ரேட்டிவ் டிஃபிக்கல்ட்டீஸ் என்று எங்களுக்குத் தெரிய வேண்டாமா? ஸ்டேட்மெண்ட் ஆஃப் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்சிலே மொட்டையாக இருக்கிறது.

[முற்பகல் 11·20]

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: அவரைப் பேச அனுமதித்ததற்குப் பின்னர் நீங்கள் இரண்டாம் முறையாகப் பேசியிருக்கலாம். இப்பொழுது நீங்கள் பேசி முடித்தாகிவிட்டது. 10 நிமிஷங்களுக்கு மேல் பேசியிருக்கிறீர்கள்.

திரு. துரைமுருகன்: இன்னின்ன காரணத்தினாலே என்று ஒரு பெரிய பட்டியல் இருக்கிறது. அதனால் ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் தேவை என்று கேட்கலாம் இதிலே யாரையாவது பார்த்துச் சொல்லச் சொல்லுங்கள். இந்த பில்லிலே என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. absence of this provision has caused certain administrative difficulties அட்மினிஸ்டிரேடிவ் டிபிகல்டிஸ் என்றால் என்ன என்பதை விளக்க வேண்டாமா? இன்னின்ன கேஸ்கள் அடிபட்டிருக்கின்றன என்றாவது சொல்ல வேண்டாமா? நான் திருப்பித் திருப்பிச் சொல்கிறேன் அமைச்சர் முதலிலே விளக்கம் சொல்லட்டும், அதற்கு பிறகு நாங்கள் பேசுவதற்கு ஏதுவாக இருக்கும் என்று கூறி அமைச்சர் அவர்களை முதலிலே விளக்கம் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) எப்படி இருந்தாலும் அமைச்சர் பதில் சொல்லப்போகிறார். அப்படியா, புரியவில்லையா துரைமுருகா நான் சொல்லுகிறேன் என்று ஒரு நாலு வார்த்தை சொல்லட்டும். அமைச்சருக்குத் தெரியாது என்று நான் சொல்லமாட்டேன். அவர் நிறைய படித்துவிட்டு வருகிறார். நின்று நிதானமாக விளக்கம் சொல்கின்றவர். I know him for the past so many years.

திரு. அ. ரகுமான்கான்: பாயின்ட் ஆப் ஆர்டர், துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான ஒழுங்குப் பிரச்சினை ஆகும். காரணம் ஒரு சட்டமுன்வடிவு இந்த அவையிலே கொண்டு வரப்பட்டு ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறபோது இது குறித்து மன்ற உறுப்பினர்கள் விவாதிக்கும்போது அமைச்சர் அவர்கள் நிச்சயமாக பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்.

He is bound to give the answer

ஏனென்று சொன்னால், பிரச்சினை என்னவென்று தெரியாமலேயே உறுப்பினர்கள் விவாதிக்க முடியாது. ஆகையினாலே மாண்புமிகு உறுப்பினர்கள் நமது துரைமுருகன் அவர்கள் மேட்டுக் கொண்டதற்கிணங்க ஆப்ஜெக்ட்ஸ் அன்டு ரீசன்ஸ்-ல்





அட்மினிஸ்டிரேடிவ் ரீசன்ஸ் என்று சொல்வது சரியல்ல ஆகையினாலே விளக்க வேண்டும் என்று கேட்கிறபோது கூட்டுப் பொறுப்புடைய அமைச்சரவையில், சம்பந்தப்பட்ட அமைச்சர் சொல்லலாம் அல்லது எந்த அமைச்சர் வேண்டுமானாலும் சொல்லலாம்............

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசுகிறபோது கூட மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் பேசவேண்டியதை விளக்கமாகப் பேசிவிட்டார்கள். அவர் பேசுகிறபோது இந்தச் சட்டத்திலே இருக்கின்ற சங்கடங்கள் என்ன என்பதையும், இது எதற்காகக் கொண்டு வரப்படுகிறது என்பதையும் அவர்களே தெரிவித்திக்கிறார்கள். 21 (1) ஏ. பி. சி. என்ன என்பதைப் பற்றி விளக்கமாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதிலிருந்து முதலிலே இந்த அரசுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். அந்த அதிகாரத்திலே இருக்கின்ற நடைமுறைச் சிக்கல்கள் என்ன என்பது தெரியவில்லை என்று சொல்லிவிட்டார். கொடுக்கப்படுகிற அதிகாரத்தை அரசு நிச்சயமாக தவறாகப் பயன்படுத்த முடியாது, என்பது அவருக்குத் தெரியும். அவர் நன்கு படித்த வழக்கறிஞர். அவருக்குத் தெரியும் 21 (1), ஏ.பி.சி. என்றால் என்ன, அதன்கீழ் என்னென்ன அதிகாரங்கள் இருக்கின்றன என்று. அந்த அதிகாரம் சம்பந்தப்பட்டவர்கள் விதிவிலக்குக் கொடுக்கிற போதுதான், நடைமுறைச் சிக்கல்கள் வருகிறபோதுதான் அதை பயன்படுத்த வேண்டுமே அல்லாது வேறு எந்த விவகாரத்திற்கும் நிச்சயமாக பயன்படுத்த முடியாது என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இந்தப் பேரவைக்கும் நன்றாகத் தெரியும். உதாரணமாக 21 (ஏ) என்றால் நூற்பாலைகள் தொழிற்சாலைகள், பெரிய தொழிற்சாலைகள் இப்படி எல்லாம் வருகின்றன. 21 (பி) என்றால் undue difficulty and hardship என்றெல்லாம் வருகிறது.

இந்தச் சட்டம் எப்போது கொண்டு வரப்பட்டது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். சட்டம் கொண்டு வந்தது 3-8-1976 அன்று. ஆனால் இப்படி சில பேர்கள் இங்கே கொண்டு வருகிறபோது எனக்குச் சங்கடங்கள் இருக்கின்றன என்று பல பேர்கள் மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். எவ்வளவு பேர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்று கேட்டால் இன்றைக்கு 1,200 பேர்கள் 21 (ஏ)க்காக கொடுத்திருக்கிறார்கள். அது போல 10 ஆயிரம் மனுக்கள் 21 (1) (பி)-யில் கொடுத்திருக்கிறார்கள். சட்டம் வந்தது 3-8-76ல். இவர்களுக்கு சங்கடங்கள் இருக்கின்றன என்று மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அரசு இவைகளைப் பற்றியெல்லாம் பரிசீலனை செய்துக் கொண்டிருக்கிறது; அதற்கு சிறிது காலம் ஆகலாம். முடிவில் பொது நன்மையைக் கருதி இந்த விண்ணப்பங்களுக்கு ஏற்படுகிற இடையூறு அல்லது பாதகங்களைக் கருத்தில் கொண்டு, இவைகளுக்கு விலக்கு அளிக்காலமென்று, அரசு ஆணை பிறப்பிக்க

வேண்டுமானால், ஆணை பிறப்பித்த தேதியிலிருந்து தான் அதை நடைமுறை படுத்த முடியும். ஆனால் சட்டம் வந்தது 1976; மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள்; இவற்றை பரிசீலிப்பதில் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. கொடுத்திருக்கிற மனுக்களில் நியாயம் கருதி அரசு முடிவு எடுத்தால், அந்த மனுக்களை கொடுத்த தேதியிலிருந்து நடைமுறை படுத்துவதற்கு, அரசு முடி வெடுப்பதற்கு இந்த சட்ட முன்வடிவை கொண்டு வந்திருக் கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த சட்டமுன்வடிவில் ஏற்கனவே இந்த சட்டம் நிறைவேற்றிய காலத்தில், யார் யாருக்கெல்லாம் விலக்கு அளிக்கலாம் என்று கொண்டு வந்த நேரத்திலே, இப்படி விலக்கு அளிப்பதன் மூலமாக அரசு என்ன எதிர்ப்பார்க்கிறதோ அந்த பலன்கள் கிடைக்காமல் போகக்கூடிய நிலைமை ஏற்படும் என்று கருதி, இந்த வாய்ப்பு களை பயன்படுத்திக் கொண்டு நிலத்தை அதிகமாக கையகப் படுத்திக் கொண்டு இருக்கிற நபர்களை அல்லது பல்வேறு அற நிலையங்கள் பெயரால் நிலங்களை வைத்திருக்கும் நபர்கள் பயன்பெறும் நிலைமை ஏற்படும். இத்தகைய விலக்கு அளிப்பதன் மூலமாக அரசு எண்ணிய, எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது என்று ஆட்சேபனை அப்போதே கிளப்பப்பட்டது.

ஆகவே இந்த ஆட்சேபணையை வைத்துக் கொண்டு இதற்கு முன்னால் இருப்பவர்களுக்கு கூட விதிவிலக்கு என்பது அரசு நிச்சயமாக எதிர்பார்த்த பலன் கிடைக்காமல், நிலக்குவியலாய் வைத்திருக்கிற ஒருசில நபர்களோ அல்லது அறநிலையங்களை வைத்திருக்கிற பேர்களோ லாபம் அடையக் கூடும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது. நிச்சயமாக அரசோ அல்லது குறைந்த வருமானம் உள்ளவர்களோ இப்படி விதிவிலக்கு அளிப்பதன் மூலமாக கிடைக்க வேண்டிய நிலங்கள் கிடைக்காமல் போகக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று எண்ணுகிறேன் அது மட்டுமல்ல, இன்றைக்கு நகர் புறத்திலே வீட்டு மனைகளோ அல்லது நகரத்தைச் சுற்றியுள்ள பகுதியில் உள்ள நிலத்தி னுடைய மதிப்பு அதிகமாகிக் கொண்டிருக்கிற காரணத்தினால் சாதாரண மக்கள் தங்களுக்கு வேண்டிய தேவையான வீட்டு மனையைக் கூட பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில் முன் தேதியிட்டு கொடுப்பதன் காரணமாக அதிகப் படியான நிலங்கள் தனி நபர்கள் வசம் போகக்கூடிய ஆபத்து இருக்கும் என்று எண்ணுகிறேன். ஆகவே இதை எங்களுடைய கட்சியின் சார்பில் ஆட்சேபிக்கிறேன். என்றைக்கு சட்டம் நிறை வேற்றப்பட்டதோ அன்றைய தேதியிலிருந்து முறைப்படுத்துவது தான் சர்க்காருக்கும் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் நிலம் கொடுக்கக் கூடிய வீட்டு மனை கொடுக்க கூடிய நிலை ஏற்படும். இதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



ஏற்கனவே உள்ள சட்டத்திலே உள்ள சந்து பொந்துகளை எல்லாம் நீக்கி, அதிகப்படியான நிலங்கள் அரசுக்கும். பொது மக்களுக்கும் கிடைக்கிற வகையிலே மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. செ. சிவசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1981-ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு என்ற பெயரால் 1978 ஆம் வருடச் சட்டத்தில் 21ம் பிரிவுக்கு மாநில அரசு ஆணை ஒன்று பிறப்பிப்பதன் மூலம், அந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்தோ, அல்லது அதற்கு பின்பிருந்தோ என்ற வார்த்தையைச் சேர்ப்பதுதான் இந்தத் திருத்தத்தின் நோக்கம். அதை எனக்கு முன்பு பேசிய மெம்பர்கள் பேசியதைப் போல என்ன காரணத்திற்காக இதைக் கொண்டு வந்திருக் கிறார்கள் என்று எங்களுக்கே புரியாத நிலை இருந்தது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பின்னால் ஓரளவு புரிந்திருந்தாலும், இன்னும் விளக்கம் சரியான முறையில் இல்லையென்றுதான் நான் கருதுகிறேன். நிர்வாக சௌகரியங்கள் என்ற ஒரு வார்த்தை என்ன காரணத்திற்காக இருக்கிறது; அதில் என்ன சிக்கல் இருக்கின்றது; அதற்கு நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்பதை தெளிவாக அந்த காரண விளக் கத்தில் குறிப்பிட்டிருந்தால் நிச்சயமாக நல்லமுறையில் நாங்கள் வாசித்து அதன் மூலமாக எங்களுடைய பங்கு என்ன என்பதை இன்னும் விவரமாக எடுத்துச் சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும் என்று கருதுகிறேன்.

[முற்பகல் 11-30]

இருந்தாலும் கூட நாங்கள் எல்லாம் நகர்புற நில உச்சவரம்புச் சட்டம் வரும்போது நிச்சயமாக இந்த நகரிலும் நகரைச் சுற்றியும் ஒரு சிலர் அதிகமான நிலத்தை ஆக்கிரமித்துக்கொண் டிருக்கிறார்களே, கையிலே வைத்துக் கொண்டிருக்கிறார்களே, அவர்களிடமிருந்து அதிகப்படியாக இருக்கக் கூடிய நிலம் எடுக்கப்பட்டு அது சாதாரண ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்ட வீட்டுமனைகள் கொடுக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். வீடு இல்லாதவர்களுக்கு வீட்டுமனை கிடைக்காத நிலை மாற்றி யமைக்கப்படும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். அவர்களுக்கு எல்லாம் வீட்டுமனைப் பட்டா அளிக்கப்படும் என்று எதிர் பார்த்தோம். ஆனால் அதற்கு வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது இந்தச் சட்டத்தின் மூலம்.

இந்தச் சட்டத்தைக் கொண்டுவரும்போது, கடந்த காலத்தில் நான் பேசும்போது இந்த நகர்புற நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவரும்போது எத்தனை ஏக்கர் நிலம் கிடைக்கும் என்ற விவரங்களைக் கேட்டபோது அதற்கான புள்ளி விவரங்கள் கிடைக்காத நிலை இருந்தது. கடந்த காலத்தில் எந்த அமைச்சர் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தாரோ அந்த அமைச்சர் இன்றைக்கு இல்லை என்று கருதுகிறேன். அந்த அமைச்சர் சற்று

வழவழா என்று சொல்லிவிட்டு சென்று விட்டார். அந்த நிலைமை மாறி, இன்றைக்கு நல்லமுறையிலே இந்தச் சட்டம் வரும் என்று நாங்கள் எல்லாம் எதிர்பார்த்தோம். ஆனால் பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

அமைச்சரவர்கள் நிர்வாக சௌகரியங்களுக்காக இது என்று சொல்லி, முன்தேதியிட்டே அமுல்படுத் கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது நிச்சயமாக நல்ல காரியங்களுக்கு, சாதாரண மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்குப் பயன்படும் அளவிலே கொண்டுவரப்பட்டிருந்தால் நாங்கள் வரவேற்றிருப்போம் என்று சொல்லி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த மசோதாவை நான் வன்மையாக ஆட்சேபிக்க வேண்டியிருக்கிறது. அதற்குக் காரணம் இருக்கிறது. ஏற்கெனவே, அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது சில விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருந்தன. அந்த விதிவிலக்குகள் மேலும் மேலும் விரிவுபடுத்தப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அறநிலையங்கள், மற்றும் பல நிறுவனங்களுக்கு எல்லாம் இந்த நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் பொருந்தாது என்று சொல்லியிருக்கிற விதிவிலக்கானது சாதாரண மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு நிலம் வழங்குவதை தடுத்திருக்கிறது. இன்றைக்கு இந்தச் சட்டத்தைச் செயல்படுத்துகிறபோது யாராவது ஒருவர் அசாதாரணமாகப் பாதிக்கப்பட்டால் (ஹூ ஈஸ் அன்டியூலி அஃபெக்டட்) அவருக்கு விதிவிலக்கு கொடுக்க இந்தச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதனால் என்ன நிலை ஏற்படும்? சென்னை, மதுரை போன்ற இடங்களில் 200 கிரவுண்ட், 300 கிரவுண்ட் நிலம் வைத்திருப்பவர் நிச்சயமாக பாதிக்கப்படத்தான் செய்வார். அப்படிப்பட்ட ஒருவர் நான் பாதிக்கப்படுகிறேன் என்று மனு செய்தால் அவருக்கு விதிவிலக்கு கொடுத்தால் என்ன அர்த்தம்? அதிகமாக நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து நிலத்தை எடுத்து நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்கத்தான் சட்டம் வருகிறது. அதனால் அதிக நிலம் வைத்திருக்கிறவர்கள் பாதிக்கப்படத்தான் செய்வார்கள்: அப்படி வரும்போது அவர்களுக்கு விதிவிலக்கு கொடுப்பது என்று சொன்னால் அது தவறான ஒரு நடவடிக்கையாகும். இது எப்படி இருக்கிறது என்றால் 'குதிரை கீழே தள்ளியது மட்டுமல்லாமல் குழியும் பறித்தது' போல இருக்கிறது. அந்தத் தவறையும் இன்றைக்கு முன்தேதியிட்டு அனுமதிக்க வேண்டுமென்று அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். இதில் என்ன ஏற்படும் என்றால் ஏராளமான நகர்ப்புற நிலம் வைத்திருப்பவர்கள் வேறு நியாயமான காரணம் காட்டி நிலத்தை தன்னிடம் வைத்துக்கொள்ள முடியாதபோது நான் அசாதாரணமாகப் பாதிக்கப்படுகிறேன் (ஐ ஆம் அன்டியூலி அஃபெக்டட்) என்று சொல்லி அரசாங்கத்திற்கு மனு கொடுக்கிறார் என்றால் அவருக்கு விதிவிலக்கு அளிக்கப்படும். அப்படி



மனு கொடுக்கிறவர்கள் பெயர்களை எல்லாம் அரசாங்கம் பிரசுரித்தால் நாட்டிலே இருக்கிற மக்கள் அவர்களைப்பற்றித் தெரிந்து கொள்வார்கள்.

இன்று மாம்பலம் போன்ற இடங்களில் ஒரு கிரவுண்டு நிலத்தில் விலை ஒரு இலட்சம் ரூபாய், 3 இலட்சம் ரூபாய் வரையில் விலை பேசப்படுகிறது. அப்படிப்பட்ட இடங்களிலே அதிகமாக நிலம் வைத்திருப்பவர்கள் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று காரணம் காட்டி அரசாங்கத்திடம் விதிவிலக்கு பெற்றுக் கொள்கிறார்கள், அதுவும் முன்தேதியிட்டு பெற்றுக் கொள்கிறார்கள் என்றால் அந்த நிலங்களை இலட்சக்கணக்கான ரூபாய்க்கு விற்று, கொள்ளை இலாபம் சம்பாதிக்கத்தான் இந்த விதிவிலக்கு கொடுக்கிறார்கள். ஆகவே, ஜனங்கள் நலனிலே அக்கறை கொண்டுள்ள அரசாங்கம் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவராமல் இருப்பது மட்டுமல்ல; ஏற்கெனவே இருக்கிற விதிவிலக்கை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தால்தான் இலட்சோபலட்சம் மக்கள், நகர்புறத்திலே அல்லது நகரைச் சுற்றியிருக்கிற பெல்ட் ஏரியா என்று சொல்லப்படுகிற இடங்களிலே வீட்டுமனை கிடைக்கவில்லையே என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிற மக்களின் கவலையைப் போக்க முடியும். ஆகவே, அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டுவரக்கூடாது.

ஏற்கெனவே மூலச்சட்டத்திலே விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற அந்த அம்சத்தை நீக்கவேண்டும். கிராமங்களிலே நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்படுகின்றபோது பாதிக்கப் படத்தான் செய்வார்கள். ஆனால் அதற்காக இப்படிப்பட்ட விதிவிலக்கு கொடுக்கப்படவில்லையே. ஒரு சின்ன வித்தியாசம். கிராமங்களிலே விறகு மரங்கள் போன்றவை வைக்கப்பட்ட நிலங்களுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டது. அப்படிப்பட்ட விதிவிலக்கையும் நாங்கள் எதிர்த்தோம்.

இங்கே அடையாறிலே ஒரு மனிதன் 100 கிரவுண்ட் நிலத்தை வைத்துக்கொண்டு பங்களா கட்டி இருக்கின்றார் என்றால் அவர் இந்தச் சட்டத்தின் மூலம் நான் பாதிக்கப்படுகிறேன் என்று சொன்னால் அவருக்கு அந்த உச்சவரம்புச் சட்டம் செல்லாது என்று அறிவித்தால் அவருடைய கையிலே நூற்றுக்கணக்கான கிரவுண்ட் நிலங்களை ஒப்படைப்பதாகத்தான் அர்த்தம். அதன் மூலம் அவர்கள் கொள்ளை இலாபம் அடிப்பதற்கு உதவி செய்வதாகத்தான் இருக்கும். ஆகவே இது குறித்து ஆழ்ந்து யோசித்து இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வராமல் இருக்க வேண்டும் என்றும், ஏற்கெனவே மூலச்சட்டத்தில் இருக்கின்ற விதிவிலக்கினை ரத்து செய்யவேண்டும் என்றும் நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவினை நிறைவேற்றுவதாலேயே உடனடியாக அந்த விதிவிலக்கினைப் பயன்படுத்தி யாரும் அதை அனுபவிக்கமுடியாது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

சட்டத்திலே 21 ஏ.பி.சி. என்று இருந்தாலும் அது இருக்கின்றதே என்று சொல்லி நேரடியாக அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி யாரும் நன்மையை அனுபவிக்க முடியாது. அதுபற்றிய ஒரு தீவிரமான ஒரு பரிசீலனை செய்ததற்குப் பிறகுதான் முடிவு எடுக்கப்படும் என்பதும் உங்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். ஆகவே நான் முதலிலே இங்கே சொன்னபடி ஒரு சிக்கலால்தான் இது கொண்டுவரப்பட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு திரு. சங்கரய்யா அவர்கள் பேசுகின்றபோது இதை மேலும் விரிவுபடுத்திக்கொண்டு போகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் உண்மையில விரிவுபடுத்திக் கொண்டு போகவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும்.

செக்ஷன் 3 ஆஃப் தி அபர்ன் லேண்ட் சீலிங் ஆக்டில் பொது அறக்கட்டளை அல்லது சமய பொறுப்புக் கழகம் போன்றவை தங்களிடத்திலே வைத்துள்ள காலி உபரி நிலத்தை விற்பதற்குரிய அனுமதி கோரி தகுதியுள்ள அதிகாரிகளிடத்திலே மனுக்கள் கொடுக்கவேண்டும். அவ்வாறு விண்ணப்பம் செய்ததற்குப் பிறகு தகுதியுள்ள அதிகாரி தேவையான விசாரணை செய்து அவர்களுக்கு அனுமதி தரவேண்டும். அப்படி தகுதியான அதிகாரி அனுமதி தராவிட்டால் அப்படி அனுமதி கொடுக்காத 120 நாட்கள் வரை பார்த்து விட்டு அதற்குப் பிறகு அந்த நிலங்களை விற்பதற்கு சட்டத்திலே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இது தான் முன்பு நிறைவேற்றப்பட்ட சட்டத்திலே இருக்கின்றது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அதை நாங்கள் விரிவு படுத்தவில்லை. அதற்குப் பிறகு, சில மாதங்களுக்கு முன்புதான் அந்தச் சட்டம் திருத்தப்பட்டிருக்கின்றது. ஆகவே அப்படி பப்ளிக் டிரஸ்டாக இருந்தாலும், ரிலிஜியஸ் ட்ரஸ்டாக இருந்தாலும் எதற்காக இந்தச் சொத்துக்களை வைத்துக் கொண்டிருக்கிறதோ அதற்காக அதை வைத்துக்கொண்டிருக்கலாம். ஆனால் அதற்குப் பிறகு அதை விற்கவோ, வாடகைக்கு விடவோ அடமானம் கொடுக்கவோ, குத்தகைக்கு விடுவதற்கு அல்லது என்று சட்ட திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக் முடியா கின்றது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். யாராவது தனிப்பட்டவர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்றால், கொண்டு வந்த பழைய சட்டத்தை அப்படியே வைத்துக் கொண்டு இந்த அரசு பயன்படுத்தியிருக்க முடியும். அந்தப் பழைய சட்டத்திலேயும் அதிலே இருக்கிற நுணுக்கங்களை நீங்கள் எல்லாம் எடுத்துச் சொல்வதற்கு முன்னாலே கூட, அந்தச் சட்டத்தை நான் இந்த அவையிலே கொண்டு வந்து நிறைவேற்றிய போது, நீங்கள் எல்லாம் வரவேற்றீர்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

அந்தச் சட்டத்திலேயிருந்த சில சங்கடங்களையும், அதிலே இருக்கிற சில சந்துபொந்துகளையும் எடுத்துச் சொல்லி, அவைகளைத் திருத்துவதற்காகத்தான் இந்தத் திருத்தச் சட்டமுன் வடிவினைக் கொண்டு வந்திருக்கிறோம். இன்றைக்கு ...





டிரஸ்ட்டாகயிருந்தாலும சரி, ரிலிஜியஸ் டிரஸ்ட்டாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த டிரஸ்ட்டானாலும் சரி, அவைகள் தங்களுக்கு இருக்கும் சொததுக்களை அப்படியே வைத்துக் கொள்ளலாமே தவிர, அவைகளை குத்தகைக்கு விடுவதோ, வாடகைக்கு விடுவதோ, விற்பதற்கோ, அன்பளிப்பாக கொடுப்பதற்கோ அனுமதி கிடையாது. அவர்கள் அப்படி கொடுப்பதாகயிருந்தாலும் அரசாங்கத்தினிடத்தில்தான் கொடுக்கவேண்டும் என்று ஒரு சட்டமுன்வடிவினை கொண்டுவந்து இந்த அரசு இதற்கு முன்னாலேயே நிறைவேற்றியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசினுடைய நல்ல எண்ணத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். நிலச்சீர்திருத்தத்திலே, அதுவெளியே இருக்கிற நிலங்கள் சம்பந்தப்பட்ட நிலச்சீர்திருத்தமானாலும் சரி, நகர்ப்புற நிலச்சீர்திருத்தமானாலும் சரி, விவசாயிகள் நிலச் சீர்திருத்தமானாலும் சரி, இந்த அரசு கொண்டுவந்திருக்கக்கூடிய நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் எல்லாமே தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மிகவும் ஆழமாகக் கவனித்து, ஒவ்வொரு வரியையும் படித்துப் பார்த்துத்தான், நாங்கள் எல்லாம் சேர்ந்து விவாதித்து, யோசனை செய்துதான் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி அவைகளை நாங்கள் யோசனை செய்கிறபோது எல்லா பொதுமக்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் ஒரு வகையிலும் தீங்குவராத, பாதகம் வராத அளவுக்கு அதேநேரத்தில் ஏதாவது நன்மை வரும் அளவுக்குத்தான் யோசனை செய்து கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறோம் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். அதே அடிப்படையில் தான் இந்தச் சட்ட முன்வடிவினையும் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் உங்களுக்கு முன்னாலேயே தெரிவித்ததைப் போல எங்களுக்கு ஆயிரக்கணக்கான மனுக்கள் வந்திருக்கின்றன. நடைமுறையில் அவைகளையெல்லாம் பரிசீலனை செய்து முடிவு எடுக்கையில் நிறைய காலதாமதம் ஆகும். அப்படி அவ்வளவு காலதாமதத்திற்கு பிறகு முடிவை எடுத்து, உத்தரவு போடுகையில் அந்த உத்தரவை அமுல்நடத்துகையில் பல சிக்கல்கள் ஏற்படும். ஆகவே, அவைகளைத் தவிர்ப்பதற்காகத்தான் இந்தச் சட்டமுன்வடிவினைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சட்டமுன்வடிவினைக் கொண்டு வந்தவுடனேயே நேரிடையாக யாரும் அதை அனுபவிக்க முடியாது என்று கூறி, அதை நிறைவேற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் டிரஸ்டுகளின் சொத்துக்களை மாற்றம் செய்வது பற்றிக் கூறினார்கள். ஆனால் இந்தத் திருத்தச் சட்டத்தின் மையம் என்னவென்றால்,

[திரு. என். சங்கரய்யா] [1981 ஆகஸ்ட் 25

"....If a person unduly affected by the land ceiling"

என்று ஒரு விலக்கு இருக்கிறது. தனி நபர்களுடைய மனுக்கள் தான் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன; அதிலே பல பெரிய மனிதர்கள் இருப்பார்கள். எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன. எத்தனை பேர்கள் விலக்கு கேட்டிருக்கிறார்கள். அதன்படி வருகிற நகர்ப்புற நில அளவு என்ன என்பதை பொதுமக்களுக்கு அறிவித்தாலே, நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தில் தாங்கள் பாதிக்கப்படுவோம் என்று கருதித்தான் சில சொந்த நில உடைமையாளர்கள் சில தனி நபர்கள், மனுக்களை கொடுத்து நிலங்களை எடுத்துக் கொள்வதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதைத்தான் நான் ஆட்சேபிக்கிறேன். ஆகவே தான் அரசாங்கம் மீண்டும் ஒரு முறை பரிசீலனை செய்து பார்த்தால் இந்தத் தனி நபர்கள் தாங்கள் பாதிக்கப்படுவதாக, இந்த விதி விலக்கைக் கேட்டு முன்தேதியிட்டு எபெக்ட் கொடுத்து நிலங்களைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கிறார்கள் என்பது புரியும். அது இன்றைக்கு மற்ற மக்களுக்கு நிலங்கள் கிடைப்பதற்கு எந்த உதவியையும் செய்யாது, நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அரசுக்கும் நிலம் கிடைக்காது என்றுதான் நான் மீண்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்மிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட நபரைப் பற்றி இந்த அரசு கவலைப்படாது, முதலமைச்சர் அவர்களும் கவலைப்படமாட்டார்கள். நானும் கவலைப்பட மாட்டேன். ஆனால் தனிப்பட்டவர்கள் சமுதாயத்தில் இருக்கிறார்கள், சமுதாயத்திற்காக நாங்கள் கவலைப்படுகிறோம். அதிலே தனிப்பட்டவர்களும் வருகிறார்கள். நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். யார் யார் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள் என்பது அல்ல கேள்வி. மனுக்களைக் கொடுத்திருக்கிற அத்தனை பேர்களுக்கும் விலக்கு கிடைப்பதற்கில்லை. கொடுக்கப்பட்ட மனுக்களை அரசு ஆராய்ந்த பிறகு முடிவு எடுக்கிறபோது, அந்த முடிவுகளை நடைமுறைப் படுத்துகையில் ஏற்படுகிற சிக்கலைத்தான் விளக்கி நான் சொன்னேனே ஒழிய இதிலே பெரியவர்கள் இருக்கிறார்களா சின்னவர்கள் இருக்கிறார்களா என்று பார்த்து விலக்கு அளிக்கும் வகையில் செய்யவில்லை.

அப்படி பெரியவர்களுக்கு சலுகைகள் கொடுக்கவேண்டும் என்றால், இந்தச் சட்டத்தைக் கொண்டுவராமலேயே பிராஸ்பெக்டிவ்வாக போட்டுவிட முடியும். அப்படி பிராஸ்பெக்டிவ்வாக போடுவதற்கு இன்றைக்கும் வழிவகைகள் இருக்கின்றன. ஆனால் சட்டத்தைப் போட்ட பிறகு அதிகாரிகள் அதை நடைமுறைப் படுத்த வேண்டும்.

இந்தச் சட்டத்திலே என்ன சொல்லியிருக்கிறது என்றால், ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசனிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறது.



1981 ஆகஸ்ட் 25) [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

"Absence of this provision has caused some administrative difficulties'. என்று. (குறுக்கீடு) absence என்றிருப்பதால் கொண்டு வந்திருக்கிறோம் வேறு காரணமில்லை.

திரு. துரைமுருகன்: இவ்வளவு பிரச்னையே வேண்டாம் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திற்கு ஒரு உறுதிமொழி கொடுக்கவேண்டும். இந்த 'ரெட்ராஸ்பெக்டிவ்' எபெக்ட் என்பதை வைத்து இன்ஸ்டிட்யூஷன்ஸ், கார்ப்பரேஷன்ஸ், அரசாங்கம் சம்பந்தப்பட்டவை இவைகளுக்குத்தான் இந்த 'ரெட்ராஸ்-பெக்டிவ்' எபெக்ட் என்பதைப் பயன்படுத்துவோம், தனிப்பட்டவர்களுக்கு இந்த ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் சலுகையை காட்டமாட்டோம் என்ற ஒரு உறுதிமொழியை இந்த அவையில் அமைச்சர் அவர்கள் கொடுத்தால் 'போனோபைடி'யைச் சந்தேகிக்க மாட்டோம். அதைத்தான் திரு சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள். தனிப்பட்ட நபர்கள் சலுகைகளைப் பெற்றுவிடுவார்கள் என்ற ஐயப்பாட்டால்தான் சொல்கிறோம். இந்த ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் என்பதை தனி நபர்களுக்கு இன்டிவிட்வல்-க்கு பயன்படுத்த மாட்டோம் என்று சொல்லி விடுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தனி மனிதர்கள் என்றால் யார் என்று பார்க்கவேண்டுமே தவிர தனி மனிதர்கள் என்றால்—இன்றிருக்கிற சட்டப்படி அரை க்ரவுண்ட் முக்கால் க்ரவுண்ட் என்று எவ்வளவோ பேர்களுக்கு இந்த அரசு கொடுத்திருக்கிறது என்பதை உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன், இந்தச் சட்டம் 1976-ல் வந்திருக்கிறது. இதுவரையில் இந்தச் சட்டத்தை உபயோகப்படுத்தி விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதில் இந்த அரசு முறைகேடாக நடந்திருக்கிறது என்று சொல்லுங்கள். உதாரணமாக ஒன்றைச் சொல்லுங்கள், முறைகேடாக இந்த அரசு நடந்திருப்பதாகச் சொல்லுங்கள்? அப்படி ஏதாவது நடந்திருக்கிறது என்று சொல்லமுடியுமா? சொல்ல முடியாது. பார்த்துத்தான் செய்கிறோம். யார் பெயரை வேண்டுமானாலும் சொல்லுங்கள், கொடுத்த காரணத்தை நான் சொல்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: இந்தப் பிரச்னையில் சிக்கல் என்னவென்றால், சில சாதாரண தனி மனிதர்களுக்கு கால் க்ரவுண்ட், அரை க்ரவுண்ட் கூடியிருக்கிறது என்றால் அரசாங்கம் கட்டாயமாகக் கொள்முதல் செய்ய வகையில்லை. அரசாங்கம் விரும்பினால் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது. பெரியவர்கள் தான் இந்த விதிவிலக்கு கேட்டிருக்கிறார்கள். If a person is unduly affected by Urban Land Ceiling Act சாதாரண

மக்களுக்கு கால் க்ரவுண்ட், அரை க்ரவுண்ட்-க்கு விதிவிலக்கு கொடுப்பது பற்றி ஆட்சேபணை இல்லை. நபர்கள் முக்கியமில்லை என்று சொல்கிறார்கள். நபர்கள் முக்கியம்தான். அரசாங்க கஸெட்டில் அல்லது பத்திரிகைகளில் எந்தெந்த நபர்கள் விதிவிலக்கு கேட்டிருக்கிறார்கள், அவர்கள் கேட்டிருக்கக் கூடிய விதிவிலக்கு மூலம் எவ்வளவு க்ரவுண்ட்ஸ்-க்கு விதிவிலக்கு கேட்டிருக்கிறார்கள் என்று தகவல் கொடுத்தால் போதும் பிரச்னையைப் பற்றி தெரிந்துகொள்ள.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** நான் நடைமுறையைப் பற்றித்தான் பேச முடியும். இமாஜினரியாகச் சொல்வதற்கு, கற்பனைக்கு நான் எப்படி பதில் சொல்ல முடியும்? கற்பனைக்கு என்னிடம் பதிலை எதிர்பார்க்க முடியுமா? இதிலே யார் யாருக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்ற பெயர்களை, வேண்டுமானால் பெயர்களை வரவழைத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதில் தவறு இல்லை. எதையும் மறைப்பதற்கு தயாராயில்லை. ஆனால் எதையும் மறைப்பதற்கு தயாராயில்லை என்ற பிறகு கற்பனைக்கு என்னால் எப்படி பதில் சொல்ல முடியும்? கற்பனைக்கு என்னால் பதில் சொல்லமுடியாது. கற்பனைக்கு பதில் சொல்ல நான் தயாராயில்லை.

**திரு. என், சங்கரய்யா:** அமைச்சர் அவர்கள் உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள், அந்தப் பட்டியலை இந்தச் சபையில் வைக்க ஆட்சேபணை இல்லை என்று. அதை அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 57/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று. சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது,

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 57/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்."



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(உ) நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு தமிழ்நாடு 1981.**

**மாண்புமிகு திரு. எஸ். டி: சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 58/1981) ஆய்வுக்கு ** எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

(முற்பகல் 11.50)

**திரு. அ. ரகுமான்கான்:** இந்த மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்பை முறைப்படுத்துதல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்டமுன்வடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஆய்விற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் வரவேற்கத் தகுந்ததாகும்.

நகர்ப்புறங்களிலே சிலரிடம் சொத்துக்கள் குவிந்திருப்பது யதார்த்த உண்மையாகும். காலி நிலங்கள் அதாவது வேகண்ட் லேண்ட் என்று ஆங்கிலத்தில் சொல்லக்கூடிய வகையில் இன்றைக்கு நகர்ப்புறங்களிலே வாழக்கூடிய சில தனி நபர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. குரூப் ஹவுசிங் சிஸ்டம் என்று சொல்லிக்கொண்டு, இன்றைக்கு ஏராளமான காலி நிலங்களை அவர்கள் கையகப்படுத்திக் கொண்டு பல மாடிக் கட்டிடங்களைக் கட்டி, இன்றைக்கு கொள்ளை லாபம் அடித்துக் கொண்டிருப்பதை இந்த சர்க்கார் மறைக்கவும் முடியாது; மறுக்கவும் முடியாது. அதைப்போலவே, பல காலி இடங்களை தனி நபர்கள் கையகப்படுத்திக்கொண்டு, பிளாட்டுகள் போட்டு, விற்பனை செய்து கொள்ளை லாபம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் மறுக்க முடியாது. அது மட்டுமல்ல. இன்றைக்கு இதுபோன்ற காரியங்களிலே தனி நபர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், ஸ்பெகுலேஷன் என்று சொல்லக்கூடிய ஒரு ஊடக வியாபாரம் நடக்கிறது. அதைப்போலவே வர்த்தக சூதாடிகள், காலி நிலங்களை வைத்துக் கொண்டிருக்கக்கூடிய தனி நபர்களை தங்கள் கையில் வைத்துக்கொண்டு, சென்னை போன்ற நகரங்களில் கொள்ளையடிப்பதற்கும், சுரண்டுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதையும் நாம் யாரும் மறுக்க முடியாது. எனவே, இதுபோன்ற நிலைமைகள் இருக்கக் கூடாது

**1981ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

என்பதற்காக, இந்திய அரசியல் சட்டத்தின் டைரக்டிவ் பிரின்சிபிள்ஸ் அடிப்படையில், ஒரு சோஷலிச கண்ணோட்டத்தோடு, நகர்ப்புறங்களிலே உள்ள காலி நிலங்களுக்கு ஒரு உச்ச வரம்பு கொண்டுவர வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, அன்றையதினம் பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கொண்டு வந்ததும், இன்றைக்கு பல்வேறு திருத்தங்களை உள்ளடக்கி இந்த அரசு இந்த சட்டமுன்வடிவைக் கொண்டு வருகிறது. இந்த மசோதா இப்போது ஒரு சாதாரண திருத்தத்திற்காக கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒரு நிர்வாக சிக்கல் அதாவது ஒரு எக்சிகியூடிவ் சிக்கலுக்காக, அந்த திருத்தத்திற்காகத் தான் இந்த சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

நகர்ப்புறங்களிலே இருக்கக்கூடிய காலி நிலங்களை சர்க்கார் உச்சவரம்பிற்குள் உட்படுத்தி கையகப்படுத்துகிறபோது. அதற்கு ஒரு பட்டியலை இந்தச் சட்டம் தயாரித்திருக்கிறது. அதற்கு பட்டியல் ஷெட்யூல் 1 அதாவது இணைப்பு 1 என்ற தலைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எந்தெந்த இடங்களில் எல்லாம் இந்தச் சட்டம் அமுல் நடத்தப்படும்; எந்தெந்த இடங்கள் எல்லாம் நகர்ப்புறச் சொத்துக்களாக உச்சவரம்பிற்குள் கருதப்படும் என்ற விவரங்களை எல்லாம் இந்த இணைப்பு 1-லே சொல்லப்பட்டிருக்கிறது. சென்னை மாநகர், திருநெல்வேலி நகர், மற்றும் கோவை, திருச்சி, சேலம் போன்ற நகரங்கள், டவுன் ஷிப், ஒரு ரெவின்யூ வில்லேஜ் அதைப்போலவே பஞ்சாயத்து என்று சொல்லப்பட்டு, அந்த அடிப்படையில்தான் இந்த நில உச்ச வரம்பு நகர்ப்புறச் சட்டத்தை அமுல்படுத்த இந்தச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு சர்க்கார் நினைத்தால், சரியான காரணம் இருக்குமானால், இன்றைக்கு முனிசிபாலிடியை கார்ப்பரேஷனாக மாற்றலாம்; இன்றைக்கு போலவே டவுன்ஷிப்பை மாற்றலாம்; அதைப் முனிசிபாலிடியாக மாற்றலாம். பஞ்சாயத்தை எல்லைகளும் மாறுபடுகின்றன. அப்போது இவைகளின் போது, அவைகள் எந்தத் தேதியில் மாற்றப்படுகிறது என்றால், அப்படி மாற்றங்கள் ஏற்படுகின்ற உதாரணத்திற்கு முனிசிபாலிடி கார்ப்பரேஷனாக அல்லது பஞ்சாயத்து கார்ப்பரேஷனாக மாற்றப்படுகிறதோ, அப்படி மாற்றப்படும் தேதியிலிருந்து அர்பன் அக்ளோமரேஷனாக அதாவது நகர்ப்புற கூட்டுத் தொகுதியாக, இந்தச் சட்டம் அமுலுக்கு உரியதாக நடைமுறைப்படுத்துவதற்காகத்தான், இந்தச் சட்டச் சிக்கலை சரிசெய்து நிர்வாகத்தை சரியான முறையிலே இயக்குவதற்காகத்தான் இந்த சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் திருத்தத்தை ஆதரிக்கக்கூடிய அதே நேரத்தில், இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது தொடர்பான பல சட்டமுன்வடிவின்மீது தன் கருத்தினைத் தெரிவித்திருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் எனக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீது எந்தவித வேறுபாடும் இல்லை. அவர்கள் ஒரு திறந்த புத்தகம் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால், அதே நேரத்தில் இந்தச்



சட்டம் எந்த நோக்கத்திற்காக கொண்டு வரப்படுகிறதோ, அந்த நோக்கம் நிறைவேற்றப்படுகிறதா என்றால், இல்லை என்பதை நான் பகிரங்கக் குற்றச்சாட்டாகக் கூறுகிறேன்.

நகர்ப்புற நில உச்ச வரம்பு சட்டத்தைக் கொண்டு வருகின்ற நேரத்தில், தனி நபர்களுக்கு எவ்வளவு நிலம் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது என்றால், ஒருவருக்கு 2½ கிரவுண்ட் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி என்று சொல்லும்போது கணவன் 2½ கிரவுண்ட், மனைவி 2½ கிரவுண்ட் வைத்துக் கொள்ளலாம். தனி நபர்களுக்கு இந்த அளவுக்கு கொடுத்திருப்பது எந்த அளவுக்கு நியாயம்? குடும்பத்திற்கு நகர்ப்புறங்களில் 9 கிரவுண்ட்—2,000 சதுர மீட்டர் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். உச்ச வரம்பின் எல்லையைக் குறைக்காமல் இப்படிக் கொடுப்பார்களானால் இந்தச் சட்டத்தின் மூலமாக எவ்வளவு நிலங்களைக் கைப்பற்ற முடியும்? அதுமட்டுமல்ல. இது சோஷலிச சர்க்கார் என்று சொல்லுகிறார்கள். ஆனால் கறுப்புப் பண ஆதிக்கக்காரர்களுக்கு சலுகை கொடுக்கின்ற நிலைதான் இருக்கிறது. யார் யாருக்கு விதிவிலக்கு வழங்கியிருக்கிறார்கள்? சென்னை நகரத்தில், நகர்ப்புறங்களில் விவசாயத்திற்கு என்று நிலங்கள் கிடையாது. ஆனால் செடிகொடிகள் போட்டிருந்தால் அதையும் விவசாயம் என்று கருதி அதற்குக் கூட 9 கிரவுண்ட் வேகன்ட் நிலம் இருக்குமானால் இந்தச் சட்டம் அங்கே பாயாது. சாதாரண கசாப்புக் கடைக்காரன் வாகன்ட் நிலம் தேவை என்றால் ஒன்பது கிரவுண்ட் வைத்துக் கொள்ளலாம். காப்பிக் கொட்டை வறுக்கிறான் என்றால் ஒன்பது கிரவுண்ட் வைத்துக் கொள்ளலாம். நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டம் எப்படி சோஷலிச மணம் கமழ்கிறது என்று பாருங்கள். நகரங்களில் அலுமினியம் தொழிற்சாலை, எவர்சில்வர் தொழிற்சாலை என்று போர்டு இருக்கிறது. உள்ளே தொழிற்சாலை இருக்கிறதா என்றால் இல்லை. அப்படி தொழிற்சாலை என்று சொன்னால் ஒன்பது கிரவுண்ட் காலி இடம் அனுமதிக்கலாம் என்று இருக்கிறது. அங்கே இந்தச் சட்டம் செல்லாது. இப்படி விதி விலக்குகளை வழங்கிய பிறகு நகரப் புறங்களில் நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம் எவ்வளவு நிலங்களைக் கையகப் படுத்த முடியும்? 'ஈக்விடபிள் டிஸ்டிரிபியூஷன்' என்று சொல்லுகிறீர்களே, மக்கள் நன்மைக்காக எவ்வளவு நிலத்தைப் பிரித்துக் கொடுத்திருக்கிறீர்கள்? டாடாவுக்கு எவ்வளவு சொத்து, பிர்லாவுக்கு எவ்வளவு சொத்து, தொழில் நிறுவனங்களுக்கு எவ்வளவு சொத்து என்ற பட்டியல் இருக்கிறது. இந்தச் சட்டம் கொண்டு வந்து இவ்வளவு நாட்கள் ஆகிய பிறகு நீங்கள் எவ்வளவு நிலங்களைக் கையகப்படுத்தியிருக்கிறீர்கள்? பட்டியல் இருக்கிறதா? எவ்வளவு நிலங்களை டிஸ்டிரிபியூட் பண்ணியிருக்கிறீர்கள்? பட்டியல் இருக்கிறதா? எனவே, இது ஒரு காகிதச் சட்டம். காகிதப் பூ மணக்காது. பெயரளவுக்கு இது சட்டமே தவிர, இந்தச் சட்டத்தினால் எந்தப் பயனும் கிடையாது.

ஒருவர் 500 சதுர மீட்டர் வைத்துக் கொள்ளலாம் என்றால் அதற்கு மேலே பத்து சதுர மீட்டர் இருந்தால் இந்தச் சட்டம் என்ன செய்யும்? அப்படிப்பட்ட நிலையில் என்ன செய்ய வேண்டுமென்று சட்டம் சொல்லுகிறது என்றால்—செக்ஷன் 21(பி) படி அதை அப்படியே விட்டு விடவேண்டுமென்று சொல்லுகிறது. அது உச்சவரம்புக்கு வரவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லுகிறது. அந்த அதிகாரத்தை யார் கையில் கொடுத்திருக்கிறார்கள். அதிகாரிகள் கையில் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு மேல் நிலங்கள் மிஞ்சுமா? நிச்சயமாக மிஞ்சாது. இந்தச் சட்டம் இன்றைக்கு உண்மையிலேயே செயல்பட முடியாத நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் ஷரத்துக்களால் பயன் இல்லை. இந்தச் சட்டம் வெறும் காகிதச் சட்டம். வர்க்கச் சூதாடிகள், கொள்ளையடிப்பவர்கள், கறுப்புப் பண முதலாளிகள் ஆகியோரைப் பாதுகாப்பதற்காக இது இருக்கிறது—அமைச்சர் அவர்கள் திறந்த புத்தகமாக இருந்தாலும் கூட—அவர்கள் இருக்கக்கூடிய நிலை காரணமாக, சூழ்நிலையின் கைதியாக இருக்கின்ற நிலை காரணமாக ஒரு தவறான போக்குக்கு சட்ட ரீதியாக சம்மதம் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

[நண்பகல் 12-00]

திரு. என். சங்கரய்யா: துணைத் தலைவர் அவர்களே, இந்த குறிப்பிட்ட சட்ட முன்வடிவு நகரசபைகளாகிறபோது பஞ்சாயத்துக்களாகிறபோது நிலங்களைப் பொறுத்தவரையில் புதிதாக எந்த அடிப்படையில் வரைபறுக்கப்படுகிறதோ அதிலே அந்த நிலங்கள் சேரும் என்ற முறையிலே கொண்டுவரப்படுகிற இந்தச் சட்ட முன்வடிவை நாங்கள் ஆதரிக்கிறோம். ஏற்கெனவே முன்னாலே நடந்த ஒரு விவாதத்திலே நகர்ப்புற நில உச்சவரம்பு பற்றி ஒரு மசோதா கொண்டுவரப்பட்டபோது கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அது ஆய்விலே இருக்கிறது. இந்தச் சட்டங்கள் முழுவதையும் அரசாங்கம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். இன்றைக்கு மக்கள் தொகை வளர்ந்து வருகிறபோது நகர்ப்புறங்களிலே உள்ள சாதாரண மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்ற முறையிலே அதிகமாக உள்ள நிலங்களை எல்லாம் எடுத்து சாதாரண மக்களுக்குப் பகிர்ந்து அளிக்கக்கூடிய முறையிலே செய்யப்பட்ட காரியங்களைப்பற்றி ஏதாவது ஒரு ஆய்வு அரசால் நடத்தப்பட்டு இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். அப்படிப்பட்ட ஆய்வை உடனே நடத்தி அதன் மூலமாக அந்த நிலங்களை எடுத்து சாதாரண மக்களுக்குக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தக் குறிப்பிட்ட சட்டமுன்வடிவை நான் ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.





திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தை வரவேற்று இப்போது பல்வேறு பகுதிகள் பஞ்சாயத்துக்கள், நகரசபைகளின் பகுதிகளின் எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளாக சேர்த்துக்கொள்ளப்படுகின்ற காரணத்தினால் அந்தப் பகுதிகளை எல்லாம் இந்தச் சட்டத்தினுடைய ஷரத்துக்குள் கொண்டுவரவேண்டுமென்ற முறையிலே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இதை வரவேற்றுப் பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ரகுமான்கான் வரவேற்ற அதே நேரத்திலே இந்தச் சட்டத்தின் மூலமாக நீங்கள் எந்தக் காரியத்தைச் சாதிக்க முடியும் என்று கேட்டார்கள். அரசாங்கத்தின் கொள்கை நிலைமைகளைப் பற்றி அவர்கள் சொல்கிறபோது டாடாவினுடைய, பிர்லாவினுடைய நிலங்களை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். மத்திய அரசு அல்லது பீகாரில் இருக்கின்ற அரசு அல்லது வங்காளத்திலே இருக்கின்ற அரசுக்கு எல்லாம் இந்த தமிழ்நாடு அரசு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் இருக்கின்ற அரசு அதிகாரம் செலுத்த முடியும் என்று கருதி அப்படிச் சொன்னாரா என்று கேட்கவிரும்புகிறேன். டாடாவினுடைய பிர்லாவினுடைய சொத்துக்களை எடுக்கவேண்டுமென்று........

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லியது டாடா, பிர்லா நிலங்கள் சம்பந்தமாக அல்ல, அவர்களிடமுள்ள சொத்துக்கள் என்ன என்ன என்ற கணக்குகள் அரசாங்கத்திடம் இருக்கிறதா. அதைப்போன்று இந்த நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக எடுக்கப்பட்ட நிலத்தினுடைய அளவு, பிரித்துக் கொடுத்த நிலத்தின் அளவு ஆகியவற்றின் புள்ளிவிவரங்கள் இந்த சர்க்காரிடத்திலே இல்லை, ஆகவே இந்தச் சட்டம் பயனற்றதாகிவிட்டது என்றுதான் சொன்னேன். பீகாருக்கு, மகாராட்டிரத்திற்கு எல்லாம் நான் இதுவரையில் டிக்கட் இல்லாமல் பயணம் செய்தது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: டாடா, பிர்லாவினுடைய நிலங்கள் எடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அதனால் தான் அதைக் குறிப்பிட்டேன். அந்த அதிகாரம் இந்த அரசாங்கத்திற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாய நிலங்கள் நகர்ப்புறங்களிலே இருக்கிறதா என்ற சந்தேகத்தைக் கிளப்பி இருக்கிறார்கள். சென்னையைச் சுற்றியுள்ள கிராமங்களிலே நெல் சாகுபடி, மற்றப் பயிர்கள் சாகுபடி செய்யக்கூடிய நிலங்கள் இருக்கின்றன, அங்கேயெல்லாம் நெல் சாகுபடி செய்யக்கூடாது என்று உறுப்பினர் விரும்புகிறாரா? திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருச்சி போன்ற நகரங்களைச் சுற்றியுள்ள கிராமங்களிலே விவசாயப் பகுதிகள் இருக்கின்றன, அந்தப் பகுதியிலே உள்ள நிலங்களுக்கு

இதிலிருந்து விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, அதை ரத்து செய்யவேண்டுமென்றும் அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் அவர் அறிவிக்கத் தயாராக இருக்கிறாரா? விவசாய நிலங்களுக்கு விதிவிலக்கு அளித்தது இந்த அரசாங்கமல்ல. 1976ஆம் ஆண்டிலேயே அதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சென்னையைச் சுற்றியுள்ள சில இடங்களில் விவசாய நிலங்கள் இருக்கின்றன. விவசாயம் நடைபெறுகிறது அங்கே. தொழிற்சாலைகள் அமைப்பதற்காக என்று சில நிலங்களை அளித்திருக்கிறார்கள் சிலர் என்று சொன்னாலும் அப்படிப்பட்ட குறைகளைப் போக்குவதற்கு முன்வரவேண்டும். இன்றைக்குப் பல அடுக்குமாடிக் கட்டிடங்களைக் கட்டி சிலர் வாழ்கிறார்கள். அதற்கு உரிமையாளர்களாக இருப்பவர்கள் தமிழ் மக்களாக இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். வட மாநிலங்களிலும், வெளி மாநிலங்களிலும் உள்ள பணக்காரர்கள் கறுப்புப் பணத்தைக் கொண்டு அப்படிபட்ட அடுக்குமாடி கட்டிடங்களில் ஃப்ளாட்டுக்களை வாங்கி அவற்றிற்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். அரசாங்கம் இது சம்பந்தமாக ஒரு கணக்கெடுத்துப் பார்த்தால் தமிழ் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், தமிழ் மண்ணைச் சேர்ந்தவர்கள் இப்படிப்பட்ட ஃப்ளாட்டுகளில் பெரும்பான்மையாக இல்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியவரும். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகளைக் கருதி, இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இப்படிப்பட்ட நிலங்களைப் பெறும் வகையில், வெளிமாநிலங்களைச் சேர்ந்த கறுப்புப் பணக்காரர்கள் இவற்றை வாங்குவதற்கு தடை விதிக்கவேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களைக் கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பை அளித்த சபைத் துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி, சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். ஆனால் இந்தச் சட்டமுன்வடிவில் வராததைப்பற்றியும்கூட சிலர் இங்கே பேசியிருக்கிறார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நான் அவைகளுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டே போனால் இன்றைக்கு நீண்ட நேரம் ஆகிவிடும் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்லுகின்ற பொழுது, இதற்கு முன்னாலே வந்த சட்டமுன்வடிவைப் பற்றிப் பேசுகின்றபொழுது, அதிலே இருக்கின்ற அதிகாரத்தை அரசுக்கு இருக்கின்ற அதிகாரத்தை—21 (1) ஏ, பி, சி, என்கிற அதிகாரத்தை இன்றைக்கு அதிகாரிகளிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அது அதிகாரிகளிடத்திலே கொடுக்கப்படவில்லை. இது அவர்களுக்கும் தெரியும். அது அதிகாரிகளிடத்திலே கொடுக்கப்படவில்லை. அரசுதான் இதில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முடியாது என்பது தெரியும். தெரிந்தாலும் அதைச் சொல்ல வெண்டுமென்பதற்காகச் சொல்லியிருக்





கிறார்கள். அவர்களுக்குத் தெரியாமல் சொல்கிறார்கள் என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் இன்றைக்கு அதிலே இருக்கின்ற விதிவிலக்கு, அதிகாரம் எல்லாம் அரசுக்குத்தான் இருக்கிறது: அதிகாரிகளுக்கு இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஒவ்வொரு இடத்திலே அதெல்லாம்கூட இப்பொழுது வந்த சட்டத்திலே இல்லை, பழைய சட்டத்திலே வந்திருக்கிறது, இன்றைக்கு சென்னையை பொறுத்தவரையில் தனி நபருக்கு 500 ஸ்கொயர் மீட்டர்; ஒரு குடும்பத்திற்கு 2,000 ஸ்கொயர் மீட்டர்; ஒரு தொழிற்சாலையாக இருந்தால் 2,000 ஸ்கொயர் மீட்டர். அது இன்றைக்கு கொண்டு வரப்பட்ட சட்டம் இல்லை. 1976-லே கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. வேண்டுமென்றால் அது வருகிற பொழுது ஒரு திருத்தத்தை இங்கே கொடுத்திருக்கலாம். அதைப்போல, மதுரை, கோவை, திருச்சிக்கு 1,500 ஸ்கொயர் மீட்டர், தனிப்பட்ட நபருக்கு; குடும்பத்திற்கு 3,000 ஸ்கொயர் மீட்டர்: தொழிற்சாலையாக இருந்தால் ஒன்லி வேகன்ட் லேண்ட் தொழிற்சாலைகளுக்கான கட்டிடத்தையெல்லாம் அதிக ஏக்கரிலே கட்டியிருப்பார்கள், வேகன்ட் லேன்ட் வைத்துக் கொண்டிருப்பது பற்றித்தான். அதைப்போல திருநெல்வேலியில் 2,000 ஸ்கொயர் மீட்டர். அதைப்போல குடும்பத்திற்கு 4,000 ஸ்கொயர் மீட்டர்; தொழிற்சாலைகளுக்கு 4,000 ஸ்கொயர் மீட்டர்.

ஆனால் இன்றைக்கிருக்கின்ற இந்தச் சட்டத்தில் வராததை பற்றி பேசியதாக நான் தெரிவிக்கிறேன்.

யார் யாருக்கு விதிவிலக்கு என்று கொடுக்கும்போது அதை அப்படியே போட்டுவிட்டு போக முடியாது. விதிவிலக்கு கேட்கிறபொழுது எதற்காக கேட்கிறார்கள் என்று தெரிவிக்க வேண்டும். இங்கே பல தொழிற்சாலைகளுக்கெல்லாம் கேட்கின்றபொழுது விதிவிலக்கு உடனடியாகக் கொடுக்கப்பட்டு விடுவதில்லை. தொழில் வளர வேண்டும்; வேலை வாய்ப்பு உருவாக வேண்டும்; உடனே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதற்காகத் தொழிற்சாலைகள் கேட்கிறபொழுது அவர்கள் வைத்திருக்கிற நிலத்தைக் கேட்கிறபொழுது, விதிவிலக்கு கேட்கிறபொழுது அவர்களுக்கு விவரமாக உத்தரவு போடப்படுகிறது. எப்படி உத்தரவு போடப்படுகிறது என்றால் நீங்கள் என்னென்ன செய்யப் போகிறீர்கள் என்பதை வரைபடம் மூலமாக அரசுக்கு கொடுக்க வேண்டும். அந்த வரைபடத்தை அரசு ஆழ்ந்து ஆலோசித்து அனுமதி வழங்குகின்றபொழுது, அதில் என்னென்ன செய்யப் போகிறீர்கள் என்பதைக் குறிப்பிட வேண்டும். அதற்குப் பிறகு விதிவிலக்கு கொடுக்கும்பொழுது இன்-கன்டிஷனல் கண்டிஷன் போட்டுத் தருகிறோம். நீங்கள் உங்களுடைய வேலைகளைப்பற்றி ப்ரோகிரஸ் ரிப்போர்ட் அனுப்ப வேண்டும்: ஆறு மாதத்திற்கு ஒருமுறை நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைப்பற்றி அனுப்ப வேண்டும்: அப்படி நீங்கள் அனுப்பத் தவறினால் எந்த நேரம்

வேண்டுமானாலும் அரசு உங்களுக்குக் கொடுத்த விதிவிலக்கை ரத்து செய்ய அரசுக்கு அதிகாரமிருக்கிறது என்று விளக்கமாகத் தான் உத்தரவைப் போட்டு கொடுக்கப்படுகிறது.

ஏன் அப்படி போட்டுக் கொடுக்கப்படுகிறது என்றால், நாம் கொடுத்த பிறகு, தொழிற்சாலை கட்டுகிறேன், இருக்கிற தொழிற்சாலையை விரிவுபடுத்துகிறேன் என்று சொல்லி நிலத்தை வாங்கிவிட்ட பிறகு, அதை அவர்கள் சும்மா போட்டு வைத்துக் கொண்டேயிருந்தார்களேயானால் யாருக்கும் பிரயோசனப் படாது. தொழிற்சாலை பெரிதாக வருகிறபொழுது சமுதாயத்திற்கு நன்மை: வேலை வாய்ப்பு உண்டாகும். இவைகளையெல்லாம் கணக்கில் கொண்டுதான் தொழில் வளர வேண்டும், தொழிற்சாலைகள் வளர வேண்டும் என்பதற்காகத்தான் அதுவும் கன்டிஷனல் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை, நீங்கள் அதிலே நடவடிக்கை எடுக்க வேண்டும், நடவடிக்கையைப்பற்றி ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அனுப்பவேண்டும், என்னென்ன நட வடிக்கையை எடுப்பீர்கள் என்பதை முன்கூட்டிச் சொல்ல வேண்டும். இவ்வளவையும் நாங்கள் அதிலே குறிப்பிடுகிறோம் என்பதை நான் உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.10)

அதற்கடுத்து அக்ரிகல்சுரல் லான்ட். அதை எப்படி எடுத்துக் கொள்வது? இப்பொழுது பேரூராட்சி நகராட்சியாகிறது. நகராட்சி மாநகராட்சியாகிறது. இவ்வாறு மாறுகிறபொழுது சென்னையைப் பொறுத்தமட்டில், மாநகராட்சியில் மட்டு மல்லாமல், அதன் பின்னாலே இருக்கிற டவுன்ஷிப், கன்டோன் மென்ட், நகரப் பஞ்சாயத்துக்கள் இவைகளும் உள்ளடங்கு கின்றன. சென்னையை எடுத்துக் கொண்டால், கிராமப் பஞ்சாயத்துக்கள் 16, நகரப் பஞ்சாயத்துக்கள் 18, ரெவினியூ கிராமங்கள் 49 இருக்கின்றன. இந்த ரெவினியூ கிராமங்களை எல்லாம் பார்க்கும்போது, அங்கே வயல்கள் இருக்கத்தான் செய்யும் நெல் விளையத்தான் செய்யும். அதேபோல்தான் மதுரையை எடுத்துக்கொண்டால், டவுன்ஷிப் இருக்கிறது, பஞ்சாயத்து இருக் கிறது, ரெவினியூ கிராமம் இருக்கிறது, கோவையை எடுத்துக் கொண்டால், டவுன்ஷிப் இருக்கிறது, பஞ்சாயத்து இருக்கிறது ரெவினியூகிராமம் இருக்கிறது. இப்படி எல்லாம் இருக்கிறபொழுது அங்கே ரெவினியூ வில்லேஜ் என்றாலும், பஞ்சாயத்து என்றாலும் அங்கே விளை நிலங்கள் வருகின்றன. ஆனால், விளை நிலங் களை உச்சவரம்பில் எடுத்துக் கொண்டால் எப்படி உணவுப் பொருள்களைப் பயிரிட முடியும்? எப்படி மக்களுக்குத்தேவை யானவைகளை அளிக்க முடியும்? உணவுப் பொருள்கள் விளைகிற வரையில், அவை விளை நிலங்களாகக் கருதப்படும். அவர்கள் உணவுப்பொருள்களை உற்பத்தி செய்தால், தரிசாகப் போட்டு விட்டால், எடுத்துக் கொள்ளப்படும். வீட்டு மனையாக பயன்படுத்தக் கூடாது. பயன்படுத்தினால் நகர்ப்புற உச்ச வரம்பின் கீழ் வரும் என்ற சட்டம் இங்கே இருக்கிறது.



என்பதை நான் தெரிவிக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் குமரன்தான் அவர்கள் ஏற்றுக் கொள்வார் என்று கருது கிறேன்.

அவர் பேசும்பொழுது இன்னொன்றைச் சொன்னார்கள். சூழ்நிலையின் காரணமாக கைதியாக இருக்கிறேன் என்று சொன்னார். அவர் தன்னையே நினைத்துக் கொண்டு அப்படி சொன்னாரோ என்னவோ எனக்குத் தெரியாது. எனக்கு அப் படிப்பட்ட சூழ்நிலையும் ஏற்படவில்லை. கைதியாகவும் நான் இருக்கவில்லை. தனக்கு ஏற்பட்டதை மற்றவர்கள் மீது ஏற்றிப் பேசுவது சிலருக்குப் பழக்கம். சிலபேர்கள் சந்தர்ப்பம் வந்தால் மற்றவர்கள் மேல் ஏற்றிப் பேசுவார்கள். உங்களுக்குத் தெரி யும் சில பேருக்கு வருத்தம் அதிகமாக இருக்கும் போது, அழுது விட்டால் வருத்தம் போய்விடும். நண்பர்களிடத்தில் சொல்லி விட்டால் போய்விடும். ஆனால், இங்கே அழக் கூடாது. இது சட்டமன்றம். ஆனால், நண்பர்களிடத்திலே சொல்ல வாய்ப்பு இருக்கிறது. நண்பர்களிடத்தில் என்றால், என்னிடத்திலே சொல்லிவிட்டால் அவருக்குத் துன்பம் போய்விடும் என்ற வகையில், அதற்காவது நான் பயப்பட்டேனே என்பதில் நான் மகிழ்ச்சி அடைவேன் என்று கூறி, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 58/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்ற பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு, முறைப்படுத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவைசட்ட முன்வடிவு எண் 58/1981)'' நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

ஊ. வேளாண்மை வருமானவரி (திருத்த) சட்ட முன்வடிவு [1981 ஆகஸ்ட்
தமிழ்நாடு 1981

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண்மை வருமானவரி (திருத்த) சட்டமுன்வடிவ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 61/1981) கீழ்க்கண்ட 18 சட்டப்பேரவை உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக்குழுவிற்கு அனுப்பப்பெறவேண்டும்:

திரு.மு. அரங்கராசன்
திரு.பி. கந்தசாமி
திரு.சோ. கலிதீர்த்தான்
திரு.இ. கணேசன்
திரு.சி. சபாபதி
திரு.ஏ. சின்னதுரை
திரு.மா. சுப்பிரமணியன்
திரு.ஏ. தங்கராசு
திரு.எம்.கே. ராஜமாணிக்கம்
திரு.ரா.கு. பெருமாள்
திரு.என். சங்கரய்யா
திரு.செ சிவசாமி
திரு.கே. பாரமலை
திரு.வி. கிருஷ்ணமூர்த்தி
திரு.இரே. இராசமாணிக்கம்
திரு.எஸ். ஆண்டித்தேவர்
திரு.ந. சுந்தரராஜ்
திரு.உ. சுப்பிரமணியன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் 129-வது விதியின்கீழ் சட்டமுன்வடிவுக்குத் தொடர்பான பொறுப்புடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் இக் குழுவின் உறுப்பினராவார். பேரவை விதி 131 (1)ன் கீழ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.



1981 ஆகஸ்ட் 25]

எ. கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு 59/1981.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"ஆளுநர் அவர்களால் 3-6-1981 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/1981) இப்பேரவை நிராகரிக்கிறது."

(தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/1961) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் என்று மொழிகிறேன."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ரகுமான்கான் மொழிந்த தீர்மானமும், அமைச்சர் மொழிந்த சட்டமுன்வடிவும் அவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு இந்த மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் தனி அலுவலர்களை, ஸ்பெஷல் ஆபீசர்களை, அவர்களுடைய அலுவல் காலத்தை மேலும் நீட்டிப்பதற்கான முறையிலே இந்தத் திருத்தச் சட்டம் இந்த அரசால் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலம் தனி அலுவலர்களின் பதவிக்காலம் மீண்டும் நீட்டிக்கப்படுகிறது. இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை கொண்டுவந்திருக்கிறார்கள். நானும் இந்த மன்றத்திலே ஏறத்தாழ தொடர்ந்து இரண்டு முறைகள் சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு மேலாக இருந்திருக்கிறேன். ஆனால் தொடர்ந்து இந்த மசோதா இந்த அவையிலே வந்து கொண்டு இருக்கிறது. கூட்டுறவுத் துறையிலே தேர்தல் நடத்தி, மக்களுடைய பிரதிநிதிகள் குழுவினால் நிர்வகிப்பதற்குப் பதிலாக, தனி அதிகாரிகளைப் போட்டு அவர்கள் நிர்வாகம் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையில் அவர்களுடைய பதவிக் காலத்தைத் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறீர்கள் இதற்கு முன்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் அமைச்சராக இருந்து வெளியே சென்றுவிட்ட மாண்புமிகு எட்மண்ட் அவர்கள் அமைச்சராக இருந்தபோது இந்த மசோதாவைக் கொண்டு வந்தார். அவருக்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு கிருஷ்ணசாமி

* 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26-ம் தேதியிடப்பட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

அவர்கள் அன்றைக்கு இந்தத் துறையின் அமைச்சராக இருந்த போது, அவர் மீண்டும் இந்தத் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டிக்கும் மசோதாவைக் கொண்டு வந்தார். அதற்குப் பிறகு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் என்னுடைய மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய அமைச்சர் பொன்னையன் அவர்கள் இப்போது இந்த அவையிலே இதே மசோதாவை, தனி அதிகாரிகளுடைய பதவிக்கால நீட்டிக்கும் மசோதாவை, கொண்டுவந்திருக்கிறார்கள்.

இந்த மூன்று மசோதாக்களும் சட்டமாக ஆக்கப்பட்டதற்குப் பிறகு, கவனமாக நான் அதைப் படித்துப் பார்த்தேன். அதே வாசகம், அதே காரணம். ஆனால் அமைச்சர்கள் மட்டும்தான் மாறி இருக்கிறார்கள். வேறு பாணியிலே சொல்லப்போனால் ஒரே நாடகம், நடிகர்கள் மாறியிருக்கிறார்கள். பாத்திரமும் அதே, வசனமும் அதே, டைரக்‌ஷனும் அதே; இன்றையதினம் இதற்கு ஒரு விடிவே இல்லையா என்று முதலிலே கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். சட்ட இலாகா தயாரித்துக் கொடுத்திருக்கக் கூடிய இந்தச் சட்ட முன்வடிவின் வாசகங்கள் கூட மாற்றப்படவில்லை. அந்த அளவுக்கு இது துருப்பிடித்துப்போய் இருக்கின்றது. மக்கள் ஆட்சியினுடைய மாண்பு மணம் பரப்பும் மல்லிகையாக இது இல்லை என்பதை மக்கள் சார்பாக நான் இங்கே மனவேதனையோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12–20]

அவசர நிலை பிரகடனம் அமலில் இருந்த போது தமிழ் நாட்டிலே பல்வேறு கூட்டுறவு மக்கள் இயக்க ஸ்தாபனங்கள் அடிப்படையான போர்டுகள் கலைக்கப்பட்டன. மக்கள் பிரதி நிதிகள் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள். அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் கூட்டுறவுத் துறையிலே இருந்து கொண்டு பல தவறுகளைச் செய்தார்கள் என்று குற்றம் சுமத்தப் பட்டு, அன்றைக்குத் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள்.

அதற்குப் பிறகு உங்களுடைய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு உருவாகியது. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு உருவானதற்குப் பிறகு நாங்கள் கறைபடியாத கரங்களுக்குச் சொந்தக்காரர்கள்; எங்களைப் பொறுத்த மட்டில், 'We are committed to abolition of corruption'; நாங்கள் லஞ்சத்தை ஒழித்தே திருவோம்; என்ற சபதத்தை மேற்கொண்டு இருக்கிறோம் என்று சொன்னீர்கள். ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு என்ன செய்தீர்கள் என்று கேட்டால், 'அட்வைசரி கமிட்டி' என்று ஒன்று போட்டீர்கள். அந்த அட்வைசரிகமிட்டியில் யார் உறுப்பினர்கள் என்று கேட்டால், பெரும்பாலானவர்கள் உங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள்; ரத்தத்தின் ரத்தங்கள், சதையின் சதைகள் உங்களுடைய கட்சிக்காரர்கள். திடீரென்று அதைக் கலைக்கிர்கள்





பிறகு 'மேனேஜிங் கமிட்டி' என்று ஒன்று போட்டீர்கள். இந்த 'மேனேஜிங் கமிட்டி' என்று சொல்கிற போது, அன்றைக்கு அந்த இலாக்காவை ஏற்று கொண்டிருந்த திரு. கே.ஏ.கிருஷ்ண சாமி அவர்கள் பேசியிருக்கிறார்கள். பதிலட்டிலே அது ஏறியிருக்கிறது. 'In the public interest for the purpose of safeguarding the interest of the Members of the depositors for ensuring proper utilisation of the amount guaranteed by the Government.'

இன்றைக்கு கூட்டுறவு வங்கிகளில் பல டெபாசிட்தாரர்கள் பணம் போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிர்வாகத்திலே பங்கு வேண்டும். அதைப்போலவே அரசு ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான ரூபாய்களை இந்தக் கூட்டுறவுத் துறைக் வங்கிகளுக்கு தருகிறது. அந்தப்பணம் முறையாகப் பயன்படுத்தப் படவேண்டும். தவறாகப் பயன்படுத்தக் கூடாது. ஊழலுக்கு இடம்தரக் கூடாது; என்ற நல்ல எண்ணத்தின் காரணமாக நாங்கள் அன்றைக்கு இந்த மானேஜிங் கமிட்டியை போடுகிறோம் என்று போட்டீர்கள். அதிலே கூட உங்களுடைய உள்நோக்கம் தெளிவாகப்புரிந்தது. அந்த மேனேஜிங் கமிட்டியிலே 9 பேர்களை போடுவோம் என்று சொன்னீர்கள். பரவாயில்லை, 9 பேர்கள் என்று தேர்ந்தெடுத்து இருக்கிறீர்கள், கவனமாக அதிலே நீங்கள் சொல்லியிருப்பது, 'அபீசியல்ஸ்' இருப்பார்கள். 'நான் அபிஷியல்ஸ்' இருப்பார்கள் என்று; அந்த எவ்வளவு பேர்கள் 'நான்-அபிஷியல்ஸ்'; 9பேர்களில் எத்தனை பேர்கள் 'அபிஷியல்ஸ்', நீங்கள் பார்த்து 8 பேரை 'நான்–அபிஷியல்ஸ்' ஆக அதிகாரப் பற்றற்ற நாமினேஷன்ஸ் மூலமாக நீங்கள் போட்டுக் கொள்ளலாம். ஒரு அதிகாரியைப் போட்டுக்கொள்ளலாம். முடிந்தால் அந்த 9 பேரில் 'நான்-அபிஷியல்சிலிருந்து' உங்கள் கட்சிக்காரர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்களே, அதிலிருந்தே கூட ஒருவரைத் தலைவராகப் போட்டுக் கொள்ளலாம்.

இப்படி எல்லாம் ஷரத்துக்கள் அடங்கிய சட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். அதுமட்டுமல்ல. நான் இன்னொன்றைக் கவனப்படுத்த விரும்புகிறேன். இன்றைக்கு உங்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், இந்த மேனேஜிங் கமிட்டியினுடைய உறுப்பினர்களாக ஆக்கியதோடு, அரசாங்கம் அவர்களுக்குச் சம்பளத்தை நிர்ணயம் செய்யும் என்று கூட சொன்னீர்கள். வாசகம் கூட சட்டத்திலே இருந்தது. அன்றைக்கு எங்கள் கட்சியின் சார்பாக பேசிய உறுப்பினர்கள் திரு துரைமுருகன் அவர்கள் எழுந்து 'இது கொள்ளை அடிப்பதற்கு வழிவகுக்காதா இது ஊழலின் ஊற்றுக் கண்ணைத் திறந்து விடாதா என்று கேள்வி எழுப்பிய போது நம்முடைய அமைச்சர் அவர்கள் அன்றைக்கு விளக்கம் கொடுத்தார்கள். 'ரெமுனரேஷன்' எவ்வளவு நிர்ணயிப்பது என்பதைப் பற்றிச் சட்டத்திலே இருந்தாலும் கூட எங்களுடைய கட்சிக்காரர்களை நியமிக்கிறோம் என்ற குற்றச்சாட்டு வரக்கூடாது என்று ஒரு நொண்டிச் சமாதானம் சொல்லிக்கொண்டு, இந்த மேனேஜிங் கமிட்டி

உறுப்பினர்களுக்கு டி. ஏ. தருவோம், அலவன்ஸ் தருவோம் என்று சம்பளத்திற்குப் பதிலாக சம்பளத்திற்கு இணையாக வேறு ஒரு விவரத்தை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

இதெல்லாம் பழைய கதைகள் பழைய சம்பவங்கள். உங்களை நான் கேட்கிறேன் இன்றைக்கு நிர்வாக யந்திரம் ஒழுங்காக நகர்கிறதா? அப்படியானால் மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு அமைப்பை இன்று கூட்டுறவுத் துறையில் ஒரு போர்டை ஏன் உருவாக்கவில்லை? தேர்தலை ஏன் நடத்தவில்லை? இதிலே என்ன கூட? இன்றைக்கு நிர்வாகம் எவ்வளவு ஸ்தம்பித்துப் போய் இருக்கிறது. விவசாயப் பெருமக்கள் கடன்களைப் பெற முடிகிறதா? கிடையாது. ஒரு பக்கத்தில் ஜப்தி நடந்து கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கத்தில் கடன் பாங்குகளில் வாங்காதவர்களிடத்திலே கூட காட்டுமிராண்டித்தனமாக நடப்பார், அதிகார வர்க்கத்தின் சார்பாக நடந்து கொண்டிருக்கிறது.

இன்றைக்கு அதிகாரிகள் வைத்துதான் வரிசை என்ற நிலை இருக்கிறது. இன்றைக்கு அதிகாரிகள் டெலிபோனை தவறாகப் பயன்படுத்தும் நிலை இருக்கிறது. இன்றைக்கு அதிகாரிகள் அரசாங்க காரை பயன்படுத்தலாம் என்று இருக்கிறது. இன்றைக்கு அதிகாரிகள் தன்னுடைய தேவைகளை ஒட்டி டி. ஏ. போட்டுக்கொள்ளலாம் என்றநிலை இருக்கிறது. அங்கே வேலை பார்க்கக் கூடியவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. அவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் இமயத்தின் உச்சியிலே இருப்பது போல கருதி தூக்கி எறியப்படுகின்ற நிலைமை இருக்கிறது. இந்த குறைகள் எல்லாம் அந்த டிபாசிட்டர்களைக் கொண்ட அல்லது மக்கள் குழுவைக் கொண்ட ரெப்பிரசென்டேஷன் இருக்குமானால் தீர்க்கப்படும் வாய்ப்பு இருக்கும்; இந்த குறைகளுக்கு இடம் இருக்காது. ஆனால் இப்போது என்ன நிலைமை? கிராம அதிகாரிகள் கிராமங்களில் இல்லை. அவர்களை எல்லாம் வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். கிராமங்களிலுள்ள புறம்போக்கு மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டிருக்கின்றது. அங்கும் நிர்வாகம் ஸ்தம்பித்துப் போயிருக்கிறது.

பஞ்சாயத்துப் போர்டுக்கு தேர்தல் உண்டா? பஞ்சாயத்து யூனியனுக்கு தேர்தல் உண்டா? மக்கள் பிரதிநிதிகள் உண்டா? நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் விரைவில் தேர்தல் வரும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அடுத்த நாளிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஆதி திராவிடர் மக்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டியிருக்கிறது; ஆகையால் காலம் கடந்தாலும் கடக்கலாம் என்ற குறிப்பு வருகிறது. ஆக, பஞ்சாயத்துத் தேர்தல் இல்லை. தேர்தல் இருந்தால் இந்த மாமன்றத்திலே அறிவியுங்கள். பஞ்சாயத்து தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்டது. தேர்தலிலே யார் வேண்டுமானாலும் தோற்கலாம் ஜெயிக்கலாம். அது வேறு பிரச்னை. ஆனால அங்கே மக்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டும். மாநகராட்சிக்குத் தேர்தல் உண்டா இல்லை



இன்னும் சொல்லப் கராட்சித் தேர்தல் உண்டா? இல்லை. போனால் வேளாண் விளைபொருள் அங்காடிக் குழுத் தேர்தல் கூட இல்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, தேர்தலைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு விவகாரத்தைக் குறிப்பிட்டு என் பெயரையும் அதிலே சேர்த்து இழுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எல்லாம் ஒதுக்கீடுகள் செய்ய வேண்டுமென்று அனைத்துக் கட்சிகள் சார்பிலும் கேட்கப்பட்டது. அதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை இங்கே தலைமைச் செயலகத்தில் 10-வது மாடியில் கூட்டினோம். அந்த நேரத்திலே முக்கிய பிரதான எதிர்க் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் அந்தக் கூட்டத்திற்கு ஒருவரும் வரவில்லை. ஆகவே, இன்றைக்கு பொதுமக்கள் நினைக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பிரதிநிதித்துவம் ஒதுக்கீடு செய்யக்கூடாது என்ற கொள்கையிலே தான் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது என்று பொது மக்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடுகள் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தை வைத்துக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு இந்த கருத்தை இந்திரா காங்கிரஸ் கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டிருக்கிறன. ஆகவே தான் இனி அவர்களுக்கு ஒதுக்கீடு செய்து பஞ்சாயத்துத் தேர்தலை நடத்த வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். தேர்தலை நடத்தக் கூடாது என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை.

ஆனால் போடுகின்ற அனைத்துக் கட்சிக் கூட்டங்களில் முக்கிய பிரதான எதிர்க் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் கலந்துகொள்வதில்லை. அத்தகைய கூட்டங்களில் கலந்து கொள்ளாமல் தேர்தல் எப்போது என்ற கேள்வியை மட்டும் அடிக்கடி எழுப்பிக்கொண்டே இருக்கிறார்கள். ஆக, அந்த நிலையில்தான் இருக்கிறார்களே தவிர, பெயர் அளவிலேதான் அவர்கள் இருக்கிறார்களே தவிர வேறு எந்தக் காரியத்திற்காகவும் இன்று அவர்கள் தமிழகத்தில் இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பஞ்சாயத்துப் போர்டுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் தேர்தல் வரவேண்டும்; மாநகராட்சிக்குத் தேர்தல் வரவேண்டும்; முனிசிபாலிட்டிக்கு தேர்தல் வரவேண்டும்; அங்கெல்லாம் மக்கள் பிரதிநிதிகள் இடம்பெற வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. அதை வலியுறுத்தித்தான் நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அரசின்

[திரு. அ. ரகுமான்கான்] [1981 ஆகஸ்ட் 25

சார்பிலே கூட்டப்பட்ட கூட்டத்திலே வராதது குறித்து அமைச்சர்
குறிப்பிட்டார். அமைச்சருடைய கவனத்திற்கு உங்கள்
மூலமாக ஒன்றை கொண்டுவர விரும்புறேன். நாங்கள்
கூட்டத்திற்கு வராதுவாதத்திற்கு அல்லது உண்மை என்றாலும்
இந்த நேர்தல் நடத்துவது பற்றிய விவாதத்தில் ஆதிதிராவிடர்
மக்களுக்கும் அதைப்போல தாழ்த்தப்பட்ட மக்களுக்கும்
பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்து தேர்தலை நடத்து
வதற்காக என்று கூட்டப்பட்ட கூட்டத்திற்கு நாங்கள் வராதது
உங்களுடைய கமிட்டிக்கு எந்த வகையிலே
தடையாக இருக்கிறது என்பது விளங்கவில்லை. ஏனென்றால்
நாங்கள் வந்தாலும் வராவிட்டாலும் நீங்கள் தேர்தலை
தாராளமாக நடத்தலாம். நாங்கள் ஏன் உங்களுடைய கூட்டதிற்கு
வரவில்லை என்றால் அல்லது வரமுடியாத சூழ்நிலை இருக்கிறது
என்றால் நீங்கள் தேர்தலை நடத்துகின்ற நோக்கம் இல்லாமல்,
அப்படி நடத்துவதுபோல மக்களிடத்திலே போக்குக் காட்டு
வதற்காக நடத்துகின்ற நாடகத்திற்கு நாங்களும் துணையாகக்
கூடாது என்பதற்காக நாங்கள் வரவில்லையே தவிர நியாயப்
பூர்வமான முறையிலே தேர்தலை நடத்தி, எல்லா அமைப்பு
களுக்கும் மக்கள் பிரதிநிதிகள் வரவேண்டுமென்ற எண்ணத்தில்
தான் நாங்கள் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

[முற்பகல் 12-30]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** நாடகம் யார்
ஆடுகிறார்கள் என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால்
குறிப்பாக ஒரு கூட்டத்தை வேண்டுமென்றே பகிஷ்கரித்துவிட்டு
வேண்டும் என்ற வெளியில் இருந்துவிட்டு அனைத்துக் கட்சி
களையும் அவமதிக்கின்ற தோரணையில் பொதுமக்களுடைய
கவனத்தை திசை திருப்ப வேண்டும் என்ற எண்ணத்தோடு
இன்று திராவிட முன்னேற்றக் கழகம் போய்க்கொண்டிருக்கிறது.
ஆகவே உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப்
பேசுபவர்களாக இருந்தால் இந்த ஒதுக்கீடு மிகவும் முக்கிய
மானது என்று இதுவரையில் சொல்லாதது ஏன்? அப்படி எல்லாம்
சொல்லாமல் உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டும்,
தேர்தல் நடத்த வேண்டும் என்று சொல்வதும், கூப்பிட்டுப்
பேசுகின்ற நேரத்திலே வராமல் இருப்பதும் ஒரு போக்கு
காட்டுகின்ற வகையிலே நடத்தப்படுகின்ற நாடகம் என்பதைத்
தவிர வேறு ஒன்றும் இல்லை.

**திரு. ஆர். மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு கூட்டுறவுச் சங்க
அலுவலர்களுக்கான நியமனம் பற்றிய சட்ட முன்வடிவா?
அல்லது ஊராட்சி ஒன்றிய தனி அலுவலர்கள் அல்லது நகராட்சி
தனி அலுவலர்கள் பதவி நீட்டிப்பு சட்டமுன்வடிவா? ஆகவே
இதற்கு ஒரு வரையறை கட்டவேண்டும் என்று தங்களிடத்திலே
கேட்டுக்கொள்கிறேன்.



1981 ஆகஸ்ட் 25]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ரகுமான்கான்
அவர்கள் இந்தப் பிரச்சினை பற்றி எழுப்பியதன் காரணத்தாலே
தான் அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டி
வந்தது.

**திரு. துரை முருகன் :** துணைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டத்திற்கு திராவிட
முன்னேற்றக்கழகம் வராதது குறித்துச் சொன்னார்கள்.
நொண்டிக் குதிரைக்கு சறுக்கியது சாக்கு என்று சொல்வது
போன்று நாங்கள் வராத காரணத்தாலயா தேர்தல் தள்ளிப்
போகிறது? நான் ஒன்றைத்தெளிவாக கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன். அவர்கள் அனுப்பிய கூட்ட அழைப்புடன் அந்த
கூட்டத்தில் என்னென்ன பொருள் பற்றி விவாதிக்க போகிறோம்
என்பது பற்றி அதாவது அரிசனங்களுக்கு இட ஒதுக்கீடு பற்றி
விவாதிக்கப்போகிறோம் என்பது பற்றி எல்லாம் அஜண்டாவையும்
சேர்த்து அனுப்பினார்களா? அப்படியே நாங்கள் வரவில்லை
என்றால் அதற்காக ஏன் தேர்தல் நிறுத்தப்படுகின்றது?
உடனடியாக அரிசனங்களுக்கு இவ்வளவு இடங்கள் ஒதுக்கீடு,
பெண்களுக்கு இவ்வளவு ஒதுக்கீடு என்று ஒதுக்கி ஏன் தேர்தலை
அறிவிக்கவில்லை? அடுத்து நாங்கள் இந்த சட்டமன்றத்திலேயே
அரிசனங்களுக்கும், பெண்களுக்கும் இடம் ஒதுக்குவது பற்றிய
எங்களுடைய கருத்தைச் சொல்லி இருக்கிறோம். நானே பேசி
இருக்கிறேன். திருவேங்கடம் அவர்களும் பேசி இருக்கிறார்கள்.
தாய்மார்களுக்கு 50 சதவீதம் இடம் ஒதுக்குவதில் திராவிட
முன்னேற்றக் கழகம் முனைப்பாக இருக்கின்றது என்று சொல்லி
இருக்கிறோம். அரிசனங்களுக்கு ஒதுக்குவதிலும் நாங்கள்
பின்னடையவில்லை. ஆனால் ஏதோ நொண்டிக் குதிரைக்கு
சறுக்கினதுதான் சாக்கு என்று சொல்வதுபோல் பேசுகிறார்கள்.
நான் கேட்கிறேன், அமைச்சரவர்கள் பஞ்சாயத்துத் தேர்தலை
அறிவிப்பதற்கு தயாராக இருக்கிறார்களா? அரிசனங்களுக்கு
40 சதவீதம் ஒதுக்குவதற்கும் தயாராக இருக்கின்றது திராவிட
முன்னேற்றக் கழகம். இதை ஏற்றுக்கொள்கிறாரா அமைச்சர்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்
இங்கே ஒரு புதியக் கருத்தினைச் சொல்லி இருக்கிறார்கள்.
இது உண்மையிலே அவருடைய கட்சியின் கொள்கையா
கருத்தா என்பது எனக்குப் புரியவில்லை. இன்று அவருடைய
கட்சியினுடைய தலைவர்கள் இல்லாத நேரத்தில் அவரையே
தலைவராக ஏற்றுக்கொண்டு இந்த கருத்தை அவர்கள் சொல்லி
இருக்கிறார்களா என்பதும் புரியவில்லை. ஆனால் 40 சதவீதம்
தாழ்த்தப்பட்டவர்களுக்கு, 50 சதவீதம் பெண்களுக்கும் என்று
திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லி இருக்கிறதா என்பதை
தயவு செய்து பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல, கூட்டங்களுக்கு
அழைக்கப்பட்ட நேரத்தில் ஒவ்வொரு கட்சியினருக்கும்
அஜண்டா கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதை அவர்கள் பார்க்க
வில்லை. எனவே நொண்டிக் குதிரை என்று எங்களைப் பார்த்துச்

[திரு. அ. ரகுமான்கான்] [1981 ஆகஸ்ட் 25

சார்பிலே கூட்டப்பட்ட கூட்டத்திலே வராதது குறித்து அமைச்சர் குறிப்பிட்டார். அமைச்சருடைய கவனத்திற்கு உங்கள் மூலமாக ஒன்றை கொண்டுவர விரும்புகிறேன். நாங்கள் கூட்டத்திற்கு வராதது வாதத்திற்கு அல்லது உண்மை என்றாலும் இந்த தேர்தல் நடத்துவது பற்றிய விவாதத்தில் ஆதிதிராவிடர் மக்களுக்கும் அதைப்போல தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்து தேர்தலை நடத்துவதற்காக என்று கூட்டப்பட்ட கூட்டத்திற்கு நாங்கள் வராதது உங்களுடைய கமிட்டிக்கு எந்த வகையிலே தடையாக இருக்கிறது என்பது விளங்கவில்லை. ஏனென்றால் நாங்கள் வந்தாலும் வராவிட்டாலும் நீங்கள் தேர்தலை தாராளமாக நடத்தலாம். நாங்கள் ஏன் உங்களுடைய கூட்டத்திற்கு வரவில்லை என்றால் அல்லது வரமுடியாத சூழ்நிலை இருக்கிறது என்றால் நீங்கள் தேர்தலை நடத்துகின்ற நோக்கம் இல்லாமல், அப்படி நடத்துவதுபோல மக்களிடத்திலே போக்குக் காட்டு வதற்காக நடத்துகின்ற நாடகத்திற்கு நாங்களும் துணையாகக் கூடாது என்பதற்காக நாங்கள் வரவில்லையே தவிர நியாயப் பூர்வமான முறையிலே தேர்தலை நடத்தி, எல்லா அமைப்பு களுக்கும் மக்கள் பிரதிநிதிகள் வரவேண்டுமென்ற எண்ணத்தில் தான் நாங்கள் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 12-30]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** நாடகம் யார் ஆடுகிறார்கள் என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் குறிப்பாக ஒரு கூட்டத்தை வேண்டுமென்றே பகிஷ்கரித்துவிட்டு வேண்டும் என்றே வெளியில் இருந்துவிட்டு அனைத்துக் கட்சி களையும் அவமதிக்கின்ற தோரணையில் பொதுமக்களுடைய கவனத்தை திசை திருப்ப வேண்டும் என்ற எண்ணத்தோடு இன்று திராவிட முன்னேற்றக் கழகம் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பேசுபவர்களாக இருந்தால் இந்த ஒதுக்கீடு மிகவும் முக்கிய மானது என்று இதுவரையில் சொல்லாதது ஏன்? அப்படி எல்லாம் சொல்லாமல் உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டும், தேர்தல் நடத்த வேண்டும் என்று சொல்வதும், கூப்பிட்டுப் பேசுகின்ற நேரத்திலே வராமல் இருப்பதும் ஒரு போக்கு காட்டுகின்ற வகையிலே நடத்தப்படுகின்ற நாடகம் என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

**திரு. ஆர். மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு கூட்டுறவுச் சங்க அலுவலர்களுக்கான நியமனம் பற்றிய சட்ட முன்வடிவா? அல்லது ஊராட்சி ஒன்றிய தனி அலுவலர்கள் அல்லது நகராட்சி தனி அலுவலர்கள் பதவி நீட்டிப்பு சட்டமுன்வடிவா? ஆகவே இதற்கு ஒரு வரையறை கட்டவேண்டும் என்று தங்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



1981 ஆகஸ்ட் 25]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ரகுமான்கான் அவர்கள் இந்தப் பிரச்சினை பற்றி எழுப்பியதன் காரணத்தாலே தான் அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டி வந்தது.

**திரு. துரை முருகன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டத்திற்கு திராவிட முன்னேற்றக்கழகம் வராதது குறித்துச் சொன்னார்கள். நொண்டிக் குதிரைக்கு சறுக்கியது சாக்கு என்று சொல்வது போன்று நாங்கள் வராத காரணத்தாலயா தேர்தல் தள்ளிப் போகிறது? நான் ஒன்றைத்தெளிவாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் அனுப்பிய கூட்ட அழைப்புடன் அந்த கூட்டத்தில் என்னென்ன பொருள் பற்றி விவாதிக்க போகிறோம் என்பது பற்றி அதாவது அரிசனங்களுக்கு இட ஒதுக்கீடு பற்றி விவாதிக்கப்போகிறோம் என்பது பற்றி எல்லாம் அஜண்டாவையும் சேர்த்து அனுப்பினார்களா? அப்படியே நாங்கள் வரவில்லை என்றால் அதற்காக ஏன் தேர்தல் நிறுத்தப்படுகின்றது? உடனடியாக அரிசனங்களுக்கு இவ்வளவு இடங்கள் ஒதுக்கீடு, பெண்களுக்கு இவ்வளவு ஒதுக்கீடு என்று ஒதுக்கி ஏன் தேர்தலை அறிவிக்கவில்லை? அடுத்து நாங்கள் இந்த சட்டமன்றத்திலேயே அரிசனங்களுக்கும், பெண்களுக்கும் இடம் ஒதுக்குவது பற்றிய எங்களுடைய கருத்தைச் சொல்லி இருக்கிறோம். நானே பேசி இருக்கிறேன். திருவேங்கடம் அவர்களும் பேசி இருக்கிறார்கள். தாய்மார்களுக்கு 50 சதவீதம் இடம் ஒதுக்குவதில் திராவிட முன்னேற்றக் கழகம் முனைப்பாக இருக்கின்றது என்று சொல்லி இருக்கிறோம். அரிசனங்களுக்கு ஒதுக்குவதிலும் நாங்கள் பின்னடையவில்லை. ஆனால் ஏதோ நொண்டிக் குதிரைக்கு சறுக்கினதுதான் சாக்கு என்று சொல்வதுபோல் பேசுகிறார்கள். நான் கேட்கிறேன், அமைச்சரவர்கள் பஞ்சாயத்துத் தேர்தலை அறிவிப்பதற்கு தயாராக இருக்கிறார்களா? அரிசனங்களுக்கு 40 சதவீதம் ஒதுக்குவதற்கும் தயாராக இருக்கின்றது திராவிட முன்னேற்றக் கழகம். இதை ஏற்றுக்கொள்கிறாரா அமைச்சர்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் இங்கே ஒரு புதியக் கருத்தினைச் சொல்லி இருக்கிறார்கள். இது உண்மையிலே அவருடைய கட்சியின் கொள்கையா கருத்தா என்பது எனக்குப் புரியவில்லை. இன்று அவருடைய கட்சியினுடைய தலைவர்கள் இல்லாத நேரத்தில் அவரையே தலைவராக ஏற்றுக்கொண்டு இந்த கருத்தை அவர்கள் சொல்லி இருக்கிறார்களா என்பதும் புரியவில்லை. ஆனால் 40 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு, 50 சதவீதம் பெண்களுக்கும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லி இருக்கிறதா என்பதை தயவு செய்து பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல, கூட்டங்களுக்கு அழைக்கப்பட்ட நேரத்தில் ஒவ்வொரு கட்சியினருக்கும் அஜண்டா கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதை அவர்கள் பார்க்க வில்லை. எனவே நொண்டிக் குதிரை என்று எங்களைப் பார்த்து

சொல்வதற்கு அவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. ஏற்கெனவே அவர்களை மண்குதிரை என்று மக்கள் புறக்கணித்துவிட்ட பிறகு எங்களைப் பார்த்து நொண்டிக் குதிரை என்று சொல்வதற்கு அவர்களுக்கு எந்தத் தகுதியும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது கூட்டுறவு சம்பந்தமான மசோதா. இதுபற்றி வாதித்துக் கொண்டிருக்கின்றபோது நாடகத்தில் ஆரம்பித்து பின்னர் அதற்கு பதில் உரைக்க வேண்டிய அவசியம் வந்து அதற்கு மாண்புமிகு ரகுமான்கான் அவர்களும் பதிலளித்துவிட்டார்கள். இப்போது பிரச்சினை மண்குதிரை என்ற அளவுக்கு வந்து சேர்ந்திருக்கின்றது. ஆகவே இனிமேல் அந்தப் பிரச்சினை பற்றி வருகின்றபோது எவ்வளவு வேண்டுமானாலும் அவர்கள் பசட்டும். இப்போது கூட்டுறவுத் துறை சம்பந்தப் பட்ட மசோதாவின் மீது அவர்கள் பேசட்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

**திரு. துரைமுருகன் ;** துணைத் தலைவர் அவர்களே. எங்கள் கட்சியினுடைய கருத்து என்ன என்று அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதை நான் சொல்லிவிடுகிறேன். தயவு செய்து அனுமதிக்க வேண்டும். பெண்களுக்கு 50 இடங்கள் ஏன்றும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 45 இடங்கள் என்றும் சொல்வது உங்கள் கருத்தா, அவர்கள் தலைவர்கள் கூட இல்லையே என்று கேட்டார்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் கருத்தா இல்லையா என்று ஒரே வரியில் சொல்லிவிடுவதாகயிருந்தால் அனுமதிக்கிறேன். இல்லையென்றால் உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலேயே அந்தப் பிரச்னை வந்தபோது, நானே பேசி யிருக்கிறேன் 50 இடங்கள் பெண்களுக்கும், 45 இடங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஒதுக்க வேண்டும் என்று. ஆகவே, அதை கொள்கையாக ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இருக் கிறோம். ஆனால் அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல வராத கூட்டமாக வைத்துக்கொண்டு, நொண்டிக்குதிரை என்று (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மேற்கொண்டு இதிலே விவாதம் வேண்டாம். கருத்தைச் சொல்லிவிட்டீர்கள் போதும் உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவர் அவர்களே, இன்னும் கொஞ்சம்தான். அமைச்சர் அவர்கள் எங்களை மண் குதிரை என்கிறார். ஆனால் அமைச்சர் அவர்கள் இவ்வளவு மட்டக் குதிரையாக இருப்பார் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. (கூச்சல் குழப்பம்).





**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பெண்களுக்கு 50 இடங்கள் என்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 45 இடங்கள் என்றும் ஒதுக்குவது திராவிடமுன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்கிறார். அனைத்துக் கட்சித் தலைவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கேட்பது 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்றும், 15 சதவீதம் பெண்களுக்கு என்றும் கேட்கிறார்கள். ஆனால் துரைமுருகன் அவர்கள் சொல்வது 45 இடங்கள், 50 இடங்கள் என்று. இதிலிருந்தே அவர் எந்த அளவிற்கு கொள்கை பிடிப்போடு அங்கேயிருக்கிறார்கள் என்றுதெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதிலே நீங்கள் விளக்கம் அளிக்க வேண்டாம். ரகுமான்கான் அவர்கள் தொடர்ந்து பேசட்டும். உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கம் தான் அனுமதிக்க வேண்டும். 100க்கு 50 என்றால், பெர்சென்டேஜ் என்றுதான் அர்த்தம். அதைக்கூட புரிந்து கொள்ளவில்லையே அமைச்சர் அவர்கள் என்று வருத்தப்படுகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலே உள்ள தனி அதிகாரிகளுடைய பதவிக் காலம் நீட்டித்துக் கொண்டே போவதால் அது பல்வேறு ஊழல்களுக்கு நிர்வாகத் தவறுகளுக்கு, மக்களை உள்ளாக்குகிறது என்பதை சுட்டிக்காட்டுகிறபோதே மாநகராட்சிகளிலும், முனிசிபாலிட்டிகளிலும், பஞ்சாயத்துக்களிலும் தனி அதிகாரிகளே இருப்பதால், இவைபோன்ற இடர் பாடுகள் அங்கேயும் ஏற்படுகின்றன என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகவே அதைச் சொன்னேன். தேர்தல்கள் உடனடியாக நடந்தாக வேண்டும். தேர்தல்களை காலதாமதப்படுத்துவது அவ்வளவு நல்லது அல்ல. தேர்தல்களின் முடிவுகள் அவ்வளவு முக்கியம் அல்ல. தேர்தலில் சிலமுறை வெற்றி பெறலாம். பலமுறை தோல்வி பெறலாம். தோல்வி பெறுபவர்களையெல்லாம் மண்குதிரை என்று சொல்லிவிட முடியாது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்திலே தேர்தலில் தோற்றார். அவர் மண்குதிரை அல்ல. பெருந்தலைவர் காமராஜர் தேர்தலிலே தோல்வியடைந்திருக்கிறார். அவர் மண்குதிரை அல்ல. அதைப்போலவே இந்திரா காந்தி அம்மையாரும் தேர்தலில் தோல்வி அடைந்துள்ளார். அவர் மண் குதிரையா? அப்படிப்பார்த்தால், நாடாளு மன்றத்தேர்தலில் கடந்த ஒரு ஆண்டு காலமாக நீங்களும் தான் தோற்றீர்கள். ...ல் உள்ள வரைக்கும் வான், உள்ள வரைக்கும், இந்த மண்

உள்ள வரைக்கும் யாருமே தொடர்ந்து ஆளும் கட்சியாகவே இருந்துவிட முடியாது. எங்களைப் பொறுத்தவரையில் தேர்தலின் முடிவைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. மக்களுடைய தீர்ப்பு எப்படி இருந்தாலும், 'மக்களுடைய குரலே மகேசன் குரல்' என்று ஏற்றுக் கொள்வோம். ஆனால் மக்கள் தீர்ப்பு வழங்கிவிட்டார்கள். ஆகவே அதை உபயோகப் படுத்திக்கொண்டு, தனி அதிகாரிக நடைய காலத்தை நீட்டித்துக் கொண்டே போவோம், தன்னிறைவுத் திட்டமானாலும், வறட்சி நிவாரணப் பணிகளானாலும், எங்கள் வாய்ப்புக்குத் தகுந்த வகையில், அவர்களை வைத்துக் கொண்டு நடத்திச் செல்வோம் என்று நீங்கள் முடிவு எடுத்துவிட முடியாது. மக்கள் தீர்ப்பு வழங்கியிருந்தாலும, ஏதோ ஒரு 8,10 லட்சம் ஓட்டு வித்தியாசத்தில்தான் நீங்கள் ஆளும் கட்சியாக இருக்கிறீர்கள், நாங்கள் எதிர்கட்சியாக இருக்கிறோம். ஆகவே. மக்கள் உங்களை ஆள அனுப்பியிருக்கிறார்கள் என்று சொல்லி நீங்கள் நிர்வாகம் செய்கிறபோது அதில் தவறு வந்தால், அதை போக்க வேண்டிய அவசியத்திலே எதிர்க்கட்சியிலே நாங்கள் இருந்துக் கொண்டு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

[பிற்பகல் 12.40]

உதாரணத்திற்கு நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு மக்கள் உங்களுக்கு தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள், ஏற்றுக்கொள்கிறேன். அது நிரந்தரமானதல்ல என்பதை ஏற்றுக்கொள்வீர்கள். இன்று தனி அதிகாரிகள் இல்லை. உங்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் இன்றைக்கு கூட்டுறவுத் துறையில் எவ்வளவு புகுந்து விளையாடுகிறார்கள், தெரியுமா ? என்னைப் பார்த்து திரு மணிமாறன் அவர்கள் ஒரு முறை கேட்டார், சவால் விட்டார்கள், அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் கூட சவால் விட்டிருக்கிறார்கள். சவால்கள் தேவையில்லை.

ஆனால் நான் சொல்கிற குற்றச்சாட்டு எனக்கு கிடைத்திருக்கிற தகவலை வைத்துச் சொல்கிறேன். தவறாக இருந்தால் உறுப்பினர்கள் மறுத்தால், திருத்திக் கொள்கிறேன். தவறான தகவலைக் கொடுத்துவிட்டேன் என்று உரிமைப்பிரச்னை கொண்டுவரவேண்டிய அவசியத்தை நான் உங்களுக்குத் தரவில்லை. கூட்டுறவுத் துறையில் எவ்வளவோ பெரிய ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆயிரக்கணக்கான குற்றச்சாட்டுகளை என்னால் சொல்லமுடியும். ஆனால் ஒன்றைச் சொல்கிறேன். இது இங்கே அமர்ந்திருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் இருக்கிறீர்களே, உங்கள் பக்கத்திலிருந்து ஆளும் கட்சி உறுப்பினராக, அதிலும் சட்ட மன்ற உறுப்பினராக இருக்கிற, இன்னும் சொல்லப்போனால் நான் தெளிவாகச் சொல்கிறேன். அவர்களை பொறுத்தவரையில் 'பேஸ் மட்டும்' போடப்பட்ட ஒரு நிலத்தை ரூ. 20,000க்கு வாங்கி சங்கத்தில் அவர்கள் கடன் வாங்கியிருக்கிறார்கள். அந்தக் கடனை ரூ. 30,000 ஒரே தடவை கொடுக்கக்கூடாது. மன்னிக்க வேண்டும். மூன்று தடவையில்தான் தரவேண்டும். அனால் அதிகாரிகளை கவனாக



பயன்படுத்தி அந்தத் தொகையைப் பெற்றிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு என்னிடம் தரப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் பெயரை சொல்ல வேண்டுமென்று சொன்னால் நான் சொல்லத் தயாராயிருக்கிறேன். ஆனால் எழுந்து கேட்க மாட்டார்கள், தெரியும். கூட்டுறவு அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது, வனத்துறை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் நகல்தான் என்னிடத்தில் வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அது எந்தக் கூட்டுறவுச் சங்கம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**திரு அ. ரகுமான்கான் :** சேலம் நகரம், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம். இது முதல் அமைச்சர் அவர்களுக்கும் கொடுக்கப் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தினுடைய பொறுப்பு மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களிடம் இருக்கிறது. அந்தக் குற்றச் சாட்டைக் கொடுப்பார்களேயானால் அது கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும். அங்கெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இல்லை என்று சொன்னார்கள், எந்த ஆதாரத்தில் சொல்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. விளக்கம் உறுப்பினர் களானால் தலைவர் மூலம் பெற்றுத் தரலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** சர்க்காருக்கு, கலக்டீவ் ரெஸ்பான்ஸிபிலிட்டி இருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சர் என்னுடைய துறை இல்லை என்று சொன்னார்கள். ஒட்டுமொத்தமாக.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** என்னுடைய துறை இல்லை என்று சொல்லவில்லை. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சருடைய துறை என்றாலும் அதைக் கொடுங்கள், பதில் தருகிறேன் என்று சொன்னேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** இன்றைக்கு இருக்கக்கூடிய கூட்டுறவு துறை வங்கிகளில் அதிகாரிகள் சம்மதத்தாலே பல தவறுகள் நடைபெறுவதாகத் தெரிகிறது. எனக்கு வந்திருக்கக்கூடிய தகவல் அடிப்படையில், புகார் மனுக்கள் அடிப்படையில் கூட்டுறவு நிலவள வங்கிகளில் அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடனைக் கட்டிய பிறகுகூட ஜப்தி செய்கிறார்கள். இன்றைக்கு மக்கள் பிரதிநிதிகள் இருப்பார்களேயானால், இன்றைக்கு இந்த மன்றத்தில் நாங்கள் கேட்கிறோம். அதுபோல் கூட்டுறவுத் துறையில் மக்கள் பிரதிநிதிகள் இருந்தால்தான், அவர்களால் நிர்வாகம் நிர்வகிக்கப் பட்டால்தான் இது போன்ற தவறுகளை எல்லாம் களையமுடியும்.

இந்தச் சட்ட முன்வடிவில் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீஸன்ஸில் சொல்கிறபோது ஒரு காம்ப்ரஹன்ஸிவ் லெஜிஸ்லேஷனை உருவாக்கப் போகிறோம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. அ. ரகுமான்கான்]



ஏற்கனவே நாராயணசாமி பிள்ளைக்குழு ஒன்று இருந்திருக்கிறது.
வர்கீஸ் கமிட்டி இருந்திருக்கிறது. இன்னும் பல்வேறு குழுக்கள்
எல்லாம் பல அடிப்படையில் சொல்லி இருக்கிறார்கள். காம்ப்ர
ஹென்ஸிவ் லெஜிஸ்லேஷன் என்று சொல்கிறபோது அந்தச்
சட்டத்தைக் கொண்டுவருவதற்காகத்தான் செலக்ட் கமிட்டி
என்று சொல்லக்கூடிய பொறுக்குக் குழுவிற்கு அனுப்பியிருப்ப
தாகச் சொல்கிறீர்கள். நான் கேட்கிறேன். மஹாராஷ்ட்ராவிற்கு
அண்மையில் போய் வந்தீர்கள். ஒருங்கிணைந்த சட்டம் கொண்டு
வருவதற்காக நீங்கள் எடுத்து கொண்ட முயற்சிகள் கால
தாமதப்படுத்துவதற்கு இருக்கிறதே தவிர இன்று எரிந்து கொண்
டிருக்கிற மக்கள்பிரச்னைகளுக்கு நிவாரணம் அளிப்பதாக
இல்லை. மூன்று ஆண்டுகளாக காம்ப்ரஹென்ஸிவ் லெஜிஸ்
லேஷன் கொண்டுவரப்போகிறோம் என்னும் ஏற்கனவே உள்ள
சட்டங்களில் கருப்பு ஷரத்துக்கள் அடங்கிய பிரிவுகள் இருக்
கின்றன என்று சொல்லிக்கொண்டு இன்று மக்கள் பிரதிநிதிசபை
இடம் பெறாத ஒரு சூழ்நிலையை உருவாக்குவது ஜனநாயகத்தை
படுகொலை செய்வதாகும்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

அது மட்டுமல்ல. நான் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு
கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு
ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு இந்த
செலக்ட் கமிட்டி எவ்வளவு காலத்திற்குள் இதை முடிக்கும்
என்பதை வரையறுத்துச் சொல்ல வேண்டும், இதுவரை என்ன
முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் விளக்க
வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்
கொள்கிறேன்.

தேர்தலை விரைவாக நடத்தி, மக்கள் பிரதிநிதிகள் அதிலே
இருந்து செயலாற்றுவதற்கான காரியங்களைச் செய்யவேண்டும்.
எங்களைப் பொறுத்த வரையில் தேர்தல் தீர்ப்பு எதுவாக
இருந்தாலும், அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.
பஞ்சாயத்து தேர்தலாக இருந்தாலும், கார்ப்பரேஷன்
தேர்தலாக இருந்தாலும் அல்லது பிற தேர்தலாக இருந்தாலும்,
அதிலே ஆதித் திராவிட மக்களுக்கும், பெண்களுக்கும் இட
ஒதுக்கீடு கொடுக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய
கொள்கையும் ஆகும். எனவே, கூட்டுறவுத் தேர்தலாக இருந்
தாலும், நகராட்சித் தேர்தலாக இருந்தாலும் அல்லது மற்றத்
தேர்தலாக இருந்தாலும், இந்த அரசு அவைகளை நடத்தி,
அதிலே மக்கள் பிரதிநிதிகள் இருப்பதற்கு அனுமதிக்க வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நான் அமைச்சர் அவர்
களைக் கேட்டுக் கொள்கிறேன் அவர்கள் ஆடுவது நாடகம்
இல்லையென்று சொன்னாலும் அவர்கள்தான் இந்த நாடகத்
தின் தலைவர். இந்தக் கூட்டத் தொடரிலேயே இதனை
அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, என் உரையை முடித்துக்
கொள்கிறேன்.





திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்
களே, தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களில்
தனி அலுவலர்கள் நியமனச் சட்டத்தை மேலும் திருத்துவதற்
கான சட்ட முன்வடிவின்மீது காங்கிரஸ் பேரியக்கத்தின்
சார்பிலே என்னுடைய ஒருசில கருத்துக்களை இந்த மன்றத்தின்
முன்னாலே வைக்க விரும்புகிறேன்.

இந்த சட்ட முன்வடிவிற்கான காரண நோக்க விளக்கக்
குறிப்பிலே அரசு கூட்டுறவு சங்கங்கள் சம்பந்தப்பட்ட சட்டத்தை
நீக்கி, விரிவான திருத்தங்களைக் கொண்ட புதிய சட்டமாக
தமிழ்நாடு 1930 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டமுன்
வடிவைக் கொண்டு வந்தது. அதன்படி மேற்படி அவசரச்
சட்டத்திற்குப் பதிலாக இந்த சட்ட முன்வடிவு கொண்டுவரப்
படுகிறது என்று இந்த விளக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.
கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் முறைப்படி நடைபெற்றி
ருக்குமானால், ஒரு தேர்தல் நடைபெற்று முடிந்து, அதற்கான
பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுடைய பதவிக்
காலம் முடிந்து, இரண்டாவது தேர்தல் நடந்து, அந்தப் பிரதி
நிதிகள் இன்றையதினம் பொறுப்பிலே இருந்து கொண்டிருப்
பார்கள். ஆனால், ஒவ்வொரு முறையும் ஓராண்டு, ஓராண்டு
என்று இப்படியே காலம் போய்க் கொண்டிருப்பதைப் பார்க்
கின்றபோது, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் வருமா,
பஞ்சாயத்துத் தேர்தல் வருமா என்ற ஐயப்பாடு தமிழக மக்கள்
மத்தியில் இருப்பது நியாயமான ஒன்றாகும் என்பதை நாம்
ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தச் சட்ட முன்வடிவு ஆய்வுக் குழுவிலே இருக்கின்ற
காரணத்தினால், ஓராண்டுக் காலம் நீட்டிக்க வேண்டுமென்று
அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இது ஏற்கனவே
விரிவான பரிசீலனை செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தினால்,
3 மாத காலம் எடுத்துக்கொண்டால் போதும். இல்லையென்
றால், 6 மாதம் போதும். இப்படி ஓராண்டு, ஓராண்டு என்று
நீட்டித்துக் கொண்டே போகின்ற காரணத்தினால்தான், மக்கள்
மத்தியிலே ஒரு ஐயப்பாடு எழுந்திருக்கிறது. எனவே, பேரவைத்
தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர்
அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இங்கே பதில்
அளிக்கின்ற நேரத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் எப்போது, எத்தனை மாதங்
களுக்குள் நடக்கும் என்பதை திட்டவட்டமாக தமிழக மக்களுக்கு
இந்தப் பேரவையில் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். இம்மாதிரி நீட்டித்துக் கொண்டே போவது, இன்றைக்கு
கூட்டுறவுத்துறை ஜனநாயகத்தின் அடித்தளமாக இருப்பதை,
ஆணிவேராக இருப்பதை கிள்ளி எறிவதைப்போல் இருக்கிறது
என்று சொல்ல விரும்புகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரை, இது ஒரு கலைக்கின்ற அரசாக இருக்கக்கூடாது. கட்டுகின்ற, அதாவது கன்ஸ்ட்ரக்டிவ் அப்ரோச் செய்கின்ற அரசாக இந்த அரசு இருக்கவேண்டும் என்கின்ற காரணத்தினால்தான், நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். தனி அதிகாரிகளை நியமிக்கின்ற காரணத்தினால், இன்றைய தினம் அவர்கள் அரசாங்கத்தின் பிரதிநிதியாக இல்லாது; ஆளுகின்ற கட்சியின் பிரதிநிதிகளாக பல்வேறு இடங்களில் இயங்குகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பல்வேறு சம்பவங்கள் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்னும், சொல்ல வேண்டுமானால் கைத்தறித் துறையிலே மதுரையிலே அசிஸ்டென்ட் டைரக்டராக இருப்பவர், கைத்தறி சங்கங்களிலே மற்ற கட்சிக்காரர்கள் அங்கம் வகிக்கும் சங்கங்களை கலைத்துவிட்டு, ஆளுகின்ற கட்சி அங்கத்தினர்களை நியமிக்கின்ற பணியிலே மிகவும் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருக்கிறார் என்பது போன்ற பல்வேறு தாக்கீதுகள், குற்றச்சாட்டுகள் எங்களுக்கு வந்திருக்கின்றன.

[பிற்பகல் 12.50]

நான் வேண்டுமானால் விவரங்களை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அதிகாரிகளை நம்பி அரசு இருந்து கொண்டிருக்க முடியாது. பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்று வந்திருப்பவர்கள் அந்தப் பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் அரசாகத் திகழ விரைவில் கூட்டுறவில் தேர்தலை நடத்தவேண்டும். நீட்டிப்புக் கேட்கிற வேண்டுகோள் இதுவே கடைசி வேண்டுகோளாக இருக்கவேண்டும். விரைவில் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லி உரையை நிறைவு செய்கிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் விசேஷ அதிகாரிகளின் பதவிக் காலத்தை மேலும் நீடிக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மேலும் மேலும் இந்தத் தேர்தலை நடத்துவதை நீட்டித்துக் கொண்டே போவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விரும்பவில்லை. ஆனால் இதற்குள்ளே தேர்தல் வந்திருக்கும். ஆனால் இடையிலே ஒரு இழவு நடந்துவிட்டது. முன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்றம் ஐந்தாண்டுக் காலம் என்றிருக்கும்போது அந்தச் சட்டமன்றத்திலே இதைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று கொண்டு வரப்பட்டு தனிப் பரிசீலனைக்காக பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டபோது 'கலைக்கக்கூடாது' என்று சொல்லும் சித்தன் அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் திடீரென்று சட்டசபையைக் கலைத்து விட்டார்கள். அதனால் வந்த இழவு இந்த அளவுக்கு கொண்டு போய்விட்டது. சட்டமன்ற [illegible]





இருந்தால் இதற்குள் அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கும். அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டியது சித்தன் அவர்கள் கட்சியினர்தான் என்று சொல்லுவதைத் தவிர வேறு வழி இல்லை.

மீண்டும் அதைப் பரிசீலித்து உடனடியாகக் கொண்டு வர பொறுக்குக் குழுவில் சீக்கிரமாக வேலைகளை முடித்து ஷரத்துவாரியாகச் செய்ய வேண்டிய ஆய்வுக்காக அவகாசம் கேட்டிருக்கிறார்கள். வேறு வழி இல்லை என்ற முறையில் அவகாசம் கொடுக்கிறோம். ஓராண்டு கேட்கப்பட்டிருந்தாலும் ஓராண்டு காலம் எடுத்துக் கொள்ளாமல் எவ்வளவு சீக்கிரமாக அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி தேர்தலை நடத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தால் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய நிலை இருக்கும். அதிகாரிகள் தவறு செய்தால் ஒரு இன்க்ரிமென்ட் கட்டோடு முடிந்துவிடும். வேறு நடவடிக்கை எடுக்க முடியாது. அதிகாரிகள் மட்டத்தில் பல்வேறு ஊழல்கள் நடைபெறுகின்றன. உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன், குறைந்த விலையில் நோட்டு சப்ளை செய்யவேண்டுமென்று அரசாங்கம் நல்ல எண்ணத்தில் ஒரு குயர் நோட்டு ரூ. 1.35-க்கு விற்பனை செய்யவேண்டுமென்று மானியம் கொடுத்து விநியோகிக்க ஏற்பாடு செய்தது. ஆனால் தென்காசி, செங்கோட்டை வட்டாரத்தில் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பெறுமானம் உள்ள நோட்டுக்கள் எந்த விதமாகவும் விநியோகிக்கப்படாமல் கடத்தப்பட்டிருக்கிறது. அதை கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டு அதிகாரிகள் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி அதிகாரிகள் மத்தியில் ஊழல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மைதா, ரவை, கோதுமை போன்றவை பொதுமக்களுக்காக கூட்டுறவின் மூலம் விநியோகிக்கப்படுகிறது. ஆனால் காலா காலத்தில் அவை கொடுக்கப்படுவதில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட போர்டு உள்ள விக்கிரமசிங்கபுரம் ஸ்டோருக்கு தொழிலாளர்களுக்கு அவை விநியோகிக்கப்பட காலாகாலத்தில் அனுப்பி வைக்கப்படவில்லை. காலாகாலத்தில் போய்ச் சேருவதில்லை. வேண்டுமென்றே காலதாமதம் செய்கிறார்கள். உரத்தை எடுத்துக் கொண்டாலும் ஜூன் மாதத்தில் தண்ணீர் வந்து ஜூன் 20-ல் நாற்று நட்ட உடனே உரம் கிடைப்பதில்லை. காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, மக்களுக்கு நன்மை செய்வதை காலாகாலத்தில் செய்ய முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதுபோன்ற காலதாமதத்தை எல்லாம் தவிர்க்க, கூடிய சீக்கிரம் தேர்தலை நடத்த முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி சித்தன்: தலைவர் அவர்களே, என்னைக் குறிப்பிட்டுப் பேசிய காரணத்தால் நான் பதில் சொல்ல விரும்புகிறேன். அவர் பேசும்போது குறுக்கிடாமல் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

[1981 ஆகஸ்ட் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பட்டி மண்டபம்
அல்ல, சட்டமன்றம். ஒவ்வொருவர் சொல்லுகின்ற கருத்துக்
களுக்கும் மாறி மாறி பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.
அப்படிச் சொல்லுவது பாராளுமன்ற முறைக்கு, மரபுக்கு ஏற்ற
தல்ல.

*திரு. க. பாரமலை. : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு கூட்டுறவு சட்டத் துறை அமைச்சர்
அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற 1980-ஆம் வருடத்திய
கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு அலுவலர்கள் நியமனத் திருத்தச்
சட்டத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். இந்த
மசோதாவிலே உள்ள ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அன்ட்
ரீசன்ஸ் என்ற பகுதியிலே The Bill is likely to be passed into Law
shortly.

என்று கூறியிருக்கிறார்கள், ஒப்புக்காக அந்த வாசகம் அங்கே
சேர்க்கப்பட்டிருக்கிறது என்று யாரும் சொல்லமுடியாது. இந்தச்
சட்டத்தை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டிருக்கின்ற குழுவிலே
நானும் ஒரு உறுப்பினராக இருக்கிறேன். அந்த முறையிலே
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எவ்வளவு விரைவாக இதைச்
கொண்டுவரவேண்டுமென்று பதில்அக்கரையோடு இருக்கிறார்கள்
என்பதை நான் அறிந்திருக்கிறேன். அந்தக் குழுவிலே எல்லாச்
கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் இடம் பெற்றிருக்
கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற சில
சௌகரியங்களைக் கூடப் புறக்கணித்து விட்டு காலையிலும்
மாலையிலும் இரவு 7 மணி வரையில் கூட கூட்டத்தை நடத்தி
இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்தச் சட்டமன்ற
கூட்டத் தொடரிலேயே இந்தச் சட்டத்தைக் கொண்டு வ
வேண்டுமென்று எவ்வளவு ஆவலோடு இருந்தார்கள் என்பதை
நான் அறிவேன். கிளாஸ்—வாரியாக எடுத்துக் கொள்ளப்பட்
டிருக்கிறது என்று இதிலே சொல்லியிருக்கிறார்கள். 18
கிளாஸ்களும் முடிவுபெற்று விட்டன. ஆனாலும் ஒட்
மொத்தமாக ஒரு உணர்வை ஏற்படுத்தக் கூடிய முறையிலே
அபிப்ராயபேதம் இருக்கின்ற சில செக்ஷன்களை விவாதிக்
வேண்டிய நிலைமை இருப்பதால் அதற்காகவும், அதற்கு
பிறகு 10 தினங்கள் அதிகாரிகளுக்கு வேண்டுமென்ற காரண
தினாலும் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கொண்
வரப்பட முடியாமல் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்பதால்
நான் இந்தத் திருத்தத்தை ஆதரிக்கிறேன்.

குறிப்பாக இதிலே பல்வேறு அம்சங்களைக் கருத்திலே
கொண்டு பல்வேறு மாநிலங்களிலே உள்ள சட்டங்களை
யெல்லாம் அலசி ஆராய்ந்து பார்த்து அதிலே இருக்கின்ற நல்
அம்சங்களையெல்லாம் எடுத்து ஒரு நல்ல சட்டமாகக் கொண்
வரவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் அக்கறையோடு இரு
கிறார்கள், இந்தக் கூட்டுறவு இயக்கத்தை அரசியல் பிடியிலிருந்
விடுவிக்க வேண்டுமென்பதிலேயும் அவர்கள் அக்கறையோ
இருக்கிறார்கள். கூட்டுறவிலே நிரந்தரமான ஒரு ஆதிக்கத்தை



1981 ஆகஸ்ட் 25] [திரு. க. பாரமலை]

செலுத்திக் கொண்டு அதிலே ஒரு ஜமீன்தாரி முறையை ஏற்
படுத்திக் கொண்டிருக்கின்ற நிலையை மாற்ற வேண்டுமென்பதிலே
அவர்கள் அக்கறையோடு இருக்கிறார்கள் என்பதை நான்
தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவில் விசேஷ அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டது
1976 ஆம் ஆண்டு என்பதை எல்லோரும் ஞாபகத்திலே வைத்துக்
கொள்ளவேண்டும். பஞ்சாயத்துக்களுக்கு 1970 ஆம் ஆண்டிற்
குப் பிறகு தேர்தல்கள் நடக்கவில்லை என்பதையும் மனத்திலே
வைத்துக் கொள்ளவேண்டும். இந்த இரண்டு காரணங்களையும்
சிந்தித்துப் பார்த்து பஞ்சாயத்து ஆட்சியாக இருந்தாலும்
கூட்டுறவு நிறுவனமாக இருந்தாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட
பிரதிநிதிகள் தான் இருக்க வேண்டுமென்பதிலே கருத்து
வேற்றுமை கிடையாது. இருந்தாலும் இந்தச் சட்டம் விரைவிலே
நிறைவேற்றப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வரு
வார்கள் என்ற நிலைமை இருப்பதால் இதை நான் ஆதரிக்
கிறேன். பட்ஜெட் கூட்டத் தொடர் வரை கூட நீட்டிக்க
வேண்டிய அவசியமில்லை. இடையிலே சட்டமன்றக் கூட்டம்
நடக்குமானால் அதிலேயேகூட இது கொண்டு வரப்படும் என்ற
நம்பிக்கை இருக்கின்ற காரணத்தினால் நான் இதை ஆதரித்து
முடிக்கிறேன், வணக்கம்.

[பிற்பகல் 1-00]

திரு. மு. அப்பாதுரை : அவைத் தலைவர் அவர்களே,
கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்கள் கூட்டுறவு ஸ்தாபனங்
களில் தனி அலுவலர்களை நியமனம் செய்வதை ஒரு ஆண்டுக்
காலத்திற்கு நீடிக்கிற இந்த மசோதாவில் இந்தியக் கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் குறிப்
பிட்டது போல், இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற
இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவர
வேண்டுமென்ற விருப்பம் இருந்தாலும் கூட ஓராண்டுக் காலம்
நீட்டிக்க வேண்டுமென்கிறபோது நான் மெத்த வருத்தத்தோடு
சுட்டிக்காட்ட விரும்புகிறேன், இன்றுள்ள விலைவாசி உயர்வைக்
கட்டுப்படுத்தவேண்டுமென்றால் production and distribution must
be under the cantrol of the Government என்ற அடிப்படையில்

உற்பத்தியும், விநியோகமும் அரசாங்கத்தின் மூலம் செயல்
பட்டால்தான் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியும்.
அதற்கு அடிப்படையாக இருக்கின்ற இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்
களில் இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதி
கள் இல்லாத காரணத்தினால் எவ்வளவு தூரம் அவைகளின்
நிர்வாகம் சீர் கேடடைந்திருக்கிறது என்பதை அரசாங்கமும்
நன்றாக அறியும்.

குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் இருக்கும் நெல்லை சூப்பர் மார்க்கெட்டில் நடக்கும் பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகள் மட்டுமல்ல: சிந்தாமணி சூப்பர் மார்க்கெட், இப்படித் தமிழகம் பூராவும் இருக்கும் பல்வேறு கட்டுக்கோப்போடு காக்கப்பட்டு வந்த கூட்டுறவு ஸ்தாபனங்கள் இன்றைக்கு எவ்வாறு சீரழிக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். அதற்கு இந்தத் தனி அலுவலர்கள்தான் காரணம்.

தமிழகத்தில் விலைவாசியைக் கட்டுப்படுத்த விநியோகத்தையும் உற்பத்தியையும் கவனிக்க வேண்டிய கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இருந்தால்தான் இந்தக் கொடுமைகளைத் தடுத்து நிறுத்த முடியும்.

அதுமட்டுமல்ல, ஓராண்டுக் காலம் என்று குறிப்பிட்டிருப்பதால், அதிகாரத்தில் இப்பொழுது இருக்கின்ற அதிகாரிகளுக்குத் தெம்பு கொடுப்பதைப் போன்று, தொடர்ந்து இன்னும் ஓராண்டுக்காலம் தவறு செய்யலாம் என்ற அளவிற்கு ஊக்குவிப்பதற்கு இடம் கொடுத்து விடாமல் உடனடியாகத் தேர்தலை நடத்தி, இந்த நிர்வாகச் சீர்கேட்டைக் களைய வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

*திரு. பெ. சு. திருவெங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களால், கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை, ஏற்கனவே ஐந்தாண்டுக் காலத்திலேயிருந்து, இன்னும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிக்கின்ற இந்த மசோதாவிற்கு ஏற்கனவே ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட இந்த மசோதாவிற்கு இன்றைக்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். எந்தக் கட்சியாக இருந்தாலும் இது விரும்பக் கூடிய நிகழ்ச்சி அல்ல என்பதை நான் உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவுத்துறை தமிழகத்திலே பல்லாண்டுக் காலமாக சுறுசுறுப்பாக நடந்து வந்திருக்கிறது. நல்லமுறையிலே அந்த இயக்கங்கள் தமிழகத்திலே இதற்கு முன்பு இருந்த பல்வேறு பெரியவர்களால் வளர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றையதினம் ஐந்தாண்டுக் காலமாக மக்களின் பிரதிநிதிகள் இல்லாமல் அந்த ஸ்தாபனங்களெல்லாம் சீரழிந்து கொண்டிருக்கின்றன என்பதை நாம் ஒத்துக்கொண்டாக வேண்டும்.

தேர்தலுக்குப் பிறகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வருகிறார்களா அல்லது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் வருகிறார்களா அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வருகிறார்களா என்பது கூடப் பிரச்னை அல்ல. தேர்தல் வந்து எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மக்களுடைய பிரதிநிதிகளாக வந்தாலும் பல்





வேறு பிரச்னைகள் தீர்க்கப்படக் கூடிய வாய்ப்பு ஏற்படும் நேரமில்லாத காரணத்தால் ஒன்றிரண்டு பிரச்னைகளைப்பற்றி மட்டும் உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன்.

திருவண்ணாமலையில் ஒரு நிலவள வங்கியிருக்கிறது. பல்லாண்டுக்காலமாக அது வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. திடீரென்று ஒருநாள் கட்டிடத்தின் சொந்தக்காரர் வந்து, இந்தக் கட்டிடம் ஒழுகுகிறது, ஓடு திருப்ப வேண்டும் என்று சொல்லி ஆறு மாதங்களுக்கு முன்பு மேலேயிருந்த ஓட்டையும், மரங்களையும் எடுத்துப் போட்டுவிட்டுப் போய் விட்டார்கள். ஆனால் அதன் செயலாளரும், தனி அதிகாரியும் வேறு கட்டிடமும் பார்க்கவில்லை; வேலையும் நடைபெறவில்லை; அலுவலகம் நடைபெறும் வாய்ப்புகூட இல்லை. மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் அதை நல்லமுறையில் இன்றையதினம் செயல்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று திடீரென்று ஒருநாள் நிலவளவங்கியிலே, விவசாயிகளுக்கு அரசாங்கத்தின் சார்பில் கடன் அலாட்மென்ட் வந்திருக்கிறது என்று சூப்பர்வைசர் அறிவிக்கிறார். உடனே ஏழை எளிய விவசாயிகள், கடன் வாங்கத் தகுதி பெற்றவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கிறார்கள், உடனே சப்ரிஜிஸ்தரர் அலுவலகத்திற்குச் சென்று, வில்லங்கம் பற்றியெல்லாம் பார்க்கப்பட்டு, பங்குப் பணமும் வசூலிக்கப்படுகிறது. கடன் பெறுவதற்காகக் கூட்டம் வங்கியின் வாசலில் காத்துக்கொண்டிருக்கிறது. அப்பொழுது ரிஜிஸ்டிரார் அலுவலகத்திலிருந்து உடனடியாக இப்பொழுது கடன் கொடுப்பதற்கில்லை என்ற செய்தி வருகிறது. தனி அதிகாரிகளை எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டால், அரசாங்கத்தில் சொன்னார்கள், அதனால் நாங்கள் வேலையைச் செய்தோம், இப்பொழுது அரசாங்கத்திலேயிருந்து இப்படிச் சொல்லிவிட்டார்கள், நாங்கள் மேலேயிருக்கின்ற அதிகாரிகளைக் கேட்க முடியுமா என்று சொல்லும் நிலைமைதான் அந்த வங்கியில் இருக்கிறது.

கிராமங்களில் விவசாய சங்கங்களில் வண்டி வாங்குவதற்கு கடன், மாடு வாங்குவதற்குக் கடன் என்று இப்படிப் பல்வேறு கடன்களைத் தருவதாக அறிவிக்கிறார்கள். ஆனால் விவசாயிகள் எல்லாவிதமான செலவுகளையும் செய்தபிறகு கடன் தருவது நிறுத்தப்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நான்கைந்தாண்டுக் காலமாக கிராமங்களில் நிலவி வருகின்றன. அதே போன்றுதான் இன்றையதினம் பல்வேறு கூட்டுறவுக் கடைகளில் மக்களுக்கு என்ன தேவை, கிராமங்களிலே என்ன பொருள்கள் விற்கப்படும். கிராம மக்கள் எதை விரும்பி வாங்குவார்கள் என்பதையெல்லாம் கூடப் பார்ப்பதில்லை. இருக்கிற அதிகாரிகள் தேவையான பொருள்களை வாங்க மாட்டார்கள்.

யற்ற பொருள்களை வாங்கி ஏராளமாகக் குவித்து வைப்பார்
கள். எந்தக் கிராமக் கூட்டுறவில் என்று நீங்கள் கேட்டால்,
அ தச் சொல்ல நேரம் இல்லை. இப்படி பல்வேறு கிராமங்
களில் அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன, அங்கெல்
லாம். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருப்பார்களானால்
அப்படிப்பட்ட சூழ்நிலை, வருவதற்கு வாய்ப்பில்லை,
இன்றைய தினம் ஏராளமான மார்க்கெட்டிங் சொசைட்டிகள்
கிராமங்களில் இருக்கிற சங்கங்கள், அதே போன்று தாலுக்கா
களிலே இருக்கின்ற பிரதம நிலவள வங்கிகள், கூட்டுறவு மத்திய
வங்கிகள், அல்லது மாவட்ட அளவிலே இருக்கிற கூட்டுறவு விற்
பனை சங்கங்கள், இவைகள் எல்லாம் இப்படிப்பட்ட அவல
நிலையில்தானிருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்று சொல்
கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு அச்சக சங்கம்
ஒன்று இருக்கிறது. ஒருகாலத்திலே, அது சிறந்த முறையிலே
பணியாற்றியது. தனிப்பட்டவர்கள், வசதி படைத்தவர்கள்,
அந்த அச்சகத்திற்கு சென்று பெரிய, பெரிய ஆர்டர்கள்
கொடுத்தார்கள். அப்பொழுது நல்ல வருவாயிருந்தது. ஆனால்
அங்கே இப்பொழுது தனி அதிகாரிகளைப் போட்டிருக்கிறார்கள்.
இப்பொழுது அங்கு யாரும் ஆர்டர் கொடுப்பதில்லை. காரணம்
அங்கு தொழிலாளர் பிரச்னை இருக்கிறது. தலைவர் இருந்
தால். தொழிலாளர்களைக் கூப்பிட்டு பேச்சு வார்த்தை
நடத்தித் தீர்த்து வைப்பார்கள். தலைவர் யாராக இருந்தாலும்
அவர்கள் தொழிலாளர்களிடம் ஒழுங்காக வேலை வாங்க
முடியும், ஆனால். இன்றையதினம் தனி அதிகாரி தொழி
லாளர்களிடம் வேலையை ஒழுங்காக வாங்க முடியவில்லை.
ஒருகாலத்திலே லாபமாக நடந்த அந்த அச்சகம் இன்றையதினம்
தனி அதிகாரிகள் போடப்பட்டுச் சரிவர நடக்கவில்லை. போடப்
படுகிற அதிகாரிகள் லீவு போட்டுவிட்டு போய்விடுகிறார்கள்.

இதிலே ஏன் தேர்தல் நடத்த முடியவில்லையென்று நாங்
கள் கேட்டு, நீங்கள் கூட்டத்திற்கு வரவில்லையென்று நீங்கள்
சொல்வதிலே நியாயமே இல்லை. இந்தச் சட்ட முன்வடிவிற்கு
பழைய சட்டமன்றத்தில் ஒரு பொறுக்குக் குழு போடப்
பட்டது. நான் கூட அந்தப் பொறுக்குக் குழுவிலே இருந்தேன்,
அக்குழுவுடன் நான் கூடப் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்
றேன். அனுபவம் வாய்ந்த பல்வேறு பெரியவர்கள் பல்வேறு
நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள். அந்தக் குழுக் கூட்டத்
திலே தமிழ்நாட்டிலே இருக்கிற கூட்டுறவுத் துறையிலே இருக்கிற
பெருமக்கள் விரைவாக தேர்தலை நடத்த வேண்டும், மக்களு
டைய பிரதிநிதிகள் வரவேண்டும், என்று சொன்னார்கள். கூட்
டுறவு நல்ல முறையிலே பொதுமக்களுக்குச் சேவை செய்ய
வேண்டுமென்ற எண்ணத்திலேதான் நாங்கள் எல்லாம் கூட
எதிர்பார்த்தோம், இந்தக் கூட்டத் தொடரிலே சட்டம் வர
லாம், தேர்தல் வரலாம் என்று. ஏனென்றால், வராது என்று
நாங்கள் சொல்ல முடியாது. அமைச்சர் சொல்லலாம், அடிக்கடி
தேர்தல் வரும், வரும் என்று சொல்லிவிட்டு, கூட்டுறவுத் தலைவர்
தேர்தலானாலும் சரி, பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலானாலும்
சரி. தேர்தலை நடத்தாமல், அடிக்கடி எதிர்க்கட்சிகளை அழைப்



பது என்று தனிப்பட்ட முறையிலே இப்படிப்பட்ட காரியங்கள்
எல்லாம் நடைபெற வேண்டுமா என்று நான் கேட்கிறேன்
விரைவாகச் சட்டத்தைக் கொண்டு வாருங்கள், தேர்தலை நடத்
துங்கள் என்று கூறி. முடிப்பதற்கு முன்பாக ஒன்றே ஒன்று
சொல்லிக் கொள்கிறேன்.

உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதுப் பற்றி விவாதிக்க,
அழைப்பு அனுப்பிய பொழுது, திராவிட முன்னேற்றக் கழகம் வர
வில்லை என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்
னார்கள். எங்களுக்கு வரக்கூடாது என்ற எண்ணமும் இல்லை
தேர்தல் வரக்கூடாது என்ற எண்ணமும் இல்லை. பெண்களுக்கு
பிரதிநிதித்துவம் தர வேணடுமென்பதிலே எங்களுக்குக் கருத்து
வேறுபாடில்லை. அரிசனங்களுக்கு அங்கம் அளிக்க வேண்டுமென்
பதிலே எங்களுக்கு கருத்து வேறுபாடில்லை. இப்பொழுது
சட்டம் கொண்டு வந்துவிடுங்கள் ஒரேயடியாக. அதை விட்டு
விட்டு, இவ்வாறு பேசிக் கொண்டிருப்பதால், மக்களுக்கு உங்கள்
மீது ஒரு சந்தேகம் வந்து விட்டது. கிராமத்திலே ஒரு
பழமொழி உண்டு. தூங்குகிறவனை எழுப்பலாம். ஆனால்
தூங்குகிறவனைப்போல் நடிப்பவனை எழுப்பமுடியாது என்று.
இன்றையதினம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகம் இப்படிப்பட்ட ஸ்தாபனங்கள், கூட்டுறவு ஒழுங்குமுறை
விற்பனைக் கூடங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நிலவள வங்கி
கள், கூட்டுறவுச் சங்கங்கள், இவற்றிற்கெல்லாம் தேர்தல்
நடத்துமா என்ற சந்தேகம் எல்லா கட்சிகளிலேயும் இருப்பவர்
களுக்கும் வந்து விட்டது. ஏன் உங்கள் கட்சியிலே இருப்பவர்
களுக்குக்கூட. அத்தகைய சந்தேகம் வந்து விட்டது. அதைப்
போக்க நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

நான் கூட இந்த மாமன்றத்திலே பேசுகிற பொழுது, பெண்
அரிசனங்களுக்கெல்லாம் பிரதிநிதித்துவம் கொடுக்கிற சட்டத்
தைக் கொண்டு வந்து விடுங்கள் என்று சொன்னேன், ஆனால்
அன்றையதினம் அமைச்சர் பதில் அளிக்கவில்லை. பிறகு,
வேண்டுமா, வேண்டாமா என்று ஆலோசனை தேவையில்லை.
நீங்கள் எல்லா தேர்தல்களையும் விரைவாக நடத்துங்கள், மக்கள்
யாரை விரும்புகிறார்களோ அவர்களே வரட்டும். தமிழகத்
திலே எற்கனவே இருந்ததைப் போல், கூட்டுறவுத் துறை சீரும்
சிறப்புமாகப் பணியாற்ற வாய்ப்பு தாருங்கள் என்று கூறி,
இப்படிப்பட்ட அதிகாரிகளுக்கு கால நீட்டிப்புக் கொடுப்பதை
நான் ஆதரிக்கவில்லை என்று கூறி விடைபெறுகிறேன்.

[பிற்பகல் 1-10]

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களினுடைய தனி அதிகாரி
களுடைய பதவிக் காலம் நீடிப்பதுப்பற்றி காந்தி-காமராஜ்
தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல
விழைகிறேன். பொதுவாக இந்த தனி அதிகாரிகள் நியமிக்க

பட்டது. காலம் சென்ற மரியாதைக்குரிய மாண்புமிகு
சி.பா.ஆதித்தனார் அவர்கள் கூட்டுறவுத்துறை அமைச்சராக இருந்
தபோது, இந்தத் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். சில
கூட்டுறவு அங்கங்களிலே அந்த அதிகாரிகள் இன்னும் தனி அதி
காரியாக இருக்கின்ற நிலைமை இருக்கின்றது. பொதுமக்களுக்குத்
தேவையான அத்தியாவசியமான பொருள்களை வழங்குகின்ற
சூப்பர் மார்க்கட்டுகளிலே இன்றைக்கு பல ஊழல்கள் நடை
பெறுவதற்குக் காரணம் அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்
கள் இல்லாத காரணத்தில்தான் என்பதனை எனக்கு முன்னாலே
பேசிய நண்பர்கள் அழகாக எடுத்துக் காட்டினார்கள்.

கோவை சிந்தாமணி சூப்பர்மார்க்கட்டிலே சென்ற ஆண்டு
ஒரு வேலை நிறுத்தம் நடைபெற்றபோது——அவர்கள் கூடுத
லாக சம்பளம் வேண்டும் என்று வேலை நிறுத்தம் செய்தபோது
நான் அந்த ரிஜஸ்டிரார் அவர்களைச் சந்தித்துப் பேசியபோது
அவர்கள் சொன்னார்கள். இந்த ஆண்டிலே மட்டும் 25 லட்சம்
நட்டம் ஏற்பட்டிருக்கிறது. எப்படி ஊதிய உயர்வு கொடுக்க
முடியும் என்று சொன்னார்கள். ஆனால் எனக்குக் கிடைத்த
தகவலின்படி 1976க்கு முன்னால் தனி அதிகாரிகள் போடுவதற்கு
முன்னால் இதே கோவை சிந்தாமணி சங்கம் ஆண்டுக்கு 10
லட்சம் 11 லட்சம் என்று லாபக் கணக்கைக் காட்டிக் கொண்டு வந்
திருக்கிறது. தனி அதிகாரிகள் போட்டதற்கு பின்னாலே 10
லட்சம் 11 லட்சம் என்று நஷ்டக் கணக்கைக் காட்டிக் கொண்டி
ருக்கிறது. அதை எல்லாம் தட்டிக் கேட்பதற்கு ஆளில்லாத
காரணத்தால் இத்தகைய நிலைமை இருக்கிறது என்பதற்காக
தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை மேலும் நீட்டிக்க விடாமல்
எவ்வளவு சீக்கிரம் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் வருகிறார்
களோ அவ்வளவுக்கவ்வளவு பொதுமக்களுக்கு நல்லது என்று
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக ஊராட்சி மன்
றத் தேர்தல்கள் தள்ளிவைக்கப்படுவதற்கு கூட, தாழ்த்தப்பட்ட
மக்களுக்கு இத்தனை சதவிகிதம், மகளிர்க்கு இத்தனை சதவிகிதம்
என்று சொல்வதற்காக காரணம் இருக்கின்றது. ஆனால் கூட்
டுறவுச் சங்கத்தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வேண்டிய
காரணங்களை சொல்லத் தேவையில்லை. எனவே எவ்வளவு
சீக்கிரம் தலைவர்களை தேர்ந்தெடுக்க முடியுமோ அவ்வளவு
சீக்கிரம் தேர்ந்தெடுத்து அவர்களிடத்திலே இந்த கூட்டுறவுச்
சங்கங்களை ஒப்படைப்பதுதான் நல்லது என்று கூறி உரையை
நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரைக்
கும் தனி அதிகாரிகளின் நிர்வாகத்தில் தொடர்ந்து இருக்கக்
கூடாது என்பதில் மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணுகின்ற அள
வுக்கு, அதைவிட இன்னும் அதிகமாகவும் இந்த அரசும் எண்ணு
கிறது என்பதனை முதற்கண் நான் கூறிக்கொள்ள விரும்பு
கிறேன். பிரச்சினை என்ன என்பது அவைக்கு நன்றாகத் தெரி
யும். மாண்புமிகு உறுப்பினர் பாண்டியன் அவர்கள் சொன்ன
தைப் போல மறைந்த பெரியவர் ஐயா ஆதித்தனார் அவர்



களால் தனி அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை. 1976லே ஆளு
நர் ஆட்சியின் போதுதான் தனி அதிகாரிகள் நியமிக்கப்
பட்டார்கள். ஆனால் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டது
குறித்து ஒரு எண்ணம் அவையின் மத்தியிலும், மக்கள் மத்தியி
லும் இருக்கிறது. பத்திரிக்கைகள் கூட தெரிந்தோ, தெரியா
மலோ, இத்தகைய எண்ணத்தை மக்கள் மத்தியிலே பரப்பி
வருகின்றன. தமிழகத்திலே இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களைப்
பொறுத்தவரைக்கும் கிட்டதட்ட 40 ஆயிரம் கூட்டுறவுச் சங்கங்
கள் இருக்கின்றன.

ஆனால் தனி அதிகாரிகளை ஆளுநர் ஆட்சியிலே 76-லே
நியமித்தது சுமார் ஒரு 300 அமைப்புகளுக்கு மட்டும் தான்,
பெரும்பான்மையான 99 சதவீதம் கூட்டுறவு அமைப்புகள் தனி
அதிகாரிகளின் கையிலே தற்போது இல்லை என்பதை அவைக்கு
நான் தெளிவாக்க விரும்புகிறேன். அங்கு எல்லாம் 1976க்கு
முன்னாலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு
தொடர்ந்து இன்னமும்கூட அந்தப் பதவியிலே இருந்து அவர்
கள் அந்த நிர்வாகத்தை பலவகையான கூட்டுறவுச் சங்கங்களில்
அந்த மக்கள் குழு 1976-க்கு முன்னாலே தேர்ந்தெடுக்கப்பட்ட
அந்த மக்கள் குழுதான் ஆயுள் காலம் நீட்டிப்புப் பெற்று இது
வரையில் இருந்து வருகின்றன.

1976க்கு முன்னாலே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் குழு
இருக்கிறது. அவர்கள் நீடித்து இருக்க வேண்டுமென்பதற்காக
எல்லாம் பதவியில் ஒரு குறிப்பிட்ட ஆண்டுக்கு மேல் எந்தவொரு
குழு இருந்தாலும், நிர்வாக செம்மைக்கு உகந்ததாக அமையாது
என்ற காரணத்தால் தேர்தல் உடனடியாக வரவேண்டும்.
மாண்புமிகு உறுப்பினர் திரு ரகுமான்கான் அவர்கள் பேசுகின்ற
போது கிட்டத்தட்ட மக்கள் நிர்வாகமே கூட்டுறவு அமைப்பில்
இல்லையென்றும் பொருள்படும்படி பேசினார். அதை விளக்கு
வதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். கிட்டத்தட்ட 40
ஆயிரம் கூட்டுறவு அமைப்புகளில் ஒரு 300 அமைப்புகளில்
மட்டுமே தனி அலுவலர்கள் இருக்கிறார்கள். மக்களின் பிரதி
நிதித்துவம் நேரடியாக இருக்கிற அடிப்படை கூட்டுறவு
அமைப்புகள் சுமார் 40 ஆயிரம் கூட்டுறவு சங்கங்களில் 1976-க்கு
முன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த அமைப்பேதான் இன்னமும்
ஆயுள் நீட்டிப்பை பெற்று இருந்து வருகிறது.

திரு அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கூட்டுறவுத் துறைகளில் இருக்கக்கூடிய பல்வேறு
சங்கங்களில் பிரதிநிதிகள் இருக்கிறார்கள்? குறிப்பிட்ட சில சங்
கங்களில்தான் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், என்று
அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். ஆனால்
அமைச்சர் அவர்களிடமிருந்து, உங்கள் மூலமாக நான் தெரிந்து
கொள்ள விரும்புவது. 'நேச்சர் ஆப் பாங்ஸ்' எந்த வகைப்பட்ட
வங்கிகள் அதிகாரிகளின் நியமனத்தின் கீழ் வருகின்றன? எந்த

வகைப்பட்ட வங்கிகள் அவர்களாகவே நியமித்துக் கொள்ளக் கூடிய வங்கிகளாக இருக்கின்றன என்ற விவரத்தைச் சொன்னால் பயனுள்ளதாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கிற கிட்டத்திட்ட 99 சதவீத பிரைமரி சங்கங்களில் எல்லாம் மக்களின் பொறுப்பிலே தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அடிப்படையிலே இருக்கின்றன. ஆனால் அந்த பிரைமரி சங்கங்களில் பிரைமரி லேண்ட் டெவலப்மெண்ட் பாங்க்கை பொறுத்தவரைக்கும் மட்டும் அது நிர்வாக குழுவிலே இருக்கிறது. அது நீங்கலாக கிட்டதட்ட அனைத்து பிரைமரி சங்கங்களிலே அனைத்துமே நிர்வாகக்குழு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினுடைய பொறுப்பிலே இருக்கிறது.

அது மட்டுமல்லாமல், 'டிஸ்ட்ரிக்ட் அபெக்ஸ்பாடி', 'ஸ்டேட் அபெக்ஸ் பாடி' அவை இரண்டும்தான் 1976-ல் ஆளுநர் ஆட்சியில் கிட்டத்தட்ட 300 அமைப்புகள் கலைக்கப்பட்டன. அதைதான் நான் சுட்டிக்காட்டினேன். கூட்டுறவுத் துறை என்றால் விவசாயிகள் சம்பந்தப்பட்ட துறை மட்டுமல்ல, நெசவாளர்கள் சம்பந்தப்பட்ட துறை, வீட்டு வசதி வாரியம் சம்பந்தப்பட்ட துறை. இது போன்ற பல பிரைமரி கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரைக்கும் சுமார் 40 ஆயிரம் கூட்டுறவுச் சங்கங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் ஆயுள் கால நீட்டிப்பு பெற்று இதுவரை இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது அமைச்சர்கள் மட்டும் மாறினார்கள், ஆனால் என்ன காரணத்திற்காக இந்த தனி அலுவலர்கள் ஆயுள் காலம் நீட்டிக்கப்படுகிறது. காரணம் ஒன்றாகவே இருந்து வருகிறது என்று சொன்னார். தனி அலுவலர்கள் 76-ல போடப்பட்டபோது கூறப்பட்ட ஒரு காரணத்தைதான் முன்னாள் கூட்டுறவு அமைச்சர் திரு. கே. ஏ. கே. அவர்கள் அவையிலே கூறியிருக்கிறார்கள். அப்போது அவரே சொன்ன காரணம் ஏன் தனி அலுவலர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்பதற்கு, அரசினுடைய பணம் பினான்சிங் இன்ஸ்டிடியூட்ஸ் பணம் சீராக மக்கள் நலன் கருதி பயன்படுத்தவேண்டும். அப்படி பயன்படுத்தாத குறை ஏற்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி 'அபெக்ஸ் பாடிகளை, கலைத்தார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு ஒவ்வொரு கட்டத்திலேயும் வரவேண்டும் என்பதிலே இந்த அரசு மிக அக்கறையோடு இருக்கிறது என்பதை மிகத் தெளிவாக பலமுறை நான் கூட சொல்லி இருக்கிறேன்.

கூட்டுறவு அமைப்புகளைப் பொறுத்தவரைக்கும் அரசியலுக்கு ஒரு சிறிதும் இடம் இல்லாமல் ஒருங்கிணைத்து நடைமுறைப் படுத்துவோமானால், அப்போதுதான் வீக்கர் செக்ஷன்ஸ் ஆப் 'தி சொஸைட்டி சமுதாயத்தில் இருக்கிற நலிந்த பிரிவினருக்கு கூட்டுறவு இயக்கத்தினால் நன்மை கிட்டும் என்பதிலே ஆணித்தரமான கொள்கையோடு இந்த அரசு இருக்கிறது. ஆண்டு பலவாக, கூட்டுறவு இயக்கம் துவக்கப்பட்ட காலத்தில் ...



மோட்டார்ஸ், எல்லாம் கற்று வசதி படைத்தவர்களாக இருந்துவிட்ட காரணத்தால் கூட்டுறவு இயக்கத்தினுடைய பலன் வசதி படைத்தவர்களுக்கு படிப்படியாகச் சென்று, சாதாரண ஏழை, எளிய மக்களுக்கு குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அமைப்புகளுடைய பயன் சிறிதும் கிட்டாத நிலை..ய, மாண்புமிகு உறுப்பினர்கள் மறுக்க மாட்டார்கள் என்பதை நான் கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரமலை அவர்கள் சொன்னதைப் போல அரசியலிலிருந்தே கூட்டுறவு இயக்கம் என்று விடுபடுகிறதோ, இந்த நிலை என்று நாம் உருவாக்குகிறோமோ, அன்றுதான் சமுதாயத்தினுடைய கிட்டத்தட்ட 80 சதவீத நலிந்த மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் பலனை பெற முடியும் என்ற நோக்கோடு நாம் இந்த துறையை பொறுத்த வரைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறோம்

[பிற்பகல் 1-20]

மராட்டிய மாநிலத்திற்கும் குஜராத் மாநிலத்திற்கும் சென்று பார்த்தபோது அங்கெல்லாம் பன்னெடுங்காலமாக புரொடியூசர்ஸ் கோவாபரேட்டிவ் மூமென்ட் நல்லமுறையில் வளர்ச்சியடைந்திருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் கூட்டுறவுக் துறையிலே உச்சநிலையிலே இருந்தோம், இப்போது இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் சொன்னார்கள். அப்படி இல்லை கூட்டுறவுத் துறையைப் பொறுத்ததரையில் திரு. அப்பாதுரை அவர்கள் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். Production and distribution should be nnder the control of the Government என்று சொன்னார்கள். கூட்டுறவு இயக்கம் எந்த ஒரு நோக்கத்திற்காக ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கம் ஈடேறியிருக்கிறதா என்று நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களைப் பொறுத்த வரையில், They have paid utmost concentration on the producers Coope ative Societies ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் We h ve paid umost concentration on Consumers movement over a few decades. அதன்காரணமாக தற்போது ஒரு பெரிய சரிவு இந்த கூட்டுறவு இயங்கத்திலே ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் நாம் உற்பத்தியாளர்கள் பிரச்னையில் முக்கியத்துவம் கொடுக்காமல் இருந்ததுதான். அதனால் இன்றைக்கு கூட்டுறவு அமைப்பு நாம் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை.

இங்கே சிந்தாமணி பற்றிச் சொன்னார்கள்; வேறு பல கூட்டுறவு அங்காடிகள் பற்றியும் சொன்னார்கள். கூட்டுறவு நுகர்பொருள் அங்காடிகள் வாங்குகிற பொருட்களை கூட உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக வாங்க தவறிவிட்டன. அவர்கள் வெளியே விற்கின்ற பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்கி, அதிக விலைக்கு விற்கின்ற ஒரு நிலைமைதான்

இருக்கிறது. இந்த நிலையை இனி மாற்றியமைக்க இருக்கிறோம். ஒவ்வொரு நிலையிலும் புரொடியூசர்ஸ் மார்க்கெட்டிங் சொசைட்டி இருக்க வேண்டும்; அது வட்ட அளவிலே இருக்க வேண்டும்; அது மல்டிபர்ப்பஸ் கோவாபரேடிவ் மார்க்கெட்டிங் சொசைட்டியாக இருக்க வேண்டும் என்ற நடைமுறையைக் கொண்டுவர இருக்கிறோம். அந்த வகையிலே சட்டத்திலே ஒரு திருத்தம் கொண்டுவர இருக்கிறோம். அப்படி கொண்டுவர வில்லை என்றால், ஏற்கெனவே இருக்கிற பிரைமரி சொசைட்டிஸ் எல்லா பொருட்களையும் கொள்முதல் செய்கிறார்களா என்றால் இல்லை.

பல மார்க்கெட்டிங் சொசைட்டிஸ் இருக்கின்றன, சில இடங்களில் பருத்தியைக் கொள்முதல் செய்கிறார்கள். சில இடங்களில் மஞ்சளை கொள்முதல் செய்கிறார்கள். ஆனால் அனைத்துப் பொருட்களையும் அந்த பிரைமரி மார்க்கெட்டிங் சொசைட்டி கொள்முதல் செய்தால் உற்பத்தியாளர்கள், விவசாயிகள் இடைத்தரகர்களாக இருக்கின்ற வியாபாரிகளால் சுரண்டப்படுவதை தடுக்க முடியும். வரவிருக்கின்ற சட்டத்திலே அதை மையமாக வைத்து, கொண்டுவர இருக்கிறோம்.

மல்டிபர்ப்பஸ் பிரைமரி மார்க்கெட்டிங் சொசைட்டியைப் பொறுத்தவரை தற்போது அந்தந்த பகுதியில் உற்பத்திச் செய்யக் கூடிய அனைத்துப் பொருட்களையும் வாங்கி ஸ்டோர் பண்ணுவதற்கு கோடவுன் வசதி இல்லை இது தமிழ்நாட்டில் மட்டுமல்ல பாரதம் முழுமையும் இருக்கிறது. 70 சதவீதம் கிராமப் பொருளாதாரம் 'ரூரல் பேஸ்ட், ஃபார்ம் பேஸ்ட்' ஆக இல்லாத காரணத்தால் பன்னெடுங்காலமாக இந்த பொருளாதார சீர் குலைவு கிராமப்புறத்தில் இருந்து வருகிறது. இதைப் போக்க கூட்டுறவுத் துறையிலே புரொடியூசர்ஸ் கோவாபரேடிவ் சொசைட்டிகளால்தான் முடியும் என்று இந்த அரசு நம்புகிறது. அந்த அடிப்படையில் அந்தந்த கிராமத்தில் இருக்கிற பொருட்களை வாங்கி, அங்கே அவர்களே ப்ராசஸ் செய்து, ப்ராசஸ் செய்த பொருட்களை அவர்களே நேரடியாக விற்பனைச் செய்வதாக இருந்தால் உற்பத்தியாளர்களுக்கும் உபயோகிப்பாளர்களுக்கும் இடையே இருக்கின்ற இடைத்தரகர்கள் ஒழிக்கப் படுவார்கள். அதைப்போல கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேட்டிவ் சொசைட்டீஸ் வெளிமார்க்கெட்டுக்குச் சென்று வியாபாரிகளிடம் அதிக விலை கொடுத்து பொருட்களை வாங்குவதும், அதிக விலைக்கு விற்பதும் தடுக்கப்படும். அதன் மூலம் திரு. அப்பாதுரை அவர்கள் சொன்னதைப் போல Public distribution need not necessarily be under the control of the Government. But public distribution should be under the control of the public themselves என்று வந்துவிடும். பிரைமரி மார்க்கெட்டிங் சொசைட்டியில் விவசாயிகளே அங்கத்தினர்களாக இருந்து, அவர்களே கொள்முதல் செய்து அவர்களே ப்ராஸஸ் செய்து, அவர்களே விற்பனை செய்யும் நிலைமை வருகிறபோது, business intermediaries, trade intermediaries who swindles both the consumers and the producers





could be eliminated என்ற தத்துவத்தின் அடிப்படையில் நடைமுறையில் பல திருத்தங்களைக் கொண்டு வருவதற்காக அதை பரிசீலனை செய்யும் செலக்ட் கமிட்டியில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இருக்கிறார்கள். கிளாஸ் பை கிளாஸாக பரிசீலனை செய்து, அதை ஒரு 'காம்பிரிஹென்சிவ் லெஜிஸ்லேஷனாக' கொண்டு வர இருக்கிறோம். கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்குப் பிறகு நாம் கொண்டுவருகிற சட்டமாக அது இருப்பதால் எதிர் காலத்தில் நல்ல பலனளிக்கக் கூடிய சட்டமாக அது இருக்க வேண்டுமென்ற முறையில் கொண்டுவர இருக்கிறோம்.

நலிந்தவர்களுக்கு நன்மை செய்யக்கூடிய ஒன்று, தாழ்த்தப் பட்டவர்களுக்கு நன்மை செய்யக்கூடிய ஒன்று, என்ற அடிப்படையில் இந்த கூட்டுறவு அமைப்பு இருப்பதால், சில திருத்தங்களைக் கொண்டுவர வேண்டியது அவசியம் என்பதால அந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதிலே இந்த காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இதுவரையில் கூட்டுறவு அமைப்பில் பிரதிநிதித்துவம் இல்லாமல் இருந்தது. அந்தச் சட்டத்தின் மூலம் அவர்களுக்கு சொத்து இல்லாமல் இருந்தாலும் நிலம் இல்லாமல் இருந்தாலும் அவர்கள் நிலமற்ற ஏழைகளாக இருந்தாலும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் ''செல்ப் எம்பிளாய்மெண்ட் ஸ்கீமுக்கு'' அவர்கள் பணம் பெற வழிவகை செய்திருக்கிறோம்.

செலக்ட் கமிட்டி கிளாஸ் பை கிளாஸ் என்ற வகையிலே எல்லா பிரிவுகளையும் நன்றாக ஆய்ந்து ஒரு முடிவுக்கு வர இருக்கின்றது. மீண்டும் ஓரிரு மாதங்களில் கூட இருக்கின்றது. அந்த முடிவு வந்ததற்குப் பிறகு அந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தித் தேர்தலை உடனடியாக கொண்டுவருவது பற்றி அரசு அறிவிக்கும். இதிலே அரசியல் இல்லை. ஏற்கெனவே நான் தெளிவாகச் சொன்னதைப் போல் கூட்டுறவுத் துறையிலே ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் எந்தக் கட்சியாக இருந்தாலும் அரசியல் நோக்கோடு ஈடுபடவே கூடாது என்ற உணர்வை நாம் அனைவரும் வகுத்துக் கொள்ள வேண்டும். இதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் நலிந்த பிரிவினரும், விவசாயிகளும், தாழ்த்தப்பட்ட மக்களுமேயாவர். ஆகவே இதிலே அரசியல் இல்லை. கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தேர்தல் வருவதில் தாமதம் ஏற்படுவதற்கு வேறு எந்தக் காரணமும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி விரைவிலே சட்டத்தை நடைமுறைப்படுத்தி தேர்தலை எந்தவிதமான தாமதமும் இல்லாமல் கொண்டுவர வேண்டும் என்று முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—

"தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 59/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1 முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்மிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 59/1981 நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

8. அரசினர் தீர்மானம்

உணவு நிலைமையும் இன்றியமையாப் பொருட்கள் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையில் 24-8-1981 ஆம் தேதியன்று வைக்கப்பெற்ற தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய * வெள்ளை அறிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (26-8-1981) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-28 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

---

* 433ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

—எதுவுமில்லை—

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

14. 1972-73-ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் முன்னறிக்கை மீதான பொதுக் கணக்குக் குழு (1977-78) அளித்த இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைப் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பத்தாவது அறிக்கை (ஏழாவது பேரவை). (தமிழ் மற்றும் ஆங்கிலம்.)

15. தமிழகத்தில் உணவு நிலைமையும் இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை (தமிழ்).

16. உடுக்குறியிடாத வினா—விடைப் பட்டியல் (1 முதல் 60 வரை).

## இணைப்பு I

(38-ம் பக்கத்திலுள்ள குறிப்பைக் காண்க.)

சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்பெறும் உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல்.

(கவனிப்பு —அடிக்கோடிட்ட எண்கள் வினாக்களில் வரப்பெற்ற வரிசைக்கிரமமான எண்களைக் குறிக்கும்.)

உடுக்குறியிடாத வினாக்கள்.

தங்கசாலை பேருந்து நிலையம் அருகே சுரங்கப் பாதை அமைக்கும் திட்டம்.

வினா 1 —திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைத் தங்கசாலை பஸ் நிலையம் அருகில் சுரங்கப் பாதை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

அண்ணா சாலை அரசினர் தோட்டத்திற்குள் உள்ள விளம்பர பலகைகளுக்கு கட்டணம்.

வினா 2—திரு. பாபு. ஜனார்த்தனன் : மாண்புமிகு அற நிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் தோட்டத்திற்குள் அண்ணா சாலையில் இருக்கின்ற விளம்பர பலகைகளுக்குக் கட்டணம் பெறப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் விளம்பரக் கட்டண விகிதம் என்ன?

விடை—

(அ) அண்ணா சாலையிலுள்ள அரசுத் தோட்டத்திற்குள் எந்தவித விளம்பர பலகையும் வைக்கப்படவில்லை. ஆகவே எந்த வித கட்டணமும் வசூலிக்கப்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

3—

பட்டிக்குளம் கண்மாயைக் கணக்கன்பட்டி ரெவின்யூ கிராமத்துடன் இணைத்தல்.

வினா 3—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பழனி வட்டம், ஏரமநாய்க்கன்பட்டி ரெவின்யூ கிரா மத்தைச் சேர்ந்த பட்டிக்குளம் என்ற கண்மாயைக் கணக்கன் பட்டி ரெவின்யூ கிராமத்துடன் (முன்னால் இருந்ததைப் போலவே) இணைத்துத் தரக் கோரி கணக்கன்பட்டி ஊராட்சி மன்ற தீர்மானம் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுத்தப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : "பட்டிக்குளம்" பரம்பரையாக கணக்கன்பட்டி பஞ்சாயத்தைச் சேர்ந்த பொட்டப்பட்டி கிரா மத்துடன் இணைந்திருந்தது. தற்சமயம் இக்கண்மாய் ஏரம நாய்க்கன்பட்டி கிராமத்துடன் சேர்ந்திருக்கிறது. இதை மாற்றி ஏற்கெனவே இருந்தது போல இக்குளத்தைப் பொட்டப்பட்டி கிராமத்துடன் இணைக்கக் கேட்டுக் கொள்வது என்று 9—9—1977 இல் கணக்கன்பட்டி ஊராட்சி மன்றம் ஒரு தீர் மானம் நிறைவேற்றியுள்ளது. ஆனால் மேற்படி தீர்மானம்



பழனி ஊராட்சி ஒன்றிய ஆணையர் அலுவலகத்திலோ அல்லது கோட்ட வளர்ச்சி அலுவலகத்திலோ பெறப்படவில்லை. என்வே, அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திருவில்லிப்புத்தூர் நகராட்சிப் பள்ளியில் பணி புரியும் ஆசிரியர்கள்.

வினா 4—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் சரகம் நகராட்சிப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களைச் சர்வீஸ் சீனியாரிட்டி அடிப்படையில் அலவன்ஸ் பள்ளி, அலவன்ஸ் அல்லாத பள்ளிகளில் நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் மேற்படி செயற்குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மதுரை திருமலை நாயக்கர் மகாலில் ஒலி, ஒளி காட்சி.

வினா 5—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை திருமலை நாயக்கர் மகாலில் ஒலி, ஒளி காட்சி அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—

மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையில் அண்மையில் ஒலி, ஒளி காட்சி அமைக்கப்பட்டு 7—1—1981 முதல் நாள் தோறும் மூன்று காட்சிகள் நடைபெற்று வருகிறது.

அரசு பேருந்துகளில் சிறுவர்களுக்கு அரைக் கட்டணச் சலுகை வழங்கும் திட்டம்.

வினா 6—திரு. ப. நெடுமாறன் : திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு பஸ்களில் சிறுவர்களுக்கு (3 வயதுக்கு மேல் 12 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு) அரைக் கட்டணச் சலுகை வழங் கும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா?

விடை—

போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்துகளில் 3 வயதிற்கு மேல் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு புறநகர்ப் பேருந்துகளில் அரைக் கட்டணச் சலுகையும், நகரப் பேருந்துகளில் மூன்று வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முழுக் கட்டணமும் தமிழ்நாடு மோட்டார் வாகன விதி 226-வது பிரிவு (11)-ன்படி வசூலிக்கப்படுகின்றன.

**மதுரை கோவைக்கு தனித்தனி குடிசை மாற்று வாரியம் பிரிவுகள் அமைத்தல்.**

வினா 7—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை, கோவை மாநகரங்களுக்கென தனித்தனியே குடிசை மாற்று வாரியத்தின் பிரிவுகளைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

விடை—

மதுரை, கோவை, சேலம், திருச்சி மாவட்டத் தலைநகரங்களிலுள்ள குடிசைப் பகுதி மாற்று பணிகளை தற்போதுள்ள நடைமுறைப்படி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமே செய்ய வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, மதுரை, கோவை, மாநகரங்களுக்கு தனித்தனியே குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பிரிவுகளைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**மேற்குத் தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரப்பர் தொழிற்சாலைகள் தொடங்குதல்.**

வினா 8—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி, அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரப்பர் தொழிற்சாலைகள் தொடங்க அரசுக்கு ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் திட்டம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.



**விவசாயத்திற்கான மின் இணைப்புகளுக்கு விதி விலக்கு அளித்தல்.**

வினா 9—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் விவசாயத்திற்கான மின் இணைப்புக் கொடுப்பதில் மின்சார கம்பிகள் செல்லும் வழியில் (on the line) மின் இணைப்புக் கோருபவர்களுக்கு seniority முறையில் இருந்து விதிவிலக்கு அளித்து மின் இணைப்புக் கொடுக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

இத்திட்டம் ஏற்கனவே அமுலில் உள்ளது.

**மாநில பிரதம நிலவள வங்கிகளில் பணி புரியும் ஊழியர்கள் வேலை நிறுத்தம்.**

வினா 10—திரு. கு. ரமணி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலம் முழுவதிலுமுள்ள பிரதம நிலவள வங்கிகளில் பணிபுரியும் சுமார் 2,000 ஊழியர்கள் 15—11—1980 தேதி முதல் வேலை நிறுத்தம் செய்யப்போவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணம் என்ன?

(இ) அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆதார நிலவள வங்கி ஊழியர் ஊதிய உயர்வு, அகவிலைப்படி உயர்வு முதலிய காரணங்களுக்காக வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்தனர்.

(இ) ஆதார நிலவள வங்கிகள் அங்கத்தினர்களுக்கு வழங்கியுள்ள கடன்கள் பெருமளவில் வசூலாகாமல் உள்ளதால் நிதி நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வங்கிகள் தன்னுரிமை பெற்ற வங்கிகளாக இருப்பதால் அவற்றின் நிதி நிலைமை சீரானதும் அவ்வங்கிகளே பணியாளர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து ஆவன செய்யும்.

**பெரு நகரங்களிலுள்ள தெரு விளக்குகளை பராமரிப்பதற்கான தனி அமைப்பு.**

வினா 11—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை போன்ற பெருநகரங்களில் உள்ள தெரு விளக்குகளைப் பராமரிக்கும் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு ஒரு தனி அமைப்பை ஏற்படுத்தும் யோசனை அரசுக்கு உள்ளதா ?

விடை—

இல்லை.

**அஸ்வமா நதியின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.**

வினா 12—திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை—கம்பம் தேசிய நெடுஞ்சாலையில் செட்டிப்பட்டி அருகாமையில் ஓடும் அஸ்வமா நதியில் வரும் வெள்ளப் பெருக்கால் மழை காலத்தில் போக்குவரத்து பாதிக்கப்படுவதை தவிர்க்க அங்கு ஒரு பாலம் கட்டும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆமெனில் எப்போது கட்டப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**ஆற்காடு நகரிலுள்ள நூலகத்தை தகுதி உயர்த்துதல்.**

வினா 13—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு நகரில் உள்ள மூன்றாவது தகுதி (Grade III) நிலையில் உள்ள நூலகத்தை இரண்டாம் தகுதிக்கு உயர்த்தி அதற்குண்டான புதிய கட்டிடத்தை நிறுவும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆமெனில் அக்கட்டிடத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படும்



விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**விஷாரம் பேரூராட்சியில் தோல் பதனிடும் தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கும் திட்டம்.**

வினா 14—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோல் பதனிடும் தொழில் நுட்பக் கல்லூரி மேலும் ஒன்று அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆமெனில் தோல் பதனிடும் தொழில் அதிகமாயுள்ள விஷாரம் பேரூராட்சியில் இக்கல்லூரி நிறுவப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**ஆறகழூர் பெரியேரி சாலை.**

வினா 15—திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆறகழூர்—பெரியேரி சாலைக்கு தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் தார் போட்டு ஆறகழூர் சுற்றும் தென் பகுதி ஊர்களை வி. காட்டுப்பாதையோடு குறுக்காக இணைக்கும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

விடை—

இல்லை.

**பச்சை குமாட்சி நெடுஞ்சாலையை அரசுடைமையாக்குதல்.**

வினா 16—திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கம்பம் தொகுதியிலுள்ள சுமார் 15 கி. மீ. தூரமுள்ள தனியார் பச்சைகுமாட்சி ஹைவேஸ் சாலையை அரசுடைமையாக்க அரசு பரிசீலிக்குமா ?

விடை—

இம்மாதிரியான திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

### திருத்துறைப்பூண்டியில் பெண்கள் மேல்நிலைப்பள்ளி அமைக்கும் திட்டம்.

வினா 17—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் மாணவிகளுக்கு தனியாகப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி அமைத்துக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

(ஆ) ஆமெனில் எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### திருப்பத்தூர் சாலையிலுள்ள 'எலெப்' தொழு நோயாளிகள் மருத்துவமனை.

வினா 18—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரிக்கு அருகில் திருப்பத்தூர் சாலையில் உள்ள வெளிநாட்டினரின் பராமரிப்பில் உள்ள எலெப் (E.L.E.P.) தொழு நோயாளிகள் மருத்துவமனையை அரசு ஏற்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆமெனில், எப்போது ஏற்றுக்கொள்ளப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



### திருமலைராசன் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

வினா எண். 19 திரு. நன்னிலம் அ. கலையரசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நன்னிலம் தாலுக்கா திருமருகல் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த "போலகம்" என்ற ஊருக்கு அருகில் திருமலைராசன் ஆற்றின் குறுக்கே போக்குவரத்திற்கு வசதியாக பாலம் கட்டுவது பற்றி அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆமெனில் எப்போது கட்ட திட்டமிடப்பட்டுள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### தமிழ்நாடு அரசு நூலகங்களுக்கு தேவநேயப் பாவாணர் பெயர் சூட்டும் திட்டம்.

வினா 20 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழக அரசு நூலகங்கள் அனைத்திற்கும் தமிழறிஞர் காலம் சென்ற தேவநேயப் பாவாணர் பெயர் சூட்ட தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆமெனில், இது பற்றி விவரம் யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### அண்ணா வாழ்க்கையினை திரைப் படம் எடுத்தல்.

வினா 21 திரு. இரா. தாமரைக் கனி மற்றும் திரு. சி. கோபால் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அண்ணா வாழ்க்கையை தமிழக அரசு செய்தித்துறையின் கீழ் திரைப்படம் எடுக்கும் உத்தேசம் உண்டா ?

விடை—

தற்சமயம் இல்லை.

விழுப்புரம் நகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம்.

வினா 22 திரு. ரு. பா. பழனியப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) விழுப்புரம் நகரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் தனியாக புதிய பேருந்து நிலையம் ஒன்று அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆமெனில், அது எப்போது நிறைவேற்றி வைக்கப் படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

தமிழ் அறிஞர் தேவநேயப் பாவாணருக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் திட்டம்.

வினா 23 திருவாளர்கள் வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் செ. செம்மலை : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

மறைந்த தமிழ் அறிஞர் தேவநேயப் பாவாணருக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மறைந்த தமிழ் அறிஞர் தேவநேயப் பாவாணருக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

5460

நிலக்கோட்டைத் தொகுதி பேரணையிலிருந்து லட்சுமிபுரம் குடிநீர்த் திட்டம்.

வினா 24 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நிலக்கோட்டைத் தொகுதியில் பேரணையிலிருந்து லட்சுமிபுரம் குடிநீர்த் திட்டம் ஆய்வில் எடுத்துக் கொள்ளப் பட்டதா ?



(ஆ) ஆமென்றால், எப்போது எடுத்துக் கொள்ளப் பட்டது?

(இ) இத்திட்டத்தின்கீழ் எந்தெந்த கிராமங்கள் இணைக் கப்பட்டுள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

கமுதியில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதி மன்றம் அமைக்கும் திட்டம்.

வினா 25—திரு. கே. தனுக்கோடித் தேவர்: மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், நடப்பு நிதியாண்டில் துவக்கப்படுமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சென்னை—தஞ்சை இடையே குளிர் சாதனப் பேருந்து விடும் திட்டம்.

வினா 26—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து தஞ்சைவரை சென்ற தடம் எண். 558 குளிர் சாதன வசதி பொருத்தப்பட்ட பேருந்து தற்போது ஓடவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) மீண்டும் இத்தடத்தில் இவ்வண்டி ஓட்டப்படுமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இதற்கான சாத்தியக்கூறு இல்லை.

### பழனியில் அரசு சார்பில் பஞ்சாமிர்தம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்.

வினா 27—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி நகரில் பஞ்சாமிர்தம் தயாரிப்பதற்கு தொழிற்சாலையொன்று அரசின் சார்பாக அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால், இதன் விவரம் என்ன?

விடை—

(அ) பழனி நகரில் அரசின் சார்பில் பஞ்சாமிர்தம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### அண்ணா வாழ்க்கை வரலாற்றை ஒலி ஒளி காட்சியாக அமைத்தல்.

வினா 28—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா வாழ்க்கை வரலாற்றை ஒலி-ஒளி காட்சி அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

தற்சமயம் இல்லை.

### கடலூர் கிராமத்தில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

வினா 29—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி கடலூர் கிராமத்தில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம் அமைக்கும் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எவ்வளவு தொகையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது?

(இ) பாலம் எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?



விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினாவிற்கு இடமில்லை.

### அரவாக்குறிச்சி அருகிலுள்ள ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

வினா 30—திரு. பி. கந்தசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் அரவாக்குறிச்சி நெடுஞ்சாலையில் அரவாக்குறிச்சி அருகில் உள்ள ஆற்றில் பாலம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### சேலம் அரசு பொது மருத்துவமனையருகில் இரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம்.

வினா 31—திரு. செ. செம்மலை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் நகரில் அரசு பொது மருத்துவமனைக்கு அருகில் உள்ள இரயில் பாதையில் மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

### சேத்தங்குடியில் இரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம்.

வினா 32—திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் சீர்காழி சாலையில் சேத்தங்குடி என்னுமிடத்தில் இரயில் பாதையைக் கடக்க ஒரு மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### வடாற்காடு தென்னாற்காடு தருமபுரி மாவட்டங்களில் டி.வி.யினை நல்ல முறையில் இயக்க வழிவகை செய்தல்.

வினா 33—திரு. பெ. சு. திருவேங்கடம்:- மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

வடாற்காடு, தென்னாற்காடு, தருமபுரி போன்ற மாவட்டங்களில் டி. வி. நல்லமுறையில் தெரியுமா? அதன் சக்தியை அதிகப்படுத்தவேண்டுமென தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதா?

விடை—

இல்லை.

### நரிக்குடி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 'சிமைக்கால்' திட்டம்.

வினா 34—திரு. க. பாரமலை: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரைத் தொகுதியைச் சேர்ந்த நரிக்குடி ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள ஆவாங்குளம் நோத்தியாயிருப்பு பூல்வாய்க்கரை போன்ற 20 கிராமங்கள் பயன்பெறும் "சிமைக்கால்" திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

### தமிழ்நாட்டில் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு தமிழ் படிக்க குறுகிய கால பயிற்சி திட்டம்.

வினா 35—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வாழும் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தமிழ் படிப்பதற்கு குறுகிய கால பயிற்சி கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை.



### கலப்புத் திருமணம் செய்வோருக்கு தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம்.

வினா 36—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலப்புத் திருமணம் செய்வோருக்கு தாலிக்குத் தங்கம் வழங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### உத்தமபாளையம் கம்பம் பஞ்சாயத்துக்களின் தரங்களை மாற்றும் திட்டம்.

வினா 37—திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நான்காம் நிலையிலிருந்து (கிரேடு) முதல் நிலைக்கு மாற்றியுள்ள உத்தமபாளையம், கம்பம் ஆகிய பஞ்சாயத்து யூனியன்களை பழையபடி நான்காம் நிலைக்கு மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

### வள்ளியூர் உட்கோட்ட நீதித்துறை நடுவர் மன்றத்திற்கு அதிகாரம் கூடுதல் அதிகாரம் வழங்கல்.

வினா 38—திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம் வள்ளியூர் உட்கோட்ட நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு சிவில் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை வழங்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

விடை—

இல்லை.

### திருமங்கலம் நகரில் தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கும் திட்டம்.

வினா 39— திரு. இரா. முத்தையா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம திருமங்கலம் நகரில் தொழில் நுட்பக் கல்லூரி (பாலிடெக்னிக்) வேண்டும் எனும் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கிடத் திட்டமிடப் பட்டுள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### தூத்துக்குடி நகராட்சியில் கலையரங்கம் கட்டும் திட்டம்.

வினா 40—திரு. மு. அப்பாத்துரை: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தூத்துக்குடி நகராட்சியில் கலையரங்கம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடியில் கலையரங்கம் கட்டுவது நகராட்சியின் பரிசிலனையில் உள்ளது. அரசுக்கு செயற்குறிப்பு ஏதும் வரவில்லை.

### தே. கல்லுப்பட்டியில் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை கூட்டுறவு சங்கம் அமைக்கும் திட்டம்.

வினா 41—திரு. இரா. மூத்தையா: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் தே. கல்லுப்பட்டியில் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை கூட்டுறவு சங்கம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், அங்கு எப்போது நிறுவப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



### செங்கம் தொகுதியிலுள்ள கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கும் திட்டம்.

வினா 42—திரு. தா. சாமிக்கண்ணு: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் ஆண்டிப்பட்டி, புரசப்பட்டு, மேலக்கம்பாடி, மணிக்கல், புளியாம்பட்டி, இளங்குன்னி முதலிய கிராமங்களில் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் ஆய்விலுள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விபரங்கள் யாவை?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

### பாவனக்கோட்டை-முப்பையூர் இடையே புதிய சாலை.

வினா 43—திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவக்கோட்டை ஒன்றியத்தில் பாவனக்கோட்டை-முப்பையூர் வரைக்கும் போடப்பட்ட புதிய சாலை வேலை முடிக்கப்படாமல் நிறுத்தப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதற்குரிய காரணம் என்ன?

விடை—

(அ) இச்சாலை போடப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்திற்கு மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட தொகை.

வினா 44—திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980-85) மத்திய அரசால் நம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 3,150 கோடியில், மானியமாகவும் கடனாகவும் தொகைகள் வழங்கப்படுகின்றனவா?

(ஆ) ஆமெனில் மானியமாக வழங்கப்படுவது எத்தனை கோடி ரூபாய்?

(இ) கடனாக வழங்கப்படுவது எத்தனை கோடி ரூபாய்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ரூ. 199.44 கோடி மானியமாக வழங்கப்படுகிறது.

(இ) ரூ. 465.36 கோடி கடனாக வழங்கப்படுகிறது.

கும்பகோணம் நகராட்சி நகரசுத்தி தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் திட்டம்.

வினா 45—திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கும்பகோணம் நகராட்சியில் உள்ள நகர சுத்தி தொழிலாளர்களுக்குக் குடியிருப்புக்கள் கட்டிக் கொடுக்க அரசு செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) எப்போது அமுல் நடத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

சுருளிப்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் திட்டம்.

வினா 46—திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கம்பம் தொகுதியிலுள்ள சுருளிப்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை.



எலியட்ஸ் கடற்கரையில் உல்லாசப் பயணிகள் விடுதி அமைக்கும் திட்டம்.

வினா 47—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டு பயணிகளை கவரும் வகையில் ''எலியட்ஸ்'' கடற்கரையில் உல்லாசப் பயணிகள் விடுதி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) எலியட்ஸ் கடற்கரையில் உல்லாசப் பயணிகள் விடுதி அமைக்கும் உத்தேசம் தற்சமயம் அரசுக்கு இல்லை.

மாயூரத்தில் திருவள்ளுவர் விரைவுப் பேருந்து நிலையம் கட்டுதல்.

வினா 48—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) மாயூரத்தில் திருவள்ளுவர் விரைவுப் பேருந்து நிலையம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

சிவகிரியில் பிற்பட்டோர் மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம்.

வினா 49—திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதி சிவகிரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிற்பட்டோர் மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆமெனில், அப்பணி எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) பெரியார் மாவட்டம், செவிரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிற்பட்டோர் நல மாணவர் விடுதிக்குக் கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

ஈரோட்டில் தானே இயங்கும் இயந்திரம் மூலம் பால் வழங்கும் திட்டம்.

வினா 50—திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டில் தானே வழங்கும் பால் இயந்திரத் திட்டத்தின் மூலம் பால் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆமெனில், அத்திட்டம் எப்பொழுது, எத்தனை இடங்களில் ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

துவரங்குறிச்சியில் மத்திய கூட்டுறவு வங்கி கிளை அலுவலகத்திற்கு புதியக் கட்டிடம் கட்டும் திட்டம்.

வினா 51—திரு. எம். ஏ. ராஜகுமார்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் மருங்காபுரி ஒன்றியம் துவரங்குறிச்சியில் மத்திய கூட்டுறவு வங்கி கிளை அலுவலகத்திற்காக கட்டிடம் புதியதாகக் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆமெனில் அப்பணி எப்பொழுது துவங்கப்பெறும்.

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



மணக்குடிகாயலில் இரால்மீன் வளர்க்கும் திட்டம்.

வினா 52—திரு. டி. மணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மணக்குடி காயலில் இரால் மீன் வளர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இத்திட்டம் எப்போது அமுல் படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கால்நடை மருந்தகங்களிலிருந்து கிளை நிலையங்களுக்கு சைக்கிள் மூலம் விந்து எடுத்துச் செல்லுதல்.

வினா 53—திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால் நடை மருந்தகங்களில் சேகரிக்கப்பட்டு கிளை நிலையங்களுக்கு செயற்கை முறையில் பசுக்கள் கருவுறுவதற்காக அனுப்பப்படும் விந்து சைக்கிள் மூலம் அனுப்பப்படுவதால் அவ் விந்து சிதைந்து விடுகிறதா?

(ஆ) இதனால் பசுக்கள் கருவுறும் வாய்ப்பு பெறுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இதனால் பசுக்கள் கருவுறும் வாய்ப்பு பெறுவதில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

பள்ளிப்பட்டு நகரத்தில் பயணிகள் விடுதி கட்டும் திட்டம்.

வினா 54—திரு. பி. எம். நரசிம்மன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் பள்ளிப்பட்டு நகரத்தில் பயணிகள் விடுதி கட்டும் உத்தேசம் அரசுக்குள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்தப் பணி எப்பொழுது துவக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சந்தவாசல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவங்கும் திட்டம்.

வினா 55—திரு. இல. பலராமன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் போளூர் ஒன்றியம் சந்தவாசல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவங்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

கம்மவான்பேட்டை கிராமத்தில் முன்னாள் இராணுவத்தினர் நிதியிலிருந்து திருமணக்கூடம் அமைக்கும் திட்டம்.

வினா 56—திரு. இல. பலராமன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் வேலூர் தாலூகா கம்மவான்பேட்டை கிராமத்தில் முன்னாள் இராணுவத்தினர் நிதியில் இருந்து திருமணக்கூடம் கட்ட அரசுக்கு உத்தேசம் உண்டா?





(ஆ) ஆம் எனில் மதிப்பீடு யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

பேச்சுப்பாறையில் பால்மாடு வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்தும் திட்டம்.

வினா 57—திரு. டி. மணி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் பேச்சுப்பாறையில் அரசின் சார்பில் பால்மாடு வளர்ப்பு பண்ணை ஒன்று ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) இயற்கையாகவே புல்வெளி நிறைந்த பேச்சுப்பாறையில் இத்திட்டம் நிறைவேற்றப்படுமா?

(இ) சீதோஷ்ண நிலை சரியான முறையில் அமைந்துள்ள அந்தப் பகுதியில் பிரிஷியன் இரட்டையன் போன்ற பசுமாடுகள் பண்ணை ஏற்படுத்தப்படுமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இல்லை.

(இ) இல்லை.

மாயா வாரஇதழ் பத்திரிக்கை.

வினா 58—திரு. அ. சாகுல்ஹமீது: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'மாயா' என்ற வார இதழ் பத்திரிகை வெளியீட்டுச் சட்டத்திற்கு எதிராக ''ரிஜிஸ்தரேசன் இல்லாமல் கடந்த பத்து மாதங்களுக்கு மேலாக வெளிவருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) 'மாயா' என்ற வார இதழ் பத்திரிகை வெளியீடு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு வெளியிடப்படுகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மேக்காடு என்னுமிடத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

வினா 59—திரு. டி மணி: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் முஞ்சிறை பஞ்சாயத்து ஒன்றியத்தில் மேக்காடு என்னுமிடத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க இலவசமாக இடம் பெறப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது மருத்துவமனை கட்டப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

மணியாச்சியில் வாஞ்சிநாதன் சிலை அமைக்கும் திட்டம்.

வினா 60—திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு செய்தி, அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மணியாச்சியில் வாஞ்சிநாதன் சிலை வைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது அமைக்கப்படும்?

விடை—

திருநெல்வேலி மாவட்டம், மணியாச்சியில் வாஞ்சிநாதன் சிலை வைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

## இணைப்பு 11

(112 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க

### தமிழகத்தில் உணவு நிலைமையும் இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும்

### வெள்ளையறிக்கை

தமிழகத்தில் பருவ மழை பொய்த்ததின் காரணமாக ஒரு சில மாவட்டங்கள் நீங்கலாக மற்ற எல்லா மாவட்டங்களிலும் வறட்சி நிலைமை உருவாகியது. அபரி மாவட்டங்களான வட ஆற்காடு, தென்னார்க்காடு செங்கல்பட்டு தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டது. 1979–80ம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 1980–81 சம்பா பட்டத்தில் ஏறக் குறைய 3.32 இலட்சம் ஹெக்டேர்களில் நெல் சாகுபடி குறைவு என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு நெல் உற்பத்தி பாதிக்கப் பட்டதன் காரணமாக வெளிச்சந்தையில் அரிசியின் விலை சற்று உயர்ந்து காணப்பட்டது. பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்பட்டு வந்த அரிசியின் அளவு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வரை மாதம் ஒன்றுக்கு 7,000 முதல் 11000 டன்கள் என்ற அளவில் இருந்து வந்தது. ஆனால் வறட்சி நிலைமை காரண மாக மக்களிடம் இருந்து தேவை அதிகரித்தது. எனவே நிலைமையை உன்னிப்பாக அரசு ஆராய்ந்தபின் பொது விநி யோகத் திட்டத்தின் கீழ் வழங்குவதற்குப் போதுமான அரிசி கையிருப்பை, ஏற்படுத்திக் கொள்ள 40% வர்த்தக லெவி முறையை அரசு இந்த ஆண்டு சனவரி மாதத்தில் கொண்டு வந் தது. இத்திட்டத்தின் கீழ் 13-8-81 வரை 1.11 இலட்சம் டன் கள் நெல்லும் 0.40 இலட்சம் டன்கள் அரிசியும் வர்த்தக லெவி மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது தவிர, ஆந்திரா மாநிலத்தின் நுகர் பொருள் வாணிபக் கழகத்திடமிருந்து 1 இலட் சம் டன்கள் அரிசி வாங்க உத்தேசித்து இதுவரையில் 23,600 டன்கள் வாங்கப்பட்டுள்ளன. அதே போன்று ஒரிசா மாநிலத் திலிருந்து 10,000 டன்கள் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டு அதில் இதுவரை 2110 டன்கள் வந்துள்ளன. மத்தியப்பிரதேசத்தி லிருந்து கூட்டுறவு அமைப்பு மூலமாக 10,000 டன்கள் வரத்து ஏற்பாடு முடிவடைந்து அரிசியை வாகன்களில் கொண்டு வர நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மத்திய அரசு, மத்திய தொகுப்பிலிருந்து, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கு வதற்கென வழங்கி வந்த அரிசி ஒதுக்கீட்டை மாதம் ஒன்றுக்கு குறைந்தது ஒரு லட்சம் டன்கள் என்ற அளவில் உயர்த்தித் தரும்படி நாம் வற்புறுத்தி வந்துள்ளோம். மத்திய அரசுப் படிப் படியாக ஒதுக்கீட்டை உயர்த்தி தற்போது மாதம் ஒன்றுக்கு 90,000 டன்கள் என்ற அளவில் ஒதுக்கீடு செய்தாலும் அதில் கணிசமானப் பகுதியை நாம் ஆந்திர மாநிலத்திலிருந்து ரெயில் மூலமாகவும் சாலை வழியாக லாரிகள் மூலமாகவும் கொண்டு வரவேண்டியுள்ளது. அதற்குத் தேவையான வேகன்கள் சரியான காலங்களில் கிடைப்பதில்லை. இதுபற்றி இரயில்வே துறையுட னும் இந்திய உணவு வர்த்தகக் கழகத்துடனும் தொடர்பு

...ண்டு தமிழகத்திற்கு தேவையான அரிசியைக் கொண்டு வர முயற்சிகள் எடுக்கப்பட்டன. நெல் விலை உயர்வின் காரணமாக வரி சந்தையும் கூடிவிட்டது. இருப்பினும் போக்குவரத்துச் செலவு அதிகமாய் இருப்பினும் கூட அரசு பொருட்படுத்தாமல் லாரிகள் மூலமாகவும் அரிசியை பிற மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு கொண்டு வர ஏற்பாடு செய்தது. 198 ம் ஆண்டு ஜனவரி முதல் ஜூலை முடிய தொகுப்பிலிருந்து மத்திய அரசு .45 இலட்சம் டன்கள் அரிசியை ஒதுக்கீடு செய்தது. அதில் 2.72 இலட்சம் டன்கள் எடுக்கப்பட்டுள்ளது. இதில் 2.1 இலட்சம் டன்கள் ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. வெளி மாநிலங்களில் அரசு நிறுவனங்களிடமிருந்து அரிசி வாங்கியது மட்டுமல்லாமல் டெண்டர்கள் முறையில் தனியாரிடமும் தேவையான அரிசியை வாங்குவதற்காக நுகர் பொருள் வாணிபக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

வர்த்தக லெவி முறை தமிழகத்தில் அமலில் உள்ளதால், வெளி மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்குள் கொண்டு வரப்படும் நெல், அரிசி வரத்து பாதிக்கப்பட்டு இருப்பதாக அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதை அரசு பரிசீலித்து வெளி மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்குள் கொண்டு வரப்படும் நெல் அரிசிக்கு லெவி முறையிலிருந்து விலக்கு அளித்தது. இதன் காரணமாக வெளிச்சந்தையில் நெல், அரிசியின் புழக்கம் அதிகரித்துள்ளது. அரிசியின் தட்டுப்பாடு என்ற நிலைமை தமிழகத்தில் இல்லை. வெளிச்சந்தையில் பொது மக்களுக்கு நியாயமான விலையில் அரிசி கிடைக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கும் நெல் அரிசிக்கு லெவியினின்று விலக்கு அளிக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் இச்சலுகையை பயன்படுத்திக் கொண்டு சம்பா பருவத்தில் வெளிச் சந்தையில் மே 31 வரை 96 000 டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பொது விநியோகத்தின் தேவை கணிசமாக அதிகரித்து இருப்பதன் காரணமாக வெளிச்சந்தையில் கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கிய நெல்லையும் பொது விநியோகத்திற்கு பயன்படுத்திக் கொள்வதென அரசு முடிவு செய்துள்ளது.

## பொது விநியோகம்

தமிழகத்தில் எப்பகுதியிலும் சட்ட பூர்வமான பங்கீடு முறை அமலில் இல்லை. இன்றியமையாப் பண்டங்கள் வெளிச்சந்தையிலும் தாராளமாக கிடைக்கின்றன. எனவே மக்களுடைய முழுத் தேவையையும் பொது விநியோக திட்டத்தின்கீழ் வழங்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் இல்லை.

தமிழகத்தின் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 17400 நியாய விலைக் கடைகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் நடத்தி வருகின்றன. இன்றியமையாப் பொருள்கள் விநியோகத்தை தனியார் வியாபாரிகளிடம் ஒப்படைக்காதது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். ஏறக்குறைய 109 இலட்சம் குடும்ப அட்டைகள் தமிழகம் முழுவதிலும் வழங்கப்பட்டுள்ளன. நியாய விலைக் கடைகள் மூலமாக அரிசி, கோதுமை, மைதா, ரவை; பாமோலின் எண்ணெய், மண்ணெண்ணெய், லெவி சர்க்கரை போன்ற இன்றியமையாப் பொருள்கள் குடும்ப அட்டைகள் மூலம் வழங்கப்படுகின்றன; வருவாய் கிராமந்தோறும் நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டதன் காரணமாக கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கும் இன்றியமையாப் பொருள்கள் கிடைக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

## அரிசி விநியோகம்

தற்போது மாதமொன்றுக்கு ஏறக்குறைய 75,000 டன்கள் அளவில் குடும்பக் கார்டுகளுக்கு அரிசி ஒவ்வொரு மாதமும் வழங்கப்படுகிறது. குடும்பத்திலுள்ள நபர்கள் அடிப்படையில் பெரியவர்களுக்கு வாரம் ஒன்றுக்கு ஒரு கிலோ வீதமும், சிறியவர்களுக்கு அரை கிலோ வீதமும் அல்லது ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு மாதமொன்றுக்கு 20 கிலோ, இதில் எது குறைவோ அது வழங்கப்பட்டு வருகின்றது. வெளிச்சந்தையில் சாதாரண ரக அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 3.15 என்றும், சன்னரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 3.25 என்றும் விற்கப்படுகின்ற நிலையில் நாம் குடும்ப அட்டைகளுக்கு சாதாரண ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 1. 75 சன்னரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 2.00 மிகச் சன்ன ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 2.15 என்ற விலைகளில் வழங்கி வருகிறோம். விற்பனை விலையை விட அடக்க விலை அதிகமாய் இருப்பதின் காரணமாக அரிசி விநியோகத்தில் அரசுக்கு பெரும் இழப்பு ஏற்படுகிறது.

## கோதுமை

மத்திய அரசு தமிழகத்திற்கு மாதம் ஒன்றுக்கு 3,000 டன்கள் என்ற அளவில் செய்து வந்த ஒதுக்கீட்டை இந்த அரசு பலமுறை கூடுதல் ஒதுக்கீடு வேண்டுமென வற்புறுத்தியதன் காரணமாக தற்போது 4,000 டன்கள் என்ற அளவில் உயர்த்தியுள்ளது. ஆனால் இது நம் தேவைக்கு போதுமானதாக இல்லை. குறைந்த பட்சம் மாதம் ஒன்றுக்கு 10,000 டன்கள் ஆக இதை உயர்த்தித் தர வேண்டும் என மத்திய அரசைக் கேட்டு கொண்டுள்ளோம். ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ என்று நாம் வழங்கினால் கூட நம் மாநிலத்திற்கு மாதம் ஒன்றுக்கு ஏறக்குறைய 11,000 டன்கள் கோதுமை தேவைப்படும். தற்போது ஒரு குடும்பக் கார்டுக்கு மாதம் ஒன்றுக்கு அதிக பட்சமாக 5 கிலோ இருப்பை அனுசரித்து, வழங்கப்பட்டு வருகிறது.

128 161 19

### மைதா, ரவை

தமிழகத்திலுள்ள உருளை மாவு ஆலைகளுக்கு மாதம் ஒன்றுக்கு 30000 டன்கள் கோதுமையை மத்திய அரசு கோதுமைப் பொருள்கள் தயாரிக்க ஒதுக்கீடு செய்து வருகிறது. ஆலைகள் உற்பத்தி செய்யும் மைதா, ரவையில் 60 விழுக்காட்டை பொது விநியோகத்திற்கு என உருளை மாவு ஆலைகளிடமிருந்து எடுத்துக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு எடுத்துக் கொள்ளப்படும் மைதா, ரவை குடும்ப கார்டுதாரர்களுக்கும், பேக்கரி, சேமியா தயாரிப்போர் போன்ற மொத்த நுகர்வோருக்கும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும் கூட்டுறவுச் சங்கங்களும் விநியோகம் செய்கின்றன. மைதா கிலோ ரூ. 2.20, ரவை கிலோ ஒன்றுக்கு ரூ. 2.00 என்ற விலையில் கார்டுகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. மாதமொன்றுக்கு ஏறக்குறைய 8,050 டன்கள் மைதாவும் 2,190 டன்கள் ரவையும் விநியோகம் செய்யப்படுகின்றன.

### லெவி சர்க்கரை

தமிழகத்திற்கு மத்திய அரசு மாதம் ஒன்றுக்கு 19,700 டன்கள் என்ற அளவில் லெவி சர்க்கரையை ஒதுக்கீடு செய்து வருகிறது. நகர்ப்புறங்களில் உள்ளது போல் கிராமப் புறங்களிலும் லெவி சர்க்கரையின் அளவை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் பரவலாக எழுந்ததன் காரணமாக லெவி சர்க்கரையை வருமான அடிப்படையில் இந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் கீழ்க்கண்ட அளவுகளில் வழங்கப்படுகிறது.

| நகர்ப் பகுதிகள் — | அட்டை ஒன்றுக்கு திங்கள் ஒன்றுக்கு |
|---|---|
| திங்கள் ஒன்றுக்கு ரூ. 1000மும் அதற்கு மேலும் வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர்க்கு | 5 கிலோ |
| திங்கள் ஒன்றுக்கு ரூ. 500 முதல் ரூ. 999 வரை வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர்க்கு | 3 கிலோ |
| திங்கள் ஒன்றுக்கு ரூ. 499 வரை வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர்க்கு | 2 கிலோ |

| 2. கிராமப் பகுதிகள் | அட்டை ஒன்றுக்கு திங்கள் ஒன்றுக்கு |
|---|---|
| திங்கள் ஒன்றுக்கு ரூ. 1000மும் அதற்கு மேலும் வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர்க்கு | 3 கிலோ |
| திங்கள் ஒன்றுக்கு ரூ. 500முதல் ரூ. 999 வரை வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர்க்கு | 2 கிலோ |
| திங்கள் ஒன்றுக்கு ரூ. 499 வரை வருமானமுடைய குடும்ப அட்டை வைத்திருப்போர்க்கு | 1 கிலோ |



### வெளிச்சந்தை சர்க்கரை

தமிழகத்தில் வெளிச்சந்தையில் சர்க்கரை பற்றாக்குறை ஏற்பட்டால் நிலைமையை சமாளிக்கவும் வெளிச்சந்தையில் சர்க்கரையின் விலை உயராமல் நிதான நிலையில் கட்டுப்படுத்துவதற்கும் வெளிச்சந்தை சர்க்கரையை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்து வைத்து உள்ளது. தற்பொழுது மொத்த நுகர்வோர்க்கும், திருமணங்களுக்கும், மற்ற விசேஷ சடங்குகளுக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ. 6 என்ற அளவில் வழங்கப்பட்டு வருகிறது. வெளிச்சந்தையில் சர்க்கரைப் பற்றாக்குறை ஏற்பட்டாலும் நிலைமையை சமாளிக்கப் போதுமான இருப்பு கையில் உள்ளது.

### மண்ணெண்ணெய்

மண்ணெண்ணெய் பொது விநியோகத்தின் கீழ் தற்பொழுது குடும்ப அட்டைகளுக்கு நியாய விலைக் கடைகள் மூலமாக விநியோகம் செய்யப்படுகிறது. இதன் காரணமாக கிராமப் பகுதிகளிலும் தட்டுப்பாடு இல்லாமல் மண்ணெண்ணெய் கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

### சமையல் எண்ணெய்

தமிழ்நாட்டில் கடலை எண்ணெய் தவிர மற்ற எண்ணெய் வகைகள் உற்பத்தி நமது தேவையைவிட மிகவும் குறைவாக உள்ளது. கடலை எண்ணெய்க்குக்கூட நிலக்கடலை உற்பத்தி பாதிக்கப்பட்டதன் காரணமாக தட்டுப்பாடு ஏற்பட்டு விலை உயர்ந்து காணப்படுகிறது. ஆனால் மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் பாமோலின் எண்ணெய் குடும்பக் கார்டுகளுக்கு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் இருப்பைப் பொறுத்து வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் காரணத்தினால் வெளிச் சந்தையில் விலை உயராமல் கட்டுப்படுத்த முடிகிறது. ஆனால் மத்திய அரசு மாதம் ஒன்றுக்கு 4,500 டன்கள் என்ற அளவில் வழங்கி வருகிறது. ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு கிலோ வீதம் வழங்க வேண்டும் என்றால் கூட தமிழகத்திற்கு மாதம் ஒன்றுக்கு ஏறக்குறைய 11,000 டன்கள் பாமோலின் எண்ணெய் தேவைப்படுகிறது. மாதம் ஒன்றுக்குக் குறைந்தது 10,000 டன்கள் ஒதுக்கீடு செய்யும்படி நாம் மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை 19,400 மெட்ரிக் டன்கள் பாமோலின் எண்ணெய் மத்திய அரசு நமக்கு வழங்கி உள்ளது.

### விலைவாசி நிலைமை

பருவமழை தவறாத ஆண்டுகளில், நவதானியங்கள், கடலை எண்ணெய், கரும்பு, மிளகாய் வற்றல் முதலியவற்றில் தமிழகம் தன்னிறைவு பெற்றிருக்கும். நடப்பு ஆண்டில் பருவமழை தவறியதால் அத்தியாவசியப் பண்டங்களின் உற்பத்தி குறைந்து விலைகளும் உயர்ந்தன. கீழ்க் கண்ட அட்டவணை உற்பத்தி வீழ்ச்சியைக் காட்டுகிறது:

உணவுப் பொருள் உற்பத்தி

(இலட்சம் டன்களில்)

| | உணவுப் பொருள் | 1980-81 | 1979-80 |
|---|---|---|---|
| 1 | அரிசி | 39.75 | 58.00 |
| 2 | சோளம் | 5.35 | 6.52 |
| 3 | கம்பு | 2.95 | 4.22 |
| 4 | கேழ்வரகு | 3.17 | 3.78 |
| 5 | துவரை | 0.40 | 0.39 |
| 6 | உளுந்து | 0.55 | 0.54 |
| 7 | கொண்டைக்கடலை | 0.04 | 0.04 |
| 8 | பாசிப்பயறு | 0.35 | 0.31 |
| 9 | வேர்க்கடலை | 7.02 | 10.63 |
| 10 | எள் | 0.29 | 0.43 |
| 11 | மிளகாய்வற்றல் | 0.38 | 0.75 |
| 12 | கொத்தமல்லி | 0.15 | 0.18 |

மேலும் இரயில்வே வாகன்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு இருந்ததாலும், சாலைப் போக்குவரத்திற்கான செலவு அதிகரித்ததினாலும், உற்பத்தி மாநிலங்களில் வணிகச் சூதாட்டத்தினாலும், பயிரிடுவதற்கான செலவு உள்ளீடுகளின் செலவினையொட்டி உயர்ந்துள்ளதாலும் விலைவாசி உயர ஏதுவாயிற்று. இருப்பினும் எல்லா பண்டங்களும் தாராளமாக வெளிச் சந்தையில் கிடைத்துவருகின்றன.

1. அரிசி.—தமிழ்நாட்டில் அதிகமாக பயன்படுத்தப்படும் நடுத்தர புழுங்கல் அரிசியின் விலை, உற்பத்தி பாதிப்பினால், படிப்படியாக உயர்ந்து ஏப்ரல் மாதம் கிலோவிற்கு ரூ. 2.72 என்ற அளவில் விற்று வந்தது. தற்போது ரூ 3.15 என்ற அளவில் விற்று வருகிறது. வெளிச் சந்தையில் தாராளமாக அரிசி கிடைக்கும் வண்ணம் லெவிக் கொள்கையை மாற்றியமைத்து ஆந்திராவிலிருந்து வரத்தை அதிகரிப்பதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது; மேலும் பொது விநியோக அமைப்பில் ஏராளமான அளவு பொது ரக புழுங்கல் அரிசி கிலோவிற்கு ரூ. 1.75 என்ற விலையில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. போதிய அளவு கையிருப்பில் இருப்பதினாலும், மத்திய அரசிடமிருந்து ஒதுக்கீடு ஓரளவு கிடைப்பதினாலும், விலைவாசியை கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது.



தானியங்கள்.—உற்பத்தியில் குறைவு ஏற்பட்டிருந்தாலும் சோளம், கம்பு, முதலியவற்றின் விலைகள் ரூ. 1.80 என்ற அளவில் நிலவி வருகின்றன.

பருப்புவகைகள்.—தமிழ்நாட்டில் பருப்பு வகைகளைப் பொருத்த வரையில் பற்றாக்குறை அதிகம்.

(இலட்சம் டன்கள்)

| | பருப்பு. | தேவை. | உற்பத்தி. | பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| 1 | துவரம்பருப்பு | 2.00 | 0.16 | 1.84 |
| 2 | உளுத்தம்பருப்பு | 1.50 | 0.34 | 1.16 |
| 3 | பாசிப்பருப்பு | 0.50 | 0.11 | 0.39 |
| 4 | கடலைப் பருப்பு | 2.00 | 0.04 | 1.96 |
| | மொத்தம்.. | 6.00 | 0.65 | 5.35 |

உற்பத்தி மாநிலங்களிலேயே விலைகள் உயர்ந்துள்ளதாலும், பொதுவாக எல்லா பருப்பு வகைகளுக்கும் இது அறுவடை காலம் இல்லாததாலும், விலைகளின் உயர்வு ஏற்பட்டுள்ளது. இன்னும் 3 மாத காலத்தில் அறுவடை காலம் துவங்கியதும் விலைகள் வீழ்ச்சி அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது தமிழகத்தில் பருப்பு வகைகளின் விலைகள் பின் வருமாறு:

| | | கிலோவிற்கு |
|---|---|---|
| 1. | துவரம் பருப்பு | ரூ. 5.70 |
| 2. | உளுத்தம் பருப்பு | ரூ. 4.75 |
| 3. | கடலைப் பருப்பு | ரூ. 5.90 |
| 4. | பாசிப்பருப்பு | ரூ. 5.50 |

கோதுமை: உற்பத்தி குறைவின் காரணமாக கோதுமையின் விலை வெளிச் சந்தையில் உயர்ந்து கிலோ ரூ.2.40 என்ற அளவில் விற்று வருகிறது.

சமையல் எண்ணெய்கள்: வறட்சி நிலையினால் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி குறைந்து அவை கிடைக்கும் அளவும் நடப்பு ஆண்டில் குறைந்துள்ளது.

(இலட்சம் டன்கள்)

| எண்ணெய் | தேவை | கிடைக்கும் அளவு | பற்றாக்குறை |
|---|---|---|---|
| கடலை எண்ணெய் | 1.74 | 0.75 | 0.99 |

| | | | |
|---|---|---|---|
| நல்லெண்ணெய் | 0.96 | 0.48 | 0.48 |
| தேங்காய் எண்ணெய் | 0.30 | 0.30 | .. |
| மொத்தம் .. | 3.00 | 1.53 | 1.47 |

பற்றாக்குறையை ஈடு செய்ய பொது விநியோக அமைப்பின் மூலம் 0.22 இலட்சம் டன்கள் பாமாலின் எண்ணெய் கிலோவிற்கு ரூ. 8.25 என்ற விலையில் விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணெய்க்கு தேவைகள் அதிகம் இருப்பதால் அதிக அளவு மத்திய அரசிடமிருந்து ஒதுக்கீடு பெற்று எல்லோருக்கும் சீராக கிடைக்கும் வண்ணம் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குளிர்கால வேர்க்கடலை நவம்பர் முதல் அறுவடை செய்யப்படும் வேளையில் விலை குறையும் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்த விலை ஏற்றம் தமிழ்நாட்டில் மட்டும் காணப்படுவது அல்ல. பம்பாயில் தற்போது கடலை எண்ணெய் குவிண்டாலுக்கு ரூ. 1535 என்ற விலையில் விற்று வருகிறது. ஆனால் சென்னையில் இதன் விலையோ குவிண்டாலுக்கு ரூ. 1480 சென்னையில் நல்லெண்ணையின் மொத்த விலை குவிண்டாலுக்கு ரூ. 1370 ஆக இருப்பது பம்பாயில் விற்கும் விலையைக் காட்டிலும் ரூ. 34 குறைவாகும். தேங்காய் எண்ணெயைப் பொறுத்த வரையில் மாநிலத்தின் பெரும் பகுதி தேவை கேரள மாநிலத்திலிருந்து நிறைவு செய்யப் பட்டுள்ளது. அங்கு நிலவும் விலைகளையொட்டியே தற்போது தமிழ்நாட்டில் ரூ. 18.15 என்ற அளவில் விற்கிறது.

மசாலாப் பொருட்கள்:—உற்பத்தி குறைவினால் மிளகாய் வற்றலின் விலை உயர்ந்துள்ளது. தற்போது இதன் விலை கிலோவிற்கு ரூ. 14.80. இதே போன்று மல்லியின் விலையும் புளியின் விலையும் முறையே ரூ. 9.00, ரூ. 7.10 என்ற அளவில் நிலவி வருகின்றது.

சர்க்கரை:—போதிய அளவு வெளிச்சந்தையில் விற்பதற்கான ஒதுக்கீட்டினை மத்திய அரசு செய்து வரும் மாதங்களில் விலை வாசி குறைந்து காணப்படுகிறது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரூ. 7.45 என்ற அளவில் விற்று வந்த சர்க்கரையின் விலை தற்போது ரூ. 6.50 என்ற அளவில் தமிழகத்தில் தாராளமாகக் கிடைக்கிறது.

காய்கறிகள்:—பொதுவாக எல்லா காய்கறிகளின் விலைகளும் தற்போது குறைந்து உருளைக்கிழங்கு கிலோ ரூ.1.80, தக்காளி ரூ.1.55, கத்தரிக்காய் ரூ. 1.35 என்ற அளவில் தாராளமாகக் கிடைக்கிறது.



பொதுவாக அரசினுடைய ஈடுபாடு உணவுப் பண்டங்களைப் பொறுத்தமட்டில் அவற்றின் விலையைக் குறைப்பதற்காக பொது விநியோகத்திட்டத்தின் மூலம் பொருட்களை விநியோகிப்பதில் தீவிர அக்கறை காட்டி வருகிறது. அத்தியாவசியப் பண்டங் களின் விலைகளைக் குறைக்கும் வகையில் அரசு, அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், கோதுமை, கோதுமைப் பொருட்கள் முதலியவற்றை பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக விநியோகம் செய்து வருவது மட்டும் அல்லாமல் பிற பொருட் களின் விலைகளைக் குறைக்கும் பொருட்டு பருப்பு, புளி முதலிய அத்தியாவசியப் பண்டங்களைக் கொள்முதல் செய்துக் விநியோகித்து வருகிறது.

புதன் கிழமை 1981 ஆகஸ்ட், 26.

ஆவணி 10, துன்மதி—திருவள்ளுவர் 2012

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்

நன்கு செலச்சொல்லா தார்.

நல்ல அறிஞர்கள் கூடியுள்ள அவையிலே, அவர்கள் உள்ளத்திலே நன்கு பதியும்படி, சிறந்த கருத்துக்களை எடுத்துச் சொல்ல இயலாதவர்கள் பல அரிய நூல்களைக் கற்றவர்களாக இருந்தாலும் உலகத்திற்குப் பயன் இல்லாதவரே ஆவர்.

## 1. பேரவைத் தலைவருக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இன்று பிறந்த நாள் என்று தெரிகிறது. அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்,

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இன்று 56வது பிறந்தநாள் என்பதை அறிந்து இந்தப் பேரவை பெருமகிழ்ச்சி கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பிறந்த நாள் விழா நாளில் சட்டமன்றத்தில் வந்திருந்து, சட்டமன்ற உறுப்பினர்களோடு சேர்ந்து கடமையாற்ற முன் வந்த தங்களை இப்பேரவை உறுப்பினர்கள் மிகமிகப் பாராட்டுகிறார்கள். தாங்கள் வளம் பல பெற்று நலம் பல எய்தி பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும் என்று இந்த அவையின் சார்பாக தங்களை வாழ்த்துகிறேன்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, தங்களுடைய 56வது பிறந்த நாளைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்களுடைய நல்லெண்ணத்தை வெளிப்படுத்துகிற அடிப்படையில், தாங்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்துகிற வயது எனக்கு இல்லாவிட்டாலும், நீங்கள் நலம் பல பெற்று நல்ல முறையில் செயல்படவிழைகிறேன் என்பதை மட்டும் சொல்லி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் அதை அறிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன் என்றும் சொல்லி அமைகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த நல்ல நாளிலே, தங்கள் இன்னும் பல ஆண்டுக்காலம் வாழ்ந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும், தமிழகத்திற்கும், நாட்டிற்கும் இன்னும் உயரிய பல சேவைகள் ஆற்ற வேண்டும் என்று காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே வாழ்த்துகிறேன். வாழ்க பல்லாண்டு.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இன்று தங்களுடைய பிறந்த நாள் என்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். நம் அவை முன்னவர் சொல்லியிருக்கக் கூடிய அத்தனை சிறப்பு உணர்வுகளோடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கலந்து கொள்கிறது. கட்சியின் சார்பாக மட்டும் அல்லாமல், சொந்த சார்பிலேயும் வாழ்த்துகிறேன். நீண்டகாலமாக உங்களோடு பழகியிருக்கிறேன். நாடாளுமன்றத்திலும் சரி சட்டமன்றத்திலும் சரி உங்களோடு நெருங்கிப் பழகியிருக்கிறேன். நிச்சயமாக நீங்கள் நெடுநாள் வாழ வேண்டும் என்பது மட்டும் அல்லாமல், பலர் சொன்னார்கள், நீங்கள் இந்த அவையை நடத்திக் கொண்டேயிருக்க வேண்டும் என்று. அது தங்களை அமைச்சராவதை தடுத்து விடும் என்பதால் நீண்ட நாட்கள் தமிழகத்திற்குச் சேவை செய்ய வேண்டும் என்று வாழ்த்துகிறேன். அமைச்சராவது முதலமைச்சர் கையில் இருக்கும் விஷயம். நான் அதனால் அதற்குள்ளேயெல்லாம் போகவில்லை. ஆகவே, உங்களுக்கு நான் என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களிடம் ஒரு பொறாமை எனக்கு உண்டு. என்னைவிட நீங்கள் வயதில் சிறியவராக இருக்கிறீர்களே என்று தான், வேறு ஒன்றும் இல்லை.

திரு. இரா. கருப்பையா; பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய பிறந்தநாள் இன்றையதினம் என்பதை அறிந்து நாங்கள் எல்லாம் மகிழ்ச்சியடைகிறோம். நீங்கள் பல்லாண்டு வாழ்ந்து நம்முடைய தமிழகத்திற்கு நல்ல சேவை செய்து வாழ வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வாழ்த்தி அமர்கிறேன்.

திரு. குமரி அனந்தன்; மாண்புமிகு சபாநாயகர் அவர்களே. தந்தை மகற்குச் செய்கிற மிகப்பெரிய கடமை அவையிலே முந்தியிருக்கச் செயல். ஆனால் உங்களுடைய தந்தையாரோ தங்களை அவைக்கு நாயகனாகவே ஆக்கி, பெரும்பேற்றை பெற்றிருக்கிறார் என்று பாராட்டி நாங்கள் எல்லாம் எப்போதும் எண்ணிப் பார்க்கிற அளவிற்குத் தாங்கள் எப்போதும் எளிமையானவர், இனிமையானவர். ஆகவே, சபாநாயகர் திரு. சீ இராசாராம் அவர்களுக்கு பிறந்தநாள் என்று சொல்வதை விட இனிமைக்கும் எளிமைக்கும் பிறந்தநாள். எல்லோரையும் ஒன்றாகக் கருதி, அன்போடு பழகுகிற அந்தப் பண்புக்கு பிறந்த நாள் என்றுதான் சொல்லவேண்டும். அப்படி பண்புக்குப் பிறந்த நாள் என்று சொல்கிற நேரத்திலே இது நாளிலே எல்லாம் சிறந்த நாளாகத் தோன்றுகிறது. நீங்கள் பல்லாண்டு வாழ்வாங்கு வாழ்ந்து நலம்பெறவேண்டும் என்று, தாங்கள் அவையின் தலைவராக இருந்தாலும் அல்லது வேறு எந்தப் பதவியில் இருந்தாலும் உங்களை வாழ்த்துவோம் என்று எங்கள் காந்தி—காமராஜ் தேசிய காங்கிரஸின் சார்பிலே வாழ்த்தி அமர்கிறேன்.



திரு எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களது பிறந்த நாள் விழாவை இந்த மன்றத்திலேயே கொண்டாடுகிற அளவிற்கு இந்தச் சூழ்நிலையில் அகில இந்திய பார்வேர்ட் ப்ளாக் கட்சி சார்பாகத் தாங்கள் நீடு வாழ்க வேண்டும் என்று வாழ்த்துவதோடு இந்த நாட்டுக்கும் குறிப்பாக ஐந்து கோடி தமிழ் மக்களுக்கும் தங்களுடைய சேவை நீடிக்க வேண்டும் என்று அதற்காகத் தாங்கள் பல்லாண்டு வாழ வேண்டுமென்று அகில இந்திய பார்வேர்ட் ப்ளாக் கட்சி சார்பாக வாழ்க வாழ்க என்று வாழ்த்தி அமர்கிறேன்.

திரு. க. பாரமலை; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய பிறந்தநாளில் தங்களுடைய சேவை சிறக்க வேண்டுமென்றும் தாங்கள் பொது வாழ்வில் இன்னும் சிறப்பான இடங்களைப் பெற்று நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் தங்களது சேவை தொடர நீங்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும் என்றும் சொல்லி எல்லாம் வல்ல அன்னை மீனாட்சியை இறைஞ்சி, தாங்கள் பல்லாண்டு வாழ தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சி சார்பாக எனது வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தங்களது பிறந்த நாள் விழாவினை இந்த மன்றத்தில் இருக்கிற எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து கொண்டாடுகிற இந்தப் பேற்றினைப்பெற்றமைக்குக் குடியரசு கட்சி சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பிறந்த நாள் விழாவில் நாங்கள் எல்லாம் தங்களை வாழ்த்துகிற வயதைப் பெறவில்லையென்றாலும் எங்கள் கட்சி சார்பாகத் தங்களுக்கு எங்களது அன்பார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு இன்றுபோல் என்றும் தாங்கள் எங்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்று வேண்டி அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய பிறந்த நாள் இன்று என்று தமிழகத்திற்கு அறிவிக்கிற நேரத்தில் சட்டமன்றத்தின் வாயிலாகச் சொல்லும்போது அதற்கு எவ்வளவு தகுதியும் உயர்வும் வருகிறது என்பதை நாம் அனைவரும் உணர்கிறோம். உங்களை வாழ்த்த எனக்கு வயது இருக்கிறது என்பதில் பெருமைப்படுகிறேன். நான் பொறாமைப்படவில்லை. (சிரிப்பு) ஒரு வகையில் நீங்கள் அனைவருக்கும் நல்லவராக இருக்கிறீர்கள் என்பது இந்த நாட்டில் நல்ல எடுத்துக்காட்டுக்கு உதாரணமாக அமைந்திருக்கிறது என்பதை நான் மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் எப்போதுமே கட்சிக்கு அப்பாற்பட்டு இயங்க வேண்டும் என்பதற்காகத்தான் பேரவைத் தலைவர் பொறுப்பை ஏற்றதுமே அந்தக் கட்சியிலிருந்து விலகுகிறேன் என்று சொல்வதோடு, விலகி இருப்பதாக மற்றவர்கள் எண்ணிக்கொள்கிற அளவிற்குச் செயல்படுவதை மரபாகக் கொண்டிருக்கிறோம். இந்த வகையில் உங்களைப் பார்க்கும்போது நீங்கள் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக இருக்கிறீர்கள், என்பதை எண்ணி நாங்கள் மகிழ்வதோடு எங்களுடைய அமைச்சரவை சார்பாகவும், கட்சியின் சார்பாக

சொல்லக் கூடாது என்றாலும் கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்ட
முறையில் அதையும் சேர்த்து இணைத்து உங்களுக்கு வாழ்த்துக்
கள் சொல்லி நீங்கள் பல்லாண்டு வாழ்ந்து நலத்தோடு இந்தப்
பேரவையில் உள்ள எல்லோருடைய அரவணைப்போடும் புகழ்
பெறவேண்டுமென்றும் வாழ்த்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழக முதல்வர் அவர்களுக்
கும், எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும்
எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன். மிகப் பெரியதொரு பெருமையை எனக்கு இந்தப்
பேரவை அளித்ததற்காக எனது நன்றியை மீண்டும் மீண்டும்
சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஏதாவது
செய்திருப்பேனானால் அது பேரறிஞர் அண்ணா அவர்களிடம்
நான் கற்ற பாடம் என்பதெல்லாமல் வேறு அல்ல என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன். இளமையில் பெரியார் அவர்களிடம்
பண்பையும், அடக்க உணர்ச்சியை பேரறிஞர் அண்ணா அவர்
களிடத்திலும் ஓரளவு கற்றுக் கொண்டிருக்கிறேன். அது நான்
என்னை இந்தளவிற்கு உயர்த்தியிருப்பதாகக் கருதுகிறேன்.
ஆகவே உங்கள் வாழ்த்துக்களை அவ்விருவருடைய திருப்பாதங்
களிலும் நான் சமர்ப்பித்துக் கொள்வதோடு நீங்கள் காட்டிய
அன்புக்கு என்னுடைய நன்றியை மீண்டும் கூறி அமர்கிறேன்.
வணக்கம்.

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### இராமேஸ்வரம் துப்பாக்கி சூட்டில் மரணமடைந்தோர் குடும்பத்திற்கான நிதி உதவி.

***வினா எண் 61—திரு கே. தனுக்கோடித் தேவர்:** மாண்புமிகு
முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 4–7–1979 ஆம் தேதி இராமேஸ்வரத்தில் துப்பாக்கிச்
சூட்டில் இறந்த மீனவர் குடும்பத்திற்குப் பொருளாதார உதவி
செய்யும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** (அ) மற்றும் (ஆ)
4–7–79 அன்று இராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தில்
நடைபெற்ற போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் மரணமடைந்த
நால்வரில், மூவரின் குடும்பங்களுக்கு முதல் அமைச்சர் பொது
நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கி ஆணை பிறப்
பிக்கப்பட்டுள்ளது. மற்றொருவரின் வருவாயை நம்பி வழும்
வாரிசு யாரும் இல்லாததால் இறந்த நான்காவது நபருக்காக
நிதியுதவி அளிக்கப்படவில்லை.

[முற்பகல் 9-10]

**திரு. கே. தனுக்கோடித் தேவர் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்தில் துப்பாக்கிச் சூட்டில்
இறந்த மீனவர்கள் குடும்பங்களுக்கு முதல்வர் அவர்கள் நிதி
உங்களை [illegible]
[illegible]



விருந்து நிதி உதவி அளித்ததாகக் கூறினார்கள். அதைக்கேட்டு மகிழ்ச்சி தெரிவிப்பதோடு, அந்த ஏழை மீனவர்கள் குடும்பங்களுக்கு மற்றவர்களுக்கு அளிப்பது போல் 5,000 ரூபாய், 10,000 ரூபாய் இந்தக் குடும்பங்களுக்கும் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எம்.ஜி.இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரு குடும்பங்களுக்குத் தலா 2,000 ரூபாயும், ஒருவருக்கு ஆயிரம் ரூபாயும் அளிக்கப்பட்டது.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் துப்பாக்கிச் சூட்டில் இறந்த மீனவர்கள் குடும்பங்கள் மிகவும் ஏழ்மையான நிலைமையில் இருக்கிறார்கள். அந்த இறந்தவர்கள் கடலிலே சென்று, அவர்கள் பிடித்து வருகின்ற மீன்களின் மூலம் கிடைக்கும் வருவாயைப் பெற்று அவர்கள் பிழைத்து வந்தார்கள். எனவே, இப்போது விதவைகளாக இருக்கின்ற அந்த குடும்பங்களுக்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து முதலமைச்சர் நிதியிலிருந்து அந்த மீனவ விதவைகளுக்கு தலா 5,000 ரூபாய் வழங்குவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துப்பாக்கிச் சூடு நடப்பது என்பது துரதிருஷ்டமானது. அதற்குக் காரணம் என்ன என்பதை எண்ணிப் பார்க்கும்போது, அதனை ஊக்குவிக்கின்ற வகையில் நாம் உதவி செய்து, இது ஒரு நல்ல பழக்கம், வருவாய் கொடுக்கின்ற அளவிற்கு இருக்கிறது என்று எண்ணக்கூடிய சூழ்நிலை உருவாக நம் ஆதரவாக இருக்கக்கூடாது. ஆனால், இதைப் பற்றி நான் இங்கே குறிப்பிடும்போது, முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து அளித்ததற்கு என்ன காரணம் என்பதை எண்ணிப் பார்த்தாலே அந்த உண்மை நிலை விளங்கும் என்று கருதுகிறேன். ஆகவே, இரு குடும்பங்களுக்கு 2,000, 2,000 என்றும், ஒரு குடும்பத்திற்கு 1,000 என்றும் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த முறையில் நம் கவனம் செலுத்தி நிதி உதவி அளிப்பது கொஞ்சம் சரியாக இருக்காது என்று நான் கருதுகிறேன். வேறு வழியே இல்லை, அவர்கள் வாழ முடியாது என்ற நிலையிருந்தால், அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

**திரு என். எஸ். வி சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரி துப்பாக்கிச் சூட்டினால் மரணம் ஏற்படுவது துரதிருஷ்டவசமான சம்பவம்தான். நிச்சயமாக யாரும் துப்பாக்கிச் சூட்டில் இம்மாதிரி மரணமடைய முன்வர மாட்டார்கள். ஆகவே, அருள் கூர்ந்து இந்தத் தொகையை உயர்த்திக் கொடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா? அதோடு, அந்தக் குடும்பத்திலே உள்ள குழந்தைகளுக்கு வருங்காலத்தில் அரசாங்கம் பரிவு உணர்வோடு உதவுவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : கேள்வி நேரத்தில் கேள்வியைக் கேட்க வேண்டுமே தவிர ஒரு விவாதத்தை நடத்தக் கூடாது, துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி இப்போது விவாதம் நடத்த முடியாது.

**திரு. செ. சிவசாமி** : இந்த நிலைமையில் மூன்று போ துரதிருஷ்டவசமாக இறந்தார்கள். ஆகவே, அந்த ஏழை மீனவர்களுக்கு உதவி செய்யும் முறையில் மீண்டும் பரிசீலிக்க வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்** : துரதிருஷ்டவசமாக என்று சொன்னால் நடக்கக்கூடாதது நடந்துவிட்டது என்றுதான் பொருள். மற்றவர்கள் தவறிவிட்டதால் நடந்துவிட்ட சம்பவம் அது. அந்தக் கலவரத்தைத் தூண்டி விட்டவர்கள்தான் அதற்குப் பொறுப்பு. அதிகாரிகள் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு எச்சரிக்கையாக இருந்து காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அதிகாரிகள் பக்கத்தில் எந்தத் தவறும் இல்லை என்பதைத் தீர்ப்புக் கூறியவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை விசாரிக்க குழு அமைக்கப்பட்டு ஆர்.டி.ஓ., கூடுதல் மாஜிஸ்ட்ரேட் விசாரணை செய்து அதிகாரிகள் பேரில் தவறு இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள் ஒருவர் குழந்தை இல்லாமல் ஒரு பையனை எடுத்து வளர்த்து ஏறத்தாழ மாதம் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கும் நிலைமை இருப்பதால் அவருக்கு இந்த உதவி கொடுக்கப்படவில்லை. மற்ற மூவருக்கும் கொடுத்திருக்கிறோம். காவல் துறையினர் மீது எந்தவிதமான தவறும் இல்லை. தூண்டி விடுகிறவர்களை தூண்டி விடாமல் இருக்கும் நிலைமையில் நம்மைப் போன்றவர்கள் அக்கறையோடு கவனம் செலுத்த வேண்டும்.

**திரு ப. நெடுமாறன்** : இராமேஸ்வரம் துப்பாக்கிச் சூட்டில் இறந்த மீனவர் குடும்பங்களுக்கு முதலமைச்சர் உதவி அளிக்க முன் வந்ததை வரவேற்கிறேன். அதே நேரத்தில் இராமேஸ்வரம் பகுதியில் மீனவர்கள் இன்னொரு மிகப் பெரிய அபாயத்தை எதிர்நோக்கியிருக்கிறார்கள். இலங்கை கடற்படையினர் பயிற்சி நடத்தி....

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்** : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லை.

**டாக்டர் அம்பேத்கார் படத்தை அரசு அலுவலகங்களிலும் கல்வி நிலையங்களிலும் வைப்பதற்கான அனுமதி.**

***வினா எண் 62**—**திரு ஜி மூர்த்தி** : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) டாக்டர் அம்பேத்கார் திருஉருவப் படத்தை அனைத்து அரசு அலுவலகங்களிலும் கல்வி நிலையங்களிலும் வைத்திட அரசு கண்டிப்பான உத்தரவு அனுப்பியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1981 ஏப்ரல் 14 ம் தேதி அனைத்து அலுவலகங்கள், பள்ளி, கல்லூரிகளில் டாக்டர் அம்பேத்கார் திருவுருவப்படத்தினைத் திறந்து வைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) வேறு சில தலைவர்களின் படங்களை வைக்க அனுமதி அளித்துள்ளதுபோல், டாக்டர் அம்பேத்கார் படத்தையும் வைக்கலாமென பொதுவான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வைத்தாக வேண்டுமென்ற கட்டாயம் ஒன்றும் உத்தரவில் இல்லை.

திரு. ஜி. மூர்த்தி : இந்தியாவில் இருக்கிற பல்வேறு மாநிலங்களுக்கு வழிகாட்டியாக சட்டமேதை அம்பேத்கார் திருவுருவப் படத்தைத் தமிழகச் சட்டமன்றத்தில் திறந்து வைத்து புரட்சித் தலைவர் அவர்கள் வழிகாட்டியிருக்கிறார்கள். எல்லா அலுவலகங்களிலும் கண்டிப்பாக அம்பேத்கார் படம் இருந்தாக வேண்டுமென்ற எண்ணம் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் பெரும்பாலோருக்கு இருக்கிறது. அந்த அவாவைத் தமிழக முதல்வர் அவர்கள் பூர்த்தி செய்யவேண்டும். டிசம்பர் 6 ஆம் நாள் அவரது பிறந்த நாள் வருவதையொட்டி அதற்கு முன்னதாகவே இந்தக் கோரிக்கையைத் தமிழக முதல்வர் அவர்கள் நிறைவேற்றி வைக்க ஆணை பிறப்பிப்பார்களா?

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : அமரர் டாக்டர் அம்பேத்கார் அவர்களிடம் எல்லோருக்கும் நல்ல மரியாதையும் மதிப்பும் உண்டு. குறிப்பாக திராவிட இயக்கத்தில் இருந்து வந்த எங்களுக்கு நிச்சயமாக அதிலே அக்கறை அதிகம் உண்டு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். படங்களைத் திறப்பது என்பதெல்லாம் அந்தந்த இடங்களில் உள்ள அமைப்புகளை, நடத்துபவர்கள் எண்ணத்தைப் பொறுத்தது. அரசைப் பொறுத்தவரை நாங்கள் உத்தரவு போட்டிருக்கிறோம். குடியரசுத் தலைவர் 'பிரதம அமைச்சர், மகாத்மா காந்தி அவர்கள் ஜவகர்லால் நேரு அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் மூதறிஞர் இராஜாஜி அவர்கள், தந்தை பெரியார் அவர்கள் ஆகியோரது படங்களோடு அந்தப் படங்கள் வைத்திருக்கும் இடத்தில் டாக்டர் அம்பேத்கார் படத்தையும் வைக்கலாம், ஆட்சேபணை இல்லை என்று உத்தரவிட்டிருக்கிறோம்.

[முற்பகல் 9.20]

திரு பி. எம். தங்கவேல்ராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திருச்சி, கோவை போன்ற நகரங்களில் பல்கலைக் கழகங்கள் அமைக்க இருக்கிறோம். அவைகளில் ஏதாவது ஒன்றுக்கு டாக்டர் அம்பேத்கார் பெயர் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : கேள்வியே வேறு ஆகவே பதில் இப்போது கிடைக்காது.



திரு. சு. பாலன் : அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் டாக்டர் அம்பேத்கார் படத்தை சர்க்கார் அலுவலகங்களிலும் பள்ளிகளிலும் வைப்பதற்கு உத்திரவு அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள், கட்டாயப்படுத்தவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அரசு நடத்துகின்ற அரிசனப் பள்ளிகளிலேயும் ஹாஸ்டல்களிலேயும் அவர்களுடைய படத்தைக் கட்டாயமாக வைக்கவேண்டுமென்று உத்திரவிடப்படுமா?

மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, எதையும் கட்டாயப்படுத்த முடியாது. அந்தப் பிரச்சினையை உருவாக்காமல் எல்லோரும் ஏற்றுக்கொள்கிற வகையில் அந்தச் சூழ்நிலையை உருவாக்கி அந்தப் படத்தை வைக்க வாய்ப்புத் தருவது நல்லது.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாயம் இல்லாவிட்டாலும் முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் அபிமானத்தோடு வைக்கப்படுகிற படங்களை செங்கற்பட்டு, புதுக்கோட்டை, அரியலூர் ஆகிய இடங்களிலுள்ள கல்லூரிகளிலே உடைத்து அவமானப்படுத்துகிற நிலை இருந்ததாக அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? வருங்காலத்திலாவது இதுபோன்ற அவமானகரமான நிலையை உருவாக்குகிறவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா? எடுக்கப்பட்ட படங்களை வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் மீண்டும் மீண்டும் தெரிவிக்கிறேன். மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. கேள்வி படம் வைப்பதைப்பற்றித் தானே தவிர எடுக்கப்படுவது பற்றியல்ல. வேறு கேள்விகளைப் போடலாம், நிச்சயமாகப் பதில் கிடைக்கும். நான் ஒன்றைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதற்காகத்தான் நான் கொஞ்சம் முன்யோசனையோடு ஒரு கருத்தைச் சொன்னேன். பிரச்சினைகள் எழாத வகையில் வைப்பது நல்லது என்று நான் குறிப்பிட்டுச் சொன்னேன். அப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகாத அளவுக்கு ஒத்துப்போகிற அளவுக்கு நம்முடைய பேச்சுக்கள் செயல் முறைகள் இருக்கவேண்டும் என்பது தமிழக அரசினுடைய ஆசை.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, இம்பார்டன்ட் குவஸ்டின்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் போடுவது சப்ளிமென்டரி, சப்ளிமென்ட்ரியிலே எப்படி இம்பார்ட்டன்ஸ் வருமென்று எனக்குத் தெரியவில்லை. (சிரிப்பு).

திரு. ஜி. மூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய படம் எல்லா அலுவலகங்களிலேயும் ஒரே மாதிரியான படம் வைப்பதற்கு ஏற்பாடு செய்கிற முறையில்—பேரறிஞர் அம்பேத்காருடைய உண்மையான உருவத்தை

மகாராட்டிர மாநிலத்திலே அரசின் சார்பாகவே அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள் அங்கே இருந்து அதற்காக ஆர்டர் பெற்று ஒரே மாதிரியான படத்தை எல்லா இடங்களிலும் வைப்ப தற்கு முதல்வர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அரசின் சார்பாக எந்த தலைவர்களுடைய படங்கள் எதையும் நாங்கள் இது வரையில் வெளியிடவில்லை. ஆகவே இதைத் தனியாக யோசிப்பதற்கு இல்லையென்றாலும் ஒட்டுமொத்தமாக கவனிக்கிற போது இதைப் பரிசீலிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கார் படத்தினை வைத்துத்தான் தீரவேண்டுமென்ற முறையில் அரசு ஆணை எதையும் அறிவிக்கவில்லையென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஆற்றியுள்ள குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு ஆற்றியுள்ள அரும்பணிகளை முன்னிட்டு இனிமேலாவது டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய படத்தை வைத்துத் தீரவேண்டுமென்ற வகையில் அரசாங்கத்தைக் கேட்காமலேயே பல இடங்களில், பல நிறுவனங்களில் அரசு தொடர்புடைய நிறுவனங்களில் கடவுளர் படங்கள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. அதுப்போல் டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய படத்தையும் வைத்துத் தீரவேண்டுமென்ற ஒரு ஆணையைப் பிறப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மரியாதைக்குரிய நம்முடைய உள்ளங்களிலே இடம்பெற்றிருக்கிற தலைவர்களுடைய படங்களுக்கு எந்த அளவுக்கு வற்புறுத்தல் இருக்குமோ அந்த அளவில் தான் இந்த வற்புறுத்தலும் செய்யமுடியுமே தவிர எல்லாவற்றையும் செய்துதான் தீரவேண்டுமென்று நாம் முடிவு எடுத்தோமென்றால் இன்னும் பல பெரியவர்களுடைய படங்களை மாட்டவேண்டுமென்கின்ற எண்ணங்கள் பல்வேறு நிலைகளில் பல்வேறு உள்ளங்களிலே இருக்கின்றன. ஆகவே வற்புறுத்தல் என்பது ஓரளவிற்குத்தான் இருக்கவேண்டும். ஆனால் நாங்கள் வைத்துத்தான் தீரவேண்டுமென்று சொல்கிற அளவுக்கு அவர்களை வணங்கச் செய்வது நம்முடைய மாபெரும் கடமையாகும்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள், என்னென்ன படங்களை, நம்முடைய தேசியத் தலைவர்களின் படங்களை வைக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். நான் பார்த்தவரையில் அவரவர்கள் பல இடங்களில் தங்களுடைய உணர்வுக்குத் தகுந்தவாறு படங்களை மாட்டி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதைக்கூடப் பாதுகாத்து, சுத்தம் செய்கின்ற பாங்குகூட இல்லாமல் சில இடங்களில் மோசமாக வைக்கப்பட்டிருக்கின்ற காட்சியைப் பார்க்கிறேன். ஆகவே, அரசு சம்பந்தப்பட்ட



தொழில் நிலையங்கள், பொது மன்றங்கள், அரசுக் காரியாலயங்கள் ஆகிய இவைகளைப் பாகுபடுத்தி, வைக்க வேண்டிய படங்களை நிர்ணயித்து, உத்தரவை அரசு அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, மீண்டும் மீண்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன், கேள்வி வேறு, கேட்கப்படுகின்ற துணைக் கேள்விகள் வேறாக அமைந்து விடுகின்றன. உணர்வுக்கேற்றவாறு படங்களை வைக்கிறார்கள் என்று சொல்லுகின்ற மாண்புமிகு உறுப்பினரவர்கள், அவை கவனிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும் சொல்லுகின்றபொழுது உணர்வுக்கு என்ன பொருள் என்று எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், இப்படிப்பட்ட எண்ணங்களைப்பற்றி விவாதிப்பதிலே ஆட்சேபணை இல்லை. தனியாக கேட்டாலும் அல்லது தனியாகப் பேசினாலும் தகுந்த முடிவெடுக்கலாம்.

உலக வங்கியிடமிருந்து பெறப்பெற்ற கடன் தொகை

வினா எண். 63—* திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலகவங்கியிடம் என்னென்ன திட்டங்களுக்காக எவ்வளவு தொகை கடனாக பெறப்பட்டிருக்கிறது?

(ஆ) புதிதாக என்னென்ன திட்டங்களுக்கு எவவளவு ரூபாய்கள் கேட்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) அவைமுன் விவர அறிக்கை *ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபநாயகரவர்களே, உலக வங்கியிடமிருந்து கடன்பெற்று சென்னையினுடைய மிக முக்கியமான வணிகத் தலமாக இருக்கின்ற கொத்தவால்சாவடியிலே வணிகம் புரியும் மக்களுக்கும், அந்தப் பண்டங்களை வாங்கிச் செல்லும் பொதுமக்களுக்கும் சுகாதார வசதியோடு கூடிய நல்ல மாற்று இடத்தைக் கொடுப்பதற்கு உலக வங்கியிடமிருந்து கடன் பெறுவது பற்றி நம்மால் பேசப்பட்டு வந்த அந்த நிலை இப்பொழுது எந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறது என்பதை நிதியமைச்சரவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன், விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் நிலை 1 என்பதிலே திட்டத்தினுடைய அளவு 46 கோடியே 80 இலட்சம் ஆக இருந்தது. இதற்கு உலக வங்கியின் உதவி 21 கோடியே 60 இலட்சம் ஆக அமைந்தது. இதுவரை 17 கோடியே 84 இலட்சம் ரூபாய் பெறப்பட்டுள்ளது. நகர்ப்புறங்

* 553-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

மகாராட்டிர மாநிலத்திலே அரசின் சார்பாகவே அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள் அங்கே இருந்து அதற்காக ஆர்டர் பெற்று ஒரே மாதிரியான படத்தை எல்லா இடங்களிலும் வைப்பதற்கு முதல்வர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அரசின் சார்பாக எந்த தலைவர்களுடைய படங்கள் எதையும் நாங்கள் இது வரையில் வெளியிடவில்லை. ஆகவே இதைத் தனியாக யோசிப்பதற்கு இல்லை யென்றாலும் ஒட்டுமொத்தமாக கவனிக்கிற போது இதைப் பரிசீலிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கார் படத்தினை வைத்துத்தான் தீரவேண்டுமென்ற முறையில் அரசு ஆணை எதையும் அறிவிக்கவில்லையென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஆற்றியுள்ள குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு ஆற்றியுள்ள அரும்பணிகளை முன்னிட்டு இனிமேலாவது டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய படத்தை வைத்துத் தீரவேண்டுமென்ற வகையில் அரசாங்கத்தைக் கேட்காமலேயே பல இடங்களில், பல நிறுவனங்களில் அரசு தொடர்புடைய நிறுவனங்களில் கடவுளர் படங்கள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. அதுப்போல் டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய படத்தையும் வைத்துத் தீரவேண்டுமென்ற ஒரு ஆணையைப் பிறப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மரியாதைக்குரிய நம்முடைய உள்ளங்களிலே இடம்பெற்றிருக்கிற தலைவர்களுடைய படங்களுக்கு எந்த அளவுக்கு வற்புறுத்தல் இருக்குமோ அந்த அளவில் தான் இந்த வற்புறுத்தலும் செய்யமுடியுமே தவிர எல்லாவற்றையும் செய்துதான் தீரவேண்டுமென்று நாம் முடிவு எடுத்தோமென்றால் இன்னும் பல பெரியவர்களுடைய படங்களை மாட்டவேண்டுமென்கின்ற எண்ணங்கள் பல்வேறு நிலைகளில் பல்வேறு உள்ளங்களிலே இருக்கின்றன. ஆகவே வற்புறுத்தல் என்பது ஓரளவிற்குத்தான் இருக்கவேண்டும். ஆனால் நாங்கள் வைத்துத்தான் தீரவேண்டுமென்று சொல்கிற அளவுக்கு அவர்களை வணங்கச் செய்வது நம்முடைய மாபெரும் கடமையாகும்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள், என்னென்ன படங்களை, நம்முடைய தேசியத் தலைவர்களின் படங்களை வைக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். நான் பார்த்தவரையில் அவரவர்கள் பல இடங்களில் தங்களுடைய உணர்வுக்குத் தகுந்தவாறு படங்களை மாட்டி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதைக்கூடப் பாதுகாத்து, சுத்தம் செய்கின்ற பாங்குகூட இல்லாமல் சில இடங்களில் மோசமாக வைக்கப்பட்டிருக்கின்ற காட்சியைப் பார்க்கிறேன். ஆகவே, அரசு சம்பந்தப்பட்ட



தொழில் நிலையங்கள், பொது மன்றங்கள், அரசுக் காரியாலயங்கள் ஆகிய இவைகளைப் பாகுபடுத்தி, வைக்க வேண்டிய படங்களை நிர்ணயித்து, உத்தரவை அரசு அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, மீண்டும் மீண்டும் நான் தெரிவித்துக் காள்கிறேன். கேள்வி வேறு, கேட்கப்படுகின்ற துணைக் கேள்விகள் வேறாக அமைந்து விடுகின்றன. உணர்வுக்கேற்றவாறு படங்களை வைக்கிறார்கள் என்று சொல்லுகின்ற மாண்புமிகு உறுப்பினரவர்கள், அவை கவனிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும் சொல்லுகின்றபொழுது உணர்வுக்கு என்ன பொருள் என்று எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், இப்படிப்பட்ட எண்ணங்களைப்பற்றி விவாதிப்பதிலே ஆட்சேபணை இல்லை. தனியாக கேட்டாலும் அல்லது தனியாகப் பேசினாலும் தகுந்த முடிவெடுக்கலாம்.

உலக வங்கியிடமிருந்து பெறப்பெற்ற கடன் தொகை

வினா எண். 63—* திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலகவங்கியிடம் என்னென்ன திட்டங்களுக்காக எவ்வளவு தொகை கடனாக பெறப்பட்டிருக்கிறது?

(ஆ) புதிதாக என்னென்ன திட்டங்களுக்கு எவவளவு ரூபாய்கள் கேட்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) அவைமுன் விவர அறிக்கை *ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபநாயகரவர்களே, உலக வங்கியிடமிருந்து கடன்பெற்று சென்னையினுடைய மிக முக்கியமான வணிகத் தலமாக இருக்கின்ற கொத்தவால்சாவடியிலே வணிகம் புரியும் மக்களுக்கும், அந்தப் பண்டங்களை வாங்கிச் செல்லும் பொதுமக்களுக்கும் சுகாதார வசதியோடு கூடிய நல்ல மாற்று இடத்தைக் கொடுப்பதற்கு உலக வங்கியிடமிருந்து கடன் பெறுவது பற்றி நம்மால் பேசப்பட்டு வந்த அந்த நிலை இப்பொழுது எந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறது என்பதை நிதியமைச்சரவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன், விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் நிலை 1 என்பதிலே திட்டத்தினுடைய அளவு 46 கோடியே 80 இலட்சம் ஆக இருந்தது. இதற்கு உலக வங்கியின் உதவி 21 கோடியே 60 இலட்சம் ஆக அமைந்தது. இதுவரை 17 கோடியே 84 இலட்சம் ரூபாய் பெறப்பட்டுள்ளது. நகர்ப்புறங்

---

553*..ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

களில் மக்களுக்குக் குடியிருப்பு, வேலைவாய்ப்பு, குடிநீர் வழங்கல் கழிவுநீரகற்றல். போக்குவரத்து வசதி ஆகிய வசதிகளை மேம்படுத்தி அவ்வசதிகள் குறித்து ஏற்பட்டுள்ள பிரச்சனைகளுக்குக் குறைந்த செலவில் தீர்வு காண்பதும், குறிப்பாக நகர்ப்புற ஏழைகளின் தேவைகளுக்கேற்ப திட்டப்பணிகளில் முதலீடு செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தைப் பொறுத்தவரை மனைகளும், பணிகளும் உருவாக்கும் திட்டம், குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்றல் சாலைப் போக்குவரத்து மேம்பாடு ஆகிய முக்கிய பணிகளுக்கு மட்டுமே மத்திய அரசு நிதி வழங்கியிருக்கிறது.

2. சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் நிலை 2. திட்டத்தினுடைய அளவு 73 கோடியே 90 இலட்சம் ரூபாய். இதிலே உலக வங்கியினுடைய உதவி 35 கோடியே 28 இலட்சம். இதுவரை தொகை ஏதும் பெறப்படவில்லை. இனி பெறப்படும். 1980 ஜூலை மாதத்தில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் நிலை 1 ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது. சென்னை நகரில் நகர்ப்புற பிரச்னைகளுக்கு, குறிப்பாகக் குடியிருப்பு போக்குவரத்து வசதிகளுக்குக் குறைந்தசெலவில் தீர்வு காண்பதை விரிவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

**திரு. குமரி அனந்தன்:** சபாநாயகரவர்களே, குறிப்பாகக் கொத்தவால் சாவடியைப்பற்றி அந்தப் பதிலிலே சில விளக்கங்கள் எனக்குக் கிடைக்கும் என்று நான் கருதினேன். ஆனால் பொதுவாக உள்ள தகவல்கள் அனைத்தையும் நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் தந்தார்கள், நன்றி இதையும் நான் எதிர்பார்க்கிறேன். இங்கிருந்து 45 கிலோ மீட்டருக்கு அப்பாலே மறைமலைநகர் என்று சொல்லுகின்ற புதிய திட்டத்தை நமது அரசு எம். எம், டி. ஏ. யினுடைய உதவியோடு செய்வதற்குத் திட்டமிட்டு இருந்ததே, அது எதிர்பார்த்த அளவில் முன்னேறவில்லை என்ற குறிப்பு ஏதாவது உலக வங்கியினிடமிருந்து வந்துள்ளதா? அதனால் அதற்குப் பெற இருக்கின்ற உதவி நமக்கு மறுக்கப்படுகின்ற சூழ்நிலை உருவாக்கப்படுமோ என்ற அச்சம் இருக்கின்ற காரணத்தினாலே நாம் எடுக்கும் நடவடிக்கைகளெல்லாம் அதனைப் பெறுவதற்குரிய வகையிலே, முன்னேற்றம் அடைவதற்குரிய முயற்சிகளிலே அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, என்னிடத்தில் பொதுப்படையான அத்தகைய குறிப்புகளும், மொத்தமாக எவ்வளவு திட்டங்கள் ஒதுக்கப்பட்டன என்பதெல்லாம் இருக்கின்றன, மாண்புமிகு உறுப்பினரவர்கள் மறைமலையடிகள் நகரைப்பற்றித் தனியாகக் கேள்வி போடுவார்களேயானால் அதனுடைய முழு விவரங்களையும் தர இயலும்.

[முற்பகல் 9.30]

**திரு. ப. நெடுமாறன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பெரியார் வைகை பாசனத் திட்டத்திற்கு உலக வங்கியிடமிருந்து ரூ. 20 கோடியே 70 இலட்சம் பெறப் பட்டிருப்பதாகக் கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பிலே சொல்லப்பட்டிருக்





கிறது. அந்தக் குறிப்பிட்ட தொகைக்குள் அந்தத் திட்டம் முடிக்கப்பட்டுவிட்டதா? இல்லையென்றால் மேலும் உலக வங்கியிடமிருந்து கடன் பெற்று அந்தத் திட்டத்தை விரைவில் முடிப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பெரியாறு—வைகை பாசனத்திட்டத்தினுடைய மதிப்பீட்டளவே ரூ. 41.4 கோடி. அதிலே உலக வங்கியினுடைய உதவி ரூ. 20·70 கோடி. இதுவரை நாம் பெற்றுள்ள தொகை ரூ. 8.39 கோடி. மேற்கொண்டு நிதித் தொகை வரவேண்டியிருக்கிறது. அவ்வப்போது திட்டத்தினுடைய தன்மைகளை நாம் மத்திய அரசுக்கும் உலக வங்கிக்கும் தெரியப்படுத்தி மேற்கொண்டு பெற வேண்டிய தொகைகளை அவ்வப்போது பெற்றுக்கொண்டு வருகிறோம். இத்திட்டம், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பெரியாறு—வைகைப் பாசனத் திட்டங்களை நவீனப்படுத்துவது பற்றியதாகும். இத்திட்டத்தால் கால்வாய்களின் கரைகளை சிமெண்ட் கற்களைக் கொண்டு கட்டுவதன்மூலம் மீதமாகும் தண்ணீரைக் கொண்டு சுமார் 52 ஹெக்டேர் பரப்புப் பாசன வசதி கூடுதலாக பெறும், ஆகவே, ரூ. 41 கோடியே 4 இலட்சம் திட்டத்தினுடைய அளவிலே நாம் ரூ, 8.39 கோடி இதுவரை பெற்றுள்ளோம். மேற்கொண்டு பெற வேண்டியிருக்கிறது.

**திரு. ஏ. சி. சண்முகம்:** தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கட்டணத்தைப் போதிய அளவு ஏற்றவில்லையென்ற காரணம் சொல்லி, போக்குவரத்துக் கழகங்களுக்கு உலக வங்கி கொடுப்பதாக இருந்த கடன் தற்போது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்:** அது பற்றிய குறிப்பு இல்லை; தனிக் கேள்வி போடவும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை வளர்ச்சிப் பணியைச் சீரமைப்பதும் வலுப்படுத்துவதும் என்கிற வகையிலே ரூ 36.48 கோடி வாங்கியிருப்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது, எந்த, எந்த வகையிலே சீர்படுத்துகிறார்கள் என்பதையும், எந்த, எந்த மாவட்டத்திலே அமுல்படுத்தப்படுகின்றன என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்த ரூ 36.48 கோடி, போதிய அளவு பயிற்சி பெற்ற முழுநேர விரிவாக்கப் பணியாளர்கள் முறையாகப் பணி

களுக்குச் சென்று பார்வையிடல் என்ற அடிப்படையில் இந்தத் திட்டம் உலக வங்கியின் உதவியுடன் செயலுக்குக் கொண்டு வரப்படும். இப்புதிய ஏற்பாட்டில் வேளாண்மைத் துறை இயக்குநர் முதல் கிராம நல வளர்ச்சிப் பணியாளர் வரை ஒரே கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்படும், தனியாகக் கேள்வி போட்டால் அதனுடைய முழு விவரங்களைச் சொல்ல இயலும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது உலக வங்கியிடமிருந்து கடன் பெற வேண்டுமென்றால் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அத்தகைய நிபந்தனைகள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, உலக வங்கியினுடைய உதவி ஒரு திட்டத்திற்கு எவ்வளவு என்று மதிப்பிடப்பட்டு, அதை ஏற்றுக் கொண்ட பிறகு, அதில் 50 சதவீதம் முதல் 70 சதவீதம்வரை உலக வங்கியினர் தருகிறார்கள். ஆனால் அத் தொகை மத்திய அரசுக்குத்தான் நேரடியாக வழங்கப்படுகிறது. மத்திய அரசு அதை வாங்கி, மாநில அரசுகளுக்கு அளிக்கின்றது. உலக வங்கி அளிக்கும் கடன் வட்டியில்லாக் கடன். 40 ஆண்டு தவணைகளிலே திருப்பிச் செலுத்த வேண்டுமென்பது நிபந்தனை. பெறுகின்ற தொகையில் 30 சதவீதத்தை மத்திய அரசு தன்னுடைய வரவு—செலவு கணக்குகளுக்கு, மற்றவைகளுக்கு எடுத்துக் கொள்கிறது, மீதி 70 சதவீதத்தை மாநிலத்திற்கு அளிக்கிறது. அப்படி அளிக்கிறபொழுது 30 சதவீதத்தை மானியமாகவும், 70 சதவீதத்தைக் கடனாகவும் மத்திய அரசு மாநிலங்களுக்கு அளிக்கிறது. அந்தக் கடனுக்கு ஆண்டொன்றுக்கு 5½% வட்டி. அந்த வட்டி விகிதத்தில் 15 ஆண்டுகளில் அந்தக் கடனை நாம் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று இந்த நிபந்தனைகளின் அடிப்படையில், மத்திய அரசும் உலக வங்கியும் சேர்ந்து முடிவெடுத்ததற்குப் பிறகு, உரிய தொகையை, மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அனுப்பி வைப்பார்கள்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிடமிருந்து மத்திய அரசு மூலமாகக் கடன் பெற்று வழங்கப்படுகிறது என்று கூறப்படுகிறது. உலக வங்கி மத்திய அரசுக்கு என்ன வட்டிவீதத்தில் அந்தக் கடனைத் தருகிறது? மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு என்ன வட்டி வீதத்தில் அந்தக் கடனை வழங்குகிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். மத்திய அரசுக்கு வட்டியில்லாக் கடன்தான் தருகிறது. உலக வங்கி 40 ஆண்டுக் காலத்தில் திருப்பித் தர வேண்டுமென்பது உலக வங்கியினுடைய நிபந்தனை, ஆனால் மத்திய அரசு மாநிலங்



களுக்குத் தரும்போது அதில் 30 சதவீதத்தைத்தான் எடுத்துக் கொண்டு, 70 சதவீதத்தைத்தான் அளிக்கிறது. அந்த 70 சதவீதத்தில் 30 சதவீதத்தை மானியமாகவும் 70 சதவீதத்தைக் கடனாகவும் தருகிறது, கடனாகத் தருகிற தொகைக்கு 5½ சதவீதம் வட்டி என்ற வகையில், 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் தருகிறது.

ரயில் மூலம் வந்த ஸ்பிக் யூரியா மூட்டைகள்

*வினா எண் 64 திரு. கு. ப. பழனியப்பன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) விழுப்புரத்தில் தமிழ்நாடு கிடங்கு வசதி கார்ப்பரேஷனுக்கு ரயிலில் வந்த ஸ்பிக் யூரியா 680 மூட்டைகள் டெலிவரி எடுக்கப்பட்டு கிடங்குக்கு வந்து சேரவில்லை என்று வழக்கு பதிவாகியுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த மேல் நடவடிக்கை விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) இச்செயலுக்குக் காரணமாகஇருந்த ஏற்றி இறக்குதல் மற்றும் போக்குவரவு செய்யும் ஒப்பந்தக்காரர், திரு. ஆர். ஜோதிப்பிரகாசம் மீது காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. காவல் துறையினர் திரு ஜோதிப்பிரகாசத்தினை 15.12.1980–ம் நாளன்று கைது செய்து, நீதி மன்றத்தில் ஒரு வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். 680 மூட்டை ஸ்பிக் யூரியாவின் கிரயமான ரூ. 68,000/– (ரூபாய் அறுபத்தெட்டாயிரம் மட்டும்) மேற்கூறிய ஒப்பந்தக்காரரிடம் வசூல் செய்து அதனை வைப்புத் தொகையாக நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டுள்ளது. வழக்கு நீதி மன்றத்தின் விசாரணையில் உள்ளது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீதும் துறை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற ஒழுங்கீனங்கள் மீண்டும் நிகழா வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு. கு. ப. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 680 மூட்டை யூரியாவின் கிரயம் ரூ. 68,000 ரூபாயையும் சோலியனூர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக துணைச் செயலாளர், டிரான்ஸ்போர்ட் கான்ட்ராக்டர் திரு. ஜோதிபிரகாசம் அவர்களும் அவருக்கு உடந்தையாக இருந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திரு. கிருஷ்ணன் அவர்களும், வாக்குமூலம் கொடுத்து, அதற்குப் பிறகு அந்தப் பணம் செலுத்திவிட்ட பிறகு, அங்கே உள்ள ஊழியர்களின் பேரில் புதிதாக வழக்கு திருப்பிவிடப்பட்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

[1981 ஆகஸ்ட் 26

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நல்லது செய்பவர்களும், கெடுதல் செய்பவர்களும் எல்லாக்கட்சியிலும் இருக்கிறார்கள். கணக்குப் பார்த்தால் எல்லா கட்சியிலும் தவறு செய்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலும் இருக்கக் கூடும், திராவிட முன்னேற்றக் கழகத்திலும் இருக்கக் கூடும். அவர் யாராக இருந்தாலும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டு ஆகும் இது. ஆகவே அவர்கள் சொல்லுகிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தவரையும் இந்த அரசு விட்டுவிடவில்லை என்பதும் தெரிகிறது. அவர்களை கைது செய்து வழக்கு தொடரப்பட்டு நீதிமன்றத்தில் 68 ஆயிரம் ரூபாய்கள் செலுத்தப்பட்டிருக்கிறது. தீர்ப்பு வந்ததற்குப் பிறகுதான் இது பற்றி முடிவுக்கு வரும்.

அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் மீது சர்வீஸ் விதிகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாகராஜன், தேவன் என்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறது. விசாரணை முடிவில் எங்கே தவறு ஏற்பட்டிருக்கிறது, அந்தத் தவறுக்கு யார் காரணம் என்று பார்த்து அவர்களுக்குத் தண்டனை வழங்குவது இந்த அரசின் நோக்கம். அந்த அடிப்படையில்தான் இந்த வழக்கு கவனிக்கப்பட்டு வருகிறது.

**திரு கு. ப. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அமைச்சர் சொன்னதற்கு நன்றி. இதேபோல கிடங்கு வசதிக் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில், திருவண்ணாமலையில் 2,48,000 ரூபாய்களும் ராணிப்பேட்டையில் 34,000 ரூபாய்களும் மதுராந்தகத்தில் 28,000 ரூபாய்களும்—இப்படிப்பட்ட அளவில் ஒழுங்கீனங்கள் நடைபெற்றிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. ஆனால் அதில் முழுமையாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. அங்கே ஒழுங்கீனங்கள் நடைபெற்று, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமானால், அதனுடைய முழு குறிப்புகளையும் நான் தெரிவிக்கிறேன், தனிக்கேள்வி போட்டால் முழு விவரத்தையும் கொடுக்க ஆயத்தமாக இருக்கிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** தலைவர் அவர்களே, இந்த 68 ஆயிரம் ரூபாய்களும் வைப்பு நிதியாக கோர்ட்டிலே செலுத்தப் பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், அந்தப் பணம் அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய பணம். தவறு செய்தவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டியது அவசியம். ஆனால் ஏன் அந்த நிதியை அரசாங்கம் எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறது. அதை எடுத்துக் கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



1981 ஆகஸ்ட் 26]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, வழக்குமன்றத்தில் இந்த வைப்புத்தொகை வைக்கப்பட்டிருக்கிறது. வழக்கு முடிந்ததற்குப் பிறகு, அவர்கள் எதிர் வழக்காடுகிறார்கள். அவர்கள் வழக்காடி முடிந்ததற்குப் பிறகு, நீதி மன்றத்தின் தீர்ப்பு வந்ததற்குப் பிறகு, அந்தப் பணம் அரசாங்கத்திற்கு அனுப்பப்படும். நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு நாம் கட்டுப் படவேண்டும். வைப்புத் தொகையை நீதி மன்றத்தில் வைக்க வேண்டும் என்று சொல்லியிருப்பதன் காரணமாக இங்கே வைக்கப்பட்டு இருக்கிறது. அது அரசாங்கத்திற்கு உரிய பணம், அரசாங்கத்திற்கு வரவேண்டிய பணம்தான்.

**மணவிழாக்களில் அளிக்கப்படும் விருந்திற்கான கட்டுப்பாடு.**

*வினா எண். 65 திரு ரா உமாநாத் மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

மணவிழாக்களில் அறுசுவை விருந்து அளிப்பது சம்பந்தமாக நூறுபேர்களுக்கு மட்டுமே என்ற கட்டுப் பாட்டை விதிக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தற்போது கட்டுப்பாடு விதிக்கும் செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ரா. உமாநாத்:** தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையானது ஐடியலிஸ்டிக்காக வந்ததல்ல. வரதட்சணை முறைகளில் இன்று ஏராளமான குடும்பங்கள் போண்டியாகிக் கொண்டு வருவது நமக்கெல்லாம் தெரியும். அதேபோல சீர்வரிசைகள் என்ற பேரால் எத்தனையோ குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதும் தெரியும். இந்த முறை ஆரம்பக் காலத்திலே திருமணத்திற்கு வந்தவர்களுக்கு மரியாதை கொடுப்பதற்கு ஒரு பீஸ்ட் கொடுப்பது என்பது வழக்கமாக இருந்தது. ஆனால் அதுவே இப்போது ஒரு நிபந்தனையாக—இத்தனை ஆயிரம் பேர்களுக்கு விருந்து போட வேண்டும் என்ற நிபந்தனை இருப்பதால் பல குடும்பங்கள் பாதிக் கப்பட்டிருக்கின்றன. இது குறித்து 60 பேர்கள் கையெழுத்திட்டு மாதர் சங்கத்தினைச் சேர்ந்தவர்கள் சர்க்காரிடத்திலும், முதலமைச்சரை நேரில் சந்தித்தும் கோரிக்கை கொடுத்திருக் கிறார்கள். அந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்ய என்ன குறுக்கே நிற்கிறது? அதைப் பரிசீலனை செய்யாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

[முற்பகல் 9.40]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமண விழாக்களில் விருந்து அளிப்பதில் கட்டுப்பாடு விதிக்கிற முறைகள் எற்கனவே இரண்டு, மூன்று முறைகள் இருந்தன. 1965-லிருந்து 1970 வரை தமிழகத்தில் இருந்தது. சாதாரண விருந்துகளுக்கு 50 பேரை வரவழைக்கலாம் என்றும் திருமணம் மற்றும் இறுதி சடங்கு போன்ற நேரங்களில் 200 பேரை அழைக்கலாம் என்றும் இருந்தது. சட்டம் இருந்தாலும் நடைமுறைப்படுத்த முடியாமல் இருந்தது.

எனவே 1970 ஆம் ஆண்டு அந்த சட்டம் நீக்கப்பட்டது. மறுபடியும், நெருக்கடி நிலை வந்த பிறகு 1976-லிருந்து 1978 வரையில் அந்த சட்டம் கொண்டு வரப்பட்டது. அதிலே இருக்கிற நோக்கம் நல்ல நோக்கம்தான். இப்படி ஒரு கட்டுப் பாட்டை கொண்டு வருவோமானால் அதிக பணம் விரயம் ஆகாமல் இருக்கும். திருமணம் செய்பவர்களும் சட்டத்தைச் சுட்டிக் காட்டி சிக்கனத்தை கடைப்பிடிக்கலாம். இதை சில பேர்கள் மீறுகிறார்கள். தடை செய்ய முயல்கிற போது ஏமாற்றுகள் எல்லாம் நடைபெறுகின்றன. சில நேரங்களில் நிரபராதிகள் அகப்பட்டுக் கொள்கிற நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல மீண்டும் பரிசீலிக்கலாம் என்றாலும் இவ்வளவு சங்கடங்கள் எல்லாம் வருகின்றன. நடைமுறைப்படுத்த முடியவில்லை என்பதால் தான் கொண்டு வரவில்லையே தவிர நோக்கத்தைப் பற்றி தவறு இல்லை.

திரு ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு சட்டங்களில் நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் இருக்கிற போது சிக்கலை நீக்க அந்த ஆக்ட்டை 'ஸ்ட்ரென்த்தன்' பண்ணுகிற நடவடிக்கையைத்தான் எடுப்பார்கள். ஏற்கனவே இரண்டு முறை கொண்டு வரப்பட்டது என்றும், அதை நடைமுறைப்படுத்துவதில் சங்கடங்கள் இருந்தன என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தக் கஷ்டங்களை நீக்கி 'ஸ்ட்ரென்த்தன்' பண்ணி ஒரு ஆக்ட் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுசெழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிலை ஏற்பட்டு பல நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கிற இந்த சூழ்நிலையில் இதுபற்றி நாம் யோசித்தோம். கட்டுப்பாடு விதிப்பதில் ஏற்படும் சங்கடங்களை எண்ணித்தான் நிறைவேற்ற முடியாமல் போனது. காலம் வருகிற போது மீண்டும் பரிசீலனை செய்து இதுபற்றி நடவடிக்கை எடுக்கலாமா என்பதை ஆராயலாம்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டபோது அதை 8 ஆண்டுகளில் மீறியவர்கள் எத்தனை பேர்கள்....
(மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்.—அதற்குத் தனி கேள்வி போடவும்.

திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டம் இருக்கிற காலத்தில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் அன்புக்கு பாத்தியமானவரும், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவருமான ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களின் மகன் திருமணம் நடந்தது. அந்த திருமணம் நடக்கும் போது (மணியடிக்கப்பெற்றது)

பதாகை ... விடை—இல்லை



திரு பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண விழாக்களில் அறுசுவை விருந்து அளிப்பதை நூறு பேர்களுக்கு மட்டுமே என்று கட்டுப்பாடு தேவை என்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொன்னார்கள். நாட்டிலே பல வசதி படைத்தவர்கள் ஏழை எளியவர்களுக்கு, உணவு அளிக்க வேண்டுமென்று எண்ணி மணவிழா காலத்தில் ஏற்பாடு செய்கிறார்கள். கட்டுப்பாடு கொண்டு வந்தால் திருமண விழாக்களில் ஏழை, எளியவர்களுக்கு விருந்து அளிக்க வேண்டும் என்று நினைக்கிறவர்களுக்கு அது முடியாமல் போகும்; அதே நேரத்தில் அறுசுவை விருந்தை சாப்பிடுகிற ஏழை, எளியவர்களுக்கும் ஒரு பாதிப்பு ஏற்படும். ஆகவே இதைப்பற்றி திட்டவட்டமாக ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பல்வேறு சங்கடங்களில் மாண்புமிகு உறுப்பினர் பாபு ஜனார்த்தனன் அவர்கள் குறிப்பிட்டதும் ஒன்று. கட்டுப் பாட்டைக் கொண்டுவர வேண்டுமென்றால் ஏழை எளிய நடுத்தர மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதில் இருக்கிற சங்கடத்தை நான் குறிப் பிட்டேன். அது ஆராயப்பட வேண்டும்.

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, திருமண விழாக் களில் அறுசுவை உணவு அளிப்பதற்குப் பதிலாக வருகிறவர் களுக்கு தாம்பூலம் கொடுத்து அனுப்புவதோடு ஒரு இனிப்புப் பொட்டலத்தை மட்டும் கொடுக்க சட்டம் கொண்டுவரப்படுமா? அது மக்களுக்கு அறிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, திருமணத்திலே இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டும், அல்லது இப்படித்தான் நடத்த வேண்டுமென்று கட்டாயம் கிடையாது. அதற்கு சட்டமும் கிடையாது. அவரவர் விருப்பப் படி திருமணத்தை நடத்திக்கொள்ளலாம். இப்போது பலர் நாம் செல்லுகின்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள். திருமண விழாக்கள் 15 நாட்கள் நடத்துவது போய், 9 நாளாகி, அது 5 நாளாகி, பின்னால் 3 நாளாகி. ஒரு நாளாகி, இப்போது ஒரு மணி நேரமாகவும் வந்திருக்கிறது. காலை டிபனோடு திருமண நிகழ்ச்சி முடிந்துவிடுகிற அளவுக்கு வந்திருக்கிறது; அது அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது; சட்டம் போட்டு நடைமுறைப்படுத்த வேண்டிய நிலை இல்லை.

திருவில்லிப்புத்தூரில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உடன் உதவி.

* வினா எண்—66 திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1981 ஆகஸ்ட் 26

(அ) திருவில்லிப்புத்தூர் டவுன் மேட்டுத் தெருவில் 19-3-1980-ல் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட ஏழை பொது மக்களுக்கு மேற்படி வீடுகளைத் திரும்ப எடுத்துக் கட்ட கடன் உதவி செய்யும் பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கடன் உதவி கிடைக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) மற்றும் (ஆ): தீ விபத்தில் பாதிக்கப்பட்ட ஒன்பது நபர்களுக்கும் பாதிக்கப்பட்ட அவர்களது வீடுகளைத் திரும்பக் கட்ட தலா ரூ. 2,000 தக்காவிக் கடனாக வழங்கப்பட்டது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, எத்தனைக் குடும்பங்களுக்கு மொத்தம் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, பாதிக்கப்பட்ட குடும்பங்கள் 9. 9 குடும்பங்களுக்கும் தலா 2,000 ரூபாய் வீதம் கொடுக்கப்பட்டது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, 2,000 ரூபாய் கடன் கொடுக்கப்படுகிறது. இது கூலி கொடுபதற்குக்கூட போதாது. ஆகவே, இந்தத் தொகையை உயர்த்திக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? பிற்பட்ட சமுதாயத்தினருக்கு கொடுக்கும் கடனுக்கு வட்டி வசூலிக்கப்படுகிறது. அவர்களுக்கும் வட்டி இல்லாமல் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இன்றைக்கு இருக்கிற அரசின் சட்டப்படி ஆதி திராவிடர் மக்களுக்கு மட்டும் வட்டியில்லா கடன் வழங்கப்படுகிறது; மற்றவர்களுக்கு முற்போக்கு வகுப்பு பிற்போக்கு வகுப்பு என்று பார்க்காமல் எல்லோருக்கும் வட்டியுடன் கடன் கொடுக்கப்படுகிறது.

திருமதி டி. யசோதா: தலைவரவர்களே, ஸ்ரீவில்லிப்புத்தூர் போலவே சேத்துப்பட்டிலே தீ விபத்து ஏற்பட்டதற்கு எந்த அளவுக்கு வீடு கட்ட வசதி செய்து கொடுக்கப்பட்டது, என்ன உதவி செய்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தீ விபத்து ஏற்பட்டால் அன்றோ அல்லது மறுநாளோ சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரடியாக 200 ரூபாயும், வேட்டியும், சேலையும், அரிசியும் கொடுக்கிறார்கள். அப்படி எங்காவது கிடைக்கவில்லை என்று சொன்னால் ஏன் கிடைக்கவில்லை என்று விசாரித்து சொல்கிறேன்; அல்லது உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன். தீ விபத்து ஏற்படுகின்ற இடங்களில் எல்லாம் தக்காவி கடன் கொடுக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. எங்காவது கிடைக்கவில்லை என்று சொன்னால் கிடைக்க ஏற்பாடு செய்கிறேன்.



1981 ஆகஸ்ட் 26]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவரவர்களே அமைச்சரவர்கள் உடனடியாக 200 ரூபாயும், அரிசியும், வேட்டி, சேலையும் கொடுப்பதாகச் சொன்னார்கள். அதேபோன்று கொடுத்தும் வருகின்றார்கள் வரவேற்கிறேன். அதோடு 2,000 ரூபாய் அரிசனங்களுக்கு வட்டியில்லா கடனாகவும், தக்காவி லோனும் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அது நடைமுறையில் இல்லை. பல இடங்களில் மக்கள் அந்த உதவி கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் உடனடியாக தக்காவி லோன் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, பொதுவாக சொல்லாமல் எந்த ஊரில் யாருக்கு கிடைக்கவில்லை என்று சொன்னால் உடனே சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்புகொண்டு, என்ன காரணம் என்று கேட்கிறேன்.

திருமதி த. இராசாம்பாள்: தலைவரவர்களே, மாடுகள் வைத்து பால் கறந்து விற்றுக்கொண்டிருந்த ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் 2,000 ரூபாய் பெறுமானமுள்ள வைக்கோல் போர் வைத்திருந்தார். அது அவருக்குத் தெரியாமல் திடீரென்று தீப்பற்றி எரிந்துவிட்டது. அதோடு ஒரு கன்றும் ஒரு கறவை எருமை மாடும் சேதம் அடைந்துவிட்டன. அதனால் அவருக்கும் இந்த தீ விபத்து உதவிகள் அளிக்கப்படுமா? அவர் அதை நம்பி வாழ்க்கை நடத்திவரும் ஒரு ஏழை என்பதால் அவருக்கும் இந்தச் சட்டம் பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.50]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிலுள்ள குடிமக்கள் எல்லோருக்கும் ஒரே மாதிரியாகத்தான் சட்டம் பொருந்தும்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, இந்துக் கேள்வி மிக முக்கியமானது. பொதுவாக தீ விபத்து என்பது ஊரைச் சுற்றி இருக்கக்கூடிய பகுதிகளில் வாழ்கின்ற ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் தான் ஏற்படுகின்றது. தீ பிடித்த இடங்களுக்கு 200 ரூபாய் உதவி செய்யப்படுகின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போன்று வேஷ்டி, சேலை போன்றவையும் அரிசியும் கொடுக்கப்படுகின்றது. ஆனால் இது எல்லா இடங்களிலேயும் கொடுப்பது இல்லை. சில இடங்களில் மட்டும்தான் கொடுக்கிறார்கள். இதிலே இருக்கின்ற சிக்கல் என்னவென்றால் அந்த வீடுகள் எல்லாம் பெரும்பாலும் புறம்போக்குப் பகுதிகளில்தான் கட்டப்பட்டிருப்பதால் பட்டா இல்லாதவர்களுக்கு இந்த உதவிகள் செய்யப்படுவதில்லை. அதிகாரிகள் பட்டா வேண்டும் என்றும் 2 சென்ட் பட்டா இருக்கவேண்டும் என்றும் சொல்கிறார்கள். அப்போதுதான் உதவிகள் செய்யப்படும் என்றும் சொல்

கிறார்கள். மேலும் கொடுக்கப்படுகின்ற 200 ரூபாயை வைத்து நான்கு நாட்களுக்கு வேண்டுமானால் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் நிரந்தரமாக வீடு இல்லாமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கேள்வி நேரம் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. என். பழனிவேல்:** வேடசந்தூர் தொகுதியிலே தொப்பம்பட்டி என்ற இடத்திலே சென்ற 15 நாட்களுக்கு முன்பு 85 வீடுகள் தீப்பிடித்து எரிந்துவிட்டன. அந்த இடத்திற்கு நேரிலேயே நான் சென்று பார்த்தேன். அங்கே 200 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வீடு கட்டிக் குடியிருக்கின்ற வகையிலே திட்டவட்டமாக அமைச்சரவர்கள் ஏதாவது அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, நீண்ட கேள்விகளை இப்படி உறுப்பினர் அவர்கள் கேட்டால் அவை அத்தனையையும் நினைவில் வைத்துக்கொண்டு எப்படி பதில் சொல்வது என்பது தெரியவில்லை. இருந்தாலும் நான் முயற்சி செய்கிறேன். சில இடங்களில் தான் அரிசி, வேஷ்டி கொடுக்கிறார்கள், சில இடங்களில் தரவில்லை என்று சொன்னார்கள். ஆனால் எல்லா இடங்களிலும் கொடுக்கப்படும். எங்கே கொடுக்கவில்லை என்று சொன்னால் அதுபற்றி விசாரிக்கிறேன். ஆனால் அவர்களே ஒத்துக் கொண்டார்கள் உடனடியாகப் பணம் கொடுத்தார்கள் என்று. ஆகவே பணம் கொடுத்திருப்பார்கள், வேஷ்டி, சேலையும் கொடுத்திருப்பார்கள். ஒருவேளை மண்ணெண்ணெய் கொடுக்காமல் இருந்திருப்பார்களோ என்னவோ எனக்குத் தெரியாது.

இரண்டாவது உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், கடன் வழங்குவதைப் பொறுத்தவரையில் சொந்தமாக நிலம் இல்லை என்றால் கொடுப்பது இல்லை என்று. அந்த மாதிரி வீடு கட்டி இருப்பவர்கள் அரசு புறம் போக்கு நிலங்களிலும் மற்ற புறம்போக்கு நிலங்களிலும் ஆக்கிரமித்து வீடுகளைக் கட்டி இருப்பதால்தான் இப்படிப்பட்ட சங்கடங்கள் வருகின்றன. ஆகவே அவர்களுக்கு எங்கே வீடு கட்டிக் கொடுக்கிறார்களோ அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் வீடு கட்டிக்கொள்ளுங்கள் என்று கடனைக் கொடுத்தால் ஏதாவது ஒரு இடத்திலே போய் ஆக்கிரமிப்பு செய்வார்கள், அதை அங்கீகாரம்செய்தது மாதிரி ஆகிவிடும். ஆகவே இதிலே சட்ட சிக்கல் இருக்கின்றது. அது பற்றி அரசு யோசிக்கும்.

### குடவாசலை தனி வட்டமாக்கும் திட்டம்

*வினா எண். —67. திரு. இரா. இராசமாணிக்கம், திரு நன்னிலம் அ. கலையரசன். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம், குடவாசலை வட்டமாக அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** (அ) மற்றும் (ஆ); தலைவர் அவர்களே, 1-8-81 முதல் குடவாசல் வட்டம் அதிகாரம் பெற்ற வருவாய் வட்டமாக செயல்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசலைத் தனி வட்டமாக அமைக்க வேண்டும் என்று 3-7-1979 அன்று நான் அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறேன். 12-9-79 அன்று அரசினிடத்திலிருந்து எனக்கு கிடைத்த கடிதத்தில் 'தங்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படுகின்றது' என்று தெரிவித்திருக்கிறார்கள். என்னுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு அது தனி வட்டமாக அமைத்துக் கொடுக்கப்பட்டதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடவாசல் தனிவட்டமாக அமைக்கப்பட்டு அதனுடைய அலுவலகத் தொடக்க விழா 18-8-81 அன்று நடைபெற்றது. அந்த விழாவிற்கு அழைப்பிதழில் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பெயரைக் கூட அச்சடிக்கவில்லை. அந்த விழாவிற்கான அழைப்பு விழா நடக்கின்ற அன்று மதியம் தான் தபாலில் எனக்குக் கிடைத்தது. ஆகவே இப்படி எல்லாம் தொகுதியிலே நடக்கின்ற நிகழ்ச்சிகளுக்குக்கூட எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை அழைக்கவேண்டாம் அல்லது அவர்களுக்கு தெரிவிக்க வேண்டாம் என்று அரசின் அதிகாரிகளுக்கு ஏதாவது உத்தரவு தரப்பட்டுள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு எப்படி பதில் சொல்வது என்று தெரியவில்லை. ஏனெனில் நான் பதில் சொல்கிறபோது, யாராவது அந்தப் பதிலைக் கேட்டு வருத்தப்படுவார்களோ என்ற அச்ச உணர்வு எனக்கு இருப்பதுதான் காரணம். நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு வந்த பிறகு, அரசு நடத்தும் நிகழ்ச்சிகள் எதுவாக இருந்தாலும் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை, அருகாமையில் இருக்கிற மேலவை உறுப்பினர்களை, அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும் அவர்கள் பெயரை அழைப்பிதழில் போடவேண்டும், அவர்களை அழைக்க வேண்டும் என்கிற ஒரு நடவடிக்கையை எடுத்து வருகிறது. ஆனால் சில இடங்களிலே அப்படி இல்லை என்று சொல்கிறார்கள். பல இடங்களில் அப்படி பெயர்கள் போடப்பட்டு, அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் அழைப்பையும் பார்த்தேன். சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று தான் போட்டிருக்கிறது.

அங்கே திராவிட முன்னேற்றகழக சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் அல்ல. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகசட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். நான் ஒன்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேருவதற்கு முன்னாலே பேராவூரணி என்ற இடத்தில் பொது மருத்துவமனை கொண்டு வர வேண்டும் என்று அனைவரும் பாடுபட்டோம். முயற்சிகள் எடுத்து அது வந்தது. அப்போது நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தேன். அதற்கு விழா எடுக்கையில், பேராசிரியர் அவர்கள் தலைமை தாங்கினார்கள். அந்தச் சமயத்தில்தான் நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தேன். அப்படி சேர்ந்ததாலேயே பேராசிரியர் வருகின்ற அந்த விழாவின் அழைப்பிதழில் என்னுடைய பெயரை போடவில்லை.

அப்படி என்னுடைய பெயரைப் போடாததின் காரணமாக அங்கே இருப்பவர்கள் கருப்புக் கொடி காட்ட வேண்டும் என்று முயற்சி செய்தார்கள். நான் பேராசிரியர் வருகிறபோது எப்படி கருப்புக் கொடி காட்டுவது அதெல்லாம் வேண்டாம் என்று தடுக்க முயற்சி செய்தேன். ஆனால் என்னுடைய முயற்சிகளையும் மீறிவிடுவார்கள், என் முயற்சி தோல்வி அடைந்துவிடும் என்ற நேரத்தில், பஞ்சாயத்து உறுப்பினர்கள் மட்டும்தான் கருப்புக் கொடி காட்டலாம். என்று முடிவு எடுத்தேன். அதன் காரணமாக 27 பஞ்சாயத்து உறுப்பினர்கள் 28 நாள் ஜெயிலில் இருந்தார்கள். அப்படி ஜெயிலில் இருந்தவர்களில், இப்போதைய சட்டமன்ற உறுப்பினர்களில் திருமாறனும் ஒருவர், கோவேந்தனும் ஒருவர், முன்னாளைய சட்டமன்ற உறுப்பினர்களான குழ. செல்லையா அவர்களும், அதில் இருந்தார்கள். இன்னும் திருவாளர்கள் வீராச்சாமி, சுப்பிரமணியம் போன்றவர்களும் அதில் பங்கு கொண்டார்கள். சிறையில் இருந்தார்கள். இதை ஏன் எடுத்து சொன்னேன் என்றால், அந்த நிலைமைகள் எல்லாம் மாறி.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுருக்கமாகக் கேள்விக்குப் பதில் கூற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, இதை ஏன் இவ்வளவு விளக்கமாகச் சொன்னேன். என்றால், இந்த அரசு ஆட்சிக்கு வந்தபிறகுதான் சட்டமன்ற உறுப்பினர்களையும, நாடாளுமன்ற உறுப்பினர்களையும் புறக்கணிக்கவில்லை, அவர்களை அழைப்பதோடு அழைப்பிதழ்களிலும் அவர்களின் பெயர்கள் போடப்படுகிறது. அது மட்டும் அல்லாமல், அங்கே பதிக்கப்பெறுகிற கல்வெட்டுகளில் கூட அவர்கள் பெயர்கள் போடப்படுகிறது நான் வேண்டுமானால் காண்பிக்கத் தயாராக இருக்கிறேன் இன்னும் சொல்லப் போனால் 1957 லிருந்து 1967 வரையிலும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள்தான் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தார்கள். (குறுக்கீடு)



அவர்கள் காலத்திலும் சரி, காங்கிரஸ் ஆட்சியின் காலத்திலும் சரி, இவ்வாறு பதிக்கப்பெறுகிற கல்வெட்டுகளில் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களைப் போடவில்லை. அவைகளை இன்றும் போய் பார்த்தால் தெரியும். ஆனால் நாங்கள் போட்டிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுப்பப்பட்ட கேள்வி, தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம், குடவாசலை வட்டமாக அமைக்கும் திட்டம் பற்றி எங்களுடைய கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜமாணிக்கம் அவர்கள் குடவாசல் பகுதியை சேர்ந்தவராக இருப்பதால் சட்டமன்ற உறுப்பினரின் பெயரை அழைப்பிதழில் போடாமல், பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்கள் என்று அச்சிடப்பெற்றிருப்பதின் காரணமாக, சட்டமன்ற உறுப்பினர்களுடைய உரிமை பாதிக்கப்படவில்லையா என்ற கேள்விக்கு. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அவருடைய பெயர் போடவில்லை என்பதை இத்தோடு ஒப்பிட்டுக் காட்டினார்.

[முற்பகல் 10.00]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. க. அன்பழகன்:** நாடாளுமன்ற உறுப்பினர்கள் மரியாதைக்காக, 'கர்ட்டிஸி' என்ற முறையில் அழைக்கப்படுகிறவர்கள்' சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழக அரசினுடைய எல்லா விதமான செயல்களிலும் அல்லது அரசு மேற்கொள்கிற கடமைகளிலும் பங்கு பெறுகிறவர்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகள் மறுக்கப்படுவது நியாயந்தானா என்ற கேள்விக்கு பதில் சொல்லும்போது அந்த மாதிரி நாடாளுமன்ற உறுப்பினர்கள் விட்டுப் போனதை, ஒரு பழைய கதையைச் சொல்லி அதைப் பதிலாகத் தருவார்களானால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிய மரியாதையையும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள நியாயமான உரிமைகளையும் பாதுகாக்கும் கடமை உணர்வோடு இந்த அரசாங்கம் செயல்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** கேள்வி நேரத்தை கேள்வி-பதில் நேரமாக்காமல் விவாதத்தை அனுமதித்திருக்கிறீர்கள். அது உங்களுக்கு இருக்கிற தனிப்பட்ட அதிகாரம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் கேள்விக்கு தொடர்புள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, அதில் மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர், இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்— எல்லாயிடங்களிலும் பெயர்கள் போடுகிறபோது பெயர்கள் போடப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் பெயர்கள் இதுவரை எல்லா இடங்களிலும் போடப்

பட்டிருக்கிறது. ஆனால் இங்கே போடுகிறபோது சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று பொதுவாக போட்டிருக்கிறார்களே தவிர பெயர்கள் போடாமல் இல்லை. அவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அரசாங்க விழா எங்கிருந்தாலும் எம். எல். ஏ. க்கள், எம். பி. க்கள் பெயர்கள் அவசியம் போட வேண்டுமென்று சி. எம். உத்தரவு இட்டிருக்கிறார்கள். அதை சி. எம். சொல்லச் சொன்னார்கள். அதை இங்கே சொல்லிவிடுகிறேன். உங்களுக்கு நான் ஒன்று தெரிவித்துக்கொள்வேன். நான் ஒரு சமயம் இங்கே சென்னையில் இல்லாதபோது ஒரு அரசாங்க நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் பெயர் அழைப்பிதழில் போடவில்லை. அந்தச் சட்டமன்ற உறுப்பினர் நேரடியாக என் நேர்முக உதவியாளரிடத்தில் பேசுகிறபோது என் நேர்முக உதவியாளர் நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் சொல்லி அவர் பெயரைப் போட்டுத்தான் அழைப்பிதழ் வெளியிடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள் என்றால் எங்கள் கொள்கை என்ன என்பது நன்கு தெரியவரும். நான் இல்லாதபோது கூட என் நேர்முக உதவியாளரிடம் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொலைபேசியில் பேசியபிறகு இங்கே எனக்கு முன்னால் இருக்கிறார்கள் அந்த திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் — அவர்கள் பேசிய உடனே அடிக்கப்பட்ட அழைப்பிதழ்களை கீழே வைத்து விட்டு புதிதாக அடித்துப் போடவேண்டும் என்று என் நேர்முக உதவியாளர் சொல்கிற அளவிற்கு இருந்தால் அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பது இதிலிருந்து நன்றாகத் தெரியும்.

திரு. நன்னிலம் அ. கலையரசன்: திருவாரூர், நன்னிலம், குற்றாலம் தொகுதியைச் சார்ந்த கொடவாசலை தாலுகாவாக ஆக்கிய இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பத்து ரெவின்யூ பிர்க்காக்கள் கொண்ட நன்னிலத்திலிருந்து நான்கு ரெவின்யூ பிர்க்காக்கள் கொடவாசல் தாலுகாவாக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே கொடவாசல் துணை வட்ட அலுவலகம் இருந்தது. அதேபோது நன்னிலத்தைச் சேர்ந்த திருமருகல் ஊராட்சி ஒன்றியத்தின் தலைநகரம். அங்கே துணை வட்டாட்சியர் அலுவலகம் திறக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இப்போது எந்தத் துணை வட்டங்களை வட்டங்களாக்கினாலும் அதற்கு உத்தரவை போடுகிறபோது ஒருங்கிணைந்த உத்தரவாக, காம்ப்ரிஹென்ஸிவ் ஜீ. ஓ. ஆகத்தான் இப்போது போடப்படுகிறது. எல்லா விதமான ஏற்பாடுகளையும் அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொப்பூருக்கு அருகில் தொப்பை ஆற்றின் குறுக்கே கட்டப்படும் அணை**

*** வினா எண். 75 — திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?**



(அ) தர்மபுரி தொகுதி தொப்பூருக்கு அருகில் தொப்பை ஆற்றின் குறுக்கே கட்டப்படும் அணையினால் தர்மபுரி மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ): தர்மபுரி மாவட்டத்தில் 2,050 ஏக்கரும், சேலம் மாவட்டத்தில் 3,280 ஏக்கரும் பாசன வசதி பெறும்.

**குப்பநத்தம் அருகே செய்யாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.**

*வினா எண். 76—திரு. தா. சாமிக்கண்ணு: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வடாற்காடு மாவட்டம் செங்கம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள குப்பநத்தம் என்னுமிடத்தில் செய்யாற்றின் குறுக்கே அணை கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன் விபரங்கள் யாவை?

(இ) அணை கட்டும் பணிகள் எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: (அ), (ஆ) மற்றும் (இ) செய்யாற்றின் குறுக்கே பாலாறு வடிநிலத்தில் உள்ள குப்பநத்தம் அணைத்திட்டம் தலைமைப் பொறியாளரின் (ஆய்வு) பரிசீலனையில் உள்ளது. தற்போது பாலாற்றிலும், செய்யாற்றிலும் பல இடங்களில் டிசம்பர் 78 முதல் நடந்து வரும் நீர் அளவைப் பணிகள் மொத்தம் 5 ஆண்டுகள் நடத்தப்பட வேண்டும். இப்பணிகள் இவ்வடிநிலத்தில் உபரி நீர் உள்ளது என்று தெரிந்தால் இந்தத் திட்டம் விரிவான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாற்றின் அருகே குப்பநத்தம் அணைக்கட்டுத் திட்டம் அரசின் ஆய்விலே இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி அந்த அணைக்கட்டு கட்டும்போது, தண்டரை அணைக்கட்டிற்கான அந்த பாசன ஆயக்கட்டு பாதிக்கப்படாமல் இருக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, குப்பநத்தம் அணைக்கட்டுத் திட்டத்தை எடுத்துக் கொள்ள முடியுமா என்பதே 1983 ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் தெரியும். அப்போதுதான் எவ்வளவு உபரி நீர் கிடைக்கும் என்பது தெரியும். அப்படி உபரி நீர் இருந்தாலும், ஏற்கனவே இருக்கின்ற ஆயக்கட்டு பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும் என்பதைக்

கவனத்திலே கொண்டுதான், உபரி நீரைப் பயன்படுத்துவதற்காக திட்டம் முடிவு செய்யப்படும். ஆகவே, நிச்சயமாக ஏற்கனவே இருக்கின்ற ஆயக்கட்டுகள் பாதிக்கப்படாது.

## திருமங்கலம் அரசினர் ஆண்கள் உயர் நிலைப்பள்ளி

***வினா எண். 68—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—**

(அ) திருமங்கலம் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியின் வகுப்பறைகள் அதிகமாகக் கட்டுவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) இப் பள்ளிக்கு இரண்டு வகுப்பறைகள் கொண்ட கூடுதல் கட்டிடம் ஒன்று கட்டுவதற்கான மதிப்பீடுகள் பொதுப்பணித்துறையினரிட மிருந்து கோரப்பட்டுள்ளன. அவை கிட்டியபின் கட்டிடம் கட்டுவது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, திருமங்கலம் தாலுகா தலைமை இடமாக, நகராட்சியாக விளங்குகின்ற, வளர்ந்து வருகின்ற பேரூராகும். திருமங்கலம் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஏறத் தாழ 22 வகுப்பறைகளில், பாதிக்கு மேற்பட்ட வகுப்புகள் மரம்கூட இல்லாத நிலைமையிலே, வெளியிலே நடக்கின்றன. அங்கிருக்கும் மாணவர்கள் தங்களுக்கு வகுப்பறைகள் வேண்டு மென்று கேட்கிறார்களே தவிர, தங்களுக்கு மின்சார வசதி வேண்டுமென்று கேட்கவில்லை; ஏர் கூலர் வேண்டுமென்று கேட்கவில்லை; டி. வி. வசதி கேட்கவில்லை. ஆனால், அவர்கள் ஒழுகாத கூரைக் கட்டிடங்கள் வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர் கள் பதில் சொல்லுகின்ற நேரத்திலே இரண்டு வகுப்பறைகள் கட்டுவதற்கான வரை படங்கள் பொதுப்பணித்துறையிலே இருந்து வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள் இரண் டாண்டு காலமாக அவைகள் கட்டி முடிக்கப்படாமலும், மேலும் வேறு வகுப்பறைகள் கட்டுவதற்கு இடமில்லாத காரணத்தினா லும் இதை ஏதாவது ஒரு கிராஷ் புரோகிராம் திட்டத்தில் எடுத்துக்கொண்டு, நம்முடைய அரசிடம் நிதி வசதி குறைவாக இருந்தாலுங்கூட, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடன் பெற்றாவது, இதைச் செய்வதற்கு விரைவாக அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மிடமிருக்கின்ற நிதி வசதியைப் பொருத்தமட்டில், பல்வேறு பள்ளிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறோம். இப்போதுகூட, 200-க்கு மேற் பட்டபள்ளிகளில் ஒரு வகுப்பறைகூட நிரந்தரமான கட்டிடத்தில் இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன [illegible]



தவிர்க்கின்ற முறையில் அதற்கான நடவடிக்கைகளை நாம் மேற் கொண்டு வருகிறோம். எல். ஐ. சி.யிடமிருந்து கேட்டிருக் கிறோம்; மத்திய அரசிடமும் கேட்டிருக்கிறோம். நாமும் இதைப்பற்றி கருத்தைத் தெரிவித்து இருக்கிறோம். ஏதாவது தீவிரமான முறையில் நடவடிக்கை எடுத்தால் தான், இப்போது இருக்கின்ற பள்ளிகளின் தேவைகளை நாம் பூர்த்தி செய்ய முடியும்.

திரு. என். எஸ். வி. சித்தன்; மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்த அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு குடிநீர் வசதியில்லாத காரணத்தினால், பள்ளி வளாகத்திற்கு வெளியே உள்ள நீர்ப்பாசன இறவைக் கிணற் றுக்குப் போய், மாணவர்கள் தண்ணீர் குடிக்கின்ற அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. மேலும், அங்கே கழிவறைகூட இல்லாத நிலை, ஆரம்ப சுகாதாரவசதி கூட இல்லாத நிலையிருப்பதால், இவைகளையெல்லாம் ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டுஇந்தக் குறைகளை இந்த ஆண்டிலேயே போக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வசதி, கழிவறை வசதி ஆகியவை முக்கியமாக கருதப்பட்டு, இப்போது இதுபற்றி அதிகாரி களிடம் சொல்லி அதற்கான நடவடிக்கைளை எடுக்கச் சொல்லி இருக்கிறோம். அந்த முறையில் அந்தக் குறைகளை அரசு போக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. எஸ். ஜி. ஹஜா ஷெரீப்: தலைவர் அவர்களே, திண்டுக்கல்லிலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள இளைய கோட்டை யிலுள்ள நேருஜி போர்டு ஹைஸ்கூல் 20 ஆண்டு காலமாக ரொம்ப சிக்கலான நிலைமையில் நடந்து கொண்டு வருகிறது சிறு கட்டிடத்திலே கூரைபோட்டு நடத்திக் கொண்டு வருகிறார் கள். அதைப்பற்றி பல தடவைகள் அரசாங்கத்திற்கு எழுதியும் கவனிக்காமல் இருக்கிறார்கள். அவசியம் அந்தப் பள்ளியை பெரிய கட்டிடத்திற்குக் கொண்டு போவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

[முற்பகல் 10. 10]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அங்கே அந்தப் பள்ளி யைச் சேர்ந்த பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் என்னைச் சந்தித்தார்கள். உள்ளூரில் இருக்கக்கூடிய பெரியவர்கள் உதவி யைப் பெற்று அந்தப் பள்ளிக்கூட வசதிகளைப் பெருக்க நட வடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: திருமங்கலம் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யாத காரணத்தால் கட்டிடம் கட்டப்படவில்லை என்று கூறப்படுகிறது. உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட 40 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதிகமான நிதியை இந்த மாதிரிப் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட ஒதுக்கீடு செய்ய அரசுமுன்வருமா?

[1981 ஆகஸ்டு 26

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கூடுமானவரை அதிகப் படுத்திக் கொண்டு வருகிறோம்.

மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலைப்
பட்டதாரி ஆசிரியர்களின் பணியினை வரன்
முறைப்படுத்தும் திட்டம்.

* வினா எண். 69—திரு. மா. சுப்பிரமணியம் : திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மேல்நிலைப்பள்ளிகளில் நியமனம் பெற்றிருக்கும் தற்காலிக முதுநிலைப்பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரையும் உடனடியாக பணி வரன்முறை செய்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கான பணிவிதிகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. அவ்விதிகளின்படி அரசு மேல்நிலைப்பள்ளிகளில் முழுத் தகுதி பெற்ற அனைத்து தற்காலிக முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களின் பணி தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் ஒப்புதல் பெற்றுவிரைவில் வரன்முறைப்படுத்தப்படும். தனியார் மற்றும் நகராட்சி மேல்நிலை பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களின் பணிகளை மேற்குறித்த பணிவிதிகளுக்கொப்ப அந்தந்த நிர்வாகமே பணி வரன் முறைப்படுத்தும்.

திரு. மா. சுப்பிரமணியம் : இதர மாநிலங்களில் நடைமுறையில் உள்ளது போல் தமிழ்நாட்டிலும் பிளஸ் 2 பிரிவில் பணியாற்றி வருகிற ஆசிரியர்களின் பெயரை மாற்றம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பெயர் மாற்றத்திற்கான தேவை ஏதும் இப்போது எழவில்லை.

திரு. செ. செம்மலை : மற்றத் துறைகளில் தற்காலிகமாகப் பணிகளில் அமர்த்தப்பட்டவுடன் பணிவரன்முறை செய்யப்படா விட்டாலும் ஆண்டுதோறும் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டு வருகிறது. அதே போன்று இந்த ஆசிரியர்களுக்கும் பணி வரன்முறை செய்யப்படுவதில் காலதாமதம் ஏற்பட்டாலும் சர்விஸ் ரூல்ஸ் வெளியிட்டவுடன் குறைந்தபட்சம் ஆண்டு ஊதியம் உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பணி விதிகள் வெளியீடு வதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். அது வெளிவந்த பிறகு அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. செ. செம்மலை: தற்போது தற்காலிகமாக முதுகலைப் பட்டதாரிகள் சிலர் பணி நீக்கம செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்களுக்குப் பணி பாதுகாப்பு இல்லாத நிலைமை ஏற்பட்டு வருகிறது. ரெகுலரைஸ் ஆகும் வரை பணிப் பாதுகாப்பு அளிக்க அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் தருவார்களா?



1981 ஆகஸ்டு 26]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பணிப்பாதுகாப்புத் தருகிற வகையிலே உத்தரவுகளைப் பிறப்பித்து வருகிறோம். சாதாரணமாக ஆசிரியர் பயிற்சி பெறாதவர்கள் தொடர்ந்து முழுத் தகுதி பெற்றவர்களாகக் கருதப்பட மாட்டார்கள். முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்சித் தகுதியைப் பெற மூன்று ஆண்டு காலம் தந்து அவர்களை அது வரை வெளியேற்றக் கூடாது என்ற பாதுகாப்புத் தந்திருக்கிறோம். அதையும் மீறி யாரேனும் நடந்து கொண்டிருந்தால் அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும்.

திரு ஏ. இராமலிங்கம் ; இப்படிப்பட்ட மேல்நிலைப்பள்ளிகளில் பகுதிநேர முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்கள் 20 பீரியட்கள் பாடம் எடுத்தால்தான் 300 ரூபாய் கொடுக்கப்படுகிறது என்றும், 20 பீரியடுகளுக்குத் குறைவாகக் கொடுத்திருந்தால் 300 ரூபாய்க்கும் குறைவாகக் கொடுக்கப்படுகிறது. குறைந்தபட்சம் இந்த வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் ஒரே அளவில் 300 ரூபாய் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பகுதிநேர ஆசிரியர்களைப் பொறுத்து தனியாக சில விதிமுறைகளை வைத்திருக்கிறோம். தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியும்

திரு கு. ரமணி. மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் அவர்கள் தகுதியைப் பெற மூன்று ஆண்டு காலம் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் அந்தத் தகுதியைப் பெற பரீட்சை எழுதி அந்த முடிவுகள் வருவதற்குள்ளாக அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கும்படியான செய்திகள் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலை ஏற்படுமானால் ஸ்தல ஸ்தாபனங்கள் தாங்கள் நியமித்துள்ள முதுகலை பட்டதாரிகள் பரீட்சை எழுதி முடிவுகள் வரும் வரை பார்த்து பின்னர் நடவடிக்கை எடுக்கும்படியான ஏற்பாட்டைச் செய்யநிரூரென்று வேலையிலிருந்து நீக்கும்படியான காரியங்கள் நடக்காமல் இருப்பதற்கான பாதுகாப்பை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, ஸ்தலஸ்தாபனங்களைப் பொறுத்தமட்டில் ஏதாவது நாங்கள் போட்டிருக்கின்ற உத்தரவுகளுக்கு மாறாக நிலை இருக்குமானால் குறிப்பிட்ட அமைச்சருக்குக் கேள்வியைப் போட்டுப் பதிலைப் பெற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 70, 71 அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன

[1981 ஆகஸ்டு 26

## திருவேங்கடம் பேரூராட்சிப் பகுதிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம்.

* வினா எண் 72 திரு சோ. அழகர்சாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா திருவேங்கடம் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் வழங்க அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா

(ஆ) ஆமெனில் அப்பணி எந்நிலையிலுள்ளது?

**மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் :** (அ) திருவேங்கடம் பேரூராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி குடிநீர் வழங்க குடிநீர் வடிகால் வாரியத்தின் கோவில்பட்டி உதவி நிர்வாக பொறியாளரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) இத் திட்டத்தை செயல்படுத்த அரசிடம் ரூ. 2,50,000/- கடன் பெற்று சுலபத் தவணை முறையில் வட்டியுடன் செலுத்த திருவேங்கடம் பேரூராட்சி தீர்மானித்துள்ளது. இந்த தீர்மானத்தின் அடிப்படையில் கோவில்பட்டி கோட்ட வளர்ச்சி அலுவலர் அனுப்பியுள்ள கோரிக்கை தற்போது ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

**திரு பெ. உந்திராபதி :** பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே சங்கரன் கோவிலுக்குக் குடிநீர் வழங்குவது சம்பந்தமாக பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பரிசீலனை எவ்வளவு காலத்திற்குள் முடிவடையும், எப்பொழுது வேலை தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் பதில் சொல்லக்கூடிய நிலைமை இல்லை.

## பெரியகொடிவேரி குடிநீர் திட்டம்

* வினா எண் 73 திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சத்தியமங்கலம் தொகுதியில் பெரியகொடிவேரி குடிநீர் திட்டம் அனுமதிக்கப்பட்டு வேலைகள் நடைபெறுகிறதா?

(ஆ) இத் திட்ட வேலைகள் எப்பொழுது முடிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) ஆம்.

(ஆ) இத் திட்ட பணிகள் 1982 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிவடைந்து மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



1981 ஆகஸ்ட் 26]

**திரு. ஆர். ரங்கசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டத்தின் மதிப்பீடு என்ன? இதனால் பயன்பெறும் மக்கள் எண்ணிக்கை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத்தலைவர் அவர்களே, இத்திட்டத்தின் மதிப்பீடு 71.49 லட்சம் ரூபாய் பலன் அடையக்கூடிய மக்கள் 1971 ஆம் ஆண்டுக் கணக்குப் படி 47,356; 1991 ஆம் ஆண்டுப்படி 64,600; 2006 ஆம் ஆண்டுப்படி 81,800.

**திரு. ஆர். ரங்கசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இந்தத் திட்டம் மிகவும் நிதானமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. துரிதமாக நடத்தப் படாததால் அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் குடிதண்ணீர் இல்லாமல் அவதிப்படுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு உதவிபுரியக்கூடிய முறையிலே விரைவிலே முடிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** 1982 ஆம் ஆண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். டிசம்பர் என்பதை நவம்பர் அல்லது அக்டோபருக்குள் முடிப்பதற்கு பரிசீலனை செய்யப் படும்.

**திரு. தி. கா. நல்லப்பன் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த கொடிவேரித் திட்டம் கைவிடப்பட்டதாகவும் அதற்கு பதிலாக கோவையிலிருந்து [illegible] கோடி ரூபாய் செலவில் பவானித் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தத் திட்டமும் இந்தத் திட்டமும் ஒன்றா, வெவ்வேறா? அப்படியானால் அது எப்போதுசெயல் படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** நான் எப்போது அப்படிச் சொன்னேன்?

**திரு. தி. கா. நல்லப்பன் :** முன்னாலே சொன்னீர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அப்படியென்றால் அதற்காகத் தனிக் கேள்வி போடவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரடியாக விவாதம் வைத்து கொள்ளக் கூடாது.

## வேளச்சேரி தண்டீசுவரம் பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண் 74—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னை மாநகராட்சி வேளச்சேரி, தண்டீசுவரம் நகர் பகுதியில் பொதுமக்கள் குடிதண்ணீருக்கு திறந்த குளத் துத் தண்ணீரைப் பயன்படுத்துவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்டுள்ள வேளச்சேரி பகுதிக்கு 20.10 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான ஆய்வுகளை சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியம் நடத்தி வருகிறது. விரைவில் இவ்வேலைகள் முடிக்கப்பட்டு, திட்டம் நிறைவேறுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** தலைவர் அவர்களே, வேளச்சேரி பகுதி சென்னை மாநகராட்சியோடு இணைக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக கிராமங்களிலே இப்படி திறந்த குளங்களிலிருந்து தண்ணீர் எடுத்துக் குடிப்பதை நிறுத்தியிருக்கிறார்கள். ஆனால் மாநகராட்சி போன்ற இந்தப் பகுதிகளில்கூட அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கிறதே. எனவே, இந்தத் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படுமா? எப்பொழுது இந்தத் திட்டம் முடியும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

[முற்பகல் 10.20]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவரவர்களே, வேளச்சேரி பகுதியில் தண்ணீர் வழங்குவதற்கான திட்டத்திற்காக 20.10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பொறியியல் ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் இவ்வேலைகள் முடிக்கப்பட்டு, திட்டம் நிறைவேறுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. பம்மல் நல்லதம்பி:** தலைவரவர்களே, விரைவில் என்றால் எவ்வளவு காலம் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவரவர்களே, "as early as possible" என்று அர்த்தம்.

**திருப்பத்தூர் சர்க்கரை ஆலையில் தினக்கூலிகளாகப் பணிபுரிபவர்களை நிரந்தரமாக்குதல்.**

*வினா எண் 77—**திரு. ப. சுந்தரம்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் சர்க்கரை ஆலையில் தினக்கூலியாக வேலை செய்கிறவர்களை நிரந்தரமாக்குவதற்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டவர்கள் எண்ணிக்கை எத்தனை?



(இ) அதில் நிரந்தர வேலை வாய்ப்பு பெற்றவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** (அ) காலியிடங்களை நிரப்புவதற்கு நேர்முகத்தேர்வுகள் நடைபெற்றன. இதில் தினக்கூலியாக வேலை பார்ப்பவர்களும் கலந்துகொண்டார்கள்.

(ஆ) 163 தினக்கூலியாளர்கள் கலந்து கொண்டனர்.

(இ) 56.

**திரு. ப. சுந்தரம்:** பேரவைத் தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு இந்த நேர்முகத் தேர்வு நடைபெற்றது. அந்த நேர்முகத் தேர்வு நடைபெற்று இரண்டாண்டுக் காலமாகியும் தினக்கூலிகளாக வேலை செய்கின்றவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. இந்தத் தாமதத்திற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டு கட்டமாக, 4–11–78-லேயும், 19–12–78-லேயும் தேர்வுகள் நடைபெற்றன. அந்த நேர்முகத் தேர்வுக்குப் பிறகு அங்கே கேஷுவல் லேபர்களாகப் பணிபுரிபவர்களிலே இருந்து ஏறத்தாழ 90 பேருக்குமேல் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. ப. சுந்தரம்:** பேரவைத் தலைவரவர்களே, அங்கே தினக்கூலிகளாக வேலைசெய்தவர்கள் இன்னும் தினக்கூலிகளாகத்தான் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த சர்க்கரை ஆலை ஓடுகின்ற நேரத்தில்தான் தினக்கூலிகளாக அவர்கள் அமர்த்தப்படுகிறார்கள். அவர்களில் அந்தத் தேர்விலே கலந்து கொண்டவர்கள் பலர் இருக்கிறார்கள். அந்த பல பேர்களிலே தகுதியுடையவர்களுக்காவது அந்த வேலைவாய்ப்பை அளிக்க அரசு முன்வருமா? அதைப்போல அங்கே நிலம் கொடுத்தவர்கள் நிலத்தை உழுதவர்கள் சர்க்கரை ஆலைக்குக் கொடுக்கும்பொழுது அங்கேயுள்ள நிர்வாகிகள் அவர்களுக்கு வாக்கு கொடுத்திருந்தார்கள், உங்களுக்கு வேலை தருகிறோம் என்று. அதையும் இந்த அரசு நிறைவேற்றவில்லை. இதை உடனடியாகக் கவனித்து அந்த விவசாயிகளுக்கும், நிலம் கொடுத்தவர்களுக்கும் அங்கே தினக்கூலிகளாக வேலை செய்பவர்களுக்கும் உடனடியாக வேலை கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதைப்போல தினக்கூலிகளாக அந்த ஆலையிலே மட்டுமல்ல; இன்னும் பல்வேறு ஆலைகளிலே பணிபுரிகிறார்கள்.

நேர்முகத் தேர்வு நடத்துவதே திறமையின் அடிப்படையிலே தேர்ந்தெடுப்பதற்காகத்தான். தினக்கூலிகளாகப் பணியாற்றுகின்றவர்கள் அத்தனை பேர்களையுமே அப்படியே நிரந்தரத்

தொழிலாளர்களாகத் தேர்வின்றி அல்லது நேர்முகத் தேர்வின்றி ஏற்றுக்கொள்வதில்லை. நேர்முகத் தேர்வின் பொழுது தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் தகுதியின் அடிப்படையிலே.

சம்பந்தப்பட்ட ஆலைகளுக்கு நிலம் கொடுத்தவர்கள் என்ற அந்த அடிப்படையிலே முன்னுரிமையும் அவர்களுக்கென்று வழங்கப்பட்டு அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கெ. செங்கலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள், தினக்கூலிகளாகப் பணிபுரிபவர்களை நிரந்தரமாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். வடார்க்காடு மாவட்டத்தில் மட்டுமல்லாமல், சென்னையைச் சுற்றியிருக்கின்ற பல சிறு தொழில் நிறுவனங்களில் பணியாற்றுபவர்களில் எவ்வளவு பேர் தினக்கூலிகளாக இருக்கிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி திருப்பத்தூர் சர்க்கரை ஆலையைப் பற்றியது.

பெரம்பலூர் சர்க்கரை ஆலை.

*வினா எண் 78— திரு, மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரம்பலூர் சர்க்கரை ஆலை 30–9–1979 முடிய வரவு செலவு கணக்கில் சுமார் 53 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையா?

(ஆ) நஷ்டம் ஏற்பட்டதற்கான காரணத்தை அரசு ஆராய்ந்ததா?

(இ) ஆம் எனில் அது பற்றிய நடவடிக்கை என்ன?

(ஈ) இந்த ஆலையிலிருந்து கிடைக்கும் இதர உப பொருள்கள் என்னென்ன?

(உ) இந்த உப பொருள்கள் விற்பனையில் லாபமா? நஷ்டமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) நஷ்டம் வியாபார ரீதியானது. எனினும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஈ) சர்க்கரைக் கழிவுப்பாகு, கரும்புச் சக்கை மற்றும் கழிவு மண் ஆகியவையாகும்.

(உ) முக்கிய உப பொருளான கழிவுப்பாகு அரசு நிர்ணயித்த விலையில் விற்கப்படுகிறது.



திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ் நாட்டில் அரசு நடத்தும் ஆலைகள் எத்தனை? எந்தெந்த ஆலைகளில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது? அந்த நஷ்டத்தைச் சரிக்கட்ட அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 11 சர்க்கரை ஆலைகள்—9 கூட்டுறவுத் துறையிலும், 2 அரசு பொதுத் துறையிலும்— நடந்து வருகின்றன. மூலக் கேள்வி பெரம்பலூர் சர்க்கரை ஆலையிலே 30–9–1979 வரை ஏற்பட்ட நஷ்டம் பற்றியது. அந்த ஆலையைப் பற்றியே கூட இன்றைய வரை உள்ள நிலையைக் கேட்கவில்லை, 1979 வரைதான் கேட்டிருக்கிறார். மற்ற ஆலைகளில் ஏற்பட்டுள்ள நஷ்டம் பற்றித் தனியாகக் கேட்டால், அது பற்றிய விவரம் சேகரித்துத் தரப்படும்.

டி. ஆலங்குளம் அரிசன காலனிக்கான மேம்பாட்டுத் திட்டங்கள்.

*வினா எண் 79—திரு. க. பாரமலை : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த டி. ஆலங்குளம் அரிசன காலனிக்கு ரோடு போட, பாலம் அமைக்க, தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) முன்னாள் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் டி. ஆலங்குளம் ஆதிதிராவிடர் குடியிருப்பை பார்வையிட்ட சமயம் அக்குடியிருப்பில் உள்ள ஆதிதிராவிடர்கள் கேட்டுக்கொண்டதின் பேரில் பாலமும், தடுப்புச் சுவரும் கட்டவேண்டிய அவசியம் என்று தெரிந்ததால் அக்குடியிருப்பிற்கு அருகே ஓடும் கால்வாயின் குறுக்கே ஒரு பெரிய பாலமும் 100 மீட்டர் நீளமுள்ள மண்கூரை மற்றும் தடுப்புச் சுவரும் ரூ. 45,000 செலவில் கட்ட ஆதிதிராவிடர் நல இயக்குநர் கருத்துரு ஒன்று அரசுக்கு அனுப்பியுள்ளார்.

(ஆ) இக் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் டி. ஆலங்குளம் கிராமத்தில் ரூ. 45,000 மதிப்பீட்டில் வேலை செய்கின்ற குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். 1979 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் பொழுது, 3 நாட்கள் அந்தக் கிராமம், வெளி உலகத்தோடு தொடர்பில்லாமலே, ஹெலிகாப்டர் மூலமாக அவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் போடக் கூடிய நிலை இருந்தது. அதைக் கருதி இரண்டு

[1981 ஆகஸ்ட் 26

ஆண்டுகளுக்கு முன்பாகவே அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டிருந்தோம். அதை விரைவாகச் செயல்படுத்தி, இந்த ஆண்டிலேயே வேலையைத் தொடங்க அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிராமத்தைப் பொறுத்தவரையிலே, அதற்குரிய அவசியத்தை உணர்ந்து, அந்தத் திட்டத்தை நிதித் துறையும் ஒத்துக் கொண்டிருக்கிறது. மிக விரைவாக அரசு ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் ஆதி திராவிடர் நலத் துறை செய்து கொடுப்பதாக சொன்னார்கள். ஆனால், அது இராமநாதபுரம் மாவட்டம் திருபுவனம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்தது. அரசாங்க ஆணைப்படி, இவை, ஊராட்சி ஒன்றியச் செலவிலேயே செய்ய வேண்டியிருக்கிறது. இந்த ஊராட்சி ஒன்றியம் ஏதாவது தொகை கொடுப்பதாக ஒத்துக் கொண்டிருக்கிறதா, அல்லது முழுத் தொகையையும் ஆதி திராவிடர் நலத் துறையே கொடுக்கப்போகிறதா என அறிய விரும்புகிறேன். அதோடுகூட தமிழகத்திலே பல ஊராட்சி ஒன்றியங்கள் இம்மாதிரி வேலைகளுக்குச் சட்டப்படி கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அது சம்பந்தமாக ஆதி திராவிடர் நலத்துறை என்ன உத்தரவிட்டிருக்கிறது என்பதையும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தைப் பற்றிய விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் ஆதி திராவிட நலத்துறை மூலமாகத்தான் அக்குடியிருப்பிற்கு அருகே ஓடும் கால்வாயின் குறுக்கே ஒரு பெரிய பாலமும் 100 மீட்டர் நீளமுள்ள மண்கூரை மற்றும் தடுப்புச்சுவரும் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற விவரங்கள் தற்போது என்னிடத்திலே இல்லை.

குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்.

*வினா எண் 80—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் 1–1–1980 முதல் 1–1–1981 வரை தீண்டாமை விலக்குச் சட்டத்தின்கீழ் எவ்வளவு பேர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) எவ்வளவு பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) தமிழகத்தில் 1–1–1980 முதல் 1–1–1981 வரை குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 759



1981 ஆகஸ்ட் 26]

(ஆ) தண்டிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தீண்டாமை விலக்குச் சட்டத்தின் கீழ் 759 வழக்குகள் ஓராண்டில் பதிவு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட்டது என்பதை நான் அறிய விரும்புவதோடு இந்தத் தீண்டாமை என்ற ஒன்றிற்கு ஏதாவது தலைப்புகள் இருக்கின்றனவா என்று நான் அறிய விரும்புகிறேன். என்ன, என்ன தலைப்புகள் தீண்டாமை என்ற குற்றத்தின்கீழ் வருகின்றன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமையைப் பொறுத்தவரையில் அந்தக் குற்றம் முதற் தடவையாக இருக்கிறபொழுது ஒரு மாதம் வரையிலிருந்து 6 மாதம் வரையில் அவர்களுக்குச் சிறை தண்டனையும் ரூ. 100 முதல் ரூ. 500 வரை அபராதமும் விதிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கேள்வியையும் கேட்டிருக்கிறார்கள். அதிலே குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், கிராமப் பகுதியிலே தேனீர் விடுதிகளிலேஇந்த மக்களுக்குத் தனியாகக் கோப்பைகள் தருவதும், இந்தத் தீண்டாமைக் குற்றத்தின்கீழ் வருவதுதான். மற்ற விவரங்கள் தற்போது இல்லை.

[முற்பகல் 10-30]

திரு என். பழனிவேல்: தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் கடைகளில் தனி கோப்பைகளைத் தண்ணீர் குடிப்பதற்கு அல்லது காப்பி குடிப்பதற்கு அனுமதிப்பது மட்டும்தான் தீண்டாமைக் குற்றம் என்று சொன்னார். மற்றக் குற்றங்களின் விவரம் இல்லை என்றும் சொன்னார். மற்றக் குற்றங்கள்—அதாவது தாழ்த்தப்பட்டவர்களுக்கு, அவர்கள் உத்தியோகத்தில் இருந்தால் கூட வாடகைக்கு வீடு கொடுப்பது கிடையாது. அதேபோல பொது நிகழ்ச்சிகளில் அவர்களைப் புறக்கணித்து விடுகிறார்கள். அதேபோல கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களை ஊரைவிட்டே வெளியேற்றி விடுகிறார்கள். தனியார் கிணறுகளில் மற்றவர்களை எடுக்க அனுமதித்துவிட்டு, அரிசனங்களை அனுமதிப்பதில்லை இம்மாதிரியான குற்றங்களை இந்த தீண்டாமைக் குற்றங்களின் கீழ் கொண்டு வர அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்ற குற்றச்சாட்டுகள் நடைபெற்றிருக்குமானால் அது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால் நடவடிக்கை எடுக்கப்படும். அல்லது பாதிக்கப்பட்டவர்கள் மூலமாக காவல் துறைக்குத் தெரிவிக்கப்படுமானால், காவல் துறை மூலம் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு என்றைக்கும் தயாராக இருக்கிறது.

—

திரு. எஸ். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 750 கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தத் துறையில் இத்தனை யகேஸ்கள் போடுவதற்காகவே குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள், கிராமங்களில் நேரில் சென்று இந்தகைய கேஸ்களைப் பார்ப்பதற்கு அவர்கள் வசதியற்று இருக்கிறார்கள். அவர்களுக்கு இதுவரையில் வசதி செய்து கொடுக்கப்படவில்லை. இனியாவது அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

இரண்டாவதாக, இந்த வழக்குகளைப் பாதிக்கப்பட்ட மக்களே போட்டிருக்கிறார்களா அல்லது இந்த அதிகாரிகள் போட்டு இருக்கிறார்களா என்பதையும், இந்த அதிகாரிகள் குடி யுரிமை சட்டத்தில் கீழ் கிராமங்களுக்குச் சென்று பார்வையிட்டு அதன் பின்னர் போட்ட கேஸ்கள் எத்தனை என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் மாவட்டந் தோரும் மொபைல் ஸ்குவாடுகள் இயங்கி வருகின்றன. இருக்கின்ற 13 மொபைல் ஸ்குவாடுகள் 6-க்குத்தான் வாகன வசதிகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதன் அடிப்படையிலே சமீபத்தில் காவல் துறை அதிகாரிகளுடனும். தலைமைச் செயலாளருடனும் ஒரு கூட்டத்தைக்கூட்டி அதில் நான் பேசி இருக்கிறேன். அதற்கான வசதிகளை உடனடியாக செய்து தரவேண்டும் என்று தகுந்த அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. என்னிடம் தரப் பட்டுள்ள தகவலின்படி பாதிக்கப்பட்டவர்கள் விரைந்து தான் தற்போது இருக்கின்றன. அதிகாரிகள் மூலம் போடப்பட்ட வழக்குகள் எத்தனை என்ற விவரங்கள் தற்போது இல்லை.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் தீண்டாமை விலக்குச் சட்டத்தின் கீழ் ஏறத் தாழ 759 வழக்குகள் போடப்பட்டன என்று அறிவித்தார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை வழக்குகள் போடப் பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி; தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ராமகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு 759 வழக்குகள் பதிவு செய்ததாகவும், அதிலே 58 வழக்குகள்தான் நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும் தண்டனை கொடுக்கப்பட்டதாகவும் அவர்களுக்குத் அவர்கள் சொன்னார்கள். இந்த மாண்புமிகு அமைச்சர் நிரூபிக்கப்படாததற்கு முக்கியமான காரணம் என்ன? மீதியுள்ள 701 வழக்குகள் குற்றவியல் சட்டப்படிசந்தேகம் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்குச் ஏற்கனவே சாதகமாக இருக்க வேண்டும் என்பது மரபு.



burden of proof lies on the accused என்ற வகையில் குற்றம் சாட்டப்பட்டவர்களே தங்கள் நிரபராதிகள் என்பதை நிரூபிக்க வேண்டும் என்று சட்டத்தை மாற்ற வேண்டும். அந்த நிலையை உருவாக்க அரசு முயற்சி செய்யவேண்டும். அதோடு ஏற்கனவே சாராய கேஸ்களில் ரெய்டு போகிறபோது நடவடிக்கை எடுக்கிறமாதிரி, இந்தத் தீண்டாமைக் குற்றத்திற்கு அந்த இடத்திலேயே அவர்களைக் கைது செய்து வழக்குப் பதிவு செய்யும் நடவடிக்கையை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம் விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு செய்யப்பட்ட வழக்கு களின் எண்ணிக்கை 759. விடுவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 525. இத்தகைய நிலை ஏன் வருகிறது என்று சொல்லுகிறபோது, வாதிகளாக இருக்கிறவர்கள் வழக்கு மன்றத்தில் வருகிறபோது, தாங்கள் புகார் கொடுத்ததற்கு மாறாக கருத்தை மாற்றி சொல்வதன் காரணமாக, மற்றவர்களின் வற்புறுத்தல் காரணமாகவோ அல்லது வேறு எந்த காரணத்தாலோ பெரும்பாலும் மாற்றிவிடுவதன் காரணமாக இத்தகைய நிலை ஏற்படுகிறது. அந்தக் காரணத்தினால் அரசைப் பொறுத்தவரையில் தகுந்த நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்குவதற்குச் சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமை சம்பந்தமாக குறிப்பிடும்போது கிராமப் பகுதிகளில் இப்போதும்கூட தாழ்த்தப்பட்ட மக்கள் வீதி களில் வேட்டியை கீழே விட்டுவிட்டுச் செல்ல முடியாது. குடி தண்ணீர் பிரச்சினை, மற்றும் இதுபோன்று பல பிரச்சினைகள் இருந்தாலும் கூட, போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்கிற நேரத்தில் போலீஸ் அதிகாரிகளே தாழ்த்தப்பட்ட மக்களை மிரட்டி வழக்குகளைப் பதிவு செய்ய முடியாமல் செய்து விடுகிறார்கள். அதிகாரிகளே இவ்வாறு நடந்து வருகிறார்களே, இதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு குற்றச்சாட்டுகள் வரவில்லை. அவ்வாறு வருமேயானால் மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்.

### (அ) அரசுக் கவிஞர் கண்ணதாசனுக்கு அமெரிக்காவில் ஆகும் மருத்துவச் செலவு.

**டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையை நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய பொறுப்பும் கடமையுமாகும். நம்முடைய அரசவைக் கவிஞர் கண்ணதாசன் அவர்கள் அமெரிக்காவில் சிகாகோ நகரத்தில் நோய்வாய்ப்பட்டு ஆபத்தான கட்டத்தில் இருக்கிறார் என்று செய்திகள் வந்தன. இப்போதும் அந்த ஆபத்தான கட்டம் நீங்கவில்லை என்றுதான் அங்கேயிருந்து தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அரசு இது குறித்து டாக்டர் திருவேங்கடம் அவர்களை அனுப்பி வைத்தது. அவரும் திரும்பி வந்து விட்டார் என்று கேள்விப்படுகிறேன். முழு விவரங்கள் எனக்குத் தெரியவில்லை. இருந்தபோதிலும், அரசாங்கம் இதற்காக ஒதுக்கியிருக்கிற தொகை போதாது என்றும், ஒவ்வொரு நாளும் அமெரிக்காவில் சிகாகோ நகரத்தில் அந்த மருத்துவ மனைக்கு செலவுகள் ஏராளமாக ஆகின்றன என்றும், எனக்கு தகவல்கள் தரப்பட்டுள்ளன. எனவே அவரை அங்கேயிருந்து இங்கே அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் ஏதாவது உண்டா அல்லது அங்கேயே வைத்து மருத்துவம் பார்ப்பதற்கான செலவுகளை அரசு ஏற்றுக் கொள்வதற்கான நிலைமைகள், முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவிஞர் கண்ணதாசன் அவர்கள் சிகாகோ மருத்துவமனையிலே சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். நான் அங்கே இருந்தபோது அவரைப் போய் பார்த்தேன். அங்கே இருக்கிற மருத்துவ நிபுணர்கள் நல்ல அக்கறை எடுத்துக் கொண்டு அவரைக் கவனித்து வருகிறார்கள். அந்த ஆஸ்பத்திரி நிர்வாகமும் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. இருக்கிற நிலைமைகளை எல்லாம் விவரமாகச்சொல்லி, நாங்கள் அவரைக் காப்பாற்றுவதற்கான எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்கிறோம் என்கிற வாக்குறுதியை தந்திருக்கிறார்கள். நான் முதலமைச்சர் அவர்களுடன் அங்கிருந்து தொடர்பு கொண்டு பேசியபோது, அவருக்கு ஆகிற செலவை தமிழக அரசே ஏற்றுக் கொள்ளும் என்று அறிவிக்கச் சொன்னார்கள். இதையும் நான் அங்கே சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அவர்களிடமிருந்து வேறு எந்த விவரமும் எங்களுக்கு வரவில்லை.

இரண்டு நாட்களுக்கு முன்பு மெக்சிகன் நகரில் இருக்கிற, நம்முடைய தமிழ் டாக்டர் ஒருவர் இங்கே வந்திருந்தபோது என்னிடத்தில் தொடர்பு கொண்டார். பணத்திற்கான ஏற்பாடுகளை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் எவ்வளவு என்கிற நிலைமைகளும், அவரைப் பற்றிய கடிதமும் வரவில்லை. நீங்கள் போனவுடனே எவ்வளவு பணம் ஆகும் என்பதை



கொண்டு நாங்கள் ஏற்பாடுகளை செய்கிறோம் என்று நான் சொல்லி அனுப்பியிருக்கிறேன். ஆகவே பணத்தைப் பொறுத்த மட்டில் தமிழக அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்ளும், சிகிச்சை நடப்பதற்கான எல்லாவித ஏற்பாடுகளையும் நான் போயிருந்தபோது செய்து விட்டு வந்திருக்கிறேன். மாண்புமிகு எதிர் கட்சி தலைவர் அவர்கள் சொன்னதைப் போல சங்கடங்கள் ஏற்படுவதற்கு நியாயம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு எடுத்துள்ள முயற்சிகளைப்பற்றி நான் குறை எதுவும் சொல்லவில்லை. அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு காட்டிதான் நான் சொல்கிறேன். ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை போதாது என்றும், நான் கேள்விபட்ட வரையில் 50 ஆயிரம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டு, மத்திய அரசினுடைய ஒப்புதல் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அறிகிறேன். அங்கே இலட்சக்கணக்கில் செலவுகள் ஆகும் என்றும், மருத்துவ மனையிலே இதே நிலையில் 'டிஸ்சார்ஜ்' ஆனால் கூட லட்சக்கணக்கான ரூபாய் அதற்கு செலவிடப்பட வேண்டுமென்றும்' அவர்களுடைய குடும்பத்தார் மூலமாக எனக்கு தகவல் வந்த காரணத்தால்தான் அதை நான் வைக்கிறேன். ஒரு அரசவைக் கவிஞர் என்கிறமுறையில் அந்தப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய கடமை நமக்கு இருக்கிற காரணத்தால் எவ்வளவு செலவானாலும் அந்தப் பொறுப்பை, அங்கே ஆகிற செலவுகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்வதற்கு அரசு முன் வரவேண்டுமென்று இதைக் கேட்டிட்டு காட்டினேனே அல்லாமல் வேறு அல்ல.

[முற்பகல் 10.40]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, அந்த அடிப்படையிலேதான் நாங்கள் ஒதுக்கிய தொகை போதுமானது என்று நினைத்து, ஆரம்பத்திலே கேட்டிருந்தோம். ஆனால் அந்த டாக்டர் வந்து பேசிய பிறகு, ஒதுக்கிய தொகை போதாது என்று தெரிகின்ற காரணத்தால் எவ்வளவு தொகை ஆகும் என்று கடிதம் போடுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். அதை வைத்து, பணத்திற்கு ஏற்பாடு செய்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறேன்.

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

**திரு. அ. ரகுமான்கான்:** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர், தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் மீது நான் ஒரு உரிமைப் பிரச்சனை கொடுத்திருக்கிறேன். மவுண்ட் ரோட்டிலே...... (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் நான் சொல்லிவிடுகிறேன். 8.00 மணிக்கு நான் வந்துவிட்டேன். ஆனால் 8.30 மணிக்குத்தான் வாங்கினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமைப் பிரச்சனையை எடுத்துக் கொண்டால் நீங்கள் ஒரு நிமிடம் அல்ல 10 நிமிடங்கள் வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் நீங்கள் கொடுத்து

8.50 மணிக்கு என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. 8.30 மணிக்கு நான் வந்துவிட்டேன்; அறையில்தான் இருந்தேன். நீங்கள் என்னை நேரில் சந்தித்திருக்கலாம். 8.50-க்கு கொடுத்துவிட்டு, அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் எப்படி முடியும்? என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. பரிசீலிக்கிறேன். பரிசீலனை செய்த பின்னால் எடுத்துக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, தமிழ்நாடு வர்த்தகக் கழகம் 'பந்து' செய்திருப்பது பற்றி நான் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது மிகவும் முக்கியமானது;

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிறைய ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. எல்லாமே முக்கியமானவை தான். தினந்தோறும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்கிறோம். இன்றைக்கும் ஒரு முக்கியமான ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள இருக்கிறோம்.

திரு. செ. இராமலிங்கம் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பட்ட வகுப்புகள் பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம்.- போன்ற வகுப்புகள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி சுமார் 50-க்கும் மேற்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. பேரவை நடைபெறுவது 9 நாட்கள்தான். இப்போது தினசரி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எல்லா ஒத்திவைப்புத் தீர்மானங்களுமே முக்கியமானவைதான். அவரவர் தொகுதி சம்பந்தப்பட்டது, மாவட்டம் சம்பந்தப் பட்டது எல்லாம் இருக்கும். ஒவ்வொருவருக்கும் ஒரு பிரச்சனை இருக்கும்; இல்லை என்று நான் சொல்லவில்லை. இன்றைக்கு எடுத்துக்கொள்வதும் ஒரு முக்கியமான ஒத்திவைப்புத் தீர்மானம்தான்.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தென்னாற்காடு மாவட்ட தொளார் கிராம அரசினக் காலனி தீயினால் பாதிக்கப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சோ. அழகர சாமி, இரா. கருப்பையா, பொ. உத்திராபதி, மு. அம்பிகாபதி எம். ஆறுமுகம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம். டி. மணி, சே. ஆர். சுந்தரம் ஆகியோர் "தென்னாற்காடு மாவட்டம் தொளார் கிராமத்தில் நடந்த 4-8-1981 அன்று காலை 5 மணிக்கு அரிசன காலனிக்குத் தீ வைத்துக் கொளுத்தப் பட்டுள்ளதால் 300 குடிசைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் அரிசனங்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது



முக்கியம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன். முதலில் திரு. உத்திராபதி அவர்கள்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, நானும் இதுபற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அந்த கிராமத்திற்கு நேரடியாகச் சென்று பார்த்துவிட்டு வந்து கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய பெயரால் கொடுக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானம் என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. ஒருவேளை 54-வது விதியின்கீழ் கவன ஈர்ப்பாகக் கொடுத்திருந்தால், அதைப் பார்க்கச் சொல்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் தொளார் கிராமத்தில் 300 அரிசனக் குடிசைகள் காலை 5 மணிக்கு நெருப்பு வைத்து கொளுத்தப்பட்ட செய்தி தமிழ்நாட்டில் ஒரு பதட்டமான நிலையை உருவாக்கியிருக் கிறது. இந்த நிகழ்ச்சி காலை 5 மணிக்கு நடந்தது என்று சொல்கின்ற போது தமிழகத்தில் எந்த மாவட்டத்தில் எந்த இடத்தில் தீப் பற்றி எரிந்தாலும் அது எல்லாம் இப்படிப்பட்ட நேரங்களில்தான் நடக்கின்றன. கீழ்வெண்மணியிலே 47 உயிர்கள் தீயினால் இறந்தது இரவு நேரம்தான். அதேபோல்தான் விழுப்புரம் சம்பவமும், அதேபோல்தான் உஞ்சரை சம்பவமும், அதேபோல் தான் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடந்த சம்பவமும். இப்படித் தமிழகத்தில் நடந்த சம்பவங்களின் எண்ணிக்கையைச் சொல்லப்போனால் நேரம் அதிகமாகிக்கொண்டிருக்கும். இப்படி எங்கெங்கு தீ விபத்து ஏற்பட்டாலும் அரிசனக் குடிசைகள்தான் தீக்கு இரையாகின்றன. தொளார் கிராமத்தில் தொடர்ச்சியாக ஜாதி இந்துக்களுக்கும், அரிசனங்களுக்கும் ஒரு பிரச்சினை உருவாகிக் கொண்டிருக்கின்றது. ஆனால் இதைத் தீர்க்க வேண்டும் என்று அதிகாரிகள் நினைத்திருந்தால் உண்மையிலேயே சுலபமாக முடித்திருக்க முடியும். அதே போன்றுதான் விழுப்புரம் சம்பவம் நடந்தபோதும் காலத்தோடு காவல் துறைக்கு அறிவிக்கப்பட்டும் அவர்கள் காலதாமதப்படுத்தியதன் காரணத்தால் அப்படி நிலைமைகள் ஏற்பட்டன. அதேபோன்று உஞ்சரையில் அரிசன மக்களுக்கு வரக்கூடிய பாதிப்பு பற்றி முன்கூட்டியே காவல் துறையினருக்கு அறிவித்திருந்தும் காவல் துறையினர் காலதாமதப்படுத்தியதன் காரணத்தால் அரிசன மக்களின் வீடுகள் சாம்பலாகின்றன, அவர்களும் தாக்கப்படு கிறார்கள்.

தென்னாற்காடு மாவட்டம், தொளார் கிராமத்திலும் இப்படிச் சம்பவம் நடைபெறுவதற்கிடையிலே அதிகமான நாட்கள் இருந்தும், காவல் துறையினருக்குக் காலத்தோடு தெரிவித்திருந்தும் உரிய நடவடிக்கை எடுக்காததன் காரணத்தால் காலையில் 5 மணிக்கு — அது மாலை நேரமும் கிடையாது, பகல் நேரமும் கிடையாது — ஜாதி இந்துக்களும், அரிசன மக்களும் மோதிக்கொண்டார்கள். அந்த மோதலின் விளை வாகத் தீ பற்றி எறிந்தது என்று சொல்வதற்கு அர்த்தமே

கிடையாது. இரவு நேரம் முழுவதும் முடிந்து விடியற்காலம் 5 மணிக்கு தீ வைக்கப்பட்டு 300 குடிசைகள் சாம்பல் ஆக்கப் பட்டன என்றால் எந்த அளவுக்கு திட்டங்கள் தீட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அதற்காக எத்தனை ஆயிரம் பேர்கள் கூடியிருக்கவேண்டும் என்பதையும் எண்ணிப்பார்க்கவேண்டும். போலீஸ் அதிகாரிகளும் இருக்கத் தான் செய்கிறார்கள்.

ஆனால் தமிழகத்திலே கடந்த 6, 7 ஆண்டுகாலத்தை வரிசையாக எடுத்துப் பார்த்தால் எங்கே பார்த்தாலும் நூற்றுக் கணக்கான குடிசைகள் 200-க்கும் அதிகமான குடிசைகள் அதுவும் அரிசன மக்களுடைய குடிசைகள்தான் தீக்கு இரையாக்கப்பட்டு சாம்பலாகி இருக்கின்றன. இனிமேலாவது வேறு எங்கும் இப்படிப்பட்ட சம்பவங்களும், சேதங்களும் ஏற்படக் கூடாது என்பதுபற்றி அமைச்சரவர்கள் சிந்திக்கவேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன்.

தற்பொழுது மீனாட்சிபுரம் சம்பவம் பற்றி இந்தியா முழுமைக்கும் பத்திரிகைச் செய்திகள் பரவிக்கொண்டிருக்கின்றன. ஏன் அப்படிப்பட்ட நிலைமைகள் வருகின்றன. அரிசன மக்கள் தாக்கப்படுகின்றபோதுதானே இப்படிப்பட்ட நிலைமைகள் வருகின்றன. அதே மீனாட்சிபுரத்திற்கு சென்ற மாதம் 22-ஆம் தேதி நான் எஸ்டிமேட் கமிட்டியுடன் சென்று இருந்தேன். அப்போது மழை பெய்துவிட்டது. அங்கே இரண்டு போலீஸ் அதிகாரிகள் வந்தார்கள். அவர்களிடம் வழி கேட்டபோது அலட்சியமாக பதில் சொன்னார்கள். இப்படிச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கே காவல் துறையினர் அலட்சியமாக பதிலைத் தருகின்றபோது சாதாரண அரிசன மக்கள் சொல்லக்கூடிய புகார்களுக்கு காவல்துறை அதிகாரிகள் எந்த அளவுக்குப் பதில் சொல்வார்கள் என்பதைத் தெளிவுப்படுத்துவதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட்டேன். எனவே, நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் தென்னாற்காடு மாவட்டம் தொளார் நிகழ்ச்சியை ஒரு கடைசி நிகழ்ச்சியாக ஆக்கவேண்டும். எங்கேயாவது தாழ்த்தப்பட்ட மக்கள் இப்படிப்பட்ட புகார்களைக் கொடுத்தால் காவல் துறையினர் உடனடியாகப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வரவேண்டும். அப்படி வந்திருந்தால் இப்படிப்பட்ட நிலைமை தமிழகத்தில் வந்திருக்காது. ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகள் தொடர்வதற்கு முழுக்காரணம் காவல் துறையினர் என்று குற்றம்சாட்ட விரும்புகிறேன்.

[முற்பகல் 10.50]

தொளார் கிராமத்திலே 5 தினங்களுக்கு முன்னதாக புகார் கொடுத்திருக்கிறார்கள். ஜாதி இந்துக்கள் அரிசன மக்களுடைய குடிசைகளை தாக்குவதற்கு திட்டமிட்டிருப்பதாக, ஜெயராமன் என்பவர் ஃபோன் மூலமாக தெரிவித்திருக்கிறார். இவ்வளவு தகவல்கள் கிடைத்தும் கூட காவல் துறையினர் பாராமுகமாக இருந்தார்கள் என்று சொல்வதா அல்லது ஜாதி இந்துக்களுக்கு ஆதரவு காட்டி வந்தார்கள் என்று சொல்வதா என்று குறிப்பிட அச்சமாக இருக்கிறது. எனவே, நான்



தமிழக அரசைக் கேட்டுக்கொள்வது இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றிருப்பதால், தென்னாற்காடு மாவட்டம், தொளார் கிராமத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய பதட்ட நிலையை, 300-க்கும் மேற்பட்ட அரிசன மக்களின் குடிசைகள் நாசம் அடைந்து இருப்பதால் அங்குள்ள கொந்தளிப்பான நிலைமையை விவாதித்து, அவர்களுக்குத் தேவையான பரிகாரம் செய்யவும் இதுகுறித்து விரிவான விவாதத்தை மேற்கொள்ளும் வகையிலும் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக் வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் தொளார் என்ற கிராமத்தில் 300-க்கும் மேற்பட்ட குடிசைகள், ஏழை எளிய அரிசனங்களின் குடிசைகள் தீ வைத்து கொளுத்தப் பட்டிருக்கின்றன. ஆரம்பத்திலேயே இப்படிப்பட்ட மோதல்கள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பதைப் பற்றி, அதன் காரணமாக ஒரு பதட்டநிலை அங்கே உருவாகியிருப்பதைப்பற்றி இரண்டுதரப்பிலேயிருந்தும் போலீஸ் அதிகாரிகளுக்குத்தொடர்ந்து தகவல்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. போலீசார் கூப்பிட்டுப் பேசுவதிலேயே இருந்தார்களே தவிர, முன் எச்சரிக்கையாக பாதுகாப்புகள் எதுவும் செய்யவில்லை. இது அவர்களுடைய அஜாக்கிரதையைக் காட்டுகிறது.

அவர்கள் கொஞ்சம் முன்ஜாக்கிரதையோடு அங்கே பாதுகாப்பு போட்டிருப்பார்களேயானால், தீ வைப்பைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும். ஆனால் போலீஸ் தரப்பில் முன்ஜாக்கிரதை நடவடிக்கை இல்லாத காரணத்தால்தான் இந்தகைய நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது என்று கூற விரும்புகிறேன். அவர்கள் இரு தரப்பினரையும் அழைத்துப் பேசியிருக்கிறார்கள். அங்கே பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டேயிருக்கையில், காலை 5 மணிக்கு இங்கே தீ வைப்பு நடந்திருக்கிறது. அப்படி பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கும்போதே, இங்கே தீ வைத்துக் கொளுத்தியிருக்கிறார்கள் என்றால், எப்படிப்பட்ட பதட்ட நிலை அங்கே இருந்தது என்பதை நாம் ஊகிக்க முடிகிறது. ஆனால் போலீசார் மிகவும் அஜாக்கிரதையாக இருந்ததின் காரணமாக, உடனடி நடவடிக்கை எடுக்கத் தவறியிருக்கிறார்கள்.

சேதம் ஏற்பட்டது ஒரு பக்கம் இருக்கட்டும். இதன் விளைவாக பாதிக்கப்பட்ட மக்கள் அங்கே மிகவும் கஷ்டமான நிலைமையில் இருக்கிறார்கள். ஆனால் இவ்வளவுக்குப் பிறகும் சமாதான பேச்சு வார்த்தை நடந்து, அதற்குப் பிறகும் தீ வைக்க முயற்சி செய்திருக்கிறார்கள் என்கிற நிலைமை அங்கே இருக்கிறது. ஆகவே, போலீசாரின் அஜாக்கிரதையின் காரணமாகத்தான் அந்த மக்கள் இன்று பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி விசாரணை நடத்த வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. அது மட்டும் அல்லாமல் அதைத் தொடர்ந்து பல்வேறு சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆதலால், போலீசாருடைய அஜாக்கிரதையைப் பற்றி இன்னும் விரிவாக விவாதிக்க வேண்டியிருப்பதாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரணப்

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1981 ஆகஸ்ட் 26

பணிகள் செய்ய வேண்டியிருப்பதாலும், — இப்போது ஏதோ
ஓரளவு உதவி செய்திருக்கிறார்கள். ஆனால் அது போதாது.
அந்த மக்கள் எல்லாம் வாழ வழி இல்லாமல், ஒருவேளை உண்ண
உணவு இல்லாமல் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்துக் கொண்
டிருக்கிறார்கள். அரசாங்கம் தற்போது செய்திருக்கும் உதவி
மிகவும் குறைவு. இன்னும் அதிகமான அளவில் அவர்களுக்கு
உதவி தேவை. அதைப்பற்றியும் விரிவாக விவாதிக்க வேண்டி
யிருக்கிற காரணத்தினால், இந்த அவையின் இதர அலுவல்களை
ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே பொருள்பற்றி
மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் 54 வது விதியின் கீழ்
கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். தட்டச்சில்
பிழை காரணமாக அது நேர்ந்திருக்கலாம் என்பதால்
கூறுவதால், அதை 55 வது விதியின் கீழ் மாற்றி, அவர்களைப்
பேச அழைக்கிறேன்.

* திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தென்னாற்காடு ஜில்லா தொளார் கிராமம்
750 மக்களைக் கொண்டது. கடந்த மூன்று ஆண்டுக் காலமாக
அங்கே வன்னிய சமுதாய மக்களுக்கும், அரிசன மக்களுக்கும்
இடையே தகராறு ஏற்பட்டவாறே இருந்தது. கூலி உயர்வு
கேட்டதற்காக 2 அரிசன பையன்களைக் கட்டி வைத்து
அடித்தார்கள் அங்கே. அதைப்பற்றி சென்ற மாதம் போலீ
சாருக்குப் புகார் கொடுக்கப்பட்டது. பிறகு சமாதானம் செய்யப்
பட்டது. அதன் பிறகு 1-8-1981 அன்று காலை சர்க்கரை
என்ற அருந்ததி பெண்—கல்யாணம் ஆகாத பெண், பஸ்
ஏறுவதற்காக வந்திருக்கிறாள். அப்போது அங்கேயிருந்த
கிருஷ்ணமூர்த்தி என்ற வன்னிய சமுதாயத்தைச் சேர்ந்த
சகோதரர், கற்பழிக்கின்ற நிலைக்குக் கையை பிடித்து இழுக்க,
அங்கேயிருந்த ஆசிரிய மாணவப் பெருமக்களும் பொது மக்களும்
சேர்ந்து அவரைக் கண்டித்து, அந்தப் பெண்ணைக் காப்பாற்
றினார்கள். 2-8-1981-ம் தேதியன்று, அந்தக் கிராமத்தின்
முக்கியஸ்தராகிய கிராம முன்சீப் தங்கவேலு படையாச்சி
அவர்களுடைய வீட்டில். அந்தப் பெண் வீட்டவர்களைச்
சமாதானப்படுத்தி, அந்தப் பெண்ணை அப்படிப்பட்ட
நிலைமைக்கு உள்ளாக்கியதற்காக 5 ரூபாய் அபராதம் என்று
தீர்ப்பு சொன்னார்கள்.

பெண்ணின் சொந்தக்காரர்கள், 'ஐயா, எங்களுக்கு அந்த ஐந்து
ரூபாய் வேண்டாம். அவள் கல்யாணம் ஆகாத பெண். அவளைக்
கட்டிக்கொடுத்து விடுகிறோம். இப்படி அபராதம் எல்லாம்
அதற்காகப் போடவேண்டாம் என்று காலில் விழுந்து கேட்க
இதைப்பற்றி பெண்ணாடம் போலீஸ் ஸ்டேஷனில் ஏதாவது
புகார் செய்தீர்கள் என்றால், இந்த ஊரிலேயே நீங்கள் வாழ
முடியாது. உங்கள் வீட்டைத் தீக்கு இரையாக்கி விடுவோம் என்று
2-8-1981லேயே சொல்லியிருக்கிறார்கள்.

அதன்பிரகாரம் விருத்தாசலம் தாலுகா ஆர். டி. ஓ.
அவர்கள், திட்டக்குடி தாலுகா தாசில்தார், பெண்ணாடம்
போலீஸ் சரகத்தைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் இவர்கள் எல்



1981 ஆகஸ்ட் 26] [திரு. எல். இளையபெருமாள்]

சொல்லி இரவு 1.30 மணி வரையில் சமாதானம் பேசி
மறுநாள் காலையில் மீண்டும் அதற்கு ஏதாவது வழி செய்ய
வேண்டும் என்று சொல்லி கையெழுத்து கேட்டிருக்கிறார்கள்.
25 குடும்பங்களைச் சேர்ந்த ஹரிஜன மக்கள்—ஹரிஜன சமுதாயத்
தில் மிகக் கீழ் நிலையில் இருக்கக்கூடிய அருந்ததியர்கள், அவதிப்
படுகிற மக்கள், பயப்பட்ட மக்கள், யாரிடமும் வம்புக்குப்
போகாதவர்கள்—ஐயா, நாங்கள் இந்த ஊரைவிட்டு வேண்டு
மானாலும் போய்விடுகிறோம். உங்கள் எதிரிலேயே இந்த
இளைஞர்கள் சொல்கிறார்கள், தீ வைத்து கொளுத்திவிடுவோம்
என்று, நாங்கள் இந்த ஊரில் வாழ முடியாது என்று தாசில்தார்
காலில் விழுந்து சொல்லியிருக்கிறார்கள்.

அப்போது தாசில்தார் சொல்லியிருக்கிறார், நீங்கள் பயப்பட
வேண்டாம் வீட்டுக்குச் செல்லுங்கள் என்று. அப்படிச் சொல்லி
இரவு 1 மணிக்கு எல்லோரையும் அனுப்பியிருக்கிறார்கள். அதைச்
சுற்றியுள்ள 12 கிராமங்களில் வசிக்கக்கூடிய வன்னிய
சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் திட்டமிட்டு காலை 5.15க்கு
தீப்பந்தங்களோடு வந்து அத்தனை வீடுகளையும் கொளுத்தி
விட்டார்கள். மொத்தம் இருந்த வீடுகள் 300; தீக்கு இரை
யாகியது 249 வீடுகள். அரசால் கட்டிக் கொடுக்கப்பட்ட
வீடுகள்: அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த
ஒன்றியத் தலைவரின் தம்பி வீடுதான் கல் வீடாக இருந்தது.
அந்தக் கல் வீட்டையும் பெட்ரோல் மண்ணெண்ணெய் ஊற்றி
அந்த வீட்டுக் கதவுகள் எல்லாம் சாம்பலாவதுவரை எரித்திருக்
கிறார்கள். அந்த 12 கிராமங்களில் அந்த ஊரில் உள்ள
ஹரிஜனங்கள்தான் சற்று வசதி உள்ளவர்கள், சொத்துள்ளவர்கள்
நல்ல நிலைமையில் உள்ளவர்கள். 27 மாடுகள் தீக்கிரையாயின.
500க்கு மேற்பட்ட கோழிகள் எரிக்கப்பட்டன. 37 பன்றிகள்
தீயில் வெந்து மடிந்தன.

இவற்றிற்கெல்லாம் மேலாக அங்கிருக்கிற நிலைமை இது
இராமநாதபுரத்தைப் போல் ஆகும் என்று கலெக்டர், ஆர். டி. ஓ.
முன்னால், தாசில்தார் முன்னால் பேசியிருக்கிறார்கள். 10-8-1981
அன்று இரவு எஸ். பி. ஐ நேரில் பார்த்து, கலெக்டரிடம்
தொலைபேசியில் பேசி அமைதியாக இருப்பதாகச் சொன்னார்கள்.
பின்னர் சென்று பார்த்தபோது நிலைமை பரிதாபமாக இருக்
கிறது; மேலும் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. கடந்த
50 ஆண்டுகளில் 200 தடவை அந்தக் கிராம மக்கள் கட்டி
வைத்து அடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலை அங்கே இருக்கிறது. இந்த நிலைமையில்
ஆளும்கட்சியைச் சார்ந்த ஒன்றியத் தலைவர் தம்பி வீடுதான்
மிக மிக வன்மையாகக் கொளுத்தப்பட்டு ஒரு சாமானையும்
எடுக்கமுடியவில்லை. அரசாங்க உதவி கொடுப்பது என்று
சொல்லும்போது, தெய்வாதீனமாக, இயற்கையாக ஏற்படுவதற்கு
அரசாங்கம் கொடுக்கவேண்டுமே தவிர திட்டமிட்டு, வஞ்சகமாக,
ஜாதி காரணமாக இப்படி வேண்டுமென்றே செய்கிற செயல்
களுக்கு, நான் அரசாங்கத்தை வேண்டிக்கொள்வது என்ன
வென்றால் அங்கே யார் எல்லாம் சம்பந்தப்பட்டுள்ளார்களோ

அவர்களுக்கு தண்டத் தண்டனைபோட்டு அவர்களிடம் நஷ்டயீடு கேட்கவேண்டும். கிட்டத்தட்ட 500 கலத்திற்கு மேலாக நெல், 100 கலத்திற்கு மேல் கம்பு, 22 கலத்திற்கு மேல் கேழ்வரகு, மாடுகள், கோழிகள், பன்றிகள் போன்றவை நாசமாகியிருக்கின்றன. அரசுக் கணக்குப்படி கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் இருக்கும் என்று தாசில்தார் சொல்கிறார்.

கடந்த மூன்று மாதமாக அந்த ஏழை மக்களுக்கு உதவி செய்ததற்காக அந்த தாசில்தார், ஆர். டி. ஓ-வின் வீடுகளில் கற்களை எறிந்திருக்கிறார்கள். அன்று இரவு தாசில்தார் வந்த போது அவர்களைத் துரத்தி தாசில்தாரையும், ஆர். டி. ஓ. வையும் கொளுத்திவிடுவோம் என்று மிரட்டியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் எஸ். பி. திரு. பஞ்சாபகேசன் அவர்களிடம் நேரில் எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் ஆகவே இப்பிரச்னை குறித்து விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து தீர்க்கமாக எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் இதுபற்றி விவாதித்து இதற்கு ஒரு பரிகாரம் காண வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டு எனக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்கு மீண்டும் நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தொளார் கிராமத்தில் ஏற்பட்ட வருந்துவதற்குரிய அசம்பாவித சம்பவங்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் மூலமாக ஏன் அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்பதற்கான காரண காரிய விளக்கங்களைக் கூற முன்வருகிற நேரத்தில் அவர்கள் சிலபல தகவல்களை இங்கே தந்திருக்கிறார்கள். உள்ளபடியே இது வருந்துவதற்குரிய, வேதனைப்படுவதற்குரிய ஒரு நிகழ்ச்சி என்றாலும் நம் காவல்துறையினரைப் பொறுத்தவரையில் அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை முறைப்படி எடுத்துக் கொண்டுதான் வந்திருக்கிறார்கள்.

[முற்பகல் 11.00]

மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் எடுத்து தெரிவித்ததைப்போல் அங்கே இருசாராரிடையே பகைமையுணர்ச்சி நீண்டகாலமாக இருந்து அது அவ்வப்போது பீறிட்டுக் கிளம்பி அதை அடக்குவதற்கான செயல்களும் இருந்து வந்திருக்கின்றன. இங்கே அரசுக்குக் கிடைத்த தகவல்களைப் பற்றி நான் எடுத்துக் கூறுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்கு கிடைத்த தகவல்களை வைத்திருக்கிறார்கள். அதையொட்டி, இந்த அரசு கூர்ந்து கவனித்து தக்க நடவடிக்கை எடுத்து, நியாயம் கிடைக்குமாறு செய்யும். அங்கே பாதுகாப்பு ஏற்படுவதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்கூறிய கருத்துக்கள் பயன்படுவனவாக அமையும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



தென்னாற்காடு மாவட்டம் தொளார் கிராமத்தில், ஜாதி இந்துக்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் பகைமை உணர்ச்சி தோன்றி இருந்தது. அதைத் தொடர்ந்து 30-7-1981 அன்று ஆதி திராவிட இனத்தவர் ஒருவரை சாதி இந்துக்கள் சிலர் தாக்கியுள்ளனர். இச்சம்பவத்தின்மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. அன்று மாலை திட்டக்குடி வட்டாட்சியரும், காவல் துறையினரும் இரு சமூகத்தவரிடையேயும் சமாதானம் செய்து வைத்து அமைதி காக்கும்படி அறிவுறுத்தினர். காவல் துறை பாதுகாப்பு போடப்பட்டது.

1-8-1981 அன்றும், 3-8-1981 அன்றும் இந்துக்கள் சிலரை ஆதி திராவிடர்கள் சிலர் தாக்கியுள்ளார். இச்சம்பவங்களின்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 4-8-1981 அன்று விடியற் காலை சாதி இந்துக்கள் சுமார் 200 பேர்கள் திடீரென்று கும்பலாக ஆயுதங்களுடனும், தீப்பந்தங்களுடனும் சென்று ஆதி திராவிடர்களின் குடிசைகளுக்குத் தீ வைத்துள்ளனர். 184 குடிசைகளும், 5 ஆடுகளும், கோழிகள் சிலவும், டயர் வண்டி ஒன்றும் தீக்கிரையாயின என்ற விவரம் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் தங்களுக்குத் தெரிந்த தகவல்களைத் தந்திருக்கிறார்கள். அதன்மேல் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, நியாயம் வழங்கப்படும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

எனக்குத் தந்திருக்கின்ற விவரத்தின்படி, காவல்துறை ஆய்வாளரும், வட்டாட்சியரும், காவல்துறையினரும் செய்தி அறிந்து விரைந்தனர். தீயணைப்புப் படையினரும், அதிக அளவில் காவல் துறையினரும் வரவழைக்கப்பட்டு, நிலைமை அமைதிக்குக் கொண்டு வரப்பட்டது. திட்டக்குடி காவல்துறை ஆய்வாளருக்கும் 5 பெண்கள் உள்பட 23 ஆதி திராவிடர்களுக்கும் காயம் ஏற்பட்டது. காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவும், இருப்பிட வசதியும் அளிக்கப்பட்டன. 5 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண்ணெண்ணெயும், சேலை வேட்டிகளும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ரூ. 400 உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர், டி. ஐ. ஜி. மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஆகிய உயர் அதிகாரிகள் கிராமத்திற்குச் சென்று பார்வையிட்டனர். இரு சாராரும் அடங்கிய அமைதிக் குழு அமைக்கப்பட்டு கூட்டம் நடத்தப்பட்டது. உயர் அதிகாரிகள் அருகிலுள்ள கிராமங்களுக்கும் சென்று அனைவரையும் அமைதி காக்கும்படி அறிவுரைகள் கூறியுள்ளனர். சாதி இந்துக்கள் 50 பேர்களும் ஆதி திராவிடர் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

10-8-1981 அன்றும், 11-8-1981 அன்றும் தொளார் கிராமத்திற்கு அருகில் கோடிக்குளம் கிராமத்தில் சிறுசிறு தீவைப்புச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. அவைகளின் மீதும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. காவல் துறையினரின் ரோந்து

தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. நிலைமை தற்பொழுது அமைதி யாக உள்ளது. எனவே, இந்தப் பிரச்னை குறித்து மேலும் விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் தெரி வித்துள்ள கருத்துக்களின் அடிப்ப டயிலே நியாயம் வழங்கு வதற்கும், தொடர்ந்து அமைதி காப்பதற்கும், இந்த மாச்சர்யங் களின் விளைவாக எதிர்காலத்திலே அமைதிக்குப் பங்கம் நிகழாத முறையிலே நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொள்ளும் என்ற உறுதியைக் கூறுகிறேன். ஆகவே இந்த அளவிலே கருத்துக்களை எடுத்துச் சொன்னபிறகு, சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து மேலும் விவாதிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல் களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரி.

**திரு. எம். எஸ். மாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

"திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரியில் இட வசதி யில்லாததாலும், வகுப்பறைகளில் போதிய மேசை, நாற்காலிகள் இல்லாததாலும் மாணவர்கள் அவதிப்படுவது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருவாரூர் அரசினர் கலைக்கல்லூரியில் மாணவர் அமைதி யின்மை குறித்து அரசால் பெறப்பட்ட தகவல்கள் பின் வருமாறு:

திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரியில் உள்ள பெரிய வகுப்பறைகளைத் தடுத்து கூடுதல் அறைகள் (Partition) ஆக்கு வதற்குக் கல்லூரி முதல்வரால் அனுமதி பெறப்பட்டுள்ளது. வேலை இன்னும் ஒரு வாரத்தில் ஆரம்பிக்கப் படும். இது முடிந்த பின் வகுப்பறைகள் கூடுதலாக இருக்கும். கல்லூரியில் மேஜை, நாற்காலி முதலிய தட்டுமுட்டு சாமான்கள் பற்றாக் குறையில்லை என்று முதல்வர் அறிவித்துள்ளார். குறிப்பிடத் தக்க வகையில் இக்கல்லூரியில் மாணவர் கிளர்ச்சி இப்போது ஏதுமில்லை.





(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

**திரு. எம் எஸ். மாணிக்கம்: :** பேரவை துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லூயின் வகுப்பறைகளைத் தடுத்து அதிக வகுப்புகளை உருவாக்குவதாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அந்தக் கட்டிடம் இப்போது போதுமான அளவு இல்லாததால் புதிய கட்டிடம் கட்டப் பட்டால்தான் வருங்காலத்தில் மாணவர்களை அதிகமான அளவுக்குச் சேர்த்துக் கொள்ள இயலும். இப்போது குறைவான மாணவர்கள்தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பல வகுப்புகளைத் துவக்க புதிய கட்டிடத்தைக் கட்டியாகவேண்டும். மேலும் மாணவர்களுக்கு வேண்டிய வசதிகள் இல்லை. அதையும் உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போதுள்ள தேவைகளுக்கேற்ப முடிந்த அளவுக்கு வசதிகளைச் செய்திருக் கிறோம். எதிர்காலத் தேவைகளுக்கு வேண்டிய திட்டங்களைப் பின்னால் நாம் பரிசீலிக்கலாம்.

**திரு. எம். எஸ். மாணிக்கம் :** கட்டிட வசதி இல்லாததால் புதிய வகுப்புகள் துவங்க முடியாமல் இருக்கின்றன. கிழக்கு தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் ஒரே கல்லூரி அந்த அரசினர் கல்லூரி. ஏழை மாணவர்கள் படிக்க இருக்கும் ஒரே கல்லூரி அது. அந்தக்கல்லூரியை விரிவுபடுத்துவதற்கு புதிய கட்டிடம் கட்டப் படவேண்டும். ஆகவே, அடுத்த ஆண்டு புதிய வகுப்புகளைத் துவக்க புதிய கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கல்லூரி முதல்வர் அவர்களிடமிருந்து அப்படி ஒரு கோரிக்கை வருமானால் அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

### (ஆ) வேடசந்தூர் பாளையம் பகுதியில் அரசு சிமெண்ட் தொழிற்சாலை.

**வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"வேடசந்தூர் பாளையம் பகுதியில் அரசு சிமெண்ட் தொழிற் சாலையை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ள பகுதிகளில் தனியார் சிமெண்ட் நிறுவனம் நிலங்கள் வாங்குவது குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம், பொதுத்துறையில் ஆண்டு 1க்கு 4 இலட்சம் டன் சிமிண்டு உற்பத்தி செய்யக்கூடிய புதிய சிமிண்டு ஆலை ஒன்றை மதுரை மாவட்டம் பாளையம் என்ற இடத்திற்கு அருகில் நிறுவுவதற்கு இசைவுக் கடிதம் கோரி மைய அரசுக்கு விண்ணப்பம் அனுப்பியுள்ளது. மேற்கண்ட இசைவுக் கடிதத்தை தமிழக அரசு மைய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. இப்புதிய சிமிண்டு ஆலையை நிறுவ மைய அரசு தமிழ்நாடு சிமிண்டு நிறுவனத்திற்கு உரிமம் வழங்கும் என மைய தொழில் அமைச்சர் அண்மையில் அறிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மைய தொழில் அமைச்சரின் அறிவிப்பைச் சுட்டிக் காட்டி, தமிழ்நாடு சிமெண்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் மேற்படி புதிய சிமிண்டு ஆலைக்குத் தேவையான நிலங்களின் மதிப்பை உயர்த்துவதற்காக நில உரிமையாளர்கள் நிலம் விற்பனை செய்வதைத் தடுக்கும் வகையில் திருச்சி மாவட்டத்தில் குளித்தலை தாலுக்காவில் 1551.07 ஏக்கர் பட்டா நிலம், மதுரை மாவட்டம் வேடசந்தூர் தாலுக்காவில் 1018.89 ஏக்கர் பட்டா நிலம் ஆக மொத்தம் 2569.96 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு சிமிண்டு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு அறிவிப்பு வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேற்கண்ட 2569 96 ஏக்கர் பட்டா நிலத்துடன், மதுரை மாவட்டம் வேடசந்தூர் தாலுக்காவில் 99.44 ஏக்கர் புறம்போக்கு நிலம், திருச்சி மாவட்டம் குளித்தலையில் 206.23 ஏக்கர் புறம்போக்கு நிலம் ஆக மொத்தம் 305.67 ஏக்கர் புறம் போக்கு நிலமும் தேவைப்படுவதாகவும், மொத்தத்தில் 2875.63 ஏக்கர் பட்டா மற்றும் புறம்போக்கு நிலம் தேவைப்படுகிறதென்றும் தமிழ்நாடு சிமிண்டு நிறுவன இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. புதிய தொழிற்சாலை அரசுத்துறையில் ஏற்படுத்துவதற்கு உதவும் வகையில் அரசு ஏற்கெனவே 1974 ஆம் ஆண்டு சனவரித் திங்களிலேயே, வேடசந்தூர் பகுதியில் கிடைக்கும் சுண்ணாம்புக் கற்களை அரசுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது என அறிவித்து ஆணை பிறப்பித்துள்ளது.

4. தமிழ்நாடு அரசு சிமிண்டு நிறுவனத்தின் இயக்குநர் தெரிவித்துள்ள சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு நிர்வாக அவரது கோரிக்கையை ஏற்று, மேற்குறிப்பிட்ட பட்டா நிலத்திற்கு 1894 ஆண்டு நில எடுப்புச் சட்டம் 4(1) பிரிவின் கீழ் அறிக்கை வெளியிட 7-8-1891 நாளிட்ட தொழில்துறை அரசு ஆணை எண் 1094-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அந்த ஆணையில் மேற்கூறப்பட்ட இரு மாவட்டங்களின் மாவட்ட வருவாய் அதிகாரிகளை நில எடுப்புச் சட்டம் 4(1) பிரிவின் கீழ் தேவையான வரைவு அறிக்கைகளை தமிழ்நாடு அரசிதழில் வெளியிட அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர்.





திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: விவர அறிக்கையில் வேடசந்தூர் பகுதியில் கிடைக்கும் சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு அரசு சிமிண்டு ஆலை துவங்க இருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தப் பகுதியில் தனிப்பட்ட சிமிண்டு ஆலை நிர்வாகத்தினர் தனிப்பட்டவர்கள் நிலங்களை அந்தப் பகுதியில் விலைக்கு வாங்குவதோடு அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களையும் அவர்களுக்கு குத்தகைக்கு விட வேண்டுமென்று மனுச் செய்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் தனிப்பட்ட நிறுவனம் வாங்கியிருக்கும் நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தப்படுவார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மதுரை, திருச்சி இரண்டுக்கும் இடைப்பட்ட பாளையத்தில் 40 கோடி ரூபாய் முதலீட்டில் அரசு சிமிண்டு ஆலை நிறுவ இருக்கிறது. அதற்கு 2,800 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அதிலே 2,500 ஏக்கர் பட்டா நிலமாகவும், முன்னூற்று சொச்சம் ஏக்கர் புறம்போக்கு நிலமாகவும் இருக்கிறது. புறம்போக்கு நிலங்களைப் பொறுத்த வரை இந்தத் தொழிற்சாலைக்காக ஆர்ஜிதம் செய்யப் பட்டிருக்கிறது. பட்டா நிலங்களைப் பொறுத்தவரை ஆர்ஜிதம் செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப் பட்டிருக்கிறது. அரசு சிமிண்டு ஆலைக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் உள்ள நிலத்தை தனியார் ஒதுக்கவேண்டுமென்று கேட்பார்களானால் நிச்சயமாக நிராகரிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: இந்த சிமிண்டு ஆலை அமைய நிறுவுகின்ற பகுதியில் என். ஜி. அய்யங்கார் குழு ஆய்வுப்படி 32 மிலியன் டன் சுண்ணாம்புக்கல் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட நிறுவனம் 1200 ஏக்கர் மைனிங் லீஸ் வேண்டுமென்று மைய அரசின் ஆணைக்கு ரிவிஷன் பெட்டிஷன் போட்டிருக்கிறார்கள். அதன் பேரில் 100 தினங்களுக்குள் நடவடிக்கை எடுத்து மைனிங் லீஸ் வழங்க வேண்டுமென்று சொல்லியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அப்படி இருந்தால் மாநில அரசு மைய அரசுக்குத் தெரிவித்து அதை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமா?

[முற்பகல் 11-10]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** நான் ஏற்கனவே சொல்லியது போல் பாளையம் என்ற இடத்தில் அமைய இருக்கும் அரசு சிமெண்ட் தொழிற்சாலை திருச்சி—மதுரை ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் இடைப்பட்ட பகுதியில் இருக்கிறது. வேடசந்தூர் பகுதியில் 1300 ஏக்கர் திருச்சி மாவட்டத்தில் 1300 ஏக்கர் ஆக 2,600 ஏக்கர் பட்டா நிலங்களாக இருக்கின்றன. இந்த இடங்கள் அரசு சிமெண்ட் தொழிற்சாலைக்குத் தேவை என்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன. தனியார் யாரும் அந்த நிலங்கள் தேவை என்று மனுச் செய்வார்களானால் அந்தப் பகுதி நிலங்கள் தனியாருக்கு வழங்கப்படக்கூடாது என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே சொன்னேன்.

எனவே அரசு நிராகரிக்கிறபோது நாம் மட்டுமல்ல, மொத்தமாக தமிழ்நாட்டிலே உள்ள கனிம வளங்களை பொறுத்தவரையில் அவர்கள் மத்திய அரசுக்கு மனுச் செய்கிற உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அதை மீண்டும் தமிழக அரசுக்குத்தான் அனுப்புவார்கள். இங்கே அனுப்புகிறபோது தமிழ்நாடு அரசுக்குத் தேவை என்று காரணம் கூறி அதை மறுக்கிற உரிமையும் அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) திருநெல்வேலி நீர்ப்பாய்ச்சுதாரர்கள் பேத்துவாரம்தாரர்கள் சட்டமுன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே 1981 ஆம் ஆண்டு திருநெல்வேலி நீர்ப்பாய்ச்சுதாரர்கள் தமிழ்நாடு பேத்துவாரம்தாரர்கள் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.





தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்ய பெற்றிருக்கிறது.

(ஈ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல் இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு 1981

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது,

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச் சட்ட முன்வடிவு பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஊ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் தனி அதிகாரிகள் நியமனம் இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

[1981 ஆகஸ்ட் 26

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### 1981-82 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை மதிப்பீடுகளை இந்த அவையில் வைக்க முன் வருகிறேன். இந்தத் துணை மதிப்பீடுகளில் உள்ள மொத்தத் தொகை ரூபாய் 1,55.38 கோடியாகும். இதில் ரூபாய் 62.35 கோடி வருவாய்க் கணக்கில் உள்ளது. இதில் ரூபாய் 1.48 இலட்சம் சாட்டிய செலவுகள் குறித்ததாகும். ரூபாய் 13.03 கோடி மூலதன கடன் கணக்குகளில் உள்ளது. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்தச் சட்டத்தின்) (எண் 28/1981) அடிப்படையில் எதிர்பாராச் செலவு நிதிக்கு மாற்றுவதற்கு, ரூபாய் 80 கோடி ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. பல்வேறு மானியக் கோரிக்கைகளில் கேட்கப்பட்டுள்ள தொகைகளின் விவரமும் அவற்றிற்கான காரணங்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. மன்ற உறுப்பினர்களின் தனி கவனத்திற்காக, சில குறிப்பிட்ட முக்கிய இனங்களின் விவரங்களை மட்டும் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

2. இம் மாநிலத்தில் நிலவிய வறட்சியின் விளைவுகளைப் போக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு ரூபாய் 48 90 கோடி செலவிடுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர் இந்த ஒப்புதலை அடிப்படையாகக் கொண்டு, மாநில அரசு ஏற்கெனவே வறட்சிப் பணிகளுக்கான செலவுக்கு அனுமதி வழங்கி உள்ளது. இதில் ரூபாய் 18.72 கோடி குடிநீர் வழங்கும் பணிகளுக்குரியதாகும்; ரூபாய் 26.03 கோடி வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்குரியதாகும். பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகக் குடியானவர்களுக்குத் தக்க விகிதங்களுடன் வழங்கும் இனம் மத்திய அரசால் ஏற்பளிக்கப்படாவிட்டாலும். அவ்வாறு கடன் வழங்கும்பொருட்டு, இந்த அரசு குடியானவர்களுக்கு ரூபாய் 5 கோடி அனுமதித்துள்ளது.



1981 ஆகஸ்ட் 26]

3. கிராமப் பகுதிகளில் போதிய வேலைவாய்ப்பு அளிப்பதற்காக, இம் மாநிலத்தில் கிராமப்புற வேலை வாய்ப்பு தேசியத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1980-81 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களுக்காக ரூபாய் 4.45 கோடியும் நடப்பு நிதி ஆண்டில் (1981-82) மேற்கொள்ளப் பட்ட திட்டங்களுக்காக ரூபாய் ..40 கோடியும் துணை மதிப் பீடுகளில் ஒதுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசிடமிருந்து பெறும் தொகைக்கு நிகரான தொகை வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் மாநில அரசால் நடப்பாண்டில் செலவிடப் படும்.

4. 150 வளர்ச்சி வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டம் செயற்படுத்தப்படுமென 1981-82 நிதி நிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டிருந்தேன். நடப்பாண்டில் 150 வளர்ச்சி வட்டாரங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்காக ரூபாய் 30 கோடியும் ஏனைய திட்டங்களுக்காக ரூபாய் 59 கோடியும் ஒதுக்குவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. இத் திட்டங் களுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் பங்கினைச் செலுத்தும் பொருட்டு அவைகளுக்குக் கடன் அளிப்பதற்காக இந்தத் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தை நல்ல முறையில் செயற்படுத்துவதற்கு அவசியமான தொழில்நுட்பப் பணியாளர் பதவிகளை ஏற்படுத்தியுள்ளது. இவற்றிற்கு ரூபாய் 173.33 இலட்சம் செலவாகும்.

5. 1981-82 நிதி ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை அவையில் வைக்கப்பட்ட பின்னர் ஏற்பட்டுள்ள சில முக்கியமான செலவினங்களை மட்டுமே இப்போது எடுத்துக் கூறியுள்ளேன். இந்தக் கோரிக்கைகளில் அரசு கேட்டுள்ள தொகையை வழங்கி இத் திட்டங்கள் அனைத்திற்கும் இசைவளிக்குமாறு அவையை வேண்டி அமருகிறேன். வணக்கம்.

### 8. அரசினர் தீர்மானம்.

தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை—விவாதம்.

திரு. துரைமுருகன்: துணைத் தலைவரவர்களே, தமிழகத் தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் குறித்து மதிப்பிற்குரிய நம்முடைய நிதி யமைச்சரவர்கள் இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற இந்த வெள்ளை அறிக்கையின்மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில சில கருத்துக் களைச் சொல்ல விழைகின்றேன். நாட்டிலே மக்களுக்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களின் விலைவாசி விஷம் போல ஏறியிருக்கிறது. வாங்குகின்ற சக்தியற்று ஏழை,

நடுத்தர மக்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். இந்த அவல நிலை நாட்டிலே பரவியிருக்கிறது என்பதை எதிர்க்கட்சிகள் மட்டுமல்லாமல் ஆளுங்கட்சிகூட உணர்ந்திருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் இந்த வெள்ளையறிக்கையை இந்த மன்றத்திலே நாவலர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

ஆனால், இந்த வெள்ளை அறிக்கையிலே, ஏறிவிட்ட விலைவாசிகளை எப்படிக் குறைப்போம் என்பதற்கான காரண காரியங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்களா? அல்லது ஏறிவிட்ட விலைவாசியை நாங்கள் எப்படிக் கட்டுப்படுத்தியிருக்கிறோம் என்பதற்கு ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை.

அரிசி விலை ஆகாயத்திலே பறக்கிறது; மிளகாய் விலை மிரட்டுகிறது; புளி விலை கிலியை ஏற்படுத்துகிறது என்ற நிலைமைகள் இருக்கும்பொழுது அவைகளுக்கெல்லாம் பரிகாரம் காணுகின்ற நடவடிக்கைகளைச் சொல்லியிருக்கிறார்களா என்றால் இல்லை. திருப்பித் திருப்பிப் பார்த்தால் இதிலே புள்ளிவிவரங்களை நாவலர் அவர்கள் அதிகமாகத் திணித்திருக்கிறார்கள். நாவலர் அவர்கள் புள்ளிவிவரங்களைக் காட்டுவதில் கெட்டிக்காரர் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அந்தப் புள்ளிவிவரங்கள் ஏட்டுச் சுரைக்காயைப்போல ஆகிவிட்டிருக்கிறதே தவிர நாட்டுக்கே அல்லது விலைவாசியைக் குறைக்கவோ பயன்பட்டிருக்கிறதா என்றால் கிடையாது.

அரிசி விலை ஏன் இப்படி ஏறியிருக்கிறது என்று கேட்டால், என்ன செய்வது, ஒரிசாவிலேயிருந்து அரிசி வாங்கினோம், மத்தியப் பிரதேசத்திலேயிருந்து அரிசி வாங்கினோம், ஆந்திரவிலேயிருந்து அரிசி வாங்கினோம்; மத்திய அரசின் சென்ட்ரல் பூலிலேயிருந்து அரிசி வாங்கினோம்; ஆனால் அவற்றைக் கொண்டு வருவதற்கான லாரிகள், வேகன்கள் கிடைக்கவில்லை என்று சொல்வது அரசு சொல்லுகின்ற சமாதான காரியமா? அரிசியின் விலை வேலூரிலே பார்த்தால் படியரிசி விலை ஏழு ரூபாய் விற்கிறது.

[முற்பகல் 11.20]

வெளி மார்க்கெட்டிலே விற்கிறது. இந்த நிலைமை நீடிக்கிறது, இவற்றைக் குறைக்க வேண்டுமென்று கேட்டால், எனக்கு லாரி கிடைக்கவில்லை. லாரி சத்தம் அதிகமாகிவிட்டது என்ற ஒரு சாதாரண காரணத்தைச் சொல்லியிருப்பதைப் பார்க்கிறபொழுது நான் வேதனையுறுவதைத் தவிர, வேறு என்ன சொல்வது? காரணம், இதிலே எந்தவிதமான திட்டங்களும் கிடையாது. அரிசியானாலும், பருப்பானாலும் எண்ணெயானாலும், புளியானாலும், மக்களுக்குத் தேவையான இன்றியமையாப் பொருள்களின் விலை இன்றைக்கு ஓகோ என்று உயர்ந்திருக்கிறது.



சென்ற மாதம் விற்ற விலையையும், இந்த மாதம் விற்கின்ற விலையையும், நாவலர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வெளி மார்க்கெட்டில், பச்சரிசி சென்ற மாதம் ரூ. 3/-; இந்த மாதம் ரூ. 3.40 கடலை எண்ணெய் சென்ற மாதம் ரூ. 12/-; இந்த மாதம் ரூ. 15.30. தேங்காய் எண்ணெய் சென்ற மாதம் ரூ. 18/-; இந்த மாதம் ரூ. 19/-. நல்லெண்ணெய் கிலோ சென்ற மாதம் ரூ. 12/-; இந்த மாதம் ரூ. 14.50. கடலை பருப்பு கிலோ சென்ற மாதம் ரூ. 4.50; இந்த மாதம் ரூ. 5.60 துவரம் பருப்பு சென்ற மாதம் ரூ. 5/-; இந்த மாதம் ரூ. 6/-: உளுத்தம் பருப்பு சென்ற மாதம் ரூ. 4/-, இந்த மாதம் ரூ. 4.50. புளி சென்ற மாதம் ரூ. 7/-; இந்த மாதம் ரூ. 8/-. மிளகாய் சென்ற மாதம் ரூ. 12/-; இந்த மாதம் ரூ. 15/-. இப்படி எந்தப் பொருளின் விலையை எடுத்துக் கொண்டாலும் விஷம் போல் ஏறியிருக்கிறதே அதற்கு என்ன திட்டம் என்று கேட்டால், நீட்டுகிறேன் வெள்ளை அறிக்கையைப் படித்துக் கொள்ளுங்கள் என்று கொடுத்திருக்கிறாரே தவிர வேறொன்றும் இல்லை. இதிலே, நீங்கள் ஆக்கபூர்வமான காரியம் என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டால், நியாய விலைக் கடைகளை வைத்து, நாங்கள் மக்களுக்கு மலிவு விலையிலே பொருள்களைத் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

1962 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன், காங்கிரஸ் ஆண்ட காலத்திலே விலைவாசிப் போராட்டம் நடைபெற்றது. நாவலர் அவர்கள் அப்பொழுது எதிர்க்கட்சியிலே இருந்தார்கள். அப்பொழுது காங்கிரஸ் அமைச்சர்கள் சொன்னார்கள், நாங்கள் விலைவாசியைக் குறைக்க நியாய விலைக் கடைகளை வைக்கப் போகிறோம், என்று. அப்பொழுது நாவலர் அவர்கள் பேசியது இன்னும் பசுமையாக என் நினைவிலே இருக்கிறது. 'சந்து முனையிலே சாக்கடை பாய்கிறது என்று நாங்கள் சொல்கிறோம். ஆனால், இவர்கள் அங்கே ஒரு சந்தனக் கடை வைப்போம் என்று சொல்கிறார்கள். இது முறைதானா இந்த ஆட்சிக்கு' என்று கேட்டார் நாவலர். அந்த வார்த்தைகளை நான் மறக்காமல், உங்களுக்கே அர்ப்பணிக்கிறேன். 'விலைவாசி ஏறியிருக்கிறது, சந்து முனையிலே சாக்கடை பாய்கிறது என்கிறோம். நீங்களே, இன்றைக்கு சந்தனக் கடை வைப்போம் என்று சொல்ல முன் வந்திருக்கிறீர்களே என்பதைக் கண்டு நான் உங்களை எள்ளி நகையாடுவதா ? அல்லது, நாவலர்....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிச் சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லை. (சிரிப்பு) அப்படிப்பட்ட உவமானம் என் வாயிலிருந்து வரவும் வராது. அதை உள்ளபடியே நிகழ்ச்சிக் குறிப்பிலேயிருந்து எடுத்துத் தருவார்களானால், நான் திருத்திக்கொள்கிறேன். அப்படிச் சொன்னதாக ஞாபகம் இல்லை. சந்து முனைக்கும் சந்தனத்திற்கும் போய் நான் உவமானம் சொல்லமாட்டேன். (சிரிப்பு)

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, நாவலர் அவர்களே பொதுக் கூட்டத்திலே பேசியிருக்கிறார்.

(திரு. துரைமுருகன்) [1981 ஆகஸ்ட் 26

இல்லையென்று இப்பொழுது மறுத்தால் நான் என்ன செய்வது? எத்தனையோ மறுக்கிறார் அன்றைக்குச் சொன்னதை. அதிலே இது ஒன்று. பரவாயில்லை, ஏற்றுக்கொள்கிறேன்.

அவர் சொல்கிறார், இப்பொழுது நாங்கள் நியாய விலைக் கடைகளை வைத்திருக்கிறோம், என்று. நாங்கள் எவ்வளவு நியாய விலைக் கடைகளை வைத்திருக்கிறோம் தெரியுமா? 17,400 நியாய விலைக் கடைகளை வைத்திருக்கிறோம். அது மட்டுமல்ல, 130 இலட்சம் குடும்பக் கார்டுகளை மக்களுக்கு வழங்கியிருக்கிறோம். எனவே கார்டுகள் கையிலே இருக்கின்றன, கடையிலே சரக்கு இருக்கிறது போய் மலிவு விலையிலே வாங்கிக் கொள்ளுங்கள். விலைவாசியைப் பொருட்படுத்தாமல் வாங்கிச் சாப்பிடுகிறார்கள் என்ற ஒரு எண்ணத்தை ஏற்படுத்துவதைப் போல் இந்த அறிக்கை இருக்கிறது.

அது மட்டுமல்ல, 'நியாய விலைக் கடைகளில் அரிசி, கோதுமை, மைதா, ரவை, பாமாலின் ஆயில், மண்ணெண்ணெய் லெவி சர்க்கரை போன்ற இன்றியமையாப் பொருள்கள் குடும்ப அட்டைகள் மூலம் வழங்கப்படுகின்றன என்று நாவலர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் ஒன்றே ஒன்று அவரைக் கேட்கிறேன். இது உண்மைக்கு மாறான அறிக்கை என்பது எனது முதல் வாதம். நியாய விலைக் கடை மூலமாக அரிசி கிடைக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிடைக்க வேண்டிய அளவு அரிசி கிடைக்கிறதா என்று கேட்டால் கிடையாது உங்களுடைய அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால், நியாய விலைக் கடையிலே மாதம் ஒன்றுக்குச் சுமார் 20 கிலோ அரிசி தர வேண்டும் ஒரு குடும்பக் கார்டுக்கு. ஆனால் எவ்வளவு தருகிறார்கள்? 5 கிலோதான் தருகிறார்கள். நாவலர் அவர்கள் எந்தக் கிராமத்திற்கு வேண்டுமானாலும் திடீரென்று போய் ஒரு விசாரணை நடத்தட்டும். 5 கிலோ அரிசிதான் அந்த நியாய விலைக் கடைகளிலே கிடைக்கிறது. ஆனால், சென்னை போன்ற இடங்களில்கூட நகரங்களில்கூட 20 கிலோ அரிசி கொடுப்பதில்லை, 10 கிலோதான் கிடைக்கிறது. என்னுடைய தொகுதியில் நான் சுற்றிப் பார்த்தவரையில் சொல்கிறேன், அனந்தலை, செட்டித்தாங்கல், காரை, சாகவேழி, பூண்டி, பெருவாழ்வு இப்படி நியாய விலைக் கடைகள் எல்லாவற்றையும் நானே நேரிலே சென்று பார்த்தேன். 5 கிலோதான் கொடுக்கப்படுகிறது. சுமைதாங்கி என்கிற ஊரிலேயிருக்கிற நியாய விலைக் கடையிலே கிட்டத்தட்ட 580 குடும்பக் கார்டுகள் இருக்கின்றன. ஆனால் எவ்வளவு பேர்களுக்கு அரிசி கிடைக்கிறது தெரியுமா? 400 கார்டுகளுக்குத்தான் அரிசி கிடைக்கிறது. ஆகவே, 5 கிலோதான் கிடைக்கிறது என்பது மட்டுமல்ல. எல்லா கார்டுகளுக்கும் கிடைக்கிறதா என்றால், கிடையாது. அத்தகைய நிலையிலே இன்றைக்கு அரிசி இருக்கிறது. அதிலே இன்னொன்றும் இருக்கிறது. ரவை, மைதா, கோதுமை இவைகளையெல்லாம் கிராமத்திலே பார்ப்பதே கிடையாது. எந்த நியாயவிலைக் கடையிலும் மைதாவும் ரவையும் விநியோகத்திற்குக் கிடையாது. மக்களுக்கும் விற்பது கிடையாது.



1981 ஆகஸ்ட் 26] (திரு. துரைமுருகன்)

பாமாலின் ஆயில் ; அதைப்பற்றி சொல்கிறார் நம்முடைய நாவலர் அவர்கள். பாமாலின் ஆயில் கிராமத்திலே இருக்கின்ற மக்கள் பார்க்காத ஒன்று. எந்த நியாயவிலைக் கடையிலும் கிடையாது. கிடையவே கிடையாது. ஆனால் அறிக்கையிலே சொல்லுகிறார்கள் பாமாலின் ஆயில் தருகிறோம், ரவை தருகிறோம், கோதுமை தருகிறோம் என்று. ஆனால் உண்மைக்கு மாறான அறிக்கையை இந்த மன்றத்திலே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்கள் என்பதை வேதனையோடு குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லுகிறார். வருவாய் கிராமங்கள் தோறும் நியாயவிலைக் கடைகளை அமைத்ததன் காரணமாக, கிராமப் புறங்களில் வாழும் மக்களுக்கு இன்றியமையாப் பொருள்கள் கிடைக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. ரெவின்யூ வில்லேஜ்கள் தோறும் நியாயவிலைக் கடைகளை வைத்திருக்கிறோம் என்று அறிக்கை வைத்திருக்கிறீர்கள். இந்தக் கருத்தை நான் இங்கே மறுக்கிறேன். ஆதாரம் வேண்டுமானால், என்னுடைய தொகுதியிலே காட்டசிவபுரம் என்று ஒரு ரெவின்யூ வில்லேஜ் இருக்கிறது. அந்த வில்லேஜிலே கடையே கிடையாது. ஆனால் அங்கே உள்ளவர்கள் எங்கே போய் வாங்குகிறார்கள் என்றால் பக்கத்திலே அருங்குன்றம் என்று இன்னொரு ரெவின்யூ வில்லேஜ்லே. இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் அறிக்கையிலே ரெவின்யூ வில்லேஜ் தோறும் நியாயவிலைக் கடைகளை வைத்திருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் பல ரெவின்யூ வில்லேஜ்களிலே நியாய விலைக் கடையே கிடையாது என்பதை நாவலர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று கோதுமை. தற்போது ஒவ்வொரு குடும்பக் கார்டுக்கும் மாதம் ஒன்றுக்கு அதிகபட்சமாக ஐந்து கிலோ, இருப்பை அனுசரித்து வழங்கப்படுகிறது. நான் நாவலரிடத்தில் கேட்கிறேன். ஐந்து கிலோ ஒரு குடும்ப கார்டுக்குக் கோதுமைத் தருகிறீர்களா? விசாரித்தீர்களா? அதிகாரிகள் எழுதிக் கொடுப்பதை அப்படியே இந்த அறிக்கையில் வைத்திருக்கிறீர்கள். எங்கேயாவது திடீரென்று — இரவு சோதனை அல்ல, பகலில் சோதனை நடத்தவேண்டாமா? நான் நாவலரைப் பணிவன்புடன் கேட்கிறேன், வேறு எங்கும் வேண்டாம். என்னுடைய குடும்பக் கார்டு போஷன் பிளாக், அரசாங்க எஸ்டேட்டிலே உள்ளது. என்னுடைய குடும்பக் கார்டை நான் நாவலரிடத்திலே கொடுக்கிறேன். எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலே போஷன் பிளாக்கிலே விமன்ஸ் கன்சூமர் சொசைட்டி இருக்கிறது. அங்கேதான் நாங்கள் சரக்குகளை வாங்குகிறோம். ஒரு ஐந்து கிலோ என்னுடைய கார்டிலே மட்டும் வாங்கிக் கொடுத்தால் போதும். வேறு எங்கும் போகவேண்டாம். கிராமங்களிலே வேண்டாம். சென்னையில் அரசாங்க எஸ்டேட்டிலே உள்ள விமன்ஸ் கன்சூமர் சொசைட்டியிலேயே ஒரு ஐந்து கிலோ கோதுமை வாங்கிக் கொடுத்துவிடுங்கள், நான் உங்களைப் பாராட்டுகிறேன். ஏன் கோதுமையே கிடையாது. சென்னையிலே இதயம் போன்ற அரசாங்கத் தோட்டத்திலே உள்ள சொசைட்டியிலே [illegible] துமை கிடைக்காத

போது, எங்கேயோ குக்கிராமத்திலே உள்ள நியாய விலைக் கடைகளிலே கோதுமைக் கிடைக்கும் என்றா எதிர்பார்க்கிறீர்கள்? அறிக்கை இருக்கிறது தேனாக; நீங்களே அடிக்கடி சொல்வீர்கள், 'சீனி சர்க்கரை சித்தப்பா, சீட்டில் எழுதிச் சுவைத்துப் பாரப்பா' என்று. அதைப்போல இந்த வெள்ளை அறிக்கையை தற்போது படிக்கின்றவர்கள், குடும்பக் கார்டு ஒன்றுக்கு ஐந்து கிலோ அரிசி தருவோம் என்று பெருமை பேசுகிறீர்களே தவிர, வேறு எதுவும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோன்று இன்னொன்று, சர்க்கரை; அந்தச் சர்க்கரை சாதாரணமாக லாஸ்ட் கிரேடு, அதாவது திங்களுக்கு 499 ரூபாய் வாங்குகின்றவர்களுக்கு குடும்ப அட்டைக்கு ஒரு கிலோ கொடுக்கிறோம். ஆனால் எந்த நியாய விலைக் கடைகளிலே தருகிறார்கள்? கிடையாது. நியாயவிலைக் கடைகளில் 80 சதவிகிதம் தான் சர்க்கரை கொடுக்கிறார்கள். 100 கார்டு இருந்தால் 80 பேர்களுக்குத்தான் கிடைக்கும். 20 பேர்கள் வந்தால் ஒருவனுக்குக்கூட இல்லை, ஆனால் அந்த 20 பேர்களுக்கு மட்டும் இல்லாமல், 40 பேர்களுக்கு கொடுப்பதில்லை அங்கே வேலை செய்கின்ற சேல்ஸ்மேன் அதை கொண்டுபோய் விற்று விடுகிறான். அவனுக்கு நீங்கள் 100 ரூபாய் சம்பளம் கொடுக்கிறீர்கள். சாதாரண குமாஸ்தாக்கு தனியார் கடையிலே வேலை செய்கின்றவர்களுக்கு அடிப்படை சம்பளம் 150 ரூபாய் இருக்கவேண்டும் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். ஆனால் இந்த நியாயவிலைக் கடைகளில் வேலை செய்யும் சேல்ஸ்மேனுக்கு -- அவன் எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்தவன் -- அவனுக்கு என்ன சம்பளம் என்றால் 100 ரூபாய்தான். அவனுடைய சம்பளத்தை 150 ரூபாயாக ஆக்கவேண்டாமா? அதுமட்டுமல்ல இன்னொரு விஷயம். அவன் சேல்ஸ்மேனாக சேர்ந்தவுடன் அவனுடைய பெயரை எம்ப்ளாய் மெண்ட் எக்ஸ்சேஞ்சிலே எடுத்துவிடுகிறார்கள். அவனுக்கு வேலை கிடைத்துவிட்டது என்று சொல்லி. ஆகையினாலே அவன் எம்ப்ளாய்மென்ட் எக்ஸேஞ்ஜ் மூலமாக வேறு வேலைக்குப் போக முடியாது. இங்கேயும் 150 ரூபாய் கிடையாது. 100 ரூபாய் தான். ஆகவே அவர்கள் இந்த 20 பேர்களுக்கும் சர்க்கரை இல்லை என்று சொல்லி அதைப்போல 40 பேர்களுக்கு இல்லை என்று சொல்லி அந்த சர்க்கரையைக் கொண்டுபோய் விற்றுவிடுகிறார்கள். நியாய விலைக் கடையில் இந்த சர்க்கரையின் விலை என்ன தெரியுமா? கிலோ ரூ. 3.50.

[முற்பகல் 11-30]

அது வெளி மார்க்கெட்டிலே 6, 7 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பிளாக் மார்க்கெட்டிலே 8 ரூபாய்க்கு விற்கிறான். ஆக சர்க்கரைக்கு மூன்று விலைகள் இருக்கின்றன. ஆனால் நீங்கள் என்ன சொன்னீர்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் --- எங்கள் ஆட்சியில் வெளிமார்க்கெட்டில் கிலோ 3.50-க்கு விற்கிற சர்க்கரை இன்று 6.50-க்கு விற்கிறது. எங்கள் ஆட்சியில் நல்லெண்ணெய் 9.50-க்கு



ஒரு கிலோ விற்கப்பட்டது. ஆனால் இன்று ஒரு கிலோ நல்லெண்ணெய் ரூ.10, 15-க்கு விற்கப்படுகிறது. இது நியாயம் தானா? என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் ரேடியோவிலே பேசினார்கள்.

ஆனால் இன்றைக்கு வெளிமார்க்கெட்டிலே 6 ரூபாய்க்கு விற்கிறதே சர்க்கரை என்று அன்று கூக்குரல் விடுத்தார் முதலமைச்சர். அவருடைய ஆட்சி தான் நாட்டிலே நடைபெறுகிறது. இன்று வெளி மார்க்கெட்டிலே 7 ரூபாய்க்கு விற்கிறதே, அதற்கு நீங்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன? சிந்தித்த சிந்தனை என்ன? செயல் திறன் என்ன? ஆற்றிய பணி என்ன? ஆனால் எதுவுமே இல்லாமல் ஒரு அறிக்கையை — யாரோ எழுதிக் கொடுத்தார்கள் — அவர் எழுத, இவர் படிக்க, நாங்கள் கேட்க, பேச,— நியாயம் உண்டா? இல்லை. குடும்ப கார்டில் 20 பெர்சென்ட் சர்க்கரை என்பது சென்ட் பெர்சென்ட் கொடுக்க வேண்டுமென்ற நிலைமையை அரசாங்கம் எடுக்குமா? டி. எஸ். ஓ. விடம் கேட்டேன், அவர் என்ன சொன்னார், யார் யாருக்குக் கொடுக்கவில்லையோ, அவர்கள் பெயர்களை எழுதிக் கொடுங்கள் என்று. ஐந்து தடவை எழுதிக் கொடுத்தாயிற்று. இதுவரையில் திருப்பி 20 பெர்சென்ட் கொடுக்கப்பட்டிருக்கிறதா, கிடையாது. எனவே சர்க்கரை தருகிறோம் என்பது கூட ஒரு கலைக்கு உதவாத பாட்டு என்பதை நான் நாவலர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல பாம் ஆயில். எல்லோருக்கும் ஒரு கிலோ வீதம் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பாம் ஆயில் கிடைப்பதே கிடையாது. மெட்ராஸ் போன்ற இடங்களில் கொடுக்கப்படுகிறது. கொடுத்த பாம் ஆயிலை கொண்டு போய் சேர்த்திருக்கிறார்களா? அருமை நண்பர் பாலன் அவர்கள் சொன்னார்கள். அவருடைய தொகுதியிலே பாம் ஆயில் கிட்டத்தட்ட 3 பேரல்களை தூக்கிக் கொண்டு போய்விட்டான். பெருமக்கள் பார்த்துக் கொண்டு இருந்து, எங்களுக்குக் கிடைப்பதைத் தூக்கிக் கொண்டு போகிறாயே என்று பிடித்து போலீசிடம் கொண்டு போய் நிறுத்தி வைத்தார்கள். நடவடிக்கை இல்லை, அந்த பாம் ஆயில் திரும்ப வந்து ஜனங்களுக்கு விநியோகிக்கப்பட்டதா, இல்லை. ஏன் கிராமத்தில் மட்டும் பாம் ஆயில் கிடையாது. கிராமத்திலே இருக்கிறவர்களின் ஓட்டை அதிகமாக நம்பி தானே வந்திருக்கிறீர்கள். பாம் ஆயில் வாங்கி அவர்கள் சாப்பிடக் கூடாதா? ஆகவே பாமோலின் கிடைப்பதில்லை, மைதா கிடைப்பதில்லை, எதுவுமே கிடைப்பதில்லை. ஆக என்ன கிடைக்கிறது; ஒன்றே ஒன்று அரிசி. நியாய விலைக் கடையிலே இன்றியமையாப் பொருள் என்றால் அரிசியோ, சர்க்கரையோ தானா? சர்க்கரை வருவது இல்லை. அரிசியைப் பற்றி என்ன சொல்கிறீர்கள். எங்களுடைய கடையில் சாதாரண ரகம் 1 ரூபாய் 75 காசுக்கு கொடுக்கிறோம் என்று சொல்கிறீர்கள். நாவலர் அவர்களுக்குச் சொல்கிறேன். இதே அரிசியைத் தான் 'புட் பார் ஓர்க்'-க்கு தருகிறார்கள். எங்கள் கலெக்டர் மீட்டிங்லே கூட சொன்னேன். இதைச் சாப்பிட்டு அவன் மறுநாள் மண் வெட்ட

வேண்டுமா என்று கேட்டேன். ஆமாம் என்று சொன்னார். இதை சாப்பிட்டானானால் மறுநாள் இன்னொருத்தன் அவனுக்கு மண் வெட்ட வண்டும், அப்படிப்பட்ட அரிசி. அது என்ன அப்படிப் பட்ட அரிசி, நம்முடைய நாவலர் அவர்களுக்குச் சொல்கிறேன் எத்தனை கலர்கள் இருக்கிறது இந்த அரிசியிலே என்பதை முகர்ந்து பார்க்கிறேன். மூன்று நாட்களுக்கு உங்களுக்கு தூக்கமே வராது. ராணிப்பேட்டையில் இருக்கிற தோல் பதனிடும் தொழிற்சாலை யிலிருந்து வருகிற தண்ணீர் என்ன வாசனை வருகிறதோ அதை எட்டு கூட்டினால் வருகிற வாசனை.

இந்த அரிசி தான் இத்தனை கலரிலே 1.75-க்கு கொடுக்கப் படுகிறது. இது சாப்பிடக் கூடிய அரிசியா? ஆனால், 1.75–க்கு நாங்கள் அல்லவா கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். இந்த அளவிற்கு இருக்கிற அரிசியை நாவலர் அவர்களிடம் கொடுங்கள். (அரிசி நாவலர் அவர்களிடம் கொடுக்கப்பட்டது). காக்கைக்குப் போட்டால் கூட சாப்பிடாதே மனுஷன் சாப்பிடுகிறானே, உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இது நியாயம் தானா?

கலெக்டர் மீட்டிங்கிலே சொல்லியிருக்கிறேன். ஆகவே இந்த அரிசி, சர்க்கரையைத் தவிர வேறு எதுவும் நியாய விலை கடையில் கிடையாது. அரிசியும், சர்க்கரையும் வாங்கி வைத்துக் கொண்டு என்ன பண்ணுவது சர்க்கரைப் பொங்கல் பண்ணுவதா உங்களுடைய பாணியிலேயே கேட்கிறேன். புளி விற்கப்படுகிறதா – இல்லை; தனியா விற்கப்படுகிறதா – இல்லை; கோதுமை உண்டா – இல்லை; அப்போது என்ன உண்டு சர்க்கரை உண்டு; அரிசி உண்டு; என்ன செய்ய – சர்க்கரை பொங்கல் வைக்க நாங்கள் இன்றியமையாப் பொருட்கள் எல்லாம் கொடுக்கிறோம். துவரம் பருப்பில்லை – சாம்பார் உண்டா ஆனால் நியாய விலைக் கடை. ஆகவே நாவலர் அவர்கள் கணக்குப்படி பார்த்தால் இன்றியமையாப் பொருள் சர்க்கரை – அதுவும் கிடைப்பதில்லை; அரிசியோ துர்நாற்றம். ஆகவே நியாய விலைக் கடை என்பதே இன்றைக்கு அநியாய விலைக்கடை என்று சொல்ல மாட்டேன். அது செயல்படுவது ஊருக்கும், உலகத் திற்கும் விளம்பரத்திற்கும் மாட்டப்பட்ட போர்டு பலகை என்பதைத் தவிர வேறு என்ன? இதிலே மத்திய சர்க்கார் மானியம் கொடுத்துக் கூட நியாயவிலைக் கடை இப்படி இருக் கிறது. மத்திய சர்க்காரிலிருந்து முதலாம் ஆண்டு 3,000 ரூபாய் கொடுத்தார்கள்; இரண்டாம் ஆண்டு 2,000 ரூபாய் கொடுத் தார்கள்; மூன்றாம் ஆண்டு 1,000 ரூபாய் கொடுத்தார்கள் அதற்குமேல் தமிழக சர்க்கார் கொடுக்க வேண்டும். ஆனால் 4—ஆம் ஆண்டு இன்றுவரையில் நியாயவிலைக் கடைகளுக்கு வாடகை கட்டமுடியவில்லை. காரணம் இந்தச் சர்க்கார் பணம் கொடுக்கவில்லை. ''அண்டை வீட்டு நெய்யே, என் பெண்டாட்டி கையே'' என்று சொல்லுவார்களே, அதைப்போல மத்திய



சர்க்கார் கொடுத்த பணத்தை அப்படியே வாங்கிக் கொடுத்து விட்டு, இந்த சர்க்கார் எதுவும் கொடுக்கவில்லை. ஆனால் நியாயவிலைக் கடை நடத்துகிறோம் என்று சொல்லுகிறார்கள். மத்திய அரசு கொடுத்த பணத்திற்கு ஒரு நன்றி கூட சொல்ல வில்லை.

விலைவாசி விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கிறது. அதைத் தடுக்க இந்த சர்க்காரிடம் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. கிராமங்களில் ரவை கொடுக்கிறோம், மைதா கொடுக்கிறோம் என்பது ஒரு அரசியல் மோசடி என்று நான் பகிரங்கமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே நாவலர் போன்ற ஒரு மூத்த அரசியல்வாதி இப்படிப்பட்ட ஒரு தவறான அறிக்கையை வைத்தது தவறானது என்பது சிறியோனாகிய என்னுடைய தாழ்மையான எண்ணம். ஏனென்றால் இது முற்றிலும் உண்மைக்கு மாறாது. துளி கூட இதிலே உண்மை கிடையாது. எனவே, இந்த சர்க்காரிடம் விலையைக் கட்டுப்படுத்த திட்டம் இல்லை; செயல்திறன் இல்லை; ஆக்கப் பூர்வமான பணி இல்லை அதிகாரிகளிடம் கலந்துபேசி நடவடிக்கை எடுக்கும் தெம்பு இல்லை; திராணி இல்லை; வக்கு இல்லை; வகை இல்லை; இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருப்பது உண்மை இல்லை என்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமனியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் தமிழகத்தினுடைய உணவு நிலைமையைப் பற்றி இந்த மாமன்றத்திற்கு அறிவிக்கின்ற வகையில் இந்த மாமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கின்ற வெள்ளை அறிக்கைமீது என்னுடைய கருத்துக்களைக் கூறும்போது, விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் ஒட்டுமொத்தமாக மத்திய அரசுக்குத்தான் உண்டு என்ற தகவலிலே மாற்றுக்கருத்து இருக்க முடியாது; மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் கூறுவதில் நியாயம் இல்லை என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசுதான் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும் என்ற கருத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களே கூறியதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விலைவாசியைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் முழுவதும் மத்திய அரசிடம் இருந்தாலும் கூட இருக்கிற அதிகாரத்தை வைத்துக் கொண்டு, உற்பத்தியில் 20 இலட்சம் டன் நெல் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தாலும் இந்த அளவுக்கு உணவு நிலைமையில் செயல்பட்டிருக்கிற இந்த அரசை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் மத்திய அரசிடம்தான் அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தும் முழு பொறுப்பும் இருக்கிறது என்பதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதை உதாரணமாகச் சொல்ல விரும்புகிறேன். ஏதோ, மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள் பேசும் போது இந்த அரசிடம் திட்டம் இல்லை; வக்கு
இல்லை, வகை இல்லை என்று சொன்னார்கள். அவர்களுக்கு
கலைஞர் அவர்கள் 1975-76 ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்
கையில் குறிப்பிட்டுள்ளதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
அது வால்யூம் 67' பக்கம் 34—ல் வருகிறது.

''அறிஞர் அண்ணா அவர்கள் இந்த அவையில் பன்முறை
எடுத்துக் காட்டியது போல, விலைவாசியைக் கட்டுப்படுத்தக்
கூடிய அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடம் குவிந்திருக்க'
விலை உயர்வுகளின் காரணமாக எழும் குமுறல்களுக்குப்
பொறுப்பேற்க வேண்டிய நிலை பெரும்பாலும் மாநில அரசு
களுக்கே ஏற்பட்டுவிடுகிறது'' என்று கலைஞர் அவர்கள்
குறிப்பிட்டிருக்கிறார்கள். உணவுப் பொருட்களைப் பொறுத்த
வரையில் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று
ஆகஸ்ட் திங்கள் 15-ம் நாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி
அம்மையார் அவர்கள் தன்னுடைய ரேடியோ உரையில் குறிப்
பிட்டிருக்கிறார்கள். அப்படி எல்லாம் இருந்தபோதிலும்
தமிழகத்தைப் பொறுத்தவரையில் எதிர்பார்த்தற்கு மாறாக
20 இலட்சம் டன் நெல் உற்பத்தி குறைத்திருக்கிறது என்று
சொன்னாலும் கூட டாக்டர் நாவலர் அவர்கள் வெள்ளை
அறிக்கையில் சொல்லவில்லை; பாரதப் பிரதமர் இந்திரா
காந்தி அம்மையார் அவர்கள் விலைவாசியைக் கட்டுப்படுத்த
முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். பதுக்கல்காரர்கள்
உணவுப்பொருட்களை பதுக்கி வைக்கிறார்கள்; அதற்கு எதிர்
நடவடிக்கையாகத்தான் அமெரிக்காவிலிருந்து கோதுமையை
இறக்குமதி செய்கிறேன் என்று அவர்கள் சொல்லியிருப்பது
இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்திருக்கிறது. 16-8-1981

''We have a good harvest at the moment, she said, and then
went on the pose the question as to why there should be food imports
This had been done to counteraget the moves of those who were
planning to hoard stocks to jack up the prices''. இந்த நிலையில்,
பற்றாக்குறை இருக்கிற சூழ்நிலையில் கூட அரிசி போன்ற
அத்தியாவசியப் பொருட்களின் விலையை இந்த அரசு கட்டுப்
படுத்தியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு.
துரைமுருகன் போன்றவர்கள் ஒரு புள்ளிவிவரத்தின் அடிப்
படையில் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1979-80 ஆம் ஆண்டில் தமிழகத்தில் நெல் உற்பத்தி 60
இலட்சம் டன் என்று சொன்னார்கள், ஆனால் மழை பொய்த்து
விட்ட காரணத்தாலும் வேறு பல்வேறு பருவநிலை
காரணத்தாலும் 20 இலட்சம் டன் நெல் உற்பத்தி பாதிக்கப்
பட்டு, 40 இலட்சம் டன் நெல் மட்டுமே உற்பத்தியாகி
இருக்கிறது என்பது இந்த வெள்ளை அறிக்கையில் சுட்டிக்
காட்டப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 11.40]

தாராளமாக அரிசி கிடைக்கின்றது என்ற விவரம் சொல்ல
பட்டிருக்கின்றது. நான் இங்கே ஒரு கருத்தை முன் வைக்க
விரும்புகிறேன். 1979-80 ஆம் ஆண்டு நெல் உற்பத்தி 20





இலட்சம் டன்கள் குறைந்துவிட்டன. 40 இலட்சம் டன்கள்தான்
உற்பத்தி ஆகி இருக்கின்ற சூழ்நிலை. ஆனால் 1974-75லே
தமிழகத்திலே திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சியிலே
இருந்தபோது இந்த மாநிலத்திலே உற்பத்தி செய்யப்பட்ட
நெல் 41.66 இலட்சம் டன்கள். ஆனால் அப்போது மாநிலத்தில்
நிலவிய அரிசி விலை என்ன? ஆனால் இப்போது 60 லட்சம்
டன் விளைய வேண்டிய நிலையில் பருவமழை தவறியதன்
காரணத்தால் 20 லட்சம் டன் குறைந்து 40 லட்சம் டன்
மட்டுமே உற்பத்தி ஆகி இருக்கின்றது. இந்த நிலையிலும்
இங்கே அரிசித் தட்டுப்பாடு இல்லை என்பதோடு
74-75—லே விற்ற விலையைவிட விலை குறைவாகத்தான்
இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே
செயற்கை முறையிலே விலைவாசிகள் ஏறிவிடக்கூடாது
என்பதிலே இந்த அரசு எவ்வளவு கண்ணும் கருத்துமாக
இருந்து வருகின்றது என்பதற்கு இதுவே சான்று என்று
தெரிவித்துக்கொள்கிறேன்.

விலைவாசி உயர்வு என்று சொல்கிறபோது மூன்று
பிரச்சினைகள் பற்றிச் சொல்ல வேண்டும்- ஒன்று மாநிலத்திலே
கொள்முதல் விலை சரியான அளவுக்கு கொடுக்கப்படவேண்டும்.
இன்னொன்று மாநிலத்தின் நியாய விலைக் கடைகள் சரியாகப்
பராமரிக்கப்படவேண்டும். மாநில அரசின் ஸ்டாக் சரியாக
இருக்கவேண்டும். மாநிலத்திலே கொள்முதல் செய்கின்ற போது
விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய விலையினைக் கொடுக்க
வேண்டும் என்பதிலே இந்த அரசு எவ்வளவு ஆர்வம் காட்டி
னாலும் எவ்வளவு பெரிய இடையூறுகளை மத்திய அரசு செய்து
கொண்டிருக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.
ராஜ்ய சபையிலே இருபற்றிய கவன ஈர்ப்புத் தீர்மானத்தை
மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகனரங்கமும், திரு. ராம
மூர்த்தியும், திரு, கல்யாணசுந்தரமும் கொண்டுவந்தபோது
மைய அரசு என்ன சொல்லி இருக்கின்றது என்பதைக் கவனிக்க
வேண்டும். மத்திய அமைச்சர் ராவ் வீரேந்திர சிங் 'You don't
know how to cultivate paddy' என்று சொல்லி இருக்கிறார்.

ஆகவே விலையைக் கொடுங்கள் என்று சொல்கின்றபோது
அதைக் கொடுக்க மறுக்கின்ற நிலைமை இருக்கின்றது. இப்படிப்
பட்ட சூழ்நிலையில் 1981—ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கியின்
புல்லட்டின்படி தமிழகத்திலே உள்ள விலைவாசிப் புள்ளியினைக்
குறிப்பிட விரும்புகிறேன்.

பெரிய நகரங்கள் என்ற வகையிலே நகர் வாரியாகப்
பார்த்தால் அந்த வகையிலே ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழகத்தி
னுடைய விலைவாசிப் புள்ளி விவரம் என்ன என்பது அதிலே
கொடுக்கப்பட்டிருக்கின்றது. தமிழகத்திலே 20 இலட்சம் டன்
நெல் உற்பத்தி குறைந்து இருக்கின்ற சூழ்நிலையிலும் தமிழகத்
திலே விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் ஆலைத் தொழி
லாளர்கள் வாங்குகின்ற ஊதியத்தின் அடிப்படையிலே குறிப்பிடப்
பட்டுள்ள விலைவாசிப் புள்ளியினை கவனிக்கவேண்டும். அப்படிப்
பார்த்தால் கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு பார்த்தால்

இந்த அரசு உணவுத் துறையிலே எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அகில இந்திய ரீதியிலே 1981 ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கி அளித்திருக்கின்ற புல்லட்டின் டேபிள் நம்பர் 27-ன்படி ஆலப்புழையிலே 433, பெங்களூரிலே 468, டெல்லியிலே 434, குவாலியரிலே 443, ஹைதராபாத்திலே 428, நாக்பூரிலே 421, சோலப்பூரிலே 440, சென்னையிலே 409, 1980 ஆம் ஆண்டிற்கும் 1981 ஆம் ஆண்டிற்கும் இடையிலே உள்ள வேறுபாட்டைப் பார்த்தால் தமிழகம் கேரளாவிற்கு அடுத்த நிலையிலே இருக்கின்றது. 1980 ஆம் ஆண்டு தமிழகத்திலே உள்ள புள்ளி 362, ஆனால் 1981-ஆம் ஆண்டு உள்ள புள்ளி 409. வித்தியாசம் 47 புள்ளிதான். ஆனால் பெங்களூரிலே இந்த வித்தியாசம் 82 புள்ளி. ஹைதராபாத்திலே இது 53, நாக்பூரிலே 58, குவாலியரிலே 60.

அதேபோன்று 1978-79, 1979-80 ஆம் ஆண்டுகளிலே கேரளம் முதலிடம், அதற்கடுத்த இடத்தைப் பெறுவது தமிழகம்தான். தமிழகத்திலே ஏற்பட்ட பெரிய வீழ்ச்சிக்குப் பிறகும், விளைச்சல் பாதிப்பிற்குப் பிறகும் விலைவாசிப் புள்ளியிலே இந்த 1980-81 ஆம் ஆண்டிலே கேரளம் முதல் இடம், மேற்கு வங்கம் இரண்டாவது இடம், தமிழகம் மூன்றாவது இடம். ஆகவே தமிழகத்திலே விளைச்சல் பாதிக்கப்பட்ட நிலையிலும் விலைவாசி கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் தமிழகத்திலே விலைவாசி கட்டுப்படுத்தப்படவில்லை இந்த அரசு அதன்மீது சரியான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று சொல்கின்றவர்கள் ராஜ்யசபையிலே திரு. மோகனரங்கமும், திரு. கல்யாணசுந்தரமும் விவசாயிகளுக்குப்போதிய விலை கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தபோது மௌனமாக இருந்தார்கள். திரு. கல்யாணசுந்தரம் பேசி இருக்கிறார். திரு. ராமமூர்த்தி பேசி இருக்கிறார். திரு. மோகனரங்கமும் பேசி இருக்கிறார். ஹிண்டு பத்திரிகையில் வந்திருக்கின்றது, மற்ற பத்திரிகையிலே வந்ததா என்பது எனக்குத் தெரியவில்லை, தெரிந்தால் சொல்கிறேன். இதிலே மைய அமைச்சர் அவர்கள் அபிப்பிராயம் சொல்லும் போது உங்களுக்கு விவசாயம் செய்யத் தெரியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். வடநாட்டிலே மிக விரைவாக நல்ல முறையில் செய்கிறார்கள் என்றும் சொல்கிறார். இந்த அடிப்படையில் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய கருத்து, மாநில அரசு மைய அரசிடம் விவசாயிகளுக்காகக் குரல் கொடுக்க வேண்டும், என்கிற கருத்துத்தான். விலைவாசியை மாநில அரசு சரியாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால், மூன்று விதமான பிரச்னைகள் சரியாக இருக்க வேண்டும்.

முதலாவதாக, மாநிலத்திலே கொள்முதல் செய்கிறபோது விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கும்படி செய்ய வேண்டும். இதிலே மைய அரசு நிர்ணயித்து இருக்கிற அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷன் சொல்லியிருப்பதைவிட கூடுதல் விலையையே நாம் கொடுத்துக் கொண்டிருந்தாலும்கூட, ரூ. 140 கொடுக்க வேண்டும் என்று இந்த மாநிலத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசுக்கு தெரிவித்திருக்கிறார்கள்.



மைய அரசு அதற்கு இணங்க மறுக்கிறது. அதே சமயத்தில் மைய அரசு கோதுமைக்கு உதவித் தொகை என்று கிட்டத்தட்ட 600 கோடி ரூபாய்க்குமேல் கொடுத்திருக்கிறது. இதற்கு அனைவரும் குரல் கொடுக்கத் தயாரா இல்லையா என்றுதான் கேட்கவிரும்புகிறேன்?

அதேபோல மத்திய அமைச்சர் ''அதைப்பற்றி பேசுகிறபோது, அதற்குமேல் விலை கொடுப்பதைப் பற்றி யோசிக்கலாம். இப்போது கிடையாது. பஞ்சாபிலே இருக்கிற விவசாயிகள் திறமையாக விவசாயம் செய்கிறார்கள்—நெல்லைப் பொறுத்த மட்டில். தமிழகத்தில் இருக்கிற விவசாயிகள் நெல்லை எப்படி பயிரிடுவது என்று தெரியாமல் இருக்கிறார்கள்'' என்று சொல்கிறார்களே தவிர, இந்த மாநிலத்திலே இருக்கிற விவசாயிகளுக்கு ஒரு நிவாரணமும் கொடுக்க முன் வரவில்லை.

உரவிலை எல்லாம் ஒரேயடியாக உயர்ந்திருக்கிறதே, அதற்குக் குரல் கொடுக்க வேண்டாமா? பெட்ரோலியப் பொருள்களின் விலைகள் எல்லாம் உயர்ந்திருக்கிறதே அதற்குக் குரல் கொடுக்க வேண்டாமா என்பதை தயவுசெய்து, இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே, விவசாய விளைபொருள்கள், அதுவும் குறிப்பாக உணவுப் பண்டங்களின் விலைகள் கூடாமல் இருப்பதற்கு அவைகளுடைய உற்பத்தி செலவு குறைய வேண்டும். இதிலே மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அதே போல புரொக்கியூர்மெண்ட் பிரைஸ் கூடுதலாக இருக்கவேண்டும். ஆனால் உற்பத்திச் செலவு கூடுகிற வகையில், எப்பொழுதும் வரலாறு காணாத வகையிலே இரசாயன உரங்களின் விலை கூடியிருக்கிறது. 33.7 சதவீதம் இரசாயன உரத்தின் விலை கூடியிருக்கிறது. அதே சமயத்தில் இரசாயன உரத்தை உபயோகிப்பவர்களின் எண்ணிக்கை 25 சதவீதம் மொத்தத்திலே இந்த நாட்டிலே கூடியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் உரத்திற்கென்று ஏதாவது மாநில சர்க்கார்களுக்கு மானியம் அளித்தால் நலமாக இருக்கும். அளித்தார்களா என்றால் இல்லையே.

நேற்று முன் தினம் கூட மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, எந்தவித மானியமும் மைய அரசிடமிருந்து மாநில சர்க்காருக்கு, அல்லது தமிழக விவசாயிகளுக்கு வரவில்லை, எதையும் கொடுப்பதற்கு அவர்கள் முன் வரவில்லை என்றும் சொன்னார்கள். இதற்கு நாம் குரல் கொடுத்தேயாக வேண்டும் இல்லையா?

ஈஸ்டர்ன் எக்கானமிஸ்ட் டைம்ஸ் மார்ச்—20 1981ஆம் தேதியிட்ட இதழில் மைய அரசு 466 கோடி ரூபாயை உரத்திற்கென விவசாயிகளுக்கு மானியமாகக் கொடுப்பதாகத் தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே நேற்றுகூட பதில் அளிக்கப்பட்டது ஒரு பைசா கூட மானியமாக அளிக்கப்படவில்லை என்று. இந்த மாற்றாந்தாய் மனப்பான்மையை ஏன் அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்? 466 கோடி ரூபாயை

[திரு. வேடச்சந்தூர் வி.பி.பாலசுப்பிரமணியம்] [1981 ஆகஸ்டு 26

இந்தியத் துணைக் கண்ட அளவிலே உரத்திற்கு என மானியமாக மைய அரசு கொடுக்கயிருக்கிறபோது, தமிழகத்தில் பாடுபடுகிற விவசாயிகளுக்கு மட்டும் எதுவும் இல்லை என்ற கருத்து இருக்குமேயானால் நாம் குரல் கொடுத்துத்தானே ஆகவேண்டும். அப்படிக் குரல் கொடுப்பதை விட்டு இங்கே குறை கண்டு பேசுவதில் என்ன நியாயம் இருக்கிறது?

டாக்டர் கலைஞர் அவர்களுடைய வாசகத்தின்படியே விலைவாசியைக் குறைக்கிற பொறுப்பு மத்திய அரசினுடைய பொறுப்பு என்கிற கருத்தினையும் மறந்து, விலைவாசி உயர்விற் கான காரணங்களை நாம் சொல்லவேண்டும். இந்த அரசு சொல்ல வேண்டும் என்று கேட்பதில் என்ன நியாயம் இருக்கிறது. 466 கோடி ரூபாயை மத்திய அரசு உரத்திற்காக மானியமாகக் கொடுக்கிறபோது, இந்த மாநிலத்திற்கு மட்டும் மானிய உதவி ஏன் இல்லை.

'During the year 1980-81, subsidy on account of fertiliser was around Rs. 466 crores. The price of urea was raised from Rs. 1450 per tonne to Rs. 2,000/- per tonne, a price leve which prevailed in 1974 75.'

என்று ஈஸ்டர்ன் எக்கனாமிஸ்ட் டைம்ஸிலேயே சொல்லியிருக் கிறார்கள். ஏறத்தாழ 100 சதவீதம் உரத்திற்கு விலை ஏற்றப் பட்டிருக்கிறது. நாம் இந்த நேரத்தில் விலைவாசிகளைக் குறைக்க முன் வந்திருக்கிறோம். முதல் காரணமாக விவசாயிகளிடமிருந்து வாங்கும் கொள்முதல் விலை கூட்டப்படவேண்டும். அதிலே மாற்றுக் கருத்தும் இல்லை. இந்த மாநில சர்க்காரும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

ஆனால் மைய அரசு செவி சாய்க்கவில்லை. 660 கோடி ரூபாயை மைய அரசு மானியமாக உரத்திற்குக் கொடுப்பதில் நம் மாநிலத்திற்கு எதுவுமே இல்லை. அதைப்பற்றிய தகவலே இல்லை. அதைப்பற்றி மைய அமைச்சர் ஒருவர் பேசும்போது கூட, வட மாநிலங்களில் அவர்கள் நெல்லை அதிகமாக விளை விக்கிறார்கள், தமிழக விவசாயிகளுக்கு நெல் பயிரிடத் தெரிய வில்லை என்று சொல்கிறபோது கூட, 75 சதவீதம் ப்ரொக்கியூர் மெண்ட் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, வட மாநிலங்கள் எவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்கிறது நம் மாநிலத்தை விட என்பதைச் சொல்லவில்லை. இதை ஏன் சொல்கிறேன் என்றால், உர விலை ஏற்றத்திற்கு மானியம் வேண்டும், உற்பத்திச் செலவு குறைக்கப்படவேண்டும். அதற்கு மாநில அரசினுடைய கட்டுப்பாட்டில் என்ன என்ன செய்ய முடியுமோ, அத்தனையும் செய்ய வேண்டும். ஆனால் 33.7 சதவீதம் யூரியாவின் விலையை ஒரே ஆண்டில் உயர்த்தியிருக்கிற போது, மாநில சர்க்கார் விலைவாசியைக் குறைக்கத் தவறி விட்டது என்று சொல்வது நியாயமா? தர்மமா? என்பதை மன்ற உறுப்பினர்கள் எண்ணிப் பார்ப்பதோடு, எந்தக் கட்சி பேதமும் இன்றி அனைவரும் சேர்ந்து நம் மாநிலத்தின் சார்பாகக் குரல் கொடுக்க வேண்டும், அப்படிக் கொடுக்க வேண்டியது அவசியம் என்று சுட்டிக் காட்டுகிறேன்.



1981 ஆகஸ்டு 26]

(முற்பகல் 11.50)

திரு. அ. ரகுமான்கான்: பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளும்கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்கள் விலைவாசியேற்றத்திற்குக் கார ணம், மாநில அரசுக்கு முழுமையாக விலைவாசியைக் கட்டுப் படுத்துகிற அதிகாரம் இல்லை என்பதற்கான விளக்கங்களை இங்கே பேசிக்கொண்டே போகிறார்கள். ஆனால் ஆளும் கட்சி உறுப்பினர் அவர்களிடம் நான் தெரிந்து கொள்ள விரும்புவது, தேர்தல் நேரத்தில் டெலிவிஷனிலும் ரேடியோவிலும் விலை வாசிகள் ஏறியிருப்பதற்குக் காரணம் மத்திய அரசுதான், எங்கள் கட்சி பொறுப்புக்கு வந்தால் நிச்சயமாக விலைவாசிகளைக் குறைப்போம், எங்கள் கட்சியை உட்கார வைக்காததால் விலை வாசிகள் ஏறியிருக்கின்றன, எங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் நிச்சயமாக விலைவாசிகளை இறக்குவோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் அந்த நேரத்தில் பேசிய பேச்சு மக்களை ஏமாற்றுகிற பேச்சா; இப்போது பேசுகிற பேச்சுக்கும் அதற்கும் வித்தியாசம் இருக்கிறதே, இதற்கு விளக்கம் தருவார்களா உறுப்பினர் அவர்கள்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: அதற்காகத் தான் நான் தெளிவான புள்ளிவிவரங்களைக் கொடுத்தேன். 1974–75—ல் மாநிலத்தில் 41.66 இலட்சம் டன் நெல் இருக்கிற போது நெல்லின் விலை எவ்வளவு என்பதை உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். செயற்கைப் பஞ்சங்களை இந்த அரசு உற்பத்தி செய்து விலைவாசிகளை அதிகமாக்கச் செய்யாது என்பதை திரு. ரகுமான்கான் அவர்களுக்கு இந்தப் புள்ளிவிவரத் தின் அடிப்படையில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

1974-75-ல் 41.66 இலட்சம்டன் நெல் உற்பத்தியிருக்கும்போது விலை என்ன என்பதை உங்கள் மனசாட்சிப்படி எண்ணிப் பாருங்கள். வாதத்திற்காககூட அல்ல. இன்று 60 இலட்சம் டன் உற்பத்தியாக வேண்டிய இந்த மாநிலத்தில் 40 இலட்சம் டன் உற்பத்தியாகியும் கூட இந்த நிலையில் இந்த அரசு வைத் திருக்கிறது என்று சொல்லும்போது எந்தச் சூழ்நிலையிலும் இந்த அரசு செயற்கைப் பஞ்சங்களை உருவாக்கி விலைவாசியை உயர்த்தி ஏழைகளை வதைக்காது என்கிற வாக்குறுதிதான் அந்தப் பேச்சின் அர்த்தமே தவிர மத்திய அரசு பொறுப்பே என்று சொல்லவில்லை. அதை விட கலைஞர் அவர்களே குறிப் பிட்டிருக்கிறார்கள் 1975–76 பட்ஜட் உரையிலே.

அடுத்து, நியாயவிலைக் கடைகளைப் பொறுத்து, ஒருசில இடங்களில் குறைகள் இருந்தாலும் பல்வேறு பகுதிகளில் நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. இந்த நேரத்தில் டாக்டர் நாவலர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவிக்கிற ஒரு வேண்டுகோள். நகர்ப்புறங்களில் உள்ள நியாயவிலைக் கடை களின் வேலைநேரம் எப்படி இருந்தாலும் கிராமப்புறங்களில் உள்ள நியாயவிலைக் கடைகளின் வேலை நேரத்தைத் தயவு செய்து உடனடியாக மாற்றியமைக்கவேண்டும் என்ற வேண்டு கோளை வைக்கிறேன். நகர்ப்புறங்களில் காலை எட்டு மணி

முதல் மாலை ஐந்து மணிவரை நியாய விலைக் கடைகள் செயல்
படுகின்றன. கிராமங்களைப் பொறுத்தமட்டில் விவசாயத்
தொழிலாளர்கள் காலை எட்டு மணிக்கு வேலைக்குச் சென்றால்
மாலை 6 மணி அல்லது இரவு எட்டு மணிக்குத்தான் திரும்பி
வருகிற சூழ்நிலை இருக்கிறது. இந்த அரசு பல்வேறு சலுகை
கள் அளித்திருந்தாலும், ஜீனி வாங்குவதாக இருந்தாலும்
அல்லது கோதுமை வாங்குவதாக இருந்தாலும் இருந்தாலும்
உள்ள மக்கள் கழனிக்குச் சென்றுவிட்டு திரும்பும்போது நியாய
விலைக்கடைகள் மூடியிருக்கும் நிலைதான் இருக்கிறது. ஆகவே
கிராமப்புறங்களில் உள்ள நியாய விலைக் கடைகளின் வேலை
நேரம் காலை 7 முதல் 10 மணி வரை. மாலை 6 முதல் 9
வரை என்று வேலை நேரத்தை மாற்றியமைத்தால் அரசாங்கச்
சலுகைகள் அந்த ஏழைகளின் கதவுகளைத் தவறாமல் தட்டும்.

அடுத்து, இன்று குறிப்பாக சிலயிடங்களில் பாமர மக்கள்
ஏமாற்றப்படுகிறார்கள். சில சூதாடிகளால் ஏமாற்றப்படு
கிறார்கள். ஜீனி வாங்க பாமாயில் வாங்க கார்ட்ஸ் கொடுத்
திருந்தாலும் அவர்கள் அப்பாவித்தனத்தைப் பயன்படுத்தி
அந்த மக்களிடமிருந்து சில சமூக விரோதிகள் அந்த கார்ட்களை
விலைக்கு வாங்கி விடுகிறார்கள். இந்த நிலையைப் போக்க
வேண்டும். நியாய விலைக் கடைகளுக்கு வந்து இப்படிப்பட்ட
சாமான்களைப் பெறும்போது அந்த கார்டுக்குச் சொந்தக்காரர்
வந்து ரசீதில் கையொப்பம் போட்டு வாங்க முடியாது நகர்ப்
புறங்களைப் பொறுத்தவரையில். ஆனால் கிராமப்புற மக்கள்
அரசு கொடுத்திருக்கும் சலுகைகளைச் சரியாகப் பயன்படுத்திக்
கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் சொல்கிறேன் கிராமப்
புறங்களில் உள்ள நியாய விலைக் கடைகளில் கார்டு சொந்தக்
காரர்கள் வாங்குகிற ரசீதில் கையெழுத்து போடவேண்டும்
என்று கட்டாயப்படுத்துகிற ஒரு அறிவிப்பினை அரசாங்கம்
அறிவித்தால் நிச்சயமாக இந்த அரசின் திட்டங்கள் மூலம் ஏற்
படுகிற பலன்கள் ஏழைகளுக்கு நேரடியாகப் போய்ச் சேரும்,
யாராலும் ஏமாற்றப்படாமல் செல்லும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்து, இன்று தமிழகத்தில் மட்டுமல்ல, மேற்கு வங்கத்தில்
கூட க்ராஷ் க்ராப்ஸ், பணப்பயிர்கள் பயிரிடுவது கூடியிருக்கிறது
காலப்போக்கில் 1976–77-ல் சணல் பயிரிடப்பட்டது 4.41 லட்சம்
ஹெக்டேரில் 1977-78-ல் மேற்கு வங்கத்தில் பயிரிடப்பட்டது 5 38
லட்சம் ஹெக்டேரில். 1979-80-ல் 6·10 இலட்சம் ஹெக்டேராக
மாறுகிறது. இது மேற்கு வங்கத்திற்கு மட்டும் சொந்தமல்ல.
ஒட்டுமொத்தமாக இந்த இந்தியத் துணைக் கண்டத்தில்
உணவுப் பயிர்களுக்குப் பதிலாக, பணப் பயிர்களை பயிரிடுகின்ற
போக்கு காணப்படுகிறது. அவைகள் எல்லாம் தடுக்கப்பட
வேண்டும்.

அதேபோல், குத்தகைச் சட்டத்தை எடுத்துக்கொண்டால்
குத்தகைதாரர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கக் கூடாது
என்று நினைக்கின்ற நிலச்சுவான்தார்கள் சிலர், தங்கள்
நிலங்களைக் குத்தகைக்கு விடாமல், தங்கள் நிலங்களிலே



இருந்து குத்தகைதாரர்களை அப்புறப் படுத்திவிட்டு, அந்த நிலங்களை உழாமல், பயிரிடாமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலங்களால் உணவு உற்பத்திக்குத் தடங்கல் ஏற்படுகின்றது. எனவே அந்த நிலங்களை அரசே எடுத்துக்கொள்ளும் வகையில் ஒரு சட்டம் இயற்ற வேண்டும். அப்போதுதான் இந்த உணவு உற்பத்திக்கு, உணவுப் பெருக்கத்திற்கு வழி ஏற்படும். அந்த வகையிலே இதற்கு ஒரு சட்டம் இயற்ற வேண்டும்.

அதேபோல், மைய அரசு இப்போது புரகியூர்மெண்ட் பாலிசி ஒன்றைப் புதிதாக செய்திருக்கிறார்கள். மாநிலத்தினுடைய உணவு ஸ்டாக் சரியாக இருப்பதற்கு, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் தனியார்களுக்குக் கடன் கொடுக்கின்ற அளவுக்கு மாநில அரசுக்கு கொடுப்பதில்லை. மாநில சர்க்கார் இந்த புரகியூர்மெண்ட் பாலிசியிலே அகில இந்திய அடிப்படையிலே ஒரு முடிவு எடுக்கின்ற வரையில் நிச்சயமாக தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் குறைந்த வட்டிக்குக் கொடுக்க வேண்டுமென்றும், அதற்கு மைய அரசு ஆவன செய்ய வேண்டுமென்றும் சொல்ல வேண்டும். மேலும் தனிப்பட்டவர்களுக்கு தேசிய வங்கிகள் அதிகமான அளவுக்குக் கடன் கொடுப்பதால் ஒருவகையில் பதுக்கலுக்கும் அது காரணமாக இருக்கிறது. எனவே மாநில அரசுக்கு உணவுப் பண்டங்கள் வாங்குவதற்கு, பண முடக்கங்கள் ஏற்படாமல் இருக்க தேசிய வங்கிகள் கடன் கொடுக்க வேண்டும். ஆங்காங்கே இருக்கின்ற தனிப்பட்டவர்கள் தேசிய வங்கிகளில் கடன் பெற்று, ஆயிரக் கணக்கான மூட்டைகளை வாங்கி வைப்பதால் இன்னொரு வகையில் பதுக்கல் உருவாவதற்கும் வழியேற்படுகிறது.

அதேபோல், பெரிய விவசாயிகள் செய்கின்ற பதுக்கலையும் தடை செய்ய வேண்டும். உதாரணமாக ஆயில் ஸீட் பற்றாக் குறை இருக்கிறது. எண்ணை வித்துக்களைப் பெரியவிவசாயிகள் ஒரு போகத்திலே விளையக்கூடியதை, அடுத்த போகம் வரை 200 மூட்டைகள், 300 மூட்டைகள் என்று ஸ்டாக் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் அது விலைவாசி ஏற்றத்திற்கும் காரணமாகிறது. ஆகவே, கன்கரெண்ட் லிஸ்டிலே இருக்கின்ற எசென்சியல் காமாடிடீஸ் ஆக்டிலே, அந்தச் சட்டத்தின் கீழ் இந்த ஆயில் ஸீட், எண்ணை வித்துக்களையும் கொண்டுவந்து, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேல், ஒரு விவசாயி 100 மூட்டைகளுக்கு மேல் ஸ்டாக் வைத்துக் கொள்ளக்கூடாது என்ற வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கூறிக்கொண்டு, இந்த அறிக்கையை வரவேற்று அமைகின்றேன். வணக்கம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உணவு நிலைமையும் இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரம் பற்றிய வெள்ளை அறிக்கையின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் பேரியக்கத்தின் பேரில் ஒருசில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன்னாலே வைக்க விரும்புகிறேன்.

இங்கே பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர், அவர்களுடைய சாதனைகளை விளக்குவதற்குப் பதிலாக, சாதனைகள் எதுவும் இல்லாத காரணத்தினால் (குறுக்கீடு) சாதனைகள் அதிகம் இல்லாத காரணத்தினால், விலைவாசி உயர்விற்கு முழுக்க முழுக்க மத்திய அரசுதான் காரணம் என்றும், இந்த அரசு அல்ல என்றும் தன்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்து வைத்தார்கள். இங்கே கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரத்திலே நியாய விலைக் கடைகள் நிறைய இருக்கின்றன, குடும்பக் கார்டுகள் போதுமான அளவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்திலே போதுமான நியாய விலைக் கடைகள் இல்லை. நியாய விலைக் கடைகள் இருந்தாலும்கூட, அங்கே மக்களுக்குத் தேவையான பொருள்கள், போதுமான அளவுக்கு இல்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த வெள்ளை அறிக்கையின் 10-வது பக்கத்திலே ஒரு குறிப்பினைக் கொடுத்திருக்கிறார்கள். கோதுமை உற்பத்தி குறைவாக இருப்பதன் காரணமாக, கோதுமையினுடைய விலை வெளிச் சந்தையிலே கிலோ ரூ 2-40 என்கிற அளவிலே விற்கப்படுகின்றது என்ற விவரத்தை இங்கே கொடுத்திருக்கிறார்கள். இந்த விவரத்தை நான் மறுக்க விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், நமக்குக் கிடைத்த தகவலின்படியும், பத்திரிகைச் செய்திகளின்படியும் நாட்டிலே இன்றைக்கு கோதுமை உற்பத்தி அதிகரித்திருக்கிறது ஆனால், உற்பத்தி குறைந்திருப்பதாகக் கொடுத்திருப்பதை விவரக் குறிப்பிலே நம்மால் பார்க்க முடிகிறது. ஆனால், உண்மையிலேயே உற்பத்தி கூடியிருக்கிறது. வறட்சியின் காரணமாக இப்படி ஏற்பட்டிருக்கின்றது என்று சொன்னாலும்கூட, இங்கே கொடுத்திருக்கின்ற இந்தப் புள்ளிவிவரங்களின்படி சில விளை பொருள்களின் உறபத்தி சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு கூடியிருக்கிறது.

[நண்பகல் 12-00]

உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோமானால் துவரை, உளுந்து, பாசிப் பயறு உற்பத்தி கூடியிருப்பதாக இந்தக் கணக்கில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் குறைந்த பட்சம் அவைகளின் விலைவாசியையாவது குறைத்துக் காட்டியிருக்கலாமே இந்த அரசு. அவைகளும் பன்மடங்கு விலை கூடியிருக்கிறது. அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள். அத்தியாவசியப் பண்டங்களின் விலையைக் குறைக்க இந்த அரசு தவறி விட்டது என்ற குற்றச்சாட்டை இந்த அரசின் மீது சுமத்த விரும்புகிறேன். அப்படி எதிர் வரிசையில் இருக்கும் நாங்கள் மட்டும், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மட்டும் கூறுகிறோம் என்று நினைத்து விடக்கூடாது தமிழகத்தில் இருந்து வருகிற செய்தித் தாள்களில் வந்திருக்கிறது, தமிழகத்திற்கு அப்பாற்பட்ட மாநிலங்களில் இருந்து வருகிற செய்தித் தாள்களிலும் இப்படிப்பட்ட செய்திகள் வெளி வந்திருக்கின்றன. 'பினான்ஷியல் எக்ஸ்பிரஸ்', 'பிசினஸ் ஸ்டாண்டர்டு' 'எகனாமிக் டைம்ஸ்' போன்ற பத்திரிகைகளில்



கூட கடந்த சில மாதங்களில் தமிழகத்தில் அத்தியாவசியப் பண்டங்களின் விலை உயர்வைச் சுட்டிக்காட்டி, இந்த அரசாங்கத்தின் இயலாமையைச் சுட்டிக்காட்டி எழுதியிருப்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சமையல் எண்ணெய் வகைகளைப் பொறுத்தவரை எண்ணெய் வித்துக்களைக் கொள்முதல் செய்வதில், விநியோகிப்பதில் ஒருங்கிணைந்த ஏற்பாடு இல்லாததன் காரணமாக, திட்டமிட்ட ஏற்பாட்டைச் செய்யாததன் காரணமாக பதுக்கல், கடத்தல், கள்ளச்சந்தை ஆகியவற்றுக்கு இலக்காகி விலைவாசி பெருத்த அளவுக்குக் கூடி இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கத்தின் பலவீனமான உணவுக் கொள்கை காரணமாக, தொலைநோக்குத் திட்டமிட்டு செயல்படாததன் காரணமாக அத்தியாவசியப் பண்டங்களின் விலை தாறுமாறாக உயர்ந்திருக்கிறது என்பதை நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மன்றத்திற்கு அளித்திருக்கும் வெள்ளை அறிக்கையில் வறட்சி நிலை காரணமாக எண்ணெய் வித்துக்கள் குறைவாக உற்பத்தியாகி இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். உற்பத்திக் குறைவு 20 சதவிகிதந்தான். ஆனால் அவற்றின் விலைவாசி 70, 75 சதவிகிதம் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. நெய் விற்ற விலைக்கு கடலை எண்ணெய் விற்கப்படுகிறது. முன்பெல்லாம் வாரத்திற்கு ஒருநாள் நல்லெண்ணெய் தேய்த்து தலைக்குக் குளிப்பார்கள். இப்போது வாரம் என்பது மாதமாகி, மாதம் என்பது வருஷமாகி தீபாவளிக்குத் தீபாவளி எண்ணெய் தேய்த்துக் குளிக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எண்ணெய் விலை கிலோ 19 ரூபாய் என்று பார்க்கும்போது எந்த அளவுக்கு விலைவாசி கூடியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சமையல் எண்ணெய் விநியோகம் பற்றி பதுக்கல், கள்ளச்சந்தையை அகற்றுவது, தடுப்பது சம்பந்தமாக உணவு அமைச்சர் அறிக்கையில் தெளிவான விவரம் இல்லை. பல கோடி ரூபாய் பறுமானமுள்ள பாம் ஆயிலை சென்னைக்கு அருகே பிடித்தார்கள். அவ்வாறு பதுக்கி வைத்திருந்ததை இங்கே கண்டுபிடித்தது போல், பதுக்கலைக் கண்டுபிடித்ததற்குப் பின்னால் மத்திய அரசின் வருமான வரி இலாகா சம்பந்தப் பட்டவர்கள் மீது வழக்குத் தொடர்ந்திருக்கிற நேரத்திலே அந்தச் சரக்குகளைக் கைப்பற்றி, கையகப்படுத்துவதற்கு அரசாங்கம் துரிதமாக நடவடிக்கையை எடுக்காத காரணத்தால், தமிழகத்தில் எண்ணெய் மெத்தனமாக இருந்த காரணத்தால் பதுக்கியவர்களும் தப்பித்து தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதோடு 'ஃபுட் செல் போலீஸ்' தொடர் விடுகிற நிலை ஏற்படுகிறது. நடவடிக்கையை எடுக்காமல் கைவிட்டதற்கு என்ன காரணம் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று கருதுகிறேன்.

இந்த மாமன்றத்தில் வைத்திருக்கும் வெள்ளை அறிக்கையில் காய்கறிகளின் விலை குறிப்பிடப்பட்டிருப்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அந்த விலைகள் ஒரு கிலோவுக்கா, கால் கிலோவுக்கா என்று தெரியவில்லை. இன்றைக்குப் பார்த்தால் காய்கறிகளின் விலை பல மடங்கு உயர்ந்திருக்கிறது. எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத்தைக் குறை கூறுவது ஆளுங்கட்சியின் இயலாமையைக் காட்டுகிறதே தவிர, வேறல்ல. மத்திய அரசாங்கத்தைப் பார்த்து கையைக் காட்டிக்கொண்டு தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு எதற்காக? நீங்கள் கையில் இருக்கும் சட்டங்களை வைத்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக பதுக்கல், கள்ளக் கடத்தல் ஆகியவற்றைத் தடுக்க இந்த அரசாங்கம் தன் அதிகாரத்தை வைத்துக் கொண்டு எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற விவரங்களைச் சொல்வார்களானால் சபைக்கு உதவிகரமாக இருக்குமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

நான் மீண்டும் சொல்கிறேன். இந்த அரசாங்கத்தினுடைய இயலாமையினாலும் தொலைதூர நோக்கு இன்மையினாலும் தங்களுடைய பலவீனங்களை மறைப்பதற்காக இந்த அரசாங்கம் மத்திய அரசை கைகாட்டிக்கொண்டிருக்கிறதே தவிர தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே விளைச்சல் எவ்வளவு பாதிக்கப்பட்டது என்ற அறிக்கை கேட்கப்பட்டதாக அறிகிறேன். வறட்சி துடைப்பு உயர்மட்டக் குழுவின் தலைவராக தலைமைச் செயலாளராக இருந்த கார்த்திகேயன் இருந்தபோது வறட்சிக் காலமாக இருக்கிறபோது ஜூன் மாதம் முதல் செப்டம்பர் வரையில் சோதனைக் காலமாக-லீன் மன்த்ஸ் ஆக இருப்பதால் பற்றாக் குறை இருக்கும் என்ற கருத்தை தெரிவிக்கிற முறையிலே அறிக்கை அரசுக்குத் தரப்பட்டது. அந்த அறிக்கை மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலே பற்றாக்குறை இருக்கிறது என்ற நிலைமையை எடுத்துச் சொல்லியும் மத்திய அரசிடம் மாதம் ஒன்றுக்கு 60 ஆயிரம் டன் தேவை என்று கேட்டிருப்பதாக செய்தி பார்த்தேன். மத்திய அமைச்சரும் உணவுத்துறை காரியதரிசியும் பதில் சொல்கிறபோது தமிழக அரசு ஒரு குறிப்பிட்ட மாதத்திலே தங்களுக்கு எவ்வளவு அரிசி தேவை என்பதைக்கூட தெரிந்துகொள்ளாமல் எவ்வளவு தேவை என்பதை அறிவிக்காததால் நாங்கள் அனுப்பவில்லை என்று தெரிவித்திருப்பதாகப் பத்திரிகையிலே செய்தி பார்த்தேன். அந்தச் செய்தியை இது வரையில் தமிழக அரசிலே உள்ளவர்கள் மறுக்காததால் உண்மையாக இருக்கும் என்று கருதுகிறேன். சோதனை காலங்களிலே எவ்வளவு இலட்சம் டன் மாதம் ஒன்றுக்குத் தேவை என்று சொல்கிற அளவுக்கு கணக்குப் போட்டுப் பார்த்து உரிய





காலத்திலே கேட்டிருப்பார்களானால் தமிழக மக்களுக்கு அன்னை இந்திராகாந்தி போதுமான அரிசியை அளித்திருப்பார்கள் என்பதை நான் உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் நிலுவை திடீரென்று [illegible] மடங்கு 2 மடங்கு ஆக்கியதால் அவர்களால் கொடுக்கமுடியவில்லை.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் மாநில அரசுதான் என்று வாதாடுகிற காங்கிரஸ் உறுப்பினர் திரு. சித்தன் அவர்களிடமிருந்து ஒரு சந்தேகம் கேட்க விரும்புகிறேன். விலைவாசி ஏற்றத்திற்கு மாநில அரசு தான் காரணம் என்றால் ரூபாய் மதிப்பு 22 காசுக்குக் குறைந்ததற்கு யார் காரணம்? 9 ரூபாய் கிலோ வெண்ணெய் விற்றது இன்றைக்கு 36 ரூபாய் விற்கிறது என்றால் யார் காரணம்? இதற்கெல்லாம் எந்த அரசு காரணம் என்பதை அறிவிப்பாரா?

திரு. என். எஸ். வி. சித்தன்: ஆரம்பத்திலிருந்தே நான் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறேன். தொலைதூர நோக்கும், சரியான விநியோகம் இவை இந்த அரசிடம் இல்லாத காரணத்தினால்தான் இந்த அளவுக்கு விலைவாசி உயர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காய்கறிகளுக்குக்கூட மத்திய அரசாங்கம் தான் பொறுப்பு என்று அவர் சொல்கிறாரா என்று தெரியவில்லை.

திரு. மு. அம்பிகாபதி: அண்மையில் மத்திய அரசு உரத்தின் விலையை டன் ஒன்றுக்கு ரூ350 உயர்த்தியது. டீசல், பெட்ரோல், கெரோஸின் ஆகிய விலைகளையும் அவர்கள் ஏற்றியிருக்கிறார்கள். இரண்டு வருடங்களுக்கு முன்னாலே தேர்தல் நடக்கிற காலத்தில் 850 ரூபாய் விற்ற தங்கம் இன்றைக்கு 1350 ரூபாய்க்கு விற்கிறது. தாலிக்குத் தங்கம் இல்லை என்று கூறியவர்கள் இன்றைக்கு என்ன சொல்கிறார்கள்?

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்த அரசாங்கத்தினுடைய வெள்ளை அறிக்கைமீது உணவுக் கொள்கையைப் பற்றிய விவாதமா? அல்லது மத்திய அரசு பற்றி விவாதமா? இதுமாதிரி அவர்கள் பேசினால் நாங்கள் அப்படிப் பேசுவதற்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

திரு. அ. ரஹ்மான்கான்: பல பொருள்களினுடைய விலை ஏற்றத்திற்கு மத்திய அரசுதான் காரணம் என்று ஆளுங்கட்சித் தரப்பினர் சொல்கிறார்கள். தமிழ்நாட்டிலே சாராயத்தின் விலை ஏறியிருக்கிறதே அதற்கு யார் காரணம்? ஆளுங்கட்சிக்காரர்கள் காரணமா?

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: திரு சித்தன் அவர்கள் பேசுகின்றபோது பல்வேறு அத்தியாவசியப் பண்டங்களினுடைய விலை இந்தச் சர்க்காரினுடைய கையாலாகாத்தனத்தால்தான் ஏறியிருக்கிறது என்று சொன்னார்கள்.

1981 ஆம் ஆண்டிற்கான ரிசர்வ் பாங்கின் புல்லட்டின் கூறுகிறது. இந்த மாநிலத்தில் உள்ளதைவிட அதிகமாக உத்திரப் பிரதேசத்திலும் மகாராட்டிரம் போன்ற மாநிலங்களில் கூடியிருப்பதாகக் குறிப்பிடுகிறது. அப்படியென்றால் அங்கே இருக்கின்ற அந்த சர்க்கார்கள் எல்லாம் கையாலாகாத சர்க்கார்கள் என்பதை ஒத்துக்கொள்கிறார்களா?

திரு. அ. ரகுமான்கான்: தமிழ்நாட்டிலே சாராய விலை ஏறி இருப்பதற்கு யார் காரணம்? பாட்டிலிங், பிளண்டிங் உள்பட . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுதான் ரூபாயின் மதிப்புக் குறைவு என்று சொல்லியாகிவிட்டதே, தாங்கள் உட்காருங்கள்.

[பிற்பகல் 12.10]

திரு. என். எஸ். வி. சித்தன்: ஆளுங்கட்சி உறுப்பினர் அங்கேயெல்லாம் உயர்ந்திருக்கிறது என்று சொன்னார்கள். தமிழக மக்கள் வாக்களித்து தேர்ந்தெடுக்கப்பட்டு நான் தமிழக நிலைபற்றி இங்கே பேசிக்கொண்டிருக்கிறேன். அங்கேயெல்லாம் அவர்களுடைய கட்சி கிடையாது, அவர் களுடைய தோழமைக் கட்சிக்காரர்களிடம் சொல்லி கேட்டால் அங்கே அந்த விவரங்கள் கிடைக்கும். சில புள்ளி விவரங்கள் பற்றிச் சொல்கிறார்கள். எந்த அளவுக்கு புள்ளிவிவரங்கள் சரியானவை என்று தெரியாத காரணத்தினாலே நான் அதற்குப் பதில் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இராஜ்ய சபாவிலே கடந்த மார்ச் மாதம் என்று கருதுகிறேன். அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக. . (குறுக்கீடு) நாங்கள் இவ்வாறு குறுக்கிட்டால் அனுமதிக்க மறுக்கிறீர்கள்.

How is it Sir, you are allowing all these interruptions. Iam not yielding.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இம்மாதிரி பல பேருக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது இதில் பாரபட்சம் இல்லை.

திரு என். எஸ். வி. சித்தன்: நான் பேசி முடித்த பிறகு அவர்கள் கேட்கட்டும்.

இராஜ்ய சபாவிலே தமிழகத்திலே ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்த கோபாலா திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் கடந்த மார்ச் மாதம் ஒரு பிரச்சினையை எழுப்பியதாக நினைக்கிறேன். தமிழகத்திற்கு ஒரு இலட்சம் டன் அரிசியும், பத்தாயிரம் டன் கோதுமையும் தேவை என்று அவர்கள் கோரிக்கை விடுத்த



நேரத்திலே, இந்திய அரசாங்கத்தின் விவசாயத் துறை அமைச்ச ராக இருக்கும் மாண்புமிகு திரு. ராவ் பீரேந்திர சிங் அவர்கள் அரிசி சம்பந்தமாக இதுவரையில் திட்டவட்டமான கோரிக்கை தமிழக அரசிடமிருந்து எதுவும் வரவில்லை என்ற பதிலை அங்கே சொன்னார்கள். அந்த விவரங்கள் உண்மையான வையா? உண்மையானவைகளாகத்தான் இருக்கமுடியும் என்று கருதுகிறேன். இதுமாதிரியான திட்டவட்டமான கோரிக்கை யை ஏன் இந்த அரசு மத்திய அரசுக்குத் தெரிவிக்கவில்லை என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

வேகன்கள் கிடைக்கவில்லை என்று அமைச்சரவர்கள் இங்கே சொல்வதோ அல்லது வேறு காரணங்களைச் சொல்வ தோ உயர்ந்து வருகின்ற விலைவாசி பற்றிச் சொல்லப்படுகின்ற நொண்டிச் சமாதானமாக இருக்க முடியுமே தவிர, நிச்சயமாக இந்த அரசாங்கம் முறையாக நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

சென்னையில் டி. யூ. சி. எஸ்., அமுதம் போன்ற சிறப்பங் காடிகளில் காலை முதல் மாலை வரையில் பெரிய கியூ நின்று கொண்டு அத்தியாவசியப் பொருட்களை வாங்க முடியாத நிலையில் மக்கள் அவதிப் பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இன்றைக்கு மாலை யிலே அந்தப் பகுதிகளுக்குப் போகும்பொழுது பார்த்து அதை ஒத்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் இங்கே உள்ள அரசாங்கத் தோட்டத்திலே இருக்கின்ற அவர்களுக்குக்கூட அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க வில்லை என்ற செய்தியைச் சொன்னார்கள். ஆனால் எனக்குக் கிடைத்த தகவல் என்னவென்றால், கோட்டையில் இருக்கின்ற நியாய விலைக் கடையில் கூட கடந்த மூன்று மாத காலமாகப் பாமாயில் விநியோகிக்கப்பட வில்லையாம். இந்த மாதம் இன்னமும் கோதுமை வழங்கப்படவில்லையாம். ரவை, மைதா ஒரு கிலோதான் கொடுக்கப்படுகிறதாம். கோட்டையி லேயே இந்த நிலை என்றால் மற்ற நகரங்களிலேயும் கிராமங் களிலேயும் எந்த நிலை என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்த்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசிப் பற்றாக்குறை அதிகமாக இருக்கின்ற கேரள மாநிலத்தைவிட தமிழகத்திலே அரிசி விலை உயர்ந்திருக்கிறது என்றால் இந்த அரசாங்கத்தின் விநியோகம் சரியாக இல்லை என்பதற்கு வேறு சான்றுகள் தேவையில்லை. கர்நாடகத்தில் இருப்பதைவிட கடலை எண்ணெயின் விலை தமிழகத்திலே அதிகமாகக் கூடியிருப்பதற்கான புள்ளிவிவரம் என்னிடத்திலே இருக்கிறது. எனவே, வர்த்தக சூதாடிகள், பதுக்கல்காரர்கள், கடத்தல்காரர்கள் மீது இந்த அரசாங்கம் சரியான நடவடிக்கை

எடுக்க வேண்டுமென்றால், இப்பொழுது இருக்கின்ற அதிகாரங்
களை வைத்துக்கொண்டே இந்த அரசாங்கம் தக்க நடவடி
க்கைகளை எடுக்க வாய்ப்பிருக்கிறது. அவைகளை இந்த
அரசாங்கம் பயன்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

சாதாரண பிக்பாக்கெட் குற்றங்கள், கள்ளச்சாராயம்
காய்ச்சுபவர்கள், கலவரங்கள் போன்ற சாதாரணக் குற்றங்
களுக்குக்கூட தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாய்ச்சப்படுகின்ற
பொழுது, இந்த முக்கியமான பிரச்னையில் தேசிய பாதுகாப்புச்
சட்டம் ஏன் பயன்படுத்தப்படவில்லை.

ஹோட்டல்களில் விலைவாசிகள் கடந்த சிலநாட்களாகவே
அதிகமாக உயர்ந்திருக்கிறது. எப்பொழுதாவது அத்தி பூத்தாற்
போல உணவு அமைச்சரவர்கள் ஒரு அறிக்கையை அல்லது
ஒரு செய்தியை விடுப்பார்கள். என்னவென்றால் ஹோட்டல்
காரர்கள் தாங்கள் விற்கும் உணவுப் பண்டங்களின் விலையைக்
குறைக்க வேண்டும் இல்லாவிட்டால் அரசாங்கம் நடவடிக்கை
எடுக்கும் என்று வரும். அந்த அறிவிப்புக்கு—அரசாங்கம் முறை
யீட்டிற்கு எந்தவிதமான மரியாதையும் இருக்காது. அதற்கு
மாறாகச் சில நாட்களில் கொஞ்சம் கொஞ்சமாக ஹோட்டல்
களில் விற்கப்படும் உணவுப்பண்டங்களின் விலை கூடிக்கொண்டே
வரும் என்பதைப் பார்க்க முடிகிறது. சென்னையிலே வந்து
போகும் மக்கள்—ப்ளோட்டிங் பாபுலேஷன் என்ற வகையில்
அதிகம் பேர் இருக்கிறார்கள்.

சென்னைக்கு அடுத்தப்படியாக இருக்கின்ற மதுரை, கோவை,
திருச்சி போன்ற ஊர்களிலே ஹோட்டல்களுக்கு வந்து
போகின்ற மக்களுக்கு பெருத்த இடர் ஏற்பட்டிருக்கிறது.
ஆகவே, இந்த அரசாங்கம் முனைப்பாகச் செயல்பட்டு,
ஹோட்டல் பண்டங்களின் விலைகளைக் குறைப்பதற்கான
நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்திலே ஆளுநர் ஆட்சி நடந்தபொழுது, 1976ஆம்
ஆண்டிலே மாண்புமிகு சுகாதியா அவர்கள் கவர்னராக
இருந்தார்கள். அப்பொழுது ஓட்டல் பண்டங்களுடைய விலை
தரம் நிர்ணயிப்பது போன்றவைகளை விசாரிப்பதற்காக, உணவு
அதிகாரி தலைமையிலே ஒரு குழு நியமனம் செய்யப்பட்டது.
என்னுடைய கவனத்திற்கு வருகிறது, இன்றைக்கு தூத்துக்குடி
யிலே துறைமுகத் தலைவராக இருக்கக்கூடிய திரு. சுந்தரம்,
ஐ. ஏ. எஸ். அவர்கள் அக்குழுவின் தலைவராகப் பணியாற்றி
னார்கள். அதற்குப் பிறகு திருமதி சந்திரலேகா தலைவராகப்
பணியாற்றினார்கள் என்று கருதுகிறேன். அந்தக் குழு
அறிக்கை கொடுத்தது அந்த அறிக்கை இப்பொழுது
எங்கே இருக்கிறது? அதைக் குப்பை கூடையிலே
போட்டு விட்டார்களா? அல்லது எங்காவது தூங்கி



கொண்டிருக்கிறதா? தயவுசெய்து அதை எடுத்து தூசி தட்டி,
உன்னிப்பாகப் பார்த்து, உரிய நடவடிக்கைகளை எடுத்துக்
கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே
மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன், இந்த அரசாங்கத்தினுடைய
விநியோக முறையினாலேதான் இன்றைக்குத் தமிழகத்திலே
அத்தியாவசியப் பொருள்களின் விலை வெகுவாக உயர்ந்திருக்
கிறது என்று சொல்லி, என்னுடைய உரையை நிறைவு
செய்கிறேன். வணக்கம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு
பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
என். எஸ். வி. சித்தன் அவர்கள் பேசியபொழுது, 'உறுப்பினர்
சொல்லிய புள்ளிவிவரங்கள் எவ்வளவு தூரம் உண்மை என்று
தெரியவில்லையென்று சொன்னார்கள். நான் அதை ரிசர்வ்
பாங்க் வெளியிட்ட புல்லட்டினிலிருந்து எடுத்துச் சொல்லி
யிருக்கிறேன்.

அதேபோல், திராவிட முன்னேற்றக் கழக தரப்பிலேயிருந்து
சாராய விலையைப் பற்றிச் சொன்னார்கள். நடந்து கொண்
டிருக்கிற விவாதம் அத்தியாவசியப் பண்டங்கள் பற்றியது.
திராவிட முன்னேற்றக் கழகம் அதை அத்தியாவசியப் பண்டம்
என்று கருதுகிறதா என்பதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் *

*

மாண்புமிகு எஸ். திருநாவுக்கரசு*

*

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அன்பர் சித்தன் பேசுகின்றபொழுது,
தேசிய பாதுகாப்புச் சட்டத்தை வைத்து, பதுக்கக்கூடிய பொருள்
களை ஏன் எடுக்கவில்லையென்ற கேள்வியை எழுப்பினார்கள்.
நான் அவரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, இந்தியா
முழுவதற்கும் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய பொருள்களைப்
பதுக்கக்கூடியவர்களை, அதோடு, கள்ளக் கடத்தல்காரர்களை,
எத்தனை பேர்களை மத்திய சர்க்காரால் கைது செய்ய நடவடிக்கை
எடுக்கப்பட்டிருக்கிறது, அல்லது, காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில்
மாநிலங்களிலே அப்படிக் கைது செய்திருக்கிறீர்களா என்ற
விவரத்தை அவரிடமிருந்து ஆர்வத்தோடு நான் எதிர்ப்
பார்க்கிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, அருமைச் சகோதரர் சித்தன் அவர்கள் பேசும்
பொழுது, ராவ் பிரேந்திர சிங் அவர்கள் 'தமிழக அரசு மத்திய
அரசாங்கத்திற்கு உணவுப்பொருள் தேவைகளைப் பொருத்து
கடிதம் எழுதவில்லை'யென்று கூறியதாகக் கூறினார்கள். அதே
ராவ் பிரேந்திர சிங் அவர்கள், 'தமிழகத்து விவசாயிகள் நெல்
உற்பத்தி செய்யவில்லை' என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு
இவர் என்ன சொல்கிறார் என்று கேட்க விரும்புகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பட்டது.

திரு. என். எஸ். வி சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பிலே திட்டவட்டமான அறிக்கை எதுவும் வரவில்லையென்று அவர்கள் சொன்னதாக எனக்கு நினைவு.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருமைச் சட்டமன்ற உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் பேசுகிற நேரத்தில் உத்திரப் பிரதேசத்திலும், பீகாரிலும் எங்களுடைய பெரியக்கமான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. ஆகவேதான் அங்கே விலை ஏறியிருக்கிறது என்பதைப் போல் சொன்னார். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : நான் அந்தக் கருத்தைச் சொல்லவில்லை.

*திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இன்றியமையாத உணவுப் பொருட்கள் நிலவரம் குறித்த விவாதத்தில் என்னைப் பேச அழைத்தமைக்கு நான் நன்றி தெரிவித்து இன்றைய ஆட்சிக் காலத்தில், இப்பொழுது நிலவுகின்ற வறட்சி நேரத்திலும், பதட்ட நேரத்திலும், உண்மை நிலை என்னவென்றால், கிராமங்களிலும், நகரங்களிலும சீரான விநியோகம் நடைபெறுகிறது என்று நான் சொல்லுகிறேன், இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த நண்பர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்களுமாக ஊர், ஊராக, கிராமம், கிராமமாகப் போற்றிப் பாராட்டி வருகிறார்கள் என்பதை இங்கே நான் மிக்க மனமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். சில சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களின் தொகுதியிலே இல்லையென்ற காரணத்தினால், தங்கள் தொகுதியிலே என்ன நடைபெறுகின்றது என்ற விவகாரம் தெரியாத காரணத்தால், சென்னையிலிருந்துகொண்டு அங்கே கிராமங்களிலே குற்றங்கள் இருக்கின்றன என்று சொல்வதாலே இந்த ஆட்சி குற்றம் செய்து கொண்டிருக்கிறது, சரியான விநியோகம் செய்யவில்லையென்று கருதிவிட முடியாது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20.]

இங்கே தமிழகத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் சாதனைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார் என்று சொல்லும்போது மற்றக் கட்சிகளைச் சேர்ந்த தோழர்கள் மிகவும் வேதனைப் படுகிறார்கள். சாதனைகளைச் சொல்ல வேண்டுமென்றால் நூற்றுக்கணக்கான சாதனைகள் பற்றிச் சொல்ல முடியும். ஆனால் இங்கே அதற்கு நேரம் போதாது, என்ற காரணத்தினால் சில முக்கியமான விவரங்களை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.



17,400 கடைகளை விநியோக அங்காடிகளை கிராமங்கள், தோறும் திறக்கப்பட்டிருக்கிறது. அங்கே அரிசியும், சர்க்கரையும் கிடைக்கிறது. சில கிராமங்களில் கொதுமையும் முறையாக [illegible] அங்கெல்லாம் பழைய கிடைக்காமல் இருப்பதற்குக் [illegible] முன்னாலே தோற்கடிக்கப் தலைவர்கள் 7, 8 ஆண்டுகளுக்கு முன்னாலே தோற்கடிக்கப் பட்டவர்கள், மற்றக் கட்சிகளினுடைய அனுதாபத்தைப் பெற்ற தலைவர்கள் இன்றைக்கும் மூட்டை மூட்டையாக அரிசியையும், [illegible] யின் எண்ணையையும் பேரல் பேரலாக எடுத்துச் சென்று விடுகிறார்கள். திட்டமிட்டே இதைச் செய்கிறார்கள். பல இடங்களில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்த அரசுக்குக் கெட்ட பெயர் கொண்டு வரவேண்டும் என்று திட்டமிட்டு செய்கின்ற முறைதானே தவிர, அரசாங்க அதிகாரிகளுடைய குற்றம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் கலவை என்ற கிராமம் இருக்கிறது. அங்கே பிரசித்திப் பெற்ற பேரூராட்சி இருக்கிறது. அங்கே ஆர். டி. கிருஷ்ணசாமி என்பவர் இன்றைக்கும் கூட்டுறவு அங்காடிகளில் இருந்து பொருள்களை தனது வீட்டிற்கு எடுத்துப் போவதாகத் தகவல் வந்திருக்கிறது. அவர்கள் ஆற்காடு தொகுதியில் பழைய சட்டமன்ற உறுப்பினருக்கு வேண்டியவர் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு அரிசி வியாபாரிகள் கொடுத்த மனுவின் விளைவாக, வெளி மாநிலங்களில் இருந்து கேரளம், கர்நாடகம், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் இருந்து நெல்லும் அரிசியும் வருவதற்கு லெவி இல்லை என்று அறிவித்ததற்கு, வியாபாரிகள் சார்பாகவும், வியாபாரிகள் சங்கத்தின் சார்பாகவும், சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் மாண்புமிகுப் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நாவலர் அவர்களுக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நுகர் பொருள் வாணிபக் கழகம் தங்கள் கடமையை நன்றாகவும், துரிதமாகவும் செய்கின்றது. இந்த பதட்டநிலை உள்ள பிரச்சினை கிராமங்களிலே இல்லை என்றால் அதற்குக் காரணம் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் சுறுசுறுப்பாக பணியாற்றுவதுதான். 1970-71-லே அரிசி கிடைக்காமல் இருந்தார்கள் 'க்யூ' வரிசையிலே நின்று 1981 ஆம் ஆண்டிலே இந்த நிலைமை என்பதையும் இப்போது இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நுகர்பொருள் வாணிபக் கழகம் திறமையாக செயல்படுவதற்கு இன்னொரு காரியத்தையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நுகர்பொருள் வாரியம் ஒன்றை அமைத்து, அதற்கு ஒரு தலைவரை நியமித்து, மாவட்ட ரீதியாக நுகர்பொருள் வாணிப அட்வைசரி கமிட்டியைப் போட்டு, சில அங்காடிகள் செய்கின்ற தவறுகளைத் தவிர்க்க வேண்டும் என்று

கேட்டுக்கொள்கிறேன். பருவ மழை தவறியதால் இந்த நிலை இந்த
வருடம் டிசம்பர் மாதம் வரை நீடிக்கத்தான் செய்யும் தஞ்சாவூர்
குறுவை வருகிறபோது இந்த நிலை மாற்றப்பட்டு ஒரு சுமுகமான
நிலை நிலவும் சூழ்நிலை இருக்கிறது. வடாற்காடு மாவட்டத்
திலும் செங்கல்பட்டு மாவட்டத்திலும் தென்னாற்காடு
மாவட்டத்திலும் மழையில்லை, விளைச்சலும் இல்லை. இதை
எல்லாம் இவர்கள் தெரிந்து கொள்ளவில்லை என்பதை வருத்தத்
தோடு தெரிவித்துக் கொள்கிறேன். மழை இல்லை என்பதை
உறுப்பினர்கள் மறந்துவிட்டு, அரசாங்கத்தின்மீதும் மாண்புமிகு
முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் மீதும் குற்றச்சாட்டுக்
களைச் சொல்ல வேண்டும் என்று தங்களை மறந்து
என்னென்னவோ சொல்லுகிறார்கள். அவர்கள் தங்கள்
மனசாட்சியின் மீது கைவைத்து பேசுகின்றார்களா என்று
தெரியவில்லை. வேண்டும் என்றே, எதிர்க்கிறார்களே தவிர,
வேறொன்றும் இல்லை. உள்ளது உள்ளபடியே சொல்ல வேண்டும்.
இராணிப்பேட்டைத் தொகுதியிலே மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சர் அவர்கள் வந்தபோது காங்கிரஸ் கட்சியைச்
சேர்ந்த நண்பர், கடந்த தேர்தலிலே காங்கிரஸ் கட்சியின்
சார்பிலே போட்டியிட்ட திரு. சம்பத் நரசிம்மன் அவர்கள்
புரட்சித் தலைவருடைய ஆட்சியையும், புரட்சித் தலைவரையும்
வாயாரப் பாராட்டினார்கள். இது உண்மையா, இல்லையா
என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் துரை முருகன்
கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். இதை எதற்காக
சொல்கிறேன் என்றால் அவர்கள் எதிர் தரப்பிலே இருக்கிற
காரணத்தினாலே எதிர்த்து தான் பேசவேண்டும் என்ற
முறையிலே பேசுவது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.
உணவுத் தட்டுப்பாடு இருக்கிற நிலை இல்லை. தன்னிறைவுத்
திட்டம் இப்போது 150 ஒன்றியங்களில் எடுக்கப்பட்டு, அந்த
முறையிலே வறட்சி நிவாரண பணிகள் விரைவாக செயல்
பட்டதன் காரணமாக இப்போது வேலை இல்லை என்ற
நிலைமை மாறி, மக்கள் எல்லோருக்கும், தொழிலாளர்களுக்கும்
கிராமத்திலே விவசாய கூலி ஆட்களுக்கும், வேலைகள் நிறைய
கிடைக்கின்றன. வருமானமும் அதிகம் கிடைக்கின்றன.
குறைந்தபட்சம் அரிசியும், சர்க்கரையும், எண்ணெயும் கிடைக்
கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து செப்டம்பர் 6-ம் தேதிக்குள் அரிசி ஆலைகளை
மாடர்னைஸ் பண்ணவேண்டுமென்று சட்ட உத்தரவு மைய
அரசால் தயாரிக்கப்பட்டு, அதை நிறைவேற்ற வேண்டுமென்று
மாநில சர்க்கார்களுக்கு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தயவு
செய்து அதை இரண்டு ஆண்டுகள் நீடித்து கொடுக்க வேண்டு
மென்று அவைமுன் கேட்டு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி
கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே,

* * * * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க நீக்கப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

* * * * *

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தமிழகத்திலே வெள்ளை அறிக்கையின்
அமைப்பு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் வறட்சி,
அறுவடைக் குறைச்சலை குறிப்பிட்டாலும், நாட்டு பொருளா
தாரத்தின் பின்னணியை மறந்தே, தயார் செய்யப்பட்டிருக்
கிறது இந்த வெள்ளை அறிக்கை என்பது மார்க்கிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்து. திருமதி காந்தி பிரதமரான
பின் மக்கள் தலையில் சுமத்திய மறைமுகமான வரிகள், மக்கள்
விரோத பட்ஜெட்டுகள், கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு
நேரடிப்பு 'டெபிசிட் பினான்சிங்', 'டாக்டர்' இன்கிரீஸ்
இன் பிரைசஸ்' அதாவது அரசாணை மூலம் பெட்ரோலுக்கும்
டீசல். மண்ணெண்ணெய், நிலக்கரி, உருக்கு, சிமிண்ட், உரம்,
ஏன் ஜனதா துணி உள்பட விலைகளை ஏற்றியது—திருமதி காந்தி
அம்மையார் அவர்கள் கையெழுத்து போட்டு உத்தரவு போட்டு
விலை ஏற்றியது. கணிசமாக ரயில் பயண, சரக்குக் கட்ட
ணங்கள் உயர்த்தியது, போன்றவற்றின் பயங்கர பணவீக்க
விளைவுகளின் பின்னணியை மறந்து இந்த வெள்ளை அறிக்கை
தயாரிக்கப்பட்டுள்ளது, என்பது தான் எங்களுடைய 'இம்பார்
டெண்ட் கிரிட்டிசிசம்'.

ஆகவே தான் இந்த வெள்ளை அறிக்கை இன்றைய
நெருக்கடியின் இதயத்தை இனம் காட்ட முடியாமல் தடுமாறு
கிறது என்று கூற விரும்புகிறேன். தமிழ்நாட்டு மக்கள் படும்
துன்பங்களையும் துயரங்களையும் போதிய அளவு அரசு உணர
வில்லை என்பதை வெளிபடுத்துகிறது. இன்றைய பிரச்சினையின்
மையம் விலைவாசி உயர்வும், அதன் நாசகரமான விளைவு
களும்தான்.

சமையல் எண்ணெய்களுக்கு இடையில் விலைவாசி சம்பந்த
மாக ஒரு ரேஸ் நடக்கிறது உங்களுக்குத் தெரியும். நான்
முந்தியா, நீ முந்தியா என்று எண்ணெய்களுக்கிடையே ஒரு
ரேஸ். சாதாரணமாக நல்லெண்ணெய் விலையை விட
கடலெண்ணெய் விலை குறைச்சலாகத் தான் இருக்கும்.

இப்போது இந்த ரேசிலே கடலெண்ணெய் வெற்றி பெற்று
விட்டது. அதற்கு தன் பிரைஸ். நல்லெண்ணெயை அது
முந்திவிட்டது. இப்படிப் பட்ட சூழ்நிலையில் ஜனங்கள் திக்கு
முக்காடுகிறார்கள். ஜனங்களுடைய துன்பங்கள் இந்த
அறிக்கையில் 'ரிப்ளெக்ட்' ஆகவில்லை என்பது எங்களுடைய
சீரியஸ் கிரிட்டிசிசம். ஆனால் இந்த வெள்ளை அறிக்கை
'பிரைஸ் கொன்ட்ரோல்'.., 'சென்ட்ரல் பாயின்டாக இருக்கிற
போது திரும்பத்திரும்ப என்ன கூறுகிறது. பக்கம் 3—அரிசி
தட்டுப்பாடு என்ற நிலைமை தமிழகத்தில் இல்லை; இன்னொரு
இடத்தில்—'இன்றியமையாப் பண்டங்கள் வெளிச்சந்தையில்

*மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப் பெற்றது.

தாராளமாகக் கிடைக்கின்றன. மேலும்—பக்கம் 9 "இருப்பினும் எல்லா பண்டங்களும் தாராளமாக வெளிச்சந்தையில் கிடைத்து வருகின்றன. When i talk of chalk, you talk of cheese நான் ஒன்று பேசினால், நீங்கள் சம்பந்தமில்லாத இன்னொன்றைப் பற்றி பேசுவோம் என்ற அர்த்தத்தில் இருக்கிறது. வெளிச் சந்தையில் கிடைக்கவில்லை என்று யார் சொன்னது.

[பிற்பகல் 12-30]

வெளிச்சந்தையில் கிடைப்பது பற்றி நிறைய எழுதியிருக்கிறார்கள். யார் கிடைக்கவில்லை என்று சொன்னது? கிடைக்கிறது. அதனால் யாருக்கு பிரயோஜனம்? கடையில் இருக்கும் பொருள் கண்பார்வையிலே பட்டுவிட்டால், அதனால் பசி அடங்குமா? அடங்காது. ஏழை எளிய மக்களுக்கு அந்தப் பொருட்களை, விலை உயர்வால் எட்டிப்பிடிக்க முடியவில்லை என்பதுதான் பிரச்சனை. இதற்கு உடனடி தற்காலிக நிவாரணம் ஒன்றுதான். பொது விநியோக முறை மூலம் அத்தியாவசியப் பண்டங்கள் மலிவு விலைக்கு மக்களுக்கு கிடைக்கச் செய்வதுதான் அதற்கு உத்தரவாதம் செய்வதுதான் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த விஷயத்திலும் என்ன நடைபெறுகிறது என்பது அரசுக்குத் தெரியவில்லை என்று இந்த அறிக்கையிலிருந்து நான் தெரிந்துகொள்கிறேன். உண்மை நிலை என்ன? நம்முடைய சர்க்கார் கையில் இருக்கிற விநியோகத்தில் என்ன நிலைமை இருக்கிறது என்று அரசாங்கத்திற்கு தெரியவில்லை. இந்த அறிக்கை அந்தமாதிரிதான் இருக்கிறது. "நியாயவிலைக் கடைகள் மூலமாக அரிசி, கோதுமை, மைதா, ரவை, பாமோலின் எண்ணெய், மண்ணெண்ணெய், சர்க்கரை போன்ற இன்றியமையா பொருட்கள் குடும்ப அட்டைகள் மூலம் வழங்கப்படுகின்றன" என்று இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவை இன்றைக்கு கிடைக்காத நிலை இருக்கிறது. படித்துக் கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் யதார்த்தத்திற்கும் இந்த பொருட்களுடைய விநியோகத்திற்கும் நம்முடைய சர்க்காருக்கும் வெகுதூரம் என்று இதிலிருந்து தெரிகிறது.

நீங்கள் கொடுத்த கடைகளின் எண்ணிக்கை சரியாக இருக்கலாம்; நீங்கள் சொன்ன அளவு பொருட்களும் கடைகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கலாம். அதை நான் சேலஞ்ச் பண்ணவில்லை. ஆனால் நடப்பதென்ன? ஆல்மோஸ்ட் புரோக்கன் டவுன் விநியோகம் எப்படியிருக்கிறது என்றால் நீண்ட கியூ நிற்பதைப் பார்க்கலாம். பாதி வந்ததும்—வெயில்ல மழையில நின்று கொண்டிருப்பார்கள்—ஸ்டாக் இல்லை, தீர்ந்து போச்சு என்று சொல்லிஅனுப்பிவிடுகிறார்கள். பாமோலின்எண்ணெய் வந்தால் அதைவிட முன்னதாகவே அனுப்பிவிடுகிறார்கள். கோதுமை ரவை, மைதா போன்றவை கடவுளாக மாறிவிட்டன (சிரிப்பு) அதாவது கடவுளை கண்ணால் பார்க்க முடியுமா? முடியாது.



அந்தமாதிரி இன்றைக்கு சமுதாயத்தில் இந்த கோதுமை, ரவை, மைதா கடவுளாக மாறிவிட்டன; பார்க்க முடியாமல் போய் விட்டன. இதை நான் 'எக்ஸாஜரேட்' பண்ணி சொல்லவில்லை; யதார்த்த நிலை அதுதான். கார்டுக்கு கிடைக்கும் என்ற 'கரன்டி' இல்லை. அரசாங்கம் இஷ்யூ பண்ணியிருக்கிற கார்டுக்கு அதில் குறிப்பிட்ட அளவுக்கு நிச்சயமாக கிடைக்கும் என்ற காரண்டி இல்லை என்பது முக்கிய அம்சம்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ந. குலசேகர பாண்டியன் தலைமை]

காரணம் என்ன? வெளிச்சந்தையில் இந்தப் பொருட்களுக்கு உயர்ந்த விலை கிடைப்பதால் கள்ளமார்க்கெட்டிற்குச் செல் கின்றன. இதுதான் உண்மைநிலை ஜனதா துணி இருக்கிறது. அது நல்ல துணிதான். அது மதுரை பாண்டியன் கூட்டுறவு அங்காடியில் கிடைக்காது. ஆனால் அந்த அங்காடிக்கு முன்னால் ஒப்பனாக இரட்டை விலைக்கும் கிடைக்கிறது, டபிள் விலைக்கு விற்கிறார்கள். யாரும் அதைப்பற்றி கவலைப்பட்டதாகத் தெரியவில்லை,

கிராமங்களில் இதைவிட மோசம். 3, 4 ஊர்களுக்கு ஒரு மூலையில் ஒரு கடை இருக்கும். அமுதம் அங்காடிகளை விட இன்றைக்கு கள்ளுக்கடைகள் அதிகம் (சிரிப்பு). இதிலே என்னுடைய ரிக்கொஸ்ட் என்னவென்றால் கள்ளுக்கடைகள் அளவுக்காவது அமுதம் அங்காடிகளைத் திறக்க வேண்டும் என்பதுதான்.

மேலும் எந்த ஊருக்கு எந்த நாள் விநியோகம் என்று கிராம மக்களுக்குத் தெரியாது. சில இடங்களில் இரண்டு, மூன்று கடைகளுக்கு ஒரு ஆள்தான் விநியோக ஊழியராக இருக்கிறார். அதனால் இந்த கடைகளுக்கு பொருட்கள் அனுப்ப போக்குவரத்து ஏற்பாடு சரியாக இல்லை. அதனாலும் விநியோகத்தில் தாமதம் ஏற்படுகிறது.

கூட்டுறவு அங்காடிகளில் மற்ற பல வேலைகள் இருப்பதனால் இந்த விநியோகத்தைப்பற்றி அங்கே இருக்கிறவர்களுக்கு அக்கரை இல்லை. இவ்வளவு கண்டங்களையும் தாண்டி பொருட்கள் வந்தால் நகரத்தைவிட கிராமங்களில்தான் கள்ள மார்க்கெட்டிற்கு வெகுசீக்கிரமாக மறைந்து போகின்ற நிலைமை இருக்கிறது.

ஆகவே ஒரு பெரும் பிரச்சினை என்னவென்றால் பொது விநியோக பொருள்கள் கணிசமாக கள்ள மார்க்கெட்டிற்கு செல்வது அதைத் தடுப்பது இன்றைக்கு இருக்கின்ற பெரும் பிரச்சினை ஆனால் இதை அரசு முற்றிலும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

கிராமங்களில் இந்த அவல நிலை இருக்கும்போது வெள்ளை அறிக்கையில் நீங்கள் எழுதுகிறீர்கள் "வருவாய் கிராமந்தோறும் நியாயவிலைக் கடைகள் அமைக்கப்பட்டதன் காரணமாக கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கும் இன்றியமையாப்

பொருட்கள் கிடைக்க வசதி செய்யப்பட்டுள்ளது'' என்று.
இதைப் படித்தால், இப்படி எழுதி இருக்கிறீர்களே என்று அந்த
கிராம மக்களுக்குத் தெரிந்தால் சொந்த அனுபவத்திலே
நிலைமைகளைக் கண்டு வருகின்றவர்களுக்கு ஆத்திரம் வரு
மல்லவா? ஆத்திரம் வராமல் என்ன வரும்? ஆகவே இருக்கின்ற
நிலைமையின் அவசரத் தன்மையையும், இன்றைய நிலையில்
மக்கள் தேவை என்ன என்பதையும் அரசு உணரவில்லை.

வெள்ளை அறிக்கையின் பக்கம் 3-லே ''தமிழகத்தில் எப்
பகுதியிலும் சட்டபூர்வமான பங்கீடு முறை அமலில் இல்லை.
இன்றியமையாப் பண்டங்கள் வெளிச்சந்தையில் தாராளமாக
கிடைக்கின்றன. எனவே மக்களுடைய முழுத் தேவையையும்
பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கவேண்டிய நிர்ப்
பந்தங்கள் இல்லை'' என்று சொல்லப்பட்டிருக்கின்றது.
உங்களுடைய கணிப்பு. இந்த கணிப்பு தப்பானது. சமீப
காலம் வரையில் அப்படிப்பட்ட நிர்பந்தம் இல்லாமல்
இருந்தது உண்மை. ஏனென்றால் பொது விநியோக விலைக்கும்
வெளிச் சந்தை விலைக்கும் இடைவெளி குறைவாக இருந்தது.
ஆனால் இன்று அப்படி இல்லை. பயங்கரமான கேப் இருக்
கின்றது. சாதாரணமான மனிதர்கள் வாங்கக்கூடிய அரிசியின்
விலை ரூ. 1.75 இது பொது விநியோக விலை ஆனால்
வெளிச்சந்தையில் இதே அரிசி ரூ 3.75 இப்படிப்பட்ட நிலைமை
இருந்தால் ஜனங்கள் பொது விநியோக முறையில் வாங்கியது
போக மேற்கொண்டும் தமது தேவைக்கு வெளிச்சந்தையில்
வாங்கி சப்ளிமெண்ட் செய்ய முடியுமா?

பாமோலின் விலை 8 ரூபாய் பொது விநியோக முறையில்.
ஆனால் கடலெண்ணையின் விலை 17லிருந்து 23 ரூபாய் வரை
வெளிச் சந்தையிலே விற்கின்றது. அப்படியானால் ஜனங்கள்
இந்தப் பதினேழிலே இருந்து 23 ரூபாய் வரை வாங்கி சப்ளி
மென்ட் செய்ய முடியுமா? ஆகவே இனிமேல் ஜனங்கள்
தங்களுடைய தேவைக்கு பொது விநியோக முறையை
நம்பித்தான் வாழும் காலம் வந்துவிட்டது ஆகவே 500
குடும்பங்களுக்கு ஒரு கடை கட்டாயமாக ஏற்படுத்தவேண்டும்.
விநியோகிக்கின்ற பொருட்களின் அளவினை அதிகப்படுத்த
வேண்டும். கார்டிலே குறிப்பிடப்பட்ட அளவுக்கு உணவுப்
பொருட்கள் கிடைப்பதற்குரிய காரண்டியை கொடுக்கவேண்டும்
அதைக் கட்டாயமாக ஆக்கவேண்டும். எல்லா கார்டுகளையும்
புதுப்பிப்பதன் மூலம் போலி கார்டுகளை ஒழித்துவிட்டு கார்டு
இல்லாதவர்களுக்கு கார்டு வழங்க ஏற்பாடுகளைச் செய்ய
வேண்டும். அப்போதுதான் ஏழை மக்களுக்கு கார்டுகள்
கிடைக்க வழி ஏற்படும் கார்டுகள் கொடுக்கப்படாமல் விடு
பட்டுப்போன குடிசைகள் எத்தனை இன்று இருக்கின்றன.
ஆகவே அவர்களுக்கெல்லாம் ஃப்ரெஷ்ஷாகக் கார்டுகள் கொடுக்க
வேண்டும்.



அடுத்து இன்றைய தினம் பொது இந்தப் பொது விநியோகம்
டி.யு.சி.எஸ். மூலமாகவும், அமுதம் மூலமாகவும், சிந்தாமணி
மூலமாகவும் இப்படிப் பல வழிகளில் விநியோகிக்கப்பட்டு
வருகின்றது. இப்படி பல ரகமான ஏஜன்சிகளுக்குப் பதிலாக
ஒரே யாதிரியான நிலைமையை ஏற்படுத்தவேண்டும். கடை
களுக்கு சப்ளை செய்ய நிரந்தரமான போக்குவரத்துக்கு ஏற்பாடு
செய்யவேண்டும்.

அடுத்து சர்வ கட்சி கண்காணிப்புக் கமிட்டி அமைத்து அவர்
களுக்கு செக் பண்ணும் அதிகாரத்தையும் வழங்கவேண்டும்.
கடையில் இருக்கக்கூடிய ஸ்டாக்கைச் செக் பண்ணுகின்ற
அதிகாரத்தை வழங்கவேண்டும். அப்படி கள்ள மார்க்கெட்டுக்கு
பொருள் சென்றது என்று கண்டுபிடித்தால் அதிலே எந்தவிதமான
விசாரணையும் இல்லாமல் உடனே அரஸ்ட் செய்யவேண்டும்
கடுமையான தண்டனை வழங்கவேண்டும். இது வெற்றிபெறச்
செய்ய இந்த மாதிரி நிலைமைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள
வேண்டும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். இங்கேதான்
மத்திய அரசின் ரூல் ஒன்று வருகின்றது.

நான் கேட்கின்ற இந்தக் கோரிக்கைகளை எல்லாம் நிறை
வேற்றுவது என்றால் இந்தத் திட்டம் வெற்றி பெற மைய அரசு
நமக்கு தகுந்த சப்ளை கொடுக்கவேண்டும். இங்குதான் நமது
அரசு ஒரு டெட்—என்டுக்கு வந்து நிற்பதாகத் தெரிகிறது.
முன்னேற முடியாத நிலையினை எட்டி இருப்பதாக எனக்குப்
படுகிறது. அதாவது மைய அரசினிடத்திலே இருந்து நமக்குத்
தேவையான குறைந்தபட்ச ஸ்டாக்குகளைப் பெறுவதைப்
பொறுத்தவரையிலே அந்தப் பிரச்சினையிலே முன்னேற முடியாத
நிலையிலே வந்து நிற்கிறது. தற்போதைய அளவு அரிசி கூட
கிடைக்கவில்லை. வெள்ளை அறிக்கைப்படி மாதம் ஒன்றுக்கு
ஒரு இலட்சம் டன் வேண்டும். பல முயற்சிகளை எடுத்து
ஒதுக்கீடு பெற்றது 60,000 டன். அந்த 60,000 டன் ஒதுக்கீட்டைப்
பெறுவதற்கும் போதிய வாகனங்கள் இல்லை என்று பேசப்
படுகிறது.

[நண்பகல் 12-00]

அடுத்து கோதுமை நம்முடைய குறைந்த பட்சத் தேவை
10,000 டன். அதிலே ரொம்ப முக்கி முக்கி 4,000 டன்னுக்குத்
தான் ஒதுக்கீடு வந்திருக்கிறது. அதிலும் அது வெறும் பேப்பர்
ஒதுக்கீடுதான். காகித அளவிலேதான் இருக்கிறது. ஆக அதுவும்
போதாத நிலை.

அடுத்து, மாவு மில்களுக்கு என்று வீட் பிராடக்டஸ்ஸாக
கன்வர்ட் பண்ணுவதற்கு சென்டிரல் கவர்ன்மெண்ட் முதலில்
65,000 டன்கள் சப்ளை செய்து வந்தது. அது இப்போது,
30,000 டன்னாக குறைந்து விட்டது. ரவை, மைதா எல்லாம்

அதிலிருந்துதான் வரவேண்டும். மைய அரசின் சப்ளை நிலை
தான் இப்படி இருக்கிறதே, நம்முடைய தேவையை நிறைவேற்ற
என்ன நடவடிக்கையை நீங்கள் எடுத்தீர்கள் என்று கேட்டால்
அதற்குப் பதிலாக வெள்ளை அறிக்கை சொல்கிறது, ''மைய
அரசிடம் பேசி உள்ளோம். வலியுறுத்தி எழுதியிருக்கிறோம்
என்று.'' ஆனால் போதிய பலன்கள் கிடைக்கவில்லையே ?
எழுதியிருக்கலாம், பேசியிருக்கலாம். நம்முடைய முதலமைச்சர்
அவர்களேகூட போய் இதுபற்றி எடுத்துச் சொல்லியிருக்கலாம்,
ஆனால் பயன் ஒன்றும் விளையவில்லையே. இது மிகவும் இம்பார்ட்
டெண்ட் கொஸ்டின். நம்முடைய தேவைகளை பூர்த்தி செய்வ
தற்கு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் ? மைய அரசு இல்லை
என்று சொல்லிவிட்டதால், நாம் நம்முடைய தமிழ்நாட்டு
மக்களை பொறுத்தவரையில் கைவிட்டு விட முடியாது. அதற்கு
ஏதாவது ஸ்டிராங் ஆக்ஷன் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

மத்திய அரசைச் சேர்ந்தவர்கள் சிலர் கூறுகிறார்கள். என்ன
கூறுகிறார்கள் என்று சொன்னால், ''ட்டியில் இருந்தால்தானே
அகப்பையில் வரும்'' என்று. கோதுமையை 10,000 டன்
கேட்டால், 4,000 டன்கள்தான் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்.
கேட்டால் சட்டியில் இல்லை என்கிறார்கள். சட்டியில் ஏன்
இல்லை ? இந்தத் தடவைதான் பம்பர் கிராப் என்று கூறு
கிறார்களே, அந்த கிராப் எங்கே போயிற்று ? பம்பரில் போய்
சிக்கிக் கொண்டு விட்டதா ? பம்பர் கிராப் விளைச்சல் என்றால்
அப்போதே ஏன் மொத்த கொள்முதல் செய்யவில்லை. வேண்டு
மென்றே கொள்முதல் செய்யவில்லையா ? That is centrel ques-
tion. இதற்குக் கட்சியைப் பார்த்து பிரயோஜனம் இல்லை
ஆகவே செய்யவில்லை. எவ்வளவு பம்பர் கிராப் கோதுமை
யிருந்தாலும் 10,000 டன்தான் நம்முடைய தேவை. அதைக்
கேட்டால் சட்டியில் இருப்பதற்கு மொத்தக் கொள்முதல்
செய்தால்தானே ? அந்த கோதுமை எல்லாம் எங்கே போயிற்று?
மொத்த வியாபாரிகள் கொள்ளையடிக்கட்டும் என்று விட்டு
விட்டார்களா ? ஏன் வேண்டுமென்றே கொள்முதல் செய்யவில்லை
என்று கேட்கிறேன். செய்யாததினால்தான் சட்டிக்கு வர
வேண்டிய கோதுமை மொத்த வியாயாரிகளின் பெட்டிக்கு போய்
விட்டது என்று சொன்னால், அது மிகையாகாது.

ஆனால் இதை மறைக்க, நாட்டின் பிரஷ்ஷியஸ் தேவையான
அன்னிய நாட்டு செலாவணியை ஊதாரித்தனமாக செலவு செய்து
கோதுமையை இறக்குமதி செய்கிறார்களாம். காரணம் என்ன
சொன்னார்கள் நம்முடைய அ.தி.மு.க. உறுப்பினர் அவர்களே
திருமதி இந்திரா காந்தி அம்மையார் சொன்னதிலிருந்து
'கொட்டேஷன்' எடுத்துக்காட்டினார். திருமதி காந்தி பேசியது
பம்பர் கிராப் எல்லாம் கள்ள மார்க்கெட்டில் மேன்—ஓவர் பண்ணி
விடுகிறார்கள். ஜனங்களின் தேவையை பூர்த்தி செய்ய வேண்டிய
நிலையில் அரசு இருப்பதால், இறக்குமதி செய்கிறேன் என்று
சொல்கிறார்கள்.



இதிலிருந்து அவர்கள் பாலிஸி என்ன என்பது தெரிகிற
தல்லவா ? கள்ள மார்க்கெட்டில் பொருள்களை பதுக்கிவிடு
கிறார்கள். அவர்களைக் கேட்பதற்குப் பதிலாக, அவர்களை
தடுத்து நிறுத்துவதற்குப் பதிலாக, நாட்டின் பிரஷ்ஷியஸ்
பொருளான அன்னியச் செலாவணியைச் செலவுசெய்து
வெளியே இருந்து இறக்குமதி செய்ய அம்மையார் அவர்கள்
தயாராக இருக்கிறார்கள். நீங்கள் இந்தப் பக்கம் செய்ததை
செய்து கொண்டேயிருங்கள். நான் அந்தப் பக்கம் இறக்குமதி
செய்கிறேன் என்று. இதுதான் மிகவும் முக்கியமான காரணம்
விலைவாசி உயர்வுக்கு.

ஆகவே விலைவாசி உயர்வு என்பது மைய அரசு கடைபிடிக்கும்
ஒரு உணர்வுபூர்வமான கொள்கை என்றுதான் சொல்லவேண்டும்.
கையாலாகாததனம் என்று சொன்னால் நான் ஒப்புக் கொள்ள
மாட்டேன். இது மைய அரசின் கையால காத தனம் அல்ல. To
a certain extent it is the positive policy cf the Government of India.
விலைவாசி உயர்வு மூலம் மக்கள் வருமானத்தை பறித்து,
டாட்டா, பிர்லாக்களிடம் மூலதனத்திற்கு என்று ஒப்படைக்கச்
செய்வதற்கு ஒரு பாலிசி. To transfer it into the pockets of Tatas
and Birlas for Resource mobilisation. டாட்டா பிர்லாக்களுக்கு
மூலதனம் தேவையாம் அதற்காக சாதாரண ஜனங்கள்
பாக்கெட்டிலே கைவைத்து, அதாவது விலைவாசி ஏறினால்,
எப்படியும் ஜனங்கள் வாங்கித்தான் ஆக வேண்டும் அதை, அதன்
மூலம் கிடைக்கும் வருமானத்தை டாட்டா பிர்லாக்களுக்கு
கேப்பிடல் இன்வெஸ்ட்மெண்டாக கொடுப்பதற்குத்தான் இந்த
முயற்சி. ஆகவேதான் சொல்கிறேன். இப்படிப்பட்ட கொள்கை
தேவைதானா ? இதனால் தொடர்ந்து விலைவாசி உயர்ந்துக்
கொண்டேதான் இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

அதனால்தான் பத்திரிகை நிருபர்கள் திருமதி காந்தி
அவர்களைப் பார்த்து அடிக்கடி கேட்கிறார்கள், 'அம்மா விலை
வாசியைக் குறைக்கிறேன் என்று ஓட்டு வாங்கினீரே, விலை
ஏறுகிறதே' என்று கேட்டால் திருமதி காந்தி அவர்களுக்கு,
பிரதமர் அவர்களுக்கு ரொம்பக் கோபம் வருகிறது. ஒரு ப்ரஸ்
இண்டர்வ்யூவில் சொல்கிறார், விலையைக் குறைக்க மந்திரக்கோல்
வைத்திருக்கிறேனா என்று. அதை இப்போது சொல்கிறார்கள்.
அப்படியானால் தேர்தல் காலத்தில் ஒரு கோலைக்காட்டினார்களே
அது என்ன கோல் ? மந்திரக்கோல் இல்லை, அது என்ன கோல்?
ஓட்டு வாங்குவதற்கான தந்திரக்கோலா ? You eannot speak
both ways. These are important things, ஆகவே நான் மாநில
அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மைய அரசு கொள்ளை
லாபக்காரர்களுக்கு உதவி செய்யப் போய் ஏற்பட்டுள்ள இந்த
இக்கட்டான நிலையை நீங்கள் பேசினால் மட்டும் கிடைக்குமா ?
வலியுறுத்தினால் மட்டும் கிடைக்குமா ? — I am catching the bull
by the Horse— கிடைக்காது. கிடைக்காமல் இருந்தால் பேசாமல்
இருக்க முடியுமா ? முடியாது. தமிழக மக்களின் கண்ணீரை யார்
துடைப்பார்கள் ? ஆகவே மைய அரசை வற்புறுத்த உங்கள்

[திரு. ரா. உமாநாத்] [1981 ஆகஸ்ட் 26

கோரிக்கைகளுக்குப் பின்னால் தமிழக மக்களின் பாப்புலர்
சாங்க்ஷன் இருக்கவேண்டும். தமிழக மக்களின் ஆதரவை, ஆம்
மாநில அரசு கேட்ட ஒரு லட்சம் டன்னை கொடுத்தேயாக
வேண்டும் என்ற முறையில் பாப்புலர் சாங்க்ஷன் இருக்கவேண்டும்.
அதற்கு உண்மை நிலைமைகளை தமிழக மக்களிடம் கூறி
அவர்களைத் திரட்டவேண்டும். இந்த இம்பார்ட்டன்ட் ஜாபில்
இந்தச் சர்க்கார்-க்கு யாக்கிமம் பெய்லூர். அதேபோல் தமிழக
மக்களின் வேதனையை வெளிப்படுத்த, மைய அரசின் கவனத்தை
ஈர்க்க ஒரு ஹர்த்தால் கால் கொடுத்தால் என்ன? நான் ஒரு
'சீரியஸ் ஸஜஷனைச்' சொல்கிறேன். வெள்ளை அறிக்கையில்
சொல்கிறார்கள், முயற்சி எடுத்தோம், முயற்சி எடுத்தோம் என்று.
ஒரு ஹர்த்தால் கால் கொடுத்தால் என்ன? உடனே நம்
தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கூறுவார், 'இது
அண்ணா வழி அல்ல' என்று. இலங்கை வாழ் தமிழ் மக்களின்
வேதனையை வெளிப்படுத்த நமது முதல் அமைச்சர் அவர்கள்
'ஹர்த்தால் கால் கொடுத்தாரே' அது அண்ணா வழியாகுமானால்
தமிழக மக்களின் வேதனையை வெளிப்படுத்த, உயிர் வாழத்
தேவையான தேவைகளை வலியுறுத்த ஏன் 'ஹர்த்தால் கால்'
கொடுக்கக்கூடாது? இது ஒரு ஸீரியஸ் பாயிண்ட். Let the
Government reply. விலைவாசிகள் எதிர்காலத்தில் இன்னும்
மோசமாக இருக்கப்போகிறது. ரூலிங் பார்ட்டியைப் பொறுத்த
வரையில் ஆளும்கட்சியின் இந்த வெள்ளை அறிக்கையைப் பார்த்த
பிறகு நான் உண்மையிலேயே எச்சரிக்கையாகச் சொல்ல விரும்பு
கிறேன். இந்த விலைவாசி நிலைமை 'நியர் ஃப்யூச்சரில்'
ஸீரியஸாகப் போகிறது. ஆனால் வெள்ளை அறிக்கையில்
baseless complacency இருக்கிறது. திருப்தி மனப்பான்மை.
அஸ்திவாரமற்ற திருப்தி மனப்போக்கைத்தான் வெளிப்படுத்து
கிறது. இந்த அறிக்கையில் ஒன்பதாவது பக்கத்தில் எதிர்காலம்
பற்றிக் கூறியிருக்கிறார்கள். 'போதிய அளவு கையிருப்பில்
இருப்பதானாலும் மைய அரசிடமிருந்து ஒதுக்கீடு ஓரளவில்
கிடைப்பதினாலும், விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும் என்ற
நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது' என்று கூறியிருக்
கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்
திரு. உமாநாத் அவர்கள் பேசுகிறபோது விலைவாசியேற்றத்திற்கு
மத்திய அரசு காரணம் என்று சொன்னார்கள். அதனால் அதை
எதிர்த்து ஹர்த்தால் நடத்தக்கூடிய சூழ்நிலைகள் ஏற்பட
வேண்டும் என்றும் சொன்னார்கள். நான் அவர்களிடத்தில் ஒரு
விளக்கத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மைய அரசு
விலைவாசியேற்றத்திற்கு இந்த அளவு காரணமாக இருக்கிறது.
அதேபோல் மாநில அரசும் விலையேற்றத்திற்கு ஓரளவு
காரணமாக இருக்கிறது, என்பதை ஒப்புக் கொண்டால் மைய
அரசுக்கு எதிராக ஹர்த்தால் நடக்கிறபோது மாநில அரசுக்கு
எதிராகவும் ஹர்த்தால் நடத்த கூட்டணிக்கட்சியாகிய கம்யூனிஸ்ட்
கட்சி தயாராயிருக்கிறதா?



1981 ஆகஸ்ட் 26]

திரு. ரா. உமாநாத்: இந்த விலைவாசியேற்றத்தைப் பொறுத்த
வரையில், மத்திய அரசின் பொறுப்பையும் மாநில அரசின்
பொறுப்பையும் ஒரே நிலையில் வைப்பதற்கு நான் தயாராக
யில்லை. I am not placing it on a par விலைவாசி உயர்வு, you are
mainly responsible நாட்டின் பொருளாதாரக் கருவிகள்,
அதிகாரங்கள் சகலமும் மத்திய அரசு வைத்திருக்கிறது. (குறுக்கீடு)
அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள், மத்திய அரசை எதிர்த்து
மாநில அரசு போராடி மத்திய அரசு பொறுப்பில் அதில் தோல்வி
யடைந்தால் அதை எதிர்த்து ஹர்த்தால் செய்ய அவர்கள் முன்
வருவார்களா என்று. அதற்கு அவர்கள்தான் பதில் சொல்ல
வேண்டும். இரண்டு பேர்கள் பொறுப்புகளையும் சமமாக
வைக்கமாட்டேன். விநியோகத்தில் 'உள்ள முறைக்கேடுகளைச்
சுட்டிக்காட்டினேன், அதை 'ரெக்டிஃபை' செய்ய கேரளாவில்
பப்ளிக் டிஸ்ட்ரிப்யூஷன் ஸிஸ்டம் நன்றாக இயங்கி வருகிறது,
ஆனால் அங்கே விலைவாசி ஏறவில்லையா? வெஸ்ட் பெங்காலில்
பப்ளிக் டிஸ்ட்ரிப்யூஷன் ஸிஸ்டத்தை முறைப்படுத்தி நடத்திக்
கொண்டிருக்கிறார்கள். அங்கே விலைவாசி ஏறவில்லையா?

[பிற்பகல் 12-50]

அதற்கு என்ன காரணம்? மாண்புமிகு
விலை ஏறி இருக்கிறதே? அதற்கு என்ன காரணம்? மாண்புமிகு உற்பத்தி கம்மியாகி
உறுப்பினர் சித்தன் அவர்கள் சொன்னார்கள்—உற்பத்தி கம்மியாகி
இருப்பதாக வெள்ளை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது;
ஆனால், உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்றார்கள். அப்படி
உற்பத்தி அதிகரித்தும், விலை ஏறியிருக்கிறதே, அதற்கு என்ன
காரணம்? அதற்கு நீங்கள் தான் காரணம். (குறுக்கீடு) திரு.
சித்தன் அவர்கள் அறியாமையிலே உண்மைக்கு வந்துவிட்டார்கள்.
மாநில சர்க்கார் திறமையான முறையிலே இந்த விஷயத்திலே
நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால், அவர்
இந்திய நாட்டின் பொருளாதாரத்தை மறந்து பேசுகிறார்
என்றுதான் சொல்ல வேண்டும். ஆறாவது ஐந்தாண்டுத்
திட்டத்தை மறந்து பேசுகிறார் என்றுதான் சொல்லவேண்டும்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே என்ன எழுதப்பட்டிருக்
கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். ஆறாவது ஐந்தாண்டுத்
திட்டம் விலைவாசி உயர்விலிருந்து நமக்கு சற்று ஓய்வு கொடுக்கப்
போகிறதா? என்றால் இல்லை. மேலும் விலைவாசி ஏறத்தான்
போகிறது. நேர்மாறாக, 21,302 கோடி ரூபாய் அதிக வருவாய்
திரட்டப் போகிறார்கள். அதை எப்படி திரட்டப் போகிறார்கள்?
ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே, 5,000 கோடி
ரூபாய்க்கு காகித நோட்டை அச்சடித்து, டெபிசிட் பைனான்ஸ்
ஏற்படுத்தப் போகிறார்கள் அதன் பொருள் என்ன? அதாவது
அதனால் நாட்டிலே பணவீக்கம் அதிகரித்து மேலும் விலை
வாசிகள் அதிகரிக்கும் என்பதுதான் அதன் பொருள். இப்படி
5,000 கோடி ரூபாய்க்கு காகித நோட்டை அச்சடித்தால்
விலைவாசி உயராதா? பணவீக்கம் ஏற்படாதா? அப்போது
எப்படி விலைவாசியைக் கட்டுப்படுத்தப் போகிறீர்கள்?

மேலும், பிரதானமாக மறைமுக வரி மூலம் 5,000 கோடி ரூபாய்க்கு திரட்டுமாம். அப்படியானால், இது ஏழை மக்களைத் தான் மிகவும் பாதிக்கும். இதனால் விலைவாசி ஏறாதா? இப்படி வரி போட்டால், பொருள்களின் விலை ஏறாமலா இருக்கும்? நீங்கள் எப்படி விலைவாசியைக் கட்டுப்படுத்தப் போகிறீர்கள்? எந்த நம்பிக்கையை வைத்து சொல்லுகிறீர்கள்?

மேலும், உணவு, மற்ற மானியங்களை குறைத்து ரூ. 3,250 கோடி திரட்டுமாம். அப்படி திரட்டப் போகிறார்களாம். எந்த மாநிலத்திலே இதனால் உணவு விலை குறையும்? எந்த நம்பிக்கையை வைத்து இப்படிச் சொல்லுகிறார்கள்? அதேபோல் ரயில் மூலம் 1,200 கோடி ரூபாயை அவர்கள் திரட்டப் போகிறார் களாம். அப்போது ரெயில் கட்டணம் பெருகிவிடும் அல்லவா? சந்திரனுக்குப் போவது போல், ரெயில் கட்டணம் பறக்காதா? உயர்ந்து விடாதா? எந்த நம்பிக்கையில் இப்படிச் சொல்லு கிறார்கள்? அதேபோல், மின்சார நஷ்டத்தைச் சரிகட்ட 3,500 கோடி திரட்ட மாநில அரசுகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்போது என்ன நிலைமை ஏற்படும். இது வரை மின்சாரம்தான் ஷாக் அடித்தது; இனி மின்சாரக் கட்டணம் ஷாக் அடிக்காதா? மேலும் உயர்ந்து விடாதா? அதேபோல், பஸ் கட்டண உயர்வு மூலம் 1,378 கோடி திரட்ட மாநில அரசுகள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப் படுகிறது. இதனால், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே விலைவாசி பல மடங்கு உயரப் போகிறது. அப்போது வெகு ஜனங்கள் அனைத்துப் பகுதியினரும் உயிர்கொடுத்து எதிர்க்கப் போகிறார்கள். ஒரு அறையிலே பூனையை வைத்து பூட்டிவிட்டு, அதை அடித்து விரட்டினால் பூனை என்ன செய்யும்? தனக்குத் தெரியாமல் நம் கண்ணையெல்லாம் அது பிராண்டி விடும். இப்படி டெசிஷன்வருமென்பது பிரதமருக்குத் தெரியும். இப்படியெல்லாம் மக்களை ஒடுக்கியாவது, தனது விலை உயர்வுக் கொள்கையை பாதுகாப்பது என்பது அவர்களுடைய முடிவு. அதற்காகத்தான், லேட்டஸ்டாக இந்த ஸ்டிரைக் தடைச் சட்டத்தை, அவசரச் சட்டத்தைத் தயாரித்துள்ளார்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

நமது மாநில அரசு மைய அரசின் விலை உயர்வுக் கொள்கையை மக்களிடம் அம்பலப் படுத்துவதற்குப் பதிலாக, நிதிக் கொள்கைகளை அம்பலப்படுத்துவதற்குப் பதிலாக, கொள்கைகளை எதிர்ப்பதற்குப் பதிலாக, மாற்றுக் கொள்கை வரிக் களை முன் வைப்பதற்கு பதிலாக கொள் முதல் உரிமையையே நாங்களே எடுத்துக் கொள்கிறோம் என்று கூறும் மைய அரசிடம், சமீபத்திலே அவ்வாறு கூறியிருக்கிறார் மத்திய அமைச்சர் திரு. ராவ் பீரேந்திர சிங் அவர்கள். அதற்குப் பணம் இருக்கிறது என்று சொன்னால், ஏன் மாநில சர்க்கார்களுக்குப் பணம் கொடுக்கக் கூடாது? அது ஒரு பக்கம் இருக்கட்டும், கொள்முதல் செய்வதில் மொத்த வியாபாரத்தையும் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதற்குப் பதிலாக, மாநில சர்க்கார்களை மத்திய சர்க்கார் அப்படி வற்புறுத்துவதற்குப் பதிலாக, இந்தியா பூராவும் ஒரு 12 பண்டங்களை ஒரே விலையில்





விற்கும் போது விநியோகப் பொறுப்பையும் எடுங்கள் என்று சொல்வதற்குப் பதிலாக, மக்களை ஒடுக்கும் ஸ்டிரைக் தடைச் சட்டத்தை யார் முந்தி கொண்டு வந்தோம் என்ற போட்டியில் மாநில அரசு, இன்றைக்கு பிரதமர் அவர்களோடு போட்டிப் போடுவதைப் பார்க்கின்றபோது, இன்றைக்கு எங்களுக்கு அது வேதனையாகத் தான் இருக்கிறது.

இந்த நிலை என்ன விளைவை உண்டாக்குமென்பதை ஆளும் கட்சி அங்கத்தினர்கள் சீரியசாக கவனிக்க வேண்டிய விஷயம், தலைவர்களும் கூட. வரக்கூடிய காலங்களில் சென்ட்ரல் கவர்ன் மென்ட் பாலிசியை ஜனங்கள் தாங்க முடியாமல் போராட்டங்கள் நடக்கும். மைய அரசின் கொள்கை காரணமாக விலை ஏறும் போது மக்கள் மத்தியில் எழும் நியாயமான ஆத்திரத்தை அதே திருமதி காந்தி, பிரதம அமைச்சர், உங்கள் ஆட்சிக்கு எதிராகத் திருப்பி கலைப்பதற்குப் பயன்படுத்துவார்கள் என்பதிலே எச்சரிக் கையாக இருக்கவேண்டும். அதற்கு நீங்கள் இடம் கொடுக்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: இந்தியாவைப் பொறுத்தமட்டில் மாநிலங்களின் விலைவாசி ஏற்றத்திற்கு மத்திய அரசாங்கம் காரணம். இந்தியப் பொருளாதாரம் காரணம் என்று திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன். போலந்து கம்யூனிஸ்டு சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்ட நாடு. அந்த நாட்டிலே விலைவாசி ஏறியிருக் கிறதே, அதற்கு என்ன காரணம்

திரு. ரா. உமாநாத்: இவ்வளவு நாட்கள் பத்திரிகைப் படித்து வக்கீலாக இருந்து வரும் அவருக்கு அது புரியவில்லை என்று கேட் கிறார். ஆச்சரியமாக இருக்கிறது. அங்கிருக்கிற பார்ட்டி லீடர்ஷிப் தீர்மானம் போட்டிருக்கிறது. சர்க்காரின் சில கொள் கைகள், சோஷலிசக் கொள்கைக்கு முரணான கொள்கைகளாக இருந்த காரணத்தால், சர்க்கார் அதைமேற்கொண்ட காரணத்தால் ஜனங்களுக்கும் சர்க்காருக்கும் இடையே இருக்கும் தொடர்பு பலவீனப்பட்டது. அந்த நிலை இருக்கிறது என்று அந்தக் கட்சி சொல்லி அதைத் திருத்துவதற்கான முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறது. தப்பு செய்த கட்சித் தலைவர்களை நீக்கி இப்போது ரெக்டிபிகேஷன் நடந்து கொண்டிருக்கிறது. இவ்வள வையும் பார்த்துவிட்டு இராமாயணம் முழுவதையும் கேட்டு விட்டு இராமனுக்கு சீதை என்ன உறவு என்று கேட்பதைப் போல் இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: போலந்தில் ஏற்பட்ட நிலைமைகளை அவரைப் போல் நாங்களும் படித்ததன் காரணமாகத்தான் கேள்வி கேட்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அங்கே கம்யூனிஸ்டு தலைமை செய்த தவறின் காரணமாக, கம்யூனிஸ்டு சர்க்கார் செய்த தவறின் காரணமாக விலைவாசி ஏற்றம்; அதே போல் இங்கிருக்கும் மாநில சர்க்கார் செய்த தவறின் காரணமாக விலைவாசி ஏற்றம்.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே
இன்னொரு சாதாரண விஷயம் மாண்புமிகு ரகுமான்கான் அவர்
களுக்குப் புரியவில்லை என்பது இந்தக் கேள்வியிலிருந்து புரிகிறது.
போலந்து என்பது ஒரு நாடு; தமிழகம் என்பது ஒரு நாட்டின்
மாநிலம். அதைக் கொண்டு போய் இதோடு ஒப்பிடுவது எப்படிப்
பொருத்தமானது என்பதை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்
கிறேன். ஆகவே, துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக
மறுபடியும் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசின் கொள்கைக்
காரணமாக இந்த விலைவாசி உயர்வு ஏற்பட்டிருக்கிறது. நான்
சென்ட்ரல் கவர்ன்மென்டை கிரிடிசைஸ் பண்ணக் காரணம்
அவர்கள் டைரக்ட் ரெப்ரசன்டேட்டிவ் ஆக இருக்கிறார்கள்.
திராவிட முன்னேற்றக் கழகம் — Let it not be more loyal than the
King.

திரு. அ. ரகுமான்கான் : இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு
உறுப்பினர் உமாநாத் அவர்கள் இது கூட்டாட்சி குடியரசு -
ஃபெடரல் செட் ஆப் - மத்திய அரசு மாநில அரசு என்று இருக்
கிறது; மாநில அரசில் ஒரு கட்சி அரசாங்கம் இருக்கிறது. மத்திய
அரசில் வேறு கட்சி அரசாங்கம் இருக்கிறது என்று கூறி
லயபிலிடியை ஷிப்ட் பண்ணினார்கள். போலந்தைப் பொறுத்த
மட்டில் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன் - அது யூனிடரி
ஃபார்ம் ஆப் கவர்ன்மென்ட், பெடரல் ஸ்ட்ரக்சர் அல்ல. அதற்கு
கம்யூனிஸ்டு சர்க்கார்தான் பொறுப்பேற்க வேண்டியது. அங்கே
மாநில மத்திய சர்க்கார் அமைப்பு இல்லை. ஒரே அரசாங்கந்
தான். எனவே, அங்கே நடைபெற்ற போராட்டத்திற்கு, விலை
வாசி ஏற்றத்திற்கு காரணம் மத்திய மாநிலப் பிரச்சினை அடிப்
படையில் என்று சொல்ல முடியாது....

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, அவர்
சொல்லச் சொல்ல சகதியில் சிக்கின கால் மாதிரி போய்க்
கொண்டிருக்கிறார். இங்கே ஃபெடரல் செட் அப் இருக்கிறது.
அவர் கட்சியின் சார்பில் மாண்புமிகு ராசு அவர்கள் பேசும்போது
பெடரல் என்ற பெயர்தான் இருக்கிறது என்றார்கள். மாநிலங்
களுக்கு நிதி அதிகாரம் — All powers with regard to economy and
with regard to financial institutions. (குறுக்கீடு) அவர் கேட்டதற்
காகச் சொல்லுகிறேன்.

[பிற்பகல் 1-00]

THIRU K.S.G. HAJA SHERIFF; On a point of order Sir, I want to know whether the Hon. Member can bring in and criticise the Central Government. If the Central Government is doing anything wrong, his party members are there to point out. The Central Government is not represented here and it is absolutely incorrect, and wrong to bring it here. It is the State Government's responsibility to control the prices. The State Government have not done anything in that direction. If the Hon. Member brings the Central Government, it is absolutely wrong. I would kindly request you to see that it is not being done.





திரு. ரா. உமாநாத் : இதற்கு நான் பதில் சொல்லவேண்டுமென்று நினைக்கவில்லை. இவ்வளவு பெரிய ஒருவர் இந்த பாயின்டை கிளப்பியிருப்பதற்காக நான் வருத்தப்படுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : போலந்து நாட்டிலே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போலந்து வேண்டாம், தமிழ்நாட்டைப்பற்றிப் பேசுங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : டைரக்ட் ரெப்ரசன்டேடிவ் ஆப் சென்ட்ரல் கவர்ன்மென்ட் என்று சொன்னார், ஐ எம் ஸ்பீக்கிங், என்னை அனுமதியுங்கள். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு ரகுமான்கான் அவர்கள் பேசும்போது போலந்து நாட்டிலே விலைவாசி உயர்விற்கு அங்கே ஆளுங்கட்சியாக இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி தான் பொறுப்பு என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார், அதற்கு திரு. உமாநாத் அவர்கள் என்ன பதில் சொல்ல இருக்கிறார்கள்?

திரு. ரா. உமாநாத் : அங்கே இருக்கின்ற கட்சியில் அங்கே இருக்கிறவர்கள் செய்த தவறு தான் என்று நான் தான் சொன்னேன், திரு. ரகுமான்கான் சொல்லவில்லை. அதை நான் தான் சொன்னேன். திரு. சித்தன் அவர்கள் தெரிந்தே இதைக் கேட்கிறார். நான் சொன்னேன் அல்லவா 'Don't be more loyal than the King.' என்று. ஆகவே பிரதிநிதிகளே இல்லை என்று ஆகிவிடக்கூடாது என்பதற்காக பேசவேண்டுமென்பதற்காக பேசுகிறார் என்ற முறையிலே அவர் கேட்டதை நான் எடுத்துக் கொள்கிறேன்.

மாற்றுக் கொள்கைகள் பற்றியெல்லாம் நான் ஏற்கெனவே எடுத்துச் சொன்னதை மீண்டும் நான் ரிப்பீட் பண்ணவில்லை. மைய அரசின் கொள்கையின் காரணமாக விலை ஏறும்பொழுது அதன் காரணமாக மக்கள் மத்தியிலே நியாயமாக ஏற்படுகின்ற நியாயமான ஆத்திரத்தை பிரதமர் இந்திரா காந்தி உங்களுக்கு எதிராகத் திருப்பி உங்களைக் கவிழ்க்க முயற்சிப்பார்கள். ஆகவே அதற்கு இடம் கொடுக்காமல் நாங்கள் சொன்ன கருத்துக்களைப் பரிசீலிக்கவேண்டும்.

அந்த அடிப்படையில் இயங்கும் மற்ற ஜனநாயக சக்திகளுடனும் மற்ற ஜனநாயகக் கட்சிகளுடனும் ஜனநாயகக் கொள்கையை வைத்து இருக்கின்றவர்களுடனும் ஒன்று சேர்ந்து செயல்படவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக அளிக்கப்பட்டிருக்கின்ற வெள்ளை அறிக்கையின் மீதான விவாதத்திலே கலந்து கொண்டு பேசுவதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன். வெள்ளை உள்ளத்திற்குச் சொந்தக்காரர், இதய தெய்வமாம் புரட்சித்

தலைவர் அவர்களின் சார்பாக இங்கே இந்த வெள்ளை அறிக்கை இந் மாநிலத்தி அளிக்கப்பட்டிருக்கின்ற நிலைமைகளையும், அத்தியாவசியப் ல இருக்கின்ற உணவு எப்படிச் சீராக பொருமக்களுக்கு பொருட்கள் இன்றைக்கு கின்றன என்ற உண்மைகளையும் விநியோகம் செய்யப்படு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது இந்தியத் மற்ற மாநிலங்களோடு அத்தியாவசியப் பொருட்களைச் சீராக துணைக் கண்டத்திலே அமைப்பு முறையைத் தமிழகம் விநியோகம் செய்யக்கூடிய பெருமைக்குச் சொந்தக்காரராக பெற்றிருக்கிறது என்கிற கின்ற நிலைமைகளை எடுத்துச் இருக்கின்ற தமிழக அரசு இருக் சொல்லியிருக்கிற செய்திகளும் சொல்கின்ற ஒரு பாங்கும் எடுத்துச் மாக இந்த உணவுக் மாநில அரசு இன்னும் அதிதீவிர முறையிலே உணவு கொள்கையிலே ஈடுபடுத்திக் கொள்கிற போகின்ற வகையிலே நிலைமைகள் திருப்திகரமாக இல்லாமல் குறிப்பாக இந்தியத் இயற்கை விளைவித்திருக்கின்ற சூழலும் ஏற்றிருக்கின்ற மைய துணைக்கண்டத்திலே ஆட்சிப் பொறுப்பை பொருளாதாரக் கொள்கையும் அரசினுடைய உணவுக் கொள்கையும், பார்வையோடு இந்த நிச்சயமாகத் தொலை நோக்குப் எண்ணிப் பார்க்கின்ற வெள்ளையறிக்கையைப் படிப்பவர்கள் விதத்திலே அமைந்திருக்கிறது.

விலைவாசி உயர்வுபற்றி இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களும், மற்றவர்களும் இங்கே நீட்டி முழக்கி இதற்குத் தக்க காரியங்களை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வெள்ளை யறிக்கையிலே தரவில்லை என்கின்ற கருத்தை இங்கே சொன்னார்கள். விலைவாசி உயர்வுக்கான காரணங்களை வெள்ளையறிக்கையிலே இன்னும் விரிவாக வைத்திருக்க வேண்டுமென்ற கருத்திலே இங்கே பேசினார்கள். வெள்ளை யறிக்கையிலே விலைவாசிக்கு யார் காரணம் என்று பட்டியல் போட்டுத் தருகின்ற அந்த நல்ல பணியை மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சிறப்பாக, மத்தியிலே பொறுப் பேற்றிருக்கின்ற திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்களின் அரசு செய்திருக்க வேண்டுமென்பதை இங்கே எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள்.

ஏதோ விலைவாசி உயர்வு என்பது தமிழகத்திற்கு மட்டுமே சிறப்பாக இருக்கின்ற ஒன்றாகக் கருதி இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பேசியிருக் கிறார்கள். விலைவாசி உயர்வு என்பது, 'global phenomenon' ஆக, இந்தியத் துணைக்கண்டத்திற்கு மட்டுமல்ல மல் வளர்ச்சி பெற்று வருகின்ற, வளர்ந்து வருகின்ற 'Third world' என்று சொல்லப்படுகின்ற அத்தனை நாடுகளிலேயும் பொருளாதார சீர் குலைவை ஏற்படுத்தும் விதத்திலே, போடுகின்ற அத்தனை முற்போக்குத் திட்டங்களையும் முடமாக்குகின்ற விதத்திலே இந்த விலைவாசி உயர்வு என்பது பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமாக இருக்கின்ற நிலைமைகளையும், அதிலும் குறிப்பாக இந்தியத் துணைக்கண்டத்திலே பொறுப்பேற்றிருக்கின்ற திருமதி



இந்திராகாந்தி அம்மையார் அவர்களுடைய அரசு வகுத்திருக்கின்ற அந்தக் கொள்கைக்கும் இந்தியப் பேரரசுக்கே இந்த விலைவாசி உயர்வானது எப்படிமிகப்பெரிய சவாலாக, தலைவலியாக இருந்து கொண்டிருக்கிறது என்ற ஒரு வரலாற்று உண்மையை நாம் நிச்சயமாக மறந்துவிட முடியாது.

இந்தியப் பேரரசினுடைய தலைமைப் பொறுப்பிலே யார் அமர வேண்டுமென்று நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் பொழுது தாலிக்குத் தங்கம் எங்கே என்று கேட்டார்கள்; தாளிக்கின்ற வெங்காயத்தின் விலையேற்றத்திற்கும், தாலிக்குத் தங்கத்தின் விலையும் உயர்ந்ததற்கும் யார் காரணம் என்று மேடைதோறும் முழங்கினார்கள். இந்தியத் துணைக்கண்டத்தைத் தற்பொழுது ஆளுகின்ற திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் உட்பட, இங்கே நீட்டி முழக்கிப் பேசிய திரு. துரை முருகன் உள்பட அத்தனைபேருமே தேர்தல் களத்திலே ஏதோ தங்கத்தின் விலை உயர்வுக்குக் காரணம் இதய தெய்வம் புரட்சித் தலைவரின் அரசுதான் என்று பேசிய அந்த நிலைமைகளைப் பார்த்தோம். ஆனால் இன்றைக்குப் பாராளுமன்றத்திலே பாரத நிதியமைச்சரவர்கள் இது இலண்டன் மார்க்கெட்டால் நிர்ணயிக்கப்படுகின்றது என்று சொல்லுகின்ற ஒரு செய்தியாக இருக்கிறது. எனவே, தங்கத்தின் விலைக்கும் ஆளுகின்ற எங்களுக்கும் சம்பந்தமில்லை என்று ஒப்புக்கொள்ளுகின்ற அந்த வரலாற்று உண்மையையும் நாம் நிச்சயமாக எண்ணிப்பார்க்காமல் இருக்கமுடியவில்லை.

தமிழகத்திலே இருக்கின்ற நிலைமைகளில் விலைவாசி உயர்ந்து விடாமல் தடுக்கின்ற இந்த முயற்சிக்காகத்தான், மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் டன் வீதம் அரிசி கொடுத்துதவ வேண்டுமென்று மத்திய அரசினிடத்திலே கோரிக்கை வைத்தோம். ஆனால் மத்திய அரசின் வேளாண்மை துறை துணை அமைச்சர் அவர்கள் அன்றைக்கு இங்கே பேசுகின்ற போது சொன்னார்கள், ஒரு இலட்சம் அல்ல, 80,000 டன் அரிசியை உடனடியாக ஒதுக்கீடு செய்வதற்கு மத்திய அரசு அத்தனை முயற்சிகளையும் மேற் கொள்ளும் என்று சொன்னார்கள். இதிலே வேதனைக்குரிய செய்தியென்னவென்றால், மத்திய அரசின் சார்பாக ஒதுக்கப் பட்டிருப்பதோ ஏறக்குறைய 60,000 டன்கள்தான். சொன்னது 80,000 டன்கள். கேட்டது ஒரு இலட்சம் டன்கள். தருவதாக ஒப்புக்கொண்டிருப்பது 60,000 டன்கள். அதற்குப் பின்னாலே இன்னும் வேதனைக்குரிய செய்தி என்னவென்றால், அதிலே வந்து சேர்ந்திருக்கின்ற அளவோ ஏறக்குறைய 40,000 டன்களிலிருந்து 45,000 டன்கள் வரையில்தான். இன்னும் அதிகமாக ஒதுக்கீடு செய்வதாக ஒப்புக்கொண்டு, அதை அனுப்புதவதற்கு தடையாக வேகன்கள் பற்றாக்குறை காரணமாக இருக்கிறது என்ற காரணத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். வேகன்கள் பற்றாக்குறை என்ற காரணத்தைக் காட்டி இந்த அரசு தப்பித்துக் கொள்ள முடியாது என்று இங்கே பேசிய அருமை நண்பர்கள் சொன்னார்கள். அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், இது மாம்பழ சீசன், எனவே வேகன்களை

தலைவர் அவர்களின் சார்பாக இங்கே அளிக்கப்பட்டிருக்கின்ற இந்த வெள்ளை அறிக்கை இந்த மாநிலத்திலே இருக்கின்ற நிலைமைகளையும், அத்தியாவசியப் பொருட்கள் இருக்கின்ற உணவு எப்படிச் சீராக பொதுமக்களுக்கு விநியோகம் இன்றைக்கு செய்யப்படு கின்றன என்ற உண்மைகளையும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது இந்தியத் துணைக் கண்டத்திலே அத்தியாவசியப் பொருட்களைச் சீராக விநியோகம் செய்யக்கூடிய அமைப்பு முறையைத் தமிழகம் பெற்றிருக்கிறது என்கிற பெருமைக்குச் சொந்தக்காரராக இருக்கின்ற தமிழக அரசு இருக் கின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்கின்ற ஒரு பாங்கும் எடுத்துச் சொல்லியிருக்கிற செய்திகளும் மாநில அரசு இன்னும் அதிதீவிர மாக இந்த உணவுக் கொள்கையிலே ஈடுபடுத்திக் கொள்கிற முறையிலே உணவு நிலைமைகள் திருப்திகரமாக இல்லாமல் போகின்ற வகையிலே இயற்கை விளைவித்திருக்கின்ற சூழலும் குறிப்பாக இந்தியத் துணைக்கண்டத்திலே ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற மைய அரசினுடைய உணவுக் கொள்கையும், பொருளாதாரக் கொள்கையும் நிச்சயமாகத் தொலை நோக்குப் பார்வையோடு இந்த வெள்ளையறிக்கையைப் படிப்பவர்கள் எண்ணிப் பார்க்கின்ற விதத்திலே அமைந்திருக்கிறது.

விலைவாசி உயர்வுபற்றி இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களும், மற்றவர்களும் இங்கே நீட்டி முழக்கி இதற்குத் தக்க காரியங்களை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வெள்ளை யறிக்கையிலே தரவில்லை என்கின்ற கருத்தை சொன்னார்கள். விலைவாசி உயர்வுக்கான காரணங்களை இங்கே வெள்ளையறிக்கையிலே இன்னும் விரிவாக வைத்திருக்க வேண்டுமென்ற கருத்திலே இங்கே பேசினார்கள். வெள்ளை யறிக்கையிலே விலைவாசிக்கு யார் காரணம் என்று பட்டியல் போட்டுத் தருகின்ற அந்த நல்ல பணியை மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சிறப்பாக, மத்தியிலே பொறுப் பேற்றிருக்கின்ற திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்களின் அரசு செய்திருக்க வேண்டுமென்பதை இங்கே எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள்.

ஏதோ விலைவாசி உயர்வு என்பது தமிழகத்திற்கு மட்டுமே சிறப்பாக இருக்கின்ற ஒன்றாகக் கருதி இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பேசியிருக் கிறார்கள். விலைவாசி உயர்வு என்பது 'global phenomenon' ஆக, இந்தியத் துணைக்கண்டத்திற்கு மட்டுமல்லமல் வளர்ச்சி பெற்று வருகின்ற, வளர்ந்து வருகின்ற 'Third world' என்று சொல்லப்படுகின்ற அந்த நாடுகளிலேயும் பொருளாதார சீர் குலைவை ஏற்படுத்தும் விதத்திலே, போடுகின்ற அத்தனை முற்போக்குத் திட்டங்களையும் முடமாக்குகின்ற விதத்திலே இந்த விலைவாசி உயர்வு என்பது பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமாக இருக்கின்ற நிலைமைகளையும், அதிலும் குறிப்பாக இந்தியத் துணைக்கண்டத்திலே பொறுப்பேற்றி...



இந்திராகாந்தி அம்மையார் அவர்களுடைய அரசு வகுத்திருக்கின்ற அந்தக் கொள்கைக்கும் இந்தியப் பேரரசுக்கே இந்த விலைவாசி உயர்வானது எப்படிமிகப்பெரிய சவாலாக, தலைவலியாக இருந்து கொண்டிருக்கிறது என்ற ஒரு வரலாற்று உண்மையை நாம் நிச்சயமாக மறந்துவிட முடியாது.

இந்தியப் பேரரசினுடைய தலைமைப் பொறுப்பிலே யார் அமர வேண்டுமென்று நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் பொழுது தாலிக்குத் தங்கம் எங்கே எனறு கேட்டார்கள். தாளிக்கின்ற வெங்காயத்தின் விலையேற்றத்திற்கும், தாலிக்குத் தங்கத்தின் விலையும் உயர்ந்ததற்கும் யார் காரணம் என்று மேடைதோறும் முழங்கினார்கள். இந்தியத் துணைக்கண்டத்தைத் தற்பொழுது ஆளுகின்ற திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் உட்பட, இங்கே நீட்டி முழக்கிப் பேசிய திரு. துரை முருகன் உள்பட அத்தனைபேருமே தேர்தல் களத்திலே ஏதோ தங்கத்தின் விலை உயர்வுக்குக் காரணம் இதய தெய்வம் புரட்சித் தலைவரின் அரசுதான் என்று பேசிய அந்த நிலைமைகளைப் பார்த்தோம். ஆனால் இன்றைக்குப் பாராளுமன்றத்திலே பாரத நிதியமைச்சரவர்கள் இது இலண்டன் மார்க்கெட்டால் நிர்ணயிக்கப்படுகின்றது என்று சொல்லுகின்ற ஒரு செய்தியாக இருக்கிறது. எனவே, தங்கத்தின் விலைக்கும் ஆளுகின்ற எங்களுக்கும் சம்பந்தமில்லை என்று ஒப்புக்கொள்ளுகின்ற அந்த வரலாற்று உண்மையையும் நாம் நிச்சயமாக எண்ணிப்பார்க்காமல் இருக்கமுடியவில்லை.

தமிழகத்திலே இருக்கின்ற நிலைமைகளில் விலைவாசி உயர்ந்து விடாமல் தடுக்கின்ற இந்த முயற்சிக்காகத்தான், மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் டன் வீதம் அரிசி கொடுத்துதவ வேண்டுமென்று மத்திய அரசினிடத்திலே கோரிக்கை வைத்தோம். ஆனால் மத்திய அரசின் வேளாண்மை துறை துணை அமைச்சர் அவர்கள் அன்றைக்கு இங்கே பேசுகின்ற போது சொன்னார்கள், ஒரு இலட்சம் அல்ல, 80,000 டன் அரிசியை உடனடியாக ஒதுக்கீடு செய்வதற்கு மத்திய அரசு அத்தனை முயற்சிகளையும் மேற் கொள்ளும் என்று சொன்னார்கள். இதிலே வேதனைக்குரிய செய்தியென்னவென்றால், மத்திய அரசின் சார்பாக ஒதுக்கப் பட்டிருப்பதோ ஏறக்குறைய 60,000 டன்கள்தான். சொன்னது 80,000 டன்கள். கேட்டது ஒரு இலட்சம் டன்கள். தருவதாக ஒப்புக்கொண்டிருப்பது 60,000 டன்கள். அதற்குப் பின்னாலே இன்னும் வேதனைக்குரிய செய்தி என்னவென்றால், அதிலே வந்து சேர்ந்திருக்கின்ற அளவோ ஏறக்குறைய 40,000 டன்களிலிருந்து 45,000 டன்கள் வரையில்தான். இன்னும் அதிகமாக ஒதுக்கீடு செய்வதாக ஒப்புக்கொண்டு, அதை அனுப்புதவதற்கு தடையாக வேகன்கள் பற்றாக்குறை காரணமாக இருக்கிறது என்ற காரணத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். வேகன்கள் பற்றாக்குறை என்ற காரணத்தைக் காட்டி இந்த அரசு தப்பித்துக் கொள்ள முடியாது என்று இங்கே பேசிய அருமை நண்பர்கள் சொன்னார்கள். அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், இது மாம்பழ சீசன், எனவே வேகன்களை

மாம்பழம் ஏற்றுவதற்காக அனுப்பி விட்டோம் என்று மத்தியிலே
சொன்னார்களே, வேகன்கள் இல்லாததால் உணவுப்
பொருட்களைத் தமிழ்நாட்டிற்கு அனுப்ப முடியவில்லை என்று
அறுதியிட்டுச் சொன்னார்களே, அப்படிச் சொன்னவர்களைப்
பார்த்து, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த
பாராளுமன்ற உறுப்பினர்கள் டெல்லி மாநகரத்திலே மத்திய
அரசைப் பார்த்து ஏதாவது கேட்டார்களா? இங்கே ஆளுகின்ற
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசுக்காக

[பிற்பகல் 1-10]

மட்டுமல்ல, தமிழகத்திலே உடன் வாழ்கின்ற சகோதரர்கள்
இருக்கிறார்களே, தமிழ் கூறும் நல்லுலகத்து மக்கள்
இருக்கிறார்களே, அவர்களுக்காக வேண்டுகோளாக, கோரிக்கை
யாக பாராளுமன்றத்திலே என்றைக்காவது ஒருநாள் அதைப்பற்றிப்
பேசியிருப்பார்களா என்று கேட்டால் இது வரைக்கும் இல்லை.

சர்க்கரையைப் பொறுத்தவரைக்கும் நான் பத்திரிகையிலே
வந்த செய்தியைச் சொல்கிறேன். இங்கே லெவி சர்க்கரையைச் சரி
யாக விநியோகம் செய்வதற்காக. வெளி மார்க்கெட் விற்பனையை
இன்னும் கட்டுப்பாட்டுக்குள்ளே வைத்துக்கொள்வதற்காக
எடுக்கப்படுகின்ற முயற்சிகளைப் பாராட்டும்போது. 'Free sale
sugar has virtually disappeared from market in States like Maharashtra,
Rajasthan, Punjab and Haryana. In many of the States, sugar is
sold only in blackmarket. என்று பத்திரிகையாளர்கள்,
பொருளாதாரம் தெரிந்தவர்கள் நாட்டில் நடக்கின்ற இந்த விலை
வாசியைப் பற்றி கணித்துச் சொல்லக்கூடியவர்கள் விவரமாகச்
சொல்லியிருக்கிறார்கள். மேற்சொன்ன மாநிலங்களிலே ஓப்பன்
மார்க்கெட்டிலே விற்பதற்குச் சர்க்கரையில்லாமல், பொது
விநியோகத்திற்குச் சர்க்கரை தரப்படாமல், கறுப்புச் சந்தையிலே
மட்டும்தான் சர்க்கரை விற்கப்படுகிறது, திருமதி இந்திரா
காந்தியின் கட்சியினர் ஆளுகின்ற மாநிலங்களிலே, என்று படம்
பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். அந்தப் பொருளாதார
நிலையை நிச்சயமாக இங்கே எண்ணிப்பார்க்க வேண்டும்.
அதிலும் குறிப்பாக, வேதனைக்குரிய மற்றொரு செய்தி இந்தியத்
துணைக் கண்டத்துப் பிரதம அமைச்சராக விளங்குகின்ற
அம்மையார் அவர்கள் வெகு வேகமாக விலைவாசியைக் கட்டுப்
படுத்துவோம், அத்தனை முயற்சிகளையும் அரசு எடுத்துக்
கொண்டிருக்கிறது என்று பேசி, இரண்டு மூன்று மணி
நேரத்திற்குள்ளாக சிமெண்டினுடைய விலையை 14 விழுக்காடு
உயர்த்தியிருப்பதாக மத்தியிலிருந்து ஒரு அறிவிப்பு வெளி
யாகிறது. பெட்ரோலியப் பொருள் விலையை உயர்த்தியிருப்பதாக
ஒரு அறிவிப்பு வெளி வந்திருக்கிறது.

ஒரு பக்கத்திலே ஆட்சிப் பீடத்திலே இருக்கின்றவர்கள் விலை
வாசியைக் கட்டுப்படுத்துவோம் என்று சொல்லியுங்கூட, உறுதி
அளித்துங்கூட, அடுத்த 2 மணி நேரத்திற்குள்ளாக, அத்தனை
பெட்ரோலியப் பொருள்களுடைய விலை உயர்வு, எந்த அளவு
அத்தியாவசியப் பொருட்களுடைய விலையைப் பாதித்திருக்கிறது.



என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும். விலைவாசி உயர்வுக்கு
யார் காரணம் என்கின்ற அந்தக் கேள்விக்கு மத்திய அரசினுடைய
தவறான விநியோகப் போக்கும், மாற்றாந்தாய் மனப்பான்மை
யோடு தமிழகத்தை அணுகுகின்ற நிலையும்தான் காரணம் என்று
இந்த நிலைமைகளை வெள்ளை அறிக்கை இன்றைக்கு விரிவாக
நமக்குக் காட்டியிருக்கிறது. இன்றைக்குப் பெருகுகின்ற விலையைக்
கட்டுப்படுத்துவதற்காக, அரசு எடுத்துக் கொண்டிருக்கிற
பல்வேறு நடவடிக்கைகளைப் பாராட்டுகின்ற பொழுது, திராவிட
முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் 3 கட்டப் போராட்டம்
என்று சொல்லி, விலைவாசிப் போராட்டத்தை நடத்தி முடித்து
விட்டு சோர்ந்து போயிருக்கிற அந்த அருமை நண்பர்களுக்கு
ஒன்றை நான் கோடிட்டுக் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.
மக்கள் மத்தியிலே, மக்கள் மனதிலே இடம் பிடிக்க வேண்டும்
என்பதற்காக எடுத்துக் கொண்டிருக்கிற அத்தனை முயற்சிகளிலே
தோல்வியுற்றிருக்கிற இந்த நிலையில், இதய தெய்வம் புரட்சித்
தலைவரிடம் நீங்கள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று
பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மக்கள் மனதிலே இடம்
பிடிக்கின்ற அந்தப் பாடத்தினை இந்தியத் துணைக் கண்டம்
முழுவதற்கும் தந்துகொண்டிருக்கிற இதய தெய்வம் புரட்சித்
தலைவரிடம் மக்கள் மனதிலே இடம் பிடிக்கின்ற அந்தப்
பாடத்தினைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு
கேட்டுக் கொள்கிறேன்.

விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்த இந்த மாநில அரசு
தயங்குகிறது, தயங்குகிறது என்று சொல்கின்ற அந்த அருமை
நண்பர்களுக்கு நான் சொன்ன அந்தக்கருத்து ஒருவேளை ஏற்புடை
யதாக இல்லாது இருக்கலாம். இங்கேயிருக்கின்ற அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த
உறுப்பினர் பேசுகின்றபொழுது அதிலே விவேகம் இருப்பதாக
அவர்களுக்குப் படாமல் போகலாம். நான் சொல்லவில்லை.
இந்தியத் துணைக் கண்டத்தை ஆளுகின்ற திருமதி இந்திராகாந்தி
அம்மையார் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்.
'In a democratic set up, Opposition should remember that an
elected Government should be given time to work. How would the
Government implement its programme if agitations were started from
the every day it took over.' என்று கேட்டிருக்கிறார்கள். அது
மட்டுமல்ல, இன்னும் பேசுகின்றபோது 'I deplore the attitudeof
congrontatoin with the Government. I suggest the path of dialogue and
arriving at consensus.' என்று சொல்லியிருக்கிறார்கள். 'Most of
the problems facing the country are beyond one organisation, or beyond
one party; These have to be looked into from a much broader poinf
of view. என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்தக் கருத்தை மற்றக் கருத்துக்களோடு எல்லாம் ஒத்துப்
போகின்ற ** ** ** சேர்ந்தவர்கள், எண்ணிப்
பாராது, ஏதோ விலைவாசியைக் கட்டுப்படுத்தும்
முறை, உணவுப் பங்கீட்டு முறையை சரிப்படுத்துவதும் ஆளுகின்ற
பொறுப்பிலே இருக்கக் கூடியவர்கள்......

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது

திரு. க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கட்சியைக் குறிப்பிடுகிறபோது சட்டமன்றத்தில் உள்ள பெயருக்கு மாறான சொற்றொடராகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிக் குறிப்பிடுவதற்கு மற்றவர்களுக்கும் உரிமை உண்டா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்திலே அங்கே இருக்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்சியின் தலைவர் மதிப்பிற்குரிய சி,டி. தண்டபாணி அவர்கள் 'நாங்கள் ** ** ** என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள், அது பல பத்திரிகை களிலும் வெளிவந்திருக்கின்றது, அப்படி இருகின்ற ஒரு பெயரை ஏன் சொல்லக்கூடாது என்பதற்கு இங்கே பேராசிரியர் அவர்கள் ஏதாவது பதில் சொல்ல முடியுமா என்றுதான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, இது சட்டமன்றம். இந்த சட்டமன்றத்திற்கு என்று சில உரிமைகள் உள்ளன. அந்த உரிமையை மீறி, அமைச்சரும் வேறு எங்கோ ஒருவர் பதில் சொன்னதைத்தான் இந்த சட்டமன்றத்திலே பயன்படுத்துவேன் என்று சொல்வார்களேயானால் அமைச்சர் களைப் பற்றி வெளியிலே பேசுகிற அதே வார்த்தைகளை இந்த சட்டமன்றத்திலே நாங்கள் பேசவேண்டி வரும், அதை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் ஆளும் கட்சி உறுப் பினர்கள் எப்படி வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் சட்டமன்ற உரிமையைக் காப்பாற்றுவதற்குத் துணைத் தலைவர் கடமைப்பட்டிருக்கிறார் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நம்முடைய சட்ட மன்றத்தில் அப்படி ஒரு கட்சி இல்லை. அதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: துணைத் தலைவர் அவர்களே, ஒருவேளை இங்கே பேசுகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லுகின்ற அந்த பரந்த மனப்பான்மையோடு, தொலை நோக்குப் பார்வை யோடு கொண்ட அந்தக் கருத்துக்களை ஏற்க இயலாவிட்டாலும் கூட, அம்மா அவர்கள் சொல்லி இருக்கின்ற அந்தக் கருத்தை யாவது நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படை யிலே நான் அதை வலியுறுத்த விரும்புகிறேன், நம்முடைய நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளிலே பெரும்பாலான வற்றைத் தீர்ப்பது என்பது விலைவாசி உயர்வைக் கட்டுப் படுத்துவது என்பது, அத்தியாவசியமான பண்டங்களைச் சீராக விநியோகம் செய்வது என்பது ஏதோ ஆளுங்கட்சிக்கு

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



உரிய பொறுப்பு மட்டுமல்ல. இருக்கின்ற எதிர்கட்சிகளும் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து அரசு எடுக்கின்ற நல்ல முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன், நன்றி வணக்கம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்ற போது. அமைச்சர்களைப் பற்றி நாங்கள் பேசவேண்டி வரும் என்று சொன்னார்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆட்சேபிக்கப்பட்ட பகுதி நீக்கியாகிவிட்டது. நீங்கள் உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சியை சேர்ந்த உறுப்பினர் அவர்கள் பேசும்போது, விலைவாசி ஏற்றத்திற்கு மத்திய அரசுதான் காரணம், மாநில அரசு காரணமல்ல என்று குறிப்பிட்டார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் தமிழகத் தினுடைய முதலமைச்சராக இருந்தபோது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக விலை வாசியைக் குறைக்கவேண்டும் என்று சொல்லி உண்ணாவிரதமும், போர்ராட்டமும் அப்போதிருந்த மாநில சர்க்காருக்கு எதிராக நடத்தினார்கள். அன்றைக்கு உங்களுக்கு நியாயமாகப்பட்டது இப்போது அநியாயமாகத் தெரிகிறதா? வேறுபட்டதாகத் தெரிகிறதா? இந்த இரட்டை போக்கு ஏன்? இரட்டை இலை என்பதால் இரட்டை நிலையா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: துணைத்தலைவர் அவர்களே, அன்றைய தினம் அரசினுடைய செயற்கையான பஞ்சம் ஏற்பட்டது என்பதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் குற்றச்சாட்டு என்பதையும், சட்டமன்றத்திலே 1975-76 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்து அன்று கலைஞர் அவர்கள் மத்திய அரசுதான் காரணம், மாநில அரசு காரணமல்ல என்று தெளிவாகச் சொல்லி அது சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பு வால்யூம் 64 பக்கம்34 இல் இருக்கிறது என்று சொன்னேன். அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார் அருமை நண்பர் திரு. ரகுமான்கான் அவர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

[பிற்பகல் 1.20]

திரு இரா. கருப்பையா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அத்தியாவசியப் பொருள்கள் வழங்குவது பற்றியும் விலை நிலவரத்தைப்பற்றியும், தமிழக அரசின் சார்பிலே வைக்கப்பட்டிருக்கிற வெள்ளை அறிக்கை, அதிலே குறிப்பிட்டி ருக்கக் கூடிய விஷயங்கள் குறித்தும், தமிழக அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துகளைக் கூறுவதற்கு விரும்புகிறேன்.

128/162—14

முதலாவதாக இன்றையதினம் உயர்ந்து வந்திருக்கிற விலைவாசி உயர்விற்கு காரணம் என்ன என்பதைப் பற்றி சர்ச்சைகள் நடைபெற்று வருவது அனைவரும் அறிந்த ஒன்று. இன்றைய தினம் இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை தன்னுடைய கையிலே வைத்திருக்கிற மைய அரசு, இந்த நாட்டில் முழுமையான ஆட்சிப்பொறுப்பிலே இருந்து வருகிற மைய அரசு, அதனுடைய பொருளாதாரக் கொள்கைகள், இந்த நாட்டில் நிலவி வரக்கூடிய விலைவாசி ஏற்றத்திற்கு அடிப்படையான காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்றைதினம் இந்த நாட்டிலே புழங்கி வருகிற 30 ஆயிரம் ரூபாய் கறுப்பு பணம் இருக்கிறது. இதை கட்டுப்படுத்துவதற்கான, பறிமுதல் பண்ணுவதற்கான அதிகாரத்தை மைய அரசு பெற்றிருக்கிறது. இது இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை எந்த அளவுக்கு சீர்படுத்த முடியாத இருந்து கொண்டிருக்கிறது என்பது யாவரும் அறிந்த விஷயம்.

மைய அரசு விதிக்கக் கூடிய வரிக்கொள்கை, அவர்கள் இன்றையதினம் நிதிக் கொள்கைகளில் கடைப்பிடிக்கிற பற்றாக் குறை பட்ஜெட், அதன் விளைவாக ஏற்பட்டிருக்கிற இந்த நிலைமை, இவை அனைத்தும் சேர்த்து இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை எந்த அளவுக்கு சீர்கேடு அடைய செய்து கொண்டிருக்கிறது என்பதை யாவரும் அறிவோம். இவை எல்லாவற்றிற்கும் மேலாக சமீபத்தில் மைய அரசு டீசல் விலையை உயர்த்தியிருக்கிறார்கள்; பெட்ரோல் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். இதைத் தவிர என்னென்ன பொருள்கள் அவர்களுடைய பொறுப்பிலே இருக்கின்றனவோ அனைத்து பொருள்களுக்கும் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். இரும்பின் விலை, நிலக்கரி விலை, சர்க்கரை விலை, ரயில்வே கட்டணம் ஆக எல்லாவற்றையும் உயர்த்தியிருக்கிறார்கள். இந்த அளவுக்கு எதை எதை உயர்த்துவது என்று இல்லாமல் அனைத்தையுமே உயர்த்தியிருக்கிறார்கள் இவை அனைத்தும் நம்முடைய நாட்டின் பொருளாதாரத்தில் என்ன விளைவை ஏற்படுத்தும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை அனைவரும் அறிவோம். ஆகவே இந்த நிலையில் இந்த நாட்டிலே இன்றையதினம் கட்டுபடுத்த முடியாத அளவிற்கு விலைவாசி ஏற்றமும், பண வீக்கமும் இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றையதினம் மைய அரசு கடைபிடிக்கக்கூடிய கொள்கைகள் உள்நாட்டிலே தேவையான கோதுமை இருக்கிறது; ஆனால் வெளி நாட்டிலிருந்து அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்யப்படுகிறது. நம்நாட்டிலே போதுமான சர்க்கரை இருக்கிறது. ஆனால் வெளிநாட்டிலிருந்து சர்க்கரை இறக்குமதி செய்யப்படுகிறது. இப்படி பல்வேறு பொருள்களை இறக்குமதி செய்வது என்பது தான் நம்முடைய கொள்கை. இது நம் நாட்டினுடைய பொருளாதாரத்தை சீர் படுத்துவதற்கு உதவி செய்யுமா? நம் நாட்டினுடைய ஒரு பகுதியாக தமிழ்நாடு இருக்கிறது. ஆகவே அதன் விளைவை



ஓரளவு தமிழ் நாடும் அனுபவிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இவற்றிலிருந்து பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது, நிவாரணத்தை ஓரளவு தேடிக் கொண்டிருக்கவேண்டிய பொறுப்பு மாநில அரசுக்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே இது சம்பந்தமாக இன்றைதினம் நம்முடைய மாநில அரசாங்கம், தெளிவாக, திட்டவட்டமாக இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை பாழ்படுத்துகிற அந்த கொள்கைகள் சம்பந்தமாக தெளிவான நிலை எடுத்து அதற்கு எதிராக மக்களை திரட்டக் கூடிய பொறுப்பினை கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து இருக்கிற அறிக்கையிலே, நம் தமிழகத்தில் இருக்கிற உணவு, விலைவாசி உயர்வு சம்பந்தமாக சில விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பருவ மழை தவறியதைக் குறித்து, உற்பத்தி குறைவு, விலைவாசி உயர்வு, இதன் காரணமாக தட்டுப்பாடு முதலியவற்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இவை அனைத்தும், இன்றையதினம் பெருவாரியான பொறுப்பிலே மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கை சம்பந்தமாக சரியான எண்ணத்தை ஏற்படுத்துவதற்கு அல்லாமல், இங்கே இருக்கக்கூடிய சங்கடங்களைச் சுட்டிகாட்டி, அதன் விளைவாக விலை வாசி ஏறி இருக்கிறது என்று குறிப்பிட்டிருப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆரம்பத்திலிருந்தே நம்முடைய சர்க்காருக்கு கொள்முதல் செய்வதில் ஒரு அடிப்படையான, நிலையான கொள்கை இல்லாதால்தான். இன்றையதினம் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. அரிசி விலை உயர்ந்திருக்கிறது. எந்த அளவுக்கு அரிசி விலை உயர்ந்திருக்கிறது என்று கூறப்பட்டிருப்பது சரியாக இல்லை; தவறாக இருக்கிறது. இருந்தாலும் ஓரளவுக்கு, கிடைத்தவரையில் சரியான முறையில் அரிசி, நெல் போன்ற தானியங்களை கொள்முதல் செய்து தன்னுடைய கையிலே அரசாங்கம் வைத்திருக்கலாம், அப்படி வைத்துக் கொள்ளாத காரணத்தால் இன்றையதினம் வெளி மார்க்கெட்டில் விலை உயர்ந்திருக்கிறது: அதை சர்க்கார் கட்டுப்படுத்த வில்லை. கட்டுப்படுத்த முடியவில்லை.

ஆரம்பத்திலிருந்தே தமிழ்நாட்டில் அரிசி தட்டுப்பாடு இல்லை: வெளிச்சந்தையில் அரிசி தாராளமாகக் கிடைக்கிறது என்ற உணர்வின் காரணமாக கொள்முதல் செய்ய வேண்டும், போதுமான அளவு தானியங்களை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும் என்ற நிலையிலிருந்து இந்த சர்க்கார் தவறிவிட்டது. அதனால் இன்றையதினம் உணவுதானியம் இல்லை, நெல் இல்லை. ஆகவே, மத்திய சர்க்காரையும் மற்ற மாநில சர்க்கார்களையும் எதிர்பார்த்து, அது கிடைக்காத காரணத்தால் இப்படி இருக்கிறது என்று கூறக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

நமக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருட்களின் முழுத் தேவையை உணர்ந்து, அரசு தன்னுடைய பொறுப்பிலே கொள்முதல் செய்து வைத்திருந்தால் ஓரளவுக்கு விலையைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும். அதைச் செய்யத் தவறியதால் இன்றையதினம் சாதாரண ஏழை எளிய மக்கள் இன்றியமையாதப் பொருட்களை வாங்க முடியவில்லை. அவர்கள் என்ன எதிர்ப்பார்க்கிறார்கள்? உழைக்கின்ற மக்கள் ஒருவேளைக்குத் தேவையான கூழைக் காய்ச்சிக் குடிக்கத் தேவையான அரிசியாவது கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நல்ல அறுசுவை உணவு வேண்டுமென்று கேட்கவில்லை. கூழுக்கு குறைந்த விலையில் அரிசி வேண்டுமென்று கேட்கிறார்கள். அதைக் கொடுப்பதற்கு அரசு தவறிவிட்டது. என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து நெல் சரியான அடிப்படையில் வராமல் இருந்திருக்கிறது. ஆனால் மார்க்கெட்டில் வரக்கூடிய நெல் முழுவதையும் அரசாங்கம் கொள்முதல் செய்யும் நிலைமை இருந்திருந்தால் இன்றைக்கு இந்த அளவுக்கு நிலைமை வந்திருக்காது. வறட்சி ஏற்பட்டிருக்கிறது, பருவ நிலை தவறி இருக்கிறது என்பது 6 மாதங்களுக்கு முன்னாலே தெரிந்திருந்தும் அதிலிருந்து மக்களைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கையை எடுக்க நம்முடைய சர்க்கார் தவறியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

13.8.1981 வரையில் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிற விவரங்களை இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். மொத்தம் இதுவரையில் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிற அரிசி 65,710 டன்: 1,11,000 டன் நெல்தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசு மூலம் நமக்கு கிடைத்திருக்கிறது 2,72,000 டன். இது நம்முடைய தேவையை எந்த அளவுக்குப் பூர்த்தி செய்ய உதவியிருக்கிறது? நம்முடைய மாநிலத்தில் ஒரு மாதத்திற்கு 75,000 டன் அரிசி தேவை என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் நமக்கு மாதம் 75,000 டன் அரிசி கிடைக்காத நிலை இருக்கிறது. அதனால் வெளிச் சந்தையில் அரிசி விலை உயர்ந்திருக்கிறது. இந்த நிலையில், இதிலிருந்து ஒரு மாற்றம் காண வேண்டுமென்றால் அரசாங்கம் முழுமையாக உணவு தானிய வர்த்தகத்தை தன்னுடைய பொறுப்பில் ஏற்றுக்கொண்டு செயல்படுத்த வேண்டும். அப்படிச் செயல்பட்டிருந்தால் இந்த நிலையைத் தவிர்த்திருக்க முடியும். ஆகவே, வரக்கூடிய காலத்தில் இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில் அறுவடை நெருங்கிக் கொண்டிருக்கிறது. உடனடியாக இந்த கொள்முதலை அரசாங்கம் ஏற்று நடத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



## 9. அறிவிப்பு.

### பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கிணங்க பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்:—

| | |
|---|---|
| 27.8.1981 | வெள்ளை அறிக்கையின்மீது விவாதம் (தொடர்ச்சி) |
| 28.8.1981 | துணை நிதிநிலை அறிக்கைமீது விவாதம். அரசினர் சட்ட முன்வடிவுகள். (பேரவை காலையும் மாலையும் கூடும்.) |
| 29.8.1981 | அரசினர் சட்ட முன்வடிவுகள். |
| 30.8.1981 | ஞாயிறு—விடுமுறை |
| 31.8.1981 | நிதி ஒதுக்கீடு சட்ட முன்வடிவு மற்றும் அரசினர் சட்ட முன்வடிவுகள். |
| 1.9.1981 | தனியார் அலுவல். |

பேரவை வழக்கம்போல் காலை 9.00 மணிக்கு கூடும்.

திரு. இரா. கருப்பையா அவர்கள் தன்னுடைய உரையை அடுத்த நாள் தொடருவார்கள்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 27.8.1981 ஆம் தேதி காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

85. ஓய்வுபெற்ற தலைமைப் பொறியாளர் (பொது—பாசனம்) திரு எஸ். பி. நமச்சிவாயத்தை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் அலுவல்சாரா உறுப்பினராக நியமிப்பது குறித்து வீட்டுவசதி-நகர்வளர்ச்சித் துறையின் 1.6.1981 ஆம் தேதியிடப் பெற்ற 366 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் மேம்பாடு—அகற்றுதல்) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 11/1981 72 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

86. திருப்புவனம் உள்ளூர்ப் பகுதியில் உள்ளூர் திட்டப் பகுதியாகச் சில பகுதிகளைக் குறிப்பிடுவது குறித்து, வீட்டு வசதி-நகர்வளர்ச்சித் துறையின் 14.9.1979 ஆம் தேதியிடப் பெற்ற 1601 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ம் ஆண்டு நகர—நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

87. முன்னாள் கல்வி-பொது சுகாதாரத் துறையின் 22.4.1949 ஆம் தேதியிடப் பெற்ற 311/1949 ஆம் எண் அறிவிப்பில் அனுமதிக்கப்பட்ட, சென்னை மயிலாப்பூர் மேற்குப் பிரிவுப் பகுதி நகரமைப்புத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்வது குறித்து வீட்டு வசதி-நகர்வளர்ச்சித் துறையின் 12-9-1979 ஆம் தேதியிடப்பெற்ற 1794 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

88. முன்னாள் கல்வி—பொது சுகாதாரத் துறையின் 17.11.1939 ஆம் தேதியிடப் பெற்ற 913/39 ஆம் எண் அறிவிப்பில் அனுமதிக்கப்பட்ட சென்னை, மயிலாப்பூர் கிழக்குப் பிரிவுப் பகுதி நகரமைப்புத் திட்டத்தில் சில மாற்றங்கள் செய்வது குறித்து, வீட்டு வசதி-நகர்வளர்ச்சித் துறையின் 12.9.1979 ஆம் தேதியிடப்பெற்ற 1795 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

89. 1975-76 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் கணக்குகளின் தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்) [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு மாநில வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (அ) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ED
V211,31 N81



ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள், ஏனைய தாள்கள் எதுவுமில்லை.

N83-2422

இணைப்பு.

[11ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 63-க்கான விடையைக் காண்க]

விவர அறிக்கை

பின்வரும் திட்டங்கள் உலக வங்கியின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படுகின்றன.

122210

| | திட்டம் | அனைத்து நாடுகள் வளர்ச்சி மன்றத் திடமிருந்து பெறத் தக்க தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் (நிலை I) | 21·60 |
| 2 | சென்னை நகர்ப்பகுதி வ[illegible] திட்டம் (நிலை II) | 35.28 |
| 3 | பெரியாறு வைகை பாசனத் திட்டம் | 20·70 |
| 4 | தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் | 27·00 |
| 5 | கிராமப்புற மின்வசதி நிறுவனப் பணிகள் | 9·10 |
| 6 | வேளாண்மை வளர்ச்சிப் பணியைச் சீரமைப்பதும் வலுப்படுத்துவதும் (பயிற்சியளித்தல் பார்வையிடல் ஏற்பாடு) | 36·48 |

உலக வங்கியின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் பின் வரும் திட்டங்கள் ஏற்கனவே முடிக்கப் பெற்றுள்ளன:—

| | திட்டம். | அனைத்து நாடுகள் வளர்ச்சி மன்றத் திடமிருந்து பெறப் பட்ட கடன் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைக் கடனுதவித் திட்டம் | 27·35 |
| 2 | மின்விசை அனுப்பும் திட்டம் I | 1·42 |
| 3 | மின்விசை அனுப்பும் திட்டம் II | 9.77 |
| 4 | மின்விசை அனுப்பும் திட்டம் III | 27.00 |
| 5 | கிராமப்புற மின்வசதி நிறுவனப் பணிகள் | 4·29 |

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitaraman and Company, Madras 14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 V. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 36, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. R. Chandirsah Chettiar & Sons, Salem 1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 F. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 50, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street, Calcutta-12.

---

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.